1756

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

FOURTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

9th to 14th March 1964.

Volume XIX (Nos. 1 to 6).

TABLE OF CONTENTS.

Monday, 9th March 1964.

PAGES

I Questions and Answers 1-14

II Voting on Demands for Grants for 1964-65—
(1) Demand No. VI—State Legislature .. ..
(2) Demand No. VII—Elections .. ..
(3) Demand No. VIII—Head of State, Ministers and Head-quarters staff .. .. } 14-117

III Papers laid on the table of the House 117

Tuesday, 10th March 1964.

I Question and Answers 119-142

II Government Bill—The Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram (Extension of Application) Bill, 1964 142-143

III Voting on Demands for Grants for 1964-65—
(1) Demand No. IX—District Administration and Miscellaneous
(2) Demand No. XXXII—Pensions .. ..
(3) Demand No. XXXIII—Miscellaneous .. ..
(4) Demand No. XXXVI—Other Miscellaneous Contributions and Assignments .. ..
(5) Demand No. XLV—Commuted Value of Pensions ..
(6) Demand No. XLVII—Loans and Advances by the State Government .. .. } 143-222

IV Papers laid on the table of the House 223

D V211,31'N64 N64.19

Wednesday, 11th March 1964.

I Questions and Answers 231–251

II Voting on Demands for Grants for 1964–65—
(1) Demand No. XX—Industries and (2) Demand No. XL—Capital Outlay on Industrial Development.. 251–332

III Papers laid on the table of the House 332

Thursday, 12th March 1964,

I Questions and Answers 349–371, 454–458

II Voting on Demands for Grants for 1964–65—
(1) Demand No. XVI—*Agriculture* .. ..
(2) Demand No. XVIII—Animal Husbandry .. .. ..
(3) Demand No. XXXIX—Capital Outlay on Agriculture ..
(4) Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading .. ..
} 371–452

III Papers laid on the table of the House 453

Friday, 13th March 1964.

I Questions and Answers 459–469

II Government Bill—
The Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964. 469–470

III Voting on Demands for Grants for 1964–65—
(1) Demand No. II—Motor Vehicles Acts—Administration .. 470–519
(2) Demand No. XXX—Road Transport Schemes .. ..
(3) Demand No. XLIII—Capital Outlay on Road Transport Schemes .. ..
} 519–557

IV Papers laid on the table of the House 557

Saturday, 14th March 1964.

I Questions and Answers 561–578

II Voting on Demands for Grants for 1964–65—
(1) Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Cases and other Backward Classes 578–669

III Papers laid on the table of the House 669

600 009

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main heading.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill (s)'.

Various bodies like Committees, Councils, Boards Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee (s)', 'Council (s)', 'Corporation (s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the table of the house are indexed only under the Main heading "Papers laid on the table."

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair."

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion	Adjournment Motion.
Ann.	Announcement.
B.O.H.	Business of the House.
C.A.	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A.St.	*Calling Attention Statement.*
Consid.	Consideration stage of a Bill. *This stage includes—* (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) *Amendment to recommit to Select/Joint Select Committee, etc.*
Consid· Cl.	Consideration of clauses of a Bill.
D.E.E.	Demands for Excess Expenditure.
Dis. S.D.	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D-S.G.	Demands for Supplementary Grants.
G.A.	Governor's Address.

G.D.	General Discussion.
H.A.H. Dis./H.H.D. ..	Half-hour Discussion.
Int.	Introduction stage of a Bill.
L.A.	Legislative Assembly.
L.C.	Legislative Council.
M.	Motion.
P.M.	Privilege Motion.
R/Res.	Resolution.
St.	Statement.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 9th March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

பஞ்சாயத்துக்களை நகராட்சியாக்க

*181 கேள்வி.—திரு. ஆ. துரையரசன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை ஊராட்சியை நகராட்சியாக மாற்ற உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால், எப்பொழுது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*182 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பன்ருட்டி டவுன் பஞ்சாயத்தினை நகராட்சியாக்கும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் (அ) & (இ) இவ்விஷயம் அரசாங்க பரிசீலனையில் இருக்கிறது.

*183 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெல்லிக்குப்பம் டவுன் பஞ்சாயத்தினை நகராட்சியாக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இவ்விஷயம் அரசாங்க பரிசீலனையில் இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, போதுமான வருமானமும் ஜனத்தொகையும் உள்ள ஃபர்ஸ்ட் கிரேட் மேஜர் பஞ்சாயத்துக்களை முனிஸிபாலிடியாக மாற்ற பஞ்சாயத்துக்கள் சம்மதம் கொடுத்தால்தான் மாற்ற முடியுமா? அல்லது சர்க்காரே மாற்றுவதற்கான உத்திரவை இடலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களும், அதைச் சார்ந்த பஞ்சாயத்து கவுன்சிலும் தீர்மானம் போடவேண்டும். சர்க்காருக்குப் பொதுவாக அதிகாரம் இருந்தாலும் பிரயோகிக்கும் நேரத்திலதான் பிரயோகிக்கலாமே தவிர அதிகாரம் இருக்கிறது என்று பஞ்சாயத்துக்கள் தீர்மானம் போடாமல் செய்ய முடியாது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நெல்லிக்குப்பம், பன்ருட்டி ஆகிய இரண்டு பஞ்சாயத்துக்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 1½ லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. இருபத்தி இரண்டாயிரம் ஜனத்தொகை இருக்கிறது. அவைகளை முனிஸிபாலிட்டியாக ஆக்க வேண்டுமென்று சென்ற ஆண்டிலேகூடக் கேட்டேன். அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எப்போது முடிவு செய்வார்கள்? எப்போது அவைகளை முனிஸிபாலிடிகளாக மாற்றுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பன்ருட்டி சம்பந்தப்பட்டவரையில் அது முனிசிபாலிட்டியாக ஆக்கலாமா என்ற பிரச்னை ஏற்கெனவே சீஃப் எலெக்ட்டோரல் ஆஃபீஸருக்கும் கலெக்டருக்கும் இடையே கடிதப் போக்குவரத்தில் இருக்கிறது.

நெல்லிக்குப்பம் சம்பந்தப்பட்ட வரையில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தும், யூனியனும் தீர்மானம் செய்யவில்லை.

திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, தகுதியுள்ள மேஜர் பஞ்சாயத்துக்கள் தாங்களாகவே முன்வந்து முனிசிபாலிடியாக மாற்றிக்கொள்ளுகிறோம் என்று கூறுவது முடியாத காரியம். காரணம் என்னவென்றால் வரி விதம் அதிகமாகும் என்ற காரணத்தினால் ஒப்புக்கொள்ள சம்மதிப்பதில்லை. தகுதியுள்ளவற்றை முனிஸிபாலிட்டியாக மாற்ற அரசாங்கமே நடவடிக்கை எடுக்குமா?

திரு. சே. ம. அ. மஜீத்: சமீபத்திலேகூட பஞ்சாயத்துக்களை நகராட்சிகளாக மாறறுவதற்கு சர்க்கார் நோட்டிஃபிகேஷன் பிரசுரித்திருக்கும் விஷயம் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்த 7 ஊராட்சிகள் விஷயத்திலும் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் தீர்மானம் செய்து சர்க்கார் அதன் மீது பரிசீலனை செய்துதான் மாற்றியிருக்கிறார்கள்.

திரு. ஆர். ரங்கசாமி: மேஜர் பஞ்சாயத்துக்களை முனிஸிபாலிட்டிகளாக மாற்றுவதால், மேஜர் பஞ்சாயத்தாக இருப்பதைவிட முனிஸிபாலிட்டியாக இருப்பதால் அதிக நன்மை இருக்கிறதா? எந்தக் காரணத்தை கொண்டு அம்மாதிரி மாற்றப்படுகிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அது கனம் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்து இருக்கிறது. நன்மை கிடைக்கும் என்றால் கிடைக்கும். நன்மை கிடையாது என்றால் பஞ்சாயத்தாக இருக்க அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்படுத்த பஞ்சாயத்துக்களை அதிகமாக ஏற்படுத்தி, பஞ்சாயத்து யூனியன் வைத்து எல்லா அதிகாரங்களையும் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கும்போது முனிஸிபாலிட்டி தேவையா? முனிஸிபாலிட்டிகளை பஞ்சாயத்துக்களாக மாற்ற அரசாங்கம் ஏதாவது யோசனை செய்யுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அது மக்களைப் பொறுத்த விஷயம். மக்களாகச் சேர்ந்து சம்மதம் கொடுத்து சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மாற்றுகிறோம். இல்லை என்றால் மாற்றுவதில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஸார், கனம் அமைச்சர் அவர்கள், நெல்லிக்குப்பத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்தும் பஞ்சாயத்து யூனியனும் முடிவு செய்யவில்லை என்று சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த வரையில் பல கிராமங்களிலிருந்து வருகிற பிரதிநிதிகள் பஞ்சாயத்து யூனியனில் நிர்வாகம் செய்கிறார்கள். பஞ்சாயத்தாக இருக்கக் கூடியது முனிஸிபாலிட்டியாக மாற்றப்படவேண்டுமா அல்லது தொடர்ந்து கீழ் நிலையில் இருக்கவேண்டுமா என்று அரசாங்கமே முடிவு செய்யவேண்டிய விஷயம். அதைப் பற்றி அரசாங்கமே பரிசீலித்து உடனடியாக முனிஸிபாலிட்டியாகச் செய்து நன்மை செய்யக் கூடிய வகையில் மாற்ற முயற்சி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நெல்லிக்குப்பம் சம்பந்தப்பட்ட வரையில் நகராட்சியாக மாற்ற உத்தேசம் இல்லை என்று சொல்லவில்லை. அது பரிசீலனையில் இருக்கிறது என்று தான் கூறினேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி: கனம் தலைவர் அவர்களே, டவுன் பஞ்சாயத்தை நகராட்சியாக மாற்ற என்னென்ன தகுதிகள் தேவை? தகுதி இருந்தும்கூட விருப்பம் இல்லாமல் இருந்தால் 'உங்கள் பஞ்சாயத்து நகரசபையாக ஆகத் தகுதியுள்ளது. என் மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்?' என்று அரசாங்கத்திலிருந்து கேட்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: டவுன் பஞ்சாயத்துக்கு 20,000-க்கு மேல் பாப்புலேஷன் இருக்கவேண்டும். ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரவேண்டும். அப்படி இருந்தாலும் பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் அவர்கள் சம்மதித்தால், சம்பந்தப்பட்ட கூட்டு மன்றம் தீர்மானம் நிறைவேற்றினால் சர்க்கார் மாற்றுவதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று இருக்கிறது.

[9th March 1964

திரு. து. ப. அழகுமுத்து: கனம் தலைவர் அவர்களே, போதுமான வருமானமும் ஜனத்தொகையும் உள்ள ஃபர்ஸ்ட் கிரேட் மேஜர் பஞ்சாயத்துக்களை முனிஸிபாலிடியாக மாற்ற பஞ்சாயத்துக்கள் சம்மதம் கொடுத்தால்தான் மாற்ற முடியுமா? அல்லது சர்க்காரே மாற்றுவதற்கான உத்திரவை இடலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களும், அதைச் சார்ந்த பஞ்சாயத்து கவுன்சிலும் தீர்மானம் போட வேண்டும். சர்க்காருக்குப் பொதுவாக அதிகாரம் இருந்தாலும் பிரயோகிக்கும் நேரத்திலதான் பிரயோகிக்கலாமே தவிர அதிகாரம் இருக்கிறது என்று பஞ்சாயத்துக்கள் தீர்மானம் போடாமல் செய்ய முடியாது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நெல்லிக்குப்பம், பன்ருட்டி ஆகிய இரண்டு பஞ்சாயத்துக்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 1½ லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. இருபத்தி இரண்டாயிரம் ஜனத்தொகை இருக்கிறது. அவைகளை முனிஸிபாலிட்டியாக ஆக்க வேண்டுமென்று சென்ற ஆண்டிலேகூடக் கேட்டேன். அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எப்போது முடிவு செய்வார்கள்? எப்போது அவைகளை முனிஸிபாலிடிகளாக மாற்றுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பன்ருட்டி சம்பந்தப்பட்டவரையில் அது முனிசிபாலிட்டியாக ஆக்கலாமா என்ற பிரச்னை ஏற்கெனவே சீஃப் எலெக்ட்டோரல் ஆஃபீஸருக்கும் கலெக்டருக்கும் இடையே கடிதப் போக்குவரத்தில் இருக்கிறது.

நெல்லிக்குப்பம் சம்பந்தப்பட்ட வரையில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தும், யூனியனும் தீர்மானம் செய்யவில்லை.

திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, தகுதியுள்ள மேஜர் பஞ்சாயத்துக்கள் தாங்களாகவே முன்வந்து முனிசிபாலிடியாக மாற்றிக்கொள்ளுகிறோம் என்று கூறுவது முடியாத காரியம். காரணம் என்னவென்றால் வரி விதம் அதிகமாகும் என்ற காரணத்தினால் ஒப்புக்கொள்ள சம்மதிப்பதில்லை. தகுதியுள்ளவற்றை முனிஸிபாலிட்டியாக மாற்ற அரசாங்கமே நடவடிக்கை எடுக்குமா?

திரு. சே. ம. அ. மஜீத்: சமீபத்திலேகூட பஞ்சாயத்துக்களை நகராட்சிகளாக மாற்றுவதற்கு சர்க்கார் நோட்டிஃபிகேஷன் பிரசுரித்திருக்கும் விஷயம் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்த 7 ஊராட்சிகள் விஷயத்திலும் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் தீர்மானம் செய்து சர்க்கார் அதன் மீது பரிசீலனை செய்துதான் மாற்றியிருக்கிறார்கள்.

திரு. ஆர். ரங்கசாமி: மேஜர் பஞ்சாயத்துக்களை முனிஸிபாலிட்டிகளாக மாற்றுவதால், மேஜர் பஞ்சாயத்தாக இருப்பதைவிட முனிஸிபாலிட்டியாக இருப்பதால் அதிக நன்மை இருக்கிறதா? எந்தக் காரணத்தை கொண்டு அம்மாதிரி மாற்றப் படுகிறது?

9th March 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அது கனம் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்து இருக்கிறது. நன்மை கிடைக்கும் என்றால் கிடைக்கும். நன்மை கிடையாது என்றால் பஞ்சாயத்தாக இருக்க அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்படுத்த பஞ்சாயத்துக்களை அதிகமாக ஏற்படுத்தி, பஞ்சாயத்து யூனியன் வைத்து எல்லா அதிகாரங்களையும் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கும்போது முனிஸிபாலிட்டி தேவையா? முனிஸிபாலிட்டிகளை பஞ்சாயத்துக்களாக மாற்ற அரசாங்கம் ஏதாவது யோசனை செய்யுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அது மக்களைப் பொறுத்த விஷயம். மக்களாகச் சேர்ந்து சம்மதம் கொடுத்து சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மாற்றுகிறோம். இல்லை என்றால் மாற்றுவதில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஸார், கனம் அமைச்சர் அவர்கள், நெல்லிக்குப்பத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்தும் பஞ்சாயத்து யூனியனும் முடிவு செய்யவில்லை என்று சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த வரையில் பல கிராமங்களிலிருந்து வருகிற பிரதிநிதிகள் பஞ்சாயத்து யூனியனில் நிர்வாகம் செய்கிறார்கள். பஞ்சாயத்தாக இருக்கக் கூடியது முனிஸிபாலிட்டியாக மாற்றப்படவேண்டுமா அல்லது தொடர்ந்து கீழ் நிலையில் இருக்கவேண்டுமா என்று அரசாங்கமே முடிவு செய்யவேண்டிய விஷயம். அதைப் பற்றி அரசாங்கமே பரிசீலித்து உடனடியாக முனிஸிபாலிட்டியாகச் செய்து நன்மை செய்யக் கூடிய வகையில் மாற்ற முயற்சி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நெல்லிக்குப்பம் சம்பந்தப்பட்ட வரையில் நகராட்சியாக மாற்ற உத்தேசம் இல்லை என்று சொல்லவில்லை. அது பரிசீலனையில் இருக்கிறது என்று தான் கூறினேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி: கனம் தலைவர் அவர்களே, டவுன் பஞ்சாயத்தை நகராட்சியாக மாற்ற என்னென்ன தகுதிகள் தேவை? தகுதி இருந்தும்கூட விருப்பம் இல்லாமல் இருந்தால் 'உங்கள் பஞ்சாயத்து நகரசபையாக ஆகத் தகுதியுள்ளது. என் மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்?' என்று அரசாங்கத்திலிருந்து கேட்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: டவுன் பஞ்சாயத்துக்கு 20,000-க்கு மேல் பாப்புலேஷன் இருக்கவேண்டும். ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரவேண்டும். அப்படி இருந்தாலும் பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் அவர்கள் சம்மதித்தால், சம்பந்தப்பட்ட கூட்டு மன்றம் தீர்மானம் நிறைவேற்றினால் சர்க்கார் மாற்றுவதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று இருக்கிறது.

[9th March 1964

கனம் சபாநாயகர் : பஞ்சாயத்து யூனியனிலும், பஞ்சாயத்திலும் உள்ள மக்கள் பிரதிநிதிகள் தீர்மானம் போட பயப்படுகிறார்கள். ஆகையால் சர்க்காரே எடுத்துச் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார் போல இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் முனிசிபாலிட்டியாக மாற்ற தீர்மானம் போடலாம் என்றாலும் பஞ்சாயத்து யூனியன் அங்கீகரிப்பது முடியாத காரியம். காரணம் என்ன என்றால் அவர்களுடைய வருமானம் குறைந்துவிடும். ஆகையால் அவர்கள் சம்மதிக்கமாட்டார்கள். அப்படி சிக்கலான நிலைமை வரும்போது சர்க்கார் என்ன செய்வார்கள்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்த மாதிரி பிரச்னை வரும் போது எழுதி அனுப்புங்கள், கவனிக்கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி : நன்மையா, நன்மை இல்லையா என்பது மக்கள் இஷ்டத்தைப் பொறுத்தது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சட்ட ரீதியாக எது நல்லது என்று கனம் அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சட்ட ரீதியாக அம்மாதிரி ஒரு வழி வகுத்துக்கொடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றி தீர்மானிப்பது மக்களும் மக்கள் பிரதிநிதிகளும்தான்.

திரு. ஜே. மாதா கவுடர் : பஞ்சாயத்திலும் பஞ்சாயத்து யூனியனிலும், தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருந்து நிர்வாகம் செய்யும் காரணத்தினால், மக்கள் விருப்பம் இல்லாது, பஞ்சாயத்து யூனியனிலும், பஞ்சாயத்திலும் தீர்மானம் போடாமல் இருந்தால் அப்போது சர்க்கார் தலையிடாமல் இருக்க முயற்சி செய்யுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது ஒரு ஹைப்பாத்தெடிகல் க்வெஸ்ச்சின்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நகர பஞ்சாயத்தினை முனிஸிபாலிட்டியாக ஆக்குவதில் பல சிரமங்கள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களே உணருவார்கள் என்று கருதுகிறேன். கடையநல்லூரைப் பொறுத்தவரையில் முனிஸிபாலிட்டியாக மாற்ற முயற்சி செய்தல் வேண்டாம் என்று அவர்கள் தீர்மானம் போட்டதாக அறிகிறேன். இது மக்கள் பிரச்னை மாத்திரமல்ல. அரசாங்கம் எது நல்லது, கெட்டது என்று தீர்மானித்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். நகரசபை வேண்டாம் என்று சொன்னாலும் அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வார்களா?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் மந்திரிக்கு கோபத்தை மூட்டி காரியத்தை சாதிக்கலாம் என்று பார்க்கிறார்களா?

9th March 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பரிசீலிக்க வேண்டிய விஷயம்.

மாவட்ட விவரச் சுவடிகளை வெளியிடுதல்

*184 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்ட நில இயல் தகவல் ஏடுகளை (District Gazetteer) புதியனவாக வெளியிடும் உத்தேசமுண்டா?

கனம் திரு. வெ. ராமையா : ஆம்.

திரு. து. ப. அழகமுத்து : இப்பொழுது எந்தெந்த மாவட்டங்களுக்கு இந்தத் தகவல் ஏடுகள் இருக்கின்றன? அப்படி இல்லாத மாவட்டங்கள் எத்தனை?

கனம் திரு வெ. ராமையா : எல்லா மாவட்டங்களுக்கும் இருக்கிறது. ஆனால், இப்பொழுது சமீபத்தில் நாம் இந்த 'கெஸட்டியர்ஸை' புதுப்பிக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு, ஒரு சில ஜில்லாக்களில் வேலை பூர்த்தி ஆகியிருக்கிறது. தஞ்சை, தென் ஆற்காடு, மதுரை, கோவை ஆகிய ஜில்லாக்களில் இவைகளைப் புதுப்பிக்கும் வேலை பூர்த்தியாகி விட்டது. மற்ற மாவட்டங்களின் 'கெஸடியர்ஸை' புதுப்பிப்பதற்கு வேண்டிய முறையில் அது சம்பந்தப்பட்ட இலாகா எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டு வருகின்றது.

Location of Steel Plant in the State

* 185 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the names of countries to which the samples of Salem Iron Ore and the Neyveli Lignite were sent for investigation;

(*b*) the present stage of these investigations; and

(*c*) when a final decision is expected to be taken regarding the location of the steel plant in Madras State?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The samples of Neyveli-Salem raw materials were sent to Norwav, Sweden, German Democratic Republic, Federal Republic of Germany and the United States of America for various tests.

(*b*) Most of the process tests have been completed and reports received by Government. Certain tests by concentration equipment suppliers are now in progress. These tests are now in a fairly advanced stage and done for guarantee of equipment to be offered by the various manufacturers.

(*c*) A final decision on the plant location will be taken by the Government of India.

திரு. ஜே. மாதா கவுடர் : பல அயல்நாடுகளுக்கு இது அனுப்பப் படுகிறது. எந்த நாட்டுக்காரர்களாவது இதைப் பரிசிலனை செய்து அதைப்பற்றி முடிவு சொல்லியிருக்கிறார்களா ? ஏதாவது ஒரு நாடு முடிவு சொல்லியிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒவ்வொரு நாடும் சொல்லி யிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பழுப்பு நிலக்கரியை நெய்வேலியில் அப்படியே எடுத்து இரும்பு ஆலையிலே உருக்குவதற்கு உபயோ கிக்கலாம் என்று ஒரு நாடு சொல்லியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அமெரிக்க நாட்டில் அந்த விதத்தில் பைலட் டெஸ்ட் நடத்தி, அவ்வாறு 'ரா லிக்னைட்' உபயோகப்படுத்த முடியும் என்று அவர்கள் சொல்லியிருக் கிறார்கள்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தப் பரிசீலனை தொடங்கி இப் பொழுது எத்தனை நாட்கள் ஆகின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குறைந்தது நான்கு ஆண்டுகள் இருக்கும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : 'ரா லிக்னைட்டைக்' கொண்டு இரும்பு உற்பத்தி செய்ய முயற்சி செய்தால் லிக்னைட்டை நீண்ட தொரு தூரத்திற்கு எடுத்துச் செல்ல முடியாது என்பது உண்மையா ? ஆகையினால், லிக்னைட்டை வேறு மாதிரியாக பக்குவப்படுத்தினால்தான் இதனை நீண்ட தூரத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்று கூறுவது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி 'ஸயன்ஸ்' பற்றிய கேள்வி. அட்மினிஸ்டிரேஷனைப்பற்றி இல்லை. இருந்தா லும் சொல்லுகிறேன். லிக்னைட் சீக்கிரம் தீப்பிடித்துக்கொள்ளக் கூடிய பொருள். அதை 'கார்பனேஸ்' பண்ணி சுட்டுக் கரியாக்கி அச்சுக்களாகச் செய்தால் தீ பிடிக்காது. 'ரா லிக்னைட்' வெளியே எடுத்துச்செல்ல வேண்டியதில்லை, எந்த இடத்தில் வெளியே போட் டிருந்தாலும், தீ பிடித்துக்கொள்ளக்கூடும்.

திரு. செ. மாதவன் : கனம் அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கார் முடிவு செய்யும் என்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் உருக்கு ஆலை எங்கே வைப்பது என்று இடத்தைப் பற்றி மத்திய சர்க்கார் முடிவு செய்யுமா ? அல்லது தமிழ் நாட்டிற்கு உருக்கு ஆலை வருமா, வராதா என்பதைப்பற்றி மத்திய சர்க்கார் முடிவு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தமிழ் நாட்டிற்கு உருக்கு ஆலை உண்டு என்ற முடிவு மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலேயே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் மூன்றாவது

ஐந்தாண்டுத் திட்டத்தைப் படித்துப் பார்த்தால், அதில் இதற்காக ரூ. 25 கோடி ஒதுக்கியிருப்பதைப் பார்க்கலாம். ஆனால், எந்த முறையிலே செய்வது ('ப்ராஸெஸ்'), எந்த இடத்திலே வைப்பது என்பதைப்பற்றியெல்லாம் நிபுணர்கள் முடிவு சொல்ல வேண்டியது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நம்முடைய அமைச்சர் அவர்கள் லிக்னைட்டைப் பக்குவப்படுத்தாமல் வெளியே எடுத்துப் போட்டு வைத்தால்கூட தீ பிடித்துக்கொள்ளக்கூடும் என்று சொன்னார். லிக்னைட்டை 'பிரிக்கட்டிங்' செய்வதற்கு செலவு எவ்வளவு ஆகும்? நெய்வேலியிலிருந்து நிலக்கரியை எடுத்துச் செல்லுவது என்றால், எவ்வளவு டன் கரியை பிரிக்கெட் செய்யவேண்டும், அதற்கான செலவு எவ்வளவு ஆகும், அதைத் தவிர்ப்பதற்காக அங்கு எடுத்துச் செல்லாமல், நெய்வேலியிலேயே இரும்புத் தொழிற்சாலையை வைப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த விஷயங்களையெல்லாம் நிபுணர்கள் பரிசீலித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதை நிச்சயம் பரிசிலனை செய்வார்கள்.

திரு. ஏ. ஆறுமுகம் : சேலம் இரும்புத் தொழிற்சாலை எப் பொழுது நம் நாட்டில் ஆரம்பிக்கப்படும் ?

கனம் சபாநாயகர் : இவ்வளவு நேரம் அதைத் தான் அமைச் சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஒரு கனம் அங்கத் தினர் நெய்வேலியில் வைக்கவேண்டுமென்று சொன்னார். கனம் அங்கத்தினர் திரு. ஏ. ஆறுமுகம் சேலத்தில் வைக்கவேண்டும் என்று கேட்பார்கள் என்று எதிர்பார்த்தேன்.

ஆதனூரில் மண்ணெண்ணெய் வளம்

*186 **கேள்வி.—திரு. எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், ஆதனூருக்கு அண்மையில் மண்ணெண்ணெய் கிடைப்பது உண்மையா ? விவர மென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

திரு. எஸ். மணி : திருச்சி மாவட்டத்தில் ஆதனூருக்கு அருகா மையில் புதைபொருள் ஆராய்ச்சியாளர் 1957-ல் கண்டுபிடித்து, அவர்கள் மத்திய சர்க்காரிலிருந்து ரூ. 2,000 பொறுமான கட்டடத் தையும் கட்டி வைத்திருப்பது உண்மையா ? 75 அடி நீளம் உள்ள மரம் கல்லாக மாறிவிட்டது என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர் சொல்லுகிறார்கள். அதைப் பார்த்து பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த இடத்தில் புதை பொருள் ஆராய்ச்சி நடந்தது. ஆராய்ச்சி நடத்தித்தான் அந்த இடத்தில் எண்ணெய் இருப்பதாகத் தெரியவில்லை என்று கூறினேன்.

[9th March 1964

திரு. எஸ். மணி : அந்த இடத்தில் அப்படியென்ருல் ரூ. 2,000 பொறுமான கட்டடம் எதற்கு என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தக் கேள்வி கேட்டதற்கு நன்றி. எப்பொழுதும் ஆராய்ச்சி செய்வதற்கு பணத்தைச் செலவழிக்காவிட்டால் விதை போடாமல் அறுவடை செய்யலாம் என்று நினைப்பது போல் ஆகும். ஆராய்ச்சி செய்வதால் நஷ்டம் ஏற்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். அந்த விதத்தில் ஆராய்ச்சி செய்யாவிட்டால் நமக்கு எந்த வித நலனும் கிடைக்காமல் போய்விடும். இதையெல்லாம் நஷ்டம் என்று நினைக்கக்கூடாது. இன்வெஸ்டுமெண்டு என்று நினைக்க வேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தமிழ் நாட்டில் எந்த மாவட்டத்தில் இவ்விதமாக எண்ணெய் வளம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப் பட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது? அப்படியிருந்தால் எந்த இடம் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சில ஆண்டுகளுக்கு முன்பு, செய்த பூகற்ப ஆராய்ச்சியின் பிரகாரம் காவேரி பேஸினில் எண்ணெய் இருக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ ஆராய்ச்சி செய்யும்போது மரம் கல்லாக மாறிவிட்டது என்று சொல்லுகிருர்கள் என்று சொன்னுர். அப்படி ஏதாவது மாறியிருக் கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி மரம் கல்லாக மாறக்கூடும். நீண்ட நாட்களாக ஆயிரம் ஆண்டுகளுக்கு மரம் பூமிக்கு அடியில் புதைந்து போய்விட்டால், அப்படி புதைந்துவிட்ட மரம் கல்லாக போகக்கூடும். அம்மாதிரி கற்களைக்கூட நான் வெளி நாடுகளுக்குச் சென்றிருந்தபோது கொண்டுவந்திருக் கிறேன்.

திரு. எம். எஸ். மணி : நிபுணர்கள் ஆராய்ச்சியில் ஆதனூரில் எண்ணெய் கிடைப்பதாகத் தெரிவித்திருக்கிருர்கள். தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் கிடைத்திருக்கிற காரணத்தால், திருச்சி மாவட்டத்தில் கிடைப்பதை வெளியிடவேண்டாம் என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல் லுகிற தகவல் சரியல்ல. அவர்கள் ஆராய்ச்சியின் பிரகாரம் இல்லை என்று தான் சொல்லுகிருர்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கல்லான மரம் பல பகுதிகளில் இருப்பதாகவும், அதிலும் குறிப்பாக எனது பகுதியிலே திருவக் கரை என்ற மலையில் கல்லான மரம் ஒன்றிருந்து, பல பகுதி மக்கள் அதை வந்து பார்த்தார்கள் என்ற நிலை இருக்கிறது. அதைப்

9th March 1964]

பற்றி என்ன ஆராய்ச்சி செய்தார்கள்? கனம் அமைச்சர் அவர்கள் அதற்காக என்ன செய்திருக்கிருர்கள் என்ற விவரத்தைச் சொல்லு வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கல்லாக மாறுகின்ற மரத் தைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை. உலகத்தில் பல பாகங்களிலும் இம்மாதிரி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதிலிருந்து ஏதாவது உபயோககரமான பண்டங்கள் ஏதாவது செய்யமுடியுமா என்று பார்த்தால், இதுவரையில் அப்படி ஏதாவது உபயோகமாக உள்ள பண்டங்கள் செய்ய முடியும் என்று தெரிய வரவில்லை.

திரு. எம். எஸ். மணி : 2,000 ஆண்டுகளுக்கு முன்பே அந்தப் பகுதி சமுத்திரத்தில் இருந்தது. இன்றைய தினம் அது மணல் மேடாக இருக்கிற காரணத்திஞல், அந்தப் பகுதியில் நிச்சயம் எண்ணெய் கிடைக்கும் என்று நிபுணர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதத்திலே இல்லை. எனக்கு இருக்கிற தகவல்படி அந்த இடத்தில் எண்ணெய் கிடைக் காது என்றுதான் சொல்லியிருக்கிருர்கள்.

"The Perambalur taluk area occupied by hard granite, in which mineral oil cannot occur" என்று இருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : மதுரை மாவட்டத்தில் சுருளிமலை நீர்விழ்ச்சிப் பகுதியில் மரங்களிலிருந்து தழைகள் விழுகின்றன, அந்தத் தழைகளெல்லாம் தண்ணீர் பட்டவுடன் கல்லாக மாறு கிறது. அதஞல் அதற்கு புனிதத் தன்மை கற்பிக்கப்படுகிறது. இதைப் பற்றி ஏதாவது ஆராய்ச்சி செய்ய முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நானும்கூட இதைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். நான் போய் பார்க்கலாம் என்று இருக் கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : காவேரிப் பிரதேசத்தில் எண்ணெய் வளம் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். அதைத் தோண்டி எடுப்பதற்கு ரஷியாவிலிருந்து என்ஜினியர்கள் வந்திருக்கின்றனரா? பெருவாரியாக எண்ணெய் எடுப்பது எப் பொழுது ஆரம்பிக்கப்படும் என்று கூறுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது ஆழ்க்கிணறு கள் தோண்டும் வேலை பட்டுக்கோட்டைப் பகுதியிலும், காரைக்கா லுக்கு அருகாமையிலும் நடந்து கொண்டிருக்கிறது.

கண் தானம் செய்தவர்கள்

*187 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள எத்தனை அரசாங்க மருத்துவ விடுதி களில் கண்கள் (Ey e Banks) பாதுகாக்கப்பட்டு வருகின்றன?

[9th March 1964

(இ) 1961-62 ஆண்டுகளில் எத்தனை பேர்கள் கண் தானம் செய்தார்கள்?

(உ) இவ்வாறு இறந்தவர்களின் கண்களைச் சேகரிக்க அவர்களின் வாரிசுகளுக்கு நன்கொடை ஏதேனும் அளிக்கப்படுகிறதா? எவ்வளவு?

(எ) 1961-62 ஆண்டுகளில் எவ்வளவு தொகை அளிக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) மூன்று.

(இ) மூன்று.

(உ) இல்லை.

(எ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

மணிமேகலா அனாதை இல்லம்

*188 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-63-ல் சிதம்பரம் தாலூகா சேத்தியாத்தோப்பு மணிமேகலா அனாதை இல்லத்திற்கு எவ்வளவு போர்டிங் கிராண்ட் வழங்கப்பட்டது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No grant has been paid during 1962–63 to this Orphanage. The matter is under consideration.

Industrial Training Institute, Gingee taluk

*189 *Q.*—SRI G. RAJARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start an Industrial Training Institute in Gingee taluk during the Third Five-Year Plan?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

தொழிற்பேட்டைகள்

*190 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா,

திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் இம்மாநிலத்தில் சர்க்கார் எத்தனை தொழிற்பேட்டைகள் அமைக்க உத்தேசித்திருக்கிறார்கள்?

(இ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும்?

9th March 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துள்ள பதின்மூன்று தொழிற்பேட்டைகளை நிறுவும் திட்டங்களுக்கு அரசாங்கம் இதுவரை அனுமதியளித்திருக்கிறது. இவற்றில் 1961-ல் அனுமதியளிக்கப்பட்ட பத்து தொழில் பேட்டைகள் 1964-ல் செயல்படத் தொடங்கும்.

(இ) தஞ்சாவூரில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்கெனவே நிறுவப்பட்ட ஒரு தொழில்பேட்டையோடு, கும்பகோணத்தில் மற்றொரு தொழில்பேட்டை நிறுவ 1963 மார்ச்சில் அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் தொழில்பேட்டை 1965 ஜூன் மாதவாக்கில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, what are the places where industrial estates would be established in 1964?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, அரக்கோணம், கோவில்பட்டி, காரைக்குடி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, விருத்தாசலம், அம்பத்தூர், மாதவரம் இதிலெல்லாம் இந்த வருஷத்திலேயே வேலை தொடங்கப்படும். கும்பகோணம், நாகர்கோவில், இந்த இரண்டு இடங்களில் இன்னும் இரண்டு ஆண்டுகளிலே தொடங்கும்.

வாணியம்பாடி தாலூகா நிறுவுதல்

*191 கேள்வி.—திரு. மு. பொ. வடிவேல் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வாணியம்பாடி துணை தாலூகாவுடன் ஆம்பூர், துத்திப்பட்டு பிர்க்காக்களை சேர்த்து வாணியம்பாடி தாலூகா என்று ஒரு தனித் தாலூகாவை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in view of certain administrative difficulties and inconvenience being experienced in the present set-up of the taluk is there any proposal under the consideration of the Government to reorganise the taluks on administrative grounds?

THE HON. SRI V. RAMAIAH : There is no general study as such. But, due to administrative reasons, if there are any difficulties experienced and if proper recommendations come up from the Collector and the Board considers them, the Government in order to give better facilities, may also take decisions and accept proposals.

வனஸ்பதி தொழிற்சாலை

* 192 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு வனஸ்பதி தொழிற்சாலை அமைக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

* 193 கேள்வி.—திரு. மு. சண்முகம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ம் ஆண்டு ஜுலை மாதம் 24-ம் தேதி 602-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலை ஒட்டி விழுப்புரத்தில் மெட்ராஸ் வனஸ்பதி லிமிடெட் கம்பெனியால் ஒரு வனஸ்பதி தொழிற்சாலை நிறுவும் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : The management are taking steps to run the factory either directly or through a lessee.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : விழுப்புரத்தில் இருக்கிற மதராஸ் வனஸ்பதி லிமிடெட் என்ற தொழிற்சாலையை சென்ற 10 ஆண்டு காலமாக அங்கே ஆரம்பிப்பதாக இருந்து வருகிறது. ஆனால் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அரசாங்கத்தினுடைய பணம் ஏறக்குறைய 10 லட்சத்திற்கு மேல் அந்த பாக்டரிக்குக் கடனாகவும், மின்சாரக் கட்டணமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது வரை எவ்வளவு வசூல் ஆகியது? அப்படி ரூ. 10 லட்சம் வசூல் ஆகவில்லை என்றால், அரசாங்கமே இதை ஏன் எடுத்து நடத்தக் கூடாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நமக்கு வரவேண்டிய தொகை எல்லாம் ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது. வருஷா வருஷம் இன்ஸ்டால்மெண்டுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு பாக்கியிருப்பது, முதலுக்காக ரூ. 6,60,000, வட்டிக்காக ரூ. 5 லட்சம், இதுதான் பாக்கி. இதை சர்க்கார் எடுத்து நடத்துவதாக உத்தேசமில்லை. காரணம் என்னவென்றால் மணிலாக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பது ஒரு ஸ்பெகுலேடிவ் டிரேட். விலைவாசிகள் தாறுமாறாக ஏறியிறங்கும். அந்தத் தொழிலை சர்க்கார் செய்வதற்கு போதிய வசதிகள் கிடையாது. ஆனால் இதை மூடிவிடவேண்டும் அல்லது ஏலம் போட்டு பணத்தை வசூலிக்க வேண்டுமென்கிற அபிப்பிராயங்களை ஒப்புக்கொள்ள முடியாது. சர்க்கார் அதை நடத்துவதற்குக் காலம் கொடுத்து, இயந்திரங்களைப் புதுப்பிப்பதற்கும், மின்சாரம் முதலியவைகள் கொடுத்து, அதை ஓட்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அந்த பாக்டரியிலிருந்து அரசாங்கத்துக்கு வரவேண்டிய தொகை ரூ. 11 லட்சம் என்று சொன்னார்கள். இப்பொழுது அங்கேயிருக்கிற இயந்திரங்களை அப்புறப்படுத்துவதாக அறிகிறேன். அரசாங்கத்தின் பணம் போகாமல் இருப்பதற்கு, அந்த பாக்டரியில் மொத்த மதிப்பீடு ரூ. 11 லட்சம் இருக்குமா என்று அரசாங்கம் விசாரணை செய்யுமா? அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படாத வகையில், அதை உடனடியாக ஏலம் போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதை ஏலம் போடுகிற உத்தேசம் அரசாங்கத்துக்குக் கிடையாது. எப்படியாவது நடத்த வேண்டும் என்பதுதான் சர்க்காருடைய நோக்கம். அதிலிருக்கிற இயந்திரங்களை மாற்ற முடியாது. வெளியேற்ற முடியாது. அவை எல்லாம் சர்க்காருக்கு மார்ட்கேஜ் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வாறு மாற்ற முயற்சி செய்கிறார்கள் என்று கனம் அங்கத்தினருக்கு கிடைத்திருக்கும் தகவல் சரியல்ல. இப்பொழுதுதான் மிகப் பெரிய வனஸ்பதி செய்யக்கூடிய கம்பெனிகள் வந்து பார்த்து, தங்களுக்கு லீசுக்கு வேண்டுமென்று ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டிருக்கும்பொழுது, மாற்ற முயற்சிக்கிறார்கள் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்காது.

திரு. எம். எஸ். மணி : தமிழ் நாட்டில் தனியார் துறையில் எத்தனை வனஸ்பதித் தொழிற்சாலைகள் இருக்கின்றன? அவைகளுக்கு அரசாங்கம் எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது இரண்டு மூன்று இருக்கின்றன. திருச்சியிலே ஒன்று இருக்கிறது. இரண்டாவது விழுப்புரத்திலே உள்ளது. சர்க்கார் விழுப்புரம் தொழிற்சாலைக்குத்தான் பணம் கொடுத்திருக்கிறார்கள். திருச்சி தொழிற்சாலைக்குப் பணம் கொடுக்கவில்லை.

Geological Survey in Ramanathapuram district

* 194 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the findings of the Geological Survey made recently in Kariyapatti Block of Ramanathapuram district;

(*b*) whether there are proposals to start any industry in that area based on the findings of the Geological report; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*c*) Kariyapatti Block of Ramanathapuram district was investigated by the State Geological Branch with a view to assess their potentialities of the saline efflorescences occurring in the area. Two million tons of Karkar on the eastern side of Kariyapatti Block and 19,000 tons of saline materials are available near Chittikulam, Mudukkankulam and P. Pudupatti. They are not sufficient for starting any industry in the area.

[9th March 1964

* 195 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have examined the Geological Survey Report on the graphite deposits in some parts of Sivaganga taluk in Ramanathapuram district; and

(b) the decision taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN: (a) & (b) The areas near Poovandi, Arasanur villages in Sivaganga taluk of Ramanathapuram district and Keeranur of Melur taluk of Madurai district were investigated by the State Geological Branch. The total quantity of Graphite rock in these areas is estimated as about 57,400 tons and Graphite concentrate as 10,000 tons. The Graphite in the area can be used for making crucibles and for paints. The report has been published in the *Fort St. George Gazette*. The Director of Industries and Commerce has also been asked to send a detailed report to the Government on how best this deposit can be exploited and his report is awaited.

Mr. SPEAKER: Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

9-00 a.m.

II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65

(1) Demand No. VI—State Legislatures (2) Demand No. VII—Elections; and (3) Demand No. VIII—Head of State, Ministers and Headquarters staff.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 14,07,800 under Demand No. VI—State Legislature".

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்—

"That the allotment of Rs. 14,07,800 under Demand No. VI—State Legislature be reduced by Rs. 100."

The Hon Sri M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 15,35,200 under Demand No. VII—Election."

திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, என் பெயரிலேயுள்ள வெட்டுப் பிரேரணையை நான் முன்மொழிகிறேன்—

9th March 1964] [திரு. து. ப. அழகமுத்து]

"That the allotment of Rs. 15,35,200 under Demand No. VII—Elections be reduced by Rs. 100."

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,13,25,100 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff."

திரு. செ. மாதவன், கனம் தலைவர் அவர்களே, என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை நான் முன்மொழிகிறேன்—

"That the allotment of Rs. 2,13,25,100 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100."

Mr. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

* *திரு. செ. மாதவன்: கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கும் மானியக் கோரிக்கைகள்மீது நாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.*

சில தினங்களுக்கு முன்னால், முதல் அமைச்சர் அவர்கள் இந்தி மொழிப் பிரச்சினை பற்றி சபையில் விவாதிக்கலாம், அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்றார். அதோடு மும்மொழிக் கொள்கை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வந்து, அரசாங்கம் ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறது. ஜனநாயக முறையில் நல்ல பண்பை முதல் அமைச்சர் அவர்களே பின்பற்றவில்லை என்பதை அவர்களுடைய வார்த்தைகளே எடுத்துக் காட்டுகின்றன: "இந்தியைப் படிக்காதவர்கள், விரும்பாதவர்கள் பாகிஸ்தானுக்குப் போகலாம்" என்றார்கள். இந்தியை . . . .

கனம் திரு. எம் பக்தவத்சலம்: *பண்பைப் பற்றி அங்கத்தினர்களிடம் நான் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. நான் கூறுதைக் கூறுவது பண்பா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஹிந்தியைப் படிக்காதவர்கள் பாகிஸ்தானுக்கு போகலாம் என்று நான் சொன்னேன்? ஹிந்தி படிக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. ஆனால், படிக்க விரும்புகிறவர்கள், மும்மொழிக் கொள்கையில், ஹிந்தியை எடுத்துக் கொள்ளலாம்; அல்லது வேறு மொழியைக் கற்கலாம். ஆனால் ஹிந்தியைக் கற்க முற்படுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களை, விரும்பாதவர்கள் தடுப்பது தவறு. ஹிந்தியை தாங்கள் விரும்பவில்லை என்பதற்காக வேறு யாரும் படிக்கக் கூடாது என்று தடுப்பவர்கள், சொல்பவர்கள், அத்தகைய மனப்பான்மை உள்ளவர்கள், பாகிஸ்தானுக்குப் போகலாம் என்றேனே தவிர, விரும்பாதவர்கள் போகலாம் என்று சொல்லவில்லை.*

[9th March 1964

திரு. செ. மாதவன் : கனம் அமைச்சர் அவர்கள் கொடுக்கும் விளக்கம் வேடிக்கையான விளக்கமாகத்தான் இருக்கிறது. இந்தியைப் பிடிக்காதவர்கள், "இந்தி வேண்டாம், படிக்காதீர்கள்" என்று வற்புறுத்துவது தவறு என்கிறார்கள். அப்படி எங்களை வெளி நாட்டுக்கு அனுப்பும் ஒரு நல்ல எண்ணம் நம் முதல் அமைச்சர் அவர்களுக்கு எப்பொழுது வந்தது என்பது என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மேலும் விளக்கம் கூற விரும்புகிறேன். தாங்கள் படிக்க விரும்பவில்லை என்பதற்காக வேறு யாரும் படிக்கக் கூடாது என்று தடுப்பது ஜனநாயகத்திற்கு முரண்பட்ட கருத்து. இங்கே ஜனநாயகம் நடைபெறுகிறது. முரண்பட்ட கருத்துக்களை உடையவர்கள், பிடிக்கவில்லை என்பவர்கள் ஜனநாயகம் இல்லாத இடத்திற்குப் போகலாம் என்பது தான் என் விளக்கம்.

திரு. செ. மாதவன் : இந்தி மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமா வேண்டாமா என்பது இன்னும் விவாதத்தில் இருக்கும் பிரச்சினை, அதில் கருத்துத் தெரிவிப்பது ஜனநாயகத்துக்கு முரண்பட்டது என்றால் முதல் அமைச்சர் அவர்கள் நமக்கு ஒரு புதிய ஜனநாயகத்தைத்தான் எடுத்துக் காட்டுகிறார்கள். நாங்கள் பணிவோடு அவர்களைக் கேட்டுக் கொண்டோம், நாங்கள் டெல்லிக்குப் போகிறீர்கள், அங்கே, எங்களுடைய கருத்துக்களை, தமிழகத்தின் கருத்துக்களை எடுத்துப் பேச வேண்டும், அந்த அடிப்படையில் தீர்வு காணவேண்டும் . . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : "எங்களுடைய கருத்து" என்பதற்கும் "தமிழகத்தின் கருத்து" என்பதற்கும் வித்தியாசம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. செ. மாதவன் : யூனியன் சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்கு இந்தி மொழியை தேர்வு மொழியாக அமைக்கக்கூடாது என்று சொல்லி வரவேண்டும் என்று நாங்கள் பணிவாகக் கேட்டதற்கு அமைச்சரவர்கள் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தால் அது விரும்பத்தக்கதாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் சொல்வது டெல்லியில் அவர்கள் இந்தியை தேர்வு மொழியாகத்தான் ஆக்கித் தீருவோம் என்றால் அதை எதிர்க்கமாட்டேன் என்று சொல்லுவது என்ன ஜனநாயகம், அது எப்படி ஜனநாயகக் கருத்து ஆகும் என்பதை என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. நம் முதலமைச்சர் அவர்களுக்கு தேர்வு மொழி இந்தி இருக்கக்கூடாது என்று வற்புறுத்துவோம் என்று சொல்ல உள்ளத்தில் தைரியம் இல்லை. வடநாட்டுக்குச் சென்றால் நம் கருத்தை அவர்கள் விரும்ப மாட்டார்கள், ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், அவர்கள் முடிவுக்கு வந்து விட்டார்கள் என்று இந்தித் திணிப்புக்கு ஓடி ஓடி ஒத்துக் கொள்வது வேடிக்கையாக இருக்கிறது. இந்தி மொழியைப் பொறுத்தவரை அமைச்சரவர்கள் நன்றாக சிந்திக்க வேண்டும்.

9th March 1964]

கனம் சபாநாயகர் : சப்ஜெக்ட்டைப்பற்றி பேச வேண்டும். பர்ஸனல் அட்டாக்கிலேயே நேரம் சென்று விடுகிறது. மந்திரி ஓடுகிறார்; தைரியம் இருக்கிறதா என்று எல்லாரும் பேசுவதால் ஆர்க்யூமெண்டுக்கு பலம் குறைந்து போகிறது. ரிடார்ட்டிலே போய் விடுகிறது. பர்ஸனல் அட்டாக் குறைய வேண்டும்.

திரு. செ. மாதவன் : இந்தியத் துணைக் கண்டத்திலே இந்தி மொழி வேண்டாம் என்ற கருத்து தமிழகத்திலே மட்டுமின்றி ஏனைய மாநிலங்களிலும் இருக்கிறது. தமிழகத்திலே இந்தி மொழி தேவையில்லை என்ற கருத்தை அமைச்சரவர்கள் வற்புறுத்த வேண்டும். தமிழகத்திலே மத்திய அரசு அலுவலகங்களில் கூட இந்தி தேவையில்லை என்றும், ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் தொடர்பு மொழியாக, லிங்க் லாங்க்வேஜாக, மட்டும் இருக்கும் முறையில் இந்தி இருக்கலாம். வேறு மாநிலத்தில் விரும்புகிறார்கள் என்றால் இந்தியை வைத்துக் கொள்ளலாம். தமிழகம் போன்ற இந்தி மொழி தெரியாத மாநிலங்களுக்கு இந்தி வேண்டாம் என்ற பொதுக் கருத்தை ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்தி மொழி தேவையில்லை என்ற கருத்தையோ, அல்லது இந்தி மொழி ஆட்சி மொழியாக வேண்டாம் என்ற கருத்தையோ ஒத்துக்கொள்ளாவிட்டாலும், அந்தப் பொதுக் கருத்தை டில்லியிலே வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தேர்வு மொழி பொறுத்தவரை தமிழகத்துக்கும் இந்தி பேசாத மற்ற மாநிலங்களுக்கும் நிச்சயம் அது தேவையில்லை. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் வாதாடி தேர்வு மொழி இந்தியாக இருக்கக்கூடாது என்ற விஷயத்திலே கடுமையாக இருந்து தேர்வு மொழிக்கு இந்தி மொழி வேண்டாம் என்ற கருத்தை வலியுறுத்தவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மாநில ஊழியர்களுக்கு அலவன்ஸ், படி கொடுப்பதைப்பற்றியது. அதுபற்றி சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் ஒரு புதிய கருத்தை வெளியிட்டார்கள். செகரட்டரி, டெபுடி செகரட்டரி, அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் இவர்களிடையே வேறுபட்ட அளவிலே சம்பளம் இருக்கிறது என்று சொன்னார்கள். மத்திய சர்க்கார், மாநில சர்க்கார், ஊழியர்கள் எந்த அடிப்படையில் உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டார்களோ, அதிலே அவர்கள் சம்பளத்திலே வேறுபட்ட நிலை இருக்கிறது. ஒருவர் மேல் மட்டத்தில் இருக்கிறார். மற்றவர் கீழே இருக்கிறார். ஆகையினால் சம்பள வேறுபாடு பொருத்தமாக இருக்கிறது. ஆனால் சென்னை நகரத்தை 'ஏ' கிரேடு ஆக்க வேண்டும் என்று மாநில சர்க்காரும் முன்னாள் முதல் அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அந்த நிலை சென்னைக்கு வந்த பிறகு மாநில ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் ஒரு வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. அந்த வேறுபாட்டை நீக்க

[திரு. செ. மாதவன்] [9th March 1964

அரசாங்கம் ஏன் தயங்க வேண்டும். மத்திய சர்க்கார் ஏற்றி இருக்கக்கூடிய படியை நாமும் ஏன் ஒத்துக்கொள்ளக்கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டும்.

மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் ஏற்கனவே வேறுபட்ட சம்பளச் சூழ்நிலை இருக்கிறது. அதோடுகூட, சென்னை மாநகரம் 'ஏ' கிரேடு சிடி ஆகிவிட்ட காரணமாகவும் படி விஷயம் வேறுபடுகிறது. அந்த வேறுபாட்டையாவது நீக்க நம்முடைய அரசாங்கம் ஏன் தயக்கம் காட்டுகிறது? மத்திய சர்க்கார் நிதி உதவி கொடுப்பார்கள் என்ற நிலை மாறிவிட்டது: அவர்கள் நிதி உதவி கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டதற்குப் பின்னாலே, நம்முடைய சர்க்கார் வேறு நிதியிலிருந்தாவது, மாநில சர்க்காரினுடைய ஊழியர்களுக்கு ஏன் இந்தப் படியை அதிகரிக்கக் கூடாது என்பதை அமைச்சர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் லஞ்சத்தை ஒழிப்பதற்காக ஒரு விஜிலன்ஸ் கமிட்டி என்று போட்டிருக்கிறார்கள். லஞ்சத்தை ஒழிக்கக்கூடிய கமிட்டி, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையிலே எப்படி இருக்க வேண்டும்? மேல்நாடுகளில் இருக்கும் அம்புட்ஸ்மென் அமைப்பைப் பின்பற்றி, நம்முடைய நாட்டிலும், அதிகார சார்பற்றவர்கள் விசாரணை செய்து; இந்த நாட்டிலுள்ள, அரசாங்கத்திலுள்ள லஞ்ச ஊழல்களை நீக்கவேண்டும் என்ற கருத்தைத்தான் வலியுறுத்தி வந்திருக்கிறோம். ஆனால், நம்முடைய மாநிலத்திலேதான் ஒரு போலீஸ் அதிகாரியை விஜிலன்ஸ் கமிட்டிக்குத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். அரசாங்கத்திலே ஊழலைத் தடுப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி, சர்க்காரிலே இருப்பவர்கள் லஞ்சம் வாங்குவதைத் தடுப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி போலீஸ் இலாகாவிலேயிருந்து நியமிக்கப்படுகிறார். குறிப்பிட்ட போலீஸ் அதிகாரிக்கு உத்தியோக உயர்வு கொடுக்கவேண்டுமென்றால், அமைச்சர்கள் அதற்கு வேறு முறைகளைப் பின்பற்றியிருக்கலாம். ஆனால், லஞ்சத்தை ஒழிப்பதற்காக ஒரு பாரபட்சமற்ற அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமானால், நீதித் துறையிலே (ஜுடிஷியரி) இருந்து ஒரு அதிகாரியைத் தலைவராக நியமித்து, அந்தக் குழுவினிடத்திலே அரசாங்க இலாகாக்களிலே வரக்கூடிய லஞ்சக் குற்றச்சாட்டுக்களையும், அரசியல்வாதிகள்மீது வரக்கூடிய லஞ்சக் குற்றச்சாட்டுக்களையும் அவர்கள் விசாரிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தத் தவறியது என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அமைச்சரவைக்கும் இன்றைக்கு நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளுக்கும் என்ன பொறுப்பு என்பதை நாம் முடிவு கட்ட வேண்டும். நாங்கள் பல முறை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால்

9th March 1964] [திரு. செ. மாதவன்]

அமைச்சர்கள் பொதுவானவர்கள்; அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள். எதிர்க் கட்சிகளுக்கும் அவர்கள் அமைச்சர்கள் என்ற கருத்தைப் பல முறை நாங்கள் இங்கே வலியுறுத்தியிருக்கிறோம். ஆனால், அமைச்சர்கள் எங்கே சென்றாலும் சரி, எந்த விழாக்களில் அவர்கள் பங்கு பெற்றாலும் சரி, அங்கே அரசியல் கட்சிகளைப் பற்றிப் பேசுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம்—காங்கிரஸ் அரசாங்கம்—இதற்கு முன்னால் உள்ள சட்ட மன்றத்திலே ஒரு உறுதி கொடுத்திருக்கிறது. அப்பொழுது பேசும்போது, அப்பொழுது நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெளிவாகச் சொன்னார். "பொது விழாக்களிலே அமைச்சர்கள் அரசியல் கட்சிகளைப் பற்றிப் பேசக் கூடாது" என்ற உறுதியைத் தந்தார்கள். அந்த உறுதியை இந்த அரசாங்கம் பின்பற்றி வருகிறதா என்றால் அந்த உறுதியைத் தவற விட்டிருக்கிறது. எந்த விழாக்களில் அமைச்சர்கள் பேசினாலும், இதுபோன்ற அரசியல் கட்சிகளைத் தாக்கி, தங்கள் கொள்கைகளை விளக்குகிறோம் என்ற அடிப்படையிலே பேச ஆரம்பிக்கிறார்கள். இப்படி ஜனநாயகத்தை வளர்க்க முற்பட்டால் எதிர்காலத்தில் நல்ல சூழ்நிலை ஏற்பட முடியாது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நான் ஒரு யோசனை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னால், அமைச்சர்கள் தங்களுடைய பதவிகளை ராஜீனாமா செய்து விடவேண்டும். அரசியல் நாணயத்தைக் காப்பாற்றுவதற்காகத்தான், நல்ல ஜனநாயக முறையை வளர்ப்பதற்காகத்தான் அப்படிப்பட்ட கொள்கையைச் சொல்கிறோமே தவிர, ஏதோ அமைச்சர்மீது பொறாமை கொண்டு சொல்வதாகக் கருதக் கூடாது. இந்த நாட்டில் நல்ல ஜனநாயகம் உருவாக வேண்டுமானால், அமைச்சர்கள், "தங்களுடைய பதவிகளிலிருந்து தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பே விலகிக்கொள்ளுவோம், பதவியை ராஜினாமா செய்வோம்" என்ற உறுதியை அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில், "தேர்தல் காலங்களில், பொது விழாக்களில் நாங்கள் கலந்துகொள்ளமாட்டோம்". என்கிற உறுதியையும் அமைச்சர்கள் தந்தார்களானால், இந்த நாட்டில் தேர்தல்கள் சுமுகமாக நடைபெறுவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதையும் நான் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

நம்முடைய தமிழக அமைச்சர்களைப் பொறுத்த அளவுக்கு, வேறு ஒரு நல்ல திட்டமும் அவர்களுக்குத் தேவை என்று நான் கருதுகிறேன். நம்முடைய நாட்டிலிருந்துதான், குறிப்பாக தமிழ் நாட்டிலிருந்துதான் வெளி நாடுகளிலே தமிழர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். நம்முடைய தமிழக மக்களின் நலனுக்காகத் தமிழகத்திற்கு அமைச்சரவை இருக்கிறது. ஆனால், வெளிநாடுகளிலே உள்ள தமிழர்களுக்கும் நாம்தான் பொறுப்பு ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்களுடைய குறைகளைக் களையவும் இந்த நாட்டுத் தமிழ்த் தலைவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். அந்தப் பொறுப்பைத் தமிழக அமைச்சரவை

[திரு. செ. மாதவன்] [9th March 1964

ஏற்பதற்குத் தயங்குகிறது. மத்திய சர்க்காருக்குப் பயந்து கொண்டு. வெளிநாடுகளிலே வாழும் தமிழர்களுடைய குறைகளை நாம் சிந்தித்துப் பார்த்து, அவர்களுக்காக நம்முடைய குரலை எழுப்புவோம் என்ற கொள்கையை இந்த அரசாங்கம் கடைப் பிடிப்பதற்குத் தவறுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாகச் சொல்கிறேன்—மலாயா, இலங்கை போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் சுங்க இலாகாவிலே படக்கூடிய கொடுமைகளை இந்த அரசாங்கம் நீக்கத் தவறியது. மத்திய அரசிடம் நம்முடைய அரசு வெளிநாட்டிலுள்ள தமிழர்களுடைய கஷ்டங்களைச் சுட்டிக்காட்டி, 'தமிழர்களை ஏன் கொடுமைப்படுத்துகிறீர்கள்?" என்று கேட்கலாம். சட்டத்திற்குப் புறம்பாக வெளிநாட்டுப் பயணிகள் நடந்தால் அதை ஆதரிக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

MR. SPEAKER: Is this not a subject to be raised in Parliament?

திரு. செ. மாதவன்: தமிழக அமைச்சர்கள் பிற நாடுகளில் உள்ள தமிழர்களுக்காக மத்திய சர்க்காரிடத்தில் எடுத்துச் சொல்லி . . .

MR. SPEAKER: Are there no representatives belonging to the hon. Member's party in Parliament?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒன்றை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இது தமிழ் நாட்டு மந்திரிசபை.

திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டு மந்திரிசபை என்ற காரணத்தினாலேதான், தமிழர்களைக் குறித்து தமிழ்த் தலைவர்களாகிய அமைச்சர்களுக்கு அந்த உணர்வு இருக்கக்கூடாதா என்று கேட்டேன்.

இந்த மாநிலத்திலுள்ள பப்ளிக் சர்வீஸ் கமிஷனைப்பற்றி இன்றைக்கு நாட்டிலே ஒரே குழப்பம் ஏற்பட்டுள்ளது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே, சர்க்கார் வேலைக்கு உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இருக்கக்கூடிய அமைப்பிலே, சர்க்கார் தலையிடுகிறதா, அரசாங்க அமைச்சர்கள் தலையிடுகிறார்களா என்ற எண்ணம் இந்த நாட்டு மக்களிடையே ஏற்பட்டு, பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. லஞ்சம் தாண்டவம் ஆடுகிறது. லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சாட்டப்படுகின்றன. அங்கேயுள்ள சில அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலுங்கூட ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்த பப்ளிக் சர்விஸ் கமிஷனின் சேர்மன் கைது செய்யப்பட்ட ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதில் அரசாங்கம் தலையிட்டு, அதைத் தடுத்து விட்டதோ என்ற சந்தேகம் மக்களிடையே எழும்பியுள்ளது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் பொறுப்போடு பேசவேண்டும். ஏதோ பத்திரிகையில் வந்ததை

9th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

எடுத்துப் பேசுவதைவிட, அவர்களுக்குத் தகவல் இருந்து, குறிப்பாகப் பேசினால் அதற்குமேல் நான் சொல்லவேண்டியதைச் சொல்ல முடியும்.

திரு. செ. மாதவன்: பப்ளிக் சர்விஸ் கமிஷனிலே இருப்பவர்களைக் குறித்துக் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டுகள், உத்தியோகங்களுக்குப் போடுவதற்கு முன் லஞ்சம் வாங்குகிறார்களா? அல்லது, அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் அதிலே தலையிட்டு லஞ்சம் பெருகி இருக்கிறதா? இந்த நிலை இன்றைக்கு விளக்கப்படாமல் இருக்கிறது. பல பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பல பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அமைப்பிலே . . .

கனம் சபாநாயகர்: அமைச்சர்கள் லஞ்சம் கொடுத்தார்களா? அமைச்சர்கள் வாங்கி எந்த மெம்பருக்குக் கொடுத்தார்? கனம் அங்கத்தினர் எதைச் சொல்ல வருகிறாரோ அதைத் தெளிவாகச் சொல்லவேண்டும்.

திரு. செ. மாதவன்: அங்கே லஞ்சம் இருந்தது என்று வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். சில பேர்கள் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அரெஸ்ட் வாரண்டைத் திரும்பப் பெற்றிருக்கிறார்கள், என்ற குற்றச்சாட்டு இன்று மக்கள் மத்தியிலே பேசப்படுகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எதையும் விளக்கமாகச் சொல்ல வேண்டும். யார் மீது அரெஸ்ட் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது? யார் 'கேன்ஸல்' செய்தார்கள்? யார் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள்? இதையெல்லாம் கனம் அங்கத்தினர் விவரமாகச் சொன்னால், நான் பதில் சொல்லும்போது விளக்கம் கூறலாம்.

திரு. செ. மாதவன்: அந்த விவரங்களைக் கனம் அமைச்சரிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆசை இருக்கிறது. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இன்று நாட்டு மக்களிடையே வைத்திருக்கிறார்கள்.

கனம் சபாநாயகர்: விவரங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால் கேள்வி போட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். அப்பொழுது அமைச்சர்கள் விவரங்களைக் கொடுத்துத் தெளிவு படுத்த முடியும். விவரங்கள் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு முன்பே, 'அமைச்சர்கள் எதை எதையோ செய்துவிட்டார்கள்' என்று கனம் அங்கத்தினர் எப்படிப் பேச முடியும்? கனம் அங்கத்தினர் விவரம் தெரிந்துகொள்ளவேண்டும் என்று சொல்வதைப் பார்த்தால், அவர் சொல்வதெல்லாம் உண்மையான விவரங்களை ஆதாரமாகக் கொண்டதாக இல்லை **"not based on facts"** என்றுதான் முடிவு கட்டவேண்டும். If the hon. member wants any information he must get it in the proper manner.

திரு. செ. மாதவன் : இப்படிப்பட்ட குற்றச்சாட்டு நம்முடைய மாநில பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மேல் இன்றைக்கு நாட்டு மக்களிடத்திலே இருக்கிறது. அதற்கு இந்த அமைச்சரவை என்ன பதில் சொல்லப் போகிறது? இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மைதானா? எதற்காக அப்படிப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்? அப்படிப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால், அதற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்கிறதா? அப்படிப்பட்ட தகவல்களைத் தவறு என்று அரசாங்கம் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறதா? இதையெல்லாம் நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நாட்டிலே நல்ல அரசாங்கம் நடைபெற வேண்டுமானால், இந்த ஆட்சி அமைப்பு முறை ஒழுங்காக நடைபெற வேண்டுமானால், பல ஆண்டுகளுக்குப் பின்னாலும் நாமும் பழைய ஆட்சி முறையை வைக்காமல், புதிதாக அட்மினிஸ்ட்ரேட்டிவ் மெஷினரியை ஒழுங்குபடுத்த சீர்திருத்தம் செய்யவேண்டும், புதிய அமைப்பு முறைகளை நாம் உருவாக்க வேண்டும், எங்கெங்கே எப்படி எப்படித் தவறுகள் ஏற்படுகின்றன என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்கிற கருத்து இன்றைக்கு நாட்டு மக்களிடையே இருக்கிறது. அந்தக் கருத்தை நிறைவேற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்காக ஒரு அட்மினிஸ்ட்ரேடிவ் ரிஃபார்ம் கமிஷன் என்ற அமைப்பை ஏற்படுத்தி நம்முடைய நாட்டு நிர்வாகத்தில் உள்ள ஊழல்களை எப்படிக் களைய வேண்டும், நிர்வாகத்தில் எங்கெங்கே ஊழல்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிய வேண்டும். ஏற்கனவே வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த நிர்வாக அமைப்பை நாம் இன்றைக்குப் பின்பற்றி வருகிறோம். அதை எப்படி மாற்றலாம் என்று ஆராய்ச்சி செய்து, அதை நல்ல முறையில் அமைப்பதற்கு ஒரு அட்மினிஸ்ட்ரேடிவ் ரிஃபார்ம் கமிஷனை நம்முடைய அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். மத்திய சர்க்கார் கூட இது போன்ற ஒரு குழுவை ஏற்படுத்த யோசித்து வருகிறது. இது போன்ற குழுவை நம்முடைய மாநிலத்திலும் அமைச்சரவை ஏற்படுத்தி, நம்முடைய மாநிலத்தில் உள்ள ஆட்சி முறையைச் சீர்படுத்த முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய பேச்சினைத் தொடங்குவதற்கு முன்பாக நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : நன்றியையும் தெரிவிக்க வேண்டாம், கோபமும் வேண்டாம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நமது அமைச்சர் அவர்கள் இந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து இருந்து வரவேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தி வருகிறார்கள். அதற்காகத்தான் அவருக்கு

நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நேற்று முன்தினம் கூட இந்தி மொழியை இன்டெபென்டாக எதிர்க்கிறோமே தவிர, ஆங்கிலமும் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருப்பதற்கான வழிவகைகள் ஏற்படும் என்று சொன்னார்கள். அது எப்படி இருக்கும், அதைச் சற்று விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசியல் சட்டம் 342-ஆவது ஷரத்து பிரகாரம் 1965-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 26-ஆந் தேதியில் இருந்து இந்திதான் நமக்கு ஆட்சிமொழி என்று இருக்கிறது. அது தவறு. ஆங்கிலமும் இந்தி பேசாத பகுதி மக்களுடைய நலனுக்காக இந்தியோடு கூட துணை மொழியாக அல்லது மாற்று மொழியாக இருக்க வேண்டும் என்று இந்தி பேசாத மாநிலத்தில் உள்ளவர்கள் ரெப்ரசென்டேஷன் செய்தார்கள்.

"This House recommends to the State Government that the Central Government be requested to undertake appropriate legislation in order to implement the Prime Minister's assurances regarding the continued use of English language for official purposes of Indian Union".

என்று தான் இந்த மன்றத்தில் உள்ள எல்லாக் கட்சியினர்களும் சேர்ந்து தீர்மானம் போட்டோம்.

பண்டித நேரு அவர்களை நாம் அனைவரும் மதிக்கிறோம். அவர் கொடுக்கிற உறுதிமொழியை பார்லிமென்டு சட்டத்தைவிட, அரசியல் சட்டத்தைவிட அதிகமாக மதிக்கிறோம். அவரும் பிரதம மந்திரியாக இருக்கிறார். அவர் கொடுத்த உறுதிமொழி பார்லிமென்டில் கொண்டுவரப்பட்ட அபிஷியல் லாங்வேஜ் பில்லில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை நாம் பார்க்கவேண்டும். அவர் கொடுத்த உறுதிமொழி என்ன?

"So I would have it as an alternative language as long as people require it and the deceision for that I would leave not to the Hindi knowing people but to the non-Hindi knowing people.".

இந்தி அகில இந்திய ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி இந்தி பேசுகின்ற மாநில மக்கள் மட்டும் முடிவு செய்தால் போதாது. இந்தி பேசாத பகுதி மக்களும் இந்தி அகில இந்திய மொழியாக இருக்கலாம் என்று ஒத்துக்கொள்ளாத வரையில் இந்தி அகில இந்திய மொழியாகத் திணிக்கப்பட மாட்டாது. ஆங்கிலமும் அதுவரை தொடர்ந்து இருக்கும் என்று நமது பிரதம மந்திரி வாக்குறுதி கொடுத்தார்கள். அவர் உறுதிமொழிக்கு நாம் எல்லாம் தலைவணங்கினோம். அதை ஏற்றுக் கொண்டோம். அந்த அடிப்படையில் முன்னாள் நிதி மந்திரி திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்தச் சபையிலே ஒரு தீர்மானம் கொண்டுவந்தபோது எங்கள் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும்—தமிழகத்தில் இருக்கிற எல்லாப் பிரதிநிதிகளும் ஆதரித்தார்கள். இந்தியோடு கூட ஆங்கிலமும் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நாம் இங்கே கொண்டுவந்து ஒருமுகமாக நிறைவேற்றினோம். அப்படி நாம் இங்கே நிறைவேற்றிய தீர்மானத்தின் கருத்து பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டுள்ள அபிஷி

யல் லாங்வேஜ் பில்லில் காணப்படுகிறதா என்பதை நமது முதல் மந்திரி அவர்கள் தயவு கூர்ந்து பரிசீலித்துப் பார்க்க வேண்டும். இந்தி பேசாத மாநிலத்தில் இருக்கிற மக்கள் முடிவு செய்கிற வரைக்கும் இந்தியை மட்டும் அகில இந்திய ஆட்சி மொழியாகக் கொண்டுவரமாட்டோம் என்று இந்தியப் பிரதம மந்திரி வாக்குறுதி கொடுத்தார்களே, அதுவாவது அபிஷியல் லாங்வேஜ் பில்லில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இதை நமது முதல் மந்திரி அவர்கள் சற்றுப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தி மட்டும் தான் அகில இந்திய ஆட்சிமொழியாக இருக்கும் என்பதை நாம் அப்பொழுதே எதிர்த்தோம். இந்தியோடு கூட ஆங்கிலமும் தொடர்ந்து துணைமொழியாக அல்லது மாற்று மொழியாக நம்முடைய தேசத்தில் ஆட்சிமொழியாக நிலவுவதற்கு தேவையானால் அரசியல் சட்டத்தையும் திருத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று நமது முன்னாள் அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இதே சட்டசபையில் கூறியிருக்கிறார்கள். அது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இதற்காக அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டிய அவசியம் கிடையாது.

Notwithstanding anything in this Article, Parliament may by law, provide for the use after the said period of 15 years of the English language.

என்று அரசியல் சட்டத்திலேயே கூறியிருக்கிறார்கள். அகில இந்திய மொழியாக இந்தியோடு கூட ஆங்கிலத்தையும் துணை மொழியாக அல்லது மாற்று மொழியாக எவ்வளவு காலத்திற்கு பாராளும் மன்றம் விரும்புகிறதோ அவ்வளவு காலத்திற்கு வைத்துக்கொள்ள அரசியல் சட்டத்திலேயே உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் 343-வது ஷரத்தின் மூன்றாவது உப பிரிவின் பிரகாரம் நாம் தொடர்ந்து காலவரையறையின்றி ஆங்கிலத்தையும் அகில இந்திய துணை ஆட்சிமொழியாக அல்லது இந்திக்கு மாற்று ஆட்சி மொழியாக நாம் வைத்துக் கொள்ளலாம்.

அதைவிட்டுவிட்டு இப்போது கொண்டுவரப்படுகிற அபிஷியல் லாங்வேஜ் பில்லைப் பார்த்தால் நம்முடைய கருத்துக்களோ அல்லது பிரதம மந்திரி கொடுத்த உறுதிமொழியோ அதில் சேர்க்கப்படவில்லை. இந்தி வெறியர்கள் இந்த உறுதிமொழியையோ, நம்முடைய தீர்மானத்தின் கருத்தையோ ஆழ்ந்து பரிசீலனை செய்து இந்த பில்லைக் கொண்டு வந்திருக்கிறார்களா என்பதை நாம் துருவித் துருவிப் பார்க்கவேண்டும். பாராளு மன்றம் விரும்பினால் இந்தியோடு கூட ஆங்கிலத்தையும் துணை மொழியாக அல்லது மாற்றுமொழியாக இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு வைத்துக்கொள்ளலாம்—இந்தியோடு கூட நிரந்தரமாகவே வைத்துக்கொள்ளலாம் காலவரையறையின்றி.

ஆனால் இப்போதுள்ள நிலவரப்படி இந்தி தான் அகில இந்திய ஆட்சிமொழியாக 1965-ம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதி முதல் வந்துவிடும் என்றாகிவிட்டது. ஆகவே தான் இதுபற்றிய பிரச்சினை எழுகிறது. தென் பிராந்திய மக்களது கருத்தை, வங்காள மக்க

மக்களது கருத்தை, பிரதம மந்திரி அவர்களுடைய உறுதிமொழியின் கருத்தை அவர்கள் ஏற்று அபிஷியல் லாங்வேஜ பில் கொண்டு வந்திருந்தால் பிரச்சினை இல்லை. தயவுசெய்து இந்தப் பிரச்சினையை நமது முதல் மந்திரி அவர்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Notwithstanding the expiration of the period of fifteen years from the commencement of the Constitution, the English language may as from the appointed day continue to be used, in addition to Hindi, for all the official purposes of the Union for which it was being used immediately before that day and for transaction of business in Parliament.

'மே' என்பதற்குக் கூடக் கவலைப்படவில்லை. அதைச் சொல்லுகின்ற விதம்

" It shall be the Official Language in addition to Hindi after the expiration of ten years or the date on which Clause 3 comes into force, there *shall* be constituted a committee on official language on a resolution to that effect being moved in either House of Parliament with the previous sanction of the President and passed by both Houses."

என்பதனால் இந்தி அகில இந்திய ஆட்சிமொழியாக வந்து சேரும். ஆகவே நம்முடைய கோரிக்கைகளை, நியாயமான வேண்டுகோளை அவர்கள் கவனிக்கவில்லை. பிரதம மந்திரி கொடுத்த வாக்குறுதியைக் கூட மதித்துச் செயலாற்றவில்லை. இந்தி கட்டாயமாக அகில இந்திய ஆட்சிமொழியாக வந்தால் நமக்கு பல சிரமங்கள் எழக்கூடும். அவற்றை நான் சொல்லி கனம் அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய நிலை இல்லை. அவர்களே நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற சங்கடம் எனக்குத் தெரிகிறது. இருந்தாலும் அவர்கள் டெல்லிக்குச் சென்று கொஞ்சம் துணிச்சலாகக் கேட்கவேண்டும். ' இங்கே உள்ளவர்கள் எதிர்க்கிறார்கள். இவர்களுடைய எதிர்ப்பைச் சமாளிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது, அவர்களுடைய கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை. அவற்றை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்" என்பதை துணிச்சலாக அவர்கள் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1965-ஆம் வருஷம் ஜனவரி 26-ஆம் தேதிக்குப் பிறகு இந்தி மட்டும் அகில இந்திய ஆட்சிமொழியாக ஆகிவிடும். இதுபற்றி மூன்றாவது ஷரத்தில் கூறியுள்ளது மட்டும் அல்ல. நான்காவது ஷரத்தையும் நாம் பரிசீலிக்க வேண்டும். நமது பிரதம மந்திரி அவர்களுக்கு மரியாதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். நான்காவது ஷரத்திலே

It shall be the duty of the Committee to review the progress made in the use of Hindi for official purpose of the Union and submit a report to the President making recommendations thereon and the President shall cause the report to be laid before each House of Parliament and sent to all the State Governments.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [9th March 1964

The President may after consideration of the report referred to in sub-section 2 and views if any, expressed by State Governments thereon, issue directions in accordance with the whole or any part of the report.

இங்கே பண்டித நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதிப் பிரகாரம் இந்தி பேசாத பகுதி மக்களுடைய அபிப்பிராயத்தைக் கலந்து கொள்ள எங்கே வாய்ப்பு இருக்கிறது? மத்திய சர்க்காரில் இருக்கிற காங்கிரஸ்காரர்கள் உத்தரவு போட்டுவிட்டால் அதை மத்திய அரசாங்கம் நிறைவேற்றத்தானே செய்யும்? நம்முடைய தீர்மானம் என்ன ஆயிற்று? இந்தி எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது; எவ்வளவு தூரம் முன்னுக்கு வந்திருக்கிறது; இன்னும் எவ்வளவு தூரம் முன்னுக்கு வரவேண்டும் என்பதை ஆராய்வதற்காகத்தான் கமிட்டியை உண்டாக்கி இருக்கிறோம் என்று 4-வது ஷரத்திலே
9-30 a.m. கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் எடுத்துச் சொல்லும் நிலைமையில், தமிழகத்தின் கருத்தை அமைச்சர் அவர்கள் டெல்லியிலே எடுத்துச் சொல்லவேண்டும். யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரிட்சையை இந்தியில் வைக்கவேண்டுமென்றால் அது தமிழ் மக்களுக்கு, இந்தி பேசாத தென்னக மக்களுக்கு ஒரு பெரும் இடையூறாக இருக்கும் என்று எடுத்துக் கூறவேண்டும். நமது முதலமைச்சர் அவர்களும் இந்த மன்றத்தில் அத்தகைய ஒரு கருத்தை நேற்றைய தினம் எடுத்துச் சொன்னார்கள். இதனைக் கொஞ்சம் அழுத்தம் திருத்தமாக அமைச்சர் அவர்கள் டெல்லியிலே எடுத்துச் சொல்லவேண்டும். இந்தச் சட்டத்தின் ஆறாவது பிரிவின்படி எல்லா சட்டசபை நடவடிக்கைகளும் இந்தியில் மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்பதற்கான வழிவகையினைச் செய்து விட்டார்கள். ஏழாவது ஷரத்தின்படி கோர்ட்டுகளில் அளிக்கப்படும் ஜட்ஜ்மெண்டை இந்தியில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இது இப்போது தேவைதானா? அகில இந்தியாவிலும் இருக்கும் எல்லா மக்களும் ஒருமுகமாக இந்தி தேவை என்று சொல்லுகிற வரை ஆங்கிலம் நீடிக்கும் என்று சொன்ன பிரதம மந்திரியின் அஷ்யூரன்ஸ் எங்கே போயிற்று? அதைக் கிழித்துப் போட்டுவிட்டு இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே. ஆகவே, அமைச்சர் அவர்கள் இங்கிருந்து செல்லுகின்ற சமயத்தில் இந்தப் பகுதியில் இருக்கும் மூன்று கோடி தமிழ் மக்களின் பிரதிநிதியாகச் செல்ல வேண்டுமே தவிர, 130 சட்டசபை காங்கிரஸ் அங்கத்தினர்களின் பிரதிநிதியாகச் செல்லக்கூடாது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளைத் தீர்ப்பதற்காகச் செல்லுகின்ற ஒரு தூதராக அமைச்சர் அவர்கள் தைரியமாகச் சொல்லவேண்டும். எப்போதும் ஆங்கிலம் அசோஷியேட் லாங்வேஜ் ஆக, ஆல்டர்நேடிவ் லாங்வேஜ் ஆக இருக்கவேண்டுமென்பதற்கான ஒரு உத்தரவாதத்தை வாங்கிக் கொண்டு வெற்றியோடு திரும்பி வரவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவர் ஒரு எச்சரிக்கையைக் கூடச் செய்யலாம். "இந்திச் சட்டத்தின் காரணமாகத்தான் தமிழ் நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து கொண்டே வருகிறது. இப்படி

9th March 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

இந்தியை நீங்கள் புகுத்துவீர்களானால் திராவிட முன்னேற்றக் கழகம் வளருவதை எங்களால் தடுக்க முடியாது. அதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல. கனம் காமராஜ் அவர்களும் பொறுப்பு அல்ல. இந்தியை அகில இந்திய மொழியாகச் செய்து விட்டால் 1967-ல் நாங்கள் வருவோம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்று கனம் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னால் அங்கே இருக்கின்றவர்களுக்குக் கொஞ்சம் புரியும். இவ்வாறு இந்தப் பிரச்சினை பற்றித் திறம்பட எடுத்துச் சொல்லி வெற்றி வீரராகத் திரும்பி வரவேண்டுமென்று தமிழ் மக்கள் எல்லோரும் சேர்ந்து வாழ்த்துவது போன்று நானும் அவர்களை வாழ்த்தி வழி அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி, எங்களுடைய யோசனையைக் கேட்டமைக்காக நன்றியும் வணக்கமும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

MR. SPEAKER: None of these hon. members has spoken about the Demands that are before the House for discussion. Everybody is speaking about 'Hindi policy'.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Reference to Hindi is not irrelevant in the discussion. It is a policy question. It can be discussed under these Demands viz., Head of State—Ministers, etc.

MR. SPEAKER: In that case, I have no objection. The cut motion to discuss the 'Hindi policy' has not been moved. The hon. Member Sri M Karunanidhi, who gave notice of it, is not here. This was admitted at the last moment waiving all the rules. I want to bring this to the notice of the House.

திரு. ஏ. ஆறுமுகம்: கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்புக்குரிய திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தைரியம் கூறக்கூடிய அளவு தகுதியும் திறமையும் பெற்றிருக்கிறார்களா? யார் யாருக்குத் தைரியம் சொல்வது என்று அவர்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: அதை கனம் முதலமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். மொழிக் கொள்கையிலே உங்களுடைய கருத்து என்ன என்பதைக் கூறுங்கள். 'தைரியத்திற்கு'ப் போக வேண்டாம். திரு. மாதவன் அவர்கள் பேசும்போதும் நான் இதைத்தான் சொன்னேன்.

திரு. ஏ. ஆறுமுகம்: லஞ்சம் வாங்கியவர்கள் மீது வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள ஒரு போலீஸ் அதிகாரியை நியமித்ததைத் தவறு என்று எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் கூறினார். போலீஸ் என்றால் ஏன் அச்சம் ஏற்பட வேண்டுமென்பது தான் என்னுடைய கேள்வி. போலீஸ் என்றாலே எதிர்க்கட்சியினருக்குக் கொஞ்ச காலமாகவே பயம் ஏற்பட்டு விட்டது. அவர்களுடைய அரசியல் பிரச்சினையாக 'திராவிட நாடு பிரிய வேண்டும்'

என்பதை எடுத்துச் சொன்னால் அது குற்றம், அதற்கு ஆறு மாதம் கடுங்காவல்; 5,000 ரூபாய் அபராதம்; நீங்கள் ஒரு அரசியல் கட்சியாக இயங்க முடியாது' என்று காங்கிரஸ் சர்க்கார் சட்டம் கொண்டு வரப்போகிறது என்று தெரிவிப்பதற்கு முன்னாலேயே பயந்து நடுங்கி, அச்சப்பட்டுக் கொண்டு உயிர் பிரச்சினையான திராவிட நாட்டுப் பிரச்சினையை விட்டு விட்டு . . . .

MR. SPEAKER . The hon. Member should come to the subject. This is not a public platform, where the hon. member can talk anything. He can talk on the Demands now before the House for discussion or on 'Mozhi prachnai.'

(திரு. அ. பெ. தர்மலிங்கம் குறுக்கீடு.)

MR. SPEAKER : The hon. Member is replying as if it is a public meeting. The Legislature is not a public place to retort like that.

திரு. ஏ. ஆறுமுகம் : 'இந்தி எங்கள் மீது திணிக்கப்பட வேண்டாம்; திணிக்கப்படக் கூடாது; எங்கள் மக்களுக்கு அது கொஞ்சமும் பிடிக்காது' என்று சொல்கின்ற திறமும், வீரமும் படைத்தவர் எங்கள் முதலமைச்சர் என்று சொல்வதற்காகத்தான் இந்த வாதத்தைச் சொல்ல வந்தேன்.

கனம் சபாநாயகர் : அதைப் பற்றிச் சொல்ல வேண்டாம்.

திரு. ஏ. ஆறுமுகம் : இந்தத் தமிழகத்திலே இவர்கள்தான் வீரம் படைத்தவர்கள்; இவர்கள்தான் சேரன் செங்குட்டுவன் பரம்பரையிலே வந்தவர்கள்; பாண்டியன் நெடுஞ்செழியன் பரம்பரையிலே வந்தவர்கள் போலவும், எங்களுக்கெல்லாம் வீரம் இல்லை; தமிழ் ரத்தம் ஓடவில்லை; தமிழ் மக்களுடைய உணர்ச்சியிலே, எண்ணத்திலே அக்கறை இல்லை என்பதைப் போலவும் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசிய காரணத்தால்தான், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் மக்கள் பிரதிநிதிகள்தான்; அவர்களுடைய கருத்தைப் பிரதிபலிக்கின்ற . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் கொள்கையைச் சொல்லலாம்; இந்த மாதிரிப் பேச்செல்லாம் இந்த மன்றத்திலே அவசியம் இல்லை.

திரு. ஏ. ஆறுமுகம் : இந்தி மொழி பற்றி அவர்களுக்கு இருக்கிற அக்கறை தமிழக சர்க்காருக்கும் உண்டு. நான் 1941-ல் நான்காவது வகுப்புப் படிக்கும்போது இந்தி கட்டாயப் பாடமாக இருந்தது; ஆங்கிலமும் கட்டாயப் பாடமாக இருந்தது: தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளையும் என்னுடைய 12-வது வயதிலேயே படிக்கின்ற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அப்போது நான் இந்தியிலே 100-க்குத் 95 மார்க் வாங்கினேன்; ஆங்கிலத்திலே 90 மார்க் வாங்கினேன்; தமிழிலே 65 மார்க்தான். ஆனால் தமிழிலே பாண்டித்தியம் இல்லையென்றோ, அக்கறை இல்லை

யென்றோ அர்த்தமல்ல. நம்முடைய தமிழ் நாட்டு மாணவர்கள் தகுதியும் திறமையும் உடையவர்கள். இந்தி தேசிய மொழி என்று ஆகிவிட்ட பிறகு ஏன் நான்காவது வகுப்பிலிருந்து இந்தியைக் கட்டாயப் படாமாக வைக்கக்கூடாது? ஏன் அந்தக் கொள்கையைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளக்கூடாது?

திராவிட நாடு தனியாக பிரிய வேண்டுமென்று சொல்லி வந்தார்கள். அப்படி விட்டு வைத்துக் கொண்டிருந்த காரணத்தினால் இன்று சட்டம் கொண்டுவரப்பட்டு தண்டனை விதிக்கும் அளவிற்கு இருக்கிறது. முதன் முதலாக கனம் முதல் அமைச்சர் சொன்னார்கள். இந்தக் கொள்கையை விட்டு விடுங்கள் என்று அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். நீங்கள் நல்லவர்கள், சிறந்தவர்கள், எதிர்க்கட்சியாக வரக்கூடிய தகுதியிருக்கிறது, ஆனால் நீங்கள் நாட்டிற்கு துரோகம் செய்யக்கூடிய பிரிவினைக் கொள்கையை விட்டு விடுங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன வார்த்தையை தெய்வீக வார்த்தையாக நான் கருதுகிறேன். அந்நிலை ஓரளவு இன்று மாறியிருக்கிறது. பயந்தோ பயப்படாமலோ, அச்சப்பட்டோ அச்சப்படாமலோ, சட்டத்திற்கு பயந்தோ பயப்படாமலோ அவர்கள் திராவிட நாடு பிரிவினையை மனதில் வைத்துக் கொண்டு வெளியே அதைக் காட்டிக் கொள்ளாத அளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது.

MR. SPEAKER : Dravidanad is not the subject under discussion. அதையே பேசினால் என்ன பிரயோஜனம்?

திரு. ஏ. ஆறுமுகம் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தைரியம் வாய்ந்தவர்.

கனம் சபாநாயகர் : கனம் முதல் அமைச்சர் அவர்களின் தைரியத்தைச் சொல்வதற்காகவா இவ்வளவு நேரம்.

திரு. ஏ. ஆறுமுகம் : அவர்கள் நம் பிரச்னையை நல்லமுறையில் எடுத்துச் சொல்வார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. மக்கள் எண்ணங்களை அறிந்து கொண்டு, மக்கள் பிரதிநிதிகளாகிய இந்த சட்ட மன்ற அங்கத்தினர்களின் சௌகரியத்திற்காக, அவர்கள் நன்மையைக் கருதி முதல் அமைச்சர் அவர்கள் ஹாஸ்டல் வசதி செய்ய தருவதற்காக 45 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். எல்லா அரசாங்கக் கொள்கைகளுக்கும் மாற்று யோசனை சொல்லக் கூடிய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் போயும் போயும் இந்த ஹாஸ்டலுக்காக ஒதுக்கப்பட்ட பணம் அதிகம் என்று சொல்கின்ற அளவிற்குத்தான் அவர்களுக்கு ஆலோசனை வந்திருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அங்கத்தினர்களும், ஹாஸ்டலில் தங்கி வருகிறார்கள். ஆகவே அங்குள்ள கஷ்டம் அவர்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தன் சொந்த வீட்டிலோ அல்லது வாடகை வீட்டிலோ, அல்லது வசதியுள்ள வீட்டிலோ இருப்பதால்

ஹாஸ்டலில் உள்ள கஷ்டங்கள் அவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆக, எல்லா அங்கத்தினர்களின் கஷ்டத்தைப் போக்க முதல் அமைச்சர் அவர்கள் நல்ல தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டித் தலைவராக இருக்கிறார்கள். அவர்கள் மைசூர் மாநிலத்திற்கு சென்றதாக கேள்விப்பட்டேன். அங்கு அவர்கள் சட்டமன்ற அங்கத்தினர்கள் தங்கும் இடத்தைப் பார்த்ததாக அறிகிறேன். அங்கு அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வசதிகளை அவர்கள் அறிவார்கள். மற்ற மாநிலங்களுக்கும் சென்று பார்த்தால் தனி அறைகள், போன் வசதி, குளிப்பதற்கு தனி அறைகள் இவை அமைந்திருப்பதை பார்க்கலாம். ஆனால் இங்கு குளிப்பதற்கு காலை ஆறு மணிக்கு எழுந்து சென்றால் குளிப்பதற்குக்கூட முடியாமல் 8-30-க்கு இங்கு அசெம்பளிக்கு வரவேண்டியிருக்கிறது. பாத் ரூமிற்குச் செல்ல க்யூவில் நிற்கவேண்டியிருக்கிறது. போன் பேசுவதற்கு மணிக்கணக்கில் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே அங்கத்தினர்களின் குறைகளைப் போக்க ஏராளமான தொகை ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து முதல் அமைச்சர் அவர்களுக்கு ஆளும்கட்சி அங்கத்தினர்கள் சார்பில் மட்டுமல்ல, இந்த சபை அங்கத்தினர்கள் எல்லோர் சார்பிலும் எங்கள் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் உளமாறத் தெரிவித்துக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய நம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் எந்த ஜில்லாவிற்குச் சென்றாலும் அந்த ஜில்லா தலைநகரில் உள்ள எல்லா இலாகா அதிகாரிகளையும் சட்ட மன்ற அங்கத்தினர்களையும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும், எல்லோரையும் வரவழைத்து ஜில்லாவில் உள்ள பொதுப்பிரச்னைகள் குறித்து விவாதிப்பதுண்டு, கடைசி நாளில். இதே மன்றத்தில் ஒருமுறை கனம் முதல் அமைச்சர் அவர்கள், எல்லா அமைச்சர்களும் அப்படிச் செய்தால் அது போற்றத் தக்கது என்று கூறியிருக்கிறார்கள். அங்கத்தினர்களும் அவ்வாறு கூறியிருக்கிறார்கள். ஆனால் அதே பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் இப்போது அப்படிச் செய்யாமல் விட்டு விடுவதாகத் தெரிகிறது.

கனம் சபாநாயகர்: பொது மராமத்து அமைச்சர் அவர்களை புகழ்ந்து வருவதாக அல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்.

திரு. ஏ. ஆறுமுகம்: வட ஆற்காடு ஜில்லாவில் வேலூரில் ஒரு கூட்டம் போட வேண்டுமென்றும், அப்போது எங்கள் பொதுப் பிரச்னைகளைச் சொல்ல தயாராயிருக்கிறோம் என்றும் சொன்னேன். என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அமைச்சர்கள் அந்தப் பக்கம் வந்திருந்தாலும் கூட எங்களையும் எல்லா இலாகா அதிகாரிகளையும் வரவழைத்து பேசுவதில்லை. கனம் சபாநாயகர் அவர்களிடம் கூறினேன், இதுபற்றி விவரமாக பேசுங்கள் என்றீர்கள். எங்கள் பக்கத்தில் பாலாறு பிரச்னை பெரியதொரு பிரச்னை. எந்த அமைச்சர் வந்தாலும் அதுபற்றி விண்ணப்பங்கள் கொடுக்கத் தவறுவதில்லை. "That is a common problem of the district." இப்படி சில பிரச்னைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அமைச்சர்களிடம் சொன்னால் அவை தீரும், விவசாயிகளும் நன்மை பெற

முடியும். அடுத்தபடியாக, எங்கள் ஜில்லா தொழில்துறையில் மிகவும் பின்தங்கியதொரு ஜில்லா. மற்ற ஜில்லாக்களில் இன்டஸ்ட்ரியல் செமினார் நடத்துகிறார்கள், மதுரையிலும், ராமநாதபுரத்திலும் அப்படி செமினார்கள் நடந்திருப்பதாக அறிகிறேன். அதேபோல் எங்கள் ஜில்லாவிலும் என்னென்ன தொழில்களை அங்கு அமைக்கலாம், எந்தெந்தத் தொழில்கள் அமைப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்பதை அறிய ஒரு செமினார் நடத்தி என்னென்ன தொழில்களை அங்கு ஆரம்பிக்கலாம் என்று அறிந்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சரவையைப் பற்றி நான் புகழாமல் இருப்பதற்கில்லை. காரணம்,

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பதற்கிணங்க செய்த காரியங்களுக்கும், செய்கிற காரியங்களுக்கும் நாங்கள் தலை வணங்குகிறோம். அதற்காக நன்றி செலுத்துகிறோம். இருந்தாலும் நம் அமைச்சர்கள் ஒவ்வொருக்கும் அதிகப்படியான வேலையிருப்பதால் நாங்கள் அவர்களைப் பார்க்கப் போனால் மணிக்கணக்காக காத்திருந்து விட்டு இன்னொருமுறை பார்த்துக் கொள்ளலாம் என்று போய் விடுவது வழக்கம். நான் குறை கூறுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர்களுக்கு அவ்வளவு பிரச்னைகள், அவ்வளவு வேலைகள். எம்.எல்.ஏ.-க்கள் தவிர வெளியூர்களிலிருந்து பொதுமக்கள் வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. அதிகத் தொல்லையாக இருக்கிறது. ஆகவே மந்திரி சபையை இன்னும் கொஞ்சம் விஸ்தரித்து மந்திரிகள் இல்லாத ஜில்லாக்களாகிய வட ஆற்காடு ஜில்லா, சேலம் ஜில்லா, நீலகிரி ஜில்லா, கன்யாகுமரி ஜில்லா போன்ற இடங்களுக்கு கொஞ்சம் பிரதிநிதித்துவம் கொடுக்க முதல் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் மனம் வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியில்லாவிட்டால், டெப்டி மினிஸ்டர்ஸ், பார்லிமென்டரி செக்ரட்டரீஸ்களாக இளைஞர்களாக இருக்கிற எங்களைப் போன்றவர்களை எடுத்து ஒரு ட்ரெயினிங் மாதிரி கொடுத்தால் பிற்காலத்தில் உங்களைப்போல் திறமையானவர்களாகவும், தைரியம் உள்ளவர்களாகவும் வர முடியும். ஆகவே அப்படி இளைஞர்களாகிய எங்களுக்கு தைரியம் ஏற்பட, பாண்டித்துவம் ஏற்பட எங்களுக்கு பயிற்சி கொடுக்கும் முறையில் ஒரு வாய்ப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri C. CHIRANJEEVULU NAIDU:** Mr. Speaker, Sir, I would like to say a few words about the Demands that are before the House for discussion, viz., Demand VI—State Legislature, Demand VII—Elections and Demand No. VIII—Head of State, Ministers and Headquarters staff.

I would like to deal mainly with the Added Territories that have been transferred to Madras State on 1st April 1960. In bringing the Added Territories within the Madras set-up, certain

[Sri C. Chiranjeevulu Naidu] [9th March 1964

delays and inconveniences have been caused to the people in the matter of integration of services of the transferred personnel. I have been repeatedly requesting the Government to look into this matter favourably and sympathetically, as the services of most of the transferred personnel have not yet been integrated. It affects their promotion and also their scales of pay. Just on the eve of the transfer, the Andhra Government announced the recommendations of the Pay Commission. The Madras Government have also revised their pay scales. But they are receiving the old pay scales of the Andhra Pradesh. Now it is more than four years, but their services have not yet been integrated and most of the employees in the transferred areas are on the old scales of pay and are consequently suffering. I request the Government again, Sir, to consider the matter and issue orders at an early date.

Regarding the Secondary Grade Teachers with one year course, I have been repeatedly pointing out the difficulties experienced by them. They are working as Higher Grade Assistants receiving less pay. On representation made by them, the period of such service has been reduced to seven years and on further representation, the Government have been kind enough to reduce it to five years and on completion of this period they will be entitled to receive secondary grade scales.

According to the Alterations of the Boundaries Act—its provisions are so clear—whatever is done would not be detrimental to the services of personnel transferred to either of the States. The orders issued by both the Governments and the crucial date of 1st April 1960 fixed by them should be respected and nothing should be done to the detriment of the transferred personnel. Now the position is that secondary grade teachers are being paid higher grade scales of pay. Today teachers without training and with only S.S.L.C. qualifications are receiving secondary grade pay. But teachers who have put in one year's training, who have put in more than three years' service and who have passed the examinations with distinction, have been asked to work as higher grade assistants with less pay. This is a hardship to them and it will affect their service conditions including their promotion and scales of pay and increments. So, this aspect of the matter also may kindly be considered and their position safeguarded.

Sir, the extension of the Panchayats Act to a certain Block in the Added Territories has been questioned in a court of law. It has been stated that an enabling provision has not been made in the Madras Panchayats Act for the election of Presidents and Vice-Presidents of Panchayats in the Added Territories. The Presidents of panchayats elected according to the Andhra Pradesh Panchayat Samithi and Zilla Parishad Act, have not been deemed to be elected as far as the Madras Act is concerned. The result is that the Panchayats Act is not in force in that particular block with the result the developmental activities have been retarded and have been at a stand still. So, this aspect of the matter may kindly be considered by the Law Department and the Government and the Panchayats Act may be amended.

9th March 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : That is being examined in the Law Department and immediate action will be taken.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Regarding the Araniar Project I would like to say one or two words. The control over the Project which was in the Madras State has been given away to the Andhra Pradesh Government. The water from this Project is taken to the villages in the Madras State also. Recently due to heavy rains, they wanted to open the locks but the locks there have failed to work and they could not properly allow the water to flow. Also, several villages downwards have been cautioned by beat of tom tom that the Head Works would in all likelihood be damaged. Since our Madras Government have got an interest in the Araniar Project, may I request them to have joint control over this project. Now the engineering staff of the Andhra Pradesh Government are controlling the Araniar Project. As the water from the project is flowing into our villages and as we have interest in the project, the Madras Government may take up this matter with the Andhra Pradesh Government so that we may have joint control over the project.

Regarding border areas, the Andhra Pradesh Government have recently opened sweet toddy shops there. This is rather an anomalous position. The Police find it difficult to distinguish between a drunkard and a non-drunkard because it is a border area and most of the people go there and come back. So, this aspect of the matter may be taken up with the Andhra Pradesh Government so that a dry belt area within a radius of five miles along the border may be declared. As prohibition in our areas is very popular and is strictly enforced, this matter may kindly be considered and sufficient steps taken in that regard. With these words, I conclude my speech.

Thank you, Sir.

*புலவர் கா. கோவிந்தன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சட்டசபைத்துறை, தேர்தல் மாநில தலைவர்கள், அமைச்சர்கள், மாநில தலைமையிட பணிகள் இலைகளுக்கான நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் மானியத்தின் மீது எங்களுடைய கட்சியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். தலைவர் அவர்களே, ஜனநாயக ஆட்சியில் எதிர்க்கட்சியினர் இருக்கவேண்டியது எத்தனை இன்றியமையாதது என்பதை நாடு அறியும். ஆட்சி நன்றாக நடைபெற வேண்டுமானால், ஆட்சியை நடத்திச் செல்லுகின்ற அமைச்சர்கள், அமைச்சரவை செய்யவேண்டியவைகளை செய்யாது இருக்கும்போது அதை எடுத்துக்காட்ட வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சியினருக்கும் இருக்கிறது. அந்த முறையில் தான் எதிர்க்கட்சியினர் செயலாற்ற வேண்டும். அந்தக் கடமையாற்றுவதற்கு தலைவர் அவர்களே, உங்களுடைய துணை மிக மிக இன்றியமையாதது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியினர் ஆற்று

கின்ற பணியில் கேள்விகள் கேட்பது மிகவும் முக்கியமானது. இவ்விதம் கேள்விகள் கேட்கும்போது அவைகள் காலம் கடந்தும் கூட இந்த சபை முன் வைக்கப்படாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. நான் கொடுத்திருந்த சில கேள்விகள் தங்களால் அனுமதிக்கப்பட்டிருந்தும் கூட, இரண்டு ஆண்டு காலமாக இந்த சபை முன்பு வைக்கப்படவில்லை. சபை கலைக்கப்படுகிற நேரத்தில் எல்லாம் . . .

கனம் சபாநாயகர் : சபை கலைக்கப்படும்பொழுது அந்தக் கேள்விகள் 'லாப்ஸ்' ஆகிப் போயிருக்கும். இரண்டு ஆண்டுகளாக கேள்விகள் வரவில்லை என்பது பெரிய குற்றம் தான்.

புலவர் கா. கோவிந்தன்: அவ்வப்போது சபையை கலைக்கிற நேரத்தில் எல்லாம் நான் அவைகளை புதுப்பித்துக் கொண்டே வந்திருக்கின்றேன். ஆனாலும் நான் கொடுத்த சில கேள்விகள் இரண்டு ஆண்டு காலமாக இந்த சபை முன் வைக்கப்படாததைக் குறித்து என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு அமைச்சர்கள் அளிக்கின்ற பதில் எவ்வாறு இருக்கிறது என்பதை தயவுசெய்து தாங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் கேள்விகளை தருகிறோம். ஆனால் நாங்கள் கேட்கின்ற பல முக்கியமான கேள்விகளுக்கும் அமைச்சர்கள் கொடுக்கின்ற பதில் எவ்விதம் இருக்கின்றது என்றால், "தகவல் இல்லை" அல்லது "தனிக்கேள்வி வேண்டும்" என்கின்ற பதிலைத்தான் தருகிறார்களே தவிர பொறுப்பான பதில்களை தருவதற்கு அமைச்சரவை தவறி விடுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், புதிதாக வந்திருக்கின்ற அமைச்சர்கள் வெளியில் சென்று தங்கள் காலத்தை விரயக்குவதைக் காட்டிலும் தங்கள் அறையில் உட்கார்ந்திருந்து உறுப்பினர்கள் தந்திருக்கின்ற கேள்விகளுக்கு சபையில் எவ்வாறு பதில்கள் அளிக்கவேண்டும் என்பதில் அதிகம் கவனம் செலுத்த கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை தங்கள் மூலமாக அமைச்சரவைக்குச் சொல்லிக்கொள்கிறேன். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் கனம் அமைச்சர் மன்றாடியார் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கின்ற நேரத்தில், அவர்களுக்கு சரியானபடி விடை தர முடியாத நிலைமையில் அவர் பிற மூத்த அமைச்சர்களைப் பார்த்து, நீங்கள் சொல்லுங்கள் நீங்கள் சொல்லுங்கள் என்று ஜாடையாக கேட்டுக்கொண்ட காட்சியும் அதை மற்ற அமைச்சர்கள் பார்த்தும் பார்க்காதது போல் இருந்த காட்சியும், பின்னால் அமைச்சர் மன்றாடியார் அவர்கள் "இதற்கு முதல் அமைச்சர் அவர்கள் பதில் தருவார்கள்" என்று கூற, பின்னால் முதலமைச்சர் அவர்களோ அல்லது தொழில் அமைச்சர் அவர்களோ சரியான பதில் அளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதையும் நாம் இந்த மன்றத்தில் பார்த்தோம் . . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகின்ற நிகழ்ச்சியில் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். அதில் பல உப-கேள்விகள் கேட்கப்பட்டன.

ஒரே விஷயத்தில் பல விஷயங்கள் இருக்கும், அவை மூன்று அமைச்சர்களால் கவனிக்கப்பட்டு வருவதால் ஒரே அமைச்சரால் எல்லா விவரங்களுக்கும் பதில் அளிக்க முடியாத நிலை சில நேரங்களில் ஏற்படுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : நான் கேட்ட கேள்வி ஒன்று. முதல் அமைச்சர் குறிப்பிடுகிற கேள்வி வேறு. சர்க்கரை பற்றிய கேள்விக்கு தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத் தார்கள். நான் குறிப்பிடுகிற கேள்வி கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டு அமைப்பைப் பற்றியது. அப்போது மூன்று அமைச்சர்களுமே பதில் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டது . . . . 10-00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதிலே கூட ஒரு அமைச்சர் என்று இல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சர்கள் கவனிக்க வேண்டிய விஷயமானதாக இருந்ததுதான் காரணம்.

புலவர் கா. கோவிந்தன் : அப்படியானால் எந்தக் கேள்விகளை எந்த அமைச்சருக்குப் போடவேண்டும் என்று சொல்லி விட்டால் அந்த அமைச்சருக்குப் போடுவோம். அந்தமாதிரியாகவாவது சொல்லி விட்டால் நலமாக இருக்கும். . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அசல் கேள்வி போடுவதில் சிரமமே இல்லை. அதைப்பற்றி இலாகாக்களும் லெஜிஸ்லேச்சர் செக்ரெட்டேரியட்டும் கவனித்துக்கொள்வார்கள். ஆனால் உப கேள்வி போடும்போது அந்த அமைச்சருக்கு சம்பந்தப்படாத கேள்வியாகப் போட்டால் பதில் சொல்ல முடியாமல் போகிறது.

புலவர் கா. கோவிந்தன் : முதல் கேள்விக்கு பதில் தயாரிக்கப் படுகிறபோது இந்தக் கேள்வியின் மீது என்னென்ன உப கேள்விகள் எழக்கூடும், அவைகளுக்கு என்னென்ன பதில் அளிக்கவேண்டும் என்று அமைச்சர்கள் முன்கூட்டியே தயார் செய்துகொண்டு அவைகளுக்கு பதில் அளிக்கவேண்டும். முதல் கேள்விக்கு மட்டும் பதிலை அளித்து விட்டு, உப கேள்விக்கு சரியான பதில் அளிக்காவிட்டால் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினர் சொல்லுவதை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். நான் கூறிக்கொள்கிறேன், ஒரு கேள்வி சம்பந்தப்பட்டமட்டில் என்ன உப கேள்விகள் எழக்கூடும் என்று தயாராக வரும்போது, எனக்கு சில சமயங்களில் ஏமாற்றம் கூட ஏற்படுவதுண்டு. ஏனென்றால் நான் எதிர்பார்த்த கேள்விகளைக் கேட்பதில்லை. கேள்விக்கு சம்பந்தமிருந்தாலும் எனக்கு சம்பந்தப்படாத வேறு அமைச்சர் பதில் கொடுக்கவேண்டியிருந்தால் அப்போதுதான் இந்த நிலை ஏற்படுகிறது.

[9th March 1964

புலவர் கா. கோவிந்தன் : இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறேனே தவிர . . .

கனம் சபாநாயகர் : இப்போது நடப்பதைப் பார்த்தால் நான் உப கேள்வியை அனுமதித்ததுதான் தப்போ என்று ஆகிவிட்டது. (சிரிப்பு.)

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், நாங்கள் கேள்வி போட்டு தங்களால் அனுமதிக்கப்படுவதே அரிதாக இருக்கிறது. அப்படி அனுமதிக்கப்பட்ட கேள்விகள் சபை முன் வரும்போது எவ்வளவோ கேள்விகளைக் கேட்கலாம் என்று எண்ணிக்கொண்டு கேள்விகளைப் போடும்போது தனிக்கேள்வி போடுங்கள் என்று சொல்லும்போது, எங்கள் முயற்சி வீணாகிறது. கேள்வி கேட்கும் ஊக்கம் குறைகிறது. அந்த நிலை நீடிப்பது ஜனநாயக முறையில் பார்லிமெண்ட்டரி ஆட்சி முறைக்குக்கூட கேடு என்ற வகையில் அடுத்து வரும் கூட்டங்களிலாவது கேள்விகளுக்குத் தக்க பதில்களோடு வருமாறு அமைச்சர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தேர்தல் முறை பற்றி நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நாம் இப்போது பஞ்சாயத்து ஆட்சி முறையை அமைத்திருக்கிறோம். பஞ்சாயத்து ஆட்சி முறையினால் நாம் பெரிய பலனை எதிர்பார்த்திருக்கிறோம். சிறு பிள்ளையின் கையில் கத்தி கொடுத்த மாதிரி இருக்கிறது இது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. நம் நாட்டில் இந்த ஆட்சிமுறை புதியது என்று நினைத்தாலும், நம் நாட்டில் மிகப் பழைய காலத்தில் இந்த முறை இருந்து வந்திருக்கிறது. பஞ்சாயத்து ஆட்சிக்கு தேர்ந்தெடுக்கும் முறை சிறப்புக்குரிய முறையாக, போற்றுதற்குரிய முறையாக, பாராட்டுக்குரிய முறையாக இருந்து இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் உத்திரமேரூர் கோவிலில் ஒரு அருமையான தேர்தல் முறை குறிக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த மன்றத்தில் தங்கள் மூலமாக மன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் தெரிவிக்கும் வகையில் அதை அப்படியே படிக்கிறேன். அதற்காக கொஞ்சம் நேரம் ஆனாலும் ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

"ஸ்வஸ்திஸ்ரீ, மதுரை கொண்ட கொப்பரகேசரி வன்மர்க்கு யாண்டு பதினைாவது, நாள் பதினாறு, காழியூர் கோட்டத்து. தன் கூற்று உத்தரமேரு சதுர்வேதிமங்கலத்துச் சபையோம், இவ்வாண்டு முதல் எங்களுக்குப் பெருமானடிகள் எம்பெருமான் ஸ்ரீ பராந்தக தேவன் ஸ்ரீமுகம் வரக்காட்ட ஸ்ரீமுகப்படி ஆணையினால், தத்தனூர் மூவேந்த வேளான் இருந்து வாரியம் ஆக, ஆட்டொருக்காலும் சம்வத்சரவாரியமும், தோட்டவாரியமும், ஏரி வாரியமும் இடுவதற்கு வியவஸ்தை செய்த பரிசாவது, குடும்ப முப்பதாய் முப்பது குடும்பிலும் அவ்வவக் குடும்பிலாரே கூடி, கால்நிலத்துக்கு மேல் இறைநிலம் உடையான், தன் மனையிலே அகம்

9th March 1964] [புலவர் கா. கோவிந்தன்]

எடுத்துக்கொண்டிருப்பான், அறுபது பிராயத்துக்குள் முப்பது பிராயத்துக்கு மேற்பட்டான், வேதத்திலும் சாஸ்திரத்திலும் காரியத்திலும் நிபுணர் எனப்பட்டான், அர்த்த சௌசமும் ஆன்ம சௌசமும் உடையான், மூவாட்டின் இப்புறம் வாரியம் செய்திலாதான். வாரியம் செய்தொழிந்த பெருமக்களுக்கு அணிய பந்துக்கள் அல்லாதனருக்கு வோலை இடுவதாகவும்"—இது உறுப்பினர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளைக் கூறுகிறது அதற்கு மேலே—

"அவர்களிலும் எப்பேர்ப்பட்ட வாரியங்களும் செய்து கணக்கு காட்டாதே இருந்தாரையும், மகாப்பாதகங்களில் முன்பு அடைந்த நாலு மகாப்பாதகத்திலும் எழுத்துப் பட்டாரையும், சம்சர்க்கப் பதிதரையும், பரத்திரவியம் அபகரித்தாரையும், எப்பேர்ப்பட்ட கையூட்டும் கொண்டாரையும், கிராம கண்டகரையும், கழுதை ஏறினாரையும், கூடலேகை செய்தாரையும் எழுதிப் புக இடப்பெறுதாராகவும்" யார் யார் இருக்கக்கூடாது என்பதற்கான விலக்குகள். இவர்கள்—

"பாதகம் செய்து, பிராயச்சித்தம் செய்து சுத்தர் ஆயினார் ஆயினும் அவ்வவர் பிராணாந்திகம் வாரியத்துக்குக் குடவோலை இடப்பெறுததாராகவும்"—இவர்களையும் நீக்கி விட்டு—

"இவர்களையும், இவர்களுக்குச் சிற்றவைப் பேரவை மக்களையும், இவர்களுக்கு அத்தை மாமன் மக்களையும், இவர்களுக்குத் தாயோடு உடன் பிறந்தானையும், இவர்களுக்குத் தமப்பனோடு உடன் பிறந்தானையும், தன்னோடு உடன்பிறந்தானையும், இவர்களுக்குப் பிள்ளை கொடுத்த மாமனையும், இவர்கள் பிராமனியோடு உடன் பிறந்தானையும், தன்னோடு உடன்பிறந்தாளை வேட்டானையும், உடன் பிறந்தாள் மக்களையும், தன் மகளை வேட்ட மருகனையும், தன் தமப்பனையும் தன் மகனையும் ஆக இச்சுட்டு பந்துக்களையும் குடவோலை எழுதிப் புக இடப்பெறுதாராகவும்"—இப்படி இவர்களையெல்லாம் நீக்கி விட்டு—

"குடவோலைக்குப் பேர் தீட்டி சேரி வழியேயாய் திரட்டி, பன்னிரண்டு சேரியிலும் சேரியாள் ஒருவரேயாம் ஆறு, ஏதும் ஒன்றும் அறியாதான ஒரு பாலனைக் கொண்டு குடவோலை வாங்குவித்து பன்னிருவாரும் சம்வத்ஸரவாரியம் ஆவதாகவும்."

என்ற ஒரு முறை இருந்திருக்கிறது. அதிலே இன்னின்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்று தகுதிகள் வைத்திருக்கிறார்கள். இன்னின்ன குற்றம் செய்தவர்கள் கூடாது என்று விலக்கியுள்ளார்கள். தகுதியுள்ளவர்கள் அத்தனை பேர்களையும் தனித் தனியே தீட்டப்பெற்ற ஓலைகளை ஒரு குடத்துள் போட்டு அறியாத பாலனை விட்டு ஓலையை எடுக்கச் சொல்லுவார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இப்படிப்பட்ட பஞ்சாயத்து ஆட்சி முறை நாட்டிலே நடைபெற்று வந்திருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் மனதிலே வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறை நல்ல முறையில் நடக்க வழி வகுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறேனே தவிர . . .

கனம் சபாநாயகர் : இப்போது நடப்பதைப் பார்த்தால் நான் உப கேள்வியை அனுமதித்ததுதான் தப்போ என்று ஆகிவிட்டது. (சிரிப்பு.)

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், நாங்கள் கேள்வி போட்டு தங்களால் அனுமதிக்கப்படுவதே அரிதாக இருக்கிறது. அப்படி அனுமதிக்கப் பட்ட கேள்விகள் சபை முன் வரும்போது எவ்வளவோ கேள்விகளைக் கேட்கலாம் என்று எண்ணிக்கொண்டு கேள்விகளைப் போடும் போது தனிக்கேள்வி போடுங்கள் என்று சொல்லும்போது, எங்கள் முயற்சி வீணாகிறது. கேள்வி கேட்கும் ஊக்கம் குறைகிறது. அந்த நிலை நீடிப்பது ஜனநாயக முறையில் பார்லிமெண்ட்டரி ஆட்சி முறைக்குக்கூட கேடு என்ற வகையில் அடுத்து வரும் கூட்டங்களிலாவது கேள்விகளுக்குத் தக்க பதில்களோடு வருமாறு அமைச்சர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தேர்தல் முறை பற்றி நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நாம் இப்போது பஞ்சாயத்து ஆட்சி முறையை அமைத்திருக்கிறோம். பஞ்சாயத்து ஆட்சி முறையினால் நாம் பெரிய பலனை எதிர்பார்த்திருக்கிறோம். சிறு பிள்ளையின் கையில் கத்தி கொடுத்த மாதிரி இருக்கிறது இது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. நம் நாட்டில் இந்த ஆட்சிமுறை புதியது என்று நினைத்தாலும், நம் நாட்டில் மிகப் பழைய காலத்தில் இந்த முறை இருந்து வந்திருக்கிறது. பஞ்சாயத்து ஆட்சிக்கு தேர்ந்தெடுக்கும் முறை சிறப்புக்குரிய முறையாக, போற்றுதற்குரிய முறையாக, பாராட்டுக்குரிய முறையாக இருந்து இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் உத்திரமேரூர் கோயிலில் ஒரு அருமையான தேர்தல் முறை குறிக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த மன்றத்தில் தங்கள் மூலமாக மன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் தெரிவிக்கும் வகையில் அதை அப்படியே படிக்கிறேன். அதற்காக கொஞ்சம் நேரம் ஆனாலும் ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

"ஸ்வஸ்திஸ்ரீ, மதுரை கொண்ட கோப்பரகேசரி வன்மர்க்கு யாண்டு பதினைலாவது, நாள் பதினாறு, காழியூர் கோட்டத்து. தன் கூற்று உத்தரமேரு சதுர்வேதிமங்கலத்துச் சபையோம், இவ்வாண்டு முதல் எங்களுக்குப் பெருமானடிகள் எம்பெருமான் ஸ்ரீ பராந்தக தேவன் ஸ்ரீமுகம் வரக்காட்ட ஸ்ரீமுகப்படி ஆணையினால், தத்தனூர் மூவேந்த வேளான் இருந்து வாரியம் ஆக, ஆட்டொருக்காலும் சம்வத்சரவாரியமும், தோட்டவாரியமும், ஏரி வாரியமும் இடுவதற்கு வியவஸ்தை செய்த பரிசாவது, குடும்ப முப்பதாய் முப்பது குடும்பிலும் அவ்வவக் குடும்பிலாரே கூடி, காநிலத்துக்கு மேல் இறைநிலம் உடையான், தன் மனையிலே அகம்

எடுத்துக்கொண்டிருப்பான், அறுபது பிராயத்துக்குள் முப்பது பிராயத்துக்கு மேற்பட்டான், வேதத்திலும் சாஸ்திரத்திலும் காரியத்திலும் நிபுணர் எனப்பட்டான், அர்த்த சௌசமும் ஆன்ம சௌசமும் உடையான், மூவாட்டின் இப்புறம் வாரியம் செய்திலாதான். வாரியம் செய்தொழிந்த பெருமக்களுக்கு அணிய பந்துக்கள் அல்லாதனருக்கு வோலை இடுவதாகவும்"—இது உறுப்பினர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளைக் கூறுகிறது அதற்கு மேலே—

"அவர்களிலும் எப்பேர்ப்பட்ட வாரியங்களும் செய்து கணக்கு காட்டாதே இருந்தாரையும், மகாப்பாதகங்களில் முன்பு அடைந்த நாலு மகாப்பாதகத்திலும் எழுத்துப் பட்டாரையும், சம்சர்க்கப் பதிதரையும், பரத்திரவியம் அபகரித்தாரையும், எப்பேர்ப்பட்ட கையூட்டும் கொண்டாரையும், கிராம கண்டகரையும், கழுதை ஏறினாரையும், கூடலேகை செய்தாரையும் எழுதிப் புக இடப்பெறுதாராகவும்" யார் யார் இருக்கக்கூடாது என்பதற்கான விலக்குகள். இவர்கள்—

"பாதகம் செய்து, பிராயச்சித்தம் செய்து சுத்தர் ஆயினார் ஆயினும் அவ்வவர் பிராணாதிக்கம் வாரியத்துக்குக் குடவோலை இடப்பெறுததாராகவும்"—இவர்களையும் நீக்கி விட்டு—

"இவர்களையும், இவர்களுக்குச் சிற்றவைப் பேரவை மக்களையும், இவர்களுக்கு அத்தை மாமன் மக்களையும், இவர்களுக்குத் தாயோடு உடன் பிறந்தானையும், இவர்களுக்குத் தமப்பனோடு உடன் பிறந்தானையும், தன்னோடு உடன்பிறந்தானையும், இவர்களுக்குப் பிள்ளை கொடுத்த மாமனையும், இவர்கள் பிராமணியோடு உடன் பிறந்தானையும், தன்னோடு உடன்பிறந்தாளை வேட்டானையும், உடன் பிறந்தாள் மக்களையும், தன் மகளை வேட்ட மருகனையும், தன் தமப்பனையும் தன் மகனையும் ஆக இச்சுட்டு பந்துக்களையும் குடவோலை எழுதிப் புக இடப்பெறுதாராகவும்"—இப்படி இவர்களையெல்லாம் நீக்கி விட்டு—

"குடவோலைக்குப் பேர் தீட்டி சேரி வழியேயாய் திரட்டி, பன்னிரண்டு சேரியிலும் சேரியாள் ஒருவரேயாம் ஆறு, ஏதும் ஊரும் அறியாதான ஒரு பாலனைக் கொண்டு குடவோலை வாங்குவித்து பன்னிருவாரும் சம்வத்ஸரவாரியம் ஆவதாகவும்."

என்ற ஒரு முறை இருந்திருக்கிறது. அதிலே இன்னின்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்று தகுதிகள் வைத்திருக்கிறார்கள். இன்னின்ன குற்றம் செய்தவர்கள் கூடாது என்று விலக்கியுள்ளார்கள். தகுதியுள்ளவர்கள் அத்தனை பேர்களையும் தனித் தனியே தீட்டப்பெற்ற ஓலைகளை ஒரு குடத்துள் போட்டு அறியாத பாலனை விட்டு ஓலையை எடுக்கச் சொல்லுவார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இப்படிப்பட்ட பஞ்சாயத்து ஆட்சி முறை நாட்டிலே நடைபெற்று வந்திருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் மனதிலே வைத்துக்கொண்டு எதிர் காலத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறை நல்ல முறையில் நடக்க வழி வகுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : சீட்டு போட்டு அங்கத்தினரை எடுக்கும் முறையை பரிசீலிக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் கேட்கிறார்களா?

புலவர் கா. கோவிந்தன் : இதைக் கேட்டுக்கொள்ளக் காரணம் இப்போது பஞ்சாயத்து ஆட்சி முறை நாட்டிலே நடைபெற்று வருகிறது. இப்போதுதான் நகரமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. அடுத்து ஊராட்சி மன்றத் தேர்தல்கள் வர இருக்கின்றன. இங்கே முதல் அமைச்சராக இருந்து இப்போது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருக்கக்கூடியவர் எங்கள் ஊரில் பேசும்போது ஊராட்சி மன்றத் தேர்தலைக் குறித்து "ஆளைத் தூக்க வேண்டாமா, பணம் காசு கொடுக்க வேண்டாமா?" என்று பேசியிருக்கிறார். தேர்தல் என்று சொன்னவுடனே இப்படிப்பட்ட செய்யத் தகாத நிலைக்குப் போகக்கூடிய எண்ணம் இருக்கிறது. இந்த நிலைக்குப் போகக் காரணம் மக்களிலே எப்படியாவது வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் அதிகமாகவும், இப்படித்தான் வாழவேண்டும் என்ற மனநிலை கொண்டவர்கள் குறைவாகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை இருப்பதால் ஊழல்கள், மற்ற கெடுதிகள் புகாத நிலையில் வரம்பு வகுத்துக் கொள்வது நல்லது என்பதற்காகத்தான் இதனைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நகரமன்றத் தேர்தல்கள் இப்போது எப்படியோ முடிந்து விட்டன. தேர்தலுக்குப் பிறகு, கூச்சலோ, குழப்பமோ இல்லை. இப்போது ஊராட்சி மன்றத்தில் இருக்கும் பலர் நடந்துகொள்ளக்கூடாத முறையில் நடந்துகொண்டு எதிர் காலத்தில் நடைபெற இருக்கிற தேர்தலில் மிகப் பெரிய குழப்பம் வர இருக்கிறது என்று உணர்ந்து அப்படிப்பட்ட நிலையைப் பரிசீலித்து என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அமைச்சர் அவர்கள் இப்போது மொழிப் பிரச்னைப் பற்றி பேசலாம் என்று கூறிய காரணத்தினால் ஒரே ஒரு கருத்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் இப்போதே ஆகி விட்டது.

புலவர் கா. கோவிந்தன் : நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களைப்பற்றி இழித்தும் பழித்தும் பேசுவதாக ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் நினைக்கிறார்கள். உண்மையிலேயே நான் சொல்லுகிறேன்; முதலமைச்சரிடம் நிச்சயம் எங்களுக்கு மதிப்பு உண்டு. தமிழ் ஆர்வம் கொண்டவர், தமிழ் மீது பற்றுதல் கொண்டவர், தமிழ் உள்ளம் படைத்தவர். ஆகையால் தான் "பாருங்கள் சென்று, பாருங்கள் சென்று" என்று சொல்லுகிறோமே தவிர, உணர்ச்சி இல்லாதவரைக் காட்டி நாங்கள் "போய்ப் பாருங்கள்" என்று சொல்ல மாட்டோம். நாங்கள் சொல்லுவதெல்லாம் அவர் தமிழ் ஆர்வம் கொண்டவர், தமிழ் உள்ளம் படைத்தவர் என்ற காரணத்தினால்தான்.

மும்மொழித் திட்டம் என்று ஒரு ஏமாற்று நாடகம் காட்டுகிறார்கள். மேலே உள்ளவர்கள் அதைக் காட்டுவதால் அதை இவரும் காட்டுகிறார். மும்மொழித் திட்டத்தில் இருக்கிற குறைபாட்டை எடுத்துத் தெளிவாக்க நான் விரும்புகிறேன். மும்மொழித் திட்டம் என்று சொன்னவுடனே தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் தமிழ் படித்தாகவேண்டும். ஆங்கிலம் உலகத் தொடர்பு மொழியாகையால், ஆங்கிலம் படித்தாக வேண்டும். இந்த நாட்டு மொழி ஆகையால், இந்தி படிக்கவேண்டும். இங்கே சொல்லுவது போல வடக்கே இருக்கிறவர்களுக்கு மும்மொழித் திட்டத்தில் இந்தி படிக்கிறார்கள், ஆங்கிலம் படிக்கிறார்கள், அதோடு தென்னாட்டு மொழிகளுள் ஒன்றான தமிழ், தெலுங்கு ஏதாவது ஒன்று கட்டாயமாகப் படிக்கவேண்டும். இது மும்மொழித் திட்டம். ஆனால், இந்தத் திட்டம் செயல்படும் நிலையில் என்ன உருவாகும் என்று சிறிது ஆலோசித்துப் பார்க்கவேண்டும் என்று நான் பணிவோடு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டில் தமிழ், தாய்மொழி; ஆகவே தமிழைப் படித்தாகவேண்டும். ஆங்கிலம் அகில உலக மொழியாகையால் அதைப் படிக்கவேண்டும். இந்தி இந்த நாட்டின் தேசிய மொழியாக வரப்போகிறது, ஆட்சி மொழியாக ஆகப்போகிறது, அதைப் படித்தால்தான் உத்தியோகம் என்ற நிலை இருக்கிறது. ஆகையால் இந்தியையும் படித்தாக வேண்டும். ஆங்கிலத்தை நம்முடைய மாணவர்கள் படிக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் இருக்கின்றன. மில்டனுடைய காவியங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் கற்றுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகப் படிக்கவில்லை. ஆங்கிலத்தைப் படித்தால்தான் பிழைப்பு, ஐ.ஏ.எஸ். ஆகலாம் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, ஆங்கிலத்தைப் படிக்கிறார்கள். அதே நிலையில்தான் இந்தியையும் படிக்கிறார்கள். இந்தி படித்தால்தான் உத்தியோகம் என்ற நிலை உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தியைப் படிக்க வேண்டிய கட்டாயமான நிலை தமிழ் நாட்டில் இருக்கிறது. இவ்வகையால் தமிழ் நாட்டு மாணவர்கள் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளையும் கட்டாயமாகப் படிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலை வடக்கே இருப்பவர்களுக்கு உண்டா? நிச்சயமாக இல்லை; இந்தி தாய் மொழி, ஆகவே, அதைப் படிக்கிறார்கள். ஆங்கிலம் உலகத் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டிய மொழியாக இருப்பதால் அதையும் படிக்கிறார்கள். ஆனால், தமிழை படிக்கவேண்டுமென்ற நிலை உண்டா? அப்படி தமிழ் படிப்பதால் அவர்களுக்கு என்ன வாழ்வு, அவர்களுக்கு என்ன ஆக்கம் வரப்போகிறது? அவர்கள் அப்படி தமிழைப் படிக்காமல் இருந்தால் என்ன கெட்டுப்போய்விடும்? ஆகவே, மூன்று மொழி படிக்கவேண்டுமென்று இருந்தால் கூட, படிக்கவேண்டிய ஒரு திட்டம் இருக்கிறதே ஒழிய, படித்தால் தான் பிழைப்பு என்ற நிலை இல்லை. அதனால் வட நாட்டிலிருக்கிற மாணவர்கள் ஒப்புக்குப் படிக்கவேண்டுமே தவிர, மூன்று மொழிகளையும் ஊன்றிப் படிக்கவேண்டிய நிலை இல்லை. ஆனால், மூன்று

மொழிகளையும் படித்துத்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயமான நிலை தமிழ் நாட்டு மாணவர்களுக்கு இருக்கிறது. வடக்கே இருப்பவர்களுக்கு மூன்று மொழிகள் என்று இருந்தாலும் கூட, அவர்கள் இரண்டு மொழிகள் தான் படிக்கவேண்டும், மூன்று மொழிகள் படிக்கவேண்டிய கட்டாயம் இல்லை. ஆகவே அவர்களுக்கு பளு குறைவு. நம்முடைய மாணவர்களுக்கு பளு அதிகம். ஆகவே, இந்த மூன்று மொழித் திட்டம் என்ற ஏமாற்றுகின்ற நாடகத்தை அவர்கள் ஆடிக்காட்டச் சொல்லுகிறார்கள் என்பதற்காக ஆடிக்காட்டவேண்டாம் என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இதற்கேற்ற முறையில் . . .

(மணி அடிக்கப்பட்டது.)

* **திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, தேர்தலைப் பற்றியும், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி பற்றியும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியை நல்ல சௌகரியம் உள்ளதாகச் செய்வதற்காக அதிக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கக் கூடிய விடுதியிலே உடனடியாக சில சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும். அங்கே போன் பேசுவதற்குச் சென்றால் ஒரு மணி நேரம், 2 மணி நேரம் ஆகிவிடுகிறது. இங்கிருந்து சபை முடிந்து 11/2 மணிக்கு பசியோடு போகும்பொழுது ஏதாவது போன் செய்யவேண்டுமென்றால், ஒரு மணி நேரம், 2 மணி நேரம் கனெக்ஷன் கிடைப்பதில்லை. ஆகவே, 'ஓல்டு ஹாஸ்டலில்' போன் செய்வதற்கு அதிக வசதி செய்து தர வேண்டும் என்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 'நியூ ஹாஸ்டலிலும்' அதே மாதிரி நிலைமைதான் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதையும் கவனிக்கவேண்டும்.

அதோடு, ஹாஸ்டலில் தங்கியிருக்கும் நேரத்தில் கொசுக்கடியைப் பற்றி பெருமையாக எழுதவேண்டுமென்றால், ஒரு புஸ்தகமே எழுதிவிடலாம். கொசு தொந்தரவு மிகவும் அதிகமாக இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு சீக்கிரம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) சென்னை முழுவதிலும் கொசுக்கடியைப் போக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். சாதாரணமாக இருந்தால் அதைப்பற்றி சபையில் சொல்லவேண்டிய அவசியமில்லை. மிகவும் அதிகப்படியாக வளர்ந்திருக்கிறது. அத்தனை கொசுக்களும் கடித்தால் என்ன ஆகும்? ஆகவே, கண்டிப்பாக கொசுக்கடியைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு மேலே தேர்தலைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் பிரசாரம் செய்வது உண்மையில் பண்பாட்டைக் குறைக்கக் கூடிய நிலைமையில் இருக்கிறது என்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சற்றும் பொருத்தம் இல்லாத அளவுக்கு தேர்தல் பிரசாரம் செய்யப்படுகிறது. வெற்றி பெற்ற பிறகுகூட ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்ப்பதற்கு கூசக்கூடிய முறையில் அவ்வளவு கேவலமாக எதிர்க்கட்சியினர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். கொள்கை அடிப்படையில் பிரசாரம் செய்யவேண்டுமே தவிர இப்படி பண்பாட்டைக் குறைக்கக்கூடிய அளவுக்கு எதிர்க்கட்சியினர் பேசுவது முறையல்ல. அவர்கள் பெண்களைப்பற்றிப் பேசுகிற முறையை எடுத்துச்சொன்னால் ஏதாவது பெரிய ஆபத்தில் கொண்டுபோய்விடும். அப்படி முறை தவறி பேசுகிறார்கள். பேச்சு உரிமை கொடுக்கவேண்டியதுதான். அதற்காக பேச்சுரிமை இருக்கிறது என்று சொல்லி, கேவலமான முறையில் பேசுவது சரியல்ல. தங்கள் தங்கள் வீட்டிலும் தங்களுக்கு ஒரு தாய் இருக்கிறாள், சகோதரி, மனைவி இருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். தேர்தல் பிரசாரம் செய்யும் பொழுது நல்ல முறையில் பண்போடு பேசவேண்டும் என்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதற்கு மேலே தேர்தல் பிரசார விளம்பரங்களை கிணற்றில் தூக்கிப் போடுவது என்பதெல்லாம் முறையா? அப்படியெல்லாம் ஏன் செய்ய வேண்டும்? கொள்கை இருக்கிறது, உறுதி இருக்கிறது என்றால் அதைப்பற்றி பிரசாரம் செய்தால், மக்கள் அதை ஏற்றுக்கொண்டால் வோட்டுப் போடுகிறார்கள், ஜெயிக்கலாம் என்ற முறையில் தான் தேர்தல் பிரசாரம் அமையவேண்டும். அதை விட்டு விட்டு ஒரு கூட்டமாகச் சேர்ந்துகொண்டு தேர்தல் விளம்பரங்களை எடுத்து கிணற்றில் தூக்கிப் போடுவது, கல்லை விட்டு எரிவது; சாணியை விட்டு எரிவது இதெல்லாம் தேர்தல் பிரசாரமா? தேர்தல் பிரசாரம் செய்யும்பொழுது 100 கேள்விகள் கேட்பது இதெல்லாம் சரியா? ஏன் அப்படி கேள்விகள் கேட்கவேண்டும்? வேறு ஒரு மைக் வைத்து பேசிக்கொள்ளலாம். தேர்தல் பிரசாரத்திற்குப் போகிறவர்கள் 10, 20 கேள்விகளைக் கேட்டு ஏன் அந்த நேரத்தை வீணாக்கவேண்டும்? அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கண்காணிக்கவேண்டும். பேச்சுரிமை கொடுத்திருக்கிறோம் என்றால், அதற்காக யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்றால், பண்பாட்டை குறைக்கக் கூடிய அளவில் தான் இருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் பெண்கள் தேர்தலுக்கு நிற்காமலே கூடப் போய்விடலாம். ஆகவே, எதிர்க்கட்சி நண்பர்கள் தேர்தல் பிரசாரம் செய்யும்பொழுது தாங்களும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் என்று நினைத்துக்கொள்ள வேண்டும். தமிழ் பண்பு, தமிழ் பண்பாடு, தமிழ் நாடு, தமிழ் என்றெல்லாம் சபையிலே பேசிவிட்டு, வெளியிலே இப்படி தகுதியற்ற முறையில் பிரசாரம் செய்வது மிகவும் கேவலமாக இருக்கிறது என்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய புலவர் கோவிந்தன் அவர்கள் உத்தரமேரூர் சதுர்வேதி மங்கல சாஸன முறைப்படி தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அது இன்றைய நிலைமைக்குப் பொருந்தாது. ஜனநாயக முறையில் நாம் இப்பொழுது முன்னேற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய காலத்தில்

இருக்கிறோம். அந்த முறை சென்ற காலத்திற்குப் பொருத்தமாக இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு குடவோலையைப்பற்றியெல்லாம் ஞாபகப்படுத்தினார்கள். அதெல்லாம் இந்தக் காலத்திற்குப் பொருந்தாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய சர்க்கார் அமைச்சர்களைப் பார்த்து சொல்லுவதற்கு நம்முடைய அமைச்சர்கள் பயந்து விட்டுக்கொடுக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நம் எதிர்க்கட்சியினருக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வெள்ளையர் ஏகாதிபத்தியத்தின் போது அந்த வெள்ளைக்காரர்களுக்கே பயப்படாத மந்திரிகள் டெல்லியில் இருப்பவர்களுக்கு பயப்படவேண்டிய அவசியமே இல்லை. ஆகவே, மந்திரிகள் பயப்படவேண்டாம், பயப்படவேண்டாம் என்று ஒன்றும் சொல்லத் தேவையில்லை. பயப்படுகிறவர்களைப் பார்த்து, பயப்படவேண்டாம் என்று சொன்னால் அதற்காக பயம் ஏற்படாமல் இருக்காது. ஒருவர் பயப்படுவதும், பயப்படாததும் பிறப்பிலிருந்தே வருகிறது. ஏதோ அமைச்சர்கள் பயப்படுகிறார்கள், அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று சொல்லுவதால் பிரயோசனம் இல்லை. வெள்ளையர் காலத்திலேயே பயப்படாதவர்கள் இப்பொழுது தங்களோடு சேர்ந்திருந்தவர்களுக்கு பயப்படவேண்டிய அவசியம் இல்லை.

அதற்கு மேலே செகரடேரியட்டில் ஏராளமாக ஒத்துழைப்பு கிடைக்கிறது, அதற்காக நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, நான்கு மாதங்களுக்கு ஒரு முறை செகரடரிகளை மாற்றுகிறார்கள். செகரடரியைப் போய்ப் பார்த்து ஏதாவது கேட்டால் 'நான் இப்பொழுது தான் வந்திருக்கிறேன், புதிது, என்று சொல்லுகிறார். 'சரி நீங்கள் படித்துப் பார்த்துவிட்டு அடுத்த வாரத்தில் சொல்லுங்கள்' என்று சொன்னால், அடுத்த வாரம் வந்தால் அவர்கள் அங்கே இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு 'ப்ரமோஷன்', வேறு எங்கயோ போய்விட்டார் என்று சொல்லப்படுகிறது. நன்றாக வேலை செய்கிறார்கள், அதனால் வேறு இடத்திற்கு மாற்றி விட்டோம் என்று சொல்லுகிறார்கள். நன்றாக வேலை செய்தால், அந்த இடத்திலேயே இருந்து வேலை செய்யக்கூடாதா. ஆகவே, இப்படி ஆறு மாதங்களுக்கு ஒரு முறை, நான்கு மாதங்களுக்கு ஒரு முறை மாற்றம் இருக்கக்கூடாது என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். நான் எல்லோரையும் பற்றி குறை சொல்லவில்லை. ஆனால், ஒன்றிரண்டு செகரடரிகளிடம் ஒரு 'பைல்' போனால், ஒரு வருடம், 9 மாதங்களுக்குப் பிறகுதான் திரும்பி வருகிறது. சில இடங்களில் சில மாதங்களுக்குள் திரும்பிவிடுகிறது. இம்மாதிரி 'டிலே' இருப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒரு 'டேட்' 'பிக்ஸ்' செய்து அதற்குள்ளே 'பைல்களை' 'டிஸ்போஸ்' செய்யவேண்டும் என்று அமைச்சரவை வற்புறுத்தவேண்டும். அதுவும் சில குறிப்பிட்ட ஸப்ஜெக்ட்ஸ் பற்றிய 'பைல்கள்' 'டிஸ்போஸ்' ஆவதற்கு மாதக் கணக்கில் ஆகிறது. சில 'பைல்கள்' 7, 8 நாட்களில் 'டிஸ்போஸ்' ஆகிவிடுகிறது. ஆகவே, இந்த மாதிரி ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல், 'பைல்களை' சீக்கிரம் 'டிஸ்போஸ்' செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் எம்.எல்.ஏ-வாக வந்து 7 வருஷம் ஆகிவிட்டது. சில பேர்கள் புதுக் கார்கள் வேண்டுமென்றால் கிடைப்பதில்லை. அமைச்சர்களுக்கு மட்டும் தான் கண்டிரோல் பிரைஸில் லேடஸ்டு மாடல் கார்கள் கிடைக்கிறது. அதே மாதிரி ஒரு எம்.பி-க்கு கார் வேண்டுமென்றால், 7, 8 நாட்களுக்குள் கிடைத்துவிடுகிறது. எம்.பி. தொகுதிக்கு வருவதைக் காணோம், எனக்குத் தெரிந்தவரையில் சில பேர்கள் எம்.பி-க்களாகி 7 வருஷம் ஆகிவிட்டது. தொகுதிக்கு வருவதில்லை. எம்.எல்.ஏ-க்கள் தொகுதிக்கு வரவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு கார் கிடைப்பதில்லை. ஆகவே, 'ஸ்டேட் கோட்டா' என்று வாங்கிவைத்துக்கொண்டு, கார் வேண்டியவர்களுக்குக் கொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. இல்லாவிட்டால் எம்.எல்.ஏ-க்கள் எப்படி தொகுதிக்குப் போய் வருவது? ஒரு தொகுதியை எடுத்துக்கொண்டால், 200, 250 கிராமங்கள் இருக்கின்றன. எம்.எல்.ஏ-க்கள் தொகுதியில் வேலை செய்யவேண்டுமென்று சொன்னால் எப்படி வேலை செய்வது? அவர்களுக்கு அதற்கு வேண்டிய ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். எம்.பி-க்களுக்கு கொடுக்கிற அளவுக்கு கார் வாங்கக்கூடியவர்களுக்கு கார் கொடுக்கவேண்டும் என்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இல்லாவிட்டால் கிராமங்களுக்கு எப்படி போவது? கிராமங்களுக்குப் போவதற்கு வழி வேண்டும் இல்லையா? அமைச்சர்களுக்கு இப்பொழுதிருக்கிற பழைய கார்களை மாற்றி கண்டிரோல் விலைக்குப் புதிய கார்களை வாங்க வேண்டும். பழைய கார் ரிப்பேருக்காக ரூபாய் 18,000 செலவாகிறது என்றால், கூட ஆயிரம் ரூபாய் போட்டு ரூபாய் 19,000-க்கு புதிய கார் வாங்கிவிடலாம். ஒரு ஆயிரத்திற்காகப் பழைய காரை வைத்துக் கொண்டிருக்காமல், அதை மாற்றி விடலாம்.

அடுத்தபடியாக, தேர்தல் காலத்தில் ஆகக்கூடிய செலவை படிப்படியாகக் குறைக்க வேண்டும். தேர்தலுக்காக காங்கிரஸ்காரர்கள்தான் பணம் செலவழிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் செலவழிப்பதைப் பார்த்தால், ஆச்சரியமாக இருக்கிறது. இங்கே வந்து காங்கிரஸ்காரர்கள் மீது பழியைப் போடுகிறார்கள். கருப்புப் பணம் முறையற்ற வகையில் தேர்தல் காலங்களில் செலவழிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். பொய்ப் பிரசாரத்தை ஒடுக்குகின்ற முறையில், முறையற்ற பேச்சுக்களைப் பேசுகின்றவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். மைக் போடுகிற சத்தம் வீட்டிலே கூட இருக்க முடிவதில்லை. மாணவர்கள் படிக்க முடிவதில்லை. தேர்தல்களுக்கு எட்டு நாட்களுக்கு முன்பு மைக் வைத்தால் போதுமானது. ஆனால் இப்பொழுது ஒரு மாதத்திற்கு முன்னாலேயே வான்களிலே மைக்கைக் கட்டிவிட்டு வீதிவீதியாகச் சென்று பிரசாரம் செய்கிறார்கள். அதுவும் என்போன்ற காங்கிரஸ் உறுப்பினர்மாதிரி இருந்து விட்டால் எங்கள் வீட்டுக்கு முன்னாலேயே குறைந்தது பத்து நிமிஷம் இங்கே சொல்லப்படுகிற கருத்துக்களையெல்லாம் ஏதோ எங்கள் காதிலே விழாத மாதிரி—இதைத்தான் நாங்கள் வருஷம் பூராவும் கேட்டுக் கொண்டிருக்கிறோமே—கத்துகிறார்கள். இதனால் நகர்ப்புறத்திலே உள்ள கல்லூரி மாணவர்களும் பள்ளி மாணவர்களும் படிக்க முடியாமல்

மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பிரச்சாரம் செய்யவேண்டுமென்றால் அதற்கு ஒரு காலத்தை நிர்ணயித்து அதற்குள் முடித்துவிடவேண்டும் என்ற ஒரு முறையைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சர்வீஸ் கமிஷனைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். சர்வீஸ் கமிஷன் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. அந்த அமைப்பு நீடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் தேர்ந்தெடுக்கும்பொழுது எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக ஐந்து போஸ்டுகள் இருக்கிறது என்று சொன்னால் குறிப்பிட்ட ஒரு ஜாதியாரையே அடுத்து அடுத்து செலக்ஷன் செய்கிறார்கள். ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், பரீட்சையில் வாங்கிய மார்க்குகள், இன்டர்வ்யூ, இன்னும் எத்தனையோ இருக்கின்றன. இவற்றையெல்லாம் கவனித்து இந்த மாநிலத்திலேயிருக்கின்ற எல்லா மாணவர்களுக்கும் சம வாய்ப்புக் கிடைக்கக்கூடிய விதத்தில் இந்த செலக்ஷன் முறை இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது செகரடேரியட்டைப் பொறுத்தவரையில் நமக்கு எல்லாவிதமான ஒத்துழைப்பும் கிடைக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். செகரடேரியட் சிப்பந்திகளுக்கும், மற்றும் நம்மைப்போன்ற உறுப்பினர்களுக்கும் இங்கே ஒரு கான்டின் இருக்கிறது. அதிலே தினம் ஒருவிதமான காபி கொடுக்கிறார்கள். பட்ஜெட் கூட்டத்திற்காக நாம் இங்கே வந்து ஒருமாத காலம் தங்கும்பொழுது கொஞ்சம் பலங்குறைந்த ஆளாயிருந்தால் தினசரி இந்தக் காப்பியைக் குடித்தால் செத்துப்போய்விடுகிறார்கள். இந்தக் காப்பியின் தரத்தை மாற்றவேண்டும். இப்பொழுது நமது ஹாஸ்டலில் கொடுக்கப்படுகிற. சாப்பாடு பரவாயில்லை. அதே நேரத்தில் அமைச்சர்கள் இருக்கும் ரூமுக்கு வரும்பொழுது இந்த காபி நன்றாய் இருக்கிறது. (சிரிப்பு) நாங்கள் போய் அங்கே சாப்பிட்டால் மிக மட்டமான காப்பியைக் கொடுக்கிறார்கள். இதிலே ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்பது நான் என்னுடைய கருத்து. காப்பிக்காக 20 அல்லது 22 காசுகள் வாங்கிக் கொண்டு எல்லோருக்கும் நல்ல காப்பியாக கொடுக்க வேண்டும். நாங்கள் அங்கே. சாப்பிடுகிற காப்பியை அமைச்சர் அவர்கள் சாப்பிட்டால் அது எவ்வளவு கஷ்டமாய் இருக்கிறது என்பது தெரியவரும். ஆகவே, இதை அமைச்சர் அவர்கள் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி**: கனம் தலைவர் அவர்களே, இந்த மானியங்களின் பேரில் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்ட மன்றத்திலே ஆளும் கட்சியினர்கள் உட்கார்ந்திருக்கிற பக்கத்தில் இருப்பவர் ஆளுங்கட்சித் தலைவர். அதே மாதிரி எதிர்க்கட்சியிலே எதிர்ப்புறமாக இருக்கக்கூடிய தலைவர் எதிர்க்கட்சித் தலைவர்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

இந்த மன்றத்திலே ஆளுங் கட்சித் தலைவருக்குள்ள ஒரு சம மரியாதையை எதிர்க்கட்சித் தலைவருக்கும் கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஆனால் வெளியே பிரசாரத்திற்கோ அல்லது வேறு அலுவல்களுக்கோ எதிர்க்கட்சித் தலைவர்போனால், அவரை சாதாரண ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில்தான் மற்ற அதிகாரிகள் கருதுகிறார்களே தவிர அவர்களுக்கு ஒரு தனி மரியாதை கொடுப்பதில்லை என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு அமைச்சருக்குள்ள சம அந்தஸ்து எதிர்க்கட்சித் தலைவருக்கும் இருக்கவேண்டியது அவசியம். அதற்காக அமைச்சர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தை அவருக்கும் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. வெளியிலே சென்றால் அவருக்கு ஒரு மரியாதை அளிக்கவேண்டும். இந்த நேரத்தில் நடந்த சம்பவத்தை ஒரு உதாரணமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே ஒரு பொதுக்கூட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சென்றிருந்தார்கள். அங்கே போலீஸ்காரர்கள் ஒரு சிலர் இருந்தார்கள். அதே நேரத்தில் அந்த இடத்திலேயே வேண்டுமென்றே ஒரு மைக்கைப் போட்டுக் கொண்டு அவர் பேசுகிற பேச்சைத் தடுத்து, பல தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். போலீஸார் இதைக் கண்டிக்கவில்லை. அதே நேரத்தில் ஒரு அமைச்சர் பேசுகிறார் என்றால், போலீஸ்காரர்கள் என்ன கெடுபிடி செய்வார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த நிலையை மாற்றி, சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு அமைச்சர்களுக்குரிய மரியாதை கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் ஒரு ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாகரிக நாடுகளிலே தேர்தலானது ஒரு சாதாரண சம்பவமாக இருக்கிறது. ஆனால் நம்முடைய நாட்டில் இந்தத் தேர்தல் ஒரு போர்க்களமாகக் காட்சியளிக்கிறது. ஏனென்றால் தேர்தல் காலங்களிலே ஆயிரக்கணக்கான போலீஸ்காரர்கள் படாடோபமாக வெளியூர்களிலிருந்து நகரங்களுக்குக் கொண்டுவரப்படுகிறார்கள். இவையெல்லாம் தேவையற்ற ஆர்ப்பாட்டங்கள். தேர்தலை ஒரு சாதாரண நிகழ்ச்சி என்று கருதவேண்டுமே யொழிய ஒரு போர்க்களம் போல் காட்சியளிப்பதை மாற்றியமைக்கவேண்டும். மேலும், அமைச்சர்கள் தேர்தல் காலங்களில் பிரச்சாரத்திற்காகப் பல இடங்களுக்குச் செல்கிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த ஹோதாவில் தேர்தல் பிரச்சாரத்திற்குப் போவதைப்பற்றி ஆட்சேபனை கிடையாது. ஆனால் ஒரு கட்சியின் சார்பாக அந்தக் கட்சிக்கு பலம் உண்டாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தேர்தல் பிரச்சாரத்திற்குப் போக நேர்ந்தால் அவர்களுக்கென்று தனிப்பட்ட உரிமை கிடையாது. இப்பொழுது 'அமைச்சர்' என்ற உரிமையுடன் போகிறார்கள். போலீஸ் படைகள் பல மேலதிகாரிகள் புடைசூழச் செல்கிறார்கள். இந்த நிலைமையை மாற்ற வேண்டும். அமைச்சர்களுக்கு அவர்களுடைய கட்சியைப் பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கமிருந்தால், தேர்தலுக்கு முன்பாக அந்தப் பதவியை விட்டு விலகி, அந்தக் கட்சியின் ஒரு சாதாரண ஊழியராகப் போகலாமே தவிர, அமைச்சர் என்ற ஹோதாவில் போகக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. வி. எஸ். மணி] [9th March 1964

அடுத்தபடியாக, மேல்சபையிலே ஆசிரியர்களுக்கென்று ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. மத்திய சர்க்கார் அது தேவையில்லை யென்று சொல்லி, நமது மாநில சர்க்காருக்கு ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். இவர்களும் அதற்கு ஒப்புதல் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. எதிர்கால சந்ததியை உருவாக்கக்கூடிய சமூகம் ஆசிரியர் சமூகம். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குக்கூட பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற ஒரு நிலையில் ஆசிரியர் தொகுதியை எடுத்துவிடவேண்டும் என்பது சரியல்ல. இதைப்பற்றிப் புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அரசினர் மாளிகையில் ஏராளமான இடம் காலியாக இருக்கிறது. அந்த இடங்களிலே கனி வர்க்கங்கள் கொடுக்கக்கூடிய மரங்களை உற்பத்திசெய்தால் நன்றாக இருக்கும். அதோடு காய்கறித் தோட்டங்களையும் அங்கே அமைக்கலாம். இதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று எனது மாவட்டத்தில் இருக்கக்கூடிய கலெக்டர் அவர்கள் எங்கே போனாலும் இதே பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். எந்தப் பொது இடத்திலும் சரி அங்கே காய்கறிகள் பயிரிடவேண்டும், கனிவர்க்கங்கள் கொடுக்கக்கூடிய மரங்களை உண்டாக்க வேண்டுமென்ற பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காக அவரை இந்த சந்தர்ப்பத்தில் நான் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக சட்ட மன்ற விடுதிகளிலே தங்கும் உறுப்பினர்களுக்கு ஒரு கட்டணத்தை வசூலிக்கிறார்கள். கட்டணம் கொடுப்பதைப்பற்றி உறுப்பினர்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஒரு நாளைக்கு ரூபாய் 2½ என்பது பெரிது அல்ல. ஆனால் ஒரு மரியாதைக்காக, ஒரு அந்தஸ்துக்காக, அவர்களுக்கு 'Free of rent' என்ற முறையிலே சட்ட மன்றக் கூட்டங்கள் நடக்கும் காலத்திலாவது கட்டணம் வசூலிக்காமல் இருப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Fort

10-30 a.m. St. George கோட்டைக்கு வெளியே சுற்றிலும் ஒரு அகழி இருக்கிறது. அது மிக ஆபாசமாக இருக்கிறது. அதிலே நல்ல முறையிலே நீரை நிரப்பி மீன் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யலாம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேர்தல் காலங்களிலே சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டிருப்பது தனிப்பட்டவர்களுடைய சுதந்திரத்தைப் பறிப்பதாகும். அது ஒரு வகையில் அவர்களையும் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிகளையும் பயமுறுத்துவதற்காகச் செய்யப்படுவதாக இருக்கலாம். ஆனால் அந்த எண்ணம் சரியல்ல. ஆகவே தேர்தலில் ஈடுபட்டுள்ளவர்களைக் கைது செய்யக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை. ஆளும் கட்சியாக இருந்தாலும், வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும் தேர்தலுக்காக ஆலை அதிபர்கள், தொழில் அதிபர்கள், மோட்டார் மன்னர்கள் முதலியவர்களிடம் இருந்து தேர்தல் நிதிவசூல் செய்வது ஒரு மறைமுகமான லஞ்சம் என்றே கருதக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே

9th March 1964] [திரு. வி. எஸ். எஸ். மணி]

அதைத் தடுக்க வேண்டும் என்பது என் கருத்து. சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளம் வாங்குவது என்றால் தாலுகாவிலுள்ள டிரஷரியில் சம்பள பில்லைக் கொடுத்தால் அவர்கள் டோகன் கொடுக்கிறார்கள். அந்த டோகனை ஸ்டேட் பாங்கில் கொடுத்து பணம் வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அது அங்கத்தினர்களுக்கு சிறிது கஷ்டமாக இருப்பதால் ஒன்று, பில்லையும் ஸ்டேட் பாங்கிலேயே கொடுத்து, பணம் வாங்கிக் கொள்ள வசதி செய்ய வேண்டும் அல்லது டிரஷரியிலேயே பணம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக எம்.எல்.ஏ-க்கள் இருக்கக்கூடிய ஸ்தலங்களுக்கு அமைச்சர்கள் வந்தால் என்ன என்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்று கலந்தாலோசித்து காரியங்களைச் செய்ய வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அமைச்சரவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது, அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கு சட்டமன்றத்திலுள்ள மாற்றுக் கட்சி உறுப்பினர்களை அழைப்பது இல்லை. ஆளும் கட்சியில் உள்ளவர்கள் அல்லது ஆளும் கட்சிச்சார்பில் உள்ளவர்கள் ஏற்பாடு செய்யும் பொதுவான நிகழ்ச்சியில் கூட வேண்டும் என்றே எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் புறக்கணித்து அழைப்புக் கொடுப்பதில்லை. அதனால் மாற்றுக்கட்சி சட்டமன்ற அங்கத்தினர்கள் அமைச்சர்களோடு கலந்து ஆலோசிக்கும் நிலைமை இல்லாமல் இருக்கிறது. அமைச்சரவர்கள் தன்னுடைய பயணத் திட்டத்தை டி.ஓ. மூலம் அந்த ஸ்தல அங்கத்தினர்களுக்குத் தெரிவித்தால் அவர்களும் நல்ல முறையிலே அமைச்சரவர்களை வரவேற்று பாராட்டக்கூடிய நிலைமை ஏற்படும் என்று சொல்லிக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

முதலில் மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால், தேர்தலைப் பற்றி எடுத்துக் கொண்டால் பல இடங்களில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களும், உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களும் பலபேர் ஓட்டு அளிக்கும் இடத்திற்கே போவது இல்லை. அவர்கள் கட்டாயமாக ஓட்டுப்போட வேண்டும், அப்படி ஓட்டுப்போடாமல் யாராவது இருந்தால் அவர்களுக்குத் தண்டனை அளிக்கப்படும் என்ற முறையில் ஏதாவது விதி ஏற்படுத்தப்பட வேண்டும். விலை மதிக்க முடியாத ஓட்டுரிமையை உபயோகிக்காமல் இருப்பவர்கள் பேரில் கட்டாயம் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இங்கே பேசும்போது கனம் அங்கத்தினர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஆறு மாதத்திற்கு முன்பே அமைச்சரவை ராஜினாமா செய்துவிட்டுத் தேர்தலில் இறங்க வேண்டும், என்ற கருத்தை வெளியிட்டார்கள். நம் நாட்டில்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [9th March 1964

ஜனநாயகத்தை வளர்க்கும் நம் அமைச்சர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன் படுத்திக் கொண்டு, துஷ்பிரயோகம் செய்து தப்பான முறையில் கட்சியின் நன்மைக்காகச் செய்துவிட்டார்கள் என்று சொல்லமுடியாது. அந்தவிதமாக அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து காங்கிரஸ் ஸ்தாபனத்தை வளர்க்க வேண்டும் என்று காரியங்கள் செய்திருந்தால், இன்றைக்கு இந்த அளவுககு எதிர்க் கட்சிகள் வளாந்திருக்க முடியாது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஜனநாயக அடிப்படையில், எவ்வளவோ கஷ்டப்பட்டு ஜனநாயகத்தை உருவாக்கியுள்ள ஸ்தாபனத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் ஜனநாயகத்தில் அக்கறை கொண்டு இருக்கிறார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆகவே அப்படிப்பட்டவர்கள் ஆறு மாதத்திற்கு முன்பே வெளியே வரவேண்டும் என்று சொல்லுவது நல்லதல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சொன்னார்கள், அமைச்சர்கள் தங்கள் கட்சியைப்பற்றி பேசுகிறார்கள் என்று. கண்டிப்பாகப் பேசியே ஆக வேண்டியிருக்கிறது. பல இடங்களில் மாற்றுக்கட்சிக்காரர்கள் அமைச்சர்களைப்பற்றியும், ஆளும் கட்சியைப்பற்றியும் கன்னா பின்னா என்று தங்கள் மனத்திற்கு தோன்றியதை எல்லாம் பேசுகிறார்கள். அதன் பிறகு அந்த ஊருக்கு அமைச்சர்கள் சென்றால் பொது மக்கள் கேட்கிறார்கள். மாற்றுக்கட்சிக்காரர்கள் உங்களைப் பற்றி பேசியிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் பதில் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். கேவலமான முறையில் கட்சியைப்பற்றியும் அமைச்சரைப்பற்றியும் பேசும் சூழ்நிலை இருப்பதால் அமைச்சர்களும் பொதுக்கூட்டங்களில் பேசும்போது அவைகளுக்கு நல்ல முறையிலே பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதோடுகூட மாற்றுக்கட்சிக்காரர்கள் சவால் விடுகிறார்கள், நாங்கள் அதைப் பேசியிருந்தோமே, இதைப் பேசியிருந்தோமே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லையே, பதில் சொல்லட்டும் என்று சவால் விடுகிறார்கள். ஆகையால் தான் ஆளும் கட்சியின் நிலையையும், தங்கள் நிலையையும் விளக்கும் முறையில் அமைச்சர்கள் பேச வேண்டிய சூழ்நிலை அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்னும் தமிழர்களுக்கு இவர்கள் ஒரு காரியத்தையும் செய்யவில்லை, தமிழர்களுக்கு சகல காரியங்களையும் நாங்கள்தான் செய்கிறோம் என்று சொல்கிறவர்கள், ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்கும் அளவுக்கு மொழிப் பிரச்னையில் பேசுகிறார்கள். அரசியல் சட்டத்தின் 350-வது ஷரத்துப்படி தங்களுடைய மொழியிலே கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளலாம் என்று இருக்கும்போது, பிராந்திய மொழியில் எல்லாம் செய்து கொள்ளலாம் என்று இருக்கும் பொழுது ஏதோ முன்னேறின் பாஷைக்கு பாதகம் ஏற்பட்டு விட்டதாகக் கற்பனை செய்துகொண்டு ஆங்கிலத்தைப் பாதுகாப்பதற்காகப் பேசுவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நல்லதல்ல. பல துறைகளிலும் உள்ள பணியாளர்கள் பிராந்திய மொழிப்

th March 1964] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

யிற்சி மட்டுமிருந்தால் தங்கள் காரியங்களைச் செய்துவிட முடியும். பஞ்சாபிலிருந்து மதுரைக்கு ஒரு கமிஷனர் வந்திருந்தார். அவருடன் நாங்கள் ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருந்தோம். அவருக்குத் தமிழ் தெரியாது என்று நினைத்திருந்தோம். ஆனால் நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோதே அவர்கள் டாட்ச்மேனைத் தமிழிலே அழைத்தது மட்டுமல்லாமல் அவனிடம் ஏதோ தமிழிலே எழுதியும் கொடுத்தார்கள். ஆகவே பிற மாநிலங்களிலிருந்து வருபவர்களும் தமிழைப் படிக்கிறார்கள். எழுதவும் கற்றுக் கொள்ளுகிறார்கள். அந்த அடிப்படையில் இந்தியா முழுமைக்கும் தேசிய பாஷை ஒன்று வேண்டும். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை அது இல்லாமலும் இருக்கலாம். ஆனால் விரும்புபவர்கள் கட்டாயம் படிக்கலாம், அந்த மார்க்கு மற்றப் பாடங்களுடைய மார்க்குக்குத் துணையாகும் என்று சொல்வதில் என்ன தவறு. இப்பொழுது வேறு கொள்கை இல்லை. கொள்கை காற்றில் பறந்து விட்டது, இந்தி ஒன்றுதான் பாக்கியிருக்கிறது என்ற முறையில் தனிப்பட்ட எண்ணத்திற்கு இடம் கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட எண்ணங்களுக்கு இடம் இல்லை. இங்கே பொன்னம்மாள் பேசுகிறாள் என்றால் அவள் லட்சக்கணக்கான மக்களின் பிரதிநிதியாக இருக்கிறாள் என்ற அடிப்படையில்தான் பேசுகிறேன். இன்றைக்கு ஒன்று பேசுவது நாளைக்கு ஒன்று பேசுவது என்பது நல்லதல்ல என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

லஞ்சம் இருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்ளுகிறோம். சில அதிகாரிகள் மிகவும் நல்ல முறையில் செயல்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து தங்களுக்குச் சாதகமான முறையில் காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்குச் சில பேர்கள் பணம் கொடுத்தாவது காரியத்தை நடத்திக் கொள்ளலாமா என்று பேசும்படியான சூழ்நிலை ஏற்படுகிறது. என்னுடைய யோசனை ஒன்றை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். எப்படி லஞ்சம் வாங்குகிறவர்களைக் கடுமையாகத் தண்டிக்கின்றோமோ, அதே மாதிரி யார் யார் லஞ்சம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கும் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும். இதுபற்றி முன்பு ஒரு தடவை நான் பேசியிருக்கிறேன். எந்தக் கை லஞ்சம் கொடுக்கிறதோ அந்த வலது கையை எடுத்துவிட்டால் கூட நன்றாக இருக்கும். இம்மாதிரி லஞ்சம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வருவதால் நன்றாக வேலை செய்யக்கூடிய அதிகாரிகள்கூட, வறுமை காரணமாக ஏதோ வாங்கிக் கொண்டால் என்ன, என்று லஞ்சம் வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, லஞ்சம் கொடுப்பவர்களுக்கும் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சிலர் ஏதோ காரியத்தைச் சாதித்துக் கொடுத்து விடுகிறோம் என்று பத்து பேர்களிடமும் பணம் வாங்கிக்கொண்டு சென்னைக்கு வருகிறார்கள். "உங்கள் வேலையை முடித்து விடுகிறோம்" என்று ஒவ்வொருவரிடமும் சொல்லி 100 ரூபாய், 200 ரூபாய் என்று

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [9th March 1964

வாங்கிக்கொள்கிறார்களே, அப்படி மக்கள் மத்தியில் நடந்து கொள்கிறவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சட்ட மன்றத்தைப் பொறுத்த வரையில், சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பல வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது. இப்பொழுது 45 லட்சம் ரூபாய்க்குக் கட்டடம் கட்ட இருக்கிறோம். அது வரவேற்கத்தக்கதுதான். என்றாலும், ஹாஸ்டலிலிருந்து சட்டசபைக்கு வருவதற்கு 13 ந. பை. வீதம் பஸ் கட்டணம் வாங்கப்படுகிறது. இது சற்றுத் தொந்தரவாக இருக்கிறது. சட்ட மன்ற அங்கத்தினர்களைப் பார்த்து, 'சில்லரை இருக்கிறதா ? காசு கொடுங்கள் ; டிக்கட் வாங்கியாய் விட்டதா ?' என்றெல்லாம் கேள்வி கேட்கக்கூடிய சூழ்நிலை இல்லாதபடி, இந்த 26 ந.பை. வையும் கணக்கிட்டு மொத்தமாகச் சம்பளத்திலிருந்து எடுத்துக் கொண்டுவிடலாம். அது கூட வேண்டாம். சட்டசபை அங்கத்தினர்களைப் பஸ்ஸில் இலவசமாகவே அழைத்துச் செல்லலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த பஸ்ஸில் தனிப்பட்டவர்கள் வந்தால் அவர்களிடமிருந்து மட்டும் காசு வசூல் செய்து கொள்ளலாம். சட்டசபைக் கூட்டம் இல்லாத காலங்களிலும்கூட ஹாஸ்டலிலிருந்து கோட்டைக்கு பஸ் விட வேண்டும் என்று சில பேர்கள் சொல்லுகிறார்கள். அது அவசியம் இல்லை. சட்டசபை கூடாத சமயங்களில் டாக்ஸியில் 80 ந.பை., 90 ந.பை. கொடுத்து அங்கத்தினர்கள் பிரயாணம் செய்து கொள்ளலாம். சட்ட சபை நடக்கக்கூடிய காலங்களில் சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பஸ்ஸிலே கட்டணம் வசூலிக்காமல் பிரயாணம் செய்ய அனுமதித்தால் கௌரவமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கோட்டையிலே பெண்கள் சாப்பிடுவதற்குக் காண்டீன் இருக்கிறது. காபியைப்பற்றி கனம் சகோதரி அங்கத்தினர் கூறி விட்டார். அதைப்பற்றி நான் சொல்லப் போவதில்லை. செக்ரடேரியட்டில் அதிகமான பெண்கள் வேலை செய்கிறார்கள். அந்தப் பெண்கள் மத்தியானம் சாப்பிட வேண்டுமென்றால் அங்கே இட நெருக்கடி மிக மிக அதிகமாக இருக்கிறது. ஆகவே, சட்டசபையிலே வேலை செய்யக்கூடிய பெண் ஊழியர்களுக்குத் தனியாக ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னைமாநகரத்தில் உள்ள மிருகக் காட்சிச் சாலைக்கு நான் நேற்றைய தினம் சென்றிருந்தேன். ஐந்து மணியானவுடனேயே பூட்டிவிடுகிறார்கள். விடுமுறை தினமான ஞாயிற்றுக் கிழமையன்று சென்னையில் பல இடங்களுக்குச் சென்று பார்த்துவிட்டு, வெயில் சற்றுத் தணிந்தவுடன், ஐந்து மணிக்குமேல் மிருகக் காட்சிச்சாலைக்குப் போக அநேகர் வரக்கூடும். ஆனால், ஐந்து மணிக்கே மூடிவிடுகிற காரணத்தால் சங்கடமாக இருக்கிறது. இது விஷயமாகச் சிறு தகராறு எல்லாம் ஏற்பட்டது. அந்த நிலைமை இல்லாமல், ஞாயிற்றுக் கிழமைதோறும், மாலை ஆறு மணி

9th March 1964] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

வரையிலும் மிருகக்காட்சிச் சாலையில் அனுமதிப்பதற்கு அரசாங்கம் அவர்களுக்கு யோசனை கூறவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இனி பஞ்சாயத்து யூனியன் தேர்தல் வர இருக்கிறது. பஞ்சாயத்து தலைவர்களையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் மக்களே நேரடியாக வோட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற முறையை விரைவிலே அமுல் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான், அதிக விலை கொடுத்து வாங்குகிற பழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

செக்ரடேரியட்டைப் பொறுத்த வரையில், மிகவும் நல்ல முறையில் இங்கே வேலை நடந்து கொண்டிருக்கிறது. செக்ரடேரியட்டில் முக்கியமான பதவிகளில் உள்ள செக்ரடரிகள் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள். ஆனால், ரெவின்யூ போர்டில் ரெட் டேபிஸம் ஒரு சில இடங்களில் இருக்கிறது. எல்லா இடங்களிலும் இல்லை. ஒரு சில இடங்களில் இன்னும் ரெட் டேபிஸம் அப்படியே குவிந்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். சோழவந்தானிலே ஒரு கூட்டுறவு ரைஸ் மில்லுக்கு சாங்ஷன் அளிக்கும் விஷயத்தில் தாமதம் இருந்துகொண்டிருக்கிறது. அரசாங்கம் அதற்கு 48,000 ரூபாய் கடன் கொடுத்து, கட்டடம் கட்டி இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. அது சம்பந்தமாக ரெவின்யூ போர்டில் உள்ள அதிகாரியைக் கேட்டால், அந்த அதிகாரி தலை நிமிர்ந்துகூடப் பார்க்கமாட்டேன் என்று சொல்கிறார். அந்த அளவுக்கு ரெவினியூ போர்ட்டில் ஒரு அதிகாரி நடந்துகொண்டால் எப்படிக் காரியங்கள் துரிதமாக நடைபெற முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. இப்படிக் கால தாமதம் செய்யும் அதிகாரிகள் உடனடியாக வேலையைக் கவனிக்கத் தக்க நடவடிக்கையைக் கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. இரா. பொன்னப்ப நாடார் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற வேண்டும் என்றே நான் முற்படுகிறேன்.

முதன் முதலில், இந்தியைப் பொறுத்த அளவில், மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் அரசியலமைப்புச் சட்டத்தின் 343-வது ஷரத்தை இந்தச் சபையின் கவனத்திற்காகச் சுட்டிக் காட்டினார்கள். அந்த 343-வது ஷரத்திலே மூன்று அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. முதலாவதாக the official language of the Union. இரண்டாவது The official language for communication between one state and another or between a state and the Union, மூன்றாவது the language of the proceedings in the Supreme Court.

இப்படி மூன்று பிரிவுகளோடு 343-வது ஷரத்து அமைந்திருக்கிறது.

[திரு. இரா. பொன்னப்ப நாடார்] [9th March 1964

முதலில் நாம் முதலாவது பிரிவைப் பரிசீலிப்பது நலமாக இருக்கும். தங்களுடைய அனுமதியின் பேரில் அதை ஆங்கிலத்தில் படிப்பதற்கு நான் முற்படுகின்றேன்—

" 343 (1) The official language of the Union shall be Hindi in Devanagiri script.

The form of numerals to be used for the official purposes of the Union shall be the international form of Indian numerals.

(2) Notwithstanding anything in clause (1), for a period of fifteen years from the commencement of this Constitution, the English language shall continue to be used for all the official purposes of the Union for which it was being used immediately before such commencement :

Provided that the President may, during the said period by order authorise the use of the Hindi language in addition to the English language and of the Devanagari form of numerals in addition to the international form of Indian numerals for any of the official purposes of the Union.

(3) Notwithstanding anything in this article, Parliament may by law provide for the use, after the said period of fifteen years, of—

(a) the English language, or

(b) the Devanagari form of numerals

for such purposes as may be specified in the law. "

அதற்கடுத்தாற்போல், கமிஷன் நியமிப்பது, பார்லிமெண்ட் கமிட்டி அமைப்பது, அவற்றுக்குரிய விசேஷ அதிகாரங்கள் ப்ரசிடெண்ட் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாக நமது தேசிய மொழிகள் பற்றிய நமது கொள்கை என்ன என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து பாராளுமன்றத்திலே இதற்கென்று ஒரு நல்ல முடிவு ஏற்பட்டது. நமது மதிப்பிற்குரிய இந்தியப் பிரதம மந்திரி அவர்கள் கொடுத்த வாக்குறுதியைக் காற்றிலே விட்டுவிட்டார்கள் என்று எதிர்த் தரப்பிலேயிருந்து கூறப்படுகிறது. ஆனால், இந்த ஷரத்தை ஊன்றிப் படிக்கின்றபோது, நமது தேசத்திற்கு ஒரு தேசீய மொழி வேண்டும், அந்தத் தேசீய மொழியைக் கற்பதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். அதிலே எந்த விதமான ஐயப்பாடும் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. "English shall continue to be used " என்று தான் இந்த ஷரத்திலே இப்பொழுது இருக்கிறது. அதன் மூலம் தொடர்ந்து ஆங்கிலம் நமது ஆட்சி மொழியாக இன்னும் நீடித்துக் கொண்டிருக்கும் என்பதற்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. ஆனால், இந்தத் தேசத்திலே 'டைரக்டிவ்' ஆக ஒரு ஆர்ட்டிகிள் இந்த சாப்டரிலே அமைந்திருக்கிறது. அது ஆர்டிகிள் 351. " Directive for development of the Hindi language " என்று இருக்கிறது. இந்தி மொழியைப் பொறுத்த வரையில் நாம் நமது கொள்கையைச் சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டும். மேல் நாட்டை நாம் எடுத்துப் பார்க்க வேண்டும். இங்கிலாந்து

9th March 1964] [திரு. இரா. பொன்னப்ப நாடார்]

தேசம் உலகத்திலேயே மாபெரும் வல்லரசாக விளங்கிக் கொண்டிருந்த தேசம் ஆகும். அதற்குத் தேசிய மொழியாக ஆங்கிலம் இருந்து கொண்டிருக்கிறது. அமெரிக்கா தேசத்திலும் ஆங்கிலம் தேசீய மொழியாக இருக்கிறது. ஃப்ரெஞ்சு நாட்டில் ஃப்ரெஞ்ச் தேசீய மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருந்து கொண்டிருக்கிறது. அதே மாதிரி, நாமும் முழுமையான இந்தியா என்று நினைக்கும்போது, நமக்கு இந்தியிலே வெறுப்பு ஏற்படுவது அவ்வளவு உசிதம் அல்ல என்பது தான் என்னுடைய துணிச்சலான கருத்து ஆகும்.

மேலும், உலக அறிவை ஆங்கிலத்தின் மூலமாகப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருப்பதால், ஆங்கிலத்திற்கு நாம் முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். அதற்கு எவ்வளவு பிராதான்யம் அளித்திருக்கிறோமோ அதே மாதிரி நம்முடைய தேசீய மொழியாகிய இந்தி மொழியைக் கற்பதற்கு நாம் முற்பட வேண்டும். ஒரு வேளை அரசியல் கருத்திலே வேற்றுமை இருந்தாலும், பிற மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஆழ்ந்து கவனிப்பது உசிதமாக இருக்கும். நமது அண்டை மாநிலங்களில் இந்தியைப் பொறுத்த வரையில் என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டுமென்று கனம் சபாநாயகர் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கேரளாவில் இந்தி இன்று கட்டாயப் பாடமாக இருக்கிறது. மைசூரிலும் இந்தி கட்டாயப் பாடமாக இருக்கிறது. அதே மாதிரி, ஆந்திரப் பிரதேசத்திலும் இந்தி கட்டாய பாடமாக இருக்கிறது. நமது தமிழகத்திலே மட்டும் அது ஒரு இஷ்ட பாடமாக இருக்கிறது. கழிந்த சட்டசபைக் கூட்டத்தில், நமது முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, இந்தி கற்ற மாணவர்களின் எண்ணிக்கையை அறிவித்தார்கள். அப்பொழுது இந்தி இஷ்ட பாடமாக இருந்த போதே மொத்தமாக இந்தப் பரீட்சையிலே தேர்வு பெற்ற மாணவர்கள் 52 சத விகிதத்திற்கு மேல் என்ற கணக்கை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இந்தியைக் கற்றுக்கொள்வதற்கு நாம் வாய்ப்பு அளிக்க வேண்டும். ஒரு வேளை ஒரு சிலர் இந்தியை ரகசியமாகப் படித்துக் கொள்வார்கள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற உத்தியோகங்களிலே அவர்கள் வருவதற்கு அது வசதியாக இருக்கும் ஆகவே. இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வருகின்ற மாணவர்கள் இந்தியைக் கற்பதற்கு இந்தச் சர்க்கார் எல்லாவிதமான ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். 343-ஆவது ஷரத்து பிரகாரம் இனியும் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும். ஆனால் இடைக்காலத்தில் இந்தியைக் கற்றுக் கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும், அதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் செய்யவேண்டும் என்பதை இந்த அரசாங்கத்திற்கு நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமக்கு விருப்பு, வெறுப்பு இருப்பது சகஜம். ஆயினும் பண்டைய காலம் முதல்

[திரு. இரா. பொன்னப்ப நாடார்] [9th March 1964

பன்மொழி தெரிந்தவர்களைப் பாராட்டுவது நம் வழக்கமாக இருக்கிறது. அந்த அடிப்படையில் நாம் வகுத்துக் கொண்டுள்ள மும்மொழித் திட்டம் மிகவும் சிறப்பானது. அதைக் கண்டிப்பாக நாம் ஆதரித்தேயாகவேண்டும். இந்த அரசாங்கத்தினுடைய மும்மொழிக் கொள்கையைத் தைரியமாகவும், துணிகரமாகவும் எடுத்துச் சொல்லி நிறைவேற்றக்கூடிய ஆற்றல் பெற்றவர் இன்றைக்கு நம் மாநிலத்தில் முதல் அமைச்சராக இருப்பதனால் நாம் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களுக்கு இதுபற்றி அதிகமாகப் புத்திமதி கூற வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்து என்னுடைய பகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதன் முதலாக எங்கள் பகுதி தமிழகத்தோடு சமீப காலத்தில் வந்து இணைந்த பகுதி. இணைப்பு ஏற்பட்டு எட்டு வருஷங்களாகிவிட்டன. இணைப்பின் காரணத்தினால் ஏற்பட்ட பல சிக்கல்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. அதற்கான தீர்வுகளை இந்த அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ள பல சட்டங்கள் இன்னும் அந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கப்படாமலேயே இருக்கிறது. உதாரணமாக நிலச் சீர்திருத்தத்தைப் பொருத்த அளவில் புனராலோசனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. குறிப்பாக ஒரு சில கருத்துக்களை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தப் பகுதியில் டெனன்ஸி லா ஜன்மிகரம், மணியம்கரம், கண்டுகிருஷி என்று பலவகையாக இருக்கிறது.

ஜன்மிகரம் என்றால் குடியானவர்கள் வரிக்கு மேலாக ஒரு தொகை செலுத்த வேண்டிய கஷ்டம் இருக்கிறது. நிலத்தின் சொந்தக்காரர்களாகவே குடியானவர்கள் இருந்தாலும் இந்த மேல் வரியைக் கொடுக்காவிட்டால் அவர்களை நிலத்தில் இருந்து அப்புறப்படுத்த முடியும். இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும்.

மணியம்கரம் என்பது ஸ்ரீபத்மநாபஸ்வாமி கோவிலுக்குச் சொந்தமான நிலம்—அந்த நிலத்தின் மேல் பல வரிகள் இருக்கின்றன அரசாங்க வரி நீங்கலாக, ஒரு ஏக்கர் நிலத்திற்கு எட்டு-கோட்டை முதல் பத்து கோட்டை ஆலயத்திற்கு வரி செலுத்த வேண்டி இருக்கிறது. அதைத் தவிர அரசாங்க வரி. ஆனால் ஒரு ஏக்கர் நிலத்தில் விளைவது குறைவாகத்தான் இருக்கும். ஆலயத்திற்குச் சேரவேண்டிய வரியை வசூல் செய்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இதைப் பன்முறை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். தகுந்த சட்டம் கொண்டுவந்து இந்தக் குறைபாடுகளை நீக்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் அந்தப் பகுதிக்கு முதல் மந்திரி அவர்கள் சுற்றுப்பிரயாணம் வந்தபோது கூடக் குறிப்பிட்டோம். அதையும் சீக்கிரமாகச் சட்டம் கொண்டு வந்து நீக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

9th March 1964] [திரு. இரா. பொன்னப்ப நாடார்]

இன்னும் சிடி டெனனன்ஸி ஆக்ட், டெட் ரிலீப் ஆக்ட், ஆகியவற்றை எல்லாம் அந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே திருவிதாங்கூர் பகுதியில் இருந்தபோது டெட் ரிலீப் ஆக்ட் இருந்தது. அதனுடைய காலவரையும் இப்போது தீர்ந்துவிட்டது. ஆகவே இந்தப் பகுதியில் உள்ள அந்தச் சட்டங்களை எல்லாம் அந்தப் பகுதிக்கும் விஸ்தரிக்கவேண்டும். இன்னும் நாற்பது, அறுபது சட்டத்தையும் அந்தப் பகுதிக்குக் கொண்டுவரவேண்டும். அப்போதுதான் சட்ட இணைப்பு பூரணமாக ஏற்படும். இன்னொன்று, முக்கியமாக சர்வீஸ் இணைப்பு ஒருசில இலாகாக்களில் நடந்து இருக்கிறது. கடந்த எட்டாண்டுகளாக முதலில் எவ்வளவு சம்பளம் பெற்றார்களோ, எந்தப் பதவியில் சேர்ந்தார்களோ அதிலேயேதான் இன்னமும் இருக்கிறார்கள். அவர்களுடைய தகுதிக்கு ஏற்ப இன்னும் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. சம்பள உயர்வும் கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்தப் பிரச்சினையையும் துரிதமாகத் தீர்ப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். மணி :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் தோழர்கள் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு சுமார் 40 லட்சம் ரூபாயில் பெரிய ஹாஸ்டல் கட்ட ஒரு திட்டம் இருக்கிறது. எங்களுடைய துணைத் தலைவர் கூறியதுபோல் அவ்வளவு பெரிய தொகையைச் செலவழித்து இன்றையதினம் கட்ட வேண்டிய தேவை இல்லை. இருக்கிற ஹாஸ்டலோடு பற்றாக்குறையாக தேவையுள்ள அறைகள் கட்டினால் போதும். அதோடு இப்போது அங்கு தேவைப் படுகிற வசதிகளை நாம் பெருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக போன் வசதி இல்லை. இருக்கிற போனில் வருகிற அங்கத்தினர்கள் பேச முடிவது இல்லை. அதற்காக நான்கு அறைகளுக்கு ஒரு போன் என்றாவது உடனடியாக வைக்கவேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. இவ்வளவு லட்சம் ரூபாயைச் செலவழிப்பதைவிட நாள் ஒன்றுக்கு 2-1/4 ரூபாய் வாடகை ஒரு அறைக்கு இப்போது ஒரு அங்கத்தினருக்கு என்று வாங்கப் படுகிறது. சட்டமன்றம் நடக்கிற காலத்தில் இம்மாதிரி அங்கத்தினர்களிடமிருந்து வாடகை வாங்குவதை வேண்டுமானால் தள்ளிக் கொடுக்கலாம். நாங்கள் பெங்களூருக்குச் சென்றபோது பார்த்தோம். கூட்டங்களுக்கு என்று உறுப்பினர்கள் வருகிற காலத்தில் அவர்கள் தங்குகிற விடுதிகளுக்கு வாடகை கிடையாது. அதுபோல நாமும் செய்யலாம்.

மேலும் இங்கிருந்து விடுதிக்கும், அங்கிருந்து சட்டமன்றத்திற்கும் வருவதற்கு உறுப்பினர்கள் சர்க்கார் பஸ்களுக்கு டிக்கட்டிற்கு பணம் கொடுத்தே வருகிறார்கள். போகிறபோதும், வரு

[திரு. எம். எஸ். மணி] [9th March 1964

கிறபோதும் சில்லரை கொடுக்க வேண்டியிருக்கிறது. தினந்தோறும் இப்படி வாங்குவதைவிட மன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுக்கு 25 ரூபாய் என்று வசூலித்து ஒரு பாஸ் வழங்கிவிட்டால் அவர்கள் எங்குவேண்டுமானாலும் போய்வர வசதி ஏற்படும். எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் போய்வர நிரந்தர வசதியாக இருககும்.

மேலும் இப்போதுள்ள ஹாஸ்டலில் பணியாளர்கள் மிகமிகக் குறைவு. கடைகளுக்குச் சென்று வரவேண்டுமானாலும், தபாலாபீசுக்குச் சென்றுவர வேண்டுமானாலும் போதுமான பணியாளர்கள் கிடையாது. ஆகவே பணியாளர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு முன்வரவேண்டும். அதுமட்டுமல்ல. பல பணியாளர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. கூட்டம் முடிந்து அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் பகுதிக்குச் சென்றவுடன் இவர்களையும் வீட்டிற்கு அனுப்பிவிடுகிறார்கள். ஆனால் கூட்டம் முடிந்த பின்பும் கூட வெளியூர்களில் இருந்து பல அதிகாரிகள், பல மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் வந்து தங்குகிறார்கள். அவர்களுக்கும் பணியாளர்கள் தேவைப்படும். எனவே இப்போதுள்ள பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சட்டமன்றத்தைப் பொருத்தவரையில் அங்கத்தினர்கள் பல கேள்விகளை அனுப்புகிறார்கள். அனுப்பப்படுகிற கேள்விகளில் பாதி பொது முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்ற காரணத்தைக் காட்டி திருப்பி அனுப்பப்பட்டுவிடுகிறது. அப்படித் திருப்பி அனுப்புகிற கேள்வியையே பத்து நாட்கள்
11-00 a.m. கழித்து வேறு ஒரு தாளில் குறித்து அனுப்பினால் வாங்கிக்கொண்டுவிடுகிறார்கள். அதே கேள்விகள் அனுமதிக்கப்படுகின்றன. அதனால் சரியான முறையில் கேள்விகள் பரிசிலனை செய்யப்படுவதில்லையோ என்று தோன்றுகிறது. அப்படியில்லாமல் கனம் அங்கத்தினர்கள் கேள்விகளை அனுப்பினால் நல்லமுறையில் அவற்றைப் பரிசீலித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும். மேலும் கேள்வி நேரத்தை சில நாட்களில் அரை மணியாகக் குறைத்துவிடுகிறார்கள். சில முக்கியமான கேள்வி வருகிறபோது அடுத்த கேள்விக்குப் போய்விடுகிறார்கள். அப்படியின்றி கேள்வி நேரத்தை நல்லமுறையில் பயன்படுத்த பூரண சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கிராமப்புறங்களில் உள்ள அங்கத்தினர்கள் தங்கள் பகுதிகளைச் சுற்றிப் பார்க்கவேண்டுமென்றால் பஞ்சாயத்து யூனியன் ஜீப்புகளை எடுத்துக் கொள்கிறார்கள். நகரப் பகுதி அங்கத்தினர்களுக்கு அத்தகைய வசதி கிடையாது. தங்கள் தங்கள் தொகுதியில் நடைபெறுகிற முக்கிய அலுவல்களைத் தெரிந்து கொள்வதற்கும் மக்கள் குறைபாடுகளை அவ்வப்போது தெரிந்து கொள்வதற்கும் விரும்பினால் கலெக்டர் காரியாலயத்தில் உள்ள ஜீப்புக்களையாவது நகராட்சி மன்றத்தில் உள்ள ஜீப்புக்களையாவது வாரத்திற்கு இரண்டு நாட்கள் இந்த அங்கத்தினர்கள் பயன்படுத்திக்கொள்ள ஒரு வசதி தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

9th March 1964] [திரு. எம். எஸ். மணி]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நகர சட்டமன்ற உறுப்பினர்கள் இப்பொழுதே தம்முடைய தொகுதியில் ஓரிடத்தைப் பார்வையிடப் போக வேண்டுமென்றால் அதை அதிகாரிக்கு அறிவித்து, அந்த அதிகாரியோடு கூடச் சென்று சுற்றிப் பார்த்து வரலாம். அங்கத்தினர் பார்க்கவேண்டும் என்கிற திட்ட வேலைகளை அதிகாரிகள் தங்களுடன் உறுப்பினரை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டலாம்.

திரு. எம். எஸ். மணி: தப்பித் தவறி சில பகுதிகளில் நாங்கள் அதிகாரிகளுடன் சென்றால், உடனே அந்த அதிகாரிகள் மீது 11-00
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் புகார் செய்கிறார்கள். a.m.
அடுத்து அமைச்சர்கள் வருகிறபோது மன்ற அங்கத்தினர்களுக்கு நல்ல முறையில் தொடர்பு கொள்ள முடிவதில்லை. அமைச்சர்கள் வந்திருக்கிறபோது அவர்கள் தங்குகிற விடுதிகளில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் அதிகமாகக் கூடிவிடுகிற காரணத்தால் சொல்ல வேண்டிய குறைகளைப் பற்றிக் சொல்ல முடியாத நிர்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. கூடுமான அளவுக்கு அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்யும்போது அந்தத் தொகுதி அங்கத்தினர்களையும் உடன் அழைத்துச் செல்லவேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலைப் பற்றிச் சொல்லுகிறபோது திருச்சியில் நடந்த ஒருசில நிலைமைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நிற்கிற வேட்பாளர்கள் திருச்சி நகரில் தேர்தல் அதிகாரியிடம் போய் வாக்காளர்கள் ஜாபிதா வேண்டுமென்று கேட்டால், 'ஜாபிதாவின் பிரதிகள் கைவசம் இல்லை; வேண்டுமானால் இருக்கிற ஜாபிதாவிலே பெயரைப் பார்த்துக் கொண்டு போங்கள்' என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களிடத்தில் இரண்டு, மூன்று ஜாபிதாக்கள் இருந்தன. இந்த நிலைமை எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டால் 'அது எங்களுக்குத் தெரியாது' என்று சொன்னார்கள். அதோடு தேர்தல் நேரத்திலே புதிதாக 120 குழாய்களைப் போட்டிருக்கிறார்கள். அதே போன்று புதிய ரோடுகளைப் போட்டிருக்கிறார்கள். கமிஷனரையும், எஞ்சினீரையும் காங்கிரஸ் கட்சியிலுள்ள முக்கியஸ்தர்கள் அழைத்துக் கொண்டு சென்று 'எங்களுக்கு வோட்டுப் போட்டால் குழாய்கள் வரும்; விளக்குகள் வரும்' என்று கூறி தேர்தல் நேரத்திலே அவற்றை நிறைவேற்றி வைக்கிறார்கள். இப்படிப் பட்ட காரியங்களைத் தேர்தல் சமயத்தில் செய்யாமல் தேர்தலுக்கு முன்னாலோ பின்னாலோ செய்யவேண்டும். அதோடு திருச்சி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட சினிமாக் கொட்டகைக்கு இன்றையதினம் வரி போட்டிருக்கிறார்கள். 'அந்த வரியை ஓரளவு நீக்கி விடுகிறோம்' என்று அந்த சினிமா கொட்டகை உரிமையாளரிடம் கூறி, அதன் மூலம் காங்கிரஸ் கட்சிக்குப் பத்தாயிரம் ரூபாயை நன்கொடையாகப் பெற்றிருக்கிறார்கள். இப்படிப் பணம் வசூலிக்கப்பட்டு திருச்சியில் வாக்காளர்கள் அத்தனை பேருக்கும் பணம்

கொடுக்கப்பட்டது. இந்த மாதிரி வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்கிற நேரத்திலே போலீஸ் பந்தோபஸ்தோடு பணம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னபோது 'நீங்களும் பணம் கொடுங்கள், உங்களுக்கும் பந்தோபஸ்து தருகிறோம்' என்று போலீஸ் அதிகாரிகள் கூறுகிறார்கள். ஒன்று பணம் கொடுக்கலாம் என்று சொல்லிவிடுங்கள். பணம் கொடுப்பது தவறு என்று சொல்கிற நேரத்தில் அதிகாரிகளே பந்தோபஸ்து கொடுக்கிற நிலைமையை நீக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். வெளியூர்களிலிருந்தும் மில்களில் இருந்தும், மற்றும் பஞ்சாயத்துப் பகுதிகளில் இருந்தும் ஏராளமானவர்களைக் கொண்டு வந்து அடைத்து வைத்திருந்தார்கள். இவ்வாறு திருட்டு வோட்டளிப்பதற்காக வெளியூரிலிருந்து ஆட்களைக் கொண்டு வருவதை அதிகாரிகளிடம் எடுத்துச் சொன்னால் 'நீங்களும் வேண்டுமானால் வெளியூரிலே இருப்பவர்களை அழைத்து வாருங்கள்' என்று சொல்கிறார்கள். அதோடு கூட தேர்தலுக்கு முதல் நாள் வரையிலே யார் யார் போலிங் அதிகாரிகளாகப் போடப்பட்டிருந்தார்களோ அவர்களையெல்லாம் கூடத் தேர்தல் நாளன்று மாற்றியமைத்திருக்கிறார்கள். குறிப்பாக திருச்சி 10 வது வார்டில் போடப்பட்ட போலிங் ஆபீசர்களின் லிஸ்ட் காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு பின்னர் திருத்தியமைக்கப் பட்டிருக்கிறது. இது பற்றி கலெக்டர் அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னபோது, 'இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன செய்வது?' என்று கூறிவிட்டார்கள். அங்கு போய் வோட்டுப் போட வருகிறவர்களை 'சேலஞ்சு' செய்வதற்காகப் பணம் கட்டினால் தேர்தல் அதிகாரிகள் வாங்க மறுத்து விட்டார்கள். அதோடு சாவித்திரி வித்தியா சாலா என்ற கல்லூரி உபாத்தியாயினிகள் எல்லோரும் போலிங் அதிகாரிகளாகப் போடப் பட்டார்கள். அவர்கள் காங்கிரசின் சார்பாக உள்ளே பணியாற்றவேண்டுமென்ற முறையிலே நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் வோட்டுப்போட வந்த தாய்மார்களை 'காளை மாட்டுக்கு வோட்டுப் போடுங்கள்' என்று சொன்னார்கள். இவ்வாறு பகிரங்கமாகச் சொல்லப்பட்டது.

அதைப்பற்றி அதிகாரிகளிடத்தில் கூறியும் எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வில்லை. ஆகவே, எங்கள் கட்சியைச் சார்ந்த வேட்பாளர்கள் அந்தப் போக்கைக் கண்டித்து 'வாக் அவுட்' செய்திருக்கிறார்கள். சென்ற பொதுத் தேர்தலிலே வோட்டுப்போடும் பெட்டி ஸ்டீல் பெட்டியாக இருந்தது. ஆனால் நகரசபைத் தேர்தலின்போது சென்னையைத் தவிர மற்ற இடங்களில் அரப் பெட்டி பயன்படுத்தப்பட்டது. அந்த மரப்பெட்டிகள் சில தொகுதிகளில் உடைக்கப்பட்டிருந்தன. அதைப பற்றித் தேர்தல் அதிகாரியிடம் எடுத்துச் சொன்னபோது 'போலிங் அதிகாரிகளைப் போய்க் கேளுங்கள்' என்று பதில் சொல்விட்டார். இந்த வகையில் நடந்து முடிந்த தேர்தலிலே நல்ல நிலைமைகள் நடைபெறவில்லை என்பதைத் தான் நான் கூற விரும்புகிறேன். தாய்க்குலத்தைப் பற்றிக் கடுமையாகத் தாக்கி பேசப்பட்டதாக சில கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். எந்தக் கட்சியினராலும்

தாய்குலத்தைத் தாக்கிப் பேசினால் அது கண்டிக்கத் தக்கதாகும். நாங்களும் தாய், தமக்கையரோடு இருக்கிறவர்கள்தாம். ஆனால் ஒரு பெண் அங்கத்தினர், அதுவும் சட்ட மன்ற அங்கத்தினர் திருச்சி வந்தபோது தாய்குலத்திற்குரிய உரிய கண்ணியத்துடன் பேசவில்லை. அவர் என்ன பேசினார் என்பதைக் கனம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. டி. கார்ச்சா கவுடர்:** சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மானியக் கோரிக்கையை முதல் முதல் துவக்கி வைத்துப் பேசிய கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரை விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது 'பாகிஸ்தானுக்குப் போ' என்று சென்னது பற்றிக் குறிப்பிட்டார்கள். நமது மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் யாரைப் பாகிஸ்தானுக்குப்போ என்று குறிப்பிட்டார்கள் என்றால், மாணவர்களுக்கு இந்தியை இந்த மாகாணத்தில் கட்டாயப் பாடமாக வைக்காமல் இருந்தும் பரீட்சையில் உட்கார மாட்டோம் என்று சொல்கிறவர்களைத் தான் பாகிஸ்தானுக்குப் போய்விடுங்கள் என்று கூறினார் என்பதைக் கூற விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்களும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இந்தி வேண்டாமென்று எண்ணுகிறவர்கள் பரிட்சையில் உட்கார நிமித்தம் இல்லை; நிர்ப்பந்தம் இல்லை. அவ்வாறு நிமித்தம் இல்லாதபோது, அவர்களை இந்திப் பரிட்சை எழுதக் கூடியவர்களை 'பரிட்சை எழுதாதே' என்று சொன்னால் அவர்கள் பாகிஸ்தானுக்குப் போக வேண்டியவர்கள் என்று சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி: இந்திப் பரிட்சை எழுதாதவர்கள் பாகிஸ்தானுக்குப் போங்கள் என்று, அமைச்சர் அவர்கள் கூறியதற்கும், இன்று கூறுவதற்கும் முரண்பாடு இருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் கொஞ்ச நேரம் கழித்து வந்தார்கள். தாங்கள் இந்தி படிக்காவிட்டாலும், வேறு யாரும் படிக்கக்கூடாது என்று தடை செய்வார்களானால் அவர்களைப் பாகிஸ்தானுக்குப் போங்கள் என்று சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி: அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பேசியதன் தவறை உணர்ந்து திருத்திக் கொண்ட வாசமாகத் தெரிகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பத்திரிக்கைக்காரர்கள் புரிந்து கொள்ளாமல் எழுதுவதை வைத்துக்கொண்டு சொல்வதில் அர்த்தமில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்போது முதலமைச்சர் அவர்கள் பட்ஜட் உரையில் அளித்த பதிலுக்குத் தெளிவாக விளக்கம் அளித்துள்ளார்கள். மதிப்பு மிக்க யூனியன் கல்வி அமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களிடத்தில் முதலமைச்சர் கொண்டுள்ள அதே கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கூறி இருக்கிறார்கள்.

'While asking the South to voluntarily help the Government in making Hindi the Official Language, he was totally against the use of any force or aggressive tactics. No step in this direction could be taken without carrying either the South or Bengal with others, as India without them might be nothing.'
என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

அந்தப் பிரச்னை பற்றித்தான் முதல் அமைச்சர் அவர்கள் இந்த சபையிலும் சொல்லியிருப்பதால் இந்த மொழிப் பிரச்னை பற்றி நம் முதல் அமைச்சர் அவர்கள் எவ்வளவு கருத்துறத் தெளிவுடனும் எவ்வளவு தைரியத்துடனும் இருக்கிறார்கள் என்பதை இந்த சபை உணரும். அடுத்தபடியாக, ஹாஸ்டல் விஷயமாக இங்கு பிரச்னைகள் எழுப்பப்பட்டன. சட்டமன்ற அங்கத்தினர்கள் இப்போது தங்கும் விடுதியைத் திருத்தியமைக்கலாம் என்றும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சிலர் சொல்கிறார்கள். அது எவ்வளவு தூரம் உசிதமாக இருக்குமோ தெரியாது. மலைவாச ஸ்தலங்களில் இருந்து வரும் எங்களைப் போன்றவர்களுக்கு இப்போதுள்ள ஹாஸ்டல் மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே ஹாஸ்டல் கட்டும்போது எங்களைப் போன்றவர்களுக்காக இரண்டு அல்லது மூன்று "ஏர் கண்டிஷன் ரூம்கள்" கட்டித் தர வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, பஸ்ஸில் அடிக்கடி சில்லரை கேட்டுக் கொடுப்பதற்கு உள்ளாகவே ஹாஸ்டலுக்கு பஸ் போய் சேர்ந்து விடுகிறது. ஆகவே எதிர்க்கட்சி அங்கத்தினர் திரு. மணி அவர்கள் சொன்னதுபோல் வருடத்திற்கு 20 அல்லது 25 ரூபாய் என்று வசூல் செய்து எங்களுக்குப் பாஸ் கொடுத்து விட்டால் வசதியாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, பஞ்சாயத்து தேர்தல்களில் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வசதி இல்லாமல் போனாலும், தலைவர்களாக இருப்பவர்கள் பல முக்கியமான காரியங்களைச் செய்ய வேண்டியிருப்பதால், பஞ்சாயத்து தலைவர்களாவது நேரடித் தேர்தல் மூலம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற உத்தரவை வரும் தேர்தலிலாவது அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, சட்டசபையைக் கோடை காலத்தில் உதகையில் கூட்டவேண்டுமென்று பொது விவாதத்தின் போதே கூறியிருக்கிறேன். என் கோரிக்கையை நான் மறுமுறையும் இந்த சமயத்தில் அமைச்சர் அவர்களிடம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். எல்லா அங்கத்தினர்களையும் தாங்கள் தயவுசெய்து எப்படியாவது சம்மதிக்க வைத்து கூட்டத்தை மே மாதம் உதகையில் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* *திரு. ஏ. சுவாமிதாஸ்:* மதிப்பிற்குரிய உப தலைவர் அவர்களே, இம்மானியக் கோரிக்கையின் மீது எழுகின்ற விவாதத்தில் கலந்து கொண்டு ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தில் சமர்ப்பிக்க நான் விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் சென்னை மாநிலத்தோடு இணைந்து ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் ஆகிறது. இன்னும் அங்கு பல பிரச்னைகள் தீர்க்கப் படாமலேயே இருக்கின்றன. அங்கிருந்து வரும் உறுப்பினர்கள் அப்பிரச்னைகள் பற்றி பல தடவைகள் இந்த மன்றத்தில் கூறியும் இன்னும் ஒரு முடிவும் காணவில்லை. நாங்கள் எங்கள் தொகுதிகளுக்குச் சென்றால் அங்குள்ள மக்கள் எங்களைப் பார்த்து ஏளனமாக, அங்கு "சட்டசபையில் நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கிறீர்களா", என்று கேட்கிறார்கள். எங்கள் பிரச்னைகளுக்குப் பரிகாரமே காணவில்லையே என்று குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். உத்தியோக இணைப்பு இன்னும் முற்றுப் பெறவில்லை. மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதுபோல், சென்னையோடு இணைந்து எட்டு வருடங்கள் ஆகின்றன. 1956-ல் திருவிதாங்கூர்-கொச்சியில் அவர்கள் என்ன சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்களோ, அதே சம்பளத்தைத்தான் பல அதிகாரிகள் இன்றும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் உத்தியோக உயர்வு விஷயத்திலும், தகுதி பெற்றவர்களாக இருந்தும் அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்படவில்லை. ஆகவே இன்டக்ரேஷன் இன்னும் தாமதப்படுத்தப் படாமல் உடனடியாக இந்த ஆண்டுக்குள்ளேயே எப்படியாவது முடிக்கப் படுவதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களைப் பணிவோடு மன்றாடி கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த எட்டு ஆண்டு காலத்தில் அங்குள்ளவர்களுக்கு கெஸட்டட் போஸ்ட் ஒன்றும் கிடைக்கவில்லை. எவ்வளவோ படித்திருந்தும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அதைப்பற்றியும் சிந்திக்க வேண்டும். பொதுவாக ஆட்சி முறையைப்பற்றி ஒன்று நான் கூற ஆசைப்படுகிறேன். பெர்ஸனல் பைல் என்று ஒன்று இருக்கிறது. அதில் பல குறைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதில் உள்ள குறைகள் என்னவென்றால், அதை வைத்திருக்கும் அதிகாரி தனக்குக் கீழுள்ள சிப்பந்திகளை அதை வைத்துக் கொண்டு பயமுறுத்தி அதிகாரம் செலுத்த வாய்ப்பிருக்கிறது. உத்தியோக உயர்வு கொடுக்க இந்த பெர்ஸனல் பைல் ஒரு கருவியாகப் பயன்படுகிறது. சீனியாரிட்டி அடிப்படையில் தங்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்கலாம் என்று பலர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். ஒரு அதிகாரி இருக்கிறார், அவருக்குக் கீழ் இன்னொருவர் இருக்கிறார். அவருக்கு ஜூனியராக கீழேயிருப்பவருக்கு பதவி உயர்வு வரவேண்டுமென்றால் முதலில் இருப்பவரை தரம் தாழ்த்த இந்த பைலில் ஏதாவது ரிமார்க் எழுதி வைத்தால் போதும். அப்போது அவரை தரம் தாழ்த்திவிட்டு தனக்கு வேண்டியவருக்கு பதவி உயர்வு கொடுக்க இது பயன்படுகிறது. ஆகவே பெர்ஸனல் பைல் அடிப்படையிலே பதவி உயர்வு வைக்காமல் சீனியாரிட்டி அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் முன்னர் குறிப்

பிட்டதுபோல் எந்த அதிகாரியைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றாலும், எந்த அரசாங்க ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றாலும், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுப்பதுதான் நல்லது. அப்போது குறைபாடுகளுக்கு இடம் இல்லாமல் இருக்கும். உத்தியோக உயர்வு கொடுப்பதில் குறைபாடுகள் ஏற்பட வழியிருக்காது. அடுத்தபடியாக, சட்டசபை அங்கத்தினர்கள், அமைச்சர்களையோ அல்லது அதிகாரிகளையோ பார்க்க வேண்டுமென்றால் அதிக நேரம் காத்து நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டமன்ற அங்கத்தினர்களைப் பொறுத்தமட்டில் சட்டசபைக் கூட்டத்தின்போதுதான் அதிகமாக வருகிறார்கள். மற்றவர்களும் வருகிறார்கள். எப்பொழுது வருவதாகயிருந்தாலும் முன்னால் தெரிவித்துவிட்டு வந்தால் அல்லது போன் செய்தால் தாமதம் இல்லாமல் பார்க்கலாம். முன்னரே சிலரை வரச் சொல்லியிருக்கலாம். அதிகாரிகள் வருகிறார்கள். ஆகவே, திடீரென்று சொல்லாமல் வந்துவிட்டு காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது என்று வருந்துகிறார்கள். அவர்கள் போன் செய்து விட்டோ அல்லது கடிதம் எழுதியோ இன்ன டைம் என்று குறிப்பிட்டு விடலாம். அப்போது தாமதம் இன்றி பார்க்க முடியும்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சில அதிகாரிகளிடம் விஸிட்டிங் கார்ட் கொடுத்து இரண்டு மணிநேரம் கழிந்தும் பார்க்க சமயம் கிடைப்பதில்லை. அப்படிப் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். பள்ளிக்கூட டைரக்டர் இருக்கிறார். டைரக்டரைப் பார்க்க மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கிறது. இரண்டு மூன்று நாட்கள் முயற்சித்தாலும் பார்க்க முடியாமல் போய் விடுகிறது. அங்குள்ள ப்யூன்களுக்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்தால் நல்லது. ஒரு அதிகாரியைப் பார்த்து விட்டு வெளியே வந்தால் 10, 15 பேர்கள் எங்களை வளைத்துக் கொள்கிறார்கள், எங்களுக்கு ஏதாவது கொடுங்கள் என்று. அவர்களுக்குக் கிடைப்பது குறைந்த சம்பளம். செக்ரட்டேரியட்டிலும் அந்தத் தொல்லை இருக்கிறது. ஆகவே இந்த ப்யூன்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தால் வசதியாக இருக்கும். அமைச்சர்களுக்கு வேலைபளு இருக்கிறது. அமைச்சர்களின் மேஜை மீதுள்ள பைல்களின் உயரத்தைப் பார்த்தால் அமைச்சர்களின் முகம் தெரியாமல் பைல்கள் குவிந்து கிடக்கின்றன. ஆகவே இந்த அமைச்சரவையை விஸ்தரித்துக் கொண்டால் நலமாக இருக்கும். பல மாவட்டங்களிலிருந்தும் குறைபாடுகள் வந்து கொண்டேயிருக்கின்றன. கவுன்சிலில் கூட ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டிருக்கிறார். அமைச்சர்கள் தங்கள் மாவட்டங்களைத்தான் கவனிக்கிறார்களே தவிர பிற மாவட்டங்களைப் பற்றி கவனிக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். எல்லா மாவட்டங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கும் நிலையில் அமைச்சரவையைப் பெருக்கினால் வசதியாக இருக்கும். அதைச் செய்யாது போனாலும் சபைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது மாவட்டப் பிரதிநிதிகளை அழைத்து, அமைச்சர்கள் அவர்களுடன்

கலந்து ஆலோசித்து அவர்கள் குறைகளைத் தெரிந்து கொண்டால் நலமாகயிருக்கும். எங்களுக்கும் வசதியாக இருக்கும். எதிர்க்கட்சி அங்கத்தினர்களைக் கூப்பிடாமல் இருந்தாலும் ஆளும் கட்சி உறுப்பினர்களையாவது கூப்பிட்டுக் கேட்டால் நலம் பயப்பதாக இருக்கும். சுற்றுப்பிரயாணம் செல்கிற அதிகாரிகளும் கொஞ்சம் மனதில் கொள்ளவேண்டியது தாங்கள் தங்கியிருக்கும் விடுதியின் செலவு, தங்களது உணவின் செலவு இவற்றையெல்லாம் அவர்களே மேற்கொள்ளுவது நலமாகயிருக்கும்.. குறைவாகச் சொல்லவில்லை. அவர்கள் கீழ் வேலை செய்கிறவர்கள் **அவர்களே** திட்டமிட்டுக் கொண்டு அந்தச் செலவை ஏற்றுப் பங்கிட்டுக் கொள்கிறார்கள். நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். கன்னியாகுமரியில் தங்கும் சிலர் அவர்கள் கீழுள்ள உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இதையெல்லாம் மாற்றிக்கொண்டால், அவர்களுக்கு ஏற்படுகிற கெட்ட பெயரை மாற்றுவதற்கு வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன். மேலும் அங்கத்தினர்களுக்குக் கார் கொடுக்கவேண்டும் என்று பலா சொன்னார்கள். நான் அவ்வாறு கூட சொல்லவில்லை. அரசாங்க பஸ்கள் எங்கெல்லாம் போகின்றனவோ, அந்த பஸ்களில் இலவசமாகப் பிரயாணம் செய்வதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மான்யக் கோரிக்கைகளில் முக்கியமாக எலக்ஷன் என்ற தலைப்பில் மான்யம் கோரப்பட்டிருக்கிறது. எலக்ஷன் நடத்துவதில், நாம் இப்போதுதான் நகரசபை தேர்தல்களை நடத்தியிருக்கிறோம். மேலும் இந்த நகரசபை தேர்தல் 1967-வது ஆண்டில் நடைபெற இருக்கிறது. அதே நேரத்தில் பொதுத் தேர்தலும் நடைபெறும். அந்த நேரம் வரும்போது நகரசபைத் தேர்தலை மாற்றி வைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. பஞ்சாயத்து எலக்ஷன் இந்த ஆண்டில் வேறு வைத்திருக்கிறோம். அதையும் பின்னால் 1967-வது ஆண்டில் நடத்தப்போகிறோம், சாதாரணமாக இப்போது பாராளுமன்ற தேர்தலையும், சட்டமன்ற தேர்தலையும் ஒரே நாளில் நடத்துகிறோம். பாராளுமன்றத்தில் நிற்கின்றவர்களுக்கு ஒரு வோட்டும் சட்ட மன்றத்திற்கு நிற்கின்றவர்களுக்கு ஒரு வோட்டும் போடுகின்ற முறையில் இப்போது தேர்தலை நடத்திக்கொண்டிருக்கிறோம். அதுவும் இப்போது நாம் குறிபோடும் முறையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த முறை இருக்கும்போது என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் இரண்டு வாக்குகளைப் போடும்போது, அதே நேரத்தில் நகரசபைகளுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் சேர்த்து மூன்று வோட்டுகளாகப் போட்டுவிட்டால் என்ன என்பதுதான். பாராளுமன்றத்திற்கு ஒரு வோட்டு, சட்டமன்றத்திற்கு ஒரு வோட்டு, கடைசியில், நகரத்திலுள்ளவர்கள் நகரசபைக்கு ஒரு வோட்டும், அல்லது கிராமப்புறங்களி

[திரு. ஜே. மாதா கவுடர்] [9th March 1964

லுள்ளவர்கள் பஞ்சாயத்து சபைக்கு ஒரு வோட்டும் இப்படியாக மூன்று வோட்டுகளையும் ஒரே நேரத்தில் போட்டுவிட்டால், மாநிலம் முழுவதும் ஒரே நாளில் இந்தத் தேர்தல் வேலை முடிந்து விடும். இதன் மூலம் தேர்தலில் நிற்கின்றவர்களுக்கும் கஷ்டமிராது, பொதுமக்களுக்கும் கஷ்டமிராது, ஆகவே இப்போது இருக்கின்ற இடைஞ்சல்களைப் போக்குகின்ற முறையில் நான் சொன்ன இந்த முறையை அனுசரிக்க முடியுமா என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக முன்பு பார்லிமென்டுக்கும் சட்டமன்றத்திற்கும் இரட்டைத் தொகுதிகளை வைத்திருந்தோம். இப்போது அவ்விதமில்லாமல், பொதுத் தெகுதி, ரிசர்வ் தொகுதி என்று சீர்படுத்திவிட்டோம். ஆனால் இப்போதும் நகரசபையைப் பொறுத்த வரையில் பொது, ரிசர்வ் இரண்டும் சேர்த்து இரட்டை மெம்பர் தொகுதி என்ற முறையை வைத்துக்கொண்டிருக்கிறோம். இதையும் மாற்றி பொது வார்டு, ரிசர்வ் வார்டு என்று ஏன் அமைக்கக் கூடாது என்பதைப் பற்றிப் பரிசீலிக்கக் கூடாது? இப்போது சட்டசபைகளுக்கு இருந்த இரட்டைத் தொகுதி முறையை ஒழித்துவிட்டோம். அதே போன்று இப்போது நகரசபைகளில் இருக்கும் இரட்டை மெம்பர் வார்டு முறையையும் ஒழித்துவிட வேண்டும். அரிஜன மக்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் தனியாக ரிசர்வ் தொகுதி என்று நகர சபைகளிலும் வைத்துக் கொள்ளலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோன்று இப்போது நகரசபைகளில் பெண்களுக்கு என்று தனியாக வார்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒதுக்கப்பட்டிருப்பதும் நல்லதல்ல. ஜாதியின் அடிப்படையில், ஆண்களுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று, என்று தனியாக வைத்திருப்பது உசிதமல்ல. நான் தாய்மார்கள் தேர்தலில் வர வேண்டாம் என்று சொல்லவில்லை. பொதுத் தொகுதியில் போட்டியில் எத்தனையோ பெண்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு தொகுதி வைப்பானேன்? இதையும் மாற்றி அமைப்பதற்கு பரிசிலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், முக்கியமாக தேர்தல் காலங்களில், பொய் வோட்டுகள் போடுவது நடந்து வருகிறது. முக்கியமாக கிராமப்புறங்களில் பொய் வோட்டு போடுவது முடியாது, நகரங்களில் தான், அதுவும் சென்னை போன்ற நகரங்களில் பொய் வோட்டு போடுவது சுலபமாக இருந்து வருகிறது. வட சென்னையிலுள்ள ஒருவர் அங்கே வோட்டு போட்டுவிட்டு, திரும்பியும் தென் சென்னையில் வந்து வோட்டு போட்டுவிடுகிறார். இதைக் கண்டு பிடிப்பதும் கஷ்டமாக இருக்கிறது. கண்டு பிடிக்கவும் முடியவில்லை. இந்த மாதிரி சிக்கல்களைத் தீர்ப்பதற்கு, பரீட்சார்த்தமாக சென்னை நகரத்திலாவது வோட்டர்களுடைய போட்டோவை எடுத்து ஒரு அடையாள சீட்டாகக் கொடுத்துவிட்டால், அதைக் கொண்டு வந்து வோட்டுப் போட வேண்டும் என்று சொல்லிவிட்டால், தேர்தல் அதிகாரிகள் வோட்டர்களை 'ஐடன்டிபிக்கேஷன்" செய்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். இதற்குக் கொஞ்சம் பணம்

9th March 1964] [திரு. ஜே. மாதா கவுடர்]

அதிகமாக செலவானாலும்கூட, சென்னை நகரத்திலாவது இதைப் பற்றிப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மொழிப்பிரச்னைப் பற்றி இங்கு பேசப்பட்டது. இதைப்பற்றி பேசும்போது, இந்தி மொழி ஆட்சிமொழியாக வந்த போதிலும்கூட, ஆங்கிலம் தொடர்ந்து இருந்து வரும் என்று இந்த மன்றத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். சென்ற கூட்டத்தில்கூட, இதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். இந்தி என்பது இந்த மாநிலத்தில் மட்டும் அல்ல, எல்லா மாநிலங்களிலும் படிக்கவேண்டும் என்ற நிலை இருந்த போதிலும், நம்முடைய அரசாங்கம் இந்தி வேண்டாம் என்று சொல்லிவிட்டால், இந்தி ஆட்சிமொழியாக இந்த நாட்டுக்கு வராது, வராது என்று எத்தனையோ முறை சொல்லியும்கூட, இந்தி புகுத்தப்படுகிறது, இந்தி புகுத்தப்படுகிறது என்று சொல்லிக்கொண்டிருந்தால் அதில் என்ன அர்த்தமிருக்கிறது என்று கேட்கிறேன். ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்று நம்முடைய அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தும்கூட, இந்தி வந்து விட்டது, இந்தி வந்து விட்டது என்று சொல்லிக்கொண்டு, தமிழ் வேண்டும், தமிழ் வேண்டும் என்றெல்லாம் கூக்குரல் போட்டுக்கொண்டிருந்தால், அதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் வேண்டும், தமிழ்க் கல்லூரி வேண்டும் என்றெல்லாம் சொல்லக்கூடிய அரசியல் தலைவர் யாராவது தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் படிக்கவிட்டிருக்கிறார்களா? காண்பியுங்கள் பார்க்கலாம். இவ்விதம் சொல்லக்கூடியவர்கள் எல்லாரும் தங்கள் குழந்தைகளை ஆங்கிலப்பள்ளிகளில்தான் படிக்க வைக்கிறார்கள். 'தமிழுக்காக நாங்கள் போராடுகிறோம், அதற்காகவே நாங்கள் பாடுபடுகிறோம்' என்று சொல்வதில் மட்டும் எந்த விதமான அர்த்தமும் இல்லை. நாம் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன், வட நாட்டில் இருக்கின்றவர்கள் எல்லாரும் இரண்டு மொழிகளைத்தான் படிக்கிறார்கள் என்று. இவர்கள் எல்லோரும் இந்தியைத் தெரிந்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. இந்தி, இந்துஸ்தானி, பெங்காளி, ஓரியா இவர்கள் எல்லோரும் இந்தி தெரிந்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. ஓரியாவைத் தெரிந்தவர்கள் இந்தியைப்படிக்கும் போது மும்மொழியாகவில்லையா? ஒரு பெங்காளியை எடுத்துக் கொண்டால், பெங்காளி, ஆங்கிலம், இந்தி இந்த மூன்று மொழிகளையும் படிக்கும்போது, மும்மொழியாகவில்லையா? வடநாட்டுக்காரர்கள் என்றால் உடனே எல்லோரும் இந்திக்காரர்கள்தான் என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். இவ்விதம் உண்மைக்குப் புறம்பாக, தமிழ்நாட்டுக்காரர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர். படிக்கின்ற மாணவர்கள் தாங்கள் மூன்று மொழிகளையும் படித்துக் கொள்கிறோம் என்று சொல்லும் போது, ஏன் அவர்கள் மூன்று மொழிகளையும் படிக்கக்கூடாது? அப்படியிருக்கும்போது இந்தியைக் கட்டாயமாகக் கொண்டு வந்து புகுத்துகிறார்கள் என்று

சொல்லிக் கொண்டிருக்க நமக்கு என்ன வேலை? படிக்கின்ற மாணவர்களிடத்தில் அரசியல்காரர்களுக்கு என்ன வேலை? நாம் தான் படிக்கின்ற மாணவர்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு, "ஒழிக என்று அட்டையை பிடித்துக் கொண்டு சட்ட மன்றத் திற்கு படிப்பை விட்டு விட்டுப் போ" என்று மாணவர்களைத் தூண்டி விடுகிறோம். நாம்தான் மாணவர்களை ஏமாற்றிக் கொண் டிருக்கிறோம். கெடுத்துக் கொண்டிருக்கிறோமே அல்லாது, அவர் கள் யாரும் வேண்டாம் என்று சொன்னதில்லை. ஆங்கிலத்தையும், இந்தியையும், தமிழையும் ஒழுங்காகப் படித்துக்கொண்டிருக்கின்ற மாணவர்களிடத்தில் அரசியல் தலைவர்கள் சென்று அவர்களை சக்தியற்றவர்களாக ஆக்கிவிடுகிறார்களே தவிர, மாணவர்கள் பேரில் எந்த விதமான தவறும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலமும் வேண்டும் என்று எதிர் தரப்பில் சொல்லப்படுகிறது. ஆங்கிலம் வேண்டுமென்று சொல்லக்
11-30 a.m. கூடியவர்கள், ஆங்கில அமைப்பிலே இந்த சர்க்காரை நடத்திக் கொண்டு போகிறீர்களே, அது மாற வேண்டாமா என்று சொல்லு கிறார்கள். மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை என்று சொல்வது மாதிரி இருக்கிறது. ஆங்கிலம் வேண்டும். ஆனால் ஆங்கில அமைப்பு வேண்டாம் என்று சொல்லுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? ஆங்கிலம் வேண்டும் அதோடு ஆங்கில அமைப்பும் வேண்டும், அல்லது ஆங்கிலம் வேண்டாம், ஆங்கிலம் அமைப்பும் வேண்டாம் என்று சொல்ல வேண்டும். ஆங்கிலமும் வேண்டும், ஆங்கில அமைப்பு மட்டும் வேண்டாம் என்று சொல்லுவது ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. இப்போது சர்விஸ் கமிஷன் தலைவரைப்பற்றி ஒரு அங்கத்தினர் சொன்னார்கள். இதற்கு முன் இதே மன்றத்தில் போலீஸ் உயர் அதிகாரி பற்றி, சென்ற மன்றத்தில் இருந்த அங்கத்தினர் சொன்னார்கள், போலீஸ் அதிகாரியின் பேரில் குற்றச்சாட்டைக் கொண்டு வந்து அதை வாங்கி விட்டார், இதை வாங்கி விட்டார் என்று சொன்னபோது அப்போது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் "விசாரணை நடத்துகிறேன், சாட்சி சொல்லுங்கள்" என்று. 'சாட்சி சொல்ல முடியுமா?' என்று கேட்கும்போது சொல்லாமல் போய் விட்டார்கள். விசாரணை வைக்கிறோம் என்று சொல்லும்போது, விசாரணையில் சாட்சி சொல்ல வருவதற்கு பயப்படும்போது, அதிகாரிகளின் பேரில் குற்றத்தைச் சாட்டுவதில் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திரு. மாதா கவுடர் அவர்கள் ஒவ்வொரு வோட்ட ருக்கும் ஐடெண்டிடி ஸ்லிப் என்ற முறையில் ஃபோட்டோ வைத்துக் கொடுத்தால் கள்ள ஓட்டு போடமாட்டார்கள், தடுக்க உதவியாக இருக்கும் என்று சொன்னார்கள். இந்த ஆலோசனைக்கு நான் இன்னொரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு வோட்டருக்கும் 21 வயது ஆனவுடன் ஸிட்டிஸென்ஷிப் ரைட் வருகிறது. அப்படி ரைட் வரும்போது ஒவ்வொருவருக்கும் ஸிட்டிஸென்ஷிப் கார்ட் கொடுக்க வேண்டிய அவசியம் உண்டு.

டெமாக்ரஸியில் அப்பேர்ப்பட்ட அமைப்பு இருந்தால் தேர்தல் சமயத்தில் வோட்டர் ஜாலிதா தயாரிப்பதை நீக்கி நல்ல முறையில் ஜாபிதா தயாரிக்கும் நிலை ஏற்படுகிறது. அதோடு ஐடெண்டிடி ஸ்லிப் வைத்து ஃபோட்டோ ஒட்டிக் கொடுப்பதை விட கம்பல்சரி இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி இருந்தால், சாதாரணமாக ஒவ்வொரு ஸிட்டிஸெனுக்கும் நாட்டுக்கு கடமை இருக்கிறது என்று தெரிய 250 ரூபாய்க்கு இன்ஷ்யூர் செய்து மாதத்திற்கு 4 அணா அல்லது 2 அணா கொடுக்கும் நிலை இருந்தால் இன்ஷ்யூ ரன்ஸ் கார்ப்பொரேஷனே போட்டோ ஒட்டி பாலிஸி கொடுக்கலாம். ஐடெண்டிடி ஸ்லிப் கொடுக்கலாம் அல்லது நம் இந்திய சர்க்காரும் நம் மாநில சர்க்காரும் ஒத்துக்கொண்டால் இந்த வகையிலும் செய்யலாம். எல்லோருக்கும் போட்டோ எடுப்பது கஷ்டமே, 10 வருஷத்தில் முகம் மாறுமே. அதனால் மோசடி வாராதா என்று கேட்டால் 10 வருஷத்திற்கு ஒரு முறை போட்டோவை மாற்றிக் கொடுக்க ஒரு வழிவகை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எலெக்ஷன் சம்பந்தமாக டிலிமிட்டேஷன் ஆஃப் கான்ஸ்ட்டிட் யூயென்ஸீஸ் திட்டம் இருக்கிறது. அதைப்பற்றி நல்ல முறையில் அதிகாரிகள் கவனித்து வருகிறார்கள் என்று நான் நம்புகிறேன். அது நல்ல முறையில் எல்லோரும் ஒத்துக்கொள்ளும் முறையில் இருப்பதைப்பற்றி கவனிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

இந்தத் தேர்தல் சமயத்தில் மட்டும் புதிதாக காண்டிடேட் வந்து நிற்கும்போது எந்தெந்த வோட்டுச்சாவடிக்கு எந்தெந்த ஊர் என்று பார்க்கும்போது தேனாம்பேட்டையில் இருக்கிறவர்கள் மவுண்ட் ரோடுக்குப் போகவேண்டும், மவுண்ட் ரோடில் இருக் கிறவர்கள் தேனாம்பேட்டைக்குப் போகவேண்டும் என்ற முறையில் வோட்டுச் சாவடிகள் அமைந்திருக்கலாம். அந்த மாதிரி நிலையை அந்தச் சமயத்தில் திருத்திவிட முடியாது. இப்பேர்ப்பட்ட தவறு இல்லாமல் அந்தந்த இடத்தில் இருக்கிறவர்கள் அந்தந்த இடத்தில் வோட்டுப் போடும் நிலை இருக்கவேண்டும். என்னுடைய தொகுதியிலேயே இந்த நிலை ஏற்பட்டது. இந்தப் பக்கத்தில் இருக்கிறவர்கள் 6 மைல் அந்தப் பக்கம் போக வேண்டும், அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் 6 மைல் இந்தப் பக்கம் போக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. இவைகளை நல்ல முறையில் சீர்படுத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று 'ரெட் ஆஃப் ஸ்டேட் டிமாண்ட்' வரும்போது இன்று தான் பேப்பரில் பார்த்தோம். இப்போது இருக்கும் கவர்னர் திரு. மேதி அவர்களுக்கு மாறுதல் ஏற்பட்டு மைசூர் மகாராஜா இங்கே கவர்னராக ஆகப் போகிறார்கள் என்று பார்த்தோம். திரு. மேதி அவர்கள் நல்ல முறையில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து, இவர்கள் 'ஹெட் ஆஃப் ஸ்டேட்', 'சீஃப் எக்ஸிக்யூட்டிவ் ஆஃப் ஸ்டேட்', 'ரெப்ரெஸெண்டேட்டிவ் ஆஃப் தி ப்ரெஸிடெண்ட் ஆஃப் இண்டியா' என்ற முறையில் எப்பேர்ப்பட்ட மகான், அவருடைய தன்மை எப்படி இருக்கிறது என்று மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளும் முறையில்

[திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்] [9th March 1964

நல்ல முறையில் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். ஆனாலும் கூட என்னுடைய தொகுதியில் யார் கவர்னர் என்று தெரியாது, யார் கலெக்டர் என்று தெரியாது, இப்பேர்ப்பட்ட நிலைமை இருப்பதால் கவர்னர் அவர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் 5 வருஷ காலத்திற்குள் போகவேண்டும் என்ற நிலைமை ஏற்படவேண்டும். பழைய காலத்தில் ராஜா முறை இருந்தது. இப்போது ஜனநாயக முறையில் அவர்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் "ஹெட் ஆஃப் ஸ்டேட்", 'சீஃப் எக்ஸிக்யூட்டிவ்' என்ற முறையில் எல்லா மக்களையும் பார்க்கும் அளவுக்கு, ஜனங்கள் மனதில் ஜனநாயகம் என்ற இம்மேஜ் ஏற்பட சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டும். நான் எந்தவிதத்திலும் குற்றச்சாட்டாக இதைச் சொல்லவில்லை. இனிமேல் வரும் அமைப்பில் அந்த முறையில் சுற்றுப்பிரயாணம் செய்ய ஜனநாயக வளர்ச்சிக்கு வழி ஏற்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹெட் ஆஃப் ஸ்டேட் டிமாண்டிலே இன்னொன்றைப்பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. எங்களுக்கெல்லாம் இப்போது தபால்கள் வந்திருக்கின்றன. என்.ஜீ.ஓ-க்கள் சர்க்கார் சலுகைகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும், சென்ட்ரல் கவர்ன்மெண்டில் இருக்கிறவர்களுக்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றனவோ அதெல்லாம் இவர்களுக்கும் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்.ஜீ.ஓ.-க்களுக்கு உதவி செய்ய வேண்டியதுதான். நல்ல நிலைமை ஏற்படும்போது உதவி செய்ய வேண்டும். ஆனால் நான் என்.ஜி.ஓ.-க்களைத் தாழ்மையாக வேண்டிக் கொள்கிறேன். இவர்கள் யாருக்காக வேலை செய்கிறார்கள்? தமிழ் நாட்டு ஏழை மக்களுக்காக வேலை செய்கிறார்கள். இரவு பகலாக வேலை செய்யக் கூடிய கூலிக்காரர்களுக்கு 20 ரூபாய் வரும்படி இல்லை. இன்று 100 ரூபாய் எல்.டி.ஸி.-க்கு வரலாம். நூறு ரூபாயை வைத்துக்கொண்டு சிட்டியில் குடும்பத்தை நடத்துவது கஷ்டமாக இருக்கலாம். கூலிக்காரனுக்கு மாதா மாதம் அந்த 20 ரூபாய்கூட கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை. இங்கே என்னவென்றால் 100 ரூபாய் நிச்சயம் என்ற நிலை இருக்கிறது. நாட்டு நிலைமை இப்படி இருக்கிறது. கொடுக்கவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. கொடுக்க வேண்டியதுதான். ஆனால் அவர்கள் துக்க தினம் கொண்டாடுவது நல்லதல்ல, அவர்களுடைய ஒழுக்கத்திற்கு நல்லதல்ல என்று சொல்லிக் கொள்ளுகிறேன். வளருகிற ஜனநாயகத்திற்கு இது உகந்தது அல்ல என்றும் சொல்லிக் கொள்கிறேன். நான் ஒன்று கூறுகிறேன். இந்த நேரத்திற்கு காண்டீனில் போனால் 50, 60 பேர்கள் இருப்பார்கள். இது உடைமா? 'ரேஷனலைஸேஷன் ஆஃப் வொர்க் அண்ட் வொர்க் ஸ்டடி' ஏதாவது இருக்கிறதா? இந்த நேரத்தில் காண்டீனில் என்ன வேலை இருக்கிறது. காரிடாரில் போய்ப் பார்த்தால் 10 க்ளார்க்குகள் நின்று கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருப்பார்கள். அதோடு ஆனந்தவிகடன் படித்துக்கொண்டிருப்பார்கள் சிலர். நான் இதையெல்லாம் வருத்தப்பட்டு சொல்லுகிறேன். ஏழை ஜனங்களுக்கு உதவி செய்கிற சர்க்காரில் இப்பேர்ப்பட்ட பொறுப்புள்ள முறையில் இருக்கிற என்.ஜி.ஓ.-க்கள் துக்க தினம் கொண்டாடுவது என்றால், லேபர் யூனியன் செய்கிற மாதிரி செய்வது என்றால் அது நல்லதல்ல. கண்டிப்பாக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். டியர்னஸ் அலவன்ஸ் மற்ற அலவன்ஸ் எல்லாம் கொடுக்க வேண்டியதுதான். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் நல்ல முறையில் டிஸிப்ளின் இல்லாது போய் விடக் கூடாது. இன்றைக்கு ஒரு என்.ஜி.ஓ.-விடம் நமது நாடு பற்றி ஏதாவது கேட்டால், 'புதிதாக ஏற்பட்டுள்ள மாநிலம் எது?' என்று கேட்டால் 'நாகாலாண்ட்' என்று தெரியாத அளவுக்குக்கூட எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கிளர்ச்சிகளில் ஈடுபடுவதற்குப் பதில் நல்ல லெக்சர்களை அவ்வப்போது ஏற்படுத்தி, பாலிடிக்ஸ் பற்றி அட்மினிஸ்ட்ரேஷன் பற்றி தெரிந்துகொள்ளவேண்டும். நாடு முன்னேற அவர்கள் தான் இன்றைக்கு 'தே ஆர் தி ஃபவுன்டேஷன்' என்ற முறையில் இருக்கிறார்கள் என்பதைத் தாழ்மையாகச் சொல்லிக் கொள்கிறேன். நான் அவர்களைப் பற்றி குறையாகச் சொல்லவில்லை. என்.ஜி.ஓ.-க்களுடைய நிலைமை அப்படி இருக்கிறது. இங்கே காஞ்சிபுரத்தில் இருக்கக் கூடிய என்.ஜி.ஓ. இருக்கிறார். சென்னையில் இருக்கிறவர்களுக்கே வீடு கிடையாது. சம்பளத்தில் 10 சதவிகிதம் வாடகை கொடுத்தால் வேண்டிய அளவுக்கு வீடு கிடைக்கும் திட்டத்தை ஏற்படுத்தவேண்டும். வேண்டுமென்றால் வீடு கிடைக்கும் அளவுக்கு வாய்ப்பு ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். என்.ஜி.ஓ. பற்றி மாத்திரம் சொல்லவில்லை. ஐ.ஏ.எஸ். ஆபீஸருக்குக் கூட வீடு கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் இஷ்டப்படி கிடைக்குமா என்று கேட்கலாம். நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. மொத்தத்தில் நிலைமை ரொம்ப கஷ்டமாக இருக்கிறது.

நம்முடைய லெஜிஸ்லேசரைப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சட்டசபை நடவடிக்கைகளெல்லாம் அன்றாடம் ரிபோர்ட் செய்து புஸ்தகமாக அச்சடிக்கிறார்கள். இங்கிலாந்து 'ஹான்ஸார்டு' ரிபோர்ட்டோடு இதை ஒப்பிட்டுப் பார்த்தால், அதனுடைய தரம் எப்படி இருக்கிறது: நம்முடைய ரிபோர்ட் எப்படி இருக்கிறது என்றால், 'ஹான்ஸார்டு' புஸ்தகத்தைப் பார்த்தாலேயே அதைப் படிக்கவேண்டும் போல் மனத்திற்கு ஒரு ஆசை ஏற்படுகிறது. It is a growing Democrary. ஹான்ஸார்டு ரிபோர்ட் அளவுக்கு அமெரிக்க காங்கிரஸனல் ரிபோர்ட் கூட வரவில்லை. அமெரிக்கா பெரிய பணக்கார நாடு. அங்குகூட காங்கிரஷனல் ரிகார்டு நல்ல முறையில் வைக்கப்படவில்லை. அதற்குக் கூட 'ஹான்ஸார்டு' அளவுக்கு 'ஸ்டாண்டர்டு' வரவில்லை. ஆனால் இங்கிலாந்து 'ஹான்ஸார்டு ரிபோர்டு' வரவில்லை. ஆனால் இங்கிலாந்து 'ஹான்ஸார்டு ரிபோர்ட்டு' மிகவும் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. அந்த அளவுக்கு தரத்தோடு நல்ல புஸ்தகமாக நம்முடைய ரிப்போர்ட்டையும் அச்சிட்டு வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அசெம்ப்ளி லைப்ராரியில் சரியான வசதிகள் இல்லை. நல்ல முறையில் காற்று வருவதில்லை. ஒரு பகுதியிலே ரீடிங் ரூம் மாதிரி வைத்திருக்கிறார்கள். அங்கு கூட நிம்மதியாக உட்கார்ந்து படிக்க முடியவில்லை. வெளியிலிருந்து கூட்டம் வருகிறது. அங்கு படிக்க முடியவில்லை. அங்கு ஒன்றிரண்டு ஆபீஸ் பிரிவுகளை மாற்றி, லைப்ராரிக்கு பக்கத்தில் எம்.எல்.ஏ.-க்கள் வசதியாகப் படிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட் கூட்டம் நடக்கிற சமயத்தில் எங்களுக்கெல்லாம் 20, 30 புஸ்தகங்கள் கொடுக்கிறார்கள் இதெல்லாம் அடுத்த வருஷத்திற்குக் கூட தேவைப்படும். இதைக் கொண்டு போய்விட்டு, மறுபடியும் வேண்டும்போது திருப்பி எடுத்துக் கொண்டு வரக்கூடிய அளவுக்கு பொருமை இல்லை. அந்த அளவுக்கு பொருமை இருக்க வேண்டியது தான். இருந்தாலும், நாங்கள் பர்மெனென்டாக 5 வருஷத்திற்குப் பதவி வகிக்கப் போகிறோம். இதை யெல்லாம் வைத்துக்கொள்வதற்கு வசதி செய்து தரப்படவேண்டும். இதெல்லாம் நல்ல முறையில் வைத்துக் கொள்வதற்கு பெர்மெனெண்டாக ஒரு ரூம் வேண்டும். புது ஹாஸ்டல் கட்டும்பொழுதாவது இத்தகைய வசதிகள் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். பாம்பிக்குளம் எங்கு இருக்கிறது என்று எனக்குத் தெரியாது.. தனிப்பட்ட முறையிலே போய்ப் பார்ப்பதற்கு வசதியில்லை என்று சொல்லுவதற்கு நான் வெட்கப்படுகிறேன். நான் உதக மண்டலத்திற்கு, கொடைக்கானலுக்கு உல்லாசப் பிரயாணம் போக வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் தமிழ் நாட்டில் என்ன நடக்கிறது என்பதை உண்மையிலேயே 'ஸ்டடி' என்ற அளவிற்கு நல்ல முறையில் தெரிந்துகொள்வதற்கு எம்.எல்.ஏ.-க்களுக்கு வசதி இல்லை. அதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது இல்லாவிட்டாலும், அடுத்த ஐந்து வருஷங்களிலாவது இதற்கான வசதிகளைச் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். 'எங்களுக்கு ரூ. 2 கூட உயர்வு கிடைப்பதற்கு வழியில்லை, நீங்கள் இந்த வசதிகளையெல்லாம் கேட்கிறீர்களே' என்றுகூட என்.ஜி.ஓ.-க்கள் கேட்கக் கூடிய நிலைமை வந்துவிடலாம். ஆனால், நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், ஒரு லெஜிஸ்லேட்டர் என்று இருந்தால், எல்லா பொது அறிவும் இருக்கவேண்டும். அதுவும் நல்ல 'எக்ஸ்பீரியன்ஸ்' இருந்தால் தான், பார்த்த அனுபவம் இருந்தால் தான், ஏதாவது சொல்ல முடியும். ஆகையினால், இம்மாதிரி வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இதையெல்லாம் சொல்லிக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கொடுத்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தகுதிமிக்க சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான மான்யக் கோரிக்கைகளின் பேரில் எங்களால் கொண்டு வரப்பட்ட வெட்டுப்

பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்களையெல்லாம் குறிப்பு எடுத்து மின்சார இலாகாவினர் அதற்குத் தகுந்த பதிலைத் தயாரித்து சென்ற ஆண்டில் இந்தச் சபை முன்பு நம்முடைய மின்சார அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதே போல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளைப் பற்றி உள்ள குறைகளை எடுத்துச்சொல்லும் பொழுது, குறிப்பு எடுத்து அவைகளைக் கவனித்து என்ன வேலை எப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது, எப்பொழுது செய்யப் படும் அல்லது கவனிக்கப்படும் என்ற குறிப்பை எங்களுக்கு அளிக்க கனம் முதல் அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று நான் விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அதற்காகச் செலவு ஆகும் என்று பார்க்காமல் அதற்கென்று ஒரு தனி இலாகாவே ஏற்படுத்தி, அந்த விவரங்களை எங்களுக்குத் தெரிவித்தால், மிகவும் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, அஷ்யூரன்ஸ் கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கமிட்டி மந்திரிமார்கள் கொடுத்த வாக்குறுதிகளைப் பற்றி கவனிக்கிறதே தவிர, அங்கத்தினர் சொல்லுகின்ற கோரிக்கைகளைப்பற்றி கவனிப்பதில்லை. அது சம்பந்தமாக கோரிக்கைக் குழு என்று ஒரு குழு அமைத்தால் கூட நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மந்திரிசபையை விஸ்தரிப்பதுபற்றி இங்கு பேசப்பட்டது. நீதிக்கு மந்திரியா அல்லது ஜாதிக்கு மந்திரியா என்ற நிலை தான் தமிழ் நாட்டில் இருக்கிறது என்று தான் மந்திரிகளைப் பார்க்கும் பொழுது நமக்குத் தெரிகிறது. எட்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் 8 பேர்களும் 8 ஜாதிக்கு பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அப்படியாவது அந்த ஜாதியாவது பயன் அடைந்து வருகிறதா என்று பார்த்தால், அது கூட இல்லை. அதிலும் திருப்தி படக்கூடிய அளவுக்கு இல்லை. மந்திரிமார்கள் ஏன் ஒரு காரியத்தைச் செய்யவில்லை என்று கேட்டால் ஒவ்வொருவருக்கும் மூன்று இலாக்காக்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். இந்த வருஷம் எந்த மந்திரிக்கு எந்த இலாகா என்று தெரியவில்லை. ஆறு மாதத்தில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் எந்த மந்திரி எந்த இலாகாவுக்கு என்று அங்கத்தினர்களுக்குப் புரிந்துகொள்ள முடியவில்லை. வேண்டுமானால், விஸ்தரிக்க வேண்டுமென்று எண்ணினால் ஒரு இலாகாவுக்கு ஒரு மந்திரி என்று விஸ்தரித்தால் எந்த மந்திரி எந்த இலாகாவுக்கு என்று குறிப்பிட்டு எங்களுக்குத் தெரிந்து கொள்ளமுடியும். மாவட்டத்திற்கு ஒரு மந்திரி என்று நியமித்தால் கூட அந்தக் குறை போகாது என்பது என்னுடைய கருத்து. மாவட்டத்திற்கு ஒரு மந்திரி என்று போட்டால் அந்த மாவட்டத்திற்கு அந்த மந்திரி ஏதாவது செய்வாரா என்று பார்த்தால் இல்லை. எங்கள் மாவட்டத்திற்கு ஒரு அமைச்சர் இருப்பதால் எங்களுக்கு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [9th March 1964

அதிகச் சலுகை கிடைக்கும் என்று நிச்சயமாக நான் எண்ணவில்லை. இதுவரைக்கும் கிடைக்கவில்லை. ஆகவே, அதுவும் அவசியமில்லை என்று கருதுகிறேன்.

அதுபோலவே, அங்கத்தினர்கள் ஹாஸ்டல் வசதிகளைப் பற்றி இங்கே பேசப்பட்டது. ஏதோ பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் தங்குகிற விடுதி மாதிரி இருக்கிறதே தவிர, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதி மாதிரி இல்லை. இதை நிச்சயம் திருத்தி அமைக்கவேண்டும். பல வெளி ராஜ்யங்களில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உள்ள விடுதிகளைப் பார்த்தால், மைசூரில் சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதியைப் பார்த்தால், அவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையில் தமிழ்நாட்டில் சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதி அவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறது. இங்கே மேலும் அதிகமான வசதிகள் செய்ய வேண்டும். இப்பொழுது ஹாஸ்டலில் இருக்கும் ஸார்ஜண்டு சபை நடக்கும்பொழுது இங்கே வந்துவிடுகிறார். அப்பொழுது சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஸார்ஜண்டு யாரும் இருப்பதில்லை. ஆகவே, இங்கு ஒரு ஸார்ஜண்ட் இருக்கட்டும். அதைத் தவிர ஹாஸ்டலிலும் ஒரு ஸார்ஜண்டு நியமித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற கடன் ஏதாவது அவர்களுக்கு அனுகூலமாக இருக்கிறதா என்று பார்த்தால் அதனால் அவர்களுக்கு தொல்லைதான் அதிகமாக இருக்கிறது. அந்தக் கடன் குறிப்பிட்ட காரியத்திற்கு பயன்படுகிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. உழவுமாடு வாங்குவதற்கு விவசாயி கடன் கேட்டால் அறுவடை காலத்தில்தான் அந்தப் பணம் அவனுக்குக் கிடைக்கிறது. அது மாத்திரமல்ல. அது எந்த அளவுக்கு கிடைக்கிறது என்று பார்த்தால், ரூ. 500 உழவு மாடு வாங்குவதற்குக் கடன் வேண்டுமென்று கேட்டால், மனுக்கொடுத்து கடைசியில் விவசாயியின் கைக்கு வந்து சேரும் பணம் ரூ 300 தான். இந்த ரூ. 300-ல் இவன் கடன் வாங்குவதற்காக அதிகாரிகளிடம் அலைந்ததற்கு செலவுக்கு வாங்கிய கடனை திருப்பி கொடுப்பதில் ரூ. 100, ரூ. 150 போய்விடும். அவனிடம் கடைசியில் பாக்கியிருப்பது ரூ. 150 தான். இந்த ரூபாய்க்கு எப்படி 2 உழவு மாடுகள் வாங்க முடியும்? ஆட்டுக் குட்டி கூட ரூ. 40, ரூ. 50 விற்கிறது. ஆகவே, கடன் வாங்கினால்கூட திருப்தியில்லாமல் இருக்கிறது, மாடு வாங்க முடியாத நிலை இருக்கிறது. அப்படியே இருந்து ஏதாவது மாடு வாங்கினாலும்கூட அந்தக் கடனை கிஸ்தியோடு சேர்த்து வசூல் செய்வதற்கு அதிகாரிகள் வந்துவிடுகிறார்கள். அறுவடை ஆவதற்கு முன்னாலேயே வசூல் செய்வதற்கு வந்துவிடுகிறார்கள். உதாரணமாக எங்கள் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், மார்ச்சு மாதத்தில் தான் அறுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்னும் கூட சில இடங்களில் பயிர் பச்சையாகத் தான் இருக்கிறது. விளைந்தாலும் விளையாவிட்டாலும், அறுவடை முடிந்தாலும், முடியாவிட்டாலும்

9th March 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

அதிகாரிகள் போய் கிஸ்தியோடு சேர்த்து வசூலிக்கிறார்கள். அவர்கள் எதையாவது எங்கேயாவது விற்று கடனைத் திருப்பித் தர வேண்டிய நிலையில் கஷ்டப்படுகிறார்கள். பொதுவாக விவசாயிகள் சர்க்காரிடம் கடன் வாங்குவதைவிட, மார்வாடியிடம்கூட கடன் வாங்கிக்கொள்ளலாம், அவரிடம் சொல்லிக்கொள்ளலாம் என்று எண்ணக்கூடிய நிலைதான் இருக்கிறது. இதனால் மிகவும் அவர்கள் வேதனை அடைகிறார்கள். கடனை வசூலிப்பதற்கு மார்ச்சு இறுதி வரையிலாவது தவணை கொடுக்கவேண்டும். அல்லது ஏப்ரல் மாதத்திலாவது வசூலித்துக்கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக ஒரு நிரந்தர உத்தரவு போடுவதுகூட உண்மையிலேயே விவசாயிகளுக்கு நலமாக இருக்கும். நெல் மாத்திரமல்ல. வேறு மிளகாய், கொத்தமல்லி போன்ற தானியமாக இருந்தாலும் அதைக்கொண்டு போய் விற்றுத்தான் பணம் கொடுத்தாக வேண்டும். கிஸ்தியோடு சேர்த்து கடனை வசூலிக்கும் முறை விவசாயிகளுக்கு நல்லது இல்லை. அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்தலைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். ஏதோ வட சென்னையில் இருப்பவர்கள் தென் சென்னைக்குப் போய் வோட்டுப் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். இங்கு மட்டும் அப்படி அல்ல நிலைமை. நகரங்களை எடுத்துக்கொண்டாலும், ஒரு வார்ட்டில் இருப்பவர்கள் அடுத்த வார்டில் போய் வோட்டுப் போடுகிறார்கள். ஆனால், பஞ்சாயத்து போர்டு தேர்தலில் அம்மாதிரி செய்ய முடியாது. ஏனென்றால், ஊரில் உள்ளவர்களை எல்லோருக்கும் தெரியும். நகரங்களில் அப்படி நிலைமை இல்லை. சென்னையில் மாத்திரம் அல்ல, மற்ற நகரங்களிலும் அது மாதிரி வோட்டு போட்டிருக்கிறார்கள். அப்படிப் போட்டுத்தான் காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் பிரசாரத்தைப்பற்றி சொன்னார்கள். ஒரு பெண் அங்கத்தினர் ரொம்ப உருக்கமாகச் சொன்னார்கள். நாங்களும் அக்காள் தங்கச்சியுடன் தான் பிறந்திருக்கிறோம். அவர்களும் அக்காள் தங்கச்சியுடன், அண்ணன் தம்பியுடன்தான் பிறந்திருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும். பெண்மைக்கு ஒரு இலக்கணமே இருக்கிறது. அவர்களும் தமிழ் படித்தவர்கள்தான். பெண்மைக்கு, அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு என்றெல்லாம் இருக்கிறது. முற்காலத்தில் ஏன் அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. அது, அந்தக் காலத்தில் இருந்தவர்களுக்காகவோ, என்னமோ தெரியாது. சில பெண்கள் மேடையில் ஏறிப் பேசும்பொழுது "ஆம்பிள்ளை கிடக்கிறான், தள்ளு" என்ற முறையில் பேசுகிறார்கள். தமிழ் நாட்டில் மேடை மீது ஏறிப் பெண்கள் பேசினால், ஒரு சாரார் பெண்கள் "இப்படிப் பேச வந்துவிட்டார்கள்" என்று பெருமைப்படுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் சிலர் "என்னடா, பெண்கள் வந்து இப்படி எல்லாம் பேசுகிறார்களே" என்று நினைக்கிறார்கள். பெண்கள் பேசும்

பொழுது, அடக்க உணர்ச்சியோடு பேசவேண்டும். சென்னையில் பார்த்தேன். ஒரு பத்திரிகையிலே ஒரு பெண்ணுடைய படத்தைப் போட்டு, பக்கத்திலே அவருடைய கணவன், குழந்தையின் படத்தைப் போட்டு, 'இவளைக் கடத்திச் சென்றவனுக்கா வோட்டு' என்று கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் அக்கா, தங்கச்சி கிடையாதா? அவர்களுக்கு ஒரு விதி, எங்களுக்கு ஒரு விதியா? யார் தப்புப் பேச்சுப் பேசினாலும் அதைக் கண்காணிப்பதற்கு அதிகாரம் வேண்டும். இதற்கு ஒரு பொதுக்குழு அமைக்கலாம். நாங்கள் பேசும்பொழுது சுருக்கெழுத்தாளர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் பேசும்பொழுது அனுப்புவதில்லை. நகரசபைத் தேர்தல்கள் நகரசபைத் தேர்தல்கள் மாதிரியா நடந்தது? காங்கிரஸ் கட்சியினரின், ஆளுங்கட்சியின் தயவு தங்களுக்கு இருக்கிறது என்று, எதை வேண்டுமானாலும் பேசலாம் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற திமிரில் எப்படி எப்படியெல்லாமோ நடந்து கொண்டார்கள். அதிகாரத் திமிர்தான் அதற்குக் காரணம்? வேறு என்ன? சென்னை நகரத்திலுள்ள மக்களைக் கேட்டால் தெரியும். தேர்தலில் ஈடுபடுகிறவர்கள் எல்லோருக்கும் பொதுவாக நடந்து கொள்ள வேண்டும். யார் தப்பாகப் பேசினாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். எங்களை மட்டும் பேசக்கூடாது என்று ஊருக்கு உபதேசம் செய்வது போல் செய்துவிட்டு, அவர்கள் வேறு விதமாக நடந்து கொண்டால் எப்படி? எல்லோருக்கும் ஒரு முறை என்று இருக்கவேண்டும். தேர்தல் நேரங்களில் அமைச்சர்கள் வரக்கூடாது என்று சொன்னதைக் கேலி செய்தார்கள். நகரசபை, பஞ்சாயத்து போர்டுகள் தேர்தல்களுக்கு மந்திரிகள் வரக் கூடாது. நாங்கள் எம்.எல்.ஏ.-க்கள் இருக்கிறோம். நாங்கள் மந்திரிகளை எவ்வளவோ மதிப்பாக நினைத்துக்கொண்டிருக்கிற நேரத்தில், நகரசபைத் தேர்தலுக்காக 4 தரம் ஒரு வீடு ஏறி இறங்கினால், அங்கேயுள்ள மக்கள் அமைச்சர்களை பற்றி என்ன நினைப்பார்கள்? இது எவ்வளவு கேவலமாக இருக்கிறது? கண்ணியத்திற்காகவாவது, அமைச்சர்கள் நகரசபைத் தேர்தல்கள், பஞ்சாயத்து போர்டு தேர்தல்கள் கூட்டுறவு சங்கத் தேர்தல்கள், இவற்றிற்கு வரக்கூடாது. எந்தத் தேர்தல் வந்தாலும், மந்திரி வந்துதான் ஆகவேண்டும் என்ற நியதி இருக்கிறதா? மந்திரி வராமல் எந்தத் தேர்தலும் நடக்கக்கூடாது என்ற முறை இருக்கிறதா? சட்ட சபைத் தேர்தல்களிலே அவர்களும் நிற்கிறார்கள். வந்துவிட்டுப் போகட்டும். ஆனால் நகர சபை, ஊராட்சி மன்றத் தேர்தல்களுக்கு அவர்கள் வருவது சரியல்ல. அது அவசியமில்லாததும் கூட. அவர்கள் வருகிறார்கள் என்றால், என்னவெல்லாம் பேசுகிறார்கள்? எங்கள் மாதிரி உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேசினால் பரவாயில்லை. "எங்களிடம் சம்பளம் வாங்கிவிட்டு, போலீஸ்காரர்களும், என்.ஜி.ஓ.-க்களும் அவர்களுக்கு வோட் போடுகிறார்கள்" என்று பேசுகிறார்கள். மந்திரிகள் வீட்டுப் பணமாக இருந்தால், அதைப் பற்றிக் கவலை

இல்லை. அது சர்க்காருடைய பணம். சர்க்கார் வேறு, கட்சி வேறு. ஒரு அமைச்சர் பேசினதை நானே கேட்டேன். "எங்களிடத்தில் சம்பளம் வாங்கிவிட்டு, அவர்களுக்கு வோட்டுப் போடுகிறார்களே, நான் பார்க்கிறேன்" என்றார். யார் சம்பளம் கொடுக்கிறார்கள்? ஒரு கணவன் சொன்னானாம், பக்கத்து வீட்டுக்காரனிடம் "ஒரு விஷயம் தெரியுமா? நான் என் மனைவிக்குப் பூ வாங்கிக் கொடுத்தேன்" என்றானாம். மறுபடியும் அடுத்த வீட்டுக்குப்போய் "என் மனைவிக்குப் பூ வாங்கிக் கொடுத்தேன்" என்றானாம்.. அவன் உடனே, "உன் பெண்டாட்டிக்கு நீ பூ வாங்கிக் கொடுக்காமல், ஊர்க்காரனா வாங்கிக்கொடுப்பான்?" என்று கேட்டானாம் அந்த முறையில் சர்க்கார் செய்வதை எல்லாம், கட்சி தான் செய்தது என்று சொல்லுகிறார்கள். இந்தத் தேர்தலிலே எவ்வளவு மிரட்டல், என்னென்ன நடைபெற்றிருக்கிறது? அதற்காகத்தான் ஆறு மாதங்களுக்கு முன்பு ராஜினாமா செய்யலாம் என்று சொன்னோம். மந்திரியாக இல்லாமல் இருந்தால் ஒன்றும் செய்ய முடியாது. மந்திரிகள் இவ்வாறு நடந்துகொள்வது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. ஆறு மாதங்களுக்கு முன்னர் மந்திரிகள் ராஜினாமா செய்தால் இந்த அதிகார வெறி தாண்டவமாடாது. மந்திரிகள் ரதகஜ துரகபாதாதிகளுடன் வரவில்லை என்றால், மக்கள் ஓடி ஒளிவார்களா? அதைத் தவிர்ப்பதற்குத்தான் 6 மாதத்திற்கு முன்பு மந்திரிகள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, வேறு பயந்து ஒன்றுமில்லை. இவ்வளவு மந்திரிகள் வந்தும் நாங்கள் ஜயித்து காட்டியிருக்கிறோமே. ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால், ஆறு மாதங்களுக்கு முன்பு ராஜினாமா செய்வது தான் பொருத்தமாக இருக்கும்.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ்காரர்களை சில எம்.எல்.ஏ.-க்கள் போய் மிரட்டுகிறார்கள் என்று சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். உண்மையில் எங்களைப் பொறுத்தவரையில், அப்படி இல்லை. நாங்கள் போனால், எங்கள் முன்பு கூட அவர்கள் நிற்பதில்லை. "இப்பொழுதுதான் அடுத்த ஊரிலிருந்து வந்தேன். அந்த ஊரிலே உங்களிடம் பேசினோம் என்பதற்காக, என்னைத் தூக்கிவிட்டார்கள்" என்று சொல்லுகிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் எதைக் குறிப்பிடுகிறார்கள்? ஏதாவது பேசுவது என்றால்; நான் மன்றத்திலே தான் பேசுவது. வெளியிலே ஒன்றும் பேசுவதில்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: மன்றத்திலே பேசினதுதான். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வேண்டுமானால் இப்படி மிரட்டியிருக்கலாம். எங்களைப் பொறுத்த வரையில், அதற்கு ஒரு கட்டுப்பாடு வேண்டுமானால் வைக்கட்டும். எங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்கு என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்: "எந்த அதிகாரிகளையும் நீங்கள் தனியாகப் போய் பார்க்காதீர்கள். உங்களால் அதிகாரிகளுக்கு தொல்லை

ஏற்படக் கூடாது. அமைச்சர்களைப் பார்க்கும்பொழுதுகூட, சேர்ந்து போங்கள். தனியாகப் போனால் நீங்கள் ஏதேதோ சொன்னதாகச் சொல்லுவார்கள்" என்று சொல்லியிருக்கிறார். நாங்கள் எந்த அதிகாரியையும் மிரட்டுவதில்லை. அவர்கள் எங்களுக்குப் பயப்படுவதும் இல்லை. அதிகாரிகளை மிரட்டும் வழக்கம் எங்களிடம் கிடையாது. வேண்டுமானால், இவற்றையெல்லாம் கண்காணிக்க ஒரு குழு போடுங்கள். "நான் முதன் மந்திரியிடம் சொல்லி அதை செய்துவிடுவேன், இதைச் செய்துவிடுவேன்" என்று எத்தனை முறையிலே, எத்தனை வகையிலே யார் யாரோ இன்று மிரட்டுகிறார்களே? இதற்காக ஒரு குழுப் போட்டு வேண்டியதை செய்யலாம். யார் வாங்கினாலும் லஞ்சம் லஞ்சம் தான். ஆனால், ஆளுங்கட்சி என்ற போர்வையில் எத்தனை இடங்களில் இன்று மிரட்டுகிறார்கள்? சமீபத்தில் நடந்த நகர சபைத் தேர்தலில், சைதாப்பேட்டையில் ஓட்டுகளை எண்ணினார்கள். நானும் அங்கே போயிருந்தேன். முதலிலே, ஒரு காங்கிரஸ் காரருக்கு வெற்றி என்று சொன்னார்கள். உடனே உள்ளே போய் அவரை தூக்கிக் கொண்டே வந்துவிட்டார்கள். போலீசார் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அடுத்து இன்னொரு தொகுதியில் தி.மு.க. உறுப்பினர் வெற்றி என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த உறுப்பினரைத் தூக்கிக்கொண்டு வந்தவர்களையும், அங்கு உட்கார்ந்திருந்த கௌண்டிங் ஏஜெண்டுகளையும் போலீசார் அடித்தார்கள். அப்போது அங்கே வந்திருந்த கவுன்சிலர் திரு. அண்ணாமலை என்பவர் ஏன் அவர்களை அடிக்கிறீர்கள் என்று போலீஸ்சாரைக் கேட்டார். அதனால் அவரை போலீசார் தாக்கினார்கள். அவருக்கும் கை காலில் எல்லாம் காயம் ஏற்பட்டது. ஆஸ்பத்திரிக்கு போய் வந்து ரிபோர்ட் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் பொய்யா கலகம் பண்ணினாய் என்று சொல்லி, உன் பேரில் ஜோடித்து கேஸ் போட்டு விடுவார்கள். அதனால் ஒன்றும் பயனில்லை" என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தேன். அங்கே உள்ள இரண்டு கட்சிகளின் ஏஜெண்டுகளும் அடிபட்டு இருக்கிறார்கள். அந்த சமயத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த இருவர்களின் கைக்கடிகாரங்கள் காணாமல் போய்விட்டன. அதைப்பற்றி, ஒரு கௌண்டிங் ஏஜெண்ட் என்னிடம் சொன்னார். நான் உடனே டெபுடி கமிஷனரிடம் சென்று "கைக்கடிகாரம் காணாமற் போய்விட்டது. சப்-இன்ஸ்பெக்டரித்தில் இருப்பதாக சொல்லுகிறார்கள். அதை வாங்கிக்கொடுக்கவேண்டும்." என்று கேட்டுக் கொண்டேன். அவர் உடனே சப்-இன்ஸ்பெக்டரிடம் போனார். ஆனால் அந்த சப்-இன்ஸ்பெக்டர், அது வேறு கடிகாரம் என்று சொன்னார். இன்னும் கடிகாரம் வந்து சேரவில்லை.

அடுத்தபடியாக, திரு. கோவிந்தசாமி என்கிற வேட்பாளர் காரிலே வரும்பொழுது அவர் காரை மறித்து அவரை அடித்திருக்கிறார்கள். அவர் உடனே எங்கள் கட்சி துணைத் தலைவரிடம் வந்து 'தொகுதிக்குப் போனால் கொலை நடக்கும் போலிருக்கிறது, எனக்கு பாதுகாப்பு செய்து தரவேண்டும்' என்று அவரிடம்

கேட்டார். நான் அந்த சமயத்தில் அங்கிருந்தேன். நான் "அப்படி தைரியம் இல்லாத நீ ஜெயித்து என்ன பண்ணப் போகிறாய்?" என்று கேட்டேன். ஆனால் அவர் தொகுதிக்குப் போகாமலேயே அவர் ஜெயித்திருக்கிறார். ஆகவே அதிகாரிகளை நாங்கள் மிரட்டினோம் என்பது சரியல்ல. பஞ்சாயத்துத் தேர்தலிலே தலைவர்களைப் பொது மக்களே நேரிடையாகத்தான் தேர்ந்து எடுக்கவேண்டும். நான் பஞ்சாயத்து போர்டு தலைவராக இருந்த போது ஒரு அறிக்கை வந்தது. அதில் இது பற்றிக் கேட்கப்பட்டிருந்தது. மெஜாரிடி பஞ்சாயத்துக்கள் நேரிடையாகப் பொது மக்களே தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்றுதான் கருத்து தெரிவித்திருந்தார்கள். ஆனால் பரீட்சார்த்தமாகப் பார்க்கலாம் என்று அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கும் முறை கையாளப்பட்டது. ஒரு யூனியன் சேர்மென் தேர்வு என்றால் அவருடைய உயிருக்கே ஆபத்தாக இருக்கிறது. என்ன என்னவெல்லாமோ நடந்து, அவர் பல நாட்கள் ஊரிலேயே இல்லாமல் இருந்து தேர்தல் சமயத்தில் தேர்தல் நடக்கும் இடத்திற்கு நேராக வரும் நிலைமைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமைகள் நிலவுகின்றன. சிலர் சொல்கிறார்கள், ஒரே சமயத்தில் பொது மக்கள் 3 ஓட்டுப்போடும் நிலைமை இருந்தால் அது அவர்களுக்குப் புரியாது என்றும் அதனால் தவறுகள் ஏற்படும் என்றும் சொல்கிறார்கள். நமது மக்கள் அப்படி ஒன்றும் தெரியாதவர்கள் அல்ல. அவர்களுக்குக் கையில் 3 ஓட்டுகள் கொடுத்தால் அவற்றை எப்படி உபயோகிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டால் ஒரே சமயத்தில் அங்கத்தினர்கள் தலைவர் யாவரையும் தேர்ந்து எடுக்க முடியும்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தைப்பற்றி சொல்லும்போது அது பிசுபிசுத்துவிட்டது என்றார்கள். எங்கோ கையை வைத்துப் பார்த்துவிட்டு, பிசுபிசு என்கிறது என்கிறார்களோ, எனக்கே புரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினால் தான் புவனேசுவரத்தில் திரு. காமராஜ் அவர்கள் தமிழிலேயே பேசியதைக் கேட்டார்கள். குடியரசின் தலைவர் இந்தியிலே பேசக்கூடியவர் அல்ல என்பதற்காக வெளியேற்றினார்கள். எனவே எங்கள் போராட்டம் வெற்றி பெற்றிருக்கிறது.

கனம் உதவி சபாநாயகர்: குடியரசு தலைவரை வெளியேற்றினார்கள் என்று சொல்வது முறையல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: காலம் இல்லாததால் இத்துடன் என் உரையை முடிக்கிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் பிரேரேபித்துள்ள மானியங்களை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய எதிர்க் கட்சி அங்கத்தினர் உண்மையை எந்த அளவுக்குத் திரித்துக் கூற முடியுமோ அந்த அளவுக்குத் திரித்துக் கூறினார்கள். அரசாங்கத்தில் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு

இருக்கிற அளவுக்கு ஆளும் கட்சிக்காரர்களுக்கு சலுகைகள் இருப்பதில்லை. தேர்தலைப்பற்றி சொன்னார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் எந்த அளவுக்கு எதிர்க் கட்சிக்காரர்களால் அல்லல் படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்று பெரிய பட்டியலை எடுத்துச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். ஆனால் அதற்கு நேரம் தான் இல்லை. ஆங்காங்கே போலீஸ்காரர்கள் அமைதியை நிலைநிறுத்த சில நடவடிக்கைகள் எடுத்திருக்கலாம். தேர்தல் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஊழியர்கள் எதிர்க்கட்சிக்காரர்களை அடிப்பதிலும், உதைப்பதிலும் எவ்வளவு தூரம் ஈடுபட்டு இருந்தார்கள் என்பதற்கு ஒரு பெரிய பட்டியலையே காங்கிரஸ்காரர்கள் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். தேர்தலுக்குப்பிறகு இவர்கள் செய்யும் பலாத்கார செயல்கள் மறைந்துவிடும் என்று அவர்கள் நினைப்பது மாபெரும் தவறு என்று தான் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் மாட்டை அடித்தது பற்றி ஹிந்து பேப்பரில் வந்திருந்தது. இன்றைக்கு இவர்கள் கேட்கிறார்கள், ரூபாய் 17-க்கு கிடைக்குமா? ரூபாய் 700-க்கு கிடைக்குமா என்று. ரூபாய் 17-க்கு கறவைப் பசு கிடைக்கிறது என்று சொல்லும் அளவுக்கு எங்களுக்கு அறிவு மங்கிவிட வில்லை. ரூபாய் 17-க்கு என்ன கிடைக்குமோ அதை வாங்கி இருக்கிறார்கள். அது பற்றி ஒரு உயர்ந்த செய்தித் தாளிலே வந்திருந்தது. தேர்தல் காலத்திலே எவ்வளவோ தவறான காரியங்கள் நடந்தன. என்னுடைய தொகுதியில், 21-வது வட்டாரத்தில் மொத்த ஓட்டுகள் 6,700 என்று முடிவாகி இருக்கிறது. ஆனால் 6,250 தான் என்று கணக்கு இருக்கிறது. அது பற்றி ஏழு நாட்களுக்குள் தாக்கீது செய்ய வேண்டும், அப்படிச் செய்ய முடியாமல் போய்விட்டது. அதைப் பற்றிக் குறிப்பிடும் போது ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஓட்டுகள் எண்ணப்படும் இடத்தில் 9 மேசைகளில் உட்கார்ந்து எண்ணுகிறார்கள். அதற்கு உள்ளே காண்டிடேட்டும், இரண்டு ஏஜென்டுகளும் தான் அனுமதிக்கப்படுகிறார்கள். இவர்கள் எப்படி ஒன்பது மேசைகளையும் கண்காணிக்க முடியும்? எண்ணும் அதிகாரிகளில் பலர் ஆளும் கட்சியைவிட எதிர்க்கட்சியிடம் தான் அதிக அனுதாபம் உள்ளவர்களாக இருந்தார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டோம். ஒன்பது மேசைகளில் வேக வேகமாக ஓட்டுக்களை எடுத்துப் போடும் போது யார் ஓட்டுக்களை யாருக்குப் போட்டார்கள் என்றே பார்க்க முடியாது. அவசர அவசரமாக தேர்தல் முடிவுகளை வெளியிட வேண்டும் என்று செய்ததால் இம்மாதிரியான தவறுகள் ஏற்படக் காரணமாக இருந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. என் தொகுதியிலும், அப்படியே இன்னும் பல இடங்களிலும், இடைவிடாமல் நடந்த கௌண்டிங் காரணமாக இரவு 2 மணி 3 மணி வரை எண்ணிக் கொண்டே இருந்தார்கள். அரைத் தூக்கத்தில் என்னென்ன தவறுகள் செய்தார்களோ? எல்லாம் ஒரே நாளில் ரிஸல்டுகளை வெளியிட வேண்டும் என்பதற்காகச் செய்தால் ஏற்பட்டவை. என் வட்டாரத்தில் 25-வது வட்டாரத்தில் நள்ளிரவு முதல் 3½ மணி வரை எண்ணிக் கொண்டிருந்தார்கள். அதன் பிறகுதான் விவரம் தெரிந்தது. இப்படியெல்லாம் கோளாறாக இருப்பதால் விஞ்ஞான முறையிலே செய்ய முடியுமோ என்று

அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அமெரிக்காவிலே இயந்திரத்தின் உதவியைக் கொண்டு ஓட்டுகளை அப்படியே போடும்பொழுதே காட்டுவதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. ஆகவே ஏதாவது சீர்திருத்தம் செய்து அந்த முறையிலே ஓட்டுகள் எண்ணுவதை சுலபமாக்க வேண்டும். தவறுகள் ஏற்படாமலும், தடுக்க வேண்டும். அதே போல திருட்டு ஓட்டுப்போடும் ஓட்டர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் சட்டம் சரியாக அமல் படுத்தப்படுவது இல்லை. போலிங் ஆபீஸரிடம் சொன்னால் அவர் அதைப்பற்றி என்னால் கவனிக்க முடியாது. ஆட்சேபனை இருந்தால்தான் நான் ஏதாவது சொல்ல முடியும் என்று சொல்லிவிடுகிறார். ஆகையினால் திருட்டு ஓட்டுகள் அனுமதிக்கப்பட்டுவிடுகின்றன. போலீஸ் அதிகாரியிடம் சொன்னால் அவர் போலிங் ஆபீஸர் கம்பிளெயிண்ட் கொடுத்தால்தான் நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொல்கிறார். ஆகவே சட்டம் இருந்தும் பயன் இல்லாமல் இருக்கிறதே என்றுதான் வருந்த வேண்டியிருக்கிறது. சட்டம் போடுவது மாத்திரம் பெரிது அல்ல. அதை நல்ல முறையில் அமுல்படுத்தினால்தான் அதனால் உண்டாகும் நன்மையை மக்கள் அடைய முடியும். அப்படி அமுல் நடத்துவதில் கோளாறுகள் இருக்கின்றன என்ற காரணத்தினால் பல கள்ள ஓட்டுகள் தேர்தலில் பதிவாகிவிட்டு இருக்கின்றன என்று வெட்கத்தோடு சொல்லிக் கொள்ளுகிறேன். இதன் காரணங்களை ஆராய்ந்து பார்த்து ஆவன செய்ய வேண்டும். போலிங் ஆபீசர்களுக்கும் இதில் ஒரு பொறுப்பு இருக்கிறது. அந்த பொறுப்பை அவர்கள் தட்டிக்கழிப்பதாக இருந்தால் அப்படிப்பட்டவர்களை இனிமேல் போலிங் டியூட்டிக்கு போட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இதே தலைப்பிலே மாதர் நல முன்னேற்றம் கூட வருகிறது. அதிலே பல குறைகள் இருக்கின்றன. மாதர் நல முன்னேற்றம் சமூக சேவையின் அடிப்படையில் ஏற்பட்டது அதற்காகத் தனியாக ஒரு இலாகாவும் ஏற்படுத்தியிருக்கிறோம். சமூக சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இதிலே வேலை செய்பவர்கள் நூற்றுக்கு நூறு ஒரு பொழுதுபோக்காக பணி புரிய வருகிறார்கள். அப்படி வருகிறவர்களைக் கொண்டு, இந்தப் பணியைச் செய்து வருகிறோம். இவர்களைக் கண்காணிக்கப் போகும் அதிகாரிகள் நல்ல முறையிலே தங்கள் பணியைச் செய்வதில்லை. இவர்கள் இல்லாத சமயத்தில் அதிகாரிகள் போய் அவர்கள் இல்லை, இவர்கள் இல்லை என்ற குற்றம் சொல்லுகிறார்கள். அவர்கள் இல்லாத நேரத்தில் போய்விட்டு அதிகாரிகள் இப்படிச் சொல்லுவது சரிஅல்ல. நான் போன சமயம் செக்ரட்டரி இல்லை, தலைவர் இல்லை என்று திரும்பி வருகிறார்கள். சமூக சேவைக்கு வருகிறவர்கள் தங்களுடைய சொந்த நலனைக் கருதாமல் பொது நலனுக்காக வந்திருக்கும் சமயத்தில் அவர்களுடன் ஒத்துழைப்புக் கொடுத்து, அவர்களுக்கு கைடன்ஸ் கொடுத்து, அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் முறையில் இலாகா மாற்றப்பட வேண்டும். இன்றைக்கு இவர்கள் குறைகளை எடுத்துக்காட்டி, திரட்டி, உருட்டி, மிரட்டி வருவதைத்தான் செய்கிறார்களே அல்லாமல்.

[திருமதி டி. என். அனந்தநாயகி] [9th March 1964

ஒழுங்காக கவனிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. அதை எங்களைப் போன்ற அங்கத்தினர்கள் எடுத்துக் கூறினால், அங்கே இருக்கும் இலாகா அதிகாரிகள் அங்கத்தினர்களிடம் சண்டை போடுவதில் முன் நிற்கிறார்களே தவிர, தங்கள் இலாகாவிலே இருக்கும் ஊழல்களைத் தீர்ப்பதிலே கவனம் செலுத்துவதே இல்லை. இதைக் குறித்து என்னுடைய சொந்த அனுபவத்திலே கண்ட சில குறைகளை எழுதியனுப்பியும் அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், சமூக சேவையில் பல பேர் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அரசாங்கமும் இந்தப் பொறுப்பைப் பொது மக்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறது. மாதர் நல முன்னேற்றம், குழந்தைகள் நலம் ஆகியவைகளில் முன்னேற்றம் காணவேண்டுமென்று அரசாங்கமும் ஆசைப்பட்டு, அவற்றுக்காகப் பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி வைத்திருக்கும் போது, அந்த இலாகா ஊழியர்கள் கொஞ்சம்கூட ஒத்துழைக்காமல், சேவை செய்கின்றவர்களுடைய மனம் புண்படக்கூடிய அளவு நடந்து வருகிறார்கள். இந்த நிலை நீடித்தால் பல சங்கங்கள் மூடப்பட்டுவிடும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். நாம் 600 ரூபாய், 800 ரூபாய், ஆயிரம் ரூபாய் தான் ஒவ்வொரு சங்கத்திற்கும் கிராண்ட் கொடுக்கிறோம். ஆனால், ஒவ்வொரு சங்கத்திற்கும் குறைந்தது இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. மாதர் சங்கத் தலைவியும், காரியதரிசியும் வீடு வீடாகச் சென்று, பிச்சை எடுப்பது மாதிரி வசூல் செய்தும், இன்னும் பல என்டெர்டெயின்மென்ட் போட்டு, அதன் மூலம் பணம் வசூல் செய்தும் அந்தச் சங்கங்களை நடத்துகிறார்கள். அவர்களுக்கு இலாகாவினர் பக்கபலமாக இருந்து, பாராட்டு தெரிவித்து, ஊக்குவித்து, நல்ல பல பணிகளுக்கு ஒத்தாசை செய்தால் இன்னும் சிறப்பான காரியங்கள் நடக்கக்கூடும். அப்படி இல்லாமல், சமூக நல சங்க வேலைகளில் ஈடுபட்டிருக்கிற நல்ல குடும்பப் பெண்களுக்குக்கூட மதிப்பு கொடுக்காமல் இருக்கிறார்கள் என்றால், அந்த இலாக்காவுக்குச் செலவழிக்கப்படும் பணம் பாழாக்கப்படுகிறது என்பதை பயத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால்தான் இதில் இவ்வளவு ஆணித்தரமாக நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அந்த இலாக்காவைச் சற்று முடுக்கிவிட்டு, இந்தப் பணியிலே ஆசை உள்ளவர்களை அதிலே ஈடுபடுத்த வேண்டும். இலாகாவில் உள்ளவர்களுக்கு ஆசையும் அக்கறையும் இருந்தால்தான், அதிலே ஈடுபடுகிற உத்தியோகச் சார்பற்றவர்களுக்கும் அக்கறை ஏற்படும். இந்த வேலையை விஸ்தரிக்கவேண்டும், இன்னும் அதிகமாக முன்னேற்றம் காணவேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இன்றைக்கு இருப்பதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே மிக மிக வேதனையாக இருக்கிறது. அதைக் கனம் அமைச்சர் அவர்கள் சற்றுக் கவனித்து, அதிலே இன்னும் அக்கறை காட்டினால்தான் பல சங்கங்கள் மூடப்படுமோ என்ற நிலையிலிருந்து காப்பாற்ற முடியும். சென்னை நகரத்தில் பார்த்தால் எத்தனையோ சங்கங்கள் மூடப்பட்டுவிட்டன. கணக்கெடுத்துப் பார்த்தால், எந்த அளவுக்கு விஸ்தரிப்பு குறைந்திருக்கிறது

9th March 1964] *[திருமதி டி. என் அனந்தநாயகி]*

என்று தெரியவரும். இதற்காக ஒதுக்கப்படும் பணம் சரியான முறையில் ஒழுங்காக செலவழிக்கப்படுகிறதா என்று கண்காணிக்க அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கின்றேன்.

* **திரு. சி. வே. வேலப்பன் :** கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையின் மீது ஒரு சில வார்த்தைகளைக் கூற நான் முன் வருகின்றேன். நேரம் இல்லாதிருந்தும், எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நிர்வாகத்தில் ஏற்படும் ஊழல்களைக் கனம் உறுப்பினர்கள் எடுத்துக் கூறி, அவற்றைக் களைவதற்கான கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தும், அவற்றை எந்த அளவுக்கு அமைச்சர்கள் கூர்ந்து கவனித்துப் பதில் அளிக்கிறார்கள் என்று பார்க்கும்போது, பதில் அளிக்கும்போது திருப்திகரமான பதில்கள் வருவதில்லை. அதோடு உறுப்பினர்கள் பேசுவதற்குக் கிடைக்கும் வாய்ப்பும் மிக மிகக் குறைவு. அப்படிப்பட்ட நேரங்களில் உறுப்பினர்கள் பேசும் கருத்துக்களுக்கு அமைச்சர்கள் எழுத்து மூலமாகவாவது பதில் கொடுக்கவேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஒருசில முக்கியமான குறைபாடுகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்ற மூன்றாந் தேதி நமது பொதுப்பணித் துறை அமைச்சரிடத்தில் மிக முக்கியம் வாய்ந்த ஒரு பிரச்னையைக் குறித்து மனு ஒன்றை நான் கொடுத்திருக்கிறேன். அதாவது, சென்ற பிப்ரவரி 8-ந் தேதியில் ஒரு கூட்டம் கூடியது. இன்ஜினியர்கள், விவசாயிகள் அடங்கிய அந்தக் கூட்டத்தில் நானும் கலந்துகொண்டேன். அந்தக் கூட்டத்தில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அந்தப் பகுதியில் இருக்கும் ராஜா குமார பாளையம் வாய்க்காலில் ஆண்டுதோறும் தண்ணீர் நிறுத்தப்பட்டு, வாய்க்கால் சுத்தப்படுத்தப்படுவது வழக்கம். அப்படி மார்ச் 1-ந் தேதி தண்ணீர் நிறுத்தி, 15-ந் தேதிக்குள் வாய்க்கால் சுத்தப்படுத்தி முடித்துவிட வேண்டுமென்று முடிவு செய்து, அது தண்டோரா மூலம் அறிவிக்கப்பட்டது. அதன்படி, அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள், அதற்கேற்ற முறையில் விவசாயத்திற்கு ஆயத்தம் ஆனார்கள். ஆனால், திடீரென்று 27-ந் தேதி போட்ட உத்திரவில் அந்த வாய்க்காலில் மார்ச்சு 1-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை தண்ணீர் நிறுத்தப்பட்டு பிறகு எட்டு நாள் தண்ணீர் விட்டு, மீண்டும் 15 நாட்களுக்குத் தண்ணீர் நிறுத்தப்படவேண்டும் என்று உத்தரவு வந்திருக்கிறது. அந்த உத்தரவு அந்தப் பகுதி மக்களை மிகவும் பாதிக்கிறது. அந்த உத்தரவுக்கும் அந்த வாய்க்காலுக்கும் சம்பந்தம் இல்லவே இல்லை. வேறொரு வாய்க்காலை மராமத்து செய்வதற்காக, ராஜா குமார பாளையம் வாய்க்காலுக்கு அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளை அணுகிக் கேட்கின்றபோது, இதிலே வடிகால் தண்ணீர் அதற்கு வரக்கூடும் என்ற ஐயப்பாட்டை எழுப்புகிறார்கள். அந்த ஐயப்பாட்டை நீக்குவதற்கு, அப்படி வரும் வடிநீர் இருந்தால் அதை வேறு வழியிலே திருப்ப வாய்ப்பு

இருக்கிறது. ஆகவே, இது பற்றி அமைச்சர் அவர்கள் முழு கவனம் செலுத்தி, இன்னும் நான்கைந்து நாட்களுக்குள் அந்தப் பகுதியில் அப்படிப்பட்ட உத்தரவை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பும் கோரிக்கைகளுக்கும், விண்ணப்பங்களுக்கும் உடனுக்குடன் பதில் வருவதில்லை. நான் கொடுத்திருக்கும் விண்ணப்பங்களுக்கு ஒரு பெரிய ஃபைலிலே வைத்திருக்கிறேன். அத்தனை விண்ணப்பங்களில் கண்ட பிரச்சினைகளைக் குறித்து, யார் யாரை அணுகவேண்டுமோ அத்தனை பேர்களையும் நான் அணுகியிருக்கிறேன். நிர்வாகத்தில் இருக்கின்றவர்களுக்கு விளக்கங்கள் கொடுத்திருக்கிறேன். அமைச்சர்களுக்கும், கலெக்டருக்கும், இன்னபிற அதிகாரிகளுக்கும் நான் விளக்கம் தந்திருக்கிறேன். பொதுத் தேர்தல்கள் நடந்து இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. நான் சட்ட மன்ற அங்கத்தினராக வந்து முதன் முதலில் அமைச்சரிடம் கொடுத்த பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. சட்ட மன்ற அங்கத்தினராக வந்து முதன் முதலில் கொடுத்த பிரச்சினையிலேயே இப்படித் தாமதம் ஏற்படுவதோடு, என்ன நிலையில் அந்த விண்ணப்பம் இருக்கிறது என்றுகூடப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு நிர்வாகம் இருக்கிறது. இந்த நிலையை மாற்றியமைக்க ஆவன செய்யவேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் விண்ணப்பங்கள் மீது இன்ன இன்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது, எந்த எந்தப் பிரச்சினை எந்த நிலையில் உள்ளது என்பதைக் குறித்து மாதத்திற்கு ஒரு முறை, அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது, உறுப்பினர்களுக்கு எழுத்து மூலமாகப் பதில் அளிக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டும். அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யாவிட்டால், உறுப்பினர்கள் தொகுதியிலுள்ள பிரச்சினைகளை எடுத்துப் பரிகாரம் காணுவது கஷ்டமாக இருக்கும்.

அதோடு, அமைச்சர்கள் சுற்றுப்பயணம் வரும்போது, தொகுதி வாரியாகச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். அப்படித் தொகுதிவாரியாக வர முடியவில்லையென்றால், ஜில்லா வாரியாக வருகிறபோது, அந்தந்தப் பகுதியிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களையும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும், மற்ற பிரதிநிதிகளையும் கூட்டி, அந்தப் பகுதியிலுள்ள பிரச்னைகளை அணுகவேண்டும், அதற்குப் பரிகாரம் காண ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பு அளித்த தங்களுக்கு ஏன் நன்றியை மீண்டும் தெரிவித்து உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் "சட்டப் பேரவை, தேர்தல்கள் மாநிலத் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமைச் செயலகம்" ஆகியவை பற்றிய மானியக் கோரிக்கைகள் இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணைகளையொட்டிச் சில கருத்துக்களை இம் மன்றத்தின் முன் வைக்க நான் விரும்புகிறேன்.

சட்டப் பேரவையைப் பற்றி இம் மன்றத்திலுள்ள கனம் உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். கேள்வி கொடுக்கப்பட்டு அதற்கு விடை பெறுகின்ற முறையிலே இருக்கின்ற குறைபாடுகளைப் போக்கவேண்டும் என்ற கருத்தினையும் மன்ற உறுப்பினர்களில் பலர் தெரிவித்து இருக்கிறார்கள். பல கேள்விகளைச் சட்ட மன்ற உறுப்பினர்கள் அனுப்பி வைத்தும், காலா காலத்திலே அவற்றுக்கு விடை பெற முடியாத நிலைமை நீடித்து வருகின்ற தன்மையை மன்ற உறுப்பினர்கள் சிலர் சுட்டிக் காட்டினார்கள். இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் உடனுக்குடன் தக்க விடைகள் வராமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று சட்ட அவைத் துறைச் செயலாளர் அவர்களைக் கேட்டால், "நாங்கள் உடனுக்குடன் அந்தந்த இலாக்காக்களுக்குக் கேள்விகளை அனுப்பி வைத்திருக்கிறோம், அங்கிருந்து வருகின்ற பதில்கள் கால தாமதம் ஆகி வருகின்ற காரணத்தால்தான் சட்ட மன்றத்திலே காலம் கழித்து வைக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது" என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அமைச்சர்களைக் கேட்டாலும், "எங்களுக்குப் பதில்கள் வந்தவுடனேயே நாங்கள் கையெழுத்து இட்டு அனுப்பி விடுகிறோம்" என்று அவர்களும் பதில் தருகிறார்கள். ஆக இப்படி முக்கியமான கேள்விகளைப் போடும்போது அவற்றுக்குப் பதில் காலம் தாழ்த்தி அனுப்பப்படுகிறது என்ற குறைபாட்டைப் பார்க்கிறோம். இப்படி வினாக்களுக்கு காலம் தாழ்த்தி விடை தருவதனால் அந்தக் கேள்வி எந்த நோக்கத்திற்காகப் போடப்பட்டதோ அந்த நோக்கமே நிறைவேறாது போய் விடுகிறது. இப்படிக் கேள்வி போட்டதன் நோக்கம் நிறைவேற முடியாதபடி காலம் தாழ்த்தி விடைகளை அனுப்புவதில் பயன் இல்லை. போடப்படுகிற கேள்விக்கு உடனுக்குடன் முக்கியத்துவம் தந்து விடை அனுப்பவேண்டும் என்ற முறையை நிர்வாகத் துறையில் ஏற்படுத்த வேண்டும். சட்டசபை இலாகாவில் இருந்து வருகிற கேள்விகளுக்கு இத்தனை நாட்களுக்குள்ளாகப் பதில் அனுப்பிவிட வேண்டும் என்று கட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அதைக் கண்டிப்பாக நிர்வாகத் துறையினர் பின்பற்றும்படி நமது முதல் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்து இந்த சட்ட மன்றக் கட்டிடத்தைப் பொறுத்த வரை பல உறுப்பினர்கள் பரிந்துரைகள் சொன்னார்கள். 1967-இல் இருந்து உறுப்பினர்களின் எண்ணிக்கை 234 ஆக உயர இருக்கிறது. அப்படி எண்ணிக்கை அதிகப்படுவதனாலே இந்த மன்ற இடம் போதுமானதாக இருக்குமா? இதையே இன்னும் கொஞ்சம் நெருக்கி இடம் அமைப்பார்களா, அல்லது வேறு ஒரு கட்டிடத்தைக் கட்ட இருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். இங்கே அங்கத்தினர்களுக்குப் போதுமான வசதி கிடையாது. மன்ற உறுப்பினர்கள் ஓய்வு பெறுவதற்கான வசதி குறைவு. இப்போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மன்றத்தை ஒட்டிக் கிழக்குப்பக்கத்தில் இருக்கும் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் மேற்குப் புறம் உள்ள தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். ஒருவரோடொருவர் கலந்து பேசிப் பழகி கட்சிமாச்

சர்யங்களையும், கோபதாபங்களையும் ஆற்றிக் கொள்ள இங்கே வசதி கிடையாது. அந்த தாழ்வாரத்திலும்கூட பக்கத்தில் உட்கார பெஞ்சி போல போடப்பட்டிருக்கிறதே தவிர எதிர் எதிராக உட்கார்ந்து பேசுவதற்குக்கூட வசதி கிடையாது. மன்ற உறுப்பினர்கள் தனியாக இருந்து கலந்து உறவாட இடவசதிகள் அமையவில்லை. மற்றும் மன்ற உறுப்பினர்கள் தனியாக இருந்து உணவு அருந்துவதற்கும் இப்போது வசதிகள் இல்லை. இரண்டு பேராக உணவு அருந்தச் சென்றால் இடவசதி இன்றி வந்தவரை உள்ளே சாப்பிடச் சொல்லிவிட்டு இடத்திற்காக இவர் வெளியே வந்து காத்திருக்கும்படியாக நெருக்கடி இருக்கிறது. இடம் போதுமானதாக அமையவில்லை. இதைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளைக் காணவேண்டுமென்றும் பலர் சொல்லியிருக்கிறார்கள். மாலை இரண்டு, இரண்டரை மணிக்கு மேலாக உணவு இல்லாமலேயே கூடச் சிலர் தவிக்க வேண்டியதாக சில நாட்கள் நேரிட்டுவிடுகிறது.

மேலும் அங்கத்தினர்கள் தங்கியிருக்கிற விடுதியில் உள்ள வசதிக் குறைவுகளைப் பற்றியும் பலர் சொன்னார்கள். காலாகாலத்திற்கு உறுப்பினர்கள் இங்கு வரமுடியாது இருப்பதற்கான காரணங்களில் ஒன்று அவர்கள் தங்கியிருக்கும் விடுதியில் உள்ள வசதிக் குறைவுதான். எட்டரை மணிக்கு சட்டமன்றம் துவங்குகிறது என்றால் அவர்கள் எட்டேகால் மணிக்காவது விடுதியில் இருந்து புறப்பட்டாக வேண்டும். எட்டேகால் மணிக்கு விடுதியில் இருந்து புறப்பட வேண்டுமானால் 7½ மணி முதலே அதற்கு ஆயத்தம் செய்யவேண்டும். குறிப்பிட்ட அந்தக் குறுகிய காலத்திற்குள் காலைக் கடன்களை எல்லாம் முடித்துக்கொள்வது என்றால் அதற்கு விடுதியில் போதுமான வசதி இல்லை. அதன் காரணத்தினாலே இங்கே எட்டரை மணி அளவில்கூட வந்து சேர முடியவில்லை என்பதாகச் சொல்லப்படுகிறது. ஆக விடுதியில் உள்ள வசதிக் குறைவுகளைப் போக்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் இந்தச் சட்டமன்றத்திற்கு வேறு ஒரு கட்டடம் கட்டுவது என்றால் பல விஷயங்களை ஆராய்ந்து அறிந்து நம்முடைய தேவைக்கும், வசதிக்கும் ஏற்றவாறு அமைக்க முயற்சி செய்யவேண்டும். ஏற்கனவே ஆறு லட்சம் ரூபாய் செலவில் மவுண்ட் ரோடு கவர்மெண்ட் எஸ்டேட்டில் சட்டமன்றக் கட்டடம் கட்டப்பட்டது. இப்போது அது சிறுவர் அரங்கமாக மாற்றப்பட்டுள்ளது. புதிதாகக் கட்டப்படுகிற கட்டடங்கள் அதை ஒட்டியே கட்டப்பட இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறோம். இப்போதுள்ள விடுதியில் இருந்து உறுப்பினர்கள் காலாகாலத்திற்கு இங்கு வர முடியாது இருக்கிறது. ஆக விடுதியை ஒட்டி புது சட்டமன்றக் கட்டடம் அமைய இருக்கிறதா? இவற்றை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து புதிதாக நாம் அமைக்கிற ஒன்று நிரந்தரமான வசதிகளைப் பெறக்கூடியதாக—ஒரு நிரந்தர ஏற்பாடாக—இருக்கும்படி திட்டமிட்டு அமைக்க வேண்டியதாக இருக்கிறது. அதிலும் முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழிலேயே நடத்த வேண்டும் என்பதை வற்புறுத்த ஒரு வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட மன்ற நடவடிக்கைகளைக் கூடிய வரையில் தமிழிலேயே நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். தமிழிலேயே பல்வேறு அறிக்கைகள் தயாரித்து அச்சிட்டுக் கொடுக்கப்படுகின்றன. நிதி நிலை அறிக்கையும் கூடத் தமிழிலேயே கொடுத்திருக்கிறார்கள். கேள்விகளுக்குரிய வினாக்களுக்குங்கூடத் தமிழிலேயே விடை தயாரித்து அளிக்க முயற்சியையும் இந்த அரசினர் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சி ஆண்டுதோறும் வளர்கிற முறையில் தீவிர திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். நமது அவைத் தலைவர் அளிக்கிற அறிக்கைகள் எல்லாம்கூடத் தமிழில் தயாரிக்கப்படவேண்டும். எல்லாவற்றையும் உடனுக்குடன் என்றுகூட நான் சொல்லவில்லை—கூடுமானவற்றை—சிலவற்றையாவது தமிழில் வழங்கும் முயற்சியை உடனடியாக எடுத்துக் கொள்ளலாம். சாதாரணமாக வாக்கெடுப்பு எடுக்கும் போதுகூட "எய்ஸ், நோஸ்" என்று வைத்துக் கொண்டிருப்பதை "ஆம், இல்லை" என்ற முறையில் மாற்றலாம்—தமிழில் சட்ட மன்ற நடவடிக்கைகளை நடத்துவதற்கான முயற்சிகளைத் தடையின்றி படிப்படியாக நிறைவேற்றவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து இங்கே கவர்னர் உரையின் மீது விவாதம் செய்த போதும் சரி நிதி நிலை அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது சரி பல்வேறு விஷயங்களைப் பற்றி—செய்துள்ள காரியங்களில் உள்ள குறைபாடுகளைப் பற்றியும், செய்யப்பட வேண்டிய காரியங்கள் செய்யப்படாமல் இருக்கும் குறைபாடுகளைப் பற்றியும் பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்த விவாதத்தின்போது பலபல விஷயங்கள் வருகின்றன. நடந்த காரியம், நடக்க வேண்டிய காரியம் எல்லாவற்றையும் பற்றிக் குறிப்பிடுகிற போது அவற்றின்மீது அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறது என்பது கனம் உறுப்பினர்களுக்கு இப்போது தெரிவதில்லை. அவை எல்லாவற்றுக்கும் அந்த நேரத்திலேயே அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டும் என்று உறுப்பினர்கள் எதிர்பார்ப்பது சரியல்ல. அப்படி அமைச்சர்கள் சொல்வது என்றாலும் அது சாத்தியமாகாது. அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள், அதற்கு என்ன பதில் சொல்ல வேண்டுமென்று முன்கூட்டியே ஆயத்தமாக போதுமான விவரங்களைச் சேகரித்துக்கொண்டு அமைச்சர்களால் வரமுடியாது. அதை மன்ற உறுப்பினர்களும் உணருகிறார்கள். ஆனாலும் அவர்கள் குறிப்பிட்ட கோரிக்கைகள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன, அவர்களுடைய வேண்டுகோள்கள் எவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டன, அல்லது நிராகரிக்கப்பட்டன என்ற தகவல்களை மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கிற வசதியையாவது அரசினர் மேற்கொள்ள வேண்டும். இப்போது மின்சாரத் துறையைப் பொறுத்த வரையிலும் இந்த மன்றத்திலே அவர்கள் வைக்கிற அறிக்கையின் மீது அங்கத்தினர்கள் விவாதம் செய்கிறபோது, அங்கத்தினர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் ஒவ்வொன்றையும் தொகுத்து, அவை ஒவ்

வொன்றின் மீதும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதான விவரங்களை அச்சிட்டுக் கொடுக்கிறார்கள். அதனால் அங்கத்தினர்களுக்கு தாங்கள் சொன்ன குறைபாடுகள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டன, தாங்கள் சொன்ன கருத்துக்கள் எவை எவை சாத்தியமில்லாதனவாக இருக்கின்றன என்கிற விஷயங்கள் தெரியும். அதனால் சொன்ன கருத்தைச் சொல்லாமல் மேற்கொண்டு ஆகக்கூடிய காரியங்களில் கவனம் செலுத்த வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று ஒவ்வொரு துறையிலும் அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். பொது விவாதத்தின்போதும், தனித்தனியாக மானியங்கள் விவாதிக்கப்படுகிறபோதும் அங்கத்தினர்கள் சொல்லுகிற விவரங்களைக் குறிப்பேடுகளில் இருந்து எடுத்து அவற்றின் மீது அரசினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை எடுத்து மன்ற உறுப்பினர்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்தலைப் பற்றிப் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும்—ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் அத்தனை பேர்களும் தேர்தல் முறையை அணுகுகின்றனர். அப்படி அணுகுகின்றபோது தேர்தல் அமைதியாகவும், ஒழுங்காகவும் நடைபெறவேண்டுமென்பதில் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. ஆளும் கட்சியினர். ஒழுங்குமீறி நடந்துகொண்டார்கள் என்று எதிர்க் கட்சியினரும், எதிர்க்கட்சியினர் ஒழுங்குமீறி நடந்துகொண்டார்கள் என்று ஆளும் கட்சியினரும், மாறி மாறிச் சொல்லிக் கொள்வதால் பயன் இல்லை. தேர்தல் அமைதியாகவும், ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும் நடைபெறச் செய்வது ஜனநாயகத்தின் அடிப்படைக் குறிக்கோள் வெற்றி பெற உதவும், இவ்விஷயத்தில் எதிர்க்கட்சிகளைவிட ஆளும் கட்சியினருக்கு அதிகப் பொறுப்பு இருக்கிறது.

12-30 p.m. எந்த முறையில் இப்படிப்பட்ட குறைகள், குற்றங்கள் நிகழா வண்ணம் தடுப்பது, அமைதியாகத் தேர்தல் நடைபெறுவதற்கு என்ன நடவடிக்கைகளை எடுத்தால் நல்லது என்பதைக் கண்டறிவதற்காக, சகல கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு கூட்டத்தை முதலமைச்சர் அவர்கள் கூட்டி, அதிலே எடுக்கின்ற முடிவின்படி எல்லாக் கட்சியினரும், போட்டி இடுகிறவர்களும் நடந்து கொண்டால் அமைதியைக் காப்பாற்றவும், ஜனநாயகப் பண்பை வளர்க்கவும், கருத்து வேறுபாடு இருந்தாலும் ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்ளக்கூடிய மரியாதை அடிப்படையில் நல்லதொரு நாகரிகம் கொண்ட அரசியல் இங்கு வளரவும் உறுதுணையாக இருக்கும். அப்படிப்பட்ட குறைகள் இருக்கத்தான் செய்யும் என்று அரசினர் நடவடிக்கைகள் ஏதும் எடுக்காமல் விட்டுக்கொண்டே போனால் வருங்காலத்தில் தேர்தல் என்றால் மிகப் பயங்கரமான நிலைமைகள் உருவாகிவிடும். பிரஞ்சுப் பகுதிகளில் எத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டனவோ அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டுவிடும். ஆகவே, இந்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை, முயற்சிகளைக் கனம் முதலமைச்சர் அவர்கள் எடுத்துத் தேர்தலில் வருங்காலத்தில் நல்ல சூழ்நிலைகளை உருவாக்க முயலவேண்டும்.

அமைச்சர்கள் தேர்தல் பணியிலே பங்கு கொள்ளக்கூடாது; அவர்கள் பங்கு கொள்வதன் மூலமாகத் தீங்குகள் ஏற்படுகின்றன என்ற கருத்து எடுத்துத் தெரிவிக்கப்பட்டது. பாராளுமன்ற அரசியலில் அமைச்சர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பதால் அவர்களுடைய கட்சிக் கொள்கையின் அடிப்படையில் அரசாங்கத்தை நடத்திச் செல்வது தவறு அல்ல. ஆனால் தேர்தல் பணியிலே அமைச்சர்கள் ஈடுபடக் கூடாது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் தேர்தல் பணியிலே ஈடுபடலாம்; ஆனால் அமைச்சர் ஈடுபடக்கூடாது. அமைச்சர்களுக்கு மற்ற யாருக்கும் இல்லாத அதிகாரம் இருக்கிறது. அவர்கள் எதைச் சொன்னாலும் அதிகாரத்தோடு சொல்கிறார்கள். அவர்கள் அதிகாரம் படைத்திருக்கின்ற காரணத்தால் அவர்கள் தேர்தல் காலங்களில் வாக்குறுதிகள் வழங்கும் நிலைமை உண்டாகிறது. அதோடு அமைச்சர்கள் செல்லும் போது அவர்களோடு அதிகாரிகளும் உடன் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். எந்தக் குறைபாட்டை மக்கள் எடுத்துச் சொன்னாலும் அந்தச் சமயத்தில் அதற்கான வாக்குறுதியை அளிக்கும் அதிகாரம் அமைச்சர்களிடத்தில் இருப்பதால் அது ஆளும் கட்சிக்குச் சாதகமாகவும், எதிர்க் கட்சியினருக்குப் பாதகமாகவும் அமைந்து விடுகிறதோ என்ற ஐயப்பாடு எதிர்க்கட்சியினருக்கு உண்டாகிறது. எனவே, அமைச்சர்களாக இருக்கிறவர்கள் தேர்தல் காலங்களில் நேரடி நடவடிக்கையில் இறங்காமல் தவிர்த்துக் கொள்வதன் மூலம் நல்லதொரு ஜனநாயகத்தை உருவாக்க வேண்டும். அமைச்சர்கள் பொதுத் தேர்தலுக்கு ஆறு மாத காலத்துக்கு முன்னரே ராஜினாமா செய்யவேண்டுமென்ற கருத்தே இந்தக் காரணத்தை ஒட்டித்தான். நகரசபைத் தேர்தல்கள், பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடக்கும் போதெல்லாம் அமைச்சர்கள் ஆறு மாத காலத்திற்கு முன்னாலேயே ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. பொதுத் தேர்தலுக்கு ஆறு மாத காலத்திற்கு முன்னால் அமைச்சர்கள் ராஜினாமா செய்ய வேண்டும். நம்முடைய மாநிலம் பல்வேறு வகைகளில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுபோல, இந்த வகையிலும் எடுத்துக்காட்டாக விளங்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில்தான் இதனை எடுத்துக் கூறுகிறோம்.

இன்னொன்று; சின்னம் வழங்குவது பற்றிச் சிலபல தகராறுகள் ஏற்பட்டன. தேர்தலுக்கு நிற்பவர்கள் இன்ன நாளுக்குள் விண்ணப்பம் செய்யவேண்டும்; இன்ன நாளன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இன்ன நாளுக்குள் பின் வாங்கிக் கொள்பவர்கள் பின்வாங்கிக் கொள்ளவேண்டும் என்பதற்கான நாட்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு முடிவாகத் தேர்தலுக்கு நிற்பவர்கள் இன்னின்னார் என்று முடிவு செய்யப்படுகிறது. இப்போது இருக்கும் நிலைமையில் தேர்தலுக்கு நிற்க விண்ணப்பம் செய்ய இன்ன நாள் 5 மணிக்குள் விண்ணப்பம் செய்ய வேண்டுமென்று இருந்தால், அன்றையதினம் மூன்று மணிக்குள்ளாகவே நிற்கின்ற வேட்பாளர்கள் தங்களுக்கு இன்ன சின்னம் ஒதுக்க வேண்டுமென்று மனுச் செய்ய வேண்டுமென்று விதி இருப்பதாக தெரிய வருகிறது. ஐந்து மணி வரை விண்ணப்பங்கள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th March 1964

கொடுக்கலாம் என்று இருக்கிறபோது, மூன்று மணிக்குள்ளாகவே சின்னங்கள் கோர வேண்டுமென்று கூறுவது அவ்வளவு பொருத்தமாக அமையவில்லை. கடைசி நேரத்தில்கூட ஒரு வேட்பாளரை மாற்றக் கூடிய சூழ்நிலை ஏற்படும். இந்த ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டபோது, அதைப் பற்றி நாங்கள் தெளிவாக அதிகாரியிடம் எடுத்துச் சொன்னதன் பேரில் அவர் விதியைத் தளர்த்திச் சின்னங்களை ஒதுக்கினார். ஆகவே, இந்த விதியை மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதோடுகூட விண்ணப்பங்கள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டுப் பின் வாங்கிக் கொள்ளக்கூடிய நாள் கடந்து, இறுதியாக இன்னின்னார் நிற்கிறார்கள் என்று தெரிந்த பிறகு, யார் யாருக்கு என்ன சின்னம் வேண்டும், கட்சிகளாக இருந்தால் என்ன சின்னம், சுயேச்சைகளாக இருந்தால் என்ன சின்னம் வேண்டுமென்று அறிந்து சின்னங்கள் வழங்கினால் அதிகச் சங்கடங்கள் வராமல் இருக்க வசதி ஏற்படுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சிமன்றத் தேர்தலும், ஊராட்சிமன்ற ஒன்றியப்புத் தேர்தலும் நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறினார்கள். அவை எப்போது நடைபெறும் என்பதைப் பற்றியும் முதற்படியாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து அறிய விரும்புகிறேன். ஏற்கனவே ஏற்பட்ட பல்வேறு சங்கடங்கள், மாச்சரியங்களால் பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றவர்கள் தேர்ந்தெடுக்கும்போது ஏற்படுகின்ற பகைமை உணர்ச்சியின் காரணமாக ஊராட்சி மன்றத்தின் நல்ல பணிகள் பாழாகும் அளவு பகைமை உணர்ச்சி காலம் முழுவதும் நீடித்துக் கொண்டே போகிற காரணத்தால், இரு பெரும் கட்சிகளாகப் பிரிந்து கட்சி மாச்சரியங்களோடு போட்டி போடுகிற காரணத்தால் ஒன்றியப் பகுதிகளுக்கு நன்மைகள் ஏற்படுவதற்குப் பதிலாகத் தொல்லைகள் ஏற்பட்டு வருகின்றன என்பதை எல்லோரும் நன்கு உணருவார்கள். இதை பலரும் நன்கு உணருகிறார்கள். இதைத்தான் ஆளும் கட்சியினரும் சொல்கிறார்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சொல்கிறார்கள். பஞ்சாயத்து தலைவர்களின் மாநாட்டில் கூட இதில் கவனம் செலுத்தி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். பஞ்சாயத்து தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து ஊராட்சி மன்ற ஒன்றியப்புத் தலைவரை தேர்ந்தெடுப்பதா? அல்லது ஊராட்சி மன்ற ஒன்றியப் பகுதியில் உள்ள வாக்காள மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதா? என்ற பிரச்னை பரிசீலனையில் இருப்பதாகத் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் கூறியதாக செய்தித்தாளில் செய்தி வந்தது. அது எந்தளவு உண்மை என்று எனக்குத் தெரியாது. அது பரிசீலனையில் இருந்து, மீண்டும் பரிசீலிக்கப்படும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், நேரடியாகத் தேர்ந்தெடுக்கிற முறையைக் கையாள்வதால் வருகிற ஊராட்சிமன்ற ஒன்றிப்பு உறுப்பினர்கள் இரண்டு பகுதிகளாகப் பிரிந்து போகாதபடி இருப்பார்கள். சண்டைச் சச்சரவுகளைத் தடுக்க நேரடியாக தேர்ந்தெடுக்கும் முறை தான் பயன்படும். அப்படி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பதவியில் இருந்து இறங்கவில்லை என்றால் நம்பிக்கையில்

9th March 1964] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

லாத் தீர்மானம் கொண்டு வர வழியில்லையே என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. அந்நிலையைத் தவிர்க்க வழிவகைகளைக் காண வேண்டும். அதற்கான நிபுணர்கள் அதை ஆராய்ந்து அக்குறைபாடுகளை நீக்கவேண்டும். இப்பிரச்னையைத் தீர்க்க என்ன வழி வகை இருக்கிறது என்று கண்டறிந்து இந்த பிரச்னைக்கு முடிவு காணவேண்டுமென்று அமைச்சரவையை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

தொகுதி நிர்ணய குழு 1967-ம் ஆண்டில் எப்படி எப்படி தொகுதிகள் அமைய வேண்டும், எந்தெந்த வகையில் அமைய வேண்டும், என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அவையெல்லாம் இப்போது திருத்தியமைக்கவேண்டிய நிலையில் இருக்கின்றன. இப்போதுள்ள 206 தொகுதிகளும் 234 தொகுதிகளாக மாற்றப்பட இருக்கின்றன. தொகுதி நிர்ணயக் குழுவினர் கொடுக்கக் கூடிய அறிக்கைகள் எல்லாம் நம் சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு தெரியக் கூடிய அளவில் வைக்கப்படவேண்டும். இறுதி முடிவு எடுப்பதற்குமுன் கூடுமான வரையில் இம்மன்ற அங்கத்தினர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை அமைச்சரவை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மன்றத்தில் அவற்றை வைத்து வாதிடுவதற்கான நிலையை உருவாக்கவேண்டும். தொகுதிகள் பிரிக்கப்படுவது குறித்து இறுதிமுடிவு எடுப்பதற்கு முன்பு, மற்றவர்களுடையவும் இம்மன்ற அங்கத்தினர்களுடையவுமான யோசனையை அறிவது நல்லது. அனுபவத்தின் மூலம் எடுத்துச் சொல்லவும், சூழ்நிலை மூலம் ஏற்படுகிற யோசனைகளை எடுத்துச் சொல்லவும் தக்க வாய்ப்பு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட வேண்டும், முடிந்தால் கூடுமான வரையில் இங்கு விவாதித்து முடிவு எடுப்பதே நல்லது. இந்த மன்றத்தின் முடிவாகப் பட்டியல் செல்ல வேண்டும், அங்கத்தினர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் சொல்கிற, சூழ்நிலையையொட்டி சொல்கிற கருத்துக்களையும் யொட்டி தொகுதிகள் அமைய வேண்டும். நல்லதொரு சூழ்நிலையை உருவாக்குகிற முயற்சியை அமைச்சரவை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாநில ஆளுநர் பற்றிய கருத்துக்கள் அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்து வைக்கப்படுகின்றன. ஆளுநர் இருக்க வேண்டிய அவசியம் பற்றி முதல் அமைச்சர் அவர்களும் அடிக்கடி பதிலுரையில் எடுத்துக் கூறி வருகிறார்கள் இவ்வளவு பெரும் செலவில் அத்தகைய ஒரு பதவி இருந்துதான் தீரவேண்டுமா? என்பதை மீண்டும் ஆலோசனை செய்து மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துகிற வகையில் காரணங்களை நேரம் வரும்போது எடுத்துச் சொல்லவேண்டுமென்ற கருத்தை எதிர்க்கட்சியினர் சார்பாக நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அதிகாரிகளை அடிக்கடி மாற்றக் கூடாது என்ற கருத்தும் இங்கே வழங்கப்பட்டது. ஒவ்வொரு இலாகாவின் செயலாளராக அமைந்திருப்பவர்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காவது அந்தந்த இடத்தில் இருக்கவேண்டும். அந்தந்த துறையை பற்றிய பிரச்னைகளை ஆராய்ந்து, சிந்தித்து, இருக்கிற நிலைமை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th March 1964

யைக் கண்டறிந்து, மாநிலம் முழுவதிலும் உள்ள எல்லாக் கருத்துக்களையும் அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எதை எதை எப்படி எப்படிச் செய்வது என்று அவர்கள் நிதானித்து வருகிற நிலையில் அவர்களை மாற்றக் கூடாது. சீர்திருத்தம் செய்வது அல்லது இருக்கிற நிலைமையை யொட்டி மாற்றங்கள் செய்து நல்ல நிலைக்குக் குறிப்பிட்டதுறைகளைக் கொண்டு வரவேண்டியது அவசியமாகிறது. இவற்றை நிறைவேற்ற அதிகாரிகள் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாவது அதேயிடத்தில் இருப்பது நல்லது என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவர் ஒரு இலாகாவிற்கு செயலாளராக வந்து நிலைமையை புரிந்து கொள்ள ஆறு மாதங்கள் எடுத்துக் கொள்கிறார்கள். புரிந்து கொண்டேன் என்ற நிலையில் அவர்கள் வேறு இலாகாவிற்கு மாற்றப்பட்டு விடுகிறார்கள். மாவட்டத்தில் இருப்பவர்களை அல்லது வேறு பல துறைகளில் இருப்பவர்களை மாற்றினாலும், மாநிலம் முழுவதையும் நிர்வகிக்கிற அளவில் அந்தந்த துறைகளைப் பற்றிய கருத்துக்களை அறிந்து எதை எதை எப்படி எப்படி செய்வது என்று கண்டு ஆராயும் நிலையில் உள்ளவர்களை குறைந்தது மூன்று ஆண்டுகளாவது அந்தயிடத்திலேயே வைத்திருப்பதற்குள்ள நிலையை உருவாக்கவேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்து, அரசிதழ் பதிவுபெறாத ஊழியர்களின் கிராக்கிப்படி, நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி முதலியவை பற்றி ஆளும் கட்சியினரும், எதிர்கட்சி அங்கத்தினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துவைத்தார்கள். முதல் அமைச்சர் அவர்களும் பதில் உரைத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த பதிலில் இருந்து ஏதாவது நிவாரணம் அளிக்கும் நிலைமை ஏற்படும் என்று எதிர்பார்த்தேன். அத்தகைய அளவிற்கு உறுதிமொழி எதுவும் இல்லை. ஆனால் கனம் முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடமிருந்து இது சம்பந்தமாக மானியம் தரவேண்டும், நீங்கள் எடுத்த முயற்சியின் விளைவாக இங்கு பெரும் செலவு ஏற்பட வழி ஏற்படுகிறது, ஆகவே மத்திய அரசு அதிகப்படி மான்யம் தந்தால் இந்நிலையை ஈடுகட்ட முயற்சி எடுக்கிறேன் என்று தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் மான்யம் பெற முயற்சி எடுத்து இந்தக் குறைபாட்டை போக்குவதன் மூலம் நல்ல முறையில் செம்மையாக நிர்வாகம் நடைபெறவும், மனத் தளர்ச்சி இல்லாத அளவிற்கு, ஆயாசம் இல்லாத அளவிற்கு நிர்வாகம் நடைபெறவும் உறுதுணை புரிகிற அளவிற்கு அவர்களது கோரிக்கைகளை நிதானமாகக் கவனித்து நல்லதொரு முடிவை எடுக்கவேண்டுகின்று நான் அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

மொழிப் பிரச்னைப் பற்றியும் இங்கு பேசப் பட்டது. ஆட்சி மொழிப் பிரச்னை கொள்கை பற்றிய பிரச்னையாக இருக்கிறது. அது விவாதத்திற்குரிய பிரச்னையாக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இதுபற்றி நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும், பல்வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். ஆட்சிமொழி பொறுத்த

9th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வரை, ஆளும் கட்சியின் போக்கில் 1935-36-ல் இருந்து சூழ்நிலைக்கேற்ப அடிக்கடி மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆட்சி மொழி எதுவாக இருக்கவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது அந்தக் கருத்து வேறுபாட்டினை எடுத்துக் கூறி வலியுறுத்தி அந்தக் கருத்துக்களுக்கு ஆதரவு தேடுவதில் ஜனநாயக நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் அத்தனையும் பாடுபட்டு வருகின்றன. அந்த முறையில்தான் இங்கும் கருத்துக்கள் வைக்கப்படுகின்றன. அந்த முறையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்து வைக்கிறார்கள். இந்தி என்பது ஒரு குறிப்பிட்ட வட்டார மொழி. அது வளம் இல்லாத மொழி. அது வளர்ச்சி அடையாத மொழி. அறிவியலுக்கு ஒவ்வாத மொழி. அகில உலகத் தொடர்புக்கு தகுதி இல்லாத ஒரு மொழி. மாநிலத்திற்கும் மாநிலத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு வைத்துக் கொள்ள தகுதி இல்லாத ஒரு மொழி ஆக குறைபாடுகள் பல உள்ளன இதில். நமக்கு ஒரு மொழி தேவை நம் மானத்தைக் காப்பாற்ற, நாம் அன்பு செலுத்த நமக்கு தேசீயப் பற்றை ஊட்ட, நமக்கு நாட்டுப் பற்றை ஊட்ட ஒரு மொழி வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. மொழிகளும், கிளைமொழிகளும் சேர்ந்து 723 மொழிகள் இந்திய துணைக் கண்டம் முழுவதும் பரவியிருக்கின்றன. அவற்றில் முக்கியமான மொழிகள் 179, அவற்றில் அரசினர் தேர்ந்தெடுத்திருப்பது 14 மொழிகள் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. அவரவர்களுக்கு பற்று தரவும், பாசம் தரவும் ஒரு மொழி வேண்டாமா? ஆகவேதான் அந்தந்த வட்டார மொழியை அந்தந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தந்த வட்டார மொழியே அந்தந்த மாநிலத்தின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அந்த வட்டார மொழியே அந்தந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாகவும், பாட மொழியாகவும், கல்லூரிகளிலும் பாட மொழியாகவும் அமைய வேண்டும் என்ற கருத்து பலயிடங்களில் சொல்லப்படுகிறது. ஆனால் அகில இந்திய ஆட்சி மொழியாக எந்த மொழி இருப்பது என்பதில்தான் கருத்து வேறுபாடு இருக்கிறது. நமக்கு ஒரு ஆட்சிமொழி வேண்டாமா என்று இந்தியை அகில இந்திய ஆட்சிமொழியாக ஆக்கவேண்டியதில்லை. இப்போது ஆங்கிலம் இருக்கிறது. ஆங்கிலம் நமக்கு அன்னிய மொழி என்றால், ஆங்கிலம் எந்த அளவிற்கு நமக்கு அன்னிய மொழியோ அந்த அளவிற்கு தென்னாட்டைப் பொறுத்த வரையில் இந்தியும் அன்னிய மொழி என்ற தகுதியைத்தான் பெற்றிருக்கிறது. இந்தி அகில இந்திய ஆட்சிமொழியாவதால் பல குறைபாடுகள் எழ காரணமாயிருக்கிறது. அகில உலகத் தொடர்பு கொள்ள ஆங்கிலம் கற்றே தீரவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். ஆங்கிலம் என்றும் துணையாக இருந்து தீர வேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். நேற்று மத்திய அமைச்சர் திரு சாக்ளா அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆங்கிலம் என்றென்றும் உதவியாக இருக்க வேண்டிய ஒரு மொழி என்று

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th March 1964

கூறியிருக்கிறார்கள். மற்ற மொழிகள் ஆங்கிலம் பெற்றிருக்கிற அளவிற்கு திறமையையும், தகுதியையும் இன்னும் பெறாமலிருக்கின்றன. மற்ற மொழிகள் ஆங்கிலம் போன்ற தகுதி, திறமை இவற்றை முற்றிலும் பெறுகிற காலம் வரை அதுவே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்கிறார்கள். இந்தியை கட்டாயப் பாடமாக ஆக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை, தாங்களாகவே படிப்பதற்குத்தான் வசதி செய்யப்பட்டிருக்கிறது, அகில உலகத்திற்கும் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் எல்லோரும் ஆங்கிலத்தை படித்துக்கொள்ளவேண்டும் என்ற முறையில் ஒன்றாவது வகுப்பிலிருந்தோ அல்லது மூன்றாவது வகுப்பிலிருந்தோ ஆங்கிலத்தை கற்றுக்கொடுப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அகில இந்தியாவைப் பொறுத்தவரையில், இந்தியா முழுவதிலும் எல்லா மாநிலங்களிலும் ஆங்கிலம் படித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் ஆங்கிலம் படித்துக்கொண்டிருக்கவில்லை. வங்காளத்திலும் ஆங்கிலத்தை படிக்கிறார்கள், குஜராத்திலும் படிக்கிறார்கள். ஆனால் இத்தகைய சூழ்நிலையில் உலகத்திற்கு தேவைப்படாத ஆட்சிமொழியாக இருப்பதற்கு தகுதியில்லாத ஒரு மொழியாக இருக்கின்ற இந்தியை எடுத்துக்கொண்டு அதில் அரசாங்கம் கவனம் செலுத்தி, மக்களுடைய நேரத்தையும், உழைப்பையும் அதே போன்று அரசாங்கத்தின் நேரத்தையும் உழைப்பையும் வீணாக்குவது தேவையா என்பதைத்தான் நாம் யோசித்துப்பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். இத்தகைய முறையில் நேரத்தையும் உழைப்பையும் தேவையில்லாத வழியில் செலவழிக்கப்படுவது நல்லதா? அத்துடன் அதைப் பொதுமொழியாக ஆக்காமல், இதனால் ஏற்படுகின்ற வீண் மாச்சரியங்களுக்கு இடம் கொடுக்காமல், இந்தி பேசுகின்ற மக்களைத் திருப்தி செய்வதற்காக மட்டும் இதைக்கொண்டு வந்து கட்டாயமாக்காமல், உறுதியான எந்த விதமான பலனையும் இதன் மூலம் காணாமல் இருக்கின்ற நிலைமைகள்தான் இருக்கின்றன என்கிற கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துவைத்திருக்கிறது. அந்த முறையில் தாய் மொழி, அந்தந்த மாநில ஆட்சிமொழியாக அமைய வேண்டும், அத்தகைய ரீதியில் அதனை பரப்பவேண்டும், அதற்கு எதிராக இருக்கின்ற சக்திகளை நிச்சயமாக அகற்றியாக வேண்டும் என்று சொல்வதற்கு யாருக்கும் இந்த நாட்டில் உரிமையிருக்கிறது. குறிப்பாக ஒரு பிராந்திய மொழியை எடுத்துக்கொண்டு, அதுதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று சொல்வதற்கு ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு என்ன உரிமையிருக்கிறதோ, அதே உரிமை, முக்கியமான மொழியாக இருக்கின்ற தமிழ் மொழியோ அல்லது அகில இந்திய அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிற 14 மொழிகளும் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று கேட்பதற்கு உரிமையிருக்கிறது. அந்த முறையில்தான் இந்தி மொழி இந்த நாட்டிற்கு தேவையில்லை என்று சொல்வதற்கு எங்களுக்கும் உரிமையிருக்கிறது. அந்த முறையில்தான், இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற அத்தனை மொழிகளிலும் ஆட்சியை நடத்துகின்ற அளவுக்கு,

9th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அவை ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று கூறுகின்ற கருத்தையும் நாங்கள் எடுத்துக்கூறுகின்றோம். அதை எப்படி நடைமுறையில் கொண்டு வருவது என்பதைப்பற்றி கல்வி வல்லுனர்கள், நிபுணர்கள் ஆலோசித்து பரிசீலித்து முடிவு கட்டட்டும். இதற்கு முடிவே கிடையாது என்று சொல்ல முடியாது. மேல்சபையில் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், பல மொழிகள் பேசப்படுகின்ற ஐக்கிய நாட்டு அவையில் பல மொழிகளையும் ஆட்சிமொழியாக வைத்திருக்கிறார்கள் என்கின்ற கருத்தை இந்திய அரசினருக்கு தெரிவித்திருக்கின்றேன், என்னுடைய கருத்துக்கு மதிப்பளித்திருப்பதாக தெரியவில்லை என்கின்ற கருத்தை மேல்சபையில் தெளிவுபட எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஆகவே இன்னின்ன மொழி ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்கின்ற கருத்துக்களை பரிமாறிக்கொள்வதில் எந்தவிதமான தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. சாதாரணமாக இம்மாதிரிப்பட்ட விஷயங்களில் கட்சிக்குக் கட்சி கருத்து வேறுபட்டிருக்கும். இந்தி அறவே வேண்டாம், இந்தியினால் எந்தவிதமான நன்மையும் இல்லை, ஆகவே இம்மாதிரிப்பட்ட தேவையில்லாத மொழியை படிக்க வேண்டிய தேவையில்லை என்று ஜனநாயக அடிப்படையில் சொல்வதற்கு இந்த நாட்டில் அனைவருக்கும் உரிமையிருக்கிறது. இவ்விதமான ஒருகருத்தை நாட்டில் வலியுறுத்துவதற்குக் கிளர்ச்சிகள் மூலமாகவும் போராட்டம் மூலமாகவும் ஈடுபடுவதற்கும் உரிமையிருக்கிறது. அதே நேரத்தில் கிளர்ச்சி, போராட்டம் இவைகள் நடக்கின்ற நேரத்தில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் அரசினர் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதையொட்டிதான் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன. இந்தி அறவே வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் சொல்லவில்லை. இந்தி பேசாத மற்ற மாநிலங்கள் பலவும் இந்தக் கருத்தை தெரிவித்திருக்கின்றன. அது மட்டுமல்ல, பிற கட்சிகளிலுள்ளவர்கள், கட்சிக்கு அப்பால்பட்டவர்கள் பலரும் இந்தக் கருத்தை கூறியிருக்கின்றனர். மேல் சபையில் உள்ள டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்தவர் என்று சொல்ல முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையில் நம்பிக்கை உடையவர் என்று சொல்ல முடியாது, அகில இந்திய அடிப்படையில் கொள்கையை ஆதரிக்கக்கூடியவர், அவர்கள் கட்டாயமான முறையில் இந்தியை கொண்டு வரக்கூடிய நிலைமை இருப்பது வருந்தத்தக்கது என்று பேசியிருக்கிறார்கள். மற்றும் சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், அகில இந்திய ரீதியில் தேசியம் வேண்டும் என்று விரும்புகிறவர், அவர் கட்டாய இந்தி இந்த நாட்டிற்குத் தேவையில்லை என்று கூறுகிறார். வங்காளத்தில் முதலமைச்சராக இருந்த டாக்டர் பி. ஸி. ராய், குறிப்பிட்ட ஒரு பகுதியிலுள்ள ஒரு மொழி அகில இந்திய அளவில் இருப்பது நல்லதல்ல, இதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்து ஏக மனதாக நிறைவேற்றி இந்திய அரசினருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் தமிழ்நாட்டைப் பொறுத்த

வரையில், இந்த நாட்டுக்கு இந்தி அறவே வேண்டாம், ஆகவே இந்தியை யாரும் படிக்க வேண்டாம் என்று சொல்வதிலும் எந்த விதமான தவறும் இல்லை. இந்திமொழி கட்டாயப்படுத்தப்படமாட்டாது என்று சொன்னாலும்கூட, கட்டாயப்படுத்துகின்ற சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏற்றுக் கொண்டிருக்கின்ற மும்மொழி கொள்கையின்படி தமிழ் படித்துத்தீர வேண்டும், ஆங்கிலம் படித்துத்தீர வேண்டும், இவை தவிர மூன்றாவதாக வேறு இந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்றை விருப்பப் பாடமாக படித்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும்கூட, இந்தி அல்லாத பிற மொழிகளைப் படிக்கின்ற அளவுக்கு எந்த விதமான வசதியும் செய்யாமல், மறைமுகமாக இந்தியை புகுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். அதோடு, இந்தி மொழி தேர்வில், உட்கார்ந்தால்தான் கல்லூரிக்கு செல்வதற்கு அனுமதி கொடுக்கப்படும் என்கின்ற அளவுக்கு கட்டாயம் இருந்து வருகின்ற சூழ்நிலையும் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. மேலும், இந்தி பேசாத மக்களுடைய உணர்ச்சிக்கு மதிப்புக்கொடுக்கின்ற முறையில், இந்திய தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தெரிவித்திருக்கின்ற உறுதிமொழியானது, "இந்தி பேசாத மக்களுடைய கருத்தை அறியாமல் ஆங்கில மொழி அகற்றப்படமாட்டாது, இந்தி வேண்டும் என்று அவர்கள் எப்போது விரும்புகிறார்களோ, அப்போதுதான் இந்தி ஆட்சி மொழியாக ஆக்கப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த உறுதிமொழி இன்று பாதுகாக்கப்படவில்லை. இன்றைக்குக் கட்சி பாகுபாடின்றி எடுத்துக் கொண்டால், கட்டுப்பாட்டுக்கு அப்பால், தனித்தனியாக தங்கள் எண்ணத்தை தெரிவிக்க வேண்டும் என்ற சூழ்நிலை இருந்தால் நிச்சயமாக ஆங்கிலம் மட்டும்போதும் என்கின்ற முடிவுக்கு ஆளும் கட்சியினரில் பலரும் வந்திருப்பார்கள். இந்தி பேசாத மாநிலங்களின் மக்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்ளுகின்ற அளவில், எத்தகைய கட்சிக் கட்டுப்பாடும் இல்லாமல், தனித்தனியாக இந்த மொழிப் பிரச்னையில் அவரவர்களுடைய கருத்துக்களை தெரிவிக்கவேண்டும் என்கின்ற நிலை வருமானால் இந்தி நாட்டுக்கு தேவையில்லை, அவசியமில்லை என்கின்ற கருத்தைத்தான் தெரிவிப்பார்கள். இந்த நிலைமையில்தான் இந்தி இங்கு புகுத்தப்படுகின்றது. ஏன் இந்த சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்? இந்தி படித்தால்தான் மேல் உயர்வு கிடைக்கும் என்கின்ற ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டால், மற்றவர்கள் எப்படி மேல் உயர்வுக்கு வரமுடியும்? அரசாங்க ஊழியர்கள் அவரவர் விருப்பம்போல் தேர்வுகளை எழுதிக்கொள்ளலாம் என்கின்ற நிலை இருந்தாலும் கூட, இப்படிப்பட்ட சூழ்நிலையில் வருவதற்கு கட்டாயப்படுத்துகிறார்கள். இத்தகைய ஒரு நிலைமைக்கு ஊழியர்களை இந்திய பேரரசு நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்குகிறார்கள். இதன் காரணமாகத்தான் இந்தி கற்றுக் கொள்ளவேண்டிய அவசியமில்லை, இந்தி படிப்பதால் எந்த விதமான நன்மையும் இல்லை. ஆகவே இந்தி இந்த நாட்டிலிருந்து

அகற்றப்படவேண்டும் என்று சொல்லுகின்ற நிலைமை எதிர்க் கட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் எதிர்க்கட்சிகள் தங்கள் கருத்துக்களை வழங்குகின்றன. இதற்கு ஜனநாயக அடிப்படையில் கருத்துக்களை வழங்குவதற்கு எல்லாக் கட்சிகளுக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் கருத்துக்களை சொல்லுகின்ற நேரத்தில் நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஆத்திரப்பட்டு அவற்றை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைத்தான் நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த அவையில் அடக்கமாகவும், பெருந்தன்மையாகவும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் இருக்க வேண்டியவர் முதலமைச்சர் ஆவார்கள். அவர்களுக்கு வேலைகள் அதிகமாக இருக்கின்றன என்ற காரணத்தினாலோ, என்னவோ, சில நேரங்களில் சிற்றத்திற்கும் சினத்திற்கும், ஆத்திரத்திற்கும் ஆளாகிவிடுகிறார்கள். இந்திப் பிரச்னையைப் பொறுத்தளவில், இந்த நாட்டுக்கு இருக்கின்ற முக்கியமான ஒரு பிரச்னை என்ற அளவில், முக்கியமான கருத்துக்களை சொல்ல எதிர்கட்சியினர் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏதோ இந்தி படிக்க விரும்பாதவர்கள் வேண்டுமென்றால் பாகிஸ்தானுக்குப் போய்விடலாம் என்று ஆத்திரத்தோடு சொல்ல வேண்டிய பிரச்னையல்ல இது. இங்கு போதுமான அளவுக்கு, இந்தப் பிரச்னையைப்பற்றி சொல்லுகின்ற அளவிற்கு ஜனநாயகம் இங்கு இருக்கிறது என்று நாங்கள் எண்ணிக்கொண்டுதான் எங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்றோம். இதற்கு நேர்மாறாக, நாங்கள் நினைக்கின்ற அப்படிப்பட்ட ஜனநாயகம் இங்கு இல்லை, சர்வாதிகாரம் இருக்கின்ற பாகிஸ்தானுக்குத்தான் பொருந்தும் என்கின்ற அளவில் "பாகிஸ்தானுக்குப் போங்கள்" என்று நம்மை பாகிஸ்தானோடு ஒப்பிட வேண்டிய அவசியமில்லை. இந்தி வேண்டாம் என்று சொல்லுகின்ற பிரச்னையைப் பொறுத்த வரையில், இந்த நாட்டுக்கு துரோகப் பிரச்னை ஒன்றுமில்லை. கருத்துக்களை பரிமாறுகின்ற பிரச்னைதான். மொழியைப்பற்றி குறிப்பிடுகின்ற 17-வது திருத்த அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமா வேண்டாமா என்று சொல்லுகின்ற உரிமை அனைவருக்கும் இருக்கிறது. இந்தி மொழி தேவையில்லை, ஆகவே படிக்கமாட்டேன் என்று சொல்லுவதற்கும் உரிமையிருக்கிறது. இந்தக் கருத்துக்களைச் சொல்லுகின்ற நேரத்தில், இந்தி படிக்க விரும்பாதவர்கள் பாகிஸ்தானுக்குப் போங்கள்" என்று கடுமையான பதங்களை, அடக்கத்திற்கும், பெருந்தன்மைக்கும் மதிப்பு அளிக்க வேண்டிய முதலமைச்சர் அவர்கள், மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கவேண்டிய முதலமைச்சர் அவர்கள், எதிர்கட்சிகளை பார்த்து ஆத்திரத்தோடு உபயோகிப்பது அவ்வளவு நல்லதல்ல. இத்தனை அளவுக்கு அதிகமாக ஆத்திரப்பட வேண்டிய அவசியமில்லை, அதிலும் முதலமைச்சர் அவர்கள் ஆத்திரப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை கனம் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பேசின விவரங்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இப்போது "நான் அப்படி பேசவில்லை"

என்று கூறுகிறார்கள். இதைப்பற்றி உள்ளபடியே தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் நூல் நிலையத்தில் சென்று, அமைச்சர் அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை அங்குள்ள சட்டமன்ற குறிப்பேட்டை பார்த்த பொழுது, இவ்வாறுதான் 1-00 p.m. பேசப்பட்டிருக்கிறது என்பது தெரிய வந்தது. மறதியாக முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். "இந்தி பரீட்சைக்குப் போக முடியாது என்று சொன்னால் இங்கே படிக்கவேண்டாம், வெளியே போய்விடு, பாகிஸ்தானுக்கு வேண்டுமானால் போய் படி" என்று பேசியிருக்கிறார். 'இந்திக்கு ஆட்சேபம் என்று சொன்னால் பாகிஸ்தானுக்குப் போ என்று தான் சொல்லுவேன்' என்றுதான் பேச்சுக் குறிப்பில் காணப்படுகிறது. நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிற பேச்சுக் குறிப்பைப் பார்த்து விட்டுத்தான் நான் சொல்லுகிறேன். . . . (கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்னேயும் பின்னேயும் இருக்கிற வாசகத்தைப் பாருங்கள்.) அவற்றால் இந்த வாசகம் மாறிவிடவில்லை. இத்தகைய நிலைமை இருக்கிற காரணத்தினால், இந்த அளவுக்கு ஆத்திரப்பட்டு, இவ்வளவு கடுமையான சொற்களை முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுதல் கூடாது, என்பதுதான் என் எண்ணம். இதுபற்றி கருத்து வேறுபாடு இருக்கிறது. அந்தக் கருத்தை மாற்றுவதற்கு, அந்தக் கருத்தைப்பற்றி நாங்கள் விளக்கங்கள் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். அந்த அளவுக்கு நிலைமையை உண்டாக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் நாங்களும் எடுத்துச் சொன்னோம் என்பதை மீண்டும் மீண்டும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு என்று பெயர் வைக்கிற தீர்மானம் இந்த மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் இதைப்பற்றி தீர்மானம் கொண்டு வந்தபோது கூட, மத்திய அரசவையில் தமிழ்நாட்டு அரசு விரும்பினால் தமிழ்நாடு என்று மாற்றிக்கொள்ள எங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதை அடிப்படையாக வைத்து, தமிழில் தமிழ் நாடு என்று உச்சரிக்கும் அடிப்படையில் ஆங்கிலத்திலும் தமிழ் நாடு என்று கூறுவதன் மூலமாக நலன் ஏற்பட முடியும். பல் வேறு மாநிலங்களில் இருப்பது போல, கேரளா, மகாராஷ்டிரா என்று அழைக்கப்படுகிற முறை இருப்பது போல, இங்கும் அமையலாம். பம்பாய், மகாராஷ்டிரம் ஆவதால் ஏற்கெனவே இருந்த புகழ் மங்கவில்லை, குறையவில்லை, ஆகையால் தமிழ்நாடு என்ற பெயர் ஆங்கிலத்தில் உச்சரிக்கப்படலாம், அந்த மாற்றத்தை மக்கள் விரும்புகின்றனர், ஆங்கிலத்தில் மாற்றுவதில் எந்த கஷ்டமும் இல்லை, ஆனால் மக்களுக்கு மன நிறைவு ஏற்பட வழி இருக்கிறது என்று உணர்ந்து இதைப்பற்றி மத்திய அரசினருக்கு சிபாரிசு செய்து ஆங்கிலத்திலும் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கருத்துக்களுக்கெல்லாம், எதிர் கட்சியிலிருந்து கூறிய கருத்துகளுக்கெல்லாம் தக்க மறுமொழியை முதலமைச்சரிடம் எதிர்பார்க்கிறேன். இருக்கிற நிலையைச் சீர்படுத்தி, எதிர் காலத்தில்

நல்ல நிலையை ஏற்படுத்தவேண்டும். குறைபாடுகளைப் போக்க, கோரிக்கைகளை நிறைவேற்ற வழிவகை ஏற்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே நமது முதல் அமைச்சர் அவர்கள், 'இந்தியை இந்தியாவின் பரீட்சை மொழியாக்க ஒரு மாநாடு கூட்டியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிற நிலைமை நீடிக்கவேண்டும் என்று வற்புறுத்துவேன்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் இந்த மன்றத்தின் முழுக் கருத்து என்று தீர்மான வடிவில் அங்கு கொண்டு செல்வது அவர்களுக்கு வலிவு தருமானால் அதற்கான வழி காணுவது நல்லது. முதல் அமைச்சர் அவர்கள், "இருக்கிற நிலைமையை நீடிக்கச் செய்வது மூலமாக ஐயப்பாடு மாச்சரியங்கள் ஆகியவைகளைப் போக்க வழி ஏற்படும் என்று சொல்லி இங்கே இருக்கக் கூடிய நிலையை எடுத்துச் சொல்வேன்" என்று கூறியிருக்கிறார்கள். அதோடு இந்த மன்றத்தின் தீர்மானமும் அதனை ஒட்டி இருந்தால் நல்லது. அதற்கான வழிவகைகளைச் செய்து மாநில அரசின் கருத்தோடு ஒட்டியிருக்கிற சூழ்நிலையில், மத்திய அரசு கூட்டக் கூடிய மாநாட்டில் முதலமைச்சருக்கு உறுதுணையாக தீர்மானத்தையும் கொண்டு செல்லுவது நல்லது. இந்த யோசனையை முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் தலைவர் அவர்களே, இன்று விவாதிக்கப்படும் விஷயங்கள் மூன்று. ஒன்று சட்ட மன்றத்தைப் பற்றியது. மற்றொன்று தேர்தல்களைப் பற்றியது. மூன்றாவது, மந்திரிகள், மற்ற அதிகாரிகள் பற்றியது. சட்ட மன்றத்தைப் பொறுத்த வரையிலும் விவாதத்திற்கு உரியது அல்ல என்றாலும் மற்ற இரண்டு விஷயங்களும் விவாதத்திற்கு உரியன. சமீபத்தில் தான் தேர்தல்கள் நடந்து முடிந்தன. அந்த சம்பவங்களை மறக்க முடியாது. அதுவும் தேர்தல். தேர்தல் என்றால் கட்சி. மந்திரிகள் அரசியல் பற்று அற்றவர்களா இல்லையா என்று குறிப்பிட்டார்கள். மந்திரிகள் அரசியல் பற்றுக் கொண்டவர்கள் தான். இந்த முறை தான் பார்லிமெண்ட்டரி ஜனநாயகம் நடைபெறும் நாடுகளில் இருக்கிறது. தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன் ராஜிநாமா செய்யவேண்டுமென்று புதிதாக இப்போது சொல்லுகிறார்களே தவிர, பார்லிமெண்ட்டரி ஜனநாயகம் நடைபெறும் நாடுகள் பல இருக்கின்றன, அங்கெல்லாம் மந்திரிகள் அரசாங்க நிர்வாகத்தை நடத்தும்போது கட்சியை அதிலே புகுத்தக் கூடாதே தவிர அவர்கள் கட்சிப்

[கனம் உதவி சபாநாயகர் தலைமை]

பற்றற்றவர்கள் என்று சொல்ல முடியாது. கட்சியைக் குறை கூறி, நிர்வாகத்தைக் குறைகூறி, கடைபிடிக்கக் கூடிய கொள்கையைப் பற்றி, நிறைவேற்றும் முறை பற்றி குறை கூறும்போது அதற்கு சமாதானமும் மறுப்பும் விளக்கமும் கொடுக்கும் பொறுப்பு மந்திரிகளுக்கு இருக்கிறது. தேர்தல் என்றால், எந்தத் தேர்தலாக இருந்தாலும் அவர்களைப் பற்றியும் குறை கூறுகிறார்

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1964

கள். அவர்களுடைய கட்சியைக் குறை கூறுகிறார்கள். சட்ட மன்றத் தேர்தலாக இருந்தாலும், பஞ்சாயத்து தேர்தலாக இருந் தாலும், முனிஸிபல் தேர்தல்களாக இருந்தாலும் மந்திரிகள் வந்து விளக்கம் கூறும் நிமித்தம் இல்லாமல் இல்லை. இப்படியெல்லாம் மந்திரிகள் பற்றியது, மற்றது எல்லாம் இருக்கும்போதும் எனக்கு திருப்தியைத் தருவது, நான் பாராட்ட விரும்புவது இப்போது நடைபெற்ற விவாதத்திலே ஒன்றும் காராசாரம் இல்லை. காரா சாரம் எதிர்பார்க்க வேண்டியது இந்த விவாதத்திலே இரண்டு பக்கத்திலும் காரசாரம் இல்லை. விவாதத்தை துவக்கி வைத்தால் ஒரு வழக்கறிஞர். தி.மு.க.வைச் சேர்ந்தவர். தொடர்ந்து பேசியவரும் ஒரு வழக்கறிஞர் முதலில் விவாதத்தைத் துவக்கி வைத்த வழக்கறிஞர் ஒரு கிரிமினல் லாயர் போலப் பேசினார். தொடர்ந்து பேசிய மற்றொரு வழக்கறிஞர் சிவில் லாயர் மாதிரிப் பேசினார். மனதில் உருக்கமாகப் படும்படி, என்ன செய்ய வேண்டும், மத்திய அரசாங்கத்திடம் என்ன எடுத்துக் காட்ட வேண்டும் என்று சொன்னார். கிரிமினல் லாயர் வகையில் பேசிய அங்கத்தினர் எடுத்தற்கெல்லாம் குற்றச்சாட்டு, நினைத்தது, நினைக் காதது, வராதது வந்தது எல்லாவற்றுக்கும் குற்றம் சாட்டிப் பேசினார். அப்போது கிரிமினல் லாயர் ஒன்று, சிவில் லாயர் ஒன்றாகத் தோன்றியது.

முதலில் இந்தியையே எடுத்துக் கொள்ளலாம். இந்தியைப் பற்றி இங்கு பேசுவது பொருத்தம் தான். ஏனென்றால் மந்திரிகள் தான் கொள்கையை நிர்ணயிக்கிறார்கள். இதிலே கருத்து வேறு பாடு இருக்கிறது. இதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். அதிலே அடிப்படை வேற்றுமை இருக்கிறது. நான் மறுபடியும் சொல்லுகிறேன். நம்முடைய நிர்வாக அமைப்பு மத்திய ஆட்சி ஒன்று, மாநில ஆட்சி ஒன்று என்று இருக்கிறது. மத்திய ஆட்சியில் இந்தியே கூடாது என்று இப் போதைய தி.மு.க. கருத்து. அப்போதைய தி.மு.க கருத்து அல்ல. மும்மொழிக் கொள்கைகூட அந்த அடிப்படையில்தான். அப்போது இந்தியே எதற்கு என்று சொல்லவில்லை. இந்தி வேண்டாம், குஜாராத்தி அல்லது மராத்தி இருக்கட்டும் என்று சொல்லவில்லை. இந்தி என்று அப்போது போட்டார்கள் இப்போது எதிர் கட்சித் தலைவர் அவர்கள் மேல் சபையில் டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றி கூறினார்கள். அவர்கள் கருத்து எனக்குத் தெரியும். அவர்கள் இந்தியே கூடாது என்று சொல்லவில்லை. வற்புறுத்தக் கூடிய வகையில், இந்தி தான் பேசவேண்டும் என்று வற்புறுத்துவதைத் தான் கண்டித்துப் பேசினார். பார்லிமெண்டில் பல மொழிகள் பேசுகிறவர்கள் இருந்தால் அவர்களுக்கு அந்த மொழிகளில் பேச வாய்ப்புக் கொடுக்கவேண்டும். ஸைமல்டேனியஸ் டிரான்ஸ் லேஷன் வைக்கவேண்டும், வைக்கவில்லையே என்று சொன்னார்கள். அடுத்த ஆண்டிலிருந்து ஸைமல்டேனியஸ் டிரான்ஸ்லேஷன் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அப்புறம் தெரிந்து கொண்டேன். சுதந்திரா கட்சித் தலைவர் ராஜாஜி கூறுவதைப்

9th March 1964] *[திரு. எம். பக்தவத்சலம்]*

பற்றிச் சொன்னார்கள். அதையொட்டித் தான் தி.மு.க. அந்தப் போக்கைக் கொண்டது என்று எனக்குத் தெரியும். சுதந்திரா கட்சித் தலைவர் கருத்தும் எனக்குத் தெரியும். கட்டாய இந்தி யாக 1937-38-ல் வைத்தார்கள். இப்போது இந்தியே கூடாது என்று சொல்லுகிறார்கள். அந்த இன்ஸ்பிரேஷன்தான் இவர் களுக்கு என்று சொல்லவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாபெரும் தலைவரே முன்பு இந்த மன்றத்திலே இருந்தார், இந்த மன்றத்தில் இன்றைக்கு எதிர் கட்சித் தலைவர் கூறிய இந்தக் கருத்து தி.மு.க. வின் மாபெரும் தலைவர் அப்போது தெரிவிக்கவும் இல்லை. ராஜாஜி அவர்கள் இந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்று மேற்கோள் காட்டியதால் சொல்லு கிறேன். (குறுக்கீடு) வேண்டாம் என்றால் வேறு. அப்போது மும்மொழிக் கொள்கை அனுசரிக்கப்பட்டது. முன்பு இருந்த மன்றத்தில் மொழிக் கொள்கை வரும்போது, அஃபிஷியல் லாங்கு வேஜ் ஆக்ட் வருவதற்கு முன், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்து கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்பட்டது. இந்தியே கூடாது என்ற இப்போதைய போக்கு அப்போது இல்லை. ராஜாஜி அவர்கள் சொன்ன பிற்பாடு தி.மு.க. ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் எனக்கு ஏதோ சினம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். எனக்கு எதற்காக சினம் ஏற்படவேண்டும்? சினம் ஒன்றுமில்லை. வெறுப்பு ஒன்றுமில்லை. ஆனால், நாட்டில் ஒருமைப்பாட்டிற்கே குந்தகம் விளைவிக்கக்கூடிய அளவிலே யார் வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்ற போக்கு இருந்தால், அதனால் கொஞ்சம் வருத்தம் ஏற்பட்டு, சினத்தை ஏற்படுத்தாமல் எப்படி இருக்க முடியும்? கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறளை நன்றாக அறிந்தவர்கள், உணர்ந்தவர்கள். குறள் ஆசிரியரைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் பொறுமைக்கு இலக்கணமாக இருந்தவர்கள். அவர்கள் பொறு மையைப் பற்றி வற்புறுத்தியிருக்கிறார்கள். பொறுமைக்கும் ஒரு அளவு உண்டு என்று குறள் ஆசிரியரே எடுத்துக் காட்டி இருக்கிறார். நாட்டிற்கே துரோகம் ஏன்? நாட்டில் ஜனநாயக முறையில் தேர்தல் நடக்கிறது. அங்கிருந்து முஸ்லீம் லீக் வருகிறார்கள். இந்த நாட்டிலே முஸ்லீம் லீக் ஒரு அரசியல் கட்சி. அந்தக் கட்சியில் வருகிறவர்கள் 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று சொல்லிக்கொண்டே போகிறார்கள் என்றால், அது எத்தகைய மனப்பான்மையை காட்டுகிறது? அதைத் தான் நான் அன்று குறிப்பிட்டேன். அந்த முஸ்லீம் லீகோடு திராவிட முன்னேற்றக் கழகம் தோழமையாக இருக்கிறது என்பதையும் எடுத்துக் கூறினேன். முஸ்லீம் லீக் அத்தகைய போக்கைக் கொண்டது. மற்ற சபையைப்பற்றிக் குறிப் பிட்டார்கள். அங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தோழமை கொண்ட ஒரு முஸ்லீம் லீக் அங்கத்தினர் இப்பொழுது தான் முஸ்லீம் லீக் என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்—முஸ்லீம் லீக்கைப்பற்றி பேசினார்கள். அப் பொழுது அவர்கள் அந்த மன்றத்தில் கூறினார்கள் "அண்ணா அவர்கள் படத்தை அக்கிரமமாக எடுத்துவிட்டார்கள் மேயர் அறையிலிருந்து. அதை வைக்கிறபொழுது, அதோடு கூட,

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1964

பாக்கிஸ்தான் முதல் தலைவர் படத்தையும் நாங்கள் வைக்கிறோம்" என்று இப்பொழுது சொன்னார்கள். நான் கூறியது தவறு என்ற வகையிலே எடுத்துச் சொன்னார்கள் இந்த மன்றத்தில். ஆனால் நேற்று முன்தினம் அவர் அங்கே அப்படிக் கூறியிருக்கிறார். போக்கு எவ்வாறு இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நான் கூறியதெல்லாம் என்ன? இப்பொழுது இந்தியைப் பொறுத்த மட்டில் கட்டாயம் இல்லை. நாம் கட்டாயம் இல்லை என்று சொல்லுகிறோம். எல்லோரும் அவ்வாறு கட்டாயம் இல்லை, வேண்டாம் என்று சொல்லுகிறார்களா? பக்கத்தில் இருக்கிற மைசூர், ஆந்திரா, கேரளா இந்த மூன்று மாநிலங்களையும் எடுத்துக் கொள்வோம். தென் மண்டலத்தைச் சேர்ந்த மாநிலங்களில் இந்த மும்மொழிக் கொள்கையைப் பொறுத்த மட்டில், கட்டாயம் இந்தியைப் படிக்கவேண்டும், இந்திக்குப் பதிலாக தமிழை படிக்க முடியாது, மலையாளத்தைப் படிக்க முடியாது, தெலுங்கைப் படிக்க முடியாது, இந்தி கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்ற ஒரு நிமித்தம் அங்கே இருக்கிறது. இந்திக்கு இங்கே எதிர்ப்பு இல்லை, ஆனால் நான் ஒன்று கூறினேன். கட்டாயம் என்றால் 'அலெர்ஜி' வந்து விடுகிறது என்று கூறினேன். கட்டாயம் இல்லை என்று நான் சொன்னேன். அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சில பேர்களுக்கு அது பொறுக்க வில்லை. ஏன் அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். என்று பத்திரிகை நிருபர் ஒருவர் மத்தியக் கல்வி அமைச்சரைக் கேட்டிருக்கிறார். 'கட்டாயம்' என்பது இருக்க வேண்டாம் என்று அவர் சொல்லியிருக்கிறார். இந்த மாநிலத்தைப் பொறுத்த மட்டில் முதலில் கட்டாயம் வேண்டும் என்று வைத்துப் பார்த்தோம். அப்பொழுது எதிர்ப்பு இருந்தது. கட்டாயம் என்றால் அதிலிருந்து 'அலெர்ஜி' ஏற்படுகிறது. கட்டாயம் வேண்டாம். ஆனால் கட்டாயம் இல்லாமலே எல்லோரும் படிக்கிறார்கள் என்று உணர்ந்துதான் நாங்கள் கட்டாயம் இல்லை என்று சொன்னோம். கட்டாயம் இல்லாமலேயே எத்தனையோ பேர்கள் படிப்பதைப் பார்க்கிறோம். கட்டாயம் இல்லாமல் படிக்கிறவர்களைக் கூட படிக்க வேண்டாம் என்று சொல்லுவது முறையா? ஜனநாயகமா? அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

பரீட்சை எழுதுவதைப் பற்றி குறிப்பிட்டார்கள். பரீட்சைக்கு கட்டாயம் ஆயிற்றே என்று கனம் உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். யார் எழுதுவது பரீட்சைக்கு? யாருக்கு எழுத வேண்டுமென்று நிர்ப்பந்தம் இருக்கிறது? யார் இந்தி படிக்க முற்படுகிறார்களோ அவர்களுக்குத் தான் இருக்கிறது. இந்தி படிக்கவே வேண்டாம் என்று எண்ணுகிறவர்கள் இந்தி பரீட்சை ஏன் எழுதவேண்டும்? அவர்கள் இந்தி பரீட்சை எழுதவேண்டிய பிரச்னை என்ன இருக்கிறது? கட்டாயம் இல்லை. இந்தி வேண்டாம் என்று விரும்புகிறவர்கள் வேறு ஒரு மொழி படிக்கவேண்டும். இந்த மும்மொழிக் கொள்கை இப்பொழுது வேறு மாநிலங்களில்

V211;31 'N 64
N64:19
138004

9th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

வற்புறுத்தப்பட்டு வருகிறது. மும்மொழிப் [illegible]யில், உத்தரப் பிரதேசத்தில் தமிழுக்கு பெருத்த முயற்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

ஏதோ சர்வகலாசாலை வைஸ்-சான்ஸலர்கள் இந்தி [illegible] என்று கூறுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த யுனிவர்ஸிடியில் இந்தி சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு இருக்கிறது. இந்திக்கு மட்டுமா இருக்கிறது? வேறு பல அன்னிய நாட்டு மொழிகளுக்கும் இருக்கிறது. 'ரஷ்யன்' மொழி சொல்லிக்கொடுப்பதற்கு இந்த யுனிவர்ஸிடியில் ஏற்பாடு இருக்கிறது. இந்த யுனிவர்ஸிடியில் இந்திக்கு என்று ஒரு இலாகா இருக்கிறது. அந்த இந்தி இலாகாவிற்கு தலைமை வகித்து நடத்தும் பேராசிரியர் யார்? அவர் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் காரியதரிசியாக சென்ற ஆண்டு இருந்தார். அவர் திருக்குறளை இந்தியிலே மொழி பெயர்த்திருக்கிறார். நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் இங்கே வள்ளுவர் உருவப்படத்தைத் திறந்துவைக்க ஏற்பாடு செய்திருந்த பொழுது, அந்த நூலைக்கூட பிரதம மந்திரி அவர்களுக்கு அனுப்பினேன். அவர்களுக்கு தமிழ் தெரியாதே, அவர் இந்தக் குறள்கள் சிலவற்றை உணர்ந்து கொள்ளட்டும் என்று இங்கே தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் காரியதரிசியாக இருந்தவரும், யுனிவர்ஸிடியில் இந்தி இலாகாவின் தலைவராக இருந்தவரும் திருக்குறளை இந்தியில் மொழி பெயர்த்திருந்ததை நான் நம்முடைய பிரதம மந்திரிக்குக் கூட அனுப்பினேன். இந்தி வேண்டாம் என்று மற்றவர்கள் சொல்லுகிறார்கள் என்று கூறுவதற்கு இடமில்லை. தொன்றுதொட்டு பல பேர் இந்தி கற்றுக்கொண்டு வருகிறார்கள். கற்றுக்கொண்டால் பலன் உண்டு என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். மாணவர்களும் உணர்கிறார்கள். ஆனால் யாருக்கு வேண்டாமோ, வேண்டாம், கட்டாயம் இல்லை. மும்மொழிக் கொள்கைப்படி அவர்கள் வேறு மொழி எடுத்துக்கொள்ளலாம். இந்தி பரீட்சையே கூடாது என்றால், அது என்ன கருத்து? மற்றவர்களும் படிக்கக்கூடாது என்றுதானே கருத்து. தாங்கள் படிக்கவில்லை என்றால் சரி. நாங்களும் படிக்கமாட்டோம், மற்றவர்களும் படிக்கக்கூடாது என்று ஒரு சிலர் சொல்வதற்கு இவர்கள் யார்? இதுவா ஜனநாயகம்? இத்தகைய கருத்தை வற்புறுத்துகிறவர்கள் என்றால், இத்தகைய போக்கு என்றால், அவர்களுக்கு ஜனநாயகத்தில் என்ன இடம் என்ற கருத்தைத் தான் சொன்னேன். நான் ஒன்றும் அநீதியாகச் சொல்லவில்லை. ஜனநாயகம் ஒரு பக்கம், நாட்டைப் பிரிக்கவேண்டும் என்று சொல்லுவது ஒரு பக்கம், முஸ்லீம் லீக் தோழமை ஒரு பக்கம். இந்தி யாரும் படிக்கக் கூடாது, நானும் படிக்க மாட்டேன் என்று வற்புறுத்துவது, இது என்ன ஜனநாயகம்?

திரு. து. ப. அழகமுத்து: அப்படி முஸ்லீம் லீக் தேச விரோத கட்சி என்றால், ஏன் முஸ்லீம் லீகை தடை செய்யக்கூடாது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதெல்லாம் தெரியும்.

திரு. மு. கருணாநிதி : முஸ்லீம் லீக்கோடு திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்பு கொண்டதை வன்மையாகக் கண்டிக்கிறார்கள் கனம் முதல் அமைச்சர் அவர்கள். கேரளத்தில் முஸ்லீம் லீகோடு தொடர்பு கொண்டு. முஸ்லீம் லீகைச் சேர்ந்த திரு. முகம்மது கோயாவை சபாநாயகராக தேர்ந்தெடுத்த நிகழ்ச்சியை ஞாபகப் படுத்துகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. முஸ்லீம் லீகை தடை செய்யவேண்டுமென்று சொன்னால், முஸ்லீம் லீக், திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது ஒரே நிலையில் இருக்கிறது, எது எதை எப்படி அடக்குவது என்பதெல்லாம் மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் யோசித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டிய விஷயம்.

இப்பொழுது மத்திய அரசாங்கப் பரீட்சையில் இந்தி மீடியம் வைப்பது பற்றி குறிப்பிட்டார்கள். நான் அதற்கு விளக்கம் கூறினேன். மீண்டும் இன்று இது குறிப்பிடப்பட்டது. மத்திய அரசாங்க பரீட்சையிலே இப்பொழுது ஆங்கிலம்தான் மீடியம் இருக்கிறது. இப்பொழுது அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்தி 'அபீஷியல் லாங்குவேஜாக' இருக்கிறது 343 செக்ஷன்படி. ஆனால், 1965-க்கு மேலே இந்தியே இருப்பது இப்பொழுது அபீஷியல் லாங்குவேஜ் ஆக்டில் மாற்றப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி யெல்லாம் கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். நமது பிரதம மந்திரி அவர்கள் உறுதி மொழி கொடுத்தார்களே, அது என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். உறுதி மொழி இப்பொழுதும் இருக்கிறது, ஒன்றும் போகவில்லை. அவர் வழக்கறிஞர். அவருக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் இப்பொழுதும் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள். அவர்களுக்குத் தெரியும் உறுதி மொழியெல்லாம் சட்டத்தில் போட முடியாது. ஆனால், உறுதி மொழி ஒரு பக்கம், சட்டம் இன்னொரு பக்கம் அது தான் விசேஷம். வெறும் சட்டம் என்றால், சட்டத்தை யார் வேண்டுமானாலும், என்றைக்கு வேண்டுமானாலும் மாற்றலாம். உறுதி மொழியை மாற்ற முடியாது. உறுதி மொழி மட்டும் போதாது. சட்டமும் வேண்டும். இப்பொழுது சட்டமும் இருக்கிறது. பிரதம மந்திரி அவர்களின் உறுதி மொழியும் தொடர்ந்து இருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சட்டமும் இருக்கிறது, பிரதம மந்திரி அவர்களின் உறுதிமொழியும் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். சட்டத்தைவிட உறுதி மொழி தான் சிறந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னால், அது எந்த மன்றத்தில் எடுபடும் என்பதையும் அமைச்சர் அவர்கள் தயவு செய்து விளக்கவேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டத்தைவிட சிறந்தது என்று சொல்லவில்லை. சட்டம் மட்டும் போதாது. ஏனென்றால், சட்டத்தை யார் வேண்டுமானாலும் மாற்றலாம். ஆனால், பிரதம மந்திரி அவர்களின் உறுதிமொழியை அப்படி மாற்ற முடியாது.

உறுதிமொழி மட்டும் போதாது. சட்டமும் வேண்டும். இப்பொழுது நமக்கு சட்டமும் இருக்கிறது, உறுதி மொழியும் இருக்கிறது. உறுதிமொழி என்ன கூறுகிறது என்றால் . . .

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : உறுதி மொழியை உள்ளடக்கிய சட்டமாக இருந்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும். ஆனால், உறுதி மொழியை அப்படியே ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு, வேறு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்களே 'காண்டிரவர்ஸியை' கொண்டுவந்து, அது நியாயமா என்று அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது சட்டம் உறுதி மொழிக்கு சற்றும் முரண்பட்டது அல்ல என்று நான் உறுதியாகக் கூறுவேன். ஆங்கிலம் இருக்கவேண்டும் என்பது மூன்றாவது பிரிவு. மற்றொரு பிரிவு கமிட்டி போடுவது பற்றியது. நான்காவது பிரிவு அந்தப் பிரிவுக்கு உட்பிரிவாக இல்லை. கனம் அங்கத்தினர் வழக்கறிஞர்,' அவர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். மூன்றாவது செக்ஷன் தனியாக இருக்கிறது. அதில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று இருக்கிறது. அது தான் காலவரையறை யின்றி என்ற கருத்தை அளிக்கக்கூடியது. உறுதி மொழியும் இருக்கிறது. மூன்றாவது பிரிவிலே ஆங்கிலம் தொடர்ந்து இருக் கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1966-க்கு அப்புறம் இந்தியே இருப்பதற்குப் பதிலாக ஆங்கிலமும் இருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. நாம் என்ன வேண்டுகிறோமோ அதற்கு அது போதும் என்பது என்னுடைய கருத்து. அதைத்தான் நான் திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டு வருகிறேன். பின்னர், மாற்ற வேண்டுமானால், நாலாவது பிரிவின்படி கமிட்டி அரசாங் கத்தை கலப்பது போதுமா, அல்லது சட்டமன்றத்தைக் கலக்க வேண்டுமா என்று குறிப்பிட்டார்கள். அரசாங்கம் என்றால் தாங்களாக ஒன்றும் செய்ய முடியாது. சட்டமன்றத்தின் அபிப் பிராயத்துக்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் எந்த மந்திரி சபையும் நீடிக்காது. அரசாங்கத்தை கலக்கிறோம் என்று சொன்னால் அது சட்டமன்றத்தைச் சேர்ந்துத் தான் என்று கனம் அங்கத்தினர் எடுத்துக் கொள்ளலாம்.

மற்றொன்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மீடியம் வைப்பது என்றால், யாருக்கு மீடியம்? தமிழர்களுக்கு மீடியம் இல்லை. ஆங்கிலம் இருக்கிறது, ஆங்கிலத்தை எடுத்துவிட்டு ஹிந்தியை மீடியமாக வைக்கவில்லை. ஹிந்தி தெரியாதவர்களுக்கு மீடியம் இல்லாமல் இல்லை. ஆங்கிலம் இருக்கிறது. மற்றவர்கள், இந்தி தெரிந்தவர்கள். நாங்கள் இந்தியிலேயே விடை அளிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஹிந்தி அபிஷியல் லாங்வே ஜாக இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. ஹிந்தி வேண்டாம் என்று சொன்னால், அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இப்பொழுது அப்படிச் சொல்லுவது "டூ லேட்" என்று தான் நான் சொல்லுவேன். ஏதோ கட்சிக்காக வாதடலாமே தவிர, அதற்கு மேலே அது வாதத்திற்கு உகந்ததாக இருக்காது. அப்படி

9th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்].

நான் ஹிந்தியிலே சொல்லுகிறேன், நீங்கள் ஆங்கிலத்திலே எழுது கிறீர்களே." என்று கேட்டாராம். **5, 6 பேர் தவிர பாக்கி** உள்ளவர்கள் "நீங்கள் ஆங்கிலத்திலேயே சொல்லுங்கள். எங்களுக்கு நன்றாகப் புரிகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் சொல்ல வில்லை என்றாலும் நாங்கள் ஆங்கிலத்தில்தான் எழுதிக் கொள்வோம்" என்று சொன்னார்களாம். ஆங்கிலத்திலேயே எழுதுவதுதான் வசதி. ஏதோ ஹிந்தி என்று இங்கே இருக்கிற மாதிரி அங்கும் ஒரு பிரமை இருக்கிறது. இது எல்லாம் கௌண்ட்டர் பார்ட் தானே. ஆகவே அவர்கள் ஹிந்தி என்று சொன்னாலும் அதனால் பாதகமில்லை என்பது என்னுடைய கருத்து. ஹிந்தி மீடியம் நல்லதில்லை. ஆங்கிலமே இருப்பதுதான் நல்லது என்று சொன்னேனே தவிர வேறு அல்ல. ஏதோ அவர்கள் செய்துவிட்டார்கள், நான் என்ன செய்கிறது என்று அச்சப்பட்டு சொல்லவில்லை.

அடுத்தபடியாக பொது விழாக்களிலே மந்திரிகள் கலந்து கொள்ளுகிறார்கள், அங்கே அரசியல் விவகாரம் பேசி கட்சிகளை தாக்குகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு கொஞ்சம் கூட இடம் கிடையாது. தவறுதலாக பேசியிருந்தால் அது தவறு தான். ஆனால் அம்மாதிரி நடைபெறுவது இல்லை. பொது விழாக்களில் அந்த விழாக்கள் சம்பந்தமான விஷயம் பேசப்படுகிறதே தவிர, எதற்காக அதை பயன் படுத்திக் கொண்டு அரசியலைப்பற்றி பேச வேண்டும்?

விவாதத்தை துவக்கிய கனம் அங்கத்தினர் பப்ளிக் சர்வீஸ் கமிஷனைப் பற்றி விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் பேசினார். எந்த இலாகாவாக இருந்தாலும், யாராயிருந்தாலும், பெரிய இலாகாவாக இருந்தாலும் சரி, சிறிய இலாகாவாக இருந்தாலும் சரி, எங்காவது தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஏதோ இரண்டு மூன்று பேர் மீது புகார் வந்தது. விசாரணை செய்யப்பட்டது. அதற்காக அங்கே ஒரே லஞ்சமயமாகப் போய் விட்டது, அது இது என்றெல்லாம் பேசினார்கள். மூன்று பேர் மீது புகார் வந்தது. ஓரளவு பிரைமஃபேஸி ஆதாரம் இருப்பது போல் தோன்றியவுடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. இதிலே தவறு ஒன்றும் இல்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷனைப்பற்றி இப்படிக் கூறுவது முறையல்ல. பத்திரிகையில் யாரோ எழுதி னார்கள் என்பதற்காக கண்டபடி பேசக் கூடாது. கனம் உறுப்பினர்கள் பொறுப்புணர்ச்சியோடு பேச வேண்டும். தகவல் இருந்தால் சொல்லலாம். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அப்படி ஒன்றும் கெட்டுப்போகவில்லை. தவறுகள் இருந்தால் அதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டது ஒரு சிறந்த சான்றாகும்.

மற்றொன்று. கனம் அங்கத்தினர் டைரக்டர் ஆப் விஜிலென்ஸைப் பற்றி கூறினார். இதையும் கனம் அங்கத்தினர் புரிந்து கொள்ளாமல் சொன்னார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளு கிறேன். டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் என்றால் அது ஒரு டைரக்ட ரேட். போலீஸ்தான் விசாரணை செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் ஹைகோர்ட் ஜட்ஜா இன்வெஸ்டிகேஷன் செய்வார்கள்?

இன்வெஸ்டிகேஷனை போலீஸ் தான் செய்ய வேண்டும். மத்திய அரசாங்கத்தில் ஒரு மாநில உயர் நீதி மன்ற பிரதம நீதிபதியை தலைவராக போட்டிருக்கிறார்கள் என்றால், அது கமிஷன். டைரக்டரேட் வேறு, கமிஷன் வேறு. டைரக்டரேட் விசாரித்து, அதன் மீது என்ன முடிவு செய்ய வேண்டும் என்பதற்குத்தான் நீதிபதியைப் போடுகிறார்கள். பின்னர் கேஸ் போட்டால், அதை விசாரிப்பதற்கு நம்முடைய மாநிலத்திலே டிரிப்யூனல் இருக்கிறது. அம்மாதிரி வேறு மாநிலங்களிலும் இருக்கிறது. முதலிலே அத்தகைய நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு, முடிவு செய்வதற்கு சில மாநிலங்களிலே போட்டிருக்கிறார்கள். சில மாநிலங்களிலே டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் செய்கிற வேலையை போலீஸ் அதிகாரிதான் செய்கிறார். அவர்கள் விசாரணை செய்து அதன் மீது கேஸ் போட்டால் நீதிபதி விசாரித்து, தண்டனை கொடுப்பார்கள். ஏதோ நாம் நீதிபதியை ஒதுக்கிவிட்டு அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று நினைப்பது தவறு என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: மத்திய சர்க்கார் அமைத்திருப்பது விஜிலென்ஸ் கமிஷன் என்று சொன்னார்கள். இங்கே இருப்பது விஜிலென்ஸ் டைரக்டர் என்று சொன்னார்கள். அவருக்கு என்ன பணி, இவருக்கு என்ன பணி, மத்திய சர்க்கார் இதை முடிவு செய்ய வேண்டிய நிலையில் ஒரு உயர் நீதி மன்ற நீதிபதியை போட்டிருக்கிறார்களே, இன்வெஸ்டிகேஷன் பண்ணுவதுதான் அவருடைய வேலையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மத்திய அரசாங்கம் எது செய்தாலும் அதை கண்ணை மூடிக்கொண்டு பின் பற்றுவது இல்லை. அவர்கள் ஏதோ ஒரு முறை வைத்திருக்கிறார்கள். டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் அங்கே இருக்கிறது. அவர்கள் விசாரணை செய்வார்கள். அதற்கு மேலே ஒரு நீதிபதியைப் போட்டிருக்கிறார்கள். அப்போதைக்கப்போது அவர்களை கேட்டுக்கொள்ள வேண்டும் என்று. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் அதற்கு இடமில்லை என்பது என்னுடைய கருத்து. வேறு சில மாநில ஆட்சிகளுடைய கருத்தும் அது தான். ஆகவே தான் போலீசை மட்டும் வைத்திருக்கிறோம்.

திரு. இராம அரங்கண்ணல்: குற்றங்களை விசாரிப்பதற்கு டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் இருப்பதாகச் சொன்னார்கள். இப்படி லஞ்சம் போன்ற குற்றங்களை விசாரிப்பதற்காக ஏற்கனவே எக்ஸ் பிராஞ்ச் இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் காரணத்தினால், என் இதற்கு ஒரு நீதிபதியைப் போடக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது இருக்கிறது போதவே போதாது, இலாகாக்களில் இருந்து அவர்களுக்கு ரெஃபர் பண்ணுகிற ஒன்றிரண்டு கேஸ்களை மட்டும் அவர்கள் கவனிக்கிறார்கள். சீரிய முறையிலே உடனடியாக விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு இப்பொழுது இருப்பது

போதாது. அதை விரிவு படுத்துவதற்குத்தான் டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் போட்டிருக்கிறோம். இப்பொழுது எக்ஸ் பிராஞ்ச் என்று இருக்கிறதே அதை விரிவு படுத்தும் முறையில் தான் இது அமைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : May I know how much further time the Hon. Minister will take?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may take another half an hour.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் தேர்தலைப்பற்றி குறிப்பிட்டார்கள். எல்லாக் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், பிரதிநிதிகளும் சேர்ந்து எப்படி நடந்து கொள்ளுவது என்பது பற்றி ஒரு கோட்பாட்டை நிர்ணயித்தால் நலம் என்று சொன்னார்கள். இது ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் நடைபெறுகிறது. சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்பும் இது எல்லாம் நடந்தது. ஆனால் இதிலே ஈடுபடுகிறவர்கள் எல்லோரும் முக்கியமாக நம் மனத்தை 1–30 p.m.
மாற்றிக் கொள்ளவேண்டும். பொதுத் தேர்தலுக்கு முன்பு எல்லாக் கட்சிக்காரர்களையும் கூட்டி, அப்பொழுது இருந்த நிதி அமைச்சரும் இருந்த எல்லோரையும் அழைத்து எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்று கலந்து ஆலோசித்து அப்படி அப்படி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், கனம் அங்கத்தினர் தர்மலிங்கம் அவர்களும் சொன்னார்கள். நாங்கள் எவ்வளவோ எடுத்துச்சொல்லுகிறோம், பேசுகிறோம், குறைகளை எடுத்துக்காட்டுகிறோம். அவைகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை என்று சொன்னார்கள். அமைச்சரவர்கள் கொடுக்கும் உறுதிகளுக்கு மட்டும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். அங்கத்தினர்கள் சொன்னதைப்பற்றி விவரம் இல்லை என்றால் அது முன்பே தெரிவிக்கப்பட்ட விஷயமாக இருக்கலாம்: அல்லது நடவடிக்கை எடுக்க வேண்டியிராத விஷயமாக இருக்கலாம்; ஒவ்வொன்றுக்கும் இன்னின்ன காரணம் என்று கூறி மேசை மீது வைப்பது என்றால் அது மிக்க சிரமமாக ஆகிவிடும். கனம் அங்கத்தினர்கள் வேண்டும் என்றால் தாங்கள் கூறிய விஷயங்கள் குறித்து உடனுக்குடன் கேள்விகள் கொடுத்தால், உடனடியாக பதில் கூற முடியும். கேள்விகள் சபைக்கு வருவதற்கு தாமதமாகிறது என்று சொன்னார்கள். தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இல்லை. அங்கத்தினர் கேட்கும் கேள்விகளில் சிலவற்றுக்கு விரிவான புள்ளி விவரங்கள் தயாரிக்க வேண்டியிருக்கும். புள்ளி விவரம் சேகரிக்க கால தாமதம் ஆகிறது. நாங்கள் உடனடியாக பதில் சொல்லி விடலாம், புள்ளி விவரகங்ள் சேகதிக்கப்படுகின்றன என்று அல்லது தகவல் இன்னும் கிடைக்கவில்லை என்று. அப்படி நாங்கள் டெக்னிகலாக புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று அல்லது தகவல் முடியாது. ஆகவே அங்கத்தினருடைய கேள்விக்கு பதில் சேகரிப்பதில் தவிர்க்கக்கூடிய தாமதம் இருக்கக்கூடாது என்று தான் வற்புறுத்தி வருகிறோம்.

சட்டமன்றத்தைப்பற்றியும், லெஜிஸ்லேடர்ஸ் ஹாஸ்டல் பற்றியும் சொன்னார்கள் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள். ரூ. 45 லட்சம் இதற்கு எதற்கு என்று கேட்டார்கள். 5 அல்லது 10 லட்சத்தில் எல்லா வசதிகளும் அளிக்க முடியும் என்றால், அப்படி எதிர்க்கட்சி ஒரு ஆர்க்கிடெக்டை பிடித்து விவரம் கொடுக்க முடியும் என்றால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் எந்த வகையிலாவது பணம் மிச்சமாகும் என்றால் அதை நான் கட்டாயம் வரவேற்கிறேன். இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. இப்பொழுது இருக்கிற மண்டபமே போதும், அதையே விரிவு படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். வேறு சில கனம் அங்கத்தினர்கள் இது போதவே போதாது, அதிக வசதி வேண்டும் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படிப் பல வசதிகளை இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். மைசூரில் ஏதோ வசதிகள் இருப்பதாக சொன்னார்கள். இக்கரைக்கு அக்கரை பச்சை என்பார்கள். அது போல அங்கே சில சலுகைகள் இருக்கலாம். இங்கே நமக்கு சில சௌகரியங்கள், சலுகைகள் இருக்கலாம். நாம் ஒன்றொன்றாக எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய அவகாசம் இல்லை. இப்பொழுது ஹாஸ்டலுக்கு ரூ. 45 லட்சத்தில் மதிப்பீடு போட்டிருக்கிறோம். அதை குறைத்து விடலாம் என்று சொன்னால் குறைத்துச் செய்யத் தயார். ஆனால் ஒன்றை கவனிக்க வேண்டும். நாம் 234 மெம்பர்களாக ஆகி விடுவோம். இன்றைக்கு 206 பேர் இருக்கிறோம். இந்த மண்டபத்தில் 212 பேருக்கு இடம் இருக்கிறது. 234 பேருக்கு இங்கே இடம் செய்ய வேண்டுமென்றால் எல்லோரும் நெருக்கி உட்கார்ந்து கொள்ள வேண்டும். ஒருவர் வெளியேபோக வேண்டும் என்றால் தாராளமாக இடம் இருக்காது, நெருக்கடியாக இருக்கும். இதற்கு எல்லாம் தான் சௌகரியமாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறோம். லண்டனில் உள்ள பார்லிமெண்ட்டைப்பற்றி சொல்லப்பட்டது. பார்லிமெண்டிலே எல்லா அங்கத்தினர்களுக்கும் எப்பொழுதும் இடம் கிடையாது. எல்லோரும் வர மாட்டார்கள் என்றே செய்திருக்கிறார்கள். நான் ஒரு சமயம் பார்லிமெண்ட் நடக்கும்போதே பார்த்திருக்கிறேன். ரொம்ப நெருக்கடியாக தான் இருந்தது. இதில் எல்லாம் அப்படியே அவர்களை பின்பற்ற வேண்டும் என்பது சரியாகாது. நமக்குத் தகுதியான மண்டபம் வேண்டும்.

கனம் அங்கத்தினர்கள் பெரிய லௌன்ஜ் வேண்டும், தங்க இடம் வேண்டும் என்று சொன்னார்கள். யாராவது வந்தால் பேச சௌகரியமாக இருக்க வேண்டும். ஒருவரோடொருவர் கலந்து பேச, கலந்து உறவாட வாய்ப்பு வேண்டும், என்று கூறினார்கள். எனக்கு வாய்ப்பு இருக்கிறது. எதிரிலேயே பார்க்கிறேன். பின்னால் இருக்கிறவர்களைத்தான் பார்க்க முடியவில்லை. கலக்க வேண்டியது அவசியம் தான். கை கலப்பதை சொல்லவில்லை, கண்கள் கலக்க வேண்டும். வாய் கலக்க வேண்டும். கலந்து பேச வாய்ப்பு வேண்டும் என்பது வரவேற்கத்தக்கது தான். அந்த யோசனையும்

அரசாங்கத்திடம் இருக்கிறது. இல்லாமல் இல்லை. கட்டாயம் ஒரு மண்டபம் கட்ட வேண்டும். ஆனால் ஹாஸ்டலுக்கு பிரையாரிடி கொடுத்திருக்கிறோம். மண்டபம் கட்டும் விஷயம் தேர்தலுக்கு பின்னால் அவசியம் ஏற்படப்போகிறது. நாம் 234 பேர்களாக ஆகும் போது அது அவசியமாகும். ஹாஸ்டலுக்கு முதலிடம் கொடுத்திருக்கிறேன். மண்டபம் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். அதைப் பற்றிய முடிவு பின்னால் எடுத்துக் கொள்ளலாம்.

டிலிமிடேஷனைப்பற்றி குறிப்பிட்டார்கள். தொகுதிகள் மாற்றப் படும். 234-ஆக ஆக்கப்படுகிறது. எலக்ஷன் கமிஷனின் அபிப்பிராயம் இது விஷயத்தில் மாநில அரசாங்கத்தைக் கேட்க வேண்டியதில்லை, என்பதாகும். ஆகவே சட்டமன்றத்தைக்கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஆகிறது. அரசாங்கம் இல்லை என்றால் சட்ட மன்றம் இல்லை. ஆகவே சட்டமன்றமும், தன் அபிப்பிராயத்தை எலக்ஷன் கமிஷனிடம் தெரிவிக்க இடம் இருக்காது. ஆனால் அவர்கள் தொகுதிகளை நிர்ணயித்த பிறகு தங்கள் பிரபோசல்களை பிரகடனம் செய்வார்கள். அப்பொழுது இந்த மன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பப்ளிக் சிட்டிங் இருக்கும். அப்பொழுது சொல்லலாம். ஆனால் டிலிமிடேஷன் ஆனபிறகு ஏதாவது அபிப்பிராயம் இருந்தால் இந்த சட்டமன்றத்திலே அதைப்பற்றி குறிப்பிடலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் துணைத்தலைவர் அவர்களே, இந்தத் தொகுதி நிர்ணயக்குழுவைப்பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன? குழுவினர் தனித் தொகுதியை பொதுத் தொகுதியாக மாற்றுவதுபற்றி அரசாங்கத்தின் கருத்தை கேட்டார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தின் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கவில்லை. இந்தப் பக்கத்தில் இருந்து கூட கோரப்பட்டது, முனிசிபாலிடிக்கும் தனித்தொகுதியானால் நல்லது என்றும், அதுபற்றி கவனிக்க வேண்டும் என்றும்.

திரு. மு. கருணாநிதி : இப்பொழுதுள்ள தனித் தொகுதி பொதுத் தொகுதியாக மாற்றப்படும் என்று ஒரு செய்தி உலவுகிறதே அது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த அளவில், தனித் தொகுதி பொதுத் தொகுதி என்ற பிரச்னையே இல்லை. இன்றைக்கு 205 தொகுதியாக இருப்பது 234 தொகுதியாக மாறும். சின்ன தொகுதிகளாக இருக்கும்.

கனம் உதவி சபாநாயகர் : திரு. கருணாநிதி அவர்கள் ரிசர்வ்ட் தொகுதியைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரிஜனங்களுக்காக ஒதுக்கப் பட்டதை "தனித் தொகுதி" என்று ஒப்புக் கொள்வதற்கு இல்லை. அரிஜனங்களுக்கு தனித்தொகுதி கூடாது என்று தான் காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஹரிஜனங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொகுதிகளை தனித்தொகுதி என்பதற்கு

பதிலாக "ஒதுக்கப்பட்ட தொகுதி" என்று சொல்வது பொருத்த மாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்போதைக்கப்போது சென்ஸஸ் ஃபிகர்ஸ் வருகின்றன. அந்த சென்ஸஸ் அடிப்படையில் எவ்வளவு ஜனத்தொகை என்று பார்த்து பிரிக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: "ஒதுக்கப்பட்ட தொகுதி" என்பது அவ்வளவு நல்ல வார்த்தையாக இல்லாவிட்டால் வேறு நல்ல வார்த்தையை கையாளலாம் என்று அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன். திருவாரூர், அரிஜனங்களுக்காக அமைந்திருக்கிற தொகுதி அடுத்த தடவை அரிஜனங்களுக்கு இல்லை என்று மாற்றப்பட்டு பொதுத் தொகுதியாக மாறும் நிலையில் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ரிசர்வ்ட் என்பது ஒரு டெக்னிகல் டெர்ம். "ஒதுக்கப்பட்ட தொகுதி" என்பது நல்ல வார்த்தை அல்ல என்றால், வேறு நல்ல வார்த்தை சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளத்தயார். நான் சொல்ல வந்தது சென்ஸஸ் ஃபிகர்ஸ் அடிப்படையில் 234 தொகுதிகளாக பிரிக்கப்படும். எங்கே அரிஜனங்களுடைய கான்ஸ்ஸென்ட்ரேஷன் அதிகமாக இருக் கிறதோ அது அரிஜனங்களுக்கான தொகுதியாக இருக்கும். இப்பொழுது அரிஜனங்களுக்கு என்று ஒரு தொகுதி இருந்து, அப்படி இல்லாத இடத்தில் அரிஜனங்கள் அதிகமாக கான்ஸ் ஸென்ட்ரேட் ஆகியிருந்தால் அந்தப் பகுதியை அரிஜனங்களுக்காக ஒரு தொகுதியாக மாற்றலாம். அது எல்லாம் எலக்ஷன் கமிஷ னின் பரிசிலனையில் இருக்கும் விஷயங்கள்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்த ஒரு குழு போடப்பட்டிருக்கிறதே, அதனுடைய வேலை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்கள் யோசனை கூறலாமோ, என்னவோ, தெரியாது. எலெக்ஷன் கமிஷன் முடிவு செய்கிற போது அரசாங்கத்தைக் கேட்கிறதில்லை என்று இருக்கிறது. ஒரு வேளை அவர்களே கேட்கலாம்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித் தார்கள். "சட்ட மன்றத்திற்காக நாம் அப்போதைக்கப்போது கட்டடங்கள் கட்டுகிறோம்; பிறகு மாற்றுகிறோம்" என்று தெரிவித் தார்கள். நான் அவர்களுக்கு கூற விரும்புவது என்னவென்றால், மவுண்ட் ரோடுக்கு அருகில் உள்ள அந்தக் கட்டடம் 'டிஸைன்' செய்யப்பட்டு சாங்ஷன் ஆனதற்குப் பொறுப்பு எனக்கும் உண்டு. அப்பொழுது சீக்கிரத்திலே தேர்தல் வந்துவிட்டது. அங்கத்தினர் களின் எண்ணிக்கையும் அதிகமான காரணத்தால், தற்காலிகமாக ஒரு கட்டடம் கட்டுவோம், பிறகு வேறு காரியத்திற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று உத்தேசித்துத்தான் அந்தக் கட்டடம் அப்போது கட்டப்பட்டது. தற்காலிகமாகத்தான் கட்டப்பட்டது. அது இப்பொழுது பாலர் அரங்கமாக உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. நாம் நம்முடைய சட்டசபைக்காக புதிய ஒரு கட்டடம், சாதாரணமாகவும், நல்ல முறையிலும் கட்ட

வேண்டுமென்றால், அதற்குக் குறைந்தபட்சம் ஐம்பது லட்ச ரூபாயாவது ஆகும். பங்களூருக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். அம்மாதிரி நாம் கட்டமாட்டோம். அது பெரிய விஷயம். ஆனால், நாம் இங்கே எதையும் சாதாரணமாகவும், கூடிய வரைக்கும் சிக்கனமாகவும் தான் நடத்திக் கொண்டு வருகிறோம். அன்னிய நாட்டினர் பார்த்து ஆச்சரியப்படு கிறார்கள். அன்னிய நாட்டுப் பிரமுகர் ஒருவர் என்னிடம் பேசிக் கொண்டிருந்தபோது, "ரொம்ப சிக்கனமாக, ஏதோ இருக்கிறதை வைத்துக்கொண்டு நல்ல முறையில் நடத்துகிறீர்களே" என்று பாராட்டிப் பேசினார்கள்.

தேர்தல் சின்னம் (ஸிம்பல்) வழங்குவதைப்பற்றி இங்கே கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஸிம்பல் வழங்குகிற விஷயத்தில் அவர்கள் ஒரு சௌகரியத்தை ஒட்டி முன்பு போட்டார்கள். குறிப்பிட்ட ஒரு நாளைக் கடைசி நாளாகவும், குறிப்பிட்ட ஒரு மணியைக் கடைசி மணியாகவும் நிர்ணயித்து, அதற்குள்ளே கேட்க வேண்டும் என்று போட்டார்கள். அதற்குள் நிலைமை விளக்கப்பட்டபோது, அதை நீடிப்பதற்கு ஒத்துக்கொண்டார்கள். ஆனால், கடைசியில், 'வித்ட்ரா' ஆன பிறகு, ஸிம்பல் கேட்டால், அது சரியல்ல. முதலிலேயே ஸிம்பல் கேட்டுவிட வேண்டும். கடைசி நாளுக்குள், கடைசி மணிக்குள் கேட்டுவிட வேண்டும். அப்படிக் கேட்டுவிட்டால், பின்னால் நிர்ணயம் செய்யலாம்.

பஞ்சாயத்துத் தேர்தலைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது எப்பொழுது வரும் என்பதை அரசாங்கம் இன்னும் முடிவு செய்ய வில்லை. முனிசிபல் தேர்தல் நடத்திவிட்டதனால், இந்த ஆண்டு இறுதிக்குள் பஞ்சாயத்துத் தேர்தலையும் நடத்தி விடலாம். தேதி நிர்ணயித்து, சட்டத்தை மாற்ற வேண்டுமென்றால் அதற்குள்ளே சட்டத்தை மாற்ற வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்களையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் மக்களே வோட்டளித்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கலாமா என்ற கருத்தும் தெரிவிக்கப் பட்டது. அது அமெரிக்கன் முறை. ஆனால், ஒன்று நான் சொல் வேன். பஞ்சாயத்து யூனியனிலே ஒரு தலைவரை அந்தத் தொகுதியில் உள்ள மக்கள் எல்லோரும் சேர்ந்து தேர்ந்தெடுத்து விட்டால், அந்தத் தலைவருக்கும் மற்ற பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் முரண்பாடு இருக்கக்கூடும். இவர் ஒரு 'டிக்டேடர்' போல் இருக்க முடியும். பஞ்சாயத்து தலைவர்களை விட்டுவிட்டு, இவர்களுக்கு வேண்டிய சில கவுன்சிலர்களை வைத்துக் கொண்டு நடத்துவதற்கு வேண்டுமானால் சௌகரியமாக இருக்கும். நம்பிக்கையில்லா தீர்மானம் வந்து, பட்ஜெட்டே பாஸ் ஆகாமல் போனாலும் போகலாம். இதெல்லாம் சிக்கலான விஷயம் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் என்று நான் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிறேன். இதையெல்லாம் பார்த்து, யோசித்து, சட்டத்தை மாற்றுவதாயிருந்தால் மாற்றலாம். இதே சட்டசபையில் வரப் போகிறது. இந்த மன்றத்திலே அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு இடம் இருக்கும்.

[9th March 1964

ரு. ம. கமலநாதன் : இந்த ஆண்டு இறுதிக்குள் பஞ்சாயத்துத் தல்கள் அனேகமாக நடைபெறும் என்ற அளவுக்கு முதல் அமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பு, சிறிய பெரிய பஞ்சாயத்துக்களினுடைய பரப்புக்களைப் பார்த்து, பஞ்சாயத்து யூனியன்களுடைய பரப்புகளைப் பார்த்து, டீ-லிமிடேஷன் செய்ய உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இவைகளெல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

'கவர்னர் என்கிற பதவி வேண்டுமா ?' என்ற அடிப்படைப் பிரச்னையைக் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். இதைப்பற்றி முன்பெல்லாம் பேசப்பட்டிருக்கிறது. கவர்னர் இந்த அரசாங்கத்திற்கு 'ஹெட்' என்பது ஒரு புறம் இருக்க, அவருக்கே சில பொறுப்புக்கள் இருக்கின்றன. மைனாரிடீஸ், ஸர்விஸஸ் போன்ற சில பொறுப்புக்கள் அவருக்கு உண்டு. இவற்றையெல்லாம் அவர்கள் கவனிக்க வேண்டும். கவர்னர் பதவி என்பது ஏதோ ஒரு அனாவசியமான பதவியாக வைக்கவில்லை. அந்தப் பதவி அவசியம் என்று தான் கருதப்படுகிறது. இப்பொழுது அதை மாற்றுவதாக உத்தேசம் இல்லை. அரசியல் சட்டத்திலே இருக்கிறது என்பதற்காக மட்டுமல்ல; அந்தப் பதவி நாட்டுக்கு அவசியமாக இருக்கிறது என்பதற்காகத்தான் அந்தப் பதவியை வைத்துக் கொண்டிருக்கிறோம்.

நம் மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்ற பெயரை ஆங்கிலத்திலும் வைக்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. இதுவும் பழைய யோசனை தான். இதையெல்லாம் ஆலோசனை செய்து தான் 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்திருக்கிறோம். எல்லாம் தமிழில் நடக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டே, ஏன் இந்த ஆங்கிலத்தின் மீது அவ்வளவு மோகம்? 'தமிழ்நாடு' என்ற பெயர் வைத்திருக்கிறோம். வேறு என்ன வேண்டும்? இதெல்லாம் பேசித் தீர்த்து நாம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆங்கில மோகம் அதிகமாகிவிட வேண்டாம். எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு வைத்துக்கொள்ளலாம். அதற்கு மேலே வேண்டாம் என்று தான் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஹாஸ்டலிலே இருக்கும் கொசுத் தொல்லை போன்ற பல சங்கடங்களைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. டெலிபோன் பற்றியும் சொல்லப்பட்டது. டெலிபோனைக் குறித்து சில ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. புது ஹாஸ்டலிலும், பழைய ஹாஸ்டலிலும் இப்பொழுது இருப்பது ஸிங்கிள் லைன் ஸிஸ்டம். இனி புது ஏற்பாட்டுக்காக சாங்ஷன் ஆய்விட்டது. இது ஐந்து லைன் உள்ள புதிய டெலிபோன் முறையாகும். லைன் கிடைக்கவில்லையே என்று யாரும் காத்திருக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஒருவர் மாற்றி ஒருவர் தடையில்லாமல் பேசிக்கொண்டிருக்க முடியும். இனி கஷ்டம் இருக்காது. கொசுத் தொல்லையைப் போக்கவும் ஏற்பாடு செய்யலாம்.

9th March 1964] *[திரு. எம். பக்தவத்சலம்]*

வேலை செய்ய அங்கே ஆட்கள் வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. அதைப்பற்றியும், இன்னும் சொல்லப்பட்ட மற்ற யோசனைகளைப்பற்றியும் கவனிக்கலாம்.

சமீபத்தில் நடந்த தேர்தலைப்பற்றிக் கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். போலீசார் தவறுதலாக நடந்து கொண்டார்கள் என்றும் அவர்கள் சொன்னார்கள். தேர்தல் நடந்தபோதும் சரி, தேர்தல் முடிந்த பிறகும் சரி, போலீசார் தங்களுடைய கடமையைச் சரிவரத்தான் செய்தார்கள். பந்தோபஸ்து வேலைதான் போலீசார் செய்ய வேண்டிய முக்கியமான வேலை. அதை அவர்கள் சரிவரச் செய்தார்கள். யாரோ யாருக்கோ பணம் கொடுத்தார்கள், அதைப் போலீசார் தடுக்கவில்லை என்றெல்லாம் பேசப்பட்டது. அதற்கெல்லாம் போலீசார் என்ன செய்ய முடியும்? உடனே அரஸ்ட் செய்ய முடியாது. யார் யாருக்குப் பணம் கொடுத்தார்கள், எதற்காகப் பணம் கொடுத்தார்கள், என்றெல்லாம் அவர்கள் கவனிக்க முடியுமா? அவர்களுக்கு உரிய வேலை என்ன உண்டோ அதைத்தான் அவர்கள் செய்வார்கள். பந்தோபஸ்துப் பொறுப்பை அவர்கள் பார்க்க வேண்டும். தேர்தல் நடக்கக்கூடிய காலத்தில் அமைதியை அவர்கள் நிலைநாட்ட வேண்டும். யாருக்காவது ஹிம்சை ஏற்பட்டால் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். யாரோ யாருக்காவது பணம் கொடுத்தார்கள் என்றால், லஞ்சம் கொடுப்பதைப் போலீசார் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று அர்த்தம் அல்ல. போலீசார் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்கிறார்கள். அவர்கள் கவனிக்கத் தகாததைச் சொல்லி மிகைப்படுத்தக்கூடாது. அவர்களுக்கு இருக்கும் கஷ்டங்களையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

'பாலட் பாக்ஸ்' பற்றிக் குறிப்பிடுகையில், சில இடங்களில் இரும்புப் பெட்டிகளும், சில இடங்களில் மரப்பெட்டிகளும் கொடுக்கப்பட்டன என்றெல்லாம் இங்கே சொல்லப்பட்டது. எங்காவது மரப்பெட்டியைத் திறந்து மாற்றிவிட்டார்கள் என்கிற புகார் இருக்கிறதா? இல்லை. இங்கே தான் மரப்பெட்டி, அங்கே தான் இரும்புப் பெட்டி என்கிற பாகுபாடு கிடையாது. இருக்கிற ஸ்டீல் பெட்டிகளைக் கொடுத்தார்கள். ஸ்டீல் பெட்டி தீர்ந்துபோய் விட்டபோது மரப்பெட்டிகளைக் கொடுத்தார்கள். இதை ஒன்றும் பிரமாதமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.-க்கள் விஷயமாகவும் இங்கே குறிப்பிடப்பட்டது. என்.ஜி.ஓ.-க்களைப் பொறுத்த மட்டில் பஞ்சப்படி கொடுக்கிற விஷயத்தைக் குறித்து நான் முன்பே விளக்கியிருக்கிறேன். புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. பஞ்சப்படி கொடுக்கும் விஷயத்தில் மத்திய அரசாங்கம் எந்த விகிதத்தில் கொடுக்கிறார்களோ அதையொட்டி நாம் கொடுக்கிறோம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அப்போதைக்கப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. கேரளாவில் இன்னும் கொடுக்கவில்லை. சென்ற

வருஷம் வந்ததைப் பார்த்துப் பரிசீலனை செய்தோம். கொடுத்து விட்டோம். ஆக, இந்தக் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; மறுக்கப்படுகிற விஷயம் அல்ல. அப்போதே குறிப்பிட்டேன், 'எங்களுக்குக்கூட ஒன்றும் தெரியவில்லை, பத்திரிகையிலே பார்த்தேன்' என்று. இதையெல்லாம் பார்த்து மத்திய அரசாங்கத்தை கேட்கிறோம். மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். இதற்குள்ளே கனம் அங்கத்தினர் ஒருவர், "மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லை என்று சொல்லி விட்டார்கள்" என்று சொல்கிறார்கள். அவர்கள் கொடுப்பதாக இருந்தாலும் வேண்டாம் என்று சொல்வது போல் இருக்கிறது. அவ்வளவு தூரம் கனம் அங்கத்தினருக்கு மத்திய அரசாங்கத்தின் மீது கருணை இருக்கிறதே, அது வரவேற்கத்தக்கதுதான். மத்திய அரசாங்கத்திற்குச் சொல்கிறோம். இது அவர்கள் கொடுக்க வேண்டியது என்றும் சொல்கிறோம். அவர்கள் பரிசீலனை செய்கிறோம்' என்று சொன்னால், திரும்பத் திரும்ப இதைப் பேச வேண்டியதில்லை. அதற்காக டெமான்ஸ்ட்ரேஷனோ, கறுப்பு பாட்ஜோ எதுவும் வேண்டியதில்லை. இது இந்த அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. இந்த அரசாங்கம் இதையெல்லாம் கவனித்து எந்தப் பரிகாரம் அளிக்க வேண்டுமோ அதை அளிப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது, நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறது. ஆகவே, கனம் அங்கத்தினர்களுக்கு இதைப்பற்றிக் கவலை வேண்டாம் என்று சொல்லிக் கொள்கின்றேன்.

திரு. செ. மாதவன் : துணைத்தலைவர் அவர்களே, பொதுவாக பஞ்சப்படி உயர்வு வேறு பிரச்சினைகளோடு சேர்த்துப் பேசப்படுகிறது. நாங்கள் இன்றைக்குக் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணை என்னவென்றால், சென்னை மாநகரம் 'ஏ' கிரேடு ஸிடி ஆகிவிட்டது. அமைச்சர்களுக்குத் தெரிந்துதான் அவ்வாறு ஏற்பட்டது. அந்த முறையிலே, மத்திய அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்தப்படுகிறது. நம்முடைய அரசாங்கமும் அவ்வாறு உயர்த்தவேண்டும் என்பதுதான் வெட்டுப் பிரேரணையின் கருத்தாகும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அடுத்து, இந்த விஷயத்தைக் குறித்துத்தான் பேச இருந்தேன். அதற்குள் கனம் அங்கத்தினருக்குப் பொறுமை இல்லை. க்ரிமினல் லாயர் பழக்கம். ஸிடி காம்பன்ஸேடரி அலவன்ஸைக் குறித்து நான் முன்பே விளக்கியிருக்கிறேன். மத்திய அரசாங்கம் சில நகரங்களை ஏ, பீ, ஸி, என்று பாகுபடுத்தி வைத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்க ஊழியர்கள் பஞ்சாபிலிருந்து சென்னை நகரத்திற்கு மாற்றப்பட்டாலும் அவர்கள் வந்து வேலை செய்யவேண்டும். சென்னை நகரத்திலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றினாலும் அங்கு சென்று வேலை செய்ய வேண்டும். ஆக, மத்திய அரசாங்கத்தினர் அவர்களுக்கென்று ஒரு 'பேஸிஸ்' வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏதோ கொடுத்தார்கள் என்றால், உடனே, "ஏ" கிளாஸ் நகரமாயிவிட்டது, கொடுக்கவில்லை என்று சால்வது பொருத்தம் அல்ல. இந்த மாநில

அரசாங்கம் இவ்விஷயத்தில் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தி வருகிறது. மாநில அரசாங்க ஊழியர்களுக்கு, ஹில் அலவன்ஸ், போன்றவை எல்லாம் இருக்கிறது. பஞ்சப் படியும் இருக்கிறது. ஆகையால், அதையும் இதையும் பிணைத்து, "ஸிடி அலவன்ஸ் கொடுக்கவில்லை" என்று சொல்வது பொருத்தம் இல்லை. மத்திய அரசாங்கம் ஒரு 'பேஸிஸ்' இல் செய்கிறார்கள். அவர்கள் ஊழியர்கள் இங்கிருந்து ராஜஸ்தானுக்குப் போகச் சொன்னாலும் போக வேண்டும். ஆக, மத்திய அரசாங்க ஊழியர்களோடு எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல. அதை எடுத்துக் காட்டுவதை விட, இங்கே என்ன வேண்டும் என்று கேட்கலாம். ஏ, பீ, ஸி என்ற பாகுபாடு இங்கே இல்லை. அதைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

மேலும் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் எவற்றுக்காவது நான் இங்கே பதில் சொல்லாமல் விட்டிருந்தாலும் அவையெல்லாம் நல்லமுறையில் கவனம் செலுத்தப்படும். இரண்டு பக்கங்களில் இருந்தும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவை எல்லாம் கவனம் செலுத்தப்படும் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தேர்தல் சமயத்தில் பன்னிரண்டு பெட்டிகளை எண்ணக்கூடிய இடத்தில் 3 ஏஜெண்டுகள் தான் இருக்கலாமென்று இருக்கிறது. எல்லாப் பெட்டிகளையும் அவர்களால் பார்க்க முடிவதில்லை. ஆகவே அப்படியின்றி அதிகமான ஏஜெண்டுகள் இருப்பதாக இருந்தால் வசதி செய்து தரப்பட வேண்டுமென்று தேர்தல் கமிஷனுக்கு அரசாங்கம் சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்தலைப்பற்றி கனம் அங்கத்தினர் பேசிய விஷயங்களை எல்லாம் இங்கேயே இருந்த தேர்தல் அதிகாரி நன்றாகக் கவனித்துக் கொண்டார். அவர் அதுபற்றி கவனம் செலுத்துவார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மூன்று வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மனம் இருந்தால் வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் வாங்கிக் கொள்ளலாம். இல்லையென்றால் அதை எதிர்த்து வோட்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வுக்கு இந்தி மொழிப் பரிட்சையில் வாங்குகிற மார்க் கணக்கிடப்படாது என்று முன்பு தெரிவிக்கப்பட்டது. அண்மையில் ஒரு உத்தரவில் இந்தி மொழியைப் படிக்கிறவர்கள் கட்டாயமாகப் பரிட்சைக்கு உட்கார வேண்டும் என்றும், உட்காராது போனால் கல்லூரிக்குச் செல்லக் கூடிய வாய்ப்பு இருக்காது என்றும் வந்திருக்கிறது. இது இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானது இல்லையா? இது ஒருவகையில் இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பது ஆகாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் ஒன்றும் முரண் இல்லை, கட்டாயமும் இல்லை. இந்தியே வேண்டாம் என்கிறவர்கள் வேறு மொழியை எடுத்துக் கொள்ளலாம். இந்தியை இஷ்டபாடமாக

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1964

எடுத்துக்கொண்டவர்கள்தான் கட்டாயமாகப் பரிட்சைக்கு உட்கார வேண்டும். மேலும் பரிட்சையின் தேர்வுக்கு இந்த மார்க் கணக்கிடப்படாது என்பதும் சரிதான். ஆனால் மொத்த மார்க்குகளை கூட்டும்போது மாடரேஷன் சமயத்தில் வேறு ஒரு சப்ஜெக்டில் பத்து மார்க் குறைந்து இருந்தாலும் இதில் ஒரு பதினைந்து மார்க் வாங்கியிருந்தால் இதையும் கூட்டிக்கொள்ளும்போது சரியாகும். அந்த சமயத்தில் இந்தப் பதினைந்து மார்க் பயன்படுமே என்பதால்தான் கட்டாயமாகப் பரிட்சை எழுத வேண்டும் என்பது. இது எல்லாம் மாணவர்களுக்கு நன்றாகப் புரிந்து இருக்கிறது. அவர்கள் இதை நன்றாக உணர்ந்து கொண்டிருப்பதனால் தான் ஏராளமான பேர்கள் படிக்கிறார்கள். டிசிப்ளின் என்றால் டிசிப்ளின்தான். அதற்குக் கட்டுப்பட மாட்டோம் என்றால் நாட்டைவிட்டுப் போகட்டும், கல்லூரியைவிட்டுப் போகட்டும் என்று சொல்கிறேன். இந்தியை இஷ்டபாடமாக எடுத்துக் கொள்ளாதவர்களைப் பற்றிக் கவலை இல்லை. இஷ்டபாடமாக எடுத்துக் கொண்டவர்கள்தான் பரிட்சைக்கு உட்கார வேண்டும். அந்த மார்க்கினால் அவர்களுக்குப் பாதகம் இல்லையென்றாலும் சாதகம் ஏற்படட்டும் என்பதற்காகப் போடப்பட்டதுதான் இந்த உத்தரவு.

புலவர் கா. கோவிந்தன் : கனம் அமைச்சர் சொன்ன கருத்து உண்மைதான். ஆனால் சமீபத்தில் போடப்பட்டுள்ள உத்தரவில் . . . .

MR. DEPUTY SPEAKER : I don't allow the hon. Member to make a statement.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது புது விதி இல்லை விளக்கம்.

The cut motion under Demand No. VI—State Legislature was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 14,07,800 under Demand No. VI—State Legislature."

The Demand was put and carried and the Grant was made.

திரு. து. ப. அளகமுத்து: தலைவர் அவர்களே, நான் என்னுடைய வெட்டுப் பிரேரணையை வலியுறுத்துகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 15,35,200 under Demand No. VII—Elections be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 15,35,200 under Demand No. VII—Elections."

9th March 1964]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருத்துக்களை ஏற்று, இந்த மானியம் கனம் சபாநாயகரின் துறையின் கீழ் வருகிற சட்டப் பிரிவு இலாகாவைச் சேர்ந்த காரணத்தினால் நான் என்னுடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தவில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI S. MADHAVAN : Sir, I press my cut motion.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 2,13,25,100 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,13,25,100 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1.56 p.m.

The House then adjourned.

III PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

Nil.

கொள்ளவேண்டுமென்று சட்டமிருக்கிறதா ? அப்படி எடுத்துக் கொண்டிருந்தால் அது இந்த ஏக்கரேஜிலிருந்து கழிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா: நான் கொடுத்த கணக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடம்தான்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் என்னென்ன நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா: அவர்கள் மீண்டும் சாகுபடி செய்ய கடன் உதவி கேட்கிறார்கள், அரசாங்கம் கொடுக்கிறது. குறிப்பாக தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்குதான் அதிக பாகத்திற்கு கெடுதல் ஏற்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் நல்ல விதை பாதி விலைக்கு கொடுக்க ரெவின்யூ இலாகாவிலிருந்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நடவு கூலி போன்ற செலவுகளுக்காக உடனடி கடன் உதவி கொடுக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன்: அமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு கடன் உதவி அளிப்பது என்ற அளவோடுதான் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே விவசாயிகள் ஏராளமாக கடன்பட்டுத்தான் விவசாயம் செய்திருப்பார்கள். அதை அடைக்க முடியாது புதிய கடன் வாங்கும் நிலை இருக்கிறது. ஆகவே அதை மான்யமாகக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா: அதுபோல் இப்போது உத்தேசம் இல்லை. உடனடியாக எது தேவையோ அதைத்தான் இந்த அரசாங்கம் செய்து கொடுக்கும்.

திரு. சா. ராமசாமி: பெரு மழை காரணமாக திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளில் செய்த சாகுபடி எல்லாம் அழியப்பட்டு நிலங்கள் எல்லாம் இரண்டாம் தடவையாக மறுபடியும் பயிர் செய்யப்பட்டு, தற்போது புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் இல்லாததால் இரண்டாம் முறையாகச் செய்த பயிரும் அழியும் நிலையில் இருப்பதால் அவர்களுக்கு இந்த வகையான வசதிகள் அளிக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா: இந்த மூன்று ஜில்லாக்களில் மட்டுமல்ல, எந்த ஜில்லாவிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமையிருக்கும் பட்சத்தில் என்னென்ன நிவாரணங்கள் கொடுக்கவேண்டுமோ அதை ஸ்தலத்தில் உள்ள ரெவின்யூ இலாகா அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே திருச்சி ஜில்லாவில் என்ன நடந்தது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: டிசம்பரில் ஆரம்பித்த பெரு மழை புயல் ஆரம்பமே தென் ஆற்காடு மாவட்டத்தில்தான் என்று நாங்கள் பார்த்தோம். அரசாங்கமும் ஏற்றுக் கொள்கிறது.

ஆகவே தென் ஆற்காடு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்க என்ன உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா: தென் ஆற்காடு மாவட்டத்திற்காக விசேஷமாக ஒரு கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் எங்கு பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம்: ஏற்கனவே நிவாரணம் அளிக்கப்பட்டுவிட்டதா ? அல்லது இனிமேல் நிவாரணம் அளிக்கயிருக்கிறார்களா ?

கனம் திரு. வெ. ராமையா: உடனே செய்யவேண்டிய உதவிகளை ரெவின்யூ இலாகாவினர் செய்து கொடுப்பார்கள். இன்னும் சில உதவிகளை பரிசீலனை செய்து ரெவின்யூ இலாகாவில் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பார்கள். குறிப்பாக விதைகள் கொடுப்பது பற்றி இனி மேல் ஆலோசனை செய்வது பிரயோஜனப்படாது.

திரு. செ. மாதவன்: தஞ்சை மாவட்டத்தில் விளைவு பாதிக்கப்பட்டதால் புதிதாக நாம் போட்டிருக்கும் செஸ் வரியை 1962-ம் ஆண்டிலிருந்து வசூல் செய்யக்கூடாது என்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? அது அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையா: நான் கொடுத்த பதிலைப் பார்த்தால் தஞ்சை ஜில்லாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பது, 10,905 ஏக்கர்கள்தான். என்னென்ன நிவாரணம் கொடுக்கவேண்டுமோ அதுகுறித்து ரெவின்யூ இலாகாவைச் சார்ந்தவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வெள்ளத்தால் 12, 13 லட்சம் பாதிக்கப்படவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்த வெள்ளத்தால் விவசாயிகள் மட்டுமல்ல, கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர் குடிசைகள் எல்லாம் காற்றில் பறந்திருக்கின்றன. ஆகவே அதற்காக என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது ? அப்படிக் கொடுக்கவில்லை என்றால் இனிமேலாவது கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா: அங்கத்தினர் அவர்கள் அவர்களது ஜில்லாவில் என்ன நடந்திருக்கிறது என்று கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு தெரிந்து கொள்ள முயற்சி எடுத்தால் என்னென்ன நடந்திருக்கின்றன என்பது தெரிய வரும். புயலால் பாதிக்கப்பட்டவர்களில் விவசாயிகள் மட்டும் அன்றி, கடலோர மீனவர்களும் பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அவர்களுக்கும் உடனடியாக நிவாரணம் கொடுக்கப்படும். குடிசைகளை மீண்டும் கட்டிக் கொள்ள நிவாரணம், துணி வாங்க நிவாரணம் அளிப்பது இவை எல்லாம் உடனடியாகக் கொடுக்கிறார்கள். மூன்று, நான்கு மாதங்களுக்குப் பிறகு கொடுப்பது அவர்களுக்கு

[10th March 1964

லாபமாகயிருக்காது. பின்பு அவர்கள் வீடுகளை புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கு கடன் உதவியும் அரசாங்கம் கொடுக்கும்.

திரு. செ. மாதவன்: அமைச்சர் அவர்கள் கடன் உதவி செய்வதாகச் சொன்னார்கள். ஏற்கனவேயுள்ள வரி பாக்கிகளை இந்தப் பசலியில் வசூலிக்கக்கூடாது என்று அரசாங்கம் உத்தர விட முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையா: பாதிக்கப்பட்ட இடத்தில் அவசியமாக அதைத் தள்ளி வைக்கவேண்டுமென்றால் அதையும் அரசாங்கம் செய்யும்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: பாதிக்கப்பட்ட விவசாயி களுக்காவது அரசாங்கம் இந்த செஸ் வரி விலக்கை உடனடியாக அளிக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: செஸ் விலக்கு மட்டுமல்ல. லான்ட் ரெவின்யூவையே தள்ளிவைக்கவேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால் அதையும் அரசாங்கம் செய்யும்.

Fair price shops for firewood

* 197 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of Fair price shops functioning in Madras City for the sale of firewood;

(*b*) the price at which firewood is sold at present; and

(*c*) the total quantity of firewood sold through these fair price shops, during 1963?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) விறகு விற்பனைக்காக சென்னை நகரில் எட்டு நியாய விலைக் கடைகள் நடைபெற்று வருகின்றன.

(இ) 25 கிலோ கிராம் ரூ. 1·50 என்கிற விலைக்கு இப்போது சிரா விற்கப்பட்டு வருகிறது.

(உ) 1963-ல் இந்த நியாய விலைக் கடைகளின் மூலம் விற்கப் பட்ட மொத்த விறகின் அளவு 1,101 டன் ஆகும்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கிற நெருக்கடி நிலையையொட்டி விறகைப் பொறுத்தவரை இருக்கிற நியாய விலைக் கடைகளை அதிகப் படுத்துகிற எண்ணம் அரசினருக்கு உணடா? அப்படியென்றால் எத்தனை?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போது இருக்கக்கூடிய எட்டு விறகுக் கடைகளிலும் நாங்கள் எதிர்பார்த்த விற்பனை இல்லை என்று தங்கள் மூலம் மெம்பர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

10th March 1964]

புலவர் கா. கோவிந்தன்: 100, 200 ஆண்டுகளாக இருக்கிற மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு போயிருக்கின்றன. ஆகவே உடனடியாக விறகை உண்டாக்குவது என்பது இயலாத காரியம். ஆகவே மாற்றி எரிபொருள்களுக்கு ஏதாவது வழியிருக்கிறதா? நெய்வேலி பழுப்பு நிலக்கரியை அந்த அளவிற்குக் கொண்டு வர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இன்டஸ்ட்ரீஸ் மினிஸ்டரை கேட்டுக் கொள்ளவேண்டியது இது.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப்போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் விறகு பற்றாக் குறை இருந்து கொண்டிருப்பதால் இந்தத் திட்டத்தை அங்கும் விஸ்தரிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இதைப் போலவே, மதுரையிலும், கோவையிலும் நடத்தவேண்டும் என்று தான் ஆரம்பத்தில் நினைத்துக்கொண்டிருந்தோம். பின்னால்தான் இபபோது அது தேவையில்லை என்று நினைத்து சென்னை நகரில் மட்டும் எட்டு கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. சா. ராமசாமி: கனம் அமைச்சர் அவர்கள் கூறும்போது சரியானபடி இந்த விறகு விற்பனையாகவில்லை என்று சொன்னார் கள். அப்படி மக்கள் வாங்காமல் இருப்பதற்கு என்ன காரணம்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போது நடத்தப்படுகின்ற நியாயவிலைக் கடைகளில் கொடுக்கப் படுகின்ற விறகுகள் காட்டு விறகை (ஜங்கிள் வுட்) சார்ந்தது. இது சரியாக எரியாது என்று மக்கள் எண்ணிக் கொண்டிருக் கிறார்கள். அதோடு இந்த எட்டு கடைகளும் முக்கியமாக ஸ்லம் ஏரியாக்களில் திறக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் எதிர் பார்த்த அளவுக்கு விற்பனையாகவில்லை என்றாலும் தற்போது மாதா மாதம் விற்பனை அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்தக் கடைகளில் கொடுக்கப் படுகின்ற விறகு காட்டு விறகாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்குப் பதிலாக சவுக்கு விறகை விற்கலாம் அல்லவா? தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, சவுக்கு விறகு அதிகமாகக் கிடைக்கிறது. ஆகவே இந்தக் கடைகளில் சவுக்கு விறகுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போது நடத்தப்படுவது பாரஸ்ட் டிப்பார்ட்மெண்ட் மூலமாக இருப்பதால், காட்டு விறகு கொடுப்பதுதான் வசதியாக இருக்கிறது.

திரு. முனு ஆதி. இந்தக் காட்டு விறகை விற்பதால் லாபம் ஏற்படுகிறதா? நஷ்டம் ஏற்படுகிறதா?

[10th March 1964

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போதுள்ள கணக்குப்படி ஒரு டன்னுக்கு 2 ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இப்போதுள்ள விறகு பற்றாக்குறையைப் போக்குவதற்கு, அரசாங்கம் காடுகளில் சில வகை மரங்களை வளர்ப்பதாக தெரிகிறது. அவ்விதம் வளர்க்கப்படுவது ஜங்கிள் வுட் வகையைச் சேர்ந்ததா அல்லது வேறு வகையைச் சேர்ந்ததா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : யூக்கலிப்டஸ் போன்ற வகைகள்தான் வளர்க்கப்படுகின்றன. ஜங்கிள் வுட் என்று தனியாக வளர்ப்பது இல்லை, தானாக வருவது தான்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, அரசாங்க நியாயவிலைக் கடைகளில் விற்கப்படும் விறகு சரியாக எரியாது என்ற எண்ணம் மக்களிடையே இருந்து வருகிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் எரியக்கூடிய விறகைக் கொண்டு வந்து விற்பனை செய்வதற்கு அரசாங்கம் முயலுமா ? அதோடு விலையையும் குறைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : விலையைக் குறைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஒரு குண்டுக்கு ஒரு ரூபாய் 75 ந. பை. என்று விற்றுக் கொண்டிருந்ததை, இப்போது ஒரு ரூபாய் 50 ந. பை. விலையில் விற்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதன் மூலம் இப்போது கூடுதலாகவே ஓரளவுக்கு விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

அரிசி, நெல் கொள்முதல்

* 198 கேள்வி.—**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட அரிசி மில் சொந்தக்காரர்கள் தாங்கள் ஒப்புக்கொண்டபடி அரசாங்கத்திற்கு அரிசி சப்ளை செய்ய முடியாதென தெரிவித்துவிட்டனரா ?

(இ) ஆம் என்றால், என்ன காரணங்களுக்காக ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) கொள்முதல் விலைக்கும் மார்க்கெட் விலைக்கும் இடையே தொடர்ந்து இருந்துவரும் விலை வித்தியாசத்தின் காரணமாக, தஞ்சாவூர் அரிசி மில் சொந்தக்காரர்கள் தங்கள் அரிசி சப்ளை செய்யும் நிலையில் இல்லை என்று 17—12—1963-ல் அரசாங்கத்திற்குத் தெரிவித்துவிட்டது.

10th March 1964]

* 199 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are aware that the introduction of compulsory procurement of paddy and rice from the millers has affected the normal paddy business and that the price of paddy has suddenly dropped thus affecting the ryots seriously ; and

(*b*) if so, what steps the Government propose to take to stabilise the prices so that the ryots may get a fair deal?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) No.

(*b*) Does not arise.

SRI C. CHIRANJEEVULU NAIDU : In view of the fact that the present policy of procurement is not encouraging and that the agriculturists are not getting fair price and are not prepared to readily sell their produce, is there any proposal to revise the present system and have some other system which would facilitate better procurement and better stabilisation of prices for agriculturists?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போதுள்ள முறையின்படி மில் சொந்தக்காரர்கள் மூலமாக இன்றைய தேதி வரை, அதாவது 7—3—1964 வரை 22,534 டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது சரியல்ல என்று நினைக்கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், இப்போதுள்ள முறைப்படி, மில் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்குவதைவிட, சற்று விலை அதிகமாகக் கொடுத்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது அரிசி கொள்முதல் செய்யவேண்டும் என்றுதான் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அந்த முறையில் ஆலோசித்த போது மில்லர்களே கொடுக்கலாம் என்றும் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். அந்த முறையில்தான் இப்போது கொள்முதல் செய்வது என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : மில் சொந்தக்காரர் என்ற முறையில் வியாபாரம் என்ற அளவில் இல்லாமல் வெறும் கூலிக்காக மட்டும் அரவை செய்கின்ற Job hulling செய்யும் மில் சொந்தக்காரர்களிடமிருந்தும் இந்தக் கட்டாய கொள்முதல் செய்வதை அரசாங்கம் மேற்கொள்ளாமல் இருக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கூலிக்கு அரவை செய்கின்ற மில்களிடமிருந்து கொள்முதல் செய்வதில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, மில் சொந்தக்காரர்களிடமிருந்து அரசாங்கம் கோரிய அளவு கிடைக்கவில்லை என்று தெரிவதால், எதிர்பார்த்த அளவுக்கு கொள்முதல்

செய்வதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது? இப்போதுள்ள முறை சரியல்ல என்று கருதப்படுமானால், லெவி முறையில் ஒரு ஏக்கருக்கு இத்தனை அளவு நெல் கொடுக்கவேண்டும் என்ற முறையைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: சென்ற ஆண்டு மில் சொந்தக்காரர்கள் அவர்களாகவே முன் வந்து வாலண்டரியாக தந்ததில் 51 ஆயிரம் டன், 52 ஆயிரம் டன் அளவுக்கு கிடைத்தது. இப்போது நானும் கனம் முதலமைச்சர் அவர்களும் கேட்டுக்கொண்டோம். மில் சொந்தக்காரர்கள் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதன்படி நாம் எண்ணுகின்ற அளவு டன்னேஜ் நிச்சயமாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. அ. ராகவ ரெட்டி: ஸார், மில் வைத்திருப்பவர்கள் எல்லாம் வியாபாரிகள் அல்ல. கூலிக்கு அரைத்துக் கொடுக்கிறவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் ஒவ்வொரு மில் சொந்தக்காரர்களிடத்திலும் இருந்து நிர்ப்பந்தமாக வாங்குகிறார்கள். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையிலும் எந்த மில்காரர்களும் அவர்களாகவே வந்து கொடுப்பதற்கு முன் வரவில்லை என்று கேள்விப்படுகிறேன். அம்மாதிரி இருப்பதால் சர்க்கார் இந்த விஷயத்தில் என்ன முடிவு எடுக்கும்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அப்படி ஒன்றும் இல்லை. இதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், கோவையில் மில்காரர்களை எல்லாம் கலக்டர் அவர்கள் அழைத்துக் கேட்டார்கள். அதில் எல்லோரும் அரசாங்கத்திற்கு கொடுப்பதற்கு பிரியப்படுகிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். அவ்விதம் பிரியப்படுகிறவர்கள் கொடுக்கிறார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஸார், அரிசியைப் பொறுத்தவரையில், அதனை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு போதுமான பணம் கிடைப்பதில்லை. அதே நேரத்தில் அரிசியை உபயோகிக்கிறவர்கள் விலை அதிகமாக இருக்கிறது என்று புகார் செய்கிறார்கள். ஆகவே குறைந்த விலையில் வியாபாரிகள் வாங்கிக்கொள்ளுகிற நிலை இருந்து கொண்டிருப்பதால், அதை மாற்றி அமைக்கின்ற முறையில், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கின்ற அளவில், கரும்புக்கு குறைந்த விலை நிர்ணயம் செய்திருப்பது போன்று, தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லுக்கும் குறைந்த விலையை நிர்ணயிக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போதுள்ள விலையைவிடவும் சற்று கூடுதலாகக் கொடுக்கவேண்டும் என்பதுதான் சர்க்காரின் ஆவல். நமது முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்லவிருக்கிறார்கள். இதைப்பற்றிப் பேசுவதற்கும் காரணகாரியங்களோடு செல்கின்றார்கள். இதைப்பற்றி பின்னால் சர்க்கார் யோசனை செய்யும்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: கூலிக்கு அரைக்கின்ற மில்களில், விவசாயிகளிடமிருந்து ஒரு மூட்டைக்கு 5 படி, 10 படி என்று மில் சொந்தக்காரர்கள் அரசாங்கத்தின் கொள்முதல் விலைக்கு வாங்கிக் கொண்டு, அதிலிருந்து அரசாங்கத்திற்கு கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டு, மீதமுள்ளதை அதிக விலைக்கு "ஓப்பன் மார்க்கட்டில்" விற்று வருகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அப்படித் தகவல் இல்லை என்றாலும், மில் சொந்தக்காரர்களிடம் விவசாயிகள் கொடுக்கிறார்கள் என்றால் அதை வேண்டாம் என்று சொல்லுவதில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குப் போதுமான விலையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது இந்த விலையை அதிகமாகக் கொடுப்பதில் என்ன சங்கடங்கள் இருக்கின்றன என்பதை தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போது அரிசிக்கு ஒரு 'மாண்ட்'-க்கு 17 ரூபாய் 25 ந.பை. அளவுக்கு அரசாங்கம் விலை நிர்ணயித்திருக்கிறது. அரசாங்கம் இப்போது 19 ரூபாய் 50 ந.பை. கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும் போது 2 ரூபாய் 25 ந.பை. அதிகமாகக் கிடைக்கும். இதற்காக அரசாங்கம் முயற்சித்துக்கொண்டிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இப்போது அரிசியை மில் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்குகிற முறையில் நேரடியாக சர்க்கார் விவசாயிகளிடமிருந்து பெறுகிற போது ஏற்படுகிற சங்கடங்களிலிருந்து தப்புவதற்காக, விவசாயிகள் மில்காரர்கள் மூலமாக தொல்லை அனுபவிக்கட்டும் என்ற முறையில் இந்தக் கொள்கை கையாளப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். சர்க்காரே நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்தால் குறைந்த விலைக்கு கொள் முதல் செய்கிறார்கள் என்று சர்க்கார் மீது கோபப்படுவார்கள். அரிசியை மில் சொந்தக்காரர்கள் மூலமாக வாங்கும்போது மில்காரர்கள் மீது விவசாயிகள் குற்றம் சாட்டுவார்களே தவிர சர்க்காரை குற்றம் சாட்டமாட்டார்கள். ஆகையால் அவர்களுடைய தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று இந்தக் கொள்கை கையாளப்படுகிறதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: கனம் அங்கத்தினர் இப்போது கேட்கும் கேள்வியிலிருந்து நன்றாக விளங்குகிறது. அரசாங்கம் விவசாயிகளுக்குக் கஷ்டத்தை உண்டாக்கக்கூடாது என்ற கொள்கையில் இருக்கிறார்கள் என்பது.

[10th March 1964

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார், கொள்முதல் செய்யக்கூடிய அரிசிக்கு உடனடியாக பணம் பட்டுவாடா ஆவதில்லை என்று சொல்லப்படுகிறது. உடனடியாகப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்தால் மில் சொந்தக்காரர்கள் தாராளமாக அரிசி கொடுக்க முன் வருவார்கள். அதற்கு ஏதாவது வழிவகை செய்ய அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அந்த விதமான தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: அரிசி மில் சொந்தக்காரர்களிடமிருந்து கட்டாயமாகக் கொள்முதல் செய்வதை ஆட்சேபித்து உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. அது பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? என்ன மேல் நடவடிக்கை எடுக்க உத்சேசிக்கப் பட்டிருக்கிறது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அப்படி தகவல் ஒன்றும் என்னிடத்தில் இப்போது இல்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தலைவர் அவர்களே, கூலிக்கு நெல்லை அரைப்பார்கள் இத்தனை மூட்டை தரவேண்டும் என்ற வரம்பு இருந்தாலும் அதற்கு மேலும் தரவேண்டும் என்று ரெவின்யூ அதிகாரிகள் மூலமாகச் சொல்லப்படுகிறது. மேற் கொண்டு அரிசி அரைப்பவர்களிடமிருந்து பெற்று அதைப் பொது மார்க்கெட்டில் அதிக விலைக்கு மில்லர்கள் விற்கிறார்கள். குறிப்பிட்ட நிர்ணய வரம்பு வரையிலும் அரிசி அரைப்பவர் களிடமிருந்து வாங்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: கூலிக்கு அரைப்பவர்கள் சொந்த நெல்லை அரைக்கக் கூடும் அல்லது விலைக்கு வாங்கிய நெல்லை அரைக்கக் கூடும். ரெவின்யூ அஃபிஷியல்ஸ் எப்படி கட்டாயமாக கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருப்பார்கள் என்று தெரியவில்லை. கொடுக்கவேண்டும் என்று கேட்டிருந்தாலும் எந்த முறையில் அவர்கள் கட்டுப் படுத்திக்கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

Co-operative Housing Societies

* 200 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have issued any order prohibiting the opening of new Co-operative Housing Societies due to emergency;

(*b*) the number of applications for starting new societies pending with the Registrar as on 30th November 1963; and

(*c*) whether the Government have stopped the payment of loans for constructing houses for the existing societies?

10th March 1964]

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No such orders have been issued.

(*b*) No proposals for organisation of Co-operative Housing Societies are pending in the Office of the Registrar of Co-operative Societies.

(*c*) Yes. Government have issued instructions to the Registrar of Co-operative Societies in December 1962 that no new loans need be sanctioned to the Co-operative Housing Societies for the construction of new houses under the State Housing Schemes, in view of the National Emergency. The Government have, however, allotted a sum of Rs. 6 lakhs under Low Income Group Housing and Rs. 10 lakhs under Middle Income Group Housing Schemes from out of the funds obtained from the Life Insurance Corporation of India, for grant of loans to Co-operative Housing Societies.

திரு. எம். வி. கரிவேங்கடம்: நெருக்கடி நிலை ஓரளவுக்கு தளர்ந்துள்ளதாகக் கருதப்படும் நிலையில் மேலும் கூடுதலாக தொகை ஒதுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ராஜ்ய சர்க்கார் நெருக்கடி நிதி நிலை இன்னும் தளரவில்லை. நாட்டின் நெருக்கடி நிலை எப்படி இருக்கிறதோ அவ்வாறு தான் ராஜ்ய சர்க்காரின் நிதி நிலையும் இன்னும் கஷ்டமாக இருக்கிறது. அதனால்தான் பணம் கொடுக்க முடியவில்லை.

* 201 *Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that in the Weavers' Housing Colony of Thingalur Weavers' Co-operative Society at Erode, two houses have been occupied by unauthorised persons, one by a doctor and the other by a Sub-Inspector of Police; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) A police station and a hospital were sanctioned to the Thingalur village in the year 1962. As the Sub-Inspector of Police and the doctor could not secure suitable residence for their stay, they had stayed in the colony houses.

* 202 கேள்வி.—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிராமங்களில் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் சொந்தமாக வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் 5 ஏக்கருக்கும் குறைவாக குத்தகையாக விவசாயம் செய்பவர்களுக்கும் கிராமிய கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்தில் 1/5 பாகம் பங்குத்தொகை கட்ட வேண்டியதை எடுத்துவிட்டு முழுப்பணம் கடனாகக் கொடுக்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: There is no such proposal.

[10th March 1964

*203 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to raise the percentage of the loans issued to the individual members of Co-operative Building Societies; and

(*b*) if so, to what extent?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், தற்போது கொடுக்கப் படும் லோன், ஒன்றுக்கு 5 வீதம் இருப்பதால் பல ஏழை மக்கள் குடியிருக்கும் வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியாது இருப்பதால் ஒன்றுக்கு 10 ஆக உயர்த்திக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏழை மக்கள் என்று சொன்னால் ரூரல் ஹவுஸிங் சொஸைட்டியில் அல்லது வில்லேஜ் ஹவுஸிங் ப்ராஜெக்டில் வீடு விரும்புகிறார்களா என்று தெரிய வேண்டும். பொதுவாக வீடு வேண்டுமென்று விரும்புகிறவர்கள் ஐந்தில் ஒரு பகுதி முதலாகப் போடவேண்டுமென்று விதித்திருக்கிறோம். அதை இன்னும் தளர்த்தினால் போதிய அளவுக்கு செக்யூரிட்டி இருக்காது என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், செக்யூரிட்டி போதாமல் இருந்தால் மற்ற சொத்துக்களின் பேரில் அதை ஆதாரமாக போட்டுக்கொண்டு ஒன்றுக்கு 10 வீதம் கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : In the case of Rural Housing Societies, if agricultural lands owned by the Members are given as additional security, the loan will be given up to seven times.

திரு. செ. கோ. விஸ்வநாதன் : ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் எந்தெந்த ஜில்லாக்களில் செயல்படுகிறது? அந்தத் திட்டத்தில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் எல்லா ஜில்லாக்களிலும் உண்டு. வில்லேஜ் ஹவுஸிங் ப்ராஜெக்ட் டைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இன்றைக்கு மேஜை மீது ஒரு அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. 'ஹவுஸிங் இன் மெட்ராஸ் ஸ்டேட்' என்று. அதில் இந்த விவரங்களெல்லாம் கொடுக்கப்பட்டிருக் கின்றன.

10th March 1964]

*204 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received recently any memorandum from the weavers of Salem district regarding their difficulties in their being asked to pay a monthly instalment of Rs. 20 instead of Rs. 10 for the houses constructed for them; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

குறுகிய கால நஞ்சைப்பயிர் விதைகள்

205 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் விவசாய இலாகாவின் கையிருப்பில் போதுமான குறுகிய கால நஞ்சைப்பயிருக்குரிய வித்துக்கள் இல்லை என்பது உண்மையா?

(இ) அப்படியானால், தேவையான வித்துக்கள் உடனே சப்ளை செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) உண்மை அல்ல. கிராம சகாயக் களுக்கு வழங்குவதற்காக கிராம உற்பத்தித் திட்டங்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குறியளவுகளுக்கேற்ப குறுகிய கால நெற்பயிர் விதைகள் போதிய அளவுக்கு விவசாயத் துறையின ரிடம் உள்ளன.

(இ) ரயத்துக்களுக்கு வழங்குவதற்கு வேண்டியிருக்கும் மறு உற்பத்தி (Secondary) விதைகளை உற்பத்தி செய்து தருவதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் பஞ்சாயத்துக்கள் தேர்ந் தெடுக்கும் கிராம சகாயக்களுக்கு மட்டுமே முதல் உற்பத்தி Primary) விதைகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய கிராம சகாயக்களுக்கு முதல் உற்பத்தி விதைகளை வழங்குவதில் கஷ்டம் எதுவும் ஏற்படவில்லை.

(அ) No. There is enough stock of primary seeds of short-term paddy with the Agricultural Department with reference to the targets fixed under the Village Production Plans for supply to gramasahayaks.

(இ) The primary seeds are meant for supply only to gramasahayaks selected by the respective panchayats in each panchayat union for producing secondary seeds required for distribution to ryots and there is no difficulty in supplying primary seeds to such gramasahayaks.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், குறுகிய கால நெற் பயிருக்கு அந்த ஜில்லாவிற்குத் தேவையான விதைகளின் அளவு என்ன என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : டி. கே. என். 6 என்ற ஒட்டுக் கிச்சிலி விதை இந்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்திற்கு போதிய அளவுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அந்த விதமான தட்டுப்பாடு இல்லாமல் அடுத்த ஆண்டுக்காவது வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இது திருநெல்வேலி ஜில்லா சம்பந்தப்பட்ட கேள்வி. அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

MR. SPEAKER : The hon. Member, Pulavar Govindan, is always putting supplementary questions which do not arise from the main question and complaining that the Hon. Ministers are not answering the questions properly. The Hon. Ministers concerned should say immediately that the supplementary question does not arise from the main question and should not hesitate to say so.

மதுரையில் விவசாயக் கல்லூரி

* 206 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் விவசாயக் கல்லூரி அமைப்பதற்கான திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆமென்றால், எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) From July 1965, if possible.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், மதுரையில் விவசாயக் கல்லூரி
9-00 a.m. எந்த இடத்தில் அமைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? அதன் விஸ்தீரணம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாயக் கல்லூரியை மதுரையை அடுத்துள்ள ஒத்தக்கடைப் பகுதியில் உள்ள வெளவால் தோட்டம் என்ற பகுதியில் அமைப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கு சர்க்கார் நிலம் 109 ஏக்கர் இருக்கிறது. ஏறக்குறைய 80 ஏக்கர் கல்லூரிக்காக எடுக்கப்படும். மேலும் 200 ஏக்கருக்கு மேல் விவசாய நிலத்தையும் 'அக்வையர்' செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Agricultural University

* 207 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government for starting an Agricultural University in this State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) The details are being worked out.

Fair price shops for rice

* 208 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of fair price shops functioning in Madras City as on 1st December 1963 for the distribution of rice;

(*b*) the price at which each variety of rice is sold therein; and

(*c*) the total quantity of rice sold through these fair price shops during the months of October, November and December 1963?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) அக்டோபர், நவம்பர் மாதங்களிலும், 1—12—1963-லும் சென்னை நகரத்தில் நியாயவிலைக் கடைகள் செயல்படவில்லை. அதன் காரணமாக நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி விநியோகிக்கப்படவில்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : மதுரை மாவட்டத்தில் எத்தனை நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டன? நியாய விலைக் கடைகள் வைக்க எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : மூலக் கேள்வி சென்னை நகரத்தைப் பொறுத்தது. மதுரையைப் பற்றிய தகவல் என்னிடம் இல்லை.

திருமதி சி. குழந்தையம்மாள் : நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி விற்பனை செய்வது கூட்டுறவு சொசைடிகளுக்கு மட்டுமல்லாமல் தனிப்பட்டவர்களுக்கும் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : சென்னையைப் பொறுத்தவரை டி.யு.சி.எஸ். போன்றவைகளிடம் கொடுத்திருக்கிறோம். தனிப்பட்டவர்களிடம் கொடுக்கும் உத்தேசம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அமைச்சர் அவர்கள் பதிலில் சென்னை நகரில் அரிசி நியாய விலைக் கடைகள் செயல்படவில்லை என்று தெரிவித்தார்கள். அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அக்டோபர்-நவம்பர் மாதங்களில் செயல்படவில்லை என்று சொன்னேன். டிசம்பரில் ஆரம்பித்தோம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : SIR, may I know how many fair price shops are there at present in the Madras City?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : சென்னை நகரத்தில் 100 நியாய விலைக் கடைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று இருந்தோம். ஒரு கடை சரியாக நடக்கவில்லை. 99 கடைகள் சரியாக நடைபெற்று வருகின்றன.

[10th March 1964

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் தற்போது 140 அல்லது 150 பேருக்குத்தான் அரிசி கொடுக்கப்படுகிறது. சென்னை நகர ஜனத் தொகையை நோக்கிப் பார்க்கும்போது இது மிகவும் குறைவாக இருப்பதால் மேலும் அதிகமாகக் கொடுக்க சர்க்கார் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது நமக்குக் கிடைக்கின்ற அரிசியை வைத்து ஒரு நாளைக்கு 15 மூட்டை விற்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

கனம் சபாநாயகர் : 140 பேர் 15 மூட்டை அரிசியையா சாப்பிடுகிறார்கள் !

புலவர் கா. கோவிந்தன் : பத்திரிகையில் கூடப் பார்த்திருக்கலாம் . . .

கனம் சபாநாயகர் : பத்திரிகையில் பார்த்ததை வைத்துக் கேள்விகள் கேட்கக் கூடாது. உண்மையான தகவல்களைக் கொண்டு நான் கேள்வி கேட்கவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : ஒரு கடையில் ஆள் ஒன்றுக்கு இரண்டு லிட்டர் அளவிலே கொடுக்கிறார்கள். இது போதுமானது அல்ல என்ற காரணத்தால் அதிக அளவுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இருக்கின்ற அரிசியை ஒரு ஆளுக்கு இரண்டு லிட்டர் வீதம் ஒரு கடையில் 15 மூட்டை அரிசி கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல் இப்போது கொடுக்க வசதி இல்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : SIR, may I know how is the control or check exercised by the concerned Department and the Government to prevent abuses in the selling of rice in the fair price shops?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அரிசி விநியோகம் சரிவர நடைபெறுகிறதா என்பதை இலாகா அதிகாரிகள் நல்ல முறையில் கண்காணித்து வருகிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகளை நடத்த முன்வராத இடங்களில் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க என்ன ஆட்சேபனை ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : சென்னையைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கங்கள் முன்வந்து 99 கடைகளில் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தற்போது நியாய விலைக் கடைகளில் ஒரு நபருக்கு 2 லிட்டர் அரிசிதான் கொடுக்கப்படுகிறது. தினமும் வந்து கியூவில் நின்று இரண்டு லிட்டர் அரிசி வாங்குவது கஷ்ட-

10th March 1964]

மாக இருப்பதால் ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு சராசரி பத்து லிட்டர் என்று ஒரே தடவையாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போதே எல்லோருக்கும் அரிசி கிடைப்பதில்லை என்ற புகார் இருக்கிறது. அவ்வாறு மொத்தமாகக் கொடுத்தால் புகார்கள் பெருகிவிடும்.

திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம் : சென்னை நகரில் நியாய விலைக் கடைகளில் ஒரு லிட்டர் பச்சரிசி என்ன விலைக்கு விற்கப்படுகிறது? புழுங்கல் அரிசி என்ன விலைக்கு விற்கப்படுகிறது? ஒரு குடும்பத்திற்கு இரண்டு லிட்டர் அரிசி போதுமானதாக இருக்குமா ?

THE HON. SRI. N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The selling price in the fair price shops ranges from 36 nP. to 42 nP.

திரு. ஆ. துரையரசன் : தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கி பட்டுக்கோட்டை தாலுக்காக்களில் பருவ மழை தவறியதன் காரணமாக பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது . . .

MR. SPEAKER : The main question relates to the running of fair price shops in Madras City.

திரு. ஆ. துரையரசன் : ஸ்டேட்மெண்டில் எல்லா ஜில்லாக்களைப் பற்றிய விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அறந்தாங்கி பகுதியில் இந்த ஆண்டு நியாயவிலைக் கடைகளைத் திறக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டதல்ல.

திரு. து. ப. அழகமுத்து : இன்னும் குறுகிய காலத்தில் சென்னை நகரில் உள்ள நியாய விலைக் கடைகளை மூடப் போவதாக சொல்கிறார்கள். அது உண்மையா ? அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : முதலில் பிப்ரவரி மாதம் வரையில் நியாய விலைக் கடைகளை நடத்துவதாக இருந்தோம். தற்போது மார்ச் கடைசி வரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. செ. கோ. விஸ்வநாதன் : செங்கல்பட்டு ஜில்லாவில் தனி நபர்களுக்கு நியாய விலைக் கடைகள் வைக்க அனுமதி வழங்கப்பட்டது. அவர்கள் அரிசியை ஆவடி டெப்போவில் 500 ரூபாய்க்கு மேல் அதிகம் வைத்து விற்று விட்டதாகப் புகார் வந்திருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : மூலக் கேள்வியில் இது வரவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சென்னை நகரில் நியாய விலைக் கடைகள் டிவிஷன் அளவிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா? அல்லது ஏழைகள் எங்கு அதிகமாக வாழ்கிறார்களோ அந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அநேகமாக டிவிஷன் அளவிலேதான் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அரிசி நியாய விலைக் கடைகள் மார்ச் மாதம் வரை நடைபெறுவதற்குத்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதிகமாக நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் நிலையில் இந்த முடிவுக்கு அரசினர் வரக் காரணம் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அரிசித் தட்டுப்பாடு இருக்கும்போது தான் நியாய விலைக் கடைகள் தேவை. மார்ச் மாதத்திற்குப் பிறகும் அரிசி தட்டுப்பாடு இருக்கும் என்ற நிலைமை ஏற்பட்டால் மேலும் தொடர்ந்து அவற்றை நீடிக்க ஏற்பாடு செய்யப்படும்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும் அரிசி சரியான முறையில் விநியோகிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க உஷார் கமிட்டியை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : முன்பே இதற்குப் பதில் சொன்னேன். சிவில் சப்ளையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் நல்ல முறையில் இதனைக் கண்காணித்து வருகிறார்கள். அரிசி சரிவர விநியோகிக்கப்படவில்லை என்ற புகார் எதுவும் எனக்கு வரவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தற்போது நியாய விலைக் கடைகளில் அமெரிக்கன் அரிசி 'ஃபஸ்ட் சார்ட், செகண்ட் சார்ட்' விற்கப்படுகிறது. நெல்லூர் பச்சரிசியை விற்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மத்திய அரசாங்க கோடவுன்களில் இருந்து கொடுக்கிற அரிசியைத்தான் நாம் நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகிக்கிறோம். அவர்கள் என்ன அரிசியைக் கொடுக்கிறார்களோ அதைத்தான் விநியோகிக்க முடியும்.

Vegetable cultivation

* 209 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state the details of the schemes for increasing the production of vegetables to meet the growing demands in the big cities and towns in the State?

THE HON. SRI P. KAKKAN : A statement[a] is placed on the Table of the House.

சபையில் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

[a] Printed as Appendix I on page 224.

திரு. து. ப. அழகமுத்து : சபை முன்பு வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் "தோட்டக்காரர் ஒருவருக்கு ஏகரா ஒன்றுக்கு ரூ. 120 வரை சொந்த ஜாமீனில் கடன் வழங்கப்படுகிறது. பிரதி பருவ காலத்திற்கு அதிகபட்சம் ரூ. 240 வரை கடன் வழங்கப்படுகிறது. அறுவடைக்காலத்தில் கடன் தொகை திருப்பி வசூலிக்கப்படுகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அறுவடைக் காலத்தில் வசூலிக்கப்படுகிறது என்றால், ஒரே தடவையிலா, பல தடவைகளிலா? அவர்களுக்குப் போதுமான மகசூல் கிடைக்கவில்லை என்றால், எப்படி அந்தக் கடன் வசூலிக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினர் தெரிவித்தபடி ரூ. 120 கடன் கொடுக்கிறோம். அவர்கள் அதை வாங்கி பயிரிட்டு நல்ல முறையில் காய்கறி உற்பத்தி செய்து பின்னாலே திருப்பிக் கொடுக்கவேண்டும்.

கனம் சபாநாயகர் : அடுத்த சீஸனில் பணம் வேண்டுமென்றால், இந்த சீஸனில் கடனைத் திருப்பித் தரவேண்டும்.

கனம் திரு. பூ. கக்கன் : அப்படி ஏதாகிலும் விதைகள் போட்டு இயற்கை கோளாறினால் கஷ்டம் ஏற்பட்டால், அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் அப்பொழுது பரிசீலனை செய்து கவனிக்கப்படும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, காய்கறி பயிரிடுவதிலே நம்முடைய சென்னையிலே எந்த அளவுக்கு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது? அதன் பலனாக பயன் கிடைத்திருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : நல்ல பலன் கிடைத்திருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The Speaker also got a consolation prize for cultivating vegetables.

திரு. எம். வி. கரிவேங்கடம் : சமீப காலத்திலே காய்கறியின் விலை விஷம் போல் உயர்ந்திருக்கிறது. என்ன காரணம்? அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : காய்கறி விலை முன்பு உயர்ந்திருந்தது. காய்கறி வியாபாரிகளையெல்லாம் அரசாங்கம் கூப்பிட்டு விலைகளை அதிகமாக உயர்த்தக்கூடாது, பார்த்து உதவி செய்யவேண்டும் என்று கேட்டோம். அவர்களும் உதவி செய்தார்கள். காய்கறிகள் அதிகமாக உற்பத்தி செய்தால்தான் விலை குறையும். காய்கறி உற்பத்தி ஒரு சீஸனில் குறைந்தால், அப்பொழுது காய்கறி விலை கொஞ்சம் உயரும் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. கமலநாதன் : காய்கறி விலையைக் கட்டுப்படுத்துவதன் நோக்கத்தோடு தியாகராயநகரில் கூட்டுறவு முறையில் பெண்கள் காய்கறிக் கடை வைத்து மிக சரசமான விலைக்குக் கொடுத்தார்

கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட கூட்டுறவுமுறையில் கடைகள் திறக்கும் ஏற்பாட்டை மற்ற இடங்களுக்கும் விஸ்தரிப்பதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு கடை அல்ல, 2, 3 காய்கறி கடைகள் கூட்டுறவு முறையில் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முதலில் சென்னையில் பரீட்சித்துப்பார்த்து, அதில் வெற்றியடைந்தால் இதர நகரங்களுக்கும் விஸ்தரிப்பதுபற்றி யோசிக்கலாம்.

புலவர் கா. கோவிந்தன் : மாநிலம் முழுவதும் 500 நியாயவிலைக் கடைகள் திறந்திருப்பதாக அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. அப்படிப் பார்த்தால் அந்தக் கடைகள் பெரிய நகரங்களில்தான் இருப்பதாகத் தெரிகிறது. கிராமப்புற மக்களுக்கு இப்படிப்பட்ட நியாயவிலைக் கடைகளைத் திறக்கவேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் என் செய்யவில்லை?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தக் கேள்வி காய்கறி சம்பந்தப்பட்ட நியாயவிலைக் கடைகளைப் பற்றியது. கனம் அங்கத்தினர் அரிசி சம்பந்தப்பட்ட நியாயவிலைக் கடைகளைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் போலும்.

MR. SPEAKER : Why should the hon. Member try to confuse the Hon. Minister?

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்தக் காய்கறி சாகுபடித் திட்டத்தின்படி விவசாயிகள் அம்மாதிரி சாகுபடி செய்தால் நல்ல பலன் கிடைக்கும் என்று செய்கிறார்கள். ஆனால், சாகுபடி நேரத்தில் பூச்சி முதலிய தொல்லைகள் ஏற்பட்டால் அதற்கு அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? சர்க்கார் அதற்கு என்ன பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் கடன் கொடுக்கிறோம். அதோடு பாதி விலைக்கு காய்கறி விதைகள் கொடுக்கப்படுகிறது. பூச்சி மருந்தும் பாதி விலைக்குக் கொடுக்கப்படுகிறது. அந்தந்த ஏரியாவில் அதிகாரிகள் கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள். அதற்காக ஒரு ஸ்பெஷல் டிஸ்டிரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசரை மாகாணம் பூராவுக்கும் நியமித்திருக்கிறோம். அவர்கள் எல்லா ஜில்லாக்களுக்கும் சென்று இப்பொழுது திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர் ஆகிய ஜில்லாக்களில் காய்கறி அதிகமாக உற்பத்தி செய்யும் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம்— ஆங்காங்கு இருக்கும் டெமான்ஸ்டிரேடர், மேஸ்திரிகள் ஆகியோர்களின் வேலைகளைக் கண்காணித்து வருகிறார். இயற்கை கோளாறு காரணமாக கஷ்டம் ஏற்பட்டால், அதைப் பற்றி கவனிக்கலாம். அதே சமயத்தில் காய்கறி விதைகளை வாங்கிக்கொண்டு காய்கறி பயிர் செய்யாமல் இருந்துவிட்டு, இயற்கைக் கோளாறு என்று சொன்னால், அதை அரசாங்கம் விட்டுவிடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சென்னை நகரத்தில் காய்கறியினுடைய அவசியம் தெரிந்து நகரத்திற்கு சுற்றுப்புறத்தில் உள்ள 5 மைல் ரேடியஸ், 10 மைல் ரேடியஸ் இடத்தில் விவசாயிகள் பூராவும் கட்டாயம் காய்கறிதான் உற்பத்தி செய்யவேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : கட்டாயப்படுத்த முடியாது. சென்னை நகரத்திற்கு அப்பால் 30 மைல் இடத்திற்குள் காய்கறி அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் சலுகை கொடுத்து உதவி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இந்தக் காய்கறி உற்பத்தி திட்டமானது மக்கள் மத்தியிலே ஒரு நல்ல எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஜில்லாக்களைச் சுற்றி மூன்று மைல் அளவிலே காய்கறி உற்பத்தி செய்யும் திட்டத்தை இப்பொழுது அமுல் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதை மாற்றி எல்லாப் பகுதிகளுக்கும், ஜில்லா முழுமைக்கும் இந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது வழிசெய்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் 30 மைல் சுற்றியுள்ள இடங்களில் காய்கறி அதிகமாக உற்பத்தி செய்து பார்ப்போம். பின்னால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : சென்னையிலே கனம் அமைச்சர்கள் தங்கள் பங்களாக்களில் காய்கறி பயிர்செய்திருக்கிறார்களா என்பதைப் பற்றி அறிவிக்க முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : அநேகமாக எல்லா மந்திரிகள் வீடுகளிலும் மட்டுமல்லாமல் ஸ்பீக்கர் அவர்கள் வீட்டிலும் காய்கறி உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : மாகாணத்தில் 'ஹார்டிகல்சரல் ஷோ' 'பொடானிகல் ஷோ' என்ற முறையில் ஹார்டிகல்ச்ருக்கு ரொம்ப உற்சாகம் கொடுத்து, நல்ல முறையில் காய்கறி உற்பத்தி செய்கிறவர்களுக்கு பரிசுகள் கொடுப்பது, அதாவது முதல் பிரைஸ் ரூ. 500 என்று வைப்பது நல்லது இல்லையா?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்காகத் தான் பிரைஸ் கொடுக்கப்படுகிறது. ரூ. 500 என்று வைக்கவில்லை. ஆனால், எவ்வளவு தூரம் பிரைஸ் கொடுத்து உற்சாகப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் செய்துகொண்டு வருகிறோம்.

திரு. ஏ. ஆறுமுகம் : இந்தத் திட்டத்தின் கீழே எந்த அமைச்சர்கள் பரிசு பெற்றிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : எனக்கு ஞாபகம் இல்லை. எங்கள் வீட்டில் கூட பரிசு பெற்றிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய சபா நாயகர் வீட்டிலும் பரிசு பெற்றிருக்கிறார்கள். விளம்பர மந்திரி அவர்களும் பரிசு வாங்கியிருக்கிறார்கள். இங்கு இருக்கக்கூடிய மூன்று மந்திரிகள் பரிசு வாங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, பல்வேறு முறையில் கிராமத்தில் பயிர் செய்யப்படுகிற காய்கறிகளை வாங்குவதற்கு ஏற்பாட்டைச் செய்கிருர்கள். பால் சொஸைடியிலிருந்து 'வான்' வந்து எல்லா கிராமங்களிலும் பாலை வாங்கிக்கொண்டு போய் விநியோகம் செய்வதுபோல், காய்கறியை நிறுத்து, ஒரு நிர்ணய விலையை வைத்து, அதை வாங்கிக்கொண்டு வந்து நியாயமான விலைக்கு விற்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிருர்களா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பால் விநியோகம் சொஸைடி மாதிரி இதை நடத்த முடியாது. எவ்வளவு தூரம் அவ்வப்பொழுது காய்கறிகளை சொஸைடி மூலம் வாங்கிக்கொண்டு வந்து விநியோகம் செய்ய முன்வர முடியுமோ அவ்வளவு தூரம் முன்வந்திருக்கிருேம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தோட்டங்களில் காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் சுயதேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு விளைச்சல் அமைந்திருக்கிறதா ? மிச்சப்பட்டு பிறருக்கு வழங்கும் அளவுக்கு அமைந்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : மிச்சப்பட்டு சில சமயங்களில் மற்றவர்களுக்கும் கொடுத்து உதவி செய்கிருேம். 100-க்கு 100 மந்திரிமார்கள் வீடுகளுக்கு காய்கறி கிடைக்கிறது என்று சொல்ல முடியாது.

கனம் சபாநாயகர் : மிச்சப்பட்டாலும் வியாபாரம் செய்யத் தெரியவில்லை.

திரு. அ. ராகவ ரெட்டி : தலைவர் அவர்களே, சென்னையில் சுற்றுப் புறத்திலே 30 மைலுக்கு நல்ல வளம் இருக்கிறது, தண்ணீரும் வசதியாக இருக்கிறது. அதே சமயத்தில் இது சம்பந்தமாக கிராமாந்தரங்களிலே அதிகாரிகள் எந்த விதமான ஏற்பாடும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. விதைகள் அரை விலைக்குக் கொடுப்பதோ, எரு, மருந்துகள் அரைவிலைக்குக் கொடுப்பதோ, கிராமங்களில் தெரியவில்லை. இதை கவனித்து சர்க்கார் வேண்டியதை செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, சபைக்கு இந்த விவரத்தைச் சொல்லுகிறேன்.

மதராஸ்	..	ஸ்பெஷல் அக்ரிகல்சுரல் டெமான்ஸ்ட்டோர்	4
		டெமான்ஸ்ட்ரேஷன் மேஸ்திரி	.. 28
திருச்சி	..	Special Agricultural Demonstrator	.. 3
		Demonstration Maistry	.. 9
மதுரை	..	Special Agricultural Demonstrator	.. 4
		Demonstration Maistry	.. 12
திருநெல்வேலி	..	Special Agricultural Demonstrator	.. 4
		Demonstration Maistry	.. 12

கோயம்புத்தூர்	..	Special Agricultural Demonstrator	.. 4
		Demonstration Maistry	.. 12
கன்னியாகுமரி	..	Special Agricultural Demonstrator	.. 1
		Deonstration Maistry	.. 4

இந்த ஏற்பாட்டின்கீழ் கவனிக்கிருர்கள். அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட விவசாயிகள் அதிகாரிகளைக் கண்டு பழக ஊக்கம் அளித்தால் பலன் இருக்கும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், கறிகாய்கள் உற்பத்தி செய்வதில், நிறைய செலவு ஆகிறது. ஒரு மூட்டை கறிகாயில் உள்ள சத்து ஒரு சிறிய மீனில் இருக்கிறது என்று சொல்லுகிருர்கள். ஆகவே கறிகாய்களை உண்ணுவதைவிட மீன் உண்ணும் பழக்கத்தை அமைச்சரவர்கள் பிரசாரத்தின் மூலம் விரிவுபடுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம். திரு. பூ. கக்கன் : முதலில் பிரசாரம் செய்வது கறிகாய்களுக்குத்தான். மீன்களுக்கு அல்ல.

கனம் சபாநாயகர் : போதிய அளவு மீன் இப்பொழுதே கிடைக்கவில்லை. பிரசாரம் தேவை இல்லை.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்த போட்டி எல்லோருக்கும் சேர்ந்து நடந்ததா அல்லது சென்னை நகரத்திலுள்ள அமைச்சர் வீடுகளுக்கு மட்டும் நடந்ததா ?

கனம் சபாநாயகர் : போட்டிக்கு யார் சேர்ந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிருர்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : சென்னை நகரத்திலுள்ள, கிச்சன் கார்டன் என்று சொல்லுகிருர்களே, அப்படிப்பட்ட எல்லா தோட்டங்களுக்கும் தான் இந்த போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

Prevention of hoarding of food-grains

* 210 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state the measures taken to prevent the hoarding of food-grains?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A statement[a] is placed on the Table of the House.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் "அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி விநியோக நிலை ஆகிய நிலவரங்கள் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அவசியம் நேரும் போது அத்தியாவசியப் பண்டச் சட்டவிதிகளும், இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகளும் பயன் படுத்தப் படும்" என்று போடப் பட்டிருக்கிறது. அதன் காரணமாக எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது, எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் ?

கனம். திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

[a] **Printed as appendix II on page 225—230.**

[10th March 1964

திரு. ஜே. மாதா கவுடர் : சார், இந்த அறிக்கையில் நீலகிரிக்கு 70 நியாய விலைக் கடைகள் என்று குறிப்பிடப் பட்டு இருக்கிறது. அதை அதிகரிக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் இப்பொழுது நீலகிரி ஜில்லாவில் 70 ஃபேர் ப்ரைஸ் ஷாப்புகள் இருக்கின்றன. அவசியம் ஏற்பட்டு, கலெக்டர் அதிகம் வேண்டுமென்றால், அது பற்றி முயற்சி எடுக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சபாநாயகர் அவர்களே, நியாய விலைக்கடைகளில் ஒரு லிட்டருக்கு 39 ந.பை. என்று விற்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் கோவையிலே சென்ட்ரல் கோடவுன் இருக்கிறது. அங்கே 39 ந.பை. க்கு வாங்கி நீலகிரியில் உள்ள கிராமப் புறங்களிலும் அதே விலைக்கு விற்க வேண்டியிருக்கிறது. அவர்கள் ட்ரான்ஸ்போர்டு சார்ஜையும் சேர்த்து 41 அல்லது 42 ந.பை.-க்கு விற்க அனுமதி கொடுக்கப்படுமா ? இல்லாவிட்டால் ஒரு சென்ட்ரல் கோடவுனை நீலகிரியிலேயே வைத்து அரிசி ஸ்டாக் செய்தால், சௌகரியமாக இருக்கும். அப்படிச் செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம். திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அங்கத்தினர் சொல்லுகின்ற விஷயத்தை பரிசீலனை செய்த பிறகு தான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அறிக்கையில் திருச்சிக்கு 10 நியாயவிலைக்கடைகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பொதுவாக அது, சர்ப்ளஸ் ஏரியா என்று சொல்லப் பட்டாலும், உண்மையிலேயே அங்கே அரிசி பற்றாக்குறை இருப்பதால் பொதுவாக எல்லா மேஜர் பஞ்சாயத்துக்களிலும், நியாய விலைக் கடைகளைத் திறக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அவசியம் என்று தகவல் வந்தால் அது பற்றி யோசிக்கப்படும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, சேலம் நகரைப் பொறுத்தவரை, சேலம் ஜில்லாவிலே 25 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதை அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அவசியம் என்று கலெக்டர் ரிபோர்ட் செய்தால் முயற்சி எடுக்கப்படும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the members.]

II. GOVERNMENT BILL.

THE TIRUCHIRAPPALLI KAIERUVARAM AND MATTUVARAM (EXTENSION OF APPLICATION) BILL, 1964.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I beg leave to introduce the Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram (Extension of Application) Bill, 1964.

10th March 1964]

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram (Extension of Appliaction) Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65

(1) DEMAND NO. IX—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

(2) DEMAND NO. XXXII—PENSIONS.

(3) DEMAND NO. XXXIII—MISCELLANEOUS.

(4) DEMAND NO. XXXVI—OTHER MISCELLANEOUS CONTRIBUTIONS AND ASSIGNMENTS.

(5) DEMAND NO. XLV—COMMUTED VALUE OF PENSIONS.

(6) DEMAND NO. XLVII—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 5,53,98,700 under Demand No. IX—District Administration and Miscellaneous."

திரு. பி. முருகையன் : கனம் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

" That the allotment of Rs. 5,53,98,700 under Demand No. IX—District Administration and Miscellaneous be reduced by Rs. 100."

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 4,05,21,800 under Demand No. XXXII—Pensions."

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

" That the allotment of Rs. 4,05,21,800 under Demand No. XXXII—Pensions, be reduced by Rs. 100."

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 2,52,78,500 under Demand No. XXXIII—Miscellaneous."

[10th March 1964

திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, என்னுடைய வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 2,52,78,500 under Demand No. XXXIII—Miscellaneous be reduced by Rs. 100."

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,67,54,900 under Demand No. XXXVI—Other Miscellaneous Contributions and Assignments."

திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, என்னுடைய வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 3,67,54,900 under Demand No. XXXVI—Other Miscellaneous Contributions and Assignments, be reduced by Rs. 100."

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,02,500 under Demand No. XLV—Committed value of Pensions."

திரு. எம். எஸ். மணி: கனம் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 6,02,500 under Demand No. XLV—Commuted value of Pensions, be reduced by Rs. 100."

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 28,80,56,400 under Demand No. XLVII—Loans and Advances by the State Government."

புலவர் கா. கோவிந்தன்: கனம் தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 28,80,56,400 under Demand No. XLVII—Loans and Advances by the State Government, be reduced by Rs. 100."

9-0 p.m.] MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

திரு. செ. கோ. விஸ்வநாதன்: கனம் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் என்ற நிலைப்பின்கீழுள்ள மானியக் கோரிக்கையின்மீது நானும் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கிராம நிர்வாக அமைப்பிலிருந்து மாவட்ட நிர்வாக அமைப்பு வரையில் இணைந்து செயல்பட்டால்தான் மாநில அரசாங்கம் திறம்படச் செயல்பட முடியும் என்ற நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. கிராம அதிகாரிகள் தருகிற புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டுதான் அமைச்சர்கள் திட்டங்கள் தீட்டி

10th March 1964] [திரு. செ. கோ. விஸ்வநாதன்]

அவற்றை நிறைவேற்றக்கூடிய முறை இப்பொழுது இருந்து வருகிறது. ஆனால், இப்பொழுது கிராம அதிகாரிகளுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் இடையே இருக்கிற தொடர்புகளைப் பற்றி யோசிக்கின்ற நேரத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையின்றிச் செயல்படுகிற நிலைமை இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கு முன்பு கிராம அதிகாரிகள் எல்லாம் இந்த உத்தியோகத்தை ஒரு குடும்ப கௌரவத்திற்காக வகித்து வந்தார்கள். அந்த வட்டாரத்திலே புகழ் பெற்றவர்களாக இருந்தவர்கள்தான் கிராம அதிகாரிகளாக இருந்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்பட்ட பிறகு, அந்தப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு ஆட்பட்டுச் செயல்படுகிற நிலைமையிலே இப்பொழுது அவர்களுடைய அதிகாரங்கள் இருந்து வருகின்றன. பஞ்சாயத்து நிர்வாகத்திலே இருக்கின்ற வீட்டு வரி முதற்கொண்டு மற்ற வரிகளை வசூலிப்பதற்கு இப்பொழுது கிராம அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதே நிலைமையில், கிராமத்தில் இருக்கின்ற வரைபடங்கள், கிராமங்களில் இருக்கின்ற விவரங்கள் அடங்கிய எல்லா நிலைமைகளையும் கிராம அதிகாரிகள் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வரைந்து கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருந்து வருகிறது. அதைப் பொறுத்தவரையில் கிராம அதிகாரிகள் நல்ல முறையில் செயல்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்களுக்கு இருக்கின்ற கருத்து வேறுபாடுகளாலும், மற்றும் கிராமத்திலே கோஷ்டிகள், பிரிவு காரணமாக அவர்கள் ஒற்றுமையாகச் செயல்படாத காரணத்தாலும், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வரவேண்டிய வருமானம் இதுவரை திருப்திகரமாக வரவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கிராம அதிகாரிகளுக்கும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகளை ஆராயும்போது, அந்தச் சிக்கல் எப்படி ஏற்படுகிறது என்ற நிலைமையையும் ஓரளவு சிந்தித்துப் பார்க்கவேண்டும். கிராம அதிகாரிகள் முழு நேர அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயல்படவேண்டியவர்களாக இருப்பதால், பஞ்சாயத்துக்கு உறுதுணையாக இருந்து, அவர்களுடைய பணிகளைச் செம்மையாகச் செய்வார்கள். இப்பொழுதுள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கான முறையில் கனம் அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி அவர்களுக்குத் தகுந்த யோசனைகளை அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, தாலுகா அலுவலகங்களை எடுத்துக்கொண்டால், அங்கே காலதாமதம்தான் ஆகிறதே தவிர, மிக வேகமாக அவைகள் செயல்படவில்லை. ஒரு சாதாரண விவசாயியோ அரிசனத் தோழரோ விண்ணப்பம் போட்டால், அந்த விண்ணப்பம், தாலுகா நிலையங்களில் சென்று விசாரிக்கும்போது, வந்து சேர

வில்லை என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறதே தவிர, விண்ணப்பத்தில் கண்டுள்ள கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலைமை இருந்து வருகிறது. குறிப்பாக, தாசில்தார்கள் எல்லாம் வெளியூர்களுக்குச் சுற்றுப் பயணம் செல்லும் நேரங்களிலும் மற்ற நேரங்களிலும் அவர்களை அலுவலகத்தில் பார்ப்பதற்கு வெகு சிரமமாக இருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து வருகிற பிரமுகர்களிலிருந்து நம்முடைய மாநில அமைச்சர் வரையில் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்குத்தான் தாசில்தார்கள் இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறார்களே தவிர, அந்தந்தத் தாலூகாக்களில் உள்ள நிர்வாகம் செம்மையாகச் செயல்படுவதற்கு இல்லாத நிலையிலே இருந்து வருகிறார்கள். ஆகவே, கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலும், தாலூகா அலுவலகங்களில் மிக இட நெருக்கடியான நிலையில் அலுவலர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். மாநில சர்க்கார்த் தலைமை அலுவலகங்களில் ஃபைல் வைப்பதற்கும் மற்ற தஸ்தா வேஜுகள் வைப்பதற்கும் சிறந்த முறையில் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தாலூகா தலைமை நிலையங்களில் இந்மாதிரி வசதிகள் இல்லை என்பது நாமெல்லோரும் அறிந்த உண்மை ஆகும். அது தவிர, தாலூகாவில் இருக்கும் ஊழியர்கள் இரவு எட்டு மணி வரையில் வேலை செய்யக்கூடிய நிலைமை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. காலையிலே புறப்பட்டு இரவு நேரம் சென்றுகூட வீடு திரும்பும் அளவுக்கு மிக அதிகமான வேலை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் தகுந்த முறையில் சீர் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் அறுபது நாட்களுக்கு ஒரு தடவை மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்று வருகின்றன. அப்படி நடைபெறுகின்ற கூட்டங்கள் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களாக இல்லாமல் ஒரு கருத்தரங்கு நடைபெறுவதுபோல் இருக்கிறதே தவிர, எந்த விதமான அதிகாரமும் பெற்றதாக அது செயல்படவில்லை. அதிகாரிகளும் சட்ட மன்ற உறுப்பினர்களும் இன்னும் மற்றவர்களும் ஒன்று கூடிக் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளத்தக்க இடமாக இருக்கிறதே தவிர, பஞ்சாயத்து யூனியனுடைய தலைவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் சொல்கிற பிரச்னைகள்—மின்சார இலாகா சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, சுகாதார இலாகா சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி—அடுத்து நடைபெறுகின்ற கூட்டத்திற்கு முன்பாக தீர்க்கப்படுகிறதா என்று பார்த்தால் நிச்சயமாகத் தீர்க்கப்படவில்லை. ஆகவே, மாவட்ட அபிவிருத்திக் குழு ஒரு நல்ல அதிகாரம் பெற்ற குழுவாகவும், அதே நேரத்தில் பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் நகரசபைகளும் செய்யாத பணிகளைத் தங்களுடைய அதிகாரத்தின் மூலமாகச் சிறந்த முறை

யில் செயல்பட்டு, திட்டங்களை நிறைவேற்றக்கூடிய அதிகாரம் பொருந்திய ஒரு குழுவாகவும் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் தலைநகரம் என்று பெயரளவுக்கு செங்கற்பட்டு நகரம் இருந்தாலும், இப்பொழுது அந்த மாவட்டத்தின் தலைமை நிலையங்கள் எல்லாம் சென்னைக்கு அடுத்த சைதாப்பேட்டையில் அமைந்திருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் அலுவலகமும், விவசாய இலாகா அதிகாரியின் அலுவலகமும் சைதாப்பேட்டையிலும், மாவட்டக் காதி கிராமக் கைத்தொழில் அதிகாரியின் அலுவலகம் சென்னை பெரியமேட்டிலும், ஒரு அலுவலகம் மாம்பலத்திலும், செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவு பண்டகசாலை தம்பு செட்டித் தெருவிலும் இப்படி ஒவ்வொரு தலைமை நிலையமும் சென்னையில் அமைந்திருக்கிறது. செங்கற்பட்டில் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது, அவருக்கு நகரசபை மூலமாக வரவேற்பு அளித்தபோது, இத்தகைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். செங்கற்பட்டு மாவட்டத் தலைநகரத்தைச் செங்கற்பட்டுக்கு மாற்றியமைப்பதன் மூலம் செங்கற்பட்டு நகரமும் ஒரு நல்ல நிலைமையிலே உயர்வு அடையும். மாவட்டத்தின் தலைநகரத்திலுள்ள அலுவலகங்களுக்கு மாவட்டத்தின் எல்லா பாகத்திலிருந்தும் வருகிற மக்கள் சென்னையை நாடிச் செல்ல வேண்டிய நிலைமை இல்லாமல், செங்கற்பட்டிலேயே அவர்களுக்குத் தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இத்தகைய காரணங்களை அமைச்சர் அவர்களுக்கு அந்த வரவேற்பின்போது நாங்கள் எடுத்துத் தெரிவித்தோம். வரவேற்புக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் நேரத்தில், "செங்கற்பட்டை மாவட்டத் தலைநகராக மாற்றுவதற்கு யோசனை இருக்கிறது, ஆனாலும் அந்த யோசனையை நான் ஏற்றுக்கொள்வதாக இல்லை, மாவட்டத் தலைநகராகக் கூடிய யோக்கியதை காஞ்சீபுரத்திற்குத்தான் இருக்கிறது, காஞ்சீபுரம் தான் சிறப்பும் புகழும் வாய்ந்ததாக இருக்கிறது, அந்த நகரத்திலே தான் மாவட்டத் தலைமை நிலையங்களை மாற்றியமைக்கவேண்டும்", என்று குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் இதை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். செங்கற்பட்டு நகரத்திற்கு இப்பொழுது மின்சார ரயில் வசதியும் வர இருக்கிறது. தென் பகுதிக்கும் வட பகுதிக்கும் செல்லக் கூடிய நெடுஞ்சாலை செங்கற்பட்டு வழியாகத்தான் போகிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலிருந்தும் செங்கற்பட்டோடு தொடர்புகொள்ள போக்குவரவு வசதி இருந்து கொண்டிருக்கிறது. செங்கற்பட்டு நகரத்தில் அமைக்கப்படக் கூடிய அலுவலகங்களில் வேலை பார்க்கும் அலுவலர்கள் குடியிருப்பதற்கு வசதியாக, செங்கற்பட்டு நகரத்தில் வீடு கட்டும் திட்டம் வெகு விரைவாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகிறது. செங்கற்பட்டு மாவட்ட வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் மூலம் வசதி செய்து தர முடியும் என்று நான் கருதுகிறேன். செங்கற்பட்

மேல்நாடுகளில், தனியார் துறையில் தான் இத்தகைய டிப்பிங் முறை இருக்கிறது. ஹோட்டலுக்குப் போனால் டிப்பிங் கொடுத்தால் தான் நல்ல காபி வரும். அடுத்த தடவை போனால் "வாருங்கள்" என்று புன்னகையோடு வரவேற்பான் என்றெல்லாம் சொல்வார்கள். டிப்பிங் இருந்தால் சர்விஸ் நன்றாக இருக்கும் என்பார்கள். ஆனால் நம் நாட்டில் பொதுத்துறையிலேயே இந்த டிப்பிங் சிஸ்டம் நீடிப்பது சரியல்ல. இதை ஒரே நாளிலே போக்கிவிட. முடியும் என்று நான் சொல்லமாட்டேன். ஆட்சியில் உள்ளவர்களால் மட்டும் இதை ஒழித்துவிட முடியாது. நிர்வாகத்துறையில் உள்ளவர்களும் ஒத்துழைத்தால் இதைப் போக்க முடியும். ஆகவே அரசாங்கத்தின் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும் இது. காரியத்தைச் செய்துவிட்டு ஒன்றிரண்டு எதிர்பார்த்தாலும் கூடப் பரவாயில்லை. முதலிலேயே மாமூல் கொடுக்கப்பட்டால் தான் பேப்பர் மூவ் ஆகும் என்பது சரியல்ல. அதைவிட பெரிய தவறு, அரசாங்க ஊழியர்கள் காலத்தைப்பற்றியே கவலை இல்லாமல் இருக்கிறார்கள். வரண்டாவிலும் ஹோட்டலிலும், கான்டீனிலுமே தங்களுடைய பெரும் பொழுதைக் கழிக்கிறார்கள். "சென்ஸ் ஆப் அர்ஜன்ஸி, சென்ஸ் ஆப் டைம்" என்பதே அவர்களிடத்தில் காணப்படவில்லை. நமக்கு எல்லாம் ஒரு ஜன்மம் இல்லை. ஜன்மா ஜன்மமாக வந்து கொண்டிருக்கிறோம், இன்னும் எத்தனை ஜன்மாக்கள் எடுப்போமோ என்ற தத்துவ அடிப்பாட்டில் நம்பிக்கை உள்ளவர்கள் நாம். அதனால் தான் காலத்தைப் பற்றியே கவலைப்படாமல் அரசாங்க ஊழியர்கள் இருக்கிறார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இதனால் பல பேப்பர்கள் பல வருஷங்களாகப் பெண்டிங்காகக் கிடக்கிறது. அவர்களிடத்தில் ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தி விரைவில் செயல்படுகிற உணர்ச்சியைத் தூண்ட நல்ல பயிற்சியும் கண்காணிப்பும் இருக்க வேண்டியது அவசியம். அவர்களுடைய சங்கத்தின் ஒத்துழைப்பு இதற்கு அவசியமாகும். அதைப் பெறுவதற்கும் நிர்வாக அதிகாரிகள் முயற்சி எடுத்துக் கொள்வார்களானால் நன்றாக இருக்கும்.

அடுத்து ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலைப் பற்றி சொன்னார்கள். என்னுடைய அநுபவத்தில் அது பயன் உள்ளதாகவே இருக்கிறது என்று கருதுகிறேன். அங்கு மாதாமாதம் கூடுகிறோம். பிரதேசத்தில் உள்ள குறைபாடுகள் உறுப்பினர்கள் அவ்வப்போது கலெக்டரிடம் எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதனால் பொதுமக்களும் சந்தோஷம் அடைகிறார்கள். அவ்வப்போது கலெக்டருக்கும் மாவட்டத்தில் இருக்கக்கூடிய விஷயங்கள் எல்லாம் தெரிகின்றது. அங்கத்தினர்கள் சொல்கிற யோசனைகளை அவர்களும் ஏற்று செயல்படுகிறார்கள். இதனால் மக்களுடைய கஷ்டம் தீருகிறது. கலெக்டருடைய தொந்தரவும் பல நீங்குகிறது. ஆனால் இந்த அபிவிருத்தி கவுன்சிலினால் பயன் இருக்கிறது. ஆனால் சில மாநிலங்களில் கலெக்டர் காரியதரிசியாகவும், நான்-அபிஷியல் சேர்மனாகவும் இருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக இவை எல்லாம் எப்படி நடக்கிறது என்பதைப் பரிசீலிக்க சர்க்கார் எவாலுவேஷன் கமிட்டி அமைத்தால் நல்லது தான். எந்தெந்த மாவட்டங்களில் சரியாக இல்லை; என்னென்ன காரணங்களால் சரியாக இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும். நிர்வாகம் சரியாக இருந்த வேண்டுமென்றால் 'எவால்யூவேஷன்' தொடர்ந்து நடக்க வேண்டும்.

ஜில்லாவைப் பொறுத்த மட்டில் திட்டமிடுவதற்கு சரியான ஒரு அமைப்பு இல்லை. டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் அந்த வேலையைச் செய்ய முடியாது. டெபுடி கலெக்டர் இருக்கிறார். கலெக்டருக்குப் 'பி.ஏ.' என்று வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் திட்டமிடுவதற்கான போதிய அறிவா, அல்லது அதற்குரிய ஒரு மனப் பான்மையா இருப்பதாகத் தெரியவில்லை. சாதாரணமாக அவர்களும் ரெவின்யூ அதிகாரிகள்தான். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாகத் திட்டமிட வேண்டும். எப்படி மாநிலங்களின் திட்டங்கள் எல்லாம் சேர்ந்து அகில இந்தியத் திட்டமாகிறதோ அதே போன்று மாவட்டத் திட்டங்கள் எல்லாம் சேர்ந்து மாநிலத் திட்டமாக அமையவேண்டும். அதற்குரிய தனி அமைப்பு இன்று இல்லையென்று கருதுகிறேன். ஒவ்வொரு மாவட்டமும் இன்னின்ன இடத்தில் இன்னின்ன துறைகளில் வளர்ச்சி அடையலாம்; இன்ன இடத்தில் இன்ன கனிப் பொருள் இருக்கிறது என்பதையெல்லாம் கண்டறிந்து திட்டமிட போதிய தனி நாட்டம் கலெக்டர்களுக்கோ மற்ற அதிகாரிகளுக்கோ பொதுவாக இல்லையென்றுதான் கூற வேண்டும்.

மாவட்ட நிர்வாகத்திற்கு அடிப்படையாக இருப்பவர்கள் கர்ணங்கள். கர்ணங்கள் அல்லது கிராம அதிகாரிகளைப் பற்றிப் பொதுவாகக் குறைவாகவே பேசிக்கொண்டு வருகிறோம். ஆனால் அவர்கள் மிக அற்புதமாகச் செயல்படுகிறார்கள். 'பாரம் ஃபில்லிங்' வேலையை அவர்கள் செய்வது போல் வேறு யாராலும் செய்ய முடியாது. எந்த அதிகாரியும் அவ்வளவு குறைந்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு அதைச் செய்ய முடியாது. அத்தனை பாரங்களை அவர்கள் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. எந்த ஒரு விவரத்தைத் தெரிய வேண்டுமென்றாலும் கடைசியாகக் கர்ணத்திடம்தான் சென்று புள்ளி விவரங்களை அறிய வேண்டியிருக்கிறது. கர்ணங்கள் 'ஹெரிடிடரி பிரின்சிபிளில்' பரம்பர முறை வந்த நிலைமை மாறி இனி, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், பி.ஏ. படித்தவர்கள் ஆகியோரைப் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். கான்ஸ்டிடியூஷன்படி பரம்பரை முறை இருக்கக் கூடாது. ஆனால் அந்த முறையை மாற்றுவதன் காரணமாக நம்முடைய மாவட்ட நிர்வாகச் செலவு பெருகுவதோடு பாரம்பரையாக அந்தக் கிராமத்தில் இருக்கின்றவர்களுடைய அறிவும், பரிச்சயமும் நம்முடைய நிர்வாகத்திற்கு இல்லாமல் போய்விடும் என்றும் கருதுகிறேன். எனவே, கிராமாதிகாரிகள் விஷயத்தில் மிக பரிவோடு இருப்பதோடு, எல்லா வகையிலும் ஊக்கம் கொடுப்பதும் கடமையாகும் என்று கருதுகிறேன்.

அடுத்து, பென்ஷன் விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. பென்ஷன் அது போல் ஏறுவதில்லை. 'தியரியில் பென்ஷன் என்பது 'டெஃபர்டு சாலரி' என்று சொல்கிறார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு நிவாரணம் கொடுப்பதிலேயே மிகுந்த பொருளாதாரக் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு எந்த வகையில் உதவி செய்வது என்பது சிக்கலான விஷயந்தான். ஆயினும் அது ஒரு 'ஹ்யூமன் ப்ராப்ளம்' என்று கருதி அதிலே சிந்தனை செலுத்த வேண்டும். அதோடு பென்ஷன் கொடுப்பதிலும் ரொம்ப நாள் ஆகின்றது. ஒரு வருஷம் இரண்டு வருஷத்திற்கு மேலும் ஆகின்றது. ஒருவருடைய பென்ஷன் பற்றிய கணக்குகளையெல்லாம் அவர் ஓய்வு பெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே ஆரம்பித்து செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் நடைமுறையில் இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதன் காரணமாக ஓய்வு பெற்றவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. தோ. மு. நல்லசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள ஜில்லா நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் கோரப்பட்ட மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 1962-63-ம் நிதி ஆண்டில் புதிய சட்டசபை தேர்ந்தெடுத்து வந்த பிறகு மதிப்பீடு கமிட்டி நிறுவப்பட்டது. அந்தக் கமிட்டியானது கிராமக் கர்ணத்திலிருந்து ரெவின்யூ செகரடிரி வரையுள்ள நிர்வாக அதிகாரிகளை எல்லாம் நேரடியாகப் பார்த்துப் பல கருத்துக்களைத் தெரிந்து கொண்டு சென்ற ஆகஸ்டு மாதத்தில் கூடிய சட்ட சபையில் தனது ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்டில் கண்டுள்ள விஷயங்களை எல்லாம் நன்கு புரிந்து அந்தக் கமிட்டியினுடைய ஆலோசனைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் அப்படி நிறைவேற்றினால் நிச்சயமாக நிர்வாகத்திலுள்ள சில குறைபாடுகள் அகன்று விடும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஜில்லா நிர்வாகத்தைப் பொறுத்த வரைக்கும் கலெக்டருக்குள்ள நிர்வாகப் பொறுப்புகளோடுகூட, ரெவின்யூ இலாகாவின் தலைவராகவும் இருந்து, திட்ட வேலைகளை வெற்றிகரமாக அமல் படுத்தும் பொறுப்பும் இருக்கிறது. அதனால் அவர் பல இலாகா தலைவர்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு முக்கியமாக திட்ட வேலைகளை எல்லாம் அமல் படுத்த வேண்டியிருக்கிறது. அவ்வாறு கலெக்டருக்கு வேலை மிகவும் அதிகமாகிவிட்ட காரணத்தால்தான் மாவட்டங்களை எல்லாம் நிர்வாக சௌகரியத்திற்கு ஏற்ப பிரிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று முயற்சி பண்ணினோம். ஆயினும் அவ்வாறு மாவட்டங்களைப் பிரிக்காமலே இரண்டு பரிட்சார்த்தத் திட்டங்களை அமலுக்குக் கொண்டு

வந்தோம். கோவையில் கலெக்டர், ஜாயிண்ட் கலெக்டர் என்று ஏற்படுத்தி, பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுத்தோம். மற்ற மாவட்டங்களில் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபீசர் என்று ஏற்படுத்தினோம். ஜாயிண்ட் கலெக்டர் என்று ஏற்படுத்தி இருப்பதில் அவர் 'இன்டிபெண்டன்ட்' ஆக இயங்குகிறார். ஆனால் டி. ஆர். ஓ. இருக்கும் பகுதிகளில் கலெக்டருக்குப் பூரண பொறுப்புகள் இருக்கின்றன. கமிட்டி விசாரித்ததில் இருந்து கலெக்டர், டி. ஆர். ஓ. சிஸ்டமே இருக்க வேண்டுமென்ற முடிவு செய்தது. அந்த முறையில் நல்லபடி இயங்க வேண்டுமானால் மாவட்டங்களைப் பிரித்தாக வேண்டியிருக்கிறது. அவ்வாறு பிரிக்கும்போது மாவட்டம் மாவட்டமாகப் பிரிக்காது மாநிலம் முழுவதையும் ஒன்றாக எடுத்துக் கொண்டு பிரிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலெக்டருடைய நிர்வாகத்தில் திட்ட வேலைகளை அமல் படுத்துவதிலே மிகவும் உபயோகமாக இருக்கக்கூடியவர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர். இவர்கள் பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகளாக இருக்கும் காரணத்தால் கமிஷனரை மாற்றக் கூடிய அதிகாரம் கலெக்டர்களிடத்தில் இல்லை. நிர்வாக சௌகரியத்திற்காக அந்த அதிகாரத்தைக் கலெக்டர்களுக்கு அளிக்க வேண்டும். கமிஷனருக்குக் கீழே எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போதிய அதிகாரம் கமிஷனருக்கு இல்லை. அவர் ஆர். டி. ஓ. ஆபீசுக்குக் கம்ப்ளெயிண்ட் செய்வதோடு சரி. கமிஷனருக்கும் அந்த வகையில் போதிய அதிகாரம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் திறமையாக வேலை செய்ய முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நிர்வாகம் சம்பந்தப்பட்ட மட்டில் புதிய ஐ.ஏ.எஸ். & எம்.சி.எஸ். அதிகாரிகளை நல்ல முறையில் நிர்வாகத் திறமை பெறச் செய்வதற்கு அனுபவம் பெற்ற கலெக்டரின்கீழ் பயிற்சி பெறச் செய்ய வேண்டும். நம்முடைய மாகாணத்திலே—மற்ற மாகாணங்களைப் பற்றித் தெரியாது—அவர்கள் செகரடேரியட்டில் டெபுடி செகரடிரியாக வந்து விட்டார்கள் என்றால் செகரடேரியட்டை விட்டு வெளியே போகக் கூடிய மனோபாவம் இல்லை. பெரிய அதிகாரிகளை மாவட்டங்களுக்கும், மாவட்டத்திலிருந்து செகரட்டேரியேட்டுக்கும் அடிக்கடி மாற்றக் கூடிய வாய்ப்பு இருந்தால்தான் நிர்வாகம் நல்லபடி இயங்கும் என்ற என் கருத்தை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ஒரு தாலுகாவில் பல தாசில்தார்கள் இருக்கிறார்கள். தாலுகா நிர்வாகம் பற்றி தாலுகா மாஜிஸ்ரேட் என்று ஒருவர் இருக்கிறார். லோன் கொடுப்பது லோன் வசூலிப்பது போன்றவற்றிற்கு ஒரு லோன் தாசில்தார் இருக்கிறார். லான்ட் அஸைன்மெண்ட், லான்ட் அக்விஸிஷன் செய்யவேண்டுமென்றால் அதற்கு ஒரு தாசில்தார் இருக்கிறார். ஆகவே ஒரு தாலுகாவில் 3, 4 தாசில்தார்கள் இயங்குகிறார்கள். இந்த நிலையைப் போக்க ஒரு ப்ளாக்கிற்கு ஒரு தாசில்தார் என்று அமைப்பு ஏற்பட்டால் வசதியாக இருக்கும். அதேபோல் ரெவின்யூ

10-00 a.m.

[திரு. தோ. மு. நல்லசாமி] [10th March 1964

இன்ஸ்பெக்டர்கள். எனக்கு முன் பேசிய திரு. நடராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள், வில்லேஜ் ஆபீசர்களின் புள்ளி விவரங்கள்தான் மிகவும் தேவை என்று. அவர்கள் கணக்கை நெருங்கி பரிசீலிக்க போதிய சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. காரணம் வேலை அதிகமிருப்பதுதான். ஒரு பிர்க்காவிற்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இருந்து கிராம அதிகாரிகளின் கணக்குகளைப் பார்க்க முடியாதிருப்பதால் எந்த எந்த பிர்க்கா பெரியதாகயிருக்கிறதோ அதைச் சுருக்கி அதிகப்படியான ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களைப் போட்டு கிராம அதிகாரிகள் கணக்குகளை தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராம அதிகாரிகளின் நிலை என்ன என்பதைப் பற்றியும் கவனிக்கவேண்டும். அவர்களுக்கு வேலை அதிகமாகப் போய்விட்டது. மதிப்பீட்டு குழு போன போது கிராம அதிகாரிகளைக் கூப்பிட்டு பேசினோம், அவர்கள் சிரமங்கள் பற்றி, வீட்டில் உட்கார்ந்தவாரே தப்பான கணக்கைக் கூட கொடுக்க எங்களுக்கு நேரம் இல்லை என்று கூறப்பட்டது. வரி வசூலோடுகூட பஞ்சாயத்து வரிகள் எல்லாம் போடப்பட்டிருக்கிறது. அதை வசூல் செய்யும் பொறுப்பும் கிராம அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வரி வசூல் செய்வதில் பல சிரமங்கள் உள்ளன. பஞ்சாயத்திலிருந்துதான் டிமாண்ட் நோட்டீஸ், வாரண்ட் எல்லாம் இஷ்யூ செய்ய வேண்டும். இவர்களுக்கு போதிய அதிகாரம் கொடுக்கப்படவில்லை. எங்களுக்கு வேலை அதிகம், அதிகாரம் இருந்தால் வசூலிப்போம் என்கிறார்கள். அவர்களுக்கு பழைய சம்பளமே இருக்கிறது. ஸ்டேட்டஸ் காரணமாகதான் அவர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். ஆகவே, அவர்களது சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் அடிக்கடி தாலூகாவிற்கு வரவேண்டியிருக்கிறது. வரும்படி சம்மன்ஸ் வருகிறது. அப்படி போய் வர அவர்களுக்கு டிராவலிங் அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே அப்படி போவதால் அவர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது என்கிறார்கள். கிராமத்தில் வெட்டியான் வேலை பார்ப்பவர்களுக்கு அன்ஸ்கில்ட் லேபருக்கு வரக் கூடிய கூலி கூட வருவதில்லை. ஆகவே ராஷனலைஸ் செய்து அவர்களுக்கு என்ன சம்பளம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். கிராம அதிகாரிகளுக்கும் எல்.டி.சி. சம்பளமாவது கொடுக்க வேண்டும். ஆகவே அவர்களது சம்பளத்தையும் உயர்த்திக்கொடுத்து எந்தளவிற்கு வேலை செய்ய முடியுமோ அந்த அளவு வேலை செய்ய வைத்து திறமையாக வேலை நடைபெறச் செய்யவேண்டும். அவர்களது பணியை தீவிரமாக 'செக்' செய்ய ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை அதிகப்படுத்த வேண்டும். ஜில்லா நிர்வாகத்தில் டிலே அதிகமாக இருக்கிறது. ராமநாதபுரம் அல்லது சேலம் போன்ற பெரிய ஜில்லாக்களில் அஸைன்மெண்ட் செய்யும் வேலை இருக்கிறது. அவற்றில் அதிக காலதாமதம் ஆகிறது. நில ஆர்ஜிதம் செய்வது பொறுத்தவரை, தொழில் ஸ்தாபனங்களுக்கோ அல்லது பள்ளிக் கூடங்களுக்கோ நிலம் ஆர்ஜிதம் செய்ய அதிகாரிகளை நியமித்தால் அவர்களது வேலை அதிக காலதாமதமாகிறது. ரோடுகளுக்கு,

10th March 1964] [திரு. தோ. மு. நல்லசாமி]

தொழில் ஸ்தாபனங்களுக்கு நிலம் அக்வயர் செய்கிறார்கள். ஆனால் சர்க்கார் நிலங்கள் Highways ரோடுகள், புறம்போக்கு நிலங்கள் இவற்றிலிருந்து என்க்ரோச்மென்டை தடைபடுத்த தீவிர சட்டம் இல்லை. 1905-ம் ஆண்டு லாண்ட் என்க்ரோச்மென்ட் ஆக்டின் அடிப்படையில்தான் வேலை செய்கிறார்கள். ஆனால் அதைத் தீவிரமாக அமுல் படுத்துவதில்லை. நிறைய ரோடுகளில் என்க்ரோச்மென்ட் நடந்திருக்கிறது. தாலூகா காரியாலயங்களில் அல்லது டிவிஷனல் காரியாலயங்களில் போதிய ஸ்டாப் இல்லையோ என்னவோ? அல்லது வேண்டுமென்று தாமதப்படுத்த சட்டம் இடம் கொடுக்கும் நிலையில் இருக்கிறதோ என்னவோ? அடுத்தபடியாக, இந்த கூட்டுப் பட்டா, (ஜாயின்ட் பட்டாக்கள்) இருப்பதினால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை சப் டிவைட் செய்ய வேண்டுமென்று கேட்டால் அதிலும் மிகக் காலதாமதமாகிறது. சப் ரெஜிஸ்ட்ரார் கொடுக்கும் தகவல் வைத்து சப் டிவைட் செய்ய வேண்டும் அல்லது நேரிடையாக மனு போடுகிறார்கள். எந்த முறையை எடுத்துக்கொண்டாலும் அதிக காலதாமதமாகிறது என்று கிராமவாசிகள் சொல்லுகிறார்கள். ஆகவே காலதாமதத்தைத் தவிர்க்க போதிய ஸ்டாப் வேண்டுமோ என்று ஐயப்படுகிறேன். அதைப் பரிசீலிக்க வேண்டும். அங்கத்தினர்கள் கூறிய மாதிரி தாலூகா ஆபீசில் இரவு எட்டு மணி நேரம் வரை வேலை செய்வதைப் பார்க்கிறோம். போதிய அளவில் ஆட்கள் இல்லாமலிருக்கலாம். ஆகவே போதிய ஸ்டாப் கொடுத்து வேலைகளை நல்லபடி துரிதமாக செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்ஸ்பெக்டிங் ஆபீசர்கள் தாமதத்திற்குள்ள காரணங்களைக் கண்டுபிடிக்கவேண்டும். அப்படி காரணத்தைக் கண்டுபிடித்து தாமதத்திற்கு பொறுப்பாளியாக உள்ளவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால்தான் தாமதத்தைத் தவிர்க்க முடியும் என்பதையும் நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் பொறுத்தவரை கலெக்டரை தலைவராகக் கொண்டு இயங்கும் முறை திருப்திகரமாக இருக்கிறது. நிர்வாகப் பொறுப்பு அவர்களிடம் இருப்பதால், உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்கள் கொண்டு போகக் கூடிய காரியங்களுக்கு பதில் சொல்லும் பொறுப்பு அவர்களுக்கு இருப்பதால் நிர்வாகம் நல்லபடியாக இருக்கிறது. நான்-அபிஷியல் மெம்பர்கள் non-Official members ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலில் பேசுகிறார்கள். இது முனிசிபல் பிரதேசம் அல்லாத பிரதேசங்களுக்குத்தான் பொருந்தும். சட்டசபை அங்கத்தினர்கள், பாராளுமன்ற அங்கத்தினர்கள் முனிசிபல் கவுன்சிலில் அங்கம் வகித்தால் நல்லது. கார்ப்பரேஷனில் என்ன செய்கிறார்கள் என்பதுபற்றி இங்குள்ள சட்டசபை அங்கத்தினர்களுக்குத் தெரியாது. ஆகவே சம்பந்தப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் அந்தந்த நகர சபைகளில் வோட்டுப் போடுகிறதா வேண்டாமா என்பது பிரச்னை அல்ல வேண்டாம் என்றே விட்டு விடலாம்—பணியாற்ற வாய்ப்பு அளிக்கவேண்டும். இப்போது பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலில் அந்தந்த

[திரு. தோ. மு. நல்லசாமி] [10th March 1964

சட்டசபை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஏன் அது கார்ப்பரேஷனுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் பொருந்தாது என்பதை ஆலோசிக்க வேண்டும். தாலூகா ஆபீஸ், டிவிஷனல் ஆபீஸ், கலெக்டர் ஆபீஸ் போன்ற இடங்களுக்கு கிராமவாசிகள் போகும் போது போதிய ஆலோசனை கூற, என்ன காரியத்திற்காக வந்தார்கள் என்று கேட்டு அதை நிறைவேற்றிக் கொடுக்க "கைட்" போன்று ஒருவர் இருந்தால் தேவலை. அவர்கள் மதிக்கப் படுவதில்லை. அவர்கள் கோரிக்கை என்னவென்று கேட்க ஆட்களில்லை. இந்த நிலைதான் தாலூகா காரியாலயம், டிவிஷனல் காரியலாயம், மாவட்டக் காரியாலயம் போன்ற விடங்களில் இருந்து வருகின்றது. ஆகவே, இது குறித்து சிந்தித்து போகிற கிராமவாசிகளுக்கு தக்க உதவி செய்து அவர்கள் கோரிக்கைகளுக்கு பரிகாரம் தேட அரசாங்கம் வழிவகை செய்வது நல்லது எனக்கூறி எனக்கு இச்சந்தர்ப்பம் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, I would like to say a few words on the Demands that are to-day before this House. District administration is considered very important to serve the rural areas and it has to be done in a proper and effective manner. Anything that is to-day being said of the administration at the State-level generally reflects the effective steps that are being taken at the lower levels from taluk-level, district-level and then State-level. In the district administration what we have seen to-day is that a lot of delays are being caused and the action taken on any application does not see the light of the day unless the applicant hunts after the papers and goes to the respective officers. Whatever may be the importance of the application, unless the applicant follows the paper and sees the respective officers, then alone action could be initiated. That is the present picture. There are several cases which are to-day still pending, cases which have not been disposed of for years together. That is the position at the taluk and district-level. The district administration which mostly deals with rural problems and land revenue problems should see that sufficient facilities are provided for agriculturists and when ryots approach the officers for redressal of their grievances the authorities should take necessry measures to redress the grievances.

Regarding patta transfers, I wish to point that several transfers have not been noted in the ' adangal '. The pattas are still in the name of great-grandfather or grandfather who were dead and not in the name of the son, who is living to-day and who is entitled to the property. The transfers do not find a place in the ' adangal '. It is not maintained up-to-date. This should be taken as an urgent matter and proper and effective steps should be taken. Except in a few cases wherein the applicant had seen the particular officer and got things done in most of the cases transfers have not been effected in the ' adangal '. That is the position to-day. This should be remedied. Lot of delay is being caused by surveyors

10th March 1964] [Sri C. Chiranjeevulu Naidu]

with the result that cases of pattas which are joint pattas had been dragged to courts of law with all the necessary expenditure for the litigants. This is a serious problem to-day in the rural areas and Government should take proper remedial steps in this regard.

Regarding assignments, I would like to say a few words. To-day, we say that we have introduced the Land Ceiling Act. Assignments are being made in different names to different pattadars. There are certain cases, where the assignments have been made ignoring certain factors. Assignment is not made in the case of a ryot possessing less than five acres. There are cases where the ryots are owning more than 30 to 35 acres of fertile lands are getting assignments. Such cases should be carefully examined and scrutinised and necessary instructions should be issued to the authorities to assign the lands to the tiller of the soil in time.

In the Panchayat Act, provision has been made for the panchayats to take certain lands and use them for the benefit of the community. Provision is also made to acquire the assessed waste dry lands. The lands which are classified wrongly as assessed waste are being acquired. They are not classified rightly especially in the taken-over villages. In such places, the lands possessed by the ryots which have been classified wrongly the panchayats are trying to take over for improving the land for the purpose of the community. Certain provisions in the Panchayat Act are confusing and misleading, especially in places where there are rival groups who have access to those land. Now certain lands are acquired in the name of afforestation, and in the name of construction of buildings, etc. The ryots are being deprived. Of course, we have got faith in the democratic decentralisation. We have got good faith in popularising the " Panchayat Raj ". We should also safeguard the interest of the ryots. After all, the Local Boards are not new to us. We have got the groups and parties and as such it is the duty of the Government to take effective steps to safeguard the interest and ownership of the pattadars.

Regarding the house-tax collections, Sir, we see a sort of co-ordination between the Block Development Officer and the Tahsildar. This co-ordination must be properly effected at every stage so that the work can be done on better lines.

Regarding the land revenue collections, I would suggest one thing, which was suggested by other members also. Notice of Demand may be issued to the ryots stating the name of the pattadar, the extent of land, survey number, the amount to be paid, amount so far paid, etc. This would facilitate the ryots to know what is the extent of land in his possession. By this method, unnecessary and unwarranted things can be avoided. Pass-books may also be issued to the pattadars regarding the remittances made by them. There are lot of difficulties in the collection of arrears. The jeeps and officers are requisitioned for the revenue collections. I can say there is no systematic collection in this respect. This has to be properly looked into because the collection of revenue is very important. The ryots should also realise the responsibility to pay the loans. Without causing any harassment to the ryots, this work

[Sri C. Chiranjeevulu Naidu] [10th March 1964

should be done. Requisitioning of jeeps for the collection work paralyses the administration of the district must be avoided. I request the Government to do something in this regard also.

Regarding pensions, it was stated by the Hon. Chief Minister that nearly 62,000 people were benefited by the Old Age Pension Scheme. The Government have come with a noble scheme, which would benefit the people who have attained the age of 65. The general complaint is that the applications are kept pending in the offices without taking any action. Only a few applications would be pending in the offices, and so the Government should give necessary instructions to dispose of the pending applications immediately. The Liberalised Pension Scheme was extended to the Government employees, but it was not extended to the erstwhile local board employees. Those who retired prior and after June 1960 should also get the benefits under this scheme and it should also be brought under the Pension Rules.

With regard to the loans and advances to agriculturists, I may say, Sir, that these loans are being covered by the Full Finance Scheme. We have cut down everything and the pawn-brokers are also hesitating to give loans. The rate of interest charged by the Central Bank is 7½ per cent, whereas the Reserve Bank is giving at the rate of 3 per cent. The Government should take into consideration this aspect and advice the Central Banks to reduce the rate. Penal interest is also charged, which works out to 12½ per cent. The Co-operative Societies must function for the benefit of the agriculturists.

An amount ranging from Rs. 300 to Rs. 500 was given as subsidy to the agriculturists under the Well Subsidy Scheme. These are the schemes under which the loans were sanctioned to the agriculturists for sinking wells. It is a fact that many agriculturists are benefited under this scheme and wells are sunk. On the particulars furnished by the Tahsildars the ryots are being asked to pay the entire amount with penal interest. I request the Government to issue necessary instructions to the officers concerned to inspect the places and see whether the amount is actually spent for the purpose, whether the well is in existence, and whether the agriculturist is actually benefited. If the amount is spent, the wells are in use the loan granted may be treated as subsidy. It is not the fault of the agriculturists; but the officers should also see whether the work is done. There are officers, who come to the conclusion without knowing the progress of work.

There are several hundred cases like that. I myself brought 60 to 70 such cases to the notice of the District Revenue Officer having jurisdiction over the Tirutani taluk. These are the cases which the Government should look into and see that proper instructions are issued. In those cases where the construction of wells has been completed by the pattadars and which are to-day being used for agricultural operations, such of the pattadars must be given all facilities and benefits including subsidy. With these few words, I resume my seat. Thank you, Sir.

10th March 1964]

* *திரு. அ. ராகவ ரெட்டி:* கனம் சபாநாயகர் அவர்களே, ஜில்லா நிர்வாகத்திற்கு அடிப்படையான கிராம அதிகாரிகளைப் பற்றி சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே எந்த வேலை நடக்கவேண்டுமென்று நினைத்தாலும் முதல் முதலாக கிராம அளவிலிருந்து தான் எல்லா வேலைகளும் நடக்க வேண்டியிருக்கிறது என்று நான் தனியாக எடுத்து கூறவேண்டியதில்லை. நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் சுமார் 30,000 பேர்கள் இருக்கும் சமூகத்திற்கு, அவர்கள் நிலைமை என்ன என்று சொல்லுவதற்கே நம் அரசாங்கம் சுமார் 3-4 வருஷங்களாகத் தள்ளிக்கொண்டே போகிறார்கள். அவர்கள் முழு நேர உத்தியோகஸ்தர்களா, அவர்கள் நிலைமை என்ன என்று சொல்லுவதற்கே நம் அரசாங்கம் இவ்வளவு நாளாக முடிவுக்கு வராது இருப்பதைப் பற்றி நம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து இனியாவது அவர்கள் நிலைமையைப் பற்றி திட்டவட்டமான ஏற்பாட்டை கூடிய சீக்கிரத்தில் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, கிராமங்களில் பட்டா டிரான்ஸ்ஃபர் பற்றி எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் சிரஞ்சீவுலு நாயுடு அவர்களும் சொன்னார்கள். ஒரு அரசாங்கம் நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்றால் அரசாங்கத்தின் எல்லையில் இருக்கும் நிலங்கள் யாருக்குச் சொந்தமானது என்று சொல்ல முடியாத நிலை கிராமங்களில் இருந்துகொண்டிருக்கிறது. கிராமங்களில் இருக்கும் பட்டாதார்கள் யார், எவ்வளவு கிஸ்தி செலுத்த வேண்டுமென்று சொல்ல முடியாது இன்று இருக்கும் நிலை. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை ஜீப்புகளை எடுத்துக்கொண்டு சென்று விவசாயிகளை பயமுறுத்தி கிஸ்தியை வசூலிக்க வேண்டிய நிலை இருக்கிறது. கிராமங்களில் கிஸ்தி செலுத்த வேண்டுமென்று பொறுப்பை உணர்ந்தவர்கள், செலுத்தவேண்டுமென்று இருக்கிறவர்கள், இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தினால் அவர்கள் ஏதோ ஒரு தொகையை செலுத்த வேண்டிய அளவிற்குக் கஷ்டப்படக் கூடிய நிலை இருக்கிறது.

பட்டா டிரான்ஸ்ஃபர் பற்றி நான்கு ஆண்டுகளாக பலர் இந்த மன்றத்தில் வற்புறுத்திப் பேசினார்கள். சர்க்கார் இதில் சின்ன முயற்சி கூட செய்ததாக எனக்குத் தெரிந்த வரையில் இல்லை. ஒரு தாலூகாவிற்கு ஒரு சர்வேயரை நியமித்து, தாலூகாவில் உள்ள சுமார் 350 கிராமங்களில் இருக்கும் அத்தனை பட்டாக்களையும் மாற்றவேண்டுமென்று சொன்னால் எத்தனை ஆண்டுகள் அது சாத்தியம் இல்லை என்று கனம் ரெவின்யூ அமைச்சருக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பிறகு, பஞ்சாயத்து யூனியன் அட்மினிஸ்ட்ரேஷனுக்கும் ரெவின்யூ இலாகாவிற்கும் சம்பந்தம் இருக்கிறதா இல்லையா என்று தெரியாத நிலை இருக்கிறது. பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட வேலைகளையும் ரெவின்யூ இலாகா செய்யவேண்டிய நிலையில் இருக்கிறது தற்போதுள்ள சட்டப்படி. ஆனால் நடைமுறையில் இரண்டு பேரும் ஒத்துக் காரியங்களைச் செய்வதில்லை. முக்கியமாக சிறிய

[திரு. அ. ராகவரெட்டி] [10th March 1964

நீர்ப்பாசனத் திட்டத்தை பஞ்சாயத்து யூனியனுக்கு ஒப்படைத்திருக்கிறோம். நான் உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். என்னுடைய தொகுதியில் பஞ்சாயத்து யூனியனில் சில காலமாக ஐடில் மேன் பவர் ஸ்கீம் என்ற திட்டத்தின் கீழ் 7-ல் 4 பங்கு பணம் கொடுக்கவேண்டியது, கிராமத்திலே வேலை இல்லாது கஷ்டப்படுகிறவர்களுக்காக என்று ஒரு திட்டம். அது நடைமுறையில் வேலை செய்யவும் இல்லை ஒன்றும் இல்லை. வேண்டுமானால் இன்றைக்கே பொறுப்புள்ள அதிகாரியை அனுப்பி ஊத்துக்கோட்டை பகுதியில் இந்தத் திட்டத்தின் கீழ் என்ன வேலைகள் நடந்திருக்கின்றன என்று பார்த்து வரச் சொல்லலாம். எல்லாம் காகிதத்தில் தான் இருக்கின்றன. பணம் கொடுத்ததாக கணக்கு எழுதியிருக்கிறார்கள். அந்த வகையில் திட்டத்தை நிறைவேற்ற உத்திரவு இருக்கிறதா என்று தெரியவில்லை. சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு இம்மாதிரி செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். இதை என்ஜினியரிங் டிபார்ட்மெண்டுக்குக் கொடுத்தால் நன்றாகச் செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

பிறகு, முதியோருக்கு பென்ஷன் கொடுப்பதைப் பற்றி ஏராளமான மனுக்கள் தாலூகா ஆஃபீஸ்களில் பெண்டிங்காக இருப்பதாகத் தெரிகிறது. உடனடியாக அவர்களுக்கெல்லாம் நிவாரணம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதைப் பற்றி சில பகுதிகளில் முழு கடன் திட்டம் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் பற்றி பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். சர்க்காரில் முழு கடன் திட்டம் என்று பெயர் வைத்து 100-க்கு 85 ரூபாய் கொடுத்து 7½ ரூபாய் வட்டி என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மத்திய பாங்கிக்கு 3 சதவிகிதம் என்று கொடுத்தால் 7½ சதவிகிதம் என்று வைத்து, 6 மாதத்திற்குள் செலுத்தாவிட்டால் அன்று முதல் 12½ சதவிகிதம் என்று வசூலிக்கிறார்கள். குறைந்த வட்டிக்கு கொடுக்கும்போது 4½ சதவிகிதம் அதிகம் வசூலிப்பதும், பீனல் இண்டரெஸ்ட் வசூலிப்பதும் நியாயம் அல்ல என்று சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன்களில் கிணறுகள் வெட்ட 4-ல் ஒரு பங்கு சப்ஸிடி என்றும் மூன்று பங்கு கடன் என்றும் கொடுக்கிறார்கள். கொடுப்பதை, கேட்டவுடனே அவர்களுக்குக் கொடுத்து கிணறு எடுக்கக் கூடிய விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டில் 20 பேர்கள் மனுசெய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவருக்குக் கூட கிடைக்கவில்லை என்று கேள்விப்படுகிறேன். தாராளமாக எல்லோருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, மாவட்ட நிர்வாக மான்யக் கோரிக்கையின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

10th March 1964] [திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்]

சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று அரசாங்கத்தில் எடுத்துக்கொள்ள நடவடிக்கையை துரிதப்படுத்தி சீக்கிரம் பிரிக்கவேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்திற்கு கிராம அதிகாரிகள் ஃபவுண்டேஷன் என்று சொல்லுவார்கள். கிராம அதிகாரிகள் பண்டைய காலத்திலிருந்து நல்ல நிலைமையில் செல்வாக்கோடு கிராமங்களில் இருந்து வந்தார்கள். இப்போது கிராம அதிகாரிகள் அவர்களுக்கு நாளுக்கு நாள் அதிக வேலைகளை ஒப்படைத்த காரணத்தினால் அவர்களுடைய வேலைகளைச் சரிவர செய்ய முடியாமல் பல இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். கிராம அதிகாரிகள் இந்த அரசாங்கத்தில் உள்ள ஒவ்வொரு இலாகாவிற்கும் ஜவாப் சொல்ல கடமைப்பட்டுள்ளவர்களாக இருக்கிறார்கள். அதோடு இவர்கள் முழு நேர உத்தியோகஸ்தர்களை விட 24 மணி நேரம் வேலை செய்து கொண்டிருந்தும் இவர்களை அரசாங்கத்தில் பார்ட் டைம் கவர்ன்மெண்ட் ஸர்வெண்ட்ஸ் என்று சொல்லுகிறார்கள். முழு நேர உத்தியோகஸ்தர்களை விட, 24 மணி நேரமும் வேலை செய்வதால் இவர்களை முழுநேர உத்தியோகஸ்தர்கள் என்று அரசாங்கத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன்.

அவர்களுக்கு இப்போது பஞ்சாயத்து வரி வசூல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. பல வருஷங்களாக வசூலிக்காமல் இருந்த பஞ்சாயத்து வரிகளை இவர்கள் செவ்வனே வசூலித்து வரி பாக்கிகளைக் குறைத்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் இவர்கள் வரி வசூல் செய்யும் காலங்களில் இவர்களுக்குத் தக்க பந்தோபஸ்தை அரசாங்கம் கொடுக்கவில்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லாவில் அச்சுதமங்கலம் கிராமத்தில் கிராம முன்சீப், தாசில்தார், பி.டி.ஓ. மற்றவர் 10-30 a.m. களிடம் வசூலுக்கு சென்றபொழுது, அங்கிருக்கிற டாக்ஸ்-பேயர் அந்தக் கிராம அதிகாரியை தாக்கினார் என்றும் அதற்குத் தக்க நடவடிக்கை அரசாங்கம் எடுக்கவில்லை என்றும் கேள்விப்படுகிறேன். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்காவிட்டால் அவர்கள் வரி வசூல் வேலையை எப்படி கவனிக்க முடியும் என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம அதிகாரிகள் தங்களுக்குள்ள குறைகளைப்பற்றி அடிக்கடி அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக அவர்கள் சொல்லியும், அவர்களுடைய குறைகளை அரசாங்கம் நாளதுவரையில் நிவர்த்திக்கவில்லை என்று நான் அறிகிறேன். ஆனால், நமது ரெவின்யூ அமைச்சர் அவர்கள் எப்ரல் மாதத்தில் அவர்களுடைய குறைகளைப்பற்றி ஆலோசித்து தீர்ப்பதாக உறுதி அளித்திருக்கிறார். அந்த உறுதிப்பிரகாரம் வருகிற எப்ரல் மாதத்தில் அவர்களுடைய குறைகளைப் பற்றி அரசாங்கம் ஆலோசித்து முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன். கிராம அதிகாரிகள் மிகவும் பொறுப்பும், பொருமையும் வாய்ந்தவர்களாக

[திரு. மு. பொ. வடிவேல்] [10th March 1964

இதனால், விவசாயிகள் காலாகாலத்தில் பம்பு செட்டுகள் வைக்க முடியவில்லை, பெரிய கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். திருப்பத்தூர் சம்பந்தப்பட்டவரையில், மேட்டூர் டாமில் பி. டபிள்யூ. டி. என்ஜினியரிங் அலுவலகம் இருப்பதினால் திருப்பத்தூர் தாலுகா விவசாயிகள் மிகுந்த வேதனை அடைகிறார்கள். இந்தத் தாலுகா சம்பந்தப்பட்ட அலுவலகத்தையும் தலைமை இடத்திற்கே, அதாவது வட ஆற்காடு தலைமை இடமாகிய வேலூருக்கே மாற்றிவிட்டால் மிகவும் நலமாக இருக்கும். இது சம்பந்தமாக வட வேலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் தீர்மானம் போட்டு, அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதையும் நன்றாகக் கவனிக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடி ஸீ லெவலை விட 700, 800 அடிக்கு மேற்பட்ட ஊர்களில் உள்ள கிராமங்கள்கூட பாலாறு பேஸின் ரூல்ஸ்-க்கு உட்படுத்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு பெருத்த தொல்லைகள் இருக்கின்றன. அதை அமைச்சர் மீண்டும் பரிசீலனை செய்து, இந்த விதிகளைத் தளர்த்தி அந்தக் கிராமங்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டா மாறுதலைப்பற்றி எனக்கு முன்பு பேசிய பல உறுப்பினர்கள் மிகத் தெளிவுபட எடுத்துக் கூறினார்கள். 60 ஆண்டு காலமாக, 100 ஆண்டு காலமாக பட்டா மாறுதல் இல்லாமலே கிராமங்களில் நிலை அப்படியே இருந்து வருகிறது. அதற்குக் காரணம் சாதாரணமாக ஒரு பட்டா மாறுதல் செய்யவேண்டுமென்றால் ரூபாய் 100 செலவு செய்ய வேண்டியிருக்கிறது. பெரிய பணக்காரர்களுக்கு மட்டும் பட்டா மாறுதல் சரியாக நடந்துவிடுகிறது. ஏழை விவசாயிகளைப் பொறுத்த வரையில் அப்படியே இருந்து விடுகிறது. அவர்கள் கடன் வேண்டும் என்று விண்ணப்பம் போட்டால் ஸப்-டிவிஷன் ஆகவில்லை, பட்டா மாறுதல் ஆகவில்லை, ஆகவே உங்களுக்கு கடன் கொடுக்க முடியாது என்ற அளவுக்குத் திருப்பப்படுகிறது. இதில் என்ன சிக்கல்கள் இருக்கின்றன என்று புரியவில்லை. நீண்டகாலமாக இம்மாதிரி ஒரு பாரம்பர்யம் ஏற்பட்டிருக்கிறது. பல ஆண்டு காலமாக இம்மாதிரி விவசாயிகளின் நிலைமை இருந்தால் அவர்கள் அதை யாரிடம் சென்று முறையிடுவார்கள்? ஆகவே, அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து, ஒரு நிலத்தை வாங்கினாலோ, விற்றாலோ உடனடியாக இரண்டு மாதங்களில் பட்டாவை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பித்தால், இந்தத் துர்பாக்கியமான நிகழ்ச்சி ஏற்படாது. அதன் காரணமாக சர்க்காருக்கும் கெட்ட பெயர் வராது. கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதினால் அவர்கள் கேட்டு வாங்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு 'ஸீல் ஸம்மன்' கொடுக்கப்படுகிறது. 'ஸீல் ஸம்மன்' சம்பந்தமாக 'டி.ஏ.' கொடுக்கலாம் என்று விதிகள் இருப்பதாகத் தெரியவருகிறது. இருந்தாலும், அம்மாதிரி அவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்ற புகார் இருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து, நல்ல முறையில் அவர்களை

10th March 1964] [திரு. மு. பொ. வடிவேல்]

வைத்தோமானால் இம்மாதிரி சிக்கல்கள் ஏற்படாது என்பது என்னுடைய பணிவான அபிப்பிராயம் ஆகும். ஜில்லா போர்ட் நிர்வாகத்தின் கீழ் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆரம்பப் பள்ளிகள் பஞ்சாயத்து யூனியனின் பொறுப்பில் இருக்கின்றன. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் மாதம் முதல் தேதியில் கிடைக்கிறது. ஆனால் ஜில்லா போர்டில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாதக் கடைசியானாலும், அடுத்த மாத கடைசியானாலும் கூட சம்பளம் கிடைப்பது இல்லை. மற்ற ஜில்லாக்களின் நிலைமை எப்படியோ, தெரியாது. ஆனால் வட ஆற்காடு ஜில்லாவிலே இந்த மாதச் சம்பளம் இந்த மாதமே கிடைப்பது இல்லை. பெஸ்டிவல் அட்வான்ஸ் என்று சொல்லப்படுகிற பண்டிகை முன்பணம்கூட அவர்களுக்கு சரியான காலத்தில் கிடைப்பது இல்லை என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. அவைகளை எல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாதம் முதல் தேதி சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டது போல முனிசிபல் கவுன்சில்களிலும் எம்.எல்.ஏ-களுக்கு இடம் இருக்கவேண்டும். அங்கே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள அங்கே தீர்மானங்கள் நிறைவேற்றினால் அவற்றின் மீது இங்கே இந்த மன்றத்திலே விவாதிக்க அம்மாதிரியான ஏற்பாடு சௌகரியமாக இருக்கும். ஆகவே நகராட்சி மன்றங்களிலே எம்.எல்.ஏ.-க்களை எக்ஸ்-அபிஷியோ மெம்பர்களாக அமைக்க விதிகள் போடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வாணியம்பாடியில் தீ அணைக்கும் படை இல்லாததால் மிக்க தொல்லையாக இருக்கிறது. அங்கே ஒரு தீ அணைக்கும் படையை நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜில்லா நிர்வாகத்திலே ஒரு மனு போட்டோம் என்றால் 4 நாளில் அதன் மீது நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எந்த மனுவின் மீதும் 3, 4 மாதங்கள் ஆன பிறகும்கூட எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள். நிர்வாகத்திலே செல்வாக்கு உள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் குறுக்கிடுவதினால் அதிகாரிகள் மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் தயங்குகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட குறுக்கீட்டின் காரணமாக அதிகாரிகள் நீதியை செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பெயரைச் சொல்லிக்கூட செல்வாக்குள்ளவர்கள் தவறான காரியங்களை செய்ய முற்படுகிறார்கள். அதனால் ஏற்படும் பயத்தின் காரணமாக அதிகாரிகள் என்ன செய்வது என்று புரியாமல் கையைப்பிசைகிறார்கள் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எதிர் கட்சி கனம் அங்கத்தினர் அவர்களே ஒரு. உறுப்பினர் செல்வாக்குள்ளவர், செல்வாக்குள்ளவர் என்று சொல்வதனால் அதிகாரிகள் அதை உண்மை

என்று எடுத்துக் கொள்ளும் நிலைமை அமைந்து போகலாம். ஆகவே செல்வாக்கு என்பதை குறைவாகச் சொன்னார் நல்லது என்று கருதுகிறேன்.

திரு. மு. பொ. வடிவேல் : இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் முதல் அமைச்சர் பெயரைச் சொல்லி காரியங்களை சாதிப்பதனால் அவர்களுடைய பெயருக்கு ஊறு வரக்கூடாது என்ற நல்ல எண்ணத்தின் காரணமாக வட ஆற்காடு மாவட்டத்தின் சார்பாக அதை அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வந்தேன். அம்மாதிரியாக அதிகாரிகளுக்கு ஏற்படும் பயத்தைப்போக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சபாநாயாகர் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

***திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளை ஆதரிக்கிறேன். பொதுவாக சுதந்திரம் பெற்ற பிறகு பல்வேறு இலாகாக்களில் திருத்தம் ஏற்பட்டு வருகிறது. அதுவும் மேலே இருந்து திருத்தங்கள் வருகின்றன. பாராட்டக் கூடிய அளவுக்கு திருத்தம் ஏற்பட்டிருக்கக்கூடிய இலாகா ஒன்று உண்டு என்றால் அது பப்ளிக் வொர்க்ஸ் இலாகா. ரெவின்யூ இலாகா எல்லாவற்றுக்கும் சாதாரணமாக பொறுப்பாக இருக்கும் இலாகா. அந்த இலாகாவில் சாதாரணமாக சுதந்திரத்திற்கு முன்பு எல்லாம் பல அதிகாரிகள், ஜில்லாக் கலெக்டர்கள்கூட லஞ்சம் பெறக்கூடியவர்கள் இருந்தார்கள் என்று பரவலாக புகார்கள் இருந்து வந்தன. இன்றைக்கு ஜில்லா கலெக்டர்தான் பல காரியங்களுக்கும் பொறுப்புள்ளவராக இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். எனினும் ஜில்லா கலெக்டர்கள் யாரும் லஞ்சப்புகாருக்கு ஆளாகவில்லை என்பது நமக்கு பெருமை தரக்கூடியதுதான். அதே போல ரெவின்யூ டிவிஷன் ஆபீசர்களும் இருக்கிறார்கள். ஆனால் கிராம மக்களுக்கு இலகுவாக அணுகக்கூடிய இடம் தாலூகா ஆபீஸ். அந்த தாலூகா ஆபீஸிலே போதுமான திருத்தம் ஏற்படவில்லை. சுதந்திரம் பெற்று 15, 16 ஆண்டுகள் ஆகியும் அங்கே விசேஷ மாறுதல் ஏற்படவில்லை என்பதை வருத்தத்துடன்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அங்கே எவ்வளவு சீக்கிரமாக திருத்தத்தைக் காண்கிறோமோ அவ்வளவுக்கு நாம் சுதந்திர வாழ்வின் அருமை பெருமைகளை உணர முடியும். இந்தக் காரியத்திலே அரசாங்கத்திற்கு வேகம் வேண்டும். அந்த வேகம் காரணமாக எவ்வளவு காலாகாலத்திற்குள்ளே நாம் திருத்தத்தை வற்புறுத்துகிறோமோ அதைப் பொறுத்து நமது வெற்றி, தோல்வி அமையும். சில நண்பர்கள் குறிப்பிட்டது போல நானும் குறிப்பிடுகிறேன். கலெக்டர் ஆபீஸிலே, ஆர்.டி.ஓ. ஆபீசிலே அல்லது தாலூகா ஆபீஸிலே மக்கள் போய் சாதாரணமாக ஏதாவது விவரங்களைத் தெரிந்து கொள்ள பல மேசைகளின் பக்கலில் போய் நிற்க வேண்டிய துர்பாக்கியமான நிலை இருக்கிறது. வெகு சீக்கிரத்திலே முடித்துக் கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கை இல்லை.

ஆகவே நிச்சயமாக இந்த ஆபீசுகளில் பொதுஜன தொடர்பு அதிகாரி, பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீஸர் ஒருவரைப் போட்டால் மிக்க நலமாக இருக்கும். அதனால் ஏற்படும் அதிகச் செலவைக் கூட நாம் பொருட்படுத்த வேண்டியது இல்லை.

ஜில்லா நிர்வாகத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு பொறுப்புள்ள கலெக்டர் இருக்கிறார். சாதாரணமாக இப்பொழுதெல்லாம் சிறிய வயதுள்ளவர்கள் வருகிறார்கள். அண்மையில் அனுபவம் மிக்க ரிடையரான ஒரு பெரிய அதிகாரியை நான் சந்திக்க நேர்ந்தபொழுது அவர்கள் சொன்னார்கள், ஜில்லா கலெக்டர் பொறுப்புக்கு நிச்சயமாக வயதானவர்களும், அனுபவம் உள்ளவர்களும் வரவேண்டும்; வெறும் உயர்படிப்பு மட்டும் போதாது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஜில்லா கலெக்டராக வருபவர்கள் குறைந்தது 35 வயதாவது ஆகியிருந்தால்தான் பொறுப்பை முறையாக நிர்வகிக்க உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இன்றையதினம் ஜில்லாக்களிலே அதிகமாக அதிகார குவியல்கள் ஏற்படுவதைப் பார்த்தால் அதை மிக ஜாக்கிரதையாக பரிசீலிக்க வேண்டியது அவசியம் என்பதை புரிந்து கொள்ள முடியும். கடந்த 5, 6 வருஷ காலமாக நான் உன்னிப்பாக கவனித்து வந்திருக்கிறேன்; பெரிய பெரிய அதிகாரப் பொறுப்புகள் குவிந்து வருவதையும், நவாபு போன்று கலெக்டரிடம் அதிகமான அதிகாரங்கள் வந்து கொண்டிருப்பதையும் கண்ணாரப் பார்க்கிறோம். அவற்றில் பல சட்டபூர்வமாக இருப்பதன் காரணமாக, அதற்கு நாமும் காரணமாக இருக்கலாம். பலவேறு இராச்சியங்களில் இருப்பது போல மாவட்ட அபிவிருத்தி கவுன்ஸிலுக்கு கலெக்டர் தான் தலைவர். அது எல்லம் உத்தியோகஸ்தர்கள் கையில் இருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் வலு குறைகிறது என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பாக கவனிக்கவேண்டும். பொதுஜன தொடர்புள்ள மக்கள் பிரதிநிதிகள் வேண்டிய அளவுக்கு செல்வாக்கு பெற்ற நிலையில் இருக்க முடியவில்லை. அதனால் ஜில்லாவிலே செகண்ட் ராங்க் லீடர்ஷிப் ஏற்படும் சூழ்நிலை குறைகிறது. அவர்களுக்குள்ள அதிகாரம் எல்லாம் குறைந்து போகும் நிலைதான் இருக்கிறது. இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டிய விஷயம். மக்கள் பிரதிநிதிகளின் கையில் அதிகாரம் வருவதுதான் அதிகாரிகளிடம் அதிகாரக் குவியலை குறைத்து ஜனநாயகம் வளர வழிவகை செய்யும். இந்த விஷயத்தை அரசாங்கம் ஜாக்கிரதையாக பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதிகாரிகளிடம் லஞ்ச ஊழல் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டது. உத்தியோகஸ்தர்கள் பலரிடத்தில் மேலிடங்களில் ஜாதிப் பித்து அதிகமாக இருக்கிறது; கீழே லஞ்சப் பழக்கம் இருக்கிறது. இந்த ஜாதிப் பித்து பொறுப்புள்ள அதிகாரிகளிடத்தில் இருப்பதனால் தீமைதான் ஏற்படும். இதை ஒழித்தால் அன்றி விமோசனம் இல்லை என்ற நிலைதான் ஏற்படும். இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஜமாபந்தி அதிகாரி ஒரு கேஸில் முடிவு செய்துவிட்டால், அது போன்ற எல்லாக் கேஸுக்கும் அது பொருந்தும்படியாக இருக்க வேண்டும். இப்படி இல்லாத நிலையில் மலயா, கொழும்பு போன்ற வெளியிடங்களில் இருக்கும் நில சொந்தக்காரர்களும் ஒரு சில சாதாரண விவசாயிகளும் கஷ்டம் அடைகிறார்கள். உரிய நேரத்தில் மனுச் செய்யாத காரணத்தால் விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படாத அளவுக்குக் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

*** திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் என்கிற தலைப்பில் வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையின் மீது எங்களுடைய கட்சியைச் சார்ந்த பலர் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாவட்ட நிர்வாகம் மாவட்டத் தலைமை அதிகாரியாகிய ஜில்லாக் கலெக்டர் அவர்கள் தலைமையின் கீழ் இயங்குகிறது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அது நல்ல இயக்கம் என்றுதான் நாங்கள் சொல்ல முடியும். எனக்கு முன் பேசிய கனம் உறுப்பினர் ஒருவர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஜில்லா டெவலப்மென்ட் கவுன்சில் சேர்மனாக இருப்பவர் சர்க்கார் உத்தியோகஸ்தராக இருக்கிறார் என்ற காரணத்தால் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிறவர்கள் கொண்டுவரும் நிர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் தடைப்படுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அப்படித்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் அடிக்கடி டாக்டர் அம்பேத்கார் அவர்களை நினைத்துக்கொள்வது உண்டு. அவர் ஒரு சமயத்திலே ஒரு கருத்தைச் சொன்னார். "நிர்வாகத்தை பஞ்சாயத்திலே ஒப்பு கொடுத்தால் பாதிக்கப்படுகிறவர்கள் அந்தப் பகுதியிலே உள்ள மைனாரிடி வகுப்பினர்தான்" என்று சொன்னார்கள். அந்த அடிப்படையின் கீழ் பார்த்தால், பஞ்சாயத்து யூனியன் அளவிலே மைனாரிடி, மெஜாரிடி என்றுதான் இருக்கிறதே தவிர, கனம் உறுப்பினர் நினைத்த மாதிரி உருவாவதற்கு இடம் இல்லை என்றே நான் கருதுகிறேன். ஆனால், ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சில் தலைவராக ஜில்லாக் கலெக்டர் இருப்பது கட்சி பேதத்திற்கோ கட்சிப் பாகுபாட்டுக்கோ இடம் அளிக்காமலிருக்க ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். கனம் உறுப்பினர் சொன்னதுபோல, உத்தியோகச் சார்பு அற்றவர் என்று சொல்லப்படுகிற பஞ்சாயத்து யூனியன் சேர்மனோ மற்றவரோ D.D.C. யின் சேர்மன் பதவி வகித்தால் கட்சிப் பாகுபாடுதான் இருக்கும் என்பதை ஊகித்துத் தானோ என்னவோ டாக்டர் அம்பேத்கார் அந்த முடிவுக்கு வந்தார் என்று நான் கருதுகிறேன். டாக்டர் அம்பேத்கார் சொன்ன அபிப்பிராயப்படி ஜில்லாக் கலெக்டரே அந்தக் கவுன்சிலுக்குத் தலைவராக இருப்பதால் அது பாரபட்சம் இல்லாமல், பாகுபாடு இல்லாமல் இயங்குவதற்கு வசதியாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கலெக்டருக்குக் கீழே பல இலாக்காக்கள் மாவட்டத்திலே இயங்குகின்றன. தாசில்தார்கள் தாலுக்காவுக்கு ஒருவராக இருந்தாலுங்கூட அவருக்குத் துணையாக பல தாசில்தார்கள் இருக்கிறார்கள். எத்தனை தாசில்தார்கள் இருக்கிறார்கள் என்கிற கணக்கே எனக்குத் தெரியவில்லை. அந்த அளவு தாசில்தார்கள் இருக்கிறார்கள். ஆனால், இவ்வளவு தாசில்தார்கள் இருந்தும்கூட நாம் குறிப்பிட்ட நேரத்திலே தேடிப் பார்க்கும்போது ஒருவர் கூடக் கிடைப்பதில்லை, ஏதோ கேம்ப் போய்விட்டார் என்று சொல்லப்படுகிறதே தவிர, எப்பொழுது போனாலும் ஹெட்க்வார்ட்டர்ஸில் கண்டு பிடிப்பது அரிதாக இருக்கிறது. அவர் அந்த அலுவலகத்திலே எப்பொழுது வருகிறார் என்று ஒன்றும் தெரியவில்லை. அந்த நிலை உருவாகியிருக்கிறது. அவர் எப்பொழுது ஹெட்க்வார்டர்சிலே இருக்கிறார், எப்பொழுது கேம்ப் போகிறார் என்று தெரிந்து கொள்ள எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளுக்குச் சுற்றுப் பயண நகல் அனுப்ப வேண்டும். மற்ற அதிகாரிகள் சுற்றுப்பயண திட்ட நகல் அனுப்புவதுபோல் தாசில்தார்களும் அனுப்பினால் அவர்களைப் போய்ப் பார்த்து மக்களுடைய குறைகளை எடுத்து கூறி நிவாரணம் தேடுவதற்குச் சௌகரியமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

தாலுக்கா அளவிலே பட்டாக்கள் கொடுப்பதில் ஒரு கடினமான நிலை இருக்கிறது. இதற்குப் பல கருத்துக்கள் சொன்னார்கள். பட்டா விஷயமாக ஏழைகள்தான் பொதுவாக பாதிக்கப்படுகிறார்கள். பணக்காரர்களுக்கு அது சௌகரியமாக இருக்கிறது. ஏழைகள் கடன் கேட்கும்போது, 'கூட்டுப் பட்டாவாக இருக்கிறது, தனிப்பட்டாவாக இருந்தால் கவனிக்கிறேன்' என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். தனிப்பட்டாவாக இருந்தால்தான் கடன் கிடைக்க ஏதுவாக இருக்கிறது. ஆனால் கூட்டுப் பட்டாவாக இருந்தால் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். கூட்டுப் பட்டாவாக இருப்பதற்கும், தனிப் பட்டாவாகப் பிரித்துக் கொடுப்பதற்கும் யார் காரணம் என்பதைத் தயவுசெய்து அமைச்சர்கள் கொஞ்சம் பரிசிலனை செய்து, கூட்டுப் பட்டாவாக இருப்பதைத் தனிப் பட்டாவாக மாற்ற வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிரயப் பத்திரம் எழுதி ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பதிவாகும்போதே பட்டா மாற்றத்திற்கும் எழுதி கொடுக்கிறோம். அதை வைத்துக்கொண்டே பட்டாவை மாற்றிக் கொடுக்க எவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

புறம்போக்கு நிலங்களை நிலமில்லாத ஏழை விவசாயிகள் பத்துப் பதினைந்து வருஷங்களாகப் பயிர் செய்து வருகிறார்கள். அவற்றுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வருஷா வருஷம் அபராதம் கட்டிக் கொண்டு வரவேண்டிய நிலை இருக்கிறதே தவிர, பட்டா அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஜமாபந்தியின்போது மனுக்

கொடுத்தாலும் அந்தப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிக்கு அனுப்பி விடுகிறார்கள். அவர்களும் உடனடியாக பட்டா கொடுக்காமல் பரிசீலனை செய்வதாகச் சொல்கிறார்கள். அதிலும் இன்னும் ஒரு பெரிய குறை என்னவென்றால், அந்தப் புறம்போக்கு நிலங்களை பட்டா செய்வதாகச் சொல்கிறார்கள். அதிலும் இன்னும் ஒரு பெரிய குறை என்னவென்றால், அந்தப் புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுப்பதிலே அந்தப் பஞ்சாயத்து போர்டு தீர்மானம் கேட்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு தீர்மானம் கொடுத்
11-00 a.m. தால்தான் பட்டா கொடுக்கப்படுகிறது. தயவுசெய்து இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பஞ்சாயத்து யூனியன் வேலைகளில் பல பிரிவுகள் இருக்கின்றன. அவற்றில் அதிகமாக மாங்கன்றுகள், தென்னை கன்றுகள் வைப்பதற்குச் செலவிடப்படுகிறது. இதுவரையில் அவை ஏதாவது பலன் கொடுத்திருக்கிறதா என்றால் இல்லை. பலன் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. வைத்த கன்றுகள் உயிரோடாவது இருக்கிறதா என்று பார்த்தால், கிடையாது. இந்தத் துறைகளை எடுத்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோழிப் பண்ணைகள் வைக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலே கோழிப் பண்ணைக்காக என்று செலவிடப் படுகிற தொகை அதிகமாகிறதே தவிர அதற்கு ஏற்றவாறு பலன் இல்லை. இப்படி பல துறைகளில் பணம் விரயம் செய்யப்படுவதை தடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

(மணி அடிக்கப்பட்டது.)

***திரு. கே. பி. பழனிசாமி**: மதிப்பிற்குரிய **சபாநாயகர்** அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சுதந்திரம் அடைந்த பிறகு நாம் பல நல்ல திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம். ஜில்லா நிர்வாகத்தில் நம்முடைய பொறுப்புகளும், கடமைகளும் அதிகமாகியிருக்கின்றன. பஞ்சாயத்து ஆட்சி வந்த பின்பு புறம்போக்கு நிலங்களை சர்க்கார் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்திருக்கிறது. அந்த புறம்போக்கு நிலங்கள் சிலவற்றில் இருபது, முப்பது ஆண்டுகளாக அந்த நிலங்களில் குடியிருந்தவர்களும், சாகுபடி செய்து வந்தவர்களும் இருக்கிறார்கள். பஞ்சாயத்துக்கள் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி அந்த நிலம் பள்ளிக்கூடத்திற்கு வேண்டும் அல்லது மருத்துவ மனைக்கு வேண்டும் என்பதாகச் சொல்லி அவர்களை உடனடியாக புறம்போக்கு நிலத்தில் இருந்து வெளியேறச் சொல்கிறார்கள். கலெக்டரிடம் விண்ணப்பித்துக்கொண்டால் இதில் நாங்களும் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுவதை நடைமுறையில் காண்கிறோம். இந்த விஷயத்தை நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும். ஏழை, எளிய மக்கள் பல காலமாக அந்தப் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வந்தாலோ,

சாகுபடி செய்து வந்தாலோ அவர்களுக்கே இந்த நிலங்களை உரிமையாக்கவேண்டும் அல்லது நிலத்தைவிட்டு வெளியேற்றப் படாதவாறு பாதுகாப்பு அளிக்கவேண்டும். இதையெல்லாம் உத்தேசித்தால் அந்தப் புறம்போக்கு நிலங்களை இனியும் தொடர்ந்து அரசாங்கம் தன் பொறுப்பிலேயே வைத்துக்கொள்வது நலம் என்று கருதுகிறேன்.

சேலம், கோவை ஆகிய ஜில்லாக்களை பைபர்கேஷன் செய்ய வேண்டுமென்ற எண்ணம் முன்பு இருந்தது. இப்போது அந்த ஜில்லா கலெக்டர் ஐ.எ.எஸ். ஆகத்தான் இருக்கிறார். அவருக்குத் துணையாக ஜாயிண்ட் கலெக்டர் என்று ஐ.எ.எஸ். அதிகாரிகளைத்தான் போட்டு இருக்கிறார்கள். இரண்டுபேரும் ஐ.எ.எஸ். ஆதலினாலே அவர்களுக்குள் யார் தலைமை என்பதும், ஒருவர் சொல்வதை இன்னொருவர் ஏன் கேட்கவேண்டும் என்பதும் சில விஷயங்களில் பெரிய சங்கடமான பிரச்சினையாக எழுந்து கொண்டிருக்கிறது. அப்படியில்லாமல் ரெவின்யூ அதிகாரியைப் போட்டால் நலமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். அப்படியில்லாமல் ஒரு ஜில்லாவைப் பிரித்து ஒரு பகுதியை ஒரு கலெக்டரிடத்திலும், இன்னொரு பகுதியை ஜாயிண்ட் கலெக்டரிடத்திலும் கொடுப்பதனால் இப்போது வேலை தடைபடுகிறது. ஆகவே ஜாயிண்ட் கலெக்டர் என்பதையே எடுத்துவிடுவது நலம் என்று நினைக்கிறேன்.

அடுத்து நாம் இப்போது ஹரிஜன் வெல்பார் ஆபீசர் என்று நியமிக்கிறோம். இது ரெவின்யூ டிவிசனல் ஆபீசருடைய 'காடரா'க இருக்கிறது. அதனால் இவர்கள் போடுகிற உத்தரவை தாசில்தார்கள் கேட்பது இல்லை. ஆர்.டி.ஓ. சொன்னால் தாசில்தார்கள் கேட்கிறார்கள். ஆனால் ஹரிஜன் வெல்பார் ஆபீசர் சொன்னால் கேட்பது இல்லை. சம்பளமும், காடரும் இவர்களுக்குக் குறைவாக இருப்பதாக நினைத்து இவர்கள் உத்தரவை மதிப்பது இல்லை. ஆகவே, இவர்களுடைய தகுதியை உயர்த்துவதற்கு காடரை உயர்த்த வேண்டும், சம்பள அலவன்சை உயர்த்த வேண்டும். அப்போதுதான் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மற்றொன்று, தாசில்தாருக்கு போன் இருக்கிறது. மற்ற அதிகாரிகளுக்கு போன் இருக்கிறது. ஆனால் ஹரிஜன் வெல்பார் ஆபீசருக்கு போன் வசதி கிடையாது. அங்கே வேலை செய்கிற ஸ்டாப்கள் டெம்பரரியாகவே இருக்கிறார்கள். மூன்று மாதத்திற்கு ஒரு முறை சாங்ஷன் வாங்கி சம்பளம் கொடுக்கிறார்கள். மற்ற இலாகா சிப்பந்திகளைப் போல இவர்களுடைய சர்வீசையும் ரெகுலரைஸ் செய்து, நிரந்தரமாக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் மக்களிடத்தில் எத்தனையோ விண்ணப்பங்கள் வருகின்றன. குறிப்பாக தாசில்தாருக்கு விண்ணப்பம் கொடுக்கிறார்கள் என்றால் அந்த விண்ணப்பங்களுக்குப் பல வருஷங்களானாலும்கூட பதில் கொடுப்பது கிடையாது. இத்தனை

நாட்களுக்குள்ளாகப் பதில் கொடுத்தாகவேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கவேண்டியது அவசியம். அப்போதுதான் மக்களுடைய குறைபாடுகள் நீங்க வசதி ஏற்படும். அதேமாதிரி பல கிராமங்களில் இருந்து மக்கள் தாலுக்கா ஆபீசுக்கு வருகிறார்கள். அப்படி வருகிறவர்கள் தங்குவதற்கு இட வசதி கிடையாது. அவசரத்திற்கு —லெட்ரின் வசதி, பாத் ரூம் வசதி கிடையாது. நல்லமுறையில் லெட்ரின் ஏற்படுத்தி, ஒரு ஸ்காவன்ஜரை ஏற்படுத்தி சுத்தமாக தாலுக்கா ஆபீஸ்களில் இந்த வசதிகள் எல்லாம் இருக்கும்படியாகச் செய்ய வேண்டும்.

தாசில்தார் என்றால் இன்றைக்கு எத்தனையோ தாசில்தார்கள் இருக்கிறார்கள். ஜீப் வசதி பலருக்குக் கிடையாது. லோன் தாசில்தார், ப்ளாக் தாசில்தார் இவர்கள் தாலுக்காவைச் சுற்றிப் பார்த்து அங்கங்கே உள்ள நிலையைத் தெரிந்துகொள்ளவோ, மக்களுடைய குறைபாடுகளை நிவர்த்திக்கவோ போவது என்றால் முடியாது இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு ஜீப் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் கிணறுவெட்ட லோன் கொடுக்கிறோம். ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அதைச் செலவழித்து கிணறு எடுத்தும் தண்ணீர் வரவில்லை. இன்னும் ஒரு முன்னூறு, நானூறு ரூபாய் செலவழித்து வெட்டினால் தான் தண்ணீர் வரும் என்றால் அந்தத் தொகையையும் கொடுத்து உதவ நாம் முன்வரவேண்டும். இல்லையென்றால் அதுவரை செலவழித்த பணம் வீணாகப் போய்விடும். இதையெல்லாம் பரிசீலனை செய்து நல்லமுறையில் கிணறு வெட்ட உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். மணி :** கனம் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சி நிர்வாக மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றையதினம் மாவட்ட ஆட்சி நிர்வாகம் நடக்கிறது. அதில் சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகித்திருக்கிறார்கள். அங்கே நாங்கள் ஏதாவது ஒரு தீர்மானம் கொடுத்தால் அது அங்கே நல்லமுறையில் விவாதிக்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டால்தான் இங்கே அதைப்பற்றி எடுத்துச் செல்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

ஆனால் அங்கே ஏதாவது கேள்வி எழுதிக் கொடுத்தால் வருஷம் இரண்டானாலும் பதில் கொடுப்பது இல்லை. உதாரணமாக ஒன்று சொல்கிறேன். 1948-ல் அரியலூர் ஏரியை 99 ஆயிரம் ரூபாய் செலவு செய்து ரிப்பேர் செய்தார்கள். ஆனால் அந்த ஏரியை நான் போய்ப் பார்க்கிற நேரத்தில் குடிக்கக் கூடத் தண்ணீர் இல்லை. அதைப்பற்றி என்ஜினியருக்கு எழுதிக் கேட்டேன். 99,000 ரூபாய் செலவு செய்து, எஸ்டிமேட் போட்டு வேலையை முடித்திருப்பதாகச் சொல்கிறீர்கள். ஆனால் அங்கே போய்ப் பார்த்தால் கொஞ்சம்

கூடத் தண்ணீர் இல்லையே என்று கேட்டேன். அங்கு நான் போன நேரத்தில் அந்த ஏரியில் தண்ணீர் இல்லை. வேப்பந்தட்டை யூனியனைச் சேர்ந்த அரசலூர் மராமத்து ஏரி அதுக்கு செலவு செய்த ரூ. 1957-ல் 43 ஆயிரம். நான் கேள்வி கேட்ட ஒரு மாதம் கழித்து பிறகு மழை பெய்த காரணத்தால் தண்ணீர் இருந்தது. அந்தத் தண்ணீர் 120 ஏக்கர் நிலத்துக்குப் போதுமானது என்று சுருக்கமாகச் சொல்லி விட்டார்கள். இதையெல்லாம் தயவு செய்து கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். வேப்பந்தட்டை யூனியனைச் சேர்ந்த பகுதியில் 1957-ல் எடுத்த மேட்டூர் சூரியன் குட்டு மழுதையாறு திட்டம் எடுத்த ஒரு வேலையானது முடிக்கப் பெறவில்லை. அந்தத் திட்டம் எங்கே போனது என்று தெரியவில்லை. அந்த ஊர்ப் பெருங்குடி மக்கள் எல்லாம் அந்தத் திட்டத்தைப் பற்றி என்னவாயிற்று என்று என்னைக் கேட்கும்படி சொன்னார்கள். அதைப்பற்றிக் கேட்டால், தாசில்தார் ஆர்.டி.ஓ.-வைக் கேள் என்கிறார். ஆர்.டி.ஓ. கலெக்டரைக் கேள் என்கிறார்; கலெக்டர் சர்க்காரைக் கேள் என்கிறார். விவசாயத்தில் அதிக அக்கறை செலுத்தவேண்டுமென்று கூறும் இந்த நேரத்தில் எங்கள் பகுதியில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது. திருச்சி மாவட்டத்தில் காவிரியாறு தென் பகுதியில்தான் ஓடுகிறதே தவிர வட பகுதியில் ஓடுவது இல்லை. என்னுடைய பகுதி பெரும்பாலும் ஏரி விவசாயத்தை நம்பி வாழக்கூடிய இடமாகையால், இதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு ஜீப் இருக்கிறது. ஆனால் தாசில்தாருக்கு ஏதாவது மனுப் போட்டு அவர் அந்த இடத்தை வந்து பார்க்கவேண்டுமென்றால் அவருக்கு ஜீப் கிடையாது. அவர் சைக்கிளில் வந்துதான் பார்க்கவேண்டியிருக்கிறது. ஜமாபந்தியன்று சொல்லுகின்ற காரியத்தையெல்லாம் அன்றையதினம் கணக்கப் பிள்ளை செய்து கொடுக்கிறோம்' என்று சொல்கிறார்களே தவிர, வருஷம் இரண்டானாலும் செய்வதில்லை. அதோடு கிராம சேவகர்களுடைய பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு லோனுக்காகப் பஞ்சாயத்து யூனியனுக்கு அப்ளிகேஷன் போட்டால் கிராம சேவகர் பரிசீலித்து அது சாங்ஷன் ஆகி வர நெடுநாட்கள் ஆகின்றன. ஒரு லோன் பெறுவதிலே என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன என்பதைப் பார்ப்பதற்காகவே நான் ஒரு லோன் அப்ளிகேஷன் கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் தப்பாகக் கணக்கிட்டு விடக்கூடாது. எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை அறிவதற்காகத் தான் கொடுத்திருக்கிறேன். கிராமத்தில் பண . . .

(மணி அடிக்கப்பட்டது.)

* **திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட

நிர்வாகத்திலே நல்ல பல காரியங்கள் செயல்பட்டு வருகின்றது என்று சொன்னாலும் அவ்வப்போது பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய குறைகளை நாம் கண்காணித்து நல்ல முறையில் சீர்திருத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பொதுவாக விவசாயிகள் சால்வன்சி சர்டிபிகேட் வாங்குவதிலே மிகுந்த கஷ்டம் இருக்கிறது. அந்த சர்டிபிகேட்டை வாங்க தாசில்தாரை அணுகி, கணக்கப் பிள்ளையிடம் சென்று ஒவ்வொரு முறையும் வாங்க வேண்டுமென்ற நிலைமை இல்லாமல், மேல் நாடுகளில் இருப்பது போன்று கைப் புத்தகம் ஒன்றை, பாஸ்புக் சைசில் கொடுத்து அதிலே அவனுடைய சொத்து விவரங்களைக் குறிப்பிடக்கூடிய முறை இருந்தால் அதன் மூலம் சால்வன்சி சர்டிபிகேட் பெறுவது என்றால் விவசாயி தாலுகா ஆபீசுக்கு அடிக்கடி நடக்க வேண்டிய வேலை குறையும். சாதாரணமாகப் பட்டம் பெற்றவர்கள் அவர்களுடைய சர்டிபிகேட்டைக் காட்டி வேலைக்குத் தன்னுடைய தகுதியை எடுத்துக் கூறுவது போல, விவசாயிகளுக்கு அவர்களுடைய சொத்து விவரங்கள் அடங்கிய பாஸ் புத்தகம் ஒன்று கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்தால் அது சால்வன்சி சர்டிபிகேட்டைச் சுலபமாகப் பெற உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது ஐயாயிரத்திலிருந்து உயர்ந்த பட்சம் பத்தாயிரம் ரூபாய் வரை கொடுக்கப்படுகிறது. ஆனால் தொழிற் துறையைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு 87½ ரூபாய் வரை இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் பணம் கொடுக்கிறது. இன்று நம்முடைய திட்ட வேலைகளின் காரணமாக விவசாய நிலங்களின் விலை உயர்ந்திருக்கிறது. ஒரு ஏக்கர் 50,000 ரூபாய் பெறுமான பத்து ஏக்கர் நிலத்தின் மீது ஐயாயிரம் அல்லது பத்தாயிரந்தான் கொடுக்கப்படுகிறது. அதுவுமில்லை காரணமாக இன்று விவசாயச் செலவு அதிகமாகிறது. கூலி அதிகமாகிறது. ஆகவே, தொழிற் துறைக்குக் கொடுப்பது போலவே விவசாயிகளுக்கும் தாராளமாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே பத்து ஆண்டுகளுக்கு, பதினைந்து ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன் மாகாணம் பூராவும் பல்வேறு இடங்களில் வசூலிக்கப்படாமல் இருக்கிறது. அதனைத் தீவிரமாக வசூலிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் கலெக்டரேட்டிலிருந்து ரெவின்யூ போர்டுக்கு சிறிய குளம் குட்டைகள் எடுத்துக் கொள்வது பற்றிய லிஸ்ட் அனுப்பப்பட்டது. ஏழு மாதம் கழித்து ரெவின்யூ போர்டிலிருந்து 'ஃபர்தர் இன்பர்மேஷன்' வேண்டுமென்று கேட்டு எழுதினார்கள். இந்த ஃபர்தர் இன்பர்மேஷன் போய் பதில் வர இரண்டு வருஷம் ஆகிவிடுகிறது. இப்படி இரண்டு ஆண்டு காலம் கடிதப் போக்குவரத்துக்கே ஆனால், இரண்டு ஆண்டுக்கு முன்னால் போட்ட எஸ்டிமேட் இன்றைக்கு என்ன நிலையில் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு குளத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் 36,000 ரூபாய் எஸ்டிமேட் போட்டிருந்தால் இன்றைய நிலையில்

50,000 ரூபாய் ஆகும். இப்படி 18 குளங்களுக்குக் கணக்குப் பார்த்தால் அதிகச் செலவாகும். அப்போது புதிய வேலைகளை எடுத்துக் கொள்ள முடியாது. இந்த வகையில் போர்டு ஆபீசில் இருக்கக்கூடிய தாமதத்தை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது. சென்ற ஆண்டில் குளம் குட்டைகளைப் பழுது பார்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் இருக்கிறது.

எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை ஒரு கருத்து. இன்று டெபுடி கலெக்டர் ப்ரொமோஷன் ஆக வேண்டுமென்றால் தாலுகா சர்வீஸ் ஒரு வருஷம் இருக்கவேண்டும்; கமிஷனராக ஒரு வருஷம் இருக்கவேண்டும். இந்த இரண்டு சர்வீசும் இருந்தால்தான் டெபுடி கலெக்டர் ப்ரொமோஷனுக்கு தகுதியுடையவர்களாகிறார்கள். ஆனால் ஹெட்குவார்டர்சில் எத்தனை இருக்கிறதோ அத்தனை தாசில்தார்களும் அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆறு, ஏழு வருஷமாக அதே நிலை. டெபுடி கலெக்டரை மாகாண லெவலில் பொறுக்கி எடுக்கிறார்கள். ஆக வேறு ஜில்லாவில் ஏழு ஆண்டுகளுக்குப் பிந்தியவர்கள் கூட தாலுகா சர்விஸ் செய்து டெபுடி கலெக்டராக வந்து விடுகிறார்கள். ஆகவே, தாலுகா சர்விஸ், கமிஷனர் ஆகிய இரண்டு சர்விசும் இருக்க வேண்டுமென்பதை மாற்றி ஏதாவது ஒரு சர்விஸ் மட்டும் இருந்தால் போதும் என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் பென்ஷனுக்குத் தொகை 20 ரூபாய் என்று இருப்பதைப் போல் என்.ஜி.ஓ.-க்களுக்கும் குறைந்த அளவு பென்ஷன் தொகை 20 ரூபாயாக இருக்க வேண்டுமென்று செய்ததற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில் குழந்தைகளுக்கும், தாய் சேய் நலனுக்கும் ஒரு குறிப்பிட்ட ஆஸ்பத்திரி நன்றாக நடந்து வருகிறது. நான் சர்க்கார் ஆஸ்பத்திரியைக் குறை கூறவில்லை. அங்கு விஞ்ஞான முறையில் இன்னும் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டு தாய்மார்கள், என்.ஜி.ஓ.-க்களின் குடும்பத்தினர் நல்ல மருத்துவ வசதி பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜில்லா லெவலில் பெரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். எல்லோரையும் சொல்லவில்லை. ஒருவர் இருக்கிறார். நாங்கள் போய்ச் சொன்னால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்—நான் போய்ச் சொல்லவில்லை, எங்களில் ஒரு பெண் அங்கத்தினர் போய்ச் சொன்னார்கள்—"நீங்கள் எல்லாம் இதை ரெப்ரசென்ட் செய்யக்கூடாது" என்று சொன்னார்கள். என் தொகுதியில் உள்ள ஒருவர் சொன்னார் என்றால் அதெல்லாம் எனக்குத் தெரியும், நீங்கள் போய்விட்டு வாருங்கள், குட் பை என்று சொன்னார்கள். 1,500, 2.000 ரூபாய் சம்பளம் பெறும் ஒரு உத்தியோகஸ்தர் சட்ட சபை அங்கத்தினர்கள் சொல்லும்போது அவர்களைப் பார்த்து குட் பை என்று சொன்னால் நாங்கள் எப்படி அந்த தொகுதியில் வேலை செய்ய முடியும்? அடுத்தபடியாக, அசிஸ்டென்ட் கலெக்டர், சப்-கலெக்டர் போன்றவர்கள் கூட்டத்திற்கு வரும்போது அவர்கள் 7-லிருந்து 7¼ வரைதான் இருக்க முடியும்

என்கிறார்கள். அவர் வருவதற்கு இரண்டு மணி நேரம் முன்பு இரண்டு மணி நேரம் பின்பு என்றிருந்துவிட்டு அவர்கள் வந்து எனக்கு வேலை இருக்கிறது போகிறேன் என்று சொன்னால் அவர் எப்படி டிவிஷனில் வேலை செய்ய முடியும்? ஆகவே அவர்கள் பொதுமக்களோடு தொடர்பு கொண்டு பொது மக்கள் சௌகரியத்திற்காக வேலை செய்யவேண்டும், அவர்கள் மக்களின் ஊழியர்கள் என்று ஆக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு நல்லவர்கள் எங்கள் டிவிஷனுக்கு வந்தால் அவர்கள் நல்லவர்களாக இருப்பதால்தான் மாற்றி விட்டோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆக, நல்ல அதிகாரிகளை நிலைத்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. நா. இராசாங்கம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகத்தின் தலைப்பில் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மாவட்ட நிர்வாகத்தார் ஒரு காலத்தில் நிலவரியை வைத்தே இந்த நிர்வாகத்தை நடத்தி வந்தார்கள். இப்போது அந்த நிலைமையில் இல்லை. நிலவரியோடு பல வரிகள் சேர்ந்துவிட்டன. நிலவரியை ஏற்படுத்திய காலம் உண்டு என்றால் அந்தக் காலம் இன்றுவரை இருந்துகொண்டுதான் இருக்கிறது. 400 ஆண்டுகளுக்கு முன்னால் என்று நினைக்கிறேன், அக்பர் காலத்தில் ராஜா தோடர்மால் மந்திரியாக இருந்து நிலத்தின் தரப்படி வரி என்று ஏற்படுத்தி அதற்குப் பின்னால் மூன்று ஆட்சிகள் வந்தும் இப்போதும் நிலம், நிலத்திற்கு வரி என்ற தலைப்பில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இன்றும் நிலம், நிலவரி என்று வரையறுக்கப்படவில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். நிலவரி ஏற்பட்ட போது நிர்வாகத் துறையில் பல அதிகாரிகள் இருந்தார்கள். அதற்குப் பின்னர் ஆங்கிலேய ஆட்சி வந்தது. அப்போது மாவட்ட ரீதியாக கலெக்டர்கள், சப்-கலெக்டர்கள், ஆர்.டி.ஓ.-க்கள் அதற்குக் கீழ் தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள் என்று ஏற்பட்டது. இப்போதும் மாவட்ட ஆட்சியில் கலெக்டர் என்ற ஒரு பெயர் இருக்கிறது. அவருக்கு அடுத்தபடியாக அல்லது சமமாக ஜில்லா ரெவின்யூ அதிகாரி என்று ஒருவர் இருக்கிறார். அதற்கு அடுத்தபடியாக ஒரு P.A. இருந்த இடத்தில் இப்போது மூன்று பேர்கள் இருக்கிறார்கள். வேலை பல துறைகளிலும் பல வகைகளிலும் அதிகமாகியிருக்கிறது. முன்னால் ஒரு ஐ.ஸி.எஸ். பட்டம் பெற்ற அதிகாரி நடத்திய நிர்வாகத்தில் உள்ள திறமை, அந்த நிர்வாகப் போக்கில் இப்போது இருக்கிறோமா என்றால் என் அனுபவத்தைப் பொறுத்த மட்டில் இல்லை. வேலை அதிகரித்திருக்கிறது. பொறுப்பு அதிகரித்திருக்கிறது. பல காரியங்களை கலெக்டர் செயலாற்ற வேண்டியவராக இருக்கிறார், ஆகவே பொறுப்பிலிருந்து தவற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பது பொதுவாக ஒத்துக்கொள்ளவேண்டிய ஒன்றுதான். அதிகாரங்கள் சரியாகப் பயன்பட்டு வருகிறதா? அனைவரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன், கட்சி, கிட்சி ஒன்றுமில்லை. நம்

நாடு என்ற முறையில் எடுத்துப் பார்த்தால் நாம் செலவிடுகிற அளவிற்கு நிர்வாகம் இயங்கி வருகிறதா? அப்படி நிர்வாகம் இயங்கி வந்தால் செலவிட்ட பணத்திற்குரிய பயனை இந்த நாடு அடைந்திருக்கிறதா என்று பார்த்தால் அடையவில்லை என்பதை உள்ளூற ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். இதற்குக் காரணம் என்ன? ஒவ்வொரு மாவட்ட அதிகாரியும் தங்களை ராஜாவாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆகவே அவர்கள் அதிகாரங்களைக் குறைக்கவேண்டும் என்று, முன்னால் ராஜாஜி முதன் மந்திரியாக இருந்தபோது கலெக்டர்களின் அதிகாரங்களை குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். காரணம் பொருத்தமாக இருந்தது. சிறிய வயதுடைய ஐ.சி.எஸ். அதிகாரிகள் வந்து விட்டால் அவர்களுக்கு கலெக்டர் உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்ற நியதியிருக்கிறது. அப்படி வந்துவிட்டால் நிர்வாக அனுபவம் குறைவாக இருப்பதின் காரணமாக நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்று தெரியாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களின் அதிகாரங்களைக் குறைக்கவேண்டுமென்று அதற்காக ஒரு மாநாடு போட்டு, ராஜாஜி உரையிலேயே அப்போது சொல்லப்பட்டது. அப்போதிருந்த கலெக்டர்கள் எல்லாம் ஒரு அபிப்பிராயம் சொன்னார்கள். இப்போது தேவை இல்லை, கொஞ்ச நாட்கள் கழித்து பார்க்கலாம் என்று அப்போது நிறுத்தி வைக்கப்பட்டு; வேறுவிதமாக அது மாறிவிட்டது. இப்போது வருகிறவர்களும் சிறிய வயதுக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நிர்வாக அனுபவம் இல்லாததினால் நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்று அங்கத்தினர்கள் கூறினார்கள். அது பொருத்தமாயிருக்கலாம். ஆனால் அவ்வளவும் பொருத்தமாகயிருக்கும் என்று சொல்லமுடியாது. சிறிய வயது உள்ள கலெக்டர்கள் வருகிறார்கள், நல்ல வேலை செய்கிறார்கள். வேலை அதிகரித்துப் போயிருக்கிறது. மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள், வடக்கு, தெற்கு இரண்டு மன்றங்களுக்கும் அவர்தான் தலைவர். ஆகவே இரண்டின் வேலையையும் பார்த்து பதில் சொல்ல வேண்டும். உள்ளபடியே தென் ஆற்காடு கலெக்டரை போற்றுகிறேன். அவ்வளவு காரியங்களுக்கும்—பதில் நல்லதாகயிருக்கிறதா இல்லையா என்பதில்லை—ஒரே சமயத்தில் அவர்கள் பதில் அளிக்கிறார்கள். இரண்டையும் வைத்து நடத்துகிறார்கள். அவர் சிறிய வயதினர்தான். உள்ளபடியே அவர் தன் முழு கவனத்தையும் நிர்வாகத்தில் வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கு சொல்லாமல் இருக்க முடியாது. ஆனால் அவரோடு நான் நெருங்குவதில்லை, பழகுவதில்லை, பேசுவதில்லை, அவர் பதிலில் இருந்து புரிந்து கொள்ளும் நிலையில் கூறுகிறேன். அப்படிப்பட்ட கலெக்டர்களும் இருக்கிறார்கள். அதை மறுக்க முடியாது. அவர்கள் வேலை அதிகரித்திருக்கிறது. சிறிய வயதுக்காரர்களை, நல்ல கெட்டிக்காரர்களை அனுப்புகிறார்கள் முதல் அமைச்சர் அவர்கள் என்றாலும் அவர்கள் வேலை அதிகரித்திருக்கிறது. கலெக்டர் இல்லாது ஒரு வேலையும் இல்லை. எவ்வளவோ இலாக்காக்கள் புதிது புதிதாக வருகின்றன. எங்களைப் போன்ற எம்.எல்.ஏ.-க்களுக்குக்கூட சில இலாக்காக்கள் வருவது தெரிவதில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலுவலகமும் திறக்கப்படுகிறது. ஆபீஸ்கள் எங்கேயிருக்

[திரு. நா. இராசாங்கம்] [10th March 1964

கின்றன என்பது புரியவில்லை. எல்லா வேலைகளையும் செய்ய அதிகாரம் இருக்கிறது. நிர்ப்பந்தம் இருக்கிறது. கிராம வாரியாக பார்க்கும்போது கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களை நாம் எல்லோரும் நினைக்கவேண்டியதுதான். மாவட்டத்தின் தலைமை கலெக்டருக்கு, கீழே வெட்டியான், தலையாரி என்று வைத்திருக்கிறோம். இது எப்போதோ ஏற்பட்டது. முற்போக்குத் தன்மையை உண்டாக்கவேண்டும். ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வேண்டும், சமதர்ம ஆட்சி நிலவவேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட 15, 20 ரூபாய் சம்பளக் காரர்களை வைத்துக்கொண்டு 24 மணி நேரமும் காவல் காக்கும் வேலையைக் கொடுத்து அவர்கள் வாழ்வில் சிறிதுகூட மறுமலர்ச்சி ஏற்படாத அளவிற்கு இருக்கிற அவர்கள் மீது ஆட்சியினர் அதிகக் கவனம் செலுத்தவில்லை, மற்றத் துறைகளில் கவனம் செலுத்தி விட்டார்கள் என்றுதான் கருத வேண்டும். எல்லா அமைச்சர்களையும் நான் வேண்டிக் கொள்வது அவர்கள் கட்சிக்கு வேலை செய்தது, நாட்டுக்கு வேலை செய்தது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும், ஒவ்வொரு அமைச்சரும் அமைச்சர் பதவியிலிருந்து நீங்கும்போது ஒரு புரட்சிகரமான திட்டத்தை நாட்டுக்கு கொடுத்தார்கள் என்றிருக்க வேண்டும் என்பதற்காக இன்றிலிருந்து நீங்கள் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று கூறினேன். தோடர்மால் வரலாற்றை உண்டாக்கினார். அதேபோல் ஒவ்வொரு அரசன் காலத்திலும் ஒவ்வொரு மந்திரிகளும் புரட்சிகரமான வரலாற்றை உண்டாக்கியிருக்கிறார்கள். அப்படியிருக்க நம் மந்திரிகளுக்கு அந்த வரலாற்றில் இடம் பெற தகுதியில்லையா என்றால் தகுதி இருக்கிறது. ஆனால் வேறு வகையில் அந்தத் தகுதியைச் செலவிடுகிறீர்கள். ஆகவே நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பு குறைகிறது. இன்று இரண்டாட்சி முறையில் நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. கலெக்டர் இரண்டையும் செய்கிறார்கள். ஒன்று ரெவின்யூ நிர்வாகம், இரண்டாவது டெவலப்மென்ட் நிர்வாகம். தாசில்தாரை எடுத்துக் கொண்டால் ரெவின்யூ வேலையையும் அவர்கள் பார்க்க வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து காரியங்களையும் பார்க்கவேண்டியிருக்கிறது. அதேபோல் ஆர்.டி.ஓ.-வை 11-30 a.m. எடுத்துக்கொண்டால் ரெவின்யூ காரியங்களைப் பார்க்கிறார்கள், அதோடு பஞ்சாயத்து வேலைகளுக்கும் ஓடவேண்டியிருக்கிறது. இப்படி இரண்டையும் ஒருவரே பார்க்கிறார். சில சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். மேலே இருக்கின்ற கலெக்டர் முதல், கீழே இருக்கின்ற ஊழியர்கள் வரை இப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நிர்வாகம் எப்படியிருந்தாலும் செம்மையாக நடைபெறுவதற்குரிய வழியில் ஒவ்வொரு துறை அமைச்சரும் முக்கியமான கவனம் செலுத்தவேண்டும். மற்ற காரியங்களை எல்லாம் பார்த்துக்கொள்வதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள். ரெவின்யூ போர்டு இருக்கிறது, வேறு அதிகாரிகள் இருக்கிறார்கள். கீழே சிப்பந்திகள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கவனித்துக்கொள்வார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

10th March 1964] [திரு. நா. இராசாங்கம்]

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட அலுவலர் அவர்களுடைய கட்டிடம் கிளைவ் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடம் என்று சொல்லுகிறார்கள். கிளைவ் பங்களா என்றுதான் அதற்குப் பெயர். இது மிகவும் சிறிதாக இருக்கிறது. இதைச் சற்று விஸ்தரிக்க வேண்டும். அதோடு அங்குள்ள அலுவலகத்தில் செக்ஷனில் சென்று ஏதாவது கேட்டால், இரண்டு கிளார்க்குகள் தான் இருக்கிறார்கள், அதுபோதாமல் இருக்கிறது, இதனால் சரியாக வேலை நடைபெற வழியில்லை என்று குறை சொல்லுகிறார்கள். ஆகவே தென்ஆற்காடு மாவட்ட கலக்டர் ஆபீஸை 10 கஜ அளவுக்கு விஸ்தரித்து, ஊழியர்களையும் சற்று அதிகமாக்கும்படி முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மாவட்ட நிர்வாக மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களை விளக்க கருதுகிறேன். நமது மாவட்ட நிர்வாகங்கள் எல்லாம் நல்லமுறையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்று இருந்தாலும், கிராமப்புறங்களிலுள்ள அதிகாரிகள்தான் இதற்குக் காரணமாக இருந்து வருகிறார்கள். ஆகவே கிராமப்புறங்களிலுள்ள நிர்வாகங்கள் நல்லமுறையில் நடைபெறுவதற்காக நல்ல ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி செய்யவேண்டுமென்றால் கிராம அதிகாரிகள்தான் முக்கியமானவர்கள். கிராம அதிகாரிகளுக்கு நாம் நல்ல சலுகை காட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். முன்பு பிரிட்டிஷ் காலத்தில் இருந்த சம்பளத்தையே தான் இப்போதும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் முன்புள்ள வேலையைத்தான் அவர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். இதனால் கிராம மக்களுக்கு சிறு தொல்லையாகவும் இருக்கிறது. கிராம அதிகாரிகள் என்று எடுத்துக்கொண்டால் அவர்களை யாரும் போற்ற மாட்டார்கள். இந்த மாதிரியான ஒரு கஷ்டமான சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அதோடு பஞ்சாயத்து போர்டுகளிலும் கிராம அதிகாரிகள் கலந்து இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது, பஞ்சாயத்து நிர்வாகத்திற்கும், கிராம அதிகாரிகளுக்கும், அதோடு பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கும், அதோடு கிராம சேவக்குகளுக்கு உதவி புரிவதற்கும் இவர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கிராம சேவக்குகள் வந்து ஏதாவது வேலை செய்யும்போது, இந்த கிராம கணக்குப் பிள்ளைக்கும் அவர்களுக்கும் முரண்பாடாக இருக்கிறது. கிராம சேவக் ஏதாவது வந்து கணக்கு கேட்டால் "இவர்கள் என்ன கேட்பது, நாம் என்ன கொடுப்பது" என்கின்ற அளவில் கிராம கர்ணங்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை போக வேண்டும். அவ்விதம் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. அந்த முறையில் பார்த்தால் கிராம அதிகாரிகளுக்கு எல்லாம் அதிகப்படியாக சம்பளம் கொடுக்கவேண்டும். குறைந்தது மாதம் 100 ரூபாயாவது கொடுத்து நல்லமுறையில் திறம்பட அவர்கள் வேலைகளை நடத்துவதற்கு வழிவகை செய்யவேண்டும்

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

என்பது நான் என்னுடைய கருத்து. அப்படியில்லாவிடில் பழைய மாமூல் தான் நடந்து கொண்டிருக்கும். அப்படி இருக்கும்போது நாம் லஞ்சம் என்று பேசிக்கொண்டிருப்பதில் எந்தவிதமான பயனும் இல்லை. இந்த லஞ்சம் எங்கேயிருந்து வருகிறது என்று பார்த்தால், இது கிராம அடிப்படையிலிருந்துதான் வருகிறது. கிராம மக்களும் இம்மாதிரி கொடுக்காமல் இருக்க முடியாது. ஆகவே கிராம அதிகாரிகள் விஷயத்தில் சிறிது அதிகமாகச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இவர்களுக்கு பஞ்சாயத்து வேலையும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் வேலையும் இருந்து கொண்டிருக்கிறது. எவ்வளவோ அதிகமான வேலைகள் எல்லாம் இருக்கின்றன. இதற்கு மேல் தாலுகா ஆபீசிலிருந்து தாசில்தார் வருகிறார் என்றால் அங்கே போக வேண்டும், கலெக்டர் வருகிறார் என்றால் அங்கே உடனே ஓடிப்போக வேண்டும். கலெக்டர் வருகிறாரா என்று பார்த்தால் அவர் வருவதும் இல்லை, எப்படியும் இவர் போய் காத்துக்கொண்டிருக்கவேண்டும். கடைசியில் யார் வருகிறார் என்றால், கலெக்டர் ஆபீசிலுள்ள ஹெட் கிளார்க் வந்து விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகக்கூடிய நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. இம்மாதிரி பல வேலைகளைப் பார்க்கின்ற கிராம அதிகாரிகளுடைய நிலைமையை சீர்படுத்துவதற்கு நல்ல வழிவகை செய்தால் நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறும் என்பது என்னுடைய கருத்து என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, சப் ரெஜிஸ்டிரார் ஆபீஸில் வேலை செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். முக்கியமாக இந்தத் துறையின் மூலம் நமக்கு நல்ல வருமானம் வருகிறது. இங்கு கிளார்க்குகளை எல்லாம் அதிகமாக்கவேண்டும். அதோடு சில சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ் பக்கம் போனால் அங்கே நிற்பதற்கோ, அல்லது தங்குவதற்கோ எந்தவிதமான இட வசதியும் கிடையாது. மரத்தினுடைய நிழலிலோ அல்லது தரையிலோ தான் உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டும். இந்தமாதிரி சிறிய இடத்தில் எல்லோரும் உட்கார்ந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சப்-ரெஜிஸ்டிரார் கூப்பிடுகிறார்கள் என்றால் உடனே எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு 11-மணி அளவில் போகவேண்டியிருக்கிறது. கொஞ்சம் கெடுபிடியான ஆளாக இருந்தால் அடுத்த ஆட்களை கூப்பிட்டுவிடுவார். கொஞ்சம் நல்லவராக இருந்தால் தான், கூப்பிட்டவர்கள் வருவதுவரையிலும் காத்திருப்பார். ஆகவே இம்மாதிரி சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸிற்கு சென்றால் தங்குவதற்குரிய இடவசதி செய்து கொடுக்க வேண்டும். சில இடங்களில் இருக்கிறது, ஆனால் பல இடங்களில் இந்த வசதி இல்லாமல் இருக்கிறது. இதை கவனித்து வேண்டிய வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தாசில்தார்களுக்கெல்லாம், உயர்வு உத்யோகங்கள் கொடுக்கப்படுகிறது. அந்த முறையில் கோவை ஜில்லாவில் அதிகமாக கொடுத்திருப்பதாக தெரியவில்லை. ஆகவே அவர்களுக்கும்

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

உத்யோக உயர்வு கொடுத்தால் அவர்களுக்குத் திருப்திகரமாக இருக்கும். சாதாரணமாக புதிதாக வந்தவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் என்ற நோக்கத்தில் தீவிரமாக வேலை செய்கிறார்கள். ஆனால் பழைய காலத்தில் வேலையிலிருக்கக்கூடியவர்கள் அப்படியே வந்த பேப்பர்களை எல்லாம் அப்படியே போட்டு வைத்துவிடுகிறார்கள். லோன் போன்ற பேப்பர்களை எல்லாம், என்ன நமக்குப் பதவி உயர்வா கிடைக்கப்போகிறது, பார்க்கலாம் வரட்டும் என்று அப்படியே வைத்துவிடுகிறார்கள். லோன்-க்கு மனு செய்திருக்கின்றவர்கள் அடிக்கடி போய் அவர்களைப் பார்த்த பின்னால் தான் எடுத்துக்கொள்கிறார்கள். இதையும் கவனித்து விவசாயிகளுக்கு சீக்கிரமாக லோன் முதலியவைகள் கிடைப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மேல் எழுத்தர் பிரிவில் வேலை செய்கின்றவர்களுக்கு ஸீனியாரிட்டி பிரகாரம் வேலை உயர்வு கொடுப்பதில்லை என்கின்ற குறை இருந்துவருகிறது. ஜூனியர்களுக்கு பதவி உயர்வு கிடைத்துவிடுகிறது என்று புகார் சொல்லுகிறார்கள். காரணம் என்னவென்றால் ஏதாவது சிபாரிசு செய்து வந்துவிடுகிறார்கள். இதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் அப்பீலுக்குப் போக வேண்டிய நிலைமை வந்துவிடுகிறது. ஆகவே முறையாக கொடுத்தால் இந்த தொந்தரவு எல்லாம் ஏற்படாது என்பதையும், இவர்களுக்கு அடிக்கடி பிரமோஷன் கொடுக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இதில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **புலவர் கா. கோவிந்தன் :** மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்று அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கின்ற மான்யங்களின் மீது எங்கள் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாவட்டத்தில் பல தலைமை அலுவலகங்கள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் பல துறைகளுக்குச் சென்று குறைகளை எடுத்துக் கூற வேண்டிய நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது. ஆனால் மாவட்ட தலைமைக் கழகத்திற்கு செல்லுகின்ற நேரத்தில் கலெக்டர் இருந்தால், டி.ஆர்.ஓ. இருப்பதில்லை, அவர் இருந்தால் கல்வி அதிகாரி இருப்பதில்லை, அவர் இருந்தால் விவசாயத் துறை அதிகாரி இருப்பதில்லை என்கின்ற ஒரு நிலை தான் இருக்கிறது. இதன் காரணமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறைக்கும் செல்லவேண்டிய ஒரு இக்கட்டான நிலைமைக்கு உறுப்பினர்கள் ஆளாகிறார்கள். ஆகவே குறிப்பிட்ட சில நாளில் எல்லா மாவட்ட அலுவலகங்களிலும், தலைமை அதிகாரிகள் இருக்கவேண்டும் என்கின்ற ஒரு முறை இருந்தால், அந்தக் குறிப்பிட்ட நாளில் சென்று குறைகளை எடுத்துச் சொல்வதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

[புலவர் கா. கோவிந்தன்] [10th March 1964

அடுத்தபடியாக இப்போது ரெவின்யூ இலாகாவிற்கு கடன் வசூலிப்பது என்ற வேலை மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. கடன் கொடுப்பது பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக கடன் கொடுக்கிற நேரத்தில் வாங்குகிறவர்கள் மகிழ்வார்கள். ஆனால் கடனைத் திரும்பக் கேட்கிற நேரத்தில் ஆத்திரப்படக் கூடிய நிலை ஏற்படும். கடன் கொடுப்பது ஒருவர், கடன்களைத் திரும்ப வசூலிப்பது ஒருவர் என்ற நிலை இருப்பதால் கடன்கள் வசூலாவதில்லை. ரெவின்யூ இலாகாவினரை கடன் வாங்கியவர்கள் மதிப்பதில்லை. ஆகையால் முன்பு இருந்த மாதிரி கடன்கள் கொடுப்பதையும் ரெவின்யூ இலாகாவிடம் ஒப்படைக்க வேண்டும். அல்லது கொடுத்த கடன்களை வசூலிப்பதையும் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கவேண்டும். இந்த இரண்டுக்குள் ஒன்றைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, இப்போது பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு ஜீப் கொடுத்திருக்கிறார்கள். இன்றைய தினம் தாசில்தாருக்கு ஒரு தாலூகா பூராவும் சென்று பார்க்கவேண்டியிருக்கிறது. அவர் சைக்கிளில் போகிறார். இல்லையானால் பஸ் கிடைத்தால் போகிறார், இல்லையென்றால் லாரியில் ஏறிச் செல்லுகிறார். இந்த முறையில் சென்று அலைய வேண்டியிருக்கிறது. ஆகையால் தாசில்தாருக்கு ஒரு ஜீப் கொடுப்பது வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்து, இப்போது பஞ்சாயத்தில் இருக்கிற பழைய பாக்கிகளை ரெவின்யூ இலாகாவினர் வசூலிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். பஞ்சாயத்தில் டிமாண்ட் கொடுக்காமலும், வீட்டுக்கு இவ்வளவு தான் வரி என்று வீட்டுக்காரருக்குத் தெரிவிக்காமலும் சில ஆண்டுகள் கழிந்திருக்கின்றன. பழைய பாக்கிகளை சேர்த்து வசூலிக்கவேண்டுமென்று சொல்லி, பழைய பாக்கிகளை வசூலித்தால் அதிலே 2½% கமிஷன் தருகிறோம், அதில் 1% கணக்குப்பிள்ளை எடுத்துக்கொள்ளலாம், 1% மணியக்காரர் எடுத்துக் கொள்ளலாம், மீதி ½% கீழே உள்ளவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னாலும் வசூல் ஆனால் தான் முடியும். பழைய பாக்கிகளை வஜா செய்து விட்டு நடப்பு ஆண்டுக்கான வரிகளை வசூலிக்கும் பொறுப்பை ஒப்படைப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ரெவின்யூ இலாகாவிலே ஒரு லோயர் டிவிஷன் க்ளார்க்காக நுழைந்து அந்தத் துறையிலே இருக்கிற அத்தனை டெஸ்ட்டுகளையும் பாஸ் செய்து யூ.டி.சி. ஆகி, பிறகு வேண்டிய டெஸ்ட்டுகளையும் பாஸ் செய்து ரெவின்யூ இன்ஸ்பெக்டராகி, பிறகு உள்ள டெஸ்டுகளையும் பாஸ் செய்து டெபுடி தாசில்தார் ஆகி, இப்படி இந்த நிலையில் ரெவின்யூ இலாகாவில் நுழைகிற ஒரு அதிகாரி தாசில்தாராக வருவதற்குள்ளாகவே ஆண்டு கழிந்து விடுகிறது. பஞ்சாயத்தில் அப்படி இல்லை. எக்ஸ்டென்ஷன் ஆஃபீசராகி 2-3 ஆண்டுகள் ஆனவுடன் கமிஷனராக ஆகும் நிலை வந்து விடுகிறது. ஒரு துறையில் விரைவான முன்னேற்றமும், ஒரு துறையில் காலம்

10th March 1964] [புலவர் கா. கோவிந்தன்]

கடந்த முன்னேற்றமும் இருக்கிற காரணத்தினால் ரெவின்யூ இலாகா ஊழியர்களுக்கு ஊக்கம் குறைகிறது. இதை நிவர்த்திக்க அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யவேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, இப்போது ரெவின்யூ இலாகாவினர் பல சர்ட்டிஃபிகேட்டுகள் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கிற நேரத்தில் கிராம உத்தியோகஸ்தர்கள் கொடுத்தால் அதை ரெவின்யூ இன்ஸ்பெக்டரை வைத்து பரிசீலிக்கவேண்டும், அதன் பேரில் தாசில்தார் விசாரித்து கையெழுத்திடுவது என்ற நிலை இருக்கிறது. அரசாங்கத்திற்கு புள்ளிவிவரங்களெல்லாம் தருகிறவர்களே கிராம அதிகாரிகள்தான். அப்படியிருக்க அவர்கள் கொடுக்கக்கூடிய ஆதாரத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமல் அதன் மீது விசாரணை நடத்துவது என்பது அவர்களை நம்பாத நிலை உண்டாகிறது, அதோடு காலம் வீணாகிறது என்ற நிலையை எண்ணி கிராம உத்தியோகஸ்தர்கள் கொடுத்தால் அதன் மீது கையெழுத்திடலாம் என்ற விதி வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, முக்கியமான ஒரு செய்தி. இன்றைக்கு தீர்வை விதிக்காத புறம்போக்கு இருக்கிறது. அதை அடமானம் செய்து கொடுக்கலாம் என்று பஞ்சாயத்து தீர்மானம் போட்டாலும் அதை ரெவின்யூ இலாகா ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதாகக் கூறுகிறார்கள். பஞ்சாயத்துக்களுக்குச் சட்டபூர்வமாகக் கொடுக்கப்பட்ட புறம்போக்குகளை அடமானம் செய்து கொடுக்கும்போது அதை ரெவினியூ இலாகாவில் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதால் பஞ்சாயத்து சட்டத்தையே திருத்தவேண்டுமென்று எங்கள் மாவட்டத்திலிருந்து கூட கலெக்டர் அவர்கள் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதையும் பரிசீலித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கென சில புறம்போக்குகளை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த புறம்போக்குகளை ஹரிஜனங்களுக்கு அடமானம் செய்து வைக்கும் நேரத்தில் ஒரு கண்டிஷன் இருக்கிறது. ஹரிஜன இனத்தவர் தான் அதை வாங்கவோ விற்கவோ செய்யலாம், அதை ஜாதி ஹிந்துக்கள் வாங்கக் கூடாது என்று கண்டிஷன் இருக்கிறது. ஒரு ஹரிஜன இனத்தவர் வாங்கி அதை மற்றொரு ஹரிஜன இனத்தவருக்கு விற்று விட்ட பிறகு ஜாதி ஹிந்துக்கள் வாங்கும் நிலை உண்டாகியிருக்கிறது. இது கண்டிஷன் மூலமாக வந்த அடமானம் என்று தெரியாமல் வாங்கி விடுகிறார்கள். எங்காவது புகார் வந்தால் உடனே அதை சர்க்கார் எடுத்துக் கொள்ளுகிற நிலை வந்திருக்கிறது. பல ஆயிரக் கணக்கான ரூபாய் செலவழித்து வாங்கியவர்கள் அதனால் நஷ்டப்படக் கூடிய நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க சப்-ரெஜிஸ்டிரார் ஆஃபீசில் ஒரு ஹரிஜன இனத்தவர் ஜாதி ஹிந்துவுக்கு நிலம் விற்பதாக இருந்தால், அந்த நிலம் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலமா என்று பார்த்து, ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலமாக இருந்தால் ஜாதி

[திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்] [10th March 1964

இணைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், லஸ்கர் தண்ணீர் விடுவது முதலிய வேலைகளெல்லாம் யூனியன் மேற்பார்வையில் இருந்தால் சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஹைவேஸ் சூபர்வைஸர்ஸ் போட்டிருக்கிறார்கள். அதேமாதிரி லஸ்கர்களைப் போட்டால் நலம் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இப்பொழுது 'புல் பினான்ஸ் ஸ்கீம்' கொண்டுவரப்பட்டிருக்கிறது. 'புல் பினான்ஸ் ஸ்கீம்' எந்த யூனியனில் அமுலுக்கு வந்திருக்கிறதோ அந்த யூனியனில் தக்காவிக் கடன் கொடுப்பதில்லை. ஆனால், கூட்டுறவு முறையிலே கடன் பெற வேண்டுமென்றால் ரொம்ப நாட்கள் ஆகின்றன. ஆகவே, யூனியன் மூலமாக விவசாயிகளுக்கு தக்காவி லோன் கொடுக்கும்படி சீக்கிரம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது நான் விவசாயிகளுக்கு பயிர் செய்யும்போது சீக்கிரம் லோன் கிடைக்கும்.

பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களில் பழம் செடி வகையறுக்கள் வைத்து பயிர் செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் ஹரிஜனங்கள் உழுதுகொண்டிருக்கிற இடங்களைக்கூட பஞ்சாயத்துக்கள் எடுத்திருக்கிறார்கள். இப்பொழுது பஞ்சாயத்துக்கள் உழுதுகொண்டிருக்கும் நிலங்களையும், பயிர் செய்துகொண்டிருக்கும் நிலங்களையும் ஹரிஜனங்களுக்குக் கொடுத்தால் அவர்கள் நன்றாக பயிர் செய்து நல்வாழ்வு வாழ ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கும், நிலச்சுவான்தாரர்களுக்கும் தகராறு ஏற்பட்டால், அது ஆர்.டி.ஓ-வுக்குப் போகவேண்டியிருக்கிறது. அப்பொழுது நிலச்சுவான்தாரர்கள் வக்கீல் வைத்தால், விவசாயியும் வக்கீல் வைக்கவேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து போர்டு யார் உழுகிறார்கள் என்று ஒரு தீர்மானம் போட்டு, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிலும் ஒரு தீர்மானம்போட்டு அதை ஆர்.டி.ஓ.-வுக்கு அனுப்பினால், அதன் பிரகாரம் கூடிய சீக்கிரம் நிலம் கிடைக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது வருஷா வருஷம் உரம்புத் தண்ணீரை எடுத்து பயிர் செய்பவர்கள் வருஷா வருஷம் தற்காலிக பெர்மிட் வாங்குவதற்கு ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். யூனியன் கமிஷனர் தாசில்தார் கிரேடில் இருக்கிறார்கள். டெப்யூடி தாசில்தார் இருந்தால் அஜ்மாஷ் எல்லாம் செய்து யூனியன் மூலம் தற்காலிக பெர்மிட் கொடுத்தால் கூடிய சீக்கிரம் விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேமாதிரி விவசாயிகளுக்கு சிமெண்டு கிடைப்பதும் ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தந்த யூனியனிலிருந்தே விவசாயிகளுக்கு சிமெண்டு கொடுக்க உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

10th March 1964]

*திரு. சா. ராமசாமி: கனம் தலைவர் அவர்களே, இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட நிர்வாக அளவிலும், தாலுகா, பிர்கா ஆகிய நிலைமைகளிலும் உள்ள நிர்வாக முறைகளை நாம் ஓரளவுக்கு சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். எல்லா இலாகாக்களையும்விட அதிகமான அளவுக்கு இந்த இலாகாவினால் வருமானம் கொடுக்கப்படுகிறது, அல்லது கிடைத்து வருகிறது. இந்த ரெவின்யூ துறையில் நாம் அதிகமான வருவாயை எய்திவருகிறோம். ஆனால், அதன் நிர்வாகத்திற்காக செலவழிக்கப்படுகிற தொகை மிகவும் குறைவாகத்தான் இருந்து வருகிறது. இப்பொழுது இதர நிர்வாகத் துறைகளை வட்டார அபிவிருத்தித் துறைக்கு ஒதுக்கிய காரணத்தினால் அதிலிருந்த நிர்வாகஸ்தர்கள் பல நிலைகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறையினை சரியான ஒருமுறையிலே கண்காணிக்கிற ஒரு பொறுப்பினை அல்லது அந்த நிர்வாகத்தை ஏற்று செய்கின்ற ஒரு நிலைமைக்கு அந்த இலாகாவில் போதுமான பணியாளர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டினை என்னால் எடுத்துச் சொல்ல முடியும். காரணம், மாவட்ட, வட்ட, குறுவட்ட, கிராமப் பகுதிகளில் 100-க்கு முக்கால் பகுதிக்கு மேலாக விவசாயிகளின் பிரச்னையை அதிகமான அளவிலே அவர்கள் கவனிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். சர்வசாதாரணமாக ஒரு நிலப் பிரச்னையை எடுத்துக்கொண்டால், அந்தப் பிரச்னை பல ஆண்டுகள் கணக்கில் தீராத அளவுக்கு நிலைமைகள் வளர்ந்துவருகின்றன. விவசாயிகள் இம்மாதிரி பல பிரச்னைகள் தீராத நிலைமைக்கு ஆளாகிக்கொண்டு வருகிறார்கள். விவசாயிகள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு, தங்களுடைய நிலைமைகளை சீர்படுத்திக்கொள்வதற்கு பலவகைகளில் ஏற்பாடு செய்திருக்கிறோம். நிலச் சீர்திருத்தம் செய்வதற்கோ, அல்லது கிணறு வெட்டுவதற்கோ அல்லது இதர அபிவிருத்தி செய்வதற்கோ அவர்கள் கடன் பெறவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அம்மாதிரி கடனை அவர்கள் வட்டார அபிவிருத்தி அதிகாரிகளின் மூலமாகவும், ரெவின்யூ அதிகாரிகள் மூலமாகவும் பெறவேண்டிய நிலை இருக்கும்பொழுது, அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணமாக இருப்பது கூட்டுப் பட்டா என்ற முறைதான். கூட்டுப்பட்டா முறையை மாற்றினால்தான் விவசாயிகளுடைய நிலைமை சீர்படும். 1924-ம் ஆண்டின் செட்டில்மெண்டுக்குப் பிறகு இன்றுவரையிலே அதிலே மாறுதல் செய்யப்படவில்லை. பட்டா மாற்றுவதற்கு இரண்டுவித முறைகள் கையாளப்படுகின்றன. ஸப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸில் கோசம் கொடுப்பது ஒரு முறை. தாசில்தாரே நேரடியாக கோசம் கொடுப்பது ஒரு முறை. அதாவது ஒரு சப்-டிவிஷன் சர்வேயில் உட்பிரிவினுடைய ஒரு பிரிவிலே ஒரு பகுதியை ஒருவர் வாங்குகிறார் என்றால், அது கூட்டுப் பட்டாவில் இடம் பெறுகிறது. கூட்டுப் பட்டாவை தனிப் பட்டாவாக ஆக்கினால்தான் கடன் பெற முடியும். ஒரு நிலத்தின் உச்சவரம்பு மதிப்பு ரூ. 10,000

என்று வைத்துக்கொண்டால், அதை இரண்டாகப் பிரித்து ரூ. 5,000 மதிப்புள்ள ஒரு பகுதியை ஒருவர் வாங்குகிறார் என்றால் அவர் அந்த ரூ. 5,000 மதிப்புள்ள பகுதியை வைத்து கடன் வாங்க முடியாது. கூட்டுப் பட்டா பிரச்னை அதில் வந்துவிடுகிறது. விவசாயம் சிறந்த முறையிலே செய்யவேண்டுமானால் அவர்கள் சுலபமாக கடன் பெறுவதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். கூட்டுப்பட்டா முறையினால் விவசாயிகள் மிகவும் அவதிப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. அதனால் அவர்களுடைய முற் போக்கு பாதிக்கப்படுகிறது. ஆகவே, இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் உடனே இதில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்று உடனடியாக சர்வே செடில்மெண்டு செய்யவேண்டும். இல்லையென்றால், ஒவ் வொரு பிர்காவுக்கும் ஒரு சர்வேயரை நியமித்து ஒரு விவசாயி ஒரு நிலத்தின் ஒரு பிரிவை விற்கிறான் என்று சொன்னால் அந்தப் பிரிவுக்கான கட்டணத்தை ஸப்-ரிஜிஸ்டிரார் ஆபீசிலேயே கட்டி, ரிஜிஸ்டர் செய்யப்படும்பொழுதே பட்டா மாறுதல் செய்து கொடுக்கவேண்டும். அப்படி ஸப்-டிவிஷனுக்கான கட்டணத்தை உடனே வாங்கிக்கொண்டு தனிப்பட்ட முறையில் பட்டாவை மாற்றிக்கொடுத்தால், விவசாயிகளின் நன்மையை அரசாங்கம் கருத்தில் கொண்டிருக்கிறது என்பதை உறுதியிட்டுச் சொல்ல முடியும். ஒன்று சர்வே செடில்மெண்டு முறையை உடனடியாகக் கொண்டு வரவேண்டும். இல்லை என்றால், ஸப் ரிஜிஸ்டிரார் மூலம் உடனடியாக அந்த ஆண்டுக்குள்ளேயே நிலத்தைப் பிரித்து தனிப் பட்டா முறையில் பட்டா செய்து கொடுக்கவேண்டும். இந்த முறையில் ஏதாவது ஒன்றை அரசாங்கம் கையாளவேண்டு மென்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
12 noon இந்தக் கடன் பெறுவதில் ஏற்படும் கடன் பெறமுடியாத நிலைமைக்கு இதுதான் காரணம். பெறுவதில் தாமதம் ஏற்படுவதற்கு சிலபலக் காரணங்கள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் ஆயிரம் ரூபாய் கடன் வேண்டும் என்றால், ஒரு விவசாயி ரூ. 100 முன்பணம் கட்ட வேண்டிய நிலமை இருக்கிறது. ரூ. 100 திடீரென்று ஏற்பாடு செய்யக் கூடிய வசதி உள்ளவனாக இருந்தால் அந்த விவசாயி ஆயிரம் ரூபாயையும் ஏற்பாடு செய்து கொள்ள முடியும். கடன் தேவை என்கிற விவசாயிக்கு இப்படி முன் கட்ட ணம் கட்ட வேண்டிய அவசியத்தை தவிர்த்தால்தான் நலமாக இருக்கும். ஒன்று, இது இல்லாமல் இருக்க வேண்டும், அல்லது கடனைக் கொடுக்கும் சமயத்தில் இந்தப் பணத்தை பிடித்துக் கொள்ளக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும். நிச்சயமாகா முன் பணம் கட்டக்கூடிய நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். விவசாயிகளே வில்லங்க சர்டிபிகேட் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்காக அவர்கள் 20, 22 என்று செலவழிக்க வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. இதற்கு வேண்டிய பணமும் அவகாசமும் அவர்களுக்கு இல்லாததால் அவர்கள் கஷ்டப்படு கிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட இலாகாவே, கடன் தரும் இலாகாவே வில்லங்க சர்ட்டிபிகேட்டும் வாங்கிக் கொள்ளும் முறையை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். அதற்காகும்

செலவை கடன் கொடுக்கும் நேரத்தில் கழித்துக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். முன் கூட்டியே வில்லங்க சர்ட்டிபி கேட் கொடுக்க வேண்டும் என்ற நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுகொள்ளுகிறேன்.

இந்த புறம்போக்கு விஷயத்திலே விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். 10, 15 அல்லது 20 வருஷங்களாக தாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலத்தை அவர்களுக்கு பட்டாவாக்கிக் கொடுக்கும் நிலைமை இல்லாததால் அவர்கள் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். சில இடங்களில் கட்சிப்பிரதிக் கட்சி காரணமாக இவைகள் தடைபடுகின்றன. சில இடங்களிலே பஞ்சாயத்து தலைவருக்கும் கிராம அதிகாரிகளுக்கும் உடன்பாடு இல்லாத காரணத்தினால், விரைவாக எதையும் செய்ய முடியவில்லை. ஒரு மனை அடமானம் என்று எடுத்துக் கொண்டால் அதற்கு பஞ்சாயத்து தலைவர் கையெழுத்து போட்டுக் கொடுக்கவேண்டும் என்பது அவசியமாக இருக்கிறது. கிராம அதிகாரி பஞ்சாயத்து தலைவரோடு உடன்பாடு உள்ளவராக இல்லாவிட்டால் பஞ்சாயத்து தலைவர் சிபாரிசு செய்ய மறுக்கிறார். இந்த முறைகளை சரி செய்ய அரசாங்கம் சிந்தித்து ஒரு நல்ல முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்திலே ஒரு தீர்மானம் போட்டு மேல் அதிகாரி உத்தரவு பெற்று செய்யவேண்டும் என்று ஏற்படுத்த வேண்டும். அல்லது ரெவின்யூ இலாகாவுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று ஏற்படுத்திவிடவேண்டும். பஞ்சாயத்து தலைவருக்கும் கிராம அதிகாரிக்கும் நல்ல உடன்பாடு உள்ள ஒரு சில கிராமங்களில்தான் காரியங்கள் நல்ல முறையில் நடக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்தக் குறைகளை தீர்க்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கோரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நாம் அமைத்திருக்கும் நிர்வாக முறையானது மிகவும் நல்ல முறையிலே ஆங்காங்கு குக்கிராமங்களில்கூட இருக்கும் பிரச்னைகளை தீர்க்கும் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது பஞ்சாயத்துக்கும் யூனியனுக்கும், டெவலப்மெண்ட் கௌன்ஸில்களுக்கும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு பணியாற்றக்கூடிய முறையில் செயல்படுகிறது இன்றைக்கு நாம் அமைத்திருக்கும் நிர்வாக முறை. அதுவே சாலச் சிறந்ததாக அமைந்திருக்கிறது. அப்படி அமைக்கப்பட்டிருந்த போதிலும் நாம் நினைக்கும் அளவுக்கு நாம் போடும் திட்டங்கள் நிறை வேறாமல் சில இடங்களில் வேலைகள் தடைபடும் சூழ்நிலை ஏற்பட்டும் வருகிறது. இதற்குக் காரணம் பல இருக்கின்றன. உதாரணமாக பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால் அங்கே பல வேலைகள் சாங்ஷன் செய்யப்பட்டு வருகின்றன. டெவலப்மெண்ட் கவுன்சிலை எடுத்துக் கொண்டால் மைனர் இரிகேஷன் போன்ற பல வேலைகள் சாங்ஷன் ஆகியும் நடை

முறையில் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அதற்கு முக்கிய காரணம் சரியான கண்ட்ராக்டர்கள் வராததுதான். கண்ட்ராக்டர்கள் வருவது இல்லை. கால்காசுக்கு கால்காசு லாபம் என்ற முறை எல்லாம் மாறிப்போய்விட்டது. இந்த வேலைகள் துரிதமாக நடக்க அமைச்சர் அவை லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டிகளை அதிகமாக்கி மூலதனத்திற்கு பணமும் கொடுத்து காரியங்களை செய்ய முன் வந்தால் திட்டங்கள் நல்ல முறையிலே அமுல் படுத்த முடியும் என்ற கருத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஜில்லாவை எடுத்துக் கொண்டால் முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். இளைஞர்கள் ஜில்லா அதிகாரிகளாக வந்தால் அவர்கள் அவ்வளவு திறமையாக வேலை செய்ய முடியாது. ஆகவே குறைந்தது 35 வயதாவது ஆனவர்களாக இருந்தால்தான் நல்ல முறையிலே வேலை செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்கள். 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு திறமையும் அனுபவமும் இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களை எந்த அளவுக்கு பொது மக்கள் உபயோகப்படுத்திக் கொள்கிறார்களோ அந்த முறையில்தான் அவர்களுக்கு பயன் ஏற்பட முடியும். சாதாரணமாக படித்து பட்டம் பெற்ற ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் 25 வயதுக்கு உள்ளாக இருந்தாலும் நல்ல முறையிலே பணி செய்ய முடிகிறது. யார் என்ன சிபாரிசு செய்தாலும் எது நியாயமானதோ அதையே செய்ய வேண்டும் என்று துணிச்சலுடன் செய்கிறார்கள். அதை வரவேற்க வேண்டும் என்றுதான் நான் சொல்லுவேன். அப்படிப்பட்ட இளைஞர்களை நல்ல முறையிலே பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்றுதான் இந்த சந்தர்ப்பத்திலே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு தாலுகா ஆபீசை எடுத்துக் கொண்டால் அவர்கள் போதுமான கட்டடம் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஆபீசுகளிலே நாம் அதிகாரிகளுக்கும் ஸ்டாப்களுக்கும் பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆனால் தாலுகா ஆபீசுகளிலே பணியாற்றிக்கொண்டிருக்கும் ஊழியர்களுக்கு வீட்டுப் பிரச்னை ஒரு சங்கடமான பிரச்னையாக இருக்கிறது. அதை மாற்றி அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்து சௌகரியம் செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்போது தாலுகா லெவலிலே உள்ள தாசில்களுக்கும் ஊழியர்களுக்கும் வீடுகள் கிடைக்கும். அது சாலச் சிறந்ததாக அமையும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல தாசில்தாருக்கு ஒரு ஜீப் வேண்டும் என்பது அவசியமானது. இப்பொழுது பஞ்சாயத்து யூனியனிலே இருக்கும் ஜீப்பை எப்பொழுதாவது

ஒரு சந்தர்ப்பத்திலே தாசில்தார் அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அது தாலுகா லெவலிலே உள்ள தாசில்தாருக்கு கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கிறது. நாம் எவ்வளவோ செலவு செய்கிறோம். லட்சக்கணக்கான ரூபாய்கள் எப்படி எல்லாமோ போகிறது. அப்படி இருக்கும் போது தாசில்தாருக்கு ஜீப் கொடுப்பது மிக்க அவசியமானது என்று கருதி அதில் கவனம் செலுத்தி ஒரு ஜீப் அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

உத்தியோக உயர்விலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எத்தனையோ யோக்கியமான முறையில் பணியாற்றும் உத்தியோகஸ்தர்கள் உயர்வு அடைவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் கீழே இருக்கும் ஒரு சில அதிகாரிகள் மேலே இருப்பவர்களை காக்காய் பிடிப்பதால் அவர்களுடைய கான்பிடென்ஷியல் ரிபோர்ட்டுகள் நல்ல முறையிலே அமைகின்றன. அப்படியில்லாமல் வேலையே குறிப்பாக இருந்து யோக்கியமாக வேலை செய்பவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அதைமாற்றி உயர் பதவிக்கு உண்மையாக உழைக்கிறவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி ஒரு கலெக்டர் பதவிக்கு உயர்வு கொடுக்கவேண்டுமானால் அப்பொழுது எவ்வளவு டெவலப்மெண்ட் ஓர்க்குகள் நடந்திருக்கின்றன, யார் அதிகமாக செய்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் பார்த்து அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

லோன்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். லோன்கள் கொடுப்பதில்கூட பஞ்சாயத்து யூனியன்களுக்கு பணம் போதவில்லை. இன்றைக்கு அவர்கள் பத்துபேர்களுக்கு பம்பு செட்டுக்காக கடன் கொடுக்க ஒதுக்கியிருக்கிறோம். நவீன முறையில் விவசாயத்தைப் பெருக்க திட்டம் போட்டிருக்கிறோம். பஞ்சாயத்து யூனியனிலே கிணறு வெட்ட இன்னும் பல விவசாய சம்பந்தமான காரியங்களுக்கு பணம் கேட்கிறவர்களுக்கு தடங்கல் இல்லாமல் கொடுக்கக்கூடிய வசதியை செய்து கொடுக்க யூனியன்களுக்கு அதிகமான தொகை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

டவுன் பஞ்சாயத்தைப் பொருத்தவரை ஒன்று சொல்ல விரும்புகிறேன்; கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வரிவசூலிக்க மாட்சிங் கிராண்ட் கொடுக்கிறோம். சில டவுன் பஞ்சாயத்துக்கள் ஏழையான பஞ்சாயத்துக்களாக இருக்கின்றன. அவைகளில் எஸ்டாப்ளிஷ்மெண்ட் சார்ஜுக்குக்கூட பணம் போதவில்லை. அப்படிப்பட்டவைகளை கணக்கெடுத்து மாட்சிங் கிராண்ட் கொடுக்க யோசனை செய்தால் நன்றாக இருக்கும். டௌன் பஞ்சாயத்துக்களில் குடி தண்ணீர் பிரச்சினை தீர்க்க முடியாமல்

இருக்கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு அட்வான்சாகவும், மானியமாகவும், வட்டி இல்லாத கடனைக் கொடுத்தால், இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு பயன் படும் சூழ்நிலை ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த புறம்போக்கு நிலம் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. பஞ்சாயத்துக்கு வெஸ்ட் ஆவதற்கு முன்பு புறம் போக்கு நிலத்தில் முக்கியமான காரியத்தை செய்திருந்தால், நிலத்தில் பாடுபட்டவர்களுக்கு சொந்தமாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக இந்தக் கம்மாய் பிரச்னையை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஜில்லாவிலே என்க்ரோச் பண்ணியிருப்பவர்களை எவிக்ஷன் போட்டு கலெக்டர் ஆர்டர் போட்டால் அவர்கள் இங்கே வந்து போர்டில் ஸ்டே ஆர்டர் வாங்கி விடுகிறார்கள். போர்டிலே ஆர்டர் போட்டால் அமைச்சரிடம் சென்று சர்க்காரிலே ஸ்டே ஆர்டர் வாங்குகிறார்கள். இந்த நிலையை மாற்றி அமைக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, எனது கட்சித் தோழர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளையொட்டி ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். மாவட்ட அலுவலகங்களிடமிருந்து செல்லும் உத்தரவுகளை நிறைவேற்றுகிற கிராம அதிகாரிகளினுடைய சம்பளம் ரூபாய் 17-லிருந்து ரூபாய் 23 வரை இருக்கிறதே தவிர, உயரவே இல்லை அது மட்டுமல்ல, ஒரு சில கிராமங்களில் பரம்பரை உத்தியோக நியமன முறை (ஹெரிடிடரி அபாயின்ட்மென்ட்) இன்னும் தொடர்ந்து இருக்கிறது. இந்த நோத்திலும் அது தொடர்ந்து நீடித்திருக்க வேண்டுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து அந்த முறையை எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சர்க்கார் புறம்போக்கு நிலங்களை அடமானம் செய்யும் விதத்திலே ஏராளமான கால தாமதம் ஏற்படுகிறது. "அஸைன்டு வேஸ்ட்டரை" என்று சொல்லும் நிலங்கள் அடமானம் ஆக ஐந்து, பத்து ஆண்டுகள் ஆகும் நிலையைப் பார்க்கிறோம். ஜமாபந்தியின்போது விண்ணப்பம் கொடுத்தால், உடனே கவனிப்பதாகச் சொல்கிறார்களேதவிர, 'உடனே' என்ற சொல்லுக்குப் பொருள் இல்லாததாக இருக்கிறது. ஐந்து ஆண்டுகள், பத்து ஆண்டுகள் ஆகியும் கவனிக்கப்படாத நிலை இருக்கிறது.

பட்டா மாறுதலைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகள் உரத்திற்குக் கடன் வேண்டுமானாலும், நில அடமான பாங்குகளில் கடன் **வேண்டுமானாலும் தனிப் பட்டா** இருந்தால் தான் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறதேதவிர, கூட்டுப் பட்டாவாக இருந்தால் கடன் கொடுக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, ஒரு விவசாயி தனிப் பட்டா பெற

வேண்டுமென்றால் உடனே பெற முடிவது இல்லை. தன் நிலத்தை சப்-டிவிஷன் செய்து, தனிப் பட்டா வேண்டும் என்று மனுப் போட்டு சப்-டிவிஷன் செய்யப் போகும்போது, அங்கு யாராவது தடை செய்தால் அந்தத் தடையை நீக்க ரெவினியூ இன்ஸ்பெக்டரோ, தாசில்தாரோ, சர்வே அதிகாரியோ, யாருடைய சுவாதீனத்தில் எவ்வளவு இருக்கிறது என்று அறிந்து, அவர்கள் ஒரு முடிவு எடுக்கக்கூடிய நிலையில் இன்றைய விதிமுறை இல்லை. பக்கத்தில் இருக்கும் நிலத்திற்கு உடையவர் தடை செய்தால் அந்தச் சங்கதி கோர்ட் வரை சென்று, கோர்ட் தீர்ப்புக்குப் பின்னால்தான் சப்-டிவிஷன் செய்யும் அளவுக்கு விதி முறை இருக்கிறது. அந்த விதி முறையை உடனடியாக மாற்றியமைத்து, உடனடியாக சப்-டிவிஷன் செய்யும் முறையைக் கொண்டுவர வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நில வரி செலுத்தும்போது ரசீதுகள் தருகிறார்கள். அந்த ரசீதுகளில் சர்வே நம்பர் குறிப்பிடப்படுவதே இல்லை. வரி எவ்வளவு செலுத்தப்பட்டது என்ற விவரம் இருக்கிறதேதவிர, சர்வே நம்பரோ, விஸ்தீரணமோ குறிப்பிடப்படுவது இல்லை. ஆகவே, சர்வே நம்பரும், விஸ்தீரணமும் அடங்கிய ரசீதாக அது இருக்கவேண்டும். அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், கிராம அதிகாரிகள் நிலவரி, தீர்வை முதலியவற்றை வசூல் செய்த வகையில் தவறுகள் ஏற்பட்டு, 35 வழக்குகள் தொடரப்பட்ட வகையில் சற்றேறக்குறைய ரூபாய் 35,287 கையாடல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படிக் கையாடல் செய்தவர்களிடமிருந்து அந்தப் பணம் வசூலிக்கப்பட்டதா என்று பார்த்தால், வசூலிக்கப்படவில்லை. கிராம அதிகாரிகளை நியமிப்பதற்கு முன்பே அவர்களுடைய சொத்தின் மதிப்பு, அந்தஸ்து (ப்ராபர்டி க்வாலிபிகேஷன்) பற்றி கேட்கப்படுகிறது. அப்படியிருக்கும்போது, இந்த அளவுக்குத் தொகையை கையாடல் செய்தவர்களிடமிருந்து வசூல் செய்யாமலிருப்பது ஏன் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். வசூல் செய்ய முடியாது என்ற முறையில் அந்தத் தொகை 'ரைட்-ஆஃப்' செய்து, தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ப்ராபர்டி க்வாலிபிகேஷன் இருந்தவர்களை விட்டுவிட்டு ப்ராபர்டி க்வாலிபிகேஷன் இல்லாதவர்கள் அந்தப் பதவிகளில் இருந்தார்களா என்பதையும், அப்படி ஏன் இருக்க அனுமதிக்கப்பட்டார்கள் என்பதையும் இந்த அவைக்குக் கனம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அமைச்சர் அவர்கள், 'நம்முடைய ரெவின்யூ கணக்கிலே வரும் வருவாயில் இது சிறு துளி' என்று அலட்சியமாக இருந்துவிட மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். இது போன்ற பல சிறு துளிகள் ஏராளமாக இருக்கின்றன. சிறு துளி பெரு வெள்ளமாக மாறி, பொதுப் பணக் கையாடல், களவாடல் என்று ஆக்கப்பட்டால் நிச்சயமாக அது ஒரு நல்லாட்சிக்கு, நல்ல நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாக

இருக்க முடியாது. ஆகவே, அதற்குத் தக்க சமாதானத்தை அவர்கள் அளிக்க வேண்டும். இதுபோன்று எதிர்காலத்தில் ஏற்படாமலிருக்க தக்க பாதுகாப்புகள் செய்யவேண்டும்.

ஒன்றிப்பு மன்ற வேலைகளையும், மற்றும் பஞ்சாயத்து அமைப்பு சம்பந்தமான வேலைகளையும் பார்க்கவேண்டிய பொறுப்பு ரெவினியூ டிவிஷனல் ஆபீசருக்கு இருக்கிறது. அத்துடன் அபிவிருத்தி சம்பந்தமான வேலைகளையும் அவர் கவனிக்க வேண்டியவரா இருக்கிறார். மற்றும், கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் சட்டத்தின்படி விசாரிக்கும் அதிகாரமும் அவருக்கு இருக்கிறது. கிரிமினல் ப்ரொசீஜர் கோடின் 145, 147 பிரிவுகளின்படி முதல் நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் அவரிடம் இருக்கிறது. இதை கவனிக்க முடிகிறதா என்று பார்க்கவேண்டும். ஓரிடத்தில் கலவரம், அமைதியின்மை ஏற்பட்டால் அதைத்தடுக்க க்ரிமினல் ப்ரொசீஜர் கோர்டின் 145, 147-வது பிரிவுகளின்கீழ் அவர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியவராக இருக்கிறார். அவர் எக்ஸிக்யூடிவ் ஃபர்ஸ்ட்-க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் அதிகாரத்தைப் பெற்றிருக்கும் காரணத்தால், அவரிடம் உடனடியாக விண்ணப்பம் கொடுத்து, போலீசார் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் மக்கள் செல்லும் நேரத்தில், அவர் ஊரில் இருப்பது இல்லை. காரணம், வேலைப் பளு அவருக்கு அதிகம். ரெவினியூ சம்பந்தமான வேலையும், அபிவிருத்தி சம்பந்தமான **வேலையும்,** பஞ்சாயத்து யூனியன் தணிக்கை வேலையும் அவருக்கு இருப்பதால், அவர் அநேக சந்தர்ப்பங்களில் சுற்றுப் பயணம் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் விசாரணைக்குப்பின் ஜுடிஷியல் விசாரணைக்கு இப்படிப்பட்ட விஷயங்கள் அனுப்பப்படுகின்றன. அதனால், எக்ஸிக்யூடிவ் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் வகிக்கும் அதிகாரத்தையும் ஜுடிஷியல் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட்டிடம் ஒப்படைத்தால், அந்த அதிகாரி ஒரே இடத்தில் ஸ்டேஷனரியாக இருப்பதால், நலமாக இருக்கும், எந்த நோக்கத்திற்காக இந்த செக்ஷன்களை வைத்திருக்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேற ஏதுவாக இருக்கும். எக்ஸிக்யூடிவ் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட்டிடம் இந்த அதிகாரம் இருப்பதால் உரிய காலத்தில் உடனடியாக உத்தரவு பெற முடிவதில்லை. அந்த நோக்கமும் நிறைவேறுவதில்லை. ஆகவே, ப்ரெலிமினிரி ஃபைனல் ஆர்டர் போடும் அதிகாரம் அத்தனையும் ஜுடிஷியல் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுக்கே இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் சட்டத்தின்கீழ் வரும் கேஸ்களில், குத்தகை பாக்கி இருக்கிறதா, இல்லையா, பண்ணையாட்களை வெளியேற்ற முடியுமா, முடியாதா என்ற வகையில் ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்கள் தீர்ப்பு அளிக்கிறார்கள். அதற்கடுத்தாற்போல் நியாயமான குத்தகையை நிர்ணயம் செய்யும் அதிகாரம் தாசில்தாரிடம் இருக்கிறது. ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு இருக்கும் வேலைப் பளுவினால் தாசில்தாருக்கே அத்தனை அதிகாரங்களையும் கொடுத்துவிடலாம் என்று நான் யோசனை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன்கள், பெரும்பான்மையான கடன்கள், ஒன்றிப்பு மன்றங்கள் மூலமாகக் கொடுக்கப்படுகின்றன. அதை வசூல் செய்யும்போது, தாசில்தார் ரெவினியூ இலாகா மூலமாக வசூல் செய்யவேண்டியிருக்கிறது. இப்படி, கடன் கொடுக்கிறவர் ஒருவராகவும், கடன் வசூலிப்பவர் வேறொருவராகவும் இருக்கிற, இரண்டு முறைகள் இருப்பதால், கடன்கள் கொடுக்கும்போதே, கடன்கள் திரும்ப வசூலிக்கப்பட வழி இருக்கிறதா என்று யோசித்து, சிந்தித்துப் பார்க்கிறார்களா என்பது ஐயத்திற்கு உரியதாக இருக்கிறது. இதெல்லாம் கவனிக்கப்பட வேண்டும். நிர்வாக இயந்திரத்தில் எங்கே கோளாறுகள், குறைகள் இருக்கின்றன என்பதைக் குறித்தெல்லாம் இரு தரப்பிலிருந்தும் கனம் உறுப்பினர்கள் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னார்கள். ஒரு நல்ல ஆட்சிக்கு நல்ல நிர்வாக இயந்திரம் தேவை; அந்த நிர்வாக இயந்திரத்தை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டு; இதில் புரட்சிகரமான மாறுதல் செய்யவேண்டுமென்று கேட்டு; என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. செ. மாதவன் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் மாவட்ட நிர்வாகத்திலே இருக்கக்கூடிய குறைகளை எடுத்துக்கூறி, அதை மாற்றியமைக்கவேண்டும் என்ற கருத்து இங்கே கூறப்பட்டது. இப்பொழுது மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த மன்றங்கள் ஏதோ கூடிக் கலைவதாக இல்லாமல், அந்த மன்றங்களின் கீழேதான் மாவட்ட நிர்வாகம் முழுவதும் அமையவேண்டும் என்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இன்றைக்கு அந்த நிலை இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் கூடும்பொழுது, ஏதோ பிரச்சினைகளைப் பேசிவிட்டுக் கலையக்கூடிய மன்றங்களாக இருக்கின்றனவே தவிர, உண்மையிலேயே ஜில்லா நிர்வாகத்தைப் பற்றி ஆராய்ந்து, அதிலுள்ள குறைபாடுகளை நேரிடையாகக் களைவதற்கு அதிகாரம் தரப்படவில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்னால் இருந்த நிர்வாக முறை வேறு; சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் இப்பொழுதிருக்கும் நிர்வாக முறை வேறு. அப்படி முறைகள் மாறியிருக்கும் காரணத்தால், புதிய நிர்வாக அமைப்பில், புதிய கொள்கை அடிப்படையில் மாவட்ட நிர்வாகம் எப்படி அமைய வேண்டும், ஒரு இலாக்காவுக்கும் இன்னொரு இலாக்காவுக்கும் எப்படி தொடர்பு ஏற்படுத்த முடியும் என்ற முறையிலே ஆராய்ச்சி செய்து, புதிய நிர்வாகத்தை மாவட்ட அளவிலே ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இப்போது எனக்குத் தெரிந்த வரையில் ரெவின்யூ இலாகாவையும், பஞ்சா

[திரு. செ. மாதவன்] [10th March 1964

தேதியிலே உரிய பணத்தையும் ஒதுக்கிக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் அந்தப் பணம் உடனடியாக பட்டுவாடா செய்யப்படவில்லை. ரோடு போடும் திட்ட வேலையும் பூர்த்தியாகிவிட்டது. இன்னும் அந்த நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு பணம் கொடுக்கப்படவில்லை. அந்தப் பேப்பர் ரெவினியூ இலாகாவில் பெண்டிங்காக இருக்கிறது. காரணம் கேட்டால் இத்தனை நாளாகச் சிவப்பு நாடாவினால் அந்த பைலைக் கட்டிப் போட்டுவிட்டார்கள்— இப்போது ரெவின்யூ இலாகா போய்ப் பார்க்கும்போது அந்த நிலங்கள் ஒன்றும் அங்கே இல்லை, ரோடுதான் இருக்கிறது, ஆகவே எந்த நிலத்திற்கு நஷ்டஈடு என்பதைப் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். முன்பு நிலமாக இருந்த இடம் இப்போது ரோடாகிவிட்டது. அதைக் கவனிக்காமல் இப்போது அந்த இடத்திலே ரோடுதானே இருக்கிறது, ஆகவே நஷ்டஈடு கொடுக்க மாட்டோம் என்கிறார்கள். இந்த பேப்பர் ரெவின்யூ போர்டில் பெண்டிங்காகவே இருக்கிறது. இத்தகைய சிவப்பு நாடா முறையைக் கையாள வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, மாவட்ட ஆட்சித்துறை சம்பந்தமான இந்த மானியத்தின் மீது இரண்டொரு விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றையதினம் நம் நாட்டில் ஜனநாயக ஆட்சிமுறையைப் பரவலாக்க பஞ்சாயத்துக்களையும், பஞ்சாயத்து மன்றங்களையும் ஏற்படுத்தி செயல்பட்டு வருகிறோம். ஆகவே இன்றையதினம் ஐந்து பிரிவுகளாக ஜனநாயக ஆட்சிமுறை செயல்பட்டு வருகிறது. பஞ்சாயத்து ஊராட்சி மன்றம் என்றும், பஞ்சாயத்து கூட்டு மன்றம் என்றும், மாவட்ட அபிவிருத்தி மன்றம் என்றும், மாநில சட்டமன்றம் என்றும் பாராளுமன்றம் என்றும் ஐந்து பகுதிகளாக பிரிந்து செயல்பட்டு வருகிறது. இவற்றுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள்தான் அங்கம் வகிக்கவேண்டும். இதில் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களைப் பொருத்த வரையில் மாவட்ட கலெக்டரே தலைவராகப் பொறுப்பு ஏற்று வருகிறார். இதன் காரணமாக இந்த மன்றங்களில் ஜனநாயகம் நல்லமுறையில் காப்பாற்றப்படவில்லை. உண்மையில் ஜனநாயகம் நல்ல முறையில் வளர்ச்சி அடையவேண்டுமானால் இந்த மன்றங்களுக்கும் கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரே தலைவராக இருக்க வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்றையதினம் நிலங்கள் அத்தனையும் கிராம அதிகாரிகள் மூலமாகத்தான் கணக்கு வைத்துக் கொள்ளப்படுகிறது. எந்த விவரம் கேட்டாலும் கிராம அதிகாரிகள் கொடுக்கிற புள்ளிவிவரங்களின் மீது தான் பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. கிராம அதிகாரிகள் செய்கிற தவறுகள் எல்லாம் அப்படியே இங்கு வருகிறது. அவர்கள் குறைந்த வருமானம் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. கிராம வேலைகளை குடும்பத் தொல்லைகளினால்

10th March 1964] [திரு. ஆ. கு. சுப்பையா]

சரியாகக் கவனிப்பதே இல்லை. அதுபோலவே சர்க்காரில் இருந்து ஏதாவது விவரம் கேட்டாலும் கூட அவர்களுடைய இஷ்டத்திற்குப் பதில் எழுதிவிடுகிறார்கள். சில கிராம கர்ணிகர்கள் அடங்கல் எழுதுகிறபோது கூட வீட்டில் இருந்தே எழுதுகிற நிலைமை இருக்கிறது. இது சகலருக்கும் தெரிந்த விஷயம். சர்க்கார் அவர்களிடமிருந்து நல்லமுறையில் வேலையை எதிர்பார்ப்பதாக இருந்தால் அவர்களை முழுநேர ஊழியர்களாக ஏற்று நடத்த முன்வரவேண்டும். அவர்களுக்கு அதிகச் சம்பளத்தைக் கொடுத்து அதிகமான நேரம் ஒழுங்காக வேலைகளைச் செய்யும்படியாகக் கண்காணிக்கவேண்டும். நாம் ஏராளமாகக் கடன் கொடுக்கிறோம். அதை எல்லாம் திரும்ப வசூல் செய்கிற பொறுப்பு, நிலவரி முதலியவற்றை வசூலிக்கிற பொறுப்பு எல்லாம் அவர்களிடம் இருக்கிறது. ஒழுங்காக அவற்றை எல்லாம் அவர்கள் செய்யவேண்டுமென்றால் அவர்களை முழுநேர ஊழியர்களாக ஆக்க வேண்டும். மேலும் வெட்டி, தலையாரி என்ற பெயரில் இன்னமும் பணியாளர்கள் அவருக்குக் கீழ் இருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் அந்தச் சொல்லை கேவலமாக மதிக்கிறார்கள். "வெட்டித்தனமாகப் பேசாதே" என்று கூடச் சொல்வது உண்டு. அவர்களுக்கும் குறைந்த வருமானம் தான். அவர்களுடைய பெயர்களைக் கூட கிராமப் பணியாளர்கள் என்று மாற்றவேண்டும். அவர்களுடைய நிலையையும் சர்க்கார் உயர்த்த வேண்டும்.

12-30 p.m.

இன்றையதினம் விவசாயிகள் புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வேண்டுமென்று கோரி பல ஆண்டு காலமாகியும் கொடுக்காமல் இருந்து வருகிறார்கள். குறிப்பாக திருத்துறைப் பூண்டி தாலுகாவை எடுத்துக் கொண்டால் 1952-வது ஆண்டிலிருந்தே ஐயாயிரத்துக்கு மேற்பட்ட சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் விவசாயிகள் சாகுபடி செய்து கொண்டு வருகிறார்கள். அவற்றில் ஒருசமயம் தியாகிகளுக்கு இரண்டு மூன்று எக்கர் நிலங்கள் பட்டா செய்து கொடுக்கப்பட்டன. பிறகு அந்த விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டபோது ஒரு எக்கருக்கு 50 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கூறினார்கள். சிலர் அவ்வாறு 50 ரூபாய் கட்டி பட்டா வாங்கினார்கள். ஆனால் அந்த ஐம்பது ரூபாயைக் கூடக் கொடுக்க வழி இல்லாத பஞ்சமர்களும் தங்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று மனுப் போட்டிருக்கிறார்கள். அது பற்றி அதிகாரிகளிடம் கேட்டால் அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கக் கூடாது என்று தடை இருக்கிறது என்று கூறுகிறார்கள். வெள்ளையன் காலத்தில் அப்படி ஒரு தடை இருந்தது. அதை இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தைப் பஞ்சமர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கக் கூடாது என்ற தடை இருந்தாலும் அதை ரத்து செய்து அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதெல்லாம் தாலுகா அலுவலகங்கள் சந்தைக் கடை மாதிரி இருக்கிறது. அந்த மாதிரி இடங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். கொடுக்கக்கூடிய மனுக்களைச் சீக்கிரமாகப் பரிசீலனை செய்வதற்கான வசதிகளைச் செய்து

கூட்டங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுத்து நிர்வாகத் துறையிலே சுறுசுறுப்பையும், உற்சாகத்தையும் உண்டாக்குவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்புக்குரிய சட்ட மன்ற துணைத்தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்களால் மாவட்ட நிர்வாகம் பற்றியும் மற்றத் துறைகளைப் பற்றியும் மானியக் கோரிக்கைகள் இந்த மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரணைகளையொட்டிச் சில கருத்துக்களைக் கூட நான் முற்படுகிறேன். மாவட்ட நிர்வாகம் பற்றிய குறைபாடுகளை எல்லாம் மன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்தி செய்யப்பட வேண்டிய பல்வேறு வேலைத் திட்டங்களையும் வேலை முறைகளையும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

மாவட்ட நிர்வாகம் மாவட்ட ஆட்சித் தலைவராக விளங்குகிற கலெக்டர் அவர்களிடத்திலே ஒப்படைக்கப்படுகிறது. இந்த முறை கிழக்கிந்திய கம்பெனியார் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே வலிவு பெற்று இருந்து வந்தது. அப்போது ஒரு மாவட்டத்திற்குள்ளே முழு ஆட்சித் தலைவனுகை, ஒரு சிற்றரசனைப் போல இருக்கின்ற அதிகாரங்களைப் பெற்று செல்வாக்கும் அதிகாரமும் உடையதாக இருந்தது கலெக்டர் பதவி. இன்று அத்தகைய செல்வாக்கும் அதிகாரமும் வளர்ச்சி அடைந்துகொண்டு வருகிற நிலைமைதான் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பொறுத்த வரையில் இருக்கிறது. ஒரு மாவட்ட ஆட்சித்தலைவராக விளங்குகிற கலெக்டர் அவர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருந்து, இந்த அரசு நிறைவேற்ற விரும்பும் செயல்கள் அத்தனையும் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு உடையவராகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தும் முழுப்பொறுப்பும் உடையவராகவும் அவர் இருக்கிறார். அதோடு வளர்ச்சித் திட்டங்கள் அத்தனையும் செவ்வனே நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அமைகின்றது. மற்றும் உள்ளாட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்ற ஒன்றியங்கள், நகராட்சி மன்றம் ஆகியவற்றின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்பும் மாவட்ட கலெக்டரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, நாளுக்கு நாள் கலெக்டருடைய பொறுப்புகள் வளர்ந்து கொண்டே போகின்றன. பொதுமக்களுடைய பிரச்சினைகள் வளர வளர அவருடைய பொறுப்புகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் நிலைமைகளை வைத்துப் பார்க்கும்போது, மாவட்ட அளவில் நிர்வாகத்தின் ஒழுங்கு முறைகளைப் பொறுத்து இருக்கின்ற நிலைமைகள் வளர்ந்து கொண்டு போகின்றன. இந்தக் காரணத்தால், சிறிய சிறிய மாவட்டங்களை உருவாக்குவதன் மூலமாக சீரான செம்மையான நிர்வாகத்தை நடத்திச் செல்லலாம் என்ற கருத்தும் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வாறு மாவட்டங்களின் எண்ணிக்கைகளைப் பெருக்கும்வகையில், சிறிய சிறிய மாவட்டங்களாக அவைகளை மாற்றுவதாக இல்லையென்று கனம்

முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆயினும் கலெக்டர்களுடைய பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் வேறுபல அதிகாரிகளிடத்தில் சிலபல துறைகளைக் கொடுப்பதன் மூலம் கலெக்டர் அவர்களுடைய துறைகளின் எண்ணிக்கையைக் குறைத்து சீரான, செம்மையான நிர்வாகம் நடைபெற தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் கடப்பாடு உடையவர்களாக அரசினர் இருக்கிறார்கள். அந்த முறையில் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் கோவை மாவட்டத்தில் ஒரு இணை கலெக்டரையும், சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு மாவட்ட ரெவின்யூ அதிகாரியையும் நியமித்திருக்கிறார்கள். இரு மாவட்டங்களுடைய நிலைமைகளையும் பார்க்கும்போது இணை கலெக்டரை நியமிப்பதன் காரணமாக சிலபல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நிர்வாகத்தை யார் இயக்குவது என்பதிலே, அதிகாரத்தைப் பிரித்துக் கொள்வதிலே சிலபல சங்கடமான நிலைமைகள் ஏற்பட்டிருப்பதை அரசினரும் உணர்ந்துள்ளனர். ஆனால் மாவட்ட ரெவின்யூ அதிகாரியை நியமித்துச் சிலபல பொறுப்புகளை அவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் மாவட்ட கலெக்டர் அவர்களுடைய வேலைப் பளு குறைக்கப்படுவதோடு, கண்காணிப்புப் பொறுப்பை அதிகமாகச் செய்வதற்கான வசதிகள் இருக்கின்ற காரணத்தால் இந்த முறையில் நிர்வாகத்தைச் செம்மையான முறையில் நடத்த அரசினர் வழிவகைகளைக் காண வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வட்டார வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு கலெக்டர் அவர்களிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வட்டார வளர்ச்சி அதிகாரிகளை நிர்வகிக்கும் பொறுப்பு வட்டார அபிவிருத்தி இலாகாவின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வட்டார வளர்ச்சித் திட்ட அதிகாரிகளுடைய நிர்வாகத் திறமையைப் பொறுத்தும், ஆற்றலைப் பொறுத்தும், குறைபாடு உடையவர்களாக இருந்தால் அவர்களை மாற்றும் பொறுப்பு கலெக்டர்களிடத்தில் இருந்தால்தான் திட்டங்களை மேலும் செம்மையான முறையிலே நிறைவேற்ற முடியும். இந்தக் காரணத்தால் அந்த அதிகாரத்தைக் கலெக்டர்களிடத்தில் ஒப்படைப்பதற்கான முயற்சிகளை அரசினர் மேற்கொள்ளவேண்டும்.

இப்போது ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றுக்கு அதிக அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு மூன்று ஆண்டு காலமாகவே பல மாவட்டங்களில் இந்த முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. கலெக்டர்களுக்கும், வட்டார வளர்ச்சித் துறையினருக்கும், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்ற ஒன்றியங்கள் ஆகியவற்றுக்கும் இடையே தொடர்புகள் எப்படி இருந்தால் நல்லது என்று கண்டறிந்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஒரு குழுவினை அமைக்கவோ அல்லது சர்க்காரே பரிசீலனை செய்யவோ முன்வரவேண்டும். அதற்குத் தக்க முயற்சிகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். கிராமத் தொழில்கள், அபிவிருத்தித் திட்டங்கள், ஊராட்சி மன்ற ஒன்றியங்களின் வளத்தையும், வசதியையும், நிலைமையையும் பொறுத்து நோக்கம் நிறைவேற

வேண்டுமென்ற அவசியம் இருக்கிறது. ஒரு சில ஊராட்சி மன்ற ஒன்றியப்புகள் வசதிகளையும் வாய்ப்புகளையும் பெற்றிருக்கின்றன. ஒருசில ஊராட்சி மன்றங்களில் வசதிகளும் வாய்ப்புகளும் குறைவாக இருக்கின்றன. அப்படி வசதிக் குறைவாக இருக்கின்ற வட்டாரங்களைப் பொறுத்து அந்த ஒன்றியப்புக்களுக்கு அரசாங்கம் கடன் வழங்கி மற்ற வளர்ச்சியடைந்த வட்டாரங்களைப் போல் வசதி குறைந்த வட்டாரங்களையும் நல்லதொரு நிலைமைக்குக் கொண்டு வர, முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அந்தந்த ஊராட்சிமன்ற ஒன்றியப்புகளில் பாதை வசதிகள் செய்து தருவதற்கு மான்யம் வழங்குவது மக்கள் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துத்தான், மான்யம் வழங்கப்பட்டு வருகிறது என்று கருதுகிறேன். இதுபற்றி இம்மன்ற அங்கத்தினர்கள் பலர் அடிக்கடி தெரிவித்திருக்கிறார்கள். மதிப்பீட்டு குழுவினர் கூட ஆராய்ந்து சிபார்சுகளைச் செய்திருக்கிற வகையில் அந்தந்த ஊராட்சிமன்ற ஒன்றியப்பில் இருக்கிற சாலைகளின் அளவையும், அவற்றின் தன்மையையும் கணக்கில் வைத்து மான்யம் வழங்கப் படுத்தல் வேண்டும். சிலபல ஊராட்சி மன்ற ஒன்றியப்புகளில் புதுச் சாலைகளைப் போடவேண்டியிருக்கிறது. சாலைகளின் அளவு அதிகமாகிக் கொண்டிருக்கிறது, அதன் தன்மையையும் கொண்டு அதிகச் செலவு செய்து சீர்படுத்த வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே ஆட்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு ஊராட்சி மன்ற ஒன்றியப்புகளுக்கு மான்யம் வழங்காமல், சாலையின் அளவையும், அதன் தன்மையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த அடிப்படையில் மான்யம் வழங்கப்படும் ஒரு நிலை உருவாக வேண்டும். அப்படி ஒரு சமத்துவ நிலைக்கு எல்லா ஊராட்சி மன்ற ஒன்றியப்புக்களையும் கொண்டு வருவது நல்லது. அப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் தன்மை பற்றியும், அவர்கள் கடன்பட்டிருக்கும் தன்மையைப் பற்றியும், அவர்கள் பெற்ற கடனைத் திருப்பி வழங்குவதற்குள்ள நிலைமையைப் பற்றியும் பல அங்கத்தினர்கள் மிகத் தெளிவுபட கூறியிருக்கிறார்கள். விவசாயிகளின் நிலைமை பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. அவர்களுக்கு வழங்கியுள்ள குறுகிய காலக் கடன்களை நீடித்த காலத்தில் செலுத்த வழிவகை செய்து அதன் மூலம் அவர்களுக்குள்ள கஷ்டங்களைப் போக்க இயலுமா என்பதை அரசினர் காண முன்வரவேண்டும். திருப்பித் தருகிற கால அளவை அதிகப்படுத்தி அவர்கள் செலுத்த வேண்டிய வட்டி விகிதாசாரத்தையும் ஓரளவு குறைத்துக் கொடுப்பதின் மூலம் அவர்களுக்குச் சில சலுகைகளை செய்வதன் மூலம் விவசாயிகளின் கஷ்டங்களை நீக்க இயலுமா என்று பார்க்க வேண்டும்.

வட்டார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுகிற தன்மையில் ஊராட்சிமன்றத் தலைவர்களும், ஊராட்சி மன்ற ஒன்றியப்புத் தலைவர்களும், அந்தந்த மாவட்டக் கலெக்டரோடு சேர்ந்து பணியாற்றுகின்றனர். பல்வேறு பகுதிகளில் வாழ்கிற சட்ட

மன்ற அங்கத்தினர்களும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் அவற்றில் பங்கு ஏற்றுக்கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்க வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். சென்னை நகரைப் பொறுத்தவரையில் இங்குள்ள சட்டமன்ற அங்கத்தினர்களும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் இங்கு நடைபெறுகிற அபிவிருத்தி வேலைகளில் நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொள்ள முடியாத அளவிற்குத்தான் நிலைமை அமைந்து இருக்கிறது. மற்ற பகுதிகளில் வாழ்கின்ற சட்டமன்ற அங்கத்தினர்களும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் தங்கள் தங்கள் இடத்தில் ஏற்படுகிற அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும், வட்டார வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் வைத்திருக்கிற தொடர்பு போல் சென்னை, மதுரை, சேலம், கோவை, திருச்சி போன்ற இடங்களில் உள்ள சட்டமன்ற அங்கத்தினர்களும் பாராளுமன்ற அங்கத்தினர்களும் அந்தந்த நகராட்சி மன்றங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வழி வகையில்லை. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் நகரம் 10 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த வட்டாரப் பகுதியின் வளர்ச்சியைக் காண வேண்டிய பொறுப்பு வட்டாரக் குழுவிற்கு ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் குழுக்களில் அங்கம் பெற்று கருத்துக்களைத் தெரிவிக்கிற நிலையிலும், நிலைமையை அறிந்து கொள்ளும் வாய்ப்பையும் அந்தந்த சட்டமன்ற அங்கத்தினர்களுக்கும், பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கும் அளிக்கக் கூடிய வகையில் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டும். அவர்களுக்கு வாக்களிக்கிற உரிமை வேண்டுமென்றால் வழங்க வேண்டிய அவசியமில்லை. நகராட்சி மன்றங்களில், மாநகராட்சி மன்றங்களில் அல்லது வட்டார வளர்ச்சிக் குழுவில் வாக்களிக்கிற உரிமை வழங்கப்படவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நிலைமையை அறிந்து கொள்ளும் வாய்ப்பை, கருத்து தெரிவிக்கும் வாய்ப்பை அளிக்கும் வகையில், அந்த உரிமையை வழங்கும் முறையில் சட்டத்தைத் திருத்தியமைத்து விதிகளை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி மன்ற ஒன்றியப்புகளும் அந்தந்தப் பகுதிகளின் அளவை உத்தேசித்து பெரும் பணிகளை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் நிதிவசதியைப் பெருக்கித் தரவேண்டிய பொறுப்பு அரசுக்கு அமைந்திருக்கிறது. அந்த நிதிவசதியைப் பெருக்கித் தருகிற வகையில் அமையும் ஒன்று, சர்க்காருக்கு சொந்தமாகவுள்ள ஏரிகள், பிற ஏரிகள் இவற்றின் பாசியைக் குத்தகைக்கு விட்டு வரும் தொகையை அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அந்தந்தப் பகுதிகள் வளர்ச்சி அடைய வாய்ப்பு ஏற்படுமென்ற கருத்து பரவலாக ஆங்காங்கு சொல்லப்படுகிறது. அதையும் அரசினர் கவனத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

புறம்போக்கு நிலங்கள் காரணமாக பலயிடங்களிலும் தகராறுகள் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. புறம்போக்கு நிலங்களைத் தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளும் முயற்சிகள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th March 1964

பல ஊராட்சி மன்றப் பகுதிகளில் ஏற்படுகிறது. எவை எவை புறம்போக்கு நிலங்கள், எவை எவை தனியார் நிலங்கள், எவை எவை மடங்கள் அல்லது கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள் என்று தெரியாத வகையில் பலயிடங்களில் பலர் ஊரார் அறியாத வகையில் கைப்பற்றிக் கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. ஆகவே இவை இவை புறம்போக்கு நிலங்கள் என்று சுட்டிக் காட்ட தனி அடையாளங்களை ஏற்படுத்துவதற்கு அரசினர் முன்வருதல் வேண்டும். புறம்போக்கு நிலங்களைச் சுட்டிக் காட்டும் எல்லைக் கற்களில் தனியாக ஒரு வர்ணம் தீட்டி, இந்த வண்ணக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கும் பகுதிகள் புறம்போக்கு நிலங்கள் என்றிருந்தால் அது விழிப்புள்ள மக்கள் கண்களில் பட்டுத் தனிப்பட்டவர்கள் அவற்றை அபகரிக்கிற வழி இல்லாமல் அதைத் தடுத்து நிறுத்த வழி ஏற்படும். தனியார் நிலங்களுக்கும், மடம் அல்லது கோவில் நிலங்களுக்கும் பதிக்கப்படுகிற எல்லைக் கற்கள் இன்ன இன்ன வண்ணமாக இருக்கும் என்று வண்ணங்களை மாற்றி அமைப்பதால் எது எது யாருடைய நிலங்கள், எது புறம் போக்கு நிலம் என்பதை அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கும். அதை நிறைவேற்ற இந்த அரசு முன்வருதல் வேண்டும்.

ஊராட்சி மன்ற வரிகளை வசூலிக்கும் அதிகாரம் இப்போது ரெவின்யூ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில், அவற்றை எங்களிடம் கொடுப்பதால் எங்களுக்கு வேலைப் பளு அதிகமாகும் என்று கிராம அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றை ஊராட்சிமன்றங்களுக்கு, ஊராட்சி மன்ற ஒன்றிப்பின் கையில் ஒப்படைத்து அவர்கள் வசூலித்துக் கொள்ளட்டும் என்று கூறுகிறார்கள் ரெவின்யூ அதிகாரிகள். அப்படி அவர்களிடம் ஒப்படைத்தால் ரெவின்யூ அதிகாரிகள் வசூலிப்பதைப் போன்று அவ்வளவு திறமையாக, செம்மையாக வசூல் செய்யத்தக்க திறன் இவர்களுக்கு உள்ளதா என்றால் இல்லை. அது ரெவின்யூ அதிகாரிகளின் கீழ் இருந்தால்தான் முடியும். வசூலிக்கும் அதிகாரங்கள் அவர்களிடம் இருக்கிறது. ஆனால் ஜப்தி, வாரன்ட் வழங்கும் அதிகாரம் ஊராட்சி மன்றத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பொது மக்களின் தயவை நாடியிருக்கும் ஊராட்சிமன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்ற ஒன்றிப்புக்களின் தலைவர்கள் சுலபத்தில் வாக்காள பெருமக்களின் மீது ஜப்தி அல்லது வாரன்ட் வழங்கும் நிலையில் இல்லை. ஒரு தயக்கம் ஏற்படத்தான் செய்யும். ஆகவே, ஜப்தி, வாரன்ட் போன்றவைகள் வழங்கவும், வரி வசூல் செய்யவும், முழு அதிகாரங்களும் ரெவின்யூ அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் நிலை ஏற்பட்டால்தான், நிலைமையைச் சீர்படுத்த முடியும். ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் இத்தகைய சங்கடமான நிலை ஏற்படாமல் இருக்கும்.

கிராம ஊழியர்களின் ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்து எல்லோராலும் இந்த மன்றத்தில் சொல்லப்பட்டது. எல்லா அங்கத்தினர்களும் வலியுறுத்திச் சொல்லியுள்ளார்கள். பண்டைக் காலத்தில் கிராம முன்சீப் கௌரவத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டதொன்று. நாட்டாண்மைக்காரர்கள்

10th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

என்றால் ஊரில் உள்ள அத்தனை மக்களும் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வார்கள். அரசாங்கம் இயற்றுகிற சட்டத்தைப்போல் மக்கள் அவர்கள் சொல்லை மதித்து நடப்பார்கள். ஊர்கட்டுப்பாட்டை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பு அவர்களுக்கு இருந்து வந்தது. கிராம முன்சீப்கள் நல்ல மரியாதையோடு நடத்தப்பட்டு வந்தார்கள். வெள்ளையர் காலத்தில் கலெக்டர்கள் கூட கிராம முன்சீப்களுக்கு மரியாதை கொடுத்து அவர்கள் வந்தால் உட்காரச் சொல்லி மற்றவர்களுக்கு தரப்படுகிற மதிப்பைவிட அதிக மதிப்பு தந்து வந்தார்கள். அந்தளவு கிராம மக்களும் அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடந்து வந்தார்கள், நல்ல மதிப்பும் கொடுத்து வந்தார்கள். கிராம மக்கள் அவர்களுக்கு முன்பெல்லாம் மரியாதை செலுத்திய அளவிற்கு இன்று நிலைமை இருக்கிறதா என்றால், இல்லை. முன்பு அதிகாரிகள் கிராம முன்சீப்களுக்கு கொடுத்துவந்த மரியாதையைப்போல் இப்போது நிலைமை இருக்கிறதா என்றால், இல்லை. மற்ற ஊழியர்களைப் போன்று ஊழியம் செய்து பிழைக்கவேண்டிய நிலைதான் இன்று பலயிடங்களில் இருக்கிறது. இன்னும் பலயிடங்களில் கிராம முன்சீப் பதவி கௌரவ பதவியாக இருக்கிறது. சிலயிடங்களில் கீழ்தர ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற ஊதியம் கூட எங்களுக்கு வழங்கப்படவில்லையே என்று கூறுகிறார்கள். சிலயிடங்களில் எங்களை முழு நேர ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்தார்கள். சிலர், எங்கள் கௌரவத்தைக் காப்பாற்றுங்கள், ஆனால் ஊதியத்தை சிறிது அதிகப்படுத்துங்கள் என்று கூறியிருக்கிறார்கள். கௌரவத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்ற வேலையாக கிராம முனிசீப்களுடைய வேலை இருந்தாலும், கிராம கர்ணங்களுடைய வேலையை எடுத்துக்கொண்டால், அவர்கள் முழு நேர ஊழியர்களாகவே காணப்படுகிறார்கள். அவர்கள் முழு நேர ஊழியத்திற்காகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்விதம் வேலை செய்கின்றவர்களின் ஊதியத்தைப் பெருக்குவதன் மூலமாக, அவர்களுடைய குறைபாடுகளை நீக்குவதன் மூலமாக இந்த நிர்வாகம் செம்மையாக நடப்பதற்கான சூழ்நிலை ஏற்படும் இதையும் அரசினர் கவனத்தில் கொள்ளவேண்டும். முக்கியமாக கிராம அதிகாரிகள் கொடுக்கின்ற புள்ளிவிவரங்கள்தான் அரசினர் போடுகின்ற அத்தனை திட்டங்களுக்கும் பயன்படுவனவாக இருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமாக இருந்தாலும் சரி, நான்காவது ஐந்தாண்டுத் திட்டமாக இருந்தாலும் சரி, எந்த வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும் சரி, இவர்கள் கொடுக்கின்ற புள்ளி விவரங்களின் அடிப்படையில்தான் அவைகள் நிறைவேற்றப்படுகின்றன. இத்தகைய முறையில் கிராம அதிகாரிகளுக்குப் பொறுப்புகளும் வேலையும் அதிகமாக இருக்கின்றன. கனம் உறுப்பினர் திரு. நல்லசாமி அவர்கள் குறிப்பிட்டது போன்று, அவர்கள் கொடுக்கின்ற புள்ளிவிவரங்களைப்பற்றி அவர்களிடம் நேரிடையாக கேட்டபோது, பெரும்பாலும் தாங்கள் பொய்க் கணக்குகளைத்தான் கொடுக்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம், இத்தகைய பொய்க் கணக்குகளைக்கூட கொடுப்பதற்கு நேரமில்லாத அளவுக்குப் பல தொல்லைகள் தங்களுக்கு

இருக்கின்றன என்றும் சொல்லுகிறார்கள். ஆக உண்மையான புள்ளிவிவரங்கள் கிடைத்தால்தான் செம்மையான முறையில் திட்டங்களைத் தீட்டுவதற்கு வழி ஏற்படும். 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கிராமத்தைப்பற்றித் தயாரித்த ஒரு கணக்கை அல்லது புள்ளி விவரத்தைத்தான் அரசாங்க அளவில் எந்தத் துறையினர் கேட்டாலும், அதைக் கொடுக்கவேண்டிய பொறுப்பில் கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள். கேட்கப்படுகின்ற புள்ளிவிவரங்கள் ஆட்டைப் பற்றியதாக இருந்தாலும் சரி, மாட்டைப் பற்றியதாக இருந்தாலும் சரி, அல்லது மரங்களைப்பற்றியதாக இருந்தாலும் சரி, நிலத்தைப்பற்றியதாக இருந்தாலும் சரி, இருபோகமாயிருந்தாலும் சரி, முப்போகமாக இருந்தாலும் சரி, குறுவைப் பயிராக இருந்தாலும் சரி, சம்பாப் பயிராக இருந்தாலும் சரி, புஞ்சையாக இருந்தாலும் சரி, நஞ்சையாக இருந்தாலும் சரி, கரும்பு விளைகிற நிலமாக இருந்தாலும் சரி, நெல் விளைகிற நிலமாக இருந்தாலும் சரி, தங்களிடமிருக்கின்ற ஒரே கணக்கைத்தான் கூட்டிக்கழித்துத் தரக் கூடிய நிலைமையில் அவர்கள் இன்றைய தினம் இருந்துகொண்டிருக்கிறார்கள். வேண்டுமென்றால் இதிலிருந்து சற்றுக் குறைத்தோ கூட்டியோ—குறைத்தால் எங்கே கோபிப்பார்களோ என்கின்ற எண்ணத்தில்—கூட்டியே தந்து கொண்டிருக்கிறார்கள். கிராமத்திலேயே தங்கியிருக்கின்ற தாங்கள் கொடுக்கின்ற புள்ளிவிவரங்கள் சரியில்லை என்றால், அவற்றை மேற்பார்வையிட யார்தான் வர முடியும் என்று சொல்லுகின்ற நிலைமையில்தான் இன்றைய தினம் கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களால் கொடுக்கப்படுகின்ற கணக்குகள் எல்லாம் சரியல்ல என்று நான் சொல்ல முன்வரவில்லை. ஆனால் இப்படிப்பட்ட குறைபாடுகள் உள்ள கணக்குகளைக் கொடுக்கின்ற சூழ்நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். நாட்டிற்குத் தேவைப்படும் கணக்கைத் தருகின்ற கிராம அதிகாரிகளுக்கு இன்றையதினம் பொறுப்புக்களும் வேலையும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. மேலும் பல இடங்களிலும் பெரிய பெரிய கிராமங்கள் எல்லாம் இருக்கின்றன. இவைகளை எல்லாம் கூடுமான அளவில் இரண்டு, மூன்று கிராமங்களாக ஆக்கி, அதே நேரத்தில் கிராம ஊழியர்களுடைய எண்ணிக்கையையும் பெருக்கி, நல்லமுறையில் நிர்வாகத்தை நடத்துவதற்கான முறைகளைக் கொள்வதற்கு அரசினர் முன் வருதல் வேண்டும். இன்னும் பல கிராமங்கள் முன்னால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையிலே அமைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட பெரிய கிராமங்களை எல்லாம் இரண்டாகவோ, மூன்றாகவோ ஆக்கி இவற்றையெல்லாம் செம்மைப்படுத்துகின்ற முயற்சியில் அரசினர் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கன்யாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில், அங்குள்ள பல குறைகளைப்பற்றி உறுப்பினர்கள் பலர் அடிக்கடி இங்கே சுட்டிக்காட்டியுள்ளனர். 1956-ல் அங்குள்ள ரெவின்யூ அதிகாரிகள், கிராம அதிகாரிகள் எப்படியிருந்தார்களோ அதே நிலைமையில் தான் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் இருப்பதைப்போன்று அங்குள்ள அதிகாரிகளுடையவும் கிராம அதிகாரிகளுடையவும் நிலையை சமப்படுத்தும் முயற்சிகள் கடந்த எட்டாண்டு காலமாக எடுக்கப்படாமல் இருந்துவருகின்றன என்றும் மற்ற மாவட்டங்களில் இருப்பது போன்று அவர்களுடைய நிலைமையையும் சமப்படுத்துகின்ற அளவில் ஒரு விரிவான திட்டத்தை மேற்கொண்டு அதை நடைமுறையில் கொண்டுவருவதற்கும் வேண்டிய வழிமுறைகளை அரசினர் மேற்கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதியோர் ஓய்வு கால உதவித் தொகை அளிக்கின்ற விஷயத்தில் இப்போது நமது நாட்டில் 62 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருவதாகச் சொல்லியிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். அதுவும் அங்கஹீனமானவர்களுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகை விஷயத்தில் வயது நிர்ணயம் செய்யும் அளவில் 65-லிருந்து 60-ஆகக் குறைத்திருப்பதும் வரவேற்கக்கூடிய ஒன்றுதான். இதில் நான் கூற விரும்புவது அங்கஹீனமுள்ளவர்களாக, உடல் உறுப்புக்கள் இழந்து இருப்பவர்கள், எந்தத் தொழிலையும் செய்ய வசதியற்றவர்கள், இப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் இவர்களது வயதையும் கூடக் கவனியாமல் எந்தத் தொழிலையும் செய்வதற்குத் தகுதியற்றவர்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு இந்த உதவித் தொகையை வழங்குதல் வேண்டும். வயதை மட்டும் கணக்கிடாமல் வேலை செய்ய முடியாதவர்கள் என்ற எண்ணத்தை மட்டும் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்குரிய வழிவகைகளில் அரசினர் ஈடுபடுதல் வேண்டும்.

மாவட்டத் தலைமை அலுவலகங்கள் இருக்கின்ற கட்டடங்கள் எல்லாம் மிகவும் பழைய கட்டடங்களாகக் காட்சியளிக்கின்றன, இவைகள் எல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இந்த மன்றத்தில் பல உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 100 ஆண்டு, 150 ஆண்டு வயதுடையதாக பல தாலுகா அலுவலகங்கள், மாவட்டக் கலெக்டர் அலுவலகங்கள், மற்றுமுள்ள மாவட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள் அமைந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் புதுப்பிப்பதற்கான முயற்சிகளில் அரசினர் ஈடுபடுதல் வேண்டும். அதோடு இத்தகைய அலுவலகங்களில் பழைய உடைந்த நாற்காலிகளும், இற்றுப் போன மேஜைகளும் தான் காட்சி தருகின்றன. இவைகளை எல்லாம் செம்மைப்படுத்துதல் வேண்டும், 100 ஆண்டு, 150 ஆண்டுகளுக்கு மேலாக உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற சாமான்கள் எல்லாம் புதுப்பிக்கப்படல் வேண்டும், மேலும் காத்திருப்பவர்களுக்குத் தங்கள் காரியங்களைப் பார்த்துக்கொண்டு சீக்கிரமாகத் திரும்புவதற்கான வசதிகள் இருத்தல் வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசினர் செய்து கொடுத்தல் வேண்டும். மேலும் மாவட்டக் கலெக்டர் அலுவலகத்திலும், தாலுகா அலுவலகங்களிலும் வருகின்றவர்களின் காலம் வீணாக்கப்படாமலும், அதிகாரிகளின் காலம் வீணாக்கப்படாமலும் இருக்கக் கூடிய முறையில் வருகிறவர்களுக்கு வழிகாட்டிக் கொடுக்கக்கூடிய முறையில் ஒவ்வொரு தாலுகா ஆபீஸிலும் கலெக்டர் ஆபீஸிலும் விவரம் சொல்லுபவர்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th March 1964

ஒருவர் இருக்கவேண்டும். இன்னின்ன காரியத்திற்கு இன்னின்ன அதிகாரிகளிடத்தில் போக வேண்டும் என்று சொல்லக் கூடிய வசதியிருந்தால், இதன் மூலம் வருகின்றவர்களின் வீணாகும் நேரத்தைக் குறைப்பதற்கும் அதிகாரிகளுடைய வீணாகும் நேரத்தைக் குறைப்பதற்கும் வசதியாக இருக்கும். இந்த அடிப் படையிலே ஒவ்வொரு தாலூகா ஆபீசிலும், கலெக்டர் ஆபீசிலும் ஒரு வழிகாட்டி மூலமாக இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசினர் முன்வருதல் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மன்ற உறுப்பினர்கள் பலராலும் கூறப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக மாவட்ட நிருவாகங்களின் தலைமை யாக விளங்குகின்ற இந்த மாவட்ட ஆட்சி நல்ல முறையில் செம்மையாக நடைபெற வழிகள் ஏற்படக்கூடும். மேலேயுள்ள மாவட்ட ஆட்சி நிருவாகமும், கீழே இருக்கின்ற கிராமங் களிலுள்ள நிருவாகமும் செம்மையாக நடைபெறவேண்டும், அவற்றைச் சீராக்குவதன் மூலமாக நாட்டின் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற வழி ஏற்படும், நிருவாகத்தைச் செம்மை யாக நடத்துவதற்கும், இங்கு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக் களை எல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு குறைபாடுகளைப் போக்குவதற்கும், வேண்டுகோள், கோரிக்கைகள் இவைகளை நிறைவேற்றுவதற்கும் முன்வர வேண்டும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று பல மான்யக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டு விவாதம் நடைபெற்றது என்றாலும், முக்கியமாக மாவட்ட நிர்வாகத்தைப்பற்றித்தான் பல கனம் அங்கத்தினர்களும் இதிலே கருத்துத் தெரிவித்தார்கள். மாவட்ட நிர்வாகம்தான் ஆட்சிக்கு அடிப்படை. மாவட்ட நிர்வாகத்திற்கு கிராம அதிகாரிகளுடைய நிர்வாகம் அடிப்படையானது. மொத்தமாக நாட்டு நிர்வாகத் திற்கு மாவட்டம்தான் முக்கியம், மாவட்ட நிர்வாகம்தான் அடிப் படையானது. ஆகவேதான் பல அங்கத்தினர்கள் அவரவர் களுடைய அனுபவத்தில் ஏற்பட்ட கருத்துக்கள், யோசனைகள் அவைகளை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். இந்த முறைகளை எல்லாம் திருத்த வேண்டும் என்பதை நான் இப்போதே ஒப்புக் கொள்வேன். எங்கெங்கு திருத்தப்பட வேண்டுமோ, எங்கெங்கு சீர்படுத்தப்பட வேண்டுமோ அங்கெல்லாம் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தும். பல கனம் உறுப்பினர்கள் சொன்ன யோசனைகளைப்பற்றி எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு நான் கருத்து தெரிவிக்கவில்லை என்றாலும் அவைகளை எல்லாம் அரசாங்கம் தொடர்ந்து கவனிக்கும். இவை எல்லாம் அரசாங் கத்தின் கவனத்தில் இருக்கும் என்பதை நான் முதலில் சொல்லிக் கொள்கிறேன். மாவட்ட நிர்வாகம்தான் நாட்டு நிர்வாகத்திற்கு அடிப்படை என்றால், கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல், மாவட்ட நிர்வாகத்திற்கு முக்கியமாக இருக் கின்றவர் கலெக்டர். கலெக்டரை 'பிவட்' என்று சொல்லலாம். எல்லா இலாகாக்களையும் சேர்த்து நிர்வாகத்தை நடத்திக்கொண்

10th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

டிருக்கிறார்கள். இப்போது இருக்கிற நிர்வாக முறை, இப்போ துள்ள அடிப்படையான அமைப்பு பிரிட்டிஷ் காலத்தில் மட்டும் வந்தது அல்ல என்பதைக் கனம் அங்கத்தினர்களுக்கு நான் நினைவு படுத்த விரும்புகிறேன். அதற்கு முன்னால் முஸ்லீம் ஆட்சி இருந்தது, அப்போதே வரி வசூல் செய்வது, நிர்வாக அமைப்பு 1-00 p.m.
எல்லாம் ஏற்பட்டது. அதை பிரிட்டிஷ் ஆட்சி வந்ததும் அப்படியே வைத்துக்கொண்டார்கள். அதை மாற்றி விட்டு தங்களது என்று தனியாக வைத்துக்கொள்ளவில்லை. நாம் எப்படி பிரிட்டிஷ் காலத்தில் இருந்த அமைப்பை வைத்துக்கொண்டு, இன்றைய தேவைக்கு ஏற்ப அதையே மாற்றி அமைத்துக்கொண்டு, அதையே பயன்படுத்தி நிர்வாகத்தை நடத்த முற்பட்டிருக் கிறோமோ, அதே போல பிரிட்டிஷ் ஆட்சியாளரும் முஸ்லீம் ஆட்சி காலத்தில் இருந்ததை எடுத்து விடவில்லை. இதற்கு அதிகாரி களின் பெயர்களே சான்று ஆகும். தாசில்தார் என்பது தமிழ் வார்த்தை அல்ல, ஆங்கிலமும் அல்ல; ஹிந்துஸ்தானி. Sheristadat என்ற வார்த்தை தமிழ் வார்த்தை அல்ல, ஆங்கில வார்த்தையும் அல்ல, ஹிந்துஸ்தானி வார்த்தை. கிராம முன்சிப் என்ற வார்த்தை கூட தமிழ் வார்த்தை அல்ல, ஆங்கிலமும் அல்ல, ஹிந்துஸ்தானி வார்த்தை. அவ்வாறு பழைய பெயர்களைக்கூட அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சி காலத் தில் வைத்துக்கொண்டிருந்த பெயர்களை நாமும் இன்னும் மாற்ற வில்லை. அப்படி மாற்றாவிட்டாலும் இன்றைக்கு தாசில்தார் என்ன வேலை செய்கிறார் என்று பார்க்கவேண்டும், அந்தக் காலத்திலே தாசில் வேலை என்று சொல்லுவார்கள். தாசில் வேலை என்றால் பெரிய வேலை. தாசில் வேலை என்றால் பெரிய அதிகாரம் செலுத்துவது என்று அந்தக் காலத்தில் சொல்லுவார்கள். ஆனால் இப்போது பார்த்தால் நான் கூட பல இடங்களில் சொல்லக் கேட்டு திருப்தி அடைவதுண்டு. பொது மக்களே என்னிடம் வந்து சொல்லு வார்கள், தாசில்தார் எப்போதும் கிராமம் கிராமமாக ஓடிக் கொண்டிருக்கிறார், அவரைப் பார்க்கவே முடிவதில்லை என்று சொல்லுவார்கள். புகாராகச் சொன்னாலும், அதை ஒரு புகாராக எடுத்துக்கொள்வதற்கில்லை. அந்த முறையில் கிராமம் கிராமமாக ஓடி கிராம அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் திருப்தி அடைவதுண்டு.

அதே மாதிரி கலெக்டர் என்ற பதவி பிரிட்டிஷ் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. நிலவரி வசூலிப்பது என்பது அவருடைய முக்கிய வேலை. நான் முன்பே சொல்லியிருக்கிறேன், 1937-38 லேயே அரசாங்க மொத்த வருவாயில் பாதி நில வரியாக இருந்தது. அதுதான் முக்கிய வேலை. அப்போது அபிவிருத்தி வேலைகளெல்லாம் இல்லை. ஆகையால் கலெக்டர் என்று பெயர் கொடுத்தார்கள். பெயரை அப்படியே வைத்திருக்கிறோம். அதைத் தமிழ்படுத்தி தண்டல் நாயகம் என்று வைத்திருக் கிறோம். வரி வசூல் செய்வது மாத்திரம் இப்போது அவருடைய வேலை என்பது இல்லை. இப்போது அவரைத் தண்டல் நாயகம் என்று சொல்லுவது பொருந்தாது. இப்போது அவருக்கு முக்கியமான வேலைகளெல்லாம் இருக்கின்றன. அபிவிருத்தி வேலை இருக்கிறது. பஞ்சாயத்து வேலை இருக்கிறது. எல்லா வேலை

களும் இருக்கின்றன. சமுதாய நலத் திட்ட வேலைகளெல்லாம் இப்போது ஏற்பட்டுள்ளன. கிராம வளர்ச்சி வேலை ஏற்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்களுக்குப் புதிய பொறுப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஜில்லா போர்டுக்குப் பதிலாக பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் கண்காணிக்கும் பொறுப்பு இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து யூனியன் கமிஷனரையும் மற்ற அதிகாரிகளையும் மேலே இருக்கிற இலாகாவினர் மாற்றுவது என்று இல்லாமல் கலெக்டரே பார்த்து மாற்றுவது நலம் என்று சொன்னார்கள். அதை உணர்ந்துதான் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாவில் இருக்கிற கமிஷனர்களைக் கலெக்டரே மாற்றலாம், அவர்களே உசிதம் போல் மாற்றிக்கொள்ளலாம் என்று கலெக்டருக்கு மாற்றுவதற்கு அதிகாரம் உண்டு, அவர்களைக் கண்காணிக்க அதிகாரம் உண்டு என்று சமீபத்திலே புதிய உத்திரவு போடப்பட்டிருக்கிறது. அப்படி எல்லாவற்றையும் கோ-ஆர்டினேட் செய்கிற வகையிலே, கலெக்டரே ஜில்லா நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இன்றைய தினம் இயங்கி வருகிறார்.

இப்போது ஸ்தல ஸ்தாபனங்களைப் பொறுத்த வரையில் கிராம பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. முன்பு தாலூகா போர்டு இருந்தது, டிஸ்ட்ரிக்ட் போர்டு இருந்தது. இப்போது டிஸ்ட்ரிக்ட் போர்டு எடுபட்டுப்போய்விட்டது. பஞ்சாயத்து இருக்கிறது. பஞ்சாயத்துக்கு மேல் ஸ்தல ஸ்தாபனம் வேண்டும் என்று, கிராம அளவில் மட்டும் இருந்தால் போதாது என்று, அதற்கு மேலே இன்னொரு ஸ்தாபனம் வேண்டும், ஆனால் ஜில்லா போர்டு போல பெரிய ஸ்தாபனமாக இருந்தால் போதிய கவனம் செலுத்த முடியாது என்று ஜில்லா போர்டை எடுத்து விட்டு, பஞ்சாயத்து யூனியன் என்று வட்டார ரீதியில் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் நிர்வாகம் செய்யக்கூடிய ஸ்தல ஸ்தாபனம். இந்த மன்றத்திலே சட்டம் செய்தபோதும், இந்த மன்றத்தின் கருத்தும் அரசாங்கத்தின் கருத்தும், அதற்கு மேலே ஸ்தல ஸ்தாபனம் வேண்டாம் என்பதுதான். ஆனால் பொதுவாக ஜில்லா விஷயங்களைப்பற்றி பிரதிநிதிகள் கலந்து ஆலோசித்து யோசனை கூற டிஸ்ட்ரிக்ட் டெவெலெப்மெண்ட் கவுன்ஸில் ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி சில அங்கத்தினர்கள் பேசும்போது ஏன் அவர்களுக்கு நிர்வாகப் பொறுப்பை கொடுக்கவில்லை, அவர்களுக்கு நிர்வாகப் பொறுப்பு இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். இன்னும் சில அங்கத்தினர்கள் 'எக்ஸிக்யூட்டிவ் ஆஃப் தி டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன்'-ஆக இருக்கவேண்டும் என்று தெரிவித்தார்கள். அது அல்ல அரசாங்கத்தின் கருத்து, மன்றத்தின் கருத்தும் அது அல்ல. சரியாகச் சொன்னால் டிஸ்ட்ரிக்ட் இக்கனாமிக் அட்வைஸரி போர்டு என்று சொல்லலாம் அல்லது டிஸ்ட்ரிக் டெவெலப்மெண்ட் அட்வைசரி போர்டு என்று சொல்லலாம். அது ஒரு அட்வைசரி போர்டுதான் ஆலோசனைக் குழு தான். பிரதிநிதிகளெல்லாம் கூடி ஜில்லாவினுடைய பல பிரச்னைகளைப் பற்றி எடுத்துச் சொல்லலாம்.

ஆனால் 'எடுத்துச் சொல்லுகிறோம், அது நிறைவேறுவது இல்லையே' என்று சொல்லுகிறார்கள். எதையும் சொல்லுவது சுலபம். நிறைவேற்றுவது சாத்தியமா, இல்லையா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. அங்கு தண்ணீர் இருக்கிறது. அது 1,000 ஏக்கருக்கு வரும், 2,000 ஏக்கருக்கு வரும் என்று கண்ணுக்குத் தெரியலாம். அதைச் சொன்னால் சாத்தியமா என்று பார்க்க வேண்டும். அதோடு கூட மற்றவர்கள் உரிமை பாதிக்கப்படக்கூடாது. நமக்குத் தோன்றும். மக்கள் வேண்டுகிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் அது சாத்தியமா என்று பார்க்கவேண்டும். ஒரு பிரச்னையைப் பற்றி எடுத்துச் சொல்லிவிட்டால் அதிகாரிகளும் மற்றவர்களும் கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் டெவலெப்மெண்ட் கவுன்ஸில் முடிவுகளை ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் கூட அவைகள் அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகின்றன. அரசாங்கம் மறுபடியும் அவைகளைப் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கிறது. அது மட்டுமல்ல. பஞ்சாயத்து ஆலோசனைக் குழு என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 6 மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது. அதிலே கூட ஒவ்வொரு டெவலப்மெண்ட் கவுன்ஸிலிலும் என்ன தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதோ அதைப் பற்றியெல்லாம் ஆலோசனை செய்து அவர்கள் கருத்தை எடுத்துச் சொல்லி அரசாங்கம் ஒவ்வொன்றாக எடுத்து முடிவு செய்கிறது. டெவலெப்மெண்ட் கவுன்ஸில் ஒரு நிர்வாக யந்திரமாக இருப்பது என்பது அரசாங்கத்தின் கருத்தில் இல்லை. அவ்வாறு இருப்பதும் சரியல்ல. அதுவும் ஒரு ஸ்தல ஸ்தாபனமாக ஆகிவிட்டால் பஞ்சாயத்து யூனியனின் முக்கியத்துவம் போய் விடும். பஞ்சாயத்து யூனியன் என்பது ஒரு ஸ்தல ஸ்தாபனம். அதற்கு மேல் நிர்வாகப் பொறுப்புள்ள ஸ்தல ஸ்தாபனம் ஒன்றும் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் இதற்கு உள்ள முக்கியத்துவம் போய்விடும். அந்த அமைப்பு தான் இப்போது முடிவு செய்திருக்கிறோம். அதையே நிறைவேற்றிக்கொண்டு வருவது நல்லது.

ஜில்லாக்கள் இன்னும் சின்ன மாவட்டங்களாக இருந்தால் நலம் என்று சொன்னார்கள். இப்போது வரவர மாவட்டத்திலே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பல மாவட்டங்களில் டிஸ்டிரிக்ட் ரெவின்யூ ஆபிசர் என்று போட்டு கலெக்டர் பளுவைக் குறைக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கோவை மாவட்டத்திலே ஜாயிண்ட் கலெக்டர் என்று போட்டிருக்கிறது. ஜில்லாவின் அளவைக் குறைத்தால் நலம் தான். ஆனால் ஒரு கருத்து கூற விரும்புகிறேன். எல்லாவற்றுக்கும் ஒரு ட்ரடிஷன் உண்டு. ஒரு ஜில்லா என்று எடுத்துக்கொண்டால் ஒரு ட்ரடிஷன் இருக்கிறது. கோயம்புத்தூரை எடுத்துக்கொண்டால்கூட, கோயம்புத்தூர் ஜில்லா பிரதிநிதிகள் இருக்கிறார்கள், ஈரோடு ஜில்லா என்று வைத்தால் கோயம்புத்தூருடைய மதிப்பு போய்விடும். ஈரோடுக்கு மதிப்பு இருக்கலாம். கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு மதிப்பு இருக்காது. தஞ்சை ஜில்லா என்றால் சரி. அதை விட்டு நாகப்பட்டினம் ஜில்லா என்றால் மதிப்பு இருக்காது. ஒருமுறை

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1964

நான் அறந்தாங்கி போனபோது அறந்தாங்கியிலிருந்த பிரதிநிதிகள் என்னைப் பார்த்தார்கள் 'என்ன இருக்கிறது, ஒன்றுமே இல்லையே, பக்கத்தில் இருக்கிற புதுக்கோட்டை மாதிரித் தானே இருக்கிறது, புதுக்கோட்டையில் அல்லது ராமநாதபுரத்தில் சேர்த்தால் பரவாயில்லையே, இராமநாதபுரத்தில் சேர்த்துவிடுங்களேன்' என்று சொன்னேன். 'எங்கு வேண்டுமானாலும் சேர்த்துவிடுங்கள், ஆனால் தஞ்சை என்ற பெயர் இருக்கவேண்டும். அந்தப் பெயரைக் கைவிடமாட்டோம்' என்று சொன்னார்கள். அந்த முறையில் ஒரு ட்ரடிஷன் இருக்கிறது. ஜில்லா எல்லாவற்றையும் பிரித்தால் நல்லதுதான். அந்த முறையில் மாற்றிவிடலாம்; பிரித்து விடலாம். அப்படிப் பிரித்து விடலாமா என்று பார்த்தால் ரொம்ப செலவு ஆகும். எந்தக் காலத்தில் ஒவ்வொரு ஜில்லாவையும் இரண்டாகப் பிரித்து அதற்கு வேண்டிய தலைமை ஸ்தானங்களையெல்லாம் கட்டுவது? அதற்கு எவ்வளவு பணம் ஆகும்? பணம் இப்போது அவசரமான, அவசியமான துறைகளுக்கு வேண்டியிருக்கிறது. ஜில்லாக்களைப் பிரிப்பது என்று எடுத்துக்கொண்டால் எவ்வளவு பணம் ஆகும் என்று பார்க்க வேண்டும்.

செங்கற்பட்டு பிரதிநிதி கூறினர். நானும் செங்கற்பட்டு பிரதிநிதியாக இருப்பதால் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய அனுதாபத்தையும் எதிர்பார்க்கிறர். செங்கற்பட்டு பெரிய ஜில்லா அல்ல. முன்பு தலைநகரையும் சேர்த்து செங்கற்பட்டு ஜில்லா என்று கூட இருந்தது. அதற்குத் தலைநகராக சென்னையே இருந்தது. இப்போது சைதாப்பேட்டையில் இருக்கிறது. சைதாப்பேட்டையை சென்னை நகரத்தில் சேர்த்துக்கொண்டார்கள். இப்போது பார்க்கின்றபோது செங்கற்பட்டு மாவட்டத்திற்கு வெளியே கலெக்டர் அலுவலகம் இருக்கிறது. ஜில்லாவிலேயே இருந்தால் நல்லதுதான். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் சொன்னது உண்மைதான். செங்கற்பட்டு பேரில் பொறுமை அல்ல. காஞ்சீபுரம் சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம். சம்ஸ்கிருதத்தில் ஒரு ச்லோகம் உண்டு. நகரங்களில் சிறந்தது காஞ்சீபுரம் என்று சம்ஸ்கிருத ஸ்லோகமே உண்டு. அப்பேர்ப்பட்ட நகரமாக இருக்கிறபொழுது அதை ஜில்லாவுக்குத் தலைநகரமாக மாற்றலாம் என்று கருதப்பட்டது. பண்டைக்காலத்தில் சிறப்பு வாய்ந்த ஒரு சர்வகலாசாலை அங்கே இருந்தது. ஆனால், நான் ஒன்று சொல்லுகிறேன். இப்பொழுது செங்கற்பட்டா அல்லது காஞ்சீபுரமா என்ற கவலை வேண்டாம். எந்தக் காலத்தில் நாம் இதையெல்லாம் செய்யப் போகிறோம்? இப்பொழுது இருக்கிற செலவு என்ன? இப்பொழுது இருக்கிற தேவை என்ன? செங்கல்பட்டு என்னுடைய ஜில்லா என்பது உண்மைதான். சைதாப்பேட்டையில் கலெக்டர் ஆபீஸ் இருப்பது அவ்வளவு திருப்திகரமாக இல்லை. இருந்தாலும்கூட, இதையெல்லாம் இப்பொழுது எடுத்துக்கொள்ளவேண்டாம், பின்னல் பார்த்துக் கொள்ளலாம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அல்லது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆகட்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அப்பொழுது இருக்கிறவர்கள்

10th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

பார்த்துக்கொள்ளட்டும். இன்னும் நமக்கு எவ்வளவோ செலவு இருக்கிறது. அபிவிருத்தி வேலைகள் இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் இப்பொழுது எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. ஆனல், தவிர்க்கக்கூடாதது ஒன்றிரண்டு உண்டு. அதைத்தான் நாம் யோசித்தோம். முதலில் எல்லா ஜில்லாக்களையும் பிரித்துவிடலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தோம். அதற்குத்தான் நான் இரண்டு காரணங்கள். சொன்னேன். ஒன்று டிரடிஷன். ஆகவே, அவசரப்பட்டு இது வேறு ஜில்லா, அது வேறு ஜில்லா என்று பிரித்துவிடக்கூடாது என்பது என்னுடைய கருத்து. இரண்டாவது பணம் வேண்டும். ஆகவே, நாம் அதில் ஈடுபட வேண்டாம். ஆனல், தவிர்க்கக்கூடாதது என்ற முறையில் சேலம் ஜில்லா இருக்கிறது. என்னுடைய அனுபவத்தில் வட சேலம் கொஞ்சம் கவனக் குறைவாகத்தான் இருக்கிறது. அங்கே போதிய கவனம் செலுத்தப்படவில்லை. அதிகாரிகள் கூட அங்கே அதிகம் வருவதில்லை. அங்கே அதிக கவனம் இல்லை. ஆகையினல் சீக்கிரம் சேலம் மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்துவிட வேண்டும் என்பதுதான் கருத்து. அநேகமாக அதற்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டோம். எப்படியெல்லாம் செய்கிறது என்பதையெல்லாம் இதற்காக பிரத்தியேகமாக, தனியாக ஒரு அதிகாரி போட்டு பரிசீலனை செய்து முடித்துவிட்டோம். நெருக்கடி நிலைமை காரணமாக இப்பொழுது மறுபடியும் இந்த கமிட்மெண்டு வேண்டாம் என்று நிறுத்திவைத்துவிட்டோம். என்னுடைய எண்ணம், சேலம் ஜில்லாவை சீக்கிரம் இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்பதுதான். இது இரண்டாகப் பிரிக்கவேண்டிய நிலையிலே இருப்பதனல், இந்த மாவட்டத்திற்கு டி.ஆர்.ஓ. போட்டிருக்கிறோம். பிரிக்கவேண்டிய ஜில்லா இது ஒன்றுதான் என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

கோயம்புத்தூரை வேண்டுமானலும் பிரிக்கலாம். ஆனல் கோயம்புத்தூர் ஜில்லா என்பதற்கு ஒரு பிரசித்தி இருக்கிறது, அதுபோய் விடக்கூடாது. தவிர்க்கக்கூடாத அளவிலே அதுவும் பெரிய ஜில்லாவாக இருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 'எக்ஸ்பெரிமெண்ட்' செய்து பார்க்கலாம் என்றுதான் 'ஜாயிண்டு கலெக்டர்' போட்டிருக்கிறோம். (குறுக்கீடு) வட ஆற்காடு, தென் ஆற்காடு என்பதில் அர்த்தமே இல்லை. ஆற்காடு எங்கேயோ இருக்கிறது. ஆனல், என்னுடைய எண்ணம் ஜில்லா பெயரையெல்லாம் மாற்றக் கூடாது. நல்லதோ, கெட்டதோ, பெயரை மாற்றுவதில் பிரயோசனம் இல்லை. வட ஆற்காடு, தென் ஆற்காடு இதெல்லாம் அர்த்தம் இல்லாமல் இருக்கிறது. ஆற்காடு எங்கேயோ இருக்கிறது. மஞ்சக்குப்பம் ஜில்லா, கடலூர் ஜில்லா என்று கூடச் சொல்லலாம். ஆனல், பெயரை மாற்றுவதில் நலன் இல்லை. ஆகவே, வட.சேலம், தென் சேலம் என்று சொல்லுவதில் என்ன பிரயோசனம்? அதெல்லாம் நல்லது அல்ல என்று நினைக்கிறேன். கோயம்புத்தூரைப் பொறுத்த மட்டில் இப்பொழுது ஜாயிண்டு கலெக்டர் போட்டிருக்கிறோம். சேலம் பிரியப்போகிறது. மற்ற ஜில்லாக்களைவிட கொஞ்சம் பெரிய ஜில்லாவாக இருக்கிறது. அதனல்தான் கோவையில் ஜாயிண்டு கலெக்டரைப் போட்டு அதையும் பரிட்சை செய்து பார்ப்போம் என்று போட்டிருக்கிறோம்.

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1964

அதையும் மாற்றவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதெல்லாம் மேலும் எப்படி இருக்கிறது என்று பரிசீலனை செய்து பார்த்து நாம் முடிவு செய்யவேண்டிய விஷயம்.

ராமநாதபுரம் ஜில்லாவின் தலைநகரம் மதுரையில் இருக்கிறது. அதுவும் செங்கல்பட்டு மாதிரிதான் செங்கல்பட்டிற்கு இப்பொழுது இருக்கிற தலைநகரம் சென்னைதான் சென்டர். அதே மாதிரிதான் மதுரையும் ராமநாதபுரத்திற்கு சென்டர். மதுரையில் ராமநாதபுரத்தின் தலைநகரம் இருப்பதால் இப்பொழுது சௌகரியமாக இருக்கிறது. சிவகங்கையிலும் வைக்கலாம். அந்தப் பிரதிநிதி இருக்கிறார். அவர் அம்மாதிரி சொல்லுவார். மற்றொருவர் வேறு ஒரு இடத்தைச் சொல்லலாம். எதுவாக இருந்தாலும் மதுரை போல் ஆகாது. அப்படியே மதுரைக்கு வந்தால் மற்ற வேலைகளையும் பார்த்துக்கொண்டு போகலாம். இப்பொழுது அங்கே தலைநகரம் இருப்பது அவ்வளவு திருப்தி இல்லை தான். அதையும் இரண்டு ஜில்லாக்களாகப் பிரிக்கலாம். ஆனால், இதெல்லாம் இப்பொழுது வேண்டியதில்லை, இருப்பதை அப்படியே வைத்துக்கொண்டு நடத்தலாம் என்பதுதான் இப்பொழுது யோசனை. மற்றதெல்லாம் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். வேறு மாநிலங்களில் சிறிய, சிறிய ஜில்லாக்கள் இருக்கின்றன. ஆனால் நமக்கு இதற்கெல்லாம் உண்மையிலேயே செலவு ஆகுமே என்பதுதான் முக்கியமானது.

அபிவிருத்தி சபையைப் பற்றி நான் குறிப்பிட்டேன். சில ஜில்லாக்களிலே இரண்டு டெவலெப்மெண்டு கவுன்சில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பஞ்சாயத்து புறம்போக்கு நிலத்தைப்பற்றி பல பேர்கள் பேசினார்கள். அவர்கள் சொன்ன கருத்தை நானும் உணர்கிறேன், பாராட்டுகிறேன். புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்களில் 'வெஸ்டு' பண்ணப்பட்டிருக்கிறது. ஏதோ சட்டம் செய்திருக்கிறோம் என்றால், அதையே வைத்துக்கொண்டு யாருக்குமே, ஏழைகள் கேட்டால்கூட கொடுக்கமாட்டோம் என்று சொல்லப்படுவது கூடாது. நாங்கள் செடி வைக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். செடி வைக்க வேண்டியதுதான். வேண்டாம் என்று சொல்லவில்லை, சில சமயங்களில், இது சம்பந்தமாக விருப்பு வெறுப்புகூட வந்துவிடுகிறது. தேர்தல்தான் இருக்கவே இருக்கிறது தேர்தலில் வந்தபிற்பாடு விருப்பு வெறுப்பைத் தவிர்ப்பது ரொம்ப அபூர்வம். அதன் காரணமாக கொடுக்கவே கொடுக்கக் கூடாது என்று அதற்காக இவர்கள் ஒரு திட்டம் போடுவது, இதெல்லாம் வந்துவிடுகிறது. நாங்கள் கூட இதைப்பற்றி தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறோம். புறம்போக்கு நிலம் பஞ்சாயத்துகளிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், பல பேர்களுக்கு அது பயன்படவேண்டும் என்று வைத்திருக்கிறோம். அரசாங்கத்தின் ஏஜெண்டுகளாக இருந்து இந்த நிலத்தை அவர்கள் பராமரிக்கிறார்கள். இது விஷயமாக சட்டம் கிளியராக இல்லை என்றால், வேண்டுமானால் சட்டத்தை மாற்றுவோம். நல்ல முறையில் ஏழைகளுக்குப் பயன்படவேண்டும், பொது நலனுக்குப் பயன்படவேண்டும். இப்பொழுது இருக்கிற நடை-

10th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

முறை அதற்குக் குறுக்கே இருந்தால், அதற்கு முரண்பாடாக இருந்தால், சட்டத்தை வேண்டுமானால்கூட மாற்றிவிடலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

கடன் கொடுப்பதைப்பற்றிச் சொன்னார்கள். பஞ்சாயத்துக்கள் கடன் கொடுக்கிறார்கள். விவசாய அபிவிருத்தியை பஞ்சாயத்துக்கள் பொறுப்பில் விட்டிருக்கிறோம். அதனால், அவர்கள் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. கடன் கொடுக்கிறவர் ஒருவர், கடன் வசூல் பண்ணுகிறவர் ஒருவர் என்றால், அது தவிர்க்க முடியாதது. பஞ்சாயத்துக்களே வசூல் செய்ய முடியாது. பஞ்சாயத்துக்களுக்கான வீட்டு வரியையே கிராம முன்சீப்கள்தான் வசூல் செய்கிறார்கள். வசூல் செய்யும் வேலையை அவர்களிடம் கொடுப்பது கஷ்டம். அவர்களிடம் கொடுக்க முடியாது. அவர்கள் தேர்தலில் வோட்டுகள் எதிர்பார்க்கிறவர்கள், அவர்கள் கண்டிப்பாக இருந்து பணம் பாக்கியை வசூல் செய்ய முடியாது. ஆகையினால் ரெவின்யூ டிபார்ட்மெண்டு அந்தப் பணியைச் செய்யவேண்டியிருக்கிறது.

ரெட் டேப் பற்றி கனம் அங்கத்தினர் திரு. மாதவன் சொன்னார்கள். நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். 'ரெட் டேப்' கூடாது என்று சொல்லமாட்டேன். அதைக் குறைக்கவேண்டும். சில சமயங்களில் 'ரெட் டேப்' தடையாக இருக்கிறது. ஏதோ சிவப்பு நாடா முறை வந்துவிட்டது. ஓரளவுக்கு 'ரெட் டேப்' தவிர்க்க முடியாது. ஓரளவுக்கு அவசியம் வேண்டும். இல்லாவிட்டால் தர்பார் முறைதான். ரெட் டேப் வேண்டாம் என்று சொன்னால், ஏதோ சொன்னார், ஆல் ரைட். ஆர்டர் போட்டுவிடலாம் என்ற முறையில் செய்தால், அது பழைய காலத்து தர்பார் முறைதான். எல்லாம் ஒழுங்காக இருக்கவேண்டும். தவறுகள் இருக்கலாம். எத்தனையோ சிக்கல்கள் இருக்கலாம். கண்ணை மூடிக்கொண்டு செய்துவிட முடியாது. பரிசீலனை செய்ய வேண்டும். நியாயமாகச் செய்யவேண்டும். தவறுதல்கள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் கவனித்தால் பொது மக்களின் நலனை ஒட்டி 'ரெட்டேப்' ஓரளவுக்கு அவசியமாகிறது. அவசியம் என்றால் அதற்கு மேல் போகக் கூடாது.

தாமதத்தைப் பற்றியெல்லாம் பல கனம் உறுப்பினர்கள் பேசினார்கள். தாமதத்தினால்தான் 'கரெப்ஷன்' வருகிறது. அதிலே எனக்குக் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. தாமதத்தை எவ்வளவு தூரம் குறைக்கிறோமோ அந்த அளவுக்கு 'கரெப்ஷனை'த் தவிர்க்கலாம். அது தான் அரசாங்கத்தின் கருத்து. தாமதம் கூடாது. கூடியவரையில் தாமதம் இல்லாமல் உடனடியாக பொது மக்களுக்குப் பரிகாரம் ஏற்படவேண்டும், அந்த வகையிலே கவனம் செலுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கவலை.

குறுகியகாலக் கடன், நீண்டகாலக் கடன் என்பதைப்பற்றி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். உரம் வாங்குவதற்கு கடன் கொடுப்பதெல்லாம் நீண்ட காலக் கடன் கொடுத்தால்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1964

எப்படி? சில தேவைகளுக்கு நீண்டகாலக் கடன் கொடுக்கப்படுகிறது. சில தேவைகளுக்கு குறுகிய காலக் கடன் கொடுக்கப்படுகிறது. உரம் வாங்குவதற்கு இந்தக் குறுகிய காலக் கடன்கூட கொடுக்கா விட்டால், விவசாயிகள் கஷ்டப்பட்டு வெளியில் வேறு எங்கேயாவது கடன் வாங்கவேண்டியிருக்கும். இந்த ஸீஸனில் அவர்கள் கடன் வாங்குகிறார்கள் என்றால், அடுத்த அறுவடை வரும் பொழுது, நெல்லை விற்று கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டும். இல்லையென்றால், விவசாயிகளுக்கு இவ்வளவு வசதி கிடைக்காது. குறுகிய காலக் கடனுக்கு வட்டி அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். வட்டி அதிகமாக இருக்கக்கூடாதுதான். அநேகமாக பாங்குகள் மூலம் தான் இந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன. பாங்குகளை 'நீங்கள் கொஞ்சம் வட்டியை குறைக்க முடியாதா?' என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ரிசர்வ் பாங்கிலிருந்து அவர்கள் கடன் வாங்குகிறார்கள். கூட்டுறவு பாங்குகள் தங்களுக்கு இன்ன இன்ன இனத்தில் செலவாகிறது என்று சொல்லுகிறார்கள். அதையெல்லாம் பார்த்துத்தான் செய்ய வேண்டும்.

கிராம அதிகாரிகளைப் பற்றிச் சொன்னார்கள். கிராம அதிகாரிகளைப்பற்றி ஒரு கனம் அங்கத்தினர் கூறும்பொழுது, வெள்ளைக்காரர்கள் காலத்தில் எப்படி இருந்ததோ அப்படியே இருக்கிறது அவர்கள் நிலைமை என்று சொன்னார்கள். அப்படியில்லை, கிராம அதிகாரிகள் நிலையிலே. அதற்கப்புறம் எவ்வளவோ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு சிக்கலான பிரச்னை, கிராம அதிகாரிகள் முழுநேர ஊழியர்கள் அல்ல. சில ஜில்லாக்களில் இப்பொழுதும் 'ஹெரிடிடரி ஸிஸ்டம்' இருக்கிறது. அந்த சிஸ்டம் இப்பொழுது இருக்கிற நிலைமைக்குப் பொருந்தாது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. இப்பொழுது இருக்கிற சட்ட நிலையில் அது பொருந்தாது. முழு நேர ஊழியர்களாக, அதாவது லோயர் டிவிஷன் கிளர்க், அப்பர் டிவிஷன் கிளர்க் போல், அட்வெர்டைஸ் செய்து, அப்ளிகேஷன் கேட்டு, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் அவர்களை செலக்ட் பண்ணிவிடலாம். ஆனால், இப்பொழுது கிராமத்திலேயே இருக்கிறவர்கள், விவசாயிகள், கிராம நிலவரத்தை நன்றாக உணர்ந்தவர்கள், கிராமத்தின் மதிப்பைப் பெற்றவர்கள். அவர்கள் விருந்து அந்த வேலையைச் செய்வது மாதிரி அது ஆகுமா என்பது தீவிரமாக யோசிக்கவேண்டிய விஷயம், அதுதான் சிக்கல். உடனடியாக திட்டத்தை மாற்ற முடியாது. இப்பொழுது இருக்கிற முறை நடந்து கொண்டு இருக்கிறது. அதே மாதிரி தான் வில்லேஜ் மீனியல்ஸ் என்று சொல்லப்படுகிற தலையாரி, வெட்டி. பெயரை வேண்டுமானால் மாற்றிக்கொள்ளலாம். அவர்களுக்கும் வேலை முழு நேரம் இல்லை. ஆனால் அக்கிரமமாக அவர்களிடம் முழு நேர வேலை வாங்கலாம். முழு நேரம் வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுதிருக்கிற அமைப்பை ஒழித்து விட்டால் பிறகு எப்படி அமைப்பது என்பது பிரச்னையாகும். மேலும் அதிகமாக செலவுக்கு வழி ஏற்பட்டு விடுமா என்று கவனிக்க வேண்டும். இன்னொரு கருத்து சொன்னார்கள். கலெக்டராக இருப்பவர்களும் இங்கே செக்ரடேரியட்டில் இருப்பவர்களும் மாற்றப்பட வேண்டும் என்று சொன்னார்கள்.

10th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

அது ஒரு நல்ல யோசனை. அந்த யோசனைப்படி தான் இப்பொழுது செய்யப்பட்டு வருகிறது. ஆனால் அது எப்பொழுதும் செய்ய முடிவது இல்லை, கலெக்டராக இருப்பவர்கள் இங்கே செக்ரடேரியட்டுக்கு வந்தால் நல்லதுதான். அது அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற கருத்து.

கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்கள் முன்பு இருந்த ஐ.ஸி.எஸ். காரர்களைப்போல இப்பொழுது இருக்கும் ஐ.ஏ.எஸ். ஆபிஸர்கள் இப்பொழுது இருக்கும் நிலைமைக்கு தேவையான மனப்பான்மை உள்ளவர்களாக இல்லை என்று சொன்னார்கள். நான் சொல்லுவேன், அப்படிப்பட்ட மனப்பான்மை வந்து கொண்டிருக்கிறது, வந்து விட்டது என்று சொல்லலாம். ஆனால் ஒருவர் இரண்டு பேருக்கு அந்த விதமாக அட்ஜெஸ்ட் பண்ணிக் கொள்ள முடியவில்லை. நமக்கு எல்லாம் கூட அட்ஜெஸ்ட் பண்ணிக்கொள்ள முடியவில்லை. நாம் எல்லாம் உத்தியோகப் பற்று அற்றவர்கள். நாம் இன்றைக்குப் பார்க்கிறோம், இளைஞர்கள் பெரிய கலெக்டர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் அவர்களுக்கு கிராம அபிவிருத்தி வேலை, கிராம நலன் மக்களுடைய நலன், மக்களுடைய முன்னேற்றம் முதலிய பொறுப்புகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற அவர்கள் மிக்க அக்கறையோடு பாடுபடுகிறார்கள். இளைஞர்கள் ஐ.ஏ.எஸ். உத்தியோகஸ்தர்கள் கிராமம் கிராமமாகப் போய் உற்சாகத்தோடு அக்கறையோடு பாடுபடுகிறார்கள். நானே பார்த்திருக்கிறேன். பொதுவாக அவர்கள் நல்ல திருப்தியோடு பணி புரிகிறார்கள். உபசாரத்திற்காகச் சொல்லவில்லை. திருப்திபடும் அளவுக்குப் பணி புரிவதில் ஐ.ஏ.எஸ். ஆபீஸர்கள் பின் வாங்குவது இல்லை. தேவைக்கு ஏற்றவாறு அவர்களுக்கு மனப்பான்மை ஏற்பட்டு கிராம வளர்ச்சிக்கு உரிய முறையில் பணி புரிந்து வருகிறார்கள்.

இன்னொன்று சொன்னார்கள். பட்டா மாறவில்லை என்று சொன்னார்கள். இந்த பட்டா மாறுதல், ஜாயிண்ட் பட்டா, இவை ரொம்ப நாளாக இருக்கிற தொல்லை. அதிலும் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறோம். மேலும் கவனம் செலுத்த வேண்டும். இங்கே காரியதரிசி அவர்களும் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களும் இதில் கவனம் செலுத்தி ஜாயிண்ட் பட்டா மாற்றுவது முதலிய விஷயங்களில் எல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்துவார்கள்.

கிராம முன்சீப்பை, ஆர்.டி.ஓ.வைக் கேட்காமலேயே தாசில்தார் சஸ்பெண்ட் செய்து விடுகிறார் என்று சொல்லப்பட்டது. தாசில்தார் அப்படி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

தாலுகா ஆபீசு அவ்வளவு நன்றாக இல்லை என்று சொன்னார்கள். இப்பொழுது இந்த மன்றத்துக்குக் கூடத்தான் வேறு இடம் வேண்டியிருக்கிறது. இதற்கே எங்கே போவது பணத்திற்கு என்று

[10th March 1964

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,52,78,500 under Demand No. XXXIII—Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 3,67,54,900 under Demand No. XXXVI—Other Miscellaneous Contributions and Assignments be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,67,54,900 under Demand No. XXXVI—Other Miscellaneous Contributions and Assignments."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 6,02,500 under Demand No. XLV—Commuted value of Pensions be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,02,500 under Demand No. XLV—Commuted value of Pensions."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 28,80,56,400 under Demand No. XLVII—Loans and Advances by the State Government be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 28,80,56,400 under Demand No. XLVII—Loans and Advances by the State Government."

1-31 p.m. The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

10th March 1964]

IV—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

120. *Annual Report of the Madras Public Service Commission for the year 1962-63, issued in G.O. Ms. No. 1797, Public (Services-A), dated 22nd November 1963. [Laid on the Table of the House under Article 323 (2) of the Constitution of India.]*

B. Reports, Notifications and other papers.

68. *Erratum to list of Questions and Answers laid on the Table of the Assembly on 2nd March 1964.*

APPENDIX I.

[*Vide* answer to starred question No. 209 of page 136.]

A.—With a view to maintain the price level of vegetables and increase its production by utilising the available waste lands in and around important towns and cities, a scheme for the increased cultivation of vegetables was sanctioned in January 1963 and the same is in operation with effect from 9th January 1963, in and around Madras city and the important towns of Tiruchirappalli, Madurai, Coimbatore and Tirunelveli within a radius of 30 miles of the above places and in the blocks of Munchirai, Tiruvatar, Killiyoor and Melpuram of Kanyakumari district.

2. Under the scheme, vegetable seeds and pesticides are sold to the vegetable growers at 50 per cent concessional rates. Loans are also granted to the extent of Rs. 120 per acre per grower subject to a maximum of Rs. 240 per season on personal surety. The loan amount is recoverable at the time of harvest. The loans are granted by the Block Development Officers in whose jurisdiction, the area is located. Manure mixtures specially compounded to a formula to suit all vegetable crops are also supplied within the loan amount applicable to each growers.

பதில்.—காய்கறிகளின் விலையேருமல் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனும் முக்கிய நகரங்களிலும் ஊர்களிலும் உள்ள தரிசு நிலத்தைப் பயன்படுத்தி காய்கறி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும் காய்கறியை அதிகமாக உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று 1963 ஜனவரியில் அனுமதிக்கப்பட்டது. இத் திட்டம் சென்னை நகரிலும், அதன் சுற்றுப் புறத்திலும், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் 30 மைல் சுற்றளவில் உள்ள இடங்களிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முன்சிறை, திருவட்டாறு, கிள்ளியூர், மேல்புறம் வட்டாரங்களிலும் 1963-ஆம் வருடம் ஜனவரி மாதம் 9-ந் தேதி முதல் அமலில் இருந்து வருகிறது.

2. இத் திட்டத்தின்கீழ் காய்கறித் தோட்டம் போடுபவர்களுக்குக் காய்கறி விதைகளும், பூச்சிக்கொல்லிகளும் பாதி விலைக்கு வழங்கப்படுகின்றன. தோட்டக்காரர் ஒருவருக்கு ஏகரா ஒன்றுக்கு ரூ. 120 வரை சொந்த ஜாமீனில் கடன் வழங்கப்படுகிறது. பிரதி பருவகாலத்திற்கு அதிகபட்சம் ரூ. 240 வரை கடன் வழங்கப்படுகிறது. அறுவடைக்காலத்தில் கடன் தொகை திருப்பி வசூலிக்கப்படுகிறது. தோட்டம் அமைந்துள்ள பகுதி எந்த வட்டார அபிவிருத்தி அதிகாரியின் மேற்பார்வையில் உள்ளதோ அவர் கடன்களை வழங்குகிருர். எல்லாவிதமான காய்கறிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட உரக் கலவையும் ஒவ்வொரு தோட்டக்காரருக்கும் வழங்கப்படுகிறது. இதன் விலையும் மேற்படி கடன் தொகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

APPENDIX II.

[*Vide* answer to starred question No. 210 on page 141.]

[SUBJECT.—*Civil Supplies—Foodgrains—hoarding—Steps taken for prevention.*]

The policy in respect of price control is laid down by the Centre. Besides the action that is taken by the Government of India, the following steps have been taken by this Government for holding the price line :—

(i) Fair price shops for the supply of rice to the vulnerable sections of the community at cheap prices are opened wherever and whenever necessary. Two hundred fair price shops were functioning in various districts up to the end of September 1963. With the increase in the open market price of rice, the number was raised to 333 and later to 500. The districtwise number of fair price shops is given below :—

District.	*Number of shops.*
Chingleput	100
Ramanathapuram	70
Coimbatore	22
Salem	25
Tirunelveli	46
North Arcot	16
Kanyakumari	15
Nilgiris	70
Madurai	15
Tiruchirappalli	10
Madras	100
South Arcot	11
Total ...	500

Rice from the fair price shops is being distributed at two litres per head per day, subject to a maximum of 15 bags per day per shop in the Madras City and 10 bags in other districts. The retail price of rice issued varies from 39 to 41 nP. per litre.

(ii) Wheat is being sold at fair price through the shop-keepers authorised by the District Revenue Officers and the Collectors. These shops get their supplies from the Central reserves. With a view to popularising the consumption of wheat in the place of rice, all the quantitative restrictions in the release of wheat from the Central reserves and in the sale of wheat from the approved shops have been lifted.

[10th March 1964

(iii) Government have sanctioned the opening of eight fair price shops for the sale of firewood in Madras City to the poor. Firewood is sold in these shops at Rs. 1·50 per gundu of 20 kg.

(iv) Government have sanctioned a scheme for the organisation of a large number of Consumer Co-operative Stores for the sale of essential commodities at fair prices. The Scheme in its first phase has been implemented in nine towns, viz., Madras City, Madurai, Thanjavur, Tuticorin, Salem, Vellore, Coimbatore, Nagercoil and Tiruchirappalli. The Scheme has since been extended to 19 additional towns having a population of 50,000 to 1 lakh each. The retail units so far opened have been able to sell essential commodities at prices lower than the market rates keeping only the minimum profit required for their working expenses. Apart from this, another scheme for the organisation of co-operative consumer stores for the benefit of employees of the industrial establishments and plantations has been sanctioned. Under this Scheme, 198 industrial establishments and 102 plantations have been selected for organising co-operative stores. Stores have been started so far in 120 industrial establishments and 24 plantations. It is also proposed to introduce shortly another scheme for the distribution of consumer articles in rural areas through village co-operatives and marketing societies. About 2,500 village societies will be selected for the supply of essential consumer articles during 1963-64 and by the end of the third plan, about 5,000 societies will be working under the scheme.

(v) Following the declaration of Emergency, a tendency for a spurt in prices of vegetables in the City was noticed. After a good deal of discussion, an agreement was reached that the retailers should charge not more than 20 per cent over the rates obtaining in Kothwal Bazaar.

As a long term measure, Government have sanctioned a scheme for production of more vegetables in and around Madras City and in the towns of Madurai, Coimbatore, Tiruchirappalli and Tirunelveli.

(vi) Although our food position is quite satisfactory, a watch over the trading on foodgrains is kept. Under the Madras Food-grains Dealers' Licensing Order, 1958, to provide in food-grains exceeding 19 quintals at a time have to take out a licence. The licensees are required to submit fortnightly reports about the arrivals, stock position of foodgrains, etc., and have to issue bills for sale. The business premises are subject to inspection by the Revenue, the Commercial Taxes and the Civil Supplies Authorities.

(vii) Similarly, it was considered necessary to keep a watch over the purchases and sale of sugar. Government have therefore issued the Madras Sugar Dealers' Licensing Order, 1962, providing for licensing of the dealers engaged in sugar trade in quantities exceeding 50 quintals at a time.

10th March 1964]

(viii) Pulses like blackgram, toor dhall, etc., required in this State are generally imported from the North Indian Centres. Due to lack of wagons for transport, there was occasional scarcity and a slight increase in prices. Prompt action is taken for allotment of adequate number of wagons for the movement of pulses to the South.

(ix) Hoarding the stocks of trade reduces availability of commodities in the market and this affects adversely the prices of food grains. As an anti-hoarding measure, the hoarding capacity of the trade is regulated by credit control. The Reserve Bank regulates advances by scheduled banks.

A close watch is maintained over the trend of prices and supply position of essential commodities. The provisions of the Essential Commodities Act and the Defence of India Rules will be invoked if and when necessary.

[பொருள்.—உணவுப்பொருள்கள்—பதுக்கல்—ஒழிப்பு—அரசாங்கத்தின் நடவடிக்கைகள்.]

விலைவாசியைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான கொள்கையை மத்திய அரசாங்கம் வகுத்துள்ளது. இத்துடன் மாநில அரசாங்கமும் விலைவாசியைக் கட்டுப்படுத்தப் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுள்ளது :—

(i) *அவசியம் நேரும்போது, அவசியமான இடங்களில், ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக்கச் செய்வதற்காக நியாய விலைக் கடைகள் திறக்கப்படுகின்றன. 1963 செப்டம்பர் முடிய பல்வேறு மாவட்டங்களில் 200 நியாய விலைக் கடைகள் இருந்தன. அரிசி விலையேற்றத்தின் காரணமாக 200 கடைகள் 333 ஆகவும் பிறகு 500 ஆகவும் அதிகமாக்கப்பட்டன. மாவட்டவாரியாகத் திறக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—*

மாவட்டம்.	கடைகளின் எண்ணிக்கை.
செங்கற்பட்டு	100
ராமநாதபுரம்	70
கோயம்புத்தூர்	22
சேலம்	25
திருநெல்வேலி	46
வட ஆற்காடு	16
கன்னியாகுமரி	15
நீலகிரி	70
மதுரை	15
திருச்சிராப்பள்ளி	10
சென்னை	100
தென் ஆற்காடு	11
மொத்தம்	500

[10th March 1964

நியாயவிலைக் கடைகளில் நாளொன்றுக்கு ஆளுக்கு 2 லிட்டர் அரிசி கொடுக்கப்படுகிறது. இது சென்னை நகரில் உள்ள கடை ஒன்றுக்கு அதிகபட்சம் 15 மூட்டை அரிசியும், மற்ற மாவட்டங்களில் கடை ஒன்றுக்கு அதிகபட்சம் 10 மூட்டை அரிசியும் வழங்கப்படுகிறது. இந்த அரிசியின் சில்லறை விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு 39 நயா பைசாவிலிருந்து 41 நயா பைசா வரையில் இருக்கிறது.

(ii) மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள், கலெக்டர்கள் ஆகியோரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கடைகளில் கோதுமை நியாய விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. மத்தியச் சேமிப்பிலிருந்து இந்தக் கடைகளுக்குக் கோதுமை வழங்கப்படுகிறது. அரிசிக்குப் பதிலாகக் கோதுமை உணவைப் பிரபலப்படுத்தும் நோக்கத்தோடு, மத்தியச் சேமிப்பிலிருந்து கோதுமையை வழங்குவதற்கும், அங்கீகரிக்கப்பட்டுள்ள கடைகளில் கோதுமையை விற்பனை செய்வதற்கும் அளவுக் கட்டுப்பாடுகள் முழுவதும் நீக்கப்பட்டுள்ளன.

(iii) சென்னை நகரில் ஏழை மக்களுக்கு நியாய விலையில் விறகு விற்பனை செய்வதற்காக எட்டு நியாய விலைக் கடைகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது. இந்தக் கடைகளில் 25 கிலோகிராம் கொண்ட குண்டு ஒன்றுக்கு ரூ. 1.50 வீதம் விறகு விற்கப்படுகிறது.

(iv) அத்தியாவசியப் பொருள்களை நியாய விலைகளில் விற்பனை செய்ய ஏராளமான கூட்டுறவு மளிகைக் கடைகளை ஏற்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இந்தத் திட்டம் முதல் கட்டத்தில் சென்னை, மதுரை, தஞ்சை, தூத்துக்குடி, சேலம், வேலூர், கோவை, நாகர்கோயில், திருச்சி ஆகிய ஒன்பது நகரங்களில் அமுலாக்கப்பட்டிருக்கிறது. ஐம்பதாயிரம் முதல் ஒரு லட்சம் வரை மக்கட்தொகையுள்ள மேலும் 19 நகரங்களுக்கும் இத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதுவரை திறக்கப்பட்டுள்ள சில்லறை விற்பனைக் கடைகள் அத்தியாவசியப் பொருள்களை மார்க்கட் விலைக்குக் குறைவாக விற்று வருகின்றன; நடைமுதல் செலவுக்கான குறைந்த அளவு லாபமே வைத்துக்கொள்கின்றன. இதைத் தவிர, தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நன்மையளிப்பதற்கென்று இத்தகைய கூட்டுறவு மளிகைக் கடைகளை ஏற்படுத்தும் இன்னொரு திட்டமும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 198 தொழில் நிறுவனங்களும், 102 மலைத் தோட்டங்களும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஏற்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 120 தொழில் நிறுவனங்களிலும், 24 மலைத் தோட்டங்களிலும் பண்டகசாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள், மார்க்கெட்டிங் சங்கங்கள் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை கிராமப் பகுதிகளில் வழங்குவதற்கான மற்றொரு திட்டத்தையும் விரைவில் கொண்டுவர உத்தே

10th March 1964]

சிக்கப்பட்டுள்ளது. 1963-64-ல் அத்தியாவசியப் பண்டங்களை வழங்குவதற்காக சுமார் 2,500 கிராமச் சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்படும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் சுமார் 5,000 சங்கங்கள் இத் திட்டத்தைச் செயலாற்றிவரும்.

(v) தேசிய நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டதையொட்டி, சென்னை நகரில் காய்கறிகளின் விலைகள் அதிகரிக்கும் போக்கு காணப்பட்டது. காய்கறி மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் ஆகியோரின் பிரதிநிதிகளுடன் விரிவாக விவாதம் நடத்தியதன் விளைவாக, சில்லறை விற்பனையாளர்கள் கொத்தவால் சாவடி விலையில் 20 சதவீதத்துக்குமேல் கூட்டுவது இல்லையென்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

நீண்டகால ஏற்பாடாக சென்னை நகரின் சுற்றுப்புறங்களிலும், மதுரை, கோவை, திருச்சி; திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

(vi) நம்முடைய உணவு நிலை திருப்திகரமாக இருந்தபோதிலும், உணவுப் பொருள்களின் வியாபாரம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 1958-ம் ஆண்டு சென்னை உணவுப் பொருள் வியாபாரிகள் உத்தரவின்கீழ், ஒரு தடவையில் 19 குவிண்டல்களுக்கு அதிகமாக உணவுப் பொருள்களை விற்பனை செய்பவர்கள் வர்த்தகவரி அதிகாரிகளிடமிருந்து லைசென்சு பெறவேண்டும். இவ்வாறு லைசென்சு பெற்றவர்கள் உணவுப் பொருள்களின் கொள்முதல், இருப்பு முதலியவற்றைப் பற்றிப் பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், விற்பனைக்குப் பில் தரவேண்டும். மேலும் வியாபார இடங்களை ரெவின்யூ அதிகாரிகள், வர்த்தக அதிகாரிகள், சிவில் விநியோக அதிகாரிகள் ஆகியோரும் பார்வையிடலாம்.

(vii) இதைப்போலவே, சர்க்கரைக் கொள்முதல், விற்பனை பற்றியும் கண்காணித்து வருவது அவசியம் எனக் கருதப்பட்டது. எனவே, அரசாங்கம் 1962-ல் சென்னை சர்க்கரை வியாபாரிகளுக்கு லைசென்சு வழங்கும் உத்தரவைப் பிறப்பித்தது. இதன்படி, ஒரு தடவையில் 50 குவிண்டல்களுக்கு அதிகமாக விற்பனை செய்யும் வியாபாரிகள் லைசென்சு பெறவேண்டும்.

(viii) நமது மாநிலத்திற்குத் தேவைப்படும் உளுந்து, துவரை போன்ற பயறு வகைகள் பொதுவாக வட இந்தியப் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. சரக்குப் போக்குவரத்துக்குப் போதுமான வாகன்கள் இல்லாத குறையினால், சில சமயங்களில் இந்தப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. விலையும் ஓரளவு கூடியது. இந்தப் பயறு வகைகளைத் தென் பகுதிக்குக் கொண்டு செல்லப் போதுமான அளவில் வாகன்களை ஒதுக்கச் செய்வதற்கு உரிய நடவடிக்கையும், எடுத்துக் கொள்ளப்பட்டது.

(ix) வியாபாரிகள் உணவுப் பொருள்களை அதிக அளவில் சேமித்து இருப்பு வைத்து விடுவதால், மார்க்கட்டில் அவற்றின் விநியோகம் குறைந்துபோய், விலையும் அதிகமாகிறது. இவ்வாறு சேமித்து வைப்பதைத் தடுக்கும் பொருட்டுச் சேமிப்பு அளவா ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ளது கடன் கட்டுப்பாடு மூலம் ஷெட்யூல்டு பாங்குகள் கொடுக்கும் முன்பணங்களை ரிசர்வ் பாங்கு ஒழுங்குபடுத்துகிறது.

(x) அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி, விநியோக நிலை ஆகிய நிலவரங்கள் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அவசியம் நேரும்போது அத்தியாவசியப் பண்டச் சட்ட விதிகளும், இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகளும் பயன் படுத்தப்படும்.

1926-27

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, 11th March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

மாவட்ட கைத்தறி போர்டு

*211 கேள்வி.—திரு. டி. கடம்பவனசுந்தரம்: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) "மாவட்ட கைத்தறி போர்டு" என்று ஒன்று செயல் படுகிறதா?

(இ) அதன் உறுப்பினர்கள் யார் யார்?

(உ) அவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) to (உ) சபையில் ஓர் அறிக்கை* வைககப்பட்டுள்ளது.

திரு. டி. கடம்பவனசுந்தரம்: மாவட்ட கைத்தறி போர்டு என்பது எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை அமைக்கப்படுகிறது? அதன் செயல்முறைத் திட்டம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்படுகிறது. கைத்தறிப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க அது அமைக்கப்படுகிறது.

SRI V. S. S. MANI: Is it an Advisory Board or any other Board?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது நான்-அபிஷியல் போர்டு. கலெக்டர்தான் சேர்மன். மற்றவர்கள் எல்லாம் தனிப் பட்டவர்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி: மதுரையைப் பொறுத்தவரையில் நெசவாளர்களாக இருப்பவர்களுக்கு அதில் பிரதிநிதித்துவம் இருப்பதாகத் தெரியவில்லை. மதுரை நகரில் உள்ளவர்கள் மட்டுமே இருப்பதாகத் தெரிகிறது. அதை மாற்றி மதுரை மாவட்டத்தில் கிராமப்புறங்களில் உள்ள நெசவாளர் தொழிலாளர் களும் இடம் பெறும்படியாகச் செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தமாதிரி கமிட்டிகளுக்கு யாரைப் போட்டாலும் சரி, "அவர் சரியில்லை, இன்னாரைப் போட வேண்டும்" என்றே புகார் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

* 333–348-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மதுரையைப் பொறுத்த வரையில் :

SRI K. S. Rajaraman . . . . Representative of the Primary Weaver's Co-operative Society.

SRI Manickavachakam . . . . Mill-Owners Representative.

SRI V. R. Subbaraman . . . . Handloom Manufacturers Association.

என்பவர்களைப் போட்டுள்ளோம். இந்தமாதிரி எல்லாத் துறைக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கிறோம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : இந்த போர்டினுடைய உறுப்பினர்கள் தேர்தல் முறையில் வருகிறார்களா? அல்லது அரசாங்கம் நாமினேஷன் செய்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் நியமன முறையில் தான் வருகிறார்கள்.

திரு. அ. ராகவ ரெட்டி : செங்கல்பட்டு ஜில்லாவைப் பொறுத்த வரையில் இந்தக் கமிட்டி கூடியதாகவோ அல்லது நெசவாளர்களுடைய பிரச்னையைப் பரிசீலித்துத் தீர்த்திருப்பதாகவோ தெரியவில்லை. அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஆலோசனை சொல்கிற கமிட்டி. இவர்கள் என்ன ஆலோசனை சொன்னார்கள் என்றும் தகவல் என்னிடம் இருக்காது. அந்தக் கமிட்டி கூடிற்று இல்லையா என்கிற விவரம் வேண்டுமானால் ஜில்லா கலெக்டருக்கு எழுதி விவரம் சேகரிக்க வேண்டும். அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : சர்க்கார் யாருடைய சிபாரிசின் பேரில் நியமனம் செய்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஜில்லா கலெக்டர், ஹாண்ட்லூம் பிரதிநிதி, கோவாப்ரேடிவ் ரெஜிஸ்டிரார் ஆகியவர்கள் கலந்து ஆலோசித்து அந்தப் பகுதிக்கு ஒரு பானல் அனுப்புகிறார்கள். ஜில்லாக் கமிட்டிகளைப் பொறுத்தவரையில், ஜில்லாக் கலெக்டரே நியமனம் செய்துவிடுகிறார். மாநில கமிட்டி ஒன்றுக்குத்தான் இந்த பானலில் இருந்து எடுத்து நாங்கள் செய்கிறோம்.

திரு. எம். எஸ். மணி: கைத்தறித் தொழிலாளர் சங்கங்களில் உள்ளவர்களுக்கு இதில் பிரதிநிதித்துவம் தரப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழிலாளர்களுக்கு இதில் பிரதிநிதித்துவம் இல்லை. தொழிலாளர் பிரச்சினையை விசாரிக்கிற கமிட்டி அல்ல இது. நூலைப் பற்றியும், கைத்தறித் துணி உற்பத்தியைப் பற்றியும், விற்பனையைப் பற்றியும்தான் ஆலோசனை செய்யும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : மதுரை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியாகிய சின்னாளப்பட்டியில் மட்டும் 17 ரிஜிஸ்டர்ட் சங்கங்கள் இருக்கின்றன. அந்தக் கமிட்டியில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது பற்றி ஆலோசிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கேள்வி இல்லை. கலெக்டருக்கு இவ்வாறு ரெப்ரசென்டேஷன் செய்தால் கவனம் செலுத்துவார்.

கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன்

*212 கேள்வி.—திரு. பி. கே. மூக்கையா தேவர் :
திரு. எம். வி. கரிவேங்கடம் : } கனம்

கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமைக்கப்படவிருக்கும் கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் எப்பொழுது பணியாற்றத் துவங்கும்?

(இ) இது குறித்து தென் இந்திய டெக்ஸ்டைல் ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து முறையீடு எதுவும் வரப்பெற்றுள்ளதா?

(உ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The matter has been taken up with the Government of India. The Handloom Finance Corporation will be set up as soon as a decision is reached. The answer was submitted on 20th January 1964 and this was the position then. Now we have received a communication from the Government of India permitting us to establish the Handloom Finance Corporation.

(b) No.

(c) Does not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி : இந்த கைத்தறி நிதிக் கார்ப்பரேஷனுக்கு ராஜ்ய அரசாங்கத்தின் உதவி எவ்வளவு? தனியார் துறை உதவி எவ்வளவு? மத்திய அரசாங்கத்தின் உதவி எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு மத்திய அரசாங்கம் உதவி கொடுக்கமாட்டார்கள். ரிசர்வ் பாங்க் கொடுக்கமாட்டார்கள். ராஜ்ய சர்க்கார் பத்து லட்சம் ரூபாய் முதலீடு செய்வதாக முடிவு செய்திருக்கிறார்கள். மற்றச் சங்கங்களில் உள்ளவர்கள் சேர்ந்து 25 லட்சம் ரூபாய் வரை போடுவதாக ஹாண்ட்லூம் டைரெக்டரிடம் வாக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் மூலமாக எந்த எந்த வகையில் யார் யாருக்குப் பண உதவி கிடைக்கும், உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்குமா, தனிப்பட்ட நெசவாளர்களுக்குக் கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் மாஸ்டர் வீவர்ஸ் அங்கத்தினராகச் சேரலாம். இண்டிபெண்டெண்ட் வீவர்சும் அங்கத்தினராகச் சேரலாம். அவ்வாறு அங்கத்தினராகச் சேருகிற

[11th March 1964

வர்களுக்குத்தான் பண்டங்களை விற்பனை செய்யக் கடன் உதவி கிடைக்கும். குறிப்பாக அவர்களிடத்தில் துணி தேங்கினால் அந்தத் துணியைக் காப்பரேஷனிடத்தில் கொண்டுபோய் வைத்துக் கார்ப்பரேஷனிடத்தில் கடன் வாங்கலாம். நூல் விநியோகம் முதலியவற்றைக் கூட கார்ப்பரேஷன் மூலமாகச் செய்யலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : உற்பத்தியாளர்களுக்கு பர்சனல் ஷ்யூரிடி மூலமாகக் கடன் உதவி அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு ஒரு போர்டு இருக்கும். அந்த போர்டு மூலமாகத்தான் இந்தக் கடன் உதவி அளிக்கப்படும்.

Power looms for weavers

* 213 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to supply power looms to the weavers instead of the articles supplied to them under Cess Fund Scheme?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, விசைத் தறிகளுக்கு அனுமதி வழங்குவதன் காரணமாக ஆங்காங்குள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதகம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அதை அரசாங்கம் அறியுமா ? அந்தத் தொல்லையை நீக்க என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ராஜ்யத்தைப் பொறுத்த அளவில், விசைத் தறிகளுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்பதுதான் அவர்களுடைய நோக்கம். அசோக் மேதா கமிட்டி இங்கு வந்தபோது கூட, ராஜ்யத்திலே இருக்கின்ற கைத்தறி நெசவாளர் சங்கங்களும் ராஜ்ய சர்க்கார் பிரதிநிதிகளும் இதைத்தான் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதர ராஜ்யங்களிலே இருக்கிறவர்கள் தங்களுக்கு விசைத் தறிகள் வேண்டுமென்று கேட்கும்போது, அவர்களுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று நாம் சொல்ல இயலாத நிலைமையில் இருக்கிறோம். நம்முடைய ராஜ்யத்திற்கு அது தேவை இல்லை என்று வேண்டுமானால் நாம் சொல்ல முடியுமே தவிர, மற்ற ராஜ்யங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று சொல்ல இயலாது. மற்ற ராஜ்யங்களுக்கு விசைத் தறி கொடுத்து, நம்முடைய ராஜ்யத்தில் விசைத் தறியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் மற்ற ராஜ்யங்களிலிருந்து போட்டியை (காம்பெடிஷன்) ஏற்படுத்திவிடும். இது சங்கடமான பிரச்னை. இதை நாம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : விசைத் தறியினால் கைத்தறிகள் பாதிக்கப்படும் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

11th March 1964]

கனம் சபாநாயகர் : கனம் அமைச்சர் ஏற்கனவே பதில் சொல்லி விட்டாரே.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, மற்ற ராஜ்யங்களில் விசைத் தறிகளை அதிகப்படுத்தி இருப்பதனால் வருங்காலத்தில் நம்முடைய ராஜ்யத்தின் பொருளாதாரத்தில் தாழ்வு ஏற்படுத்துவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மற்ற ராஜ்யங்களில் விசைத் தறிகளை அதிகப்படுத்துவதன் மூலமாக, போட்டி (காம்பெடிஷன்) ஏற்படுமே தவிர, பொருளாதாரத் துறையில் தாழ்வு ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. வெளி ராஜ்யத்திலிருந்து இந்த விசைத் தறி மூலமாக வருகின்ற துணி கைத்தறித் துணி போலவே இருக்கும். அதனால் போட்டி பலமாகப் போய்விடுமோ என்று நாங்கள் பயப்படுகிறோம்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : நெசவாளர்களுக்கு செஸ் நிதியிலிருந்து கொடுக்கப்படும் உபகரணங்களின் விலை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சில ரகங்கள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. சில ரகங்கள் குறைந்த விலையில் கொடுக்கப்படுகின்றன. தனியாகக் கேள்வி போட்டால், என்ன என்ன ரகங்கள் இருக்கின்றன என்று விவரம் சேகரித்துக் கொடுக்கலாம்.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கும் விசைத் தறியிலே பட்டுத் துணி நெய்வதற்கு நமது சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறதா ? இப்பொழுது இருக்கின்ற 'எமர்ஜன்ஸி' காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கைத்தறி நெசவாளர்களே ஒன்றாகச் சேர்ந்து அவர்கள் விசைத் தறி வைத்துக்கொள்வதாக இருந்தால் அனுமதிக்கலாம், வெளியார்களுக்கு விசைத் தறிகள் வைக்க அனுமதிப்பதில்லை என்பது தான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை ஆகும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதா ? அல்லது குறைந்து வருகிறதா ? வளர்ந்து வருகிறது என்றால், அவர்கள் இந்தத் தொழிலில் நல்ல முறையில் ஈடுபட்டுப் பயன் பெறும் வகையில் வசதிகளைப் பெருக்குவதன் மூலமாக அந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன்வருமா ? அல்லது அவர்களை மாற்றுத் தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு வழிவகை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழில் மானியத்திலேயே கைத்தறியைப் பற்றியும் விவாதிப்பதுண்டு. அல்லது கூட்டுறவு இலாகா மானியம் எடுத்துக்கொள்கிறபோதும் விவாதிக்கலாம்.

[11th March 1964

கைத்தறி சம்பந்தமாக நான் அப்பொழுது விளக்கமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஆனால், இப்பொழுது கேள்வி கேட்டிருப்பதனால், சுருக்கமாகப் பதில் சொல்ல விரும்புகிறேன். இந்த ராஜ்ய சர்க்காருடைய அபிப்பிராயம் இதுதான். குறிப்பிட்ட, சிறந்த மில்களினால் நெய்யப்படாத ரகங்கள், வகைகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் கைத்தறியில் நெய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும் என்பது இந்த ராஜ்ய சர்க்காரினுடைய அபிப்பிராயம். பவர் லூமிலோ, மில்களிலோ நெய்ய வேண்டாத வேஷ்டிகள், சேலைகள் போன்ற சாதாரண ரகங்கள் இருக்குமானால், அவற்றை நெய்ய இருக்கின்ற சங்கங்களைக் கொஞ்சங்கொஞ்சமாக ஸ்பெஷலைஸ்டு வெரைய்டீஸ் செய்யக் கூடிய சங்கங்களாக மாற்றியமைக்க வேண்டும். இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய எண்ணிக்கை குறையவேண்டும். இதில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கெல்லாம் மில்களிலே வேலை கொடுக்க வேண்டும். புதிதாக வைக்கின்ற 10, 12 கூட்டுறவு மில்கள் எல்லாவற்றிலும் கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் முதல் இடம் கொடுக்க வேண்டும். இப்படியெல்லாம் கொள்கை வைத்திருக்கிறோம்.

திருமதி சி. குழந்தையம்மாள்: தலைவர் அவர்களே, இப்பொழுது கோயமுத்தூரிலுள்ள டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரீஸில் உற்பத்தி செய்கிற 32 கதிர் யூனிட் பரீட்சார்த்தமாக இருக்கிறது. அந்த யூனிட்டைப் பவர் லூமோடு இணைத்து குடும்ப யூனிட்டாக ஏற்படுத்தும் யோசனை சர்க்காருக்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்காக நன்றி. 32 கதிர் யூனிட் வெற்றிகரமாக வேலை செய்யவில்லை. அதைக் கைவிடக் கூடாது என்று பல முயற்சிகள் செய்தோம். அதற்காக ஓரளவு பணமும் செலவழித்திருக்கிறோம். பிற்காலத்தில் அதை 'விரயம் செய்தார்கள்' என்றுகூட எங்கள் மீது குற்றச்சாட்டு சொல்வார்கள். சிறு சர்க்கரை ஆலைகள், சிறு சிமெண்டுத் தொழிற்சாலைகள், 32 கதிர்கள் கொண்ட சிறு மில்கள் இவையெல்லாம் எவ்வளவு அதிகமாக நம்முடைய நாட்டில் வைக்க முடியுமோ அவ்வளவு வைக்க முயற்சி செய்ய வேண்டும் என்பது எங்களுடைய கொள்கை. அதை எப்படியாவது நல்ல முறையில் நடத்துவதற்கான முயற்சிகள் செய்தோம். ஆனால், இன்றைக்கு அந்தக் கதிர்கள் சரியாக வேலை செய்யவில்லை. அதை மூட விடவேண்டும் என்ற மிக வருந்தத்தக்க முடிவுக்கு வந்திருக்கிறோம்.

State Transport buses (Inter-States)

* 214 *Q.*—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. Kalyanasundaram): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of proposed Inter-State routes to be operated by Madras State Transport Department now under negotiation with the Government of Mysore; and

11th March 1964]

(*b*) when a final decision would be taken in the matter?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) & (*b*) The matter is under correspondence with the Government of Mysore and a decision will be taken after their reply is reecived.

திரு. மா. இராசாங்கம்: மைசூர் மாநில சர்க்காரோடு நமது மாநில சர்க்கார் போக்குவரத்துத் துறை பேச்சுவார்த்தை நடத்துவதைப் போல், கேரள மாநில சர்க்காரோடு பேச்சுவார்த்தை நடத்தினார்களே, அது எந்த நிலையில் உள்ளது? அந்தப் பேச்சுவார்த்தை முடிந்தால் சர்க்கார் பஸ்கள் பெரியகுளம் தாலூக்கா வழியாக மதுரைக்கு வர வழி செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முடிவு ஒன்றும் ஏற்படவில்லை. பேச்சுவார்த்தை நடத்தின மைசூரிலும் சரி, பேச்சுவார்த்தை நடத்தாத கேரளாவிலும் சரி, முடிவு ஏற்படவில்லை.

* 215 *Q.*—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the new Inter-State bus routes to be run by the Madras State Transport to the Kerala State; and

(*b*) the present stage of negotiations with the Kerala Government?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) & (*b*) The matter is under correspondence with the Government of Kerala; and a decision will be taken after their reply is received and considered.

* 216 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to open a new bus route by the State Transport Department from Madurai to Kottayam (via) Kambam, Kumuli, etc.; and

(*b*) if so, the present stage of the proposal?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) The matter is under correspondence with the State Transport Board, Trivandrum.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, மைசூர் அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. மைசூர் லிமிட் 20 மைல்தான் இருக்கிறது. அதற்கு பர்மிட் கொடுப்பது நமக்கு லாபமாக இல்லை. ஏறக்குறைய பணம் பூராவாக மைசூர் அரசாங்கத்திற்குப் போகிறது. ஆகவே, நம்முடைய லிமிட் வரையில் அரசாங்க பஸ் விடக்கூடிய நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தக் கொள்கை அவ்வளவு சரி என்று நான் ஒத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது பெங்களூருக்குப் பஸ் விட்டால் நிறைய பிரயாணிகள் போவார்கள்.

ஹோசூர் எல்லை வரையில் ஒருவரும் பேசமாட்டார்கள். பெங்களூருக்குப் போகிறவர்கள் அதிகமாக இருப்பார்கள். ஆகவே பத்து மைல், இருபது மைல் என்று பார்க்காமல் ட்ராஃபிக் அதிகமாக எங்கு இருக்கிறதோ அம்மாதிரி பார்த்து பஸ் விடவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கோவையிலிருந்து உதகை வழியாக மைசூருக்கும் பெங்களூருக்கும் பஸ் விட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ? அந்த பஸ் விடுவது பற்றி மைசூர் அரசாங்கத்துடன் கலந்து ஆலோசனை நடத்தப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பல விஷயங்களை ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். தனித் தனியாக ஒவ்வொரு ரூட் பற்றியும் ஆலோசனையில் இருக்கிறதா என்று சொல்ல முடியாது, சொல்வதும் சரியல்ல, என்று நினைக்கிறேன். முடிவு ஏற்பட்ட பிறகு அது சம்பந்தமான எல்லா விவரங்களும் கொடுக்கிறோம்.

திரு. மா. இராசாங்கம் : மதுரையிலிருந்து கம்பம் வரை சர்க்கார் பஸ் விடாததற்கு ஒரே காரணம், தனியார் துறையிலே டி.வி.எஸ். இருக்கிறது என்பதுதான் என்று பேசப்படுகிறதே, அது உண்மையா ? அல்லது, மாற்று வழியில் அதற்கு வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எத்தனையோ விஷயங்கள் பேசப்படுகின்றன. எத்தனையோ விஷயங்கள் வேண்டுமென்றே பேசுகிறார்கள். அதையெல்லாம் வைத்துக் கேள்வி கேட்பது சரியாக இருக்காது.

120 மைலுக்குக் குறைந்து சர்க்கார் பஸ் விடுவதில்லை என்ற திட்டம் வைத்திருக்கிறோம். அந்தத் திட்டத்தின்படி எந்த இடங்களுக்குச் சரியாக நாம் விட முடியுமோ அதையெல்லாம் பரிசீலனை செய்து, நிதி வசதி எவ்வளவு இருக்கிறதோ அதைப் பார்த்து, 'ப்ரையாரிடி' எங்கே கொடுக்க வேண்டுமோ அதையும் யோசித்து பஸ்கள் விட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலிருந்து நீண்ட தொலைவு பஸ்களைக் கேரள மாநிலத்திற்கும் மைசூர் மாநிலத்திற்கும் அனுப்புவதற்கு முயற்சி எடுத்து இருப்பதைப் போலவே, அந்த மாநிலங்கள் இந்த மாநிலத்தோடு தொடர்பு கொள்ளும் அளவுக்கு முயற்சிகள் எடுத்திருக்கின்றனரா ? அது மாதிரி ஏதாவது கோரிக்கையை இந்த அரசாங்கத்திற்கு வைத்துள்ளனரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களும் அத்தகைய முயற்சி எடுத்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. அவர்கள் இப்பொழுது சொல்லக்கூடிய ஒரு புகார் சென்னை ராஜ்ய பஸ்கள் அதிகமான மைல் தூரம் அங்கே வருவதோடு, அதிகமான எண்ணிக்கையிலும் கேரள, மைசூர் ராஜ்யங்களில் ஓடிக்கொண்

டிருக்கின்றன என்பது. அதற்குத் தகுந்த அளவில், Party இல் தங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்ட தலைநகர் ஆகும் நிலைமையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் 'சென்டர்' ஆக இருக்கிறது. . அத்திப்பள்ளி பார்டர் வரை விட்டால் அங்கிருந்து மைசூர் ஸ்டேட் பஸ் இருக்கிறது. அங்கே மைசூர் கவர்ன்மெண்ட் ஒரு பர்மிட் கொடுப்பது என்றால் நமக்கு நஷ்டந்தான். ஆகவே, இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை எல்லாம் இலாகா பரிசிலித்துத்தான் ஏற்பாடு செய்யப்படுகிறது. நஷ்டமாக இருந்தால் அந்தக் காரியத்தைச் செய்யமாட்டோம்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த ஆண்டு புதிய ரூட்டுகளில் எத்தனை பஸ் விட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தக் கேள்வியில் இதற்குப் பதில் சொல்ல முடியாது. டிமாண்ட் வரும்போது இது பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படும்.

திரு. அ. ராகவ ரெட்டி : சென்னையிலிருந்து திருப்பதிக்குத் தற்போது நான்கு வழிகளில் 9 பஸ்கள் விடப்படுகின்றன. இந்தப் பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி எல்லாம் இன்றைக்கே கேட்டு விட்டால் நாளை மறுநாள் வருகின்ற டிமாண்டில் பேசுவதற்கு இடம் இல்லாமல் போய்விடும். டிமாண்டில் பேசலாம்.

அரசாங்க பஸ்களால் விபத்துக்கள்

*** 217 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :
திரு. கே. ஏ. மதியழகன் :** } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களால் ஏற்பட்ட விபத்துக்கள் எத்தனை ?

(இ) அவற்றைக் குறைக்க நிர்வாகத்தினர் எடுத்துக்கொண்ட தற்காப்பு நடவடிக்கை யாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 1962-63-ல் பெரிய விபத்துக்கள் 78, சிறிய விபத்துக்கள் 185, சாதாரண விபத்துக்கள் 804 ஏற்பட்டன.

(இ) ஜாக்கிரதையாக வண்டி ஓட்டுவதன் அவசியம்பற்றி பொதுவாக விதிகள் செய்திருப்பது தவிர, டிரைவர்களுக்கு அவ்வப்போது தேவைப்படும் உத்தரவுகளும் பிறப்பிக்கப்படுகின்றன.

கண்மூடித்தனமாகவோ, அஜாக்கிரதையாகவோ பஸ் ஓட்டியதாக நிரூபிக்கப்பட்டால், டிரைவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. டிரைவர்கள் ஒழுங்காக வண்டி ஓட்டுகின்றனர்களா என்பதைப் போக்குவரத்து அதிகாரிகளும் கண்காணித்து வருகின்றனர். தவறு செய்யும் டிரைவர்களுக்கு ஜாக்கிரதையாக ஓட்டுவது பற்றி நேரடியாகக் கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஜாக்கிரதையாக வண்டி ஓட்டுவதன் அவசியம்பற்றியும் போக்குவரத்து விதிகளைக் கண்டிப்பாக அனுசரிப்பதன் அவசியம் பற்றியும் அவர்களுக்கு வலியுறுத்திச் சொல்லப்படுகிறது.

திரு. எம். எஸ். மணி : மெயின்டனன்ஸ் சரியில்லை என்பதுதான் இந்த விபத்துக்குக் காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் காரணம் சரியல்ல. விபத்துக்கு முக்கியமான காரணம் 'ஸ்ட்ரே கேட்டில்' நாய், ஆடு, எருமை ஆகியவை குறுக்கே செல்வதாகும். ரோடுகளின் நடுவே எருமை மாடுகள் நின்று கொண்டிருப்பது பெரிய ஒரு தொல்லையாக இருந்து வருகிறது. மெகானிகல் டிபெக்டால் ஏற்படுகின்ற விபத்துக்கள் மிகக் குறைவு என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ம. கமலநாதன் : விபத்துக்கள் ஏற்படுவதற்கு இன்னொரு காரணம் ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் டிரைவர்கள் ஒரே ரூட்டில் அனுப்பப்படாமல் முதல் ட்ரிப்பில் ஒரு ரூட்டில் சென்றால் அடுத்த ட்ரிப்பிலேயே வேறு ஒரு ரூட்டுக்கு மாற்றுவதன் காரணமாக ரோடுகளுடைய 'சென்ஸ்' தெரிவதில்லை என்பதை அரசாங்கம் உணருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதிலே வேறு சில சங்கடமான நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. ஒருவரை ஒரே ரூட்டில் கொஞ்சம் காலம் விட்டுக் கொண்டிருப்போம். கொஞ்ச நாள் கழித்து வேறு ஒரு ரூட்டில் போடுவோம். ஒவ்வொரு டிரைவரும் 15, 20 வருஷ அனுபவம் பெற்றவர்களாதலால் சென்னை நகரத்திற்குள்ளே பஸ்ஸை ஓட்டுவதிலே ஊர் தெரியாது என்ற நிலைமை கிடையாது. டிராபிக் அப்ஸ்ட்ரக்ஷன் மூலமாக சைக்கிள், சைக்கிள் ரிக்ஷா ஆகியவைகளினால் சென்னை நகரில் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த விபத்துக்களால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் எவ்வளவு? பொருள் சேதம் எவ்வளவு ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உயிர்ச் சேதம் 1962-63-ல் சென்னையில் 21, கன்னியாகுமரியில் 3—ஆக மொத்தம் 24. 1963-64-ல் சென்னையில் 11, கன்னியாகுமரியில் 3—ஆக மொத்தம் 14.

திரு. கே. பொன்னையன் : நீண்ட தூர பஸ்கள் ஒருசில சமயத்தில் வழியில் நின்று விடுகின்றன. அதனால் பிரயாணிகள் 'மபஸல்' பஸ்ஸில் ஏறிச் செல்லவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

கனம் சபாநாயகர் : மூலக் கேள்வி விபத்துகளைப் பற்றிய கேள்வி.

திரு. கே. பொன்னையன் : . . . . இடையிலே ரிப்பேராகி நின்று விடுகிறபடியால் பஸ்ஸை கண்ட்ரோல் பண்ண ஒயர்லெஸ் சிஸ்டம் வைக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதையெல்லாம் டிமாண்ட் வரும்போது விவாதிக்கலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் பஸ் விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணம் கால்நடைகள் தன்னிச்சையாக நடமாடுவதுதான் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இத்தகைய விபத்துக்களைத் தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : டிராபிக் போலீஸ் இதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். போலீசால் மாத்திரம் இதையெல்லாம் கட்டுப்படுத்த முடியாது. ரோடுகள் போக்குவரத்துக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவே தவிர, வசிப்பதற்காகவோ மாடுகளை விட்டு வைப்பதற்காகவோ அல்ல என்ற எண்ணம் நம்முடைய பொதுமக்களிடத்திலும், ஏற்பட வேண்டும். அவர்கள் ஒத்துழைத்தால்தான் இதைத் தவிர்க்க முடியும்.

திரு. எம். எஸ். மணி : பஸ்களை ஓரிருவர் கையில் ஒப்படைத்து ஓட்டச் செய்தால் நல்ல கண்டிஷனோடு இருக்கும். புதிதாக ஒருவர் வந்து கியரைப் போடுகிறபோது உடைந்து விடுகிறது. ஆகவே, குறிப்பிட்ட ஒரு பஸ்ஸை ஓரிருவர் கையில் ஒப்படைத்தால் மெயிண்டனன்ஸையும் அவர்களே பார்த்துக் கொள்ள முடியும் என்பதை அரசாங்கம் உணருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சிறு பஸ் சர்வீஸ் நடத்துபவர்களாக, நாலைந்து பஸ் வைத்து நடத்துபவர்களாக இருந்தால் அந்த விதமாகச் செய்ய முடியும். ஆனால் ஒரு பெரிய இலாகாவில் 700 பஸ்களை வைத்து நடத்துகிற இடத்தில் 10 பேர் லீவ் போட்டால் என்ன பண்ணுவது? வேறு ஆளைத்தான் போட வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் ஒரு நாளைக்கு மார்னிங் ஷிப்ட் கொடுக்கவேண்டும்; ஒரு நாள் ஈவினிங் ஷிப்ட் கொடுக்க வேண்டும். இந்த நிலைமையில் ஒரு பஸ்ஸை ஒருவரே ஓட்டச் செய்யவேண்டுமென்று செய்ய முடியாது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஆக்சிடென்ட் ஏற்பட்டவுடன் போலீசார் டிரைவர்களைக் கைது செய்து விடுகிறார்கள். கைது செய்யப்பட்ட டிரைவர்களை ஜாமீனில் கொண்டு வருவதற்கும், மைனர் ஆக்சிடென்ட் ஏற்பட்டால் அந்த வழக்குகளை 'டிபெண்ட்' செய்வதற்கும் அரசாங்கச் சார்பில் வக்கீல் வைத்து வழக்குகளை

[11th March 1964

நடத்துகிறார்களா? அல்லது தனிப்பட்ட டிரைவரே ஜாமீனுக்கு ஏற்பாடு செய்து வழக்கு நடத்த வேண்டுமென்று விதி இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஏதாவது மானியம் கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்காகத் தனி 'ஃபண்ட்' இருக்கிறது. சட்டப்படி கொடுக்க வேண்டுமென்றால் கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு. ஆர். ரங்கசாமி: ரோடு சென்ஸ் என்பது எல்லா டிரைவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டுமென்பதற்கான விதி முறைகள் இருக்கின்றனவா? அவை எல்லா டிரைவர்களுக்கும் போதிக்கப்படுகின்றனவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிர்வாகத் துறையிலே அதற்குப் பதில் தெரியவில்லை.

SRI S. NANJUNDA ROW: Sir, when accidents occur and if there is loss of human life, do the Government give compensation to the affected party?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சென்னை நகரிலும் மற்ற மாவட்டங்களிலும் ஓடுகின்ற அரசாங்க பஸ்களுக்கு, எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு மாக்சிமம் ஸ்பீடு லிமிட்' நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: டிராபிக் கண்ட்ரோல் இருக்கின்றது. அவர்கள் நிர்ணயிக்கிற ஸ்பீடில்தான் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டாக இருந்தாலும் ஓட்ட வேண்டும்.

அரசாங்க பஸ்கள்.

*218 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்கார் நெடுந்தூர (Express bus) பஸ்களில் பிரயாணிகள் கொண்டு போகும் சாமான்களுக்கு பாதுகாப்புக்காக conductor கள் token வழங்கும் பழக்கத்தைக் கொண்டுவர உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: லக்கேஜ் கார்டுகள் வழங்கும் முறையைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். மணி: அரசாங்க பஸ்ஸில் ஒரு சின்ன கைப்பெட்டியை வைக்கவேண்டுமென்று சொன்னாலும் வைக்கிற இடத்தில் 10 பைசா கட்டணமும், இறக்குகிற இடத்தில் 10 பைசா

11th March 1964]

கட்டணமும் வாங்குகிறார்கள். பெட்டிக்கு உரியவர்கள் தாங்களே எடுத்துக் கொள்வதாகச் சொன்னாலும் ஒத்துக்கொள்வதில்லை. இது பற்றி அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது பற்றித் தனியாக டைரெக்டருக்கு எழுதினால் அவர்கள் பரிசீலனை செய்வார்கள்.

*219 Q.—SRI G. RAJARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to construct a bus-stand in Tindivanam for the State Express buses?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes.

*220 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் ஓடும் அரசாங்க பஸ்களின் கட்டணத்தை உயர்த்தும் உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், கட்டணத்தை அதிகப்படுத்துவதின் காரணமென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) & (இ) தமிழ் நாட்டில் பஸ் கட்டணங்களைத் திருத்தும் திட்டமொன்றை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. மா. இராசாங்கம்: அப்படி திருத்தும் பரிசீலனையில் பெரும் சிக்கலை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிற ஒரு பைசா, இரண்டு பைசா இல்லாமல் ஐந்தாகவும், பத்தாகவும் மாற்றியமைக்க அரசாங்கம் உத்தேசிக்குமா? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்தமாதிரி மாற்றியமைத்தால் கட்டணம் மிகவும் உயர்ந்து போகிறது என்ற நிலைமை ஏற்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து: அரசாங்க பஸ்களில் உள்ள கட்டணத்தை மட்டும் உயர்த்துவதற்கு உத்தேசிக்கிறதா? அல்லது தனிப்பட்டவர்கள் பஸ்களுக்கும் கட்டணத்தை உயர்த்த உத்தேசிக்கப்படுகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஹோம் டிப்பார்ட்மெண்டிலிருந்து இதற்கான அறிக்கை ஒன்றை அவர்கள் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட்டு அதற்கு அப்ஜெக்ஷன்ஸ் சொல்லும்படி கோரியிருந்தார்கள். அதற்கான அப்ஜெக்ஷன்ஸ் எல்லாம் வந்திருக்கிறது. அதையெல்லாம் பரிசீலனை செய்து ராஜ்யத்தில் உள்ள எல்லா பஸ்களுக்கும்தான் இந்தக் கட்டண முறையை மாற்றியமைக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன்: மோட்டார் வரி உயர்வுச் சட்டம் வந்தபோது நம் அமைச்சர் அவர்கள் அரசாங்க பஸ் கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என்று உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அந்த உறுதிமொழியைக் காப்பாற்றுவார்களா?

[11th March 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாங்கள் காப்பாற்றினோம். 1962-ல் மோட்டார் வரி உயர்த்தப்பட்டபோதிலும் 1964 வரையில் சர்க்கார் பஸ்ஸில் கட்டணத்தை உயர்த்தவில்லை. ஆனால் தனியார் பஸ்களில் உயர்த்தியது அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் மத்திய சர்க்கார் புதிதாக 25, 30 லட்சம் வரி விதித்தாலும் உயர்த்தக் கூடாது என்று சொன்னால் நஷ்டத்தில் ஓடினால் வருத்தம் ஒன்றுமில்லை என்று இந்த சட்ட சபையில் சொன்னால் அதை உயர்த்த மாட்டோம்.

திரு. ம. கமலநாதன் : அரசாங்க எக்ஸ்ப்ரஸ் பஸ் கட்டணங்கள் தனியார் ஓட்டும் பஸ்களின் கட்டணத்தை விட மிகவும் அதிகமாக யிருக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதிகமாகத்தான் வைத்திருக்கிறோம். அப்படியிருந்தும் இடம் கிடைக்கவில்லை, அதனால் கஷ்டமாயிருக்கிறது என்ற புகார் அதிகமாக இருக்கிறது. அதிகமாக இருப்பதற்குக் காரணம் நாங்கள் கொடுப்பது லக்ஷுவரி கோச். மற்றவர்கள் கொடுப்பது அவ்வாறல்ல.

திருமதி பி. கே. ஆர். லஷ்மீகாந்தம் : சென்னை நகரில் குறைந்த பட்ச கட்டணம் 7 நயா பைசாவாக இருந்ததை பத்து நயா பைசாவாகத் தற்சமயம் உயர்த்தப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உயர்த்தப்படவில்லை இன்னும்.

திரு. எம். எஸ். மணி : பஸ் கட்டணத்தை உயர்த்துகிற காரணத்தால் கிடைக்கக் கூடிய வருமானத்திலிருந்து 25 சத விகிதத்தை தொழிலாளர்களுக்கு சம்பள சலுகையாகக் கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 55 சத விகிதம் தொழிலாளர்களுக்கு அதிகமாக கொடுத்த காரணத்தினால்தான் இன்று பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற ஒரே ஒரு காரணத்திற்காகத்தான் அமைச்சர் அவர்கள் 'பஸ்ஸில் இடம் கிடைக்கவில்லை' என்ற அளவிற்குச் சொல்கிறார்கள். வேலூருக்கும் சென்னைக்கும் 3 ரூபாய் கட்டணம் உள்ள தனியார் பஸ்ஸில் இடம் கிடைக்காமல் அடுத்து பத்து நிமிடங்களில் செல்கிற கோவை எக்ஸ்ப்ரஸில் வேலூருக்குப்போக 4 ரூபாய் கட்டணம் கொடுக்கவேண்டியிருப்பதால் பத்து பேர்கள்கூட அதில் பிரயாணம் செய்வதில்லை என்பதை அறிவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது சரியல்ல. எங்கள் ஆக்குபேஷன் ரேட்ஸ் ஹையஸ்டாக இருக்கிறது. இன்னும் அதிக சர்க்கார் பஸ் போடவேண்டுமென்று வற்புறுத்துகிறார்களே தவிர, கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போன்ற புகார் இன்றுதான் முதன் முறையாக நான் கேள்விப்படுகிறேன்.

11th March 1964]

திரு. து. ப. அழகமுத்து : தற்போது பஸ் கட்டணம் குறைவாகி இருப்பதால் அரசாங்க பஸ்களில் நஷ்டம் வருகிறது என்று அமைச்சர் கூறினார்கள். அதே போல் தனியார் நடத்தும் டவுன் பஸ்களிலும் நஷ்டம் வருவதாக சர்க்காருக்குத் தகவல் வந்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ராஜ்யம் பூராவும் கட்டணம் உயர்த்துவது. மாக்சிமம் இவ்வளவு ஆகத்தான் இருக்கலாம் என்று சட்டம் பிறப்பிக்கப்படும். அந்த மாக்சிமத்திற்குள்ளே வைத்துக்கொள்ளலாம். மாக்சிமம் உயரவேண்டும் என்றுதான் இப்போது நோட்டிபிக்கேஷன் போட்டிருக்கிறோம்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : சென்னை நகரில் ஓடுகிற பஸ்களில் உள்ள கண்டக்டர்கள் பொது மக்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள ஏதாவது பயிற்சி அளிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாளை மறுதினம் விவாதத்தில் பேசலாம்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் தண்டனையடைந்தோர்

* 221 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருக்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் தண்டிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான வேலைகள் செய்யவேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது ?

கனம் திரு. கோ. பூவராகன் : கைதிகளின் திறன், விருப்பம், முன்னுள் பழக்க வழக்கங்கள் முதலியவற்றிற்கேற்ப தச்சுவேலை காகிதம் செய்தல், நூற்பு வேலை போன்ற வேலைகளைச் சிறை மேற்பார்வையாளர் கைதிகளுக்குத் தருகிறார்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கிரிமினல் கைதிகளுக்கும், அரசியல் கைதிகளுக்கும் இந்தக் கடின உழைப்பு கொடுப்பதில் ஏதாவது வேறுபாடுகள் காட்டப்படுகின்றனவா ? திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களாக இருக்கிற திரு. அன்பழகன், திரு. மதியழகன் போன்ற சட்டமன்ற அங்கத்தினர்கள் என்ன வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள் என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : திரு. மதியழகன், திரு. அன்பழகன் போன்றவர்கள் என்ன வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு என்னிடம் இப்போது விவரம் இல்லை. மொத்தமாக அதில் ஈடுபட்டவர்கள் எந்தெந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியும். பதினொரு பேர்கள் தச்சு வேலை செய்கிறார்கள். மாவு அரைக்கும் வேலையில் 11 பேர்கள் இருக்கிறார்கள். காகிதம் செய்யும் வேலையில் 13 பேர்கள்: 7 பேர்கள் பிரம்பு வேலை செய்

[11th March 1964

கிறார்கள். நூற்பில் 5 பேர்கள் இருக்கிறார்கள். தையல் வேலை 8 பேர்கள் செய்கிறார்கள். ஸ்கூல் ஆர்டர்லியாக ஒருவர் இருக்கிறார். பார்பர் ஒருவர் இருக்கிறார். 'பி' க்ளாஸ் கிச்சனில் ஒருவர் இருக்கிறார். ஒருவர் வேலை செய்யாமல் இருக்கிறார்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவராகிய திரு. மதியழகன் அவர்களை மாவு அரைக்கச் சொல்லி அரசாங்கம் உத்தரவு போட்டதா?

கனம் சபாநாயகர்: அரசாங்கம் எப்படி உத்தரவு போடுவார்கள்?

கனம் திரு. கோ. பூவராகன்: அரசாங்கம் உத்தரவு போடுவதில்லை. சிறை மேற்பார்வையாளர்கள், யார் யார் எந்த எந்த வேலைக்குத் தகுதியாக இருக்கிறார்களோ அந்தந்த வேலைகளை அவர்களுக்கு பணிக்கிறார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: அமைச்சர் அவர்கள் பதிலில் 'முன் அனுபவம்' என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சிறை சென்றவர்களில் 11 பேர்களுக்கு மாவு அரைக்கும் வேலை கொடுக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள்.

கனம் சபாநாயகர்: திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த 11 பேர்கள் என்று சொல்லவில்லையே?

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: அப்படித்தான் சொன்னார்கள். அவர்கள் முன் அனுபவம் உள்ளவர்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: யார் யார் எந்த எந்த வேலைக்குத் தகுதியானவர்களோ அந்த வேலைகளை சிறை மேற்பார்வையாளர்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் 'இந்த வேலையை ஏற்றுக் கொள்கிறேன்' என்று சொன்னால் அந்த வேலையைக் கொடுக்கிறார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கட்டடங்களுக்கு கருங்கல் வேண்டியிருப்பதால் அரசியல் தியாகிகளுக்கும், பழைய தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்டதுபோல் கல் உடைக்கும் வேலை கொடுக்கப்படுமா?

கனம் சபாநாயகர்: வெள்ளைக்காரன் இருந்த காலத்தில் நடந்தது அது.

கனம் திரு. கோ. பூவராகன்: இது ஒரு யோசனை.

திரு. ஜே. மாதா கவுடர்: நாட்டின் புனிதச் சின்னமான அரசியல் அமைப்புச் சட்டத்தை எரித்த இந்தக் கைதிகளுக்கு மிகவும் கடினமான உழைப்பு கொடுத்து அரசாங்கம் ஏன் தண்டிக்கக் கூடாது?

கனம் திரு. கோ. பூவராகன்: அவரவர்களுக்கு ஒரு வேலை கொடுக்கிறார்கள். கடினமான வேலை என்று ஒன்றுமில்லை.

11th March 1964]

திரு. ஏ. ஆறுமுகம்: இப்போது சிறைச்சாலைக்குப் போவது என்று சொன்னால் சிறைச்சாலையை உல்லாசபுரி என்று கருதி ஜெயிலுக்குப் போக விரும்புகிறார்கள். இந்த அளவு இருப்பதைத் தடுக்க யார் யார் இன்ன இன்ன தண்டனை அடைந்திருக்கிறார்கள் என்று பார்த்து அதற்குத் தகுந்த மாதிரி வேலை கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: தண்டனை கொடுப்பது நீதி இலாகா. சிறைக்கு வருகிறவர்களுக்கு வேலை கொடுப்பது சிறை மேற்பார்வையளர்கள் வேலை.

திரு. செ. மாதவன்: அரசியல் கைதிகளை சாதாரண கொலைக் குற்றம் புரிந்த கிரிமினல் கைதிகளைப் போல நடத்தவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போட்டிருப்பது உண்மையா?

கனம் திரு. கோ. பூவராகன்: யார் கோர்ட்டில் தண்டனை பெற்று வருகிறார்களோ அப்படி வருகிறவர்களுக்கு சிறை மேற்பார்வையாளர் தகுந்தவாறு வேலை கொடுப்பார்கள்.

திரு. எம். எஸ். மணி: மதுரையிலிருந்து இந்தி எதிர்ப்பில் கைது செய்யப்பட்ட பலர் திருச்சி சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மலம் அள்ளும் வேலை கொடுக்கப்பட்டிருப்பதை அமைச்சர் அறிவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: நான் முன்பே சொன்னேன். மொத்தம் 59 பேர்களில் ஒருவர் தொழு நோயால பாதிக்கப்பட்டவர். மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலை பற்றி சொன்னேன். அந்த விவரம்தான் இருக்கிறது.

திரு. செ. மதவன்: சிறைக்கூடத்தில் சாதாரண கைதிகளுக்கும் அரசியல் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளுக்கும் ஏதாவது வேறுபாடு காண்பிக்கப்படுகிறதா? அல்லது அவர்கள் கிரிமினல் குற்றவாளிகள் போன்று நடத்தப்படுகிறார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: முன்பே சொன்னேன். எந்த நோக்கத்தோடு அரசியல் கைதிகள் என்று சொல்கிறார்கள் என்று புரியவில்லை. நீதி மன்றத்தில் தண்டனை பெற்று சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறவர்களுக்கு சிறைச்சாலையில் வேலை கொடுக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறது. அதன்படி முன்பு கூறியவாறு வேலை கொடுக்கப்படுகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சிறையில் வைப்பதின் நோக்கம், குற்றம் செய்தவர்களை 'ரிபார்ம்' செய்வது, 'பெனிட்டன்ட்' செய்வது, நினைத்துப் பார்த்து அப்படிச் செய்வது சரியல்ல என்று செய்வது என்பது கொள்கை அளவில் சிறைச்சாலையின் நோக்கம் ஆனால் கிரிமினல் கைதிகள் போன்று, திருட்டு அல்லது கொலைக் குற்றம் செய்வது போன்றவற்றிற்காக கைது செய்யப்பட்டவர்களோடு அரசியல் நோக்கோடு செல்கிறவர்களையும் பாரபட்சம்

காட்டாமல் எதற்காக இப்படிக் கடுமையான வேலை கொடுக்கிறார்கள்? ஒருவேளை சென்னையில் காங்கிரஸ் தோற்ற காரணத்தினால்தான் உள்ளே இருக்கிறவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்து பழி வாங்குகிறார்களா என அறிய விரும்புகிறேன்?

கனம் சபாநாயகர்: எலெக்‌ஷனுக்கு முன்னமேயே அல்லவா கொடுத்திருக்கிறார்கள்?

கனம் திரு. கோ. பூவராகன்: நீதி மன்றத்தில் விவாதித்து தண்டனை கொடுத்து அனுப்பப்படுகிறவர்களை சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்பாக இருக்க வைக்க ஏதாவது வேலை கொடுத்து அவரவர்கள் தகுதிக்கேற்றவாறு சிறைச்சாலையில் வேலை கொடுக்கப்படுகிறது.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: தலைவர் அவர்களே, இப்போது தண்டனை அடைந்து சிறையில் இருக்கின்ற அரசியல் கைதிகளில் எத்தனை பேர்களுக்கு 'ஏ' வகுப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது, எத்தனை பேர்களுக்கு 'பி' வகுப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது, எத்தனை பேர்களுக்கு 'ஸி' வகுப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தைத் தெரிவிக்க முடியுமா? அதோடு என்னென்ன உணவு கொடுக்கப்படுகின்றது என்பதையும் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: யார் யார் என்ன வேலை செய்கின்றார்கள் என்பதுதான் இப்போதைய கேள்வி. எந்தெந்த வகுப்பில் இருக்கின்றார்கள், என்னென்ன உணவு கொடுக்கப்படுகின்றது என்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சொல்லலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இப்போது போராட்டத்தில் கலந்து சிறைக்குச் செல்லுகின்றவர்கள் சடுகுடு போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டு பலர் காயமடைகிறார்கள், சிலர் இறந்து போய்விடுகிறார்கள். ஆகவே இதை மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. கோ. பூவராகன்: இந்தக் கேள்வி மூலக் கேள்வியோடு பொருந்தாது என்று நம்புகிறேன்.

கனம் சபாநாயகர்: எங்கே சடுகுடு விளையாடுகிறார்கள்?

திரு. ஆர். ரங்கசாமி: ஸார், சிலர் ஜெயிலுக்குச் செல்வதன் காரணம் டாக்டருடைய அபிப்பிராயத்தின் மீது வைத்தியம் செய்து கொள்வதற்காகத்தான் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் இவ்விதம் செல்லுகிறவர்களிடமிருந்து கட்டணம் வசூல் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வியை மறுமுறை சொல்லக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: It is not very important.

திரு. எம். எஸ். மணி: சிறைச்சாலையில் இருக்கின்ற அரசியல் கைதிகளுக்கு அவரவர்களுக்குத் தெரிந்த வேலைகள் கொடுக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் திரு. அன்பழகன் அவர்களுக்கு ஆசிரியர் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன்: நான் மொத்தமாக இன்ன இன்ன வேலைகள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னேன். திரு. அன்பழகன் அவர்களுக்கு என்ன வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் தெரிவிக்கலாம்.

கனம் சபாநாயகர்: யார் யாருக்கு என்னென்ன வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லமுடியாது மொத்தமாகத்தான் விவரங்கள் இருக்கின்றன என்று முன்னாலேயே அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்களே.

திரு. செ. மாதவன்: சில அமைச்சர்கள் "சிறைக்குச் சென்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்டுக்கால் சூப் வேண்டுமென்று கேட்கிறார்கள்" என்று கூட்டத்தில் சொன்னது உண்மையா? அப்படியென்றால் யார் யார், எந்தெந்த சிறையில் எப்போது கேட்டார்கள் என்கின்ற விவரங்களைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: இந்த மன்றத்திலும் இதைப்பற்றி முன்பு கூட கேட்கப்பட்டது. இந்த விவரம் வேண்டும் என்றால் தனியாக கேள்வி போட்டால் யார் யார் ஆட்டுக்கால் சூப் கேட்டார்கள், யார் யார் கேட்கவில்லை என்கின்ற விவரத்தைச் சொல்லலாம்.

Plant diseases to lime trees

* 222 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that the lime trees are losing productivity due to plant disease in Ambasamudram taluk in Tirunelveli district; and

(b) the steps taken by the Government to save the lime trees?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes, Sir.

(b) A research scheme had already been started in December 1962 and it is expected that, as a result of the scheme, a remedy for this disease would be found.

(அ) ஆம்.

(இ) 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே இது சம்பந்தமாக ஓர் ஆராய்ச்சி திட்டம் அமைக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் பலனாக இந்த நோயை ஒழிப்பதற்கு ஒரு பரிகாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[11th March 1964

Parambikulam-Aliyar Project

* 223 *Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Works be pleased to state the decisions taken regarding the Parambikulam-Aliyar Project during the discussions between Kerala and Madras Governments at Trivandrum recently?

THE HON. SRI V. RAMAIAH: The various clauses of the draft agreement on the Parambikulam-Aliyar Project were discussed by Departmental Officers at Trivandrum on 10th July 1963 and the final views of the Government of Kerala in the matter are awaited.

திரு. கே. பொன்னையன்: ஸார், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியின் அருகாமையில் இருக்கின்ற ஆனைமலையாறு, இடைமலையாறு இந்த ஆற்றுப் பாசனத் திட்டத்தையும் நிறை வேற்றுவதற்கு இந்த சம்பாஷனையின்போது ஏதாவது பேசப் பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தப் பிரச்னை இதில் வரவில்லை. பரம்பிக்குளம்-ஆளியாறு எக்ரிமென்ட் பற்றித்தான் பேச்சு நடத் தப்பட்டது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, கேரள அரசினரோடு பேச்சுவார்த்தை நடத்தியதின் மூலமாக நமக்கு ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலை சாதகமாக இருக்கின்றனவா என்பதை அறியலாமா?

MR. SPEAKER: The Hon. Minister can take up the next question also.

THE HON. SRI V. RAMAIAH: The question No. 223 relates purely to the various clauses of the draft agreement on the Parambikulam-Aliyar Project. The next question relates to some other subject. That is different. As regards this question, we expect to come to the conclusion very soon.

Utilisation of surplus waters of Kerala

* 224 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the present stage of the discussion with the Government of Kerala for the utilisation in Madras State of the surplus waters of the west flowing rivers in Kerala; and

(*b*) whether any representation has been made to the Central Water and Power Commission in the matter?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) The matter was discussed between the Ministers of the two States in July 1963 when it was agreed that the Engineers of the two States should examine the availability of the supplies. The Chief Engineer (Irrigation), Madras, has since carried out his investigation and submitted a report. Copies of the report have been sent to the Government of Kerala and their reply is awaited.

11th March 1964]

(*b*) No.

நிலக்கோட்டையில் அரசாங்க ஆட்டுப் பண்ணை நிறுவுதல்

* 225 கேள்வி.—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மதுரை ஜில்லா, நிலக்கோட்டை தாலூகா, பாலமேடு பிர்க்கா வில் ஓர் அரசாங்க ஆட்டுப் பண்ணை அமைக்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, பால மேடுப் பகுதியைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆடுகள் வளர்ப்பதற்கு மிகவும் வசதியான இடம். ஆகவே, இந்த இடத்திற்கு இல்லை என்று சொல்லாமல் அந்தப் பகுதியில் ஆட்டுப்பண்ணை வைப்பதுபற்றி அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: மதுரை ஜில்லாவைப் பொறுத்தளவில் ஆட்டுப்பண்ணை வைப்பதிலும், ஆடுகள் வளர்ப்பதிலும் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்காரும் இதற்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். முதலாவதாக 804 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் 500 ஏக்கர் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஏற் பாடு செய்யப்பட்டு வருகின்றது. மேலும் 'ஷீப் ரிசர்ச் இன்ஸ்டிட் யூஷன்' சொற்ப அளவில் இதன் வளர்ச்சிக்காக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் செங்கற்பட்டு ஜில்லாவில் காட்டுப் பாக்கத்திலும், தென்னாற்காடு ஜில்லாவில் சின்னசேலத்திலும், நீல கிரி ஜில்லாவில் உதகமண்டலத்திலும் 'ஷீப் பார்ம்' ஏற்படுத்தி நல்லமுறையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவற்றினுடைய வெற்றிகரமான நிலையைப் பார்த்து மேலும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளலாம்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]

II—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65.

(1) DEMAND NO. XX—INDUSTRIES.

(2) DEMAND NO. XL—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,35,00,300 under Demand No. XX—Industries."

[11th March 1964

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, என் பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கின்றேன்.

"That the allotment of Rs. 6,73,05,900 under Demand No. XX—Industries be reduced by Rs. 100."

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,73,05,900 under Demand No. XL—Capital Outlay on Industrial Development."

SRI N. P. SENGOTTUVELU: Sir, I move—

"That the allotment of Rs. 5,35,00,300 under Demand No. XL—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ்நாட்டின் தொழில் துறை சம்பந்தமாக அறிக்கை ஒன்றை சபை முன்னால் வைத்திருக்கிறேன். இந்த அறிக்கையில் தமிழ்நாட்டில் தொழில் வளம் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது, பெரும் தொழில்கள் எந்த அளவுக்கு நிறுவப்பட்டிருக்கின்றன, சிறு தொழில்கள் எவ்வளவு அமைக்கப்பட்டிருக்கின்றன, அவைகளில் எவை லாபகரமாக, வெற்றிகரமாக இப்போது செயல்படுகின்றன, எது லாபம் இல்லை என்றெல்லாம் புள்ளி விவரங்கள் சேகரித்து இந்தப் புத்தகத்திலே கொடுத்திருக்கிறோம். சில விஷயங்களை மாத்திரம் இப்போது குறிப்பாகச் சொல்லிவிட்டு மற்ற விவரங்கள் புத்தகத்தில் கண்டிருப்பதால் இப்போது அவைகளை மீண்டும் திரும்பச் சொல்ல விரும்பவில்லை.

நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் அண்ட் ரேகுலேஷன் ஆக்ட் பிரகாரம் 617 லைஸென்ஸுகள் வழங்கப்பட்டன. அதில் முதல் ப்ளான் காலத்தில் 68, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 381, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு 168 லைசென்ஸுகள் வழங்கப்பட்டு மொத்தம் 617 லைசென்ஸுகள் வழங்கப்பட்டன. அவற்றுள் 341 லைசென்ஸுகள் இன்றைக்கு இம்ப்ளிமெண்ட் செய்யப்பட்டு தொழில்கள் நடந்துகொண்டிருக்கின்றன. 200 லைசென்ஸுகளைப் பொறுத்த வரையில் இப்போது ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 76 லைசென்ஸுகள் செயல்படாமல் தாங்களே வேண்டாமென்று விட்டதோ, அல்லது ரிவோக் செய்யப்பட்டதோ ஆகும். இதைக் கவனித்துப் பார்க்கிறபோது தமிழ்நாட்டில்தான் கொடுக்கப்பட்ட லைசென்ஸுகளெல்லாம் பெரிய அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மற்ற பிரதேசங்களைப் போல இந்த லைசென்ஸ் வேட்டைகள் ஆடி, லைசென்ஸுகளை மட்டும் பெற்று

11th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

வைத்துக் கொண்டிருக்கிற நிலைமை இல்லை. உண்மையாக தொழில் நடத்தும் லைசென்ஸுகளைப் பெற்று, பெற்ற லைசென்சுகளை உயர்ந்த முறையில் நிறைவேற்றுவதுமான நிலை நம் ராஜ்யத்தில் காணப்படுகிறது என்று நான் பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல நம் வளர்ச்சியைக் கண்டுபிடிப்பதற்கான சில குறிப்புகளை எடுத்துக்கொள்வதுண்டு. எப்படி லைஸென்ஸ் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்று சொன்னோமோ அதே போல எப்படி மின்சாரம் தொழிலுக்கு உபயோகப்படுத்தக் கூடிய அளவு வளர்ந்திருக்கிறது என்று பார்ப்பது, அதன் வளர்ச்சியும் தொழில் வளர்ச்சிக்கு ஒரு அறிகுறி ஆகும். அவ்வாறு பார்க்கும் போது தமிழ்நாட்டில் 1950-51-ல் 32 கோடி கிலோவாட் அவர்ஸ் தான் தொழிலுக்குச் செலவழிக்கப்பட்டது. 1963-ல் 142 கோடி கிலோ வாட் அவர்ஸ் மின்சாரம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது தொழிலுக்கு மாத்திரம். 10-12 ஆண்டுகளில் 4½ மடங்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஃபாக்டரி சட்டப்படி கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள ஃபாக்டரிகளின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தாலும் தொழிலின் வளர்ச்சியைக் கண்டு பிடிக்காமல் 1956-ம் ஆண்டிலே—முதலாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டிலே—நம் ராஜ்யத்தில் 4,618 ஃபாக்டரிகள் இருந்தன. 1963-ம் ஆண்டில் 6,572 ஃபாக்டரிகள் என்ற அளவுக்கு எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

சாதாரணமாக ஒரு நாட்டினுடைய தொழில் வளத்தைப் பற்றி குறிப்பிடுகிறபோது அந்த நாட்டிலே காப்பிட்டல் ஃபார்மேஷன், அதாவது நிதி மூலதனம், எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று ஊன்றிப் பார்த்து வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்று சொல்லுவார்கள். அந்த முறையில் பார்க்கும் போது கூட நம் ராஜ்யத்திலே கம்பெனிகளுக்கு செலுத்தப்பட்ட மூலதனம்—ஆதரைஸ்ட் காப்பிட்டல் அல்ல, அது எவ்வளவு வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம்—என்ன வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று பார்த்தால், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கம்பெனிகள் அமைக்க செலுத்தப்பட்ட மூலதனம் 12¾ கோடி ரூபாய் தான் இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இது 50 கோடி ரூபாயாக உயர்ந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இரண்டு ஆண்டுகளில், இன்றைக்கு 65.58 கோடியாக செலுத்தப்பட்ட மூலதனம் உயர்ந்திருக்கிறது. இதைப் பார்க்கிறபோதும் தொழில் வளம் நல்ல முறையிலே வேகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது தெரியவரும்.

இந்தத் தொழில் வளம் ஏற்படுத்துவதற்கு தமிழ்நாட்டில் ஒரு பெரிய குறைபாடு என்னவென்றால் நம்மிடத்திலே போதிய காப்பிட்டல் கிடையாது. தொழில் நுட்பம் நம்மிடத்தில்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [11th March 1964

இருக்கிறது. ஓரளவுக்கு திறமை நம்மிடத்தில் இருக்கிறது. ஆனால், இதற்கு மூலதனம் மிகவும் அவசியம். அந்த மூலதனம் தமிழ் நாட்டில் மிகக் குறைவு. இந்தப் பற்றுக்குறையைப் போக்குவதற்காகத்தான் ராஜ்யத்திலே நாம் மெட்ராஸ் இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் என்ற ஒரு ஸ்தாபனத்தை அமைத்தோம். அது முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஓரளவுக்குச் செயல்பட்டது என்று சொன்னால் பெரிய அளவுக்கு அது உதவி செய்ய இயலவில்லை. ஏனென்றால் அப்போது அதற்குப் போதிய நிதி வசதி இல்லை. ஆனால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து ஏராளமான உதவிகளைச் செய்ய முன்வந்து அதன் மூலமாக இன்றைக்கு சற்றேறக்குறைய 19 கோடி ரூபாய் அளவுக்கு கடன், பங்குத் தொகை, காரண்டி போன்றவை மூலமாக தொழிலுக்கு உதவி செய்திருக்கிறது.

இன்னும், நம்முடைய ராஜ்யத்திலே ஏதோ குறிப்பிட்ட தொழில்கள்தான் வளர்ந்தது என்ற நிலைமை இல்லை. தொழில்களெல்லாம் கூட பரவலாக வந்துகொண்டிருக்கின்றன. இந்த வெட்டுப் பிரேரணைகளில் கனம் அங்கத்தினர் திரு. சா. கணேசன் அவர்கள் கொடுத்துள்ள ஒரு வெட்டுப் பிரேரணைக்குப் பதில் சொல்லவேண்டுமென்று நினைத்தேன், துரதிருஷ்டவசமாக அவர் இல்லை. அவர்கள் ஒரு வெட்டுப் பிரேரணையிலே, "பர்மிட் லைஸென்ஸ் முறை ஒழிய வேண்டும்" என்று கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டுப் பழக்கம் என்ன என்று சொன்னால் ஒருவர் டீ கடை வைத்தால் பக்கத்தில் எல்லோரும் டீ கடை வைப்பார்கள். ஒருவர் பொடிக் கடை வைத்தால், பக்கத்தில் எல்லோருமே பொடிக் கடை வைத்து விடுவார்கள். அந்த முறையில் நாமும் வாழ மாட்டோம், முதலில் வைத்தவனையும் வாழ விடமாட்டோம். சிறு தொழில்களில் மாத்திரம் அப்படி நிலை என்பதல்ல. பெரிய தொழில்களை எடுத்துக்கொண்டால் கூட எல்லோரும் டெக்ஸ்டைல் மில்தான் கேட்பார்கள். 'நீங்கள் ஏதாவது தொழில் செய்ய வேண்டும்' என்று பல தொழிலதிபர்களைக் கூப்பிட்டு நான் மணிக்கணக்காகப் பேசுவதுண்டு. ரசாயனத் தொழிலைப் பற்றிய விவரங்களைக் கேட்பார்கள். என்ஜினியரிங் தொழில்களைப் பற்றிக் கேட்பார்கள். கேட்டு விட்டு 'எல்லாம் நன்றாக இருக்கிறது, எங்களுக்கு ஒரு டெக்ஸ்டைல் மில் கொடுக்க முடியுமா? அதைப் பார்த்துச் செய்யுங்கள்' என்று கேட்டுவிட்டுச் செல்வார்கள். நம் ராஜ்யத்தில் டெக்ஸ்டைல் மில் வந்திருந்த மாதிரி இன்றைக்குப் பல வித தொழில்கள்—மோட்டார் யந்திரங்கள், டீஸல் என்ஜின்ஸ், சைக்கிள், ரீ-ரோலிங் மில்ஸ், டைப்ரைட்டர்ஸ், டிரான்ஸ்ஃபார்மர்ஸ், காஸ்டிக்சோடா, சல்ப்யூரிக் ஆசிட், ஃபெர்டிலைசர், பேப்பர், டயர்ஸ், ரேயான்ஸ், ஸ்டேபிள் பைபர் போன்ற தொழில்கள்—நம் ராஜ்யத்திலே ஏற்பட்டுள்ளன. இதைப் பற்றிய விவரங்கள் புத்தகத்திலே 12-வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த முறையில் பலவிதத் தொழில்கள் நம் ராஜ்யத்தில் வளர வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வாறு இப்படி செய்யப்பட்டது என்று சொன்னால், டெக்ஸ்டைல் மில் வேண்டும்

11th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

என்று ஒருவர் கேட்டால், 'அதற்கு லைஸென்ஸ் கிடையாது; காஸ்டிக் சோடா தொழிற்சாலை வைப்பதாக இருந்தால் லைஸென்ஸ் கொடுக்கிறோம்', சாதாரணமாக நடைமுறையில இருக்கும் தொழிலுக்கு லைஸென்ஸ் வேண்டுமென்று கேட்டால், 'அதற்கு உதவி கிடையாது; நவீனமான தொழில், ரசாயனப் பொருள் உற்பத்தி செய்வது அல்லது என்ஜினீயரிங் பொருள் உற்பத்தி செய்வதாக இருந்தால் லைஸென்ஸ் கொடுக்கிறோம்' என்று சொல்லி, ஒரே திசையில் சென்று கொண்டிருந்த தொழிலைப் பல திசைகளில் திருப்பி, நாட்டுக்குப் பயன்படும் வகையில் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் ரெகுலேஷன் ஆக்ட் நமக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே பயன்பட்டு வருகிறது. அந்த முறைகளைக் காலத்துக்கு ஒத்தவாறு பயன்படுத்த வேண்டுமென்று சொன்னால், அதை சர்க்காரே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைப் பற்றி நானே கூட சொல்லிக்கொண்டு வருகிறேன். குறிப்பாக இந்த இண்டஸ்ட்ரியல் லைஸென்ஸில் அயல்நாடுகளிலிருநது இறக்குமதி செய்யாத பொருள்களைப் பொறுத்த வரையில் லைஸென்ஸே தேவையில்லை என்று நாங்கள் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி வருவது எல்லோருக்கும் தெரியும். லைசென்ஸ் முறையே கூடாது என்று சொன்னால், பரவலான தொழில் வளர்ச்சிக்கு அது இடையூறாகப் போய்விடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புத்தகத்திலே 12-வது பக்கத்தில் இருக்கிற தொழில்களைப் படித்துப் பார்த்தால், எல்லாம் இந்த இண்டஸ்ட்ரியல் லைஸென்ஸிங் வந்த பிறகு வந்த தொழில்கள் என்பது நன்றாகப் புலப்படும்.

அதற்கப்புறம் நம்முடைய ராஜ்யத்திற்கும் பிற ராஜ்யங்களுக்கும் நிதி வசதிகளெல்லாம் . எப்படி அளிக்கப்பட்டிருக்கின்றன, நாம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோமா என்ற பிரச்னைகளெல்லாம் 9-30 க.மு.
சாதாரணமாக இந்த சந்தர்ப்பத்தில் வருவது வழக்கம். அதற்குக் கூட புள்ளிவிவரங்கள் சேகரித்திருக்கிறேன். இன்றைக்கு அகில இந்தியாவிலே இண்டஸ்ட்ரியல் ஃபினான்ஸ் கார்பரேஷன்தான் அதிகமாக நிதி வசதிகளையெல்லாம் தொழில் செய்பவர்களுக்குச் செய்து கொடுக்கிறது. அப்படி நிதி வசதி எங்கெல்லாம் அதிகமாகக் கொடுக்கிறார்களோ அந்த இடங்களிலெல்லாம் தொழில்கள் நன்றாக வரும். அந்தக் கணக்கைப் பார்த்தோமானால், இண்டஸ்ட்ரியல் ஃபினான்ஸ் கார்பரேஷன் கொடுத்த கடன் உதவி அகில இந்தியாவுக்கும் மொத்தமாக 311 யூனிட்டுகளுக்குக் கொடுத்தார்கள். 185 கோடி ரூபாய் அளவுக்கு உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே சென்னைக்கு 34 யூனிட்டுகளுக்கு ரூ. 29,95,00,000 அதாவது ரூ. 30 கோடி பெறுமான அளவு தமிழ் நாட்டிற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மைவிட தொழில் துறையிலே நீண்ட காலமாக நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன் ஆரம்பித்த மகாராஷ்டிர ராஜ்யத்தை எடுத்துக்கொள்வோமானால், அங்கே 66 யூனிட்டுகளுக்கு ரூ. 31 கோடிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிற்கு ரூ. 30 கோடியும், மகாராஷ்டிராவுக்கு ரூ. 31 கோடியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. . தமிழ் நாட்டிற்குக் கிடைத்திருக்கிற சதவிகிதம் 16.2, மகாராஷ்டிராவுக்குக் கிடைத்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [11th March 1964

திருக்கிற சதவிகிதம்—அதுதான் உயர்ந்தபட்சம்—16.8 ஆகும். நிதி வழங்குவது சம்பந்தமாக, தொழில் முன்னேற்றத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற உதவியில் நாம் இரண்டாவதாக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இண்டஸ்ட்ரியல் கிரெடிட் அண்டு இன்வெஸ்டுமெண்டு கார்பரேஷன் (I C I C I) என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் உள்நாட்டுச் செலாவணி மாத்திரமல்ல, அயல்நாட்டுச் செலவாணித் தொகை கடன்கூட கொடுக்கிறார்கள். அவர்கள் மாத்திரம் கொடுத்திருக்கிற தொகை ரூ. 6,16,00,000. அதை எடுத்துப் பார்த்தால்கூட, சென்னை ராஜ்யத்தில் 23 கம்பெனிகளுக்கு ரூ. 9,89,00,000 கொடுத்திருக்கிறார்கள். அதாவது 11.9 சதவிகிதம். மகாராஷ்டிராவில் 91 யூனிட்டுகளுக்கு 28 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு 33.8 சதவிகிதம். ஆனால், மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக இந்திய நாட்டிலே அதிகப்படியாக உதவி கிடைத்திருப்பது தமிழ் நாட்டிற்குத்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் தொழில்கள் மாத்திரம் வந்திருக்கின்றன என்பது அல்ல, பரவலாக எல்லா ஜில்லாக்களிலும் எல்லாப் பகுதிகளிலும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இந்த நிலை பிற ராஜ்யங்களில் இல்லை. உதாரணமாக, பம்பாயை எடுத்துக்கொண்டோமானால் பம்பாயிலிருந்து பூனா போகிற வரையிலே பெரிய தொழிற்சாலைகள் இருக்கும். அப்புறம் நாக்பூர் வந்தால்தான் தொழிற்சாலைகள். நடுவில் ஒன்றுமே இருக்காது. நம்முடைய ராஜ்யத்தில் அப்படியில்லை. எல்லா ஜில்லாக்களிலும் பரவலாக இன்றைக்குத் தொழில்கள் நிறுவப்பட்டு வந்திருக்கின்றன. இந்த அறிக்கையிலே 29 வது பக்கத்தை எடுத்துப் பார்த்தோமானால் எப்படி இன்றைக்கு ஜில்லாக்கள் எல்லாவற்றிலும் பரவலாகத் தொழில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதற்குப் புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறோம். பின்தங்கிய பிரதேசம் சேலம் என்று சொல்லுகிறவர்களுக்கு அங்கே 26 பெரிய தொழில்களும், 645 சிறிய தொழில்களும் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இராமநாதபுரம் பின்தங்கியது என்றெல்லாம் பேசுகிறவர்களுக்கு அங்கே பெரிய தொழில்கள் 43, சிறு தொழில்கள் 513 இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். உண்மையாக இன்றைக்குப் பின்தங்கிய பிரதேசம் எது என்று சொன்னால், கன்யாகுமாரி. அதற்குக்கூட இப்பொழுது இரண்டு மில்கள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம், தனியார் துறையிலே ஒன்று, கூட்டுறவுத் துறையிலே ஒன்று. நீலகிரியில் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு இயற்கை வசதிகள் குறைவு. அதை டூரிஸ்டு சென்டராகத்தான் வளர்ச்சி செய்யவேண்டுமே தவிர இண்டஸ்டிரியல் சென்டராக வளர்ச்சி செய்வது கஷ்டம். ஏராளமான மின்சார உற்பத்தி அந்த ஊரில்தான் இருக்கிறது. குந்தா மின்சாரத் திட்டம், பைகாரா மின்சாரத் திட்டம் இவற்றின் மூலதனம் எல்லாம் அங்கேதான். 100 கோடி ரூபாய் முதல் போட்

11th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

டிருக்கிறோம் என்று சொன்னால், அதெல்லாம் அங்குதான். அங்கே நிறைய டீ உற்பத்தி செய்கிற தொழில்கள் இருக்கின்றன. 'டீ கார்டன்ஸ் ஏராளமாக இருக்கின்றன. அவைகளெல்லாம் பாக்டரி சட்டத்தின் கீழ் வராததன் காரணத்தினால், நாம் அவைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.

அடுத்தாற்போல் தஞ்சாவூர்—என் ஜில்லாதான் ரொம்பக் குறைந்து போய்விட்டது தொழில் வளர்ச்சியில். அங்கே விவசாய மக்கள் அதிகம். அந்தப் பகுதியிலே அதிகமாகத் தொழில் செய்யவேண்டுமென்ற ஆர்வம்கூட கிடையாது. எல்லா ஊர்களிலிருந்தும் வந்து 'எங்களுக்கு தொழில்கள் கொடுங்கள்' என்று கேட்டார்கள். டெக்ஸ்டைல் மில்லாவது கொடுங்கள் என்று எல்லா இடங்களிலிருந்தும் வந்து கேட்டார்கள். தஞ்சாவூரில் இருக்கிறவர்கள் அப்படி வந்து கேட்கவில்லை. அவர்களுக்குத் தொழில்களைப் பற்றி அக்கறை இல்லை. அதனால் அந்த இடத்தில் தொழில் அபிவிருத்தி குறைவாக இருக்கிறது. (ஒரு கனம் அங்கத்தினர்: உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்.) அவர்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள்.

அடுத்தாற்போல் தென் ஆற்காடு, வட ஆற்காடு ஜில்லாக்கள். தென் ஆற்காடு ஜில்லாவில், இந்தக் குறிப்புக் கொடுத்ததற்குப் பிற்பாடு 2, 3 புதிய லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, வட ஆற்காடு ஜில்லாவில் 2, 3 புதிய லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில், வட ஆற்காட்டில் சிறு தொழில்கள் 443, பெரிய தொழில்கள் 10. தென் ஆற்காட்டில் சிறு தொழில்கள் 183, பெரிய தொழில்கள் 13 என்ற நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. நான் இதைச் சொல்லும்போது தமிழ் நாட்டினுடைய தொழில் தேவையெல்லாம் பூர்த்தியாகிவிட்டது என்று சொல்வதாக யாரும் நினைத்துக் கொள்ளமாட்டார்கள். மற்ற ராஜ்யங்களில் இருப்பதைவிட நாம் பரவலான முறையிலே தொழில்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். அந்த விதமாகச் செய்வதற்கு உதவியாக இருந்தது லைசென்ஸிங் முறைதான். கனம் அங்கத்தினர் திரு. சா. கணேசன் அவர்கள் லைசென்ஸ் முறையை ஒழித்துவிடவேண்டும் என்று சொன்னார்கள். அதை ஒழித்துவிட்டால் நாம் தொழில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும்பொழுது செஞ்சியில்தான் வைக்கவேண்டுமென்று வற்புறுத்த முடியாது. தக்கலையில்தான் வைக்கவேண்டுமென்று வற்புறுத்த முடியாது. இம்மாதிரி பின்தங்கிய பகுதிகளில் வைக்கவேண்டுமென்று சொல்ல முடியாது. ஆரணியில் வைக்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்ய முடியாது. லைசென்ஸ் முறை இல்லாவிட்டால், அப்படி ஒரு இடத்தில் வைத்தால்தான் லைசென்ஸ் கொடுப்போம் இல்லாவிட்டால் கொடுக்கமாட்டோம் என்று வற்புறுத்துகிற அந்த நிலைமையை நாம் செய்திருக்க முடியாது. தொழில் பரவலாக ராஜ்யம் பூராவும் வருவதற்கு இந்த லைசென்ஸிங் முறைதான் உதவிகரமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [11th March 1964

அடுத்தாற்போல், சிறு தொழில்களைப் பற்றி சில விவரங்கள் கொடுக்க விரும்புகிறேன். சிறிய தொழில்கள் இன்றைக்கு சர்க்கார் துறையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக ஒரு தொழில் லாபகரமாக வருவதற்குக் குறைந்தது மூன்று ஆண்டுகள் ஆகும். நாமெல்லாம் சர்க்கார் துறையிலே முதல் போட்டால் அடுத்த வருஷமே வட்டி வந்திருக்கிறதா என்று கேட்போம். நாமும் அசெம்பளியில் தொழில் நஷ்டத்தில் நடக்கிறது என்று சொல்வோம். எந்தத் தொழிலும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அதன் முழு உற்பத்திக்கும் வர முடியாது, முழு லாபமும் அடைய முடியாது. அதற்காகத்தான் நான் விவரங்களைப் பிரித்து கொடுத்திருக்கிறேன். எந்தெந்த ஆண்டுகளிலே எந்தெந்த தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன என்ற விவரங்கள் கொடுத்திருக்றேன். இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது என்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட தொழில்களெல்லாம் லாபமாக இருக்கிறது. 50, 51-வது பக்கங்களைப் பார்த்தால் இந்த விவரங்கள் நன்றாகத் தெரியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் தொடங்கப்பட்ட தொழில்களெல்லாம் இன்றைக்கு வெற்றிகரமாக நடக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 1960-61-ல் ஆரம்பித்த தொழில்கள் சில 1962-ல் ஆரம்பித்த தொழில்கள் சில இவைதான் லாபகரமாக நடக்கின்றன. மொத்தத்தில் கணக்கிட்டுப் பார்த்தால் 1962-63-வது ஆண்டிலே இந்தத் தொழில்களெல்லாம் சேர்ந்து ரூ. 14,00 030 நிகர லாபம் அடைந்திருக்கிறது. சிறு தொழில்களில் சர்விஸ் சென்டர் என்று வைத்திருக்கிறோம். உற்பத்தி அதனுடைய நோக்கம் அல்ல. லாபம் சம்பாதிக்கவேண்டும் என்பது அதன் நோக்கம் அல்ல. பல சேவைகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் அந்தத் திட்டத்தினுடைய நோக்கம். உதாரணமாக 'ஷியரிங் மெஷின்' வைத்திருக்கிறோம் என்றால், தகடுகளை வெட்டிக் கொடுக்கவேண்டும் என்று யாராவது வருவார்களேயானால் அவர்களுக்கு அவ்வாறு வெட்டிக் கொடுக்கப்படும். சில 'ஹீட் டிரீட்மெண்டு' செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டால், 'ஹீட் டிரீட்மெண்டு' செய்து கொடுப்போம். இவைகளெல்லாம் சர்வீஸ் தொழில்கள் வகைப் பற்றித் தனியாக விவரங்கள் 52, 53 பக்கங்களில் கொடுத்திருக்கிறேன். அவைகள்கூட நிகர லாபத்தில் வேலை செய்கின்றன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதில் என் லாபம் குறைவாக வந்திருக்கிறது, மூன்று லட்சம்தானே வந்திருக்கிறது என்று குற்றச்சாட்டாகச் சொல்லுவார்கள். அதற்கும் இதற்கும் லட்சியங்கள் வெவ்வேறு என்பதைத்தான் விளக்குகிறேன். சர்விஸ் சென்டர்களின் நோக்கம் பிற தொழில்கள் செய்கிறவர்களுக்கு வசதிகளை அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான்.

பொதுவாக தொழிலைப் பற்றிக் குறிப்பிட்டேன். நான்காவது திட்ட காலத்தில் தொழில்கள் வளர்ச்சி அடைய முயற்சிகளை இப்பொழுதே எடுக்க ஆரம்பித்து விட்டோம். இன்றைக்கு இலாகாக்

11th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

களிலே, large and medium industries பற்றித் தெளிவாக்க ஒரு கமிட்டி அமைத்து, small industries -க்கு ஒரு கமிட்டி அமைத்து, ஹான்டிகிராஃப்ட்ஸுக்கு, ஸெரிகல்சருக்கு என்று இப்படி எல்லாவற்றையும் கவனிக்க அபிஷியல்களைப் போட்டிருக்கிறோம். அவர்களுக்கு ஆலோசனைகள் கூறுவதற்காக மத்திய சர்க்காரில் இருந்து, பல இலாகாக்களிலிருந்து அவர்களுடைய நிபுணர்களை அழைத்து, அவர்களுடன் பேசிக்கொண்டு இருக்கிறோம். உதாரணமாக இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பாகக் கூட நாஷனல் மெடலர்ஜிகல் லாபாரடரியிலிருந்து அதன் தலைவர் வந்திருந்தார்கள். டெவலப்மெண்ட் விங்கிலிருந்து பல நிபுணர்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள். ரெயில்வே இலாகாவிலிருந்து கூட நிபுணர்களை அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஸ்மால் அண்ட் ஹெவி இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் விங்கிலிருந்தும் நிபுணர்கள் வந்து இந்தக் குழுவிலே கலந்துகொண்டு ஆலோசனை கூற இருக்கிறார்கள். இது போதாது என்று, நாஷனல் கவுன்சில் ஆப் அப்ளைட் எகனமிக் ரிஸர்ச் என்கிற, திரு. லோகநாதன் அவர்கள் சார்ந்திருக்கிற ஆர்கனைசேஷனை அழைத்து இரண்டாவது, மூன்றாவது திட்டங்களிலே தொழில் வளம் என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் பரிசீலனை செய்யவும், அதற்கு மேல் புதிதான தொழில் எந்தத் துறையில் அமைக்க வேண்டும் என்பதையும் அவர்கள் பரிசீலனை செய்து சொல்ல வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் இப்பொழுதிருந்தே செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

பொதுவாக, இந்த மானியக் கோரிக்கைகள் பற்றி விவாதிக்கும் போது, இதைக் கவனித்து பார்க்கும்போது நமது பட்ஜெட்டுக்கும், இதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய முன்னேற்றத்துக்கும் சம்பந்தமே கிடையாது என்பதை உணர வேண்டும். பட்ஜெட்டிலே உத்தியோகஸ்தர்களுடைய செலவு சேர்க்கப்பட்டிருக்கும். தொழில் வளத்தை பட்ஜெட் கணக்கிலிருந்து கண்டுபிடிக்க முடியாது. தனியார் தொழில்கள், மத்திய சர்க்காருடைய பெரிய தொழில்கள் இவைகள் எல்லாம் நம்முடைய பட்ஜெட்டிலே, பட்ஜெட் கணக்கிலே வராது. பட்ஜெட்டைப் பார்த்து இந்த அளவுதானா என்று பார்த்தால் தொழில் வளத்தின் முழு விவரமும் கிடைக்காது. பொதுவாக, என்னுடைய அபிப்பிராயத்தில் தொழில் வளம் என்பது கட்சிகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். நாட்டு வளத்தை அடிப்படையாகக் கொண்டு, எந்த முறையில் விஸ்தரிக்கவேண்டும் என்பதற்கான ஆலோசனைகளை கனம் அங்கத்தினர்கள் கூற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியங்களைப் பிரேரேபிக்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியங்கள் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஒட்டி சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். நம் நாட்டைப் பொறுத்தவரையில் இது ஒரு விவசாய

நாடு. இங்கே இருக்கும் மக்களில் 100-க்கு 70 பேர் விவசாயிகள். விவசாயத்தைப் பொறுத்தவரையில் நம் நாட்டில் என்னதான் உரங்களையும் நல்ல விதைகளையும் உபயோகித்து விவசாயத்தை விருத்தி செய்தாலும் ஓர் அளவுக்குத்தான் உற்பத்தி பெருகும். அதற்கு மேற்பட்டு உற்பத்தியைப் பெருக்க முடியாது. அதே போல நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு வருஷம் பூராவும் விவசாய வேலைகள் இருப்பது இல்லை. விவசாய வேலைகள் ஒரு சில காலத்தில்தான் இருக்கின்றன. சாதாரணமாக விவசாயி ஃபுல் எம்ப்ளாய்மெண்ட் உள்ளவனாக இருக்கிறானா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏதோ வருஷத்தில் 6 மாதம் விவசாய வேலை இருக்கிறது. மற்ற ஆறு மாதம் வேலை இல்லாத நாட்களாக இருக்கும் முறையில்தான் இருக்கிறது. ஒரு நாட்டினுடைய வருமானம், பொருளாதார முன்னேற்றம் இவை விவசாயத்தை மட்டும் நம்பி இருந்தால் போதாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழில் துறையிலும் அந்த நாடு முன்னேறி இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அந்த நாட்டின் முழு வளம், செல்வம், வாழ்க்கைத் தரம் இவை உயருவதற்கு அது அடிப்படையாக இருக்கும், நாடும் நல்ல முறையிலே முன்னேறிக் கொண்டே போகும். அது மட்டும் அல்லாமல் நமது தொழிலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே தமிழகம் மூன்றாவது ஸ்தானத்தைத் தொழில் துறையில் பெற்று இருக்கிறது என்று அடிக்கடி சொல்லுகிறார்கள். இந்தியாவிலேயே என்று சொன்னால் இந்தியா தொழில் துறையில் மிக மிகப் பிற்போக்கான ஒரு நாடு. அதிலே தமிழகம் மூன்றாவது ஸ்தானத்தில் இருக்கிறது என்று சொல்லுவதால் இங்கே வேண்டுமானால் அதைச் சொல்லிக்கொண்டு பெருமை அடையலாம். ஆனால் நம்மைவிட தொழில் துறையில் மேலான நிலையில் உள்ள மற்ற நாடுகளோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நாம் எந்த நிலையிலே இருக்கிறோம் என்று சொல்லவேண்டும். அதிலே கூட நாம் இந்தியாவிலேயே முதல் ஸ்தானம் பெறவில்லை. முதல் ஸ்தானம் பெறாத வரையில் மற்ற பல மாநிலங்கள் நமக்குப் பின்னால் இருக்கிறது என்று சொல்வதில் அவ்வளவு பெருமை இல்லை. விவாதத்திற்கு வேண்டுமானால் சொல்லலாம். உண்மையிலேயே நாம் தொழில் துறையிலே முன்னேற வேண்டிய அளவு முன்னேறிவிட்டோம் என்று சொல்ல முடியாது. தொழிலமைச்சர் அவர்கள் மகாராஷ்டிராவைவிட நம் மாநிலத்திற்கு அதிக உதவி கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். மகாராஷ்டிரத்திற்கு 16.8 சதவிகிதம் என்றும் நமக்கு 16.2 சதவீதம் என்றும் நிதி உதவி ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். மகாராஷ்டிரம் தொழில் துறையில் முன்னணியில் இருக்கும் மாநிலம். ஏற்கெனவே அது முன்னணியில் இருக்கிறது. நாம் தொழில் துறையில் இப்பொழுதுதான் துவங்கி இருக்கிறோம். நான்காவது இடமோ, சர்க்கார் கணக்குப்படி மூன்றாவது ஸ்தானத்தையோ வகிக்கிறோம். தொழில் அமைச்சர் அவர்கள் அதிகமான சத விகிதத்திலே பொருளுதவி ஏன் பெறவில்லை

என்பதுதான் நாங்கள் கேட்கும் கேள்வி. பொருளுதவி பெறுவதில் நமக்கு முதலிடம் கிடைத்திருக்க வேணடும். அப்படி முதல் இடம் பெற்று இருந்தால் உண்மையிலேயே அது பெருமைக்குரிய ஒன்றாக இருக்க முடியும்.

நாட்டின் தொழில்கள் முன்னேற மின்சக்தி, பவர் என்று சொல்கிறார்களே அது அதிகமாக இருக்க வேண்டும். நம் மாநிலத்தைப் பொறுத்தவரை மின்சாரத் துறையில் முதல் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் நாம் 148 மெ. வா. உற்பத்தி செய்தோம். இன்றைக்கு 1,000 மெ. வா. வரை உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லப்படுகிறது. நம் மின்சார உற்பத்தித் திறன் இன்றைக்கு ஆறு ஆகவோ அல்லது ஏழு ஆகவோ அதிகரித்து இருந்தாலும் கூட தொழிலுக்கு உபயோகிக்கும் மின்சாரம் 1-க்கு 4 அல்லது 4½ ஆகத்தான் இருக்கிறது. தமிழகத்தில் உற்பத்தி செய்யும் அதிகமான மின்சாரத்தை அதிகமாக தொழில்களுக்கு நாம் பயன்படுத்தினாலும்கூட அது 1-க்கு 7 ஆக உற்பத்தி பெருகியிருந்தும் உபயோகிக்கும் சக்தி 1-க்கு 4½ ஆகத்தான் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்துகிறோம். 1-க்கு 7 என்ற முறையில் பயன்படுத்தினால் தான் சக்தித் திறனுக்குச் சமமாகத் தொழில் திறன் பெருகியிருக்கும் என்று கொள்ள முடியும். அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட பட்டியலைக் கொடுத்தார்கள். தொழிற்சாலைகளைப் பற்றியும், வேலை வாய்ப்பு ஏற்பட்டதைப் பற்றியும் புள்ளி விவரங்கள் அந்தப் பட்டியலில் காணப்படுகின்றன. 1956-ஆம் ஆண்டில் 4,618 தொழிற்சாலைகள் இருந்தன. அப்பொழுது வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 2,90,240-ஆக இருந்தது. 1963-ம் ஆண்டில் 6,572 தொழிற்சாலைகளாக உயர்ந்திருக்கின்றன. மொத்தம் 3,47,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்த எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. இந்த ஏழாண்டுக் காலத்தில் 1,954 தொழிற்சாலைகள் பெருகியிருந்தும்கூட சற்றேறக்குறைய 56,000 பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்புகள் அதிகரித்திருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய குறிக்கோள் இந்தியா முழுவதிற்குமாக 80 லட்சம் பேர்களுக்கு கூடியவரை முழு நேர வேலை வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்பதும், 9 லட்சம் பேர்களுக்கு எப்படியும் முழு நேர வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பது ஆகும். ஆனால் இந்த அறிக்கையின்படி பார்க்கும்போது இந்த ஏழாண்டுக் காலத்தில் சுமார் இரண்டாயிரம் தொழிற்சாலைகள் அதிகரித்தும்கூட சராசரி ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 30 பேர்களுக்குத்தான் வேலை கிடைத்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். அதே சந்தர்ப்பத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வேலை வாய்ப்பு நோக்கம் நிறைவேற்றப்படுகிற முறையிலே காரியங்கள் நடைபெறுகின்றனவா என்று பார்க்க வேண்டும். நம் மாநிலத்திலுள்ள மக்கள் தொகை இந்திய மக்கள் தொகையில் பத்திலொரு பங்கு இருக்கிறது. இந்த ஏழு ஆண்டுகளில் 56,000 பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு இந்தத் தொழிற்சாலைகள் மூல

மாகக் கிடைத்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளே நம்முடைய பங்கான ஒரு லட்சம் பேர்களுக்காவது வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டாக வேண்டும். ஏற்கெனவே 56,000 பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்ற நிலையை வைத்துக் குறிக்கோளை அடைய முடியுமா என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன், 'லேபர் ஆண்டு எம்ப்ளாய்மெண்ட்' என்று தனி மானியக் கோரிக்கை வர இருக்கிறது. அதிலே இந்த விஷயங்களைச் சொன்னால் பதில் சொல்லக் கூடும். அந்த விஷயங்கள் இப்பொழுது என்னிடம் இருக்காது.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதன் நோக்கம் வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்காக. ஆகவே குறிப்பிட்டேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த இலாகாவினுடைய நோக்கம் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதைப் பற்றியது. ஃபாக்டரி எம்ப்ளாய்மெண்ட் எப்படிக் கிடைக்கிறது. அதற்கு என்ன வேலைகள் செய்திருக்கிறார்கள் என்ற விவரங்களெல்லாம் அதற்குரிய இலாகாவிலே இருக்கும். அந்தப் பொறுப்பை வகிக்கின்ற அமைச்சர் அவர்கள் அது பற்றிப் பதில் சொல்ல முடியும், என்னால் சொல்ல முடியாது என்பதற்காகத்தான் நான் இந்த விளக்கத்தைச் சொல்ல முன்வந்தேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: அறிக்கையில் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களையும், அகில இந்திய அடிப்படையில் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களையும் வைத்துத்தான் நான் பேசுகிறேனே தவிர வேறொன்றும் இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் 9 லட்சம் பேர்களுக்கு முழு வேலை வாய்ப்பும், 80 லட்சம் பேர்களுக்குப் பகுதி வேலை வாய்ப்பும் கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் சொன்னதை இன்னும் சற்று விளக்கிச் சொன்னால் புரியும் என்று நினைக்கிறேன். ஹோட்டல் எம்ப்ளாய்மெண்ட் இருக்கிறது. அது என்னுடைய கணக்கில், அதாவது இந்த மானியக் கோரிக்கையில், வராது. அதேமாதிரி பீடித் தொழில் எம்ப்ளாய்மெண்ட் இருக்கிறது. அதுவும் என்னுடைய இந்தக் கணக்கில் வராது. ஃபாக்டரி சட்டத்தின் கீழ் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட தொழில்கள்தான் என்னுடைய கணக்கில் வரும். இதை வைத்துக்கொண்டு எந்த விதமான ஒரு முடிவும் எடுக்க முடியாது என்பதற்காகத்தான் சொன்னேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: வேலை வாய்ப்பு நாம் எண்ணுகின்ற அளவுக்குப் பெருகவில்லை, வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கப்படவில்லை என்று மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய இரண்டாவது திட்டத்திலே இந்தியா முழுமைக்குமாக 120 தொழில் பேட்டைகள் அமைக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டாவது திட்டம் முடிவதற்குள்ளாக 60 தொழில் பேட்டைகள் இந்தியா முழுவதிலும் ஏற்பட்டிருக்கின்றன. நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், பத்து தொழில் பேட்டைகள் தான் இரண்டாவது திட்டக் காலத்திற்குள்ளே ஆரம்பிக்கப்பட இருந்தன. அதில் சேலத்தைப் பொறுத்த வரையில், ஒரு தொழில் பேட்டை ஆரம்பிப்பதாக இருந்து, நில ஆர்ஜிதம் சம்பந்தமாகச் சிக்கல் இருந்த காரணத்தால், சேலத்தில் தொழில் பேட்டை ஆரம்பிக்க முடியவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் தம்முடைய அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், மூன்றாவது திட்டத்திலே 3,000 தொழில் பேட்டைகள் இந்தியா முழுமைக்குமாக அமைக்கப்பட இருப்பதால், நம் மாநிலத்தில் 300 தொழில் பேட்டைகளை நல்ல முறையில் ஆங்காங்கு ஏற்படுத்தினால் வேலை வாய்ப்புகள் நல்ல முறையில் ஏற்படுத்தித் தர முடியும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க நல்ல முறையில் உதவும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்திலே ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்தார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும் திட்டத்தின் நோக்கம் பொருளாதாரத் துறையிலும், செல்வத் துறையிலும் இருக்கும் ஏற்றத்தாழ்வைப் போக்கிவிடுவது மட்டும் என்று சொல்லிவிட முடியாது. பிரதேசத்திற்குப் பிரதேசம், இடத்திற்கு இடம், மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டங்களுக்கு மாவட்டம், இப்படி இவற்றுக்கிடையே இருக்கும் ஏற்றத்தாழ்வையும், தொழில் துறையில் உள்ள ஏற்றத்தாழ்வையும் போக்க வேண்டும். இந்த முறையை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். 'டிஸ்பர்ஸல் ஆஃப் இன்டஸ்ட்ரீஸ்' என்று சொல்லி, தொழிற்சாலைகள் மாவட்டவாரியாகப் பரவலாக அமைக்கப்படவேண்டும், சாத்தியக்கூறு எங்கெங்கு இருக்கிறதோ அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு மாவட்ட ரீதியில் பரவலாக இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சேலத்தைப் பொறுத்தவரையில் அது மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறது என்றெல்லாம் எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அங்கு தொழில்கள் அதிகமாக இருக்கின்றன என்ற புள்ளி விவரம் காட்டப்பட்டது. சேலத்தைக் குறிப்பிடும் போது, கன்யாகுமரி மாவட்டத்தையும் சுட்டிக் காட்டினார்கள். கன்யாகுமரி மாவட்டம் சிறிய மாவட்டம்தான். அங்கு கூடத் தொழில்கள் பெருகவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீலகிரியும் சிறிய மாவட்டம். அங்கே இரண்டு பெரிய தொழிற்சாலைகள். கன்யாகுமரியில் பெரிய தொழிற்சாலைகள் நான்கு. அவைகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. அதே சந்தர்ப்பத்தில் சேலம் மாவட்டத்தைக் கோவையோடும், சென்னையோடும், செங்கற்பட்டோடும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். குறிப்பாக சென்னையோடும், கோவையோடும் எங்கள் சேலம் மாவட்டத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும்

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [11th March 1964

மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதை எல்லோரும் உணர முடியும். பெரிய தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்தில் அதிக மாக அமையவில்லை. சேலத்தில் 26 தான் இருக்கின்றன. கோவை யில் 135 இருக்கின்றன. சென்னையில் 99 இருக்கின்றன. செங்கற்பட்டில் 79 இருக்கின்றன. பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் சேலம் மாவட்டத்தைச் செங்கற்பட்டு மாவட்டத் தோடும், சென்னையோடும் ஒத்திட்டுப் பார்க்கும்போது, ஏறக் குறைய ஒரே பரப்பு உடையதாகவும், ஒரே மக்கள் தொகை உடையதாகவும் இருக்க முடியும். சேலத்தில் புதிய தொழிற் சாலைகள் ஏற்படுத்துவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொல்லிவிட முடியாது. சாத்தியக் கூறுகள் அங்கு ஏராள மாக இருக்கின்றன என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வேலையில்லாத ஆபரணத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுப் பதைப் பற்றிய விவரம் இந்த அறிக்கையில் 48, 49-வது பக்கங் களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது, சற்றேறக் குறைய 300 பேர்களுக்குத் தான் வேலை வாய்ப்பு கிடைத் திருக்கிறது கடன் வசதியற்றவர்கள் 2,300 பேர்கள்தான் இருக்கக் கூடும். இவ்வளவுதான் இந்தத் துறையில் நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நடவடிக்கைகளினாலே நாம் பொற் கொல்லர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைக் தீர்த்துவிடமுடியுமா, முடிந்ததா, எந்த அளவுக்கு வெற்றி கண்டிருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அவை யிலுள்ளவர்கள் எல்லோரும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

சேலம் இரும்புத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவைகளுக்குரிய ப்ளூப்ரிண்ட் தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. சேலத் தில் உருவாகும் இரும்புத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் அதில் 6 லட்சம் டன் இரும்பு ஒரு ஆண்டில் உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லப்படுகிறது. துர்க்காபூர், பிலாய் இரும் புத் தொழிற்சாலைகள் 665 கோடி ரூபாய் அளவிலே வட மாநிலங் களிலே உருவாக்கப்பட்டு, அவை உற்பத்தி கூடத் தொடங்க ஆரம் பித்துவிட்டன என்று சொல்லப்படுகிறது. இரண்டாவது திட்டத் தில் நாம் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்டத்தை மட்டும் போட் டோம். மூன்றாவது திட்டத்தில் நமக்கு பெரிய பேஸிக் இன்டஸ்ட்ரி
10-00 a.m. என்று சொல்லக்கூடிய ஒன்றையும் நாம் பெறவில்லை. அமைச்சர் அவர்கள் தம் உரையில், 'நெய்வேலி-சேலம்' இரும்புத் தொழிற் சாலையைப் பொறுத்த வரையிலும், நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு அது மூன்றாவது திட்டம் முடிவதற்குள்ளாக ஆரம்பிக் கப்பட்டுவிடும் என்று சொல்லக் கூடும். 22,000 ஏக்கரா நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற் காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 35 ஆயிரம் ரூபாய். நடை முறை ஆண்டில் செலவழிப்பதற்காக எண்ணியிருக்கும் தொகை 10 ஆயிரம் ரூபாய். இதற்குள் தஸ்தூர் அண்டு கம்பெனியாரிடம் இருக்கும் ப்ளூப்ரிண்ட் எல்லாம் வாங்கி உடனடியாக அந்தத்

11th March 1964] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

தொழிற்சாலையை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்பிராந்தியத்தில் உருக்கு ஆலையே கிடையாது.

மேலும் ஒகேனகல் மின்திட்டத்தைப் பொறுத்த வரையில் 58 கோடி ரூபாய் செலவு செய்தால் இப்போது இருக்கிற உற்பத்தித் திறனை 73 சத விகிதம் ஆகக் கூட்ட முடியும். ஆகவே தொழில் துறை அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமான இந்த மின் திட்டத்தையும் உடனடியாகச் செயலாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் தொழில்துறை மானியத்தை நான் வரவேற்கிறேன். பொதுவாக நம் ராஜ்யம் கடந்த பல வருஷங்களாகத் தொழில் துறையிலே கிரமமாக வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதைக் கண் உள்ளவர்கள், கருத்து உள்ளவர்கள் ஒப்புக்கொள்வார்கள். தேசம் முழுமைக்கு மாக ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இரண்டு மூன்று இனத்திலே நாம் சிறந்து இருக்கிறோம். குறிப்பாக டிரான்ஸ்பார்மர் உற்பத்தியிலே நாம் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறோம், எல்லா மாநிலங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, ஆடோமபைல் துறையிலும், டெட்ராய்ட் ஆப் இந்தியா என்று பெயர் பெறுகின்ற அளவிற்கு நம் மாநிலம் இந்தியாவிலேயே வளர்ச்சி அடைந்து இருக்கிறது. மேலும் இத்துறையில் பல வளர்ச்சியை அடைவதற்குக் கடந்த பல வருஷங்களாகக் கோரிய படி தொழில் துறை ஆலோசகராக ஒருவரை இப்போது நாம் நியமனம் செய்திருப்பது போற்றற்குரியது.

உலக அரங்கிலே எத்தனையோ மாறுபட்ட கருத்துக்கள், முரண்பட்ட கொள்கைகள் இருக்கலாம். உலகத்திலே எத்தனையோ கொள்கை வேறுபாடு உள்ள நாடுகள் இருக்கின்றன. என்றாலும் கூட, இந்த ராஜ்யத்தைப் பொறுத்த மட்டும் கொள்கை வேறுபாடு இன்றி பல தேசங்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று, பல தேசங்களுடைய நிபுணர்களின் உதவியையும் பெற்று பலப் பல தொழில்களை ஒருங்கிணைந்து வளர்ப்பதற்கு முன்வந்திருப்பது மிகவும் பெருமைப்படவேண்டியதொன்றாகும். இது நம்முடைய இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள் கைக்கே ஒரு சிறப்புத் தருவதாகும். மொத்தமாகப் பார்த்தால் பல தொழில்கள் நம்முடைய ராஜ்யத்தில் இன்றையதினம் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. குறிப்பாகச் சொன்னால் இவற்றுக்கு எல்லாம் மூலகாரணமாகவுள்ள நமது தொழில் அமைச்சர் அவர்கள் நீடித்து இந்த ராஜ்யத் தொழில் அமைச்சராகப் பணி பணி புரிந்து வந்திருப்பது காரணம் என நான் கருதுகிறேன். இந்த ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் ஒரு இண்டஸ்டிரியல் பேஸ், இண்டஸ்டிரியல் என்வைரன்மென்ட் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லக் கூடிய அளவிற்கு அடிப்படையாக தொழில்கள் வளர்ச்சி அடையக் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. அதுவும்

பரவலாக எல்லாப் பகுதிகளிலும் தொழில்கள் அமைந்திருந்தால் தான் நன்றாக இருக்கும். இன்றையதினம் பெரிய தொழில்கள் என்று சொல்லக்கூடியவைகள் திருச்சிக்கு வட பக்கத்தில் அமைவதற்குத்தான் வசதி ஏற்படுகிறது. காரணம், தெற்கே உள்ள ஜில்லாவில் ப்ராட்கேஜ் லைனே கிடையாது. நமது மாநிலத்தின் தெற்குப் பகுதிகளில் உள்ள பிரதேசங்களில் தொழில்கள் வரவேண்டுமானால் உடனடியாக அந்தப் பகுதி ரயில்வே லைன் பிராட்கேஜாக மாற்றப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதிகளில் பெரிய தொழில்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும் சிறு சிறு தொழில்களாவது வளர்வதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிக்காக சென்னை ஜில்லாவுக்கு 3 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். இரண்டு கோடி ரூபாய் செங்கல்பட்டு ஜில்லாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு கோடி ரூபாய்க்குக் குறைவாகவே இதர மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாமல் நமது மாநிலத்தின் தென் பகுதியில் உள்ள மாவட்டங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. அதுவும் தொழில் துறையில் வளர்ச்சி அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலை மேற்கொள்ளப்பட இருப்பதனால் அந்தப் பகுதியில் எண்ணெ சுத்திகரிப்பு தொழிற்சாலை, பர்டிலைசர் தொழிற்சாலை ஆகியவற்றை ஏற்படுத்த இப்போதில் இருந்தே முயற்சி செய்யவேண்டும்.

பொற்கொல்லர்களுக்கு என்ன என்ன வேலை வாய்ப்புகள் தேடித் தரப்பட்டிருக்கின்றன என்பதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் நல்ல புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல இலங்கையில் இருந்து நாடு திரும்பியவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசாங்கம் நல்ல முறையில் முன்வரவேண்டும். இப்போது அவர்களுக்கென்று ஒரு நூற்பு ஆலையை ஏற்படுத்த பத்து லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திடமிருந்து மேற்கொண்டும் பெற்று உதவி செய்வது பற்றி ஆலோசிக்க வேண்டும். அதுபோலவே அந்தப் பகுதியில் உப்புத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்காகவும், அவர்களுடைய குடும்பத்திற்குப் பலதரப்பட்ட தொழில் உதவிகளை வேறு எந்த எந்த முறையில் செய்யலாம் என்பது பற்றியும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். மத்திய அரசாங்கத்தின் செஸ் நிதியில் இருந்தாவது அந்த உதவியைப் பெற்று செய்வதற்கு முன்வரவேண்டும். திருச்செந்தூர், நாங்குநேரி பகுதிகளில் இலங்கையில் இருந்து திரும்பியவர்கள் அதிகம் இருக்கிறார்கள். அங்கே இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. சமீபத்தில் நாசரத் பகுதியில் ஐம்பது, அறுபது ஏக்கர் நிலம் கூட அரசாங்கத்தின் பொறுப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கே தொழிற்பேட்டையை வைக்க முயற்சிக்கலாம். இன்னும் தொழில் கூட்டுறவு சங்கங்களை அமைத்து

மேசன்களுக்கு வேண்டிய கருவிகரணங்களைத் தயாரிக்க வாய்ப்பை ஏற்படுத்தலாம். முதன் முதலாக சென்னை நகரத்தில் உள்ள பல்லாயிரம் கட்டத் தொழிலாளர்களுக்கு வசதியாக அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய கருவிகரணங்களைத் தயாரிக்கலாம். இன்னும் கோவை, திருவொற்றியூர் போன்ற இடங்களில் தனியார் துறையில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அமைக்கப்படுகிறது. தனியார் துறை இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்களுக்குப் பதில் கோவாபரேடிவ் பேசிஸில் ஏன் அவைகளை அமைக்கவில்லை என்பதற்கு விளக்கம் தேவை. தொழில் பேட்டைகள் எல்லாத் தாலூகாப் பகுதிகளிலும் ஏற்பட வசதி செய்ய வேண்டும். தொழில்கள் பரவலாக எல்லாப் பகுதிகளிலும் ஏற்படவேண்டும் என்பது ஒருபுறம் இருக்க, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பல பெயர்களில் பல இடங்களில் ஒரே தொழிலை ஏற்படுத்த முன்வருவதைப் பார்க்கிறோம். இவற்றுக்கும் நாம் ஆதாவு அளிக்கவேண்டும் என்றாலும் கூட, எதிர்காலத்தில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைக்கு ஏற்ப இது இருக்குமா என்பதை யோசிக்கவேண்டும்.

திருநெல்வேலி, கன்னியாகுமரிப் பகுதியில் பெரிய கனரகத் தொழில்களை ஏற்படுத்தத் தற்போது வசதி இல்லையென்றாலும் உடனடியாகக் கெமிகல் பாக்டர் போன்றவற்றையாவது ஏற்படுத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். மேலும் ஒரு விஷயத்தை அரசாங்கம் கவனிக்கவேண்டும். பெரிய தொழிற்சாலைகள் தோன்றும்போதே அவற்றின் கழிவுப் பொருள்கள், புகை முதலியவை அந்த அந்தப் பகுதியில் உள்ள பொது மக்களின் சுகாதாரத்தைப் பாதிக்காத வகையில் கவனம் செலுத்தப்படவேண்டும். சில இடங்களில் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்கள் பக்கத்தில் உள்ள ஆறுகளிலோ, நீர்நிலைகளிலோ கலக்கிற போது வெகுவாக அது பொது சுகாதாரத்தைப் பாதிக்கிறது. ஆரம்பத்திலேயே இது கவனிக்கப்படாமல் விடப்பட்டால் பின்னால் மிகுந்த கெடுதியை விளைவிக்கும். ஆகவே, புதுப் புதுப் தொழில்கள் வளர்ந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்திலே தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்களின் தீமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். உயர்தர அதிகாரிகள் கொண்ட குழுவைக் கொண்டு பரிசீலிக்கலாம். அவ்வாறு அப்போதைக்கப்போது பரிசீலனை செய்வது நல்லது என்று கருதுகிறேன்.

நமது மாநிலத்தில் பல தொழில்கள் வளரவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு பணிபுரிந்து வருகிற இந்தத் தொழில் இலாகாவில் உள்ளவர்களுக்கு எனது பாராட்டுதல்கள்.

இண்டஸ்ட்ரியல் லோன்ஸ் கொடுப்பதைப் பொறுத்த மட்டில் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. அதிலே இருக்கின்ற சிக்கல்கள் என்ன என்பதைப் பற்றி அதிகாரிகள் தீவிரமாக யோசிக்க வேண்டும். செங்கல்லுக்காகக் கொடுக்கிற சிறு உதவிக்காக ஒருவர் 2,000 ரூபாய் கடன் கோரி, 1½ வருஷத்திற்கு முன்னால்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [11th March 1964

மனுச் செய்தார். அவர் யாருக்கும் எந்த விதமான பணமும் கொடுக்காத நிலையில் 200-க்கு மேற்பட்ட ரூபாயை இந்த 1½ வருஷ காலத்தில் செலவு செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தச் செலவு போக்கு வரத்துச் செலவா? அல்லது வேறு ஏதாவது செலவா?

திரு. எம். எஸ். செல்வராஜன்: யாருக்கும் பணம் கொடுக்காமலேயே போக்குவரத்துக்கும், என்கம்பரன்ஸ் சர்டிபிகேட் வாங்குவதற்கும் இதுவரை செலவான தொகைதான் அது. இரண்டு மாதங்களுக்கு முன்பே லோன் சாங்ஷன் ஆகியிருந்தால் கூட பணமில்லாமையால் கொடுப்பதற்கில்லை. விஸ்வகர்மாக்களுக்குத் தச்சு வேலைக்காகக் கொடுக்கப்படும் கடன் ஆயிரம் ரூபாய்க்காக ஒருவர் 1959-ம் வருஷம் அக்டோபர் மாதத்திலிருந்து நான்கு வருஷ காலமாகப் போக்கு வரத்துச் செலவுக்காக 300 ரூபாய் வரை செலவு செய்தும் இன்னும் அந்தப் பணம் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது. அந்த மனு உயிரோடு இருக்கிறது; ரிஜக்ட் பண்ணப்படவும் இல்லை. ஆகவே, நடைமுறையில் கடன்களை இலகுவாகக் கொடுப்பதற்கான முயற்சிகளைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மதிப்புக்குரிய தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். 1957-ம் ஆண்டு நாம் அனைவரும் வெற்றி பெற்று இந்த மன்றத்திலே வந்து அமர்ந்த போது எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த மானியம் வரும்போதெல்லாம் 'திராவிட நாடு தேய்கிறது; வடநாடு வாழ்கிறது' என்ற பல்லவியைப் பாடிக் கொண்டிருந்தார்கள். இன்று அந்தப் பல்லவி மாறி அந்தப் பாட்டையே இன்று எடுக்காமல் இந்த மானியத்தில் விவாதம் நடைபெறுகிறது என்று சொன்னால், நம்முடைய நாட்டில் தொழில் வளம் எந்த அளவுக்கு அதிகமாக வளர்ந்திருக்கிறது என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியும். நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்னால் நம்முடைய நாடு தொழில் வளம் பெறாத நாடு, தொழில் வளர்ச்சி அடையாத நாடு என்று இருந்த நிலைமை இன்று மாறி, தொழில் வளர்ச்சியிலே தமிழ் நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அந்தப் பெருமை இந்த அரசாங்கத்திற்கும், குறிப்பாக தொடர்ந்து இந்த இலாகாவை ஏற்று நடத்தி வருகின்ற கனம் அமைச்சர் அவர்களுக்கும் உரியதாகும் என்பதில் சந்தேகம் இல்லை. நமது அரசாங்கத்தின் கொள்கை கலப்புப் பொருளாதார அடிப்படையிலே உருவானது. கூட்டுறவு முறையிலும் அரசாங்கமே ஏற்று நடத்துகின்ற தொழில்களாகவும், தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிற தொழில்களாகவும் தமிழ் நாட்டிலே எல்லா விதத் தொழில்களும் வளர்ந்திருக்கின்றன என்பது இந்தக் குறிப்பின் மூலமாக நமக்குத் தெரிய வருகிறது. அது மாத்திரமல்ல. எங்கு பார்த்தாலும் தொழில் செய்யவேண்டுமென்ற ஆர்வம் மக்கள் மத்தியிலே உண்டாகியிருப்பதைப் பார்க்கிறபோது தொழிற் துறையில் எவ்வளவு வேகமாக நாம் முன்னேறி இருக்கிறோம் என்பது சொல்லாமலே விளங்கும். முன்பெல்லாம் புதிய தொழில்கள் செய்யவேண்டுமென்றால் பயப்படுவார்கள். உற்பத்தி செய்யக் கூடிய பொருளை எங்கே கொண்டு போய் விற்பது, கிராக்கி இருக்குமா என்றெல்லாம் பயப்படுவார்கள். ஆனால், இன்று சர்க்கார் ஆதரவு தொழில்களுக்கு நிச்சயமாக உண்டு; பொருள்களை எங்கு சென்று வேண்டுமானாலும் விற்று விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டு எல்லோரும் புதிய தொழில்களை ஆரம்பிக்க முன்வருகிறார்கள்.

11th March 1964] [திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்]

மேலும் தொழில்களைப் பரவலாக இந்த ராஜ்யத்தில் ஏற்படுத்துவதற்கான முயற்சியையும் இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. நடுத்தரத் தொழில்கள், சிறுரகத் தொழில்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக ஜில்லாவுக்கு ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தி ஒவ்வொரு ஜில்லாவிலும் பரவலாகத் தொழில்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஒரு ஸ்பின்னிங் மில்லை ஒரு தனிப்பட்டவர் குறிப்பிட்ட இடத்தில் வைக்கவேண்டுமென்று அனுமதி கேட்டால், அரசாங்கம் எந்த இடம் பிற்பட்ட பகுதியாக இருக்கிறதோ அந்த இடத்தில்தான் வைக்கவேண்டுமென்று கூறி அந்த முறையிலேதான் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இந்த முறையில் பிற்பட்டு இருக்கின்ற ஒவ்வொரு பகுதியையும் தொழில் மயமாகச் செய்து கொண்டிருக்கிறது நமது அரசாங்கம். ஆனால் இன்னும் அதிகமாகத் தொழில்கள் ஏற்பட வேண்டுமென்று சொன்னால் அதிலே தவறு இல்லை. நமது தமிழ்நாடு இன்னும் வளம்பெற வேண்டும், இங்கே வசிக்கின்ற மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தினால் இன்னும் அதிகமான தொழில்கள் வேண்டும், சீக்கிரமாகத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும், கஷ்ட நஷ்டங்கள் இருக்குமானால் நிவாரணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தினால்தான் மேலும் அதிகமான தொழில்கள் வேண்டுமென்று கோருகிறோம்.

இப்போது சிமெண்ட் தொழிலைப் பார்க்கின்றபோது எவ்வளவோ பெரிய சிமெண்ட் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி இருக்கிறோம். ஆனால் நம்முடைய தேவைக்கேற்ப, சிமெண்ட் உற்பத்தி இல்லை. நம்முடைய ராஜ்யத்தில் சிமெண்ட் உற்பத்தி பற்றாக்குறையாகத் தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, கண்ட்ரோல் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, பெரிய அளவிலேதான் சிமெண்ட் தொழிற்சாலை வைக்கவேண்டுமென்று சொல்லாமல் சிறு சிறு அளவிலே மூலப் பொருள்கள் கிடைக்கிற இடத்திலே கூட சிறிய அளவில் சிமெண்ட் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கும் வழி செய்யவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி பற்றி எப்போதும் சொல்லப்படுகின்ற பாட்டுதான்; பல்லவிதான். ஆர்ட் சில்க் கைத்தறித் தொழிலுக்கு மிகவும் தேவையான பொருள். வெளிநாட்டுப் பட்டு தேவையாக இருக்கிறது. நமது நாட்டிலே இப்போது ஆர்ட் சில்க் உற்பத்தியாகிறது; அதை வைத்துக் கொண்டு தொழில் நடத்தலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்கள். ஆயினும் இப்போது காலத்தின் நிலை எப்படி இருக்கிறது என்றால் நைலான், நைலக்ஸ் போன்றவற்றை உடுத்தும் நாகரீக காலமாக இருக்கிறது. இந்த காலத்துக்கு ஏற்ப நாகரிகத்திற்கு ஏற்ப, பெண்மணிகளுடைய வேண்டுகோளுக்கு இணங்க நைலான், நைலக்ஸ் மாதிரி கைத்தறியிலும் தயார் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படித் தயார் செய்ய வேண்டுமென்று சொன்னால் அதற்கு வெளிநாட்டுப் பட்டு இருந்தால்தான் அந்த முறையிலே தயார் செய்ய முடிகிறது. இப்போது கொடுக்கப்படும் வெளிநாட்டுப் பட்டு மிக மிகக் குறைவாக இருக்கிறது. இந்த ராஜ்யத்திலிருந்து நம்முடைய டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் சிபாரிசு செய்த அளவுக்குக் கூட மத்திய அரசாங்கத்திலே இருந்து கொடுக்கவில்லை. அந்த அளவுக்காவது கொடுக்கும்படி மத்திய அரசாங்கத்துக்குக் கனம் அமைச்சர் அவர்கள் சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இங்கு ஒரு ரகக் கைத்தறி தயார் செய்யப்பகிறது. அந்த ரகம் கஜத்திற்கு ரூபாய் ஐந்தாகிறது. அந்தச் சரக்கு, அந்த சேலைகள் எல்லாம் பொதுவாக பம்பாய் மாநிலத்தில்தான் அதிகமான விற்பனை செய்யப்படுகிறது. ஆக நம் ராஜ்யத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குக் கைத்தறித் துணிகளை அனுப்ப நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. நல்ல தொழில் அபிவிருத்தியும் வியாபாரமும் நடக்கிறது. அந்தமாதிரித் துணிக்கு கஜம் ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட துணிக்கு பம்பாய் மாநிலத்தில் விற்பனை வரி போட்டிருக்கிறார்கள். நம் மாநிலத்தில் கைத்தறித் துணி உற்பத்தி ஒரு பெரிய தொழிலாக இருக்கிறது. அது இங்கு ஒரு பெரிய குடிசைத் தொழிலாக இருக்கிறது. அதை நம்பி வாழும் மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகவே கைத்தறித் துணி மீது விற்பனை வரி போடக் கூடாது என்று நம் அமைச்சர் அவர்கள் இங்கிருந்து பம்பாய் மாநிலத்திற்குச் சிபார்சு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையில் நம் ராஜ்யத்தில் மின்சாரம் எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறதோ அவ்வளவு மின்சாரத்தையும் தொழில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தித் தொழிலை வளர்த்திருக்கிறோம். அதற்காக நம் தொழில் அமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, நம் மாநிலம் தொழில் துறையைப் பொறுத்தவரையில் தென் இந்தியாவிலுள்ள இதர மாநிலங்களை விட மிகவும் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நாம் பெருமைப்படாமல் இருக்கமுடியாது. இந்தத் துறையை நடத்திச் செல்கிற அமைச்சர் அவர்களையும் இந்தத் துறையில் பணியாற்றுகிற இதர ஊழியர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்

டிருக்கிறோம். தொழில் துறையில் முன்னேறி வருகிற நாம் எல்லா மாவட்டங்களுக்கும் சம அளவில் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டுமென்ற அடிப்படையில் லைசென்ஸ் வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதோடு பின்தங்கிய பகுதிகளையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களின்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் ரெஜிஸ்டேர்ட் பாக்டரீஸ் 927, அவற்றில் வேலை செய்கிறவர்கள் 2,721, லார்ஜ் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் 4 என்று கொடுத்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, நம் மாநிலத்தில் உள்ள இதர மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கன்னியாகுமரியில் தொழில் வாய்ப்பு மிகவும் குறைந்திருக்கிறது என்று காண முடியும். ஆனால் ஜனத்தொகையைப் பார்க்கும்போது அங்கு ஏறத்தாழ 10 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தொழில் வாய்ப்பு கொடுத்து முன்னேறச் செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். தொழில் வாய்ப்பிற்குரிய பல மூலப்பொருள்கள் அங்கு கிடைக்கின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால் மணவாளக்குறிச்சியில் ஒரு மணல் கம்பெனி இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு மானஸைட், இல்மினைட், சிர்கன், தோரியம் போன்ற பொருள்கள் கிடைக்கும் வகையில் செல்வம் கொழிக்கும் மணல் அங்கிருக்கிறது. இரண்டு ஆலைகள் அங்கு உள்ளன. ஒன்று மூடப்பட்டிருக்கிறது. இப்போது ஒன்றுதான் இயங்கி வருகிறது. அந்த மணல் கம்பனி, கேரள அரசாங்கம், சென்னை அரசாங்கம், மத்திய அரசாங்கம் இவை இணைந்து செயல்படுகிற ஒன்றாகும். கேரளாவில் இருந்த ஒரு மணல் கம்பெனியை ஏதோ காரணத்தால் தற்போது மூடியிருக்கிறார்கள். கேரள அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்குத் தொகையைக் கொடுத்து விட்டு நம் மாநிலமே மணவாளக்குறிச்சி மணல் கம்பெனியை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் அந்தத் தொழில் அபிவிருத்தி அடைய வாய்ப்பு ஏற்படும். கேரளத்தில் அதிகத் தொல்லை கொடுப்பது தொழிலாளர் விஷயம்தான். அங்கு ஸ்ட்ரைக், ஸ்ட்ரைக் என்று வந்துதான் தொழில் மங்கிப் போகிறது. அதிர்ஷ்டவசமாக அத்தகைய தகராறு நம் மாநிலத்தில் இல்லை. ஆகவே மணவாளக்குறிச்சி மணல் ஆலையை நாம் ஏற்று நடத்தினால் அது நமக்கு டாலர் சம்பாதித்துக் கொடுப்பதோடு தொழில் பெருகுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். அதோடு மூடிக் கிடக்கும் அந்த ஆலையையும் ஏற்று நடத்தினால் மேலும் நல்ல தொழில் வாய்ப்பு கிடைக்கவும், பொருளாதார முன்னேற்றம் ஏற்படவும் வாய்ப்பாக இருக்கும்.

அடுத்தபடியாக, ரப்பர் ஏராளமாக கிடைத்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கத் துறையில் கூட ரப்பர் மரங்கள் அதிகமாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. அதை வைத்து ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும். பின்னர், அங்கு பனம் தும்பு ஏராளமாகக் கிடைக்கிறது. முன்பு அந்தத் தும்பை வெளிநாடுகளுக்குக் கொண்டு போய் அதை வைத்துக் கொண்டு அவர்கள் பொருளைச் செய்து இந்தியாவிற்கே திருப்பி அனுப்பிப் பொருள் ஈட்டி வந்தார்கள். அதை வைத்து சிறந்த பிரஷ் செய்ய

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [11th March 1964

முடியும். குளச்சல் பகுதியில் அந்த மாதிரி ப்ரஷ் செய்கிறார்கள். ஆனால் அதிக மார்க்கட் இல்லை. ஆகவே அந்தத் தொழிலை நவீன முறையில் அபிவிருத்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர், மரவள்ளிக்கிழங்கு ஏராளமாகக் கிடைகிறது. முன்பு முதலமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் அங்கு வந்திருந்தபோது இதுபற்றி எடுத்துச் சொன்னபோது அவர்கள் சொன்னார்கள், "ஏன் அந்த மாவைக் கொண்டு ஒரு ஜவ்வரிசித் தொழிற்சாலை அமைக்கக் கூடாது?" என்று. இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அக்கிழங்கு நல்லதொரு உணவுப் பொருளாகும். மக்ரோணி என்ற உணவு பெங்களூரில் செய்கிறார்கள். அதுபோல் இக்கிழங்கைக் கொண்டு உணவுப் பொருள்கள் செய்ய வாய்ப்பிருக்கிறது. உணவுப் பற்றாக்குறை என்று சொல்கிறோம், மீன் வளத்தைப் பெருக்கவேண்டுமென்று சொல்கிறோம். அரபிக் கடலில் நல்ல ரக மீன் கிடைக்கிறது. சென்னையில் கிடைக்கும் மீனை விட எங்கள் இடத்தில் உள்ள மீன் அதிக ருசி உள்ளது. நான் சாப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். அம்மீன்களைப் பிடித்து டின்னில் அடைத்து பிற நாடுகளுக்கு அனுப்ப வாய்ப்பிருக்கிறது. அதற்கென சிறந்ததொரு தொழிற்சாலையை அமைத்து அதற்குரிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நல்ல துறைமுகம் அங்கிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு பெரிய கப்பலில் மணல் ஏற்றுவதைக் குளச்சல் துறைமுகத்தின் பக்கத்தில் கரையிலிருந்து பார்த்தேன். ஒரு பர்லாங் தூரத்தில் அக்கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது. ஆகவே பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் வசதி இருக்கிறது. திருவிதாங்கூர்—கொச்சியில் இருந்ததை விட இப்போது நாங்கள் படிப்படியாக முன்னேறிக் கொண்டு வருகிறோம். தொழில் துறையிலும் சரி ஏனைய துறைகளிலும் சரி நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்காக இந்த அரசாங்கத்திற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒன்று சொல்லவேண்டாம் என்று நினைத்தேன், ஆனால் சொல்லத் தான் வேண்டுமென்ற விருப்பம் ஏற்படுகிறது. நாங்கள் தாய்த் தமிழகத்தோடு இணைந்துவிட வேண்டுமென்று போராடிக் கொண்டிருந்தபோது பலர் 'தமிழகத்தோடு இணையக் கூடாது, அது பட்டினிப் பாண்டி, அங்கு கற்றவர்கள் கிடையாது' என்று பிரசாரம் செய்து தொல்லை கொடுத்த பலருக்கு இன்று சென்னையில் இணைந்த பிறகு நல்ல பதவிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அத்தகையோருக்குத்தான் இப்போது பதவி குறிப்பாகச் சொல்லப் போனால் ஒரு கூட்டுறவு ஸ்பின்னிங் மில் வந்தது. (மணி அடிக்கப்பட்டது.) அதற்கு சீஃப் ப்ரமோட்டராக ஒரு ஆளைப் போட்டிருக்கிறார்கள். அவர் அப்போது 'பட்டினிப் பாண்டி' என்று கூறிப் பிரசாரம் செய்தவர். இதைப் பார்க்கும்போது மக்களிடையே ஒரு தவறான எண்ணம் பரவி வருகிறது. ஆகவே இந்த மாதிரி பதவி கொடுக்கும்போது கொஞ்சம் மக்களுடைய செல்வாக்கைப் பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11th March 1964]

* **திரு. கி. நாராயணசாமி பிள்ளை:** கனம் சபாநாயகர் அவர்களே, நம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தொழில் மான்யக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். ஒரு நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் தொழில் வளம் கண்டிப்பாக இருக்கவேண்டும். நம் மாநிலத்தில் நம் அரசாங்கம் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு தொழில் துறை முன்னேறுவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து இருக்கிறார்கள். சென்ற பட்ஜட் கூட்டத்தில் இந்த மான்யம் பற்றிப் பேசும் போது நம் நாட்டில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு பாக்டரி வீதம் ஏற்படுத்தப்பட்டது, மூன்றும் திட்டம் முடிவதற்குள் நாள் ஒன்றுக்கு இரண்டு பாக்டரிகள் வீதம் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்தைத் தெரிவித்தார்கள். அதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டு வருகிறது. தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்குக் கனி வளம், எரிபொருள், நீர் வசதி, நில வசதி போன்றவை வேண்டும். அப்போது தான் நல்ல முறையில் தொழில்களை ஆரம்பிக்க முடியும். அதற்காக மாநில அரசாங்கம் மாநில பூவியல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது ஊர் ஊராகச் சென்று எங்கே கனி வளம் இருக்கிறது என்று பார்த்து அதன்படி தொழில்கள் இயங்க 10-30 a.m.
யோசனை கூறி வருகிறார்கள். இது போற்றத்தக்கது. நம்முடைய நாட்டில் குறிப்பாகத் தொழிற்சாலைகளுக்காக மொத்தம் 617 லைசன்ஸ்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், இதுவரை 314 லைசன்ஸ்கள் வாங்கினவர்கள் வேலையை ஆரம்பித்து விட்டதாகவும், இன்னும் 200 லைசன்ஸ்கள் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டியிருக்கிறது என்றும், அதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து எவ்வளவு தொழில் வளம் பெருகியிருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். முக்கியமாக, தொழில்களுக்கு வேண்டிய மின் சக்தி தேவையாக இருக்கிறது. இது தமிழ்நாட்டைப் பொறுத்த வரை ஏராளமாகக் கிடைக்கிறது. இப்போது நெய்வேலியில் நான்கு யூனிட்டுகள் 50 மெகா வாட்டுகள் வீதம் உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கின்றன. இன்னும் ஐந்தாறு யூனிட்டுகள் உற்பத்தி செய்வதற்கும் ரஷ்ய உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும் ஒகேனக்கல் திட்டத்தைக் குறித்தும் நல்ல முறையில் மைசூர் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி முடிவு எடுத்து ஆரம்பித்துவிட்டால் இன்னும் அதிகமான அளவில் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியும். இதன் மூலமாகத் தொழில்களையும் பெருக்க முடியும். மேலும் தொழில் வளர்ச்சிக்காக தொழில் முதலீடு கார்ப்பரேஷனிலிருந்தும், தொழில் நிதிக்கார்ப்பரேஷனிலிருந்தும் நீண்ட காலத் தவணையில் கடன் கொடுத்து வருகிறார்கள். இதுவும் போற்றத்தக்கது. நம்முடைய நாட்டில் முக்கியமாக இந்தத் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தளவில், நிலக்கரியைக் கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது. நிலக்கரியை முக்கியமாக அயல் நாட்டிலிருந்து கொண்டுவர வேண்டிய நிலைமை இருப்பதால் முக்கியமாக எல்லாத் துறைமுகங்களும் சீர்படுத்தப்படவேண்டும். உதாரணமாக, கடலூர்

[திரு. கி. நாராயணசாமி பிள்ளை] [11th March 1964

துறைமுகத்திலிருந்து கொண்டுவரவேண்டுமென்றால் கடலூர் துறைமுகத்தை 'இம்ப்ரூவ்' செய்யவேண்டும். அதோடு கடலூரி லிருந்து சேலம் வரையில் இப்போதுள்ள மீட்டர் கேஜ் ரயில் பாதையை பிராட் கேஜ் ரயில் பாதையாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியில் இப்போது மின்சக்தியோடு பழுப்பு நிலக்கரியும் அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதோடு யூரியா உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும் வந்து கொண்டிருக்கிறது. அதோடு இங்கு கிடைக்கின்ற வெள்ளைக் களிமண்ணிலிருந்து சிராமிக் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. விருத்தாசலத்தில் ஒரு சிராமிக் தொழிற்சாலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு தொழிற் பேட்டையையும் அமைத்திருக்கிறார்கள். இது மிகவும் போற்றத் தக்கது. விருதாசலத்தில் முந்திரிப்பழம் அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருப்பதால், முந்திரிப்பழத்திலிருந்து ஜாமும், தோட்டி லிருந்து பிளாஸ்டிக் பொருட்களும், எண்ணெய்யும் எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விருத்தாசலத்தில் மட்பாண்டத் தொழிலுக் காக லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற் கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி மாநிலத்தில் லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து பல தொழில்களை ஏற்படுத்தி வருகிறார்கள். திருச்சியில் 'ஹை ப்ரஷர் பாய்லர் பிளாண்ட்' டை ஏற்படுத்தியிருக்கிறார்கள், நந்தம்பாக்கத் தில் அறுவை சிகிச்சைக்கான கருவிகள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையும், உதகமண்டலத்தில் கச்சா பிலிம் தொழிற் சாலையும், ஆவடியில் பாதுகாப்புக்கு வேண்டிய டாங்க் தொழிற் சாலையும் ஏற்படுத்தியிருப்பதே இந்த நாட்டில் தொழில் வளம் அதிகமாகி வருகிறது என்பதற்கு ஒரு சான்றாகும். மேலும் கோஸ்டல் ஏரியாவில், ஓரமாக ரோடு வசதி செய்து கொடுத்தால் தொழில் வளம் பெருகுவதற்கு இன்னும் வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நெய்வேலியில் கிடைக்கின்ற பழுப்பு நிலக்கரியை யும், சேலத்தில் கிடைக்கின்ற இரும்பையும் உபயோகித்து ஒரு அயர்ன்-ஸ்டீல் பிளான்ட் ஏற்படுத்தவேண்டும் என்றும், அதற்காக கஞ்ச மலையில் இடம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட் டிருக்கிறது. இதைக் கேட்டு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல் லாம் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். அதோடு, நெய்வேலியிலே யே சேலம் இரும்புப் பொருட்களைக் கொண்டு சென்றால் அங்கேயும் ஒரு இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம். நெய்வேலியில் நில வளமும், நீர் வளமும் அதிகமாக இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

அதோடல்லாமல், சிறு ரகத் தொழில்களுக்கும், வேண்டிய ஆக் கமும் ஊக்கமும் கொடுத்து வருகிறார்கள். தொழிற்பேட்டைகளை ஆங்காங்கு நிறுவி, திண்டுக்கல் போன்ற இடங்களில், பூட்டுகள்,

11th March 1964] *[திரு. கி. நாராயணசாமி பிள்ளை]*

களுக்கு வேண்டிய உபகரணங்கள், விவசாயத்திற்குத் தேவைப் படுகிற உபகரணங்கள், இரும்புச் சாமான்கள் இவைகள் எல்லாம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகளுக்கு எல்லாம் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்திருப்பது மிகவும் போற்றத் தகுந்ததுதான்.

அடுத்தபடியாக, தென்னாற்காடு ஜில்லாவில் கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் செம்புப் படிவம் இருப்பதாகவும், அரியலூர், குளித் தலை, ஆலங்குளம் போன்ற இடங்களில் சுண்ணாம்புப் படிவம் இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இந்த இடங்களில் ஒரு சிமிண்ட் ஆலையை நிறுவினால் மிகவும் நன்மையாக இருக்கும் என் பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கு பார்த்தாலும் சர்க்கரைப் பற்றாக்குறை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்போது வேண்டிய அள வுக்கு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன என்றாலும், இன்னும் சிறிய அளவில் சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் கூட்டுறவு முறையில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவப் போவதாகச் சொல்லப்பட் டிருக்கிறது. இதுவும் போற்றத்தக்கதாக இருக்கிறது. அதோடு பெண்ணாகடத்தில் அருணா சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்று ஆரம் பிப்பதற்கு லைசென்சு கொடுத்துப் பல ஆண்டுகளாகியும் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருந்தது. ஆனால் இப்போது இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் லைசென்ஸ் பெற்றிருந்த கம்பனியார் வந்து அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். ஆகவே இதற்கு வேண்டிய உதவியை அரசாங்கம் கொடுத்து சீக்கிரமாக இந்த ஆலையை நிறு வுவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்போல பல இடங்களிலும், அந்தந்த இடத்திற்குத் தகுந்த வாறு, நிலவளம், நீர்வளம், கனிவளம் இவற்றிற்குத் தகுந்தவாறு எங்கெல்லாம் தொழில்களை ஆரம்பிக்க முடியுமோ அங்கெல்லாம் தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சிக்கான முதலீடுகள் மீது கோரப்பட்டிருக்கின்ற மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரே ரணைகளை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். முதன்முதலாக நமது முதல் அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். எங்கள் சேலம் ஜில்லா வைப் பொறுத்த அளவில், அதை இரண்டாகப் பிரித்தால் எங்க ளுக்குத் தொழில் வளம் பெருகுவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டிருக்கிற எங்களுக்கு இப்போது ஓரளவு நம்பிக்கை பிறந்திருக்கிறது. செல்வம் கொழித்த தமிழ்நாடு நம் முடைய பண்டைத் தமிழ்நாடு என்றும், அக்கால வணிகர்கள் கடல் கடந்து வியாபாரம் செய்து கலம் நிறைப் பொன்னையும் பொருளையும் கொண்டு வந்து தமிழ்நாட்டைச் செல்வமாக கொழிக்கச் செய்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால்

இன்று அத்தகைய தமிழ்நாடு சீரழிந்த நிலைமையில், அதிலும் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை, மற்ற மாவட்டங்களை எல்லாம் விட எங்கள் மாவட்டம் மிகவும் சீரழிந்த நிலைமையில் இருக்கிறது என்பதை மிகவும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கத்தைவிட உயர்ந்தது இரும்பும் நிலக்கரியும் என்று சொல்லுகிறார்கள். இத்தகைய இரும்பும் நிலக்கரியும் இன்றைய தினம் தமிழகத்தில் மிகப் பெரிய அளவில் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது ஆனால் சேலத்து இரும்பு, நெய்வேலி நிலக்கரியும் இன்னும் ஆராய்ச்சி அளவில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சி எல்லாம் முடிந்து எப்போதுதான் வேலை துவங்கும் என்று ஐயப்படும் அளவிற்கு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே உடனடியாக இந்தத் தொழிலை ஆரம்பித்துக் கொடுத்தால் சேலம் மாவட்ட மக்கள் இந்த அரசாங்கத்திற்கு மிக மிக நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது, சேலம் பின்தங்கியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், எங்கெங்கே தொழில் வளம் பெருகியிருக்கிறது என்பதைப் பாருங்கள் என்று சொன்னார்கள். நான் குறிப்பிட விரும்புவது, சேலத்தை இரண்டாகப் பிரித்தால் வடசேலத்தில் உள்ள தொழில்களின் புள்ளிவிவரத்தைக் கொடுத்தால், அது கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளைவிட மிகக் குறைவாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழில்களை ஆரம்பிப்பது என்றால், இயற்கை வசதிகளும் இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிப் பார்க்கும்போது இயற்கை வசதியுள்ள சென்னை, தூத்துக்குடி முதலிய இடங்களில் தான், அதாவது துறைமுகங்கள் இருக்கக் கூடிய இடத்தில் தான் தொழில்கள் ஆரம்பிக்க முடியும். ஆனால் இப்படி துறைமுகங்கள் இல்லாத இடங்களில் எப்படித் தொழில் வளத்தைப் பெருக்க முடியும் என்பதைப் பார்க்கும்போது, குறைந்தது ரயில்வே வசதியாவது இருக்கவேண்டியது மிகவும் அவசியம் என்பதை நாம் பார்க்கிறோம். அந்த முறையில் பார்க்கும்போது கிருஷ்ணகிரியிலிருந்து, திருப்பத்தூருக்குப் போடப்பட்டிருந்த ரயில்பாதை இப்போது எடுக்கப்பட்டுவிட்டது. இந்த முறையில், இருந்ததையும் இழந்து கொண்டிருக்கிறோம் நாங்கள். தொழில் வளம் பெருகவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த ரயில் பாதையை மீண்டும் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும், கிருஷ்ணகிரியில் ஏற்படுத்தப்பட்ட தொழிற்பேட்டையில் 18 யூனிட்டுகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இப்போது ஆறு யூனிட்டுகள் தான் கட்டி முடிக்கப்படும் கூறுவாயில் இருக்கின்றன. குறைந்தது இரண்டு மூன்று தொழில் அதிபர்கள்தான் ஆரம்பிக்கக் கூடிய நேரத்தில் வருவார்கள் என்கிற நிலை இருந்துகொண்டிருக்கிறது. காரணம், தொழில் அதிபர்கள், எத்தகைய தொழிலை ஆரம்பித்தால் லாபம் கிடைக்கும் என்பதைப் பற்றிய கணக்குத் தெரியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு இன்னின்ன தொழில்களை ஆரம்பிக்கலாம் என்ற முறையில் தக்க ஆலோசனை சொல்லி தொழில் ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலும் ஜியாலஜிக்கல் சர்வே நடந்து முடிந்து விடும் என்று சொல்லப்பட்டது. இந்த சர்வே மூலம் எங்கெங்கே கனி வளங்கள் இருக்கின்றன என்று கண்டு பிடிக்க வசதியாக இருக்கிறது. ஆகவே இந்த இலாகாவை ஊக்குவிக்கும் முறையில் இந்த இலாகாவில் வேலை செய்கின்றவர்களை, அவர்களுக்கு வேலை செய்யும் ஆற்றல் இருக்கும் வரை அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அவர்கள் சர்வே செய்த நேரத்திலே சாமல்பேட்டை அருகே ஏறக்குறைய 7½ லட்சம் டன் உயர்ந்த ரக சுண்ணாம்புக் கல் இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே ஒரு ரெயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்வதானாலும், ஏராளமான நிலங்களைக் குறைந்த விலையில் வாங்க முடியும். அங்கே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற காரணத்தினால் இந்தத் தொழிலை ஆரம்பித்தாவது அந்தப் பகுதி முன்னேறுவதற்கான வழியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்—10 ஆண்டுகளுக்கு முன்—நான் சிறு பையனாக இருந்தபோது அங்கு இப்படிப்பட்ட சர்வே நடந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து, "என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டபோது, அவர்கள், "இங்கே தங்கப் படிவம் இருப்பதாக அறிகிறோம், அதைத் தான் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். மீண்டும் இதைப் பற்றிப் பரிசீலனை செய்தால் தங்கமே இல்லாத இடத்தில் தங்கமே கிடைத்தாலும் கிடைக்கலாம், அதையும் கவனிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வட சேலத்தில் என்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றன என்று பார்த்தால் அங்கே கனி வளங்கள் இல்லை, ஆனால் கனிகள் கிடைக்கின்றன. ஏராளமான மாந்தோட்டங்கள் அங்கே ஏற்பட்டு மாம்பழங்கள் உற்பத்தியாகின்றன. மாம்பழ உற்பத்தி அதிகமாகிக் கொண்டே வருகிறது. அங்கு பழம் பதனிடும் தொழிற் சாலை ஒன்றை அமைத்தால் அல்லது பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்தால் அந்தப் பகுதியும் வளம் பெறும் என்று கூறிக்கொள்கிறேன்.

சிங்காரப்பேட்டை ஹளூர் பகுதியில் ஏராளமான காடுகள் இருக்கின்றன. ஹொசூர் தாலூகாவையும் சேர்த்துச் சொல்லுகிறேன். அந்தக் காடுகளில் மூங்கிலும் பயிராகிறது. மேலும் மூங்கில் காடுகளை அதிகமாக்கினால் ஒரு காகிதத் தொழிற்சாலை வைக்கும் அளவுக்கு அங்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது பாரத நாட்டிலே, குறிப்பாக நமது தமிழ்நாட்டிலே ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியை, அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள சிறிய புத்தகத்திலிருந்து நாம் நல்ல முறையிலே தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக, மின்சார உபயோகத்தில் ஏறக்குறைய 450 சதவிகிதம் தொழில்களுக்கு உபயோகிக்கும் திறமையைப் பெற்றிருக்கிறோம். கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளதிலேயும், கம்பெனிகளில் உள்ள பெய்ட்-அப் ஷேர் காப்பிட்டல் முதலிய இனங்களிலும் மிகவும் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். 659 கம்பெனிகளிலே 65.58 கோடி ரூபாய் பெய்ட்-அப் ஷேர்காப்பிட்டல் நமது தமிழ்நாட்டில் போடப்பட்டிருக்கிறது என்றால், இந்தச் சாதனை பெரிய சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக என்ஜினியரிங் பர்ஸானலை எடுத்துக்கொண்டாலும், இப்போது என்ஜினீயரிங் டிகிரி ஹோல்டர்ஸ் 867 ஆக இருப்பது 1965-66-ல் 1,442-ஆகப் பெருக்கப் போகிறோம். என்ஜினீயரிங் டிப்ளமோ ஹோல்டர்ஸ் 2,150-ஆக இருப்பதை 1965-66-ல் 3,130-ஆக உயர்த்தப் போகிறோம் க்ராஃப்ட்ஸ்மென்கள் 6,668-ஆக இருப்பதை 8,268-ஆக உயர்த்த போகிறோம். இந்த அளவுக்கு உயர்த்தப் போகிறோம் என்றால் இந்தச் சாதனையையும் யாரும் குறைவாக மதிப்பிட முடியாது.

கனம் சபாநாயகர் அவர்களே, நமது தமிழ்நாட்டிலே மூன்று விதமான தொழில்களை நாம் செய்துகொண்டு வருகிறோம். ஒன்று மத்திய அரசாங்கம் நமது மாநிலத்தில் நடத்தும் தொழிற்சாலைகள். அடுத்தது, மாநில அரசாங்கம் மேற்கொண்டு நடத்தும் தொழிற்சாலைகள். அடுத்தது தனியார் துறையிலே நடத்தும் தொழிற்சாலைகள். இப்படி மூன்று வகையாகத் திட்டங்கள் தீட்டி நடத்திக்கொண்டு வருகிறோம். மத்திய அரசினரால் நடத்தப்படும் திட்டங்களை நாம் எடுத்துக்கொண்டு பார்த்தால் 7 பெரிய திட்டங்களை நாம் நமது மாநிலத்தில் அமுல்படுத்தி நடத்திக்கொண்டு வருகிறோம். ஒன்று, நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம். பொதுக் கணக்குக் குழு அங்கத்தினர் என்ற முறையில் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தைப் போய் பார்க்கும் சந்தர்ப்பம் சமீபத்தில் எனக்குக் கிடைத்தது. எப்பேர்ப்பட்ட திட்டங்களை இந்த நாட்டில் தீட்டி நாம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம், ஒரு பெரிய சாதனையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம, என்றால் அது ஒரு பெரிய அதிருஷ்டம் என்றுதான் நான் நினைக்கிறேன். அங்கே சென்றால், ரஷ்யா தேசத்தினுடைய ஒத்துழைப்பின் பேரில் தெர்மல் ஸ்டெஷன்கள் கட்டப்படுகின்றன. இத்தாலி தேசத்தின் ஒத்துழைப்பைக்கொண்டு 'பெர்டிலைஸர் பாக்டரி' கட்டப்படுகிறது. இன்னும் அநேக தேசங்களின் ஒத்துழைப்பைக்கொண்டு அநேக திட்டங்கள் நடைபெறுகின்றன. உலக ஒற்றுமைக்கே ஒரு அத்தாட்சியாக இந்த நெய்வேலித் திட்டம் விளங்குகிறது. அதுவும் அல்லாமல் 'கிளே வாஷிங் பிளாண்டு', 'பிரிக்கெட்டிங் பிளாண்டு' போன்ற திட்டங்களெல்லாம் அங்கே

நடைபெறுகின்றன. பக்கத்திலே விருத்தாசலத்தில் அரசாங்க 'ஸிராமிக் பாக்டரி' ஒன்றையும் பார்ப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அங்கே போய்ப் பார்த்த சமயத்தில் உற்பத்தி அதிகமாகிக்கொண்டு வந்தாலும், விற்பனை அதிகமாகிக்கொண்டு வந்தாலும், நஷ்டம் வரவர அதிகமாகிக்கொண்டு வந்திருக்கிறது என்பதை அறிந்தேன். அந்த ஒரு நிலையை நாம் தவிர்க்க வேண்டும். சர்க்கார், தொழிற்சாலைகளைத் தீவிரமாக கண்காணிப்பதற்கும், அங்கே உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்வதற்குப் போதிய வசதிகள் செய்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். சரக்குகள் தேங்கவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு நம்மிடம் இருக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, 'இண்ட்டெக்ரல் கோச் பாக்டரி' நடக்கிறது. 'ஹை பிரஷர் பாயிலர் பிளாண்டு' திருச்சியில் நடக்கிறது. 'ஹிந்துஸ்தான் போடோ பிலிம் பாக்டரி' உதகமண்டலத்தில் இருக்கிறது. 'ஸர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்டு பாக்டரி' நந்தம்பாக்கத்தில் இருக்கிறது. 'ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர் பாக்டரி' கிண்டியில் ஆரம்பித்து நடந்துகொண்டிருக்கிறது. 'டிபென்ஸ் ப்ரொடக்ஷன் யூனிட்' ஆவடியில் ஏற்படுத்தப்பட்டு நடக்கிறது. இவைகளெல்லாம் நடந்துகொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அதுவுமன்றி, மத்திய சர்க்கார் ஒத்துழைப்பின்பேரில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நமது மாநிலத்தில் பல தொழிற்சாலைகள் ஏற்படப் போகின்றன. சேலம் இரும்புத் தொழிற்சாலை, பெட்ரோலியம் ரிபைனரி, ஒரு லட்சம் டன் நைட்ரஜன் உற்பத்தி செய்யக்கூடிய உரத் தொழிற்சாலை விவைகளையெல்லாம் நாம் ஏற்படுத்தப்போகிறோம். இவைகளெல்லாம் மத்திய அரசாங்கத்தின் உதவியாலே நடத்தப்படும்.

அடுத்தாற்போல, மாநில அரசாங்கம் இன்னும் பல தொழிற்சாலைகளை எடுத்து நடத்தப்போகிறது. அரக்கோணத்தில் உருக்கு ஆலை ஒன்றை ஏற்படுத்தப் போகிறோம். அநேகக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளையும், கூட்டுறவு நூற்பு மில்களையும் நாம் ஏற்படுத்தப்போகிறோம். முக்கியமாக ஒரு விஷயம் இந்தக் குறிப்பிலே கண்டிருக்கிறது. 'மெட்ராஸ் இண்டஸ்டிரியல் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன்' 1964-65-ம் ஆண்டிலே ரிஜிஸ்டர் செய்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது ஒரு மிக முக்கியமான சாதனைதான் என்று கூறவேண்டும். அடுத்தாற்போல, இராமநாதபுரத்தில் நாள் ஒன்றுக்கு 1,200 டன் உற்பத்தி செய்யக்கூடிய சிமெண்டு பாக்டரி ஒன்றையும் நாம் ஏற்படுத்தப் போகிறோம்.

என்னுடைய தொகுதியைப்பற்றி சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : தொகுதிக்கு இப்பொழுது தான் கனம் அங்கத்தினர் வந்திருக்கிறார். அறிக்கையில் இருப்பதையே திருப்பிச் சொன்னால் நேரம் ஆகிவிடுகிறது.

[11th March 1964

திரு. டி. கார்ச்சா கவுடர்: என்னுடைய நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு நீலகிரியில் 'பேபி ஃபுட் பாக்டரி' ஏற்படுத்தப் போவதாக பட்ஜெட் உரையிலே கொடுத்த குறிப்பிலே நான் கண்டேன். இப்போது சமீபத்தில் அந்தத் திட்டம் கை விடப்பட்டிருக்கிறது. போதிய பால் கிடைக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அது கைவிடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமானது, அதுவும் தொழில் துறையிலே முன்னேறுவதற்கு இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதை கனம் அமைச்சரும், நமது அமைச்சர் அவையும் தீவிரமாகக் கவனிக்கவேண்டும். எவ்வளவு பசுக்கள் வேண்டுமானாலும் நாங்கள் வாங்குவதற்கு தயாராக இருக்கிறோம் 1,000 பசுக்கள் வாங்க வேண்டுமென்றாலும் கஷ்டம் இல்லை. அந்த் திட்டத்தை உடனடியாக எங்கள் மாவட்டத்தில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீலகிரியில் அதிகப்படியாக உருளைக் கிழங்கு உற்பத்தியாகிறது. உருளைக்கிழங்கை அநேக வெளிநாடுகளுக்கு நாங்கள் அனுப்புகிறோம். 'பொடடோ சிப்ஸை' இப்பொழுது மக்கள் நல்ல விதமாக விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆகவே, உருளைக்கிழங்கை அங்கேயே 'பொடடோ சிப்ஸாக'ச் செய்து அயல் நாடுகளுக்கு அனுப்பலாம். அதையும் நமது அதிகாரிகளும், அமைச்சர் அவர்களும் கவனித்து, 'பொடடோ சிப்ஸ்' பாக்டரி ஒன்றை அங்கு ஏற்படுத்தினால் மிகவும் நல்லது.

எங்களுடைய மாவட்டத்தில் தேயிலை அதிகம். நாங்கள் கூட்டுறவு முறையில் தேயிலைத் தொழிற்சாலைகள் நடத்துவதற்கு விண்ணப்பித்திருக்கிறோம். இந்த இண்டஸ்ட்ரீஸ் பட்ஜெட்டில் இந்த ஆண்டில் அம்மாதிரி தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி ஒன்றும் அறிக்கையிலே காணோம். இதை பரிசீலித்து அம்மாதிரி தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் இந்த சமயத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'ஹிந்துஸ்தான் போடோ பிலிம்ஸ் பாக்டரி' சம்பந்தமாக ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தொழிற்சாலையை அங்கே வைத்திருப்பது பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம். ரூ. 8 கோடி அளவில் நீலகிரியில் அந்தத் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டிருப்பது பற்றிப் பெருமைப்படுகிறோம். ஆனால் நீலகிரி மக்களுக்கு அங்கே வேலை வாய்ப்பு கிடைப்பது மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன் குறிப்பாக எங்கள் பகுதி பின் தங்கிய பிரதேசம். பட்டியிலே பின் தங்கிய மக்கள் உள்ள நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த மட்டிலாவது இந்தத் தொழிற்சாலையில் குறைந்தது 50 சதவிகிதம் வேலைகளை

11th March 1964] *[திரு. டி. கார்ச்சா கவுடர்]*

அங்குள்ள மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு ஆலோசனையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு செய்யவேண்டும்

(மணியடிக்கப்பட்டது.)

* **திரு. வி. எஸ். எஸ். மணி:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, தொழில்துறை மான்யத்தின்பேரில் கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நாட்டிலே மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமானால், விவசாயத்தைமட்டும் நம்பியிருந்தால், விவசாய வளர்ச்சியை மட்டும் நம்பியிருந்தால் போதாது. தொழில் துறையிலும் அதிதீவிரமாக முன்னேற்றம் அடைந்தால்தான் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் We simply exist and not live என்று சொல்வதற்கு எற்ப நமது நாட்டில் இன்றைய நிலை இருப்பதன் காரணமாகத்தான் நமது தொழில் முன்னேற்றம் குறைவாக இருக்கிறது. மேலை நாடுகளில், குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில், மக்களுடைய வாழ்க்கை வாழ்வதற்காகவே அமைந்திருக்கிறது. அவர்களுக்கு வாழ்க்கையிலே கவலை என்னவென்றால், எந்த விளையாட்டுக்குப் போகலாம், எந்தக் கேளிக்கையில் ஈடுபடலாம், எந்த சுகத்தை அனுபவிக்கலாம் என்பதுதான். அந்த நிலை அங்கு இருக்கும்பொழுது, நமது நாட்டிலே பஞ்சம், பட்டினி, பணமின்மை போன்ற பல்வலிகளால் இருந்து கொண்டிருக்கிறது. இவையெல்லாம் போக்குவதற்கு நாம் தொழில் துறையிலே அவசியமாக முன்னேற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நமது அமைச்சர் அவர்கள், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக நாம் தொழில் துறையிலே முன்னேற்றம் அடைந்திருக்கிறோம், தொழில் யூனிட்டுகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டதில் மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக நாம் தான் நல்ல முறையில் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அது பெருமைப்படக்கூடிய விஷயம் என்றெல்லாம் சொன்னார். இந்த அளவுக்கு தமிழகம் முன்னேறுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு மத்திய அரசாங்கம் பாராட்டுதலுக்குரியதுதான். ஆனால், அவர்கள் அப்படி கொடுக்கும்படி செய்வதற்குக் காரணம் என்னவென்றால், தமிழகத்திலிருந்து எழுந்த கூக்குரல் 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்ற கூக்குரல்தான். அந்தக் கூக்குரல் பிரதிபலித்துத்தான் இன்றைக்கு மத்திய அரசாங்கம் தமிழகத்திற்கு அதிக கண்காணிப்பு, அதிகச் சலுகைகளைக் கொடுத்து வருகிறார்கள் என்று இந்த சமயத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் துறையிலே கைத்தறித் தொழில் மிகவும் இன்றியமையாதது. கைத்தறித் துறையில் நமது அரசாங்கம் ஓரளவுக்குக் கவனம் செலுத்திக்கொண்டு வந்தாலும் கூட, போதிய அளவுக்குக் கைத்தறி உற்பத்தியாளர்களுக்கு உதவி

செய்யப்படுவதாகத் தெரியவில்லை. குறிப்பாக, கைத்தறியில் செயற்கைப் பட்டு நூலால் நெய்யக் கூடிய ஜவுளிகளை பல அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழிவகைகள் செய்ய வேண்டும். தனிப்பட்ட முறையில் வெளி நாடுகளுக்கு செயற்கைப் பட்டு நூலால் நெய்யப்படுகிற ஜவுளிகளை ஏற்றுமதி செய்வதிலே அதிக சிரமம் இருக்கிறது என்று கருதி, சர்க்காரே அந்த ஜவுளிகளை கொள்முதல் செய்து, ஓரளவு நஷ்டம் வந்தாலும்கூட, அதை ஏதோ நிதியிலிருந்து சரிக்கட்டி அந்த அளவுக்குச் செய்து, ஏற்றுமதி செய்ய முன்வந்தால் உண்மையிலேயே அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் சர்க்காரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

11-00 a.m. அடுத்தபடியாக, கைத்தறி ஜவுளிக்கு அன்னிய நாட்டில் ஏராளமாகக் கிராக்கி இருக்கிறது என்று தெரிகிறது. அன்னிய நாட்டில் நல்ல மார்க்கெட்டை உண்டாக்க இப்பொழுது செய்து கொண்டிருக்கிற வழிகளைவிட மேலும் அதிகமாக முயற்சி எடுத்துக் கொண்டால் கைத்தறி முன்னேற்றம் அடையும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நூல் நூற்பு ஆலைகள் இருக்கின்றன. இந்த நூற்பாலைகள் இதுவரைக்கும் ஒரு குறிப்பிட்ட நகரத்திலே தான் குவிந்து கொண்டே வருகிறது. பரவலாக அமையவில்லை. இப்பொழுது சில மாவட்டங்களுக்கு நூற்பு ஆலைகளை ஒதுக்கி லைசென்சு கொடுத்திருக்கிறார்கள். அப்படிப் புதிதாக நூற்பாலைகளை நிறுவுவதிலும் கூட நகர்ப்புறத்திலே அமைக்காமல் அவற்றை கிராமப்பகுதியில் நிறுவனம் செய்தால், கிராம மக்கள் நகரத்திற்குச் சென்று குடியேறும் நிலைமை மாறும். கிராமப்புறத்தில் அப்படிப்பட்ட ஆலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்று மக்களுக்குக் கவர்ச்சிகரமாக இருக்கக் கூடிய துணி டெர்லின், நைலான் போன்ற துணிகள்தான். இவை எல்லாம் வெளி நாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்யப்படுகிறது. நம்முடைய சுயதேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்காவது அல்லது அன்னிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கும் கூட இவைகளை உற்பத்தி செய்ய ஃபாரின் கொலாபரேஷன் (Foreign collaboration) கூட நிறுவனங்களை ஏற்படுத்தினால் உபயோகமாகவும், லாபமாகவும் இருக்கும். அடுத்தபடியாக (ஷுகர் பாக்டரிகள்) சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இது "அல்லைடு டு அக்ரிக்கல்சர்" என்று சொல்வார்கள். இப்படிச் சர்க்கரை ஆலைகள் நிறுவனத்தில் ஷுகர்-கேன் அதிகமாகக் கிடைக்காத இடங்களில் கூட ஆலைகளை நிறுவி விடுகிறார்கள். பின்னால் ஷுகர்-கேன் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் மூடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இப்படித்தான் கோவை மாவட்டத்திலே ஒரு ஷுகர் பாக்டரி மூடப்பட்டு இருக்கிறது. அது ஷுகர்-கேன் சப்ளை இல்லாததால் 20 மைல்களுக்கு உள்ளாக ஷுகர்-கேன் கல்டிவேஷன்

இல்லாவிட்டால் அந்த இடத்தில் சர்க்கரை ஆலையை வைப்பது இல்லை என்ற முறையைக் கைக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் 60, 70 மைல் தூரத்தில் இருந்து கரும்பை டிரான்ஸ்போர்ட் செய்து கொண்டுவந்தால் உற்பத்தியாகும் சர்க்கரையின் விலை அதிகமாகி விடுகிறது. கிரஷிங்கில் ஷுகர் content கூட குறைவாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே ஷுகர் பாக்டரி ஏற்படுத்துவதாக இருந்தால் கரும்பு உற்பத்தி எங்கே இருக்கிறதோ அப்படிப்பட்ட நல்ல இடமாகப்பார்த்து அமைத்தால்தான் அது நல்ல முறையிலே செயல்பட முடியும்.

அடுத்தபடியாக நமது தென்னகத்திலே கைத்தறித் தொழிலுக்கு உபகரணமாக இருக்கும் "டைஸ்டப்ஸ்" (Dye stuffs) சாயம் மருந்துகள் போன்றவைகள் உற்பத்தி செய்யப்படவில்லை. அதற்கான ஒரு தொழிற்சாலை தமிழ் நாட்டில் கிடையாது. அப்படி "டைஸ்டப்களை" உண்டாக்கும் நிறுவனத்தை நிறுவினால் இப்பொழுது வெளிநாட்டிலிருந்தும் வெளி மாநிலங்களில் இருந்தும் இறக்குமதி செய்யப்படும் "டைஸ்டப்" களை நாமே நம் மாநிலத்தின் தேவைக்கு உற்பத்தி செய்து கொள்ளலாம். இதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நூற்பாலைகளை அலாட் செய்வதில் பாக்வேர்ட் ஏரியா என்கிற முறையில் என்னுடைய தொகுதியான மதுரை, சின்னாளபட்டியில் ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். அங்கே குறைந்த பட்சம் பத்தாயிரம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு என் வார்த்தையை முடிக்கின்றேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்திலே சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில், தொழில் முன்னேற்றத்தில், நாம் ஓர் அளவு, ஏன் விரிவாகவே, முன்னேறி இருக்கிறோம். இன்றைக்கு மற்ற மாநிலங்களைப் பார்க்கிலும் நம் மாநிலத்தில் நமக்குள்ள வசதிகளைக் கொண்டு தகுந்த முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். இந்தப் பெருமை நமது கனம் தொழில் மந்திரி திரு. வெங்கட்டராமன் அவர்களைச் சேர வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்.

இந்தத் தொழில் முன்னேற்றத்தில் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன. நம் நாட்டில் ஏதாவது தொழில் என்றால் பொதுமக்கள் பணம் போடுவது கஷ்டமாக இருக்கிறது. "பிரைவேட் காபிடல் இஸ் வெரி ஷை", என்று சொல்கிறார்கள். அதில் சந்தேகம் இல்லை. திடீர் என்று லாபம் எதிர்பார்க்கிறார்கள். தொழில் ஆரம்பித்த உடனேயே, 10, 15 பேர் சேர்ந்து ஒரு பப்ளிக் லிமிடெட் கம்பெனி ஒரு கோடி ரூபாய் போட்டு ஆரம்பித்தால் ஒரு வருஷத்திலேயே ஒரு கோடி ரூபாய் லாபம் வேண்டும் என்று பார்க்கிறார்கள்.

இந்தக் காரணத்தினுல்தான் குறிப்பாக தென் இந்தியாவில் மூலதனம் கிடைப்பது இல்லை. இதனுல் தானே என்னவோ நம் மாநிலத்தில் பணம் போடுகிறவர்கள் டெக்ஸ்டைல் மில்கள், நூற்பு ஆலைகள் ஏற்படுத்தத்தான் முன்வருகிறார்கள். இல்லை என்றால் ஷுகர் பாக்டரி அல்லது சிமெண்ட் பாக்டரி என்று பார்க்கிறார்கள். திடீர் என்று லாபம் வரும் என்று நினைக்கிறார்கள். யாரைப் பார்த்தாலும் டெக்ஸ்டைல் மில் என்று கேட்கிறார்கள். அதிலே எனக்கு அனுபவம் கிடையாது. வேலை இல்லாத பயித்தியக் காரன்கூட அதை ஆரம்பிக்கலாம் போல் இருக்கிறது. நல்ல தொழி லாக எஞ்சினீயரிங் இண்டஸ்ட்ரீஸ், கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் போன்ற நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்ததான தொழில்களை ஆரம்பிக்க கூடாதா? இதில் எல்லாம் லாபம் பின்னால் வரலாம். ஆகவே நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமான தொழில்கள் வளர் அதிகமான வாய்ப்பு இல்லை. இப்பொழுது சில மில்கள் 10, 20 பேர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இவை எல்லாம் டெக்ஸ்டைல் மில்லாகத்தான் இருக்கின்றன. அது போனால் போகட்டும் என்றாலும் அரசாங்கமே இதற்கு என்கரேஜ் பண்ணக் கூடாது என்று தான் என் அபிப்பிராயம் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: என்கரேஜ் பண்ணக் கூடாது என்று சொன்னால், ஸ்பிண்டில்களை வாங்க வேண்டாம் என்று சொல்கிறார்களா?

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: இப்பொழுது ஏற்படும் தொழிற் சாலைகள் டெக்ஸ்டைல் பாக்டரிகளாகத்தான் இருக்கின்றன. இப்பொழுது 12,500 ஸ்பிண்டில்கள் என்றால் ஒரு யூனிட்டு என்று வைத்திருக்கிறார்கள். 12,500 வேண்டுமென்றால் மதராஸ் கவர்ன்மெண்டைக் கேட்கிறார்கள் அதற்கும் மேல் 25,000, 50,000 ஸ்பிண்டில்கள் வேண்டுமென்றால் அங்கே போய் வாங்கிக் கொள்ளு கிறார்கள் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 12,500-க்கு மேல் 25,000 என்றும் மதராஸ் கவர்மெண்டுதான் வற்புறுத்தினோம்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: அந்த மாதிரி கொடுப்பதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. அந்த மாதிரி செய்வதால் நம்முடைய எனர்ஜி, ஃபண்ட்ஸ் அவெய்லபிளாக உள்ளது, இவையெல்லாம் வீண் விரயம் ஆகிறதே. இது தேசத்தின் தொழில் வளர்ச்சிக்கு அவசியம் இல்லாமல் இருக்கிறதே என்பதற்காகத்தான் சொன்னேன், எனக்கு ஆட்சேபம் இல்லை. இதையே ப்ரைவேட் பீபிள் ஆசைப்படுகிறார்கள் என்றால் பரவாயில்லை. ஆனால் அரசாங் கமே கூட்டுறவு முறையில் தொழில் ஆரம்பிக்கும் போது கூட டெக்ஸ்டைல் மில்லுக்கே போகிறார்கள். கூட்டுறவு முறை எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதுதான் என்றாலும், ஒரு 4 பேர்கள் சேர்ந்து செய்யும் தவறுகளை பத்து பேர்கள் சேர்ந்து தப்புச் செய்வதுதான் கூட்டுறவு முறை. அப்படியில்லாமல் எல்லாம் பரிசுத்தமாக இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது.

ந தப்பும் நடக்காது என்று சொல்லக் கூடிய அளவுக்கு நமது
ாவாப்பரேஷன் முன்னேற்றம் அடையவில்லை. கூட்டுறவு
றை என்று பெரியோர்கள் சொல்கிறார்கள். அவர்கள்
காண்டினேவியன் கண்ட்ரிகளில் உள்ள முறையை நினைத்துக்
ாள்ளுகிறார்கள். நாம் அந்த அளவுக்கு முன்னேறவில்லை.
க்கும் அதற்கும் ஸ்னானப்ராப்தி கூடக் கிடையாது. நமக்கும்
தற்கும் சம்பந்தமே கிடையாது. கோவாப்பரேஷன் கூடாது
ன்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்தத் துறையில் அரசாங்
மே பணத்தைப் போடுகிறார்களே என்றுதான் எடுத்துக் காட்டு
றேன்.

சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஏற்படுத்தியிருந்திருக்கும் தொழிற்
லைகளில் நெய்வேலி முக்கியமானது. சேலம் ஸ்டீல் பிளாண்ட்
ரப்போகிறது என்று சொல்கிறார்கள். பெட்ரோலியம் சம்பந்த
க சர்வே பண்ணுகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால்
ச்சயமாக வரப்போகிறதா என்பதில் இன்னும் சந்தேகம் இருக்
றது என்று சொல்லியிருக்கிறார்கள். கனம் மந்திரி அவர்கள்
ச்சயமாக அது வரக்கூடிய நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்
ன்று கேட்டுக் கொள்ளுகிறேன். அது வரும் என்று நிர்ணயம்
ருந்தாலும், வாாமல் போகவும் சான்ஸ் இருக்கிறது. என்பதற்
கச் சொல்கிறேன். அதை ஊர்ஜிதப்படுத்த வேண்டும். அடுத்து,
ரத் தொழிற்சாலையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அதுவும்
வசியம் தான்.

அடுத்து "பப்ளிக் செக்டார் ப்ராஜெக்ட்ஸ் ஆஃப் தி ஸ்டேட்
வர்ன்மெண்ட்" என்ற தலைப்பில் ரீ-ரோலிங் மில்லுக்குப் பதிலாக
டீல் காஸ்டிங் ப்ளாண்ட் ஒன்று, 3.4 கோடி ரூபாய்ச் செலவில்,
வக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இது பொதுத் துறையில்
பாக வேண்டிய இனம் தான். அதைப்பற்றியும் மிகவும்
ந்தோஷம்.

அடுத்து, கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில் பற்றிக் குறிப்பிடு
றார்கள். அதிலே நம்முடைய அரசாங்கத்தின் நேரத்தையும்,
ணத்தையும், காலத்தையும் விரயம் செய்ய வேண்டாம் என்பது
ன்னுடைய அபிப்பிராயமாகும். கோவாபரேடிவ் சர்க்கரை ஆலை
டப்பதைப் பார்க்கிறோம். அதே போல சிமெண்ட் பாக்டரியும்
ட்டுறவுத் துறையில் நடத்திவிடவேண்டும் என்ற எண்ணம்
ற்பட்டுவிடுகிறது. டெக்ஸ்டைல் மாதிரி எல்லாவற்றிலுமே
ாபம் உடனே வருகிறது என்று நினைத்து விடுகிறார்கள். பொதுத்
றையில் இப்படி எல்லாவற்றையுமே எடுத்துக்கொள்ளத்
தவை இல்லை. சிமெண்ட் பாக்டரி வைக்க வேண்டுமானால்,
ரண்டு, மூன்று கோடி ரூபாய் போட்டு, பெரிய பாக்டரியாக
வைப்பதைவிட, சிறிய யூனிட்டாக ஆரம்பித்தால் நலமாக
ருக்கும். சுமார் பத்து லட்ச ரூபாய் முதல் போட்டு
ரம்பித்து லாபம் வருமா என்று பரீட்சார்த்தமாகப் பார்க்கலாம்.
ப்படி நான்கைந்து சிறிய யூனிட்களைப் பிற்போக்கான ஜில்லாக்
ளில், எங்கே வசதி இருக்கிறதோ அங்கே, ஆரம்பிக்கலாம்.

நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. அதைப் பார்த்துப் பெரிய அளவில் தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்கலாம். அப்படியில்லையென்றால், அந்த யூனிட்டையே பெரிதாக்கிக் கொள்ளலாம். ஆகவே, பெரிய பாக்டரியாகப் போடாமல், சின்னச் சின்ன பாக்டரியாகப் போட ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு விஷயத்தை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். செங்கற்கள் செய்யக்கூடிய சிறிய யூனிட்களைக்கூட பொதுத் துறையில் ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்? செங்கற்கள் சூளை சாதாரணமாகச் சில தனிப்பட்டவர்கள் போட்டுக்கொள்வார்கள். அதைப் பெரிதாகச் சொல்லி, பொதுத்துறையில் ஆரம்பிப்பதாகச் சொல்வது நம்முடைய 'எனர்ஜி' யை 'வேஸ்ட்' பண்ணுவதாகத்தான் இருக்கும். (குறுக்கீடு) ப்ரைவேட்டாகப் பெரிய யூனிட் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மெட்ராஸ் இன்டஸ்டரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் ஆரம்பிப்பது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அது பற்றி சந்தோஷம். அதன் மூலமாகத் தொழில் வளர ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னும் முக்கியமான ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். கவர்ன்மெண்ட் ஆப் இண்டியா போட்டிருக்கும் பாலிசி ரிஸல்யூஷன் என்ன? ஹெவி இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லக் கூடிய கனரகத் தொழில்கள் எல்லாம் பொதுத் துறையிலே இருக்க வேண்டும். கன்ஸ்யூமர் இன்டஸ்ட்ரீஸ் தனியார் துறையிலே இருக்கவேண்டும் என்று கவர்ன்மெண்ட் ஆஃப் இண்டியா பாலிசி ரிசல்யூஷன் தெரிவிக்கிறது. அதை அனுசரித்துத்தான் ராஜ்ய சர்க்காரும் நடந்து கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். ஆக, அந்தக் கொள்கையை பின்பற்றி நாம் தொழில் வளர்ச்சியில் ஈடுபடவேண்டும். எல்லாவற்றையும் நம் கையிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் கருதக் கூடாது. பொதுத் துறைக்கு நான் ஒன்றும் விரோதமானவன் இல்லை. பொதுத் துறையை நான் ஆதரிக்கக் கூடியவன்தான். ஆனால், நாட்டிலே கனரகத் தொழில்கள்தான் பொதுத் துறையிலே வரவேண்டுமென்று சொல்கிறேன்.

இராமனாதபுரம், மதுரை ஜில்லாக்களின் சார்பாக மதுரையில் சென்ற வருஷம் ஒரு ஸெமினார் நடந்தது. அதில் அனேக கருத்துகள் பரிமாற்றப்பட்டன. சிறு ரகத் தொழில்களும், நடுத்தர ரகத் தொழில்களும் தனியார் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் வரலாம்; பெரிய தொழில்கள் பொதுத் துறையில் தான் வர முடியும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. பெரிய தொழில்கள் என்று சொல்லும்போது, அது மத்திய

அரசாங்கமும், மாநில அரசாங்கமும் சேர்ந்து செய்யக் கூடிய தொழிலாக வரவேண்டும். குறிப்பாக மதுரை, இராமனாதபுரம் ஜில்லாக்களில் பெரிய தொழில்கள் வர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு இன்னும் ஏற்பாடு செய்ததாகத் தெரியவில்லை. அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழில் துறையில் தென்னிந்தியப் பகுதி வளம் அடையாமலிருப்பதற்குக் காரணமே இங்கு மீடர் கேஜ் ரயில் பாதை இருப்பது தான். ப்ராட் கேஜ் ரயில் பாதை வந்தால் தான் பெரிய இன்ஜினீரிங் தொழில்கள் இந்தப் பகுதியில் ஏற்பட ஏதுவாக இருக்கும். நான்காவது திட்டத்திலாவது மதுரையிலிருந்து தூத்துக்குடி வரையில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு ப்ராட் கேஜ் ரயில் பாதை அமைக்கப்படுவது மிகவும் அவசியமாகும். முக்கியமாக திருச்சியிலிருந்து தூத்துக்குடி வரையில் ப்ராட் கேஜ் ரயில் பாதை அமைக்க இப்பொழுதிலிருந்தே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரே ஒரு யோசனையைத் தெரிவித்து என் உரையை முடிக்கின்றேன். நான்காவது திட்டத்தை வகுத்து முடிவு செய்வதற்குள் அதைக் குறித்து உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்க இங்கே ஒரு சந்தர்ப்பம் கொடுப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்கு முன்னால் இப்பொழுதே என்னுடைய யோசனை என்னவென்றால், நான்காவது திட்டத்தை வகுக்க இந்த அரசாங்கம் முன்வருவதற்கு முன்பே, இந்தச் சபையில் உள்ள உறுப்பினர்கள் மீது நம்பிக்கை வைத்து, அவர்களில் ஒரு சிலரைக் கொண்டு ஒரு சிறிய கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டியின் மூலமாக நான்காவது திட்டத்தில் என்ன என்ன தொழில்களைப் பரவலாக எங்கெங்கே அமைக்கவேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கின்றேன்.

* திரு. வி. ஆர். பெரியண்ணன்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதத்தில் நான் பேசியபோது கூட, சேலம் மாவட்டத்தில் தொழில்பேட்டை துவக்காமல் இருப்பதைச் சுட்டிக் காட்டிப் பேசினேன். அதைப் பற்றி இப்பொழுது மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். சேலத்தில் தொழில் பேட்டை துவக்கப்பட வேண்டுமென்று 12-2-1960-லேயே அனுமதி வழங்கப்பட்டது. அதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு 4 ஏக்கர் 47 சென்ட் நிலம் வாங்கப்பட்டிருப்பதாக எனக்கு கணக்குக் கிடைத்திருக்கிறது. மேலும் நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தை கொடுக்க விரும்பாமல் கோர்ட்டில் Stay order வாங்கி இருப்பதால், நில

[திரு. வி. ஆர். பெரியண்ணன்] [11th March 1964

ஆர்ஜித வேலை முடிவுறாத நிலையில் இருப்பதாக மாவட்டத்திலிருந்து எனக்கு தகவல் கிடைத்தது. நிலத்தின் மதிப்பை நாம் மிகவும் குறைத்துக் கணக்கிடுவதால் தான் நிலச் சொந்தக்காரர்கள் நிலம் கொடுக்க மறுக்கிறார்கள் என்ற பொதுவான பிரச்னை இருந்துகொண்டிருக்கிறது. பக்கத்திலே இருக்கக் கூடிய நிலத்தினுடைய மதிப்பையும் அனுசரித்து அவர்களுடைய நிலத்தின் மதிப்புக்குள்ள தொகையை கொடுத்து, நில ஆர்ஜிதத்தை உடனடியாக முடித்து, தொழில் பேட்டையை துவக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிலத்தினுடைய மதிப்பைச் சர்க்கார் நிர்ணயிப்பதில்லை. லாண்டு அக்விஸிஷன் ஆக்ட் பிரகாரம் நிலத்தின் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு, நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அவர்கள் செய்வது க்வாஸி-ஜுடிஷியல் ஆக்ட். அந்தப் பணம் போதாது என்றால் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல் போடலாம். ஹை கோர்ட்டிலும் போடலாம், இப்போது போட்டிருக்கும் 'ரிட்' நிலத்தை எடுக்கக் கூடாது என்பதற்காக.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : பக்கத்தில் $4\frac{1}{2}$ ஏக்கர் வாங்கியிருக்கக்கூடிய நிலத்திலே உடனடியாக ஓரிரண்டு யூனிட்களை இந்த ஆண்டில் துவக்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு கனம் அமைச்சர் அவர்கள் சேலம் வந்திருந்தபோது கூட, 'அந்த நிலத்திலே வேலை துவக்கலாம்' என்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே, உடனடியாக அந்த வேலைகளைத் துவக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். நில ஆர்ஜிதத்திலே இதுபோன்ற சங்கடங்கள் இருப்பதாகத் தெரிகிறது. நில ஆர்ஜிதம் சம்பந்தமாக சில சுலபமான முறைகளை ஏற்படுத்திக்கொண்டு, நில ஆர்ஜித வேலையைச் சீக்கிரமாக முடித்து, தொழில் பேட்டைகளை நிறுவுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் மிக முக்கியமாக ஜவ்வரிசி தயாரிக்கப்படும் தொழில் நடந்து வருகிறது. அந்த உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, ஜவ்வரிசி தொழிற்சாலை ஆரம்பிக்கக்கூடியவர்களுக்கெல்லாம் தொழில்களுக்கான கடன் வசதி கொடுக்க வகை செய்யவேண்டும். அப்பொழுது தான் ஜவ்வரிசி உற்பத்தி அதிகமாவதற்கான வாய்ப்பு ஏற்படும். மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்குத் தனிச் சலுகைகள் அளிப்பதன் மூலம் அவர்கள் அதிகமாக மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்வதற்கு முடியும். அப்படி அதிகமாக மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியானால் ஜவ்வரிசித் தொழில் நல்ல முறையில் அபிவிருத்தி அடையும் என்று தெரிவித்து இந்தத் தொழில்களை நடத்துகிறவர்களுக்கும் சில சௌகரியங்களையும் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

11th March 1964] [திரு. வி. ஆர். பெரியண்ணன்]

அதுமட்டுமல்ல. இன்னும் எங்கள் மாவட்டத்தில் என்ன என்ன கனிப்பொருள்கள் கிடைக்கும் என்பது பற்றி ஆய்வு செய்வதற்காக சில அதிகாரிகள் வந்தார்கள். குறிப்பாக கொல்லிமலையில் பாக்ஸைட் கிடைக்கிறது என்றார்கள். அதுபற்றி ஆய்வு செய்த அதிகாரிகள் கொடுத்துள்ள முடிவுகள் என்ன என்பதைப் பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் கம்பளி, பாய் போன்றவற்றை உற்பத்தி செய்கிற சிறு தொழில்களை அங்கே விஸ்தரிப்பதற்காக இருக்கிற விஸ்தரிப்பு அதிகாரிகள் உடனடியாக எதையும் அங்கே நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். எந்த எந்த வட்டாரத்தில் என்ன என்ன குடிசைத் தொழிலை உடனடியாக விஸ்தரிக்க முடியுமோ, அதை விஸ்தரிக்க வேண்டும் என்று மக்களிடத்தில் இருந்து மனு கொடுத்தால் அதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் கொல்லி மலைப் பகுதியில் பழவகைகள் ஏராளம் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தப் பழவகைகளைப் பதனப்படுத்தி, டின்களில் அடைத்து விற்பதற்கும், ஜாம் செய்வதற்குமான தொழிற்சாலையைக் கொல்லி மலையிலோ, அல்லது மலை அடிவாரத்திலோ ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

(The hon. Member Sri K. S. G. Haja Sheriff was seen talking to Officers in the Official gallery.)

DR. B. NATARAJAN : Sir, is it in order for an hon. Member to have cross-talk with departmental officers, seated in the official gallery?

(No reply.)

* **டாக்டர் பா. நடராஜன்** : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தை ஆதரிக்கின்ற முறையில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை இங்கே தந்திருக்கிறார்கள். அதோடு அந்த அறிக்கையிலேயே நமது மாநிலத்தில் தொழில்கள் எவ்வளவு சிறப்பாக வளர்ச்சி அடைந்திருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டவும் சில புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார்கள். அங்கே குறிப்பிடப்பட்டுள்ளதைப் பார்த்தால் தொழில் வளர்ச்சி மிகவும் எடுப்பாக வளர்ந்துள்ளதைக் காணலாம். நமது மாநிலத்தில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நடந்தேறிவிட்டன. மூன்றாவது திட்டம் முடிவு அடையப்போகிற நிலைக்கு வந்திருக்கிறோம். இந்த திட்டங்களினால் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியைக் கனம் அமைச்சர் அவர்கள் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். ஆனால், அதில் எனக்கு ஒரு சில ஐயப்பாடுகள் எழுகின்றன.

முதலில் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் 12-13-ஆவது பக்கத்தில் முக்கியமாக சில தொழில்களின் உற்பத்தித் திறன் எவ்வளவு, உற்பத்தி எவ்வளவு என்பதான புள்ளிவிவரங்களைக்

கொடுத்திருக்கிறார்கள். மோட்டார்கள், சைக்கிள்கள், ஸ்கூட்டர், காட்டன் யார்ன், சிமிண்டு, சர்க்கரை போன்ற பல ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரிஸ் சம்பந்தமாக ப்ரொடக்ஷன் அண்டு கபாஸிடி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது கபாஸிடி க்ரியேடெட் என்பதில் பெரும் பள்ளம் விழுந்திருக்கிறது. உற்பத்தி வரிசையைப் பார்த்துவிட்டு, உற்பத்தித்திறன் வரிசையைப் பார்த்தால் முன்னது குறைந்திருப்பது தெரியும். நம்முடைய மாநிலத்தில் மட்டும் அல்ல, இந்தியா முழுவதிலுமே இப்படித்தான் இருக்கிறது. ஆயினும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலுமாவது இப்படி குறைந்திருப்பதற்கு, பள்ளம் விழுந்திருப்பதற்குக் காரணம் என்ன என்பதை நாம் பரிசீலனை செய்தாக வேண்டும். போதுமான மூலப் பொருள்கள் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைப்பதில் ஏற்பட்ட இடையூறு காரணமா? அல்லது எரி-பொருள்கள் வருவதில் ஏதாவது தடை இருக்கின்றனவா? இரும்பு, எஃகு போன்ற பொருள்கள் நமக்குக் கிடைக்கவில்லையா? இவைபற்றி எந்தவிதமான விளக்கமும் இல்லை. இன்னொன்று, நமக்கு எரி-பொருள்கள், மூலப் பொருள்கள் எல்லாம் தடையின்றி கிடைத்திருக்கலாம். இருந்தும் மெயின்டினன்ஸ்க்கு வேண்டும் அந்நிய செலாவணி ஆகியவற்றில் உள்ள தடங்கல்களினால் உற்பத்தி கபாஸிடியிலும் குறைந்திருக்கிறதா என்பதும் விளங்கவில்லை.

இரண்டாவது, இந்த அறிக்கையில் பல குறியீடுகளைக் கொடுத்துள்ளார்கள். மொத்தம் நமது மாநிலத்தில் தொழில்களில் இருந்து எவ்வளவு உற்பத்தியாகிறது, என்ன என்ன தொழில்களில் எவ்வளவு உற்பத்தியாகிறது என்கிற கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தின் மொத்த வருமானத்தில் தொழில்களிலிருந்து கிடைக்கிற வருமானம் எவ்வளவு? அது மாநில தேசீய வருமானத்தில் எவ்வளவு சதம்? அந்த விகிதாசாரம் ஆண்டுக்கு ஆண்டு எவ்வளவு வேகத்தில் பெருகி வருகின்றது? அகில இந்தியத் தொழில் வளர்ச்சியோடு எவ்வாறு ஒப்பிடக்கூடிய நிலையில் இருக்கின்றது, என்கிற விவரங்கள் ஒன்றும் இதில் கொடுக்கப்படவில்லை. அது தெரியாத வரையில் மாநில தேசீய பொருளாதாரத்தில் தொழில்களினால் ஏற்பட்டு இருக்கின்ற சிறப்பைத் தெளிவாக தெரிந்து கொள்ள முடியாது.

இன்னொன்று. நம்முடைய தொழில்களின் மூலம் உற்பத்தியாகும் பொருள் ஏதாவது ஏற்றுமதியாகிறதா? வட நாட்டிலிருந்து பல பொருள்கள் ஏற்றுமதியாகின்றனவே, அப்படி தென்னகத்திலிருந்து இன்ஜினீரிங் பண்டங்கள் ஏதாவது ஏற்றுமதியாகிறதா? ஏற்றுமதியானால் எவ்வளவு சதம் அதன் மூலம் வருமானம் பெருகியிருக்கிறது? ஏற்றுமதியாகவில்லையென்றால் இனிமேலாவது ஏற்றுமதியாக வசதிகள் இருக்கின்றனவா, அதற்கான முயற்சிகள் சிறப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பதைப்பற்றியும் இதில் ஒன்றும் தெரிந்துகொள்வதற்கில்லை.

தொழில் எல்லா மாவட்டங்களிலும் பரவலாக இருக்க வேண்டும். இவ்விஷயத்தில் கன்னியாகுமரி பின் தங்கிய நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே குறிப்பிட்டார்கள். ஒருவர் சொன்னார், "கன்னியாகுமரி மிகவும் சின்ன ஜில்லா அதனால் தொழில்கள் மிகவும் குறைவாக இருக்கிறது" என்று. உண்மையில் ஜனத்தொகை அடிப்படையில பார்த்தால் சென்னையில் 17 லட்சம் இருக்கும். இங்கே ஆர்க்கனைஸ்டு இண்டஸ்ட்ரி மூலமாக வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை 70,448. மொத்த ஜனத்தொகையில் 41 சத விகிதம் பெருந் தொழில் துறையை நம்பி வாழ்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைச் எடுத்துக்கொண்டால் மொத்த ஜனத்தொகையில் 2,721 பேர்களே தொழில் துறையின் மூலம் வாழ்க்கை நடத்துகிறார்கள். இது மொத்த ஜனத்தொகையில் .27 சத விகிதம். அதாவது ஆயிரத்துக்கு 27 பேர்களே தொழிலால் வாழ்கிறார்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதர தொழில்கள் இந்த புள்ளிவிவரத்தில் சேரவில்லை. இது ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரி சம்பந்தமானதுதான். ஆர்டிசான், சேரவில்லை. இன்னும் விவசாயத்துறை போன்றவற்றில் உள்ளவர்கள் சேரவில்லை. ஒரு பக்கம் விவசாய நிலமாக இருக்கும், இன்னொரு பக்கம் வெறும் பள்ளியினாக இருக்கும். ஒரு பகுதி கமர்ஷியல் சென்டராகவும், இன்னொரு பகுதி அக்ரிகலசரல் சென்டராகவும் இருக்கலாம். அப்படி இருக்க இந்தப் புள்ளிவிவரங்களைக் கொண்டு கனம் அங்கத்தினர் அந்தப் பகுதியில் ஆயிரத்துக்கு 27 பேர்களே தொழிலில் வாழ்கிறார்கள் என்று சொல்வது நியாயமாக இருக்குமா என்பதைச் சிந்திக்கவேண்டும். அவருக்குப் பொருளாதார நிபுணத்துவம் உண்டு. ஆகவே இப்படிப் பார்ப்பது சரியா என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

டாக்டர் பா. நடராஜன் : நான்-ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரியை மட்டும்தான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். சென்னை நகரத்தில் நூற்றுக்கு 41 பேர்கள் தொழிலால் வாழ்கிறார்கள் என்றால் கன்னியாகுமரியில் ஆயிரத்துக்கு 27 பேர்களே தொழிலால் வாழ்கிறார்கள் என்கிறபோது அந்த மாவட்டம் தொழில் துறையில் வளர்ச்சி பெற்றுள்ளது என்று சொல்ல முடியுமா? இதற்குப் பெரிய பொருளாதார நிபுணத்துவம் வேண்டாம். எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றிக் குறுக்கிட்டது இது முதல் தடவை அல்ல. இதைப் பற்றித் திரும்பவும் சொல்ல வேண்டி நேரிடுகிறது. 'ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரி' யால் எவ்வளவு பேருக்குத் தொழில் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று பார்த்தால் 1963-ம் ஆண்டிலே 'எம்ப்ளாய்மெண்ட் ப்ரொவைடெட்' 347,000 பேர்கள். இதிலே கன்னியாகுமரியைப் பொறுத்த அளவுக்கு 1,000-க்கு 27 பேர்களுக்குத்தான் வேலை கிடைத்திருக்கிறது. ஆனால் சென்னையிலே 100-க்கு 41 பேர் இருக்கிறார்கள். 11-30 a.m.

[டாக்டர் பா. நடராஜன்] [11th March 1964

"Number of factories have registered an increase of 42 per cent over a period of seven years"
என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"Employment has been stepped up by 19·5 per cent during the same period"
இதிலே எம்ப்ளாய்மெண்டை ஒரு குறியீட்டாகப் போட்டோம். ஏழு வருஷத்திலே 19.5 பர்செண்டாக அதிகரித்திருக்கிறது. அதாவது வருஷத்திற்கு 2.8 பர்செண்ட் ஆகிறது. நாம் அகில இந்திய வளர்ச்சியோடு நம்முடைய வளர்ச்சியை ஒத்துப் பார்த்துக் கொண்டே போகவேண்டும். இப்போது நாம் மூன்றாவது படியில் இருக்கிறோம். இதுவரை தொழில் திட்டங்களுக்காக 65 கோடி முதலீடு செய்திருக்கிறோம். மூன்றாவது திட்ட காலத்தில் முன்னை விடத் தொழில்கள் அதிகமாகப் பெருகி இருக்கின்றன. ஆனால் நம்முடைய முதல் போடும் இலக்கு என்ன அந்த இலக்கில் எவ்வளவு அடைந்திருக்கிறோம் என்று தெரியவில்லை. அகில இந்திய வளர்ச்சியில் 22.9 சதம் தொழிலில் முதல் போடுவது என்று இலக்கு வைத்திருக்கிறார்கள். அந்தக் கணக்கில் பார்த்தால் ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரிஸ் என்று சொல்லக்கூடிய தொழில்களில் கிட்டத்தட்ட 110 அல்லது 120 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டும். இப்போது 65 கோடி ரூபாய்க்கு வந்திருக்கிறார்கள். இன்னும் 45, 50 கோடிக்கு முதலீடு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் இன்னும் இரண்டு வருஷங்கள் இருக்கின்றன. அதற்குள் அந்தத் தொகையை முதலீடு செய்து விடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதை மனதில் வைத்துக் கொண்டு நம்முடைய வேலைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதில் இன்னொன்று என்னவென்றால், இந்த 65 கோடியைக் கணக்குப் பார்த்தால், இண்டஸ்ட்ரியல் ஃபினான்ஸ் கார்ப்பரேஷன் ஸ்டேட் பாங்கு போன்ற முதலீடு ஸ்தாபனங்கள் எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட இவர்களே 50 கோடிக்கு மேல் கொடுத்திருக்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் ஃபினான்ஸ் கார்ப்பரேஷன், ஸ்டேட் பாங்கு ஆகியவைகள் மூலம் கொடுக்கப்பட்ட தொகையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள்தான் நூற்றுக்குத் தொண்ணூறு இருக்கிறதே தவிர, மக்கள் தாங்களே பெரிதும் அல்லது முழுதும் முதல் போட்டு தொழில் ஆரம்பித்தல் என்ற நிலைமை இன்னும் வரவில்லை. இந்த மாதிரிக் கடன் உதவி கொடுக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. தொழில் வளர்ச்சிக்கு இது மட்டும் போதாது. மக்கள் தாங்களே அதிகமான அளவுக்கு முதலீடு செய்து தொழில்களை ஆரம்பிக்கும் அளவுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும்.

நண்பர் திரு. சாமிநாதன் அவர்கள் சிமெண்ட் தொழில், டெக்ஸ்டைல் ஆகியவற்றை கோவாப்பரேட்டிவ் முறையில் தொடங்குகிறோம் என்று சொன்னார்கள். இதற்காக இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்று அமைக்கப்படுவது

11th March 1964] [டாக்டர் பா. நடராஜன்]

பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும் போஸ்ட் ஆபீஸ் முறை,—டிப்பார்ட்மெண்ட் நடத்துகிற முறையானது—மேலை நாடுகளில் சோஷலிசத்தை நன்றாக நடத்துகிறவர்கள் கூட—பொருத்தம் இல்லையென்றுதான் கண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு 'ஆடானமஸ் கார்ப்பரேஷன்' வைக்கவேண்டும். பஸ் தொழிலைக் கார்ப்பரேஷன் வைத்து நடத்தி இருந்தால் நஷ்டமோ லாபமோ அது அவர்கள் பொறுப்பாகிவிடும். அரசாங்கமே இந்த மாதிரித் தொழில்களை ஏற்று நடத்துகிற முறையைத் திருத்தி 'ஆடானமஸ் கார்ப்பரேஷன்' ஆக வைக்க வேண்டுமென்றும் அந்த முறையில் எல்லாத் தொழில்களையும் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

டெவலப்மண்ட் கார்ப்பரேஷன் என்ன முறையில் வருகிறது என்று இந்த அறிக்கையில் ஒன்றும் விளக்கமாக இல்லை. ஆகவே, நாம் இண்டஸ்ட்ரிஸ் பொறுத்து என்ன தொழில்களை நடத்தப் போகிறோம், என்ன முறையில் நடத்தப் போகிறோம் என்பதைப் பற்றிச் சரியான ஒரு பாலிசி அறிக்கையிலே வேண்டும். இப்போது நம்முடைய மாகாணத்திலே இரண்டு விதமான காபிடல் மார்க்கட் இருக்கிறது. மார்வாரி, சிந்தி ஆகியவர்களிடம் கடன் வாங்கி நடத்துவது ஒன்று. அரசாங்கம், மெட்ராஸ் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் ஸ்டேட் பாங்கு மூலம் கடன் கொடுத்து நடத்துவது மற்றது. இந்த இரண்டு விதமான காபிடல் மார்க்கட்டில், ஒன்றில் அதிகமான வட்டி வாங்குவது நமக்குத் தெரிந்ததே. மோட்டார் தொழில் முன்னையதில் சிக்கிக் கிடக்கின்றது. ஆகையால்தான், டிரான்ஸ்போர்ட்டு தொழில் வாங்கிக்கொண்டிருக்கும் கடன்களையெல்லாம் அரசாங்கமே தனியாக ஒரு டிரான்ஸ்போர்ட் ஃபினான்ஸ் கார்ப்பரேஷன் வைத்துக் கொடுத்து உதவ வேண்டும். எப்படியும் நாம் டிரான்ஸ்போர்ட்டை என்றாவது ஒரு நாள் தேசியமாக்கப் போகிறோம். நாமே அதற்குக் கடன் கொடுத்து அதை பங்காகக் கூட மாற்றிக் கொள்ளலாம். இந்த முறையில் மத்திய அரசாங்கம் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டம் செய்வதாக இருக்கிறார்கள். இப்படிக் கடன் கொடுத்து பங்காக எடுத்துக் கொண்டால் கொஞ்ச காலத்தில் அரசாங்கத்துக்கு இந்தத் தொழிலில் கண்ட்ரோல் ஏற்படும். அதில் என்ன தான் லாப நஷ்டம் என்பதும் நமக்குத் தெரிந்துவிடும். இந்தக் கருத்துக்களைச் சொல்லி, இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

***திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் தலைவர் அவர்களே, கனம் தொழிலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கையின் மீது எங்கள் தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சேலம் மாவட்டம் தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. சில தொழில்களை அங்கே ஏற்படுத்தப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறி

னார்கள். சேலம் மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாக இருப்பதால் இப்போது ஏற்படுத்தப் போகிற தொழில்களால் அந்த மாவட்டத்தில் உள்ள வேலை வாய்ப்பு இல்லாத பிரச்சினை தீர்ந்து விடாது என்ற காரணத்தால் இன்னும் அதிக அளவிலே தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலத்திலே ஜவ்வரிசித் தொழிற்சாலை மிக முக்கியமான ஒன்று. அந்தத் தொழிலுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாதுகாப்பு இப்போது நீக்கப்பட்டிருக்கிற காரணத்தால் விலைகள் சரிந்து விட்டன. ஆகவே, அதற்குக் குறைந்த பட்ச விலையை நிர்ணயம் செய்து அந்தத் தொழிலை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்திலே 500-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகளிலே 25,000 பேருக்கு மேல் வேலை செய்து வருகிறார்கள். இந்தத் தொழில் அங்கே நசித்து விடுமானால் 25,000 பேர் வேலை வாய்ப்பு இழந்து தவிக்கக் கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, அரசாங்கம் இதிலே அக்கறை எடுத்து, மர வள்ளிக் கிழங்கு பயிரிடுவோரையும் ஜவ்வரிசித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி நல்ல தரமான ஜவ்வரிசியைத் தயாரிப்பதற்கான பயிற்சி பெற்று வரச் செய்தால் இங்கு தரமான ஜவ்வரிசியைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும். இதிலே அரசாங்கம் அதிக அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

சேலம் மாவட்டத்தில் பல கனிப் பொருள்கள் கிடைப்பது எல்லோருக்கும் தெரியும் அவற்றை பயன்படுத்திப் பல சிறிய தொழில்களையும் பெரிய தொழில்களையும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. கொல்லிமலைப் பகுதியை எடுத்துக் கொண்டால் அங்கே பாக்சைட், லைம்ஸ்டோன் போன்ற கனிப் பொருள்களும் இரும்பும் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். இவற்றைப் பற்றியெல்லாம் நல்ல முறையிலே பரிசீலனை செய்து பல தொழில்களை ஆரம்பிப்பதிலே அரசாங்கம் அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தவிரவும் பாலக்கோட்டிலே சர்க்கரைத் தொழிற்சாலை ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது. தீப்பெட்டித் தொழிற்சாலை காகிதத் தொழிற்சாலை முதலியவற்றையும் ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. கொல்லிமலையில் மூங்கில் பயிராகிறது. அதைப் பயன்படுத்தி hand made பேப்பர் யூனிட் ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது. அங்கு பல மூலிகைகள் கிடைப்பதால் மருந்துத் தொழிற்சாலைகளைக் கூட ஏற்படுத்தலாம். கொல்லிமலையில் தனியாக கவனம் செலுத்தி என்னென்ன தொழில்களை எல்லாம் அங்கே ஆரம்பிக்க முடியுமோ அவற்றையெல்லாம் ஆரம்பிப்பதற்கான முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ராசிபுரம் வட்டத்தை எடுத்துக் கொண்டால்

அங்கு நெசவாளர்கள் அதிகம் இருப்பதால் அங்கு ஒரு ஸ்பின்னிங் மில்லும் ஏற்படுத்தினால் அங்குள்ள நெசவாளர்களுக்கு நூல் சுலபமாக கிடைக்க வாய்ப்பிருக்கும். இப்போது பொற்கொல்லர்களுக்கு அளிக்கப்படும் நிவாரணம் 1,000 ரூபாய் என்றாலும் அதை அவர்கள் பெற மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்படும் நிவாரணத் தொகையை அதிகப்படுத்தி நீண்ட காலத்தில் அதைக் கட்ட வசதி செய்து தரப்பட வேண்டும். இப்போதிருக்கிற முறையில் ஆயிரம் ரூபாய் பல தவணைகளில் கொடுக்கப்படுகிறது. அதனால் அவர்கள் பயன் அடைய முடியாமல் இருப்பதால் குறைந்த பட்சம் 3,000 ரூபாயாவது கொடுத்து 20 ஆண்டுத் தவணையில் திரும்பிப் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலத்தில் ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஏற்படுத்த நிலம் இல்லாததால் தாமதப்படுகிறது என அறிகிறேன். ராசிபுரம் பக்கத்தில் கிட்டத்தட்ட 40 ஏக்கர் நிலம் சர்க்கார் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கு இந்த இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை ஏற்படுத்தினால் சர்க்காருக்கு உடனடியாக பூமி கிடைத்து விடும். ஆகவே அதுபற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம், நெடுந்தூர பஸ்களை தேசியமயமாக்க வேண்டுமென்ற திட்டத்தை வைத்திருக்கிறார்கள். எந்த மார்க்கங்களில் அதிகமாக பஸ் ஓடுகிறதோ அந்த மார்க்கங்களை எல்லாம் முதலில் தேசியமயமாக்கினால் மிகுந்த லாபம் தரும் என்று கூறிக்கொள்கிறேன். ராசிபுரம்—சேலத்திற்கு இடையே 5 நிமிடங்களுக்கு ஒரு பஸ் என்று 100 பஸ்கள் ஓடுகின்றன. இந்த ரூட்டை தேசியமயமாக்கி அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு பயன்படுத்தினால் பல வரிவகைகளைக் குறைக்க அது ஏதுவாகும் என்ற என் கருத்தையும் கூறிக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். முன்பெல்லாம் இந்த மன்றத்தில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொழில் வளர்ச்சி அடையவில்லை என்று கூக்குரல் எழுப்பியதை நாம் பார்த்தோம். ஆனால் இந்த ஆண்டு தொழில் வளர்ச்சி அதிகரித்து விட்டது. ஆனால் எங்களால்தான் அதிகரித்துவிட்டது என்ற கூக்குரலைப் பார்த்து மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன். யாராலேயோ வந்து விட்டது. எங்களால் தான் வந்தது என்று பெருமைக் கொடுத்து விடலாம் அவர்களுக்கு என்று நான் நினைக்கிறேன். தமிழகத்தில் இன்று தொழில் வளர்ச்சி ஏற்படுவதைக் கண்கூடாகப் பார்த்த பிறகு இனி மக்களிடம், தமிழகம் தேய்ந்து கண்ணுற பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பார்த்தால், தொழில்கள் வளர்ந்து, தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். பார்ப்பவர்கள் கோவைக்கு வந்து பார்க்கவேண்டும். கோவையிலிருந்து என் மாவட்டத்திற்குப்

போகும் பாதையில் வழிநெடுக இருக்கும் பூமியில் கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். சினிமா போன்றதற்கல்ல; தொழில் வைப்பதற்காக. இரண்டு பக்கத்திலும் தொழில் வளர்ச்சி அடையக் கூடிய வகையில் இருப்பதை அங்கு வந்து பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் உள்ளவர்களை அங்கு அனுப்பினால் நல்லது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். நம் நாட்டில் தொழில் வளர்ச்சி அதிகரித்து வருகிறது. பாரதத்திலேயே நாம் முதலாவதாக நிற்கிறோமா இரண்டாவதாக நிற்கிறோமா என்றால் முதலாவதாக என்று சொல்லக் கூடிய அளவில் சீக்கிரம் நம் மாநிலம் வந்து விடும். அப்படிப் பூர்த்தி அடையும் போதாவது தென்னகம் தேய்கிறது என்ற கூக்குரலை நிறுத்தி, 'தெற்கு வளர்ச்சி அடைந்து விட்டது' என்று சொல்வார்களா பார்ப்போம். அது சிறிது நாட்களுக்குள் வந்து விடும்.

அமைச்சர் அவர்கள் தம் முன்னுரையில் 'சில மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்த முடியாத நிலை இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக என் மாவட்டத்தைப் பொறுத்தவரை அதை ஒப்புக் கொள்கிறேன். என் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி அதிகம் ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் மின்சாரத்திற்காக அங்கு பணம் போட்டிருக்கிறோம் என்று சொன்னால் நாங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்து அதனால் பலன் அடையக் கூடிய தொழில்கள் மற்ற மாவட்டங்களில் வந்திருக்கிறது. நாங்கள் இல்லை என்றால் நீங்கள் இல்லை. நீலகிரி இல்லை என்றால் இந்த மாநிலத்தில் வேறு மாவட்டங்கள் வளர்ச்சி அடைய முடியாது. இந்நிலையில் மின்சார உற்பத்தியைப் பெருக்க அதிகப்படியான தொழிற்சாலைகள் ஏற்பட்டு அதன் பலனைப் பெரும் வகையில் எங்கள் ஜில்லா ஏற்படுத்திக் கொடுத்திருந்தாலும் எங்கள் மாவட்ட மக்கள் பிரச்னைக்கு என்ன செய்யவேண்டும்? தொழில் அதிபர்கள் தனிப்பட்டவர்கள் அங்கு தொழில் நடத்த பிரியப்படுவதில்லை. நடத்த முடியாது என்று சொல்லமுடியாது. பிரியப்படவில்லை. காரணம், அது குளிர் பிரதேசம். மலைப் பிரதேசத்திற்குப் போய்க் கஷ்டப்படுவானேன்? ப்ளெயின்ஸுக்குச் சென்று மேட்டுப்பாளையத்திற்கு அல்லது கோவைக்குச் சென்று தொழிற்சாலைகள் ஆரம்பிக்கலாமே என்று நினைப்பதினால்தான் அங்கு தொழில் வளர்ச்சி அடைய முடியாதிருக்கிறது. இன்று ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் வந்திருக்கிறது. எங்கள் மாவட்ட அங்கத்தினர் அவர்கள் கூறியதுபோல் அந்த மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில் சற்று அவர்கள் தயங்குகிறார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாகக் கூடத் தொழிலாளர்களை அமர்த்துவதாக இல்லாமல் தன்னிச்சையாக ஒருவர் மங்களூரிலிருந்து நீலகிரிக்கு இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள். வேலை கொடுக்கக் கூடியவர்கள் இப்படி இறக்குமதி செய்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கண்காணிக்கவேண்டும். சென்ற ஆண்டு பேசும்போது அமைச்சர் அவர்கள், "அதுபற்றி நான் சுற்றறிக்கை

விடுகிறேன்" என்று சொன்னதாக ஞாபகம். தேயிலையைப் பொறுத்தவரை அங்கு அதிகமாக இருப்பது தேயிலைத் தொழிற்சாலைகள். கூட்டுறவு முறையில் இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் நான்-ப்ளான் பணத்தில் கொடுத்து, கூட்டுறவு முறையில் கொடுத்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோத்தகிரியில் ஒரு பாக்டரி கட்டும் வேலையை ஆரம்பித்து விட்டுத்தான் நான் சட்டமன்றத்திற்கு வந்தேன். தனிப்பட்டவர்கள் 120 சிறிய தேயிலை பாக்டரிகள் வைத்திருக்கிறார்கள். தொழிற்சாலைகள் அமைத்த பிறகு அதில் உற்பத்தியாகும் உற்பத்திப் பொருளின் தரத்தைப் பார்க்கவேண்டும். தரம் நன்றாயிருந்தால்தான் நாம் அந்நிய நாடுகளுக்கு அதை ஏற்றுமதி செய்து அனுப்ப முடியும். சிறிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தேயிலையின் தரம் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தக்க அளவில் இருக்கிறதா என்றால் அவ்வளவாக இல்லை. சரியான மெஷினரிகள் இல்லாததின் காரணமாகத்தான் நல்ல தரமான தேயிலையை உற்பத்தி செய்யமுடியாத நிலையில் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இன்வஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனில் இருந்து ஸ்டேட் எய்ட் மூலம் பணம் கடன் கொடுக்கிறார்கள். ஸ்டேட் எய்ட் இன்டஸ்ட்ரிஸ் ஆக்டின் கீழ் 28 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டும், எந்தெந்த தொழில்களுக்கு அளிக்கலாம் என்பதில் தேயிலைத் தொழில் சேர்க்கப்படவில்லை. தேயிலை போர்ட் இருக்கிறதே, அவர்கள் கொடுப்பார்கள் என்று சொல்வார்கள். தேயிலை போர்ட் மூலம் பணம் வாங்குவதில் எவ்வளவு கஷ்டமிருக்கிறது என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கும். பெரியவர்கள் வேண்டுமானால் வாங்கிக் கொள்ளலாம். ஆனால், சிறிய தொழிற்சாலைகளை நடத்தக் கூடியவர்கள் வாங்க முடியாத நிலையில் கஷ்டப்படும்போது ஸ்டேட் எய்ட் இன்டஸ்ட்ரிஸ் ஆக்டின் கீழ் இப்படித் தேயிலை உற்பத்தி செய்கிறவர்களுக்குப் பணம் கொடுத்து அதன் மூலம் அவர்கள் நல்ல மெஷினரீஸ் வாங்கி தரத்தை உயர்த்தி நல்ல தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் அளவில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்றை மட்டும் குறிப்பிட்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் பொறுப்பில் எங்கள் பகுதியில் நடைபெறுகின்ற "கார்டைட் பாக்டரி"-யில் பாதுகாப்புக்கு வேண்டிய மருந்துகள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. இவ்விதம் தயார் செய்த மருந்துகள் வெளி மாநிலத்திற்கு அனுப்பப்படுகின்றன, அங்கு கொண்டு போய் தோட்டாக்கள் துப்பாக்கிகள் முதலியவை செய்கின்றார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், தொழில்கள் அதிகமாக இல்லாத எங்கள் பகுதியிலேயே துப்பாக்கிகள், தோட்டாக்கள் போன்றவைகள் தயாரித்தால் என்ன என்பதைப்பற்றி மத்திய சர்க்காரிடத்தில் கேட்டு இங்கேயே தயாரிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்விதம் செய்வதற்கான வாய்ப்பு இருந்தால், தொழில் வளர் பெருகுவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஜே. மாதா கவுடர்] [11th March 1964

அடுத்தபடியாக, ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பேப்பர் மில்லை ஆரம்பிக்கின்ற விஷயத்தில் எங்கள் பகுதியில் இதற்கு வேண்டிய கச்சாப் பொருட்கள் நிறைய உற்பத்தியாகின்றன. இவை தனியார் துறையில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது. எங்கள் பகுதியில் கிடைக்கின்ற கச்சாப் பொருட்களை எடுத்துக்கொண்டு போய் பவானிசாகரில் ஆரம்பிக்கலாமா, சேலத்தில் ஆரம்பிக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிற மனப்பான்மை இருந்து கொண்டிருக்கிறது என்று நான் இப்போது கேள்விப்படுகிறேன். தயவுசெய்து நான் கேட்டுக் கொள்வது, யாராவது எங்கள் பகுதியிலுள்ள கச்சா பொருட்களை எடுத்துக் கொண்டு அங்கேயே தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஒப்புக்கொண்டால் லைசன்ஸ் கொடுங்கள், அதல்லாமல் வேறு இடங்களில் கொண்டு போய் ஆரம்பிக்கின்றோம் என்று சொன்னால் தயவு செய்து லைசன்ஸ் கொடுக்காமல், நீலகிரியிலேயே ஆரம்பிக்க வேண்டும் என்று திட்டவட்டமான ஒரு முடிவுக்கு அரசாங்கம் வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. காஞ்சி மணிமொழியார்** : கனம் மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெறுகின்ற மான்யக் கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரேணைகளை ஆதரித்துச் சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் பேசும்போது, தொழில்வளம் இன்றையதினம் தமிழகத்தில் மிகவும் முன்னேறியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டில் இதே விவாதத்திற்குப் பதில் அளித்தபோது, நமது தொழில் அமைச்சர் அவர்கள் தமிழகம் ஒரு காலத்தில் தொழில் துறையில் முன்னேறியிருக்கிறது. மேல்நாடுகளில் எல்லாம் கால்நடைகளில் போய்க்கொண்டிருந்த நேரத்தில் நாம் மாட்டு வண்டியில் போய்க் கொண்டிருந்தோம், ஆனால் இப்போதும் நாம் மாட்டுவண்டியிலேயே போய்க் கொண்டிருக்கிறோம். மேல் நாட்டினரோ தொழில் புரட்சி ஏற்பட்டு விமானத்தில் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். நான் கூற விரும்புவது, உண்மையிலேயே மேல்நாட்டு நிலைமை எப்படியிருந்தாலும், இந்திய நாட்டை எடுத்துக்கொண்டால், வடக்கே இருக்கிற மாநிலங்களுக்கும் தமிழகத்திற்கும் இருக்கிற வேறுபாடு அந்த உதாரணத்தின்படி இருந்து விடக் கூடாது என்றும், வடநாட்டிலுள்ளவர்கள் விமானத்தில் போய்க் கொண்டிருக்கிறபோது, நாம் மாட்டு வண்டியிலேயே போய்க்கொண்டிருப்பது ஆகாது என்பதைத்தான் எங்கள் கட்சியிலுள்ளவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள். மற்ற மாநிலங்கள் தொழில் துறையில் எந்த அளவுக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறதோ அந்த அளவுக்குத் தொழில் துறை இங்கும் வளம் பெற வேண்டும். அதன் மூலம் பொருளாதார வளர்ச்சி பெருகவும், வேலையில்லாத் திண்டாட்டம் போகவும், இவற்றின்

11th March 1964] [திரு. காஞ்சி மணிமொழியார்]

மூலம் மக்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தவும் வழி ஏற்படும் என்ற கருத்துக்களைத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எடுத்துக் கூறுகின்றார்கள்.

பொதுவாக, மகாராஷ்டரம் போன்ற மாநிலத்திற்குத் தொழில் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைக் காட்டிலும், நம்முடைய தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை குறைவானது என்றும் மொத்தமாக மாநிலங்களைப் பார்க்கும்போது நமது மாநிலம் தொகை ஒதுக்கீட்டில் இரண்டாவது நிலையில் நிற்கிறது என்றும் சொன்னார்கள். ஏற்கனவே அந்த மாநிலம் வளர்ச்சி அடைந்திருக்கின்ற மாநிலம். அதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய மாநிலம் இப்போதும் பின்தங்கிய நிலையில் மாட்டுவண்டியில் போய்க்கொண்டிருக்கிற நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை அறிகிற பொழுது உண்மையிலேயே நாம் வருத்தப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய தொழில் வளர்ச்சி நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகின்றது என்று அறிக்கையில் சொல்லப்பட்டது. ஒரு நாடு முன்னேறுவதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது மின்சாரம், இரண்டாவது கனிவளம், மூன்றாவது நிலக்கரி, நான்காவது போக்குவரத்துக்கான வசதிகள், எண்ணெய் வளம் இவை போன்ற வசதிகள் நாட்டில் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இவைகள் எல்லாம் எந்த நாட்டில் மிக சிறப்பாக அமைந்திருக்கின்றனவோ அந்த நாடு உண்மையிலேயே தொழில் வளம் பெற்றதாக அமைய முடியும். அதன் மூலமாக நல்ல பொருளாதார வளர்ச்சி ஏற்படும், அதன் காரணமாக மக்கள் நல்வாழ்வை எய்துவதற்கு வழி ஏற்படும். நமது நாட்டைப் பொறுத்தவரையில், மின்சக்தி மிகவும் வளர்ந்திருக்கிறது. இவ்விஷயத்தில் நமது தொழில் அமைச்சர் அவர்கள் மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டு, எந்தெந்த இடங்களில் மின்சாரத் திட்டங்களை அமைக்க முடியுமோ அந்த இடங்களில் எல்லாம் மின்வளத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். இதன் மூலமாகத் தொழில் துறைக்கு மிகவும் தேவையான அளவு மின்சாரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. தற்போதுள்ள நிலைமைப்படி 142 கோடி கிலோ வாட் கிடைப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது தான். ஆனாலும், இப்போது வளர்ந்துவரும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப நாம் தயாரிக்கின்ற மின்சக்தி போதுமா என்று பார்த்தால் போதாது. பெரிய மின்சக்தித்திட்டங்கள, கிட்டத்தட்ட பூர்த்தியாகிவிட்டது என்றே சொல்லலாம். வேண்டுமென்றால் இனிமேல் சிறு சிறு திட்டங்களைப் போடலாமே தவிர, பெரிய திட்டங்கள் ஒன்றும் இந்த மாநிலத்தில் இல்லை என்று அறிவிக்கப்படுகிறது. ஆகவே இனிமேல் அனல் மின்சாரத்தையும், அணு மின்சாரத்தையும் தான் உற்பத்திசெய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இப்போது நெய்வேலியில் இரண்டு மூன்று அனல் மின் திட்டங்கள் போட்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் திட்டங்கள் பல செயல்பட துவங்கும் என்று அறிவிக்கப்

[திரு. காஞ்சி மணிமொழியார்] [11th March 1964

பட்டிருக்கிறது. அவையும்போதாது, ஆகவேதான் உடனடியாக நாம் அணு நிலையத்தை ஏற்படுத்தியாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்போது தான் நம்முடைய தொழில் வளருவதற்கு வாய்ப்பு ஏற்படக்கூடும்.

இரண்டாவதாக, நமக்குத் தேவைப்படுவது நிலக்கரி, நிலக்கரி இப்போது கப்பல் மூலமக வரவேண்டியிருக்கிறது, இதன் காரணமாக ஏராளமான செலவும் ஏற்படுகிறது. முக்கியமாக நமக்கு கோக் உற்பத்தி செய்கின்ற துறையில் தனியார் துறையில் யாரும் முன் வரவில்லை என்றும் தெரிகிறது இரண்டு மூன்று கம்பெனியார் முன் வந்தும் கூட காரியம் நிறைவேறவில்லை என்று தெரிகிறது. இதற்குத் தனியார் துறையை எதிர் பார்க்காமல் பொதுத் துறையில் அமைப்பதற்கு ஏதாவது வழிவகை இருக்கிறதா என்பதைப்பற்றித் தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பரிசீலனைசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, கனிவளத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில், ஏராளமான கனிப் பொருட்கள் பூமிக்குள் புதைந்து கிடக்கிறது என்று பல இடங்களைத் தோண்டிப் பார்க்கும்போது தெரியவந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இதற்கு முழு மூச்சான ஆராய்ச்சி நடத்தப்படவில்லை. இதுவரை செய்த ஆராய்ச்சிகளில் நமக்குக் கிடைத்தது சேலம் இருமபு ஒன்றுதான். அது கூட தரமான இரும்பு அல்ல என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இது நம்முடைய துர்பாக்கியம் என்று தான் சொல்லவேண்டும். இந்தப் பரிசீலனையைச் சீக்கிரமாக முடித்து, மூன்றாவது திட்ட காலத்திற்குள்ளாகவே உருக்குத் தொழிற்சாலையைத் துவக்குவதற்குத் தீவிரமான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மூன்றாவது திட்ட காலத்திற்குள்ளாகவே இது அமையப் பெற்றால் தமிழகம் நல்லதொரு தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கு வசநியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எந்தத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினாலும் சீக்கிரமாகவே லாபம் பெற்றாக வேண்டும் என்ற எண்ணம் இப்போது எல்லோரிடத்திலும் இருந்து கொண்டிருக்கிறது என்றும் அந்த முறையில் பார்க்கிறபொழுது, டெக்ஸ்டைல் மில், சிமிண்ட் ஆலை, சர்க்கரை ஆலை இவைகளில் தான் முதலீடு செய்ய முன் வருகிறார்கள். என்றும் கனம் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். நூல் மில்கள் பல ஏற்பட்டும் கைத்தறிக்காரர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு இன்னும் சரியான முறையில் நூல் கிடைக்கவில்லை. பதினெட்டு ரூபாயாக விற்ற 80 நம்பர் நூல் 115 ரூபாய் 120 ரூபாய் கொடுத்து கைத்தறிக்காரர்கள் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். சாதாரணமாக இரண்டு, மூன்று தறிகள் வைத்துக்கொண்டிருந்தவர்கள், இப்போது ஒரு தறியோடு குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே புதிய மில்கள் பல துவக்கப்

11th March 1964] [திரு. காஞ்சி மணிமொழியார்]

பட வேண்டியது அவசியமாகும். இப்போதும் 13 பேர்களுக்கு டெகஸடைல் மில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருககிறது என்று கேள்விப்படுகிறேன். ஆனால் 11 மில்களுக்கு லைசனஸ கொடுத்திருப்பதாகப் பத்திரிகையில் செய்து வந்திருக்கிறது. அதனபடி கொடுக்கப்பட்டிருககின்றன அனுமதிகளைப் பார்க்கினற நேரத்தில் எனககு ஒரு சநம்தகம் வருகினறது. இந்த நாட்டில பல அரசியல் கட்சிகள இருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு அரசியல் கட்சிதான் பொருளாதாரத் துறையிலும், தொழில் துறையிலும் சிறப்பாக முன்னேறவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறதோ என்று எண்ணவேண்டிய நிலைமையில் இருக்கிறது. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், இந்த 11 லைசென்ஸ் வாங்கியிருப்பவர்களும் காங்கிரஸ்காரர்களாக இருக்கிறார்கள். மூன்று பேர்கள் சட்டமன்றத்தில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள், இந்த மூன்று பேரும் எம்.எல்.ஏ.-க்கள். இன்னும் நான்கு பேர்கள் காங்கிரஸ்காரர்கள். மற்றவர்கள் காங்கிரசுக்கு தேர்தல் நிதி வழங்கிய பெரிய செல்வந்தர்கள். ஏன் அத்தனை லைசென்ஸையும் இவர்களுக்கே கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எந்த அடிப்படையில் இவர்களுக்கு கொடுக்கப்பட்டது என்பதை நான் உண்மையிலேயே தெரிந்து கொள்ள வேண்டும். இந்த மன்றமும் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறது. எந்த அடிபடையில் கொடுக்கப்பட்டிருக்கிறது, யாருடைய சிபாரிசில் கொடுக்கப்பட்டிருக்கிறது, எந்தக் காரணத்திற்காக ஒருமுகமாக ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக் 12-00 noon கப்பட்டிருக்கிறது என்பதற்கான காரணம் தெரிவிக்கப்பட வேண்டும். அதற்கான பதிலை அமைச்சர் அவர்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

இனி வழங்கப்படுகிற தொழில்களிலும், அமைக்கப்படுகிற சில கவுன்சில்களிலும், கமிட்டிகளிலும் எல்லாக் கட்சிக்காரர்களும் இடம் பெறவேண்டும். இதிலே பாரபட்சம் கூடாது. இந்த லைசென்சை பொறுத்த அளவில் பாரபட்சமாக இந்த அரசு நடந் திருக்கிறது என்ற குற்றச்சாட்டை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாகச் சொல்லப் போனால், தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள். அதன் மூலம் ஜவளி வாங்கி விற்றுக்கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். இப்படி கைத்தறியில் ஈடுபட்டவர்களும், கைத்தறி ஜவுளி வியாபாரம் செய்துகொண்டிருக்கிறவர்களும் சேர்ந்த 3-4 சங்கங்கள் அனுமதி கோரி விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய விண்ணப்பம் என்ன ஆயிற்று? ஏன் குப்பைத்தொட்டிக்குப் போயின? நெசவுத் தொழில் செய்கிறவர்களுக்கு அல்லவா முதல் சலுகை காட்டவேண்டும்? அவர்களுக்குச் சலுகை காட்டாமல் அந்தத் தொழிலுக்கு அப்பாற்பட்டவர்களுக்குக் கொடுப்பதில் என்ன முறை இருக்கிறது என்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இனியாவது வழங்கப்படுகிற லைசென்ஸுகள் பாரபட்சம் இல்லாமல் எல்லோருக்கும் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. S. G. HAJA SHERIFF: Mr. Deputy Speaker, Sir, I rise to speak in support of the Demands made by the Hon. the Minister for Industries, this morning.

Sir, he has placed before this House a 'Review' of the Industrial Development in Madras State for the years 1963-64 and this gives full details with facts and figures, which cannot be contradicted by my esteemed friends in the Opposition. Any person, Mr. Deputy Speaker, Sir, who goes through this report in a very unbiassed manner cannot, but compliment the Government for the tremendous effort taken by them for making this State a 'Industrially very powerful State'. If we compare our position 10 years back and what we are to-day, we will certainly realise that we have gone far and far ahead in the industrial development touching varied lines of production.

Sir, after having achieved political independence, it was agreed that we should achieve 'economic independence' and this can be achieved only by establishing phased programmes and framing many Five-Year Plans. During these two-and-a-half Five-Year Plans, we have improved tremendously in each and every sector—particularly one of the Sector which is considerably developed is the industrial sector. To-day, our State is second in the highly industrially developed States of our country. It is because of the initiative taken by the Hon. the Minister for Industries. Our compliments go to a considerable extent both to the Hon. the Minister and the Government for their very good work in this direction. It is not enough if only the Government gives assistance; they should also create necessary climatic conditions for the entrepreneurs and industrialists to start the industries apart from giving assistance and facilities. As a representative of the Business Community, I can say without any hesitation that both the Trade and Commerce people are congratulating the Hon. the Minister for Industries for the excellent co-operation and facilities that he is giving to the entrepreneurs in all their endeavours to start the industries.

Sir, starting of new industries, no doubt creates more employment, more opportunities, more wealth and more production, but at the same time, we should also think about the present difficulties that are confronted by the industrialists. I cannot but hope that the Government would certainly try to solve the problems to the extent that is possible. If any person wants to start any industry, it involves foreign exchange. He has to go to Bombay or Delhi for this purpose for number of times. Not only it involves expenses but also takes considerable time. It tests the patience of even a very patient man. In this connection, I would suggest that the Government may insist opening of branches

of such of those financial institutions, which are engaged in granting foreign exchanges. These branches should have suitable officer to give assistance to the industrialists. This would help the industrialists to a considerable extent. In addition to this, it would also enable the industrialists to discuss with them here without spending more money and time. It would also save their expenditure and give more stimulus for rapid industrialisation. It would be very helpful in the present rapidness with which we are progressing in industrialisation. Sir, I congratulate the Minister for Industries for his statement that the Government are examining the proposal to set up Industrial Development Corporation. It is a very good move and I am sure that it would be a accomplished factor within few months or even a year. At the same time, I should also congratulate the Government for appointing an Industrial Adviser. In addition to this, I would suggest that Information Centres should also be opened to give all particulars that are required by the industrialists to start industries. Information confining to all matters regarding power, water, fuel or any other information that are required by the industrialists or entrepreneurs. Of course, at present, the entrepreneurs and mercantile community are getting such information. If the Information Centre is established, it will go a long way in giving assistance to the entrepreneurs.

Last week, I was in another capital. I was discussing with some of the industrialists there. During the discussion, I came to know that they have a high regard for our Industries Minister and the rapidity with which we are progressing. I cannot say, that they are zealous, but they view our rapidness with great esteem and I can say very earnestly that it was due to intensive interest and the attention given by the Minister for Industries and the Government in this direction. It goes a long way even in making people from other States to come and start industries here.

Thank you, Sir.

* திரு. ப. உ. சண்முகம்: சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கொண்டுவந்திருக்கிற வெட்டுப் பிரேரபணைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்று காலை அமைச்சர் அவர்கள் மெத்த சிரமப்பட்டு மற்றவர்களைப் புண்படுத்தாத வார்த்தைகளைப் பயன்படுத்தி எல்லோரையும் திருப்திப் படுத்துவதற்குப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்கள். தமிழ்நாடு தொழில் வளம் பெற்றிருக்கிறது என்ற அவர்களுடைய திறமையான வார்த்தை நான் கூடக் கேட்டு மகிழத் தயாராக இருக்கிறேன். பாராட்டத் தயாராக இருக்கிறேன். ஆனால், இப்பொழுது ஏற்பட்டிருக்கிற தொழில்வளம் நாட்டிற்குப் போதுமானது அல்ல என்று, அவரே ஒத்துக்கொண்டிருப்பதை எண்ணிப்

முறைக்கு வருமா என்பது சந்தேகத்திற்குரிய விஷயமாக இருக்கிறது. நெய்வேலி நிலக்கரியை எடுத்து சேலம் இரும்பைக் காய்ச்சும் அளவுக்கு இரண்டும் இணைந்த திட்டமாக வரும், வரும், வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், காலதாமதம் ஆகிக்கொண்டே இருக்கிறது. வரக்கூடும். ஆனால், நான் கேட்க விரும்புவது, இந்தத் துறையிலே மட்டும் ஏன் இவ்வளவு கவனக்குறைவு? ஏன் இந்தத் திட்டத்தை மட்டும் துரிதப்படுத்துவதற்குத் தயக்கம்? இது சேலம் இரும்பின் துர்ப்பாக்கியமா? மற்ற இரும்புத் தொழிற்சாலைகள் துரிதமாக ஏற்படுத்தப்படவில்லையா? இது தமிழ்நாட்டில் ஏற்பட இருக்கிறது என்ற ஒரு காரணத்தைத் தவிர வேறு ஏதேனும் காரணம் காட்ட முடியுமா? சேலம் இரும்பிற்கு மட்டும் ஏன் இந்தப் பயங்கரப் பரீட்சை? பொகாரோ தொழிற்சாலை துரிதப்படுத்தப்படவில்லையா? துர்காபூர் தொழிற்சாலை துரிதமாக அமைக்கப்படவில்லையா? சேலத்தில் இரும்பு 35 சதவிகிதம் தான் என்று சொன்னார்கள். அது போதும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியும் கூட, இன்னும் அடிப்படை வேலைகள் துவக்காததன் காரணம் என்ன சர்வே படத்தோடு நிறுத்திவிடாமல், இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும், துரிதப்படுத்தவேண்டும். சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை துரிதப்படுத்தி நாட்டு மக்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் அதைக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குழந்தைகள் உணவு பற்றாக்குறை நமக்கு இருக்கிறது. குழந்தைகள் உணவு உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்று நீலகிரியில் துவக்குவதாகச் சொன்னார்கள், என்ன ஆயிற்று? காங்கிரஸ் கட்சி உறுப்பினரே கூட குழந்தைகள் உணவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கைவிடப்பட்டதுபற்றி உண்மையிலேயே வருத்தப்பட்டுக் கொண்டார்கள். நான் கேட்க விரும்புகிறேன் இந்த மன்றத்தில் கொடுக்கிற நிதி நிலை அறிக்கையிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதாகச் சொல்லுவது, குழந்தைகள் உணவு தயாரிக்கும் தொழிற்சாலை நிச்சயம் வரும் என்று சொல்லுவது, குழந்தைகள் உணவு தயாரிக்கும் தொழிற்சாலையை எங்கள் சர்க்கார் ஆரம்பிக்கப் போகிறது என்று காங்கிரஸ் மெம்பர்கள் மார் தட்டிக்கொள்வது, பிறகு சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தொழிற்சாலை கைவிடப்படுவது வாதத்திற்குரியது தானா? நாடு ஏற்றுக்கொள்ளுமா? சரியான முறை தானா? சத்துள்ள உணவை குழந்தைகள் உண்ண வேண்டும். அந்தத் திட்டம் ஏன் கைவிடப்பட்டிருக்கிறது? அந்தத் திட்டத்தைக் கைவிட்டதற்குக் காரணம் என்னவென்பது புரியவில்லை.

இந்த சர்க்கார் நிதி நிலைக் குறிப்பை நான் பார்த்தேன். சென்ற ஆண்டு குடிசைத் தொழிலுக்காக கொடுக்கப்படுகிற மான்ய உதவித் தொகை பெரும் அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் கொடுக்கப்பட்ட குறிப்பையும் நான்

பார்த்தேன். 'வேறு இனங்களுக்கு நாங்கள் அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம், ஆகவே, இதைக் குறைத்துவிட்டோம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. உதவி மான்யத் தொகையைக் குறைத்துவிட்டார்கள். காரணம் என்ன? இந்த ஆண்டில் அதற்காக ஒதுக்கியிருக்கும் தொகையைப் பார்த்தால், அதுவும் குறைந்து தான் இருக்கிறது. சென்ற ஆண்டு குறைந்த தொகையையாவது சேர்த்து ஒதுக்கியிருக்கிறார்களா என்று பார்த்தேன். அதுகூட இல்லை. ஏன் உதவி மான்யத் தொகையைக் குறைத்தார்கள் என்று புரியவில்லை.

சர்க்காருக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். கருப்புப் பணம் பற்றிப் பேசப்பட்டது. கருப்புப்பணத்திற்கும், தொழில் துறைக்கும் என்ன சம்பந்தம் என்று யாரும் கேட்கவேண்டாம். சம்பந்தப்படுத்தித் தான் நான் பேசுகிறேன். கள்ளப்பணம் பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டது. கருப்புப்பணம் யாரோ ஒருவரிடம் தான் இருக்கிறது என்று கருதவேண்டாம். இந்திய சர்க்கார் நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் புவனேசுவரத்தில் சொன்னார்கள். நான் புவனேசுவர மகாநாட்டிற்குச் சென்றுவரவில்லை. பத்திரிகையில் போட்டிருப்பதைப் பார்த்தேன். 3,000 கோடி ரூபாய் கருப்புப் பணம் இந்த நாட்டில் பதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். கருப்புப் பணம் 3,000 கோடி ரூபாய் தனிப்பட்ட ஒரு ஆளிடத்தில் இருக்க முடியாது. பரவலாக பல இடங்களில் இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்க சர்க்கார் எந்த முயற்சி எடுத்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கத் தயார். அந்தப் பணத்தை வெளியே கொண்டுவர எப்படியாவது முயல வேண்டும்; அது நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற அக்கறை இருக்குமானால், நான் அரசினரைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், குறிப்பிட்ட தொழில்களில் அந்தப் பணத்தைக் கொண்டு வந்து முதலீடு செய்வதற்கு உதவியாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அது நாட்டு மக்களுக்குப் பயன்படும், குறிப்பிட்ட தொழில்களில் அந்தப் பணத்தைக் கொண்டு போடுகிறவர்கள் அதற்கான கணக்கைக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்காது என்று சொல்லுங்கள். நம்முடைய கவலையெல்லாம், பதுக்கப்பட்ட பணம் வெளியே கொண்டுவரப்பட்டு, தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும், நாட்டு மக்களுக்கு அது பயன்பட வேண்டும். அந்த வகையில் திட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கார் துறையிலே நடத்தப்படும் தொழிற்சாலைகள் துரிதமாக நடத்தப்படவேண்டும். தனியார்த் துறைக்கு இவ்வளவு அதிகமாக பெரிய தொழிற்சாலைகளை விட்டுவிட்டு, சர்க்கார் துறையிலே குறைந்த அளவு தொழிற்சாலைகளை வைத்துக்கொண்டிருப்பதற்கு என்னுடைய வருத்தத்தையும், கண்டனத்தையும் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[11th March 1964

* Sri S. NANJUNDA ROW: Mr. Deputy Speaker, Sir, I hope the House will for give me if I confine my speech first to matters relating to my constituency. Let me thank the Government first because in the new spindle allotment, I understand, Vedasandur area is going to be allotted 12,000 spindles. I am very happy that this industry is going to be started in the Vedasandur Block because it would give employment to nearly 300 to 400 educated youths there. Vedasandur is a very backward area where the rainfall is just twenty to twenty-five inches annually. So, there is no scope for the development of good agriculture in that area. It is only this industry using the spindles allotted by the Government, which can save some starving people there. I really thank the Government for proposing to start this industry there.

Then, I thank the Government in respect of another matter. That relates to the establishment of a cement factory at Karur. It is going to function in the near future. It is going to utilise the lime-stone deposits in my constituency. That would give additional labour for the people in my constituency. So, these two industries are really helpful. And I also request the Government to give permission to start a cement production unit on a small scale in the Vedasandur block because lime-stone deposits on a large scale are found there.

Then, let me come to the Demands before the House. Last year for the Industries Demand a sum of about Rs. 5.22 crores was provided and this year it is about Rs. 5.35 crores. Last year for the Demand—Capital Outlay on Industrial Development a sum of about Rs. 4.5 crores was provided and this year it is about Rs. 6.73 crores. I understand there is an increase in the demand on capital outlay on industries. This should be congratulated. I do not know why last year's budget has been repeated this year also so far as Demand XX is concerned. There is an old saying which we have studied in high schools, that industry is the road to progress and prosperity. So unless there is industry our country cannot progress and our Government is doing justice in this direction. As agriculture cannot be taken as a very prospeorus industry at least the rural industries can come to the rescue of our villages because there is so much of population depending on agriculture and unemployed people in the agricultural field can be attracted only if new industries come up in rural areas. Somehow I feel that "education" in our budget is having the lion's share, say about Rs. 31 crores. I don't grudge it. If we total up all the demands under agriculture (Rs. 7 crores), fisheries (Rs. 0.74 crores), animal husbandry (Rs. 1.97 crores), industries (Rs. 5.35 crores), khadi (Rs. 0.12 crores), irrigation (Rs. 5.72 crores), labour and capital outlay on industries (Rs. 6.73 crores)—if we total up all these (I include irrigation also since expenditure on that also goes to the benefit of an industry) it comes to Rs. 35 crores, more or less equal to the amount we spend on 'education'. Only if we spend the same Rs. 30 crores on each of the Demands, Industries, Agriculture, etc. We will have quick and real progress in our country. What we spend on 'education' we must spend on

11th March 1964] [Sri S. Nanjunda Row]

industry and agriculture. I do not want any curtailment in the 'education budget'. But at the same time, I say, the same amount should be set apart for industry, agriculture, etc. I would request the Hon. Minister for irrigation and Hon. Minister for Industries to fight for the same amount next year, so that prosperity may descend on us quickly. Of course we have our own financial limitations. But that should be our aspiration and plan, which we should have in our minds. I think our industrial progress is quite satisfactory at the same time. I should say that the growth of industries in the cities is deplorable. Government should put a stop to expansion of industries around cities. I think protected water-supply and electric supply and other amenities attract the building of new industries around cities. If we have industries in rural areas, civilisation could be brought quickly in rural areas. I request Government to allow the growth of industries in rural areas to avoid many other complications that we now find in urban areas.

I want Government to ban money-lending by private people. If we put a stop to private money-lending, that money could be made available for starting so many new industries in rural areas. The co-operative field is there which lends money. But what I say is, let private money-lending be put a stop to. Mr. Chester Bowles, U.S. Ambassador to India, who had recently addressed students of Madras University made an observation. He paid a great tribute to the growth of industry in our State. He told that production, of consumer goods, was so essential in all free democracies and that it was being realised in Russia now that they should produce more and more consumer goods in order to strengthen Communism. When production of consumer goods is so essential in Russia, perhaps it is all the more necessary in our country. Then what consumer goods should we produce? We have the "shaving blade industry". But I must say that locally made blades are not up to the mark and instead of cutting the hair the locally made blade cuts the skin. I think it is a waste to help such an industry. Instead of purchasing such locally made blades, I think it would be better to go to the barber-shop; thereby we at least help a man who is making a living by having the barber-shop.

Now there is so much demand for starting of Vanaspathi factories. I think Vanasapathi is not an essential industry to be so much encouraged. Any day village Ghani oil is better than Vanaspathi.

Stone-cutters, carpenters, blacksmiths and handloom weavers in the villages do not get full employment in the rural areas throughout the year. I request that Government should do something concrete in that direction to help all these people in the rural areas.

I also want that all railway lines should be converted into broad-gauge lines. No doubt it does not lie in the power of Madras Government. But I request that Madras Government should impress on the Central Government to convert gradually all railway lines in Madras State into broad gauge lines. Thank you, Sir.

கிறோமே தவிர, பெரும் கன ரகத் தொழில்களை நிறுவுவதில் நாம் வெற்றி பெறவில்லை. அத்தகைய நிலைமை இங்கே அதிகமாக ஏற்படவில்லை.

இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், பொருளாதார வளர்ச்சியை, தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்கு நிதி வசதி செய்து தரும் அளவுக்கு மாநில அரசினரிடத்தில் போதுமான வசதி இல்லை என்ற நிலைமை உணர்த்தப்பட்டது. நம் மாநிலத்தில் அதிகமான மூலதனம் போட வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றனவா என்றால் இல்லை. தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் முறையில் மூலதனம் போட மிகவான வாய்ப்பு இல்லை என்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தம் முன்னுரையில் தெரிவித்தார்கள். இந்த நிலையிலே, நிதி வசதியை அதிகமாக ஆக்கும் முயற்சிகளிலும், இங்கே தொழில்களை அதிகமாக ஆக்கும் முயற்சிகளிலும் ஈடுபட வேண்டிய கடப்பாடு அரசினரைச் சார்ந்ததாக அமைகிறது.

இப்பொழுது கனம் உறுப்பினர் டாக்டர் நடராசன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியதைப் போல, தொழில் வளர்ச்சி மூலமாக உற்பத்திப் பொருள்களைப் பெருக்கி வருமானத்தைப் பெருக்கும் முறையிலும், ஏற்றுமதியைப் பெருக்குகின்ற முறையிலும் எந்த அளவு தென்னகப் பகுதி, குறிப்பாகத் தமிழகப் பகுதி, வளர்ந்திருக்கிறது என்ற புள்ளி விவரங்களை இந்த அறிக்கை மூலமாக நம்மால் பெற முடியவில்லை. பொதுவாக ஏற்றுமதியின் அளவைப் பார்க்கும்போது, இந்திய துணைக்கண்டத்திலிருந்து ஏற்றுமதியாவதில், மூன்றிலொரு பங்கு கூட தென் பகுதியிலிருந்து ஏற்றுமதி ஆகவில்லை. அப்படி ஏற்றுமதியாவதும் பெரும்பாலும் மூலப்பொருள்கள் தாம் ஏற்றுமதி ஆகின்றன. உற்பத்திப் பொருள்களை மிகவாக ஏற்றுமதி செய்யும் நிலைமை இல்லை. மற்ற பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக மிகக் குறைந்த அளவிலேதான் உற்பத்திப்பொருள்களின் ஏற்றுமதிகள் இருக்கின்றன. எனவே, அந்த அளவுக்குத் தொழில் வளம் பெருகவில்லை, ஏற்றுமதி செய்ய வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய வழிவகைகளை நாம் பெற முடியவில்லை என்பதைத்தான் இதன்மூலம் நாம் அறிகிறோம். இங்கே தொழில்களிலே மூலதனம் போட வாய்ப்பு இல்லை, அரசினரிடத்திலும் வாய்ப்பு இல்லை என்கிறபோது, மத்திய அரசினர்தான் மான்யம் வழங்க வேண்டும். தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகள் வளர்ச்சியுறச் செய்வதற்கு அதிக சலுகை கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்தியப் பேரரசுக்கு அமைந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய குறிக்கோளாக மத்திய அரசினர் வெளியிட்டிருக்கின்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, பின்தங்கிய பகுதிகளுக்கு, வேலை வாய்ப்பு அதிகமாகக் கிடைக்காத பகுதிக்கு மூலப்பொருள்கள் கிடைக்காத பகுதிகளில் மூலப் பொருள்களை வரவழைத்து உருவாகக்கூடிய தொழில்களை நிறுவக்கூடிய பகுதிகளுக்கு சலுகைகள் தரவேண்டும் என்பது தெளிவாகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம் தெளிவுபட சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய நோக்கமாவது—

"Provision of facilities such as power, water-supply, transport and communications, training institutions, etc., in areas which were lagging behind industrially or where there is greater need for providing opportunities for employment."

என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும்,

"In the location of new enterprises, whether public or private, consideration was given to the need for developing a balanced economy in different parts of the country. In particular this aspect was to be kept in view where the location of an industry was not determined almost entirely by the availability of raw materials or other natural resources."

என்ற நோக்கத்தின் அடிப்படையிலே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே, "ஏன் பெரிய கன ரகத் தொழில்கள் இங்கே அமைக்க வாய்ப்பு இல்லை?" என்று கேட்கிறபோது, "அதற்கான மூலப் பொருள்கள் கிடைக்க வழி இல்லை" என்று சொல்லப்படுகிறது. 'மூலப் பொருள்களை நம்மால் துவக்கக்கூடிய, பெரிய கன ரகத் தொழில்களை இங்கே ஆரம்பித்து, அதன் மூலமாக இந்தப் பின்தங்கிய பகுதி முன்னேறுவதற்கு வழி காண முடியாதா?" என்று கேட்கும்போது, "அதற்கேற்ப ரயில்வே போக்குவரத்துப் பாதை அமையவில்லை", என்ற காரணங்கள் காட்டப்படுகின்றன. பெரிய பெரிய கன ரகத் தொழிற்சாலைகள் இருக்கிற இடத்தில் உற்பத்தியாகும் பண்டங்களை ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு அகற்றவேண்டிய அவசியம் ஏற்படுகிற பகுதிகளில் புதிதாக ரயில் பாதைகள் போட வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே, பல ஆயிரக்கணக்கான மைலுக்குப் புதிய ரயில் பாதை போட வாய்ப்பு வட பகுதிக்கு இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி, அங்கே ரயில் பாதை அமைக்கிறார்கள். "பின் தங்கியிருக்கக்கூடிய பகுதிகளில், மூலப் பொருள் கிடைக்காத பகுதிகளில் சிலபல பெரிய கன ரகத் தொழில்களை ஆரம்பிக்கவேண்டும் என்று திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அந்த இடங்களில் துவக்கப்படவில்லையே, காரணம் என்ன?" என்று கேட்கிறபோது, "போக்குவரத்து வசதி இருக்கிற காரணத்தால் அதையொட்டி பெரிய தொழில்கள் அங்கே ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது" என்று ஒன்றுக்கொன்று காரணமாகக் காட்டப்படுகிறது.

சாதாரணமாக இங்கே மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டுகொண்டிருக்கிறோம் என்றாலும், அதற்கு வேண்டிய கருவிகளை உருவாக்கும் கன ரகத் தொழில்களை, மின்சாரக் கருவிகளை உற்பத்தியாக்கும் கனரகத் தொழிற்சாலைகளை தமிழகத்தில் நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, அதன் மூலமாக மாநிலத்தினுடைய தேவையை நிறைவேற்றுவதற்கு வழி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [11th March 1964

வகை காண முடியும். இப்பொழுது நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் வளரவும், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை உருவாக்கப்படவும், திருச்சியிலே துவங்கப்பட இருக்கிற கொதிகலன் தொழிற்சாலை வளரவும், தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் நிலைமை ஓங்கவும் இருப்பதால், இவற்றை எல்லாம் இணைக்கும் அளவில் புதிய, பெரிய, அகன்ற ரயில் பாதைகளைப் போடவேண்டும். அதன் மூலமாக வர்த்தகப் போக்குவரத்தைப் பெருக்கமுடியும். அதோடு மட்டுமல்லாமல், துறைமுகங்களோடு அவைகளை இணைக்கவேண்டும். கடலூர் துறைமுகம் விரிவடைந்து கொண்டிருக்கிறது. அதிராம் பட்டணம் இயற்கைச் சூழ்நிலையில் அமைந்திருக்கிற காரணத்தால் நல்லதொரு துறைமுகமாக்க வழிவகை இருக்கிறது என்று வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி நெய்வேலி நிலக்கரித் திட்டம், கொதிகலன் தொழிற்சாலை இவற்றின் மூலமாக உற்பத்தியாக்கப்படும் பொருள்கள் பெரும்பாலும் ஆசியாக் கண்டம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்டு, அதன் மூலம் வருமானம் பெருகத்தக்க வகையில் அந்தத் தொழிற்சாலைகள் அமையக்கூடும் என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். உற்பத்தியாகும் பொருள்களை உடனுக்குடன் அகற்றுவதற்கான துறைமுகங்களாக கடலூர் துறைமுகமும், அதிராம்பட்டணம் துறைமுகமும் ஆகக்கூடும். அதற்கான இணைப்பு ரயில் பாதை போடுவதன் மூலமாக, அகன்ற ரயில் பாதை போட முயற்சிகள் மேற்கொள்வதன் மூலமாக, புதிய பல தொழிற்சாலைகள் அதனை ஒட்டிய வழிகளிலே ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்தை அடிப்படையாக வைத்துக், தொழில்களைப் பெருக்க வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றன. தொழில் நிதிக் கார்ப்பரேஷன் நிறுவப்பட்டு, தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவியை அது தருகிறது என்று புள்ளி விவரம் கூறும்போது, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை ஒப்பிட்டு நாம் இரண்டாவதாக இருக்கிறோம், முதல் இடத்தை மகாராஷ்டிரம் பெற்றிருக்கிறது என்று கூறினார்கள். மகாராஷ்டிரத்திலே 66 யூனிட்களைத் துவங்குவதற்காக 31 கோடி ரூபாய் மான்யமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது, சென்னை மாநிலத்திலே 34 யூனிட்களுக்காக 30 கோடி ரூபாய் மானியமாகத் தரப்பட்டிருக்கிறது. இது ஏறத்தாழ 16.6 சதவிகிதம் என்ற அளவுக்கு நமக்கு அமைகிறது, இந்த அடிப்படையில் நாம் இரண்டாவதாக இருக்கிறோம் என்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய நோக்கம், ஏற்கனவே தொழில் வளர்ச்சி பெறுதிருக்கும் பகுதிகளில், பின் தங்கிய பகுதிகளில், தொழில் வளர்ச்சியை அதிகமாக ஆக்குவதன் மூலமாக வேலை வாய்ப்பு ஏற்படவும் வருமானம் பெருகவும் வாய்ப்பு இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிரத்தைப் பொறுத்த வரையில் நாம் தனியார் துறையையும் பொதுத்

11th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

துறையையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், ஏற்கனவே நல்ல வசதிகளையும் வாய்ப்பையும் பெற்ற, தொழில் வளர்ச்சி பெற்ற மாநிலமாக மகாராஷ்டிரம் விளங்குகிறது. எந்த வகையில் பார்த்தாலும், ஏற்கனவே தொழில் வளர்ச்சி பெற்று அந்த மாநிலம் விளங்குன்றது. ஏற்கெனவே அதிகமாகத் தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிற பல பகுதிகள் இருக்கின்றன என்று கருதப்படும் அந்த மாநிலத்திற்கு அதிகமாக 31 கோடி ரூபாய் நிதி வழங்கும் சூழ்நிலை இருக்கிறது. பின் தங்கியிருக்கிற தமிழக மாநிலம் போன்றவற்றுக்குச் சற்று அதிகமாக நிதி வசதி செய்தால்தான் பின்தங்கிய நிலையிலிருந்து மாறித் தமிழகம் சமத்துவ நிலைமைக்கு வர வழிவகை ஏற்பட முடியும். இந்தவகையில் அதிக நிதியைப் பெறுவதற்கான முயற்சிகளை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளவேண்டும்.

மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிடம் இருந்து கடன் வாங்கி உதவும் திட்டம் இருக்கிறது. தென்னகப்பகுதியில் இருந்துதான் அதிகமாக இன்ஷ்யூரன்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. இங்கே எவ்வளவு இன்ஷ்யூரன்ஸ் செய்யப்பட்டிருக்கிறது என்கிற ஈவின் அடிப்படையில், விகிதாசாரத்தின் அடிப்படையில் இந்தப் பகுதிக்கு அவர்களுடைய மொத்தத்தில் இருந்து சேரவேண்டிய தொகையைக் கடனாகப் பெற்றுவது தென்னகத்தில் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கான திட்டங்களை மேற்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனரகத் தொழில்களை ஏற்படுத்த மூலப்பொருள்கள் உடனடியாக கிடைக்க வாய்ப்புக்கூறுகள் இல்லையென்று சொன்னாலும், சிறுசிறு தொழில்களையும், நடுத்தரத் தொழில்களையும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கூறுகள் இங்கே இருக்கின்றன. அதற்கு நிதி வசதி வேண்டியிருக்கிறது. அந்த நிதி வசதியைக் கார்ப்பரேஷன் பெற்று சிறு தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் கிடைக்கச் செய்து, அவை வளர்ச்சிபெற வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தற்போது போதுமான நிதி வசதி இல்லையென்ற குறைபாட்டைச் சொன்னார்கள். அந்த நிதி வசதியைப் பெருக்குவதற்கான முயற்சிகளைத்தான் நாம் மேற்கொள்ளவேண்டும் என்பதாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுகிற மின்சாரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அணு மின்சார உற்பத்தித் திட்டம் வரக்கூடும் என்று சொல்லப்படுகிறது. அடுத்து ஓகேனகல் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்பதுபற்றிய நிலைமைகளை அறிய விரும்புகிறேன். அதைத் துரிதப்படுத்தி அதிக அளவில் மின்சக்தியை உற்பத்தி செய்து, அதன் மூலம் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்கான வாய்ப்புக்கூறுகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [11th March 1964

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் வைக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு சொன்னதையொட்டி அதனை ஏற்படுத்த முன்வந்திருப்பதை வரவேற்கிறேன். 1964-65-இல் அது துவக்கப்படும் என்ற கருத்து சொல்லப்படுகிறது. பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி பெருகு வதற்கான மார்க்கங்களைக் கண்டு பிடிப்பதற்காக நமது தொழில் அமைச்சர் அவர்கள் சில மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களுடன் பேசி வந்தார்கள் என்று அறிந்தேன். ஆங்காங்குள்ளவர்களுடன் பேசி, அவர்களது நிலையையும், தேவைகளையும் கண்டறிந்து அதற்கேற்றபடி என்ன என்ன தொழில்களை அங்கே ஏற்படுத்தலாம் என்ற கருத்து தெரி விக்கப்பட்டதாகத் தெரிகிறது. இத்தகைய முயற்சி ஓரளவுக்கு வெற்றி தரும். இதை விரிவான முறையிலும், உரிய முறையிலும் மேற்கொள்வதன் மூலமாக நம்முடைய நோக்கங்கள் கைகூடுவதற் கான வழியேற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முயற்சியை மேலும் மேலும் மேற்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு ஆலைகள் மூன்று ஏற்படுத்தப்படும் என்றும், மேலும் எட்டு ஏற்படுத்த அரசாங்கத் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்றும் கூறினார்கள். கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமையை கூறுகிறபோது அவர்களுடைய நிலைமை நல்லமுறை யில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும், அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கைகளை மேற் கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள். இன்றையதினம் கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைத் தீர்க்கப்படவேண்டுமென்றால் கைத்தறிக்கே சில ரகத் துணிகளை உற்பத்தி செய்ய ஒதுக்க வேண்டும், உள்நாட்டு மில்கள் அந்த ரகத் துணியை உற்பத்தி செய்து கைத்தறியோடு போட்டிபோடாதிருக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதோடு இன்றையதினம் கைத்தறித் துணியைப் பொறுத்தவரையில் 14 கோடிக்கு மேல் வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகச் சொன்னார்கள். அதில் பெரும்பகுதி நம்முடைய பக்கத்தில் இருந்துதான் ஏற்றுமதியாவ தாகவும் தெரிகிறது. ஆகவே வெளிநாடுகளில் நம்முடைய கைத் தறித் துணிகளில் எத்தகைய ரகத்திற்கு, வண்ணத்திற்கு அதிக மதிப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அந்த அந்த ரகத் துணிகளை இங்கே தயாரிக்கிற அளவிற்கு கைத்தறியாளர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். இதன் மூலம் அதிகமாக அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கும் முயற்சி எடுக்க வேண்டும். அவ்வப்போது மேலைநடுகளில் தேவைப்படுகிற துணிக்கு ஏற்ற வகையில் ஏற்றுமதி செய்யவும் வழிவகை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசாங்க பஸ் போக்குவரத்தைப் பற்றி பலர் சொன்னார்கள். அதுபற்றிக் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் திருப்திகரமான தாக இல்லை. அத்துறையில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது

11th March 1964] [இரா. நெடுஞ்செழியன்]

மட்டும் அல்ல. அதில் ஒரு திருப்தியற்ற தன்மை ஏற்பட்டிருப் பதைப் பார்க்கிறோம். இன்றையதினம் தனியார் விடுகிற பஸ்களை யும் பார்க்கிறோம். அரசாங்க பஸ்களையும் பார்க்கிறோம். தனியார் துறையில் பஸ்கள் விடுவதற்கு ரூட்டுகள் பெறுவதில் இன்றைய தினம் தனிப்பட்டவர்கள் காட்டக்கூடிய ஊக்கத்தையும் பார்க் கிறோம். ரூட் வாங்குவதற்காகவே லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கிறாகள், சுப்ரீம் கோர்ட் வரையில் சென்று வருகிறார்கள் என்றால் அத்துறையில் அரசாங்கம் நடத்துவதைப் போல நடத்தி நஷ்டம் வரும் என்றால் அதில் இவ்வளவு ஆர்வமும், ஊக்கமும் காட்டுவார்களா? நானைகைந்து பஸகள் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கே இன்றையதினம் எத்தனையோ லட்சம் லாபம் வருகிறது என்று சொல்கிறபோது அரசாங்கத்தரப்பில் இத்துறையில் நஷ்டமும், திருப்தியற்ற தன்மையும் நிலவுவதற்குக் காரணம் என்ன என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அரசினர் எதை எடுத்தாலும் செலவு அதிகமாகத்தான் ஆகும். சிக்கனம் கடைப் பிடிக்க முடியாது என்கிற நிலைமை நீடித்தால் பயன் இல்லை. இதை ஒரு தனிப்பட்ட கார்ப்பரேஷனிடத்தில் கூட ஒப்படைக்கலாம். நமக்கு இத்துறையில் அதிக லாபம் இல்லையென்றாலும் திருப்திகர மான முறையிலாவது இது செயலபட வழிவகை கணடாக வேண்டும். இந்த மன்றத்திலேயே கூட சிலபல பஸ் முதலாளிகள் இருக்கிறார்கள். தனிப்பட்ட துறையில் லாபம் வருவதற்கும், பஸ் களை வைத்து நடத்துவது திருப்திகரமானதாக இருப்பதற்கும், அரசாங்கத் துறையில் திருப்தியற்ற தன்மையோடு நஷ்டம் வருவதற்குமான காரணங்களை அவர்களைக் கொண்டு ஆராய்ந்து அவர்களுடைய ஆலோசனையையும் பெற்று இதில் உள்ள குறை பாடுகளை நீக்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். தனியார் துறையில் நடத்தப்படுகிற தொழில்களுக்கு உள்ள வாய்ப்பும், வசதிகளும், பொருளாதார வளமும் பொதுத்துறைக்கு அமைவது அவசியம். ஜனநாயக சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம் எதிர்காலக் கண்ணோட்டத்தையும் கொண்டு, அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற தொழில்களில் லாபம் தரத்தக்க நிலையை உருவாக்கவேண்டுமென்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றும், இறுதியாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது நம்முடைய மாநிலத்தில் பல கனரகத் தொழில்கள் ஏற்படுத்தப் படவேண்டுமென்றால் அதற்கு எங்கங்கே என்ன என்ன 'கனிப் பொருள்கள் கிடைக்கும் என்பது பற்றி விரிவான ஆராய்ச்சியை செய்தாக வேண்டும். இப்போது எல்லாம் நாம் இதுபற்றி திரு. லோகநாதன் அவர்கள் 1956-லே ஆய்வு செய்து சமர்ப்பித்த அறிக்கையைத்தான் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. மீண்டும் திரு. டி. எஸ். லோகநாதன் அவர்களையே இதுபற்றி விரிவாக ஆய்வு செய்ய அழைத்திருப்பதாகக் கூறப்பட்டது. இது வரவேற் கத்தக்கது. விரைவில் பல நிபுணர்களைக் கொண்டு ஆய்வுக் குழுவை ஏற்படுத்தி இதுபற்றிய ஆராய்ச்சியை விரிவான முறை யில் செய்வதற்கான வழி முறைகளை மேற்கொண்டாகவேண்டும்.

தொழில் வளர்ச்சி பெருகவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த மன்றத்தில் இருக்கின்ற எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் ஆலோசனைகள் கூறினர். மாநில தொழில் வளர்ச்சி பெருகவும், வருமானம் மிகவும், வாழ்க்கைத்தரம் உயரவும் மத்திய அரசாங்கத்திலிருந்து அதிக மானியம் பெறவும் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் மற்றைய பகுதிகளின் அளவோடு ஒப்பிட்டு நியாயமாக நமக்கு மத்திய அரசிலிருந்து கிடைக்க வேண்டிய தொகையைப் பெறவும் ஆன வகையிலே பல கருத்துக்கள் கூறப்பட்டன. அவற்றிற்கான முயற்சிகளிலே கனம் தொழில் அமைச்சர் அவர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதிலே அதிக அக்கறை கொண்டு, பாடுபட்டு வருகிற கனம் தொழில் அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று கூறி, இந்த முயற்சிகளிலே மேலும் நல்ல அக்கறை எடுத்துத் துரிதப் படுத்தி நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே,** இந்த விவாதத்திலே பங்கெடுத்துக் கொண்ட எல்லாக் கனம் அங்கத்தினர்களுக்கும் முதலிலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பல நல்ல கருத்துக்களை எல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். விவாதம் நடப்பதன் மூலமாகத்தான் கூறப்படுகின்ற கருத்துக்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து தக்க முடிவுகளை எடுத்து முன்னேற்றமான பல காரியங்களைச் செய்ய முடியும். அந்த முறையிலே கனம் அங்கத்தினர்கள் சொன்ன எல்லாவிதமான யோசனைகளுக்கும் நான் முதன் முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று விவாதத்தில் நடந்த பிரச்சினைகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம் என்று நினைக்கிறேன். ஒன்று, பொதுவான கொள்கை, பூர்வமான பிரச்சினைகள். இரண்டாவது அந்தந்த தொகுதி அடிப்படை சம்பந்தமான பிரச்சினைகள். பொதுவாக, கொள்கை பூர்வமாக எழுப்பப்பட்ட பிரச்சினைகள் மிகக் குறைவே. நண்பர் திரு. சாமிநாதன் அவர்கள் தான், ஏன் சர்க்கார் நேரடியாகத் தொழில்களிலே ஈடுபடுகிறார்கள்? எதற்காகக் கூட்டுறவு ஆலைகள் வைக்கிறார்கள்? எதற்காகச் செங்கல் சூளை வைக்கிறார்கள்? என்றெல்லாம் கேட்டார்கள். இன்று சர்க்கார் சில தொழில்களிலே ஈடுபடுவதற்கான முக்கிய காரணம் விலைக் கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்பதற்காகத்தான். விலையை ஓரளவு நிர்ணயிப்பதிலே நாம் பங்கு கொள்ள வேண்டுமென்று சொன்னால் சர்க்காரே சில பண்டங்களை உற்பத்தி செய்து அவற்றை நியாயமான விலையில் பங்கீடு செய்யும்படியான சில காரியங்களைச் செய்தால்தான் விலையை நாம் கட்டுப்படுத்த முடியும். உதாரணமாக, கைத்தறி நெசவாளர் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு நூல் நியாயமான விலைக்குக் கிடைக்க வேண்டும்; அதுவும் வேண்டிய சமயத்தில், தரத்தில் கிடைக்க வேண்டும். அதை நாம் பூர்த்தி செய்ய வேண்டுமென்று சொன்னால், எவ்வளவுதான் கட்டுப்பாடுகள் செய்தாலும் அந்தக் கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் அமல் நடத்துவது என்பது—நம்முடைய அனுபவத்திலிருந்து பார்க்கிறோம்—அவ்வளவு சுலபமாக இல்லை. ஆகவே, அவர்களுக்கு ஏதாவது வழி செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு என்று நூற்பு ஆலைகள் வைத்து நூல் கொடுத்தால்தான் முடியும். அந்த முறையில்தான் நம்முடைய ராஜ்யத்தில் 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் வைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். மூன்று ஆலைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. ஒரு ஆலை அடுத்த மாதம் வேலை தொடங்க ஆரம்பிக்கும். பாக்கி 8 ஆலைகள் இன்னும் ஓரிரண்டு ஆண்டுக்குள்ளாக செயல்படத் தொடங்கி விடும். அவ்வாறு நம்முடைய ராஜ்யத்தில் 12 ஆலைகள் இருக்குமானால் அவற்றில் கிடைக்கின்ற நூல்கள் எல்லாவற்றையும் கைத்தறி நெசவாளர்களுக்கே தனியாக ஒதுக்கிக் கொடுப்பது என்ற முறையைக் கையாண்டால் நிச்சயமாகப் பெரிய ஏற்றத் தாழ்வு விலைகளில் ஏற்படாது. நூல் கிடைக்கவில்லை என்ற பிரச்னையையும் சமாளிக்க முடியும். அதற்காகத்தான் இன்று கூட்டுறவு முறையிலே இந்த ஆலைகளை வைக்கிறோம். அதிலே யாரைச் சேர்த்திருக்கிறோம் என்றால் குறிப்பாக பெரும்பாலும் கைத்தறி நெசவாளர்களையும் கைத்தறி நெசவாளர் சங்கங்களிலும், கூட்டுறவு மத்திய பாங்குகளிலும் இருப்பவர்களைத்தான் சேர்த்திருக்கிறோம்.

அதேபோல்தான், இன்று சர்க்கார் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏராளமான செங்கல் தேவைப்படுகிறது. நான்கு மாதங்களுக்கு முன்பு சென்னை நகரில் செங்கல் என்ன விலைக்கு விற்கப்பட்டது என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆயிரம் செங்கல் 110 ரூபாய், 120 ரூபாய் என்று விற்கப்பட்டது. சர்க்கார் கட்டிடங்கள் கட்டுகிறார்கள் என்றால் செங்கல் விலை கட கட என்று ஏறிவிடும். சர்க்கார் கட்டிடங்கள் இல்லையென்றால் விலை குறைந்து விடும். இந்த நிலைமைகளைப் பார்த்து சர்க்காருக்கு தேவையான அளவுக்கு வேண்டிய செங்கற்களைத் தயாரிக்கும் அளவில் செங்கற் சூளைகளை வைப்பது என்று முடிவு செய்தோம். அதே போன்று சிமெண்டுத் தொழிலுக்குத் தேவையான ஒரு பெரிய இயந்திரம் அந்நிய நாட்டிலிருந்து கிடைக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. அதை நம்முடைய ராஜ்யத்திற்குப் பெற்று உடனடியாக சர்க்கார் துறையில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை வைக்க முன்வந்தோம். ஒரு நாளைக்கு 1,200 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு உள்ள பெரிய இயந்திரம் ஒன்றை அயல்நாட்டு சர்க்கார் ஒன்று கொடுப்பதாக முன்வந்த காரணத்தால் நம்முடைய ராஜ்யத்தில் சிமெண்ட் தொழிற்சாலையை அமைக்க முடிவு செய்தோம். இந்த விதமாக அரசாங்கம் தொழில்களை அமைப்பதன் மூலமாக சர்க்காருக்குத் தேவையான அளவு அல்லது ஓரளவாவது உற்பத்தி செய்வதன் காரணமாக விலையை ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்ற காரணத்தால்தான் இந்தத் தொழில்களை எல்லாம் சர்க்கார் ஏற்றுக்கொள்கிறது. திரு. சண்முகம் அவர்கள் பேசும்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [11th March 1964

போது 'கன்டினுவஸ் காஸ்டிங் பிளாண்ட்' தானா அரசாங்கத் தொழில் என்று கேட்டார்கள். எந்தந்தொழிலிலும் ஏற்றத் தாழ்வு கிடையாது. எந்தத் தொழிலையும் எளிதாகப் பேவசுது சரியல்ல. இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்தில் ரி-ரோலிங் மில்கள் போதிய அளவு 'பில்லெட்ஸ்' கிடைக்காத காரணத்தால் வேலை செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் இந்தத் துறையில் ஈடுபட்டு பில்லெட்ஸ் சப்ளை செய்வதற் கான முயற்சிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. சர்க்காரைப் பொறுத்த அளவில், நான் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக் கிறேன்—தொழிற் துறைகளைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்பதிலே கொள்கை பூர்வமான ஆட்சேபணை எதுவும் கிடை யாது, நடைமுறையில் 'பிராக்மாடிக்' ஆக எதை எதைச் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்யத் தயாராக இருக்கிறோம். அந்த விதமாக " Practical approach to industrialisation " இருக்கும் காரணத்தால்தான் இந்த விதமான முன்னேற்றம் நம்முடைய ராஜ்யத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதைச் செய்யக்கூடாது என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், நண்பர் டாக்டர் நடராஜன் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டார்கள், ப்ரொடக்ஷன் கபாசிடி எவ்வளவு, உற்பத்தியானது எவ்வளவு. இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதற்கான புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறோம். நண்பர் டாக்டர் நடராசன் அவர்கள் 'இன்டர்பெலேஷன்ஸ்' போட்டு என்ன தொழில்கள், என்ன விவரங்கள் வேண்டுமென்பதற்கு பின்னால் கேள்விகள் போடலாம். கேள்வி நேரம் என்பதே இந்த விதமான தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தத் தகவல்கள் எல்லாம் சர்க்காரிடத்தில் இருக்கும் தகவல்கள் அல்ல. இவை எல்லாம் தனியார் நடத்தும் தொழில்கள், அவர்களிடம் சர்க்கார் கேட்டு விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டும். ஆகவே, தனியாகக் கேள்வி போட்டு விவரங்களைக் கேட்டால் கொடுக்க முடியும்.

அதேபோன்று எக்ஸ்போர்ட்டை எடுத்துக் கொண்டாலும் அது
1-00 p.m. நம்முடைய ராஜ்யத்தின் கண்காணிப்பில் இல்லை; மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறது. விவரங்கள் வேண்டுமென்று கேள்வி போட்டால் மத்திய சர்க்காரிடத்தில் இருந்து பெற்று நம்முடைய சட்டசபைக்குக் கொடுக்க முடியும்.

நானும் கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்களும் ஒன்றாகக் காலேஜில் படித்தவர்கள். அது மாத்திரமல்ல; காலேஜி லேயே எங்கள் இருவருக்குமிடையே ரொம்பப் போட்டி உண்டு. பரீட்சையில் போட்டி, பேசுவதில் போட்டி எல்லாம் அப்போது நடந்தன. இரண்டு பேர்களும் எக்கனமிக்ஸ் படித்தோம். பின் வெறுவேறு துறைகளில் படித்தோம். அந்த காம்பட்டிஷனில்தான்

11th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

நான் இப்போது பேசப்போகிறேன். நம் ராஜ்யத்தின் அளவு அகில இந்தியாவில் நாஷனல் இன்கம்-மில் எவ்வளவு என்று கேட்டார்கள். 1961-62-ம் ஆண்டு புள்ளிவிவரத்தை நாஷனல் கவுன்சில் ஆப் அப்ளைட் எக்கனமிக் ரிசர்ச் ஸ்தாபனத்தார் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அந்தத் தகவல்படி அகில இந்தியாவில் தொழில் மூலம் கிடைத்த தேசீய வருமானம் ரூபாய் 1892 கோடி. தொழில் துறை மூலம் வந்த தேசிய வருமானம். அதில் தமிழகத்திலிருந்து தொழில் துறை மூலம் வந்த தேசீய வருமானம் 171 கோடி. மகாராஷ்டிராவில் இருந்து வந்தது 383 கோடி அப்படி மஹாராஷ்டிராவிலிருந்து வந்தது என்று சொல்லும்போது இரு ராஜ்யங்களுக்கும் இருக்கக்கூடிய சில வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில், எக்க னமிக்ஸில் அந்தக் காலத்தில் சொல்லிக் கொடுப்பார்கள் "Other things being equal." என்று. இப்போது சொல்லிக் கொடுக் கிறார்களா என்னவோ தெரியாது. அப்போதுதான் ஒப்பிட முடியும் என்று சொல்வார்கள். மஹாராஷ்டிராவை எடுத்துக் கொண்டால் அது சற்றேறக்குறைய நம் ராஜ்யத்தை விட இரண்டு மடங்கு பெரிது. நம் ராஜ்யத்தின் பரப்பளவு 50,000 சதுரமைல் பம்பாய் மாநிலத்தின் பரப்பளவு ஒரு லட்சம் சதுர மைல். நம் ராஜ்யத்தில் முக்கியமான பகுதிகள் விலகிப்போய், பரப்பளவு குறைந்து விட்டது. அவர்களுக்கு சென்ட்ரல் ப்ராவின்சஸ் வந்து சேர்ந்தது. நாக்பூர் போன்ற முன்பே தொழில் துறையில் முன் னேற்றம் அடைந்த இடங்கள் எல்லாம் வந்து சேர்ந்தன. தொழில் துறையில் ஓரளவு முன்னேற்றம் அடைந்த இரண்டு ராஜ்யங்கள் சேர்ந்த ராஜ்யத்தில் கூட வருவாய் நம்மைவிட இரட்டிப்பாக இருக்கிறது என்று சொன்னால் நம் வருவாயும், மாஹாராஷ்டிராவின் வருவாயும் ஏறத்தாழ ஒரே நிலையில் இருக்கிறது. ஒரே அளவில் இருக்கிறது என்பதைப்பற்றி நாம் சற்று பெருமை அடைய வேண்டும். ஏன் பெருமை அடைய வேண்டுமென்றால் நாம் தொழில் துறையில் முயற்சி எடுத்து முன்னேற்றம் அடைந்தது 15 வருடங்களில்தான். அவர்கள் முயற்சி எடுத்து முன்னேற்றம் அடைந்தது 100, 150 ஆண்டுகாலமாக. ஆங்கிலேயர் காலத்திலேயே பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் பெரிய தொழில்களை வைத்தார்கள். ஆகவே, இன்று நம் ராஜ்யத்தின் தொழில் வளர்ச்சியைப் பற்றி யாரும் கவலைப்படுவதற்கில்லை. நாம் பின்தங்கி விட்டோமோ என்று எண்ணத் தேவையில்லை. ஒரு ராஜ்யத்தை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிடுகிறபோது ஒன்று தெரிந்துகொள்ளவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது பொதுவாக தென் பகுதி, வட பகுதி என்று சொன்னார்கள். ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்று சொன்னால் தமிழகத்தை ஆந்திராவுடன் ஒப்பிடுங்கள், பம்பாயுடன் ஒப்பிடுங்கள், வங்காளத்துடன் ஒப்பிடுங்கள், பஞ்சாப்புடன் ஒப்பிடுங்கள், உ.பி.யுடன் ஒப்பிடுங்கள். ஆனால் தமிழகத்தை ஒரு புறம் வைத்து பல ராஜ்யங்கள் கொண்ட பகுதியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சரியாகாது. அவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [11th March 1964

போது 'கன்டினுவஸ் காஸ்டிங் பிளாண்ட்' தானு அரசாங்கத் தொழில் என்று கேட்டார்கள். எந்தந்தொழிலிலும் ஏற்றத் தாழ்வு கிடையாது. எந்தத் தொழிலேயும் எளிதாகப் பேவசுது சரியல்ல. இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்தில் ரீ-ரோலிங் மில்கள் போதிய அளவு 'பில்லெட்ஸ்' கிடைக்காத காரணத்தால் வேலை செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். சர்க்கார் இந்தத் துறையில் ஈடுபட்டு பில்லெட்ஸ் சப்ளை செய்வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. சர்க்காரைப் பொறுத்த அளவில், நான் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறேன்—தொழிற் துறைகளைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதிலே கொள்கை பூர்வமான ஆட்சேபணை எதுவும் கிடையாது, நடைமுறையில் 'பிராக்மாடிக்' ஆக எதை எதைச் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்யத் தயாராக இருக்கிறோம். அந்த விதமாக "Practical approach to industrialisation" இருக்கும் காரணத்தால்தான் இந்த விதமான முன்னேற்றம் நம்முடைய ராஜ்யத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதைச் செய்யக்கூடாது என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், நண்பர் டாக்டர் நடராஜன் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டார்கள், ப்ரொடக்ஷன் கபாசிடி எவ்வளவு, உற்பத்தியானது எவ்வளவு, இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதற்கான புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறோம். நண்பர் டாக்டர் நடராசன் அவர்கள் 'இன்டர்பெலேஷன்' போட்டு என்ன தொழில்கள், என்ன விவரங்கள் வேண்டுமென்பதற்கு பின்னால் கேள்விகள் போடலாம். கேள்வி நேரம் என்பதே இந்த விதமான தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகவல்கள் எல்லாம் சர்க்காரிடத்தில் இருக்கும் தகவல்கள் அல்ல. இவை எல்லாம் தனியார் நடத்தும் தொழில்கள், அவர்களிடம் சர்க்கார் கேட்டு விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டும். ஆகவே, தனியாகக் கேள்வி போட்டு விவரங்களைக் கேட்டால் கொடுக்க முடியும்.

அதேபோன்று எக்ஸ்போர்ட்டை எடுத்துக் கொண்டாலும் அது
1-00 p.m. நம்முடைய ராஜ்யத்தின் கண்காணிப்பில் இல்லை; மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறது. விவரங்கள் வேண்டுமென்று கேள்வி போட்டால் மத்திய சர்க்காரிடத்தில் இருந்து பெற்று நம்முடைய சட்டசபைக்குக் கொடுக்க முடியும்.

நானும் கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்களும் ஒன்றாகக் காலேஜில் படித்தவர்கள். அது மாத்திரமல்ல; காலேஜிலேயே எங்கள் இருவருக்குமிடையே ரொம்பப் போட்டி உண்டு. பரீட்சையில் போட்டி, பேசுவதில் போட்டி எல்லாம் அப்போது நடந்தது. இரண்டு பேர்களும் எக்கனமிக்ஸ் படித்தோம். பின் வேறுவேறு துறைகளில் படித்தோம். அந்தக் காம்பட்டிஷனில்தான்

11th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

நான் இப்போது பேசப்போகிறேன். நம் ராஜ்யத்தின் அளவு அகில இந்தியாவில் நாஷனல் இன்கம்-மில் எவ்வளவு என்று கேட்டார்கள். 1961-62-ம் ஆண்டு புள்ளிவிவரத்தை நாஷனல் கவுன்சில் ஆப் அப்ளைட் எக்கனமிக் ரிசர்ச் ஸ்தாபனத்தார் சேகரித்து வைத்திருக்கிருர்கள். அந்தத் தகவல்படி அகில இந்தியாவில் தொழில் மூலம் கிடைத்த தேசீய வருமானம் ரூபாய் 1892 கோடி. தொழில் துறை மூலம் வந்த தேசிய வருமானம். அதில் தமிழகத்திலிருந்து தொழில் துறை மூலம் வந்த தேசீய வருமானம் 171 கோடி. மகாராஷ்டிராவில் இருந்து வந்தது 383 கோடி அப்படி மஹாராஷ்டிராவிலிருந்து வந்தது என்று சொல்லும்போது இரு ராஜ்யங்களுக்கும் இருக்கக்கூடிய சில வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில், எக்கனமிக்ஸில் அந்தக் காலத்தில் சொல்லிக் கொடுப்பார்கள் "Other things being equal." என்று. இப்போது சொல்லிக் கொடுக்கிருர்களா என்னவோ தெரியாது. அப்போதுதான் ஒப்பிட முடியும் என்று சொல்வார்கள். மஹாராஷ்டிராவை எடுத்துக் கொண்டால் அது சற்றேறக்குறைய நம் ராஜ்யத்தை விட இரண்டு மடங்கு பெரிது. நம் ராஜ்யத்தின் பரப்பளவு 50,000 சதுரமைல் பம்பாய் மாநிலத்தின் பரப்பளவு ஒரு லட்சம் சதுர மைல். நம் ராஜ்யத்தில் முக்கியமான பகுதிகள் விலகிப்போய், பரப்பளவு குறைந்து விட்டது. அவர்களுக்கு சென்ட்ரல் ப்ராவின்சஸ் வந்து சேந்தது. நாக்பூர் போன்ற முன்பே தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்த இடங்கள் எல்லாம் வந்து சேந்தன. தொழில் துறையில் ஓரளவு முன்னேற்றம் அடைந்த இரண்டு ராஜ்யங்கள் சேர்ந்த ராஜ்யத்தில் கூட வருவாய் நம்மைவிட இரட்டிப்பாக இருக்கிறது என்று சொன்னால் நம் வருவாயும், மாஹாராஷ்டிராவின் வருவாயும் ஏறத்தாழ ஒரே நிலையில் இருக்கிறது. ஒரே அளவில் இருக்கிறது என்பதைப்பற்றி நாம் சற்று பெருமை அடைய வேண்டும். ஏன் பெருமை அடைய வேண்டுமென்றால் நாம் தொழில் துறையில் முயற்சி எடுத்து முன்னேற்றம் அடைந்தது 15 வருடங்களில்தான். அவர்கள் முயற்சி எடுத்து முன்னேற்றம் அடைந்தது 100, 150 ஆண்டுகாலமாக. ஆங்கிலேயர் காலத்திலேயே பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் பெரிய தொழில்களை வைத்தார்கள். ஆகவே, இன்று நம் ராஜ்யத்தின் தொழில் வளர்ச்சியைப் பற்றி யாரும் கவலைப்படுவதற்கில்லை. நாம் பின்தங்கி விட்டோமோ என்று எண்ணத் தேவையில்லை. ஒரு ராஜ்யத்தை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிடுகிறபோது ஒன்று தெரிந்துகொள்ளவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது பொதுவாக தென் பகுதி, வட பகுதி என்று சொன்னார்கள். ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்று சொன்னால் தமிழகத்தை ஆந்திராவுடன் ஒப்பிடுங்கள், பம்பாயுடன் ஒப்பிடுங்கள், வங்காளத்துடன் ஒப்பிடுங்கள், பஞ்சாப்புடன் ஒப்பிடுங்கள், உ.பி.யுடன் ஒப்பிடுங்கள். ஆனால் தமிழகத்தை ஒரு புறம் வைத்து பல ராஜ்யங்கள் கொண்ட பகுதியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சரியாகாது. அவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல,

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [11th March 1964

போது 'கன்டினுவஸ் காஸ்டிங் பிளாண்ட்' தானு அரசாங்கத் தொழில் என்று கேட்டார்கள். எந்தந்தொழிலிலும் ஏற்றத் தாழ்வு கிடையாது. எந்தத் தொழிலையும் எளிதாகப் பேவசுது சரியல்ல. இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்தில் ரி-ரோலிங் மில்கள் போதிய அளவு 'பில்லெட்ஸ்' கிடைக்காத காரணத்தால் வேலை செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் இந்தத் துறையில் ஈடுபட்டு பில்லெட்ஸ் சப்ளை செய்வதற் கான முயற்சிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. சர்க்காரைப் பொறுத்த அளவில், நான் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக் கிறேன்—தொழிற் துறைகளைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்பதிலே கொள்கை பூர்வமான ஆட்சேபணை எதுவும் கிடை யாது, நடைமுறையில் 'பிராக்மாடிக்' ஆக எதை எதைச் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்யத் தயாராக இருக்கிறோம். அந்த விதமாக "Practical approach to industrialisation" இருக்கும் காரணத்தால்தான் இந்த விதமான முன்னேற்றம் நம்முடைய ராஜ்யத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதைச் செய்யக்கூடாது என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், நண்பர் டாக்டர் நடராஜன் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டார்கள், ப்ரொடக்ஷன் கபாசிடி எவ்வளவு, உற்பத்தியானது எவ்வளவு, இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதற்கான புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறோம். நண்பர் டாக்டர் நடராசன் அவர்கள் 'இன்டர்பெலேஷன்ஸ்' போட்டு என்ன தொழில்கள், என்ன விவரங்கள் வேண்டுமென்பதற்கு பின்னால் கேள்விகள் போடலாம். கேள்வி நேரம் என்பதே அந்த விதமான தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தத் தகவல்கள் எல்லாம் சர்க்காரிடத்தில் இருக்கும் தகவல்கள் அல்ல. இவை எல்லாம் தனியார் நடத்தும் தொழில்கள், அவர்களிடம் சர்க்கார் கேட்டு விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டும். ஆகவே, தனியாகக் கேள்வி போட்டு விவரங்களைக் கேட்டால் கொடுக்க முடியும்.

அதேபோன்று எக்ஸ்போர்ட்டை எடுத்துக் கொண்டாலும் அது
1-00 p.m. நம்முடைய ராஜ்யத்தின் கண்காணிப்பில் இல்லை; மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறது. விவரங்கள் வேண்டுமென்று கேள்வி போட்டால் மத்திய சர்க்காரிடத்தில் இருந்து பெற்று நம்முடைய சட்டசபைக்குக் கொடுக்க முடியும்.

நானும் கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்களும் ஒன்றாகக் காலேஜில் படித்தவர்கள். அது மாத்திரமல்ல; காலேஜி லேயே எங்கள் இருவருக்குமிடையே ரொம்பப் போட்டி உண்டு. பரீட்சையில் போட்டி, பேசுவதில் போட்டி எல்லாம் அப்போது நடந்தது. இரண்டு பேர்களும் எக்கனமிக்ஸ் படித்தோம். பின் வேறுவேறு துறைகளில் படித்தோம். அந்த காம்பட்டிஷனில்தான்

11th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

நான் இப்போது பேசப்போகிறேன். நம் ராஜ்யத்தின் அளவு அகில இந்தியாவில் நாஷனல் இன்கம்-மில் எவ்வளவு என்று கேட்டார்கள். 1961-62-ம் ஆண்டு புள்ளிவிவரத்தை நாஷனல் கவுன்சில் ஆப் அப்ளைட் எக்கனமிக் ரிசர்ச் ஸ்தாபனத்தார் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அந்தத் தகவல்படி அகில இந்தியாவில் தொழில் மூலம் கிடைத்த தேசீய வருமானம் ரூபாய் 1892 கோடி. தொழில் துறை மூலம் வந்த தேசீய வருமானம். அதில் தமிழகத்திலிருந்து தொழில் துறை மூலம் வந்த தேசீய வருமானம் 171 கோடி. மகாராஷ்டிராவில் இருந்து வந்தது 383 கோடி அப்படி மஹாராஷ்டிராவிலிருந்து வந்தது என்று சொல்லும்போது இரு ராஜ்யங்களுக்கும் இருக்கக்கூடிய சில வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில், எக்க னமிக்ஸில் அந்தக் காலத்தில் சொல்லிக் கொடுப்பார்கள் "Other things being equal." என்று. இப்போது சொல்லிக் கொடுக் கிறார்களா என்னவோ தெரியாது. அப்போதுதான் ஒப்பிட முடியும் என்று சொல்வார்கள். மஹாராஷ்டிராவை எடுத்துக் கொண்டால் அது சற்றேறக்குறைய நம் ராஜ்யத்தை விட இரண்டு மடங்கு பெரிது. நம் ராஜ்யத்தின் பரப்பளவு 50,000 சதுரமைல் பம்பாய் மாநிலத்தின் பரப்பளவு ஒரு லட்சம் சதுர மைல். நம் ராஜ்யத்தில் முக்கியமான பகுதிகள் விலகிப்போய், பரப்பளவு குறைந்து விட்டது. அவர்களுக்கு சென்ட்ரல் ப்ராவின்சஸ் வந்து சேர்ந்தது. நாக்பூர் போன்ற முன்பே தொழில் துறையில் முன் னேற்றம் அடைந்த இடங்கள் எல்லாம் வந்து சேர்ந்தன. தொழில் துறையில் ஓரளவு முன்னேற்றம் அடைந்த இரண்டு ராஜ்யங்கள் சேர்ந்த ராஜ்யத்தில் கூட வருவாய் நம்மைவிட இரட்டிப்பாக இருக்கிறது என்று சொன்னால் நம் வருவாயும், மாஹாராஷ்டிராவின் வருவாயும் ஏறத்தாழ ஒரே நிலையில் இருக்கிறது. ஒரே அளவில் இருக்கிறது என்பதைப்பற்றி நாம் சற்று பெருமை அடைய வேண்டும். ஏன் பெருமை அடைய வேண்டுமென்றால் நாம் தொழில் துறையில் முயற்சி எடுத்து முன்னேற்றம் அடைந்தது 15 வருடங்களில்தான். அவர்கள் முயற்சி எடுத்து முன்னேற்றம் அடைந்தது 100, 150 ஆண்டுகாலமாக. ஆங்கிலேயர் காலத்திலேயே பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் பெரிய தொழில்களை வைத்தார்கள். ஆகவே, இன்று நம் ராஜ்யத்தின் தொழில் வளர்ச்சியைப் பற்றி யாரும் கவலைப்படுவதற்கில்லை. நாம் பின்தங்கி விட்டோமோ என்று எண்ணத் தேவையில்லை. ஒரு ராஜ்யத்தை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிடுகிறபோது ஒன்று தெரிந்துகொள்ளவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது பொதுவாக தென் பகுதி, வட பகுதி என்று சொன்னார்கள். ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்று சொன்னால் தமிழகத்தை ஆந்திராவுடன் ஒப்பிடுங்கள், பம்பாயுடன் ஒப்பிடுங்கள், வங்காளத்துடன் ஒப்பிடுங்கள், பஞ்சாப்புடன் ஒப்பிடுங்கள், உ.பி.யுடன் ஒப்பிடுங்கள். ஆனால் தமிழகத்தை ஒரு புறம் வைத்து பல ராஜ்யங்கள் கொண்ட பகுதியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சரியாகாது, அவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல,

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [11th March 1964

போது 'கன்டினுவஸ் காஸ்டிங் பிளாண்ட்' தானே அரசாங்கத் தொழில் என்று கேட்டார்கள். எந்தந்தொழிலிலும் ஏற்றத் தாழ்வு கிடையாது. எந்தத் தொழிலையும் எளிதாகப் பேவசுது சரியல்ல. இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்தில் ரி-ரோலிங் மில்கள் போதிய அளவு 'பில்லெட்ஸ்' கிடைக்காத காரணத்தால் வேலை செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் இந்தத் துறையில் ஈடுபட்டு பில்லெட்ஸ் சப்ளை செய்வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. சர்க்காரைப் பொறுத்த அளவில், நான் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறேன்—தொழிற் துறைகளைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதிலே கொள்கை பூர்வமான ஆட்சேபணை எதுவும் கிடையாது, நடைமுறையில் 'பிராக்மாடிக்' ஆக எதை எதைச் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்யத் தயாராக இருக்கிறோம். அந்த விதமாக "Practical approach to industrialisation" இருக்கும் காரணத்தால்தான் இந்த விதமான முன்னேற்றம் நம்முடைய ராஜ்யத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதைச் செய்யக்கூடாது என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், நண்பர் டாக்டர் நடராஜன் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டார்கள், ப்ரொடக்ஷன் கபாசிடி எவ்வளவு, உற்பத்தியானது எவ்வளவு, இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதற்கான புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறோம். நண்பர் டாக்டர் நடராசன் அவர்கள் 'இன்டர்பெலேஷன்ஸ்' போட்டு என்ன தொழில்கள், என்ன விவரங்கள் வேண்டுமென்பதற்கு பின்னால் கேள்விகள் போடலாம். கேள்வி நேரம் என்பதே இந்த விதமான தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகவல்கள் எல்லாம் சர்க்காரிடத்தில் இருக்கும் தகவல்கள் அல்ல. இவை எல்லாம் தனியார் நடத்தும் தொழில்கள், அவர்களிடம் சர்க்கார் கேட்டு விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டும். ஆகவே, தனியாகக் கேள்வி போட்டு விவரங்களைக் கேட்டால் கொடுக்க முடியும்.

அதேபோன்று எக்ஸ்போர்ட்டை எடுத்துக் கொண்டாலும் அது
1-00 p.m. நம்முடைய ராஜ்யத்தின் கண்காணிப்பில் இல்லை; மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறது. விவரங்கள் வேண்டுமென்று கேள்வி போட்டால் மத்திய சர்க்காரிடத்தில் இருந்து பெற்று நம்முடைய சட்டசபைக்குக் கொடுக்க முடியும்.

நானும் கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்களும் ஒன்றாகக் காலேஜில் படித்தவர்கள். அது மாத்திரமல்ல; காலேஜிலேயே எங்கள் இருவருக்குமிடையே ரொம்பப் போட்டி உண்டு. பரீட்சையில் போட்டி, பேசுவதில் போட்டி எல்லாம் அப்போது நடந்தது. இரண்டு பேர்களும் எக்கனாமிக்ஸ் படித்தோம். பின் வேறுவேறு துறைகளில் படித்தோம். அந்த காம்பட்டிஷனில்தான்

11th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

நான் இப்போது பேசப்போகிறேன். நம் ராஜ்யத்தின் அளவு அகில இந்தியாவில் நாஷனல் இன்கம்-மில் எவ்வளவு என்று கேட்டார்கள். 1961-62-ம் ஆண்டு புள்ளிவிவரத்தை நாஷனல் கவுன்சில் ஆப் அப்ளைட் எக்கனமிக் ரிசர்ச் ஸ்தாபனத்தார் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அந்தத் தகவல்படி அகில இந்தியாவில் தொழில் மூலம் கிடைத்த தேசீய வருமானம் ரூபாய் 1892 கோடி. தொழில் துறை மூலம் வந்த தேசீய வருமானம். அதில் தமிழகத்திலிருந்து தொழில் துறை மூலம் வந்த தேசீய வருமானம் 171 கோடி. மகாராஷ்டிராவில் இருந்து வந்தது 383 கோடி அப்படி மஹாராஷ்டிராவிலிருந்து வந்தது என்று சொல்லும்போது இரு ராஜ்யங்களுக்கும் இருக்கக்கூடிய சில வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில், எக்கனமிக்ஸில் அந்தக் காலத்தில் சொல்லிக் கொடுப்பார்கள் "Other things being equal." என்று. இப்போது சொல்லிக் கொடுக்கிறார்களா என்னவோ தெரியாது. அப்போதுதான் ஒப்பிட முடியும் என்று சொல்வார்கள். மஹாராஷ்டிராவை எடுத்துக் கொண்டால் அது சற்றேறக்குறைய நம் ராஜ்யத்தை விட இரண்டு மடங்கு பெரிது. நம் ராஜ்யத்தின் பரப்பளவு 50,000 சதுரமைல் பம்பாய் மாநிலத்தின் பரப்பளவு ஒரு லட்சம் சதுர மைல். நம் ராஜ்யத்தில் முக்கியமான பகுதிகள் விலகிப்போய், பரப்பளவு குறைந்து விட்டது. அவர்களுக்கு சென்ட்ரல் ப்ராவின்சஸ் வந்து சேந்தது. நாக்பூர் போன்ற முன்பே தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்த இடங்கள் எல்லாம் வந்து சேந்தன. தொழில் துறையில் ஓரளவு முன்னேற்றம் அடைந்த இரண்டு ராஜ்யங்கள் சேர்ந்த ராஜ்யத்தில் கூட வருவாய் நம்மைவிட இரட்டிப்பாக இருக்கிறது என்று சொன்னால் நம் வருவாயும், மாஹாராஷ்டிராவின் வருவாயும் ஏறத்தாழ ஒரே நிலையில் இருக்கிறது. ஒரே அளவில் இருக்கிறது என்பதைப்பற்றி நாம் சற்று பெருமை அடைய வேண்டும். ஏன் பெருமை அடைய வேண்டுமென்றால் நாம் தொழில் துறையில் முயற்சி எடுத்து முன்னேற்றம் அடைந்தது 15 வருடங்களில்தான். அவர்கள் முயற்சி எடுத்து முன்னேற்றம் அடைந்தது 100, 150 ஆண்டுகாலமாக. ஆங்கிலேயர் காலத்திலேயே பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் பெரிய தொழில்களை வைத்தார்கள். ஆகவே, இன்று நம் ராஜ்யத்தின் தொழில் வளர்ச்சியைப் பற்றி யாரும் கவலைப்படுவதற்கில்லை. நாம் பின்தங்கி விட்டோமோ என்று எண்ணத் தேவையில்லை. ஒரு ராஜ்யத்தை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிடுகிறபோது ஒன்று தெரிந்துகொள்ளவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது பொதுவாக தென் பகுதி, வட பகுதி என்று சொன்னார்கள். ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்று சொன்னால் தமிழகத்தை ஆந்திராவுடன் ஒப்பிடுங்கள், பம்பாயுடன் ஒப்பிடுங்கள், வங்காளத்துடன் ஒப்பிடுங்கள், பஞ்சாப்புடன் ஒப்பிடுங்கள், உ.பி.யுடன் ஒப்பிடுங்கள் . ஆனால் தமிழகத்தை ஒரு புறம் வைத்து பல ராஜ்யங்கள் கொண்ட பகுதியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சரியாகாது, அவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல.

தமிழகத்தை பக்கத்திலுள்ள கேரளா, ஆந்திரா போன்று இரண்டு மூன்று மாநிலங்களைச் சேர்த்து ஒப்பிடுவதோ அல்லது எல்லா ராஜ்யங்களையும் சேர்த்து ஒப்பிட்டுப் பார்ப்பதோ சரி அல்ல. நாட்டின் வளர்ச்சியைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் ஒவ்வொரு ராஜ்யத்தையும் வளர்ச்சி அடைந்த ராஜ்யத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அவர்கள் வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள், நாம் அந்த இடத்தைப் பிடிக்கவேண்டுமென்று சொல்ல வேண்டும். அப்படி நாம் பிடிக்க முடியவில்லை என்றால் அதற்கான காரணங்களை அறிந்து தெரிந்து கொள்ளவேண்டும். பொதுவாக தென் பகுதி வட பகுதி என்று ஒப்பிட்டுப் பார்ப்பது பொருளாதாரத் துறைக்கு உகந்ததாக இருக்காது. எம்ப்ளாய்மெண்ட் சம்பந்தமாகவும் கூறுகிறேன். இன்று விவாதத்தில் தொழில் துறைக்குப் பதிலாக ப்ளான்டேஷன் விவாதம் என்று வைத்துக் கொள்வோம். தோட்டக் காடுகள் சம்பந்தமான விவாதம் என்று வைத்துக் கொள்வோம். அப்போது இந்தமாதிரி அறிக்கை ஒன்றை வைத்திருந்தால் நீலகிரியில் 65,000 பேர்கள் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள், சென்னை நகரில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பூஜ்யம்தான் என்று வைத்திருப்பேன். உடனே "பாருங்கள் சென்னை அடைந்திருக்கிற பிற்போக்குத்தன்மையை; நீலகிரி ஜில்லாவில் 65,000 பேர்கள் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிக்கிறார்கள், சென்னை நகரில் ஒருவர் கூட தோட்டத் தொழிலில் இல்லை, இதுதான் வள்ர்ச்சியா?" என்று கேட்க முடியாது. ஆக, தொழில் வளம் சம்பந்தமாக ஒப்பிடும்போது பாக்டரிகளை ஒப்பிட வேண்டும். எம்ப்ளாய்மென்ட் என்றால் அதோடு ஒப்பிட வேண்டும்.

டாக்டர் பா. நடராஜன்: இதை ஒரு இன்டெக்ஸாக கருதுகிறேன். எவ்வளவு பேர்களுக்கு எம்ப்ளாய்மெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையில் மட்டுமல்ல, மந்திரி அவர்கள் பேசும்போதும் கூட அப்படிச் சொன்னதற்குக் காரணம் என்ன? இந்தக் குறியீட்டை மதித்து பேச வேண்டி வந்தது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. 'க்ரோத்' என்பதற்கு 'இன்டக்ஸ்' காண்பிக்கிறோம். அதை அடிப்படையாக வைத்து இதுதான் வளர்ச்சி என்று குறிப்பிடவில்லை. இது இன்டிகேஷன் என்ற முறையில் பயன்படுமே தவிர இதுதான் எம்ப்ளாய்மென்ட் என்று காட்டுவதற்காக அல்ல. வளர்ச்சி அடைந்திருக்கிற அமெரிக்கா போன்ற நாடுகளில் பாக்டரிகளின் நம்பர் அதிகரித்து தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. சர்வ தேச தொழிலாளர் மகாநாட்டிற்குச் சென்றபோது இது குறித்து கண்டிக்கப்பட்டது. அங்கு பாக்டரிகள் அதிகமாகியும் "ஆட்டமேஷன்" வருகிறது அந்த நாட்டில். அப்படி வருவதால் மனிதர்கள் செய்து கொண்டிருந்த வேலைகளை இயந்திரங்கள் மூலம் அதிகப்படியாகச் செய்ய ஆரம்பித்து தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைகிறது. ஆகவே தொழில் வளத்தைக் காட்டும்போது நம் தொழில் வளம் ஏற்படும்

முறையானது தவறான பாதையில் போகவில்லை, அதே சமயத்தில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் வைத்தேன். அது தவறு என்றால் அடுத்த தடவை எடுத்து விடுகிறேன்.

டாக்டர் பா. நடராஜன்: அதை வைத்து உங்கள் ஆர்குமென்டை நிலைநாட்ட முடியாது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிலைநாட்டிய பிறகு முடியாது என்று சொல்வது சரியாகாது. அடுத்தபடியாக, நெய்வேலி-சேலம் ஸ்டீல் ப்ளான்டை ஏன் வேகமாக அமைக்கவில்லை என்று கேட்டார்கள். மற்ற ராஜ்யங்களில் எல்லாம் வைத்தார்களே, துர்காப்பூரில் வைத்தார்களே, பிலாயில் வைத்தார்களே, அவர்கள் எல்லாம் உங்களைப் போன்று ஒவ்வொரு ஊருக்குச் சென்று ஆராய்ச்சி செய்தார்களா என்று கேட்டார்கள். உண்மைதான். நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல், ஒப்பிட்டுப் பார்க்கும்போது சமமான விஷயங்களைத்தான் ஒப்பிடவேண்டும். மற்ற ராஜ்யங்களில் வைத்த உருக்காலைகள் எல்லாம் "கன்வென்ஷனல் ப்ளாஸ்ட் பர்னஸ்" 100, 200 ஆண்டுகளாக எல்லா நாடுகளிலும் அமைக்கப்பட்ட முறையில் வைக்கப்பட்ட ஒரு தொழிற்சாலை. அதற்குப்புதிய ஆராய்ச்சி தேவையில்லை "கன்வென்ஷனல் ப்ளாஸ்ட் பர்னஸைக் குறைந்த இரும்பு கனிச் சத்தை வைத்து நடத்த முடியாது. கன்வென்ஷனல் ப்ளாஸ்ட் பர்னஸை நாம் அமைக்கவேண்டுமென்றால் கோக்கிங் கோல் வேண்டும். அந்தக் கோக் நம் ராஜ்யத்தில் கிடையாது. கோக் கிடையாது என்று சொன்னால் வங்காளம் போன்ற இடங்களிலிருந்து கொண்டு வர டிரான்ஸ்போர்ட் செலவு என்ன வாகும்? 'அந்தச் செலவையும் மற்றச்செலவுகளையும் கூட்டினால் கட்டுப்படியாகுமா?' என்று பரிசிலனை செய்யவேண்டும். ஒரு காலத்தில் சேலத்தில் உள்ள இரும்பைப் பயன்படுத்த முடியாது என்று நிபுணர்கள் முடிவிற்கு வந்தார்கள். காரணம் அதைப் பயன்படுத்த கோக் வேண்டும். இங்கு கோக் இல்லை. கனிப் பொருள்களை உடைத்து மாக்னட்டிக் மில்லில் கொடுத்து செப்பரேட் செய்து கான்ஸென்ட்ரேட் செய்த பிறகுதான் இரும்பாக உருக்கமுடியும். அவ்வாறு செய்வதற்கு செலவு ஏராளமாகும். இதையெல்லாம் பார்த்துத்தான், தமிழகத்தில் வைக்க முடியாது என்று முடிவு செய்தார்கள். ராஜ்ய சர்க்கார் இதற்குப் பிறகு வேறொரு நாட்டில் குறைந்த தரத்திலுள்ள கனிப் பொருள்களை நல்லமுறையில் உபயோகிக்கிறார்கள் என்று அறிந்து அந்த நாட்டோடு தொடர்பு கொண்டு, அந்த நாட்டிலிருந்து நிபுணர்களை வரவழைத்து புதிதாக ஆராய்ச்சி செய்தோம். அதில் எப்படியாவது இதை உபயோகிக்க முடியும் என்பதை நிர்ணயம் செய்தோம். இதுதான் பிலாயில் உருக்காலை ஏற்படுத்துவதற்கும், நம்முடைய ராஜ்யத்தில் உருக்காலை ஏற்படுத்துவதற்கும் இருக்கின்ற வித்தியாசம். நாம் புதிய முறை ஒன்றை அனுஷ்டிக்க வேண்டியிருக்கிறது. பழைய முறையில் முடியாது. புதிய முறை என்று சொல்லும்போது, லிக்னைட்டை (carbonized briquettes) எந்த விதத்தில் உபயோகப்படுத்த

லாம் என்பது பற்றி கணக்கிடப்பட்டது. இதிலும் பல கஷ்டங்கள் ஏற்படும் என்று தெரிவித்தார்கள். பின்னால் எது கட்டுப்படியாகக் கூடிய முறையில் இருக்கும் என்று பார்ப்பதற்கு நார்வேயில் புதிய முறையில் ஆராய்ச்சி செய்யப்பட்டது. நான் அங்கு சென்ற போது, சேலம் இரும்பையும், நெய்வேலி நிலக்கரியையும் கொண்டு உற்பத்தி செய்த இரும்பைக் கொண்டு வந்து காண்பித்தார்கள். அதை நான் இங்கு கொண்டு வந்து காண்பித்தேன். இந்தவிதமாக பல பரிசீலனைகள் செய்த பின்னால் தான் நம்முடைய கனிப் பொருட்கள் பயன்படத்தக்க கனிப்பொருட்கள் என்று கண்டு பிடிக்க முடியுமே தவிர, ஏதோ நம்முடைய ராஜ்யத்தில் அதிகமான அளவில் நல்ல கனிப்பொருட்கள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன, அரசாங்கம் தான் அசிரத்தையாக இருந்து கொண்டிருக்கிறது என்ற முறையில் சட்டசபையில் பேசுவது சரியல்ல என்பதைத் தான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் பேபி ஃபுட் தொழிற்சாலை ஏன் வரவில்லை என்று கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். இதை ஏற்படுத்துவதற்காக கணக்குப் போடப்பட்டது. எத்தனை அளவுக்குப் பால் கிடைக்க வேண்டும் என்று கணக்குப் போட்டுப் பார்த்ததில் தேவைப்படுகிற அளவுக்கு பால் கிடைக்காது என்பது தெரிய வந்தது. உதாரணமாக, நீலகிரியில் நாள் ஒன்றுக்கு இதற்கு தேவையான பால் பத்தாயிரம் லிட்டர். அது கிடைக்காது என்பது தெரிய வந்தது. அந்த அளவுக்கு இருந்தால் தான் பாக்டரியை நடத்த முடியும். இதையெல்லாம் பார்க்காமல் பாக்டரியை ஆரம்பித்துவிட்டு, பின்னால் ஓடாமல் இருந்தால், அசெம்பிளியில் வந்து யார் பதில் சொல்வது? அது மாத்திரமல்ல, சர்க்கார்த் துறையில் செலவு செய்கின்ற பணம் நம்முடைய வீட்டுப் பணம் அல்ல. தனியார் துறையில் ஆரம்பிக்கிறார்கள் என்றால், லாபமோ நஷ்டமோ அவர்களோடு நின்று போய்விடும். சர்க்கார்த் துறை என்றால் அதில் மக்களுடைய பணம் தான் வீணாகும். ஆகவே இம்மாதிரிப்பட்ட காரியங்களில் வேகமாகப் போவதை விட நிதானமாகப் போய் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். தனியார்த் துறையில் லாபம் வரவில்லை என்றால், போனால் போயிற்று என்று விட்டுவிடுவார்கள், அதனால் பொதுமக்கள் கஷ்டப்படமாட்டார்கள், பெரிய கம்பெனியாக இருந்தாலும் பெரிய விதத்தில் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது, அவர்கள் வேறு துறைகளில் லாபத்தைச் சம்பாதித்துக் கொள்வார்கள். சர்க்கார் துறையில் அவ்விதம் செய்ய முடியாது. அதற்காகத்தான் நல்ல முறையில் பரிசீலனை செய்து போதுமான அளவுக்கு நமக்கு லாபம் வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று கண்ட பிறகு ஆரம்பிக்க முடிவு எடுக்கிறோம். இவற்றிற்கெல்லாம் மேல் நஷ்டம் வந்தால் அதைத் தவிர்க்க முடியாது. அந்த முறையில் தான் இதை நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்து, இதில் லாபம் ஏற்படாது என்பதைப் பார்த்த பின்னால் தான் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்போது கோயம்புத்தூரிலிருந்து, கமலா சர்க்கரை ஆலைக்காரர்கள், இந்த பேபி ஃபுட் பாக்டரியை நடத்தலாம் என்றும் அதற்கு

வேண்டிய பாலை ஊட்டியில் இருந்து வாங்காமல், கோயம்புத்தூர் வட்டாரத்திலிருந்தே பெற்றுக்கொண்டு நடத்தலாம் என்றும் முடிவு செய்து லைசென்ஸ் பெற்றிருக்கிறார்கள். இது சீக்கிரமாகவே ஏற்படலாம் என்று நம்புகிறேன்.

அடுத்தாற்போல், கனம் அங்கத்தினர் திரு. மணிமொழியார் அவர்கள், கொடுக்கப்பட்டிருக்கின்ற சில லைசென்ஸ்கள் காங்கிரஸ்காரர்களுக்கே கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். நான் அந்த விவரங்களைச் சொல்லுகின்றேன். லைசென்ஸ் பெற்றவர்களில் இரண்டு பேர் சட்டசபை அங்கத்தினர்கள். ஒருவர் காங்கிரஸ் கமிட்டிக்குக் காரியதரிசியாக இருந்தவர். ஏதோ இவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும்கூட, பிஸினஸ்காரர்கள் தான். தொழிலை நடத்துகின்றவர்கள்தான். பாக்கி 9 பேர்களும் பிஸினஸ்காரர்கள்தான். அப்புறம் ஒருவர் சிலோனிலிருந்து ரிப்பாட்ரியேட்டாக வந்தவர் என்று சொல்லப்பட்டது. தன்னிடம் வேண்டிய அளவுக்குப் பணம் இருக்கிறது என்று சொன்னதாகத் தெரியவந்தது. அவரை நான் நேரில் பார்த்தது கூடக் கிடையாது. இந்த மாதிரி லைசென்ஸ் கொடுக்கும்போது இதற்கு பினாமி யார் என்பதையெல்லாம் பார்த்துத்தான் கொடுக்கிறார்கள். இதில் தவறுகள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகப் பல பரிசீலனைகள் நடத்தப்படுகின்றன. இந்த விஷயத்தில் யாருக்குக் கொடுத்தாலும், கிடைக்காதவர்கள் குறைபட்டுக் கொள்வார்கள். கேஸ் போடும்பொழுது, கேஸ் தோற்றுப் போய் விட்டால், ஜட்ஜின் மீது குறை சொல்வது வழக்கம்தான். ஆகவே இதையெல்லாம் சரியாகப் பார்க்காமல், சட்டசபையில் வந்து அத்தனையும் காங்கிரஸ்காரர்களுக்கு கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வது நமது சட்டசபைப் பண்புக்கு ஏற்றதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தனித்தனியாகச் சொல்லப்பட்ட, தொகுதி சம்பந்தமான விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக கன்னியாகுமரியில் "ஹாக்கின்ஸ்-வில்லியம்ஸ்" கம்பெனியார் தொழிற்சாலையை மூடிவிட்டார்கள். அதை சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். இதில் இருக்கின்ற நெருக்கடியை நான் தெரிவிக்கின்றேன். அதாவது இப்போது இல்மினேட்-க்கு மார்க்கட் இல்லை. இப்போது அங்கேயே மணவாளக்குறிச்சியில் நடத்துகின்ற தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால், அங்கே மானேஸைட் கிடைக்கிறது என்றுதான் அதை எடுத்து நடத்துகிறார்கள். அதேபோன்றுதான் சவறையிலும் இல்மனைட் தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டது. இந்த இல்மினைட்-டிலிருந்து "டைட்டேனியம் டை-ஆக்ஸைட்" எடுத்து அதை பெயின்ட்-க்கு உபயோகப்படுத்தலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் ஒரு சிலர் தான் இருக்கிறார்கள். இவ்வாறு இந்தத் தொழில் நுட்பம் தெரிந்தவர்களைக் கொண்டு இந்தத் தொழிலை இந்த ராஜ்யத்திலும் ஆரம்பிக்கலாம் என்று பல முறை முயற்சி எடுத்தோம். ஆனால் யாரும்

இதற்கு முன்வரவில்லை? அதனால்தான், இந்தப் புதிய தொழிலை ஆரம்பிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிருஷ்ணகிரியில் தொழிற்பேட்டையில் ஆட்கள் யாரும் வரவில்லை என்பதைப் பற்றிச் சொன்னார்கள். சில நேரங்களில் சட்டசபையில் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகள் என்னை திகைக்க வைக்கின்றன. கிராமப் புறங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும் என்றுதான் நாம் ரூரல் இண்டஸ்ட்ரீஸ் ஸ்கீம்களை எல்லாம் போட்டு, பின்தங்கிய இடங்களில் எல்லாம் தொழிற் பேட்டைகளை நிறுவுகிறோம். இம்மாதிரி தொழிற்பேட்டைகள் ஏற்படும்போது, இதன் காரணமாக சிறிது நஷ்டமானாலும் பரவாயில்லை, வருடம் ஒன்றுக்கு இதன் மூலமாக 10 தொழில்களாவது வருமானால் அதுவே தமிழ்நாட்டுக்குச் செய்யக்கூடிய சேவை என்று எடுத்துக்கொள்ளலாம். தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தினால் நல்ல முறையில், லாபகரமான முறையில் நடைபெறாது என்று தெரிந்தும் கூட, சில இடங்களில் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்குக் காரணம், தொழில் எல்லா இடத்திலும் பரவ வேண்டும் என்கின்ற எண்ணம் மற்றவர்களுக்கும் வரவேண்டும், அதன் மூலமாக தொழில் வளருவதற்கு வாய்ப்பு ஏற்படும், இதன் மூலமாக புதுத் தொழில்களை ஏற்படுத்துவதற்குத் தூண்டுகோலாக அமையும் என்று எண்ணித்தான் தொழிற்பேட்டைகளை வைக்கிறோம். கிருஷ்ணகிரியைப் பொறுத்தளவில், அடுத்த ஆண்டு இந்த விவாதம் நடைபெறும்போது, பெரிய அளவில் அங்கு தொழில்கள் துவங்கும் என்று நம்புகிறேன்.

அடுத்ததாக, விருத்தாசலத்தில் சிராமிக் தொழிற்சாலை லாபத்தில் நடைபெறவில்லை என்பதைப்பற்றித் தெரிவித்தார்கள். இப்போது அங்குள்ள 'க்ளின்' கட்டுப்படியாகக்கூடிய அளவுக்கு இல்லை. கட்டுபடியாகக்கூடிய விதத்தில் ஏற்படுத்த வேண்டிய பெரிய அளவில் உள்ள 'க்ளின்' வெளிநாட்டிலிருந்து கொண்டு வரவேண்டும். இதற்கான ஃபாரின் எக்சேஞ்ச் வேண்டுமென்று மத்திய சர்க்காரிடத்தில் எடுத்துச்சொல்லி, அது கிடைக்கின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கான பெரிய 'க்ளின்' வரவழைப்பதற்கான ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது வந்ததும் உற்பத்தி ஆரம்பிக்கும், அதன் மூலமாக நமக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

ஸிந்தெடிக் ஃபைபர் வேண்டுமென்பதற்காக ராஜ்ய சர்க்கார் முயற்சி எடுத்து, அதில் இந்தியாவிலேயே கப்பாஸிட்டி முடிந்து விட்டது, இனி கிடையாது என்றெல்லாம் பல ஆட்சேபணை சொன்னபோதுகூட, ரீஜனல் கன்ஸிடரேஷன்சில் நைலான் போன்ற நூல்கள் உற்பத்தி செய்வதற்காக தமிழகத்திற்கு லைஸென்ஸ் பெற்றிருக்கிறோம். அதற்கான விவரங்கள் இந்த அறிக்கையிலே 23-வது பக்கத்தில் இருக்கின்றன.

பொன்னேரி, திருத்தணி, திருவள்ளூர் போன்ற பகுதிகளில் தொழில் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதை யொட்டித்தான் திருத்தணிக்கு ஒரு மில் கொடுத்தோம். அடுத்தாற்போல, இப்போது திருவள்ளூரில்கூட ஒரு டெக்ஸ்டைல் மில் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். எல்லாப் பகுதிகளுக்கும் எவ்வளவு சீக்கிரமாக வசதி செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்பதுதான் சர்க்காருடைய நோக்கம். அதை நிறைவேற்றுவதில் எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆர்ட் சில்க் யார்ன் பொறுத்த அளவில் நம்முடைய நாட்டுக்குத் தேவையானது சில உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. சில வெளியிலிருந்து வரவேண்டியிருக்கிறது. உள்நாட்டில் உற்பத்தி செய்வது சவுத் இண்டியா விஸ்கோஸ் போன்றவைகள் உற்பத்தி செய்வது. வெளிநாட்டிலிருந்து வரவேண்டியது, தமிழிலே குப்ரஸா என்று சொல்லுவார்கள், அந்த முறையிலே செய்வது. வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய நூலுக்குத்தான் கஷ்டம் இருக்கிறதே தவிர, உள் நாட்டில் உற்பத்தி செய்கிற நூலுக்குக் கஷ்டம் இல்லை. அது போதிய அளவு கொடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வெளிநாடுகளுக்கு கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்வது பற்றிக் கனம் அங்கத்தினர் பேசினார்கள். அதற்கான முயற்சிகளை இந்த ராஜ்ய சர்க்கார் ஏராளமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் எல்லாத் துணிகளையும் சர்க்காரே வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நஷ்டம் ஏற்பட்டாலும் சப்ஸிடைஸ் செய்யவேண்டும் என்ற நோக்கத்தை ஏற்றுக் கொள்ள இயலாது. அதனால் எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படும், ராஜ்ய நிதிக்கும் நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த விவாதத்திலே பங்கெடுத்துக்கொண்ட எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, தமிழ் நாட்டின் தொழில் வளம் பெருக வேண்டும் என்பதற்கான முறையிலே என்னுடைய கருத்து ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு ப்ளாக் லெவலிலும் குறைந்தது ஒரு கார்ப்பெண்ட்டரி அண்ட் ஸ்மிதி யூனிட் இருக்கவேண்டும். ஒவ்வொரு தாலுகாவிலும் குறைந்தது ஒரு ஜெனரல் பர்ப்பஸ் என்ஜினியரிங் வொர்க்ஷாப் அமைக்கவேண்டும். ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனிலும் ஒரு இண்டஸ்ட்ரியல் காலனி அமைக்கவேண்டும். ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் இப்போதே போட்டு விட்டோம். இந்த மாதிரி பரந்த அளவில் திட்டத்தைத் தீட்டினால் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நமக்கு இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சியைவிட இன்னும் அதிகமான வளர்ச்சி ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [11th March 1964

நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல, நாஷனல் கவுன்ஸில் ஆஃப் அப்ளைட் இக்கனமிக்ஸ் என்ற ஸ்தாபனத்தை இண்டஸ்ட்ரியல் சர்வே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். டெவலப்மெண்ட் ஆஃபீஸர்கள் எல்லோரையும் கேட்டு யோசனை செய்கிறோம். கனம் அங்கத்தினர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள், சட்ட சபைக் கமிட்டி இருக்க வேண்டும் என்று. சென்ற தடவை நடந்தது கனம் அங்கத்தினர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அதுவும் கைக்கொள்ளப்படும். இந்த விதமான திட்டங்கள் எல்லா இலாகாவினாலும் தயாரிக்கப்பட்ட பிறகு ராஜ்ய சட்ட சபை அங்கத்தினர்களைக் கொண்ட கமிட்டியைப் போட்டு அவர்கள் கருத்துக்களைக் கேட்கும் முறையில் சென்ற முறை நிறுவினோம். அதே மாதிரி இந்த முறையும் நிறுவவேண்டுமென்பது சர்க்காருடைய நோக்கம். சட்ட சபை அங்கத்தினர்கள் கூடிய கமிட்டியில் ஒவ்வொரு இலாகாவாக விசாரணை செய்து, ஒவ்வொன்றாக, கல்வி, சுகாதாரம், தொழில், வர்த்தகம் என்ற முறையில் எல்லாவற்றையும் பற்றி விவாதித்து நம் ராஜ்யத்திற்குத் தேவையான திட்டத்தை சென்ற முறை எப்படி அனுப்பி வைத்தோமோ அந்த முறையில் இந்தத் தடவையும் செய்யலாம் என்று நம்புகிறேன்.

இந்த மான்யக் கோரிக்கையை ஆதரிக்கும்படிக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், ஸார், அமைச்சர் அவர்கள் குழந்தைகள் உணவு ஃபாக்டரி பற்றிச் சொல்லும்போது, நீலகிரியில் பால் அதிகமாகக் கிடைக்காத காரணத்தினால் கோவையில் வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். பால் அதிகமாகக் கிடைக்க அதிகமாக மாடுகள் வைத்தால் கிடைக்கும். நீலகிரியைப் பொறுத்த அளவில் தீவனம் அதிகமாக இருக்கிறது. இயற்கை வசதி அதிகமாக இருக்கிற காரணத்தினால் அதிகமாக மாடுகள் வளர்த்தால் பால் அதிகமாகக் கிடைக்கும். அந்த முறையில் இல்லாத இடத்தில் ஃபாக்டரி ஏற்படுத்தினால் அதில் என்ன சிரமம் இருக்கிறது என்று அமைச்சர் விளக்குவாரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஆர்குமெண்ட்தான் வேறு ஒன்றும் அல்ல.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : மந்திரி அவர்கள் சட்டசபைக் கமிட்டி அமைக்கப்படும் என்று சொன்னதைப்பற்றி சந்தோஷம். ஒரு விஷயம் விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போடுவதிலே பல பிரச்னைகள் இருக்கிற நேரத்தில், எஜுகேஷன், பப்ளிக் ஹெல்த் இந்தமாதிரி பல பிரச்னைகள் இருக்கின்ற காரணத்தினால் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாகக் கமிட்டி அமைக்கப்படுமா ? அல்லது பொதுவாக ஒரு கமிட்டி அமைத்து எல்லாவற்றையும் விவாதிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? எங்களுடைய ஆசை, ஒவ்வொன்றுக்கும் தனித் தனி கமிட்டி போட்டால் நலம் என்பது. அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

11th March 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எல்லா இலாகாக்களையும் பற்றி அவரவர்கள் தயாரித்த அறிக்கைகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு ப்ரிலிமினரி ரிப்போர்ட் தயார் செய்யப்படும். அந்த ப்ரிலிமினரி ரிப்போர்ட்டைத்தான் இந்த சபை, மேல் சபை அங்கத்தினர்களைக் கொண்ட கமிட்டி விவாதித்து முடிவு செய்ய முடியும். தனித்தனி கமிட்டி போடுவது இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : டெர்லின் சம்பந்தப்பட்ட துணிகளுக்கு எந்தவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ? டெர்லின் நூல் தயாரிக்க ஃபாரின் கொலாபரேஷன் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அறிக்கையில் 23-ம் பக்கத்தில் பார்த்தால் அங்கே கொடுத்திருக்கிறோம். பாலியெஸ்டர் ஃபைபர் என்று கொடுத்திருக்கிறதே, நைலான், டெக்ரான் எல்லாம் அதுதான்.

திரு. அ. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பற்றிய புத்தகத்தில் கொடுத்துள்ள விவரப்படி இப்போது கோவாப்பரேட்டிவ் செக்டாரில் ஆரம்பிக்கிற ஸ்பின்னிங் மில்களெல்லாம் வேலை துவங்கினாலும் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளில் உள்ள தறிகளுக்கு 50 சத விகிதம் நூல் தான் கிடைக்கும் என்று குறிப்பிடப்படுகிறது. முழுத் தேவையை எப்போது பூர்த்தி செய்ய முடியும் ? அது தவிர, விலையேற்றத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு எந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கைத்தறி நெசவாளர்களுக்கு, கூட்டுறவு சங்கங்களில் இருக்கிறவர்களுக்கு பெருமளவுக்கு நூல் சப்ளை செய்கிறோம் என்றால் மற்றொரு இடத்தில் டிமாண்ட் குறைந்துகொண்டு போகும். அதைத் தவிர, 13 மில்கள் வேறு கொடுத்திருக்கிறோம். என்னைப் பொறுத்த வரையில், ஒரு காலத்தில் மில்லே வேண்டாம் என்று சொல்லும் நிலை வந்துவிடுமோ என்றுகூட நினைக்கிறேன்.

Mr. DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 5,35,00,300 under Demand No. XX—Industries be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

Mr. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,35,00,300 under Demand No. XX—Industries.'

The Demand was put and carried and the Grant was made.

Mr. DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 6,73,05,900 under Demand No. XL—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100.'

[11th March 1964

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 6,73,05,900 under Demand No. XL—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and
1-30 p.m. meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders—Nil.

B. Reports, Notifications and other papers.

* 69. *Housing in Madras State*, 1963-64.

* 70. *A Review of the Industrial Development in Madras State* 1963-64.

* Circulated to Members on 9th March 1964.

11th March 1964]

APPENDIX

[Vide answer to Starred Question No. 211 on page 231]

(a) Yes.

(b) Statement showing the members of the District Handloom Board in various districts of Madras State:

Name of the district and members of the District Handloom Board.

Thanjavur—

1. The Collector of Thanjavur. Chairman (Ex-Officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Thanjavur, Secretary.

3. The Deputy Registrar of Co-operative Societies, Kumbakonam, Ex-officio Member.

4. Sri S. T. R. M. Kandaswamy Mudaliar, President, Sikkil Weavers' Co-operative Society, Sikkil, Nagapattinam taluk, Representative of Primary Weavers' Co-operative Societies.

5. Sri K. T. Rathinasabapathi Mudaliar, Kodavasal, Nannilam taluk, Representative, Handloom Weavers.

6. Sri R. S. Renganathan Chettiar, Mannargudi, Representative, Handloom Weavers.

7. Sri N. Srinivasagopalan, Master Weaver, Tirunageswaram, Kumbakonam taluk, Representative of Master Weavers.

8. Sri T. S. Krishnamoorthy Iyer, yarn dealer and Proprietor, Gowthama and Company, Thanjavur, Representative of yarn dealers.

9. Sri C. Kanagasabai Chettiar, Merchant, Kornad, Mayuram, Representative of Handloom Cloth Merchants.

10. Sri C. Ramaswamy Mudaliar, Silk Merchant, Kumbakonam, Member of the State Handloom Committee—Vice-Chairman.

Ramanathapuram—

1. The Collector of Ramanathapuram district—Chairman (Ex-officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Ramanathapuram at Madurai (Ex-Officio Member).

3. The Deputy Registrar of Co-operative Societies, Sivaganga (Ex-Officio Member).

4. The Local Member of the State Handloom Committees, Member.

5. Sri S. G. Lakshminarayanan, President, Emaneswaram Weavers' Co-operative Society, Paramakudi, Representative of Primary Co-operative Societies.

[11th March 1964

6. Sri A. S. S. P. Parmasivam Chettiar, Secretary of the Sankaralingapuram Kaithari Javuli Urpathiyalargal Sangam, Sankaralingapuram (Sattur taluk), Representative of Handloom Weavers.

7. Sri N. Nagamani Chettiar, son of Moopan Chettiar, Soundamman Koil street, Aruppukottai, Representative of Handloom Weavers.

8. Sri M. Natarajan, Chatrapatti village (via) Rajapalayam, Representative of Master Weavers.

9. Sri P. S. Kalasulinga Tharaganar, Yarn Merchant, Srivilliputhur, Representative of Yarn Dealers.

10. Sri Pt. A. V. Veeriah Chettiar, President of the Karaikudi Handloom Artsilk Cloth Manufacturers' Association, Karaikudi, Representative of Handloom Cloth Dealers.

North Arcot—

1. The Collector of North Arcot, Chairman (Ex-Officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Vellore North, Ex-Officio Member.

3. The Deputy Registrar of Co-operative Societies, Vellore South, Ex-Officio Member.

4. Sri K. R. Lakshmipathy, President, Kilkodunganollore Weavers' Co-operative Society, Wandiwash taluk, Representative of Weavers' Co-operative Societies.

5. Sri K. M. Elappan, Sempatharayanpettai, Arkonam taluk, Representative of weavers' outside the co-operative fold.

6. Sri P. M. Ramaswamy Chettiar, Nadu Theru, Onnupuram, Arni, North Arcot district, Representative of weavers outside the co-operative fold.

7. Sri C. Sadayappa Mudaliar, M.L.A., Arkonam, Representative of Master Weavers.

8. Sri Govindarajulu Mudaliar, No. 18, Chetty street, Tiruvannamalai, Representative of Yarn Dealers.

9. Sri Polur V. Govindasamy Chetty, C/o V. Chandriah Chetty, Handloom Cloth Merchant, Charanampet, Gudiyatham taluk, Representative of Handloom Cloth Merchants.

10. Local Member of the State Handloom Committee.

Salem—

1. The Collector of Salem, Chairman (Ex-Officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Salem, Ex-Officio Member.

11th March 1964]

3. The Deputy Registrar of Co-operative Societies, Dharmapuri, Ex-Officio Member.

4. Sri K. A. Kasiviswanatha Mudaliar, President, Tiruchengode Weavers' Co-operative Society, Tiruchengode, Representative of Weavers' Co-operative Societies.

5. Sri K. B. E. Sivaraman, No. 17, Lakshmayya Chetty street, Shevapet, Salem-2, Representative of weavers outside the co-operative fold.

6. Sri A. R. Muthusamy, B.A., Salem, Representative of Weavers outside the co-operative fold.

7. Sri S. R. Govindarajulu Chettiar, Secretary, Salem Handloom Cloth Manufacturers' and Exporters' Association, Representative of Master Weavers.

8. Sri M. S. Krishnamoorthy Iyer, Yarn Dealer, Shevapet, Salem-2, Representative of Yarn Dealers.

9. R. Muthiah, B.A., No. 48/494, Kanakkar street, Salem, Representative of Cloth Merchants.

10. Local Member of the State Handloom Committee.

Madurai—

1. The Collector of Madurai District, Chairman (Ex-Officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Madurai, Ex-Officio Member.

3. The Deputy Registrar of Co-operative Societies, Dindigul, Ex-Officio Member.

4. Sri K. S. Rajaraman, President, Thiruvika Weavers' Co-operative Society, Madurai, Representative of Primary Weavers' Co-operative Societies.

5. Sri V. A. Palaniandi Moopanar, Kaliamman Koil street, Sellur, Madurai-2, Representative of Handloom Weavers.

6. Sri V. R. Subbaraman, Honorary Secretary, Handloom Cloth Manufacturers' Association, Madurai, Representative of Handloom Weavers.

7. Sri P. G. Muniswamy Iyer, Trustee, Vadamadurai Devasthanam, Perumal Koil street, Nagal Nagar, Dindigul, Representative of Master Weavers.

8. Sri T. Manickavasagam, Secretary, Tamilnad Millowners' Association, Madurai, Representative of Yarn Dealers.

9. Sri T. K. Balusami, No. 69, Makal Vadamboki street, Madurai, Representative of Handloom Cloth Dealers.

10. Local Member of the Madras State Handloom Committee, Member.

[11th March 1964

11. Srimathi P. K. R. Lakshmikantham, M.L.A., No. 267, Ramnad Road, Madurai, Member.

Chingleput—

1. The Collector of Chingleput, Chairman (Ex-Officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Chingleput, Ex-Officio Member.

3. The Deputy Registrar of Co-operative Societies, Tiruvallur, Ex-Officio Member.

4. Sri G. K. Kannan, President, Handloom Weavers' Co-operative Societies, Kancheepuram, Representative of Primary Weavers' Co-operative Societies.

5. Sri V. Krishnasamy Mudaliar, Chairman, Kancheepuram Municipality, Representative of handloom weavers' outside the co-operative fold.

6. Sri S. Ranganatha Mudaliar, M.L.A., Thiruthani, Representative of handloom weavers outside the co-operative fold.

7. Sri M. S. Veerabadra Chettiar, Arani, Representative of Master Weavers.

8. Sri V. Kanniappa Chettiar, Yarn Merchant, Muthialpettai, Kancheepuram, Representative of Yarn Dealers.

9. Sri M. S. Vajravelu Mudaliar, Handloom Cloth Merchant, Kancheepuram, Representative of Handloom Cloth Dealers.

10. The Local Member of the Madras State Handloom Committee, Member.

Tirunelveli—

1. The Collector of Tirunelveli, Chairman (Ex-officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Tirunelveli, Ex-officio Member.

3. The Deputy Registrar of Co-operative Societies, Tuticorin, Ex-officio Member.

4. Sri U. Abdul Hameed, Kadayanallur Weavers' Co-operative Society, Kadayanallur, Representative of Weavers' Co-operative Societies.

5. Sri Navaneethakrishna Mudaliar, Pattapathu, Tirunelveli town, Representative of weavers outside co-operative fold.

6. Sri A. Kathirvelu Mudaliar, Peria Theru, Tirunelveli town, Representative of weavers outside co-operative fold.

7. Sri S. M. Mohammad Ali, B.A., B.L., President, Handloom Cloth Manufacturers' Association, Kadayanallur, Representative of Master Weavers.

11th March 1964]

8. Sri S. S. Alwarappa Pillai, South Car street, Tirunelveli town, Representative of Yarn Dealers.

9. Sri C. Balasubramaniam, No. 71, Perumalpuram, Palayamkottai, Representative of Handloom Cloth Dealers.

10. Local Member of the State Handloom Committee, Member.

South Arcot—

1. The District Revenue Officer of South Arcot, Chairman (Ex-officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Cuddalore, Ex-officio Member.

3. The Deputy Registrar of Co-operative Societies, Tirukoilur, Ex-officio Member.

4. Sri T. N. V. Neelakantan Chettiar, President, Mel Bhuvanagiri Weavers' Co-operative Society, Bhuvanagiri, Chidambaram taluk, Representative of Primary Weavers' Co-operative Societies.

5. Sri T. K. C. Sadasiva Mudaliar, T. Pudupalayam, Vikravandi, Villupuram taluk, Representative of weavers outside the co-operative fold.

6. Sri A. Subramania Mudaliar, Esalam village, Villupuram taluk, Representative of weavers outside the co-operative fold.

7. Sri S. K. Sambandam, Kurinjipadi, Representative of Master Weavers.

8. Sri N. M. Ponnambalam Pillai, Chidambaram, Representative of Yarn Dealers.

9. Sri A. P. Narayanaswamy Mudaliar, Kaili Merchant, Anguchettipalayam, Cuddalore, Representative of Cloth Merchant.

10. The local member of the State Handloom Committee, Member.

Madras—

1. The Collector of Madras, Chairman (Ex-officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Madras, Ex-officio Member.

3. Sri B. V. Krishnan, Vice-President, Madras Sourashtra Weavers' Co-operative Society, Limited, Choolai, Madras, Representative of Primary Weavers' Co-operative Societies.

4. M. N. Arunachalan, No. 10, Subramania Mudali street, Saidapet, Madras-15, Representative of weavers outside the co-operative fold.

5. Sri S. G. Vinayagamurthi, No. 3/34, Selvanayagar Koil street, Madras-21, Representative of weavers outside the co-operative fold.

[11th March 1964

6. Sri K. M. Narasimhan, B.SC., F.R., E.CON. (Lond.), No. 3, Somasundara Devar street, Ayanavaram, Madras-23, Representative of Master Weavers.

7. President, Madras Yarn Merchants' Association, Representative of Yarn Dealers.

8. Srimathi Seethalakshmi Kumaraswami, No. 216, Thiruvothiyur High Road, Tondiarpet, Madras-21, Representative of Cloth Dealers.

9. The Local Member of the State Handloom Committee, Member.

10. Sri R. S. Kumaraswamy, Secretary, The Tamilnad Congress Political Sufferers' Association, No. 6, V.V. Koil Lane, Madras-7, Member.

Coimbatore—

1. The Collector of Coimbatore, Chairman (Ex-officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Coimbatore, Ex-officio Member.

3. The Deputy Registrar of Co-operative Societies, Erode, Ex-officio Member.

4. Sri V. P. Venkatachalam, No. 15, Second street, Gandhipuram, Coimbatore, Representative of Primary Weavers' Co-operative Society.

5. Sri Visaga Perumal, son of Mari Chettiar, Puduveethi near Theppakulam Lane, Coimbatore, Representative of weavers outside the co-operative fold.

6. Sri G. E. Chinnadurai, President, Basaweswarar Weavers' Co-operative Society, Coimbatore, nominated as an additional member representing weavers' co-operative societies.

7. Sri M. Raju, son of Marudhachalam Chettiar, Seeranaickenpalayam, Coimbatore taluk, Representative of weavers outside the co-operative fold.

8. Sri L. Venkitaswamy Chettiar, Cloth Merchant, Sukravarpet, Master Weavers' Sangam, Coimbatore, Representative of Master Weavers.

9. Sri A. R. C. Venkitachalam Chettiar, No. 34, Raja Street, Coimbatore, Representative of Yarn Dealers.

10. Sri S. R. P. Ponnuswami Chettiar, M.L.C., Handloom Cloth Merchant, Sukravarpet street, Coimbatore, Representative of Handloom Cloth Dealers.

11. Sri C. Amboyiram, No. 9, Vaniyar street, Erode, Representative of Dyeing, Bleaching, Printing and Furnishing Industries.

11th March 1964]

12. Sri M. N. M. Veerabadra Chettiar, Tirupur, Representative of Mill Owners' Association.

13. The Local Member of the State Handloom Committee, Member.

Kanyakumari—

1. The Collector of Kanyakumari, Chairman (Ex-officio).

2. The Deputy Registrar of Co-operative Societies, Kanyakumari, Nagercoil, Ex-officio Member-Secretary.

3. Sri A. Ramaswamy, President, Vadaseri Weavers' Co-operative Society, Vadaseri, Representative of Primary Weavers' Co-operative Societies.

4. Sri A. Ramalingam, Kottar, Representative of weavers outside the co-operative fold.

5. Sri P. Velayudhan Mudaliar, Palliyadi, Representative of Weavers outside the Co-operative fold.

6. Sri N. Muthuswami, Vadaseri, Representative of Master Weavers.

7. Sri T. Devadas, Marthandam, Representative of Yarn Dealers.

8. Sri T. Neelakantan, Vadaseri, Representative of Cloth Merchants.

9. The Local Member of the State Handloom Committee, Member.

Tiruchirappalli—

1. The Collector of Tiruchirappalli (Chairman) Ex-officio.

2. The Deputy Registrar of Co-operative Societies, Tiruchirappalli (North), Ex-officio Member-Secretary.

3. The Deputy Registrar of Co-operative Societies, Tiruchirappalli (South), Ex-officio Member.

4. Sri S. M. Somasundaram, President, Kallathur Weavers' Co-operative Society, Udayarppalayam taluk, Representative, Weavers' Co-operative Societies.

5. Sri K. N. P. Arunachala Mudaliar, Partner of Messrs. P. Ramaswamy & Company, Manufacturers of Handloom Cloth at Woriyur, Representing weavers outside the co-operative fold.

6. Sri Thangavelu Mudaliar, Aduthurai, Perambalur taluk, Representing weavers outside the co-operative fold.

7. Sri A. S. Lingayyan Chettiar, Sundara Vilas, North Mudulankollai street, Woriyur, Representing Master Weavers.

8. Sri Chinnasamy Mudaliar, Marudur, Arriyalur sub-taluk, Representing Yarn dealers.

[11th March 1964

9. Sri R. Viswanathan, President, Panchayat Board, Unniyur (and President, Handloom Cloth Dealers' Association, Musiri), Representing Handloom Cloth Dealers.

10. Secretary, Karur Weaving and Knitting Factory Owners' Association, Karur, Representing Dyeing Industry.

11. The Local Member of the State Handloom Committee, Member.

(c) They are nominated by the State Government.

(அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலுள்ள மாவட்டக் கைத்தறி போர்டின் உறுப்பினர்களைக் காட்டும் அறிக்கை:

மாவட்டக் கைத்தறி போர்டின் உறுப்பினர்கள்.

தஞ்சாவூர் மாவட்டம்:—

1. தஞ்சாவூர் கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், தஞ்சாவூர், செயலாளர்.

3. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் (அலுவலால்), கும்பகோணம், உறுப்பினர்.

4. திரு. எஸ். டி. ஆர். எம். கந்தசாமி முதலியார், தலைவர் சிக்கில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், சிக்கில் நாகப்பட்டிணம் தாலூகா; பிரதிநிதி நெசவாளர் பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள்.

5. திரு. கே. டி. ரத்தினசபாபதி முதலியார். கொடவாசல், நன்னிலம் தாலூகா, கைத்தறி நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. ஆர். எஸ். ரங்கநாதன் செட்டியார், மன்னார்குடி, கைத்தறி நெசவாளர்கள் பிரதிநிதி.

7. திரு. என். சீனிவாச கோபாலன், தலைமை நெசவாளர், திருநாகேஸ்வரம், கும்பகோணம் தாலூகா, தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

8. திரு. டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயர், நூல் வியாபாரி, உரிமையாளர், கொளதமா அண்டு கோ, தஞ்சாவூர்; நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

9. திரு. சி. கனகசபை செட்டியார், வியாபாரி, கொரநாடு மாயூரம்; கைத்தறி துணி வியாபாரிகள் பிரதிநிதி.

10. திரு. சி. ராமஸ்வாமி முதலியார், பட்டு வியாபாரி, கும்பகோணம் மாநிலக் கைத்தறிக் கமிட்டி உறுப்பினர்; துணைத் தலைவர்.

11th March 1964]

ராமநாதபுரம் மாவட்டம்—

1. ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. மதுரையினுள்ள ராமநாதபுரம் கூட்டுறவுச் சங்க உதவிப் பதிவாளர் உறுப்பினர் (அலுவலால்).

3. துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கம், சிவகங்கை, உறுப்பினர் (அலுவலால்).

4. மாநிலக் கைத்தறிக் கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர்; உறுப்பினர்.

5. திரு. எஸ். ஜி. லக்ஷ்மி நாராயணன், எமனேஸ்வரம் நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கத் தலைவர், பரமக்குடி, பிரதிநிதி, நெசவாளர் பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள்.

6. திரு. எ. எஸ். எஸ். பி. பரமசிவ செட்டியார், சங்கரலிங்கபுரம் கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கச் செயலாளர், சங்கரலிங்கபுரம் (சாத்தூர் தாலூகா). கைத்தறி நெசவாளர்கள் பிரதிநிதி.

7. திரு. என். நாகமணி செட்டியார், S/o மூப்பன் செட்டியார், சௌன்டமன் கோயில் தெரு, அருப்புக்கோட்டை, கைத்தறி நெசவாளர்கள் பிரதிநிதி.

8. திரு. எம். நடராஜன், சத்ரபக்தி கிராமம்—வழி—ராஜபாளையம் தலைமை நெசவாளர் பிரதிநிதி.

9. திரு. பி. எஸ். களசுலிங்க தரகநர், நூல் வியாபாரி, ஸ்ரீவில்லிபுத்தூர், நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

10. திரு. பிடி. எ. வி. வீரய்யா செட்டியார், காரைக்குடி கைத்தறி நார்பட்டுத் துணி தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர், காரைக்குடி; கைத்தறித் துணி வியாபாரிகள் பிரதிநிதி.

வட ஆற்காடு மாவட்டம்—

1. வட ஆற்காடு மாவட்டக் கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. கூட்டுறவுச் சங்க உதவிப் பதிவாளர், வேலூர், வடக்கு (அலுவலால்) உறுப்பினர்.

3. கூற்டுறவுச் சங்க உதவிப் பதிவாளர், வேலூர், தெற்கு (அலுவலால்).

4. திரு. கே. ஆர். லக்ஷ்மிபதி, கீழ்கெடுங்க நெல்லூர் நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கத் தலைவர், வந்தவாசி தாலூகா, நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி.

5. திரு. கே. எம். ஏலப்பன், செம்பத்தராயன்பேட்டை, அரக்கோணம் தாலுகா, கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்திராத நெசவாளர்கள் பிரதிநிதி.

[11th March 1964

6. திரு. பி. எம். ராமஸ்வாமி செட்டியார், நடுத் தெரு, ஒண்ணுபுரம், ஆரணி, வட ஆற்காடு மாவட்டம், கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

7. திரு. சி. சடயப்ப முதலியார், எம்.எல்.ஏ., அரக்கோணம், தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

8. திரு. கோவிந்தராஜுலு முதலியார், 18, செட்டி தெரு, திருவண்ணாமலை நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

9. திரு. பேரூர் வி. கோவிந்தசாமி செட்டி, C/o வி. சந்திரைய செட்டி, கைத்தறித் துணி வியாபாரி, சரணம் பேட்டை, குடியாத்தம் தாலுகா, கைத்தறித் துணி வியாபாரிகள் பிரதிநிதி.

10. தமிழ்நாடு கைத்தறி கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர்.

சேலம் மாவட்டம்—

1. சேலம் கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், சேலம் உறுப்பினர் (அலுவலால்).

3. கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர், தர்மபுரி, உறுப்பினர் (அலுவலால்).

4. திரு. கே. ஏ. காசிவிஸ்வநாத முதலியார், திருச்செங்கோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், திருச்செங்கோடு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி.

5. திரு. கே. பி. இ. சிவராமன், 17, லக்ஷ்மையா செட்டி தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2. கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. ஏ. ஆர். முத்துசாமி, பி.ஏ., சேலம், கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

7. திரு. எஸ். ஆர். கோவிந்தராஜுலு செட்டியார், செயலாளர், சேலம் கைத்தறித் துணி தயாரிப்பாளர்கள், ஏற்றுமதி சங்கம். தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

8. திரு. எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயர், நூல் வியாபாரி செவ்வாப்பேட்டை, சேலம்-2. நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

9. ஆர். முத்தையா, பி.ஏ., 48-494, கணக்கர் தெரு, சேலம் துணி வியாபாரிகள் பிரதிநிதி.

10. மாநிலக் கைத்தறிக் கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர்.

மதுரை மாவட்டம்—

1. மதுரை கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. மதுரைக் கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர் உறுப்பினர் (அலுவலால்).

11th March 1964]

3. கூட்டுறவுச் சங்க உதவிப் பதிவாளர், திண்டுக்கல் (அலுவலால்)—உறுப்பினர்.

4. திரு. கே. எஸ். ராஜாராமன், தலைவர் திரு. வி. க. நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், மதுரை. பிரதிநிதி, நெசவாளர் பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள்.

5. திரு. வி. ஏ. பழனியாண்டி மூப்பனார், காளியம்மன் கோயில் தெரு, செல்லூர், மதுரை-2. கைத்தறி நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. வி. ஆர். சுப்பராமன், கௌரவ செயலாளர், கைத்தறி துணி உற்பத்தியாளர்கள் சங்கம், மதுரை. கைத்தறி நெசவாளர் பிரதிநிதி.

7. திரு. பி. ஜி. முனுஸ்வாமி ஐயர், தர்மகர்த்தா, வட மதுரை தேவஸ்தானம், பெருமாள் கோயில் தெரு, நாகல் நகர், திண்டுக்கல் தலைமை நெசவாளர் பிரதிநிதி.

8. திரு. டி. மாணிக்கவாசகம், செயலாளர், தமிழ்நாடு ஆலை அதிபர்கள் சங்கம், மதுரை நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

9. திரு. டி. கே. பாலுசாமி, 69, மகல் வடம்போகி தெரு, மதுரை கைத்தறித் துணி வியாபாரிகள் பிரதிநிதி.

10. சென்னை மாநில கைத்தறிக் கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர்—உறுப்பினர்.

11. திருமதி. பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம், எம். எல்.ஏ., 267, ராமநாதபுரம் சாலை, மதுரை—உறுப்பினர்.

செங்கற்பட்டு மாவட்டம்—

1. செங்கற்பட்டு கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், செங்கற்பட்டு, (அலுவலால்)—உறுப்பினர்.

3. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், திருவள்ளூர் (அலுவலால்)—உறுப்பினர்.

4. திரு. ஜி. கே. கண்ணன், தலைவர், கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம், காஞ்சிபுரம் பிரதிநிதி, நெசவாளர் பிரமக் கூட்டுறவுச் சங்கங்கள்.

5. திரு. வி. கிருஷ்ணசாமி முதலியார், தலைவர், காஞ்சிபுரம் முனிசிபாலிடி கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத கைத்தறி நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. எஸ். ரங்கநாத முதலியார், எம்.எல்.ஏ., திருத்தணி, கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத கைத்தறி நெசவாளர்கள் பிரதிநிதி.

7. திரு. எம். எஸ். வீரபத்ர செட்டியார், ஆரணி, தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

[11th March 1964

8. திரு. வி. கன்னியப்ப செட்டியார், நூல் வியாபாரி, முத்தியால் பேட்டை, காஞ்சிபுரம். நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

9. திரு. எம். எஸ். வஜ்ரவேலு முதலியார், கைத்தறி துணி வியாபாரி, காஞ்சிபுரம். கைத்தறித் துணி வியாபாரிகள் பிரதிநிதி.

10. தமிழ்நாடு கைத்தறிக் கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர்—உறுப்பினர்.

திருநெல்வேலி மாவட்டம்—

1. திருநெல்வேலி கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், திருநெல்வேலி (அலுவலால்)—உறுப்பினர்.

3. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், தூத்துக்குடி (அலுவலால்)—உறுப்பினர்.

4. திரு. யு. அப்துல் ஹமீது, கடயநல்லூர் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், கடயநல்லூர் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி.

5. திரு. நவநீத கிருஷ்ண முதலியார், பாட்டப்பத்து, திருநெல்வேலி டவுன், கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. ஏ. கதிர்வேலு முதலியார், பெரிய தெரு, திருநெல்வேலி டவுன், கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

7. திரு. எஸ். எம். முகமது அலி, பி.ஏ., பி.எல்., தலைவர், கைத்தறித் துணி உற்பத்தியாளர்கள் சங்கம், கடயநல்லூர் தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

8. திரு. எம். எஸ். ஆள்வாரப்ப பிள்ளை, தெற்கு ரத வீதி, திருநெல்வேலி டவுன், நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

9. திரு. பி. பாலசுப்ரமணியம், 71, பெருமாள்புரம், பாளையங்கோட்டை, கைத்தறித் துணி வியாபாரிகள் பிரதிநிதி.

10. தமிழ்நாடு கைத்தறிக் கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர்—உறுப்பினர்.

தென்ஆற்காடு மாவட்டம்—

1. தென்னாற்காடு மாவட்ட ரெவின்யூ அதிகாரி, தலைவர் (அலுவலால்).

2. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், கடலூர் (அலுவலால்)—உறுப்பினர்.

3. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், திருக்கோயிலூர் (அலுவலால்)—உறுப்பினர்.

11th March 1964]

4. திரு. டி. என். வி. நீலகண்டன் செட்டியார், தலைவர், மேல் புவனகிரி நெசவாளர்கள் சங்கம், புவனகிரி, சிதம்பரம் தாலூகா. பிரதிநிதி, நெசவாளர்கள் பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள்.

5. திரு. டி. கே. சி. சதாசிவ முதலியார், டி. புதுப்பாளையம், விக்கிரவாண்டி, விழுப்புரம் தாலூகா, கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. ஏ. சுப்பிரமணிய முதலியார், எசாலம் கிராமம், விழுப்புரம் தாலூகா, கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

7. திரு. எஸ். கே. சம்பந்தம், குறிஞ்சிப்பாடி, தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

8. திரு. என். எம். பொன்னம்பலம் பிள்ளை, சிதம்பரம், நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

9. திரு. ஏ. பி. நாராயணசாமி முதலியார், கைலி வியாபாரி, அங்குசெட்டிபாளையம், கடலூர்—துணி வியாபாரிகள் பிரதிநிதி.

10. தமிழ்நாடு கைத்தறிக் கமிட்டி உள்ளூர் உறுப்பினர்—உறுப்பினர்.

சென்னை மாவட்டம்—

1. சென்னைக் கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், சென்னை (அலுவலால்)—உறுப்பினர்.

3. திரு. பி. வி. கிருஷ்ணன், துணைத் தலைவர், சென்னை சௌராஷ்டிரா நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், லிமிடெட், சூளை, சென்னை. நெசவாளர்கள் பிரதமக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி.

4. திரு. எம். என். அருணாசலம், 10, சுப்பிரமணிய முதலித் தெரு, சைதாப்பேட்டை, சென்னை 15. கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

5. திரு. எஸ். ஜி. விநாயகமூர்த்தி, 3/34, செல்வநாயகர் கோவில் தெரு, சென்னை-21. கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. கே. எம். நரசிம்மன், பி.எஸ்ஸி., எஃப். ஆர். (எகனமிக்ஸ்) (லண்டன்), 3, சோமசுந்தரத் தேவர் தெரு, அயனாவரம், சென்னை-23. தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

7. தலைவர், சென்னை நூல் வியாபாரிகள் சங்கம், நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

8. திருமதி சீதாலட்சுமி குமாரசுவாமி, 216, திருவொற்றியூர் ஹைரோடு, தண்டையார்பேட்டை, சென்னை-21. துணி வியாபாரிகள் பிரதிநிதி.

[11th March 1964

9. மாநிலக் கைத்தறிக் கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர்—உறுப்பினர்.

10. திரு. ஆர். எஸ். குமாரசுவாமி, செயலாளர், தமிழ்நாடு காங்கிரஸ் தியாகிகள் சங்கம், 6, வி. வி. கோயில் லேன், சென்னை-7—உறுப்பினர்.

கோயம்புத்தூர் மாவட்டம்—

1. கோயம்புத்தூர் கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், கோயம்புத்தூர் (அலுவலால்)—உறுப்பினர்.

3. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், ஈரோடு (அலுவலால்)—உறுப்பினர்.

4. திரு. வி. பி. வெங்கடாசலம், 15, இரண்டாவது தெரு, காந்திபுரம், கோயம்புத்தூர், பிரதிநிதி, நெசவாளர் பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள்.

5. திரு. விசாகப் பெருமாள், S/o மாரி செட்டியார், புது வீதி, தெப்பக்குளம் சந்து அருகில், கோயம்புத்தூர், கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. ஜி. இ. சின்னதுரை, தலைவர், பஸவேஸ்வரர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர். நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கூடுதல் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்.

7. திரு. எம் ராஜு, மருதாசலம் செட்டியார், சீரநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர் தாலுகா. கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

8. திரு. எல். வெங்கிடசாமி செட்டியார், துணி வியாபாரி, சுக்கிரவார்பேட்டை, தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

9. திரு. ஏ. ஆர். சி. வெங்கிடாசலம் செட்டியார், நம்பர் 34, ராஜா தெரு, கோயம்புத்தூர், நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

10. திரு. எஸ். ஆர். பி. பொன்னுஸ்வாமி செட்டியார், எம்.எல்.சி., கைத்தறித் துணி வியாபாரி, சுக்கிரவார்பேட்டை தெரு, கோயம்புத்தூர். கைத்தறித் துணி வியாபாரிகள் பிரதிநிதி.

11. திரு. சி. அம்பெயிராம், 9. வாணியர் தெரு, ஈரோடு, சாயம் ஏற்றல், நிறம் நீக்கல், அச்சிடுதல், அறைக்குத் தேவையான பொருள்கள் தரும் தொழிற்சாலைப் பிரதிநிதி. (Dyeing, bleaching, printing and furnishing.)

12. திரு. எம். என். எம். வீரபத்ர செட்டியார், திருப்பூர். ஆலை உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதி.

13. தமிழ்நாடு கைத்தறிக் கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர்.

11th March 1964]

கன்னியாகுமரி மாவட்டம்—

1. கன்னியாகுமரி கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. நாகர்கோயிலிலுள்ள கன்னியாகுமரி கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் (அலுவலால்)—உறுப்பினர்.

3. திரு. ஏ. ராமசாமி, தலைவர், வடசேரி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், வடசேரி. பிரதிநிதி, நெசவாளர் பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள்.

4. திரு. ஏ. ராமலிங்கம், கோட்டார், கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

5. திரு. பி. வேலாயுதன் முதலியார், பள்ளியாடி, கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. என். முத்துஸ்வாமி, வடசேரி, தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

7. திரு. டி. தேவதாஸ், மார்த்தாண்டம், நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

8. திரு. டி. நீலகண்டன், வடசேரி, துணி வியாபாரிகள் பிரதிநிதி.

9. தமிழ்நாடு கைத்தறிக் கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர்—உறுப்பினர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

1. திருச்சிராப்பள்ளி கலெக்டர், தலைவர் (அலுவலால்).

2. கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர், திருச்சிராப்பள்ளி (வடக்கு) (அலுவலால்). உறுப்பினர்—செயலாளர்.

3. கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், திருச்சிராப்பள்ளி (தெற்கு) (அலுவலால்)—உறுப்பினர்.

4. திரு. எஸ். எம். சோமசுந்தரம், தலைவர், களத்தூர், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், உடையார்பாளையம் தாலுகா, நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி.

5. திரு. கே. என். பி. அருணசல முதலியார், Messrs. பி. ராமசுவாமி அண்டு கம்பெனி, பங்குதாரர், கைத்தறித் துணி உற்பத்தியாளர்கள், உரையூர், கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

6. திரு. தங்கவேலு முதலியார், ஆடுதுறை, பெரம்பலூர் தாலுகா, கூட்டுறவுச் சங்கத்தைச் சாராத நெசவாளர்கள் பிரதிநிதி.

7. திரு. ஏ. எஸ். லிங்கயன் செட்டியார், சுந்தர விலாஸ், வடக்கு மாதுளங்கொல்லை தெரு, உறையூர். தலைமை நெசவாளர்கள் பிரதிநிதி.

8. திரு. சின்னசாமி முதலியார், மருதூர், அரியலூர் துணை தாலுகா, நூல் வியாபாரிகள் பிரதிநிதி.

9. திரு. ஆர். விஸ்வநாதன். தலைவர், பஞ்சாயத்து போர்டு, உண்ணியூர். கைத்தறித் துணி வியாபாரிகள் சங்கத் தலைவர் (முசிறி). கைத்தறித் துணி வியாபாரிகள் பிரதிநிதி.

10. செயலாளர், கரூர் நெசவு பின்னுதல் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம், கரூர். சாயமிடும் தொழிற்சாலைப் பிரதிநிதி.

11. தமிழ்நாடு கைத்தறிக் கமிட்டியின் உள்ளூர் உறுப்பினர், உறுப்பினர்.

(உ) இவர்கள் மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, the 12th March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

பச்சைமலையில் மலைஜாதியினருக்கான தாய்-சேய் நல விடுதிகள்

*226 **கேள்வி—திரு. து. ப. அழகமுத்து:** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் துறையூரில் கூடிய **Hill Tribes Advisory Committee** பச்சைமலையில் உள்ள மலைஜாதி மக்களுக்காக மலையின் மேல் தாய்-சேய் நல விடுதிகள் கட்டவேண்டுமென்று சிபாரிசு செய்ததா?

(இ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்காததற்குக் காரணமென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) பச்சை மலையில் சின்ன இலுப்பூர் என்னுமிடத்தில் தாய்-சேய் நல விடுதி கட்டுவதற்காகத் துறையூர் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலைக் கலந்து திட்டவட்டமாகப் பிரேரணைகள் தயாரித்து அனுப்புமாறு திருச்சி கலெக்டரைக் கேட்டிருக்கிறோம். அவரது பிரேரணைகள் இன்னும் கிடைக்கவில்லை.

(a) Yes.

(b) The Collector of Tiruchirappalli has been requested to submit definite proposals in consultation with the Thuraiyur Panchayat Union Council for the opening of a maternity centre at Chinna Illuppur of Pachamalai Hills. His proposals are awaited.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, தாய்-சேய் நல விடுதி அமைப்பதற்கான யோசனைகள் பஞ்சாயத்து யூனியன் தயாரித்து, கலெக்டர் அவர்கள் மூலமாக ஹெல்த் டிபார்ட்மென்டிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் இதை நீண்ட நாட்களாக தாமதப்படுத்தி வருகிறார்கள். இந்தத் தாமதத்தைப் போக்கி சீக்கிரம் அந்தத் தாய்-சேய் நல விடுதியை அமைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: மலைவாசிகளுக்கு தாய்-சேய் நல விடுதி கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் எந்தவிதத்திலும் பின்வாங்காது. ஏற்கெனவே ஆதிவாசி அட்வைசரி கமிட்டி

[12th March 1964

பிலும் இது சம்பந்தமாகப் பேசியிருக்கிறார்கள். இதைப் பார்த்து பரிசீலனை செய்து எவ்வளவு தூரம் துரிதப்படுத்துவதற்கு முடியுமோ அவ்வளவு தூரம் துரிதப்படுத்துவதற்கு பிரயத்தனம் செய்யப்படும்.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : ஆதிவாசிகள் அட்வைசரி கமிட்டி ஜில்லா அளவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற கமிட்டியா, அல்லது மாநில அளவில் உள்ள கமிட்டியா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மாநில அளவிலே இந்த மாதிரி கமிட்டி இருக்கிறது.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : அப்படியானால் இன்னும் எந்தெந்த இடத்தில் இம்மாதிரி கமிட்டி கூடியது? அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன என்பதை அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பல இடங்களில் இந்தக் கமிட்டி கூடியது. தனிக் கேள்வி கேட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த மலைஜாதியினருக்குக் கட்டப்படும் விடுதியானது பச்சை மலையைப் பொறுத்த அளவில் மட்டும் இல்லாமல் சட்டையகவுண்டன் போன்ற மலைப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தக் கேள்வி தாய்-சேய் நல விடுதியைப் பொருத்தது. விடுதி கட்டுவதைப் பொருத்தது அல்ல. பச்சைமலைப் பகுதிக்கு தாய்-சேய் நல விடுதி கட்டுவதைப் பற்றிய கேள்வி இது.

திரு. து. ப. அழகமுத்து : இந்த ஹில் அட்வைசரி கமிட்டி துறையூரில் கூடியது. ஆனால், அந்தப் பகுதியிலே இருக்கிற எம்-எல்-ஏ-க்களுக்கு இந்த அட்வைசரி கமிட்டி கூடியது பற்றி விவரம் தெரியப்படுத்தப்படவில்லை. அவர்கள் அழைக்கப்படுவது இல்லையா ?

கனம் திரு. பூ. கக்கன் : அட்வைசரி கமிட்டிக்கு மெம்பர்கள் அழைக்கப்படுவார்களே ஒழிய, கனம் எம். எல். ஏ-க்கள் அழைக்கப்படுவதில்லை. மந்திரிமார்கள் அந்தப் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யும் நிகழ்ச்சி இருக்கும். அதில் வந்து கலந்து கொள்ளலாம். ஆட்சேபணை கிடையாது.

திரு. கே. பொன்னையன் : ஆதிவாசிகளுக்கு தாய்-சேய் நல விடுதி பச்சைமலைப் பகுதியில் கட்டப்படுகிறது மட்டுமல்லாமல், மாகாணம் பூராவும் சர்வே எடுத்து எங்கெல்லாம் ஆதிவாசிகள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தாய்-சேய் நல விடுதி கட்ட அரசாங்கம் முன்வருமா ?

12th March 1964]

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன இலாகாவில் தாய்-சேய் நல விடுதி கட்டுவதற்கில்லை. ஆதிவாசிகளுக்காக பஞ்சாயத்து யூனியன் மூலமாக கட்டிக்கொடுப்பது என்று யோசனை. ஓரளவுக்கு மக்கள் ஈவுத் தொகை கொடுக்கமுடியாமல் இருந்தால், எவ்வளவு தூரம் ஹரிஜன நல இலாகா உதவ முடியுமோ அவ்வளவு தூரம் உதவி செய்யும்.

திரு. க. தா. பெருமாள் ராஜு : பேரூர் மலைப் பிரதேச ஆதிவாசிகளுக்காக ஏதாவது தாய்-சேய் நல விடுதி கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : உத்தேசம் உண்டா, இல்லையா என்பது இல்லை. அம்மாதிரி தகவல் என்னிடம் இல்லை.

திருமதி சி. குழந்தையம்மாள் : நமது மாகாணத்தில் ஆதிவாசிகளுக்கு என்று தாய்-சேய் நல விடுதிகள் சென்டிரல் ஸோஷல் வெல்பேர் போர்டு கட்டியவை எத்தனை ?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி வேண்டும்.

ஜமாபந்தி

*227 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வருடாந்திர ஜமாபந்தியை ஏப்ரல்-மே மாதங்களில் நடத்த வேண்டுமென்று தமிழ்நாடு கிராம அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அண்மையில் மகஜர் கொடுத்துள்ளார்களா ?

(இ) ஆமென்றால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) Instructions have been issued to Collectors that the exact time of holding Jamabandi may be left to be decided by the Collectors at their discretion.

Atomic power plant, Kalpakkam

*228 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation has been made to the Union Government and the Planning Commission for the inclusion of the proposed atomic power plant at Kalpakkam in the Third Plan Scheme; and

(*b*) if so, the result of the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The need for establishing an Atomic Power Plant in the Madras State as early as possible has been stressed on the Union Government and they will take suitable action having regard to all the connected circumstances

[12th March 1964

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், இப்பொழுது ஆந்திரா மாகாணம் பிரிந்த பிறகு, இந்த ரெட்டி-கஞ்சம் வகுப்பினர் மாநிலத்திலுள்ள பிற்பட்ட வகுப்பினர் லிஸ்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: ரெட்டி-கஞ்சம் வகுப்பினர் லிஸ்டில் இல்லை. இந்த வகுப்பினர் ராமநாதபுரம் பகுதியில் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திரு. டி. கார்சா கவுடர்: ஸார், ஆந்திரா மாகாணம் பிரிவதற்கு முன்னாலுள்ள பேக்வர்ட் வகுப்பினர் லிஸ்டில் இந்த வகுப்பினர் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஆந்திரா பிரிந்த காரணத்தினால்தான் இந்தத் தவறு ஏற்பட்டது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிற்பட்ட வகுப்பினர் இருக்கிறார்கள், சில பிற்பட்ட வகுப்பினருக்கு சர்டிபிகேட்டு கொடுக்க முடியாது என்று ரெவின்யூ இலாகாவினர் சொல்லி விடுகிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த எந்த பின்தங்கிய ஜாதியினர் இருக்கிறார்கள் என்பதற்கு சர்வே எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி எடுக்கப்பட்டிருந்தால் அந்த மாதிரியான லிஸ்டை அதிகாரிகளுக்கு அனுப்பி இன்னின்ன ஜாதிக்கு சர்டிபிகேட்டு கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அங்கத்தினர் அவர்கள் நீண்ட கேள்வி போட்டிருக்கிறார்கள். தனிக் கேள்வியாகப் போட்டால் பதில் சொல்லுகிறேன்.

அப்பளத் தயாரிப்பு நிலையங்கள்

* 230 **கேள்வி.—திரு. முனு. ஆதி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கம் நடத்திய அப்பள உற்பத்தி நிலையங்களின் நிலை என்ன?

(இ) பொருளாதாரத் துறையில் இலாபமா நஷ்டமா?

(உ) தினமொன்றுக்கு சராசரியாக தயாரிக்கப்படும் அப்பளங்கள் எவ்வளவு?

(எ) அவைகளின் அடக்க விலை என்ன?

(ஐ) அங்கு வேலை செய்பவர்களின் யோக்கியதாம்சம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) to (*e*) As a measure of providing some means of employment to the women of the lower income group, Government sanctioned Centres for production of applams at Madras, Thirukalukundaram, Orathur, Athoor

12th March 1964]

and Cheranmahadevi. As the working of the Centres was found uneconomic, all the Centres were closed during 1957–58. Each centre engaged about 50 to 60 women from the lower income group to make applams out of the raw materials supplied by the Centre and the average production ranged from 2,000 to 2,500 packets of 100 a day per centre. Marketing became an acute problem and it was the main factor for their closure. There are no Government applam production units functioning at present.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், கும்பகோணத்திலே அப்பளம் உற்பத்தி செய்வதில் அதிகமான ஜனங்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே அப்பளம் தயார் செய்ய ஒரு அப்பளத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்பளம் தயாரிப்பதில் கஷ்டம் இல்லை. விற்பனை செய்வதில்தான் கஷ்டம் இருக்கிறது. சாதாரணமாக அப்பளம் உற்பத்தி செய்கிறவர்கள், விற்பனை செய்யவும் முயற்சி எடுத்துக்கொண்டால், இந்த ஐந்து ஸெண்டர்களும்கூட வெற்றிகரமாக நடந்திருக்கும். ஆனால் அவர்கள் உற்பத்திதான் செய்வோம் என்று சொன்று கொண்டிருந்ததால் விற்பனை செய்ய முடியவில்லை, ஆகவே இந்த ஸெண்டர்களை மூட வேண்டிய அவசியம் வந்தது.

இன்சுலேட்டர்கள் உற்பத்தித் தொழிற்சாலை

* 231 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னைக்கு அருகே மின்சார இன்சுலேட்டர்கள் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்படும் உத்தேசமுண்டா?

(இ) மேற்படி தொழிற்சாலைக்கு நெய்வேலியில் கிடைக்கும் களிமண் பயன்படுத்தப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) சென்னைக்கு அண்மையில் இன்சுலேட்டர் தயாரிக்கும் தொழிற்சாலையை பொதுத் துறையில் நிறுவ அரசாங்கத்துக்கு உத்தேசம் இல்லை. ஆனால் ஒரு தனியார் கம்பெனிக்கு இத்தகைய ஆலை நிறுவ அனுமதி தரப்பட்டுள்ளது.

(இ) இன்சுலேட்டர் தயாரிக்க இரண்டு மூன்று வகைக் களிமண்களின் கலவை தேவைப்படும். நெய்வேலிக் களிமண்ணும் கலவையில் சேர்க்கப்படும் என்று தெரிகிறது.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், இன்சுலேட்டர் செய்ய களிமண் தேவை என்றார்கள். 'ஒயிட் க்ளே' யினால் இன்சுலேட்டர் செய்ய முடியுமா என்று ஏதாவது ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இண்டஸ்ட்ரியல் அட்வைசர் என்று வைத்திருக்கிறோம். அவரைக் கேட்டால் சொல்லுவார்.

[12th March 1964

அரிசன விடுதிகள், தென் ஆற்காடு மாவட்டம்

*232 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம் :
திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : } கனம்

உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பிரைவேட் மானேஜ்மெண்டில் எத்தனை அரிசன ஹாஸ்டல்கள் இருக்கின்றன ?

(இ) அவைகளில் எத்தனை ஹாஸ்டல்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ள உத்தேசித்துள்ளது ?

(உ) புதிதாக ஹாஸ்டல்கள் திறக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) அரிஜன நலத் துறையிடமிருந்து உதவி பெறும் தனியார் ஹாஸ்டல்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் ஐந்து உள்ளன.

(இ) 1964-65-ல் பல்வேறு மாவட்டங்களில் அரசாங்க உதவி பெறும் ஹாஸ்டல்களை அரசாங்கமே எடுத்து நடத்தும் விஷயம் ஆலோசனையில் உள்ளது.

(உ) 1964-65-ல் பல்வேறு மாவட்டங்களில் அரசாங்க ஹாஸ்டல்களைப் புதிதாக ஆரம்பிப்பதைக் குறித்தும் அரசாங்கம் யோசித்து வருகிறது.

(*a*) There are five private hostels in South Arcot district subsidised by the Harijan Welfare Department.

(*b*) The question of taking over of subsidized hostels in various districts during 1964–65 is under the consideration of the Government.

(*c*) The question of opening new Government hostels in various districts during 1964–65 is also under the consideration of the Government.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தனிப்பட்டோர் நடத்தும் விடுதிகளை அவர்கள் அதை ஒரு தொழிலாக நடத்துகிறார்கள், அதனால் அதில் ஊழல்கள் இருக்கின்றன. அதுபற்றி சர்க்காருக்கு புகார் வந்திருக்கிறதா, அது ஆராயப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : எல்லா ஹாஸ்டல்களையும் அப்படிச் சொல்ல முடியாது. பல ஹாஸ்டல்கள் நல்ல முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரிஜன சேவா சங்கம் நடத்தும் ஹாஸ்டல் நன்றாக நடக்கிறது. ஒரு சில இடங்களில் குற்றங் குறைகள் இருந்தால் அது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், தனிப்பட்டவர்கள் நடத்தும் ஆஸ்டல்கள் இத்தனை வகுப்பு வரைக்கும் படிக்கும் மாணவர்களுக்குத்தான் என்று ஏதாவது வரையறை செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

12th March 1964]

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை ; இப்பொழுது அரசாங்கம் ஒரு கொள்கை வைத்திருக்கிறது. ஐந்தாவது ஸ்டாண்டர்ட் வரைக்கும் தனிப்பட்டவர்களும், அரிஜனநல இலாகாவினரும் நடத்தலாம் என்றும், இதர பாடசாலைகளைப் பொருத்தவரை கல்வி இலாகா மூலமாகவே ஆஸ்டல்கள் நடத்தப்படவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பத்தாவது வரைக்கும்கூட இப்படித் தனி ஹாஸ்டல்கள் என்று வைத்துக் கொண்டிருந்தால், தீண்டாமையை ஒழிக்க முடியாது என்றும், இவர்களும் மற்றவர்களோடு இணைந்து இருந்தால்தான் தீண்டாமையைப் போக்க முடியும் என்றும் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்திலே ஐந்து ஆஸ்டல்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவற்றில் காட்டுமன்னார்கோவிலும், குறிஞ்சிப்பாடியும் எந்த நிலையில் இருக்கின்றன ? போன வருஷமே கேள்விகள் கிளம்பினவே, ஏன் இன்னும் சர்க்காரிலே எடுக்கவில்லை ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினருக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை எடுக்க முடியாது. அதைப் பற்றி அரிஜன நல இலாகா அதிகாரி கவனிக்கிறார். எந்தவிதமான குற்றங்களும் இருப்பதாக அவர் எழுதவில்லை.

திரு. கே. பொன்னையன் : ஸார், ஒரு சில தனிப்பட்ட ஆஸ்டல்களின் மானேஜ்மெண்டார் நல்ல தியாகத்தோடு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று செய்கிறார்களே, அப்படிப்பட்ட ஆஸ்டல்களை சர்க்கார் ஏன் எடுக்க வேண்டும் ? பழையபடியே அவர்களுக்கு கிராண்டு கொடுத்து நடத்தக் கூடாதோ என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பழையபடி எடுத்த ஆஸ்டல்களை அவர்களிடமே கொடுக்க முடியாது. நன்றாக நடத்தினால் அதை எடுக்க மாட்டார்கள்.

திரு. ஏ. ஆறுமுகம் : சார், 1964-65-ல் புதிய ஆஸ்டல்களை திறக்கப் போவதாகச் சொன்னார்கள். புதிய ஆஸ்டல்களை எந்த அடிப்படையில் ஆரம்பிப்பார்கள் ? பின் தங்கிய பகுதிகளுக்கு முதல் இடம் கொடுக்க யோசிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஆஸ்டல்கள் திறப்பது என்றால் பின் தங்கிய பகுதியாக மட்டும் இருந்தால் போதாது. கஷ்டம் இருந்தால் அப்பேர்ப்பட்ட இடங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அரிஜன நலத்திற்காக சர்க்கார் ஒரு தனி இலாகாவே வைத்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது தனிப்பட்டவர்களுக்கு ஆஸ்டல்களைக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

[12th March 1964

கனம் திரு. பூ. கக்கன் : *தனிப்பட்டவர்களுக்கு என்று கொடுக்க வில்லை. ஏற்கெனவே அந்த சேவையில் ஈடுபட்டிருந்தார்கள் சிலர்; இப்பொழுது புதிதாக ஆஸ்டல் நிறுவுவதற்கு அங்கீகாரம் கொடுப் பதில்லை.*

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : *தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஐந்து ஆஸ்டல்களை நடக்கிற ஆண்டி லேயே சர்க்கார் எடுக்க ஆலோசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.*

கனம் திரு. பூ. கக்கன் : *அதற்குள்ளாகவே சொல்ல முடியாது.*

புலவர் கா. கோவிந்தன் : *தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டில் புதிய மாணவர் விடுதிகள் அமைக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குள்ளாக இப்பொழுதிருக்கும் மாணவர் விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசாங்கம் வழி செய்யுமா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகிறது. போதுமான கட்டடங்கள் இல்லாததால் இந்த எண்ணிக்கையை அதிகமாக உயர்த்த முடியவில்லை.*

திரு. செ. மாதவன் : *தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய இந்த விடுதிகளுக்கு அரசாங்கம் கொடுக்கக் கூடிய மானியத்தை அவர்கள் ஒழுங்காகச் செலவு செய்கிறார்களா என்று கண்காணிக்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்துள்ளதா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹரிஜன நல அதிகாரி இருக்கிறார். அவருக்குக் கீழ் பல தாசில்தார்களும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இதைக் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள்.*

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : *நடப்பு ஆண்டில் புதிதாக ஏற்படுத்தி இருக்கும் ஹரிஜன மாணவர் உணவு விடுதியில் திருச் சிற்றம்பலம் கூட்டு ரோட்டில் இருக்கும் ஹைஸ்கூலும் சேர்ந்ததா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *குழந்தையே பிறக்கவில்லை. அதற்குள் எப்படிப் பெயர் வைப்பது ? (சிரிப்பு.)*

திரு. ஆர். ரங்கசாமி : *தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய அரிசன ஹாஸ்டல்களுக்குச் சர்க்கார் கொடுக்கும் உதவித் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்காக, ஹாஸ்டல்களில் வந்து சேரக்கூடிய பிள்ளைகளிடமிருந்து ரூபாய் வசூல் செய்கிறார்கள். அப்படி வசூல் செய்வதற்கு சர்க்காருடைய அனுமதி இருக்கிறதா? குறைந்த தொகையாகக் கொடுக்காமல், தேவையான அளவுக்குத் தொகை கொடுத்து ஹாஸ்டல்களை நல்ல முறையில் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *தனிப்பட்டவர்கள் நடத்தும் விடுதிக்கு, மாணவ, மாணவி ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்குப் பதினாறு ரூபாய் வீதம் உணவுக்காகக் கொடுத்து உதவி செய்து வருகிறோம். அரசாங்கம் கொடுக்கும் உதவியையும் வைத்துக்கொண்டு, மேலும் அவர்கள் நிதி திரட்டி நல்ல முறையில் ஹாஸ்டல்களை நடத்த வேண்டும்.*

12th March 1964]

திரு. ஜே. மாதா கவுடர் : *ஹரிஜன ஹாஸ்டல்களில் ஹரிஜன மாணவர்கள் தவிர, ஆதிவாசி மாணவர்களும் வசிக்கிறார்கள். ஆதி வாசி மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பது மட்டுமல்லாமல், உடை கொடுக்கிறோம், புஸ்தகம் கொடுக்கிறோம். 8 முதல் 10-வது வரை படிக்கும் மாணவர்கள் சர்க்கார் ஹாஸ்டலிலே போகும் போது, உடை கொடுக்கவும், துணி கொடுக்கவும் அங்கு வசதி இல்லாமலிருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் கவனித்து அவர் களுக்கும் இந்த சலுகைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *ஆதிவாசி மக்களுக்கு உணவு அளிப்பது மட்டுமல்ல, உடை அளிக்கக்கூடிய ஒத்தாசையும் செய்து வருகிறோம். அரசாங்கம் நடத்தும் ஹாஸ்டல்களிலே அவர் களுக்கு துணிமணி கொடுத்து வருகிறோம். அப்பேர்ப்பட்ட ஹாஸ்டல்களிலே 9, 10, 11 வகுப்பில் படிக்கும் மாணவர்கள் சேர்ந்தால் அவர்களுக்கும் இந்த சலுகை உண்டு.*

திரு. டி. கார்ச்சா கவுடர் : *புதிதாக ஆரம்பிக்கப்படும் இந்த ஹாஸ்டல்களில் குன்னூரில் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கும் ஹரிஜனங்களுடைய குழந்தைகளுக்காக ஒரு ஹாஸ்டல் திறக்கவேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படி யானால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?*

கனம் திரு. பூ. கக்கன் : *குன்னூரில் அரசாங்கம் நடத்துகிற விடுதி இருக்கிறது. ஆதிவாசி மக்களுக்கு ராமசாமி அடிகள் தனியாக ஒரு ஹாஸ்டல் நடத்துகிறார். தோட்டத் தொழிலாளர் களின் குழந்தைகளுக்காக ஒரு விடுதி ஏற்படுத்த வேண்டுமென்று தோட்டத் தொழிலாளர்களின் தலைவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.*

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : *எனக்குத் தெரிந்தவரையில், பல ஆதித் திராவிட மாணவர்கள் உணவு விடுதியில் சேருகிறபோது பெற்றோர்களிடமிருந்து மாதத்திற்கு இருபது ரூபாய்க்குக் குறை யாமல் வசூல் செய்கிறார்கள் என்ற புகார் இருப்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா ?*

கனம் சபாநாயகர் : *"எனக்குத் தெரிந்த வரையில்" என்று கனம் அங்கத்தினர் கேள்வியை ஆரம்பிக்கிறார்களே, அவர்களுக் குத் தெரிந்த அந்த விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்களா ?*

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : *"அரசாங்கத்திற்குத் தெரியுமா?" என்று தான் நான் கேட்க விரும்புகிறேன்.*

கனம் திரு. பூ. கக்கன் : *நானும் ஹரிஜன சேவா சங்கத்தில் பணி புரிந்திருக்கிறேன். அரசாங்க உதவியோடு பொது மக்களிட மிருந்தும் அந்த சங்கத்திற்காக வசூல் செய்வதுண்டு.*

[12th March 1964

கனம் திரு. பூ. கக்கன் : தனிப்பட்டவர்களுக்கு என்று கொடுக்கவில்லை. ஏற்கெனவே அந்த சேவையில் ஈடுபட்டிருந்தார்கள் சிலர்; இப்பொழுது புதிதாக ஆஸ்டல் நிறுவுவதற்கு அங்கிகாரம் கொடுப்பதில்லை.

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஐந்து ஆஸ்டல்களை நடக்கிற ஆண்டிலேயே சர்க்கார் எடுக்க ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குள்ளாகவே சொல்ல முடியாது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டில் புதிய மாணவர் விடுதிகள் அமைக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குள்ளாக இப்பொழுதிருக்கும் மாணவர் விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசாங்கம் வழி செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகிறது. போதுமான கட்டடங்கள் இல்லாததால் இந்த எண்ணிக்கையை அதிகமாக உயர்த்த முடியவில்லை.

திரு. செ. மாதவன் : தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய இந்த விடுதிகளுக்கு அரசாங்கம் கொடுக்கக் கூடிய மானியத்தை அவர்கள் ஒழுங்காகச் செலவு செய்கிறார்களா என்று கண்காணிக்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்துள்ளதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹரிஜன நல அதிகாரி இருக்கிறார். அவருக்குக் கீழ் பல தாசில்தார்களும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இதைக் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நடப்பு ஆண்டில் புதிதாக ஏற்படுத்தி இருக்கும் ஹரிஜன மாணவர் உணவு விடுதியில் திருச்சிற்றம்பலம் கூட்டு ரோட்டில் இருக்கும் ஹைஸ்கூலும் சேர்ந்ததா ?

கனம் திரு. பூ. கக்கன் : குழந்தையே பிறக்கவில்லை. அதற்குள் எப்படிப் பெயர் வைப்பது ? (சிரிப்பு.)

திரு. ஆர். ரங்கசாமி : தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய அரிசன ஹாஸ்டல்களுக்குச் சர்க்கார் கொடுக்கும் உதவித் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்காக, ஹாஸ்டல்களில் வந்து சேரக்கூடிய பிள்ளைகளிடமிருந்து ரூபாய் வசூல் செய்கிறார்கள். அப்படி வசூல் செய்வதற்கு சர்க்காருடைய அனுமதி இருக்கிறதா? குறைந்த தொகையாகக் கொடுக்காமல், தேவையான அளவுக்குத் தொகை கொடுத்து ஹாஸ்டல்களை நல்ல முறையில் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிப்பட்டவர்கள் நடத்தும் விடுதிக்கு, மாணவ, மாணவி ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்குப் பதினைறு ரூபாய் வீதம் உணவுக்காகக் கொடுத்து உதவி செய்து வருகிறோம்.

12th March 1964]

அரசாங்கம் கொடுக்கும் உதவியையும் வைத்துக்கொண்டு, மேலும் அவர்கள் நிதி திரட்டி நல்ல முறையில் ஹாஸ்டல்களை நடத்த வேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஹரிஜன ஹாஸ்டல்களில் ஹரிஜன மாணவர்கள் தவிர, ஆதிவாசி மாணவர்களும் வசிக்கிறார்கள். ஆதிவாசி மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பது மட்டுமல்லாமல், உடை கொடுக்கிறோம், புஸ்தகம் கொடுக்கிறோம். 8 முதல் 10-வது வரை படிக்கும் மாணவர்கள் சர்க்கார் ஹாஸ்டலிலே போகும் போது, உடை கொடுக்கவும், துணி கொடுக்கவும் அங்கு வசதி இல்லாமலிருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் கவனித்து அவர்களுக்கும் இந்த சலுகைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆதிவாசி மக்களுக்கு உணவு அளிப்பது மட்டுமல்ல, உடை அளிக்கக்கூடிய ஒத்தாசையும் செய்து வருகிறோம். அரசாங்கம் நடத்தும் ஹாஸ்டல்களிலே அவர்களுக்கு துணிமணி கொடுத்து வருகிறோம். அப்பேர்ப்பட்ட ஹாஸ்டல்களிலே 9, 10, 11 வகுப்பில் படிக்கும் மாணவர்கள் சேர்ந்தால் அவர்களுக்கும் இந்த சலுகை உண்டு.

திரு. டி. கார்ச்சா கவுடர் : புதிதாக ஆரம்பிக்கப்படும் இந்த ஹாஸ்டல்களில் குன்னூரில் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கும் ஹரிஜனங்களுடைய குழந்தைகளுக்காக ஒரு ஹாஸ்டல் திறக்கவேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியானால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : குன்னூரில் அரசாங்கம் நடத்துகிற விடுதி இருக்கிறது. ஆதிவாசி மக்களுக்கு ராமசாமி அடிகள் தனியாக ஒரு ஹாஸ்டல் நடத்துகிறார். தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக ஒரு விடுதி ஏற்படுத்த வேண்டுமென்று தோட்டத் தொழிலாளர்களின் தலைவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : எனக்குத் தெரிந்தவரையில், பல ஆதித் திராவிட மாணவர்கள் உணவு விடுதியில் சேருகிறபோது பெற்றோர்களிடமிருந்து மாதத்திற்கு இருபது ரூபாய்க்குக் குறையாமல் வசூல் செய்கிறார்கள் என்ற புகார் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் சபாநாயகர் : "எனக்குத் தெரிந்த வரையில்" என்று கனம் அங்கத்தினர் கேள்வியை ஆரம்பிக்கிறார்களே, அவர்களுக்குத் தெரிந்த அந்த விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்களா ?

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : "அரசாங்கத்திற்குத் தெரியுமா?" என்று தான் நான் கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : நானும் ஹரிஜன சேவா சங்கத்தில் பணி புரிந்திருக்கிறேன். அரசாங்க உதவியோடு பொது மக்களிடமிருந்தும் அந்த சங்கத்திற்காக வசூல் செய்வதுண்டு.

[12th March 1964

புது விடுதிக்கான கட்டடங்கள் கட்டுகிறபோது பெற்றோர்களிடமிருந்து நன்கொடை வாங்கினால் அதை லஞ்சம் கொடுத்ததாக எடுத்துக் கொள்வது நல்லதல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஹரிஜன சேவா சங்கங்களால் நடத்தப்படும் பல உணவு விடுதிகள் சரிவர நடத்தப்படவில்லை என்ற காரணத்தினால் அரசாங்கத்திற்கு மனுக்கள் அனுப்பப்பட்டும் சர்க்காரே எடுத்துக்கொள்ள முன்வந்தும், அதற்குப் பிறகு அவர்கள் விடமாட்டோம் என்று பிடிவாதமாகச் சொல்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன? சேவைசெய்ய வேண்டும் என்கிற காரணமா? அல்லது அதில் வருகின்ற வருவாய் காரணமா?

கனம் திரு. பூ. கக்கன் : அது அவரவர்கள் இஷ்டம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஹாஸ்டல் நன்றாக நடக்க வேண்டும்.

கனம் சபாநாயகர் : இதெல்லாம் அவரவருக்குத்தான் தெரிய வேண்டும். அமைச்சர் அவர்கள் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

Village officers

* 233 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the assaulting of village headman by the tax-payers during the time of discharge of their duties in the capacity as Government servants are on the increase day by day; and

(*b*) if so, the action taken to prevent and safeguard them from such unhappy incidents?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) It is not correct to say that assaults of Village Officers by tax-payers during the time of discharge of their official duties are on the increase. There have been only a few such cases.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இம்மாதிரி கேஸ்கள் நடந்ததைக் குறித்துப் பல முறை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். அதற்காக என்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதைப் போல ஒருசில இடங்களில் இந்தக் கஷ்டம் ஏற்பட்டது. அதுபோன்ற நிலைமை ஏற்படும்போது அரசாங்கம் என்ன என்ன பாதுகாப்பை அவர்களுக்குக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

12th March 1964]

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கும்படியான சலுகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படுமா? அரசாங்கமே கேஸ்களை எடுத்து நடத்த முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனியாகக் கேள்வி போடலாம்.

கனம் சபாநாயகர் : அரசாங்க ஊழியர்களுக்கு என்ன சலுகை இருக்கிறது?

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : அரசாங்கமே கேஸ் எடுத்து நடத்துகிறார்கள்.

கனம் சபாநாயகர் : இப்போதும் போலீசுக்குத் தகவல் கொடுத்தால் போலீஸ் சார்ஜ் ஷீட் போடுவார்களே.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : அப்படியானால், இவர்கள் தனிப்பட்ட ஹோதாவில் நடத்த வேண்டும்.

MR. SPEAKER : He is also a public servant.

SRI R. S. VEERAPPA CHETTIAR : But the village officer is not treated as a public servant.

MR. SPEAKER : Is he not a public servant according to the Indian Penal Code?

SRI R. S. VEERAPPA CHETTIAR : I do not think so. He is not treated like that.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளை 'பப்ளிக் சர்வன்ட்ஸ்' என்று அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா? அப்படி இருந்தால், பப்ளிக் சர்வன்ட்டுக்குக் கிடைக்கக் கூடிய உதவிகளை கிராம அதிகாரிகளுக்குச் செய்து வருகிறதா?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கத்தின் வேலையைச் செய்கிறவர்களுக்கு இதுபோன்று எந்தவிதமான எதிர்ப்பு ஏற்பட்டாலும் அதைத் தடுப்பதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அரசாங்கம் செய்யும்.

திரு. ஆர். ரங்கசாமி : சில கிராம முன்சீப்புகள், கிராமத்திலே அவர்களுக்கு ஆகாத விவசாயிகள் இருந்தால், அவர்கள் மீது பொய்க் கேஸ்கள் போட்டுத் தவறாக நடக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அப்படிப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, வேறு கிராம முன்சீப்புகளை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையா : கிராம அதிகாரிகளின் விவசாயிகளிடம் தவறான முறையில் ஏதேனும் நடக்கும் பட்சத்தில், அவர்களுக்குத் தகுந்த தண்டனை கொடுக்க அரசாங்கம் தயங்காது.

திருச்சி மாவட்டத்திலுள்ள இனும், ஜமீன் கிராமங்களில் செட்டில்மென்ட்

* 234 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் முசிரி, பெரம்பலூர் ஆகிய வட்டங்களில் உள்ள இனும், ஜமீன் கிராமங்களில் செட்டில்மெண்டு செய்யப்படும்போது சரியானபடி விசாரணை நடத்தாமல், குடியிருப்பு நிலங்கள் புறம்போக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு பட்டா வழங்கப்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) அப்படி பட்டா வழங்கப்பட்ட குடியிருப்பு நிலங்களுக்கு நிலத் தீர்வையும், அதே சமயத்தில் வீட்டு வரியும் வசூலிக்கப் படுவது உண்மையா ?

(உ) அப்படியானல் மேற்படி குடியிருப்பு நிலங்களுக்கு வசூலிக்கப்படும் நிலத் தீர்வையை ரத்து செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) Settlement is done after proper notice and after detailed enquiry. Anyone aggrieved in the matter can go on appeal to the appropriate authority.

(இ) No ground rent is levied on village sites; but ground rent is levied in villages declared as "towns". The levy is Rs. 6-25 nP. per acre on all sites of buildings and the appurtenances thereto situated within the limits of towns and all lands used for non-agricultural purposes, whether built upon or not. The house-tax is a separate levy on the buildings made by the Panchayats under the Madras Panchayats Act, 1958.

(உ) No, Sir.

திரு. அ. ப. அழகமுத்து : இந்த செட்டில்மென்ட் செய்யப் போகும்போது நத்தம் புறம்போக்கில் குடியிருந்தவர்களைச் சரியானபடி அழைத்து அவர்கள் விசாரிக்கப்படுவதில்லை. நத்தம் புறம்போக்குக்கும் இப்பொழுது வரி வசூல் செய்கிறார்கள். இந்த வரி வசூல் செய்வதை நிறுத்த வேண்டும் என்று அப்பீல் செய்ய வேண்டுமென்றால், ஆயிரக்கணக்கானவர்கள் அதிலே அப்பீல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதுபற்றி ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியிடம் கேட்டபோது, 'சர்க்காரே ஒரு உத்தரவு போட்டால்தான் இதை ரத்து செய்ய முடியும், தனித் தனியாக அப்பீல் செய்துகொள்வதென்பது முடியாத காரியம்' என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, அதற்கான நடவடிக்கை எடுப்பதற்குச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் செட்டில் மென்ட் வேலையைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால், அது ஒரு குறிப்பிட்ட சட்ட அடிப்படையில்தான் நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். என்ன என்ன

நடவடிக்கை, எந்த எந்தக் காலத்தில், எந்த எந்த அதிகாரி எடுக்க வேண்டும் என்று அந்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், அந்தச் சட்டத்திற்குப் புறம்பாக அரசாங்கம் உத்தரவு போடவேண்டுமென்று நினைத்தால் அது சாத்தியம் இல்லாத காரியம். அதில் உண்மையிலேயே ஏதேனும் சிக்கல், கஷ்டம் இருக்கும் பட்சத்தில், கனம் அங்கத்தினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதில் கவனம் செலுத்தி, அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய கஷ்டத்தைத் தீர்க்கத் தக்க அளவுக்குச் சட்டத்தைத் திருத்த வேண்டிய நிலை ஏற்பட்டாலும், அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளலாமே தவிர, இப்பொழுது சட்ட அடிப்படையில்தான் காரியம் நடக்கிறது. 9-00 a.m.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Taking into consideration the various difficulties that have been found while implementing the Zamindari Abolition Act, at least for settlement and survey of Inam estates will the Officers and people at it be instructed suitably to see that such defects that have already been committed would not again be committed?

THE HON. SRI V. RAMAIAH : The main question is related to settlement work. I am sure the hon. Member knows that the whole thing is carried under a particular Act and there are various procedures for it and we cannot just always generalise that there are so many hardships and all that. There may be special hardships in a particular area. They have to be rectified. We will have to take special steps, not in the mere form of government orders; at times we will have to actually amend the Act. If there is any necessity, then Government will take that step. Upto now all safeguards required have been provided. The difficulty, as I have seen for the last one or two years, is that the people completely keep quiet when settlement work is going on. They actually miss it. At a later stage, after they have missed it, they come to Government and say that Government must act. I do not think it is possible.

திரு. செ. மாதவன் : அண்மையில் நம்முடைய சென்னை உயர்நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பில் புறம்போக்கு நிலத்தை நத்தம் புறம் போக்கு என்று செட்டில்மெண்டு காலத்தில் க்ளாசிபை பண்ணி விட்டால் அதில் நீதி மன்றம் உத்தரவு எதுவும் செல்லாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது அப்பீல் செய்துகொள்ள சட்டத்திற்கு அப்பாற்பட்டு பிரித்து ரெவின்யூ இலாகாவுக்கு அதை நல்லமுறையில் விசாரித்து நன்மை செய்ய உத்தரவு வழங் கப்பட்டிருக்கிறது. அதை நல்லமுறையில் அமுல் படுத்தும்படி அரசாங்கம் அவர்களுக்கு உத்தரவு போடுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கம் அப்படி உத்தரவு போட்டு இருந்தால் அவர்கள் அமல் நடத்துவார்கள். அரசாங்க உத்தரவு அமல்படுத்தப்படாமல் இருந்தால் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். மறு உத்தரவு போடுகிறேன்.

கனம் சபாநாயகர் : அந்த உத்தரவில் நல்லமுறையில் நடத்த வேண்டுமென்று எழுதியிருக்கிறதா ? (சிரிப்பு).

கனம் திரு. வெ. ராமையயா : அப்படித்தான் எழுதியிருக்கிறது.

திரு. செ. மாதவன் : அந்த உத்தரவில் அதிகாரிகள் அதைப் பரிசீலனை செய்து முடிவு செய்வதற்கு தங்கள் தங்கள் டிஸ்க்ரிஷனை உபயோகப்படுத்த வேண்டும் என்றுதான் இருக்கிறது. ரெகுலர் அப்பீல் என்று போட வாய்ப்பு இல்லை. அப்படிப் போட வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்களா ?

கனம் திரு. வெ. ராமையயா : முதலில் கனம் அங்கத்தினர் கேட்டது நல்ல முறையில் அவர்கள் அதை அமல்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தரவு போடுமா என்பது தான். நல்லமுறையில் பரிசீலனை செய்து முடிவு செய்வதற்கான டிஸ்க்ரிஷன் பவரை அவர்களுக்கு நாம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் விரும்புகிறபடி அதிகாரிகள் தங்கள் டிஸ்க்ரிஷன் பவரை உபயோகப்படுத்தி உத்தரவு போடாமல் இருக்கலாம். இரண்டாவதாக கனம் அங்கத்தினர் கேட்டதில் இருந்து அதிகாரிகள் முறையாகத்தான் நடக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act.

* 235 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the steps taken to bring into force the Inam Estates and Minor Inams Abolition Acts passed by the Legislature recently; and

(b) the details of the administration to be set up for the enforcement of these Acts?

The Hon. Sri V. RAMAIAH : (a) & (b) The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962, received the assent of the President on 11th December 1963 and was published as an Act in the *Fort St. George Gazette*, dated 1st January 1964. The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 received the assent of the President on 28th January 1964 and was published as an Act in the *Fort St. George Gazette*, dated 5th February 1964. The question of framing rules under the two Acts and the details of the administrative machinery required for implementing them are engaging the attention of the Government.

திரு. செ. மாதவன் : பழைய பாக்கிகளை வசூலிக்க இந்தச் சட்டத்தில் ஒரு செக்ஷன் போட்டிருக்கிறோம். அதன்படி ரெண்ட் கோர்ட்டுக்கு போய், தாசில்தார் மூலமாகவே டிகிரித் தொகையை வசூலிப்பதை அரசாங்கம் நிறுத்திவைக்க உத்தரவு அனுப்பித்து இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையயா : அதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்ல முடியும்.

Village Officers for ex-estate villages

* 236 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the procedure adopted in the appointment of village officers to the villages grouped together in the estate villages taken over by the Government; and

(b) the alternative arrangement made to the village officers who will be deprived of their jobs due to the grouping of villages?

The Hon. Sri V. RAMAIAH : (a) Generally, the procedure prescribed in B.P. Rt. No. 1059, dated 19th February 1952 and B.P. Rt. No. 324, dated 9th December 1910 is being adopted in the appointment of Village Officers while grouping estate villages taken over by the Government. A copy of each of these B.Ps.[a] is placed on the Table of the House.

(b) No alternative arrangement has been made for the Village Officers who will be deprived of their jobs due to grouping of villages. However, the District Revenue Officers have been asked to give preference to such qualified retrenched Village Officers, when other things are approximately equal while making appointment to Village Officers to other villages.

Sri C. CHIRANJEEVULU NAIDU : In the paper placed on the table of the House, it is said that not only revenue would be taken into consideration but that no re-survey will be allowed where survey has already been done. Based on survey, other things are done. If defects are pointed out on a survey which was over, it is not desirable that Government should again order for re-survey taking consideration viability, etc.?

The Hon. Sri V. RAMAIAH : The papers which I have placed on the table of the House are best examples of what we do when we re-group villages taken over from zamin areas. I do not know how survey question comes in here. If after survey, it is found necessary that villages have to be re-grouped, if such a situation arises, it will have to be tackled as per procedure which we have followed up to now.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கிராமாதிகாரிகளை நியமிப்பது பற்றிப் பரிசீலனை செய்வதற்காக அரசாங்கம் காபினட் சப் கமிட்டி ஒன்று போட்டதே, அது செய்திருக்கும் படியான முடிவுகள் என்ன ?

கனம் திரு. வெ. ராமையயா : தனிக் கேள்வி வேண்டும்.

[a] Printed as Appendix on pages 454-458.

[12th March 1964

திரு. எஸ். ஜே. ராமஸ்வாமி : கிராமாதிகாரிகளை நியமிப்பதிலே அதாவது எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது, எவ்வளவு வருமானம் இருக்கிறது என்பதை எல்லாம் பார்த்து அந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : தனிக் கேள்வி வேண்டும். இது ஜமீன் பிராந்தியத்தை ரீ-க்ரூப்பிங் செய்வது சம்பந்தமான கேள்வி.

Wells for Harijans

* 237 Q.—Sri R. S. Veerappa Chettiar : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that no allotment is made for effecting improvements to the wells sunk by the Harijan Welfare Department; and

(b) if so, whether the Government will arrange to allot funds for effecting repairs and improvements to such wells?

The Hon. Sri P. Kakkan : (a) A sum of Rs. 4 lakhs is provided annually in the Harijan Welfare budget for the construction and repair of wells, pathways, burial grounds, etc. Additional allotments are also sanctioned in the course of the year wherever necessary. The Panchayats in the respective areas undertake sinking of wells or deepening or repairing of existing wells for all communities including Harijans and the expenditure is met from the Village Works Grant. In the case of water-supply works intended for the benefit of Harijans and other Backward Classes no contribution is expected from them.

(b) Does not arise.

(அ) கிணறுகள், பாதைகள், இடுகாடுகள், ஆகியவற்றை அமைப்பதற்கும், செப்பனிடுவதற்கும் ஹரிஜன நலத்துறை பட்ஜெட்டில் ஆண்டுதோறும் ரூபாய் 4 லட்சம் ஒதுக்கப்படுகிறது. அவசியமான போதெல்லாம் அந்த ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கமும் செய்யப்படுகிறது. ஹரிஜனங்கள் உட்பட எல்லா வகுப்பினர்களுக்காகவும் கிணறுகள் வெட்டும் வேலையையும் தற்போதுள்ள கிணறுகளை ஆழமாக்குதல், செப்பனிடுதல் போன்ற வேலைகளையும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்துக்கள் மேற்கொள்ளுகின்றன. இதற்கான செலவு கிராமப் பணிகள் மானியத்திலிருந்து செய்யப்படுகிறது. ஹரிஜனங்கள் இதர பின்னிலை வகுப்பினர்களின் நலனுக்காக உத்தேசிக்கப்படும் தண்ணீர் சப்ளை திட்டங்களுக்காக அவர்களிடமிருந்து எந்தவிதமான உதவித் தொகையும் எதிர்பார்க்கப்படுவதில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சென்ற ஆண்டில் எங்கள் பகுதியில் பல கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. அப்போது அது பற்றிக் கேட்டதற்கு அதற்கான 'பண்ட்'

12th March 1964]

ஒதுக்கப்படவில்லை என்று கூறினார்கள். இனிமேலாவது அதற்கான தொகையை ஒதுக்கி கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு உத்தரவிடுமா?

கனம் திரு. பூ. கக்கன் : குடி-தண்ணீர்த் திட்டத்துக்காக ரூரல் வாட்டர் சப்ளை திட்டத்தின் கீழ் எவ்வளவு தூரம் வசதிகளைச் செய்ய முடியுமோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அந்த மாதிரி ஏதாவது கஷ்டம் இருந்தால் கலெக்டர் அவர்களிடத்திலே தெரிவித்தால் அவர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்.

புலவர் கா. கோவிந்தன் : காலனிகளுக்குப் பாதைகள், கிணறுகள் ஆகியவற்றுக்காக 'கான்ட்ரிப்யூஷன்' தேவையில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாதைகளுக்கு வேண்டிய இடங்களை வாங்குவதைப் பஞ்சாயத்து செய்யக்கூடாது என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களை வாங்கிக் கொடுக்கும் பொறுப்பை ஹரிஜன நல இலாகா எடுத்துக் கொள்ளுமா?

கனம் திரு. பூ. கக்கன் : முன்பு அந்த முறைதான் இருந்தது. அந்த முறையை ஏற்படுத்துவது மறுபடியும் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : கட்டப்பட்ட கிணறுகளை அல்லது ரோடுகளைச் செப்பனிடுவதைப் பஞ்சாயத்து யூனியன் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்கள் ஹரிஜனங்கள் வாழும் பகுதியிலே செப்பனிடும் காரியத்தைச் செய்து விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. ஆகவே, ஹரிஜன நல இலாகா மூலம் இதனைச் செய்வதற்குத் தொகையை ஒதுக்குவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த முடிவு செய்வது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இதர பிற்பட்ட பகுதிகள் சேர்ந்த பிரதேசங்களில் இந்த மாதிரி பொதுமக்களிடம் நன்கொடை வசூலிக்கப்படுவது இல்லையென்றாலும் எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை கண்டிப்பாக நன்கொடை கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று சொல்கிறார்கள். எஜுகேஷனலி பாக்வார்டு ஆக இருப்பவர்கள் தவிர மற்றவர்கள் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று சொல்லப்படுவதால், பிற்பட்ட வகுப்பு என்பது எது என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மாதிரிக் கஷ்டம் இருந்தால் தகவல் எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஹரிஜன காலனிகளுக்காகக் குடி தண்ணீர் வழங்குகிற பிரச்சினையைப் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றி வருகின்றன. யூனியனில் இருக்கும் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஜாதி இந்துக்களாக இருக்கிறபடியால் ஹரிஜன காலனிகளுக்கு அந்த வசதிகளைச் செய்து கொடுக்க

[12th March 1964

மறுக்கிறார்கள். ஆகவே, அரசாங்கமே ஆண்டுதோறும் ஹரிஜனக் காலனிகளில் கிணறுகளை வெட்டிக் கொடுக்க முன் வருமா? மேலும் தேர்தல் வருகிற நேரத்தில் ஹரிஜனங்கள் பஞ்சாயத்துத் தலைவராக வரக்கூடிய அளவில் சட்டத்தைத் திருத்த முன் வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் அவர்கள் தேர்தல் வரும்போதுதான் ஹரிஜனங்களை அதிகமாக நாடுவார்கள் என்று தெரிகிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினை சிக்கலான பிரச்சினை. எவ்வளவு தூரம் அதைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்து வருகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா: அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டங்கள் பஞ்சாயத்து மூலமாகச் செய்யப்படுவதாகச் சொன்னார்கள். பஞ்சாயத்துக்கு 90 சதவிகிதம் அரசாங்க மானியம் கொடுத்தும் 10 சதவிகிதம் மக்களிடம் இருந்தும் வசூலிக்கப் படுகிறது. இந்தக் கிணறுகள் வெட்டும் பொறுப்பை எல்லாம் 100-க்கு 100 அரசாங்கமே ஏற்றுக் கொள்ள முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: இந்தக் காரியத்தை முன்பு அரசாங்கமே செய்து வந்தது போல் மறுபடியும் அரசாங்கம் மேற்கொள்வது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்தக் குடித்தண்ணீர் திட்டத்திற்காக அரிசனங்களுக்கு 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒரு கிராமத்திற்குக் கிணறு வெட்ட வேண்டுமென்று வெல்பேர் தாசில்தாரைக் கேட்டால் பஞ்சாயத்தைக் கேட்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இது ஒன்றுக்கொன்று ஏறுமாறாக இருக்கிறது. இதனுடைய அடிப்படைக் கருத்து என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: அடிப்படையில் கோளாறு ஒன்றும் இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: எங்களுடைய மாவட்டத்தில் ஹரிஜன நல இலாகா மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட சில கிணறுகளின் வேலை இரண்டு ஆண்டு காலமாகியும் பூர்த்தியாகவில்லை. இதற்கு என்ன காரணம்?

கனம் திரு. பூ. கக்கன்: சில கிணறுகளைக் கான்ட்ராக்டுக்கு விட்டுப் பணம் கொடுப்பதில் காலதாமதம் இருந்தது. இப்போது துரிதமாகப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. டி. சின்னசாமி: சின்ன சேலத்திலே கலெக்டர் சோமசுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள் வந்து கிணறு வெட்டி டாங்க் கட்டுவதற்காக கல்நாட்டு செய்து விட்டுச் சென்றார். ஆனால் அந்த ஊரிலுள்ள பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டார்கள். அவ்வாறு நிறுத்தி வைக்கக் காரணம்

12th March 1964]

என்ன? அதை நிறைவேற்றிவைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து உடனடியாக ஓவர் ஹெட் டாங்க் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்த தண்ணீர் டாங்கை பஞ்சாயத்து யூனியன் வாயிலாகத்தான் கட்ட வேண்டும். இது பற்றி சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்களுக்குக் கேள்வி போட்டால் பதில் சொல்வார்கள்.

Welfare of ex-servicemen

* 238 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a sum of Rs. 70,000 has been allotted for the construction of an Ex-Servicemen Centre in Madras City; and

(*b*) when it will be completed?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) A sum of Rs. 94,407·00 is available for the purchase of site and construction of a building for the Ex-Services Centre in the Madras City. The question of obtaining a site is under correspondence. As soon as the site is secured, the Centre will be constructed.

* 239 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Ex-Servicemen Centres so far constructed for the welfare of the ex-servicemen in this State, district-war and their location; and

(*b*) whether such buildings are ear-marked for any specific purpose?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Ten;

The particulars of the Centres are given below:—

Serial number and name of the district.	Location of the Centre.
(1)	(2)
1 South Arcot	Cuddalore N.T.
2 Thanjavur	Thanjavur
3 Tiruchirappalli	Tiruchirappalli
4 Madurai	Madurai
5 Ramanathapuram ..	Srivilliputhur
6 Tirunelveli	Palayamkottai
7 Coimbatore	Coimbatore
8 Salem	Salem
9 Salem	Krishnagiri
10 North Arcot	Vellore

(*b*) Yes. For housing the offices of the District Soldiers', Sailors' and Airmen's Boards and running the rest centre for ex-servicemen.

[12th March 1964

மறுக்கிறார்கள். ஆகவே, அரசாங்கமே ஆண்டுதோறும் ஹரிஜனக் காலனிகளில் கிணறுகளை வெட்டிக் கொடுக்க முன் வருமா? மேலும் தேர்தல் வருகிற நேரத்தில் ஹரிஜனங்கள் பஞ்சாயத்துத் தலைவராக வரக்கூடிய அளவில் சட்டத்தைத் திருத்த முன் வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் அவர்கள் தேர்தல் வரும்போதுதான் ஹரிஜனங்களை அதிகமாக நாடுவார்கள் என்று தெரிகிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினை சிக்கலான பிரச்சினை. எவ்வளவு தூரம் அதைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்து வருகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா: அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டங்கள் பஞ்சாயத்து மூலமாகச் செய்யப்படுவதாகச் சொன்னார்கள். பஞ்சாயத்துக்கு 90 சதவிகிதம் அரசாங்க மானியம் கொடுத்தும் 10 சதவிகிதம் மக்களிடம் இருந்தும் வசூலிக்கப் படுகிறது. இந்தக் கிணறுகள் வெட்டும் பொறுப்பை எல்லாம் 100-க்கு 100 அரசாங்கமே ஏற்றுக் கொள்ள முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: இந்தக் காரியத்தை முன்பு அரசாங்கமே செய்து வந்தது போல் மறுபடியும் அரசாங்கம் மேற்கொள்வது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்தக் குடித்தண்ணீர் திட்டத்திற்காக அரிசனங்களுக்கு 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒரு கிராமத்திற்குக் கிணறு வெட்ட வேண்டுமென்று வெல்பேர் தாசில்தாரைக் கேட்டால் பஞ்சாயத்தைக் கேட்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இது ஒன்றுக்கொன்று ஏறுமாறாக இருக்கிறது. இதனுடைய அடிப்படைக் கருத்து என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: அடிப்படையில் கோளாறு ஒன்றும் இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: எங்களுடைய மாவட்டத்தில் ஹரிஜன நல இலாகா மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட சில கிணறுகளின் வேலை இரண்டு ஆண்டு காலமாகியும் பூர்த்தியாகவில்லை. இதற்கு என்ன காரணம்?

கனம் திரு. பூ. கக்கன்: சில கிணறுகளைக் காண்ட்ராக்டுக்கு விட்டுப் பணம் கொடுப்பதில் காலதாமதம் இருந்தது. இப்போது துரிதமாகப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. டி. சின்னசாமி: சின்ன சேலத்திலே கலெக்டர் சோமசுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள் வந்து கிணறு வெட்டி டாங்க் கட்டுவதற்காக கல்நாட்டு செய்து விட்டுச் சென்றார். ஆனால் அந்த ஊரிலுள்ள பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டார்கள். அவ்வாறு நிறுத்தி வைக்கக் காரணம்

12th March 1964]

என்ன? அதை நிறைவேற்றிவைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து உடனடியாக ஓவர் ஹெட் டாங்க் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்த தண்ணீர் டாங்கை பஞ்சாயத்து யூனியன் வாயிலாகத்தான் கட்ட வேண்டும். இது பற்றி சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்களுக்குக் கேள்வி போட்டால் பதில் சொல் வார்கள்.

Welfare of ex-servicemen

* 238 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a sum of Rs. 70,000 has been allotted for the construction of an Ex-Servicemen Centre in Madras City; and

(*b*) when it will be completed?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) A sum of Rs. 94,407·00 is available for the purchase of site and construction of a building for the Ex-Services Centre in the Madras City. The question of obtaining a site is under correspondence. As soon as the site is secured, the Centre will be constructed.

* 239 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Ex-Servicemen Centres so far constructed for the welfare of the ex-servicemen in this State, district-war and their location; and

(*b*) whether such buildings are ear-marked for any specific purpose?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Ten;

The particulars of the Centres are given below:—

Serial number and name of the district. (1)	Location of the Centre. (2)
1 South Arcot	Cuddalore N.T.
2 Thanjavur	Thanjavur
3 Tiruchirappalli	Tiruchirappalli
4 Madurai	Madurai
5 Ramanathapuram ..	Srivilliputhur
6 Tirunelveli	Palayamkottai
7 Coimbatore	Coimbatore
8 Salem	Salem
9 Salem	Krishnagiri
10 North Arcot	Vellore

(*b*) Yes. For housing the offices of the District Soldiers', Sailors' and Airmen's Boards and running the rest centre for ex-servicemen.

[12th March 1964

கனம் திரு. பூ. கக்கன் : தனிப்பட்டவர்களுக்கு என்று கொடுக்கவில்லை. ஏற்கெனவே அந்த சேவையில் ஈடுபட்டிருந்தார்கள் சிலர்; இப்பொழுது புதிதாக ஆஸ்டல் நிறுவுவதற்கு அங்கிகாரம் கொடுப்பதில்லை.

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஐந்து ஆஸ்டல்களை நடக்கிற ஆண்டிலேயே சர்க்கார் எடுக்க ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குள்ளாகவே சொல்ல முடியாது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டில் புதிய மாணவர் விடுதிகள் அமைக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குள்ளாக இப்பொழுதிருக்கும் மாணவர் விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசாங்கம் வழி செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகிறது. போதுமான கட்டடங்கள் இல்லாததால் இந்த எண்ணிக்கையை அதிகமாக உயர்த்த முடியவில்லை.

திரு. செ. மாதவன் : தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய இந்த விடுதிகளுக்கு அரசாங்கம் கொடுக்கக் கூடிய மானியத்தை அவர்கள் ஒழுங்காகச் செலவு செய்கிறார்களா என்று கண்காணிக்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்துள்ளதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹரிஜன நல அதிகாரி இருக்கிறார். அவருக்குக் கீழ் பல தாசில்தார்களும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இதைக் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நடப்பு ஆண்டில் புதிதாக ஏற்படுத்தி இருக்கும் ஹரிஜன மாணவர் உணவு விடுதியில் திருச்சிற்றம்பலம் கூட்டு ரோட்டில் இருக்கும் ஹைஸ்கூலும் சேர்ந்ததா ?

கனம் திரு. பூ. கக்கன் : குழந்தையே பிறக்கவில்லை. அதற்குள் எப்படிப் பெயர் வைப்பது ? (சிரிப்பு.)

திரு. ஆர். ரங்கசாமி : தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய அரிசன ஹாஸ்டல்களுக்குச் சர்க்கார் கொடுக்கும் உதவித் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்காக, ஹாஸ்டல்களில் வந்து சேரக்கூடிய பிள்ளைகளிடமிருந்து ரூபாய் வசூல் செய்கிறார்கள். அப்படி வசூல் செய்வதற்கு சர்க்காருடைய அனுமதி இருக்கிறதா? குறைந்த தொகையாகக் கொடுக்காமல், தேவையான அளவுக்குத் தொகை கொடுத்து ஹாஸ்டல்களை நல்ல முறையில் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிப்பட்டவர்கள் நடத்தும் விடுதிக்கு, மாணவ, மாணவி ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்குப் பதினைந்து ரூபாய் வீதம் உணவுக்காகக் கொடுத்து உதவி செய்து வருகிறோம்.

12th March 1964]

அரசாங்கம் கொடுக்கும் உதவியையும் வைத்துக்கொண்டு, மேலும் அவர்கள் நிதி திரட்டி நல்ல முறையில் ஹாஸ்டல்களை நடத்த வேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஹரிஜன ஹாஸ்டல்களில் ஹரிஜன மாணவர்கள் தவிர, ஆதிவாசி மாணவர்களும் வசிக்கிறார்கள். ஆதிவாசி மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பது மட்டுமல்லாமல், உடை கொடுக்கிறோம், புஸ்தகம் கொடுக்கிறோம். 8 முதல் 10-வது வரை படிக்கும் மாணவர்கள் சர்க்கார் ஹாஸ்டலிலே போகும் போது, உடை கொடுக்கவும், துணி கொடுக்கவும் அங்கு வசதி இல்லாமலிருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் கவனித்து அவர்களுக்கும் இந்த சலுகைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆதிவாசி மக்களுக்கு உணவு அளிப்பது மட்டுமல்ல, உடை அளிக்கக்கூடிய ஒத்தாசையும் செய்து வருகிறோம். அரசாங்கம் நடத்தும் ஹாஸ்டல்களிலே அவர்களுக்கு துணிமணி கொடுத்து வருகிறோம். அப்பேர்ப்பட்ட ஹாஸ்டல்களிலே 9, 10, 11 வகுப்பில் படிக்கும் மாணவர்கள் சேர்ந்தால் அவர்களுக்கும் இந்த சலுகை உண்டு.

திரு. டி. கார்ச்சா கவுடர் : புதிதாக ஆரம்பிக்கப்படும் இந்த ஹாஸ்டல்களில் குன்னூரில் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கும் ஹரிஜனங்களுடைய குழந்தைகளுக்காக ஒரு ஹாஸ்டல் திறக்கவேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியானால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : குன்னூரில் அரசாங்கம் நடத்துகிற விடுதி இருக்கிறது. ஆதிவாசி மக்களுக்கு ராமசாமி அடிகள் தனியாக ஒரு ஹாஸ்டல் நடத்துகிறார். தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக ஒரு விடுதி ஏற்படுத்த வேண்டுமென்று தோட்டத் தொழிலாளர்களின் தலைவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : எனக்குத் தெரிந்தவரையில், பல ஆதித் திராவிட மாணவர்கள் உணவு விடுதியில் சேருகிறபோது பெற்றோர்களிடமிருந்து மாதத்திற்கு இருபது ரூபாய்க்குக் குறையாமல் வசூல் செய்கிறார்கள் என்ற புகார் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் சபாநாயகர் : "எனக்குத் தெரிந்த வரையில்" என்று கனம் அங்கத்தினர் கேள்வியை ஆரம்பிக்கிறார்களே, அவர்களுக்குத் தெரிந்த அந்த விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்களா ?

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : "அரசாங்கத்திற்குத் தெரியுமா?" என்று தான் நான் கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : நானும் ஹரிஜன சேவா சங்கத்தில் பணிபுரிந்திருக்கிறேன். அரசாங்க உதவியோடு பொது மக்களிடமிருந்தும் அந்த சங்கத்திற்காக வசூல் செய்வதுண்டு.

[12th March 1964

புது விடுதிக்கான கட்டடங்கள் கட்டுகிறபோது பெற்றோர்களிடமிருந்து நன்கொடை வாங்கினால் அதை லஞ்சம் கொடுத்ததாக எடுத்துக் கொள்வது நல்லதல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஹரிஜன சேவா சங்கங்களால் நடத்தப்படும் பல உணவு விடுதிகள் சரிவர நடத்தப்படவில்லை என்ற காரணத்தினால் அரசாங்கத்திற்கு மனுக்கள் அனுப்பப்பட்டும் சர்க்காரே எடுத்துக்கொள்ள முன்வந்தும், அதற்குப் பிறகு அவர்கள் விடமாட்டோம் என்று பிடிவாதமாகச் சொல்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன? சேவைசெய்ய வேண்டும் என்கிற காரணமா? அல்லது அதில் வருகின்ற வருவாய் காரணமா?

கனம் திரு. பூ. கக்கன்: அது அவரவர்கள் இஷ்டம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஹாஸ்டல் நன்றாக நடக்க வேண்டும்.

கனம் சபாநாயகர்: இதெல்லாம் அவரவருக்குத்தான் தெரிய வேண்டும். அமைச்சர் அவர்கள் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

Village officers

* 233 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the assaulting of village headman by the tax-payers during the time of discharge of their duties in the capacity as Government servants are on the increase day by day; and

(*b*) if so, the action taken to prevent and safeguard them from such unhappy incidents?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) It is not correct to say that assaults of Village Officers by tax-payers during the time of discharge of their official duties are on the increase. There have been only a few such cases.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இம்மாதிரி கேஸ்கள் நடந்ததைக் குறித்துப் பல முறை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். அதற்காக என்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதைப் போல ஒருசில இடங்களில் இந்தக் கஷ்டம் ஏற்பட்டது. அதுபோன்ற நிலைமை ஏற்படும்போது அரசாங்கம் என்ன என்ன பாதுகாப்பை அவர்களுக்குக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

12th March 1964]

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கும்படியான சலுகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படுமா? அரசாங்கமே கேஸ்களை எடுத்து நடத்த முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அதற்குத் தனியாகக் கேள்வி போடலாம்.

கனம் சபாநாயகர்: அரசாங்க ஊழியர்களுக்கு என்ன சலுகை இருக்கிறது?

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: அரசாங்கமே கேஸ் எடுத்து நடத்துகிறார்கள்.

கனம் சபாநாயகர்: இப்போதும் போலீசுக்குத் தகவல் கொடுத்தால் போலீஸ் சார்ஜ் ஷீட் போடுவார்களே.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: அப்படியானால், இவர்கள் தனிப்பட்ட ஹோதாவில் நடத்த வேண்டும்.

MR. SPEAKER: He is also a public servant.

SRI R. S. VEERAPPA CHETTIAR: But the village officer is not treated as a public servant.

MR. SPEAKER: Is he not a public servant according to the Indian Penal Code?

SRI R. S. VEERAPPA CHETTIAR: I do not think so. He is not treated like that.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளை 'பப்ளிக் சர்வன்ட்ஸ்' என்று அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா? அப்படி இருந்தால், பப்ளிக் சர்வன்ட்டுக்குக் கிடைக்கக் கூடிய உதவிகளை கிராம அதிகாரிகளுக்குச் செய்து வருகிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அரசாங்கத்தின் வேலையைச் செய்கிறவர்களுக்கு இதுபோன்று எந்தவிதமான எதிர்ப்பு ஏற்பட்டாலும் அதைத் தடுப்பதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அரசாங்கம் செய்யும்.

திரு. ஆர். ரங்கசாமி: சில கிராம முன்சீப்புகள், கிராமத்திலே அவர்களுக்கு ஆகாத விவசாயிகள் இருந்தால், அவர்கள் மீது பொய்க் கேஸ்கள் போட்டுத் தவறாக நடக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அப்படிப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, வேறு கிராம முன்சீப்புகளை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: கிராம அதிகாரிகளின் விவசாயிகளிடம் தவறான முறையில் ஏதேனும் நடக்கும் பட்சத்தில், அவர்களுக்குத் தகுந்த தண்டனை கொடுக்க அரசாங்கம் தயங்காது.

திருச்சி மாவட்டத்திலுள்ள இனும், ஜமீன் கிராமங்களில் செட்டில்மென்ட்

*234 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் முசிரி, பெரம்பலூர் ஆகிய வட்டங்களில் உள்ள இனும், ஜமீன் கிராமங்களில் செட்டில்மெண்டு செய்யப்படும்போது சரியானபடி விசாரணை நடத்தாமல், குடியிருப்பு நிலங்கள் புறம்போக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு பட்டா வழங்கப்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) அப்படி பட்டா வழங்கப்பட்ட குடியிருப்பு நிலங்களுக்கு நிலத் தீர்வையும், அதே சமயத்தில் வீட்டு வரியும் வசூலிக்கப் படுவது உண்மையா ?

(உ) அப்படியானல் மேற்படி குடியிருப்பு நிலங்களுக்கு வசூலிக்கப்படும் நிலத் தீர்வையை ரத்து செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) Settlement is done after proper notice and after detailed enquiry. Anyone aggrieved in the matter can go on appeal to the appropriate authority.

(இ) No ground rent is levied on village sites; but ground rent is levied in villages declared as "towns". The levy is Rs. 6-25 nP. per acre on all sites of buildings and the appurtenances thereto situated within the limits of towns and all lands used for non-agricultural purposes, whether built upon or not. The house-tax is a separate levy on the buildings made by the Panchayats under the Madras Panchayats Act, 1958.

(உ) No, Sir.

திரு. து. ப. அழகமுத்து : இந்த செட்டில்மென்ட் செய்யப் போகும்போது நத்தம் புறம்போக்கில் குடியிருந்தவர்களைச் சரியானபடி அழைத்து அவர்கள் விசாரிக்கப்படுவதில்லை. நத்தம் புறம்போக்குக்கும் இப்பொழுது வரி வசூல் செய்கிறார்கள். இந்த வரி வசூல் செய்வதை நிறுத்த வேண்டும் என்று அப்பீல் செய்ய வேண்டுமென்றால், ஆயிரக்கணக்கானவர்கள் அதிலே அப்பீல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதுபற்றி ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியிடம் கேட்டபோது, 'சர்க்காரே ஒரு உத்தரவு போட்டால்தான் இதை ரத்து செய்ய முடியும், தனித் தனியாக அப்பீல் செய்துகொள்வதென்பது முடியாத காரியம்' என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, அதற்கான நடவடிக்கை எடுப்பதற்குச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் செட்டில் மென்ட் வேலையைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால், அது ஒரு குறிப்பிட்ட சட்ட அடிப்படையில்தான் நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். என்ன என்ன

நடவடிக்கை, எந்த எந்தக் காலத்தில், எந்த எந்த அதிகாரி எடுக்க வேண்டும் என்று அந்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், அந்தச் சட்டத்திற்குப் புறம்பாக அரசாங்கம் உத்தரவு போடவேண்டுமென்று நினைத்தால் அது சாத்தியம் இல்லாத காரியம். அதில் உண்மையிலேயே ஏதேனும் சிக்கல், கஷ்டம் இருக்கும் பட்சத்தில், கனம் அங்கத்தினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதில் கவனம் செலுத்தி, அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய கஷ்டத்தைத் தீர்க்கத் தக்க அளவுக்குச் சட்டத்தைத் திருத்த வேண்டிய நிலை ஏற்பட்டாலும், அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளலாமே தவிர, இப்பொழுது சட்ட அடிப்படையில்தான் காரியம் நடக்கிறது. 9-00 a.m.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Taking into consideration the various difficulties that have been found while implementing the Zamindari Abolition Act, at least for settlement and survey of Inam estates will the Officers and people at it be instructed suitably to see that such defects that have already been committed would not again be committed?

THE HON. SRI V. RAMAIAH : The main question is related to settlement work. I am sure the hon. Member knows that the whole thing is carried under a particular Act and there are various procedures for it and we cannot just always generalise that there are so many hardships and all that. There may be special hardships in a particular area. They have to be rectified. We will have to take special steps, not in the mere form of government orders; at times we will have to actually amend the Act. If there is any necessity, then Government will take that step. Upto now all safeguards required have been provided. The difficulty, as I have seen for the last one or two years, is that the people completely keep quiet when settlement work is going on. They actually miss it. At a later stage, after they have missed it, they come to Government and say that Government must act. I do not think it is possible.

திரு. செ. மாதவன் : அண்மையில் நம்முடைய சென்னை உயர்நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பில் புறம்போக்கு நிலத்தை நத்தம் புறம் போக்கு என்று செட்டில்மெண்டு காலத்தில் க்ளாசிபை பண்ணி விட்டால் அதில் நீதி மன்றம் உத்தரவு எதுவும் செல்லாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது அப்பீல் செய்துகொள்ள சட்டத்திற்கு அப்பாற்பட்டு பிரித்து ரெவின்யூ இலாகாவுக்கு அதை நல்லமுறையில் விசாரித்து நன்மை செய்ய உத்தரவு வழங் கப்பட்டிருக்கிறது. அதை நல்லமுறையில் அமுல் படுத்தும்படி அரசாங்கம் அவர்களுக்கு உத்தரவு போடுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கம் அப்படி உத்தரவு போட்டு இருந்தால் அவர்கள் அமல் நடத்துவார்கள். அரசாங்க உத்தரவு அமல்படுத்தப்படாமல் இருந்தால் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். மறு உத்தரவு போடுகிறேன்.

[12th March 1964

கனம் சபாநாயகர் : அந்த உத்தரவில் நல்முறையில் நடத்த வேண்டுமென்று எழுதியிருக்கிறதா ? (சிரிப்பு).

கனம் திரு. வெ. ராமைய்யா : அப்படித்தான் எழுதியிருக்கிறது.

திரு. செ. மாதவன் : அந்த உத்தரவில் அதிகாரிகள் அதைப் பரிசீலனை செய்து முடிவு செய்வதற்கு தங்கள் தங்கள் டிஸ்க்ரிஷனை உபயோகப்படுத்த வேண்டும் என்றுதான் இருக்கிறது. ரெகுலர் அப்பீல் என்று போட வாய்ப்பு இல்லை. அப்படிப் போட வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : முதலில் கனம் அங்கத்தினர் கேட்டது நல்ல முறையில் அவர்கள் அதை அமல்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தரவு போடுமா என்பது தான். நல்லமுறையில் பரிசீலனை செய்து முடிவு செய்வதற்கான டிஸ்க்ரிஷன் பவரை அவர்களுக்கு நாம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் விரும்புகிறபடி அதிகாரிகள் தங்கள் டிஸ்க்ரிஷன் பவரை உபயோகப்படுத்தி உத்தரவு போடாமல் இருக்கலாம். இரண்டாவதாக கனம் அங்கத்தினர் கேட்டதில் இருந்து அதிகாரிகள் முறையாகத்தான் நடக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act.

* 235 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the steps taken to bring into force the Inam Estates and Minor Inams Abolition Acts passed by the Legislature recently; and

(*b*) the details of the administration to be set up for the enforcement of these Acts?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962, received the assent of the President on 11th December 1963 and was published as an Act in the *Fort St. George Gazette*, dated 1st January 1964. The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 received the assent of the President on 28th January 1964 and was published as an Act in the *Fort St. George Gazette*, dated 5th February 1964. The question of framing rules under the two Acts and the details of the administrative machinery required for implementing them are engaging the attention of the Government.

திரு. செ. மாதவன் : பழைய பாக்கிகளை வசூலிக்க இந்தச் சட்டத்தில் ஒரு செக்ஷன் போட்டிருக்கிறோம். அதன்படி ரெவின்யூ கோர்ட்டுக்கு போய், தாசில்தார் மூலமாகவே டிகிரித் தொகையை வசூலிப்பதை அரசாங்கம் நிறுத்திவைக்க உத்தரவு அனுப்பித்து இருக்கிறதா?

12th March 1964]

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்ல முடியும்.

Village Officers for ex-estate villages

* 236 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the procedure adopted in the appointment of village officers to the villages grouped together in the estate villages taken over by the Government; and

(*b*) the alternative arrangement made to the village officers who will be deprived of their jobs due to the grouping of villages?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Generally, the procedure prescribed in B.P. Rt. No. 1059, dated 19th February 1952 and B.P. Rt. No. 324, dated 9th December 1910 is being adopted in the appointment of Village Officers while grouping estate villages taken over by the Government. A copy of each of these B.Ps. [a] is placed on the Table of the House.

(*b*) No alternative arrangement has been made for the Village Officers who will be deprived of their jobs due to grouping of villages. However, the District Revenue Officers have been asked to give preference to such qualified retrenched Village Officers, when other things are approximately equal while making appointment to Village Officers to other villages.

Sri C. CHIRANJEEVULU NAIDU : In the paper placed on the table of the House, it is said that not only revenue would be taken into consideration but that no re-survey will be allowed where survey has already been done. Based on survey, other things are done. If defects are pointed out on a survey which was over, it is not desirable that Government should again order for re-survey taking consideration viability, etc.?

The Hon. Sri V. RAMAIAH : The papers which I have placed on the table of the House are best examples of what we do when we re-group villages taken over from zamin areas. I do not know how survey question comes in here. If after survey, it is found necessary that villages have to be re-grouped, if such a situation arises, it will have to be tackled as per procedure which we have followed up to now.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கிராமாதிகாரிகளை நியமிப்பது பற்றிப் பரிசீலனை செய்வதற்காக அரசாங்கம் காபினட் சப் கமிட்டி ஒன்று போட்டதே, அது செய்திருக்கும் படியான முடிவுகள் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனிக் கேள்வி வேண்டும்.

---

[a] Printed as Appendix on pages 454-458.

[12th March 1964

திரு. எஸ். ஜே. ராமஸ்வாமி : கிராமாதிகாரிகளை நியமிப்பதிலே அதாவது எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது, எவ்வளவு வருமானம் இருக்கிறது என்பதை எல்லாம் பார்த்து அந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : தனிக் கேள்வி வேண்டும். இது ஜமீன் பிராந்தியத்தை ரீ-க்ரூப்பிங் செய்வது சம்பந்தமான கேள்வி.

Wells for Harijans

* 237 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that no allotment is made for effecting improvements to the wells sunk by the Harijan Welfare Department; and

(b) if so, whether the Government will arrange to allot funds for effecting repairs and improvements to such wells?

THE HON. SRI P. KAKKAN : (a) A sum of Rs. 4 lakhs is provided annually in the Harijan Welfare budget for the construction and repair of wells, pathways, burial grounds, etc. Additional allotments are also sanctioned in the course of the year wherever necessary. The Panchayats in the respective areas undertake sinking of wells or deepening or repairing of existing wells for all communities including Harijans and the expenditure is met from the Village Works Grant. In the case of water-supply works intended for the benefit of Harijans and other Backward Classes no contribution is expected from them.

(b) Does not arise.

(அ) கிணறுகள், பாதைகள், இடுகாடுகள், ஆகியவற்றை அமைப்பதற்கும், செப்பனிடுவதற்கும் ஹரிஜன நலத்துறை பட்ஜெட்டில் ஆண்டுதோறும் ரூபாய் 4 லட்சம் ஒதுக்கப்படுகிறது. அவசியமான போதெல்லாம் அந்த ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கமும் செய்யப்படுகிறது. ஹரிஜனங்கள் உட்பட எல்லா வகுப்பினர்களுக்காகவும் கிணறுகள் வெட்டும் வேலையையும் தற்போதுள்ள கிணறுகளை ஆழமாக்குதல், செப்பனிடுதல் போன்ற வேலைகளையும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்துக்கள் மேற்கொள்ளுகின்றன. இதற்கான செலவு கிராமப் பணிகள் மானியத்திலிருந்து செய்யப்படுகிறது. ஹரிஜனங்கள் இதர பின்னிலை வகுப்பினர்களின் நலனுக்காக உத்தேசிக்கப்படும் தண்ணீர் சப்ளை திட்டங்களுக்காக அவர்களிடமிருந்து எந்தவிதமான உதவித் தொகையும் எதிர்பார்க்கப்படுவதில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சென்ற ஆண்டில் எங்கள் பகுதியில் பல கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. அப்போது அது பற்றிக் கேட்டதற்கு அதற்கான 'பண்ட்'

12th March 1964]

ஒதுக்கப்படவில்லை என்று கூறினார்கள். இனிமேலாவது அதற்கான தொகையை ஒதுக்கி கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு உத்தரவிடுமா?

கனம் திரு. பூ. கக்கன் : குடிதண்ணீர்த் திட்டத்துக்காக ரூரல் வாட்டர் சப்ளை திட்டத்தின் கீழ் எவ்வளவு தூரம் வசதிகளைச் செய்ய முடியுமோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அந்த மாதிரி ஏதாவது கஷ்டம் இருந்தால் கலெக்டர் அவர்களிடத்திலே தெரிவித்தால் அவர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்.

புலவர் கா. கோவிந்தன் : காலனிகளுக்குப் பாதைகள், கிணறுகள் ஆகியவற்றுக்காக 'கான்ட்ரிப்யூஷன்' தேவையில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாதைகளுக்கு வேண்டிய இடங்களை வாங்குவதைப் பஞ்சாயத்து செய்யக்கூடாது என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களை வாங்கிக் கொடுக்கும் பொறுப்பை ஹரிஜன நல இலாகா எடுத்துக் கொள்ளுமா?

கனம் திரு. பூ. கக்கன் : முன்பு அந்த முறைதான் இருந்தது. அந்த முறையை ஏற்படுத்துவது மறுபடியும் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : கட்டப்பட்ட கிணறுகளை அல்லது ரோடுகளைச் செப்பனிடுவதைப் பஞ்சாயத்து யூனியன் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்கள் ஹரிஜனங்கள் வாழும் பகுதியிலே செப்பனிடும் காரியத்தைச் செய்து விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. ஆகவே, ஹரிஜன நல இலாகா மூலம் இதனைச் செய்வதற்குத் தொகையை ஒதுக்குவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த முடிவு செய்வது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இதர பிற்பட்ட பகுதிகள் சேர்ந்த பிரதேசங்களில் இந்த மாதிரி பொதுமக்களிடம் நன்கொடை வசூலிக்கப்படுவது இல்லையென்றாலும் எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை கண்டிப்பாக நன்கொடை கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று சொல்கிறார்கள். எஜுகேஷனலி பாக்வார்டு ஆக இருப்பவர்கள் தவிர மற்றவர்கள் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று சொல்லப்படுவதால், பிற்பட்ட வகுப்பு என்பது எது என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மாதிரிக் கஷ்டம் இருந்தால் தகவல் எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஹரிஜன காலனிகளுக்காகக் குடிதண்ணீர் வழங்குகிற பிரச்சினையைப் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றி வருகின்றன. யூனியனில் இருக்கும் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஜாதி இந்துக்களாக இருக்கிறபடியால் ஹரிஜன காலனிகளுக்கு அந்த வசதிகளைச் செய்து கொடுக்க

[12th March 1964

மறுக்கிறார்கள். ஆகவே, அரசாங்கமே ஆண்டுதோறும் ஹரிஜனக் காலனிகளில் கிணறுகளை வெட்டிக் கொடுக்க முன் வருமா? மேலும் தேர்தல் வருகிற நேரத்தில் ஹரிஜனங்கள் பஞ்சாயத்துத் தலைவராக வரக்கூடிய அளவில் சட்டத்தைத் திருத்த முன் வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்கள் தேர்தல் வரும்போதுதான் ஹரிஜனங்களை அதிகமாக நாடுவார்கள் என்று தெரிகிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினை சிக்கலான பிரச்சினை. எவ்வளவு தூரம் அதைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்து வருகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா : அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டங்கள் பஞ்சாயத்து மூலமாகச் செய்யப்படுவதாகச் சொன்னார்கள். பஞ்சாயத்துக்கு 90 சதவிகிதம் அரசாங்க மானியம் கொடுத்தும் 10 சதவிகிதம் மக்களிடம் இருந்தும் வசூலிக்கப் படுகிறது. இந்தக் கிணறுகள் வெட்டும் பொறுப்பை எல்லாம் 100-க்கு 100 அரசாங்கமே ஏற்றுக் கொள்ள முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தக் காரியத்தை முன்பு அரசாங்கமே செய்து வந்தது போல் மறுபடியும் அரசாங்கம் மேற்கொள்வது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்தக் குடித்தண்ணீர் திட்டத்திற்காக அரிசனங்களுக்கு 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒரு கிராமத்திற்குக் கிணறு வெட்ட வேண்டுமென்று வெல்பேர் தாசில்தாரைக் கேட்டால் பஞ்சாயத்தைக் கேட்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இது ஒன்றுக்கொன்று ஏறுமாறாக இருக்கிறது. இதனுடைய அடிப்படைக் கருத்து என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : அடிப்படையில் கோளாறு ஒன்றும் இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : எங்களுடைய மாவட்டத்தில் ஹரிஜன நல இலாகா மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட சில கிணறுகளின் வேலை இரண்டு ஆண்டு காலமாகியும் பூர்த்தியாகவில்லை. இதற்கு என்ன காரணம்?

கனம் திரு. பூ. கக்கன் : சில கிணறுகளைக் காண்ட்ராக்டுக்கு விட்டுப் பணம் கொடுப்பதில் காலதாமதம் இருந்தது. இப்போது துரிதமாகப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. டி. சின்னசாமி : சின்ன சேலத்திலே கலெக்டர் சோமசுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள் வந்து கிணறு வெட்டி டாங்க் கட்டுவதற்காக கல்நாட்டு செய்து விட்டுச் சென்றார். ஆனால் அந்த ஊரிலுள்ள பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டார்கள். அவ்வாறு நிறுத்தி வைக்கக் காரணம்

12th March 1964]

என்ன? அதை நிறைவேற்றிவைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து உடனடியாக ஓவர் ஹெட் டாங்க் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த தண்ணீர் டாங்கை பஞ்சாயத்து யூனியன் வாயிலாகத்தான் கட்ட வேண்டும். இது பற்றி சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்களுக்குக் கேள்வி போட்டால் பதில் சொல் வார்கள்.

Welfare of ex-servicemen

* 238 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether a sum of Rs. 70,000 has been allotted for the construction of an Ex-Servicemen Centre in Madras City; and

(b) when it will be completed?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A sum of Rs. 94,407·00 is available for the purchase of site and construction of a building for the Ex-Services Centre in the Madras City. The question of obtaining a site is under correspondence. As soon as the site is secured, the Centre will be constructed.

* 239 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of Ex-Servicemen Centres so far constructed for the welfare of the ex-servicemen in this State, district-war and their location; and

(b) whether such buildings are ear-marked for any specific purpose?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Ten;

The particulars of the Centres are given below :—

Serial number and name of the district. (1)	Location of the Centre. (2)
1 South Arcot	Cuddalore N.T.
2 Thanjavur	Thanjavur
3 Tiruchirappalli	Tiruchirappalli
4 Madurai	Madurai
5 Ramanathapuram	Srivilliputhur
6 Tirunelveli	Palayamkottai
7 Coimbatore	Coimbatore
8 Salem	Salem
9 Salem	Krishnagiri
10 North Arcot	Vellore

(b) Yes. For housing the offices of the District Soldiers', Sailors' and Airmen's Boards and running the rest centre for ex-servicemen.

[12th March 1964

திரு. வி. ஆர். பெரியண்ணன் : சேலம் மாவட்டத்தில் இருக்கக் கூடிய மாஜி இராணுவ நிலையத்தில் எம்ப்ளாயிஸ் அலுவலகம் வைக்கப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவர்கள் அந்த இடம் தங்களுக்குத் தேவையாக இருக்கிறது என்று அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த சென்டர்களை எல்லாம் கட்டுவதற்குப் பணம் இருந்ததே தவிர, மெயின்டைன் பண்ண நிதி வசதி இல்லை. ஆகவே, இந்த சென்டர்களிலே எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் சோல்ஜர்ஸ் செயிலர்ஸ் போர்டு வைத்து, எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் வைத்து அதிலே இருந்து பணம் கொடுத்து சென்டர்களை மெயின்டைன் பண்ண ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : அதிலே ஒரு பகுதியாவது அவர்களுடைய உபயோகத்திற்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக் கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்பதுதான் சர்க்காருடைய உத்தரவு. அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்ல முடியும்.

திரு. எஸ். முத்துலிங்கம் : இந்த சோல்ஜேர்ஸ், செயிலர்ஸ் போர்டில் டைரக்டர்ஸ் ஹானரரி டைரக்டர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை அதிகம் இருப்பதால் வேலை பின்தங்கிக் கிடக்கிறது. ஆகவே இந்த போர்டுக்கு வேண்டி ஒரு தனி அதிகாரியை நியமித்து அந்த வேலைகளை நிர்வகிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சிக்கனத்திற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எம்ப்ளாய்மெண்ட் ஆபீசர்களே பார்த்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பார்ப்பதில் இன்னொரு அனுகூலம் இருக்கிறது. பலர் வேலை தேடி வந்தாலும் இவர்கள் செக்ரட்டரியாக இருப்பதால் அதைப் பார்த்துக் கொடுக்கவும் முடியும். இதுபற்றி பலமுறை பரிசீலனை செய்து எம்ப்ளாய் மெண்ட் ஆபீசர்களே செக்ரடெரியாக இருப்பதுதான் நல்லது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். முத்துலிங்கம் : நார்த் ஆற்காடு டிஸ்ட்ரிக்டில் எக்ஸ்-சர்விஸ்மென் அதிகமாகயிருப்பதால் வேலை வாய்ப்பு அதிகம் வேண்டியிருக்கிறது. ஆகவே தனி ஆபீசர்களாக இருந்தால் அந்த வேலைகளை உடனடியாகச் செய்ய ஏதுவாக இருக்கும். ஆகவே அதற்கு தனியாக ஒரு அதிகாரியை நியமிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் சபாநாயகர் : முன்பு கேட்ட கேள்வியையே கனம் அங்கத்தினர் திரும்ப போடுகிறார்கள்.

12th March 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் முடிவிற்கு மாறான கருத்தை அங்கத்தினர் தெரிவிக்கிறார்கள். முடிவை முன்பே சொல்லிவிட்டேன்.

* 240 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the lands held by the Manivalandan Co-operative Land Colonisation Society in Attur taluk in Salem district are proposed to be distributed to the ex-servicemen, who are in possession of the lands since the society has been liquidated;

(*b*) if so, whether the lands have been taken possession of from the Co-operative department; and

(*c*) whether any action has been taken to issue pattas to the holders of the lands?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) *to* (*c*) The Government had accepted the proposal of the Board of Revenue to assign an extent of 70·61 acres cultivated by seven loyal members in their favour subject to the condition that they paid the arrears due to the Society. The liquidator is taking steps to realise the dues to the society and other assets and to discharge its liabilities.

On the liquidation of the society the land would automatically revert to the Government and that, therefore, no specific orders of the Government for resumption of the lands were necessary. The registration of the society was cancelled on 25th February 1959.

MR. SPEAKER: Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65.

(1) DEMAND NO. XVI—AGRICULTURE.

(2) DEMAND NO. XVIII—ANIMAL HUSBANDRY.

(3) DEMAND NO. XXXIX—CAPITAL OUTLAY ON AGRICULTURE.

(4) DEMAND NO. XLVI—CAPITAL OUTLAY ON SCHEMES OF GOVERNMENT TRADING.

THE HON. SRI P. KAKKAN: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 7,08,74,600 under Demand No. XVI—Agriculture.'

[12th March 1964

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : என் வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 7,08,74,600 under Demand No. XVI—Agriculture be reduced by Rs. 100 '.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,97,22,800 under Demand No. XVIII—Animal Husbandry '.

திரு. ரா. ராமசாமி : என் பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 1,97,22,800 under Demand No. XVIII—Animal Husbandry be reduced by Rs. 100 '.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 26,36,000 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture '.

திரு. பி. முருகையன் : என் வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 26,36,000 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100 '.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 11,80,80,500 under Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading '.

புலவர் கா. கோவிந்தன் : என் வெட்டுப் பிரேரணையை நான் முன் மொழிகின்றேன்.

'That the allotment of Rs. 11,80,80,500 under Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading be reduced by Rs. 100 '.

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

* *கனம் திரு. பூ. கக்கன் :* கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் முதன் முதலாக இறைவனுக்கு வணக்கத்தைச் செலுத்துவதோடு மட்டுமல்லாது, இறைவன் அருளால் கிடைத்த தண்ணீரை நல்ல முறையில் விவசாயத்திற்குப் பயன்படுத்தி நல்ல முறையில் பயிர் உற்பத்தி செய்ய துணையாக இருந்த அதிகாரிகளுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நம் மாநிலத்தில் பஞ்சம் வந்து விடுமோ என்ற பயம் இருந்தது. இறைவனை மக்களும் வேண்டிக்

12th March 1964] [திரு. பூ. கக்கன்]

கொண்டார்கள், நானும் வேண்டிக் கொண்டேன் பன்முறை. தென் மேற்கு பருவக் காற்று, வட கிழக்கு பருவக் காற்று சிறிது பின்தங்கி வந்தாலும் ஓரளவு விவசாயம் நன்கு நடைபெறவும் பசிப் பிணியைப் போக்கவும் இறைவன் உதவி செய்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. கிடைத்த தண்ணீரை நல்ல முறையில் விவசாயிகள் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதோடு சிக்கனமான முறையிலும் தண்ணீர் செல விடப்பட்டிருக்கிறது. அதற்காக வேண்டிய ஏற்பாடு செய்த பி.டபிள்.யூ.டி. அமைச்சர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரெவின்யு இலாகா அதிகாரிகளும் பி.டபிள்யூ.டி. அதிகாரிகளுடன் நின்று கஷ்டம் பாராது காவேரி பாசனத்திலும், பெரியாறு பாசனத்திலும், கோவை ஜில்லாப் பகுதிகளிலும் நன்கு வேலை செய்தார்கள். அவர்கள் செய்த நல்ல வேலைகளோடு கூட விவசாயப் பெரு மக்களும் உரம் விதை போன்றவைகளை நல்லமுறையில் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. ஆகவே அவர்களுக்கும் என் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளின் உழைப்பை நன்கு அறிந்து கொண்டு அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசைகளை எல்லாம் அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. இயற்கையால் கிடைத்த தண்ணீரைப் பயன்படுத்தி வருவதோடு நல்ல மாடுகள், பசுந்தாள் உரம், பஞ்சாயத்து யூனியன் வாயிலாகக் கிடைக்கும் கிராமக் கழிவுப் பொருள் எல்லாம் சேர்த்துக் கொடுத்து அதையும் அவர்கள் பயன்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்க பாடுபட்டு வருகிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதில் இப்போது விவசாயிகளுக்கு நல்ல ஆர்வம் வந்திருக்கிறது. முன்பெல்லாம் பல இடங்களிலும் தரிசு நிலங்கள் கிடைக்கும். இப்பொழுது ஒரு சில இடங்களில்தான் இருக்கின்றன. இருக்கிற தரிசு நிலங்களையும் பண்படுத்தி விவசாயம் செய்ய விவசாயிகள் நல்ல முறையில் முன்வந்திருக்கிறார்கள்

"இலமென் றசைஇ ருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்".

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். நிலத்தை நன்கு பண்படுத்த விவசாயிகள் முன்வந்திருக்கிறார்கள். இன்னும் சிலவிடங்களில் தரிசு நிலங்கள் இருப்பது எனக்குத் தெரியும். அப்பேர்ப்பட்ட நிலங்களைக் கூட்டுறவு வாயிலாக அல்லது ஹரிஜன இலாகாவிலிருந்து உதவி பெற்று கூட்டுப் பண்ணை வைத்து உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. விவசாயிகளுக்கு இருக்கும் ஆர்வம், ஊக்கம் போற்றத்தக்கது, பாராட்டத்தக்கது. எவ்வளவுதான் உற்பத்தி செய்தாலும் விவசாயப் பொருள்களுக்கு உழைப்பிற்கு தகுந்த ஊதியம் என்பதுபோல் அவர்கள் உழைப்பை மனதில் கொண்டு அவற்றிற்கு நல்ல விலை கிடைப்பதற்கு அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கும்போது வாங்கி உண்பவர்களுக்கும் தங்குதடையின்றி கிடைப்பதற்கு உதவி செய்ய

[திரு. பூ. கக்கன்] [12th March 1964

9-30 a.m. வேண்டியிருக்கிறது. நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், நெல்லூர் அரிசி சாப்பிடுகிறவர்களுக்கு அது கிடைப்பதில்லை என்று சில இடங்களில் வருத்தப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். நெல்லூர் அரிசி சாப்பிடுகிறவர்களை மட்டும் பார்த்து விட முடியாது. லட்சோப லட்சம் மக்களுக்கு, ஏழை மக்களுக்கு அவர்களுக்கு உண்ண உணவு வேண்டும். அது கிடைப்பதற்கு அரசாங்கம் ஒத்தாசை செய்து வருகிறது. நல்ல அரிசி கிடைக்கும்போது அவர்களுக்கும் கிடைக்க குறிப்பாக கூட்டுறவு வாயிலாக அல்லது வியாபாரிகள் வாயிலாக உதவி செய்து வருகிறோம். குறிப்பாக ஒருசில வியாபாரிகளுக்கு வேண்டுமானால் மனம் மாறுது இருக்கலாம். பெரும் வியாபாரிகள் தான் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கலாம். அதற்காக எல்லோரும் மோசமானவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. மதிப்பிற்குரிய ராஜா அவர்கள் வியாபாரிகள் எல்லாம் கருநாகம் போன்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எல்லோரையும் அப்படிச் சொல்லிவிட முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வர்க்கத்தையே கருநாகம் என்று சொல்வது சரியல்ல என்பதைத் தான் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், பஞ்சாயத்து ஏரியாக்களில் விவசாயத்திற்காக நல்ல முறையில் உரத்தை தயார் செய்து வருகிறார்கள். குறிப்பாக கிராமங்களிலுள்ள கழிவுப்பொருட்களை எல்லாம் ஒன்று சேர்த்து கம்போஸ்ட் மான்யூர் சேகரிக்க வேண்டும் என்பதற்காக பல லட்சக் கணக்கான ரூபாய்கள் ஒதுக்கி இதற்காக செலவு செய்து வருகிறோம். மத்திய சர்க்காரும் இதற்கு மிகவும் ஒத்தாசை செய்து வருகிறது. இவ்விதம் செய்வதன் மூலம் கிராமங்கள் எல்லாம் சுத்தமாகின்றன. அதோடு இந்த கம்போஸ்ட் உரத்தை உபயோகிப்பதன் மூலமாக உணவு உற்பத்தியும் பெருகுகின்றது. ஆகவே இந்த கம்போஸ்ட் உரம் தயார் செய்வதில் குறிப்பாக பஞ்சாயத்துக்கள் எல்லாம் நல்ல முறையில் ஈடுபட்டு வருகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் நமது மாநில அரசாங்கத்திற்கு அதிகமான அளவில் உதவி செய்து வருகிறது. இதன் மூலமாகப் பல இடங்கள் செப்பனிடுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே செப்பனிடப்படாமல் இருந்த இடங்களை எல்லாம், செப்பனிட்டு, விவசாயப் பெருமக்கள், நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைக் கருதி நமது விவசாய இலாகா கவனம் செலுத்தி வருகிறது. இதற்கென்று, தனியாக உணவு உற்பத்தித்திட்டத்தின் கீழ் தனியாக ஒரு சூப்பிரன்டன்ட் போட்டு உணவு உற்பத்தி வேலைகள் எல்லாம் நன்கு நடைபெறுவதற்காக வேலை செய்து வருகிறது. இதற்காக பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக நல்ல பல திட்டங்களைப் போட்டு அதற்காக பணம் ஒதுக்கி, அதன் வாயிலாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் உங்கள் மத்தியில் தெரிவித்துக்கொள்கிறேன்.

12th March 1964] [திரு. பூ. கக்கன்]

முக்கியமாக பஞ்சாயத்துக்கள் மூலமாக நல்லமுறையில் கழிவுப் பொருட்கள் எல்லாம் ஒன்று சேர்க்கப்படுவதன் காரணமாக கிராமம் சுத்தமாக இருப்பதற்கு வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. முக்கியமாக தெருக்களில், குப்பைகள் சேராமல் அந்த குப்பைகள் எல்லாம் நல்லமுறையில் சேகரிக்கப்பட்டுவிடும். சாதாரணமாக மழை காலத்தில்தான் இந்த கழிவுப்பொருட்கள் அடித்து செல்லப்படும். இப்போது அப்படியில்லாமல் காலா காலத்தில் கூட்டி ஒன்று சேர்ப்பதில் பஞ்சாயத்துக்கள் எல்லாம் அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறது. என்னைப் பொறுத்த வரையில் நகரத்தைவிட கிராமம் சுத்தமாக இருக்கவேண்டும். இப்போதும் சில கிராமங்கள் மிகவும் சுத்தமாக இருக்கின்றன. கண்ட இடத்தில் மல ஜலம் கழிக்கக்கூடாது, கண்ட இடத்தில் குப்பைகளை கொட்டக்கூடாது, இவற்றையெல்லாம் தடுத்து, ஒன்று சேர்த்து, கம்போஸ்ட் மான்யூர் தயாரிக்கும் முறையில் எல்லா பஞ்சாயத்துக்களும், மேஜர் பஞ்சாயத்துக்களும், மைனர் பஞ்சாயத்துக்களும் கவனம் செலுத்தி, நல்லமுறையில் சேகரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக வேண்டிய ஒத்தாசைகளையும் எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் அரசாங்கம் வழங்கி வருகிறது. மேலும் இந்தத் துறையில் சொல்ல வேண்டிய கருத்துக்களை எல்லாம் நாம் புத்தக வடிவில் கொடுத்திருக்கிறேன். அதைப்பற்றி நல்ல கருத்துக்களை எல்லாம் கனம் அங்கத்தினர்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இன்னும் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் இறுதியில் சொல்லுகிறேன் என்று கூறி, இந்த மான்யக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள, விவசாயத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை இவைகள் பற்றி சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மான்யக் கோரிக்கைகளின் மீது . . . .

கனம் திரு. பூ. கக்கன்: கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு விஷயத்தை மட்டும் கூற மறந்து விட்டேன், அதாவது, நான் கொடுத்திருக்கும் புத்தகத்தின் எட்டாவது பக்கத்தில் 'டிராக்டர் வாடகைக் கிரயத்திட்டம்' என்ற தலைப்பில் "350 டிராக்டர்கள் வழங்க உத்தேசித்துள்ளது" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக்கால திட்ட விரைப் புத்தகத்தில் 250 டிராக்டர்கள் என்று இருக்கிறது. இந்த விரைம் தயாரிக்கப்பட்ட பின்னால் கடைசியில் மத்திய சர்க்கார் இன்னும் 100 டிராக்டர்கள் வாங்குவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதையும் சேர்த்துத்தான் இப்போது 350 டிராக்டர்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று இப்போது குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. து. ப. அழகமுத்து:** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மான்யக் கோரிக்கைகளின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப்பிரேரணை

களை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு உங்களுக்கு என் நன்றியை முதலில் தெரிவித்து கொள்கிறேன். பொதுவாக விவசாய அபிவிருத்தி பற்றி நமக்கு இந்த சபையிலே கொடுக்கப்பட்ட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக்கால ஆய்வுரையில் குறிப்பிட்டிருப்பது போதுமான அளவுக்கு திருப்தி ஏற்பட்டிருப்பதாக மகிழ்வு கொள்ளலாம் என்று கூறுகிறார்களே ஒழிய, லட்சியத்தின் முழு அளவையும் எட்டிவிட்டோம் என்று உறுதியாக கூறவில்லை. மேலும் "உர வகைகளை பயன்படுத்துகின்ற விஷயத்தில் இப்போதுள்ள நிலைமை மகிழ்ச்சி தருவதாக இல்லை" என்று மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட இடைக்கால ஆய்வு விளக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை மேலும் வற்புறுத்தும் வகையில் "விவசாய உற்பத்தியில் கணிசமாக அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்றால், அது மென்மேலும் உர வகைகளைப் பயன்படுத்துவதின் மூலம்தான் ஏற்படுத்தப்பட வேண்டும். இதைக் கருத்திற் கொண்டு உர வகைகளைப் பிரபலப்படுத்துவதற்கு நம்மால் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும் . . . ." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதையே தான் கனம் முதலமைச்சர் அவர்கள் தனது மூன்றும் ஐந்தாண்டுத்திட்ட இடைக்கால ஆய்வு என்ற பேச்சில் . . . . "உர வகைகள் மேன் மேலும் பயன் படுத்துவதற்கான சூழ்நிலையை உண்டாக்குவது தான் திட்டத்தின் எஞ்சிய இரண்டாண்டுகளில் அரசாங்கத்தின் முக்கிய முயற்சியாக இருக்கும்" என்று கூறியிருக்கிறார்கள். உரத்தை பொறுத்தவரை உள்துறை அமைச்சர் அவர்கள் கூறும் கருத்துக்கும் கனம் முதலமைச்சர் அவர்கள் கூறும் கருத்துக்கும் முரண்பாடு இருப்பதாக நான் கருதுகிறேன். கனம் முதலமைச்சர் அவர்கள் உரம் சரியானபடி கையாளப்படவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் உள்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய விவசாயத் துறை மான்யங்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் . . . "இந்திய இரசாயன உரச் சங்கத்தினர் 1962-63 ஆண்டுக்காக எடுத்துள்ள உரங்களின் புள்ளிவிவரங்களிலிருந்து (1963 செப்டம்பர் 30-ம் தேதியன்று வெளியிட்டப்படி) இந்தியாவிலுள்ள மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் சென்னை மாநிலம் பிரதி ஏகராவுக்குப் பயன்படுத்தியுள்ள நைட்ராஜன், பாஸ்பரஸ் பொட்டாசிய உரம் மிக அதிகமாக உள்ளது எனத் தெரிகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் எப்படி முதலமைச்சர் அவர்களுக்கும் உள்துறை அமைச்சர் அவர்களுக்கும் முரண்பாடு வந்தது என்று தெரியவில்லை. உள்துறை அமைச்சர் அவர்கள் அகில இந்திய சராசரியைப் பொறுத்த அளவில் மூன்று மடங்கு அதிகமாக உபயோகித்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலமைசர் அவர்கள் உணவு உற்பத்தியில் அகில இந்திய சராசரியைவிட நாம் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம் என்பதை குறிப்பிட்டுவிட்டு அதே நேரத்தில் உள்துறை அமைச்சர் அவர்களின் கருத்துப்படி உரத்தை அதிகமாக உபயோகித்திருப்பதைப்பற்றி ஏன் குறிப்பிடவில்லை என்று தெரியவில்லை. அதற்கடுத்தாற்போல், அகில இந்திய சராசரியைவிட உணவு உற்பத்தியில் நாம் அதிகமாக ஆகியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான புள்ளி விவரங்களையும் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, கரும்பு உற்பத்தியை எடுத்துக்கொண்டால் அகில இந்திய சராசரிக்கு மேல் ஒரு ஏக்கருக்கு ½ மடங்கு அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம் என்றும், அரிசியில் ½ மடங்கு அதிகமாக உற்பத்தி செய்கிறோம் என்றும், சோளத்தில் மூன்றில் ஒரு பகுதி அதிகமாகவும், கம்பில் ½ மடங்கு அதிகமாகவும், ராகியில் ¼ மடங்கு அதிகமாகவும், நிலக்கடலையில் ஐந்தில் மூன்று பகுதியும், பருத்தியில் ஐந்தில் இரண்டு பகுதியும் அதிகமாகக் கிடைத்திருக்கிறது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் இவ்வாறு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது வரவேற்கவேண்டிய தொன்று நான். மொத்த உற்பத்தியில் ஏற்பட்டுள்ள உபரியை நாம் பார்க்கவேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்ட துவக்கத்தில் நம்முடைய உணவு உற்பத்தி 38 லட்சம் டன்னாக இருந்திருக்கிறது. அதற்கடுத்தாற்போல் ஐந்தாண்டுத்திட்ட காலத்தின் முடிவில் ஏற்பட்ட விளைச்சல் 53.14 லட்சம் டன்னாகும். மூன்றாவது திட்ட முதல் இரண்டு ஆண்டுகளில் அதிகமாக 5.37 லட்சம் டன்னாகும். இவைகளை மொத்தமாக சேர்த்துப் பார்க்கும்போது 58.51 லட்சம் டன் அதிகமாகியிருக்கிறது. முன்னால் இருந்ததைவிட இப்போது 20.51 லட்சம் டன் அதிகமாகியிருக்கிறது. ஆரம்ப காலத்தில் இருந்ததைவிட 50 சதவிகிதம் உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்கின்ற கணக்கு நமக்கு கிடைக்கிறது. ஆனால் அதே சமயத்தில் ஜனத்தொகை எவ்வளவு பெருகியிருக்கிறது என்று கணக்கு பார்ப்போமானால் 1951-ல் ஆண்டு சென்ஸஸ்படி 299 லட்சம் ஜனத்தொகை இருந்தது—சுமார் 3 கோடி நம்முடைய ஜனத்தொகை இருந்திருக்கிறது. 1961-ம் வருஷத்து சென்ஸஸை ஒட்டிப் பார்ப்போமானால், 1962-ம் ஆண்டில் உத்தேசமாக இவ்வளவு ஜனத்தொகை அதிகரித்திருக்கும் என்று புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறபடி, 341 லட்சம் நம்முடைய ஜனத்தொகை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆக, ஜனத்தொகை அதிகரித்திருப்பது 41 லட்சம் தான். அதாவது 15 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. ஆனால் உணவு உற்பத்தி 50 சதவிகிதம் அதிகமாக ஆகியிருக்கிறது. இப்படி இருக்கும்போது எப்படி நமது நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்று தெரியவில்லை. இந்த அளவுக்கு உற்பத்தி அதிகரித்திருந்தும், உணவுப் பற்றாக் குறையும் விலையேற்றமும் அதிகமாக இருந்துக் கொண்டு தான் இருக்கின்றன. கணக்குப்படி போதுமான உற்பத்தியை நாம் அடைந்திருக்கிறோம். லட்சிய அளவை, திட்டமிட்டபடி எட்டவில்லையென்றாலும் போதுமான அளவு உணவு உற்பத்தியில் வெற்றி பெற்றிருக்கிறோம். அப்படியானால், இந்தப் பற்றாக்குறை நிலைமை ஏன் வந்தது என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

இதற்கு சர்க்கார் சார்பில் ஒரு பதிலும் தரலாம். தனி மாநிலத்தை மட்டும் வைத்துக்கொண்டு ஒப்பிடக் கூடாது, அகில இந்திய அடிப்படையில் பார்க்க வேண்டுமென்று கூறலாம். பொதுவாக நம் மாநிலத்தில் திட்டம் போடுகிறோம் என்றால் நம் மாநில

ஜனத்தொகையை அடிப்படையாக வைத்துத் தான் திட்டம் போடுவது வழக்கமாகும். ஆகையால் அப்படி ஒரு வாதத்தைச் சொல்லுவது பொருத்தமாக இருக்காது என்று நான் கூற விரும்புகிறேன்.

இறக்குமதி செய்த உணவுப் பண்டங்களைக் கூட குறைத்து விட்டோம். ஆகவே இந்த உற்பத்தி போதாது என்றும் வாதிக்கலாம். முன்பு இருந்ததை விட 50 சத விகிதம் அதிகமாக உற்பத்தி இருக்கும்போது, இறக்குமதி இல்லாவிட்டால் கூட இப்போது பற்றாக்குறை நீங்கி விலைவாசி குறைந்திருக்க வேண்டும். ஆனால் இன்றைய தினம் வாங்குவதற்கு உணவுப் பொருள்கள் நல்ல முறையில் கிடைக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்று தான் கூறவேண்டும்.

விவசாயத்தைப் பெருக்குவதற்காக நாம் பல பல திட்டங்களை மேற்கொண்டிருக்கிறோம். கிணறுகள் வெட்ட கடன் வசதி கொடுக்கிறோம். பம்ப் செட் வாங்க பணம் கொடுக்கிறோம். உரத்திற்கு கடன் கொடுக்கிறோம். பழத் தோட்டத்திற்காக பணம் கொடுக்கிறோம். உழவு மாடு வாங்க பணம் கொடுக்கிறோம். கால் நடைகளுக்கு ஷெட் போடப் பணம் கொடுக்கிறோம். இதன் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு கடன், மான்யத் தொகைகளாக பல கோடி ரூபாய்கள் நாம் கொடுத்தும் அந்தப் பணம் சரியான முறையில் விவசாயிகளுக்குப் போய்ச் சேர்ந்ததா என்று பார்த்தால் இல்லை என்று தான் கூறவேண்டும். நான் சென்ற முறை குறிப்பிட்டது போல இந்த மான்யமாகக் கொடுக்கும் தொகைகள் விவசாயிகளுக்குச் சரியானபடி போய்ச் சேரவில்லை. அது லஞ்ச லாவண்யமாகத்தான் போய்ச் சேருகிறது. கடனைக் கொடுக்கும் தொகையைத் திருப்பிக் கட்டக் கூடிய அளவுக்கு கடன் வசூல் காலத்தில் நிலைமை ஏற்படுவதில்லை. அதன் மூலமாக கஷ்டப்படுகிறார்கள். உரம் தயாரிக்க என்று கொடுக்கப்படும் கடன் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை, பஞ்சாயத்தில் கொடுத்ததாகக் கணக்கு காட்டி எடுத்துக் கொள்ளத்தான் பயன்படுகிறது. அடுத்து இப்போது மாடு கட்டுகிற கொட்டில்களுக்காக 250-ரூபாய் சர்க்காரில் கொடுக்கிறார்கள். இவைகளையெல்லாம் பஞ்சாயத்தில் இருக்கிற பிரெஸிடெண்டுகள் தங்களுக்கு அதை எடுத்துக் கொள்கிறார்களேயொழிய, விவசாயிகளுக்கு நேரடியாகப் போய் சேருவதில்லை. இன்று விவசாயிகள் ஊக்கமும், உற்சாகமும் பெறுவதற்கு வழிவகை இல்லாமல் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், விவசாயிகள் தான் எல்லா வரிப் பளுவையும் சகிக்கிறார்கள். அவர்கள் நிலவரி மட்டும் தான் கொடுக்கிறார்கள் என்பது இல்லை. மற்ற எல்லா வரிகளையும் கடைசியில் கொடுப்பது விவசாயிகளாகத்தான் இருக்க முடிகிறது. அதோடு மட்டுமல்லாமல் எந்தக் கடனை இருந்தாலும், சர்க்கார் எழுப்புகிற கடனை இருந்தாலும், மின்சார இலாகா எழுப்புகிற கடனை இருந்தாலும் சரி, வேறு எந்த வகையில் எழுப்புகிற கடனை இருந்தாலும் கடைசியில் விவசாயியைத்

தான் கசக்கிப் பிழிந்து அந்தக் கடனைப் பெறுகிறார்கள். விவசாயிகளுக்கு எப்படி உற்சாகம் பிறக்கும்? விவசாயிதான் உற்பத்திக்குத் தகுந்த வருமானத்தை அடையவில்லை என்று ஒரு பக்கம் குறை கூறிக்கொண்டிருக்கிறான். வாங்குகிறவர்கள் தங்களால் வாங்குகிற பொருளுக்கு விலை கொடுக்க முடியவில்லையே என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

(மணி அடிக்கப்பட்டது.)

MR. SPEAKER: There are still twenty-seven hon. Members who want to speak. It works out to only six minutes for each hon. Member. But the hon. Member Sri T. P. Alagamuthu has taken ten minutes.

திரு. து. ப. அழகமுத்து: அதாவது விவசாயத்தை பொறுத்த வரை இந்த முரண்பட்ட நிலை இருந்து கொண்டிருக்கிறது.

அதற்கு அடுத்தாற்போல நிர்வாகத்தில் இருக்கிற சில குறைகளை மட்டும் சுட்டிக் காட்டி விட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன் என்று கனம் சபாநாயகர் அவர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்.

விதைப் பண்ணைகளை விவசாயிகளுக்காக ஆரம்பித்திருப்பதாகக் கூறுகிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 210 விதைப் பண்ணைகள் இலக்காக வைத்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 225 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன. அதில் மூடப்பட்ட விதைப் பண்ணைகள் 91 என்று மேல் சபையில் கொடுத்த பதில் ஆகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இலக்கு என்ன என்று பார்த்தால் 225-லிருந்து 15 குறைந்து 210 ஆகிறது. இந்த முறையில் விதைப் பண்ணையில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம். இதனால் எப்படி விவசாயிகள் பயன் பெற்றிருப்பார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

பழ மரங்கள் வைப்பது என்ற பெயரில் கணக்கு காட்டப்படுகிறது. ஆனால் வைக்கப்பட்ட மரங்கள் என்ன ஆயிற்று? மரங்கள் வைக்காமலேயே வைத்ததாக கணக்கு காட்டி பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள் . . . .

Mx. SPEAKER : The hon. members has spoken about it several times. He has referred to several " Pazhaththottams ".

திரு. து. ப. அழகமுத்து: விவசாய அபிவிருத்தியிலே முக்கியமாக கூட்டுறவுப் பண்ணைகளைப் பற்றி மந்திரி அவர்கள் தங்கள் உரையில் ஒன்றும் குறிப்பிடவில்லை. கூட்டுறவுப் பண்ணைகள் 46 ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது. 12 பண்ணைகளை ஆரம்பிக்க விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். அதற்கு அனுமதி கோரி இருக்கிறார்கள். அப்படி அனுமதி கோரப்பட்டு நீண்டநாள் ஆகிறது. இன்னும் ஏன் அனுமதி கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒருக்கால் கூட்டுறவுப் பண்ணைகள் அதிக

மான மகசூல் தராது, எதிர் பார்த்த பலன் தராது என்று நினைக்கிறீர்களா? தனிப்பட்ட விவசாயிகள் மூலம்தான் நல்ல பலனை அடைய முடியும் என்று கருதுகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன். சிறு பாசனத் திட்டங்கள் போதுமான (மணி அடிக்கப்பட்டது.)

MR. SPEAKER : The hon. member has gone to Public Works from Agriculture.

கனம் திரு. வெ. ராமையா : சிறு பாசனத் திட்டங்களுக்கு கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும், நான் அல்ல.

MR. SPEAKER : The Hon. Minister need not get nervous (Laughter).

*** திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, உன் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தேசீய வருமானத்தில் பாதிக்குமேல் விவசாயத்தின் மூலம்தான் கிடைக்கிறது. இன்னும் நமது தேசீய வருமானம் அதிகமாக ஆகவேண்டுமானால் இன்னும் விவசாய மகசூல் மூலமாகக் கிடைக்கக்கூடிய வருமானம் அதிகமாக வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையிலேயே அது வரவேற்கத் தக்க விஷயம். அது உண்மை என்று எல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டியது. அப்படி இருக்கும்போது 140 கோடி ரூபாய் செலவு பட்ஜெட்டிலே விவசாயத்திற்கு எவ்வளவு செலவழிக்கிறோம் என்று பார்க்கும்போது சுமார் 7 கோடி ரூபாய் தான் நாம் இப்போது செலவழிக்கிறோம். அது நம்முடைய 140 கோடி ரூபாயில் பார்க்கும்போது 5 சதவிகிதம் தான் ஆகிறது என்று நான் இந்த சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் விவசாயத்தை அதிகமாகப் பெருக்க வேண்டும், அதே சமயத்திலே உணவு உற்பத்தி அதிகமாக வேண்டும், வெளி நாட்டிலிருந்து உணவுப்பொருள்களை இறக்குமதி செய்வதைத் தடுக்க வேண்டுமென்று சொல்லும்போது இன்னும் நாம் விவசாயத்திற்கு அதிகமான பணம் செலவிடவேண்டும், இன்னும் பல விவசாய அபிவிருத்தித் திட்டங்களை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று நான் முதன் முதலாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் விவசாய உற்பத்திக்காக, விவசாய அபிவிருத்திக்காக பல ஏற்பாடுகளை விவசாய இலாகா மூலமாக செய்கிறோம். விவசாயிகளுக்கு கடன் கொடுக்க கூட்டுறவுத் துறையிலே சென்ற ஆண்டில் 40 கோடி ரூபாய்க்கு மேல் கொடுத்திருக்கிறோம். இரண்டு இலாக்காக்களும் ஒன்றுக்கொன்று நெருங்கிய 'இணைப்பு இல்லை.

நெருங்கிய இணைப்பு இருந்தால்தான் நல்ல முறையில் உணவு உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக நெல் மகசூல் என்று சொல்லும்பொழுது, அதற்காக கூட்டுறவு சங்கங்கள் மூலம் தனியாக பணம் கடன் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக போதுமான விதை கிடைக்கக்கூடிய அளவிலே, இன்னும் மற்ற பெஸ்டிஸைட்ஸ் போன்ற சாமான்கள் கிடைக்கக்கூடிய அளவிலே இருந்தால், உண்மையிலேயே விவசாய உற்பத்தியை இன்னும் அதிகமாகப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சாவூரில் பாகேஜ் ஸ்கீம் இருக்கிறது. பாக்கேஜ் ஸ்கீம் என்று முழு அளவில் இல்லாவிட்டாலும், அதில் இருக்கக்கூடிய நல்ல அம்சங்களை மற்ற ஜில்லாக்களுக்கும் பரப்புவதற்கு ஏற்பாடு செய்வோமானால், உண்மையிலேயே விவசாய உற்பத்தியை இன்னும் அதிகமாகப் பெருக்குவதற்கு வழி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'கிராப் இன்ஷூரன்ஸ், கேட்டில் இன்ஷூரன்ஸ்' இவைகள் பற்றி நாம் பல ஆண்டுகளாகப் பேசிக்கொண்டு வருகிறோம். அதற்காக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று பார்க்கும்பொழுது, இன்னும் அதைப்பற்றி பூர்வாங்கமாக ஏற்பாடுகளைக்கூட அரசாங்கம் செய்யவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்வது மிக மிக அவசியம். அப்படிச் செய்தால்தான் நிச்சயம் விவசாயிகள் தைரியமாக பயிர் செய்வதற்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மண்வளப் பரிசோதனைக்காக ஏற்பாடுகள் இன்னும் தீவிரமாகச் செய்யப்படவேண்டும். இப்பொழுது இருக்கக்கூடிய ஏற்பாடுகள் மிக பற்றாக்குறை. ஒவ்வொரு நிலத்தினுடைய தரம் என்ன என்பதை நாம் பூரணமாக பரிசோதிக்க வேண்டும். அப்படியில்லாமல் நாம் எந்தவிதமான ஏற்பாடு செய்தாலும், எவ்வளவு பெர்டிலைசர் கொடுத்தாலும் பிரயோசனம் இல்லை. எந்த நிலத்திற்கு எந்த மாதிரியான பெர்டிலைசர் போடுவது என்பது தெரியாமல் விவசாயிகளிடம் ஏதோ 70 பவுண்டுக்குப் பதிலாக 150 பவுண்டு ரசாயன உரம் போடவேண்டும் என்று சொன்னால், அது எந்த அளவுக்குப் பிரயோசனமாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் யோசிக்கவேண்டும். மண்வளப் பரிசோதனையை நல்ல முறையில் செய்து, இந்த நிலத்திற்கு இன்ன பற்றாக்குறை இருக்கிறது, இந்த பெர்டிலைசர் அதிகமாகப் போடவேண்டும் என்று சொல்லுவதற்கு ஏற்பாடு செய்தால், நிச்சயம் நாம் பெர்டிலைசர்கள் அதிகமாகக் கொடுப்பதன் மூலமும், விவசாயிகள் அதை அதிகமாக உபயோகப்படுத்துவதன் மூலமும் பூரணமான பலனை நாம் காண முடியும். ஆகவே, அப்படிச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இது விஷயமாக அரசாங்கம் முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதும்

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [12th March 1964

எனக்குத் தெரியும். இருந்தபோதிலும், வெளிநாடுகளிலிருந்து சில கருவிகள் வருவதில் தடை இருக்கிற காரணத்தினால் இது அதிகமாக விஸ்தரிக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதை சீக்கிரம் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு, ஏற்பாட்டை நமது ராஜ்ய அரசாங்கம் உடனே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்தது, பிளாக் லெவலில் ஒரு பிளாக்கிற்கு ஒரு சாயில் டெஸ்டிங் யூனிட் இருக்கவேண்டும் என்பதையும் இந்தச் சமயத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் பெரிய பாசனத் திட்டத்தை மாத்திரம் நம்பி விவசாயம் செய்துவிட முடியாது. சிறிய பாசனத் திட்டம் மூலமாக மழை எந்த அளவிற்குப் பெய்கிறதோ அந்த அளவிற்குத்தான் காரியங்களைச் செய்ய முடிகிறது. நாம் அதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்: கிணறுகள், அதிலும் குறிப்பாக 'டீப் வெல்' களை அதிகமாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு காரியங்கள் செய்யவேண்டும். அதுபோல் ஆழக் கிணறுகள் வெட்டுவதற்கு டிரில்லிங் செட்கள் அதிகமாக வேண்டும். நமது தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய டிரில்லிங் செட்கள் எவ்வளவு என்று பார்க்கும் பொழுது, அது மிகப் பற்றாக்குறை. மேலும், அப்படி இருக்கக் கூடிய செட்களில் எவ்வளவு உபயோகமாக இருக்கிறது, எவ்வளவு ரிப்பேர் இல்லாமல் இருக்கிறது என்று பார்க்கும்பொழுது, அது மிகவும் போதாததாக இருக்கிறது. அதை இன்னும் அதிகப் படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

பெஸ்டிஸைட்ஸ் மூலமாக இன்னும் உணவு உற்பத்தியை அதிகப் படுத்த முடியும் என்பதை விவசாயிகள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அதற்காக ஸ்ப்ரேயர் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில் பவர் ஸ்ப்ரேயர் குறைந்தது ஒரு பிளாக்கிற்கு ஒன்றாவது இருக்கக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது இருக்கக்கூடியது மிகவும் போதாததாக இருக்கிறது.

புல்டோஸர் டிராக்டர்களை எடுத்துக்கொண்டால் நம்முடைய தேவைக்கு மிக மிக பற்றாக்குறையாக இருக்கிறது. இவைகளை உடனடியாக அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். அது மாத்திரமல்ல, இருக்கக்கூடிய புல்டோஸர்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாத காரணத்தினால், பாதிக்கு மேல் ரிப்பேர் ஆகாமல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இன்னும் புல்டோஸர்களை அதிகமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கும், அதை எல்லா ஜில்லாக்களுக்கும் போதுமான அளவிற்குக் கொடுப்பதற்கும் அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

பிளாக்கில் கிராம சேவக்குகள் இருக்கிறார்கள். ஒரு பிளாக்கிற்கு ஒரு அக்ரிகல்சரல் எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் கொடுத்திருக்கிறோம். அந்த அக்ரிகல்சர் எக்ஸ்டென்ஷன் ஆபீஸரின் மேலே

12th March 1964] [திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]

ஜில்லா விவசாய அதிகாரிக்கு எந்த அளவிற்கு கண்ட்ரோல் இருக்கிறது என்று பார்க்கும்பொழுது, போதிய அளவு கண்ட்ரோல் இல்லை. அதன் காரணமாக பிளாக்கில் இருக்கக்கூடிய எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் பூரணமாக பயன்படுத்திக் கொள்ளப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்களை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

விதை தானியங்களையும், அதே சமயத்தில் பெஸ்டிஸைட்களையும் இன்னும் சப்சிடைஸ் செய்து கொடுக்கக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யவேண்டும். பெஸ்டிஸைட்ஸைப் பொறுத்த அளவிலே ஓரளவு சப்சிடைஸ் செய்து கொடுக்கிறார்கள். ஆனால், தேவை எந்த அளவிற்கு இருக்கிறது, எவ்வளவு சப்சிடைஸ் செய்து கொடுக்கிறார்கள் என்று பார்க்கும்பொழுது, இப்பொழுது நாம் கொடுக்கக் கூடிய அளவு மிகமிகக் குறைவு. அதுவும் கொஞ்ச நாட்களுக்கு சப்சிடைஸ் செய்து கொடுத்துவிட்டு, பிறகு 'புல் ரேட்' வாங்கும் பொழுது பெஸ்டிசைட்ஸை தவறுதலாகவும் உபயோகிக்கக் கூடிய வகையிலே ஆகிவிடுகிறது. சில குறிப்பிட்ட பெஸ்டிசைட்ஸ் உணவு தானியங்களுக்கு உபயோகப்படும் என்று சொல்லக்கூடியதாக இருந்தாலும், சிலவற்றைத் தவறுதலாக கமெர்ஷியல் கிராப் பிறகு உபயோகப்படுத்திவிட்டால்கூட பெரிய தவறு இல்லை. பூரணமாக வருஷம் பூராவும் சப்சிடைஸ் ரேட்டில் கொடுக்கக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தவறுதலாக எந்த விதத்திலும் உபயோகமாகிவிடாது. அதுமாத்திரமல்ல. பூச்சிகளை நல்ல முறையில் கண்ட்ரோல் செய்வது மிகமிக அவசியம். பூச்சிகள் எந்த அளவிற்கு இருக்கிறது என்று பரிசோதிப்பதற்காக இருக்கக் கூடிய ஆராய்ச்சிக் கூடங்கள் இன்னும் அதிகப்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால், நாம் எந்த அளவிற்கு உணவு உற்பத்திச் செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொண்டாலும், பூரணமாக பயன் தராது என்பதை நான் இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கிணறுகள் வெட்டுவதற்கு மான்யம் கொடுக்கப்படுகிறது. சாதாரணமாக கிணறுகள் வெட்டுவதற்கு ரூபாய் 1,000 கொடுக்கப் படுகிறது. இன்னும் கிணறுகள் ஆழமாக வெட்டவேண்டும் என்றால். அதிகப்படியான செலவு ஆகக்கூடிய இடம் என்றால், ரூபாய் 2.000 கடன் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அதே சமயத்தில் ரூபாய் 2,000 எந்த அளவிற்குப் போதும் என்று பார்க்கிறபொழுது கால்வாசி அளவிற்குக்கூட போதவில்லை. சேலம், கோவை போன்ற இடங்களில் அது போதும் என்று சொல்ல முடியாது. பில்டர் பாயின்டு கிணறுகளுக்கு ரூபாய் 3,000 கடன் கொடுக்கப்படுகிறது. அதை நான் குறைக்கவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், தாரதம்மியத்தைப் பார்க்கும் பொழுது அதிக ஆழமாக கிணறு வெட்டுவதற்கு ரூபாய் 2,000, பில்டர் பாயிண்டு கிணறுகளுக்கு ரூபாய் 3.000 என்று இருப்பது சரியா? அதிக ஆழமாக கிணறு வெட்டுவதற்கு குறைந்தது ரூபாய் 5.000 கொடுத்தால்கூட, அது பூரணமாக போதுமா என்று பார்த்தால், அதுவும் போதாது என்ற நிலையில்தான் இருக்கிறது.

ஆகவே, இதற்கான கடன் தொகையை இன்னும் அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மைனர் இர்ரிகேஷன் ஸ்கீமைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கத்திலிருந்தும், மத்திய அரசாங்கத்திலிருந்தும் அதிக ஆதரவு கொடுக்கிறார்கள். அதை இன்னும் விரிவுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கனம் அமைச்சர் சொன்னார்கள். ஆனால், சேலம் போன்ற இடங்களில் இருக்கக்கூடிய ஏரிகளில் தூர் எடுக்க எந்தவிதமான சிரத்தையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று சொன்னால், அது மிகையாகாது. சேலம் போன்ற இடங்களில் அதிகமாக கண்மாய்களை வைத்துக் கொண்டுதான் பாசனம் செய்கிறார்கள். அங்கெல்லாம் மைனர் இர்ரிகேஷன் ஸ்கீமில் தூர் எடுக்கக்கூடிய ஏற்பாட்டை பூரணமாகச் செய்யவேண்டும். அது மாத்திரமல்ல. இருக்கக் கூடிய ஏரி கரைகளை நல்லமுறையில் பலப்படுத்தவேண்டும். மற்றும் சேலம் ஜில்லாவில் பல இடங்களில் ஏரிகளில் ஸ்லூயிஸ்கள் சரியான நிலையில் இல்லை. அதையும் சரிப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பழத்தோட்டங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். குறிப்பாக, அனுப்-ஈ-சாஹி திராட்சையைக் குறிப்பிட்டார்கள். கிருஷ்ணகிரியில் நல்ல முறையில் இதனால் பயன் அடைந்துவருகிறார்கள். நான் சென்ற மாதத்தில் ஹைதராபாத் போயிருந்தேன். அங்கு திராட்சைப் பழத் தோட்டங்களைப் பார்த்தேன். மிக நல்ல முறையில், அரசாங்க ஆதரவில் செயல்படுகின்றன. மிக நல்ல முறையில் பயிர் செய்வதன் காரணமாக, விவசாயிகளுக்கு நல்ல லாபம் தரக்கூடிய அளவிலும், அதே சமயத்தில் வெளி ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலும் இருக்கிறது. அதுவும் குறிப்பாக, சென்னை ராஜ்யத்திற்கு அதிகமாக ஏற்றுமதி செய்கிறோம்
10-00 a.m. என்ற அளவிலே சொன்னார்கள். நம்முடைய ராஜ்யத்திலேயும் அதே மண் வளம் இருக்கிறது. செடிகளும் நல்ல முறையிலே வந்து கொண்டு இருக்கின்றன. அவற்றை விரிவுப்படுத்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். தென்னை, பாக்கு முதலிய மரங்கள் கொண்ட தோப்புகள் வளர்க்க போதிய தென்னங்கன்றுகளும், பாக்கு கன்றுகளும், கிடைப்பதில் பற்றாக்குறை இருக்கிறது. முன்பு எல்லாம் கேரளத்தில் இருந்து, சவுத் மலபாரிலிருந்து தென்னைக் கன்றுகள் நமக்கு வந்து கொண்டிருந்தன. அது இப்பொழுது நின்று விட்டதால் நமக்கு பற்றாக்குறை இருக்கிறது. சில பண்ணைகள் ஏற்படுத்தி இருக்கிறோம் என்றாலும்கூட இன்னும் அதிகமான நர்சரிகள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என[illegible] வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். உற்பத்தி பெருக வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். தமிழ் நாட்டுக்கு தேவையான

உரம் 18 லட்சம் டன் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதிலே க்ரீன் மன்யூர், கம்போஸ்ட் மன்யூர், இவை போக சுமாராக 8 லட்சம் டன் ரசாயன உரங்கள் நமக்கு தேவைப்படுகிறது. கெமிகல் பர்டிலைசர்கள்தான் இந்தத் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும். அவைகளின் விநியோகத்தை போர்ட் ஆப் ரெவின்யூ மூலம் வைத்திருக்கிறோம். அதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. போர்ட் ஆப் ரெவின்யூ அதன்பின் கோவாப்பரேட்டிவ் டிபார்ட்மெண்ட் என்பதிலே "டிலே டிஸ்ட்ரிபியூஷன்" இருக்கிறது.

கோவாப்பரேடிவ் சொசைட்டிக்கு சென்றால் முழு மூட்டைகள்தான் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். செல்லான் கட்டிவிட்டு வா, "மூட்டை கொடுக்கிறோம்" என்று சொல்கிறார்கள். இதனால் தாமதம் ஏற்படுகிறது. உணவு உற்பத்தி பெருக பெர்ட்டிலைசர் போதிய அளவு அக்ரிகல்சர் டிபார்ட்மெண்ட் மூலமாகவே விநியோகம் செய்வது நல்லதாக இருக்கும். அதற்கான திட்டம் வகுக்கப்பட வேண்டும். இன்றைக்கு இருக்கும் டிஸ்ட்டிரிபியூஷனால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

அதுபோக பிளாண்ட் புரொடக்ஷன் சம்பந்தப்பட்டவரை 10%க்குத்தான் ஆர்க்கனைசேஷன் அல்லது எஸ்டாப்ளிஷ்மெண்ட் வைத்திருக்கிறோம். அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றால் பிளாண்ட் ப்ரொடக்ஷன் மிக முக்கியமான தேவை. சில இடங்களில் பயிர்களில் பால் பிடிக்கும் நேரத்தில் நோய் வந்துவிடுகிறது. கிட்டத்தட்ட 30 அல்லது 40% விளைச்சல் குறைந்து விடுகிறது. ஆகவே இன்றைக்கு குறைவாக இருக்கும் பிளாண்ட் ப்ரொடக்ஷன் ஸ்டாபை அதிகப்படுத்த வேண்டும். அப்படி விரிவுபடுத்தாவிட்டால் உற்பத்தி கட்டாயம் பாதிக்கப்படும். மழை இன்மையால் நோய் அடிக்கடி வருகிறது. விவசாயிகளுக்கு அதைத் தடுக்க முக்கிய தேவை பிளாண்ட் ப்ரொடக்ஷன் உத்தியோகஸ்தர்கள். இப்பொழுது இருக்கும் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அங்கங்கே அதிகப்படியான ஆட்கள் தேவையாக இருக்கிறது. அதுபோக ஸீட் டிஸ்ட்ரிபியூஷன் இப்பொழுது கிராம சகாயக்குகள் மூலம் விதை விநியோகம் செய்யப்படுகிறது. அது வெற்றி பெறும் என்றும் கணிசமான அளவுக்கு நன்மையாக இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனாலும் மக்களிடம் பணம் இல்லை. ஆகவே கிராம சகாயக்குகள் வாங்கி வைக்கக்கூடிய அளவுக்கு சக்தி இல்லை. ஆகவே இதை பஞ்சாயத்து யூனியனே எடுத்து நடத்தலாம் என்று தோன்றுகிறது. ஏன் பஞ்சாயத்து யூனியனுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்து, கோடவுன் வைத்து விதைகளை சேகரித்தால் அது நலமாக இருக்கும். அப்படிச் செய்வது சர்க்காருக்கு கஷ்டம் என்று இருந்தால் அமெரிக்கா நாட்டில் உள்ளது போல பிரைவேட் டிஸ்ட்ரிபியூஷன் ஏஜன்சிக்கு கொடுக்கலாம். கார்ப்பொரேஷனுக்கு கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கும்போது சட்டம் கொண்டு வரவேண்டியிருக்கலாம். சீட்ஸ் கண்ட்ரோல் சட்டம். அமெரிக்க தேசத்தில் சீட் டிஸ்ட்ரிபியூஷன் பிரைவேட் ஏஜென்சியிடம் ரொம்ப நன்றாக நடக்கிறது. நல்ல முறையிலே தக்க காலத்திலே வீடுகள் கொடுக்கப்படாவிட்டால் உற்பத்தி பாதிக்கப்படும்.

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [12th March 1964

ஆராய்ச்சி செய்வது ஒருவரும், சொல்லிக் கொடுப்பது ஒருவருமாக இருப்பது அவ்வளவு சரியல்ல. ரிசர்ச்சையும் டீச்சிங்கையும் கம்பைன் பண்ணினால்தான் அபிவிருத்தி ஏற்படும்.

அடுத்து, " Pilot Project to produce paddy free from pest and disease " என்ற தலைப்பில் ஆந்திரா தேசத்தில் நடக்கிறது. நம் மாநிலத்திலும் ஆரம்பிக்கப் போவதாக தெரிகிறது. நாமும் அப்படி ஆரம்பித்தால்தான் "பாடி ஃப்ரீ ஃப்ராம் பெஸ்ட் அண்ட் டிசீஸ்" என்று ப்ரொடியூஸ் பண்ண சௌகரியமாக இருக்கும்.

அதுபோக இன்றைக்கு கிராம சேவக் கண்ட்ரோல் பலபேர் கையில் இருக்கிறது. ரெவினியூ டிவிஷனல் ஆபீசர், ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸ் என்று எல்லாம் இருக்கிறது. கிராம சேவக்குக்கு கொடுக்கும் வேலை 70 அல்லது 80 சதவீதம் உணவு உற்பத்திக்காக என்று இருப்பதால், அவர்கள் பொறுப்பை அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டிடமே கொடுப்பது நலமாக இருக்கும்.

அதுபோக, Pilot Scheme for production of green manure என்று போடப்பட்டிருக்கிறது. இதற்கு 1,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இது காணாது. பல இடங்களில் புறம்போக்குகள் இருக்கின்றன. அவைகளை அபிவிருத்தி செய்யலாம். ஆனால் இப்பொழுதிருக்கும் ஏற்பாடு சரியாக இல்லை. ஆங்காங்கு இருக்கக்கூடிய மன்யூர் ப்ரொட்யூஸ் பண்ணக்கூடிய இடங்களில் அக்ரிகல்சுரல் இ.ஓ. வின் பொறுப்பில் விட்டு, ஒரு பிளாக்குக்கு இவ்வளவு என்று ஒரு டார்ஜெட்டை ஃபிக்ஸ் பண்ணிவிட்டால் அந்த இ.ஓ. அக்ரிகல்சர் அதை நல்ல முறையிலே செய்ய முடியும் என்று நினைக்கிறேன்.

அதுபோக, ப்ராபகண்டாவிற்காக ஒதுக்கப்பட்ட தொகை காணாது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் பயிர்களில் விழும் சீக்கு என்ன, அதற்கு என்ன பரிகாரம், அதை எப்படி தடுக்க வேண்டும் என்பதற்கெல்லாம் ப்ராபகண்டா மிக முக்கியமானது. இன்றைக்கு கிராமங்களில் சினிமாக்கள் இருக்கின்றன. மூன்று மைலுக்கு ஒரு சினிமா இருக்கிறது. அதன் மூலமாக அவசியமானால் ஒரு ஆக்டைக் கொண்டுவந்தாகிலும் ஒவ்வொரு சினிமாவிலும் 5 அல்லது 10 நிமிஷமாவது விவசாய சம்பந்தமான விளம்பரம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினால், விவசாயிகளுக்கு அதிக உற்பத்தி செய்ய வேண்டியது எப்படி, பூச்சிகள் விழுந்தால் தடுப்பது எப்படி என்கிற விஷயங்களில் செய்திகளை பரப்பலாம்.

அதுபோக வேளாண்மைக் கருவிகள் வினியோகத்திற்காக ஒரு லட்சம் கொடுப்பது என்று திட்டம் இருக்கிறது. அது காணாது. போஸ் கலப்பையை எடுத்துக் கொண்டால் அதற்கு மிகுந்த தேவை இருக்கிறது. எல்லோரும் அது வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒரு லட்சம் என்று போட்டிருப்பது மிகமிகக் குறைவு. (மணி அடிக்கப்பட்டது) இன்னும் கொஞ்சம் பணம் கொடுத்தால் நலம்.

12th March 1964] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

அடுத்தபடியாக "ரெகுலேடட் மார்க்கெட் பார் ஈச் டாலுக்", அவசியம் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு கிலோ, மீட்டர் சிஸ்டங்கள் வந்தாலும் மரக்கால் ஒரு பக்கமும், பௌண்ட் ஒரு பக்கமும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ரெகுலேடட் மார்க்கெட் ஒவ்வொரு தாலூகாவிற்கும் இருந்து விட்டால் ஒழுங்கு ஏற்படும்.

அதுபோக சிறு பாசனத் திட்டத்திற்கும் தொகை குறைவாக இருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது). Animal Husbandry யைப் பற்றி ஒரு வார்த்தை. இப்பொழுது அது நன்றாக வேலை செய்கிறது. திட்டப்படி ஆங்காங்கே கால்நடைப் பண்ணைகள் அபிவிருத்திச் செய்யப்படுகின்றன. பால் வினியோகம் சம்பந்தப்பட்டவரை மாதவரம் காலனியில் 75 ஆயிரம் லிட்டர் உற்பத்தி செய்யக் கூடிய பிளாண்ட் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு உற்பத்தியாகக் கூடியது 35 ஆயிரம் லிட்டர் தான். அதிலே வினியோகமாவது 25 ஆயிரம் லிட்டர் தான் என்று தெரிகிறது. இப்படிக் குறைவாக இருப்பதற்கு காரணம் தெரியவில்லை. அதுபோக லைவ்ஸ்டாக் Improvement கம் மில்க் ப்ரொடக்ஷன் கமிஷன் அல்லது போர்ட் ஒன்று ஏற்படுத்தலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இப்பொழுது சாதாரணமாக லைவ்ஸ்டாக் இம்ப்ருவ்மெண்டை எடுத்துக் கொண்டால் கம்யூனிடி டெவலப்மெண்டிலிருந்து, கோவாப்பரேட்டிலிருந்து, வெட்டர்னரி டிபார்ட்மெண்டிலிருந்து ரூபாய் கொடுக்கிறோம். அதுபோக மாடுகள் விநியோகம் செய்ய வெல்பேர் டிபார்ட்மெண்ட் பொறுப்பு ஏற்று இருக்கிறது. அவர்கள் ஏதோ மாடுகளை வாங்குகிறார்கள். அதனால் பல தவறுகள் ஏற்படுகின்றன. இவையெல்லாம் ஒரே ஏஜன்சி மூலமாக, அல்லது ஒரு கமிட்டியையாவது அமைத்து அதன் மூலமாக மாடுகள் வாங்குவது கொடுப்பது என்பதை செய்தால், இந்த மாதிரி தவறுகள் தரக்குறைவான மாடுகள் வாங்குவது முதலியவை ஏற்படாது. மாடு என்றால் என்ன என்று தெரியாதவரிடம் மாடு வாங்குவதை ஒப்படைக்கிறோம். Livestock improvement and milk distribution should go to one agency and it should be in a Board. இந்த மாதிரி சர்க்கார் ஏற்பாடு செய்தால் 75 ஆயிரம் லிட்டர் உற்பத்தி செய்ய வேண்டிய இடத்தில் 35 ஆயிரம் லிட்டர் உற்பத்தி செய்யும் தவறு நீக்கப்படலாம். ஒவ்வொரு இடத்திலும் பால் தேவை என்று சொல்லுகிறோம். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் பல குறைகள் இருக்கின்றன. வரக்கூடிய பால் முழுவதையும் வினியோகம் செய்ய முடியாமல் நெய்யாக விற்கிறார்கள். இருக்கும் பிளாண்ட்டின் கெபாசிட்டையைவிட குறைவாக 35 ஆயிரம் லிட்டர் மட்டும் உற்பத்தி செய்கிறார்கள். அதிலும் 27 ஆயிரம் லிட்டரே வினியோகம் ஆகிறது. பாக்கி உள்ளதை வினியோகம் செய்ய முடியாமல் நெய்யாக மாற்றி விடுகிறார்கள். இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து பிளாண்டின் முழு கெபாசிட்டியையும் உபயோகிக்க முடியுமா என்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

[12th March 1964

* திரு. எஸ். முருகையன்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது உள்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே மானியக் கோரிக்கையாகக் கேட்டிருப்பதன் பேரில் எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று பல திட்டங்களை நாம் போடுகிறோமே தவிர, உற்பத்தி பெருகுகிறதா, நாம் எந்த இலக்கை அடைய வேண்டும் என்று நினைக்கிறோமோ அந்த இலக்கை அடைந்திருக்கிறோமா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். விவசாய காரியங்களுக்காக நாம் செலவிடும் பணமெல்லாம் உண்மையான விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயன்படவில்லை என்ற காரணத்தினால்தான் உணவு உற்பத்திப் பெருக்கத்திலே தடை ஏற்படுகிறது.

முதலிலே, விதைத் தானியத்தைப்பற்றி நாம் எடுத்துக்கொண்டு பார்த்தால், அது கிராம சகாயக் மூலமாக இப்பொழுது உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படி கிராம சகாயக் உற்பத்தி செய்வதிலே பல தவறுகள் நேர்ந்து விடுகின்றன. இந்த விதை உற்பத்தியில் மிகத் தீவிர கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். தீவிர சாகுபடித் திட்டத்தை இப்பொழுது பல பகுதிகளில் கொண்டு வந்திருக்கிறோம். அதன்படி, மாவட்டத்திற்கு இரண்டு மூன்று கிராமங்களை எடுத்துக்கொண்டு, தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் என்ன என்ன உதவிகளை விவசாயிகளுக்குக் கொடுக்கிறோமோ அவற்றையெல்லாம் இதுபோன்று விதை உற்பத்தி செய்யக்கூடிய பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவேண்டும். ஒரு கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட ரக நெல் கொடுத்து, அதை எல்லா விவசாயிகளும் விதையாக உற்பத்தி செய்து கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும். ஆக, தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் மற்றப் பகுதிகளில் என்ன என்ன உதவிகள் கொடுக்கப்படுகின்றனவோ, அவை அத்தனையையும் விதை உற்பத்தி செய்கின்ற கிராமங்களில் கொடுத்தால், அவர்கள் நல்ல முறையில் தரமான விதைகளை உற்பத்தி செய்ய ஏதுவாக இருக்கும். அந்த விதைகளைச் சர்க்கார் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்ய ஏற்பாடு செய்தால் எல்லா விவசாயிகளுக்கும் உண்மையிலேயே நல்ல விதைகள் கிடைக்க வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது கிராம சகாயக் உற்பத்தி செய்யும் விதைகளை எங்கே கொண்டு போய் விற்பது, யாரிடத்தில் விற்பது என்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. கிராம சகாயக்குகள் ஒரு கிராமத்திலுள்ளவர்களிடம் சென்று, அங்குள்ள விவசாயிகளை 20 மூட்டைகள், 30 மூட்டைகள் விதை நெல்லை உடனே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். விவசாயிகள் அவ்வளவுக்கும் பணத்தைக் கொடுத்து வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களுக்கு இப்பொழுது புதிதாக ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. கிராமங்களில் உற்பத்தி செய்கின்ற நெல்லை கூட்டுறவு சங்கங்கள் வாங்கி வைத்து, பிறகு

12th March 1964] [திரு. எஸ். முருகையன்]

விநியோகிக்க வேண்டும் என்று ஏட்டளவில் உத்தரவு இருக்கிறதே தவிர, அது நடைமுறையில் இல்லை. வாங்கி வைக்கிற 10 மூட்டைகளில் ஒரு மூட்டை நெல் குறைந்தால் எப்படி ஈடு செய்வது என்பது போன்ற பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். விதை உற்பத்தியைப் பொறுத்த வரையில் மாவட்டத்திற்கு மூன்று, நான்கு கிராமங்களை நல்ல விதை உற்பத்தி செய்ய ஒதுக்கி, தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கொடுக்கும் உதவிகளையெல்லாம் இங்கே கொடுத்து, விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் ஒரு ட்ராக்டர் அவசியம் இருக்க வேண்டும். விவசாயத்திற்குத் தேவையான சமயத்தில் ட்ராக்டர் கிடைப்பது இல்லை. மாவட்டத்திற்கு ஐந்து முதல் பத்து ட்ராக்டர்கள் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் ஒவ்வொரு ட்ராக்டர் இருப்பது மிக மிக அவசியம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. விவசாய இலாகாவினர் அதை நன்றாகக் கவனித்து, அதிலும் அவர்கள் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். எந்த எந்த கிராமங்களில் மின்சாரம் சாங்ஷன் ஆகியிருக்கிறது, விவசாயிகளுக்கு உடனடியாக மின்சார வசதி செய்து கொடுக்கப்படுகிறதா என்பதிலும் அவர்கள் சற்றுக் கவனம் செலுத்தினால் அந்தக் குறையும் நிவர்த்தியாவதற்கு வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சாத்தனூர் திட்டப் பகுதியில் 5,000 ஏக்கர் நிலம் புது சாகுபடிக்குக் கொண்டுவரப்படும் என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது, இரண்டாவது கட்ட வேலை நடந்து கொண்டிருக்கிறது. முன்பு 20,000 ஏக்கர் பாசனம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 4,000 ஏக்கருக்கும் அதிகமாக ஆயக்கட்டில் சேராத இதர நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு, நீர்ப்பாசனம் செய்து கொண்டிருக்கிறார்கள், சட்ட பூர்வமாக. 'சட்ட பூர்வமாக' என்று கூடச் சொல்ல மாட்டேன். பாசனத்திற்கு வசதியாக இருப்பதால், தண்ணீரைப் பாய்ச்சி சாகுபடி செய்து கொண்டு வருகிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் அந்த ஆயக்கட்டிலே சேர்ப்பது நலமாக இருக்கும். மேலே குறிப்பிட்டிருக்கும் புதிதாக சாகுபடிக்கு வரும் அந்த ஐயாயிரம் ஏக்கர் நிலம் தென்னாற்காடு மாவட்டத்தில் சேர்ந்ததாக இருக்கிறது. சாத்தனூர் அணை வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. வடாற்காடுப் பகுதியில் 4,000 ஏக்கராக்களுக்கு மேல் இப்படி நீர்ப்பாசனம் செய்து, சாகுபடி செய்து கொண்டு வருகிறார்கள். வடாற்காடுப் பகுதியில் இருக்கும் இந்த 4,000 ஏக்கரையும் இந்தத் திட்டத்திலே சேர்க்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வடாற்காடு மாவட்டம் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக அதிகப்படியாக நெல் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் வடாற்காடு மாவட்டம் நெல் உற்பத்தியில்

[திரு. எஸ். முருகையன்] [12th March 1964

இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது. ஆகவே, இந்த மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிப்பது மிக மிக அவசியம். அங்கே விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க எல்லா வசதிகளும் இருந்து கொண்டிருக்கின்றன. வாழவச்சானூரில் கிட்டத்தட்ட 400 ஏக்கராவுக்கு மேல் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கு சாத்தனூர்த் தண்ணீர் பாய்ந்துகொண்டு இருக்கிறது. அந்த இடத்தைச் சர்க்கார் விதைப் பண்ணைக்காக எடுத்துக் கொண்டார்கள். அந்த நிலங்களை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்து, அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்தினால், அது நல்ல முறையில் விவசாயப் பயிற்சி அளிப்பதற்குச் சௌகரியமாக இருக்கும். அந்தப் பகுதியில் விவசாயமும் நல்ல முறையில் செழிப்படைய வசதியாக இருக்கும். 400 ஏக்கரா நிலம் இருந்தும், பாசனத்திற்கான வசதிகள் இருந்தும், அந்தப் பகுதி நல்ல முறையில் பயன்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. (கனம் திரு. பூ. கக்கன் : அந்த ஊர் எங்கே இருக்கிறது?) வாழவச்சனூர் என்னும் ஊர் செங்கம் தாலுக்காவில் இருக்கிறது. இப்பொழுது அங்கே விதைப் பண்ணை ஒன்று வைத்திருக்கிறார்கள். நாற்பது, ஐம்பது ஏக்கர் தான் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, மீதி 350 ஏக்கராக்களுக்கு மேல் சாகுபடிக்கு லாயக்காக இருக்கிறது. கொஞ்சம் சீர்திருத்தம் செய்தால் போதும். ஆகவே அந்த இடத்தில் விவசாயக் கல்லூரியைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ரசாயன உரங்கள் கூட்டுறவு சொஸைட்டி மூலமாக கொடுக்கப்படுகிறது. எவ்வளவு உரம் விவசாயிக்குத் தேவையோ அந்த அளவு உரம் அங்கே கொடுக்கப்பட்டிருந்தாலும், பல ஊழல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. விவசாயி ஒரு மூட்டை அமோனியம் சல்பேட் வாங்கும் போது எடை குறைவாக இருக்கிறது. எடை போட்டுக் கொடுக்க முடியாது என்கிறார்கள். கிராமத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், "சென்ட்ரல் ஸ்டோரிலிருந்து வரும் மூட்டையைத்தான் கொடுக்க முடியும், எடை போட்டு விற்றால், குறையை யார் சரிக்கட்டுவது? எங்களால் எடை போட்டுக் கொடுக்க முடியாது" என்று சொல்லி, அப்படியே மூட்டையை எடுத்துக் கொடுத்துவிடுகிறார்கள். ஊழல் இங்கே நடக்கிறதா? சென்ட்ரல் ஸ்டோரில் நடக்கிறதா, என்பது தெரியவில்லை. பணம் கொடுத்து வாங்கும்போது, உரத்தை நல்ல முறையில் சரியான எடை போட்டுத்தானே கொடுக்க வேண்டும்? அப்படிக் கொடுப்பதில்லை. மாவட்டம் பூராவும் இந்த நிலை தான் இருக்கிறது. இந்த நிலையை உடனடியாக மாற்றி, விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

* **திரு. ஆர். சேங்காளியப்பன் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த விவசாயத் துறை பற்றிய மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

12th March 1964] [திரு. ஆர். சேங்காளியப்பன்]

அரசாங்கத்திலிருந்தும் பஞ்சாயத்து யூனியன்களிலிருந்தும் பெருவாரியான சலுகைகள் விவசாய உற்பத்திக்காகக் கொடுக்கப்படுகின்றன என்பதை நாம் எல்லோரும் அறிவோம். மேட்டுப்பாங்கான வரண்ட பிரதேசங்களில் கிணறு வெட்டுவதற்காக மானியம் கொடுக்கப்படுகிறது. அந்த மானியம், இப்பொழுது கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லை. தற்போது மூவாயிரம் ரூபாய் வரையில் கிணறு வெட்டுவதற்காக மானியம் கொடுக்கிறார்கள். சர்க்காரில் இருந்து கிணறு வெட்ட ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் வரையில்தான் கொடுக்கப்படுகிறது. இது கால்வாசி கிணறுகூட வெட்டப் போதவில்லை. அந்தப் பக்கத்தில் சுமார் 70, 80 அடிக்கு மேல் வெட்ட வேண்டியிருக்கிறது. கிணறு வெட்டவே பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் ஆகும். விவசாயிகளுக்கு போதுமான வருவாய் இல்லாத காரணத்தினால் அவர்களால் கிணறு வெட்டப் பணம் செலவழிக்க முடியவில்லை. அதனால் வெட்டப்பட்ட கிணறு கால்வாசியோடு, பாதியோடு நின்று போகிறது. ஆகவே கிணறு வெட்டுவதற்கு அந்தப் பகுதிகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரையில் கடன் உதவி அளிக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்று மோட்டார், பம்பு செட்டு வாங்குவதற்காக பஞ்சாயத்து யூனியன்களில் இருந்து பணம் கொடுக்கிறார்கள். ஆனால், அவ்வாறு கொடுக்கப்பட்ட பணத்தை மூன்று வருட தவணையில் கட்டிவிடவேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த மூன்று வருஷ தவணைக்குள் கட்ட முடியாமல் பல விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பத்து வருட தவணையில் கட்டலாம் என்று செய்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருப்பதாகத் தெரிகிறது. அதன்படி பஞ்சாயத்து யூனியன்கள் இந்த மாதிரியாகக் கொடுக்கிற கடன் தொகையைப் பத்து வருட தவணையில் கட்டலாம் என்பதாகச் செய்தால் நலமாக இருக்கும். இதுபற்றி கோவை மாவட்டத்தில் உள்ள ஏராளமான விவசாயிகள் வந்து எங்களிடம் சொல்கிறார்கள். அதிகாரிகள் வந்து கொடுக்கிற கஷ்டம் அதிகமாகிவிட்டது. மழை தவறியதன் காரணமாக சென்ற ஆண்டு மகசூல் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தயவு செய்து பத்தாண்டு தவணையில் அந்தக் கடனை வசூல் செய்வதற்கு உத்தரவிடவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அரசாங்கம் இப்போது சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் பல உதவிகளைச் செய்து வருகிறது. கோவை போன்ற பகுதிகளில் எல்லாம் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். இதனால் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக மதுக்கரை பிர்காவில் மண்வளப் பாதுகாப்பு திட்டத்தை நிறைவேற்றிவிட்டார்கள். இதனால் கிணறுகளில்கூட ஊற்று கிடைத்திருக்கிறது. இந்தத் திட்டத்தை அந்தப் பகுதியில் மற்ற இடங்களுக்கும் உடனடியாக விஸ்தரித்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆர். செங்காளியப்பன்] [12th March 1964

பஞ்சாயத்து யூனியங்களில் இருந்து விவசாயிகளுக்கு வேண்டிய உரங்களை எல்லாம் கொடுக்கிறார்கள். அதுவும் நல்ல முறையில் விவசாயிகளுக்குத் தாராளமாகக் கிடைக்கிறது. அதே போன்று விவசாயிகளுக்கு சிமிண்டு தாராளமாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும். விவசாயத் துறையில் இன்றையதினம் பம்பு செட்டு வைப்பதற்கு, மோட்டார் வைக்க கட்டிடம் கட்டுவதற்கு, கிணறு வெட்டுவதற்கு சிமிண்டு தேவைப்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்குச் சிமிண்டு கிடைப்பது இல்லை. எங்களிடத்தில் வந்து சொல்கிறார்கள். அதிகாரிகளிடத்தில் நாங்கள் போய்ச் சொன்னாலும் சிமிண்டு போதுமான அளவு கிடைப்பதில்லை என்கிறார்கள். கிடைக்கிற சிமிண்டையாவது விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தாராளமாகக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தபடியாக குழாய்க் கிணறுகளை வெட்டுவதில் அரசாங்கம் தனியாகக் கவனம் செலுத்த வேண்டும். இன்று கோவையில் நூறு அடி வெட்டினால் தண்ணீர் கிடைப்பதில்லை. நூறு அடிக்குக் கீழே வெட்டுவதற்கும் முடியவில்லை. ஆகவே அங்கெல்லாம் போரிங் பைப்புகள் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. மாரப்ப கவுண்டர்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களே கோரியிருக்கும் மானியத் தொகையை ஆதரித்து சிலவார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது அமைச்சர் அவர்கள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் நம்முடைய உற்பத்தி 53 லட்சம் டன் அதிகமாயிற்று என்றும் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்குள்ளே இன்னும் 16.50 லட்சம் டன் உற்பத்தி செய்யவும் திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றுவதற்காக நமது அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி நான் பாராட்டுகிறேன். குறிப்பாக கிணறு வெட்டுவதில் சிறு பாசனத் திட்டங்கள் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் இன்னும் கிணறுகள் தோண்டுவதில் உரம், விதை விநியோகம் செய்வதில் நமது அரசாங்கம் தீவிரமான முறையில் ஈடுபட்டிருக்கிறது. இந்த நல்ல ஏற்பாடுகளின் மூலம் அவர் குறிப்பிட்ட குறியளவை நாம் எட்டிப் பிடிக்க முடியும் என்று எண்ணுகிறேன். குறிப்பாக அவநாசி தாலுக்காவைப் பொறுத்த வரையில் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அந்தத் தாலுக்காவில் கிணறுகள் வெட்ட வேண்டுமென்றால் நூறு அடி வரைக்கும் வெட்ட வேண்டும். இப்போது நூற்றில் இருந்து நூற்று இருபது அடி வரைக்கும் வெட்டுகிறார்கள். அம்மாதிரி வெட்டுவதற்குக் கூலியாட்கள் கிடைப்பது இல்லை. அதைவிட நூறு அடிக்குக் கீழே இறங்கி வெட்டுவது என்பதே மிகவும் கடினம். அந்தக் கிணறுகளை வெட்ட வேண்டுமென்றால் ப்ளாஸ்டிங் மிஷின் வேண்டியிருக்கிறது. இப்போது விவசாய இலாகாவிலே சாதாரணமாக

12th March 1964] [திரு. கே. மாரப்ப கவுண்டர்]

நாற்பது, ஐம்பது விண்ணப்பங்கள் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் இரண்டு அல்லது மூன்று மிஷின்கள்தான் இருக்கின்றன. ஒரு விவசாயிக்கு அலாட் பண்ணினால் அவன் ஒருவனிடம் மட்டும் ஒரு ஆண்டில் இரண்டு மூன்று மாதம் தங்கிவிடும். வெட்டி முடிவதற்கு அத்தனை காலம் ஆகிவிடுகிறது. ஆக ஒரு ஆண்டில் ஒரு மிஷின் நான்கு புள்ளிகளுக்குப் போய்ச் சேரும். இந்த வருஷத்தில் மழையும் கிடையாது. விவசாயத்திற்கு என்று இல்லாவிட்டாலும், குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் கிடையாது. ஆகவே அந்த அவிநாசி தாலுக்காவில் அதிகக் கிணறுகள் வெட்டுவதற்கு கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அதிகமான ப்ளாஸ்டிங் மிஷின் தேவைப்படுகிறது. ஆகையால் இந்த மிஷின்களை வெளியில் இருந்தாவது தருவித்து கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விதை விநியோகம். இதை கிராம சேவக்குகள் செய்து வருகிறார்கள். போன ஆண்டு அவிநாசி தாலுக்காவில் பருத்தி விதைகளை விநியோகம் செய்தார்கள். ஆனால் அவற்றில் பாதிக்குமேல் விதை முளைக்கவே இல்லை. அந்தப் பகுதியில் பருத்தி தான் மிகவும் முக்கியமான விவசாயம். அரசாங்க விதைகளை விவசாயிகள் நம்பி விதைத்த காரணத்தினால் அவர்கள் பெரிதும் நஷ்டத்திற்கு உள்ளாகி விட்டார்கள். அப்படியின்றி நல்ல விதைகளை அவர்களுக்குக் கொடுக்க தக்க வழிகளை மேற்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முன்பு சொன்னது போல அந்தப் பகுதியில் நூறு அடி வெட்டினால்தான் தண்ணீர் பார்க்க முடியும். இருபது முப்பது அடியில் தண்ணீர் கிடைக்காது. இருபது, முப்பது அடி வெட்டக் கூடிய பகுதிக்கு கிணறு வெட்ட ஆயிரம் இரண்டாயிரம் கடன் கொடுப்பது போலவே அந்த பகுதிக்கும் கொடுக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் குறைந்த பட்சம் கிணறு வெட்டுவதற்கு 10 ஆயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக டிராக்டர்கள். 380 டிராக்டர்கள் வாங்கிக் கொடுக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது மிகவும் நல்ல திட்டம். இதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்.

அதோடு அவிநாசி தாலுக்காவைப் பொறுத்த வரையில் இந்த வருஷம் விவசாயம் என்ற அகராதியே இல்லாமல் போய்விட்டது. அந்த தாலுக்காவுக்கு முன்பு செய்து தருவதாக இருந்த பாசனத் திட்டத்தைக்கூட இன்னும் செய்து கொடுக்கவில்லை. அது விடப்பட்டுவிட்டது. அந்த நல்ல திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் மூன்று லட்சம் விவசாய மக்கள் வாழ முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: என்ன பாசனத் திட்டம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லவேண்டும்.

[12th March 1964

திரு. கே. மாரப்ப கவுண்டர் : குந்தா பாசனத் திட்டம்.

கனம் திரு. பூ. கக்கன் : பி. டபிள்யூ. டி. சம்பந்தப்பட்ட விவகாரம். விவசாயத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

திரு. கே. மாராப்ப கவுண்டர் : அதனால் அந்தப் பகுதியில் விவசாயம் செய்வதற்கு மிக்க வசதி ஏற்படுமாதலால் அந்தக் திட்டத்தையும் மராமத்து இலாகாவினரிடம் கனம் விவசாய அமைச்சர் அவர்கள் தெரிவித்து அதையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. வி. எஸ். எஸ். மணி :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, விவசாய மானியத்தின் பேரில் கொண்டு வரப்பட்டுள்ள
10-30 a.m. வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சபை முன் வைக்க விரும்புகிறேன். விவசாயமானது நமது நாட்டுக்கு ஒரு முதுகெலும்பாக இருக்கிறது. விவசாயத் துறையைப் பொறுத்தவரை உழவர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். நில அடமான பாங்கு மூலம் ஒரு விவசாயி கடன் வாங்குவது என்றால் பல மாதங்கள் ஆகின்றன. கடன் கொடுக்கும் முறைகளை "ஸிம்ப்ளிபை" பண்ண வேண்டும். இப்போது இருக்கின்ற முறையில் கடன் வாங்குவதை விடச் சும்மா இருந்து விடலாம் என்று கருதுகிறார்கள். சிறிய உழவர்களும்; குத்தகைக்கு எடுத்திருப்பவர்களும் விவசாயம் செய்கிற காலத்தில் கந்து வட்டி என்று சொல்லக்கூடிய முறையில் பத்து ரூபாய்க்கு வாரத்திற்கு நான்கு அணா விதம் வட்டிக்கடன் வாங்கி அவர்கள் விவசாயக் காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. அந்த வட்டியைக் கணக்குப் பார்த்தால் 120 சதவிகிதம் ஆகிவிடுகிறது. ஆகவே, இதைத் தவிர்க்க ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அக்ரிகல்சுரல் பாங்கு என்று சொல்லக்கூடிய சிறு பாங்குகளை வைத்து நபர் ஜாமீனில் 500 ரூபாய்க்கு மேல் போகாமல் அறுவடைக் காலத்தில் திருப்பிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ரசாயன உரத்தை விடப் பசுந்தாள் உரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எந்தெந்த உரம் எந்தெந்த நிலத்திற்குப் பொருத்தமானது என்று பார்த்து அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் ரசாயன உரத்தைக் கொடுக்க வேண்டுமே தவிர எல்லா நிலத்திற்கும் ஒரே மாதிரியான உரத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பது சரியல்ல.

பஞ்சாயத்து மூலம் தென்னை வளர்க்க வேண்டுமென்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டம் மிகவும் மோசமான பாழான திட்டம். அதனால் பணத்தை பாழ்படுத்துவது தவிர வேறு பயன் ஒன்றுமில்லை. தென்னங்கன்று வைத்தோம்; குழியைத் தோண்டினோம் என்று சொல்லி நிர்வாகஸ்தர்களும், பஞ்சாயத்து உறுப்பினர்களும், தலைவர்களும் பணம் சம்பாதிக்கிறார்களே தவிர அதனால் வேறு எந்தப் பலனும் இல்லை. ஆகவே, அந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12th March 1964] [திரு. வி. எஸ். எஸ். மணி]

விவசாயத்திற்காக சிலர் டிராக்டர்களை சொந்தமாக வைத்திருக்கிறார்கள். அந்த டிராக்டர்கள் ரோட்டில் வந்தால் அவற்றுக்கும் எம்.வி.டி. ஆக்ட் (M.V.T. Act,) பிரகாரம் குவார்ட்டர்லி டாக்ஸ் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. விவசாயத்திற்காக டிராக்டர்கள் உபயோகப்படுத்துகிறவர்களுக்கு எந்த விதமான வரியும் இருக்கக்கூடாது என்று ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்க பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதிலே தொல்லைகள் இருக்கின்றன. ஒரு இடத்திலே 30 பேர் அக்ரிமென்ட் கொடுத்தால் 30 பேரும் பம்ப் செட்டை இன்ஸ்டால் பண்ணிய பிறகுதான் மின்சாரம் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். பத்து பேர் அக்ரிமென்ட் கொடுக்க வந்தாலும் உடனே அவர்களுக்கு மின்சாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. க. தா. பெருமாள் ராஜு : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்போது நம் நாட்டிலே ஓரளவு விவசாயம் நல்ல முறையிலே அபிவிருத்தி அடைந்திருக்கிறது. விவசாய அபிவிருத்திக்கு நல்ல பொறுக்கு விதைகளைக் கொடுப்பதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும். அந்த விதைகளை ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கு மாற்றிக் கொடுத்தால் கூட விவசாயப் பெருக்கத்திற்கு நலம் என்பது என் சுய அபிப்பிராயம். சொசைடிகளிலே விவசாயிகள் சல்பேட் உரம் வேண்டுமென்று கேட்டால், யூரியா, பாஸ்பேட் உரங்களை வாங்கினால்தான் சல்பேட் உரம் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஒரு விவசாயி அவனுடைய நிலத்திற்கு எந்த உரம் தேவை என்று கேட்கிறானோ அந்த உரத்தைக் கொடுத்தால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய உற்பத்திக்கு பசுந்தாள் உரம் மிகவும் முக்கியமானது. சில ஜில்லாக்களில் தண்ணீரானது இரண்டு மாதங்களுக்கு வாய்க்காலில் விடப்படாமல் நிறுத்தி வைக்கப்படுகிறது. அந்தச் சமயத்தில் 15 நாளைக்கு ஒரு தரமாவது தண்ணீர் விட்டால் சணல், கொளுஞ்சி முதலிய பசுந்தாள் உரங்களை அபிவிருத்தி செய்ய முடியும். பசுந்தாள் உரங்களைப் போடுவதன் காரணமாகப் பூமியின் தரம் குறையாது. ரசாயன உரத்தைப் போட்டால் பூமியின் தரம் குறைந்து விடுகிறது. ஆகவே, விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் பசுந்தாள் உரத்தை அதிகரிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

கோயம்புத்தூர் ஜில்லாவிலே அந்தியூர் தாளவாடி போன்ற பிற்பட்ட பிரதேசங்கள் இருக்கின்றன. அங்கு இருப்பவை பாசன வசதி அற்ற நிலங்களாகும். கிணறுகளை எல்லாம் ஆழப்

படுத்தி நல்ல முறையில் விவசாயம் செய்ய வேண்டுமென்றால் போரிங் மெஷின்கள் அதிகமாகத் தேவைப்படுகிறது. இந்த மெஷின்களையெல்லாம் யூனியனுக்கு ஒன்று வீதம் கொடுத்து கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு வசதி செய்து விவசாயம் செய்வதற்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயத்திற்கு இன்றியமையாதது கால்நடை. கால்நடைகள் ஏழை நடுத்தர விவசாய மக்களுக்கு முக்கியமான உபயோகமாகக் கருதப்படுகிறது. காங்கேயம் பசுக்களை ஓரளவு அபிவிருத்தி செய்து வந்திருக்கிறோம். பர்கூர்கால்நடை என்ற இனங்களையும் நல்ல முறையில் வளர்க்க வேண்டும். இப்போது அந்த இனம் நோயினால் க்ஷீணித்து வருகிறது. கால்நடை ஆஸ்பத்திரி இல்லாத காரணத்தால் இந்த இனம் நோயினால் க்ஷீணிக்கத் தலைப்பட்டு விட்டது.

அங்கு இந்த கால்நடை ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி பர்கூர் கன்றுகளை நன்கு அபிவிருத்தி செய்தால் பயன் உள்ளதாக இருக்கும். வயல்களில் உழுவதற்கு அவைதான் முக்கியமாக வேண்டும். காங்கேயம் காளைகளை வைத்து உழுவது கஷ்டம். ஆகவேதான் இதைச் சொல்கிறேன். லோயர் பவானியில் பர்கூர் ப்ரீட்ஸை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

(மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கக்கூடிய விவசாய மான்யக் கோரிக்கை குறித்தும், கால்நடை அபிவிருத்தி மான்யக் கோரிக்கை குறித்தும் சில விஷயங்களை சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். இன்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பது, சிறிய நீர்ப் பாசனம் மூலம் 520,000 எக்கர் நிலத்தை சாகுபடி கொண்டு வரவேண்டுமென்றும், அதிலிருந்து 1,39,000 டன் விளைவு என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நம் ராஜ்யத்தில் பெரிய பாசனங்களை விட சிறிய பாசனங்களிலிருந்துதான் அதிக உணவு எதிர்பார்க்கிற இந்த சந்தர்ப்பத்தில் சிறிய நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுப்பதில் அரசாங்கம் வேகமாக, வேலைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, இன்று தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அது நீர் வளம், நில வளம், பொருந்திய மாவட்டமாகயிருந்தாலும் மேடான கிராமங்கள் நூற்றுக்கணக்கான கிராமங்கள் அங்கு இருக்கிறது. அங்கெல்லாம் தண்ணீர் பாய்வது என்று சொன்னால் மிகவும் சிரமமான முறையில் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கெல்லாம் லிப்ட் இறிகேஷம் மூலம் நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். ஓரணியம்பலம், ஆதனூர் போன்ற கிராமங்களில் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டும் துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில் அரசாங்கம் தவறியிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்பு

கிறேன். இம்மாதிரி 400, 500 ஏக்கர் உள்ள மேட்டுப் பிரதேசங்களில் லிப்ட் இறிகேஷன் மூலம் பாசனவசதி செய்து கொடுக்க முடியும். அறந்தாங்கி, பட்டுக்கோட்டை போன்ற தாலூகாக்களில் ஏரிகள் கண்மாய்க்கள் இவை தூர்ந்துபோயிருக்கின்றன. அவைகளை எல்லாம் மராமத்து செய்து தூர் எடுத்து அந்த ஏரிகளில் தண்ணீரைத் தேக்கி விவசாயிகளுக்கு பாசன வசதி செய்து கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். கிணறு மான்யத் திட்டத்தின் கீழ் 1,000-ல் இருந்து 2,000 ரூபாய் வரை கடன் கொடுக்கப்படுகிறது. அதை மூன்று தவணைகளில் திரும்ப வசூல் செய்ய வேண்டுமென்ற முறை இருப்பதால் அவர்கள் அதை மூன்று தவணைகளில் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த மூன்று தவணை என்பதை மாற்றி அதை ஐந்து தவணைகளில் வாங்கிக் கொள்ள அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மண்வளப் பரிசோதனை என்று சொல்லும்போது தஞ்சை ஜில்லாவில் பல வித மண்கள் இருக்கின்றன. களிமண்ணாக இருக்கிறது. ஈளைமண்ணாக இருக்கிறது. நாங்கள் போடும் உரம் பூமிக்கு கீழே போய் விடுகிறது. அதனால் சரியான விளைவு இல்லாதிருக்கிறது. ஆகவே இந்த மண்வள சோதனையை தீவிரப்படுத்தி தஞ்சை மாவட்டத்தில் வேலை செய்ய வேண்டும். மண்வளப் பரிசோதனை நிலையம் ஒன்றை ஆடுதுறையில் மட்டும் வைத்திருக்கிறார்கள். நாகபட்டணத்தை மையமாக வைத்து கீழ் தஞ்சையில் ஒரு மண்வள பரிசோதனை நிலையம் வைத்தால் மண் வளத்தை பரிசோதனை செய்து விவசாயிகளுக்கு ஆலோசனை கொடுத்து எப்படி சாகுபடி செய்வது, எப்படி உரம் இடுவது என்பதுபற்றி அவர்களுக்கு ஆலோசனை கொடுக்க முடியும். பஞ்சாயத்தை உரக்குழித் திட்டம் என்று நான்கு ரூபாய் கொடுப்பது என்பது தேவை இல்லை என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். இன்று நாம் பஸ்ஸில் போகிறபோது பார்த்தால் தெரியும். தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் பிரயாசப்பட்டு உரம் சேகரம் செய்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்து நான்கு ரூபாய் வாங்க வேண்டும் என்பதற்காக வெறும் குழிகளை மட்டும் வெட்டி வெறும் குழியாக சும்மா போட்டு வைத்திருக்கிறார்கள். இல்லாவிட்டால், பஞ்சாயத்துக்கு அப்படி நான்கு ரூபாய் கொடுக்கும்போது அப்படி நான்கு ரூபாய் வாங்கும் பஞ்சாயத்துக்கள் உரம் சேகரம் செய்கிறார்களா என்று விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள்மூலம் விசாரணை செய்து அம்மாதிரி யாரும் உரம் சேகரம் செய்யவில்லை என்றால் அவர்கள் வாங்கி இருக்கும் ரூபாயை திருப்பி வாங்கும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் உரம் சேகரிப்பு வேலையில் அதிக அக்கரை செலுத்துவார்கள். பயிர் பாதுகாப்பு சம்பந்தமாகவும் இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கு பயிர் பாதுகாப்பு சம்பந்தமாக போதுமான அளவில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சையில் உள்ள விவசாயிகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது). இது விவசாயிகளின் பிரச்னையாக இருப்பதால், தேசத்தின் மிக அவசிய

[திரு. ஆ. கு. சுப்பையா] [12th March 1964

மான பிரச்னையாக இருப்பதால் கூடுதல் இரண்டு நிமிடங்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நான் யோசனைகள் கூறுவதற்கு. இன்று பூச்சித் தொல்லை மிகுதியாக இருக்கிறது. அதோடு எலிகள் விளைந்த கதிர்கள் எல்லாம் வெட்டிச் சேதப் படுத்துகிறது. அதை எப்படி ஒழிப்பது அல்லது எப்படி பிடிப்பது என்பதையும் அரசாங்கம் பரிசிலனை செய்தாக வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமைப்பதுதான் சரியாக இருக்க முடியும். விவசாயிகள் நிறைய இருக்கும் ஒரு விவசாயப் பிரதேசம் அது. ஆகவே தஞ்சையில் ஒரு விவசாயக் கல்லூரி அமைப்பது மிகவும் அவசியமனது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று தீவிரச் சாகுபடித் திட்டம் தஞ்சை முழுவதிலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. தீவிரச் சாகுபடித் திட்டப் பிரதேசத்தில் விவசாயிகளுக்கு அத்தனை வசதிகளையும் செய்து கொடுத்தாலும் ஆபத்துக்களும் இருக்கின்றன. எலி வெட்டு, பூச்சித் தொல்லை இன்னும் இதர நோய்கள் இவையெல்லாம் தடுக்கப்பட்டு நாம் எதிர்பார்த்த அளவு உற்பத்தியைப் பெருக்க தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அடுத்தபடியாக, சிறவிகள் வந்து கதிரை அழித்து விடுகிறது. அதைப் பிடிக்கக் கூடாது என்று காட்டு இலாகாவைச் சார்ந்தவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு விரோதமாக அந்த உத்தரவு அமைந்திருக்கிறது. ஆகவே இந்தச் சிறவிகளைப் பிடிப்பதன் மூலம் எப்படி விவசாய உற்பத்தியைப் பாதுகாக்க முடியும் என்று இரண்டு இலாகாக்களும் பேச்சு வார்த்தை நடத்தியாவது விவசாயிகளுக்கு சாதகமாக செயல்படவேண்டும். அந்தச் சிறவிகளை பிடிக்கவோ அல்லது சுடுவதற்கோ உத்தரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : சிறவிகளை சாப்பிடுவதில்லையா ?

திரு. ஆ. கு. சுப்பையா : சாப்பிடுவதுண்டு.

கனம் சபாநாயகர் : அப்போதும் உணவு உற்பத்தி அதிகமாகுமே.

திரு. ஆ. கு. சுப்பையா : பட்டுக்கோட்டை தாலூகாவில் மணிலா சாகுபடி அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. மணிலாச் செடியைக் காய வைத்து மாட்டுத் தீரத்திற்காக உபயோகப்படுத்துகிறார்கள். அப்படி உபயோகப்படுத்தும் அந்த மணிலாச் செடியைக் கொண்டு கம்போஸ்ட் உரம் தயார் செய்தால் நல்ல விதமாக உற்பத்தியைப் பெருக்க முடியும். அப்படிச் செய்தால் உரம் நல்ல சத்துள்ளதாக இருக்கும். ஆகவே மணிலாச் செடியைக் கொண்டு கம்போஸ்ட் உரம் தயார் செய்ய அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே தஞ்சை ஜில்லாவில் சிறிய நீர்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்து பூச்சித் தொல்லை, எலித் தொல்லை போன்றவற்றை அகற்றி விவசாயத்திற்கு பாதுகாப்பு அளிக்கும் முறையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் நாம் எதிர்பார்ப்பதை விட அதிகமாக விளையக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

12th March 1964]

*** திரு. அ. சேனுபதி கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவசாய மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டுமென்றால் நில வளம், நீர் வளம், குடி வளம் இவை பொருந்திருக்கக் கூடிய ஒரு அமைப்புத்தான் விவசாயத்தை மேம்பாடு அடையச் செய்யும். ஆகவே வரண்ட பிரதேசங்களுக்கு நீர்பாசன வசதி தேவை. இப்போது சிலயிடங்களில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் கட்டி முடிந்து நல்ல பலனைத் தந்திருக்கிறது. அந்த வகையில் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த சிறிய நீர்ப்பாசன விஷயத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும் என்பதைத் தான் நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். பல வரண்ட பிரதேசங்களில் கிணறுகள் வெட்டி தண்ணீர் இறைத்து அதைக் கொண்டு விவசாயம் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதோடு சிறிய குட்டைகள்மூலம் தண்ணீரைப் பெருக்கி அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று நாங்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் பெரிய எஞ்சினியர்களைக் கேட்கும்போது, அவர்களுக்கு இதில் பெரிய நம்பிக்கை இருப்பதில்லை. ஏதோ கொஞ்சம் மழைகாலத்தில் தண்ணீர் வரும், இதனால் பெரிய பலன் கிடைக்கும் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள், ஆனால் இதனால் பெரிய பலன் ஒன்றும் கிடைக்காது என்று நாங்கள் நம்புகிறோம், இதை நாங்கள் ஒப்புக் கொள்ள முடியாது என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே இதனால் எந்தவிதமான பலனும் கிடைக்காது என்று அவர்கள் நினைக்கிறார்கள் இவ்விதமான குட்டைகள் வெட்டி அதை நல்ல முறையில் பல இடங்களிலும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதை உபயோகித்து பல இடங்களிலும் எத்தனையோ ஏக்கர்கள் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதை கனம் அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது விரும்பினால் அந்த இடத்திற்கு கொண்டு போய் காண்பிக்க நான் தயாராக இருக்கிறேன். குட்டைகள் மூலமாக நல்லமுறையில் தண்ணீரை உபயோகிக்க முடியும் என்பதை என்னால் மெய்ப்பிக்க முடியும். ஆகவே நிறைய சிறிய சிறிய குட்டைகளை எல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும், என்று இதன் மூலம் நல்லவிதமாக விவசாய உற்பத்தி பெருக்கிக்கொள்ள முடியும் என்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மண் வள பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், திட்ட அடிப்படையில் கொஞ்சம் கொஞ்சமாக செய்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையில் ஒட்டன்சத்திரம் என்கிற பகுதியில் மலைப்பாங்கான பூமிகள் அதிகமாக இருக்கின்றன இந்த இடங்களில் நிறைய தண்ணீர் பாய்ந்தால், ஏராளமான மண் வளம் இந்த இடங்களிலிருந்து அடிக்கப்பட்டுவிடுகிறது. இந்த மண் வளம் எங்கேயோ போய், தஞ்சாவூர் டெல்டாக்களில் எல்லாம் போய் வண்டலாக சேர்ந்து விடுகிறது. ஆகவே இந்த இடங்களிலுள்ள மண் வளத்தை

நன்றாக பாதுகாக்கவேண்டும். அதற்குரிய வழியில் பெரிய திட்டத்தை, இந்த சாயில் கன்ஸர்வேஷன் டிப்பார்ட்மெண்ட் மூலமாகவே தயாரித்து செயலாற்றவேண்டும். அம்மாதிரி கவனம் செலுத்தினால், மலைபாங்கான பிரதேசங்களிலுள்ள மண் வளம் பாதுகாக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதில் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கள்ளிமந்தியம், ஒட்டன்சத்திரம் பகுதியில் 2,000, 3,000 ஏக்கர்கள் தரிசாக கிடக்கின்றன. இதில் கிணறுகள் வெட்டுவதற்கு வசதி செய்து கொடுத்தால், அங்குள்ளவர்களுக்கு பாசனத்திற்கு வசதியாக இருக்கும், இதன் காரணமாக அவர்களுக்கு ஓரளவுக்கு பொருளாதார வசதி பெருகுவதற்கும் வசதியாக இருக்கும். இருபது ஏக்கர்கள் ஒரு யூனிட் என்று எடுத்துக்கொண்டு, கிணறு வெட்டிக்கொடுப்பதற்கு ஸாயில் கன்ஸர்வேஷன் டிப்பார்ட்மெண்ட் மூலம் கடன்கொடுப்பதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்து, அதே காலத்தில் ஸாயில் கன்ஸர்வேஷன் திட்டத்தையும் நிறைவேற்றினால், காட்டு இலாக்காக்காரர்கள் மூலமாகவோ, அல்லது விவசாய இலாக்காக்காரர்கள் மூலமாகவோ காய்கறி செடிகள் வைப்பதற்கு ஏற்பாடு செய்தால் இந்த 2,000 அல்லது 2,500 ஏக்கர்கள் தரிசுநிலம் நல்ல முறையில் பயன்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டு இலாகாவைப் பொறுத்தவரையில், இப்போது காட்டில் அதிகமாக புளிய மரம் இருப்பதில்லை. நிறைய அழிக்கப்பட்டு வருகிறது. ஒருக்கால் இனிமேல் மக்கள் புளியே சாப்பிட வேண்டிய அவசியமில்லை என்கின்ற நிலைமை வருகிறதோ என்னவோ தெரியவில்லை. புளிய மரங்கள் அதிகமாக இருந்தால் மழை அதிகமாக பெய்யும் என்று சொல்வார்கள். இப்போது அந்த மழையும் போய்விடும்போல் தோன்றுகிறது. ஆகவே புளிய மரங்கள் அதிகமான அளவில் அழிக்கப்படுவதை நிறுத்தி மேலும் இம்மரங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடை தீனி விஷயத்தில் முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும். சமீபத்தில் நெல்லூர் அரிசி வரவில்லை என்று சென்னையிலுள்ள மக்கள் எல்லோரும் வாடுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. அது போல்தான் தஞ்சாவூரிலிருந்து வைக்கோல் வரவில்லை என்றால் எங்களுடைய பகுதியிலுள்ள கால்நடைகள் எல்லாம் வாடவேண்டியதுதான். ஆகவே கால் நடைகளுக்கு வேண்டிய தீனிகளை சர்க்கார் மூலமாக வரவழைத்து வினியோகிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்டர் ஸ்கீமையும் அதிகமான அளவில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை இலாகாவைப் பொறுத்த வரையில் அனேக இடங்களில் டாக்டர்கள் இல்லை, டாக்டர்கள் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக 'கீவில்லேஜ்' திட்டங்கள் எல்லாம் போய்விடுகிறது. இதன் காரணமாக கால்நடைகள்

நல்லமுறையில் விருத்தி அடைய முடியாத நிலை ஏற்படுகிறது. இந்த கீ வில்லேஜ் திட்டம் நல்லமுறையில் இயங்கினால் நம் நாட்டிலுள்ள கால்நடைகளின் தரங்கள் எல்லாம் உயரும். ஆகவே எல்லா இடங்களிலும் இந்த 'கீ வில்லேஜ் சென்டரை' அதிகமாக ஏற்படுத்தவேண்டும். இதற்கு முக்கியமாக டாக்டர்கள் தேவைப்படுவதால் சீக்கிரமாக இன்னொரு வெட்டர்னரி காலேஜ் ஏற்படுத்த வேண்டும். புதுக்கோட்டையில் ஏற்படும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் ஆரம்பித்தால் கூட, ஐந்து வருடங்கள் கழித்துத்தான் நமக்கு டாக்டர்கள் கிடைப்பார்கள். ஆகவே உடனடியாக இந்த காலேஜ்ஜை ஏற்படுத்த வேண்டும். டாக்டர்கள் போதுமான அளவில் இருந்தால்தான், கால்நடைகள் நல்ல முறையில் அபிவிருத்தி அடையமுடியும்.

மேலும், ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம் என்று ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் இந்த ஸ்கீம் மூலமாக விவசாயிகளுக்கு எந்தவிதமான கடனும் இதுவரை கிடைக்கவில்லை. பழைய முறையிலேயே ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் மூலம் கொடுத்தாலும் பரவாயில்லை. அதுவும் கொடுக்கப்படவில்லை. இன்னும் பரீட்சார்த்தமாகவே இருந்து கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு போகமாக கடன் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகவே இந்தத் திட்டத்தின் மூலமாக கடன் கிடைப்பதற்கான ஒத்தாசைகளை உடனடியாக அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*** திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் தலைவர் அவர்களே, தம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களை, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன். நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் சூலூர் சட்டசபை தொகுதி, மிக மிக வரண்ட பிரதேசம் அங்கு இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களின் கஷ்டங்களை எடுத்துச் சொன்னால் இந்த சபையே அனுதாப்படும் என்று சொல்லலாம். அங்கு அதிகமான அளவில் விவசாயிகள் இருக்கிறார்கள். விவசயிகளுக்கு மிக இன்றியமையாதது தண்ணீர். அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு எந்த விதத்தில் தண்ணீர் கிடைக்கும் என்பதை நான் சொல்லக்கூடிய நிகழ்ச்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம். காலை ஐந்து மணியிலிருந்தே பள்ளிக்கூடத்திற்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் எல்லாம் தலையில் பானையை வைத்துக் கொண்டு குடிதண்ணீருக்காக மணிக்கணக்காகக் காத்து நிற்கவேண்டும். பல கிராமங்களிலும் பெப்ருவரி மாதத்திலிருந்தே குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது. குடி தண்ணீருக்கே இந்த நிலைமை என்றால் விவசாயத்திற்கு தண்ணீர் எங்கே கிடைக்கும் என்பதை தயவு செய்து எல்லோரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு உதவியாக பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி நாம் செலவு செய்து வருகிறோம். இதற்காக பல எஞ்சினியர்களை

எல்லாம் வைத்திருக்கிறோம். ஆனால் வேலை எவ்வாறு நடைபெறுகிறது என்று பார்த்தால் ஒவ்வொரு ஆண்டும் சில குளம் குட்டைகளை எடுத்து அதற்காக எஸ்டிமேட் போட்டு போர்ட் ஆபீஸ்-க்கு அனுப்புகிறார்கள். இவ்விதம் அனுப்பி ஆறு மாதங்களுக்குப் பின்னால் அல்லது ஒரு வருடத்திற்குப் பின்னால் திரும்பி கோயம்புத்தூருக்கே வந்துவிடுகிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் எஸ்டிமேட் போடுவதும், போர்ட் ஆபீஸ்-க்கு அனுப்புவதும், திருப்பி அனுப்பப்படுவதும்தான் நடந்துகொண்டிருக்கிறது என்றால் எப்படி விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும் என்பதை சிந்தித்துப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆக ஏழு ஆண்டுகளாக இவ்விதமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறதே தவிர வரண்ட பிரதேசமாக இருக்கக் கூடிய என் பகுதிகளுக்கு எந்த விதமான வசதியும் கிடைக்கவில்லை. ஆகவே இத்தகைய கொடுமையை போக்குகின்ற முறையில் நல்ல முறையில் சிந்தித்து, இந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை என் சூலூர் சட்டசபை தொகுதியில் உள்ள இடங்களுக்கு எல்லாம் தண்ணீர் வசதி கிடைப்பதற்காக வேண்டிய திட்டங்களை மட்டுமல்லாமல் கவனத்தையும் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் அதிகப்படியான அளவில் பருத்தி விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த பருத்தி சாகுபடியில் ஏற்படுகின்ற புழு பூச்சிகளை அடியோடு ஒழிப்பதற்காக நம்முடைய விவசாய இலாகா என்ன செய்திருக்கின்றார்கள் என்பதை கேட்க விரும்புகிறேன். பருத்தியில் புழு விழுந்துவிட்டால், இதைப்பற்றி உடனே அதிகாரிகளுக்கு தெரிவித்த உடன் 24 மணி நேரத்திற்குள்ளாக மூன்று ஜீப்கள் வருகின்றன, அதற்கடுத்த நாள் இரண்டு ஜீப்கள் வருகின்றன. கடைசியில் ஒருவருமே வரமாட்டார்கள். இதற்காகக் கொடுக்கப்படும் மருந்தை கலக்கிப் பார்க்கும்போது, அதிலுள்ள 100 புழுக்களும் மேலே மிதந்து வந்துவிடுகிறது. நாற்றுவிடும் போது இந்த புழு விழுந்துவிட்டால், இதற்காக ஒரு எக்கருக்கு 500 ரூபாய் வரை கடன் வாங்கி செலவு செய்ததெல்லாம் வீணாகிவிடுகிறது. பின்னால் ஆறு மாதங்களுக்கு இதற்கான வட்டியைக் கூட கொடுக்க முடியாமல் விவ
11-00 a.m. சாயிகள் திண்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த சபையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகையினாலே பருத்தி சாகுபடி மிக இன்றியமையாத பாதுகாப்பு. பருத்திக்கு விழக் கூடிய புழுவைத் தடுக்கவேண்டும் என்பது. காலாகாந்திலே பருத்தி விதைக்க வேண்டும். மார்கழி மாதத்தில் பனி விழும்போது பருத்தியை நட்டால் மாசி அல்லது பங்குனி மாதத்தில் பருத்தி வரும். இப்போது என்ன என்றால் ஆசைப் பட்டுக் கொண்டு ஆடி மாதத்திலேயே, நெல் சாகுபடி செய்யும் போதே போடுவது என்று ஆரம்பித்து விடுகிறார்கள். பருத்தியை எப்போது விதைக்கவேண்டும், எப்போது பிடுங்கவேண்டும், எப்போது நடவேண்டும் என்று ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸில்

போய்ப் பார்த்தால் 20 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் இன்ன மாதத்தில் தான் பருத்தி விதைக்க வேண்டும், இன்ன மாதத்தில் தான் பிடுங்கவேண்டும், இன்ன மாதத்தில்தான் நடவேண்டும் என்று தண்டோரா போட்டார்கள், அந்த முறையில் செய்யவில்லையென்றால் ஒவ்வொரு பருத்திச் செடியும் 10,000 கணக்கில் புழுக்களை உற்பத்தி செய்யும். ஆகவே இதைப் பற்றி விவசாய இலாகாவிலே பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு சொஸைடி மூலமாக பால் வாங்குகிறார்கள். அங்கே வாங்கப்படுகிற விலைக்கும், டவுனில் விற்கப்படுகிற விலைக்கும் பார்த்தால் 18 நயா பைசா வித்தியாசம் இருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் விவசாய குடும்பத்திலிருந்து வந்தவர்கள். அவர்களுடைய, விவசாயிகளுடைய ரத்தத்தை பிழிந்து குறைந்த விலைக்கு அவர்களிடமிருந்து பாலை வாங்கிக்கொண்டு வந்து, நகரத்தில் இருக்கிறவர்களுக்காவது நல்ல பால் கிடைக்கிறதா என்றால் தண்ணிர் பால்தான் அவர்களுக்குக் கிடைக்கிறது. விவசாயிக்கு 5 பைசா அல்லது 6 பைசா உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று பல முறை இந்தச் சபையிலேயே சொல்லியிருக்கிறோம். விவசாயிகள் சாபத்திற்கு ஆளாகக்கூடாது. அதிகாலையில் 2½ மணிக்கோ அல்லது 3 மணிக்கோ எழுந்து பாலைக் கறந்து கொடுத்துவிட்டு மாட்டுக்குப் போட பருத்திக்கொட்டை வாங்குவதற்குக் கூட கட்டாத அளவுக்கு நிலைமை இருந்தல் அவர்களுடைய சாபத்திலிருந்து தப்பிக்க முடியாது. ஒரு லிட்டருக்கு 5 பைசா, இந்தச் சபையின் மூலமாகக் கேட்டுக்கொள்வது, உயர்த்தி விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும். பால் உற்பத்தி செய்து கொடுக்கக்கூடிய விவசாயிகள் நஷ்டப்படாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்கிற பருத்தி இருக்கிறதே அந்தப் பருத்திக்கு விலை நிர்ணயம் செய்கிறார்கள். யார் நூலை விற்கிறார்களோ அவர்கள் பருத்திக்கு விலை நிர்ணயம் செய்கிறார்கள். பருத்தியை உற்பத்தி செய்யும் விவசாயிகள் கூட்டம் இன்ன விலைக்குத்தான் விற்போம் என்று சொல்ல பாதுகாப்பு இல்லை என்றால் விவசாயிகளுடைய குழந்தை குட்டிகள் படிப்பது எப்படி? கிராமத்திலே 100 ஏக்கர் நிலம் வைத்து விவசாயம் செய்யக் கூடியவர்கள் தங்கள் குழந்தைகளை நல்ல பள்ளிகளில் படிக்க வைக்க முடியவில்லை. அதே நேரத்தில் 500 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு முடிகிறது. இப்போது இருக்கும் நிலையைப் பார்த்தால் 6 மாதம் படாத பாடுபட்டு பருத்தி உற்பத்தி செய்வது விவசாயி; அதற்கு விலை நிர்ணயம் செய்வது ஒரு கூட்டம். விவசாய மக்கள் சார்பாக விவசாய அமைச்சரைக் கேட்டுக்கொள்வது, உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும், உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கான விலை உயரவேண்டும் என்பதாகும்.

[திருமதி சி. குழந்தையம்மாள்] [12th March 1964

இன்றைக்கு ப்ளாக்கிலே ட்ராக்டர் வாங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே 35,000 ரூபாய் மீன் வளத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அங்கே மீனும் இல்லை, வளமும் இல்லை. (சிரிப்பு) அந்தப் பணத்தைக் கொண்டு டிராக்டர் வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னால், 'இல்லை, மீன் தான் பிடிக்கவேண்டும்' என்று சொல்லுகிறார்கள். அதைக் கொண்டு டிராக்டர் வாங்க முடியாது என்று சொல்லுகிறார்கள். குளம் வெட்டி, தண்ணீர் வரும்போது அங்கே மீன் பிடிப்பதற்காக ஒதுக்கியிருக்கிறது என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார் போலும். புதிதாக ட்ராக்டர் வாங்க பணம் ஒதுக்க வேண்டும், அல்லது குளம் கூட இல்லாத பகுதிகளில் மீன் வளத்திற்காக ஒதுக்கப்பட்டதை ட்ராக்டர் வாங்க உபயோகப்படுத்தினால் ஓரளவுக்கு விவசாயிகளுடைய கஷ்டம் நீங்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்கு இரண்டு பக்கமும் இடி. ஏன்? நான்கு பக்கமும் இடி என்று சொன்னால்கூட பொருத்தமாக இருக்கும். கோடிக்கணக்கான ரூபாய் செலவில் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம் என்று சொன்னால் மின்சாரத்தை விவசாயத்திற்கு உபயோகப்படுத்த கிணற்றில் தண்ணீர் இருப்பதில்லை. மின்சாரம் கொடுக்கும்போது குறைந்தது 8 மணி நேரம் ஓட்ட வேண்டும். ஆனால் கிணற்றில் தண்ணீர் இல்லை. ஆகையால் சிறு நீர்ப்பாசனத்திட்டங்களுக்கு வழி வகை செய்து, பரம்பிக்குளத்திட்டத்தினால் சூலூருக்கு தண்ணீர் வசதி ஏற்படும்படி செய்யவேண்டும். அதைப்பற்றிச் சொல்லும்போது தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்திற்குத்தான் ஓடும் என்று சொல்லுகிறார்கள் மேல் நாடுகளில் தண்ணீர் மேட்டை நோக்கியும் ஓடும் என்று ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் விவசாயிகளின் கொடுமையைச் சிந்தித்துப் பார்த்து நல்ல நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, கூட்டுறவு மான்யத்திலே அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது பாலுக்கு லிட்டருக்கு 5 பைசா அல்லது 6 பைசா உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியைச் சொல்லுவார்கள், ரொம்ப நீளாக பூர்த்தியாக இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்கள் என்று சொல்லிக்கொண்டு . . .

கனம் சபாநாயகர்: கனம் உணவு மந்திரியை கூட்டுறவு மான்யம் விவாதத்திற்கு வரும்போது அதைப்பற்றி கேட்கலாம்.

திருமதி சி. குழந்தையம்மாள்: போர்வெல் போடுவதிலே, சப்மெர்ஸிபிள் பம்ப் போட வேண்டும் என்று கேட்டால் ஆறு மாதம் ஆகின்றது. ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் இல்லை என்று சொல்லுகிறார்கள். விவசாய மான்யக் கோரிக்கைக்கு ஃபாரின் எக்ஸ்சேஞ்சுக்கு ஏற்பாடு செய்து, அந்தத் தொகையை அதிகரிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

12th March 1964]

***புலவர் கா. கோவிந்தன்:** மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, 'உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே' என்று ஒரு தொடர் இருக்கிறது. அந்த முறையில் பார்த்தால் உணவு, பாசனம், விவசாயம் ஆகிய மூன்று துறைகளும் ஒன்றுக்கொன்று நெருங்கிய துறைகள் என்பது புலப்படும். அந்த வகையிலே இந்த மூன்று துறைகளும் ஒரு அமைச்சரிடத்தில் இருந்தால் சாலச் சிறப்பாக இருக்கும் என்று முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய சர்க்கார் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உணவு உற்பத்தி 17 லட்சம் டன் அளவுக்கு செய்ய வேண்டுமென்று ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். ஆனால் முதல் இரண்டு ஆண்டு காலத்தில் அவர்கள் வைத்த குறிக்கோள் அளவுக்கு சாதித்திருக்கிறார்களா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. ஒன்றரை லட்சம் டன் அளவுக்கு சாதனையில் குறைந்து போயிருக்கிறது. அதற்கான காரணம் உரம் சரியாக இல்லை என்று சொன்னார்கள். இந்த இடத்தில் நான் ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். முதல் இரண்டு ஆண்டு காலத்தில் இந்த நாட்டில் உணவு விலையைப் பொறுத்த மட்டில் எந்த விதக் குழப்பமும் இல்லை. நல்ல விலை இருந்தது. உழவன் ஊக்கத்தோடு பாடுபட்டான். இருந்தும் உணவு உற்பத்தி 1½ லட்சம் டன் குறைந்திருக்கிறது. சென்ற ஆண்டு நிதி நிலை தொடங்கும்போது அரிசி கொள்முதல் திட்டத்தை கொண்டு வந்தார்கள். அப்போதுதான் குழப்பம் ஆரம்பமாயிற்று. அதனால் உழவன் உள்ளத்தில் இருந்த ஊக்கத்தைக் குறைத்து விட்டார்கள். முதலில், விரும்பினால் கொள்முதல் என்பது போய் இப்போது கட்டாயக் கொள்முதல் கொண்டு வந்திருப்பதன்மூலம் மிக மிக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குழப்ப நிலையை உழவனுக்கு உண்டாக்கக் கூடாது என்ற கருத்தை அமைச்சர் அவையும், விவசாயத் துறையைப் பற்றியதாக இருந்தாலும், எந்தத் துறையைப் பற்றியதாக இருந்தாலும் உறுதி செய்து கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு உத்தியோகத்திலே இருக்கிறவர்கள் மாதத் தொடக்கத்தில் 30 நாட்கள் கழித்தால் குறிப்பிட்ட தொகை வரும் என்ற நம்பிக்கையோடு பணியாற்ற முடிகிறது. ஆனால் விவசாயி உழுகிற நேரத்தில், உழுகிற தொழிலைத் தொடங்குகிற நேரத்தில், உழைப்பின் பயனால் நமக்கு வருகிற நெல்லுக்கு இன்ன விலை வரும் என்ற நிச்சயமான உணர்வு அவர்களுக்கு இல்லை. நான்கு மாதம், ஆறு மாதம் கழித்து பலன் அளிக்கும் தொழில் அது. நான்கு-ஐந்து மாதம் பாடுபட்டு பயனைப் பெறும் சமயத்தில், உழைப்புக்கு உரிய பலன் அவர்களுக்குக் கிடைக்கும் நிலையில் சர்க்கார் விட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அப்படிப்பட்ட நிலை உண்டாகக்கூடாது. பாசன வசதி செய்து தந்திருக்கிறோம், உர வினியோகத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம், மண்வளப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று இவற்றை அடுக்கிக் கொண்டு போனால் மட்டும் பலன் தராது என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திருமதி சி. குழந்தையம்மாள்] [12th March 1964

இன்றைக்கு ப்ளாக்கிலே ட்ராக்டர் வாங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே 35,000 ரூபாய் மீன் வளத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அங்கே மீனும் இல்லை, வளமும் இல்லை. (சிரிப்பு) அந்தப் பணத்தைக் கொண்டு டிராக்டர் வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னால், 'இல்லை, மீன் தான் பிடிக்கவேண்டும்' என்று சொல்லுகிறார்கள். அதைக் கொண்டு டிராக்டர் வாங்க முடியாது என்று சொல்லுகிறார்கள். குளம் வெட்டி, தண்ணீர் வரும்போது அங்கே மீன் பிடிப்பதற்காக ஒதுக்கியிருக்கிறது என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார் போலும். புதிதாக ட்ராக்டர் வாங்க பணம் ஒதுக்க வேண்டும், அல்லது குளம் கூட இல்லாத பகுதிகளில் மீன் வளத்திற்காக ஒதுக்கப்பட்டதை ட்ராக்டர் வாங்க உபயோகப்படுத்தினால் ஓரளவுக்கு விவசாயிகளுடைய கஷ்டம் நீங்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்கு இரண்டு பக்கமும் இடி. ஏன்? நான்கு பக்கமும் இடி என்று சொன்னால்கூட பொருத்தமாக இருக்கும். கோடிக்கணக்கான ரூபாய் செலவில் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம் என்று சொன்னால் மின்சாரத்தை விவசாயத்திற்கு உபயோகப்படுத்த கிணற்றில் தண்ணீர் இருப்பதில்லை. மின்சாரம் கொடுக்கும்போது குறைந்தது 8 மணி நேரம் ஓட்ட வேண்டும். ஆனால் கிணற்றில் தண்ணீர் இல்லை. ஆகையால் சிறு நீர்ப்பாசனத்திட்டங்களுக்கு வழி வகை செய்து, பரம்பிக்குளத்திட்டத்தினால் சூலூருக்கு தண்ணீர் வசதி ஏற்படும்படி செய்யவேண்டும். அதைப்பற்றிச் சொல்லும்போது தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்திற்குத்தான் ஓடும் என்று சொல்லுகிறார்கள் மேல் நாடுகளில் தண்ணீர் மேட்டை நோக்கியும் ஓடும் என்று ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் விவசாயிகளின் கொடுமையைச் சிந்தித்துப் பார்த்து நல்ல நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, கூட்டுறவு மான்யத்திலே அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது பாலுக்கு லிட்டருக்கு 5 பைசா அல்லது 6 பைசா உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியைச் சொல்லுவார்கள், ரொம்ப நாளாக பூர்த்தியாக இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்கள் என்று சொல்லிக்கொண்டு . . .

கனம் சபாநாயகர் : கனம் உணவு மந்திரியை கூட்டுறவு மான்யம் விவாதத்திற்கு வரும்போது அதைப்பற்றி கேட்கலாம்.

திருமதி சி. குழந்தையம்மாள் : போர்வெல் போடுவதிலே, சப்மெர்ஸிபிள் பம்ப் போட வேண்டும் என்று கேட்டால் ஆறு மாதம் ஆகின்றது. ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் இல்லை என்று சொல்லுகிறார்கள். விவசாய மான்யக் கோரிக்கைக்கு ஃபாரின் எக்ஸ்சேஞ்சுக்கு ஏற்பாடு செய்து, அந்தத் தொகையை அதிகரிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

12th March 1964]

*** புலவர் கா. கோவிந்தன் :** மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, 'உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே' என்று ஒரு தொடர் இருக்கிறது. அந்த முறையில் பார்த்தால் உணவு, பாசனம், விவசாயம் ஆகிய மூன்று துறைகளும் ஒன்றுக்கொன்று நெருங்கிய துறைகள் என்பது புலப்படும். அந்த வகையிலே இந்த மூன்று துறைகளும் ஒரு அமைச்சரிடத்தில் இருந்தால் சாலச் சிறப்பாக இருக்கும் என்று முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய சர்க்கார் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உணவு உற்பத்தி 17 லட்சம் டன் அளவுக்கு செய்ய வேண்டுமென்று ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். ஆனால் முதல் இரண்டு ஆண்டு காலத்தில் அவர்கள் வைத்த குறிக்கோள் அளவுக்கு சாதித்திருக்கிறார்களா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. ஒன்றரை லட்சம் டன் அளவுக்கு சாதனையில் குறைந்து போயிருக்கிறது. அதற்கான காரணம் உரம் சரியாக இல்லை என்று சொன்னார்கள். இந்த இடத்தில் நான் ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். முதல் இரண்டு ஆண்டு காலத்தில் இந்த நாட்டில் உணவு விலையைப் பொறுத்த மட்டில் எந்த விதக் குழப்பமும் இல்லை. நல்ல விலை இருந்தது. உழவன் ஊக்கத்தோடு பாடுபட்டான். இருந்தும் உணவு உற்பத்தி 1½ லட்சம் டன் குறைந்திருக்கிறது. சென்ற ஆண்டு நிதி நிலை தொடங்கும்போது அரிசி கொள்முதல் திட்டத்தை கொண்டு வந்தார்கள். அப்போதுதான் குழப்பம் ஆரம்பமாயிற்று. அதனால் உழவன் உள்ளத்தில் இருந்த ஊக்கத்தைக் குறைத்து விட்டார்கள். முதலில், விரும்பினால் கொள்முதல் என்பது போய் இப்போது கட்டாயக் கொள்முதல் கொண்டு வந்திருப்பதன்மூலம் மிக மிக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குழப்ப நிலையை உழவனுக்கு உண்டாக்கக் கூடாது என்ற கருத்தை அமைச்சர் அவையும், விவசாயத் துறையைப் பற்றியதாக இருந்தாலும், எந்தத் துறையைப் பற்றியதாக இருந்தாலும் உறுதி செய்து கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு உத்தியோகத்திலே இருக்கிறவர்கள் மாதத் தொடக்கத்தில் 30 நாட்கள் கழித்தால் குறிப்பிட்ட தொகை வரும் என்ற நம்பிக்கையோடு பணியாற்ற முடிகிறது. ஆனால் விவசாயி உழுகிற நேரத்தில், உழுகிற தொழிலைத் தொடங்குகிற நேரத்தில், உழைப்பின் பயனால் நமக்கு வருகிற நெல்லுக்கு இன்ன விலை வரும் என்ற நிச்சயமான உணர்வு அவர்களுக்கு இல்லை. நான்கு மாதம், ஆறு மாதம் கழித்து பலன் அளிக்கும் தொழில் அது. நான்கு-ஐந்து மாதம் பாடுபட்டு பயனைப் பெறும் சமயத்தில், உழைப்புக்கு உரிய பலன் அவர்களுக்குக் கிடைக்கும் நிலையில் சர்க்கார் விட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அப்படிப்பட்ட நிலை உண்டாகக்கூடாது. பாசன வசதி செய்து தந்திருக்கிறோம், உரவினியோகத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம், மண்வளப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று இவற்றை அடுக்கிக் கொண்டு போனால் மட்டும் பலன் தராது என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய முன்னேற்றத்திற்கு என்னென்ன அளவிலே சர்க்கார் துணை செய்கிறது என்றெல்லாம் பேசினார்கள். பொறுக்கு விதை பற்றி எனக்கு முன் பேசிய பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உர வினியோகத்தைப் பற்றியும் நன்றாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பசுந்தாள் உரத்திற்காக ஒரு திட்டம். திட்டம் என்று சொல்லுகிற நேரத்தில், நாங்கள் இத்தனை டன் விதைகளைக் கொடுத்திருக்கிறோம், அந்த விதைகளை இவ்வளவு விலைக்குக் குறைத்துக் கொடுத்திருக்கிறோம், பிறகு சர்க்காருக்குக் கொடுக்கிற நேரத்தில் விதைகளுக்கு மணங்குக்கு இவ்வளவு மான்யம் கொடுக்கிறோம் என்று கொடுத்திருக்கிறதே தவிர, கொடுத்த விதைகளில் நிலத்தில் போடப்பட்டது எவ்வளவு என்று எங்கேயும் கொடுக்கப்படவில்லை. மாவட்டத்தில் நடக்கக் கூடிய வட்டார வளர்ச்சி மன்றத்திலும் இத்தனை டன் விதைகள் நிலத்தில் போடப்பட்டது, இத்தனை டன் தழைகள் கிடைத்தது என்று கொடுக்கப்படுவதில்லை. எண்ணெய் கடன் பட்டது தவிர, பிள்ளை பிழைக்கவில்லை என்ற முறையில்தான் கணக்கு காட்டப் பட்டிருக்கிறதே தவிர பயனைப் பற்றி திட்ட வட்டமாகக் கொடுக்கப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கால்நடை வளம் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றிச் சொல்லுகிற நேரத்தில் மனிதனுடைய உணவு உற்பத்திக்கு கால்நடைகள் பயன் தருகின்றன, ஆகவே பெருக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் கால்நடைகளின் உணவைப் பெருக்க வழி வகை செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. முன் காலத்தில் சாதாரணமாக மேய்க்கால்கள் கிராமங்களில் இருக்கும். இப்போ தெல்லாம் மேய்க்கால்கள் இல்லை. அவைகளெல்லாம் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது சர்க்கார் கால் நடைச் செல்வத்தைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், ஏற் கனவே இருந்த மேய்க்கால் புறம்போக்குகள் இன்றைக்கு பட்டா நிலமாக இருப்பதை மாற்றி, மேலும் மேய்க்கால் புறம்போக்கு களை உண்டாக்கவேண்டும். அதே முறையில் போதிய அளவுக்கு, புதிய மேய்க்கால் புறம்போக்குகளை உண்டாக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் கால்நடைச் செல்வம் வளராது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பற்றி அரிய கருத்து ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய கருத்து என்றுகூடக் கொள்ள வேண்டாம், அது சான்றோர் கண்ட முடிவு. தஞ்சை ஜில்லாவிலே 15 மூட்டை, 14 மூட்டைகூட விளையவில்லை. அவ்வளவு தரம் குறைந்திருக்கிறது என்று தஞ்சை மாவட்டத்தி லிருந்து வருகிறவர்கள் சொல்லுகிறார்கள். காரணம் என்ன? காவேறி ஆற்றுப் பாசனம். காவேரி அணைக்கட்டு நீர் இவை நிறைய இருந்தும்கூட, அந்த நிலங்கள் பயன் தருவதில்லை. காரணம் என்ன? முன்பு அந்த நிலங்கள் எப்படிப்பட்ட நிலங் களாக இருந்திருக்கின்றன? ஒரு வேலிக்கு 1,000 விளையக்கூடிய நிலைமையில் இருந்தது. 'வேலி ஆயிரம் விளைக' என்று குறிப் பிட்டார்கள்.

ஒரு யானை படுக்கக்கூடிய சிறிய நிலத்தில் எழு பாலைகளுக்கு வேண்டிய உணவு விளையும்; "ஒரு களிறு படியும் சிறிடம் எழு களிறு புரக்கும் நாடுடையோயே" என்றெல்லாம் பாராட்டப் பட்டுள்ளது.

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப்படும்'

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். இதிலே இருக்கிற உண்மையை அந்தத் துறையிலே இருக்கிற நிபுணர்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். 'தொடி' என்பது நிறை அளவிலே அதிக அளவைக் குறிப்பிடுவது. 'கஃசா' என்பது அதே அளவு முறை யிலே குறைந்த அளவைக் குறிப்பிடுவது. 'தொடி' அளவு புழுதி யை கஃசா அளவு காயவிட்டால் பிடி எரு இல்லாமலே மிகவும் விளையும் என்று சொல்லிவிட்டார்கள். நிலம் எவ்வளவு காய்கிற தோ அந்த அளவுக்கு நல்ல பலனைத் தரும் என்ற உணர்வை நம் முடைய சர்க்கார் இலாகா எடுத்துக்கொள்ளவேண்டும். தஞ்சை ஜில்லாவில் காவேரி ஆற்றினால் எந்தக் காலத்தில் பயிரிடத் தொடங்கினோமோ, அந்த நாள்தொட்டு, இந்த நாள் வரையிலே நிலத்தில் நீர் பாய்ந்துகொண்டே இருக்கிறது. அதனால் அந்த நிலத்தில் நிச்சயம் நல்ல விளைவை எதிர்பார்க்க முடியாது. ஆகவே ஒரு ஆண்டுக்கு தஞ்சை ஜில்லா முழுவதும் உள்ள நிலங்களை காயவைக்கவேண்டும். அப்படிக் காயவைத்தால், அடுத்த ஆண்டில் இரண்டு ஆண்டு விளையக்கூடிய மகசூலை ஒரே ஆண்டில் நிச்சயம் தரும்.

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சை ஜில்லாவில் ஒரு ஆண்டு 15 லட்சம் ஏகரா நிலத்தையும் காயப்போட்டு விட்டால், தமிழகத்தில் பெரிய பஞ்சம் வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

கனம் சபாநாயகர் : மழை பெய்யாமலும் இருக்கவேண்டும், வெள்ளம் வராமலும் இருக்கவேண்டும். கனம் அங்கத்தினர் சொல்கிற மாதிரி வெறுமனே காயப் போட்டால் மட்டும் போதாதே.

***திரு. மு. மருதநாயகம் பிள்ளை :** இந்த விவசாயத் துறை மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயத்தைப் பெருக்குவதற்கு பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக சர்க்கார் நல்லதொரு திட்டத்தைக் கொடுக் கிறது. ஆனால், விவசாயிகள் கேணி வெட்டுவதற்கும், பம்பு செட்டு கள் வாங்குவதற்கும் கடன் கோரி மனுக்கள் போட்டால் ரொம்ப வும் காலதாமதம் ஆகிறது. நீண்ட காலத்திற்கு ஒரு வருஷம், 1½ வருஷம் என்று யூனியனிலேயே தாமதம் ஆவதால், விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலை மாற வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட யூனியன்கள் இந்த விஷயத்தை துரிதப்படுத்தி, விவசாயிகளுக்கு நல்ல முறையிலே உடனடியாக தாமதம் இல்லாமல் கடன் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். வட-

[திரு. மு. மருதநாயகம் பிள்ளை] [12th March 1964

மதுரை யூனியனில் வேல்வார்கோட்டை கிராமத்தில் ஒரு விவசாயி லோனுக்கு மனு போட்டு ஒரு வருஷம் ஆகிறது. ஒரு வருஷத்திற்குப் பிற்பாடு லோன் இல்லை என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக கவனித்து அந்த விவசாயிகளுக்கு லோன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

சாணார்பட்டி பிர்க்காவில், கோணைப்பட்டி-பாலாறு அணைக்கட்டு விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அதை சீக்கிரம் கட்டி முடித்துக் கொடுத்தால், அந்த வட்டார மக்கள் அதைப் பயன்படுத்தி விவசாயத்தைப் பெருக்குவதற்கு சாதகமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. நா. ப. செங்கோட்டுவேலு:** ஸார், கனம் விவசாய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மான்யத்தின் மீது நாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரேபணைகளை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு விவசாயம் தான் நம் நாட்டினுடைய பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான வருவாயாக இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உணர்ந்த விஷயம். ஆனால், இன்றைக்கு நாட்டிலே விவசாயம் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அனைவருக்கும் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல வருமானம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. விவசாய உற்பத்திச் செலவு, மற்றபடி வேறு இனங்களிலும் செலவு அதிகமாக இருக்கிற காரணத்தினால் விவசாயிகள் அதிக லாபம் பெற முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சேலம் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே தண்ணீரும் அதிகமாக இல்லாத காரணத்தினால், அவர்கள் பெரும்பகுதியில் புஞ்சை சாகுபடி செய்ய வேண்டியிருக்கிற காரணத்தினால், விவசாயம் நல்ல முறையில் செயல்பட முடியவில்லை. எனக்கு முன்பு சட்ட மன்றத்தில் பேசிய நண்பர்கள் தெரிவித்தபடி அங்கே ஒரு நல்ல நீர்ப்பாசனத் திட்டத்தை ஏற்படுத்தினால்தான், சேலம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் விவசாயத்தை அதிகப்படியான அளவிற்கு பெருக்குவதற்கு நலமாக இருக்க முடியும். திருமணி முத்தாறு: பொன்னியாறு போன்ற திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நல்ல முறையில் விவசாயிகளுக்கு ஒத்துழைப்பாக இருக்கவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாய அலுவலர்களாக இருக்கக் கூடியவர்கள் விஞ்ஞான அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு விவசாய அனுபவம் இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் பல விவசாய அலுவலர்கள் இருந்தாலும் அவர்களுக்குள்ள வேலை

12th March 1964] [திரு. நா. ப. செங்கோட்டுவேலு]

யெல்லாம் ஒரு கிளர்க் செய்யக்கூடிய வேலையாகத் தான் இருக்கிறதே தவிர, அவர்கள் நேரடியாக விவசாயிகளைச் சந்தித்து, அவர்கள் குறைகளைப் போக்கி, எந்த விதத்தில் பயிரிட்டால் லாபம் கிடைக்கும் என்ற அளவிலே அவர்களுக்கு அறிவுரை வழங்க முடியாத ஒரு நிலையிலே இருக்கிறார்கள். விவசாய அலுவலர்கள் யூனியன்களுக்கு அடங்கியவர்களாக இருக்கிற காரணத்தினால் ஒரு மாதத்திற்கு 2 நாட்கள் யூனியன் ஸ்டாப் மீடிங், அதோடு கவுன்சில் மீடிங், ஆர்.டி.ஓ. ஸ்டாப் மீடிங், D.A.O. ஸ்டாப் மீடிங் இப்படி பல அலுவல்களை கவனித்துக்கொண்டு, மீதியுள்ள நாட்களில் அரசாங்கத்திற்குத் தேவையான புள்ளிவிவரங்கள் சேகரிப்பதோடு அவர்கள் வேலை நின்றுவிடுகிறது. நேரடியாக அவர்கள் விவசாயிகளை சந்தித்து இன்னென்ன விதத்தில் விவசாயம் செய்தால், இன்னென்ன ரீதியிலே விவசாயம் செய்தால், இந்த அளவில் பலனை அடையலாம் என்ற முறையில் அவர்கள் அறிவுரை வழங்கக்கூடிய நிலையில் இல்லை. இவற்றையெல்லாம் அரசாங்கம் நல்ல முறையில் பரிசீலித்து, விவசாயிகளை நேரடியாக சந்தித்து இப்படி இப்படி விவசாயம் செய்யவேண்டும் என்று அவர்களுக்கு அறிவுரை வழங்குகிற அளவிற்கு அவர்களுக்கு ஓய்வு இருக்கக்கூடிய முறையிலே இந்தத் துறை இயங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய உற்பத்தி அதிகமாக இல்லை என்றால், இன்றைக்கு மாடுகள் விலை அதிகமாக இருக்கிறது. ஒரு ஜோடி மாடு வாங்க வேண்டுமென்றால், ரூ. 1,500 செலவழிக்க வேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால், விவசாயிகள் சுலபமாக மாடுகள் வாங்கி உழவுத் தொழில் நடத்த முடியவில்லை. எனவே, அதிக அளவிலே கால் நடைகளை விருத்தி செய்து, மாடுகளின் விலையைக் குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, நிறைய டிராக்டர்ஸ், புல்டோஸர்ஸ் இருக்கவேண்டும். இப்பொழுது அங்கே 8 புல்டோஸர்கள், 12 டிராக்டர்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்களே தவிர, கடந்த 4, 5 ஆண்டுகளாக புல்டோஸர்கள் வேண்டும் என்று கேட்டும் கிடைக்காத நிலையிலே பல பேர்கள் இருக்கிறார்கள். அதிலே நானும் ஒருவன் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 7, 8 புல்டோஸர்கள் இருந்தும், 4, 5 ஆண்டுகளாக அவை பழுதடைந்திருக்கின்றன என்றால், அதிலே போட்ட முதல் அத்தனையும் முடங்கிக் கிடக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதோடுமட்டுமல்ல அவைகளை பராமரிக்கும் அலுவலர்கள் இன்றைக்கு சம்பளத்தை வாங்கிக்கொண்டு சும்மாத்தான் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இதனால் ஏகப்பட்ட பணம் அரசாங்கத்திற்கு வீணாக முடங்கிக் கிடக்கிறது. ஆகவே, புல்டோஸர்களை ஒழுங்காக வேலை செய்யும்படியாகச் செய்து, அவைகள் அவ்வப்பொழுது விவசாயிகளுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புல்டோஸர்கள், டிராக்டர்கள் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்றால், குறைந்த வாடகைக்கு அவைகள் கொடுக்கப்படவேண்டும். அப்பொழுது தான் நிறைந்த பலனைக் கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். புல்டோஸர்கள், டிராக்டர்கள் வாடகைக் கட்டணம் மிக அதிகமாக இருக்கிறது. அதனால், விவசாயிகள் அவற்றை சரிவர பயன்படுத்த முடியவில்லை என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, விவசாயத்தைப் பொறுத்தவரையிலே நாடு வளர்ச்சி பெறவேண்டுமானால், விவசாயக் கருவிகளை ஏராளமான மக்களுக்குக் குறைந்த வாடகைக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Deputy Speaker, Sir, I would like to say a few words on the Demands that are placed for discussion before the House. Agriculture is being taken as an important subject. We will succeed only if certain activities of the various departments and also Ministers (the subject is dealt with by several Ministers) at State level and also district level are co-ordinated to step up food production. Then only it would be of help to the agriculturists.

Minor irrigation has been entrusted to Panchayat Unions. The point is the money allotted is not sufficient as the Panchayat Unions find it difficult, especially in taken-over villages, to repair the tanks which had been neglected for a long time and which are not upto the mark. These tanks should be repaired by Government and maintenance could be entrusted to Panchayat Unions. Regarding 'Special Minor Irrigation Works', many people do not know what is the work carried on under "Special Minor Irrigation Programme". Two departments attend to this work and we do not know whether there is any authority to co-ordinate their activities. I would request Government to issue instructions that whatever work is done the works are executed with the co-operation of both the departments. At present bunds of tanks, wherein there is no water, are being repaired. What I say is, let grossly neglected tanks be given first priority and schemes which would yield some remuneration might be taken up quickly.

Regarding de-silting-*cum*-reclamation work, in addition to the scheme of desilting, measures to prevent silting of tanks may be taken up and Government should see that sufficient precautionary measures are taken to prevent silting of tanks.

Regarding new-well subsidy schemes, it has been stated that if the work is not completed within the stipulated period, then the second instalment under the new-well subsidy scheme would not be given. This is an anomolous position. There may be genuine reasons for an agriculturist not being able to sink the well within the stipulated time. In such cases the administration should try to give him the second instalment and not take measures to recover the first instalment paid to the agriculturist.

Regarding river-pumping scheme, it ... want that it should be revived. If there are ... river-pumping scheme might be put into operation. ... the water pumped from the spring might benefit the ne... villagers.

Regarding 'implements' the problem to-day is that the agriculturist is not able to get the improved agriculural implements. Government should start industries for manufacture of improved agricultural implements. That would go a long way to step up food production. Generally we speak of tractors and tractors play an important part in the matter of agricultural operations. It is not always easy for an agriculturist to bring his tractor to Messrs. T.V.S. & Sons or to the private workshops here for repair. I suggest that Regional Service Centres might be started wherein the agriculturist could get the tractor repaired. For sake of industrial development, we have started polytechnics. I say for the sake of agricultural development also, polytechnics might be started giving the necessary training for agriculturists.

So far as supply of improved seeds is concerned, "gramasahayaks scheme" has been a failure, a complete failure. This scheme has not yielded the desired result. The gramasahayak and agricultural officer (I won't say they connive together) do not give improved seeds in time to the agriculturists. The factors responsible for non-supply of improved seeds in time to the agriculturists might be looked into and necessary remedial steps taken. In this connection I would also say that the people working in the villages, should furnish real figures regarding food production and not figures which would show achievement of targets, and which are considered mostly as wrong figures.

As regards fertilisers I want to say that fertilisers should be supplied in time. Let it not be distributed throughout the year and during off-seasons. It does not help the agriculturist. Government should take up the responsibility for distribution of fertilisers to agriculturists in the proper time. Sufficient precautions should be taken to control pests.

As regards animal husbandry, I want to say that the Veterinary Assistant Surgeons should be given sufficient incentive to go to rural areas. They must be treated on a par with other Assistant Surgeons in other departments. Regarding poultry units, sufficient grants may be provided for the starting of such units in the villages. Regarding Key Village Centres I want that recurring expenditure there should be diverted to non-recurring expenditure for construction of buildings for locating more Key Village Sub-Centres in other places.

With these words, I resume my seat. Thank you.

* திரு. செ. சதாசிவம்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கைகளை ஆதரித்தும், என்னுடைய தொகுதி

கிறேன். ஏனென்றால், எங்களுடைய பகுதி கோவைப் பகுதியைச் சார்ந்தது, அதே தன்மை வாய்ந்திருப்பதால் அங்கும் இந்த 2,000 ரூபாய்த் தொகை போதாது. இந்தத் தொகையை ஐயாயிரம் முதல் பத்தாயிரம் ரூபாய் வரை உயர்த்த வேண்டும். எங்கள் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலிருந்து கூட இதுபற்றி சிபார்சு செய்து அனுப்பியிருக்கிறோம். அதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

கிணறு வெட்டும் திட்டத்திற்காக நாம் அதிகமாகத் தொகை ஒதுக்கி ஆங்காங்கு ஏராளமான கிணறுகளை வெட்டிக்கொண்டு போகும்போது, ஊற்று நீர் மிக ஆழத்திலே சென்று கொண்டிருக்கிறது. மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் திரு. சேனாபதி கவுண்டர் அவர்கள் கூறியது போல், ஆங்காங்கு உள்ள குட்டைகள், சிறிய ஓடைகள் மூலமாகச் செல்லும் தண்ணீரை தடுப்பு அணைகள் கட்டித் தடுத்தால் ஊற்று நீரை அதிகமாகக் கொண்டு வர முடியும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது. சேலம், கோவை ஆகிய மாவட்டங்களில் தடுப்பு அணைகளை நேரடியாகப் போடலாம் என்ற கருத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எங்கள் பகுதிக்கு விஸ்தரிக்க வேண்டிய தன்மையில் எங்கள் பகுதி உள்ளது. இந்தத் திட்டத்தை நேரடியாக எடுத்துக் கொள்ள முடியாததற்குப் பி. டபிள்யூ. இலாகாவினர் பல காரணங்கள் கூறுகிறார்கள். நேரடியாகப் பாய்ச்சல் வசதி இல்லாத பகுதிக்கு இந்தத் திட்டத்தை அமுலாக்க முடியாது, என்று அவர்கள் கூறுகிறார்கள். அந்தக் காரணத்தினால், எஸ்.எம்.ஐ.பி. அல்லது ஸ்புட் ப்ரொட்டெக்ஷன் துறையினர் மூலமாகக் குட்டைகள் அமைப்பது, சிறு சிறு ஓடைகளில் தடுப்பு அணைகளைப் போடுவது ஆகியவற்றை மேற்கொண்டால் சிறிய நீர்ப்பாசன வசதிகளை நாம் செய்து கொடுக்கும்போது, கிணறுகளை வெட்டிக் கொடுக்கும் போது நாம் நிச்சயமாக அதிக ஊற்று நீரைப் பெற முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கிணறு வெட்டுகின்ற திட்டத்திலே நாம் அதிக சக்தியை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. மாரப்ப கவுண்டர் அவர்கள் அதுபற்றிக் குறிப்பிட்டார்கள். இப்பொழுது கிணறு வெட்ட ராக் ப்ளாஸ்டிங் மிஷின் உபயோகிக்கிறோம். அதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இப்பொழுது அதற்கு வேண்டிய வெடி மருந்து பங்களூரிலிருந்து நாம் வரவழைக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். அதை ரயில் மூலமாகக் கொண்டுவர ரெஸ்டிரிக்ஷன் இருக்கிறது. ஒரு நாளைக்கு எவ்வளவு தான் கொண்டுவரவேண்டுமென்ற ஒரு அளவை நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த முறையில் கொண்டுவரக்கூடிய மருந்துகள் போதுமா என்று பார்த்தால், வாரத்தில் இரண்டு நாட்களுக்குத்தான் உபயோகிக்கக் கூடிய அளவு இருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலைமை நீங்க வேண்டும். அந்த மிஷின்களை நல்ல முறையில் உபயோகப்படுத்திப் பயன் அடைவதற்குத் தேவையான வழிவகைகளைச் செய்யவேண்டு

அடுத்தபடியாக உர உற்பத்தித் திட்டம் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய அனுபவத்தில் இருந்து நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் இந்த எரு உற்பத்தித் திட்டத்தில் சரியான கவனம் செலுத்தவில்லை. பணத்தைச் செலவு செய்கிறார்கள். தவறான புள்ளி விவரங்களைத் தான் அரசாங்கத்திற்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட விவசாயிகளுக்கே இந்த பணத்தை நல்ல முறையில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்தால் அவர்கள் நல்ல முறையில் உர உற்பத்தியில் கவனம் செலுத்த முடியும். இதற்காக தனியாக அதிகாரிகளை நியமித்து அந்த நிதியை மானியமாகக் கொடுக்க வேண்டும். அதையும் கவனிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் திருமுட்டம் வட்டாரத்தில் ஏறத்தாழ ஐந்தாயிரம் எக்கர் பரப்புள்ள நிலம் நீர்பாசன வசதி இல்லாமல் இருக்கிறது. சப் ஆர்டிசான் வெல் என்று தோண்டும் வகையில் நிதி வழங்கி அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆர். ரங்கசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நாங்கள் இந்த மானியத்தின் மீது பேச எழுகிறபோது ஐந்து நிமிஷம் தான் பேசுவதற்கு வாய்ப்பு தரப்படுகிறது. சென்ற ஆண்டு பட்ஜெட் விவாதத்தின் போது விவசாய இலாகா மானியம் சம்பந்தப்பட்ட வரையில் இரண்டு, மூன்று தினங்களாவது இதற்காக ஒதுக்கித்தரவேண்டுமென்று என்போன்ற விவசாய அங்கத்தினர்கள் வேண்டிக்கொண்டார்கள். இருந்தாலும் பழைய நிலைமையிலேயே ஐந்து நிமிஷம் பேசுகின்ற வாய்ப்பு இப்போது எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்போதே இரண்டு நிமிஷம் ஆகியிருக்கும். இன்னும் 3 நிமிஷம் தான் இருக்கின்றன. பொதுவாக இப்பொழுதெல்லாம் விவசாயத்துறையைக் காட்டிலும் அதிகமாகத் தொழில் துறையில்தான் கவனம் செலுத்தப்படுகிறது. நம்முடைய நாட்டை ஒரு பெரிய தொழில் நாடாக ஆக்கவேண்டுமென்ற குறிக்கோளுடன் நமது திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டு இருக்கின்றன. எவ்வளவு தான் இந்த நாட்டில் தொழில் வளர்ந்திருக்கிறது என்றாலும், எவ்வளவு தான் விஞ்ஞான அபிவிருத்தி ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னாலும் கூட மக்களுக்கு அடிப்படைத் தேவையாக இருப்பது உணவு. மனிதர்கள் பற்பல தொழில்களில் ஈடுபடுவதே உணவுக்காகத்தான். ஆகவே உணவுப் பொருள் உற்பத்தி எவ்வளவு முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரியும். உணவினால் மட்டும் மனிதன் வாழ்வதில்லை என்றாலும் உணவு இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். அப்படி இருக்க உணவு உற்பத்தியைப் பெருக்கும் வேளாண்மைத் துறைக்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுத்து அதிகத் தொகை ஒதுக்கியிருக்கிறோமா என்றால் அதுவும் கிடையாது என்ற நிலைமையில் தான் இருக்கிறோம். இன்றைக்கு 130 கோடி வருமானம் வரக்கூடிய நமது மாநிலத்தில் சுமார் ஏழு

கோடியே எட்டு லட்சம் சொச்சம் தான் விவசாய மானியமாக கோரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பார்க்கப்போனால் அநேகமாக விவசாயிகள் எல்லோரும் கிராமத்தில் வாழ்கிறார்கள். என்போன்ற விவரம் தெரிந்த விவசாயிகள் தான் நகரத்தில் குடியேறி விட்டார்கள். படிக்காதவர்கள், விவரம் தெரியாதவர்கள், அன்றாடம் நிலத்தில் பாடுபட்டுக்கொண்டிருக்கிற ஏழை எளிய விவசாயிகள் எல்லாம் இன்றையதினம் கிராமங்களில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாக்கியுள்ளவர்கள் எல்லாம் நகரத்திற்குக் குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். நகர ஜனத்தொகையைக் கணக்கு எடுத்துப் பார்த்தால் சமீப காலத்தில் லட்சக்கணக்கான ஜனங்கள் கிராமங்களை விட்டு நகரத்திற்கு வந்து குடியேறியிருப்பதைப் பார்க்கலாம். முன்பு கிராமங்களில் காணப்பட்ட அமைதியும், நல்வாழ்வும், திருப்தியும் இப்போது அங்கே வாழ்கின்றவர்களிடத்தில் கிடையாது. வறுமையும், துன்பமும் தான் அவர்களிடத்தில் காணப்படுகிறது. பெரிய பெரிய காரை வீட்டு முன்பு கட்டிக் கொண்டவர்கள் இப்போது அதற்குச் சுண்ணாம்பு அடிக்கக்கூட வசதியின்றி இருக்கிறார்கள். இன்றையதினம் விவசாயிகள் உற்பத்தி செய்கிற விவசாயப் பொருள்களுக்காவது நல்ல விலை கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. சர்க்கரை ஆலைக்கு கரும்பு நல்லமுறையில் வரவில்லை என்ற உடனே, வெல்லம் ஏற்றுமதி செய்யக்கூடாது என்கிறார்கள். ஆனால் சர்க்கரை ஏற்றுமதியை அனுமதிக்கிறார்கள். எந்த விவசாயப் பொருளின் விலையாவது ஏறினால் உடனே அதை வெளிமாகாணங்களுக்குப் போகக்கூடாது என்று தடை விதிக்கிறார்கள். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாது என்று தடுத்துவிடுகிறார்கள். இதனால் எல்லாம் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் விவசாயிகள் தான் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இன்றைய தினம் விவசாயிகளால் எந்தப் பொருளை சாகுபடி செய்வது என்று தீர்மானிக்கவே முடியாமல் இருக்கிறது. எதைச் சாகுபடி செய்தாலும் அவர்களுடைய நிலையில் அவர்களுக்கே நஷ்டம் தான் ஏற்படுகிறது.

அதோடு கூட ஆற்றுப் பாசன வசதியுள்ள பிரதேசங்களைத் தவிர மற்றபடி புன்செய் தானியம் பயிரிடக்கூடிய, கிணற்றுப் பாசனத்தையே நம்பியிருக்கக்கூடிய எங்கள் பகுதியில் நாங்கள் படுகிற பாடு சொல்ல முடியாது. இன்றையதினம் தொழில்துறை அமைச்சர் அவர்களிடமே மின்சார இலாகாவும் இருக்கிறது. தொழில் துறையோ அவருடைய செல்லப் பிள்ளையாக இருக்கிறது. ஆகவே தான் விவசாயத் துறைக்கு மின்சாரம் கொடுப்பதைவிட தொழில்துறைக்கு தங்குதடையின்றி மின்சாரம் கொடுப்பதில் அவர்கள் அதிக அக்கறை உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால் விவசாயத்திற்கு இரவில் மின்சாரம் கொடுத்துப் பயன் இல்லை, பகலில் கொடுக்கவேண்டுமென்று பலகாலமாகக் கேட்டு வருகிறோம். தொழிற்சாலைகளில் எந்தக்காலத்தில் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். ஆனால் இன்னமும் விவசாயத்திற்கு இரவு நேரங்களில் தான் மின்சாரம் கொடுக்கிறார்கள். தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் 24

மணி நேரமும் கொடுக்கிறார்கள். இந்த நிலைமை மாறி விவசாயத்திற்கு அதிக அளவில் மின்சாரம் கொடுத்து விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாய இலாகா சம்பந்தமாக எத்தனை கோடி ரூபாய்களை ஒதுக்கினாலும் பரவாயில்லை. எங்கள் ஜில்லா மிகவும் பிற்பட்ட ஜில்லா. "எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் அமைச்சராக இல்லாததனால் தான் இன்றையதினம் எங்கள் மாவட்டம் மிகவும் பிற்போக்காக இருக்கிறது" என்று சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவரே ஒருவர் இப்போது விவசாய அமைச்சராக இருப்பதனால் இவர் எங்கள் மாவட்டத்திற்கு என்று திட்டங்களை வகுத்தால் பிற மாவட்டக்காரர்கள் புகார் சொல்வார்களோ என்று அஞ்சி, போதுமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிட்டார்களோ என்று நான் கருதுகிறேன். கல்விக்காக நாம் 30 கோடி ஒதுக்குகிறோம். கல்வியைப் போலவே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது விவசாயம். ஆகவே வேளாண்மைத்துறைக்கும் கூட அந்த அளவுக்கு நிதி ஒதுக்கி நல்லபல திட்டங்கள் நிறைவெற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையைப் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தகுதி மிக்க சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையைத் துவங்குகின்ற நேரத்தில் இறைவனுடைய முகத்தை நோக்கித் தண்டனிட்டுவிட்டு அதற்குப் பிறகு உரையைத் தொடங்கினார்கள். மற்ற அமைச்சர்களுக்கு இருக்கின்ற இலாகாகளுக்கெல்லாம் செயற்கையிலே சேர்ந்து இருக்கின்ற பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் விவசாயத் துறை இறைவனை எதிர்பார்ப்பது மாத்திரமல்ல; வானத்தை நோக்கித்தான் வாழ வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவேதான் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இறைவனை முதலிலே நோக்கினார்கள். அவர்களிடத்திலே இருக்கிற விவசாயத் துறை வானத்தை நோக்கியிருக்கிறது. அதாவது பயிர்கள் மழையை நோக்கி இருக்கின்றன. நாங்கள் இப்போது உங்களை நோக்கி இருக்கிறோம். ஏனென்றால் கொஞ்ச அதிக நேரம் கிடைக்காதா என்று உங்களை நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

விவசாயத் துறைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டாலும் நடைமுறையில் நிச்சயமாக அவ்வாறு இல்லை. உலகத்திற்கே வாழ்க்கைக்கு மிகவும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது உழவுதான் என்று பேசப்பட்டு வந்தாலும் அதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கின்ற நேரம் மிக மிகக் குறைவாக இருக்கின்றது. நான் தலைவர்களிடத்தில்—எதிர்க்கட்சி, ஆளும் கட்சி இருவரிடத்திலும்—இதற்கு நேரம் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். கூட ஒரு நாளாவது இதற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஆனால் என்ன காரணத்தாலோ இதை ஒரு நாள் விவாதத்தோடு முடித்து விடலாம் என்று கூறியிருக்கிறார்கள் என்பது புரியவில்லை. இங்கே

வந்திருக்கிறவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள்தான். ஆகவே இதைப்பற்றிப் பேசுவதற்கு ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் இருக்க வேண்டும். பேசுவதால் எல்லாம் நிறைவேறி விடும் என்ற ஆசையால் அல்ல; ஏதோ இதிலே பேசினோம் என்ற திருப்தியாவது அடையலாம். பட்ஜெட் கூட்டத்தை 30 நாள் என்பதை 40 நாள் அல்லது 50 நாள் என்று வைத்தாலும்கூட ஒன்றும் கெட்டு விடாது. ஏது எதற்கோ பணத்தைச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். விவாதத்திற்காக, அதிலே கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களைக்கூடச் சொல்ல முடியாத ஒரு நிலைமையில் வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றுவது உண்மையிலேயே ஜனநாயக முறையாக இருக்க முடியாது. சர்வாதிகார முறை என்று கூட நான் நிச்சயமாகச் சொல்வேன். அடுத்த முறையாவது அதிக நாட்கள் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இத்தனை நாட்கள் என்று நிர்ணயிக்கப்படுவதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் சேர்ந்துதான் முடிவு செய்கிறார்கள். இதை அங்கத்தினர் அவர்கள் குறை சொல்லுகிறார்கள்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: குறையல்ல. வேண்டுகோள்.

கனம் திரு. பூ. கக்கன்: ஜனநாயக முறையிலே இல்லையென்று சொன்னார்கள். ஜனநாயக முறையிலேதான் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: உலகத்திற்கே விவசாயம் அச்சாணியாக இருக்கிற காரணத்தால் நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் சார்பில் இரண்டு தலைவர்களுடனும் போராடி இரண்டு நாட்கள் விவாதத்திற்குக்காகப் பெற்றுத் தந்திருந்தால் பெருமையாக இருக்கும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பேட்டைப் பார்த்தால் விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஏட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, நாட்டிலே நிச்சயமாக அதற்கு முதலிடம் இல்லை. நான் திட்டத்தை குறை சொல்லவில்லை; திட்டம் வேண்டாம் என்று சொல்லவில்லை. இவ்வளவு திட்டம் போட்டதற்குப் பிறகும் விவசாயிகளுடைய நிலை உயர்ந்திருக்கிறதா, விவசாயிகள் சுமுகமாக வாழ்கிறார்களா என்று பார்க்கவேண்டும். இவ்வளவு கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம் என்ற புள்ளி விவரத்தைமட்டும் காட்டினால் போதாது. விவசாயிகள் நிம்மதியாக அரை வயிற்றுக்காவது சாப்பிடுகிறார்களா என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். திட்டங்களால் விவசாயிகள் பயன்பெறக்கூடிய நிலை இருக்கவேண்டும். அந்த நிலை இப்போது நிறைவேற்றப்படுகிற திட்டங்களால் ஏற்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுகிறபோது மோட்டையை அடைத்து ஆகவேண்டும். திடீரென்று அது பெயர்த்துக் கொண்டு போய்விடும்., அதுபோல விவசாயத் துறையில் செல

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [12th March 1964

வாகிற பணம் எவ்வளவோ மோட்டையாக போய்க்கொண்டிருக்கிறது. அமைச்சரவை இதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் 'விவசாயி என்று இருப்பவர்களைப்பற்றி கேட்க நாதியே இல்லை" என்று கூறினார். ஆகவே, இன்று உழவர்கள் எல்லாம் பாடுபட்டும் பலனில்லாது போகவே 'பகவானே நீ விட்ட வழி' என்ற நிலைமையில் இருக்கிறார்கள். விவசாயிகள் தொழிலாளி என்ற பட்டியலிலும் வரவில்லை, விவசாயி என்ற பட்டியலிலும் வரவில்லை, அவர்கள் மனித சமுதாயத்திலேயே நிச்சயமாக இல்லை. யார் விவசாயி என்று சர்க்கார் முடிவு செய்யவில்லை. உழுகிறவன் விவசாயியா? வேலை செய்கிறவன் விவசாயியா? வரப்பு மேல் வந்து சுற்றிப் பார்த்து விட்டுப் போகிறவன் விவசாயியா? நிலச்சுவான்தார் விவசாயியா? யார் விவசாயி என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லாத காரணத்தால் இன்றையதினம் பல வழக்குகள் ஹைகோர்ட் வரை சென்றிருக்கின்றன. தொழிலாளிக்குப் பாதுகாப்பு இருக்கிறது; ஆனால் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. தொழிலாளிகளுக்கு ரோடு வசதி, ஆஸ்பத்திரி வசதி எல்லாம் செய்து கொடுக்க முன் வருகிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு, அவர்களுடைய குடும்பத்திற்கு எந்தவித வசதியும் நிச்சயமாக இல்லை. நாட்டுக்கு முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஏன் அந்த வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கக் கூடாது? சில நாட்களுக்கு முன்பு ஒரு விவசாயி தன்னுடைய துணைவியை பிரசவ வேதனையோடு வண்டியில் ஏற்றிக் கொண்டு வருகிறபொழுது, நடுவழியிலேயே குழந்தை பிறந்து கஷ்டப்பட்டிருக்கிறார். அமைச்சர் அவர்கள் ரூரல் டிஸ்பென்சரிகள் இருக்கின்றன என்று சொல்லலாம். ஆனால் அவற்றில் டாக்டர்கள் இருப்பதில்லை; டாக்டர்கள் இருந்தால் மருந்து இருப்பதில்லை. ஏன் இன்னும் விவசாயிகளுடைய நிலைமை இப்படி இருக்க வேண்டும்? கோழி கூவுவதற்கு முன்னால் அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டு இரவு கோட்டான் கூவுகிறபோது கூடத் திரும்பிச் செல்ல முடியாத அளவுக்கு அவன் உழைக்கிறான். தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டால் இரவிலும் அங்கேயே படுத்துவிடுகிறான். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு என்ன வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள்? நான் தொழிலாளர்களைப் பற்றிப் பொறாமை பட்டுச் சொல்லவில்லை. விவசாயிகளை எந்தப் பட்டியலிலே சேர்த்திருக்கிறார்கள்? என்ன வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள்? விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. அது எப்படி இருக்கிறது என்றால், 'எண்ணெய் செலவழிந்தது தான் மிச்சம்; பிள்ளை பிழைக்கவில்லை' என்ற அளவில்தான் இருக்கிறது. கிணறு வெட்டப் பணம் கொடுக்கிறார்கள்; ஆனால் சிமெண்ட் கிடையாது. சிமெண்ட் கிடைக்கும் வரை காத்துக் கொண்டிருந்தால், கிணற்றை கட்டி முடிக்கவில்லையென்று சொல்லி, கொடுத்த பணத்தை திரும்ப வசூலிக்க வந்து விடுகிறார்கள். பலன் எங்கே ஏற்பட்டிருக்கிறது?

12th March 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

உரத்திற்கு கடன் கொடுக்கிறார்கள். விவசாயி கையில் பணம் கிடைக்கிற நேரத்தில் உரம் ஸ்டாக் இருப்பதில்லை. எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தப் பகுதிகளுக்கு உரம் கொடுக்கவேண்டுமென்பதை வரையறுக்க வேண்டும். திருச்சியில் கார் சாகுபடி இரண்டு மாதம் கழித்துச் செய்வார்கள்; தஞ்சையில் கொஞ்சம் முந்திச் செய்வார்கள். அதையெல்லாம் கவனித்து உரம் சப்ளை செய்யவேண்டும். ஒரு தாலுக்காவில் உரம் அதிகமாக இருக்கிறது; மற்றொரு தாலுக்காவில் குறைவாக இருக்கிறது. ஒரு தாலுக்காவில் இருப்பவர்கள் இன்னொரு தாலுக்காவில் போய் வாங்கவேண்டுமென்றால் முடியாது. இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து எந்தெந்தப் பகுதிகளுக்கு எந்தெந்த நேரத்தில் கொடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்து உரத்தை வழங்க வேண்டும்.

விவசாயத்திற்கு, பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை நிச்சயமாக அமலாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புது வாய்க்கால்களை வெட்டுகின்றபோது தண்ணீர் அதிகமாக வரும் என்று விவசாயிகள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பின்னர் அந்தத் தண்ணீர் ஏரிகளுக்கே தவிர, கால்வாய்களுக்கு அல்ல என்று சொல்லப்படுகிறது. கிளை வாய்க்கால் வெட்டப்பட்டு ஆயக்கட்டில் சேர்க்கப்பட்ட புஞ்சைப் பகுதிகளாக இருந்தவற்றுக்கு எல்லாம் நஞ்சைத் தீர்வைகள் வசூலிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இருந்தும் விவசாயி அந்தத் தண்ணீரை எடுத்துப் பயன்படுத்த முடியவில்லை.

பயன்படுத்த முடியாதது மட்டுமல்ல. வாய்க்கால்களுக்கு 12 00 noon.
இரண்டு பர்லாங் தூரத்திற்கு அந்தப் பக்கத்தில்தான் கிணறு அல்லது பம்ப் செட் வைத்துக் கொள்ளலாம் என்ற முறை இருக்கிறது. கிளை வாய்க்கால்கள் என்றால் ஒரு பர்லாங்குக்கு அப்புறம்தான் பம்ப் செட்டோ அல்லது கிணறோ வைத்துக் கொள்ள முடியும். வாய்க்காலிலும் தண்ணீரை இழுத்து விடும் என்று சொல்கிறார்கள். இப்படியிருந்தும் வாய்க்காலில் தண்ணீர் வரவில்லை. பக்கத்திலுள்ள கிணறு வெட்டவும் முடிவதில்லை. ஆகவே அந்தப் பகுதியில் கிணறு வெட்டினால் நீர் தீர்வையாவது வாங்கிக் கொள்ளுகிறார்கள், விவசாயம் காயாமல் இருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். இன்டஸ்ட்ரீஸ்க்கு யூனிட்டுக்கு 12 புதுக்காசு என்று இருக்கிறது மின்சாரத்திற்கு. விவசாயத்திற்கு 8 காசு, 9 காசு என்று வாங்கப்படுகிறது. இதைக் குறைத்துக் கொடுக்கவேண்டும். அப்படிக் குறைத்துக் கொடுத்தால்தான் விவசாயிகள் அதை நல்ல முறையில் பயன்படுத்த முடியும். இப்போது நான்கு வாய்தா என்றிருக்கிறது. அதை மூன்றாக ஆக்கப்போவதாகக் கேள்விப்பட்டேன். அது விவசாயிகளுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தும். இந்த நான்கு வாய்தா கெடுவே இருக்கவேண்டும். உரத்திற்காக கொடுக்கப்படுகிற கடன், கிணறு வெட்டக் கொடுக்கப்படும் கடன் மாடுகள் வாங்க கொடுக்கப்படும் கடன், இவை எல்லாவற்றையும் சேர்த்து கிஸ்தியோடு வசூல் செய்யும் முறை இருக்கிறது. தங்கள் மூலம் நான் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன் நான்கு

தவணைகள் என்பது மட்டுமல்லாது சர்க்கார் கடனை எப்ராலுக்கு அப்புறம்தான் வசூல் செய்யும்படி திட்டவட்டமான உத்திரவு வேண்டும். இன்னும் அறுப்பாகவில்லை, பலயிடங்களில் அப்படியிருக்க கடனை திருப்பிக் கொடுக்கவில்லை ஜப்தி செய்வேன் என்று சொல்லி உழவுமாடுகளைப் பிடிப்பதும் கோர்ட்டில் கொண்டு நிறுத்துவதும் சரியல்ல. எப்ராலுக்கு அப்புறம்தான் வசூல் செய்ய வேண்டுமென்றும், வாய்தா நான்காவும் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வேளாண்மை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் 1964-65-ம் ஆண்டு மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நம் நாட்டில் விவசாய உற்பத்தியைப் பெருக்க சிறந்த முறையில் பல வகைகளில் நம் அரசாங்கம் நல்லமுறையில் பணியாற்றி வந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறிய நீர்பாசனத் திட்டங்கள் இவற்றையெல்லாம் நிறைவேற்றி, குட்டை குளங்களை சீர்படுத்தி, கிணறுகள் வெட்டி, கால்நடைகள் வாங்க மான்யம் கொடுப்பது, கடன் கொடுப்பது, விவசாயக் கருவிகள் வாங்க மான்யம், கடன் வசதி போன்றவை கொடுப்பது, உரம் வாங்க கடன் கொடுப்பது, மான்யம் கொடுப்பது இந்த வகையில் உதவி செய்து நல்லமுறையில் அரசாங்கம் பணியாற்றி வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்னும் பல நன்மைகள் செய்ய வாய்ப்பிருக்கிறது. கிணறு வெட்ட 2,000 ரூபாய் கொடுக்கிறார்கள். கோவை மாட்டத்தை எடுத்துக் கொண்டால் ஒரு கிணறு வெட்ட 5,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை ஆகும். ஆனால் மான்யமாக ஆயிரம்தான் கொடுக்கிறார்கள். இந்த மான்யத் தொகை எல்லோருக்கும் கிடைப்பதில்லை, சிலருக்குத்தான் கிடைக்கிறது. மான்யமாக ஆயிரமும், கடனாக ஆயிரமும் கொடுக்கிறார்கள். அப்படி விவசாயி கிணறு வெட்ட மான்யம் வாங்கும்போது பாதி ரூபாய்க்கு மேல் செலவாகிவிடுகிறது. ஆபீசர்கள் ஏதோ இலவசமாகக் கொடுப்பதுபோல் நினைத்து, ஒரு சலுகை கொடுப்பதுபோல் நினைத்து கிடைக்கும் ரூபாயில் 500-யை செலவு செய்துவிடுகிறார்கள். மீதி 1,500 தான் இருக்கிறது. இதைக் கொண்டு கோவையில் கிணறு வெட்ட முடியுமா? அது பிரயோஜனம் இல்லை. ஆகவே மான்யத்தை எடுத்து விட்டு 5,000 அல்லது 10,000 ரூபாய் ஆனாலும் கடனாக் கொடுத்து விட்டால் கிணறை வெட்டுவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நம் உணவு அமைச்சர் அவர்கள் பேசியதை பத்திரிகைகளில் பார்த்தேன். கள்ளமார்க்கட் செய்கிறவர்கள், கொள்ளை லாபம் அடிக்கிறவர்கள், பதுக்கல்காரர்கள் இவர்கள் மீது அரசாங்கம் கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கும் என்று தெரிவித்துள்ளார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். அதேபோல் சிமென்ட் கொடுப்பதிலும் விவசாயிகளுக்கு முதல் இடம் அளிக்கப்படவேண்டும். ஆனால் அப்படிக் கொடுப்பதில்லை. எங்கெங்கோ வழியிலோ பெர்மிட்

கொடுத்து விடுகிறார்கள். அப்போது விவசாயி எப்படி உற்பத்தியைப் பெருக்கமுடியும்? நம் நெருக்கடி நிலையில் நாம் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. என் தொகுதியில் ஒருவர் சிமென்ட் வேண்டுமென்று விண்ணப்பித்தார். ஆனால் சிமென்ட் கிடைக்கவில்லை. ஒரு மாதம் சென்று கேட்டால் அடுத்த மாதம் கோட்டா வரும் என்று சொல்கிறார்கள். அடுத்த மாதம் சென்று கேட்டால் அடுத்த மாதக் கோட்டா வரும்போது தரலாம் என்று சொல்கிறார்கள். இப்படியாக மாதங்கள் ஆறு ஆகிவிட்டது. அவர், ப்ரஷர் டாங்க் கட்டுவதற்காக கேட்டார்கள். இதற்குக் காரணம் என்ன? அதிகாரிகளின் அசிரத்தைதான். ஆகவே விவசாயிகளுக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும், இல்லாவிடில் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தால் அந்த விவசாயிகள் எல்லாம் அமைச்சர் அவர்களைப் போற்றுவார்கள், பாராட்டுவார்கள், பணிவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்" என்று வள்ளுவர் பெருமான் கூறியிருக்கிறார்கள். அது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புள்ள நிலை. இன்று விவசாயிகளை எடுத்துக் கொண்டால் எல்லா இலாகா ஆபீசர்களையும் தொழுது கொண்டு, பின் சென்றுதான் தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது. ஒரு ஆபீசுக்கு ஒரு விவசாயி சென்றால், விவசாயி என்று தெரிந்தால் அவருக்கு சரியான மதிப்பு கிடையாது. மிலர் முதலாளிகள் இருக்கிறார்களே, அவர்களுக்குத்தான் மதிப்பு இருக்கிறது. மில் முதலாளிகள் என்றால் ஐந்து அல்லது பத்து வருடங்களில் பணக்காரர்களானவர்கள். பங்களா, கார் போன்றவை உள்ளவர்கள். அவர்களுக்குத்தான் மதிப்பு இருக்கிறது, விவசாயிகளுக்கு எந்த விதி மதிப்பும் கிடையாது. நம் அரசாங்கத்திற்குள்ளும் அது வந்து புகாமல் இருந்துவிட வேண்டும். இந்த சட்டசபையிலும் அது வந்து புகாமல் இருக்கவேண்டும், இங்கும் வந்து புகுந்து விடக்கூடாது. (மணி அடிக்கப்பட்டது.) நான் ஒரு சிறிய விவசாயி ரொம்பவும் கஷ்டப்படுகிறவன். எனக்கு கூடுதல் ஐந்து நிமிடங்கள் கொடுங்கள். எங்கள் தொகுதியில் குடிமங்கலம் பிர்க்காவில் குடிதண்ணீர் கிடையாது. ஆகவே அங்கு குடிதண்ணீருக்கு வேண்டிய வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொழில் அமைச்சர் அவர்கள், தொழில்களை எடுத்துக் கொண்டால் சொந்தப் பிள்ளை போல் கவனிக்கிறார்கள். ஆனால் விவசாயத்தை எடுத்துக் கொண்டால் மாற்றாந்தாய் பிள்ளை போல் நினைக்கிறார்கள். அவர்களும் விவசாயிகளுக்கு வேண்டிய சலுகைகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை அபிவிருத்தி மேலும் அபிவிருத்தி அடைந்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு வெட்டர்னரி காலேஜ்தான் நம் மாநிலத்தில் இருக்கிறது. எங்கள் கோவை ஜில்லாவிலும் கால்நடை காலேஜ் (வெட்டரினரி காலேஜ்) ஏற்படுத்திக் கொடுத்தால் கால்நடை டாக்டர்கள் அதிகமாக வர வசதி ஏற்படும் என்று தெரிவித்துக் கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. இராசாங்கம்: மாமன்ற துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மான்யத்தின் மீது எங்கள் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். வேளாண்மைத்துறை நல்லதுறைதான். வேளாண்மை அமைச்சர் அவர்கள் நல்லவர்கள்தான். போட்டிருக்கிற திட்டமும் நல்ல திட்டம்தான். ஆனால் நடைமுறை அவை அத்தனைக்கும் விரோதமாக இருக்கிறது என்பதை நான் மிக மிக தாழ்மையாக சொல்லிக் கொள்கிறேன். இன்று நேரம் குறைத்துக் கொடுத்தது, குறைவான வாய்ப்பு, சமயம் கொடுத்திருப்பதற்குக் காரணம் குறைகளை கூடுதலாக சொல்லி விடுவார்களே என்ற காரணத்திற்காகத்தான் இப்படி ஏற்பட்டு விட்டதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

கனம் உதவி சபாநாயகர்: அந்தமாதிரி எல்லாம் ஒன்றுமில்லை. இன்றைய தின விவாதத்திற்கு எவ்வளவு நேரம் என்று தலைவர்கள் கூடி நிர்ணயித்தார்கள். இந்த சபை அங்கத்தினர்கள் பெரும்பாலோர், இதில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்பதினால்தான் நேரம் குறைக்கப்பட்டதே தவிர நேரம் குறைக்கப்பட்டதற்கு அமைச்சர் பொறுப்பாளி அல்ல. கனம் அங்கத்தினர் சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்லலாம்.

திரு. மா. இராசாங்கம்: நம் நாட்டிலுள்ள 75 சதவிகிதம் விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லோரும் இன்று துன்பக்கட்டத்தில் தான் இருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் . . ." என்ற நிலையில் உழுது கொண்டு வாழ்கிற வாழ்க்கை இருக்கிறது என்று திட்டவட்டமாக சொல்லமுடியாது. முன்பு இருந்தது நல்ல வாழ்க்கை. இன்று உழுது கொண்டு வாழ்பவர்கள் என்றால் சாதாரணமாகத்தான் நினைக்கிறார்கள். அவர்களை, பட்டிக்காட்டுக்காரன், கிராமத்தில் இருந்து வந்தவன், மேல் துணியோடு வந்திருக்கிறான் என்றுதான் சாதாரணமாகக் கருதுகிறார்களே தவிர அவர்கள்தான் மக்களை வாழ வைக்கிறவர்கள், அவர்கள்தான் நாட்டின் முதுகெலும்பு என்று கருதுவதில்லை. இந்நிலையை மாற்றியமைக்கவேண்டும். அவர்களுக்கு என்று தனியா சலுகை காண்பிக்காவிட்டாலும் ஓரளவு கண்ணியமாவது கொடுக்கவேண்டும் என்று உங்கள் மூலமாக அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன் . . .

கனம் திரு. பூ. கக்கன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாயிகளுக்கு வேண்டிய மதிப்பு கொடுக்கப்படவில்லை என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அது சரியல்ல, சபையில் இருக்கின்றவர்களில் பெரும்பாலும் விவசாயிகள்தான் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. இராசாங்கம்: கனம் அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் ஏராளமான புள்ளிவிவரங்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். விதைப்பண்ணையைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதில்,

134 இதுவரை நடந்து வந்தது, இப்போது நடப்பு ஆண்டில் 206-ஆகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த 134 விதைப் பண்ணைகளிலும் எப்படி வேலை நடந்து கொண்டிருக்கிறது, என்ன வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி நாம் பார்க்க வேண்டும். இந்த 134 விதைப்பண்ணைகளில், ஏறத்தாழ, மூன்று போகம் விளையக்கூடிய நிலங்களை விதைப்பண்ணைக்காக எடுத்திருக்கிறார்கள். இதில் விவசாயம் செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை, இந்த மூன்றுபோகம் விளையக்கூடிய நிலத்தில் விவசாயம் செய்கிறார்கள். இதில் இரண்டு போகமாவது விவசாயம் செய்கிறார்களா என்று பார்த்தால் அதுவும் இல்லை, என்னுடைய பகுதியில் மூன்று போகம் விளையக்கூடிய நிலத்தை விதைப்பண்ணைக்காக எடுத்துக்கொண்ட பிறகு, ஒரு போகம் மட்டும் விவசாயம் செய்கிறார்கள். இப்படி மூன்று போகம் இருந்ததை இரண்டு போகமாக்கி, ஒரு போகமாக்கி விவசாயம் செய்து கொண்டிருந்தால் எப்படி உணவு உற்பத்தி பெருக முடியும், எப்படி விலைவாசியை குறைக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். சர்க்கார் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் இதுவரை காகிதத்தில்தான் நேரமாகிறது என்று நினைத்துக்கொண்டிருந்தேன், ஆனால் விவசாய இலாகா செய்திருக்கும் முயற்சிகளைப்பார்க்கும் போது நெல் விளைச்சல் வர வரக் குறைந்து, விலைவாசி இன்னும் அதிகமாக ஏறிக்கொண்டுதான் போகுமோ என்று அச்சப்பட வேண்டிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர்களுக்கு நான் உங்கள் மூலமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மூன்று போகம் விளைந்து கொண்டிருந்த இடத்தில் இப்போது ஒரு போகம் விவசாயம் செய்வதைப் பார்த்தால், மாடி வீட்டிலிருந்து குச்சு வீடு கட்டுவது போல் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். விதைப் பண்ணைக்காக எடுக்கப்பட்ட குளத்திற்கு காம்பன்சேஷன் கொடுக்கப்படும் என்று மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் அங்குவந்திருந்த போது சொன்னார்கள். ஆனால் அப்போது இருந்த கலெக்டரும் மாறி வேறிடத்திற்கு போய்விட்டார். இப்போதுள்ள கலெக்டரிடத்தில் போய்க்கேட்டால், நான் புதிதாக வந்திருக்கிறேன், எனக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. காமராஜ் அவர்கள் நேரிடையாக சொன்னதற்கு என்னிடத்தில் எந்தவிதமான தகவலும் இல்லை என்று சொல்லி, இன்று குளத்தை கொடுத்தவன் நட்டாற்றில் நின்று கொண்டிருக்கிறான். இந்த இடத்தில் சதுப்பு நிலமாக இருந்தாலும் அதை விவசாயிகள் பயன் படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இம்மாதிரிப்பட்ட இந்த குளத்தை விதைப்பண்ணைக்காக எடுத்ததற்கு கொடுக்கவேண்டிய காம்பன்சேஷன் இதுவரை கொடுக்கப்படவில்லை, கொடுக்க வேண்டுமென்ற விஷயம் வெறும் காகிதத்தில் தான் இருக்கிறது. நிலத்தின் மீது இன்னும் கொடுக்கவில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்த வரையில், மதுரை மாவட்டத்திற்கு ஒன்றுமே செய்யவில்லை என்று, ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று

நான் சொல்ல முன்வரவில்லை. செய்தது சீர்பட செய்யவில்லை என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். நான் இதற்கு முன்னாலேயே கூறியிருக்கிறேன் எங்கள் பகுதியிலுள்ள வரட்டாறு வாய்க்கால் . . . (கனம் திரு. வெ. ராமையா : பெயரே 'வரட்டாறு' என்று இருக்கிறது . . .) பெயர் வரட்டாறு என்றிருந்தாலும், இதில் தண்ணீர் வந்தால் ஜிலு, ஜிலு என்றிருக்கும் இந்த வறட்டாற்றில் வருகிற தண்ணீர் வீணாக இப்போது பெரியாற்றில் போய்கொண்டிருக்கிறது. இதைச் சீர்படுத்தினால் சுமார் 1,000 ஏகர் நிலம் விளைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதைப்பற்றி பரிசீலிப்பதற்காக பெரிய என்சினீர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். இதைப்பற்றிய கணக்குகள் எல்லாம் போடப்பட்டிருக்கிறதே தவிர வேலைத்திட்டத்திற்கான அறிகுறிகள் ஒன்றுகூட தென்படவில்லை. இவ்விதம் செயல்கள் நடைபெற்றுக்காண்டிருந்தால் எப்படி உணவு உற்பத்தி பெருக முடியும். வீணாக போகின்ற தண்ணீரை நல்ல முறையில் உபயோகிக்க வேண்டாமா? இந்த வேலை ஏன் தடைபடுகிறது என்று கேட்டதற்கு, எனக்கு கிடைத்த விடை, இந்த வரட்டாறு திட்டத்தின் காரணமாக ஒருவருக்கு 50 ஏக்கர் தோட்டம் தடைபடுகிறது என்று சொல்லப்பட்டது. ஒருவருக்கு 50 ஏக்கர், 20 ஏக்கர் தோட்டம் தடைபடுகிறது என்பதற்காக சுமார் ஆயிரம் ஏக்கர்கள் பயன்படக்கூடிய திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதில் கனம் அமைச்சர் அவர்கள் தலையிட்டு, நல்லபடியாக செய்வதற்கு வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாக்குநாற்றுப் பண்ணைகள் ஏற்படுத்துகின்ற விவரங்களில், கன்னியாகுமரி, கடலூர், பட்டுக்கோட்டை இந்த இடங்களில் எல்லாம் பாக்குநாற்று வளர்க்க திட்டமிடப்படிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கடலூரில் இந்த வேலை நடைபெறவே இல்லை. ஆனால் புத்தகத்தில் சொல்லப்பட்டிருப்பதைப்பார்த்து நான் திகைத்துவிட்டேன். நமக்கு தெரியாமல் ஏதாவது நடந்திருக்கிறதோ என்னவோ என்று திகைத்தேன். திடீரென்று ஏதாவது பயிரிடப்பட்டதா என்பதைப்பற்றி மற்றவர்களிடமும் கேட்டேன். அவ்விதம் ஒன்றும் இல்லை என்பதை பின்னால் அறிந்து கொண்டேன். இப்படி திடீரென்று முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் சொல்லப்பட்டிருப்பதைப்பார்த்து ஆச்சரியப்பட்டேன். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். . .

(மணி அடிக்கப்பட்டது.)

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுறேன். எங்கள் பகுதியில் இருக்கின்ற முக்கியமான ஒரு பிரச்னையைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். அதாவது எங்கள் பகுதியிலுள்ள பனைமரத்துப்பட்டி ஏரி 1911-ல் ஏற்பட்டது. இந்த ஏரி நான்கு ஊர்களை அழித்து அப்போது இந்த ஏரியை

ஏற்படுத்தினார்கள். அப்போது இந்த ஊர்களிலிருந்தவர்கள் பக்கத்து இடங்களில் போய்விட்டார்கள். இப்போது இந்த ஏரியில் இருக்கின்ற தண்ணீரைப் பார்த்தால் இரண்டு ஊரில்தான் நிற்கிறது. அதாவது காளியூரிலும், முத்தானூர் ஏரியிலும்தான் தண்ணீர் நிற்கிறது. சூரியூர், அத்திப்பட்டி என்ற கிராமத்தில் தண்ணீர் எதுவும் இல்லை. இங்குள்ள ஜனங்கள் எல்லாம் கூலி வேலை செய்து ஜீவனம் நடத்தி வருகிறார்கள். முன்னால் இந்த ஏரிக்காக 2,500 ஏக்கர்கள், எடுக்கப்பட்டிருந்தும்; இதில் இப்போது 500 ஏக்கர்தான் தண்ணீர் நிற்கிறது. மற்ற இடங்கள் எல்லாம் கரடாகத்தான் (தரிசாகத்தான்) இருக்கிறது. இந்த பனைமரத்துப்பட்டி ஏரிக்கு இடமலை, போதமலை, பெருமாமலை; செவலமலை போன்ற இடங்களிலிருந்துதான் தண்ணீர் வந்துக்கொண்டிருக்கிறது. இந்த மலைப்பிரதேசங்களில் சுமார் 10, 15 ஊர்கள் இருக்கின்றன. இந்த ஊர்களை எல்லாம் தாண்டித்தான் தண்ணீர் இந்த பனைமரத்துப்பட்டி ஏரிக்கு வருகிறது. ஆகவே இப்போது இந்த ஏரியில் சும்மாக் கிடக்கும் இடத்தை விவசாயத்திற்கு கொடுக்கவேண்டும் என்று அந்த ஊர் ஜனங்கள் எல்லாம் சேர்ந்து தீர்மானம் போட்டு—மலை ஜாதியினர் ஆலோசனைக் குழுவில்—தீர்மானம் போட்டு பாபனாசத்தில் அமைச்சர் கக்கன் அவர்கள் வந்தபோது கொடுத்தோம். அப்போது அங்குள்ள வெல்பேர் ஆபீஸர், அத்திப்பட்டி, சூரியூர் இந்த கிராமத்திலுள்ள தண்ணீர் வந்தால் என்ன செய்வது, ஆதலால் சும்மாக்கிடக்கிற இடத்தை விவசாயத்திற்கு கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் உண்மையில் இந்த தண்ணீர் பனைமரத்துப்பட்டி ஏரிக்கு வருவதில்லை. இதைப்பற்றி நாங்கள் பல தடவை சொல்லியிருக்கிறோம். இதற்கு மேலேயும் கீழேயும் இருக்கின்ற மக்கள் எல்லாம் இந்தத் தண்ணீரைத்தான் குடிக்கிறார்கள், உபயோகிக்கிறார்கள். இந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல்லாம் மிகவும் தாழ்ந்த நிலையில் வாழ்கின்ற மக்கள். அரிஜன மக்கள், அருந்ததிய மக்கள், மலைஜாதியினர். சூரியூரில் மட்டும் பிற்போக்கான மக்களே இருந்து வருகிறார்கள். அத்திப்பட்டியில் எல்லா ஜனங்களும் இருந்து வருகிறார்கள். இங்குள்ள நிலைமையைப்பற்றி அடிக்கடி அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். அவர்கள் எல்லாம் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஏழு வருடமாக சட்டசபை மெம்பராக இருக்கிறீரே, ஒரு தடவைகூட, மந்திரியை நம்முடைய இடத்திற்கு அழைத்துக்கொண்டு வரவில்லையே என்று என்னைப்பார்த்து குறைப்பட்டுக்கொள்கிறார்கள். நான் அவர்களிடம் சொல்லுகின்ற ஆறுதல் என்னவென்றால்—சாதாரணமாக அழுகிற குழந்தையினிடம் அழுகையை நிறுத்துவதற்காக வாழைப்பழத்தைக் கொடுத்தால் அதை மூத்த குழந்தை வாங்கி சாப்பிட்டுவிட்டு—பின்னாலும் குழந்தை அழுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதைப்போல்—நான் அவர்களைப் பார்த்து, நம்முடைய மந்திரி, இந்த இடத்திற்கு வரவில்லை என்றாலும், நமக்காக பல வசதிகள் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூட பிள்ளைகளுக்காக ஹாஸ்டல் வசதியெல்லாம் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல வசதிகள் எல்லாம் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அவர்களை சமாதானப் படுத்திக்கொண்டிருக்

[திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்] [12th March 1964

கிறேன். ஆகையால் தயவு செய்து இன்னும் கொஞ்சம் அதிகமாக மலைஜாதி மக்களுக்காக பணத்தை ஒதுக்கி அவர்களை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எஸ். எஸ். ராஜேந்திரன்:** கனம் மாமன்றத்தின் உதவித் தலைவர் அவர்களே, இம்முறை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிற மான்யத்தைப் பற்றி என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன்.

எதிர் கட்சி வரிசையிலே நான் வீற்றிருக்கிற காரணத்தினாலே, இந்த வேளாண்மைத் துறைக்கு அரசாங்கம் இது வரையில் எதுவும் செய்யவில்லை என்று நான் கூறத் தயாராயில்லை. செய்து இருக்கிறார்கள். விவசாயத் துறையிலே தமிழகத்து அரசாங்கம் குறிப்பாக அக்கறை காட்டுகிறார்கள் என்றாலும்கூட இன்னும் அது போதவில்லை, இன்னும் நல்ல மாதிரி செயல்படவில்லை என்கிற குற்றச்சாட்டுகளை தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொண்டு, 'உங்கள் ஆர்வம் மேலும் அதிகமாக விவசாயத் துறை பக்கத்தில் இருக்கவேண்டும்' என்று அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறை பற்றிக் குறிப்பிடுகிற நேரத்திலே என்னுடைய தொகுதி பற்றி சில விஷயங்களை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதி என்றவுடனே, ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் ரெங்கசாமி ரெட்டியார் பேசுகையிலே சொன்னார்கள், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவராக விவசாயத்துறை அமைச்சர் இருக்கிற காரணத்தினால், எங்கள் மாவட்டத்திற்கு அவர்கள் அதிகமாக நன்மை செய்து விட்டால், எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள் 'அவர்கள் மாவட்டத்திற்கு அதிகமாகச் செய்து விட்டார்கள்' என்று குறை சொல்லுவார்களோ என்று எண்ணி அவர்கள் செய்யாமல் இருக்கிறார்களோ என்ற கருத்தை வெளியிட்டார்கள். இதே நேரத்தில் கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், 'அப்படி எதிர் கட்சிக் காரர்கள் சொல்ல மாட்டார்கள், சொன்னாலும் நான் சமாளித்துக் கொள்கிறேன்; அந்தக் காரணத்திற்காகச் செய்யாமல் இருக்க வேண்டாம்' என்று சொல்லிக்கொள்கிறேன். (சிரிப்பு).

குறிப்பாக தேனி தொகுதியைப் பொறுத்த வரையில் ஒரு வாய்க்கால் திட்டம் ஏறத்தாழ 10 ஆண்டு காலமாகப் பேசப்பட்டு, அது பேச்சிலும், ஏட்டிலும் தான் இருக்கிறதே தவிர, அதைச் செயல்படுத்தியதாகத் தெரியவில்லை. அதைப் பற்றி சிந்தித்ததாகக் கூடத் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால் இம்மன்றத்தில் ஒவ்வொரு சமயமும் பேசுகிற போதும் நான் இதைப் பற்றி இங்கே கவனப்படுத்தத் தவறியதே கிடையாது. 1957-வது தேர்தலிலே தேனி தொகுதியில் இந்த வாய்க்கால் திட்டத்தையே தேர்தல் பிரச்னையாக வைத்து ஆளும் கட்சிக்காரர்கள் பிரசாரம் செய்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். சில மாதங்களுக்கு முன் அந்த வாய்க்கால் திட்டம் கவனிக்கப்படவில்லை என்று கூறி ஒரு காங்கிரஸ்

12th March 1964] [திரு. எஸ். எஸ். ராஜேந்திரன்]

தியாகி வெங்கடாசலபுரத்திற்குப் பக்கத்தில் இருக்கிற சவளப்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு காந்தீயவாதி உண்ணாவிரதம் இருந்தபோது, அவரைப் பிடித்து போலீஸ்காரர்கள் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தார் என்று தண்டனை வாங்கிக் கொடுத்தார்கள் என்பதையும் நான் கவனமூட்ட விரும்புகிறேன். அந்த வட்டாரத்தில் தேனி தொகுதியில் முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய பிரச்னை அந்த வாய்க்கால் திட்டம். அந்தத் திட்டத்தைப் பற்றி கவனம் எடுத்துக் கொண்டு அமைச்சர் அவர்கள் சீர்தூக்கிப் பார்த்தால் பல ஏழை மக்களின் வாழ்வு உண்மையில் நல்ல முறையில் நடக்கும், பல ஏழை விவசாயிகளின் வாழ்வை நல்ல முறையில் மாற்றிக் கொடுத்த பெருமை அமைச்சர் அவையைச் சாரும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் அத்தகைய வாய்க்கால் திட்டத்தினால் வைகைத் தேக்கத்திற்கு பாதகம் ஏற்படுமோ என்ற ஐயமே வேண்டியதில்லை . . .

கனம் திரு. பூ. கக்கன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அந்த வாய்க்கால் திட்டம் ஏற்கனவே அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. ஆனால் விவசாய மக்கள் ஏற்கனவே ஒரு பகுதி பணம் கட்டுவதாக வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்கை நிறைவேற்றாத காரணத்தினால் திட்டம் வராதிருக்கிறது. இதிலே கனம் அங்கத்தினர் முயற்சி எடுத்து வாக்களித்துள்ள தொகையை கட்டுவதற்கு ஏற்பாடு செய்தால் திட்டம் நிச்சயமாக வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். எஸ். ராஜேந்திரன்: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஏதோ குறிப்பிட்ட தொகையை அந்த வட்டாரத்து மக்கள் வழங்குவதாகத் தெரிவித்தார்கள், ஆனால் அந்தத் தொகை கொடுக்கப்படவில்லை, அங்கத்தினர் முயற்சி செய்து கொடுத்தால் அதைப் பற்றி கவனிக்கலாம் என்று அறிவித்தார்கள். தேனி தொகுதியில் இருக்கிற மக்கள், குறிப்பாக அந்த வாய்க்கால் திட்டம் வேண்டுமென்று சொல்லுகிற வெங்கடாசலபுரம், ஐங்காலப்பட்டி ஆகிய கிராமங்களைச் சுற்றியுள்ள பகுதியில் இருக்கும் மக்கள் மிகவும் ஏழைகள், குறிப்பாக ஏழைகளாக இருக்கின்ற மக்களைக் கொண்ட தொகுதி தேனி. 'அங்கத்தினர் முயற்சி செய்தால்' என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் . . . நானும் அவ்வளவு தரக் கூடிய பண வசதி உள்ளவன் அல்ல . . . .

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர் கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அவர் முயற்சி செய்து விவசாயிகளிடமிருந்து வாங்கிக் கொடுக்கலாம் என்று தான் குறிப்பிட்டார்கள்.

திரு. எஸ். எஸ். ராஜேந்திரன்: அதற்கான முயற்சியில் ஈடுபட இருக்கிறேன் என்று அறிவித்துக்கொண்டு, அதே நேரத்தில் தொகை பெரும் தொகையாக இல்லாமல் குறைத்துச் சொன்னால் நிச்சயமாக இந்த முயற்சியில் ஈடு பட்டு ஆக்க வேலையில் ஈடுபட முடியும் என்று சொல்லி, தேனி தொகுதியைப் பொறுத்த அளவில் அவர்களுக்கு இந்தச் சலுகையைத்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

*திரு. டி. கார்ச்சா கவுடர்: சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து எங்களுடைய ஜில்லாவிலே உள்ள பிரச்னைகளை இந்த மன்றத்தின் முன் வைக்க நான் ஆசைப்படுகிறேன்.

கடந்த 2-3 ஆண்டு காலமாக எங்களுடைய ஜில்லாவில் உள்ள ஓரே வேளான்மையான உருளைக்கிழங்கு கருவல் வியாதியால் அழிந்துபோய் வருவதைப் பார்க்கிறோம். நீலகிரிக்கு உருளைக் கிழங்கு எங்கிருந்து வந்தது என்று நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முதன் முதலாக அன்னியர்கள் நம் நாட்டைப் பிடித்து ஆண்டபோது, ஸ்காட்லண்ட், அயர்லண்ட் ஆகிய இடங்களிலிருந்து உருளைக்கிழங்கு விதைகளைக் கொண்டு வந்து சொற்ப அளவு செய்து இப்போது அது பெருகி பெருமளவுக்குச் செய்து வருகிறோம். அதே அயர்லண்டில் இதே நோயால் உருளைக்கிழங்கு பாதிக்கப்பட்டு, அங்கே பஞ்சம் ஏற்பட்டு, அங்கிருந்து பலர் அமெரிக்கா முதலிய தேசங்களுக்கு வெளியேறியிருக்கிறார்கள் என்ற உண்மையை இந்த சமயத்திலே தங்கள் மூலமாக நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் நாங்கள் எந்த நிலைமையிலும் எங்கள் ஜில்லாவை விட்டு வெளியேறத் தயாராயில்லை. உருளைக்கிழங்கு போனாலும் தேயிலை, காப்பி முதலிய வேளாண்மையில் ஈடுபட்டு எங்களுடைய வேளாண்மையை மாற்றிக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது முக்கியமாக ஸாயில் கன்ஸர்வேஷனைப்பற்றி எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மிகவும் வளமான மேல் பூமியை மட்டம் செய்கிற புல்டோஸர்கள் 10-15 அடி ஆழமாக எடுத்துக் கல்லாக ஆக்கிவிட்டிருக்கின்றன. அந்த நிலத்தில் யாதொரு வேளாண்மையும் விளையாது. உருளைக்கிழங்கு பயிரிடவோ, அல்லது யாதொரு தானியமோ அல்லது காய்கறியோ பயிரிட முடியாமல் தரிசாகக் கிடக்கிறது. பத்து வருஷங்களுக்கு முன்னால் ஸாயில் கன்ஸர்வேஷன் திட்டம் மூலமாகச் சரி செய்யப்பட்ட நிலங்கள் ஒழுங்காக இருக்கிறதா என்று பார்த்தால் எருமை மாடுகள் புகுந்து பாழான நிலையில் தான் இருக்கிறது. உருளைக்கிழங்கு பயிர் செய்யவே வழியில்லாத நிலையில் இருக்கும் நேரத்தில் ஸாயில் கன்ஸர்வேஷன் திட்டத்தை நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் நிறுத்தி வைத்து தேயிலை சாகுபடி செய்யும் திட்டத்திற்கு இந்தப் பணத்தை ஒதுக்கி விட்டால் மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக உருளைக்கிழங்கு விதைகள் கொடுக்கிறார்கள். விதைகள் கொடுப்பதிலே இப்போது மிகவும் சங்கடம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த வருஷம் எங்கள் ஜில்லாவிலே கிராம சகாயக்குகள் மூலமாகக் கொடுத்தார்கள். மேட்டுப்பளையம் மார்க்கெட்டில் 80-90 ரூபாய் என்று விற்கிறது. டிபார்ட்மெண்டார் விதையை வாங்கி சொற்ப விலையில் கொடுத்தால் நலமாக இருக்கும். டிபார்ட்மெண்ட் வாங்குவதில்லை. மக்களே 90 ரூபாய்க்குக் கிழங்கு

வாங்கி நடத்தத் தயாராயில்லை. ஆகையால் கிராம சகாயக்குகள் என்ன செய்கிறார்கள் என்றால் விதைக் கிழங்கைக் கூட மேட்டுப் பாளையத்திற்கு அனுப்பி விற்று விட்டிருக்கும் சம்பவத்தைக் கண்டோம். கிராம சகாயக்குகளிடமிருந்து டிபார்ட்மெண்டே வாங்கி ஸ்டோர் செய்து மக்களுக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று இந்தச் சமயத்தில் கூறிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக 'ஷீப் ப்ரீடிங் பார்ம்' ஒன்று உதகமண்டலத் 12-30 p.m.
தில் இருக்கிறது. அது மிகவும் நல்ல முறையில் நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது 600 ஆடுகளை வைத்து நடத்தி வருகிறார்கள். இதை இன்னும் பெரிய அளவிலே நடத்தலாம். இந்த ஏரியாவில் 10,000, 20,000 ஏகரா நிலம் புல்வெளி வசதி உள்ள இடம். ஆகையால் இங்கே 10,000 ஆடுகளை வைத்து, இதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இங்கே ஒரு 'வுலன்' தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான வசதிகளும் இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதில் மேலும் கவனம் செலுத்தி, இந்த ஆட்டுப் பண்ணையை மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரய்த்துகளுக்குக் கடன் வழங்குவதிலே மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. உருளைக்கிழங்கு விவசாய சமயத்தில் தகுந்த கடன் கிடைப்பதில்லை. எல்லாக் கடன்களும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் கிடைக்கிறது. அந்தக் கடன்கள் விவசாயிகளுக்கு உடனடியாகக் கிடைக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

இன்னொன்று, அமோனியம் சல்பேட் கூட்டுறவுச் சங்கத்தில் 'கோ-டவுனில்' கொண்டு வைத்திருக்கிறார்கள். இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு ஜாயிண்டு ரிஜிஸ்டிரார் எங்கள் கிராமத்திற்கு வந்திருந்தார். 'அமோனியம் சல்பேட் நீலகிரி ஜில்லாவிற்குத் தேவையில்லை, உருளைக் கிழங்கு மிக்ஸர் உரம் என்று தனியாக இருக்கிறது, எதற்காக அமோனியம் சல்பேட்டைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?' என்று நான் அவர்களிடம் சொன்னேன். ஆகையால் அதை உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கத்திற்கு மாற்றிவிட வேண்டும்.

*திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினுடைய ஆய்வுக்கு வேளாண்மைத்துறை பற்றிய மான்யக் கோரிக்கைகள் வைக்கப் பட்டுள்ளன. அதையொட்டி எதிர்க்கட்சியினர் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைக்க நான் விரும்புகிறேன்.

வேளாண்மைத்துறையைப் பற்றிய கருத்துக்களை இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் மிகத் தெளிவுபட எடுத்துவைத்தார்கள். நம்முடைய நாட்டினுடைய பொருளாதார நிலை

விவசாய இயலினுடைய அடிப்படையில் அமைந்த ஒன்று என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்வோம். உலகத்தில் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற சில நாடுகளில் இந்த நாடும் ஒன்றாகும். நம்முடைய நாடு விவசாயத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒரு வீடு எப்படி அதனுடைய அடித்தளத்தை இன்றியமையாத ஒன்றாகக் கொண்டு அதன்மேல் பொலிவுற வளர வேண்டிய அவசியத்தைக் கொண்டிருக்கிறதோ, அதோ போல் நம்முடைய நாட்டினுடைய பொருளாதார இயல் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு, அதையொட்டி வளர வேண்டிய ஒன்றாக அமைந்திருக்கிறது. விவசாயத்தை நம்பி வாழ்கின்ற தமிழகத்தைப் பொறுத்த வரையில், விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்கள் ஏறத்தாழ 100-க்கு 62 பேர்கள். இவர்கள் விவசாயத்தையே தங்களுடைய தொழிலாக நம்பி வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் அவர்கள் இயற்றித் தருகிற பொருள்கள் மூன்று வகைகளிலே பயன்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. விவசாயத்தின் மூலமாகப் பெறுகின்ற பலன்கள் நம்முடைய நாட்டினுடைய உணவுத் தேவையை நிறைவேற்றவும், நம் நாட்டுத் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களாக அந்த விளைச்சல் பொருள்கள் பயன்படவும், மேலை நாடுகளுக்குத் தேவைப்படுகின்ற பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலமாக அன்னியச் செலவாணியைப் பெருக்கவும், இந்த நாட்டுப் பொது வருமானத்தை வெகுவாகப் பெருக்கும் முறையிலே இந்தத் துறையைப் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இத்தத் துறை அந்த அளவுக்குப் பயன்பட்டு வருகிறதா என்பதையும் நாம் கவலையோடு நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, விவசாயத்தை வளர்ப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் எந்த வகையில் அமைந்திருக்கின்றன என்று பார்க்கும்பொழுது, அதிகமாக நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புக்கூறுகள் இல்லை என்ற கருத்தைப் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி இந்த மன்றத்தில் கூறிக்கொண்டு வந்திருக்கிறார்கள். நிலத்தை மீட்டு, விளைநிலங்களாக மாற்றுவதற்கான வழிவகைகளைப் பெருக்குவதற்கான வாய்ப்பும் அதிகமான இடங்களில் இல்லை. எனவே, இருக்கிற நிலத்தின் விளைவை அதிகமாக ஆக்க வேண்டிய பொறுப்பு உடையவர்களாக நாம் இருக்கிறோம். விளைகின்ற நிலத்தினுடைய தரத்தை உயர்த்தி, அதன் மூலம் பெறுகின்ற பலன்களை அதிகமாக ஆக்குவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்கள் 100-க்கு 62 பேர்களாக இருக்கிறார்கள் என்றால் இந்த நாட்டினுடைய எதிர்காலப் பொருளாதாரத் திட்டம், அந்த எண்ணிக்கையை மெல்ல மெல்லக் குறைக்கும் வகையிலும் அவ்வாறு குறைக்கப்படும் எண்ணிக்கையில் இருக்கிற மக்கள் வேறு பல தொழில்களில் ஈடுபடுகின்ற அளவிலும் தீட்டப்பட வேண்டும். நாட்டினுடைய பொது வருமானம் தொழில் வளர்ச்சியின் மூலம் பெருகுவதற்கான வழிவகைகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். அந்த வகையிலே பார்க்கும் பொழுது, தொழில்

வளர்ச்சி ஏற்படவேண்டும் என்றால், தொழிற்சாலைகள் பெருக வேண்டும். தொழிற்சாலைகளைப் பெருக்க வேண்டுமானால் அவற்றிலே பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக வேண்டும். இப்பொழுது தொழிற்சாலைகள் எப்படி இயங்குகின்றன என்று கேட்டால், அவைகளுடைய வருமானத்தில் பாதிக்கு மேல் பணிபுரிகிற தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றன. தொழிற்சாலைகள் வளர வேண்டும் என்றாலும், மூலதனம் இடவேண்டுமென்ற அவசியம் ஏற்படவேண்டும் என்றாலும், எளிதான முறையில், குறைந்த கூலியில் தொழிலாளர்கள் கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்படவேண்டும். குறைந்த கூலியில் தொழிலாளர்கள் கிடைக்க வேண்டுமென்றால், அவர்களுடைய வாழ்க்கைச் செலவினம் இன்னும் குறைதல் வேண்டும். வாழ்க்கைச் செலவினம் குறைய வேண்டும் என்றால், இன்றியமையாத உணவுப் பண்டங்களின் விலை குறைதல் வேண்டும். உணவுப் பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைத்தால் தான், குறைந்த கூலிக்குத் தொழிலாளர்கள் கிடைப்பார்கள். அந்தத் திட்டத்தை ஈடேற்றுவதற்கும் தொழிற்சாலைகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கும் குறைந்த கூலியில் தொழிலாளர்கள் கிடைப்பதற்கும், உணவுப் பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். உணவுப் பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டுமென்றால், உற்பத்தியைப் பெருக்கவேண்டிய அவசியத்திற்கு நாம் ஆளாகிறோம். அதே நேரத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையை மெல்ல மெல்லக் குறைக்க வேண்டிய அவசியம் உடையவர்களாகவும் இருக்கிறோம். அமெரிக்காவைப் பொறுத்த வரையில், ஏறத்தாழ, 100-க்கு 13 பேர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டிய அளவிற்கும், மற்றவர்கள், எல்லாம் வேறு பல தொழில்களில் ஈடுபட வேண்டிய அளவிற்கும் அந்த நாட்டினுடைய பொருளாதார மொத்த அமைப்பு மாற்றப்பட்டிருக்கிறது. அந்த நோக்கத்தைக் கருதியும் நாம் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

வேளாண்மைத் துறை வளர்வதற்கான திட்டங்களை அரசினர் மேற்கொண்டிருப்பது உண்மைதான் என்று ஆளும் கட்சித் தரப்பினரும், எதிர்க்கட்சித் தரப்பினரும் மிகத் தெளிவுபடக் கூறினார்கள். அவைகளை நிறைவேற்றுவதில் ஏற்படுகின்ற குறைபாடுகளையும் இந்த மன்ற உறுப்பினர்கள் மிகத் தெளிவோடு கூறினார்கள். போட்ட திட்டம் சரியாக நிறைவேற்றப்படுகிறதா? விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படத்தக்க அளவுக்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறதா? அவர்களுடைய குறைகள் ஆட்சியினருடைய செவியில் விழுகின்ற அளவுக்கு வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா? நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்குத் தடங்கலான நிலைமைகள் நீக்கப்பட்டிருக்கின்றனவா? இவற்றையெல்லாம் நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். விவசாயத் துறையைப் பொறுத்த அளவில் பெறுகின்ற வருமானம் ஏனோ குறைந்து வருகிற நிலைமையில்தான் இருக்கிறது; இதன் காரணம் ஏதும் புலனாகவில்லை. அதற்கு கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தரு

பட்ட ஒன்றுதான். பல ஆண்டுக் காலமாக இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டுத்தான் வருகிறது என்றாலும், நடைமுறையிலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு இவ்வரசு எந்த வகையில் ஈடுபட்டது? எந்த அளவு வெற்றி பெற்று இருக்கிறது? அதற்கான நடவடிக்கைகள் என்னென்ன? கூட்டுறவு முறையிலே சாகுபடியைச் செய்வதன் மூலம் பலனைப் பெருக்கிக் காட்ட முடியும் என்பதற்கான காரண காரிய விளக்கங்கள் என்ன? அரசினர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன? பெற்ற பலன்கள் என்ன? அரசு வெற்றி பெற்றதா? தோற்றதா? நிறைவேற்ற முடியாமல் இருந்ததா? நிறைவேற்ற முடியவில்லை என்றால் அதற்கான காரணங்கள் என்ன? கூட்டுறவு முறையிலே பண்ணைகளை அமைத்து அதன் மூலம் உருவான பலனை அரசு கண்டு இருக்கிறதா? பலனைக் காண எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன? என்பவற்றை அமைச்சர் அவர்கள் விளக்கி வைக்க வேண்டும்.

வேளாண்மைத் துறையின் வளர்ச்சித் திட்டம் ஏட்டளவிலே இருக்கிற ஒன்றாக இருந்து கொண்டே வருகிறதா? நடைமுறையிலே கொண்டுவர வாய்ப்பு இருக்கிறதா? இல்லையா? முயற்சிகள் எடுத்துத் தோல்வியுறும் அளவுக்கு நிலைமைகள் இருந்தனவா? என்பதை எல்லாம் கனம் உள்துறை அமைச்சர் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன். இந்தக் கொள்கைகளைப் பொறுத்தவரை அவை எந்த அளவிலே வற்புறுத்திச் சொல்லப்பட்டு வருகின்றனவோ அந்த அளவு அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனவா? என்று கவனிக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

விவசாயத் துறையைப் பெருக்குவதற்கான வகைகளைப் பொருளாதார நிபுணர்கள் பல்வேறு வகைகளில் தெரிவித்திருக்கிறார்கள். பொருள் வடிவில் உறுதுணைபுரிவன என்று நிபுணர்கள் சொல்லி இருக்கக்கூடியவை, பெரிய, நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களை வளர்த்தல், என்பது முக்கியமானதொரு காரணமாக அமைந்திருக்கிறது. நடுத்தர சிறிய பாசனத் திட்டங்களை வளர்க்க வாய்ப்புக் கூறுகள் எந்த எந்த தொகுதிகளில், மாநிலத்தில் எப்படி எப்படி இருக்கின்றன, அதற்கான திட்டங்கள் என்னென்ன நிறைவேறாமல் பல பகுதிகளில் இருக்கின்றன என்பதை எல்லாம் மன்ற உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். பெரிய, நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களை வளர்ப்பதற்கு அடுத்தது நிலத்தை சாகுபடிக்கு ஏற்றதாகச் செய்தலாகும்; ரசாயன உரத்தைப் பெருக்குதல்; பசுந்தாள் எரு போன்ற உள்ளூர் எருக்களைப் பெருக்குதல்; தேர்ந்தெடுத்த நல்ல பொறுக்கு விதைகளை வழங்குதல் என்றும் இருக்கிறார்கள். அடுத்தபடியாக, திறமை வடிவில் உறுதுணை புரிவன, ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதலும், அப்படி மேற் கொள்வதன் மூலம் அடைந்த ஆராய்ச்சி முடிவுகளை நடைமுறைக்குக் கொணர்ந்தாலும்; உழவு முறைகளில் புதிய மேம்பட்ட முறைகளைப் புகுத்துதலும் ஆகும். அடுத்து பொருளியல் வடிவில் உறுதுணை புரிவன விலை நிர்ணயம், பயிர் பாதுகாப்பு அல்லது இன்ஷூரன்ஸ் திட்டம். இதை நடை முறைக்குக் கொண்டு வர வேண்டும். இறக்குமதிகளைத் தடுக்க இங்கே வாய்ப்புகள் ஏற்

படுத்தித் தருதல்; உதவித் தொகை அளித்தல். இவை விவசாயிகளுக்குச் சிறந்ததொரு வாய்ப்பாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கும் மேலாக அமைப்பு முறையில் உறுதுணை புரிவன, நிலச் சீர்திருத்தம் செய்தல்; பயன் படுத்துவதைக் கட்டுப்படுத்தல்; பல்வகை நிலையங்களின் மூலமாகக் கடனும் பொருள்களும் வழங்குதல்; சந்தை காணும் முறைகளைச் சீர்திருத்துதல்; கூட்டுறவு முறையில் பணியாற்றுதல்; கூட்டுறவு முறையில் உழவுத் தொழில் ஆற்றுதல்; இவை அமைப்பு முறையில் உறுதுணை புரியும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை அரசினர் உணர்ந்து எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்ன? திட்டங்கள் நல்லவை தான் என்றாலும் நிறைவேற்றுவதில் குறைபாடுகள் எந்த அளவுக்கு இருக்கின்றன; நோக்கங்கள் நிறைவேற முடியாத அளவுக்குக் குறைபாடுகள் அமைந்திருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும். அந்தக் கருத்தை மனத்துட்கொண்டு உள் துறை அமைச்சர் தீவிர கவனம் செலுத்தி அந்தக் குறைபாடுகளைப் போக்க உள்ளபடியே முன் வருதல் வேண்டும்.

ஆராய்ச்சிப் பண்ணைகள் ஆங்காங்கு வைக்கப்பட்டு இருக்கின்றன. இப்பண்ணைகள் பல ஆராய்ச்சி முடிவுகளைக் கண்டுள்ளன. விளைவைப் பெருக்குவதற்கான வழிவகைகளை அந்த முடிவுகளிலே காணலாம். அவை எந்த அளவுக்கு ஏடுகளிலேயே இருக்கின்றன எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு எட்டின என்பதையும் எட்ட வாய்ப்பு அளித்தல் எந்த அளவுக்கு வெற்றி பெற்றோம் என்பதையும் அறிவதற்கு இத் துறையில் தனிக் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆடுதுறைப் பண்ணை ஆனாலும் சரி, கோவில்பட்டி பண்ணை ஆனாலும் சரி, அங்குப் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆடுதுறைப்பண்ணை மேற் கொண்ட ஆராய்ச்சியின் முடிவு, விவசாய விளைச்சலிலே பசுந்தாளை அதிகமாக இடுவதன் மூலம் அதிகமான வருமானத்தைப் பெறக்கூடும் என்பதுதான். இந்த வெற்றிக்காக ஏற்படும் அதிகச் செலவையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர நிலைமைகள் ஏற்படவில்லை என்ற கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறார்கள்.

காவேரி டெல்டா பொறுத்தவரை அங்கே நெல் சாகுபடி ஆகிறது. நெல் சாகுபடிக்குப் பிறகு விவசாயப் பெருங்குடி மக்கள் இடையே கரும்பு மட்டுமே பயிரிடலாம் என்ற எண்ணம் பரவியிருக்கிறது. ஆராய்ச்சியளவில் குறுகிய காலத்தில், நெல் சாகுபடி ஆகாத காலத்தில் சாதாரணமாக இருக்கும் காலத்தில் பருத்தியையும் விளைவிக்க முடியும். அதனால் விவசாயப் பெருங்குடி மக்களின் வருமானம் பெருக வழிவகைகள் இருக்கின்றன, அந்தக் குறுகிய இடைக் காலமே போதுமானது என்று எல்லாம் ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது என்ற கருத்தை ஆராய்ச்சி ஏடுகளில் இருந்து நாம் கண்டறிகிறோம். இந்தத் திட்டத்தை நடைமுறையில் கொள்வதற்கு அல்லது காவிரி டெல்டாவில் வாழ்கின்ற விவசாயப் பெரு மக்கள் அறிந்து கொள்ளும் அளவுக்கு எத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டன? எடுக்கப்பட்ட முயற்சிகளின் பலன் என்ன? முயற்சிகளுக்குப் பலன் இல்லை

என்று விட்டு விட்டார்களா? பலன் இல்லை என்று விட்டு விட்டால் அதன் காரணம் என்ன? அப்படி எடுத்துக் கொண்ட முயற்சியும் பலன் தராமல் போயிற்று? இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் ஏட்டளவில் தான் இருக்கின்றனவா? நடைமுறைக்கு வராத அளவுக்கு இருக்கின்றனவா? எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியுற்றனவா? பலன் இருக்கிறது என்றால் மேலும் முயற்சி செய்யாததற்குக் காரணம் என்ன? என்றும் நான் அறிய விரும்புகிறேன். ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் விவசாயிகள் புதியதொரு முறைகளை மேற்கொண்டால் ஒழிய இருக்கிற நிலங்களின் தரத்தை உயர்த்த முடியாது என்ற கருத்தை வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்துக்களைப் பரப்ப வேண்டியவர்களாகவும் நாம் இருக்கிறோம். அந்த முறையில் பரப்புவதற்கான சாதனங்களில், கனம் உறுப்பினர் சுப்பையா முதலியார் அவர்கள் தெரிவித்தது போல சினிமா, நல்லதொரு சாதனமாக அமைந்திருக்கிறது. ஏடுகள் மூலம், பத்திரிக்கைகள் வாயிலாக, எழுதி அறிந்து கொள்ளச் செய்வதைவிட, புத்தகங்கள், வெளியீடுகள் இவைகள் மூலம் அவைகளைப் படிக்கச் செய்து அறிந்து கொள்ளச் செய்வதைவிட, கூட்டங்கள் கூட்டி விழாக்கள் நடத்தி, அவற்றை அவர்கள் அறிந்து கொள்ளச் செய்வதைவிட சினிமா மூலம் கருத்துக்களைப் பரப்புவதற்கு சிறந்ததொரு வாய்ப்பு இருக்கிறது. அடிக்கடி அதை நினைத்துக் கொண்டே இருப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். மற்றைய சாதனைகள் மூலம் இந்தக் கருத்துக்களை உழவர்களுக்கு அறிமுகம் செய்வதைவிட சினிமா மூலம் அதிகமாக அறிமுகம் செய்யலாம். எல்லாக் கிராமங்களிலும் ஏறத்தாழ சினிமாக் கொட்கைகள் இருக்கின்றன. பொழுது போக்குவதற்காகச் சினிமா பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் எல்லா மக்களுக்கும் இருக்கிறது. கண், காது, கருத்து ஆகிய மூன்றையும் ஈர்க்கும் ஆயுதமாகச் சினிமாக் கலை இருப்பதன் காரணமாக, நாட்டிலே உள்ள பெரும்பான்மை மக்கள் அந்தக் கலையினால் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஏடுகளைச் சிந்தனை அறிவு படைத்தவர்கள் மட்டும் படிப்பார்கள். இசையைச் செவி அறிவும், சிந்தையறிவும் படைத்தவர்கள் மட்டும் கேட்பார்கள். ஆனால், சினிமா, நாடகம், நடனம் ஆகிய இவை செவி அறிவு, சிந்தனை அறிவு, கண் பார்வை அறிவு ஆகிய அத்தனையும் பெற்றவர்களையும், ஈர்க்கும் சாதனமாக இருக்கின்றன. உழவர் பெருங்குடி மக்களுக்கு இந்தக் கருத்துக்களைப் பரப்பவேண்டுமென்ற நிலையில் அதனை வெகுவாகப் பயன்படுத்துதல் வேண்டும். கட்டாயமாக, கால் மணி நேரமாவது கிராமச் சினிமாக் கொட்டகைகளில், விவசாயத்தைப் பெருக்குவதற்கான வழிவகை பற்றிய படங்கள் காட்டப்பட வேண்டும். விவசாயத்தைப் பெருக்க எந்த அறிவை விவசாயிகளுக்குப் புகட்ட வேண்டுமென்று ஆட்சியினர் எண்ணுகிறார்களோ அந்த அறிவைப் புகட்ட சினிமாக் கொட்டகைகளைக் கட்டாயமாகப் பயன்படுத்துதல் வேண்டும். சினிமாத் துறையின் மூலமாக இந்த அறிவை மெல்ல மெல்ல விவசாயப் பெருங்குடி மக்களுடைய உள்ளத்தில் பாய்ச்ச முடியுமே தவிர வேறு ஏடுகள் மூலமாகப் பாய்ச்சினால் அத்தகைய வழிவகை ஏற்பட முடியாது.

பயிர் பாதுகாப்புக்கான இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை மேற்கொள்ளுவதற்கான கருத்துக்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. இதைத் திட்டவட்டமாக மேற்கொள்ள அரசினர் ஏதாவது முன் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார்களா? பயிர் பாதுகாப்பு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஏற்படுத்துவதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்கள் நன்மை பெறுவதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மின்சாரக் கட்டணம் செலுத்தும் நிலைமையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கனவே மின்சாரத்திற்கு, விவசாயிகள் யூனிட் ஒன்றுக்கு 4 புதுக் காசு செலுத்தி வந்தார்கள். இப்பொழுது சர்சார்ஜ் முதலியவைகள் சேர்ந்து ஏறத்தாழ 8 புதுக் காசு செலுத்தும் நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது மாத்திரமல்ல. 4 புதுக் காசு செலுத்திய காலத்தில் எந்த அளவு டெபாசிட் வாங்கப்பட்டதோ அந்த அளவோடு இல்லாமல் இப்பொழுது 8 புதுக் காசு செலுத்தும் அடிப்படையில் டெபாசிட் கூடச் செலுத்த வேண்டும் என்ற அளவுக்கு நிலைமைகள் வளர்ந்திருப்பதாக அந்தத் துறைகளில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கிறார்கள். நிலைமை அப்படி இருக்குமானால் இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டும். விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்கு ஆளாகி டெபாசிட் கட்ட முடியாத கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இதிலே அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அந்தக் குறைபாட்டைப் போக்க முன்வருதல்வேண்டும்.

உர விநியோகத்தைப் பொறுத்த வரையில், உரம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டும் கூட, விவசாயப் பெருங்குடி மக்கள் அதைப் பயன்படுத்துகிற அறிவைப் பெற இயலாமல் இருப்பதாலும் அதை வாங்கிப் பயன்படுத்தும் நிலைமைக்கு உழவர்கள் முன்வராத காரணத்தாலும், அது மிச்சப்படும் நிலைமையில் இருப்பதாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மூன்று மடங்கு உரத்தைப் பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயிகள் வாங்க முடியாத நிலை ஏற்பட்டதென்றால், உற்பத்தியின் அளவு அதிகமாயிருக்கிறதா என்பதை அறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். விவசாயிகள் உரத்தை அதிகமாக வாங்கிப் பயன்படுத்தும் வகையில், இந்த உரத்தின் விலையைக் குறைத்து நிர்ணயம் செய்ய வேண்டும், அல்லது ஸப்சிடி அளித்து, இவற்றை விவசாயிகள் அதிகமாக வாங்கிப் பயன்படுத்துவதற்கான வழிவகைகளை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும் என்று இந்த மன்றத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சென்னை நகர பால் வழங்கும் திட்டத்திலே முயற்சி எடுத்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று என்றாலும்கூட, அது தேவையை நிறைவேற்றக்கூடிய வகையில் அமைந்திருக்கவில்லை என்பதை நன்றாக அறிந்திருக்கிறோம். "நகரில் வாழ்க்கைச் செலவு உயர்ந்

[12th March 1964

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

சந்தேகம் இல்லை. இந்தப் பால் பண்ணை ஆரம்பித்து நான்கு வருஷங்கள் ஆகின்றன. இந்த நான்கு வருஷங்களில் அது நல்ல முறையில் நடப்பதாகத்தான் எனக்குத் தெரிகிறது. அதைத்தான் நான் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, "அங்கு பால் மாடு வைத்திருக்கிறவர்கள் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். எவ்வளவு பேர்கள் லைசென்ஸ்தார்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால், அதிலே அதிகம் பேர்கள் நகரத்திலே இருக்கும் பால் வியாபாரிகள் தான்--அதாவது பால் மாடு வைத்திருப்பவர்கள்தான்—என்று சொல்ல முடியும். அது 1-00 p.m. போக பாக்கி இருக்கக்கூடியவர்கள்தான் வெளியில் இருக்கிறார்கள். இப்படி நகரத்தில் இருக்கக்கூடிய பால்காரர்கள் எல்லாம் ஒழுங்காக ஓரிடத்தில் தங்கி வாழ்ந்து பால் விநியோகம் செய்யவேண்டுமென்பதுதான் திட்டம். லைசென்சு வாங்குகிறார்கள். மாடுகளை வைத்துக் கறக்கிறார்கள். இவ்வளவு மாடுகள் வைத்துக் கொள்ளவேண்டும் என்று நிர்ணயிக்கிறோம். மாடுகள் வாங்குவதற்கும் பண உதவி கொடுத்து வருகிறோம். சில நாட்கள் அங்கே தங்குகிறார்கள். அப்புறம் திரும்பிவிடுகிறார்கள். நகரத்தில் இருக்கக்கூடிய மக்களின் ஒத்துழைப்பால்தான் இந்தத் திட்டம் பூரண வெற்றி பெற முடியும். குறிப்பாகப் பால்பண்ணை மூலமாக விநியோகம் செய்யப்படுகிற சுத்தமான பால்தான் வாங்கி உபயோகிப்பது என்று நகர மக்கள் ஒத்துழைக்கலாம். இப்படி நகர மக்கள் பால் பண்ணை மூலம் விநியோகம் செய்யப்படுகிற பாலைத்தான் வாங்குவது என்று முன்வந்தால் இன்றைக்குள்ள பல பிரச்சினைகள் சுலபமாகத் தீர்ந்து போகும். ஆகவே மக்களுடைய ஒத்துழைப்புத்தான் தேவை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பால்காரர்கள் சில கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். நான் இதுபற்றி அவர்களிடமும் நேரில் பேசினேன். அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்று இன்றையதினம் அவர்களிடத்தில் இருந்து வாங்குகிற பாலுக்கு நாம் கொடுக்கிற விலை குறைவு, அதைக் கூட்டிக்கொடுக்கவேண்டும் என்பது இல்லை. புலவர் கோவிந்தன் அவர்கள் பால்காரர்களுக்கு நாம் கொடுக்கிற விலை குறைவு, அதைக் கூட்டிக்கொடுக்கவேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை என்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. இதுபற்றி அவர் ஒரு வெட்டுப்பிரேரணை கொடுத்துள்ளார். ஆனாலும் அவர் இங்கே இல்லை. நாம் இன்றைய தினமும் பாலுக்கு பால்காரர்களுக்குக் கொடுக்கிற பணம் அவர்களுக்கு திருப்திகரமானதாகவே இருக்கிறது. குறிப்பாக அவர்களுக்கு 92 நயா பைசா ஒரு லிட்டருக்குக் கொடுக்கிறோம். நாம் அதற்கு மேல் 5 நயா பைசா வைத்து 97-க்கு விற்கிறோம். அவ்வளவுதான். பால்காரர்களுடைய கோரிக்கை மாடுகளுக்குத் தீவனம் கொடுக்க வேண்டும் என்பது போன்றவைதான். அதை எல்லாம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

12th March 1964]

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

திரு. சுப்பையா முதலியார் பேசும்போது காப்பி போர்டு, மின்சார போர்டு என்று அமைந்திருப்பது போல மில்க் போர்டு என்று வைக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிக் கூட அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்தது. அதற்கு இப்போது அவசியம் இல்லை என்று கருதி அந்த யோசனையை அரசாங்கம் கைவிட்டு விட்டது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பிற்காலத்தில் அத்தகைய ஒரு அவசியம் நேரிடும்போது அதுமாதிரியாக ஒரு மில்க் போர்டு ஏற்படுத்துவது அவசியம் என்றால் அதை அரசாங்கம் அப்போது பரிசீலிக்கும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : வட சென்னை மிகவும் நெருக்கடியான பகுதி. அங்கே போதுமான பால் விநியோக டெப்போக்கள் திறக்கப்படவில்லை. இவ்வாண்டாவது அங்கே உள்ள மக்கள் நெருக்கடியைக் கவனத்தில் கொண்டு போதுமான பால் டெப்போக்கள் திறப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நமக்கு வருகிற பால் அதிகப்பட அதிகப்பட அதிகமான டெப்போக்கள் அங்கங்கே திறக்கப்படும். திறந்து தான் தீரவேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : In view of the fact that the rate has been increased for milk in the towns, have the Government received any representation from the villagers to enhance the rate for milk supplied by them?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கிராமத்தில் இருந்து வாங்கக்கூடிய பாலுக்கு நாம் என்ன கொடுக்கிறோமோ அதைவிட பத்து நயா பைசாதான் அதிகமாக வைத்து விற்கிறோம். அதில் நமக்குக் கிடைப்பது பத்து காசு தான். அங்கே ஒரு லிட்டருக்கு 66 நயா பைசா கொடுத்தால், அங்கே வாங்கும் கூலி, பதனிடக் கூலி, டிரான்ஸ்போர்ட் சார்ஜ், இவையெல்லாவற்றையும் சேர்த்தால் 94 பைசா ஆகிறது. அவர்கள் வெளியில் எங்கேயும் மாட்டை ஓட்டிக் கொண்டு செல்லாமல் வீட்டில் இருந்தபடியே கறந்து கொடுக்கிறார்கள். இப்போதே பால்பண்ணை மூலமாக நமக்கு 10 லட்சம் நஷ்டம் என்று சொல்லும்போது இன்னும் அதிகமாகக் கொடுக்க வசதி இல்லை. கொடுத்தால் இதற்குமேலும் நஷ்டம் வரலாம் என்பதை கனம் அங்கத்தினர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து : மாதவரம் பால்பண்ணையைச் சேர்ந்த ஒருவரை பயிற்சிக்காக நாம் டென்மார்க்குக்கு அனுப்பினோம். அவர் திரும்பி வந்தவுடன் இங்கே பணிபுரியாமல் வேறு இடத்திற்குச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. ஆகவே அவரது பயிற்சி காலத்தில் அவருக்காக நாம் செலவிட்ட தொகையை அவரிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

MR. DEPUTY SPEAKER : The hon. member can put a separate question and get the information.

[12th March 1964

கனம் திரு. பூ. கக்கன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையை ஒட்டிப் பல அங்கத்தினர்கள் பங்கு கொண்டார்கள். சிலர் சிறந்த யோசனையைச் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புலவர் கோவிந்தன் அவர்கள் வழக்கம் போல—'போற்றினும் போற்றுவர், பொருள் கொடாவிடின் தூற்றினும் தூற்றுவர்' என்பார்கள் இல்லையா—அப்படிப் பேசினார்கள். அவர் புலவர். விவசாயம் அதிகம் தெரிந்திருக்காது என்று நாம் எண்ணும்படியாகப் பேசினார்கள்.

திரு. ம. கமலநாதன் : அவர் புலவராக இருந்தாலும் ஒரு விவசாயி என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அவர் பேசும்போது தஞ்சை ஜில்லா வாசிகள் ஒரு போகம் தரிசாகப் போடவேண்டும் என்று சொன்னாலும் பரவாயில்லை. இப்போதே இரண்டு மூன்று மாத காலம் தரிசாக போடுகிறார்கள். ஒரு ஆண்டு முழுவதும் விவசாயம் செய்யாது நிலங்களை முழுவதும் தரிசாக போடவேண்டும், இடைவெளியே இல்லாது பயிரிடுகிறார்கள் என்று சொன்னது சரியில்லை என்று இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர் பேச்சைக் கேட்டு தஞ்சை மாவட்டவாசிகள் அப்படிப் போட்டுவிடமாட்டார்கள் என்று விநயத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நன்றாக புழுதி பட உழவேண்டும் என்பது எல்லாம் சரி. முன்பு ஆயக்கட்டுகள் அதிகமாக கிடையாது. இப்போது பல்வேறு துறைகளில் கீழ் பாசன. வசதியைப் பெருக்கியிருக்கிறோம். நம்முடைய நோக்கம் விவசாயத்தைப் பெருக்க வேண்டும், உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பது தான். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது கூட ஆளும் கட்சியின் திட்டங்களுக்கு ஆதரவு தரும் வகையில் வற்புறுத்திச் சொன்னார்கள். உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும், கூட்டுறவு முறையில் விவசாயம் நடைபெறவேண்டும் என்று சொன்னார்கள். சுதந்திராக் கட்சி ஸ்தாபகருக்கு அதில் நம்பிக்கை இல்லையென்றாலும் அந்தக் கட்சியைச் ஆதரிக்கிறவர்கள் இங்கே பேசும்போது அந்தக் கொள்கைக்கு ஆதரவு கொடுக்கிறார்கள். காங்கிரஸ் மகா சபை, இன்று நேற்று அல்ல, ஆரம்ப முதலே விவசாயிகளுக்காகத் தான் பாடுபட்டுவருகிறது. அதற்காகப் பல போராட்டங்களை எல்லாம் கூட நடத்தியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, பாட்டாளி மக்களுக்கு அதிகமான பாகம் கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையில் தஞ்சை ஜில்லா பண்ணையாள் சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டுவந்தது. அதற்கு பிறகு உழுபவனுக்கு 60 பங்கு முதலாளிக்கு 40 பங்கு என்ற முறையில் நியாயவார சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினோம். சமீபத்தில் 30 ஏக்கருக்கு மேல் ஒருவருக்கு இருக்கக்கூடாது என்ற முறையில் உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வந்தோம் உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்ற முறையில் ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்தோம். ஜமீன் நிலங்களில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த

12th March 1964] [திரு. பூ. கக்கன்]

வர்களுக்கு அயன் ஒராமம் மாதிரி அவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்தோம். இன்று அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். கூட்டுறவு முறை விவசாயம் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்பதற்காக கோயிலுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு எடுத்துக் கொண்டு விவசாய உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தனிப்பட்டவர்கள் கூட கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய முன்வந்தால் உதவி செய்கிறோம். அதோடு தரிசு நிலங்களாக இருப்பவற்றையெல்லாம் கூட்டுறவு முறையில் எடுத்து, கிணறு வெட்டி, மாடு வாங்கி, உரம் வாங்கி கொடுத்து விவசாயிகளுக்குக் கொடுத்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறோம். குறிப்பாக விவசாயத் துறைக்காக ஹரிஜன நலத் துறையிலிருந்தும் கூட்டுறவு முறையில் நடத்த பல லட்சக் கணக்கான ரூபாயைச் செலவு செய்து கொண்டு வருகிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பற்றிக் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. மத்திய சர்க்கார் பரீட்சார்த்தமாக பஞ்சாப் மாகாணத்தில் கொண்டு வரலாம் என்று இருக்கிறார்கள். அந்த அனுபவத்தை வைத்து நம்முடைய மாநிலம் ஒரு முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய முறைகளைப் பற்றியும் மற்றவற்றைப் பற்றியும் சினிமா மூலம் காண்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கனம் சுப்பையா முதலியார் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாக பயனியர் பிலிம் எடுத்து விவசாயிகளுக்கு ஆங்காங்கு போட்டுக் காண்பிக்கிறோம். அதோடு சினிமாத் தியேட்டர்களிலும் போட்டுக் காண்பிப்பது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். சினிமாத் தியேட்டர்கள் குக்கிராமங்களில் கிடையாது. பயனியர் பிலிம்கள் கிராமங்களுக்கு எடுத்துச் சென்று விவசாயிகளுக்கு காண்பிக்க உதவுகிறது. நிதிநிலைமைக்குத் தக்கபடி இந்தத் துறையிலே அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய உற்பத்தியைப் பொறுத்தமட்டில் இந்த அரசாங்கம் எவ்வளவு தூரம் அக்கறை எடுத்து உற்பத்தியைப் பெருக்க முடியும் அந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. 1961-62-ல் உற்பத்தியின் அளவு 2.27 லட்சம் டன்; 1962-63-ல் 5.37 லட்சம் டன்; 1963-64-ல் 8.66 லட்சம் டன்; 1964-65-ல் 13.03 லட்சம் டன் உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். படிப்படியாக வருஷந்தோறும் உற்பத்தி பெருகி வருவதை இதிலிருந்து அறிந்து கொள்ள இயலும்.

கத்தைப் பற்றி நான் கூறவில்லை. Co-operative people அவர்கள் டாக்கிள் செய்து விடுவார்கள். கண்ட்ரோல் ரெவின்யூ போர்டிடம் இருப்பதால் லேட்டாகிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : எடை குறைந்தாலும் பரவாயில்லை. ஆனால் அதைச் சரிக்கட்ட செங்கல்மாவைக் கலந்து கொடுக்கிறார்கள். புள்ளம்பட்டி சொஸைட்டியில் அப்படி வழங்கியதைக் காண்பிக்கிறேன். அதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

கனம் திரு. பூ. கக்கன் : அதை அவர்களிடம் சொல்லியிருக்கலாம், அல்லது கலெக்டரிடம் சொல்லியிருக்கலாம். இங்கே வந்து சொல்ல இவ்வளவு நாட்கள் காத்திருக்க வேண்டாம். திரு. சுப்பிரமண்ய கவுண்டர் அவர்கள், குறிப்பிட்ட காலத்தில் லோன் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். எவ்வளவு தூரம் ஒத்தாசை செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்யப்படுகிறது. முடிந்தவரை அது துரிதப்படுத்தப்படும். திரு. முருகையன் அவர்கள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ட்ராக்டர்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நம்மிடம் இருப்பதைத்தான் கொடுக்க முடியும். ரஷ்யாவிலிருந்து வாங்க அந்நிய செலாவணி கேட்டிருக்கிறோம். அவை வரும்போது எவ்வளவு தூரம் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்கிறோம். எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் உடனடியாக கொடுத்துவிட முடியாது. திரு. செங்காலியப்பன் அவர்கள் ஸாயில் கன்சர்வேஷன் ஸ்கீம் பயன் அளிக்கிறது, அதை மேலும் நீடிக்க வேண்டுமென்றார்கள். எல்லாப் பகுதிகளுக்கும் கொண்டு வரவேண்டுமென்றுதான் நோக்கம். நிதி நிலைக்கு தக்கவாறு எந்தெந்த ஜில்லாவில் எந்தெந்த இடத்தை எடுத்துக் கொண்டால் நல்லது என்று பார்த்து செய்து வருகிறார்கள். விவசாயிகளுக்கு ரூபாய் கொடுப்பதில்லை. ஆள்களைக் கொண்டுவந்து உதவி செய்து கூலி கொடுத்து தகராறு இல்லாதபடி நடத்தப்படுகிறது. மண் வளப் பாதுகாப்புபற்றி சொன்னார்கள். கோவை, கோவில்பட்டி, ஆடுதுறை போன்ற இடங்களில் மண்வளப் பரிசோதனை நிலையங்கள் இருக்கின்றன. தஞ்சை நகரில் ஒன்று வைக்க
1-30 p.m. வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். தஞ்சையிலும் வைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. மண் வளப் பரிசோதனை நிலையம் தஞ்சையில் வைப்பதற்கு அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. பவர் ட்ரில்ஸ் பற்றி சொன்னார்கள். மற்றவர்களும் சொன்னார்கள். கிடைப்பதை வைத்துதான் செய்யவேண்டும். ட்யூப் வெல்ஸ், பவர் ட்ரில்ஸ் போட்டு செய்யவேண்டுமென்றால், 45 ரூபாய் என்றால் பரவாயில்லை, 125 ரூபாய் என்று வரும்போது விவசாயிகளினால் கட்ட முடியவில்லை என்பதால் பார்த்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அவர்கள் தொகுதியில் கஷ்டத்தைப் பற்றி சொன்னார்கள். எவ்வளவு தூரம் ஒத்தாசை செய்ய முடியுமோ அப்படிச் செய்ய வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அரசாங்கம் கைவிட்டுவிட்டது என்று அவர்கள் கருத

வேண்டாம். க்ராப் இன்ஷூரன்ஸ் பற்றி கனம் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் சொன்னார்கள். இதைப்பற்றி அரசாங்கம் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது. திரு. சுப்பையா முதலியார் அவர்கள் மாடுகள் வாங்குவதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். யாரும் இந்த விஷயத்தில் குறை சொல்லக்கூடாது என்று எண்ணித் தான் இதற்காக ஒரு கமிட்டி வைக்கப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் பரிசீலனை செய்து பார்த்துத்தான் மாடுகள் வாங்கி கொடுக்கிறார்கள் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திருமதி குழந்தை அம்மாள் அவர்கள் வட்டாரத்திலுள்ள கஷ்டத்தைப்பற்றி சொன்னார்கள். பருத்தி சாகுபடி பற்றியும், காய்கறி சாகுபடியிலுள்ள கஷ்டத்தைப்பற்றியும் சொன்னார்கள். இம்மாதிரியான கஷ்டங்கள் எல்லாம் அரசாங்கத்திற்குத் தெரியும். இவற்றை நீக்குவதற்காக வேண்டிய பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. உடனடியாக எதையும் செய்து விட முடியாது. அரசாங்கம் நல்ல முறையில் பரிசீலித்துப் பார்த்துத்தான் எதையும் செய்ய முடியும். நாளைக்கு இதனால் பணம் நஷ்டமானால் அது மக்களுடைய வரிப் பணம்தான் நஷ்டமாகும். அதற்காகத்தான் அதிகாரிகள் நன்றாகப் பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறார்கள். அதற்காக எங்கள் பகுதியில் ஒன்றுமே நடக்கவில்லை, அதிகாரிகள் ஒன்றுமே செய்யவில்லை என்று தயவுசெய்து திடீரென்று சொல்லக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக இந்த அரசாங்கம் இன்னின்ன பகுதிகளுக்கு ஒன்றும் செய்ய வேண்டாம் என்று நினைப்பது இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய ராஜாங்கம் அவர்கள், பாக்கு உற்பத்தி செய்கின்ற இடங்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். இதில் சொல்லப்பட்டிருப்பது கடலூரைப் பற்றியது. அது கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட கூடலூர் அல்ல. கூடலூர் என்று பல இடங்கள் இருக்கிறன. ஆகவே, தங்கள் பக்கத்திலுள்ள இடம் என்று நினைத்துக்கொண்டு தெரியாமல், எங்கள் ஊரில் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வது சரியாக இராது. இதில் சொல்லப்பட்டிருக்கின்ற கூடலூர் நீலகிரி ஜில்லாவிலுள்ளது. அங்கு தான் இதற்கான பாக்குநாற்றுப்பண்ணை பற்றி பரிசீலனை நடத்தி பரீட்சார்த்தமாக நடத்தியிருக்கிறோம். இதை நன்றாகப் பார்க்காமல் உடனடியாக எதையாவது சொல்வது சரியல்ல. "நண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்று சொல்லப்பட்டிருப்பது போல் எதையும் நன்றாக எண்ணிப்பார்த்துத்தான் செய்யவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த மான்யக் கோரிக்கையின் மீது பல அங்கத்தினர்கள் வெட்டுப் பிரேரணைகளை கொடுத்திருக்கிறார்கள். இதில் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு எல்லாம் பதில் சொல்வதற்கு நேரம் அதிகமாகும். ஆகவே இந்தக் கருத்துக்களை எல்லாம் அரசாங்கம் கவனிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, நமது விவசாய இலாகாவின் மூலமாக, நமது விவசாய இலாகா அதிகாரிகள் தமிழகத்திற்கு பெரிய கீர்த்தி ஏற்படக்கூடிய வகையில் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு என் பாராட்டுதல்களை தெரி

[திரு. பூ. கக்கன்] [12th March 1964

வித்துக்கொள்கிறேன். அதோடு, மேலும் அவர்களுக்கு வேண்டிய ஊக்கம் கொடுத்து, இன்னும் நல்லமுறையில் நமது வேலைகளில் எல்லாம் கவனம் செலுத்துவதற்கு தகுந்த முறையில், அன்பர்கள் அனைவரும் அன்பும் ஆதரவும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, இரசாயன உரம் அதிகமாக கொடுக்கின்றோம், விலையையும் குறைத்திருக்கின்றோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; ஆனால் நிலத்திற்கு அதிகமாக கடலைப்பிண்ணாக்கு, புங்கம் பிண்ணாக்கு முதலியவை தேவைப்படுகிறது. இவற்றை இப்போது விவசாயிகள் மூட்டை ஒன்றுக்கு 28 ரூபாய், 30 ரூபாய் என்று அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த விலையை குறைத்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்திருக்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: கடலை அதிகமாக விளைந்தால்தான் கடலைப்பிண்ணாக்கும் அதிகமாக கிடைக்கும், அப்போது விலையும் குறையும். கொஞ்சமாக கிடைத்தால் விலையும் அதிகமாகத்தான் இருக்கும். அரசாங்கம் இதைப்பற்றியும் கவனம் செலுத்தி வருகிறது. மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்தத் துறையின் வருமானத்தில் குறைவு ஏற்பட்டிருப்பதாக சொன்னார்கள். இதற்கான காரணங்கள் பட்ஜெட் மெம்மோராண்டத்தின் 52-வது பக்கத்தில் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: அக்ரிகல்சர், எக்ஸ்டன்ஷன் ஆபீசர் மூலமாக பூச்சி மருந்துக்கள் எல்லாம் 50 சமாதானம் சப்சிடியில் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. பிளாக் டெவலப்மெண்ட் ஏரியாவாக இருந்தால் 25 சதமானம்தான் சப்சிடி என்று சொல்லப்படுகிறது. ஏன் இந்த வித்தியாசம் இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: பூச்சி மருந்துகள் எல்லாம் பாதி விலையில்தான் கொர்டுக்கப்பட்டு வருகிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள் கொடுக்கும் விஷயத்தில் "பூச்சி நாசினி மருந்துகளும் காளான் நாசினி மருந்துகளும் அடக்க விலையில் முக்கால் விலையில் உணவுப் பயிர்களுக்கும், உணவுப் பயிரில்லாத எண்ணெய் வித்து, தேங்காய் போன்ற பயிர்களுக்கும் பாதி விலையில் சகாயமாக கொடுக்கப்படுகிறது. . ." என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, மிளகு, மல்லி, போன்றவைகளையும் உணவுப் பொருட்கள் என்று மட்டும் சேர்க்காமல் 'கன்ஸூமர்ஸ் க்ராப்ஸ்' என்ற முறையில் எல்லாவற்றிற்கும் இலவசமாகவே இந்த மருந்துகளை கொடுப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா? . . . . மேலும் . . . . (மணி அடிக்கப்பட்டது)..

12th March 1964]

கனம் உதவி சபாநாயகர்: இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் முன்பே பதில் சொல்லியாய்விட்டது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, உணவு உற்பத்தியில் அக்கறை எடுத்துக்கொள்ளும் முறையில் இயங்கக்கூடிய "ஃபுட் ப்ரொடக்ஷன் டிவிஷன் ஆபீஸ்" ஒன்று டிசம்பர் மாதம் 11-ம் தேதி துவக்கப்பட்டு, அதே மாதம் 31-ம் தேதி மூடப்பட்டிருக்கிறது. இதற்கான காரணம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: இதைப்பற்றி தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் அமைச்சர் அவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது இந்த சட்டத்தின் மீது மத்திய உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பின் காரணமாக இந்தச் சட்டத்தின் கீழ் பணியாற்றுகிற "ஆதரைஸ்ட் ஆபீசர்"-களுக்குக்கூட சம்பளம் கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதற்காக ஒரு புதுச் சட்டம் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; அப்படியென்றால் எப்போது கொண்டு வரப்படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: நான் இவ்விதம் ஒரு சட்டம் கொண்டு வரப்படும் என்று சொல்லவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப்பற்றி திரித்துக்கூறுகிறார்கள் என்று எண்ணுகிறேன். இப்போது கொடுக்கப்படுகின்ற தீர்ப்பைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்றுதான் சொன்னேன், உடனடியாக சட்டம் கொண்டுவரப்படும் என்று நான் சொல்லவில்லை.

மேலும் புலவர் கோவிந்தன் அவர்கள், 'டார்ஜெட்' பற்றி கேட்டார்கள். இதைப்பற்றி உடனடியாக தெரிவிப்பதற்கில்லை. பின்னால் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு தெரிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, எல்லாப் பயிர்களுக்கும் பூச்சி மருந்துகள் சப் சிடி ரேட்டில் கொடுக்கப்படுகிறது. கிருஷ்ணகிரி பிரதேசத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர்களில் மாஞ்செடி பயிரிடப்பட்டிருக்கிறது. இதற்கு இப்போது எந்த விதமான சப் சிடியும் கொடுக்கப்படவில்லை. ஆகவே இதற்கும் 50 சதவிகிதம் சப் சிடி விலையில் பூச்சி மருந்துகள் கொடுப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 7,08,74,600 under Demand No. XVI—Agriculture be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

[12th March 1964

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 7,08,74,600 under Demand No. XVI—Agriculture'.

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 1,97,22,800 under Demand No. XVIII—Animal Husbandry be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,97,22,800 under Demand No. XVIII—Animal Husbandry'.

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 26,36,000 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 26,36,000 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture'.

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 11,80,80,500 under Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading by reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 11,80,80,500 under Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading'.

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

12th March 1964]

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

121. Notification issued with G.O. Ms. No. 3969, Home, dated 31st December 1963 relaxing rules 4 (1) (iii), 6 (*a*), 7 (2), and 7 (4) of the Madras Molasses Control and Regulation Rules, 1958 in respect of continuance of permission for import/transport of and export out of India through Madras Port by the Indian Molasses Company (Private), Limited. [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 (*Madras Act X of* 1937).] 1-40 p.m.

B. Reports, Notifications and other papers.

* 71. Speech of the Minister for Home while moving the Demands relating to Agriculture.

* Circulated to Members on 10th March 1964.

APPENDIX.

[*Vide* Answer to Starred Question No. 236 on page 365.]

Proceedings of the Board of Revenue No. 324, dated 9th December 1910.

READ—the following paper :—

Letter from R. A. Jenkins, Esq., B.A., I.C.S., Acting Collector of Cuddapah, to the Secretary to the Commisioners of Land Revenue, dated 1st November 1910, Ref. No. on C. 839/Petn.

[Requesting instructions whether the revision of village establishments may be taken up as each taluk is resettled.]

Resolution—No. 324, *dated* 9*th December* 1910.

After every resettlement, Collectors should consider the necessity for a revision of village establishment with reference to the actual population and new beriz of the villages. In framing proposals for the revision, the following instructions should be observed. Proposals should be submitted for each taluk as soon as its resettlement is completed.

2. *Clubbing of villages.*—The rules to be observed in clubbing or sub-dividing villages are those framed under clause (i) of section 20 of Madras Act III of 1895 and printed at page 372 of the Board's Standing Order, Volume III—(1) The distance limit of 1½ miles prescribed by rule 1 applies only to the formation of munsifs' (headmen's) charges. (2) A karnam's group may comprise two or more munsifs' (headmen's) charges or survey villages. (3) A survey village may be split up into two or more munsifs' (headmen's) charge when there are hamlets of importance situated at a distance of more than 1½ miles from the parent village. (4) Uninhabited villages should be clubbed with the neighbouring inhabited villages as far as possible. (5) The most important village of the group, taking both revenue and population into consideration, should as a rule be selected as the residence of the village officers. (6) The sub-division of survey villages to form karnam's charges should not be proposed after the completion of resurvey, as it is likely to lead to much confusion, and the preparation of fresh settlement registers and maps may be necessary.

3. *Scale of establishment.*—The following scale should be adopted as a general rule :—

Grade of beriz.	*Karnam's pay.*	*Munsif's (headmen's) pay.*	*Number of vetties at Rs. 4 each per mensem.*
	RS.	RS.	RS.
(1)	(2)	(3)	(4)
Under Rs. 2,000	8	5	1
Rupees 2,000 and under Rs. 4,000	8	6	2
Rupees 4,000 and under Rs. 8,000	10	7	3
Rupees 8,000 and under Rs. 12,000	12	8	4
Rupees 12,000 and under Rs. 16,000	15	10	4
Rupees 16,000 and upwards	..	..	..

4. *Talayaris*—

			Number
For groups having a population between	200 and 1,500	..	1
For groups having a population between	1,500 and 3,000	..	2
For groups having a population between	3,000 and 4,500	..	3
For groups having a population of more than	4,500	..	4

Additional talayaris may be proposed for village police duties wherever the number allowed by the scale is considered insufficient. The District Superintendent of Police should be consulted on this subject and the fact that this has been done should be stated.

5. *The assistant karnams and monigars.*—The pay of assistant karnams should be fixed at Rs. 8 in accordance with the orders of Government, communicated with Board's Proceedings No. 136, dated 22nd June 1901. As a rule, assistant karnams will only be allowed for village which have a beriz of not less than Rs. 8,000 and in which the work is too heavy for a single karnam. Collectors may propose an additional assistant karnam when they are satisfied that the work of a group is too heavy to be managed by a single karnam and an assistant karnam. In similar circumstances, monigars on Rs. 5 will be appointed to help munsifs (headmen) in the collection of revenue.

6. *Nirgantis.*—The following is the general scale :—

			Number of nirgantis.
For each work irrigation 200 acres or under	500	...	1
For each work irrigation 500 acres or under	1,000	...	2
For each work irrigation 1,000 acres over.	...	...	3

The necessity for any proposed deviations from the prescribed scale of establishment should be fully explained.

7. *Proposition statements and sketches.*—Proposals should be submitted in the form appended to the proceedings. Hamlets should be shown in the proposition statement, as well as the main villages, with particulars of their beriz and population and their distance from the munsif's (headmen's) headquarters, which should be indicated by the letter 'C'. If there is no accurate information as to the revenue or population of the hamlets, approximate figures should be furnished; the demand of each village at the resettlement rates including the estimated average tirwajasti and fasalijasti calculated on the best data obtainable should be taken as the revenue of the village. A sketch map of each taluk should be furnished showing the sites of villages and of their hamlets with the boundaries of karnams' and munsifs' (headmen's) charges marked in different colours. A separate statement should be submitted in regard to nirgantis showing the serial number of each group, the name of each irrigation source, the average extent of irrigation under it for the previous three years and number of nirgantis proposed for it.

களுக்குக் கொடுக்கப்படக்கூடிய ஊதியம் உயர்ந்திருப்பதினாலும், பஸ் வைத்திருப்பவர்கள் எல்லாம், இன்றைக்கு மதிப்பிற்குரிய திரு. நடராஜன் அவர்கள் சொன்னது போன்று சரண்டர் செய்து விடுவதற்குத் தயாராக இருந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக நீலகிரி ஜில்லாவில் தினசரி ஒரு கியர் பாக்ஸ் போய்விடுகிறது, க்ளச் பாக்ஸ் போய்விடுகிறது, டயர் தேய்மானம் இதைவிட அதிகமாக நஷ்டத்தைக் கொடுத்துகொண்டிருக்கிறது. இந்த விதத்தில் பலவிதமான கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் தங்கள் வண்டிகளை எல்லாம் அரசாங்கத்திற்கு ஒப்படைத்துவிடத் தயாராக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணம் ஒன்று முதல் ஐந்து வரை பஸ் வைத்திருக்கின்ற ஸ்மால் பஸ் ஆபரேட்டர்களுக்கு அரசாங்கம் கொடுக்கின்ற உதவி போதாமல் இருப்பதுதான். இவர்களுக்கு அரசாங்கம் தனியாக சலுகைகள் அளிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்டஸ்ட்ரீஸ் பைனான்சிங் கார்ப்பரேஷனிலிருந்து இவர்களுக்கு வேண்டிய கடன் உதவி அளித்து இவர்களை ஊக்குவிக்கலாம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, டெவலப்மென்ட் விங்கில் 10 சதவிகிதம் ஆங்காங்கு இருக்கின்ற பஸ் ரூட்களை விரிவாக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஜில்லா டெவலப்மென்ட் கௌன்ஸிலில் விவாதிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாதிரி பொது ஜனப் பிரதிநிதிகள் என்ற முறையில் கவுன்சில்களில் பரிசீலிக்கப்பட்டதாக நான் அறியவில்லை. ஆர்.டி.ஓ., ஆர்.டி.எ., இவர்களின் உசிதம் போல் பஸ் ரூட்டுகளுக்கு வேண்டிய அறிக்கைகளை சர்க்காருக்கு அனுப்புகிறார்கள். ஆர்.டி.ஓ. ஜில்லா டெவலப்மென்ட் கௌன்சிலில் மெம்பராக இல்லை. ஆனால் இந்த கௌன்சிலுக்கு கலெக்டர் செயர்மெனாக இருக்கிறார். ஆர்.டி.ஓ.-வும் இந்த கௌன்சிலில் மெம்பராக இருக்கவேண்டும் என்று இருந்தால் சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறேன். மேலும் பஸ்ரூட்டுகளைப்பற்றி இப்போது டெவலப்மெண்டு கௌன்சிலின் தீர்மானம் போட்டாலும் அதில் "if supported by Collector" என்றிருக்கிறது. கலெக்டர் அதை ஆதரித்தால் தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்றிருந்தால் இதற்கு என்ன அர்த்தமிருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே கௌன்சிலுக்கே இதைப்பற்றி தீர்மானம் நிறைவேற்றி முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரேட் விஷயத்தில் இப்போது மைல் ஒன்றுக்கு 7½ பழைய காசு வீதம் இருந்து வருகிறது. இப்போது அரசாங்க பஸ்களில் கட்டணம் உயர்த்தப்போவதாகத் தெரிகிறது. இந்த முறையில் தனியார் துறையில் நடத்துகின்ற பஸ்களுக்கும் ரேட்டை உயர்த்துவதற்குப் பரிசீலனை செய்வது மிகவும் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லாரிகளைப் பொறுத்தவரையில், லாரிகளில் இரண்டு பக்கத்தில் சைரன்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. இதன் காரணமாக விபத்துக்கள் குறையும் என்று நினைக்கிறேன். முக்கியமாக இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு லாரிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். லாரிகள் போகின்ற வேகத்தைப்பார்த்தால், ரோட்டில் மனிதர்கள் நடந்து போகவும் கூட பயமாக இருக்கிறது. ஆகவே லாரிகளை சாதாரணமாக 30 மைல் அல்லது 25 மைல் வேகத்தில் போகும்படியான அளவில் ஏதாவது செய்தால் நலமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பஸ்களில் போகும்போது டிரைவர்கள் பாஸஞ்சர்களோடு அரசியல் விஷயம் மற்றுமுள்ள விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதால் அவர்களுக்குப் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றது, அதோடு விபத்துக்களுக்கும் காரணமாக இருக்கிறது. ஆகவே டிரைவர்கள், கண்டக்டர்கள், பிரயாணிகள் இவர்களோடு பேசக்கூடாது, டிரைவர்கள் தனியாக இருந்து பஸ் ஓட்டுவதற்கான முறையில் அவர்களை வைக்கவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இதில் பேசுவதற்கு நேரம் தந்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். பொதுவாக நமது அரசாங்கம் சிறிய பஸ் ஆப்ரேட்டர்களை ஊக்குவிக்கும் முறையில் அவர்களுக்கு பஸ் பெர்மிட்டுகளைத் தாராளமாகக் கொடுக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எந்த சிறிய பஸ் சொந்தக்காரர்களை எடுத்துக்கொண்டாலும், யாரும் தாங்களாகப் பணம் போட்டு பஸ்களை வாங்கி நடத்துவதாகப் பார்க்க முடியாது. அவர்களுடைய ஆர்.ஸி. புத்தகத்தைப் பார்த்தாலே 'ஹயர் பர்ச்சஸ்' லில் வாங்கியிருப்பதாகத்தான் இருக்கும். பெரிய மார்வாடிகளிடமிருந்தோ, வடநாட்டுக்காரர்களிடமிருந்தோ பணத்தை வாங்கி 24 சதமானம், 30 சதமானம் என்ற முறையில் வட்டி கொடுத்து விட்டு தங்களுக்கு ஒன்றும் இல்லாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே கனம் உறுப்பினர் கார்ச்சா கவுடர் அவர்கள் கூறியது போன்று, இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக இவர்களுக்கு கடன் உதவி அளிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இவர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்றால், பஸ்களுக்கு உச்சவரம்பை ஏற்படுத்த வேண்டும். இதைப்பற்றி நாம் இதற்கு முன் பேசியிருக்கிறோம், அந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமலாக்கவேண்டும். சில ரூட்டுகளை எடுத்துக்கொண்டால் ஒரு சிலருக்கு மட்டும் மொனாப்பலியாகத்தான் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. இவ்விதம் ஏகபோக உரிமை வைத்திருக்கின்ற முறை இந்த மாதிரியான ஜனநாயக நாட்டில் இருப்பதைப் பார்க்க ஆச்சரியமாகத்தான் இருக்கும். இதைப்பார்த்து மிகவும் வேதனை அடைய வேண்டியதாக இருக்கிறது.

[திரு. ம. கமலநாதன்] [13th March 1964

மேட்டார் பர்மிட்டு விஷயம் எடுத்துக்கொண்டால், ஆர்.டி.எ. அல்லது எஸ்.டி.ஏ. பெர்மிட் கொடுக்கிறார்கள். அதன் பின்னால் எஸ்.டி.ஏ.டி.-க்கு அப்பீல் போடுகிறார்கள், அதற்கு மேல் ஹைகோர்ட்டில் அப்பீல் போடுகிறார்கள், அதற்கு மேல் சுப்ரீம் கோர்ட்டுக்கும் அப்பீல் போடுகிறார்கள். இவ்விதம் போகும்போது ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களுக்கு ஸ்டே ஆர்டர் கொடுத்து விடுகிறார்கள். இதனால் அங்குள்ள மக்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. யாராவது இப்போது போகிற டைம் சரியில்லை என்று சொல்லி அப்பீல் போடுகிறார்கள், இவ்விதம் அப்பீல் போடும்போது, பழைய பஸ்ஸும் போகிறது, புதிய பஸ்ஸும் போகிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இவ்விதம் இரண்டு பஸ்கள் போய்க்கொண்டிருந்தால் நல்லது தானே . . .

திரு. ம. கமலநாதன் : நல்லது தான், ஆனால் முன்னால் ஒரு நேரத்திற்குப் போய்க்கொண்டிருந்த குறிப்பிட்ட பஸ் பிறகு இல்லாமல் போய்விட்டால் மக்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. இப்போது கிருஷ்ணகிரியிலிருந்து மெட்ராசுக்கு இரண்டு பஸ்கள் வந்து கொண்டிருக்கின்றன. இப்போது அதில் ஒன்று நின்றொன்று நிறுத்தப்பட்டுவிடும். முன்னால் காலையில் ஆறு மணிக்கும், பின்னால் மத்தியானம் 12 மணிக்கும் வந்துகொண்டிருந்தது. இப்போது நான்கு வருடமாக ஓடிக்கொண்டிருந்த 12 மணிக்கு புறப்படுகிற பஸ் இல்லை என்றால் பலவிதமான கஷ்டம் ஏற்படுகிறது அங்குள்ள மக்களுக்கு . . .

கனம் சபாநாயகர் : இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க வழியிருந்தால் அதைச் சொல்லவேண்டும்.

திரு. ம. கமலநாதன் : வழி என்னவென்றால், இரண்டு வருடத்திற்கு மேலாக யாராவது பஸ்களை நடத்திக்கொண்டிருந்தால் அவர்களுக்கு பக்கா பெர்மிட் கொடுத்து விட வேண்டும். அதற்குத் தகுந்த மாதிரி சட்டத்தில் அமென்ட்மென்ட் கொண்டு வர வேண்டும். இதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்து பார்க்க வேண்டும்.

மேலும் ஆக்ஸிடன்டைப்பற்றி சொல்லப்பட்டது. முக்கியமாக இரவு வேளைகளில் நெடுந்தூரம் லாரிகளை ஓட்டுவதால் களைப்பு ஏற்படுகிறது, இதன் காரணமாக விபத்து ஏற்படுகிறது. முக்கியமாக இவ்விதம் ஏற்படுவதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்று பார்த்தால், இப்போது இருக்கின்ற டிரைவர்களை எல்லாம் பார்த்தால், முன்னால் அந்தந்த லாரிகளில் க்ளீனராக இருந்தவர்கள் தான் டிரைவர்களாக வந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு சரியாக ஸ்கில் லெவல் இருக்கிறதா என்பதைப்பற்றி யாரும் கவனிப்பதில்லை. லைசென்ஸ் விஷயத்தை எடுத்துக்கொண்டால், அது ஒன்றும் இல்லாமலேயே, பங்களூர் போன்ற இடங்களில் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து விட்டால் சுலபமாக லைசென்ஸ் கிடைத்துவிடுகிறது.

13th March 1964] [திரு. ம. கமலநாதன்]

இப்படி தேர்ச்சி பெறாதவர்கள் ஓட்டினால் எப்படி விபத்துக்கள் வராமல் இருக்கும்? ஆகவே எல்லா டிஸ்ட்ரிக்ட் ஹெட் க்வார்ட்டர்ஸிலும் டிரைவிங் ஸ்கூல் ஏற்படுத்த இவர்களுக்குக் குறைந்தது ஓராண்டுக்காவது பயிற்சி கொடுப்பதற்கு வழிசெய்ய வேண்டும். முக்கியமாக மெக்கானிக்கல் மைன்ட் இருக்க வேண்டும், மற்றுமுள்ள திறமைகள் எல்லாம் இருக்கவேண்டும், அதற்கான முறையில் ஒரு வருடத்திற்கு பயிற்சி கொடுத்து அதன் பின்னால் டிரைவர்கள் லைசன்ஸ் கொடுத்தால் இம்மாதிரியான விபத்துக்கள் வராது என்று நினைக்கிறேன்.

ஓவர் லோட் விஷயத்தைப்பற்றி சொல்லப்பட்டது. கிருஷ்ணகிரியைப் பொறுத்த வரையில் தினசரி சுமார் 1,000, 1,500 பஸ்கள், லாரிகள் எல்லாம் போய கொண்டிருக்கிறது. பங்களூர், பாண்டி, திருச்சி, சென்னை போன்ற இடங்களுக்குப் போகவேண்டிய பஸ்கள் எல்லாம் அங்கே வந்துதான் போகிறது. இவ்விதமான ஒரு முக்கிய சென்டராக இருக்கிறது. இந்த இடத்தில் டிராஃபிக்கை நல்ல முறையில் பார்ப்பதற்கு வேண்டிய ஸ்டாஃப் கிடையாது. முக்கியமாக இம்மாதிரிப்பட்ட சென்டரில் ஒரு டிராஃபிக் சார்ஜென்டோ அல்லது டிராஃபிக் கான்ஸ்டபிளோ எப்போதும் இருக்க வேண்டும். அப்படி ஒன்றும் அங்கு கிடையாது. எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவம் என்னவென்றால், வடநாட்டு முதலாளி ஒருவரால் நடத்தப்படும் பஸ் ஒன்றில், அவர் என்னுடைய நண்பர் தான், அந்த பஸ்ஸில் . . .

திரு. எ. ஆறுமுகம் : ஸார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், கனம் அங்கத்தினர் அவர்கள் வட நாட்டு முதலாளி என்று சொல்லுகிறார், இதனால் அவர்களுடைய மனம் புண்படாதா என்று கேட்க விரும்புகிறேன் . . .

கனம் சபாநாயகர் : புண் ஒன்றும் ஆகாது . . .

திரு. ம. கமலநாதன் : நான் முன்பே சொன்னேன், அவர் வடநாட்டு முதலாளி, என் நண்பர் என்று. அவர் பேரில் புகார் சொல்ல வேண்டும் என்பதற்காக நான் சொல்ல வரவில்லை. இந்த பஸ்ஸில், சுமார் 120 பேர்களை ஏற்றிக்கொண்டு போனார்கள். அந்த பஸ் எங்களை—அதாவது கனம் செய்தித்துறை அமைச்சர் அவர்களும் நாங்களும் போய்க்கொண்டிருந்த நேரத்தில்—ஓவர் டேக் செய்து கொண்டு போயிற்று. அந்த இடத்தில் அமைச்சர் வருகிறார்கள் என்று தெரிந்தும் அவர்கள் ஓவர் லோட் எடுத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அரசாங்கம் போதிய அளவு இதில் கவனம் செலுத்தாமல் இருப்பதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஸ் ப்ளாண்ட் காலத்தில் கொடுக்கப்பட்ட டைமிங்குகள் 10-00 a.m.
அப்படியே இருக்கின்றன. டைமிங் கிருஷ்ணகிரியிலிருந்து சேலம் போக 5, 5½ மணி என்று இருக்கிறது. 3 அல்லது 3½ மணியில் போகிறோம் என்றால் அதற்கு 5¼ மணி என்று இருக்கிறது.

[திரு. ம. கமலநாதன்] [13th March 1964

ஸ்பீடிங் ஆஃப் பஸ்ஸை எடுத்துக்கொண்டால் இப்போது நார்த் ஆர்க்காட்டில் செய்திருக்கிறார்கள். சேலத்தில் செய்யப்படவில்லை. இரண்டு ஜில்லாக்களுக்கு மிடையே போகக்கூடிய பஸ்களைப் பொறுத்தவரையில் இங்கே குறைத்தால் அங்கே குறைக்க முடியவில்லை. இதைப்பற்றி இரண்டு ஆர்.டி.ஓ.-க்களும் சேர்ந்து முடிவு எடுத்தால் நன்றாக இருக்கும்.

ஓவர்லோடிங் பற்றி ரொம்பவும் நன்றாகக் கவனிக்கவேண்டும். இன்ஃபீரியர் ஆப்பரேட்டர்ஸுக்கு டைமிங் கூடக் கிடையாது. ஒரு இடத்திலிருந்து எந்த இடம் போக லோட் இருக்கிறதோ அங்கு போய் விட்டு அப்படியே திருப்பிக்கொள்கிறார்கள். டிஸ்ட்ரிக்ட் பூராவுக்கும் ஒரு ஆர்.டி.ஓ. இருக்கிறார். அது போதுமா? ஒரு இடத்தில் ஆக்ஸிடெண்ட் ஆகி விட்டால் இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் கழித்துத்தான் அவர் போய்ப் பார்க்க முடிகிறது. உடனே போய்ப்பார்க்க முடிவதில்லை. இது வருமானம் உள்ள தொழிலாதலால் இதைப் பாதுகாத்து, ட்ராஃபிக்கை கண்ட்ரோல் செய்ய முயற்சிக்கும் வகையில் அதிக ஸ்டாஃப் போட்டு, ஆக்ஸிடெண்ட் இல்லாமல் இருக்கும் முறையில் டிபார்ட்மெண்ட்டை விரிவுபடுத்தவேண்டும்.

ஆர்.டி.ஏ. மீட்டிங் நடக்கும் நேரத்தில், புதிய பஸ் பர்மிட்டுகள் கொடுக்கிறோம் என்று தெரிவிக்கும் நேரத்திலும் வேரியேஷன், கர்ட்டெயில்மெண்ட் பற்றிய நேரத்திலும் தொகுதி எம்.எல்.ஏ.-வையும் அழைத்து அவர்கள் அபிப்பிராயத்தையும் கேட்பது நல்லது. நான் ஒரு ஆர்.டி.ஏ. மீட்டிங்குக்குப் போனேன். கர்ட்டெயில்மெண்ட் பற்றி பேச்சு வந்தது. "எக்ஸ்டென்ஷன் அல்லது வேரியேஷனாக இருந்தால் வரவேற்கவேண்டிய ஒன்றாகும். கர்ட்டெயில்மெண்ட் என்றால் யார் வரவேற்பார்கள்?" என்று ஆர்.டி.ஏ. மீட்டிங்கில் கலெக்டரிடத்தில் நான் சொன்ன நேரத்தில், ஒரு வக்கீல் 'நான் பேச உரிமை இல்லை' என்று சொன்னார்கள். அப்போது கலெக்டர் அவர்கள் என்னுடைய மானத்தைக் காப்பாற்றும் முறையில் நான் பேசலாம் என்று சொன்னார்கள். கர்ட்டெயில்மெண்ட் என்று வரும்போது பொது மக்கள் உள்ள வசதியை இழக்கத் தயாராக இருக்க மாட்டார்கள். கர்ட்டெயில்மெண்ட் என்றே இருக்கக்கூடாது. முதலில் சர்வே செய்கிறோம், அங்கே ரூட் தேவை என்று கொடுக்கிறோம். அதற்குப் பிறகு வேண்டாம் என்று முடிவு செய்வது சரியல்ல.

ரோட் ட்ராஃபிக் கமிட்டி என்று டிஸ்ட்ரிக்ட் லெவலில் ஒரு கமிட்டி இருக்கிறது. அதில் நான் ஒரு மெம்பர். அதற்கு என்ன ஃபங்க்ஷன்ஸ் என்று கேட்டேன். எது வேண்டுமானாலும் பேசலாம் என்று சொல்லுகிறார்களே தவிர, ட்ராஃபிக் கண்ட்ரோல் புதிய ரூட்டுகளைப் பரிசீலனை செய்வது என்ற முறையில் வேலைகளைக் குறித்துக் கொடுத்தால் செய்வதற்கு அனுகூலமாக இருக்கும்.

கடைசியாக, புதிய பஸ் ரூட்டுகளையும் ஏற்படுத்த கவனம் செலுத்த வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

13th March 1964]

* **திரு. சீ. சிவசுப்பிரமணியன்** : கனம் சபாநாயகர் அவர்களே, நம் தொழில்வள அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன்.

நம் மாநில அமைச்சர் வெளி நாடுகள் சுற்றி நல்ல முறையிலே இந்த போக்குவரத்தை நடத்தவேண்டுமென்று முயற்சி செய்து வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த சமயத்திலே பல இடங்களில் பஸ்களை அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். ஆனால் பஸ் கண்டக்டர்களும், பஸ் ட்ரைவர்களும் கடமையுணர்ச்சியில்லாமல் தங்களுடைய வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் இருக்கிற சண்டைகளைத் தீர்க்கவேண்டும். நம் அமைச்சர் அவர்களையெல்லாம் கூட்டி நல்ல அறிவுரைகளை வழங்கவேண்டும் என்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கண்டக்டர், ட்ரைவர் ஆகிய இரண்டு பேரும் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் பொது மக்களுக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தக் கஷ்டத்தைத் தீர்க்கவேண்டுமென்றால் அவர்களுக்குள் ஒற்றுமையை வளர்க்கவேண்டும். கண்டக்டர் விஸில் ஊதுகிறார், அந்த சமயத்தில் ட்ரைவர் போய்க்கொண்டே இருக்கிறார். ட்ரைவர் நிறுத்துகிறார், பஸ் கண்டக்டர் ஊதுகிறார். இந்த அளவுக்கு, பூசல் நடக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக நான் இன்று காலையில் எக்மோருக்குச் செல்லவேண்டுமென்று 5 மணிக்குச் சென்றேன்.

கனம் சபாநாயகர் : நாஷனலைஸ்ட் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டைப் பற்றிய மானியம் அடுத்தபடியாக எடுத்துக்கொள்ளப் போகிறோம்.

திரு. சீ. சிவசுப்பிரமணியன் : எல்லாவற்றையும் இந்த நேரத்தில் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன்.

கனம் சபாநாயகர் : அதைத் தனியாக வைத்துக்கொள்ளுங்கள். அப்புறம் இடம் கொடுக்கிறேன்.

திரு. சீ. சிவசுப்பிரமணியன் : ஆகவே அவர்களுக்கு இந்த உணர்ச்சி தேவை என்பதனை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு பஸ் செல்கிறது. அப்படிச் செல்லும் நேரத்தில் கடலூரில் நின்றால் சர்க்கார் பஸ்ஸில் டிக்கெட் கிடையாது. எங்கிருந்து டிக்கெட் எடுக்கவேண்டும் என்று கேட்டால், பாண்டிச்சேரியிலிருந்து எடுத்தால்தான் சிதம்பரம் போகலாம் என்று சொல்லுகிறார்கள். கடலூர் ஒரு ஜில்லா தலைமை இடம். அங்கு பொது மக்களும் அதிகாரிகளும் அதிகமாக வருகிறார்கள். அப்படி வரக்கூடிய நேரத்தில் சீக்கிரம் செல்ல வேண்டும். துரித பஸ்ஸில் செல்லவேண்டுமென்று

சொன்னால் டிக்கெட் இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்போது நான் அங்கே நின்றிருந்தால், எம்.எல்.ஏ. ஆன என்னைப் பார்த்து 'என்ன ஐயா ஆட்சி நடத்துகிறீர்கள்?' என்று கேட்கிறார்கள் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கடலூரில் ஏறுவதற்காக பாண்டிச் சேரியிலிருந்தோ, அல்லது அதற்கு முன்னாலிருந்தோ எம்ட்டியாகக் கொண்டுவரச் சொல்லுகிறீர்களா என்று அவர்களைக் கேட்கக் கூடாதா? அதற்காக கனம் அங்கத்தினர் ஏன் வருத்தப் படவேண்டும்?

திரு. சீ. சிவசுப்பிரமணியன் : அந்த முறையில் டிக்கெட் கொடுக்காமல் இருக்கும் முறையை மாற்றவேண்டுமென்று. . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டிக்கெட் கொடுக்கக் கூடாது என்று முறை கிடையாது. ஒரிஜினேட்டிங் இடத்தில் கொடுத்தது போக பாக்கி இருக்கும் இடத்தை அந்தந்த இடத்தில் டிக்கெட் கொடுத்துக்கொண்டே போகிறார்கள். இண்டர்மீடியட் ஸ்டேஷனுக்கு ரிஸர்வேஷன் செய்வதில்லை. அதுதான் சமாசாரம்.

திரு. சீ. சிவசுப்பிரமணியன் : இனிமேல் அந்த முறைக்கு ஏதாவது அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, டாக்ஸிகள் அதிகமாகக் கொடுக்கிறோம், யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கிறோம் என்று சொல்லு கிறார்கள். இப்படி அதிகமாகக் கொடுப்பதற்காக அவர்கள் அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஓட்டுகிறவர்களுக்கும் கடமை உணர்ச்சி வேண்டும். எக்மூர் ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 2-3 மைல் சுற்றுகிறார்கள். ஒரு மைலில் இருக்கும் இடத்திற்கு 3-4 மைல்கள் சுற்றுவதைப் பற்றி நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரத்தில் பல கிராமங்கள், பஸ்ஸை பார்க்காத கிராமங்கள் இருக்கின்றன. போன பட்ஜெட் ஸெஷனில் கூடச் சொன்னேன் ஜீப் பஸ் போடவேண்டுமென்று. அதைப் பற்றி இந்த வருஷம் வரையில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. நம் அமைச்சர் அவர்கள் ஜீப் பஸ்கள் சிதம்பரம் தாலுகாவில் பல கிராமங்களுக்கும் போக ஏற்பாடு செய்வார்கள் என்று நம்பு கிறேன்.

பஸ் அதிகமாகப் போட்டு விட்ட காரணத்தினால் ஜனங்களுக்கு முயற்சி குறைந்து விடுகிறது. எப்படி என்றால் இரண்டு மைலில் இருந்து வரக்கூடிய ஜனங்கள் நடந்து வரமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். ஒரு சமயத்தில் ஒரு பெண்மணி ஒரு குழந்தை யைத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்து காத்துக்கொண் டிருக்கிறாள். குழந்தை அழுதுகொண்டிருக்கிறது. குழந்தைக்கு மாந்தம், 'ஏன் அம்மா இவ்வளவு நேரம்?' என்று கேட்டேன். 'காலையில் 7 மணியிலிருந்து காத்துக்கொண்டிருந்து பஸ் 3 மணிக்குத் தான் கிடைத்தது' என்று சொன்னாள். 'வீட்டுக்காரர்

எங்கே?' என்று கேட்டேன். 'பஸ் கிடைக்கவில்லை, அவர் தங்கியிருந்து என்னை அனுப்பினார்' என்று சொன்னாள். இப்படி காலை 7 மணியிலிருந்து 3 மணி வரையில் பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். (**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எந்த இடத்தில்) கீழ்த்தத்திலிருந்து சிதம்பரம் வருவதற்கு. ஆகவே அதிக பஸ்களை சிதம்பரம் தாலுக்காவில் போட்டு ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் ஆர்க்காட்டில் ராமச்சந்திரன் என்ற ஒரு ஹரிஜன், 5-6 ஆண்டு காலமாக ஒரு பஸ் பர்மிட் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ஏதோ கஷ்டப்பட்டு கொஞ்சம் பணத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார். பல வருஷங் களாகக் கேட்டுக்கொண்டும் என்ன காரணமோ தெரியவில்லை, அவருக்குக் கிடைக்கவில்லை. அதிலே கண்டிஷன் இருப்பதாகத் தெரிகிறது. வொர்க்ஷாப் இருக்கவேண்டும் என்றெல்லாம் இருப்பதாகத் தெரிகிறது. ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவராக இருப்பதால் அந்த மாதிரி இல்லை. மற்றவர்கள் கேட்கும்போது ஒரு கொட்டகையைக் காட்டி விடுகிறார்கள். ஒரு ஸ்பெஷல் பர்மிட் இந்த ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவருக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் ; வொர்க்ஷாப் இல்லாமல் பஸ் ஓடினால் என்ன ஆகும்?

திரு. சீ. சிவசுப்பிரமணியன் : எம்.எல்.ஏ.-க்களுக்கு ஃப்ரீ பாஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்போதும் இல்லை என்றாலும் சபை நடக்கும்போதாவது ஃப்ரீ பாஸ் கொடுத் தால் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்க்கலாம் என்று சொல்லிக் கொண்டு மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. சி. கோதண்டராம பாகவதர் :** கனம் சபாநாயகர் அவர்களே இந்த போக்குவரத்து மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே போக்குவரத்து நிர்வாகம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அதற்கு முக்கிய காரணம், சென்னையில் போர்டு மெம்ப ராக உள்ள டிரான்ஸ்போர்ட் கமிஷனர், 17 ஆண்டுகளாகப் பணி யாற்றுகிற நல்ல திறமை வாய்ந்த டெப்யூடி டிரான்ஸ்போர்ட் கமிஷனர், இரண்டு அசிஸ்டெண்டு டிரான்ஸ்போர்ட் கமிஷனர்கள் மற்றும் அதிகாரிகள்தான். தமிழ் நாட்டில் போக்குவரத்துத் துறையிலே அரசாங்கத்திற்குக் காமதேனு, கற்பக விருக்ஷம் போன்று பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இருந்தா லும், அந்த இலாகாவிற்கு போதுமான வசதிகளும் இல்லை. 'ஸ்டாப்' மிகவும் குறைவாக இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லா விற்கும் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஒரு தனிக் கட்டடம் வேண்டும். அதில் எல்லாவிதமான வசதிகளும் இருக்கவேண்டும். அங்கேயே ஆர்.டி.ஏ.' மீட்டிங் நடத்தவும் வசதி செய்யவேண்டும்.

ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு துணைப் போக்குவரத்து அதிகாரி ஏற்படுத்தவேண்டும். வேலை அதிகரித்துக்கொண்டே போகிறது. இப்பொழுது ஒரு சிறிய 'டைமிங்ஸ்' விஷயமாக இருந்தாலும், அப்பீல் வரைக்கும் போகிறார்கள். உயர் நீதி மன்றம் வரைக்கும் போகிறார்கள். ஒரு பெர்மிட் கொடுத்துவிட்டால், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அப்பெலெட் ட்ரிப்யூனல், ஹைகோர்ட்டு, அங்கேயே பெஞ்ச், சுப்ரீம் கோர்ட்டு வரையிலே போகிறார்கள். அதனாலே பல கேஸ்கள் டிலே ஆகின்றன. அது சம்பந்தமாக 'பைல்களெல்லாம்' மிகவும் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்காக 'ஸ்டாப்' மேலும் அதிகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு சூப்பரின்டென்டு, ஒரு அகௌன்டென்டு, இன்னும் 4, 5 கிளார்க்ஸ் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், போக்குவரத்து அதிகாரி ஆபீஸிலேயே, டிரான்ஸ்பர் ஆப் பெர்மிட் பீஸ், ரிஜிஸ்டிரேஷன் பீஸ், பெர்மிட் பீஸ்; டாக்ஸ் முதலிய கட்டணங்களை வாங்குவதற்கு ஒரு கஜானா ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது அதே மாதிரி சென்னையிலே டெப்யூடி கமிஷனர் ஆப் போலீஸ் ஆபீசில் நடைபெறுகிறது. இம் மாதிரி ஏற்பாடு இருந்தால் யார் டாக்ஸேஷன் கட்டவில்லை, யார் சர்சார்ஜ் கட்டவில்லை என்பது நன்றாகத் தெரியும், அதைக் கண்டு பிடிப்பது மிகவும் சுலபமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பெர்மிட் வழங்குவதில் முதல் முதலாக 1956-ம் ஆண்டில் ஜி.ஓ. 1298-ல் உள்ள விதிகளை அனுசரித்து வந்தார்கள். அதில் புதிய நபர்களுக்கு பெர்மிட் கிடைக்க வசதியில்லாத காரணத்தினாலே, உயர்நீதி மன்றம் அந்த ஜி.ஓ-வை மாற்றவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, நமது அரசாங்கம் ஜி.ஓ. 2265 என்ற உத்தரவைப் பிறப்பித்து, அந்த விதிகளை மாற்றினார்கள். அதாவது எக்ஸ்பீரியன்ஸுக்கு ஒரு மார்க்கு, செக்டாருக்கு ஒரு மார்க்கு, கம்பெனிக்கு ஒரு மார்க்கு என்று நிர்ணயித்தார்கள். ரிட் பெடிஷன் நம்பர் 247-ல் கம்பெனிக்கு ஒரு மார்க்கு கொடுப்பது செல்லாது என்று உயர் நீதி மன்றம் தெரிவித்துவிட்டார்கள். இந்த பிப்ரவரி மாதக் கடைசியில் சுப்ரீம் கோர்ட்டு இந்த மார்க்கு சிஸ்டம் ஜி.ஓ.-வே செல்லாது என்று அறிவித்து விட்டார்கள். அதன்படி இப்பொழுது சுமார் 150 பஸ்கள் நின்றுவிடும் என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்தார் உடனே செக்ஷன் 47, செக்ஷன் 68 இந்தத் திருத்தங்களை மாற்றி, அதற்கான விதிகளையும் ஏற்படுத்தி, உடனே எல்லா பஸ்களும் நிற்காமல் ஓடும்படி வசதி செய்யவேண்டும். மீண்டும் பிப்ரவரி மாதத்தில் ஜில்லாவில் பல இடங்களில் ஆர்.டி.ஏ. பல புதிய பெர்மிட்கள் வழங்கியிருக்கிறார்கள். அவைகள் சம்பந்தமாக மேலும் 'ப்ரொசீடிங்ஸ்' அனுப்பாமல் நிறுத்தி வைத்து, மீண்டும் அவைகள் பற்றி புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துரிதமாக உத்தரவுகளை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டிரான்ஸ்பர் ஆப் பெர்மிட்ஸ் செக்ஷன் 59 (1)-ன் படி தாராளமாக அனுமதிக்கலாம் என்று 1954-ல் பிளானிங் கமிஷன் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறது. அதன்பேரில் நமது அரசாங்கத்திற்கும் தெரியப்படுத்தி அதற்கான பீஸ் ரூபாய் 100 என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது 1–4–1963 முதல் பீஸ் ரூபாய் 200 என்று உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, டிரான்ஸ்பர் ஆப் பெர்மிட்ஸ் தாராளமாக அனுமதிக்கவேண்டும். எல்லோரும் பஸ் சர்வீஸ் நடத்த முன்வர வேண்டும். புதியதாக ஒரு பெர்மிட் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பெர்மிட் கிடைத்தால், சுப்ரீம் கோர்ட்டு வரையில் போவதால், மிகவும் கஷ்டப்பட நேரிடுகிறது. ஆகவே, 'டிரான்ஸ்பர் ஆப் பெர்மிட்' தாராளமாக அனுமதிக்கப்பட்டால், எல்லோரும் பஸ் சர்வீஸ் நடத்துவதற்கு முன்வருவார்கள். தங்கக் கட்டுப்பாடு காரணமாக இப்பொழுது தங்க நகை வியாபாரிகள் ஒரு வியாபாரமும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களும் பஸ் சர்வீஸ் நடத்த முன்வருவார்கள். லாரி முதலாளிகளும் பஸ் சர்வீஸ் நடத்த முன்வருவார்கள். ஆகவே, டிரான்ஸ்பர் ஆப் பெர்மிட் தாராளமாக அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஸீட்டிங் அரேஞ்ச்மெண்டு, எக்ஸ்பிரஸ் சர்விஸ் வரைக்கும் முன்பக்கம் பார்க்கும்படியாக சீட்கள் இருந்தால் மிகவும் நல்லது. மற்றபடி சாதாரண பஸ்களில் இப்பொழுது இருக்கிற நிலையையே அனுஷ்டிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜி.ஓ. 3258-ன் படி ஒரு பஸ் 200 மைல் ஓடலாம் என்று இருக்கிறது. அதை 225 மைல் என்று மாற்றி அமைக்க வேண்டும். எக்ஸ்பிரஸ் பஸ் 250 மைல்களுக்குப் பதிலாக, 275 மைல்கள் வரைக்கும் ஓடலாம் என்று அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்பொழுது டெப்யூடி டிரான்ஸ்போர்ட் கமிஷனர், அசிஸ்டெண்டு ட்ரான்ஸ்போர்ட் கமிஷனர், ஆர்.டி.ஏ. மற்றும் மோட்டார் வாகன இன்ஸ்பெக்டர்கள் சில சமயங்களில் கார் இல்லாமல் பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் கார்கள் வாங்குவதற்கு கடன் உதவி செய்து, அதை சிறு தவணைகளாக திருப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. வி. எஸ். எஸ். மணி :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, மோட்டார் வெஹிகிள்ஸ் (Motor Vehicles Act) Administration மான்யத்தின் பேரில் கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். துரிதமாக போக்குவரத்து வேண்டும் என்று கருதப்படுகிற இந்தக் காலத்தில், சாதாரண நடுத்தர மக்களுக்கு பஸ் வாகனம்தான் சுலபமாகக் கிடைக்கக்கூடியது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. வசதி படைத்த மக்கள் 'ப்ளெஷர்' கார்களில் போகக்கூடிய ஒரு நிலை இருக்கும்பொழுது, பஸ்களில் பிரயாணம் செய்யக்கூடிய நடுத்தர மக்களுக்கு 'ப்ளெஷர்' கார்களில் போகக்

யாக இருக்கும். இது சம்பந்தமாக பலமுறைகள் ஆர்.டி.ஏ. R.T.A. அவர்களிடம் சொல்லியும், அம்மாதிரி எக்ஸ்டென்ஷன் கொடுப்பதற்கு தயங்குகிறார்கள். ஏதோ ஹைகோர்ட்டில் Stay வாங்கி ஒரு ஸூட் நடக்கிறது என்று சொன்னார்கள். இப்பொழுது அந்த சட்டமே நமது மன்றத்தில் திருத்தப்பட்டுவிட்டது. ஆகவே இந்த எக்ஸ்டென்ஷன் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

எனது மாவட்டத்திலுள்ள பஸ் ஆப்பரேட்டர்கள், டிரைவர்களுக்கு இரண்டு விதமான வேலைகள் கொடுத்துவருகிறார்கள். ஒன்று அவர்கள் வண்டியை ஓட்ட வேண்டும். மற்றொன்று அவர்கள் கையில் பஸ் ஸ்டார்டிங் பாயிண்டிலே ஒரு இன்வாயிஸைக் (Invoice sheet) கொடுத்து, அதில் எந்தெந்த இடத்திலே கண்டக்டர் பஸ்ஸை நிறுத்தி பாசஞ்சரை ஏற்றுகிறாரோ, அப்பொழுது எல்லாம் டிக்கெட்டின் நம்பர், எத்தனை பாசஞ்சர்கள், எவ்வளவு கட்டணம் என்பதை எல்லாம் அதில் குறித்துக் கொள்ள வேண்டும். டிரைவர் ஒரு கையால் ஸ்டியரிங்கை பிடித்துக் கொண்டு, மற்றொரு கையால் இன்வாயிஸில் எழுதிக் கொண்டிருக்கும்பொழுது, பஸ்ஸும் ஓடிக் கொண்டு இருக்கிறது. இப்படிச் செய்வதினால் பஸ்ஸுகளுக்கு விபத்துகள் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும். இந்தமாதிரி இரண்டு விதமாக வேலைகள் அவர்களுக்கு கொடுக்காமல், ஓட்டுவதைத் தவிர டிரைவர்கள் வேறு வேலை செய்யக்கூடாது என்று சர்க்கார் ஒரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பஸ் கன்ஸ்டிரக்ஷன் செய்வதிலே, 'பாடி' கட்டும்பொழுது ஒரு டைப் டிசைன் இருக்கவேண்டுமென்று நான் சொன்னேன். அதாவது வண்ணம் தீட்டும்பொழுது, அந்த வண்ணம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். நம்முடைய மாநிலம் பூராவிலும் ஒரே மாதிரியான வண்ணமாக இருந்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், இப்பொழுது பஸ் ஆப்பரேட்டர்கள் விருப்பு வெறுப்புகளுக்கு உள்பட்டு அரசியலை இதிலே புகுத்திவிடுகிறார்கள். சில பஸ் ஆப்பரேட்டர்கள் மூவர்ணக் கொடியை பஸ் பாடிகளிலே தீட்டிவிடுகிறார்கள். ஒரு பஸ்ஸிலே எல்லாவிதமான பிரயாணிகளும் போகிறார்கள். அதிலே அரசியல் சின்னத்தைப் புகுத்துவது நன்றாக இருக்காது. ஆகவே ஒரு டைப் டிசைன் போட்டு ஒரேவிதமான வண்ணத்தை தீட்டவேண்டுமென்று ஆணை பிறப்பித்தால் அது நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. பா. ராஜகோபால் நாயுடு: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் நம்முடைய ராஜ்யத்தில் பல பெரிய தொழில்கள் நடக்கின்றன. அவ்வாறு நடக்கும் பெரிய பெரிய தொழில்களுக்கு ரூபாய் 4 அல்லது 5 கோடி மூலதனம் போட்ட போதிலும் இந்த டிரான்ஸ்போர்ட்டு தொழிலில் வேலை

செய்யக்கூடியவர்கள் அதிலே வேலை செய்வதில்லை. சாதாரணமாக ஒரு பஸ்ஸை எடுத்துக் கொண்டால், அதில் 8 அல்லது 10 பேர் வேலை செய்கிறார்கள். அதே நேரத்தில் நாலைந்து கோடி மூலதனம் போட்டு நடத்தும் தொழிலில் 400 அல்லது 500 பேருக்கு மேல் வேலை செய்வதில்லை. ஆனால், இன்று உள்ள வரி விதியையும் மற்ற செலவுகளையும் பார்க்கும்பொழுது, 1963-வது வருஷத்தில் ரூபாய் 13,825 செலவாகிக் கொண்டிருந்தது. இன்று, வரிகள் ஸ்பேர் பார்ட்ஸ், டீசல் எண்ணெய் இவைகளுக்காக 1964-ம் வருஷத்திலே ரூபாய் 31,000 செலவாகிறது. இவ்வளவு தூரம் வரி கொடுத்து இந்த பஸ் சர்வீஸை 1964-65-லிருந்து தொடர்ந்து நடத்த முடியுமா என்பது சந்தேகமே. ஏனென்றால் லாபம் வருகிறதோ அல்லது வரவில்லையோ, பெர்மிட் வைத்துக் கொண்டிருப்பவர்கள் நஷ்டம் வந்தாலும் ஏதோ முன்னால் கொஞ்சம் லாபம் அடைந்தோம். இந்த தொழிலை விடக்கூடாது என்ற முறையிலேதான் நடத்தி வருகிறார்கள். அவ்வாறு எத்தனை நாட்களுக்கு நடத்த முடியும்? நான் சமீபத்தில் திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களுக்குப் போய் இருந்தேன். சில லாரிக்காரர்கள் இந்த மாதிரி டீசல் எண்ணெய் போட்டால் கட்டுப்படியாகாது என்று நினைத்து மஞ்சள் கெரோஸினை உபயோகிக்கிறார்கள். இப்படிச் செய்தால், அந்த வண்டி எத்தனை நாட்களுக்கு ஓடும்? சில இடங்களிலே சிலர் பெர்மிட்டுகளையெல்லாம் சரண்டர் செய்கிறார்கள். அந்த மாதிரி திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் பெர்மிட்டுகளை சரண்டர் பண்ணியிருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு பஸ் ஓட்டினால், சின்ன ஆப்பரேட்டராக இருந்தாலும் சரி, பெரிய ஆப்பரேட்டராக இருந்தாலும் சரி, ஒரு மைலுக்கு ரூபாய் 1-4-0 அல்லது ரூபாய் 1-6-0 செலவாகிறது. வரும்படி வரக்கூடிய ரூட்டுகள் எத்தனை இருக்கின்றன என்பதை நாம் பார்க்கவேண்டும். இப்பொழுது மேலும் 10 சத விகிதம் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டுமென்று சொன்னார்கள். மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இந்த தொழிலை நடத்துகிறவர்களுக்கு நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சின்ன ஆப்பரேட்டர் ஆனாலும் சரி, பெரிய ஆப்பரேட்டர் ஆனாலும் சரி, இது ஒரு பெரிய தொழில், நிறைய ஆட்கள் வேலை செய்கிறார்கள், ஆகவே அவர்களுக்கு சம்பளம், போனஸ் எல்லாம் கொடுக்கவேண்டும், அவற்றையெல்லாம் கொடுத்து வண்டிகளை நல்ல முறையில் பராமரிக்க முடியுமா என்பதை கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வண்டிகள் ஓவர் ஸ்பீடாகப் போவதைப்பற்றி சிலர் இங்கே குறிப்பிட்டார்கள். பெங்களூரிலிருந்து சென்னை வரும்பொழுது பார்த்தால், ஏராளமான கார்களும், லாரிகளும் பஸ்களும் வந்துகொண்டிருக்கின்றன. ஓவர் ஸ்பீடு என்றால் சொல்லவே முடியாது. நாம் இங்கே உயிரோடு வந்து சேருவோமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. தினம் இந்த ரூட்டில் 10 அல்லது 20 வண்டிகளுக்கு ஆக்ஸிடெண்ட் ஏற்படுகின்றன, பஸ்ஸிலே ஓவர் ஸ்பீட் என்று சொன்னால், முதலாளியையும் சார்ஜ்

[திரு. பா. ராஜகோபால் நாயுடு] [13th March 1964

பண்ணுகிறார்கள். ஆனால் கார்களைப் பொறுத்த வரையில், டிரை வரை மட்டும் 'பைன்' போட்டு விடுகிறார்கள். அதேமாதிரி, லாரிகள் ஓவர் ஸ்பீட் என்றால், முதலாளிகளையும் சார்ஜ் பண்ணு கிறார்கள். ஆகவே இந்த மாதிரி ஸ்பீடைக் கட்டுப்படுத்துவதற்கு, டி.வி.எஸ்.-ஸில் வைத்திருப்பது போல, டாகோகிராப் மீட்டர்கள் வைத்து, 30 மைலுக்கு மேல் போகக் கூடாது என்று நிர்ணயம் செய்யலாம். இப்பொழுது சாதாரண பஸ்கள் 25-மைல் விதமும், எக்ஸ்பிரஸ் பஸ்கள் 30-மைல் விதமும் போகலாமென்று இருக் கிறது. ஆனால் இந்த ஸ்பீட் லிமிட்டை யாரும் அனுசரிப்பதில்லை. ஆகவே ஒவ்வொரு வண்டிக்கும் டாகோகிராப் மீட்டர்களை அமைத் தால், எக்காரணத்தைக்கொண்டும் ஆக்ஸிடெண்ட் ஏற்படாது. மக்களும் சௌகரியமாக போய்ச் சேருவார்கள்.

10-30 a.m. அடுத்தாற்போல், இந்த பஸ்ஸிலே ஃபார்வர்ட் சீட்டுகள் போட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஃபார்வர்ட் சீட்டு 30 அல்லது 40 மைலுக்குப் போகும் வண்டி களுக்குப் போடாமல், 100 மைலுக்கு மேல் ஓடும் வண்டிகளுக்கு மட்டும் வைத்தால் நலமாக இருக்கும் என்று அபிப்பிராயப் படுகிறேன். ஏனென்றால் இப்பொழுது ஒரு பஸ் வாங்க ரூபாய் 45,000 ஆகிறது. அப்படி அதிக விலையில் வாங்கி இன்றைக்கு 60 சீட்டாராக அமைத்திருக்கிறோம். அந்தப் பழைய வண்டிகளை ஃபார்வர்ட் சீட் அமைக்க புதுப்பிக்காமலே இருந்து விடுவார்கள். புதுப்பிக்க மறுபடியும் அதிகச் செலவு ஆகும். ஆகவே இந்த ஃபார்வர்ட் சீட் அமைப்பதை 100 மைலுக்கு மேல் ஓடும் எக்ஸ்பிரஸ் வண்டிகளுக்கு மட்டும் என்று வைத்துவிட்டால் ஜனங்களுக்கு சௌகரியமாக இருக்கும். 45,000 ரூபாய்க்கு வாங்கி பாடி கட்ட மறுபடியும் ரூபாய் 15,000 செலவழித்தால் ரூபாய் 60,000 ஆகிறது. இதை அமைச்சர் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. எம். குழந்தைசாமி கவுண்டர்**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த் தைகள் பேச ஆசைப்படுகிறேன். சேலம் ஜில்லாவிலே என் தொகுதியில் டேனிஸ் பேட்டையிலிருந்து தீவட்டிப்பட்டி வரை 5 மைலுக்கு ரோடு இருக்கிறது. 1957-லிருந்து இப்பொழுது 64 வரை அந்த ரோட்டில் ஜல்லி போடாமலே ஒரு அடி பள்ளம் ஒரு அடி மேடாக இருக்கிறது. அதிலேதான் மாட்டு வண்டி, லாரி, பொதி மாடுகள், நெல் மூட்டையைப் போட்டுக் கொண்டு சேலம் போகிறார்கள். டேனிஸ் பேட்டைக்கும், தீவட்டிப் பேட்டைக்கும் 5 மைல்தான் ஜல்லி போட வேண்டியிருக்கிறது. இதை இன்னும் செய்யவில்லை. அதைக் கவனிக்க வேண்டும் என்று சபாநாயகர் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளு கிறேன். சேலத்திலிருந்து ஓமலூர் வர இரவு 10 மணிக்கு பஸ் ஒன்றும் கிடையாது. ஆகவே 10 மணிக்கு ஒரு பஸ் விட ஏற்பாடு பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் சேலத்திலிருந்து கம்மாளப்பட்டி போகும் பஸ் ஒரு நாளைக்கு 5 டிரிப் போகிறது. கம்மாளப்பட்டியில் இருந்து கூட்டாறு வரை,

13th March 1964] [திரு. எம். குழந்தைசாமி கவுண்டர்]

ரோடு சரியாக இருக்கிறது. அதற்கு மேல் ஜல்லி போட்ட ரோடு இல்லை. ஜனங்கள் பஸ் எப்போதும் வரும் என்று காத்திருந்து கஷ்டப் படுகிறார்கள். ஆகவே அங்கே இன்னொரு பஸ் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக இரண்டு வருஷமாக கேட்டு வருகிறேன். அமைச்சர் காமராஜர் அவர்களுக் கும் எழுதியிருக்கிறேன், நல்லபடி ஆர்டர் வரும் என்று சொன்னார் கள். ஆனால் கலெக்டர், ஆர்.டி.ஓ. இவர்கள் சேலத்திலிருந்து கோண மடுவு வரை 14 மைல் ரோடு பஸ் போக லாயக்கு இல்லை என்று எழுதியிருக்கிறார்கள். கம்மாளப்பட்டி போகும் ரோடு கோண மடுவுக்கு 6 பார்லாங்கில் இருக்கிறது. அந்த ரோட்டில் ஸைடு வெட்டி மேலே மண் ஏற்பட்டிருக்கிறது. ஜல்லி ரோடு போடவில்லை. கோணமடுவுக்கு வடபுறம் ஒரு கரடு இருக்கிறது. ரோடு போட்ட கண்ட்ராக்டர்கள் கல்லை சரியாக எடுக்காததால் ரோடு லாயக்கில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

சேலத்திலிருந்து கோணமடுவுக்கு காலையில் 6 மணிக்கு ஒரு ட்ரிப்பும், 12 மணிக்கு ஒரு ட்ரிப்பும், மாலை 8½ மணிக்கு ஒரு ட்ரிப் பும் விடவேண்டும். மீதி 2 ட்ரிப்பும் கம்மாளம்பட்டிக்கு கிழக்கே 3 மைலில் திருமனூருக்கு விட்டால் சேலம் வர மக்களுக்கு வசதி ஏற்படும். அதோடுகூட கம்மாளப்பட்டிலிருந்து திருமன் னூருக்கு 3 மைல் இருக்கிறது. அங்கே சல்லி ரோடு போட்டால் சேலம் வரை வசதியாக இருக்கும். அங்கே சல்லி குட்டாம் குமித்திருக்கிறார்கள். அந்த சல்லி போட்டால் நொறுங்கி மணலாகி விடும். ஆகவே கருஞ்சல்லி போட வேண்டும் என்று ஜனங்கள் சொல்கிறார்கள். இது பஞ்சாயத்து யூனியனிலே செய்வதற்கு இல்லை என்று சொல்லுகிறார்கள். கம்மாளப்பட்டியிலிருந்து பனமரத்துப்பட்டிக்கு 10 மைல் இருக்கிறது.

கனம் சபாநாயகர்: ரோட் மந்திரி வேறு.

திரு. எம். குழந்தைசாமி கவுண்டர்: இதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். (சிரிப்பு.) அந்த ரோட்டிலே 4 ஆறுகள் இருக்கின்றன. அதற்கு எல்லாம் பாலம் கட்டி பஸ் போக சம்பந்தப்பட்ட அமைச்சர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த சந்தர்ப்பம் கொடுத்ததற்கு கனம் சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, நான் சொன்ன எல்லாவற்றையும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன்**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது தொழிலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சி சார்பில் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் பொருளாதாரத் துறை ஒன்றில் மட்டுமே பின் தங்கியதாக இருக்கிறது என்ற குறையை நான் கொண்டிருந்தேன். ஆனால் இன்றைக்கு இப்பொழுது எனக்கு

முன்பு பேசிய சேலம் உறுப்பினரும், ராமனாதபுரத்தைச் சார்ந்த உறுப்பினரும் எடுத்துக்கூறிய குறைகளைக் கேட்டபிறகு, வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பஸ் போக்குவரத்துக் குறைகளை நினைத்துத் தலையிறங்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். உண்மையில் அவர்களும் குறைகளைக் குறைத்துத்தான் கூறியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலும் அம் மாவட்டத்தை ஒட்டியிருக்கும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் பஸ்களில் இருக்கும் ஓவர் லோடு, கொடுமையாக இருக்கிறது என்றும் இதை செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பார்த்தார்கள் என்றும் சொன்னார்கள். எனக்கு நினைப்பு இருக்கிறது, பொதுப்பணித் துறை அமைச்சர் கூட ஒரு முறை நபர் லோட் பஸ்ஸை விரட்டிப் பிடித்தார்கள் என்பது. இப்பொழுது இல்லை, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, இந்த பஸ்காரர்கள் செய்தித் துறை அமைச்சருக்கும் "பே, பே" சொல்வார்கள். பொதுப்பணித் துறை அமைச்சருக்கும் "பே, பே" என்று சொல்லி விடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் வட ஆற்காடு மாவட்ட பஸ் முதலாளிகள். போலீஸ் நிலையம் இருக்கும் வழியாக பஸ் ஓடும். அதில் இருக்கும் ஓவர் லோடுக்கு கணக்கு வழக்கு கிடையாது. அது எப்படி ஓடுகிறது? அப்படிப்பட்டவர்களுக்கு இந்த சர்க்கார் ஏன் சலுகை தந்திருக்கிறது. எனக்கொரு சந்தேகம் ஆளும் கட்சியிலிருந்து போட்டியிட்டவர்களிலும் வெற்றி பெற்றவர்களிலும், எங்கள் மாவட்டத்தில் பஸ் முதலாளிகளே அதிகம் என்பதால்தான் இந்த சலுகைகளைப் பெறுகிறார்களோ, என்று நினைக்கிறேன். அது மட்டும் அல்ல. புகை பிடிக்கக்கூடாது என்று இருக்கும். ஆனால் எங்கள் மாவட்ட பஸ்களில்தான் புகை பிடிக்கும் வழக்கம் பெருவாரியாக இருக்கும். பஸ் நிலையங்களிலே வண்டிகளில் ஏற்றுவதைப் பார்த்தால், ஆடு மாடுகளை ஏற்றுவது போல் இருக்கும். ஒழுங்காக டிக்கட் கொடுக்கும் வழக்கம் கிடையாது. ஸ்டாண்ட் புரோக்கர்கள் டிக்கட்டுகளை கையில் வைத்துக் கொண்டு சேர்ந்தாற்போல் 10 டிக்கட்டுகளை வைத்துக் கொண்டு ஒரு ரூபாய் டிக்கட்டை 1½ ரூபாய் என அதிக விலைக்கு விற்பார்கள். இந்த நிலைகளையெல்லாம் மாற்ற அமைச்சரவை கவனம் செலுத்த வேண்டும். இந்தக் குறைகளை எப்படிப் போக்கலாம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலே, திருவாங்கூர் பிரியாத காலத்திலே பஸ் நிலையத்திலே முன் கூட்டியே யார் யார் எங்கு போக வேண்டுமோ அதற்குத் தக்கபடி டிக்கட் கொடுக்கும் இடத்தில் ஒரு டோக்கனைக் கொடுப்பார்கள். அடுத்த வண்டி வந்தவுடன் 10 இடம் இருக்கிறது என்றால் ஒன்று முதல் பத்து வரை எண்ணிட்ட டோக்கன்களைக் கையில் வைத்திருப்பவர்களுக்கு டிக்கட் கொடுப்பார்கள். இடையிலே 8-வது நம்பர் டோக்கன்காரர் இல்லை என்றால், அப்பொழுது 11-வது நபருக்கு டிக்கட் அளிக்கப்படும். அப்படிப்பட்ட ஏற்பாட்டை அமுலாக்கி இந்த குறைபாடுகளை ஓரளவு நீக்க முடியுமா என்று சிந்திக்க வேண்டும். வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் அப்படிப்பட்ட குறைகள் இருக்கக் காரணம் என்ன? வடஆற்காடு மாவட்டத்தில் போதுமான ரயில் வசதி கிடையாது. எல்லோரும் பஸ்ஸிலேயே செல்ல வேண்டிய நிலை

இருக்கிறது. ஆனால், போதிய பஸ் கிடையாது. போதிய பஸ் இல்லையென்றால், ஏன் இல்லை? அங்கிருக்கும் பெரிய முதலாளிகள் தான் காரணம். பெரிய மீன் சின்ன மீன்களை விழுங்கிவிடும் என்று சொல்வார்கள். அதுபோல, பெரிய பஸ் முதலாளிகள் சிறிய பஸ் முதலாளிகள் வளர இடம் தராமல் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

1961-ம் ஆண்டில் செய்யாற்றிலிருந்து சென்னைக்கு காஞ்சிபுரம்—படப்பை—தாம்பரம் வழியாக ஒரு பஸ் ரூட்டுக்கு அப்ளிகேஷன் கூட 'கால் ஃபார்' பண்ணியாய்விட்டது. ஆனால், அந்த ரூட் இன்று வரைக்கும் அமுலுக்கு வரவில்லை. காரணம் என்ன? இடையிலே இருக்கும் பஸ் முதலாளிகள்தான் அதற்குத் தடை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டும். அவர்கள் ஆளும் கட்சியில் இருக்கும் காரணத்தால்தான் அந்த பஸ் ரூட் அமுலுக்கு வராமல் இருக்கிறது என்று நான் நினைக்க வேண்டியிருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சினிமாப் படக் காட்சிக்கு டிக்கட் கொடுக்கப்படுவதில், அந்த டிக்கட்டிலேயே விற்பனை வரி இலாகாவினருடைய முத்திரை போட்டிருக்கிறார்கள். அப்படி, பஸ் டிக்கட்களிலும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட இலாகாவினர் முத்திரை இட்டிருக்கவேண்டும். அப்படி முத்திரையும் இட்டுவிட்டு பஸ்ஸில் ஏறுகிற நேரத்தில் பிரயாணிகளுக்குத் தெரியும் இடத்தில், "பஸ் பிரயாணிகள் டிக்கட் வாங்க மறுத்தாலும், டிக்கட் கேட்கின்ற நேரத்தில் டிக்கட் இல்லாமல் இருந்தாலும் தண்டனைக்கு உள்ளாவார்கள்" என்று எழுதப்பட்டிருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு செய்வதன் மூலமாக ஓரளவு 'ஓவர்-லோட்' ஐக் குறைக்க முடியுமா என்று அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து ஆட்சி வந்திருக்கிறது. ஆங்காங்கு பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு மக்கள் செல்ல வேண்டியிருக்கிறது. தாலுகா தலைநகரங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. இந்தக் காரணத்தால் புதிய பஸ் ரூட்கள் பல ஏற்பட வேண்டிய நிலை நமக்கு இருக்கிறது. வடாற்காடு மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே நாங்கள் எங்களுடைய கோரிக்கைகளைச் சொல்கிறோம். ஆனால், நடைமுறைக்கு வருகிற நிகழ்ச்சியிலே வீண் காலதாமதம் ஆகிறது. அப்படிப்பட்ட நிலை இல்லாமல், பெரிய பெரிய ரூட்கள் இல்லையென்றாலும், இப்படிப்பட்ட சிறிய ரூட்களில் பஸ் போக வேண்டிய வழிவகைகளை அமைச்சர் அவர்கள் உடனடியாக செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பஸ் நிலையங்களை எடுத்துக் கொள்வோம். அங்கே மக்கள் உட்கார நல்ல இடம் இல்லை. அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வேலூரில் அரசாங்க பஸ் நிற்கும் இடத்தில் ஒரு பஸ் நிலையம் கட்டியிருக்கிறார்கள். அதற்கு நேர் எதிரில் இருப்பது முனிசிபல் பஸ் ஸ்டாண்டு. இரண்டையும் அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து,

[புலவர் கா. கோவிந்தன்] [13th March 1964

அரசாங்க பஸ் நிலையம் எந்த அளவுக்கு இருக்கிறது, முனிசிபல் பஸ் நிலையம் எந்த அளவுக்கு அமைந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது நல்லது. இப்படிப்பட்ட நிலையிலே ஆங்காங்கு இருக்கும் பஸ் நிலையங்கள் அமையக்கூடாது, நல்ல முறையில் அமைய வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஸ் முதலாளிகளுக்கு அரசாங்கம் ஓரளவு துணை செய்கிறது என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கம் எக்ஸ்பிரஸ் பஸ் விடுகிறது. அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் 28, 30 ஸீட்கள்தான் இருக்கின்றன. டிக்கட் கட்டணமும் அதிகமாக இருக்கிறது. அதே ரூட்டில் தனியார் விடும் எக்ஸ்பிரஸ் பஸ்களில் ஸீட்களை அதிகப்படுத்தி, பஸ் கட்டணத்தையும் குறைத்திருக்கிறார்கள். ஆகவே, அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்களில் ஸீட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு, கட்டணத்தையும் குறைக்க வழிவகை செய்ய வேண்டும். அரசாங்க பஸ்களில் ஸீட்களைக் குறைத்து விட்டு, டிக்கட் கட்டணத்தை ஏற்றியிருப்பதால் ஓரளவு மறைமுகமாக பொதுமக்களைத் தனிப்பட்டவர்கள் பஸ்களுக்கு அனுப்புவதாக இருக்கிறது. இது மறைமுகமாக அரசாங்கம் தனியார்த் துறைக்குச் செய்யும் உதவியாகும் என்று நான் நினைக்கிறேன். அதையும் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சாலைகளைப் பற்றியும் சொல்லப்பட்டது. குறுகிய சாலைகள் விபத்து ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றன. ஆகவே, சாலைகள் அகலமாக இருக்க வேண்டும். பஸ் செல்லும் வழிகளிலே ஆங்காங்கு இருக்கும் ஊர்களில் நெல் உலர்த்தி வைக்கிற நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. இதைத் தடை செய்தால் ஓரளவு விபத்துக்களைத் தவிர்க்கலாம் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இப்பொழுது விவாதத்தில் இருக்கக்கூடிய போக்குவரத்து மானியத்தின் மீது நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுமக்களுக்குப் போக்குவரத்து சௌகரியம் செய்து கொடுப்பதற்காக வேண்டி அரசாங்கத் துறையிலேயிருந்து பஸ் விடப்படுகிறது. சில இடங்களில் ஜீப் பஸ்கள் விடப்பட்டு வந்தன. அவசர கால நெருக்கடியின் காரணமாக ஜீப் பஸ் விட வேண்டியதில்லை என்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அவசர கால நெருக்கடி நிலைமை தளர்ந்திருக்கும் காரணத்தால், பிரதானமாக தஞ்சை ஜில்லாவில் பெரிய பஸ்கள் விட ரோடுகள் சரியில்லாத காரணத்தால், தஞ்சை ஜில்லாவில் ஜீப் பஸ் விட வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களானால், அந்த ஜில்லாவில் இருக்கும் ஜனங்களுக்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

13th March 1964] [திரு. ஆ. கு. சுப்பையர்]

தஞ்சையிலிருந்து அரசாங்க துரித பஸ்கள் பல இடங்களுக்குச் செல்கின்றன. நாகப்பட்டினத்திலிருந்து சென்னைக்கும், நாகப்பட்டினத்திலிருந்து இராமனுதபுரத்திற்கும், நாகப்பட்டினத்திலிருந்து கோயம்புத்தூருக்கும் பஸ்கள் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேதாரண்யத்தில் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு, தொழில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில், வேதாரண்யத்திலிருந்து ஒரு துரித பஸ் திருத்துறைப்பூண்டி; திருவாரூர்; மாயவரம்; சீர்காழி; கொள்ளிடம் வழியாக சென்னைக்கு விடுவது மிகவும் உதவியாக இருக்கும், அங்கிருக்கும் மக்கள் போக்குவரத்துக்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும், நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி வழியாக மதுரைக்கு ஒரு பஸ் விட்டால் சௌகரியமாக இருக்கும்.

பொதுவாக, தஞ்சை ஜில்லாவில் பஸ் போக்குவரத்து மிகக் குறைவு என்றுதான் சொல்ல முடியும். தஞ்சையில் இரண்டு மூன்று தனிப்பட்ட பஸ் முதலாளிகள்தான் பஸ் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்க பஸ்களும் குறைந்த அளவிலேதான் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவேதான், தஞ்சையில் இருக்கக்கூடிய மாவட்ட அபிவிருத்தி மன்றம் பல ரூட்களில் பஸ் விட வேண்டும் என்ற தீர்மானத்தை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது. அந்த ரூட்களிலே எல்லாம் பஸ் விடலாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிபார்சு செய்திருக்கிறார்கள். அப்படியிருந்தும், பஸ்கள் இன்னும் விடப்படவில்லை ஆகவே, தனியார்கள் பஸ்விடுவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டும். தனிப்பட்டவர்களுக்கு அனுமதி கொடுக்கவில்லையென்றால், அரசாங்கமே தங்களுடைய பஸ்களை விட ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டும் செய்யவில்லையென்றால், தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடியவர்களுக்கு அதிருப்தி ஏற்படக்கூடிய முறையில்தான் அரசாங்க நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது என்பதை நான் தங்கள் மூலமாக அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய கோளாறுகளைத் தடுப்பதற்காக வேண்டி, ஆர்.டி.ஓ. அதிகாரத்தில் இருக்கக்கூடிய ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் தவறு செய்வது என்பது எல்லோரும் அறிந்த ஒரு விஷயம் ஆகும். அதை மிகவும் கண்காணித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கமும், மேலதிகாரிகளும் முனைய வேண்டும்.

சாதாரணமாக லாரிகளை ஓட்டிக்கொண்டு செல்லக்கூடியவர்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். லாரிகளை நினைத்த இடத்தில் எல்லாம் மறித்து விடுகிறார்கள். ஸப்-இன்ஸ்பெக்டர்கள், போலீஸ் கான்ஸ்டபிள்கள், பிரேக் இன்ஸ்பக்டர்கள் போன்றவர்கள்

[திரு. ஆ. கு. சுப்பையா] [13th March 1964

லாரிகளை மறித்து நிறுத்தி, அதிலுள்ளவர்களை மிரட்டி பயமுறுத்தி காசு வாங்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். இது பெரிய அதிருப்தியை ஏற்படுத்துகிறது.

கனம் சபாநாயகர்: காசு வாங்குவதற்காகத்தான் லாரிகளை நிறுத்துவதாகக் கனம் அங்கத்தினர் சொல்கிறார்களா?

திரு. ஆ. கு. சுப்பையா: ப்ரேக் இன்ஸ்பெக்டர் எல்லாம் அம்மாதிரி லாரிகளைத் தடுத்து நிறுத்தி, தங்களுடைய அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள்.

கனம் சபாநாயகர்: அதிகாரிகள் ஜோலியைச் செய்ய லாரியை நிறுத்தத்தானே வேண்டும்?

திரு. ஆ. கு. சுப்பையா: ஆகவே, அம்மாதிரியான தவறுகள் நடைபெறாத வண்ணம் பார்த்தால்தான் ஆர்.டி.ஓ.-வையோ மற்றவர்களையோ நிர்வாகத்தில் நியமிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.

பஸ் பர்மிட் வழங்குவதிலும் தாமதம் ஏற்படுகிறது. உதாரணமாக, பஸ் பர்மிட் பெறுவதிலே ஹரிஜனங்களுககு முதல் சலுகை கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய ஆலோசனையாகும். ஹரிஜனங்களாக இருக்கக்கூடியவர்கள், மற்றவர்களைப் போல் திறமையானவர்கள் அல்ல. யார் யாரை எப்படி எப்படிப் பார்த்து பர்மிட் பெறவேண்டும் என்கிற அனுபவம் அவர்களுக்கு இல்லை. ஹரிஜனங்கள் தங்களுக்குப் பஸ் விட பர்மிட் கொடுக்கவேண்டுமென்று கேட்டால், அவர்களுக்கு முதல் சலுகை கொடுக்க வேண்டும் என்கிற நிலைமையை ஏற்படுத்துவதுதான், நியாயமாக இருக்க முடியும். இல்லையென்றால், வசதியானவர்கள் ரிட் போட்டு ஸ்டே ஆர்டர் வாங்கிவிடுகிறார்கள். இவர்கள் செலவு செய்தும் நஷ்டத்திற்கு ஆளாக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதைத்தான் அரசாங்கம் கவனித்து, அவர்களுக்கு முதல் சலுகை அளிக்க வேண்டிய நிலைமையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஸ் விடுவதில் இன்னொரு தவறு இருக்கிறது. ஹைவேஸ் இலாகாவினர் சம்மதம் தெரிவித்தால்தான் பஸ் விட வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் சம்மதம் தரவில்லையென்றால், பஸ் விடக்கூடிய நிலைமை ஏற்படாது. ரோடுகள் ஹைவேஸ் இலாகாவிற்குச் சொந்தமாக இருக்கின்றன. ஒரு இலாகாவுக்கும் இன்னொரு இலாகாவுக்கும் முரண்பாடு இருப்பதால் போக்குவரத்து இலாக்காவோடு ஹைவேஸ் இலாகாவையும் இணைத்தால், சௌகரியமாக இருக்க முடியும். இரண்டும் ஒரே துறையில் இருப்பதுதான் சௌகரியமாக இருக்கும். இந்த முறையில் இந்த இரண்டு இலாகாவினரும் ஒரே இலாகாவாக சேர்ந்து, ஒரு அமைச்சரின் பார்வையிலே இருந்தால்தான் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

13th March 1964]

* **திரு. ஆர். ரெங்கசாமி:** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, இன்று ஹைகோர்ட் தீர்ப்பினால் பஸ் பர்மிட்டுகள் வழங்குகின்ற நிலையில் மாறுதல் செய்யப்படவேண்டியதாக இருக்கிறது, அந்த முறையில் ஏதாவது யோசனை சொன்னால் நலமாக இருக்கும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஸ் பர்மிட் வழங்கும் முறையில் மார்க் வைத்து—அதிக மார்க் பெற்றவர்களுக்கு உத்தியோகஸ்தர்கள் மூலமாக பர்மிட் வழங்கப்பட்டு வந்து கொண்டிருந்தது. அப்படிக் கொடுக்கப்படுகிற பர்மிட்டுகளும் நல்ல முறையில் நடக்கவில்லையென்று கருத்தான் இந்த ஸிஸ்டத்தைக் கொண்டு வந்தார்கள். இப்போது ஹைகோர்ட் தீர்ப்பினால் இதற்கும் ஆபத்து வந்துவிட்டது. இனிமேல் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி நாம் நன்றாகப் பரிசீலனை செய்து முடிவு செய்யவேண்டுமென்று கருதுகிறேன்.

பஸ் ரூட்டைப் பெறவேண்டும் என்று ஒரு பஸ் முதலாளி ஒரு பகுதியில் உள்ள ஜனங்களிடத்தில் எல்லாம் கோரிககை மனுவை கொடுத்து, "இந்தப் பகுதியில் இன்ன ரூட் வழியாகப் பஸ் விட வேண்டுமென்று" அரசாங்கத்திற்குக் கோரிக்கையை அனுப்பச் சொல்வார்கள். அவர்கள் மனுப் போட்டுக்கொண்டதன் காரணமாக ரூட் வழங்குவது என்று அரசாங்கம் பரிசீலிக்கிறபோது எல்லா பஸ் முதலாளிகளும் விண்ணப்பித்துக்கொள்வார்கள். ஆர்.டி.ஓ. விண்ணப்பங்களை பரிசீலனை செய்து யாருக்காவது பர்மிட் கொடுத்தால் உடனே மற்றவர்கள் கோர்ட்டிலே சென்று ஸ்டே வாங்கி ஓடுகின்ற பஸ்ஸை நிறுத்திவிடுகிறார்கள். இந்த வழக்குகள் இன்றையதினம் மாறி மாறி சுப்ரீம் கோர்ட் வரை செல்கிறது. ஒரே ரூட்டில் இரண்டுமூன்று பஸ் ஓனர்கள் பஸ் விடுவதற்கு அனுமதித்து, "எல்லோரும் கெட்டால் கல்யாணம்" என்கின்ற மாதிரி எல்லோருமே நஷ்டப்பட்டு பஸ்ஸை நிறுத்திவிடுகிறார்கள். இதனால் அந்தப் பகுதி மக்களும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். நான் இதற்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். பஸ் ரூட்டுகளை ஏலத்தில் விட்டு யார் அதிகமான தொகை கட்டுகிறார்களோ அவர்களுக்கு அனுமதி அளிப்பது என்று வைத்துவிட்டால் அரசாங்கத்திற்கும் அதிக வருமானம் வரும். சர்வீசும் நல்ல முறையில் நடக்கும். இதனால் சிறிய பஸ் ஓனர்களுக்கு கஷ்டமாகப் போகும் என்று சிலர் நினைக்கலாம். அப்படி நினைத்தாலும் கூட இன்று பொதுவாக நம் மாநிலத்தில் பார்க்கிறபோது பெரிய பஸ் ஓனர்கள்தான் பலபல பெயர்களின் சிறிய பஸ் ஓனர்களைப் போல பர்மிட் பெற்றிருக்கிறார்கள். பர்மிட் வேறு பெயரில் இருக்குமே தவிர அநேகமாக பெரிய பஸ் ஓனர்களுக்குத்தான் அவை சொந்தமாக இருக்கும். ஒரு பெரிய பஸ் முதலாளிக்கு ஏ.பி.ஸி.டி. ஆகிய ஆல்பபெட் எல்லா எழுத்திலும் விலாசம் வைத்திருக்கிறார் என்பது அநேகமாக எல்லோருக்கும் தெரியும். ஆகவே பஸ் ரூட்டுகளை ஏலத்தில் விடுவதே நல்ல முறையாக இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். அரசாங்கத்திற்கும் நல்ல வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : அவ்வாறு சர்டிபிகேட் பெற்று வேலைக்கு வந்தாலும் கூட 'நெக்லிஜன்ஸ் ஆப் டியூட்டி' என்ற காரணத்தால் விபத்துக்கள் ஏற்படலாம் அல்லவா?

திரு. எம். எஸ். மணி : அது 100-க்கு 1 விதம் வேண்டுமானால் இருக்கலாம். எனவே, டிரைவர்களுக்கு இன்வாய்ஸ் எழுதும் பொறுப்பைக் கொடுக்கக் கூடாது; வண்டிகள் கண்டிஷனில் இருக்கின்றனவா என்பதை அடிக்கடி பரிசோதித்துப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணை 'பஸ் கட்டணத்தை உயர்த்துவதாக சர்க்கார் வைத்திருக்கிற நோக்கத்தை அமல் படுத்தக் கூடாது' என்பது தான். ஆனால் நடந்த விவாதத்தைப் பார்க்கின்றபோது, ஒரு அங்கத்தினரோ அல்லது இரண்டு அங்கத்தினரோ தவிர வேறு யாரும் பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்பதற்கான காரணத்தை எடுத்துச் சொல்லவில்லை. மறந்து போயிருக்கலாம்; இப்போது வேண்டுமானால் சொல்லலாம். பஸ் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று பேசிய இரு அங்கத்தினர்கள் கூட காரணம் காட்டினார்களா என்றால் இல்லை. அவர்கள் சொன்னது எல்லாம் பஸ் முதலாளிகளுக்கு ஏராளமான லாபம் வந்து கொண்டிருக்கிறது ; ஆகவே, இப்போது கட்டணத்தை உயர்த்த வேண்டிய தேவையில்லை ; வருகின்ற லாபத்திலேதான் குறைந்திருக்கிறது ; 'நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை' என்று சொன்னார்கள்.

குறிப்பாக தங்கவேலு அவர்களும், திரு. எம். எஸ். மணி அவர்களும் இதே இரு வாதங்களைத்தான் சொன்னார்கள். பஸ் நிர்வாகத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற முறையில் என் அனுபவத்தை யொட்டியும், ராஜ்யத்தில் இருக்கிற பொது நிலைமையை ஒட்டியும், வரிகள் பல போடப்பட்டிருக்கிற நிலைமையை ஒட்டியும், புதிதாக விலை ஏற்றம் பல வகைகளில் ஏற்பட்டிருப்பதை யொட்டியும் எல்லாம் ஆலோசித்து சர்க்கார் ஆகஸ்ட் மாதத்தில் இந்த கட்டணங்களை உயர்த்துவதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. என்று சொல்லி பொது மக்கள் அபிப்பிராயத்திற்கு அறிக்கை விட்டார்கள். நோட்டிபிக்கேஷன் செய்து அவர்களுக்கு ஏதாவது அப்ஜக்ஷன்ஸ் இருக்குமானால் அதைத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இலாகாவிலிருந்து தெரிந்த அளவிற்கு, இன்று இந்த சட்டசபையில் எவ்வளவு பேர்கள் பேசினார்களோ அதே ப்ரோப்போர்ஷன்தான் அதே அளவு அப்ஜக்ஷென்ஸ்தான் வந்திருப்பதாக அறிகிறேன். ஆக, இன்று ஆப்பரேஷன் காஸ்ட், நிர்வாகச் செலவு பஸ் நடத்துகிற செலவு அதிகரித்து விட்டது என்பதற்கு யாரும் மறுப்பு கூறியதாக நினைக்கவில்லை. அந்த அளவிற்கு நாம் பஸ் கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்ற நிலையில் சட்டசபையில் கூட ஆதரவாகத்தான் இருக்கிறது என்று நான் ஏற்றுக்கொள்

கிறேன். அடுத்தாற்போல் இது சம்பந்தமான விவரங்களை எல்லாம் டாக்டர் நடராஜன் அவர்கள் தெளிவாகக் கொடுத்தார்கள். 1953-ல் என்ன வரிகள் இருந்தன, 1953-ல் சாமான்களின் விலைகள் எப்படி இருந்தன, எண்ணெய் முதலியவைகள் எல்லாம் என்ன விலைக்கு விற்கப்பட்டது என்று எல்லாம் கணக்குகள் கொடுத்தார்கள். அந்த மாதிரி கணக்குகளை வைத்துத்தான் சர்க்காரிலிருந்து ஒரு அறிக்கையை விட்டிருக்கிறோம், பொதுமக்கள் ஏதாவது ஆட்சேபனைகள் இருந்தால் தெரிவிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதை மீண்டும் பரிசீலனை செய்ய அவசியமில்லை என்று நினைக்கிறேன். வந்திருக்கிற ஆட்சேபனைகளை இலாகா செகரடரி, ஹோம் டிபார்ட்மென்ட் பொறுப்பில் விசாரணை செய்து அவர்களையும் கலந்து, யார் அப்ஜக்ஷன்ஸ் செய்தார்களோ அவர்களையும் கேட்டு சட்டபூர்வமாக உள்ள அதிகாரப்படி முடிவு செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒன்றை நீக்கி விட்டால் அடுத்தபடி பெரியதாகச் சொல்லப்பட்டது, குற்றச்சாட்டு என்று சொல்வதற்குக்கூட இடம் இல்லை, ஒரு விஷயம் என்றுதான் குறிப்பிடவேண்டும். பஸ் பெர்மிட் கொடுப்பதில், ஜுடிஷியல் ஆபீசர்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஜுடீஷியல் ஆபீசர் கொடுக்கின்ற நிலைதான் இப்போது இருக்கிறது. முதலில் கொடுக்கிற ஆர்.டி.ஓ. குவாஸி—ஜுடீஷியல் ஆபீசர். அவருக்கு சர்க்கார் எந்தவிதமான டைரக்ஷனும் கொடுக்க முடியாது. இன்ன மார்க் கொடுங்கள் என்று ஹைகோர்ட் சொன்னதையொட்டி இந்த விதமாக மார்க் கொடுக்கலாம் என்று சொன்னதை சுப்ரீம் கோர்ட் கூடாது என்று தெரிவித்தார்கள். நாங்களாகச் சொல்லவில்லை. ஹைகோர்ட் சொன்னதை சொன்னோம். லோக்கல் கண்டிஷன்ஸ் தெரிய வேண்டும், எந்தெந்த ஊர்களுக்கு போக வேண்டும், மக்களின் வசதி போன்றவைகள் தெரியவேண்டும். அவர்கள் செய்கின்ற முடிவிற்கு நேரடியாக அப்பீல் எஸ்.டி.எ.டி. க்குத்தான் இருக்கிறது. டெப்டி கமிஷனர் அல்ல, சர்க்காருக்கு அல்ல, ரெவின்யூ போர்ட்டுக்கு அல்ல பெர்மிட் கொடுத்தாலும் மறுத்தாலும் எஸ்.டி.எ.டி. க்குத்தான் அப்பீல் இருக்கிறது. அவர் ஒரு டிஸ்டிரிக்ட் ஜட்ஜ். நமக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. அதற்கு மேல் ஹைகோர்ட்டுக்கு போகிறார்கள், சுப்ரீம் கோர்ட்டுக்கு போகிறார்கள். ஆகவே அங்கத்தினர்கள் சொல்கிற முறைதான் அமலில் இருக்கிறது. ஜுடிஸியல் அத்தாரிட்டிதான் முடிவு செய்கிறார்கள். ஆகவே, எந்தவிதமான மாறுதலும் செய்வதற்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன். ஆர்.டி.ஓ.-க்களை மாற்றி டெப்டி கலெக்டர்களாக போட்டு வருகிறோம். இரண்டு காரணத்திற்காக மாற்றுகிறோம். ஒன்று பொதுவாக இந்த சபையில் ஆர்.டி.ஓ. க்கள் பற்றி முன்பெல்லாம் ஏராளமான குறைகள் சொல்லப்பட்டன. ஆர்.டி.ஓ. க்களை மாற்றுவது என்றால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத்தான் மாற்ற வேண்டும். ஒரு ஜில்லாவின் பனிஷ்மெண்ட் இன்னொரு ஜில்லாவிற்கு போகும். அதனால் நன்மை ஏற்பட முடியாது. இதனால் அவர்கள் சரியாக நடக்கவில்லை என்றால் ரெவின்யூ டிப்பார்ட்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [13th March 1964

மென்ட்க்கு ரிவர்ட் செய்து விடலாம். பின்னர், ப்ரஸ் மைன்ட், வருகிறவர்கள் நியாயமாக கவனிப்பார்கள். எம்.வி.ஐ. யில் இருந்து வந்தவர்களுக்கு விருப்பு வெறுப்பு இருக்கலாம். அதையொட்டியும் புதுத் திருத்தம் செய்திருக்கிறோம். ஆகவே நான் சொன்னபடி ஆர்.டி.ஓ.-க்களை போட வேண்டுமென்ற கொள்கையை ஒத்துக்கொள்வார்கள் என நினைக்கிறேன். பெர்மிட் கொடுக்கும் முறையில் தாமதம் இருக்கிறது என்றார்கள். இந்த இலாகாவை நான் ஏற்றுக்கொண்டவுடன் பரிசீலனை செய்து எவ்வளவு காலமாகிறது என்று பார்த்தேன். போட்டிருக்கிற சட்டப்படி ஒரு நாள் கூட தவறாமல் நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் குறைந்த பட்சம் ஆறு மாதங்களாகிவிடும். விதிகள் எல்லாம் அப்படியிருக்கிறது. போட்டி அதிகமாக இருப்பதால், விதிகள் எல்லாம் இப்படியிருக்கும் நிலையில் ரொம்பக் குறைந்த அளவில் சொன்னாலும் ஆறு மாதங்கள் ஆகிறது. ஒன்றை நான் ஆரம்பத்தில் சொன்னேன். பத்து சதவிகிதம் பஸ்களை எல்லா யிடங்களிலும் விஸ்தரிப்பது என்று சொன்னால் போட்டி குறைந்து விடும். லாரிக்கு இன்று யாரும் போட்டி போடவில்லை. டாக்ஸிக்கு க்யூவில் நின்றவர்கள் இன்று அப்படி நிற்பதில்லை. எவ்வளவு வந்தாலும் கொடுக்கிறோம் என்று சொன்னோம். ஆள் இல்லை. அதேபோல் பஸ்களையும் அப்படிச் செய்யவேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால் அதை உடனடியாகச் செய்ய முடியாது. ஆகவே 10 சதவிகிதம் என்று ஆண்டு ஒன்றுக்கு அதிகரிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டால் யார் திறமையாக நடத்த முடியுமோ, சர்க்கார் விதிகளுக்குட்பட்டு யாருக்கு அதிக லாபம் கிடைக்கும் என்று நினைக்கிறார்களோ அவர்கள்தான் வருவார்கள், மற்றவர்கள் வரமாட்டார்கள். லிபரலைஸ் செய்யவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம். அதைச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்கிறோம். திரு. சுப்பையா முதலியார் அவர்கள் அக்ரிகல்ச்சரல் ட்ராக்டர்களுக்கு எக்ஸெம்ஷன் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது ஓரளவு கொடுத்திருக்கிறோம். பண்டங்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு போகும் போது வரிக் கட்டணத்தைக் குறைத்திருக்கிறோம், மீண்டும் பரிசீலனை செய்கிறார்கள். சலுகைகள் கொடுக்கலாம். விவசாயிகள் ட்ராக்டர்ஸ், ட்ரயிலேர்ஸில் தங்கள் பண்டங்களை இன்னொரு இடத்திலிருந்து தங்கள் இடத்திற்குக் கொண்டு போகும் அளவிற்கு மட்டும் உபயோகித்தால் கொடுக்கலாம் என்று பார்க்கிறோம். இப்படிக் கொடுப்பதால் சர்க்காருக்கு நஷ்டமும் இல்லை, கஷ்டமும் இல்லை. ஆனால் இது அப்யூசாகி விடுகிறது. நிலச் சொந்தக்காரர்கள் நெல்லை விற்றால் அதற்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை என்று சொன்னவுடன் எல்லோரும் —விற்கிறவர்கள் எல்லோரும்—நாங்கள் " Agent of the land-owner " என்று சொல்கிறார்கள். அதே போல் லாரி உபயோகிக்கிறவர்கள் இதெல்லாம் எங்கள் பார்மிலிருந்து கொண்டு போகிறோம், த்ராஷிங் ப்ளோருக்கு கொண்டு போகிறோம், கோடவுனுக்கு கொண்டு போகிறோம் என்று சொன்னால் அதனால் நம் வருமானம் போய் விடும். நல்ல திட்டங்களை உடனடியாக செய்வதற்கு முடியாமல்

13th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

இருப்பதற்குக் காரணம் ஒரு திட்டத்தை, நல்லதொரு அம்சத்தைக் கொண்டு வந்தால் அதை அப்யூஸ் செய்யும் நிலைமை நம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் இது குறித்து சற்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த அப்யூஸினால் வரும் நஷ்டத்திற்கு, பெர்மிட் கொடுப்பதால் மக்களுக்கு லாபமா என்பதை முடிவு செய்ய வேண்டுமே தவிர இதைத் தடுக்க முடியாது. லாரி ஆக்ஸிடன்ட்ஸ் ஏராளமாக ஏற்படுகிறது. அதைப்பற்றி எல்லா அங்கத்தினர்களும் சொன்னார்கள். அதை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். பலமுறை நான் சொல்கிறபோதே பார்த்திருக்கிறேன். இருபத்தைந்து மைல் மாக்ஸிமம் லிமிட் என்றால் நாம் 50 மைலில் போனால் அவர்கள் கூடுதல் ஐந்து மைல் அதிகமாகவே போவார்கள். இதைத்தடுக்க கஷ்டமாக இருக்கிறது. ஒன்று தோன்றுகிறது. சட்டம் குறித்து பரிசீலனை செய்யவேண்டும். அப்படிச் செய்தால் 15 நாட்கள் சஸ்பென்ட் செய்து விட்டால் வேறு தண்டனை வேண்டாம், பயம் ஏற்படும். ஆனால் உடனே கூக்குரல் வந்துவிடும். ஸ்பீட் சீல் செய்யலாம் என்ற யோசனை பல வருடங்களுக்கு முன்பே ஆலோசிக்கப்பட்டது. 1947-48-ல் நான் அட்வைசரி கமிட்டியில் இருந்தேன். அதிலுள்ள கஷ்டம் என்ன வென்றால் அவசரமாக ஒரு இடத்தில் ஒரு ஆக்ஸிடென்டை தவிர்க்க வேண்டும் என்றால் ஓவர் டேக் செய்யவேண்டியிருக்கும். அதற்காக வேகமாக ஓட்டவேண்டியிருக்கும். நாலைந்து நிமிடங்கள் நேரமாவது வேகமாக ஓட்ட வேண்டிய நிலை ஏற்படும்—ஆனால் சீல் செய்தால் நிச்சயமாக அந்த ஆக்ஸிடென்ட் நடக்கும். அதுதான் இன்றைக்கு இருக்கும் கஷ்டம். ஒரு கஷ்டத்தைத் தவிர்க்க இன்னொரு கஷ்டத்திற்குக் கொண்டு போய் விடுவது கஷ்டத்தைத் தீர்க்கிற முறையாகாது. மூன்றாவதாக ஒன்று செய்யலாம். டாக்கோ மீட்டர் வைக்கலாம். அதுவும் எந்த அளவுக்குப் போகிறது என்பதை பார்க்கலாம். ஆனால் பெரிய குறை வந்து விட்டது என்று முறையிட ஆரம்பித்து விடுவார்கள். அதாவது இப்போதே ஒவ்வொருவரும் 30 ஆயிரம் 40 ஆயிரம் என்று லாரிகளை வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதோடு இந்த மீட்டருக்கும் 4,000 அல்லது 5,000 ரூபாய் செலவு செய்யவேண்டும் என்று சொல்லும்போது பெரிய பிரச்னையாக வந்துவிடும். இருந்தாலும், இப்போது வேகமாக போய்கொண்டிருக்கின்ற டிரைவர்கள் நாங்கள் இப்படித்தான் போய்க் கொண்டிருப்போம் என்று சொல்லுகின்ற முறையில் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தால் இம்மாதியான மீட்டர் முறை கொண்டு வராமல் இருக்க வேறு வழியில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நான் மீண்டும் சொல்லுகிறேன், டிரைவர்கள் தாங்களாகவே இன்னும் சில மாதங்களுக்குள் வேகத்தை குறைத்து சட்டப்படி போகக்கூடிய அளவில் வரவில்லை என்றால் நிச்சயமாக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியிருக்கும். இதன் மீது ஏற்படும் லாப நஷ்டங்களுக்கு அவர்கள்தான் பொறுப்பாளிகளாக ஆவார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [13th March 1964

அடுத்தபடியாக, டிரைவர்கள், கண்டக்டர்கள் இவர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கின்ற முறையில் காலதாமதம் ஏற்படுவதாக கனம் தங்கவேலு அவர்கள் சொன்னார்கள். அவ்விதம் காலதாமதம் ஏற்படுவதற்கு அவசியமில்லை. அப்படி ஏதாவது இருந்தால் அதைப் பற்றி அரசாங்கம் உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். "ஃப்பஸ்ட் எயட்" (முதலுதவி) சர்டிபிகேட் மீண்டும் மீண்டும் கொடுக்கவேண்டும் என்ற நிலைமை இருக்குமானால், அதை மாற்றுவதற்கு சர்க்கார் வழி செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் ஓவர் லோட் சம்பந்தமான பிரச்னை. வேகமாக போகக் கூடிய பிரச்னை போன்று இதுவும் ஒரு பிரச்னையாக இருக்கிறது. இதை ஒவ்வொரு சமயத்திலும் கண்காணிப்பது, செக் செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஓவர் லோட் செய்கின்ற முறையை எடுத்துக்கொண்டால் அவர்கள் ஊருக்குள் ஏற்றுவதில்லை. ஊருக்கு வெளியில் வந்து ஓவர் லோட் ஏற்றுகிறார்கள், அதேபோல், ஊருக்குள் போவதற்கு முன்னால் இறக்கிவிட்டுவிடுகிறார்கள். இறக்கிவிடப்பட்டவர்கள் நடந்து தான் போக வேண்டும். இந்த விஷயத்தில் ஓரளவுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு இருந்தால் சமாளிக்கலாம். இன்னுமொன்று, அதிகமாக பஸ்களை விடவேண்டும். இதைப்பற்றித் தான் சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதிகமான பஸ்களை விட வேண்டும் என்பது தான் சர்க்காருடைய எண்ணம்.

ரூட்கள் கர்ட்டைல் செய்வதைப்பற்றி சொன்னார்கள். வேரியேஷன் செய்வதற்கு நாம் சட்டம் பயற்றி யிருக்கிறோம். கர்ட்டைல் செய்கிறார்கள் என்று சொன்னால், அவ்வாறு எந்த இடத்தில் செய்திருக்கிறார்கள் என்று எழுதி அனுப்பினால் அதைப்பற்றி சர்க்கார் உடனடியாக பரிசீலனை செய்வதற்கு தயாராக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில், கர்ட்டைல்மெண்ட் கூடாது என்பது தான். ஆகவே எந்த முறையில் நல்லவிதமாக இதைச் செய்ய முடியும் என்பதைப் பார்த்து அதற்குத் தகுந்தவாறு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், சில அங்கத்தினர்கள், "பார்வேர்ட் ஃபேஸிங் ஸீட்" முன்பக்கம் அதாவது நேர்பக்கமாக ஸீட்-கள் அமைப்பது பற்றி சொன்னார்கள். இவ்விதம் அமைப்பது நன்மையாக இராது. நஷ்டம் தான் ஏற்படும், ஆகவே இதை மாற்றி அமைக்கவேண்டும் என்று சொன்னார்கள். என்னுடைய அபிப்பிராயத்தில் நாம் மக்களுக்குத்தான் அதிகமாக வசதி செய்து கொடுக்கவேண்டும். நாம் குறைந்த கட்டணம் வாங்கிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்வதை விட, மக்களுக்கு அதிகமான அளவில் வசதி செய்து கொடுத்திருக்கிறோம் , என்று சொல்வது

13th March 1964] *[திரு. ஆர். வெங்கட்டராமன்]*

தான் பொருத்தமாக இருக்கும். குறிப்பாக, சர்க்கார் வெளியிட்டிருக்கிற அறிக்கையின்படி கட்டணங்களை உயர்த்தும் போது, ஏன் நேர்பக்கமாக பார்க்கக்கூடிய அளவில் 51 ஸீட்டுகளை அமைக்க முடியாது என்று தெரியவில்லை. இதை மெதுவாக சர்க்கார் கொண்டு வரவேண்டும் என்று நினைத்தாலும், இதை உறுதியாக நடத்தவேண்டும் என்று நோக்கம் கொண்டிருக்கிறது. அதன் மூலமாக மக்களுக்கு நல்ல வசதிகளை செய்து கொடுக்க முடியும். டிரைவர்களை வேறு வேலைகளை செய்யச் சொல்லுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி சட்டத்தில் ஒன்றும் இல்லை இது அவர்களுக்குள் இருக்கின்ற அரேன்ஜ்மெண்ட்தான். இதைப்பற்றி ஆர்.டி.ஓ. பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

மேலும் ரன்னிங்-டைம் பற்றி சொன்னார்கள். இதை குறைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. கூடுமான அளவுக்கு ரோட்டின் அகலம்; ரோட்டில் இருக்கின்ற டிராஃபிக் முதலியவைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்த்துத்தான் இந்த டைம் நிர்ணயிக்கப்படுகிறது. அகலமான ரஸ்தாக்களாக இருந்தால் வேகமாக போக முடியும். குறுகிய ரோடாக இருந்தால் குறைந்த வேகத்தில் தான் செல்லவேண்டும். ரோட்டைப் பொறுத்துத்தான் இதை நிர்ணயிக்கவேண்டும்.

பொதுவாக இந்த மான்யக் கோரிக்கையின் மீது பல அங்கத்தினர்கள் பல நல்ல யோசனைகளை எல்லாம் தெரிவித்தார்கள். அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, சாதாரண பஸ்களுக்கும் எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கும் கட்டணம் வேறுபாடாக இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் சர்-சார்ஜ் கணக்கிடப்படுமா, அப்படியானால் எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணத்தின் மீது சர்-சார்ஜ் அதிகமாக்கப்படுமா என்பதை தெரிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதில் சொல்லப்பட்டிருக்கின்ற விவரங்கள் . . . .

" Express Stage Carriages :

Fifty per cent over and above the rates for ordinary stage carriages :

Provided that if in an express stage carriage provision is made for superior class of accommodation for all the passengers, the Transport Authority may allow fares to be charged for such accommodation at such rates as it may fix not exceeding 100 per cent above the rates for ordinary stage carriages."

அதாவது: லேனிங் ஸீட், லக்ட்சுரி ஸீட் முதலியவைகள் போடப்பட்டிருக்கும் பஸ்களுக்கு அதிமாக போடப்படும். அவையல்லாத

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [13th March 1964

வைகளுக்கு 50 சதமானம் போடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிய கூடுதல் விவரங்கள் வேண்டுமென்றால், தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சொல்லலாம்.

திரு. து. ப. அழகமுத்து : நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை வற்புறுத்துகின்றேன்.

MR. SPEAKER : The question is—

'That the allotment of Rs. 15,85,000 under Demand No. II—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100.'

The cut motion was put and declared lost.

A poll was demanded.

Some Members were seen talking with one another)

MR. SPEAKER : The hon. Members should not instruct each other now. They may take their respective seats.

(Sri P. Ramachandran, Government Whip, prompted some hon. Members, who were found sleeping.)

MR. SPEAKER : This sort of thing is wrong. The hon. Member should not repeat it. If Members want to sleep, they may go out and sleep but should not sleep in the Chamber.

The House divided thus :—

Ayes—

Sri V. R. Nedunchezhiyan.
,, M. Karunanithi.
,, A. P. Dharmalingam.
,, Rama. Arangannal.
,, A. Raghava Reddi.
,, A. K. Subbiah.
,, V. S. S. Mani.
,, M. Rajangam.
,, Kanchi. Manimozhiar.
,, A. Perumal.
,, K. Cheemaichamy.
,, N. Rajangam.
,, S. Madhavan
,, T. P. Alagamuthu.
,, S. Mani.
,, P. Murugaiyan.
,, P. V. Sriramulu.
,, M. Kamalanathan.
,, C. G. Viswanathan.

Ayes—cont.

Sri S. Muthulingam.
Pulavar K. Govindan.
Sri C. Manickam.
,, T. Chinnasamy.
,, M. R. Krishnamurthy.
,, A. Thangavelu.
,, S. Murugaiyan.
,, P. U. Shanmugham.
Srimathi Jagadhambal Velayudham.
Sri M. S. Mani.
,, K. Thirupathy.
,, M. P. Vadivelu.
,, R. Nallamuthu.
,, N. P. Sengottuvelu.
,, M. V. Karivengadam.
,, A. G. Balakrishnan.
,, V. Krishnamurthy.
,, R. Sampangi.

13th March 1964] [Mr. Speaker]

Noes—

Sri K. Parthasarathy.
,, N. P. M. Chinniah Gounder.
,, S. Chinnayyan.
,, C. M. Ambikapathi.
,, A. Arumugam.
,, V. S. Arunachalam.
Hon. Sri P. Kakkan.
Hon. Sri V. Ramaiah.
Hon. Srimathi Jothi Vencatachellum.
Sri P. Ramachandran.
,, A. S. Dhakshinamoorthy Gounder.
,, T. P. Elumalai.
,, K. Gopala Gounder.
,, K. S. G. Haja Sheriff.
,, P. Jayaraj.
,, T. Kadambavanasundaram.
,, A. K. Kaliappa Gounder.
,, T. Karcha Gowder.
,, C. Kothandarama Bhagavathar.
,, M. Kulandaiswamy Gounder.
,, T. Manavalan.
,, K. Marappa Gounder.
,, M. Maruthanayagam Pillai.
,, V. A. Muthiah.
,, T. M. Nallaswamy.
,, S. Nanjunda Row.

Noes—cont.

Sri R. Rangaswamy.
,, N. S. Ramalingam.
,, V. Ramanathan.
,, B. Rajagopal Naidu.
,, P. Rajagopal.
,, G. D. Perumal Raju.
Srimathi Parvathi Arjunan.
Srimathi N. K. Ranganayaki.
Kumari D. Sulochana.
Srimathi C. Kolandai Ammal.
Srimathi Krishnaveni.
Srimathi Lakshminarasamma.
Hon. Sri Nallasenapathi Sarkarai Manradiar.
Hon. Sri G. Bhuvarahan.
Hon. Sri S. M. A. Majeed.
Srimathi A. Suares.
Sri B. Parameswaran.
Dr. B. Natarajan.
Sri C. Chiranjeevulu Naidu.
,, R. Sengaliappan.
,, A. Swamidhas.
,, A. R. Subbiah Mudaliar.
,, R. Subramaniam.
,, S. Subramaniam Chettiar.
,, K. B. Palani.
,, P. Urkavalan.

Ayes : 37. Noes : 52.

The cut motion was lost.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 15,85,000 under Demand No. II—Motor Vehicles Acts—Administration'. 11-30 a.m.

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND NO. XXX—ROAD TRANSPORT SCHEMES.

(3) DEMAND NO. XLIII—CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 6,29,45,700 under Demand No. XXX—Road Transport Schemes.'

[13th March 1964

SRI M. KAMALANATHAN : Sir, I move—

'That the allotment of Rs. 6,29,45,700 under Demand No. XXX—Road Transport Schemes be reduced by Rs. 100.'

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,44,79,000 under Demand No. XLIII—Capital Outlay on Road Transport Schemes.'

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, என் பெயரில் இருக்கிற வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

'That the allotment of Rs. 1,44,79,000 under Demand No. XLIII—Capital Outlay on Road Transport Schemes—be reduced by Rs. 100.'

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

*** கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1962-63, 1963-64 ஆகிய இந்த இரண்டு ஆண்டுகளிலும் சென்னை ராஜ்ய போக்குவரத்து மிகச் சிறப்பாக நடந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நல்ல வளர்ச்சியும், எஃபிஷியென்ஸி ஆஃ ஆப்பரேஷன் அதிகரித்தும் இருக்கிறது. இது சம்பந்தமாக சில விவரங்களெல்லாம் புத்தகத்திலே அச்சடித்து கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சில விஷயங்களை மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய ராஜ்யத்திலே, நான் அடிக்கடி சொல்வது போல, நான் தான் பெரிய பஸ் முதலாளி. அதிகப்படியான பஸ்கள் ஓட்டுகிறது சென்னை ராஜ்ய சர்க்கார். அது மாத்திரமல்ல இன்னும் அதிகமாக வளர்ச்சி அடைந்துகொண்டு வருகிறது. ஆயிரம் பஸ்களை ஓட்டி இப்போது நம் ராஜ்யத்திலே இதை நடத்திக்கொண்டிருக்கிறோம். நடப்பு ஆண்டு, 1963-64-ம் ஆண்டிலே நம்முடைய ராஜ்யத்தினுடைய பஸ் ஃப்ளீட் ஸ்ட்ரெங்த் 814-லிருந்து 960-ஆக உயரும். மாதம் சராசரி எத்தனை பிரயாணிகள் செல்லுகிறார்கள் என்று கணக்குப் பார்த்தீர்களானால், 1962-63-ல் மாதம் ஒன்றுக்கு சராசரி ஒரு கோடி 95 லட்சம் பிரயாணிகள் பிரயாணம் செய்தார்கள். இந்த 1963-64 நடப்பு ஆண்டில் 9 மாதங்களுக்குக் காட்டியிருக்கிற கணக்குப்படி மாதம் ஒன்றுக்கு 2 கோடி 21 லட்சம் மக்கள் பிரயாணம் செய்கிறார்கள். அதேபோல, பிரயாணிகளிடமிருந்து வருவாய், டிக்கெட் வருமானத்தைப் பார்த்தீர்களானால், 1962-63-ல் மாதம் ஒன்றுக்கு 32.5 லட்சம் ரூபாய் வருவாய் வந்திருக்கிறது. நடப்பு ஆண்டிலே ரூ. 38.2 லட்சம் வருவாயாக அது உயர்ந்து இருக்கிறது.

13th March 1964] *[திரு. ஆர். வெங்கட்டராமன்]*

நம்முடைய 'பாடிகள்' கட்டுகின்ற ஸ்தாபனத்திலும், சென்ற ஆண்டு 122 பாடிகளை நாம் கட்டினோம். இந்த ஆண்டு 165 பாடிகளை நாம் கட்டுகிறோம். நடப்பு ஆண்டிலே சென்னை நகரத்தில் மாத்திரம் புதியதாக 5 புதிய ரூட்டுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 30 அதிகப்படியான பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. 16 ஸூபர்பன் பஸ்கள், அதிகமான பஸ்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன, இப்பொழுது ஓடிக்கொண்டிருப்பதைவிட. நீண்ட தூரப் பிரயாணம் செய்கின்ற மார்க்கங்களில் 6 புது மார்க்கங்கள் நடப்பு ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் இந்த ஆண்டிலே நாம் 23 நெடுந் தூர பஸ்கள் விட்டுக்கொண்டிருக்கிறோம். சென்னை ராஜ்யத்தில் எந்த ஜில்லாவிலிருந்தும் எந்த ஜில்லாவிற்கு வேண்டுமானாலும் சர்க்கார் பஸ்கள் மூலமாக இன்றைக்கு செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இது தவிர, அடையாறு டெப்போ ஒன்று திறந்திருக்கிறோம். தென் சென்னையில் இருக்கக்கூடிய பஸ்கள் எல்லாவற்றிற்கும் இரவு நேரத்தில் அங்கே தங்குவதற்கும், 'மெயின்டெனன்ஸ்' போன்ற சேவைகள் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தண்டையார்பேட்டையில் அதே விதமாக ஒரு பெரிய டெப்போ திறக்கப்பட்டிருக்கிறது. திருச்சியில் ஒரு டெப்போ இருக்கிறது. அதைத் தவிர பஸ் ஸ்டாண்டு ஒன்றும் நல்ல முறையில் கட்டியிருக்கிறோம். கன்யாகுமாரியில் இது வரையிலும் ரிப்பேர் மாத்திரம் செய்துகொண்டிருந்த இடத்தை இன்றைக்கு பாடி கட்டுவதற்கான ஒரு வொர்க்ஷாப்பாக மாற்றி, 2 பாடிகள் கட்டிவந்துவிட்டன. மாதம் ஒன்றுக்கு இனி 10 பாடிகள் வரையிலும் கட்டும்படியான அளவுக்கு அதை உயர்த்த வேண்டும் என்று திட்டம் வகுத்திருக்கிறோம். பல இடங்களில் மிகவும் அழகான பஸ் ஸ்டாண்டுகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. சென்னை நகரத்தில் தியாகராய நகர், மந்தவெளி போன்ற இடங்களில் பஸ் ஸ்டாண்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதே போன்று வெளி ஊர்களில், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், வேலூர் போன்ற எல்லா இடங்களிலும் சிறந்த பஸ் ஸ்டாண்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. புலவர் கோவிந்தன் அவர்கள் வேலூரில் கட்டியிருக்கிற பஸ் ஸ்டாண்டுக்காக கொடுத்த நற்சாட்சிப்பத்திரத்திற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டில் 1964-65-ல் 12 புதிய நெடுந் தூர பஸ்கள் விடுவதற்கான ஆலோசனை இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

கடந்த ஆண்டில் சைக்ளோன் வந்த காலத்தில் மிக உறுதியுடனும், கட்டுப்பாட்டுடனும் நம்முடைய டிரைவர்கள் அந்தப் பகுதிகளிலே வேலை செய்து, மக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்றார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ரயில் போகாமல் இருந்த நிலைமையிலேகூட அன்றைக்கு பஸ்கள் விடுவதன் மூலமாகத்தான் போக்குவரத்து அங்கெல்லாம் பாதுகாக்கப்பட்டது. அதேபோல கண்டக்டர்கள்

பலர், பிரயாணிகள் தவறுதலாக மறந்து வைத்துவிட்டுப் போன பல விலை உயர்ந்த பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டுவந்து சேர்க்கும்படியான பெரும் பணி செய்திருப்பதையெல்லாம் நாம் பாராட்டுகிறோம். பொது மக்களும் அவர்களை பாராட்டி பலவிதமான கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள்.

நம்முடைய மொத்த பஸ்களில் 84 சத விகிதம் இன்றைக்கு ஓடிக்கொண்டிருக்கின்றன. அதாவது 'ஆபரேஷன் ரேஷியோ' என்று சொல்வார்கள். 'ஆபரேஷன் ரேஷியோ' இன்றைக்கு 84 சத விகிதம் இருக்கிறது. ஏதோ ஒரு இடத்தில் பஸ் நின்று போகலாம். ஒரு இடத்தில் ஏதாவது கோளாறு ஏற்படலாம். மொத்தம் 1,000 பஸ்கள் ஓட்டும்பொழுது எத்தனை பஸ்கள் நிற்கின்றன, எந்தவிதமான கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதைப் பார்த்துத்தான் சொல்லவேண்டும் தவிர, ஏதோ ஒரு சம்பவத்தை ஒட்டி, அதைப் பெரிய குறையாக எடுத்துச் சொல்லுவது விவாதத்திற்கு பொருத்தமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'ஹையஸ்டு எபிஷியன்ஸி' இருக்கக்கூடியது 90 சத விகிதம தான். அதைவிட அதிகமான அளவில் யாரும் உலகத்தில் செய்ய முடிவதில்லை. இந்த 90 சத விகித நிலைமையை நாம் எட்டிப் பிடிக்க முடியாததற்கு நான் காரணங்கள் சொல்ல விரும்புகிறேன். காரணம் என்னவென்று கேட்டால், நம்முடைய நாட்டில் 'ஸ்பேர் பார்ட்ஸ்' கிடைப்பதில்லை. ஸ்பேர் பார்ட்ஸ் இறக்குமதியை மிகவும் கட்டுப்பாடு செய்து விட்டோம். இந்த இடத்திலே நாம் ஏதாவது அவசரமாக ஸ்பேர் பார்ட்ஸ் தயார் செய்து போடுகிறோம். அவைகளெல்லாம் சீக்கிரம் உடைந்துவிடுகின்றன. ஸ்பேர் பார்ட்ஸ் நல்ல முறையில் கிடைக்குமானால், வேண்டிய அளவு, வேண்டிய பொருள்கள் கிடைக்குமானால் இந்த 'எஃபிஷியன்ஸி' யை இன்னும் 2, 3 சத விகிதம் உயர்த்தலாம். நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய 'க்ளைமாடிக் கண்டிஷன்ஸ்', ரோடுகளுடைய நிலைமை, அதில் ஏற்படுகின்ற தூசி முதலியவைகளைப் பார்க்கும் பொழுது 90 சத விகிதம் 'எபிஷியன்ஸி' நம்முடைய நாட்டில் இருக்கும்படியான நிலைமையை அடைய முடியுமா என்பது சந்தேகம். அந்தந்த நாடுகளில் இருக்கக்கூடிய வித்தியாசத்தைப் பொறுத்துத்தான் 'எஃபிஷியன்ஸி' எந்த அளவுக்கு அடையமுடியும் என்பதை நாம் நிரணயம் செய்யவேண்டும். இருந்தாலும், நம்முடைய ஆபரேஷன் ரேஷியோ'-வை 90 சதவிகிதம் உயர்த்தவேண்டும் என்று தான் சர்க்கார் லட்சியத்தில் வைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டு வருகிறோம். ஓரளவுக்கு நமக்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் உடனே கிடைக்குமானால், அதுவும் சரியான, உறுதியான, 'ஒரிஜினல் எக்விப்மெண்டு' என்று சொல்லுவார்கள், அவை கிடைக்குமானால், இந்தக் குறைகளை நாம் போக்குவதற்கு முடியும்.

மோட்டார் டிரான்ஸ்போர்ட் இலாகாவைப்பற்றி கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், டாக்டர் நடராஜன் அவர்களும், அது நஷ்டத்தில் ஓடுகிறது என்பதை எடுத்துக் காட்டினார்கள். எந்த

ஒரு நிர்வாகத்தைப்பற்றியும் நாம் குற்றம் சாட்டவேண்டுமென்றால் அதைப்பற்றி 'கிரிடிஸிஸம்' சொல்லவேண்டுமென்றால், முழு விவரங்களையும் வைத்துப் பேசவேண்டுமே தவிர, ஏதோ குறிப்பிட்ட சில விவரங்களை மாத்திரம் எடுத்துச் சொல்வது முறையாகாது. இன்றைக்கு நமது செலவுகள் எல்லாம் எப்படி உயர்ந்திருக்கிறது என்பதற்கு புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறேன். 14-வது பக்கத்தை எடுத்துப் பார்த்தோமானால், 1948-ம் வருஷம் டிரைவருக்குக் கொடுத்த அடிப்படைச் சம்பளம் ரூ. 68, இதெல்லாம் 'லோயஸ்டு மினிமம்', இன்று கொடுக்கப்படுவது ரூ. 105. அதேபோல, கண்டக்டருக்கு அப்பொழுது கொடுக்கப்பட்ட சம்பளம் ரூ. 54. இப்பொழுது கொடுப்பது ரூ. 95. எண்ணெய் விலையை எடுத்துக்கொள்வீர்களானால், 1948-ம் வருஷம் ஒரு கிலோ லிட்டர் ரூ. 470, இன்றைக்கு ரூ. 690. சர்க்கார் வரிகளை எடுத்துக் கொண்டால் 1948-ம் வருஷம் ரூ. 28.69—ரூ. 29 என்று கூட வைத்துக் கொள்ளலாம்—குவார்டருக்கு ஒரு சீட்டுக்கு. இன்றைக்கு அது ரூ. 63-ஆக இருக்கிறது. சர்க்காரிலே நாங்கள் கடன் வாங்கி பஸ்கள் ஓட்டுகிறோமே, அதற்குக் கூட 4 சதவிகிதம் வட்டி வாங்கிக் கொண்டிருந்தது, இப்பொழுது 5½ சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. கனம் அங்கத்தினர் எதற்காக, 1948-ம் வருஷத்தை எடுத்துக் கொள்ள வேண்டும், ஏன் 1900-ம் வருஷத்தை எடுத்துக் கொண்டிருந்தால் வித்தியாசம் ஜாஸ்தியாக இருக்குமே என்று கேட்கலாம். 1948-ம் வருஷத்தை ஏன் எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்றால், 1948-ல் என்ன பிரயாண கட்டணத்தை நாம் வசூலித்துக் கொண்டிருந்தோமோ, அதே கட்டணத்தைத் தான் இன்றும் வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எம். எஸ். மணி: பஞ்சப்படி, ஹவுஸ் ரென்ட், இவற்றைத் தள்ளிவிட்டு கணக்குச் சொல்லுங்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்குப் பணம் கொடுக்கவில்லையா? செலவுகளைத் தான் நான் சொல்லுகிறேன். அதற்கு பணமாகத்தான் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்காமல் இருந்தால், அதைத் தள்ளிவிட்டு, கணக்குச் சொல்ல முடியும். அந்த விதமாகப் பார்க்கிறபொழுது, எனக்கு ஒரு சந்தேகம் எழுகிறது. இந்தியாவிலே ஏதாவது ஒரு பொருள் 1948-ல் விற்ற விலைக்கு இன்றைக்கு விற்கிறதா சென்னை ராஜ்ய பஸ் டிக்கட்டைத் தவிர என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதனால்தான் 1948-ம் வருஷத்தை கணக்காக எடுத்து, அதிலிருந்து இந்த வருஷக் கணக்கைச் சொல்லுகிறேன். சென்ற 17 ஆண்டு காலமாக, எத்தனை விதமான புதுச் செலவுகள் ஏற்பட்டாலும், அந்தக் காலத்தில் எல்லாம் நாம் எப்படியாவது பஸ் கட்டணத்தை உயர்த்தாமல் சமாளிக்க வேண்டுமென்ற லட்சியத்தின் அடிப்படையில், பஸ் கட்டணத்தை உயர்த்தாமல் இன்று வரை லாபகரமாக நடத்திக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், 1963-ம் ஆண்டில் மத்திய சர்க்கார் வரியினால் மாத்திரம் நாம் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியது ரூ. 35 லட்சம் என்று வருமேயானால், அதை எந்த

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [13th March 1964

எஃபிஷியன்ஸி ஆப் ஆப்பரேஷனிலும் சரிக்கட்ட முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்னை ஏதோ திடீரென்று இப்பொழுது எழுந்ததல்ல. 1962-ல் கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கூடக் கேட்டார்கள், "நீங்கள் பஸ் கட்டணங்களை உயர்த்தவில்லை என்று சொன்னீர்களே" என்று. உண்மை தான். நாங்கள் சொன்னபடிதான் நடந்திருக்கிறோம். 1962-ல் தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய தனியார் துறை பஸ் முதலாளிகள் எல்லோரும் கட்டணத்தை உயர்த்தினார்கள். இப்பொழுதிருக்கிற சட்டப்படி எவ்வளவு தூரம் உச்ச கட்டணத்தை உயர்த்த முடியுமோ, அந்த அளவுக்கு உயர்த்தினார்கள். ஆனால் சென்னையில் உயர்த்தவில்லை. உயர்த்தாமல் சமாளிக்கிறோம் என்று சொல்லி, சென்ற ஆண்டிலே பார்த்தால், ஒரு சிறிதளவு லாபம் கூட அடைந்திருக்கிறோம். ஆனால் 1963-64-ல் ஏற்பட்டிருக்கிற ஒரு செலவினைப் பார்க்கும்பொழுது, இனி சமாளிக்க இயலாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1948-ம் வருஷத்திய நிலைமையிலிருந்து, அதே கட்டணத்தை வைத்து, இந்த அளவுக்கு திறமையாக நிர்வாகத்தை நடத்தியதற்கு மனப்பூர்வமாக எனது பாராட்டுதலை இந்த இலாகாவிற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய அஸெட்டுகளைப் பார்த்தால், நன்றாகத் தெரியும். இந்த அறிக்கையில் 16-ம் பக்கம் பார்த்தால், சர்க்காரிடமிருந்து காபிட்டல் அட் சார்ஜாக வாங்கினது ரூ. 6.46 கோடி. இன்றைக்கு நம்மிடத்தில் இருக்கக்கூடிய அஸெட்டுகளின் மதிப்பு ரூ. 9.97 கோடி. பஸ்களுக்கு தேய்மானம் போட்டு, மற்றும் கட்டடங்களுக்கெல்லாம் தேய்மானம் போட்டு, கணக்குகளை ஒழுங்காக வைத்து, இன்றைக்கு கிட்டத்தட்ட ரூ. 10 கோடி இருக்கிறது. சர்க்காரிடமிருந்து ரூ. 6 கோடி தான் வாங்கினோம். அது மாத்திரமல்ல. சர்க்கார் கணக்குக்கும் தனியார் கணக்குக்கும் சில மாறுதல்கள் உண்டு. அவை என்னவென்றால், தனியார் துறையில் லாபம் வந்தால், அந்த லாபத்திலே 50 சதவிகிதம் இன்கம் டாக்ஸுக்குக் கொடுப்பார்கள். பாக்கி 50 சதவிகிதம் அவர்களிடத்திலே இருக்கும். சர்க்காருடைய கணக்கு எப்படியென்றால், எவ்வளவு லாபம் வந்தாலும், அந்த லாபம் எல்லாம் சர்க்காருக்குப் போய் விடும். இந்த முறைப்படி பார்த்தால், இந்த இலாகாவிலிருந்து வட்டி கொடுத்தது போக, லாபத்திலிருந்து சர்க்காருக்குக் கொடுத்த தொகை ரூ. 1.64 கோடி. நம்முடைய வருமானத்திலிருந்து சர்க்காருக்கு நிதியாக அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு பெரிய நிலைமை என்னவென்றால், லாபம் வருகிறபொழுது சர்க்காருக்கு அது ரெவின்யூவாகப் போய் விடும். நஷ்டம் வந்தால் அந்தப் பணத்தையும் அவர்கள் சேர்த்து அதை காப்பிட்டல் அட் சார்ஜாக போட்டு, அதற்கும் வட்டி வாங்கி விடுவார்கள். அந்த மாதிரி ஒரு நிலைமை சர்க்கார் கணக்குக்கும், தனியார் கணக்குக்கும் உண்டு. ஆகவே தான் இந்த இலாகா திறமையாக நடந்து வந்திருக்கிறது, என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் 1959-ம் வருஷத்தில் நான் இந்த

13th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

சட்ட சபையில் பேசியதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நான் அன்று சொன்னது என்னவென்றால்; "பஸ் தொழில் இன்று ஒரு பெரிய நெருக்கடியை எதிர் நோக்கி யிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் நடத்தப்படும் பஸ் டிரான்ஸ்போர்ட் செலவுகளை நான் சதவிகிதக் கணக்கில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (நான் அப்பொழுது அந்த சதவிகிதங்களை சொல்லியிருக்கிறேன். இப்பொழுது அவற்றை படிக்க வேண்டிய அவசியம் இல்லை.) இவற்றை எல்லாம் கூட்டிப் பார்த்தால் அதிகப்படியான செலவு குறைந்தது ரூ. 10 லட்சத்துக்கு மேல் போய் விடும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் இது ஒரு நெருக்கடியான நிலைமை என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிலைமையை சமாளிக்க 3 வழிகள் உண்டு. ஒன்று கட்டணத்தை உயர்த்தலாம். யாரும் இதை எதிர்க்க வில்லை. (அன்று கூட நான் இந்தக் கணக்கை காண்பித்தவுடன் யாரும் ஒன்றும் சொல்லவில்லை.) இரண்டாவதாக நிர்வாகச் செலவைக் குறைக்கலாம். மூன்றாவதாக எபிஷியன்ஸி ஆப் ஆப்ரேஷனை அதிகரிக்கலாம். கட்டணத்தை உயர்த்துவது சுலபம். ஆனால் அதை சர்க்கார் முதலிலே செய்ய விரும்பவில்லை. கட்டணத்தை உயர்த்துவதற்கு சர்க்கார் இப்பொழுது விரும்பவில்லை. மற்ற எல்லா முறைகளையும் பார்த்து, முடியாமல் போனால்தான், இந்த நிலைமைக்கு வரும்". ஆகவே 1959-ஆம் ஆண்டிலேயே நிலைமை சமாளிக்க முடியாமல் இருந்ததை எடுத்துக்காட்டி, 1964 வரையிலும் நாங்கள் சமாளித்து வந்தோம். நம்முடைய டிரான்ஸ்போர்ட் இலாகாவை ஐ.எல்.ஓ. நிபுணர்கள் பரிசீலனை செய்தார்கள். அவர்கள் பரிசீலனை செய்து, நிலைமையை சரிக் கட்டவேண்டும் என்றால், 15 சதவிதம் கட்டணத்தை உயர்த்தினால் சரிக்கட்டி விட முடியும் என்று சொன்னார்கள். அப்பொழுதுகூட நாங்கள் அதைச் செய்யவில்லை. அவர்கள் சொன்னதாவது:

'If fares were increased by 15 per cent the earnings per service would be about 15 per cent higher than those shown in the table for July'.

அப்படிச் செய்தால் முடியும் என்று அவர்கள் கணக்குப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். உயர்த்த வேண்டும் என்று அவர்கள் நிர்ணயித்து விட்டால் உயர்த்தாதது தவறு, நிபுணர்கள் சொல்லியும் கேட்கவில்லை என்ற குற்றச்சாட்டு வந்து விடுமோ என்ற காரணத்தினால் அவர்கள் ஒரு புட்நோட்டில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "உயர்த்த வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை, ஆனால் உயர்த்தினால் கட்டுபடியாகும்". ஆகவே தான் நான் எந்த இலாகாவைப்பற்றி சொல்லுகிற பொழுதும், பொதுவாக அவர்களுக்கு உரியதாக இல்லாத பெருமையைக் கொடுப்பது இல்லை. ஆனால் இந்த இலாகாவைப் பற்றி சொல்லுகிறபொழுது உண்மையாகவே நாம் 18 ஆண்டுகளுக்கு எந்தவிதமான கட்டண உயர்வும் இல்லாமல், இவ்வளவு

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [13th March 1964

அதிகமான நெருக்கடிகள் வந்தபோதும் கூட அவற்றை எல்லாம் சமாளித்து இன்று வரையிலும் அதை லாபகரமாகவே நடத்தி வந்ததற்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவிக்கிறேன்.

நான் பிற நாடுகளுக்கு செல்லுகிறபொழுது எல்லாம் கைத் தொழில்களைப் பார்ப்பது போல டிரான்ஸ்போர்ட்டையும் பார்ப்பது உண்டு. அவ்வாறு பார்த்து வந்த பிறகு தான் நெடுந்தூர பஸ்களை நம்முடைய ராஜ்யத்தில் விட ஆரம்பித்தோம். வெளி நாடுகளிலிருந்து வருகிறவர்கள் கூட "இந்த நெடுந்தூர பஸ்கள் அங்கே இருக்கிற பஸ்களுக்கு ஒப்பாக இருக்கிறது. ஒரே வித்தியாசம் என்னவென்றால் இவற்றை ஏர் கண்டிஷன் செய்தால் எங்கள் நாட்டில் ஓடுகிற பஸ்களுக்கு ஒப்பாக இருக்கும்" என்று சொன்னார்கள். நம்முடைய நாட்டின் நிலைமையை ஒட்டி நாம் இதைச் செய்ய வில்லை. அந்த விதமாக நான் மேல் நாடுகளில் பார்த்த பெரிய கம்பெனிகளிலிருந்து புள்ளி விவரங்கள் கொண்டு வந்து இருக்கிறேன். அமெரிக்காவிலே நியூயார்க் என்பது மிகப் பெரிய நகரம். அங்கே மிகவும் புகழ் பெற்ற கம்பெனி Fifth Avenue பஸ் கம்பெனி என்பது. அவர்களிடத்திலே அன்றைக்கு 1,200 பஸ்கள் ஓடிக் கொண்டிருந்தன. முதலிலே நான் அமெரிக்கா சென்ற பொழுது அதாவது 1953-ல், அவர்கள் 12 செண்ட் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 15 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அது தான் சிங்கிள் ஃபேர் ஸிஸ்டம். 15 செண்ட் என்று சொன்னால் 71 நயா
12-00 noon. பைசா. அந்தவிதமான கட்டணம் வாங்கிக் கொண்டு இருந்தார்கள். அந்த பஸ் கம்பெனியை இன்று மூடி விட்டார்கள். அதை மூடிவிட்டு நகரத்தில் இருக்கும் ஸிடி அதாரிடியே எடுத்துக் கொண்டு விட்டார்கள். நம்முடைய நாட்டில் இருந்து நாஷனல் ப்ரொடக்டிவிடி கௌன்ஸில் டீம் ஒன்று அங்கே போனார்கள். அவர்கள் எழுதியிருப்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

The City of New York takes a certain percentage of gross revenue as tax. The loss for 1958 was 10 million dollars as the fare does not support capital costs. No dividend has been declared in the last two years. The company would be able to pay dividends only if the administration gave relief in taxes or authorised increased fares. The company has no monopoly routes.

அந்தக் கம்பெனி நடத்தும் பஸ்களில் சீட்டுகள் எப்படி என்று இரண்டொரு வார்த்தைகள் :

The buses have 50 seats. In addition standing passsengers to the extent of 75 per cent of the seats are allowed.

ஆக 50 ஸீட் இருக்கிற பஸ்ஸில் 37 பேர் நிற்கக்கூடிய அளவுக்கு அங்கே சட்டப்படி அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த மானியக் கோரிக்கயை பிரேரேபிக்கிறேன்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் துணைத்தலைவர் அவர்களே, இந்த போக்குவரத்து மானியத்தின் பேரில் எங்கள் கட்சி சார்பில்

13th March 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன். நம் அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவின் மானியத்தை கோரும் சமயத்தில் பீடிகைகள் பல போட்டார்கள். எதிர்க் கட்சியிலிருந்து என்ன என்ன குற்றச்சாட்டுகளை சுமத்துவார்களோ அவைகளை முன்பாகவே பரிசீலனை செய்து இப்படி இப்படி காரியங்கள் இருக்கின்றன என்று பல பீடிகைகள் போட்டதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர்கள் ஒன்றையும் விட்டுவிடாமல், எல்லாவற்றையும் சொல்லி இருந்தால் நான் அவர்களை பாராட்டுவேன். ஆனால் அவர் ஒரு பஸ் முதலாளியாக பெரிய பஸ் முதலாளியாக இருக்கிறார் என்பதை முதற்கண்ணாக தெரிவிக்கிறேன். அவர்கள் இன்றைக்கு 960 பஸ்களுக்கு முதலாளியாக இருக்கிறார்கள். 1,000 மாக கொண்டு வர, இன்னும் பெரிய பஸ் முதலாளியாகப் போகிறார்கள். இந்த முதலாளியையும் மற்றவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றவர்கள் இன்கம் டாக்ஸ் கொடுக்கும் முதலாளிகள். ஆனால் நம் அரசாங்க பஸ் முதலாளி இன்கம் டாக்ஸ் கொடுக்காத பஸ் முதலாளி. எதிர் தரப்பில் சில காங்கிரஸ் அங்கத்தினர்களை கேட்டால் தெரியும், தனிப்பட்ட முதலாளிகள் எவ்வளவு இன்கம் டாக்ஸ் கொடுக்கிறார்கள் என்று. அருமை நண்பர் திரு. கோதண்டராம பாகவதர் ஒரு கம்பெனியில் மேனேஜராக இருக்கிறார். அவருடைய கணக்குப் பிரகாரம் இன்கம் டாக்ஸ் கம்பௌண்ட் செய்ய இன்கம்டாக்ஸ் அதிகாரியிடம் மனுப்போடுகிறார்கள். ரூ. 7,500 வரை லாபமாக இருப்பதை வரிகட்ட கம்பௌண்ட் செய்கிறார்கள். சாதாரணமாக பார்த்தால் தமிழ் நாட்டில் பஸ் முதலாளிகள் இன்கம்டாக்ஸ் எவ்வளவு கட்டுகிறார்கள் என்று இலாகா மூலம் பரிசீலனை செய்ய வேண்டும். ஃப்லீட் ஓனர்ஸ், 5-க்கு மேற்பட்ட பஸ் வைத்திருக்கும் முதலாளிகள் வரி கட்டுகிறார்கள். எல்லாவிதமான வரிகளும் கட்டுகிறார்கள். அவர்கள் கடன் வாங்குவது 24 சதவிகிதமாக அல்லது 36 சதவிகிதமாக வட்டிக்கு. நம்மைப்போல 4½ சதவிகிதம் அல்லது 5 சதவிகிதத்துக்கு அல்ல. உயர்நீதி மன்றம் வரை சென்று ஒரு ரூட்டை அடைவதற்கு அல்லது தன்னிடம் நிறுத்திக் கொள்வதற்கு வாதாடுகிறார்கள். அமைச்சரவர்கள் இந்த இலாகாவை depend செய்கிறார்கள். அப்படி அவர்கள் டிஃபென்ட் செய்யும்போது பிரைவேட் ஆப்பரேட்டர்களை டிஃபென்ட் பண்ணுவதைப் போலத்தான் பேசினார்கள். இலாகாவை மட்டும் டிஃபென்ட் பண்ண வில்லை. சென்ற விவாதத்தின் போது கூட இதைப்பற்றி நான் கூறினேன். ஆனால் அமைச்சரவர்கள் தெளிவாக பதில் சொல்லவில்லை. ஆகவே மீண்டும் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். மந்திரி அவர்கள் 50 சதவிகிதமாக இன்கம் டாக்ஸ் கட்டுகிறார்கள் என்றும் 50 சதவிகிதத்தை அவர்களே வைத்துக் கொள்ளுகிறார்கள் என்றும் சொன்னார்கள். ஒரு தனிப்பட்ட முதலாளி 5,000 ரூபாய் இன்கம் டாக்ஸ் கட்டுகிறார் என்றால் ரூ. 10,000 வருமானம் வருகிறது என்பதை மறைமுகமாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் கிட்டத்தட்ட 1,000 பஸ்களை

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [13th March 1964

1963-64-ம் ஆண்டிலே பஸ்களின் எண்ணிக்கை 960 ஆக இருந்தது. 750 பஸ்கள் தான் ஓடிக்கொண்டிருந்தன. ஆவரேஜ் காபிடல் "சார்ஜ்டு ஃபார் தி மெய்ன்டினென்ஸ் ஆஃப் தி ட்ரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்ட்" என்ற வகையில் 578 லட்ச ரூபாய். க்ராஸ் ரெவினியூ 563 லட்சம் ரூபாய் க்ராஸ் எக்ஸ்பெண்டிசர் 479 லட்ச ரூபாய். நெட் ரெவினியூ 84 லட்ச ரூபாய். நிதிக்கு 91 லட்ச ரூபாய். இது போகப் பார்த்தால், மைனஸ் 7.62 லட்சம். அதாவது வருமானத்தில் 7.62 லட்ச ரூபாய் குறைந்திருக்கிறது. அது எப்படிக் குறைந்தது? கன்யாகுமரியில் 4.32 லட்சம் லாபம் வந்தது. ஓர்க்ஷாப்பில் 14.86 லட்சம் லாபம் வந்தது. இரண்டையும் கூட்டி மொத்தமாக வந்த 26.79 லட்சத்திலிருந்து கழித்தால் மீதி வரும் துண்டு 7.62 லட்ச ரூபாய். இது எதற்காக வரவேண்டும்? 'எஃபிஷியன்சி' இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், நஷ்டத்தில் நடத்துகிறார்கள். இதற்காக ட்ரான்ஸ்போர்ட்டை விட்டுவிடும்படி நான் சொல்லவில்லை. 'எஃபிஷியன்சி'யை மேலும் உயர்த்துங்கள் என்று தான் சொல்கிறோம்.

சென்னை நகர ட்ரான்ஸ்போர்ட்டில் என்ன நடக்கிறது? பரி வேட்டை தான் நடக்கிறது. நம்பர் ஆஃப் ட்ரிப்ஸ் அதிகமாக இருக்கிறது. ஸ்டாப்கள் குறைவு. பாரிஸ் கார்னரில் பாஸஞ்சர்கள் ஒரு பஸ்ஸில் ஏறிவிடுகிறார்கள் என்றால் அதை சென்ட்ரலுக்கு முன் ஸ்டாப்பில் கொண்டுவந்து நிறுத்தி டிக்கட் கொடுக்கிறார்கள். அதற்குள் அடுத்த பஸ் வந்து ஓவர்டேக் பண்ணிக் கொண்டு போய் விடுகிறது. டைம் அட்ஜஸ்ட் பண்ண வழி இல்லை. ட்ரிப்புக்காக நிர்ணயிக்கப்பட்ட நேரம் போதாமலிருப்பதால் ஸ்டாப்புகளில் நிறுத்தாமலேயே கூட பஸ்ஸை ஓட்டிக்கொண்டு போகவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. டெர்மினஸுக்கு லேட்டாகப் போனால், ட்ரைவரையோ கண்டக்டரையோ சார்ஜ் பண்ணிவிடுகிறார்கள். அவர்களுடைய வருமானம் குறைகிறது. பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், சென்னை நகரத்தில் ஓடுகிற பஸ்கள் பரி வேட்டை மாதிரி ஓடிக்கொண்டிருக்கின்றனவே தவிர, ஸ்டாப்களில் நின்று பிரயாணிகளைச் சரிவர ஏற்றிக்கொண்டு போவதாகத் தெரியவில்லை. ஒரு ட்ரிப்பை குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்கவேண்டும் என்பதைத்தான் முக்கியமாகக் கருதுகிறார்கள். ட்ரிப்களின் எண்ணிக்கையை வேண்டுமானால் சற்றுக் குறைத்துக் கொண்டு, ஸ்டாப்களில் நின்று பிரயாணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய வழிவகை செய்ய வேண்டும்.

காபிடல் அட் சார்ஜ்'-ல் இந்த ஆண்டில் 1 கோடி 35 லட்சம் ரூபாய் சார்ஜ் பண்ணியிருக்கிறோம். 'காபிடல் அவுட்லே'யில் சார்ஜ் பண்ணியிருப்பது 28 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய். டெப்ரிஸியேஷன் ரிசர்வ் பண்டுக்கு 290 லட்சம் ரூபாய் ஒதுக்கிவிட்டு, அடுத்த வருஷத்திற்கு 1 கோடி 4 லட்ச ரூபாய் சார்ஜ் பண்ணப் போகிறோம். 290 லட்சம் இருந்த டெப்ரிஸியேஷன் பண்டு அடுத்த வருஷத்தில் குறையப் போகிறது. டெவலப்மென்ட் பண்டில் 14 லட்சம் ரூபாய் இருக்கும். அடுத்த வருஷத்திற்கு பத்து லட்ச

13th March 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

ரூபாய் சார்ஜ் பண்ணப் போகிறோம். ஏற்கனவே இருந்த நிதி குறைகிறது. டெவலப்மென்ட் பண்டில் 4 லட்சம் ரூபாய் தான் இருக்கப் போகிறது. டிவிடென்டிலிருந்து நடைமுறையைச் சரிக்கட்ட வேண்டும். அரசாங்க பஸ் ட்ரான்ஸ்போர்ட் ஆபரேஷன் காபிடலிலிருந்து சார்ஜ் பண்ணி நடத்துவதாக இருக்கிறது. மூலதனத்திலிருந்து நாம் எடுத்துக்கொண்டே இருக்கக்கூடாது. ஆகவே, என்னுடைய யோசனை என்னவென்றால், இந்த பஸ் ட்ரான்ஸ்போர்ட்டை ஒரு ரோடு ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனாக வைத்துக் கொண்டு விடலாம். நான்கு வருஷம் நடத்திப் பார்ப்போம். இந்த நிர்வாகத்தை இத்தகைய கார்ப்பரேஷன் மூலமாக நடத்தினால் லாபம் வருமா, நஷ்டம் வருமா என்பதைத் தெரிந்து கொண்டுவிடலாம். இந்த பஸ் ட்ரான்ஸ்போர்டானது சர்க்கார் இலாகாவாக செயல்படுவதைவிட, . . .

(மணி அடிக்கப்பட்டது.)

Sir, this is a very important subject and as such two more minutes may be given to me.

MR. DEPUTY SPEAKER: I have already allotted fifteen minutes for the hon. Member.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: தனிக் கார்ப்பரேஷனாக வைத்துக் கொள்வது நலமாக இருக்கும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், 'எஃபிஷியன்ஸி' இருக்கிறதென்று சொல்கிறார்கள், ஆனால், எங்கே 'எஃபிஷியன்ஸி' இருக்கிறது? ஓர்க்ஷாப்பில் 11 மணிக்குப் பார்த்தால் ஃபோர்மென் நின்று கொண்டிருப்பார். அப்பொழுது ட்ரைவர் ஒரு பஸ்ஸைக் கொண்டுவந்து, ஏதோ ஒரு ரிபேர் செய்யவேண்டும் என்பார். அப்பொழுது ஃபோர்மென் "வண்டியை விட்டுவிட்டுப் போ, அடுத்த வண்டியை எடுத்துக் கொள்' என்று சொல்வார். இது தான் 84 சதவீதம் எஃபிஷியன்ஸியாக இருக்கிறதே தவிர, 'ரிபேர்' உடனுக்குடன் கவனிக்கப்படுகிறதா என்று தெரியவில்லை. 'ரிப்பேர்' செய்வதிலேதான் எஃபிஷியன்ஸி இருக்கவேண்டும். 12 மணிக்கு ஒரு மணி நேரம் தான் பஸ் ஓடும் என்பது எஃபிஷியன்ஸி ஆகாது. எஃபிஷியன்ஸி ஏற்பட்டு, லாபம் வரவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? கண்டக்டர்களுக்கு ஒரு உற்சாகத்தை உண்டாக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு பஸ்ஸில் ரூ. 200 வருகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த ரூ. 200-க்கு மேல் ஒரு கண்டக்டர் வசூல் செய்தார் என்றால், 200-க்கும் மேல் வரும் பத்து பத்து ரூபாய்க்கும் ஏதாவது ஒரு தொகை இன்சென்டிவ் ஆக கண்டக்டருக்குக் கொடுக்க வேண்டும். கண்டக்டருக்கு ஊக்கம் கொடுத்து, ட்ரான்ஸ்போர்ட் ஓர்க்ஷாப்பிலே மெயின்டினென்ஸ் பண்ணுகிற இடத்தில் கண்காணிப்பும் இருந்தால், நஷ்டமே வராது.

நெட் ஏர்னிங் பெர் மைல் 16 ந.பை. நஷ்டம் என்று கணக்குக் காட்டப்படுகிறது. ஒரு மைலில் வரக்கூடிய வருமானத்தில் 16 ந.பை. நஷ்டம் என்று கணக்குக் காட்டுகிறார்கள். இதற்கான

காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். இலாக்காவிலே போர்மென் இன்ஜினீர் என்று போர்டுதான் இருக்கும். பஸ் கண்காணிப்பைப்பற்றிச் சொல்ல முடியாது. அது ஒரு மூலையில் நிற்கும். 'அடுத்த வண்டியை எடுத்துக்கொண்டு போ' என்று சொல்வார் போர்மென். கண்காணிப்பு செய்யப்பட வேண்டிய வண்டியில் கை வைப்பதே இல்லை. எந்த போர்மென் கீழே படுத்து வேலை செய்கிறார்? எந்த போர்மென் வண்டியை ரிபேர் பார்க்கிறார்? எந்த டைரக்டர் லாக் ஷீட்டை செக் பண்ணுகிறார்? ஏற்கனவே பார்த்தார்கள். எக்ஸ்பிரஸ் பஸ்ஸாகட்டும், ஸிட்டி பஸ்ஸாகட்டும், யார் லாக் ஷீட்டைப் பார்க்கிறார்? என்ன டிஃபெக்ட் இருக்கிறது என்று யார் பார்க்கிறார்? போர்மென் பார்க்கிறாரா? இன்ஜினீர் பார்க்கிறாரா? எந்த டைரக்டர் பார்க்கிறார்? யாரும் தொடுவது இல்லை. எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் நான் தஞ்சாவூரிலிருந்து திண்டிவனம் வரை பிரயாணம் செய்தேன். அது லைட் இல்லாமல் வருகிறது. ஆக, இன்எஃபிஷியன்ஸிதான் இருக்கிறது. இன்எஃபிஷியன்ஸி காரணமாகத்தான் நஷ்டம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. தோ. மு. நல்லசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தங்களுடைய கருத்தைச் சற்று தீவிரமாகவே தெரிவித்தார்கள். நாமெல்லாம் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக இந்தத் தேசியமயமாக்கப்பட்ட பஸ் போக்குவரத்தைக் கவனித்து வந்திருக்கிறோம். 1957-58-ம் ஆண்டில் 526 பஸ்களைக் கொண்டு இயங்க ஆரம்பித்த இந்த இலாகா இப்பொழுது கிட்டத்தட்ட 960 பஸ்களைக் கொண்டு இயங்கி வருகிறது. எல்லாத் துறைகளிலும் நாம் கவனம் செலுத்தி வந்திருக்கிறோம்.

நம்முடைய சட்டசபையினுடைய பிரதிநிதித்துவம் வாய்ந்த கமிட்டியாக உள்ள எஸ்டிமேட்ஸ் கமிட்டியானது தேசீயமயமாக்கப்பட்ட இந்த இலாகாவை அவ்வப்போது பார்வையிட்டு, அங்குள்ள குறைபாடுகளையெல்லாம் கண்டறிந்து, தொகுத்து, அது சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு அனுப்பியிருந்தது. அதற்குரிய பதில்களும் இலாகாவிலிருந்து வருவதோடு மட்டுமல்லாமல், கமிட்டியின் சிபார்சுகளை அமுல் படுத்துவதற்கும் அந்த இலாகா நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. அதையெல்லாம் பார்த்த வரைக்கும், இந்த இலாகா எங்கெங்கு எல்லாம் தவறு செய்வதாக எடுத்துச் சொல்லப்பட்டதோ, அதையெல்லாம் நிவர்த்தி செய்து வந்திருக்கிறது.

குறிப்பாக, இந்த இலாகாவுக்கு ஒரு ஐ.ஏ.எஸ். 'கேடர்' இல் உள்ள அதிகாரி ஒருவரைத் தலைவராகப் போடவேண்டும் என்று எஸ்டிமேட்ஸ் கமிட்டி சிபார்சு செய்திருந்தது. அந்தச் சிபார்சை

ஏற்றுக்கொண்டு கடந்த மூன்று, நான்கு ஆண்டுகாலமாக ஒரு அதிகாரியைப் போட்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக காரியங்களும் நன்கு நடந்து வருவதை இங்குள்ள அங்கத்தினர்கள் எல்லோரும் அறிவார்கள். கமர்ஷியல் பட்ஜட்டாக வைத்துப் பார்த்தால் இதில் நஷ்டம் வருகிறதே என்பதைப் பற்றிச் சிலர் சொன்னார்கள். ஏற்கனவே தனியார் துறையில் பஸ் கட்டணங்களை உயர்த்தியபோது நாம் பஸ் கட்டணங்களை உயர்த்த முன்வரவில்லை. அதுமட்டும் அல்லாமல் எந்த எந்த ரூட்டுகளில் பஸ்களை விட வேண்டும் என்பதை சர்வே செய்வதற்காகவும், புதிய வொர்க்ஷாப்புகளை ஏற்படுத்துவதற்காகவும், இன்னும் பொதுமக்களுடைய வசதிகளையும், தொழிலாளர்களுடைய வசதிகளையும் பெருக்குவதற்காகவும் நாம் அதிகச் செலவை மேற்கொண்டிருக்கிறோம். அதோடு சாதாரணமாக 1947-48-இல் ஒரு பஸ்ஸை ஓட்டுவதற்கு 60 நயா பைஸா செலவாயிற்று என்று சொன்னால் 1963-64-ஆம் ஆண்டில் 154 பைசா வரை செலவு உயர்ந்திருக்கிறது. அதே மாதிரி வருமானம் உயர்ந்து இருக்கிறது என்றாலும் செலவினங்கள் பலவகையில் அதிகரித்திருக்கிறது. அதனால் தான் நமக்கு அத்துறையில் நஷ்டம் வந்திருக்கிறது. ஆனால் எஸ்டிமேட்ஸ் கமிட்டி போய் பார்த்து வந்த பிறகு, என்ன என்ன குறைகள் சுட்டிக்காட்டப்பட்டவோ அவை எல்லாம் நிவர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், எபிஷியன்ஸி 85 சத வீதம் ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்றே என்னைப் போன்றவர்கள் கருதுகிறார்கள். மொத்தம் 960 பஸ்கள் இருக்கின்றன என்றால் அதில் 750 பஸ்கள் ஓடுகின்றன. இதிலிருந்து வொர்க்ஷாப் எபிஷியன்ஸி அதிகரித்திருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

தனியார் துறையை எடுத்துக்கொண்டால் அவர்கள் சில ஆண்டுகள் பஸ்கள் ஓடினவுடனேயே மாற்றிவிடுகிறார்கள். குறிப்பாக ஆண்டுதோறும் 40 சதவீதம் 50 சதவீதம் பஸ்ஸை புதுப்பிப்பது என்ற கொள்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் செலவு குறைகிறது. அப்படி நாமும் புதுப்பிக்கிறோம் என்றாலும் அந்த அளவு 6-ல் ஒரு பங்கு தான். அது நமது கொள்கையாக இருந்து வருகின்றது. சில காலம் ஓடின உடனே பஸ்களை மாற்றுவது தான் நல்லது. அப்படி மாற்றுகிறபோது கூட நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இந்த பஸ்களை பள்ளிக்கூடங்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

திரு. கிருஷ்ணமூர்த்தி பேசும்போது வொர்க்ஷாப் எபிஷியன்ஸியை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அது பற்றிக் கூட நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே அதிகமான ஸ்கில்டு பீப்பிள் இல்லை. ஒருக்கால் அரசாங்கத்தில் வேலை செய்வதால் கிடைக்கும் ஊதியத்தைவிட தனியார் துறையில் வேலை செய்கிறபோது அதிகம் கிடைக்கிறது என்பதனால் இங்கே வேலைக்கு வர முன்னுக்கு வருவதில்லை என்று நினைக்கிறேன். நாம் பல தொழிற்பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்து

கிறோம். பலருக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். ஆகவே படித்து முடிந்தவுடன் இத்தனை ஆண்டு காலமாவது அரசாங்க டிரான்ஸ்போர்ட் இலாகாவில் வேலை செய்ய வேண்டுமென்ற ஒரு கட்டுப்பாட்டையாவது கொண்டுவரலாமென்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

டிராபிக் இன்வெஸ்டிகேஷன் என்ற பிரிவின் கீழ் அதிகம் செலவிடப்படுகிறது. இது அவசியமானதுதான். இவர்களுடைய ஆராய்ச்சியின் பலனை இன்னும் எந்த எந்த இடங்களுக்கு எல்லாம் பஸ் விடவேண்டுமோ அதை எல்லாம் விட முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் நகர பஸ்களில் ஏறுகிறவர்களுடைய சௌகரியத்தை அதிகப்படுத்தவேண்டும். இப்போது ஸ்டாண்டிங் கண்டெக்டர்கள் போடப்படுகிறது என்றாலும் பின்னே வருகிறவர்கள் முன்னே ஏறுகிறார்கள். முன்னே வருகிறவர்கள் ஏற முடியாது தவிக்கிறார்கள். இப்படியின்றி வருகிறவர்கள் அப்படி அப்படியே க்யூ வரிசையில் நின்று ஏறுவதற்கு வசதியான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் மொபசல் பஸ்கள் சம்பந்தப்பட்ட வரை கெஜெடெட் ஆபீசர்கள், எம்.எல்.ஏ.-க்கள் ஆகியவர்கள் மக்களுக்கு நலன் செய்வதற்காகவே சில சமயம் பிரயாணம் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. அப்போதெல்லாம் இவர்களுக்கும் மற்றவர்களைப் போல் க்யூவில் நின்று டிக்கெட் வாங்கி ஏற வேண்டுமென்றால் அவர்கள் எடுத்துக்கொண்ட வேலையை குறிப்பிட்ட காலத்தில் செய்ய முடியாது போகும். ஆகவே இவர்களுக்கு மட்டுமாவது முன்னால் சொல்லி அனுப்பினால்—க்யூ வரிசையில் நிற்காமலேயே டிக்கெட் கொடுக்க வழி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சர்க்கார் பஸ்களை ஓட்டக்கூடியவர்களுக்கு டிரைவிங் மானர்ஸ் பயிற்சி அளிக்கவேண்டும். சிலர் ரொம்ப வேகமாக ஓட்டுகிறார்கள். இவர்களுக்கு பஸ்களை ஓட்டுவதில் ஒரு ஒழுங்கு, ஒரு கட்டுப்பாடு உண்டாகும் வண்ணம் நல்ல பயிற்சி அளிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பேசும்போது ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது அமைச்சர் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சார்ஜை உயர்த்த வேண்டும் என்று சொன்னார்கள். அயல் நாட்டோடு ஒப்பிட்டுச் சொன்னார்கள். இன்றைய தினம் மதுரையில் ஓடக்கூடிய நகர டிரான்ஸ்போர்ட்டில் நாம் மினிமம் என்று வைத்திருக்கிற 7 நயா பைசா அளவுக்குக் கூட உயர்த்தவில்லை. இன்னும் அவர்கள் 6 நயா பைசாதான் வைத்திருக்கிறார்கள். மிக்க அருமையாக நடத்துகிறார்கள். நம்முடைய டிரான்ஸ்போர்ட்டுக்கு வந்துள்ளதைப்போல அவர்களுக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. அவர்கள் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லாது

இருக்கும்போது சென்னை நகரத்தில் மட்டும் நாம் ஏன் உயர்த்த வேண்டும் என்பது எங்களுக்குப் புரியவில்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சென்னையில் 50 ரூட்டுகளுக்கு மேல் அன்எகனமிகலாக இருக்கிறது. நாம் லாபத்தை மட்டும் கருதினால் அந்த ரூட்டுகளில் பஸ் விட முடியாது. அதனால் தான் நஷ்டம் வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதைத் தவிர பீக் அவர் சர்வீஸ், ஷட்டில் சர்வீஸ் எல்லாம் இருக்கிறது. நான் கொடுத்த அறிக்கையில் 6-ஆவது பக்கத்தைப் பார்த்தால் விளங்கும்.

திரு. செ. மாதவன்: மதுரையிலும் கூட பீக் அவர் சர்வீஸ் இருக்கிறது. அங்கே ஒரு பஸ்ஸுக்கு இரண்டு கண்டெக்டர்கள் கூடப் போடுகிறார்கள். அதுபோல இங்கும் போட்டால் பொது மக்களுக்கு அதிக வசதி ஏற்படும். மேலும் இங்கே டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கு ரெஸ்ட் ஹவுஸ் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அதுபற்றி தொழிலாளர்கள் கோரிக்கை எழுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் இதுவரை கவனித்ததாகத் தெரியவில்லை. லாங் ரூட் பஸ்ஸைப் பற்றிச் சொன்னார்கள். இதில் ஸ்டேஜ் என்று பிக்ஸ் பண்ணுகிறார்கள். குறிப்பாக காரைக்குடியில் இருந்து சிவகங்கைக்குப் போகவேண்டுமென்றால் ஒருவர் மானாமதுரைக்கு டிக்கெட் எடுத்துக்கொள்ளவேண்டும். அது ஒரு ஸ்டேஜ். அது போல மானாமதுரையில் இருந்து சிவகங்கை வரக்கூடியவர் சருகனிக்கு டிக்கெட் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறபோது அவ்வாறு பிரயாணம் செய்கிறவர்கள் அதிக சார்ஜ் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது ஸ்டேஜ் என்று நிர்ணயிப்பதனால் ஏற்படக்கூடிய குறை. இந்தமாதிரியான குறைகளையும் நீக்க முயற்சி செய்ய வேண்டும்.

இன்னும் எனக்குத் தெரிந்தவரையில் லாங் ரூட்டுகளில் மேலை நாடுகளில் இரண்டு டிரைவர்களை கண்டெக்டராகவும், டிரைவராகவும் போடுகிறார்கள். அதன் காரணமாக ஒரு நூறு மைல்களுக்கு ஒரு தடவை டிரைவர் கண்டெக்டராகவும் கண்டெக்டர் டிரைவராகவும் மாற்றிக்கொள்ள வசதி ஏற்படுகிறது. இதனால் விபத்துகள் தவிர்க்கப்படும். மேலும் மேல்நாடுகளிலும் கூட ஸ்டாண்டிங் பாசஞ்சர் அனுமதிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே பஸ்கள் அகலமாக இருக்கலாம். ஆனால் இங்கே அகலம் குறைவாக இருப்பதனால் ஸ்டாண்டிங் பாசஞ்சர்ஸ் அனுமதிப்பதால் பல தொந்தரவுகள் வருகின்றன. அதையும் சிந்திக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் கண்டக்டர்களுக்கும் கஷ்டமாக இருக்கிறது; டிரைவர்களுக்கும் கஷ்டமாக இருக்கிறது; பிரயாணிகளுக்கும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இதைத் தடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். 12-30 p.m.

நாஷனலைஸ்டு டிரான்ஸ்போர்ட் பற்றி எதிர்க்கட்சியின் சார்பில் குறை சொல்லும்போது அமைப்பு முறை சரியாக இல்லையென்ற அளவிலே குறை சொல்கிறோம் என்று எடுத்துக் கொள்ளவேண்டும். நாஷனலைசேஷன் கூடாது என்று சொல்வதாகக் கருதி விடக்

[திரு. செ. மாதவன்] [13th March 1964

கூடாது. இன்றைக்கு நாட்டிலே இருக்கும் கருத்து சர்க்கார் நடத்தும் பஸ் நிர்வாகத்திலே நஷ்டம் ஏற்படுகிறது என்பதாகும். இந்த நிர்வாகம் ஊழல் நிறைந்த நிர்வாகமாக இருக்கிறதென்ற நிலை ஏற்பட்டுவிட்டால் இப்படிப்பட்ட ஒரு கொள்கைக்கே நம் நாட்டிலே எதிர்ப்பு உருவாகிவிடும் என்ற அச்சத்தின் காரணமாக, சர்க்கார் நடத்தும் பஸ் நிர்வாகம் நல்ல முறையில் அமையவேண்டுமென்று எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இத்தனை மைல்களுக்கு மேல் இருக்கிற ரூட்டுகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் என்று சொல்கிறார்கள். பஸ்களைத் தேசியமயமாக்கும் கொள்கையில் சர்க்கார் அஞ்சுகிறது என்று நான் கூற விரும்புகிறேன். பஸ் முதலாளிகளின் ஆதரவைச் சர்க்கார் பெற நினைக்கிறது என்று மக்கள் கருதுகிறார்கள். இதை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது கோபப்படுவதிலே பயன் இல்லை. காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு கொடுக்கிற பஸ் முதலாளிகள் சட்ட மன்ற உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டுமென்றால் சர்க்கார் தேசியமயமாக்கும் கொள்கையை விரைவாகச் செயல்படச் செய்யவேண்டும். நான் சர்க்காருக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். தற்போது 125 மைலுக்கு மேல் உள்ள ரூட்டுகளை லாங் ரூட் என்று சொல்லி சர்க்கார் எடுத்துக் கொள்கிறார்கள். அதை மாற்றி 75 மைலுக்கு மேற்பட்ட ரூட்டுகளை லாங் ரூட் என்று மாற்றி அந்த ரூட்டுகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ பஸ் முதலாளிகள் எல்லாம் காங்கிரஸுக்கு ஆதரவாக இருக்கின்ற காரணத்தால்தான் இந்த அரசாங்கம் பஸ் தொழில் முழுவதையும் தேசியமயமாக்காமல் இருக்கிறது என்று கூறினார். இந்தப் பிரச்சினையைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் பல முறை இந்தச் சட்ட மன்றத்திலே விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எல்லா பஸ்களையும் ஒரே காலத்தில் அரசாங்கம் எடுத்துக் கொண்டால் எல்லோருக்கும் நஷ்ட ஈடு கொடுப்பதற்குப் பணம் இல்லையென்ற காரணத்தால் அரசாங்கம் படிப்படியாக தேசியமயமாக்கும் கொள்கையை அமல்படுத்தி வரும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் சொத்தில் கை வைக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய சுதந்திராக் கட்சியுடன் நட்பு வைத்திருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வார்த்தையைச் சொல்லக்கூடாது என்று ஆணித்தரமாகக் கூற விரும்புகிறேன். ஒரு பக்கத்தில் தனிப்பட்டவர்கள் மட்டுமே வாழவேண்டுமென்ற கொள்கையைக் கொண்டுள்ள சுதந்திராக் கட்சியுடன் கூட்டு வைத்துக் கொண்டு மற்றொரு பக்கம் மக்களை ஏமாற்றுவதற்காக தேசியமயமாக்கவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

13th March 1964] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

நம்முடைய டிரான்ஸ்போர்ட் இலாகாவைப் பொறுத்தவரை கடந்த 10, 18 ஆண்டுகளில் எந்தவிதக் கட்டண உயர்வும் செய்யாமல் 1 கோடி 64 லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது, அது பாராட்டக்கூடியதாகும். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் லாபம் இல்லாமல் இருக்கிறது. தனிப்பட்ட பஸ் முதலாளிகள், கண்டக்டர்கள், டிரைவர்கள் ஆகியோருக்கு தினக் கூலி கொடுத்து வருகிறார்கள். ஆனால் அரசாங்கம் நடத்தும் பஸ்களில் வேலை செய்கிற கண்டக்டர்களுக்கும், டிரைவர்களுக்கும் வரக் கூடிய லாபத்திலிருந்து 50 சதவிகிதத்தை அவர்களுக்கே பிரித்துக் கொடுக்கிறோம். தொழிலாள மக்களை வாழ்விக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நாம் டிரான்ஸ்போர்ட்டை நடத்துகிற காரணத்தால்தான் நமக்குக் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே தவிர மற்றப்படி நல்ல முறையில் நடந்து கொண்டு வருகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : 'ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்'. வருகிற லாபத்திலே 50 பர்சன்டை தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறோம் என்று கனம் அங்கத்தினர் சொன்னார்கள். எந்த இடத்தில் எவ்வாறு அது பிரித்துக் கொடுக்கப்படுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த லாபத்திலிருந்துதான் சர்க்கார் கல்வி வசதி கொடுக்கிறது; மருத்துவ வசதி கொடுக்கிறது; என்று எடுத்துக் கொள்ளவேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் அமைச்சர் அவர்கள் நல்லமுறையிலே பதில் கொடுத்து விட்டார்கள். இன்றையதினம் இருக்கின்ற சூழ்நிலையில் தனியார் நடத்துகிற எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கும் நாம் நடத்துகிற எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. அரசாங்கம் விடுகிற எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் சீட் வசதி நன்றாக இருக்கிறது. தூரமான இடங்களுக்குப் பிரயாணம் செய்பவர்களுக்குத் தகுந்த வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. 200, 300 மைல்களுக்கு மேற்பட்ட இடங்களுக்கும் அரசாங்கம் எக்ஸ்பிரஸ் பஸ் விட முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய சென்னையில் அரசாங்க பஸ் ஓடுகின்றது. மதுரையிலும் தனியார் துறையிலே பஸ் ஓடுகின்றது. மதுரை மாநகர மக்கள் தாய்க்குலத்திற்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பஸ்ஸில் பெண்கள் ஏறினால் ஆண்கள் எழுந்து பெண்கள் உட்கார இடம் கொடுக்கிறார்கள். ஆனால் சென்னையிலோ பெண்கள் பஸ்ஸில் ஏறி மேலே கம்பியைப் பிடித்துக்கொண்டு பரிதாபத்துடன் நிற்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. கண்டக்டரிடம் சொன்னால் 'நீங்கள் நிற்பது என்றால் நில்லுங்கள்; இல்லையென்றால் இறங்கிவிடுங்கள்' என்று சொல்லி விடுகிறார்கள். அதோடு பெண்கள் நிற்கிற பக்கமாக ஆண்களும் அதிகமாகச் சேர்ந்து நிற்கிறார்கள். எப்படி

மதுரையிலே பெண்களுக்காக ஒரு பஸ்ஸிலுள்ள பாதி சீட்டுகளை ஒதுக்கியிருக்கிறார்களோ அதே போன்று சென்னையிலும் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு சில கண்டக்டர்கள் பொது மக்களிடத்திலே மரியாதைக் குறைவாக நடந்து கொள்கிறார்கள்; மரியாதைக் குறைவாகப் பேசுகிறார்கள். மரியாதை வாரம் என்று போட்டு அவர்கள் பிரயாணிகளிடத்திலே எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்ற முறைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எ. சுவாமிதாஸ் :** மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, சென்னை அரசாங்க போக்குவரத்துத் துறையினரால் நடத்தப்படுகின்ற பஸ் போக்குவரத்து இப்போது நஷ்டத்தில் ஓடுகிறது என்றாலும் பொதுவாகப் பார்க்கிறபோது அது பொது மக்களுக்கு நல்ல முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் லாபமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அங்கு ஸ்டாண்டிங் சிஸ்டம் கிடையாது. இருப்பினும் லாபமாக ஓடிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நாங்கள் பெருமைப்படுகிறோம். இதை இன்னும் லாபமாக ஓட்ட முடியும் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அங்கிருக்கிற ஒரு சில குறைகளை மட்டும் இந்த சபையில் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். பஸ்கள் நல்லமுறையில் செயல்படவேண்டுமென்றால் மெக்கானிக்கல் ஸ்டாப் நன்கு ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் ஒத்துழைப்பு இருந்தால்தான் பஸ்கள் நல்லபடி இயங்க முடியும். பஸ்கள் லைனில் ஓடிக் கொண்டிருக்கின்றன. அப்படி ஓடிக் கொண்டிருக்கும்போது இயந்திரத்தில் என்னென்ன கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று கவனித்து பழுது பார்க்க டிரைவர் லாக் ஷீட்டில் எழுதிப் போட்டு விடுகிறார். அடுத்த நாள் அது ஆப்பரேஷனுக்கு வரும்போது நல்லமுறையில் அது பழுது பார்க்கப்பட்டிருக்கிறதா என்றால் பொதுவாக ட்ரைவர்கள் சொல்வது அப்படி பார்ப்பதில்லை என்பதுதான். அதற்கான காரணங்கள் என்னவென்று பார்க்கவேண்டும்.

களம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதேபோல் நான் விசாரித்ததில் மெக்கானிக்ஸ் என்ன சொல்கிறார்கள் என்றால் ட்ரைவர்கள் வண்டிகளைக் கொண்டு வந்து விட வேண்டுமென்று எங்கள் பேரில் தப்பு சொல்லி விட்டு விட்டுப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். கஷ்டமாகத்தான் இருக்கிறது. எது நிஜம் என்று புரியவில்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ் : மெக்கானிக்கல் ஸ்டாப்பை பல க்ரூப்புக்களாக பிரிக்கவேண்டும். ஒரு க்ரூப்பிற்கு 20 வண்டி என்று வைத்து அந்தக் க்ரூப்தான் அந்த வண்டிகளை பழுது பார்க்க வேண்டும் என்றிருந்தால் வண்டிகளுக்குள்ள முழுப் பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் பேரில் உள்ள பொறுப்பை இன்னொருவர் பேரில் மாற்றிவிட முடியாது. ட்ரைவர்களுக்கும் குறிப்பிட்ட எண் உள்ள வண்டியை தொடர்பாக கொடுத்துக்கொண்டிருந்தால் அவர்களும் வண்டிகளை ஒழுங்காக வைத்துக் கொள்ள முடியும். ட்ரைவர்களுக்கு இப்போது கொடுக்கப்படும் சம்பளம் போதாது. அவர்கள் குறைகளைக் கவனிக்க வேண்டும். நான் அதிகமாகப் பஸ்ஸில் போகிறவன், ஆகவே அவர்கள் குறைகள் எனக்குத் தெரியும். இன்று லாரி ஓட்டிச் சென்றால் சராசரி 7 முதல் 10 ரூபாய் வரை சம்பாதிக்க முடிகிறது. டாக்ஸி ட்ரைவர்களும், நான் விசாரித்ததில், குறைந்தது ஏழு ரூபாய் சம்பாதித்து விடுகிறார்கள். டீஸல் வண்டியை ஓட்டும் ட்ரைவர்களுக்கு சிரமம் அதிகம் இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டும். இப்போது சம்பளம், அலவன்ஸ் எல்லாம் சேர்ந்து 105 ரூபாய்தான் கிடைக்கிறது என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அது போதாது. குறைந்தது 150 ரூபாய் சம்பளம் என்று இருந்தால் நல்லது. தினப்படி 1½ ரூபாய் இருக்கிறது. அதில் நாலணா பிடித்து விடுகிறார்கள். இந்த தினப்படி 1½ ரூபாய் உடனடி அவர்களுக்கு கிடைக்க வசதி செய்ய வேண்டும், அப்படியிருந்தால்தான் அவர்கள் போகிற இடத்தில் காப்பியோ வேறு உணவோ சாப்பிட்டுவிட்டு போக முடியும். விபத்துக்களைத் தடுக்க வேண்டுமென்றால், இந்த ரன்னிங் டைமை சீர்படுத்தவேண்டும். வண்டியில் ஏறுவதற்குள் வேகமாக வண்டியை எடுக்க முன்வருகிறார்கள். காரணம் என்னவென்று கேட்டால், ரன்னிங் டைம் குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். கன்னியாகுமரியில் குளச்சல் ரூட்டில் எல்லா ட்ரைவர்களும் அதைத்தான் சொல்கிறார்கள். ரன்னிங் டைம் போதாது என்று சொல்லி வண்டிகளை வேகமாக ஓட்ட வேண்டியிருக்கிறது. பிந்திப் போனால் காரணம் கேட்கிறார்கள். குறிப்பிட்ட நேரத்தில் ஏன் வரவில்லை என்று காரணம் கேட்கிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள். ஆகவே வேகமாக ஓட்ட வேண்டியிருக்கிறது அவர்களுக்கு. அதன் காரணமாக பிரயாணிகளை சரியாக ஏற்றிச் செல்ல முடியாமல் இருக்கிறது. பிரயாணிகள் பஸ்ஸில் காலை எடுத்து வைத்தவுடன் விசில் ஊதி விடுகிறார்கள், அதனால் பலர் கீழே விழ ஏதுவாகிறது. ஆகவே இந்த ரன்னிங் டைமை அட்ஜஸ்ட் செய்யவேண்டும். திரு.-கொச்சியிலிருந்து சென்னையோடு இந்த இலாகா இணைந்த பிறகு திரு.-கொச்சி அரசினரால் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ட்ரைவர்கள், கண்டக்டர்கள், இதர பணியாளர்கள் இவர்களுக்கு அன்று கொடுத்த சம்பளம்தான் இன்றும் கொடுக்கப்பட்டு வருகிறது. அது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. அங்குள்ள காங்கிரஸ் சார்புள்ள யூனியன் அது குறித்து ஒரு மெமோராண்டம் கொடுத்திருக்கிறார்கள். அதை சரியாகப் படித்துப் பார்த்து அக்குறைகளையும் நீக்கிவிட்டால் ஓரளவு இன்னும் அதிக லாபத்தில் நன்முறையில் இந்த இலாகா செயல்பட வாய்ப்பளிக்கும் என்று கூறிக் கொள்கிறேன். பாடி கட்டும் தொழில் கன்னியாகுமரியிலும் புகுத்தியிருக்கிறார்கள். இரண்டு பஸ்கள் கட்டி முடித்திருக்கிறார்கள். சென்னையில் க்ரோம்பேட்டையில் கட்டும் பாடிக்கும், கன்னியாகுமரி

தொழிற்சாலையில் கட்டுவதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது, செலவில் என்ன வேறுபாடு என்று விசாரித்ததில் நாகர்கோவிலில் கட்டுவதற்கு 1,000 ரூபாய்க்கு மேல் லாபம் வருகிறது என்று சொன்னார்கள். பினிஷிங்கும் அங்கு நன்றாகயிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே அந்தத் தொழிற்சாலையை விரிவடையச் செய்தால் இன்னும் அதிக லாபம் ஏற்படும். பொதுவாக, இந்த இலாகா நல்லமுறையில், நன்றாக இயங்கிக் கொண்டு வருகிறது. இதை எங்கள் பகுதியில் இன்னும் விரிவடையச் செய்யலாம். திருநெல்வேலி மாவட்ட மக்கள் எங்களுக்கும் அரசாங்க பஸ் இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கெல்லாம் பஸ் வசதி செய்துகொடுக்க எங்கள் பகுதியில் இருப்பதை விஸ்தரித்தால் அவர்களுக்கும் உதவியாக இருக்கும், அவர்களுக்கும் அப்படி உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்க பஸ்கள் ஓடுகிற இடங்களில் உள்ள ரோடுகள் மோசமாக இருக்கின்றன. அதை நெடுஞ்சாலை இலாகாவினர் செப்பனிட்டுக் கொடுத்தால் பஸ்களுக்கு ஏற்படுகிற பழுது குறையும். எங்கள் பகுதியில் புது ரூட்கள் பல தொடங்கியிருக்கிறார்கள். அந்த ரூட்டுகளை பார்த்தால் பரிதாபமாகயிருக்கும். ட்ரைவர்கள் வண்டிகளை சீராக ஓட்ட முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே நெடுஞ்சாலை இலாகா இந்த இலாகாவோடு ஒத்துழைத்தால் வருமானத்தை பெருக்கிக் கொள்ள வசதியாக இருக்கும். அதேபோல் ஆர்.டி.ஓ. இலாகாவினரும் இந்த இலாகாவோடு ஒத்துழைக்க வேண்டும். கண்டக்டர்கள், ட்ரைவர்கள் இவர்களுக்கு கொடுக்கப்படுகிற சம்பளம் அலவன்ஸ் போன்றவைகளை கூட்டிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. மதராசில் ட்ரைவர்கள், கண்டக்டர்கள் வீடு இன்றி கஷ்டப்படுகிறார்கள். அதை முதல் பிரச்னையாக எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு எவ்வளவு தூரம் வசதி செய்து கொடுக்கமுடியுமோ அப்படிச் செய்து கொடுப்பதினால் அவர்கள் உற்சாகமாக பொது மக்களோடு தொடர்பு கொண்டு நன்கு பணியாற்ற முடியும். மதுரையில் எக்ஸ்பிரஸ் பஸ் பிரயாணிகளுக்கு தங்க வசதியில்லை. அங்கு வேலை பார்க்கும் ஊழியர்களுக்கும் வசதியில்லை. தண்ணீர் வசதி கூட இல்லை. நில ஆர்ஜிதம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது என்று அறிக்கையில் பார்த்தேன். அதையும் செய்து கொடுக்கவேண்டும். திருச்சியில் ட்ரைவர்கள், கண்டக்டர்கள் தங்க விடுதியில் இடம் கொடுப்பதில்லையாம். அவர்கள் கடையோரத்தில் தங்க வேண்டியிருக்கிறது. நல்ல பஸ் ஸ்டாண்ட் கட்டியிருக்கிறோம். பஸ் கண்டக்டர்களுக்கும், ட்ரைவர்களுக்கும் தங்க வசதி செய்து கொக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இராம. அரங்கண்ணல்**: தலைவர் அவர்களே, சகோதரியார் பொன்னம்மாள் பேசிய நேரத்தில் சுதந்திராக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே ஏற்பட்டிருக்கிற தொடர்பு பற்றி எடுத்துச் சொன்னார்கள். தமிழில் தொடர்பு, உறவு, ஒன்றாக இருத்தல் என்று பல பதங்கள் உண்டு. திராவிட

முன்னேற்றக்கழகத்துக்கும் சுதந்திராவுக்குமுள்ளது தொடர்பு. எங்கள் தலைவர் அவர்கள் இதுபற்றி ஏற்கனவே நல்ல விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். சில பேர்களுக்கு சில விஷயங்கள் சொன்னவுடனே புரியும். சில பேர்களுக்கு புரிவதற்கு கொஞ்ச காலமாகும். இன்னும் சிலருக்கு என்ன சொன்னாலும் புரியாது! அது அவர்கள் குற்றமே தவிர 'எங்களின் குற்றமல்ல!! தேசியமயமாக்குகின்ற கொள்கையைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட பல நாட்களாக வலியுறுத்திக் கொண்டு வருவது எல்லா உடைமைகளையும் தேசியமயமாக்க வேண்டுமென்பதாகும். நம் அமைச்சர் அவர்கள் கூட நான் ஒரு பெரிய முதலாளி என்று சொல்லி ஆனந்தப்பட்டார்கள். அவர்கள் இன்னும் பெரிய முதலாளி ஆகவேண்டும் என்பதுதான் நம் ஆசையாகும். ஆனால் அவர்கள் கட்சியைச் சார்ந்த டாக்டர் நடராஜன் பேசிய நேரத்திலும், இன்னும் ஒரு உறுப்பினர் பேசிய நேரத்திலும் பெரிய பஸ் முதலாளிகள் பஸ் ரூட்களை எல்லாம் 'சரண்டர்' செய்துவிடுவதாக அவர்களுக்காக அனுதாப்பபட்டு, பஸ் நடத்துகிறவர்கள் சிரமத்திற்கு ஆளாகிறார்கள் என்று அவர்கள் வருத்தத்தை இவர்கள் தெரிவித்தார்கள். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் அப்படி வருத்தத்தைத் தெரிவிப்பதும், முதலாளிகளுக்காக பரிந்து பேசுவதுமான போக்கினைக் காண்கிற நோக்கில் அரசாங்கம் சொல்கிற சோஷியலிஸக் கொள்கையை எப்படி அவர்கள் உருவாக்கப் போகிறார்கள் என்ற ஒரு பிரச்னை எழும்புகிறது. எங்களுக்கெல்லாம் சந்தேகமும், இந்தக் கொள்கையை அவர்கள் சரியாகச் செய்வார்களா என்ற அச்சமும் உருவாகிறது. பெரிய முதலாளிகளாக இருப்பவர்கள் 'சரண்டர்' செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களைக் கொண்டே ஒரு கார்ப்பரேஷனை அதாவது திறமையாளர்கள் உள்ள நிறுவனங்களாக ஆக்கி, அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும். நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய பிரச்னை வரும் என்று சொன்னால் நஷ்டயீட்டை இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு நாங்கள் தருவோம் என்று சொல்லலாம். முதலாளிகளுக்கு எல்லாம் வேண்டுமானால் ஒரு சம்பளத்தை நிர்ணயித்து விடுவோம். கோவையில் உள்ள பெரிய பஸ் முதலாளி, மதுரையில் உள்ள பெரிய பஸ் முதலாளி என்று சொல்கிறார்களே, அவர்களைக் கொண்டு அவர்களே அந்த பஸ் நிறுவனத்தை சர்க்கார் சார்பில் நடத்தி நமக்கு லாபத்தைத் தேடித் தரட்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நம்முடைய பஸ் தொழிலைப் பொறுத்தவில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருந்தாலும், பெருமைபடக்கூடிய அளவில் இந்த தொழில் நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் துறையிலிருந்து 3 கோடி பத்து லட்சம் ரூபாய் நமக்கு நிதியாக இருந்து கொண்டிருக்கிறது. அதோடு 10 கோடி ரூபாய் அளவுக்கு இந்தத் துறையில் சொத்தாகவும் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஓரளவுக்கு இதில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் லாபத்தில் தான் பொதுவாக நமது பஸ் நிறுவனம் வேலை செய்து கொண்டிருக்கிறது என்று நாம் எல்லோரும் எடுத்துச்சொல்ல முடியும். இதில்

முக்கியமாக இந்தத் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு இருக்கின்ற சில குறைகள், சிக்கல்கள் இவைகளை எல்லாம் நல்ல முறையில் தீர்த்து வைப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் பஸ் போக்குவரத்து முறை நல்ல முறையில் இயங்கி வருவதாகவும், அதோடு இன்னும் சில வசதிகள் பெருகவேண்டும் என்பதைப் பற்றி இரண்டு தரப்பிலும் இங்கு கருத்துக்களை தெரிவித்தார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், இன்னும் சில புதிய முறைகளை கொண்டு வராமல் நாம் போக்குவரத்தை சமாளிக்க முடியாது. இன்றைக்கு வளர்ந்து வருகின்ற பஸ் போக்குவரத்தைப் பார்த்தால், இன்னும் ஐந்தாண்டுகளுக்குள் தெருவில் மனிதர்கள் நடக்கமுடியாதபடி, பஸ்களில்தான் தாண்டித் தாண்டி போகக் கூடிய அளவுக்கு இந்த பஸ் போக்குவரத்துக்கள் வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு அஞ்ச வேண்டிய நிலைமை இன்றைக்கு சென்னை மாநகரில் இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய சென்னை மாநகரத்தில் பஸ்கள் மட்டும் போதும் என்று நம்பாமல் புதிய திட்டங்களை நாம் உருவாக்க வேண்டும். அவைகளில் ஒன்று பக்கிங்காம் கால்வாயும் கூவம் ஆற்றையும் சீர்படுத்துகின்ற திட்டங்களாகும். கனம் அமைச்சர் திரு. ராமையா அவர்கள், என்னுடைய காலத்திலேயே இந்த பக்கிங்காம் கால்வாயை சீர் செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்வேன் என்று சொல்லியிருக்கிறார்கள். கூவம் ஆற்றைப் பொறுத்தவரையில் அதையும் சீர்படுத்தவேண்டும். இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றினால் போக்குவரத்தை சமாளிக்கமுடியும். அதாவது வடக்கே பக்கிங்காம் கால்வாய் நகரில் நுழையும் இடமான கொருக்குப்பேட்டையில் ஒரு பஸ் நிலையத்தை கட்ட வேண்டும், அதில் வெளியிடங்களிலிருந்து வருகின்ற பஸ்களை அங்கேயே நிறுத்தி, படகின் மூலமாகவும் நகரபஸ் துறையினர் மூலமாகவும் நகரில் தேவைப் படக்கூடிய இடங்களில் இறக்கிவிட வேண்டும். அதே போன்று கூவம் ஆற்றை சீர்படுத்தி, அமைந்தகரையில் ஒரு பஸ் நிலையத்தை அமைத்து, அங்கே வெளியூரிலிருந்து வருகின்றவர்களையும் சாமான்களையும் இறக்கி படகில் ஏற்றி நகரில் கொண்டு வந்து விடவேண்டும். அதே போல் அடையாற்றிலும் ஒரு பஸ் நிலையத்தை கட்ட வேண்டும், வெளியூரிலிருந்து வருகின்ற சரக்குகளையும் லாரிகளையும் இந்தந்த இடங்களில் நிறுத்தி நகருக்குள் கால்வாய் மூலம் கொண்டு வரலாம். மற்றுமுள்ள சாமான்களையும் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடலோரப் பகுதிகளில் இருக்கின்ற மீனவர்கள் மீன் பிடிக்கின்ற தொழிலை மட்டும் நம்பியிராமல் வேறு தொழிலையும் தேட வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ரோடை மட்டும் எதிர்பார்க்கமல் கடலோரப் பகுதிகளில் "ஸ்டீம் லாஞ்ச்" களை எல்லாம் விட்டால் போக்கு வரத்துக்கும், சாமான்களை மாவட்டவாரியாகக் கொண்டு செல்வதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே இதைப் பற்றி போக்கு வரத்துத்துறை வேண்டிய முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சென்னை நகரத்தைப் பொறுத்தளவில் பல புதிய பஸ் ஸ்டாண்டுகளை கட்டியிருக்கிறார்கள். மொபஸல் பஸ் ஸ்டாண்டைப் பொறுத்தவரை மிகவும் வருந்த வேண்டிய நிலைமை இருக்கிறது. இதை சீர்படுத்தவேண்டும் சீக்கிரமாக இதைச் செய்யவேண்டும், அல்லது நான் சொன்னது போல் அந்தந்த பகுதியில் பஸ் ஸ்டான்ட்-களை அமைத்து வெளியிலிருந்து வருகின்ற பஸ்களை உள்ளே வராதவாறு செய்யவேண்டும். நகருக்குள் சர்க்கார் பஸ்ஸை மட்டும் கொண்டு போக்குவரத்து செய்யவேண்டும். இதற்கான யோசனைகளை இலாகாவினர் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வளர்ந்து கொண்டு போகின்ற போக்குவரத்துக்கும், மக்கள் பெருக்கத்திற்கும் இருக்கின்ற இடைஞ்சலை தீர்க்க வேண்டுமென்றால் நிச்சயமாக சில புதிய முறைகளை கொண்டுவரவேண்டியது மிகவும் முக்கியம். சீர்திருத்தம் செய்வதற்கான அதிகாரிகள் பலர், ஆற்றல் படைத்தவர்கள் பலர் இந்த இலாகாவில் இருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். முக்கியமாக மயிலாப்பூரிலுள்ள ரோட்டில் பஸ்கள் நிற்கின்ற காட்சியைப் பார்த்தால், மயிலாப்பூர் மாடவீதியில் மாலை வேளையில் மக்கள் அங்கும் இங்கும் போய்க்கொண்டிருக்கின்ற நேரத்தில் வரிசை வரிசையாக பஸ்களை நிறுத்திவிடுகிறார்கள். அந்த இடத்தில் பஸ்கள் நிற்காமல் புதிதாக கட்டப்பட்டிருக்கின்ற நிலையத்தில் எல்லா பஸ்களையும் கொண்டு போய் விட்டால் நன்றாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, சென்னை நகரத்தில் பஸ்களை நிறுத்துவதற்கு இடமில்லாமல் இருக்கிறது. பாரிஸ் கார்னரை எடுத்துக்கொண்டால் அதிகமான அளவில் பஸ்கள் நின்று கொண்டிருக்கின்றன. அதை மாற்றுகின்ற முறையில் கோட்டைக்கு எதிர்புறம் கடலோரப் பகுதியில் இதற்கான வசதி செய்து இங்கிருந்து எல்லா பஸ்களும் கிளம்பக்கூடிய அளவில் மாற்றினால் நன்றாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தினை தெரிவித்துக்கொண்டு, எங்கள் கட்சியின் சார்பாக இந்த மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

***டாக்டர் பா. நடராஜன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் மீண்டும் என் நண்பர் கனம் அமைச்சர் அவர்களோடு ஒரு சண்டை போடலாம் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நான் இந்த இலாகாவில் எல்லாம் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருப்பது நல்லதல்ல என்று சொன்னதாக சொன்னார்கள். நான் சொன்னது அவர்கள் கொடுத்திருக்கின்ற கணக்கிலிருந்து தான், அந்தக் கணக்கில் லாபம் என்று காட்டியிருந்தால் லாபம் என்று சொல்லியிருப்பேன். நஷ்டம் என்று சொல்லியிருக்கிறார்கள், நானும் அதைத்தான் சொன்னேன், இதை யாரும் மறுக்க முடியாது. நான் சொன்னது நம்முடைய பட்ஜெட்டில் நெகிழ்ச்சி தரக் கூடிய இனங்கள் ஒன்றும் இல்லாமல் இருக்கிறது, ஆகவே நாம் நம்முடைய தொழில்களையும் அதன் மூலம் நம்முடைய வருமானத்தையும் பெருக்கிக்கொள்ள முயலவேண்டும்

சில ஆண்டுகளுக்கு முன்னாலே வெளி நாட்டிலிருந்து நிபுணர்கள் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் எப்படி நிர்வகிக்கப்படுகிறது, எப்படி நடைபெறுகிறது என்பதைக் கவனித்து அவர்கள் ஒரு அறிக்கை வெளியிடுவதாக இருந்தது. ஆனால் அந்த அறிக்கையை வெளியிட்டார்களா வெளியிடவில்லையா என்று தெரியவில்லை. அந்த அறிக்கை வெளி வந்திருந்தால் அந்த அறிக்கையிலே என்னென்ன ஆலோசனை கொடுத்திருக்கிறார்கள் என்று சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டைப் பொறுத்த வரையில் 1963-64-வது ஆண்டிலே 960 பஸ்கள் நம்மிடம் இருக்கும் என்று எதிர் பார்ப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே லைனில் ஓடிக்கொண்டிருக்கிற பஸ்கள் 740 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் தினசரி 220 பஸ்கள் நின்று கொண்டிருக்கிற ஒரு நிலைமை ஏற்படும் என்பதைத் தான் இந்த புள்ளிவிவரம் கூறுகிறது . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி அல்ல. ஒரு மாதத்திற்கு 10-20 பஸ் என்று சேர்த்துக்கொண்டே போகிறோம். 960 என்பது மாக்ஸிமம். எல்லா நாளும் 960 ஓடுவது என்பது கிடையாது. ஆவரேஜ் ஒரு கணக்கு கொடுத்திருக்கிறோம். அதிலே மாக்சிமம் 960 என்று கொடுத்திருக்கிறோம்.

திரு. எம். எஸ். மணி : இருந்தாலும் அந்தக் கணக்குப்படி பார்க்கும்போது தினசரி நம்முடைய ஷெட்டிலே ஏராளமான பஸ்கள் இன்றைய தினம் நின்றுகொண்டிருக்கின்றன. இப்படி நின்று கொண்டிருக்கிற காரணத்தினால் தான் நஷ்டம் ஏற்படவழியாக இருக்குமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. 7.62 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று கொடுத்திருக்கிறார்கள். இந்த நஷ்டத்தைப் பார்க்கும்போது நாங்கள் இன்றைக்கு தேசிய மயமாக்கவேண்டும் இந்தத் தொழிலை என்று சொல்லும்போது, தேசிய மயமாக்கவேண்டும் என்று சொல்லுகிறார்களே, அதற்காக ஏதாவது நஷ்டக் கணக்குக் காட்டலாமோ என்று இந்த நிர்வாகத்தை இப்படி நடத்துகிறார்களோ என்று அஞ்ச வேண்டிடிருக்கிறது. பஸ் நின்றால் நமக்கு நஷ்டம் ஏற்படும் என்பதை பஸ் முதலாளிகள் ஒத்துக்கொள்வார்கள். நம் அரசாங்க பஸ்ஸில் பரேக்-டவுன் அதிகமாக இருக்கிறது என்றால் ஏதோ புகார் கூறுவதாக அமைச்சர் எண்ணக் கூடாது. கடந்த 3—3—1964-ம் தேதி நான் வால்டாக்ஸ் ரோட்டிலிருந்து போய்க்கொண்டிருந்த போது அங்கே வால்டாக்ஸ் ரோட்டில் 636-ம் நம்பர் பஸ் ஓடாமல் நின்றுகொண்டிருந்தது. அதை விட்டு பி. ஆர். அண்ட் சன்ஸ் பக்கத்தில் ஏ-158 என்ற பஸ் ஓடாமல் நின்றுக் கொண்டிருந்தது. அதை விட்டு கிராம உத்யோக பவன் என்ற இடத்தில் ஏ-284 என்ற பஸ் நின்று அதை டிரான்ஸ்போர்டடைச் சேர்ந்தவர்கள் இழுத்துக்கொண்டு போகும் நிலையில் இருந்தது. ஒரு ரூட்டிலே மூன்று பஸ்கள் ப்ரேக்-டவுன் ஆனால் வரும் வருமானம் நஷ்டம் ஆகும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் புரிந்து கொள்

கிறோம். வருவாயை பெருக்கவேண்டுமென்று சொன்னால் கூடுமானவரையில் பஸ்கள் ப்ரேக்-டவுன் ஆகாமல் கண்காணிக்கும் பொறுப்பை இந்த இலாகா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கட்டணத்தை உயர்த்துகின்ற காரணத்தினால் மட்டும், இந்த நஷ்டத்தை சமாளித்து விடலாம் என்று கருத முடியாது. கட்டணம் உயர்த்துகின்ற காரணத்தினால், அதற்கு வேண்டிய செலவும் அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. நிர்வாகச் செலவை எவ்வளவு குறைக்கவேண்டும் என்று நாம் பார்க்க வேண்டும். நிர்வாகத்திற்காக இங்கே கூடுதலான செலவு செய்யப்படுகிறது. அதைக் குறைப்பதற்கு வழிவகைகள் காணவேண்டும். அதைக் கூடுமான வரையில் குறைத்து, அதிலே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு கூடுமான வரையிலே ஊதியத்தை உயர்த்தினால், உள்ளபடியே அவர்கள் எல்லோருக்கும் நல்லதொரு பொறுப்பு ஏற்படும். அவர்களுக்கு நம்முடைய ஸ்தாபனத்தை நல்ல முறையிலே விஸ்தரிக்கவேண்டும் என்ற ஒரு எண்ணம் ஏற்படும்.

சென்ற ஆண்டு பட்ஜெட் விவாதத்தின்போது நான் பல கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறேன். அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு சில வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று நான் தெரிவித்திருந்தேன். ஆனால், நான் எடுத்துத் தெரிவித்த கோரிக்கைகள் அத்தனையிலும், ஒன்றே ஒன்று தான் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற டிரஸ்ஸுக்கான தையல் . கூலி ரூ. 7-8-0 ஆக இருந்ததை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அது இப்பொழுது ரூ. 10 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற கோரிக்கைகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. யுத்த நெருக்கடி என்று முன்பெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இன்றைய தினம் யுத்த நெருக்கடி இல்லை. பின் ஏன் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை இன்னும் ஆரம்பிக்கவில்லை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். வீடு பக்கத்தில் இல்லாத காரணத்தினால் அவர்களுக்குப் பல வசதியின்மை ஏற்படுகிறது என்பதைத் தான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

டிரைவிங் இன்ஸ்ட்ரக்டர் என்ற பெயரிலே 16 பேர்கள் ராணுவத்தில் உள்ளவர்களுக்கு டிரைவிங் கற்றுக்கொடுப்பதற்காக அனுப்பப்பட்டார்கள். அந்த 16 பேர்களில் இப்பொழுது 6 பேர்களைத் தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 10 பேர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். டிரைவிங் இன்ஸ்ட்ரக்டர் உத்தியோகத்திற்கு சென்றவர்களுக்கு மாதம் தோறும் ரூ. 50 நஷ்டம் ஏற்படுகிறது. கிராஜுவிடியல் மூன்றில் இரண்டு பங்கு பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அட்டண்டன்ஸ் போனஸ் கிடையாது, பேட்டா கிடையாது. அவர்கள் இப்படிப்பட்ட சலுகைகளை

இழந்திருக்கிறார்கள். உயர்ந்த பதவி கிடைக்கிறது என்பதற்காகத் தான் அவர்கள் சென்றார்கள். இன்றைய தினம் 10 பேர்கள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செலக்ஷன் கிரேடு டிரைவர்களுக்கு, இரண்டு வருஷங்கள் ஆகியும் அவர்களுக்கு இன்னும் இன்கிரிமெண்டு கொடுக்கப்படவில்லை. தனியார் துறையில் இப்படிப்பட்ட நிலை இருந்தால், உள்ளபடியே உடனே நடவடிக்கை எடுத்திருப்பார்கள். நம்முடைய ஸ்தாபனம் என்ற காரணத்தினாலே இங்குள்ள தொழிலாளர்கள் ஒத்துழைக்கும் நேரத்திலே அவர்கள் விருப்பத்தையும் நாம் பூர்த்தி செய்யவேண்டும்.

பிரமோஷன் கொடுக்கிற நேரத்தில் அங்கே பல முறைகள் கையாளப் படுகின்றன. செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் டிராபிக் இன்ஸ்பெக்டர்களாக பிரமோஷன் செய்யப்படுகிறார்கள். டிராபிக் இன்ஸ்பெக்டர்களாகப் போகிறவர்களுக்குப் பரீட்சை கிடையாது. ஆனால், கண்டக்டர் செக்கிங் இன்ஸ்பெக்டர் ஆகவேண்டுமென்று சொன்னால், அதற்காக பரீட்சை வைக்கப்படுகிறது. அவர்களுடைய சர்வீஸ், தகுதி, திறமை இவைகளை வைத்துத்தான் அவர்களுக்கு பிரமோஷன் கொடுக்கப்படவேண்டும். ஆங்கிலம் தெரியாதவர்களாக இருக்கலாம். ஆனால், நல்ல முறையில் கண்டக்டராகப் பணியாற்றியிருப்பவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டால் செக்கிங் இன்ஸ்பெக்டர்களாகப் பணியாற்ற முடியும் என்பதை தனியார் துறையில் இருப்பவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். அப்படி பல ஆண்டுகள் சர்வீஸ் செய்த தொழிலாளர்களுக்கு, கூடுமானால் படித்த தொழிலாளர்களுக்கு இந்தப் பதவி உயர்வை உடனே கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, அங்கே பதவி உயர்வு விஷயத்தில் தாரதம்மியம் காட்டப்படுகிறது. சர்வீஸ் பற்றிக் கவலையில்லை, தகுதியைப் பற்றிக் கவலையில்லை, திறமையைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் தங்களுக்கு வேண்டியவர்கள் என்பதற்காக சில சலுகைகள் அங்கே அளிக்கப்படுகின்றன. அதை நிறுத்த வேண்டுமென்றுதான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கண்டக்டர்கள் பணம் கட்டுகிற நேரத்தில் அவர்கள் ஒரு மாதத்திற்கு ரூ. 5 வரையில் 'ஷார்ட்டேஜ்' காட்டலாம் என்ற ஒரு நிலைமை இருக்கிறது. அதை ரூ. 10 என்றாவது உயர்த்தவேண்டும். ஏனென்றால் அவர்கள் தினந்தோறும் எவ்வளவு பாஸெஞ்சர்களிடம் சில்லறை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது? எல்லா பாஸெஞ்சர்களும் ஒரு ரூபாய் நோட்டைத் தான் கொடுக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் ஒரே கண்டக்டர் சில்லறை கொடுக்கவேண்டியிருப்பதால், அதிலே பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. அதனால், அங்கே, இங்கே 5 நயா பைசா, 10 நயா பைசா, 2 நயா பைசா குறைகிறது. ஆகவே, இந்த 'ஷார்ட்டேஜ்' தொகையைக் குறைந்தபட்சம் ரூ. 10-ஆக ஆக்கவேண்டும். இதை

மாதச் சம்பளத்தில் பிடித்துக்கொள்கிறார்கள். அப்படி பிடித்துக் கொள்கிற நேரத்திலும் அவர்கள் மீது அதற்காக நடவடிக்கை எடுப்பது என்றால், அவர்களுடைய ஒத்துழைப்பை பெற முடியாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பொது மக்கள் யாராவது புகார் செய்தால், அதாவது உதாரணமாக பஸ் நிற்கிற இடத்தில் யாராவது வந்து ஏறினால், கண்டக்டர் இடமில்லை என்று சொன்னால், உடனே ஒரு புகார்க் கடிதம் எழுதிவிடுகிறார்கள். அம்மாதிரி உயர் அதிகாரியிடமிருந்தோ அல்லது பணக்காரர்களிடமிருந்தோ புகார் வந்தால் உடனே அங்கிருக்கிற டைரக்டர் அவர்கள் பஸ் கண்டக்டரை சஸ்பெண்டு செய்வதோ அல்லது டிஸ்மிஸ் செய்வதோ, செய்கிறார்கள். நல்ல முறையில் விசாரித்து, தவறு செய்திருந்தால் கண்டக்டர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் எந்த விதத்திலும் தடை சொல்லவில்லை. ஆனால், விசாரணை செய்து அதற்குப் பிறகு தான் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், செக்கிங் இன்ஸ்பெக்டர் வேலை விஷயமாக ஒரு சர்குலர் இருக்கிறது. மாதம் ஒன்றுக்கு 5 கேஸ்கள் பிடிக்கவேண்டும், அப்படிப் பிடிக்கவில்லையென்றால், அவர் வேலைக்கு லாயக்கு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அதற்காக ஏதாவது கண்டக்டர் மீது குற்றத்தைச் சுமத்தி கேஸ் பிடிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. கேஸ் பிடித்தால் தான் வேலை என்று சொன்னால் தவறு செய்யாவிட்டால் கூட, எப்படியாவது தவறு கண்டுபிடித்து கேஸ் போடவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. சில இடங்களில் கட்டாயமாக சாராயத்தை வாயில் ஊற்றி வழக்கு போடுவது போல் இங்கேயும் நிர்ப்பந்தம் இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

உள்ளே இருக்கிற சிப்பந்திகளுக்கு, 'ஸ்டாப்'-க்கு காஷுவல் லீவ் 12 நாட்கள் கொடுக்கப்படுகிறது. ஆனால், கண்டக்டர், டிரைவர்களுக்கு அம்மாதிரி லீவ் கொடுக்கப்படுவதில்லை. அம்மாதிரி அவர்களுக்கும் 12 நாட்கள் லீவ் கொடுக்கவேண்டுமென்று தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களுக்கு உடல் நலம் சரியில்லை என்றால் மெடிகல் லீவ் எடுக்கிறார்கள். அங்கே இருக்கிற டாக்டரிடம் சர்டிபிகேட் வாங்கி 'ப்ரொட்யூஸ்' செய்தாலும், அதை ஏற்றுக்கொள்ளாமல் பல நேரத்தில் அவர்களுக்கு 'பைன்' போடப்படுகிறது, அல்லது அவர்கள் சஸ்பெண்டு செய்யப்படுகிறார்கள். அந்த நிலையை மாற்றி அமைக்கவேண்டும்.

அதுபோலவே, 'க்ராஜுவிடி ரூல்ஸ்' வெளி கம்பெனிகளில் பார்த்தால், தனியார் துறையில் பார்த்தால், 10 ஆண்டுகள் சர்வீஸ் செய்து விட்டு, தானாக வேலையிலிருந்து விலகினாலும் அல்லது விலக்கப்பட்டாலும், அவர்களுக்கு கிராஜுவிடி கிடைக்கும். ஆனால் நம்முடைய ஸ்தாபனத்தில் 20 ஆண்டுகள் சர்வீஸ் செய்த பிறகும் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், அத்தகைய சலுகை கிடையாது. 15 ஆண்டுகள் தொடர்ந்து சர்வீஸ் செய்திருந்தால், அவர்கள்

வேலையிலிருந்து நீக்கப்பட்டாலும், அல்லது தானாக விலகினாலும், கிராஜுவிடி சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ரிடையர் ஆனவுடன் பென்ஷன் கொடுப்பதுபோல், இவர்களுக்கும் அந்தப் பென்ஷன் திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் அங்கத்தினர் அவர்கள் டிரைவர், கண்டக்டர்கள் டிரஸ் சுத்தமாக இருக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். காரணம் அவர்களுக்கு ரூ. 2 தான் 'டோபி அலவன்ஸ்' கொடுக்கப்படுகிறது. அந்த ரூ. 2 வைத்துக்கொண்டு அவர்கள் எப்படிச் சமாளிக்க முடியும்? இன்னொரு ரூ. 2 கூடுதலாகப் போட்டுக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், அவர்கள் தலைமை நிலையத்தில் தங்குவதற்கு ரெஸ்டு ஹவுஸ் இல்லை. தனியார் நடத்தும் தொழில்களில் எல்லாம் அம்மாதிரி ரெஸ்டு ஹவுஸ் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் மட்டிலும் அவர்கள் தங்குவதற்கு, ஓய்வு எடுத்துக்கொள்வதற்கு சரியான ரெஸ்டு ஹவுஸ் இல்லை. ஆகவே, அவர்களுக்கு உடனடியாக ரெஸ்டு ஹவுஸ் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் 8 மணி நேர வேலை வேண்டும் என்று கோஷிக்கிறோம். ஆனால், இன்றையதினம் இந்தத் தொழிலாளர்கள் 10 மணி நேரம், 10½ மணி நேரம் வரையில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. வண்டி ஓடிக்கொண்டிருக்கும் நேரத்தை மட்டும் வேலை நேரமாகக் கணக்கிடுகிறார்களே தவிர, மற்றப்படி பணம் கட்டுவதற்கு ஆகும் நேரத்தையெல்லாம் மறந்துவிடுகிறார்கள். குறிப்பாக, ஒருவர் மைலாப்பூர் வந்து வண்டியை மாற்றி அடையாறுக்குப் போய்ப் பணம் கட்டவேண்டியிருக்கிறது. அடையாறுக்குப் பக்கத்தில் ஒரு கட்டடம் கட்டியிருக்கிறார்கள். அது ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. 19-ம் நம்பர் பஸ் தான் அங்கே போகிறது. அந்த ஒரு பஸ்ஸும் கிடைக்காவிட்டால் நடந்து தான் செல்லவேண்டும். அப்படிப் போய்ப் பணம் கட்டவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை இருக்கிறது. அதற்கு 2 மணி நேரம் ஆகிவிடுகிறது. பணத்தை வசூல் செய்வதற்கு 3 இடம் போதாது. அதற்காக ஒரு ஜீப் கொடுத்து ஏதாவது தக்க முயற்சி எடுத்துக்கொண்டால், தொழிலாளர்களுக்கு ½ மணி நேரம் வேலை இல்லாமல் செய்யலாம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வண்டிகளைப் பொறுத்தவரையில், டீஸல் ஆயில் 'ஒரிஜனல் காப்' பல புது வண்டிகளில் கிடையாது. அந்த 'காப்கள்' எங்கே போயிற்று என்பது தெரியவில்லை. 'டியூப்ளிகேட் காப்கள்' தான் பல வண்டிகளில் போடப்பட்டிருக்கிறது. அதனால், வண்டிகள் ரன்னிங்கில் 'டர்ன்' ஆகிறபொழுது, டீஸல் ஆயில் கீழே போய் ஏராளமான டீஸல் ஆயில் வீணாகிறது. அதனால் நம்முடைய ஸ்தாபனத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதையும் சரிவர கண்காணிக்கவேண்டும்.

இந்தத் தொழிலாளர்களுக்கு வெளியூர் செல்ல வேண்டுமென்றால் பாஸ் கொடுக்கவேண்டும். இந்திய சர்க்கார் ரயில்வேயில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இந்தியா பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு 6 மாதங்களுக்கு ஒரு பாஸ், வருஷத்திற்கு 2 பாஸ்கள் கொடுக்கிறார்கள். அதே போல் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் குடும்பத்தோடு வெளியூர் செல்வதற்கு வருஷத்திற்கு 2 பாஸ்கள் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம். (சிரிப்பு).

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அகத்திலுள்ளது வெளியே வருகிறது. (சிரிப்பு). இது தான் இன்றைக்குள்ள நிலைமை. குறைபாடுகள் இல்லையென்று நான் சொல்லவில்லை. இந்த இலாகா முன்னேற்றம் அடைய வேண்டும் என்று சொல்வதிலே நான் குறுக்கே நிற்கவில்லை. இந்தத் துறையை விரிவாக நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று கனம் அங்கத்தினர்கள் கூறிய ஆலோசனைகளையும், கருத்துகளையும் நான் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளுகிறேன். நான் ஆரம்பத்தில் சொன்னது என்னவென்றால், இதை லட்சிய அடிப்படையில் வைத்து நடத்திப் பார்த்தோம். கூடுமான அளவுக்கு கட்டணத்தை உயர்த்தாமல் நாம் இந்த இலாகாவை திறமையாக நடத்த வேண்டும் என்ற லட்சிய அடிப்படையிலே நடத்திப் பார்த்தோம். இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குக் கூட அவ்வாறு நடத்தியிருக்க முடியும். ஆனால் இன்றைக்கு திறமைக் குறைவினால் நஷ்டம் ஏற்படவில்லை. நம்முடைய கட்டணங்கள் சென்ற 17 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போல் இன்றும் இருப்பதால் தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். யாரும் குறை சொல்லவில்லை. இந்த இலாகாவை கட்டணங்களை சரியான முறையிலே உயர்த்தி நடத்த வேண்டுமா, அல்லது இதை ஒரு பொது சேவையாகக் கருதி நடத்த வேண்டுமா என்பது கொள்கைப் பிரச்னை. டாக்டர் நடராஜன் அவர்கள் "இதை ஒரு கமர்ஷியல் அண்டர்டேக்கிங் போல நடத்த வேண்டும், அவ்வப்பொழுது தேவையான அளவுக்கு கட்டணங்களை மாற்றி அமைத்து நடத்த வேண்டும், கட்டணத்தை உயர்த்தாதது பெருமை அல்ல, சொல்லப்போனால் அது நிர்வாகத்தின் தவறு என்று கூடச் சொல்லலாம், ஒரு கார்ப்பொரேஷனாக இருந்தால் இந்த விதமாக நடந்திருக்காது" என்றெல்லாம் சொன்னார்கள். அது உண்மை தான். நாம் ஏன் இதை ஒரு கார்ப்பொரேஷனாக வைத்து நடத்தவில்லை என்றால், இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரையில் கூடுமான அளவுக்கு இதை ஒரு சர்வீஸ் ஆக நடத்த வேண்டும் என்று வைத்

திருக்கிறோம். அந்த நோக்கத்தை சிலர் ஒப்புக் கொள்ளலாம். அந்த நோக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் நாம் செய்தது தான் சரியாக இருக்கும். லாபம் சம்பாதிக்க வேண்டும் என்று இதை ஒரு கமர்ஷியல் டிரான்ஸ்லாக்ஷனாக நினைத்து நடத்த வேண்டும் என்றால், சர்க்கார் இதற்கு ஒரு கார்ப்பொரேஷனை வைத்திருப்பார்கள். 1959-ஆம் வருஷத்திலேயே கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற நிலைமை இருந்ததே, அப்பொழுது கூட நாங்கள் கட்டணத்தை உயர்த்தியிருக்கலாம். நான் மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் நஷ்டத்தில் இந்த இலாகாவை நடத்த வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்குக் கிடையாது. கூடுமான வரையில் இதை ஒரு செர்வீஸாகக் கருதி நடத்த வேண்டும் என்பது தான் நோக்கம். சொல்லப்போனால் இதிலே ஏற்பட்டிருக்கிற செலவுகள், சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய வட்டி, புதிதாக மேற்கொண்டிருக்கும் விஸ்தரிப்புத் திட்டங்கள், இவை எல்லாவற்றிலும் சேர்த்து கணக்குப் பார்த்து அந்த வகையில் தான் இப்பொழுது கூட நாம் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று நினைக்கிறோம். இப்பொழுது கூட சர்க்கார் போட்டிருக்கிற நோட்டிபிகேஷனைப் பார்த்தால், 2 கிலோமீட்டருக்கு 5 நயா பைசா என்ற அளவில் போட்டிருக்கிறார்கள். மற்ற ராஜ்யங்களைப் பார்த்தால் ஒரு கிலோ மீட்டருக்கு 3 நயா பைசா வீதம் போட்டிருக்கிறார்கள். கேரளாவை எடுத்துக் கொண்டாலும் சரி, ஆந்திராவை எடுத்துக் கொண்டாலும் சரி, அவர்கள் ஒரு கிலோ மீட்டருக்கு 3 நயா பைசா வீதம் கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள். நாம் போட்டிருக்கிற கட்டண உயர்வு ஒரு கிலோ மீட்டருக்கு $2\frac{1}{2}$ நயா பைசா வீதம் விகிதத்தில் தான் போட்டிருக்கிறோம். அது கூட மேக்ஸிமமாக வைத்திருக்கிறோம். நான் இதை மீண்டும் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறேன். அதிக பட்சம் குறிப்பிட்ட அளவுக்குக் கூட, கட்டணத்தை உயர்த்த வேண்டாம், அப்படி உயர்த்தாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்த இலாகாவின் கணக்குகளைப் பார்த்து, மாக்ஸிமம் அளவுக்கு உயர்த்தாமல் எவ்வளவு உயர்த்தினால் நமக்குக் கட்டுப்படியாகி, மக்களுக்கும் அதனால் தொந்தரவு ஏற்படாதோ அந்த அளவுக்கு உயர்த்துவதாக சர்க்கார் உத்தேசித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல தேசீய மயமாக்கும் கொள்கை. இதைப் பற்றி நாம் அடிக்கடி விவாதித்து இருக்கிறோம். சர்க்காரே எல்லாவற்றையும் எடுத்து தேசீய மயமாக்கி நடத்த வேண்டும் என்று சொன்னால், டாக்டர் நடராஜன் அவர்கள் சொன்ன கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது ஒரு கார்ப்பொரேஷனை அமைத்து நமக்குக் கட்டுப்படியாகக்கூடிய நிலையில் செலவுகள் அதிகரித்தால் அந்த அளவுக்குக் கட்டணத்தை உயர்த்தி நடத்த வேண்டியிருக்கும். ஆனால், பொது செர்வீஸாகக் கருதி நடத்த முடியாது. அதை எவ்வளவு தூரம் இந்த நாட்டிலே உள்ள மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை நாம் பார்க்க

வேண்டும். நம்முடைய நாட்டில் உள்ள மக்கள் சர்க்கார் எதற்காக இவற்றை எல்லாம் நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள் என்றால், மலிவாக அவர்களுக்குக் கிடைக்கும் என்ற நோக்கத்தினால்தான். நியாயமான அளவுக்குக் கட்டணத்தை உயர்த்தி அதன் மூலமாக அதிக லாபம் பெற்று, அந்த லாபத்தின் காரணமாக வரிகள் குறைய வேண்டும் என்ற நோக்கத்தில் இல்லை. சர்க்கார் எடுத்து நடத்தினால் விலை குறையும் என்ற காரணத்தினால் தான் கார்ப்பொரேஷன் அமைக்கும் கொள்கை நமது மக்களிடத்தில் நன்றாகப் பதியவில்லை என்று நான் நினைக்கிறேன். சர்க்கார் நடத்தி கட்டணம் குறைவாக இருந்தால் மக்கள் பேசாமல் இருப்பார்கள். ஆனால் அதிகக் கட்டணம் வசூலித்து, அதிக லாபம் சம்பாதித்து பொதுத் தொழிலிலிருந்து எங்களுக்கு ரூபாய் 2 கோடி லாபம் வந்திருக்கிறது, அதை மக்களின் வரிப்பணத்தில் சேர்த்திருக்கிறோம் என்று சொன்னாலும், சர்க்கார் என்ன தொழில் நடத்துகிறார்கள், எங்களுக்கு கட்டணம் ஏறிப்போச்சே என்று தான் சொல்வார்கள். இதில் எல்லாம் அடிப்படைக் கொள்கை இருக்கிறது. இன்றைக்கு சர்க்காரை ஏன் எதிர்பார்க்கிறார்கள்? நம்மால் அவர்களைத் திருப்தி பண்ண முடியுமா என்று பார்த்து, எல்லாவற்றையும் சர்க்காரே எடுத்துக் கொண்டு, கார்ப்பொரேஷன் வைத்து நடத்தினால் கூட, மக்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் ஏற்படாமல் நடத்தினால் தான் அதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களே தவிர லாபம் அதிகமாக வருகிறது என்பதற்காக அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை.

கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழக்கம்போல ஒரு குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். சர்க்கார் துறையை விட தனியார் துறை மிகவும் சிறப்பாக நடக்கிறது என்று சொன்னார். இதைப் பார்க்கும்பொழுது எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. திண்ணையில் உட்கார்ந்திருப்பவன், பக்கத்தில் இருப்பவனிடம், வழியில் போகிறவனைச் சுட்டிக்காட்டி, "அவன் காலிலே விழு, உனக்கு புத்தி வரும்" என்று சொன்னானாம். அதற்கு இவன் "அவன் தான் என் காலில் விழட்டுமே" என்று சொல்லி, வழியில் போகிறவனை வம்புக்கு இழுத்தானாம். அந்த முறையில் தனியார் துறையில் எவ்வளவு திறமையாக நடத்துகிறார்கள் என்று சொன்னால், உடனே நான் தனியார் துறையில் இன்னின்ன தப்புகள் பண்ணுகிறார்கள் என்று சொல்லுவது, வழியிலே போகிறவனைச் சண்டைக்கு இழுப்பது போல, தனியார் துறையிலுள்ளவர்களை சண்டைக்கு இழுப்பதாக இருக்கும். இந்த இலாகாவினுடைய வரவு செலவு, புள்ளி விவரங்கள் இவற்றை கணக்கில் வைத்துக்கொண்டு பார்க்கவேண்டுமே தவிர, மற்றவர்கள் ஏதோ செய்கிறார்கள் என்று சொல்லுவது சரியாக இருக்காது. இரண்டிற்கும் கணக்கு முறையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. (திரு. சா. கணேசன் குறுக்கீடு.) அதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. இன்றைக்கு ரூபாய் 20 லட்சம், 30 லட்சம் என்று டெவலப்மெண்ட் பண்டுக்கு ஒதுக்கியிருக்கிறோம். தனியார் துறையிலே போட்டால், இன்கம் டாக்ஸ்காரர் சும்மா விடுவாரா? தனியார் துறை வருமான வரி போக பாக்கி, கம்பெனி அசெட்டாக

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [13th March 1964

இருக்கும். ஆனால், இங்கே செலவு போக என்ன இருந்தாலும், சர்க்கார் ரெவின்யூ ஆகிவிடும். ஆகவே ஒப்பிடவேண்டுமென்று சொன்னால், இந்த ஸிஸ்டத்தை மாற்றிக் காண்பிக்க வேண்டும். நாம் ஒரு ஸிஸ்டத்தை வைத்துக் கொண்டு, அவர்கள் ஸிஸ்டத்தை வைத்துக் கொண்டு அதிலே அதிகமாக இருக்கிறது என்று சொன்னால் அது சரியாக இருக்காது. ஆகவே தனியார் துறைக்கும் இதற்கும் எந்தவிதமான ஒப்பீடு செய்வதற்கும் இடமில்லை. அவ்வாறு செய்வதில் எந்த விதமான நன்மையும் ஏற்படாது. இந்தத் துறை நிர்வாகத்தில் இன்னின்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினால், அதை வரவேற்கிறோம், அவற்றை திருத்திக்கொள்வதற்கு, முன்னேற்றம் அடையச் செய்வதற்கு வழி செய்வதற்குத் தயாராயிருக்கிறோம்.

தொழிலாளர்களின் குறைகளைப் பற்றி கனம் அங்கத்தினர் மணி அவர்கள் பேசினார்கள். இங்கே இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கங்கள் அவ்வப்போது சர்க்காரிடம் வந்து பேசுகிறார்கள். திரு. மணி அவர்கள் சொன்ன குறைகள் எல்லாவற்றையும் நான் கேட்டுக்கொண்டேன். இது சம்பந்தமாக, தொழிலாளர்களின் பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசித்து, அவர்களின் பிரச்னைகளை சங்கங்களின் மூலமாகத் தீர்க்க வேண்டும் என்பது சர்க்காரின் முறையாக இருக்கிற காரணத்தினால், தொழிலாளரின் குறைகளைப் பற்றி பட்ஜெட்டிலே நான் ஒன்றும் சொல்வதற்குத் தயாராய் இல்லை. தொழிலாளர்களின் குறைகள் எல்லாவற்றையும் சர்க்கார் மிகுந்த அனுதாபத்தோடு கவனிக்கும். அந்தந்தத் துறையிலே அதிகமான சலுகைகள் கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை இந்தச் சபை ஏற்றுக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 6,29,45,700 under Demand No. XXX—Road Transport Schemes be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 6,29,45,700 under Demand No. XXX—Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 1,44,79,000 under Demand No. XLIII—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

13th March 1964]

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,44,79,000 under Demand No. XLIII—Capital Outlay on Road Transport, Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned. 1-30 p.m.

IV.—PAPEDS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

Nil.

B.—Reports, Notifications and other papers.

* 72. *A Review of the Nationalised Transport in the Madras State for the year 1963-64.*

* 73. *A Review on the Road Transport in the Madras State for the year 1963-64.*

* 74. *Policy Note underlying Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading—Madras Dairy and Milk Project.*

* 75. *Policy Note underlying the activities of the Animal Husbandry Department.*

---

* Circulated to Members on 11th March 1964.

APPENDIX

[Vide answer to Starred Question No. 245 on pages 462–463]

(*a*) No boats were allotted to fishermen Co-operative Societies and to individuals during 1962.

The following boats were allotted to groups of fisherman during 1962 :—

25 footer boats	.. .. ..	9
30 footer boats	.. .. ..	26
Total	..	35

(*b*) and (*c*) The number of boats damaged and the amount collected in respect of the boats damaged during 1962 are given below :—

Serial number and boat number.	To whom allotted.	Date of accident.	Whether sunk or completely damaged.	Action taken.
(1)	(2)	(3)	(4)	(5)
1 I.B. 2 ..	Sri N. Balu Chettiar.	May 1962.	Broken.	Insured amount was paid by the Insurance Company.
2 I.B. 42..	Sri K. Pitchavaram.	6th September 1962.	Hull broken engine salvaged.	The group has remitted Rs. 5,000 as security deposit and Rs. 1,010 towards instalment for the boat. The Assistant Director, Madras, is pursuing action to collect the balance amount.
3 I.B. 64..	Sri Poongavanam and party.	24th December 1962.	Hull broken engine salvaged.	The group has remitted Rs. 5,000 as security deposit. The Assistant Director of Fisheries is pursuing action to collect the balance amount.

பதில்.—(அ) 1962-ல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தனிப்பட்ட மீனவர்களுக்கும் படகுகள் வழங்கப்படவில்லை.

1962-ல் கீழ்க்கண்ட படகுகள் மீனவர்த் தொகுதியினர்க்கு ஒதுக்கப்பட்டன :—

25 அடிப் படகுகள்	.. .. ..	9
30 அடிப படகுகள்	.. .. ..	26
மொத்தம்	..	35

(இ), (ஈ) 1962-ல் சேதமடைந்த படகுகளும், அவற்றிற்காக வசூல் செய்த தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும் படகு எண்ணும்.	யாருக்கு வழங்கப் பட்டது.	விபத்து நடந்த தேதி.	கடலில் மூழ்கி விட்டதா அல்லது முற்றிலும் சேதமடைந்து விட்டதா ?	எடுக்கப்பட்ட நடவடிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
1. I.B. 2	திரு. என். பாலு செட்டியார்.	மே, 1962	உடைந்தது.	இன்ஷூரன்ஸ் கம்பெனி இன்ஷூர் செய்த தொகையைக் கொடுத்துவிட்டது.
2. I.B. 14.	திரு. கே. பிச்சவரம்.	6—9—196 .	படகின் உடற்பகுதி உடைந்தது. இயந்திரம் காப்பாற்றப்பட்டது.	இத் தொகுதியினர் ஜாமீன் டிபாசிட் ரூ. 5,000-மும், தவணைப் பணமாக ரூ. 1,010-ம் செலுத்தியுள்ளனர். மீன் வளத் துறை உதவி டைரக்டர் எல்லாத் தொகையையும் வசூலிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.
3. I.B. 64.	திரு. பூங்காவனம் அவரது நண்பர்கள்.	24-12-1962.	படகின் உடற்பகுதி உடைந்தது. இயந்திரம் காப்பற்றப்பட்டது.	இத் தொகுதியினர் ரூ. 5,000 ஜாமீன் டிபாசிட்டாக செலுத்தியுள்ளனர். எஞ்சிய தொகையை வசூலிக்க மீன் வளத் துறை உதவி டைரக்டர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 14th March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

சுங்கவரி வசூல்

*256 *கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :* கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை புதிய பாலங்களுக்குச் சுங்கவரி வசூலிக்கப்படுகிறது ?

(இ) ஒவ்வொரு பாலத்திற்கும் எவ்வளவு தொகை இதுவரை வசூலிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் சபைமுன் வைக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The attention of the Member is invited to the paper[a] placed on the table of the House.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, கொடுத்திருக்கும் அறிக்கையில், கொள்ளிடம் பாலத்தில் ஏறத்தாழ 4¼ லட்ச ரூபாய் வசூலாகி இருக்கிறது. இன்னும் எவ்வளவு தொகை வசூல் செய்ய உத்தேசம், எப்பொழுது நிறுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : முன்பே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது சொன்னேன், பாலத்திற்குப் போட்டிருக்கும் மொத்தப் பணமும் அதன் வட்டியும் வசூலான உடனே இந்த சுங்கம் வசூல் செய்வது நிறுத்தப்பட்டு விடும்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், இந்த அரந்தாங்கி-மீமிசல் சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே உள்ள பாலத்தில் சுங்கம் வசூலித்துக் கொண்டு இருக்கிறார்கள். அது மிகவும் பிற்பட்ட, பஞ்சப் பிரதேசம். ஆகவே அந்த இடத்தில் விதிவிலக்கு அளிக்க சர்க்கார் யோசனை செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது இருக்கும் கொள்கையின் அடிப்படையில் அங்கேயும் சுங்க வசூல் செய்துகொண்டு இருக்கிறோம். இது சம்பந்தமாக பல தடவை இந்த மன்றத்திலே சொல்லி இருப்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த

---

a Printed as Appendix I on pages 670 and 671.

[14th March 1964

வகையில் சுங்கம் வசூலிப்பது எவ்வளவு பொருத்தமானது என்று பரிசீலனை செய்து வருகிறோம். மாநிலத்திற்கு லாபம் என்றாலும், பின் தங்கிய வட்டாரங்களில் இந்த வசூல் செய்வதால் நன்மை ஏற்படும் முறையில் இருக்கிறதா என்பதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. அதில் ஒரு முடிவுக்கு வந்த பிறகு தான் திட்டவட்டமான கொள்கையை வகுக்கமுடியும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், இந்தப் பாலங்களில் சுங்கம் வசூல் செய்வதில், கார்கள், லாரிகள் முதலியவற்றிற்கு ஒரேவிதமான ரேட்டுகள்தான் வசூலிக்கப்படுகின்றனவா அல்லது ரேட்டுகளில் வித்தியாசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : எல்லாப் பாலங்களிலும் ஒரேவிதமான கட்டணம்தான் வசூலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த வசூலை ரத்து செய்வது பற்றி ஆலோசனையில் இருப்பதாகச் சொன்னார்கள். முடிவு ஏற்படும் வரை கட்டை வண்டிகளுக்காவது விதிவிலக்கு அளிக்க உத்தேசம் உண்டா?

MR. SPEAKER : The hon. Member is not sitting in his allotted seat. He is sitting in the other row.

THE HON. SRI V. RAMAIAH : Perhaps he is joining the Communists.

கனம் அங்கத்தினருடைய கருத்தும், மொத்தமாக அதைப் பரிசீலனை செய்யும்போது, கவனிக்கப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், மதுரை மாவட்டத்தில், தாண்டிக்குடி காட் செக்ஷனில் சுங்கம் வசூலிக்கப்படுகிறது. அது எந்த நிதியில் சேர்க்கப்படுகிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த காட் ரோடு அமைக்க ஆன செலவுத் தொகையும், அதன் வட்டியும் வசூலாகும் வரைக்கும் சுங்கம் வசூலிப்பது நடந்துகொண்டே இருக்கும்.

MR. SPEAKER : Questions 257, 258, 259 and 260 relating to public health are postponed to Monday, the 16th March.

Levy of Pilgrim tax (Municipalities)

* 261 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any of the municipalities in Madras State have approached the Central Government to permit them to levy Pilgrim Tax;

(*b*) the details of the municipalities which have so approached; and

(*c*) what action the State Government have taken on their request?

14th March 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) பழனி, ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டிகள்.

(உ) இந்திய அரசாங்கத்தைக் கலந்து இதை ஒரு பொதுப் பிரச்சினையாகவே யோசித்துவருகிறோம்.

பெண்களுக்கான பாலிடெக்னிக்

* 262 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) யுனெஸ்கோ உதவியுடன் தமிழகத்தில் பெண்களுக்கான பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) சென்னை நகரத்தில் அதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதா?

(உ) இதேபோன்ற பெண்கள் பாலிடெக்னிக்குகள் வேறு எந்த மாவட்டங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*c*) The assistance offered by the UNESCO was in the form of foreign experts, equipment and fellowships. The courses run in the Polytechnic for Women do not require such assistance. So the question of utilising their assistance was considered but dropped. The Government have, however, established with effect from 1962–63 a Polytechnic for Women at Madras and another Polytechnic under the Government management has since been started in Madurai during 1963–64. One more Women's Polytechnic will be established with effect from 1964–65 at Coimbatore.

Selection of candidates for Professional Colleges

* 263 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the expenditure incurred in connection with the selection of candidates to all the professional colleges in this State for the year 1963; and

(*b*) why the system of having the sittings of the Selection Committee in each district headquarters has been given up?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Rs. 16,916.

(*b*) Only in respect of the Engineering Colleges, the Selection Committee used to sit in three selected places, viz., Madras, Madurai and Coimbatore (but *not* in each district headquarters). The system was given up in May-June 1963 when the interviews were held only in one place, viz., Madras with a view to enabling the selection to be completed quickly and in a short time.

[14th March 1964

திரு. பி. கே. மூக்கையா தேவர் : ஸார், ஆகிற செலவுத் தொகை அதிகமாக இருக்கிறது. தனிப்பட்டவர்கள், செலக்ஷனுக்காக வருகிறவர்கள் அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே முன்போலவே, அந்த அந்த ஜில்லா ஹெட்க்வார்ட்டர்லிலேயே வைத்து தேர்வினை நடத்த உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எஞ்சினியரிங் கல்லூரி, வெட்டரினரி கல்லூரி, அக்ரிகல்சுரல் கல்லூரி, மெடிக்கல் காலேஜ் இவைகளுக்கான செலக்ஷன் எல்லாம் சேர்த்து ரூ. 16 ஆயிரம் ஆகி இருக்கிறது. இது அதிகம் என்று சொன்னால், அதை கனம் அங்கத்தினருடைய முடிவுக்கு விட்டு விடவேண்டியதுதான். சென்னை நகரில் வைத்தால், அது மாணவர்களுக்கு அனுகூலம். மாணவர்கள் ஒரு கல்லூரிக்கு மட்டும் அப்ளிகேஷன் போடுவதில்லை. எஞ்ஜினியரிங் கிடைக்காவிட்டால், வேறு காலேஜில் இடம் கிடைக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்கிறார்கள். ஆகவே சொல்லப் போனால் சென்னையில் நடப்பது அனுகூலம். பல இடங்களில் நடப்பது அனுகூலம் இல்லை. ஒரே இடத்தில் நடத்த வேண்டும் என்று கடைசியாக முடிவு எடுத்ததற்குக் காரணம், செலக்ஷனிலே தாமதம் ஆனதினால், மற்ற காலேஜுகளுக்கும் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. ப்ரொபஷனல் காலேஜில் இடம் கிடைத்தால், முதலிலே ஆர்ட்ஸ் காலேஜில் பணம் கட்ட வேண்டும் என்பதனால், அந்தப் பணத்தை இழந்து விட்டு, ப்ரொபஷனல் காலேஜில் சேர வேண்டி இருக்கிறது. முக்கியமாக இந்த தேர்வு, செலக்ஷன்களை எல்லாம் எவ்வளவு சீக்கிரம் நடத்தி முடிக்க வேண்டுமோ அப்படி நடத்த வேண்டும் என்றுதான் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : ஸார், சர்க்கார் செலவு ஓரளவுக்கு இருந்தாலும், தனிப்பட்டவர்கள், அபேட்சகர்கள் அதிகச் செலவை ஏற்க வேண்டி இருக்கிறது. சென்ற தடவை ட்ரெயின் டிக்கட்டுக்குக் கூட இல்லாமல் பலர் கஷ்டப்பட்டார்கள். ஆகவே, செலவும் சிரமும் அதிகமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மற்ற கல்லூரிகளில் சேர சௌகரியமாக இருக்கும் என்று. இப்பொழுது நிறைய இடங்களில் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே மாணவருடைய நன்மையைக் கருதி முன்போலவே வைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மாணவர்களின் நலனைக் கருதித்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரமாக செலக்ஷன் ரிசல்ட் சொல்ல வேண்டுமென்றால், ஒரே இடத்தில் வைப்பதுதான் சுலபம். மற்ற ஆர்ட்ஸ் காலேஜுகளுக்கு பணம் கட்டுவதும் தவிர்க்கப்படும்.

கனம் சபாநாயகர் : ஒவ்வொரு மாணவருக்கும் பின்னாலும் 20, 30 பேர்கள் வருகிறார்கள்; அதுதான் அதிகச் செலவுக்குக் காரணம்.

14th March 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதை நாம் கணக்கில் எடுக்க முடியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் சபாநாயகர் அவர்களே, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவற்றுக்கு விண்ணப்பித்துக் கொள்கிற மாணவர்கள் இவற்றில் இடம் கிடைக்கவில்லையென்றால் மற்ற கலைக் கல்லூரியிலாவது சேர்ந்து படிக்க வசதியாக இவற்றின் தேர்வை முன்கூட்டியே நடத்த வழி வகை செய்யப்படுமா? அல்லது இவற்றின் தேர்வை அறிவித்த பின்னர் கலைக் கல்லூரி விண்ணப்பங்கள் எடுத்துக்கொள்ளப் படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்புறம் எடுத்துக் கொள்வது என்றால் காலதாமதமாகிவிடும். 63-64-ம் ஆண்டு பொறியியல் கல்லூரி அட்மிஷன் லிஸ்டு காலதாமதமின்றி முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுவிட்டது. அதுபோலவே மெடிக்கல் காலேஜ் சம்பந்தமாகவும் தாமதமின்றி அட்மிஷன் லிஸ்டை வெளியிட நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது சர்க்காரின் நோக்கம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சர்க்கார் மருத்துவக் கல்லூரி அட்மிஷன் திட்டத்தின் கீழ் முன்பு பர்சனாலிடி மார்க் என்று 50 மார்க்குதான் கொடுக்கப்பட்டது. இப்போது 150 மார்க் பர்சனாலிடி டெஸ்டுக்கு என்று வைத்திருக்கிறார்கள். இதனால் தகுதியுள்ள மாணவர்கள் கூட வெறுப்பு விருப்பின் காரணமாக தேர்ந்தெடுக்கப்பட முடியாது போகிறார்கள். உண்மையிலேயே மெரிட் உள்ளவர்கள் வர முடியாது போகிறது. ஆகவே மறுபடியும் பர்சனாலிடி டெஸ்டுக்கு 50 மார்க் என்றே ஏற்படுத்த முன் வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பர்சனாலிடி டெஸ்ட் மார்க் என்றே கிடையாது. குறிப்பாக என்.ஸி.ஸி., ஸ்போர்ட்ஸ் ஆக்டிவிடி போன்றவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு என்று தனியாக மார்க் ஒதுக்கப்படுகிறது. அந்த விவரம் கூட இப்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்விபோட்டால் பார்த்துச் சொல்லலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மருத்துவ, என்ஜினீரிங் காலேஜ் அட்மிஷன் இன்டர்வ்யூ கார்டு, இன்டர்வ்யூ நாளன்றுதான் கிடைக்கும்படியாக போஸ்ட் செய்யப்படுகிறது. இதனால் வெளி மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் இன்டர்வியூ நாளன்று சென்னைக்கு வருவதற்கு முடியவில்லை என்பது தெரியுமா? அப்படியின்றி முன்கூட்டியே அனுப்பப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி தகவல் அரசாங்கத்தினிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அது உண்மையா என்பதைப் பரிசீலனை செய்யலாம்.

[14th March 1964

விருத்தாசலம் தாலூகாவில் சப்-ரிஜிஸ்திரார் அலுவலகங்கள்

* 264 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலூகாவில் வேப்பூர், சிறுபாக்கம் முதலிய ஊர்களில் சப்-ரிஜிஸ்திரார் ஆபீசுகள் நிறுவ உத்தேசமுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இந்த விஷயத்தை அரசாங்கம் யோசித்து வருகிறது.

கூடலூர் பஞ்சாயத்து ஊழியர்களுக்கான சம்பளம்

* 265 கேள்வி.—திரு. மா. இராசாங்கம் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பெரியகுளம் தாலூகா, கூடலூர் பஞ்சாயத்து ஊழியர்களுக்கு இரண்டு மாதத்திற்கு மேலாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அப்படியானல், அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) போதிய நிதியில்லாக் காரணத்தால் கூடலூர் பஞ்சாயத்து ஊழியர்களின் 1963 அக்டோபர், நவம்பர் மாதச் சம்பளங்கள் முறையே நவம்பர் முதல் தேதியிலும் டிசம்பர் முதல் தேதியிலும் கொடுக்க இயலவில்லை. ஆனல் 1963 டிசம்பர் மாத இறுதிக்குள் அவை கொடுக்கப்பட்டுவிட்டன. இனி, பஞ்சாயத்து ஊழியர்களுக்குச் சம்பளம் ஒழுங்காகக் கொடுக்கும்படி பார்த்துக்கொள்ள நிர்வாக அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப் பஞ்சாயத்தின் நிதி நிலையைக் கவனமாகக் கண்காணித்து வரும்படி பெரியகுளம் சப்-கலெக்டருக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மா. இராசாங்கம் : நிதிநிலை சரியில்லை என்று காரணம் சொன்னர்கள். நிதிநிலை சரியில்லாமல் குறைவாக இருப்பதனல் தான் எந்த அபிவிருத்தி வேலைகளையும் கூடலூர் பஞ்சாயத்து செய்யாமல் இருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த அபிவிருத்தி வேலைகளை அரசாங்கமே எடுத்து நிறைவேற்றித்தர முன்வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்தப் பகுதியில் 12,933 ரூபாய் வாடர் டாக்ஸ் மூலமாக வந்தது. அவைகளை எக்ஸிக்யூடிவ் ஆபீசர் வேறு பலவற்றில் செலவழித்துவிட்டார். அம்மாதிரி செலவிடக் கூடாது என்றே அரசாங்க உத்தரவு இருக்கிறது. அதனல்தான் அவர்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து வருவாய் குறைவு என்பது சரியல்ல.

14th March 1964]

திரு. மா. இராசாங்கம் : பஞ்சாயத்து யூனியனுக்குத் தர வேண்டிய விகிதாசாரத்தை கூடலூர் பஞ்சாயத்து தர நிதி வசதி இல்லாததால் அவசிய வேலை தடைப்பட்டுப் போய் இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : என்னிடத்தில் அந்தத் தகவல் இல்லை.

விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட செலவுகள்

* 266 கேள்வி.—திரு. மு. பொ. வடிவேல் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல பஞ்சாயத்து யூனியன்களில் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் மலைப்பிரதேசம் என்ற காரணத்தால் செலவழிக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) அத்தொகையை விவசாய சம்பந்தமான இனங்களுக்கு மாற்ற உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம், ஐயா.

(இ) இப்பொருள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. ப. அழகமுத்து : எத்தனை பஞ்சாயத்துக்களிலே இம்மாதிரி பணம் செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று கூற முடியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : என்னிடம் இருக்கும் தகவல்படி மூன்று பஞ்சாயத்துக்களிலே அப்படி இருக்கிறது. சேலத்தில் ஏற்காடு, கொல்லி மலை, கோயம்புத்தூரில் வால்பாறை

Copies of assignment orders

* 267 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to arrange to communicate the copies of the assignment order to the respective Sub-Registry offices so as to facilitate the public to get loans mortgaging the lands assigned to them, without any difficulty?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

சிமெண்ட்

* 268 கேள்வி.—திரு. அ. ப. அழகமுத்து : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தமிழ் நாட்டிற்கான சிமெண்ட் கோட்டாவை மத்திய அரசாங்கம் குறைத்துள்ளதா ?

(இ) அப்படியானல், எவ்வளவு ?

[14th March 1964

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The demand and allotment of cement for the year 1963 in respect of State quota are as follows :—

Demand—1,268,021 tonnes.

Allotment—439,530 tonnes.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் கண்ட்ரோல் முறை இன்னும் ஒருசில மாதங்களுக்குள் எடுக்கப்பட்டுவிடும் என்று பேசப்படுகிறது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அந்தமாதிரி பேசிக்கொள்வதாக எனக்கு தெரியவில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Is there any likelihood of cement position improving at least this year, Sir?

THE HON. SRI V. RAMAIAH : The cement position is still continuing to be tight, because our demand is greater than what we get for our use. But, by restricting some of the Government works, we are making available more quantity of cement to the public.

திரு. து. ப. அழகமுத்து : கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் இருந்து நம் மாநிலத்திற்குத் தேவையான அளவு சிமிண்டு கோட்டா ஒதுக்கப்படுவதாகத் தெரியவில்லை. மத்திய சர்க்கார் எந்த அடிப்படையில் நமக்கு சிமிண்டு ஒதுக்குகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : நம்முடைய தேவைக்கு நாம் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ஸ்டேட்மெண்டு கொடுக்கிறோம். சென்ற காலத்தில் ஒதுக்கப்பட்ட சிமிண்டு, தேவைப்பட்ட சிமிண்டு, கையில் உள்ள வேலை ஆகியவற்றைக் கொண்டு நம் தேவை கணக்கிடப்படுகிறது. கையில் இருக்கக்கூடிய ஸ்டாக்குக்குத் தகுந்தாற்போல அவர்கள் அலாட் செய்கிறார்கள். நெருக்கடி நிலை காரணமாக டிபென்ஸ் துறைக்கு அதிக சிமிண்டு ஒதுக்கப்படுகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : நமக்கு ஒதுக்கப்படுகிற சிமெண்டில் எவ்வளவு பகுதி பொதுமக்களுடைய உபயோகத்திற்காக விநியோகிக்கப்படுகிறது ?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கம், அரசாங்கத்தைச் சேர்ந்த பல்வேறு ஸ்தாபனங்களுடைய வேலை ஆகியவற்றுக்குப் போக 30 சதவிகிதம் பொதுமக்களுடைய உபயோகத்திற்காக ஒதுக்கப்படுகிறது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது பாதுகாப்புத்துறைக்கு அதிகம் ஒதுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட சிமெண்டில் அவர்களுடைய தேவைக்குப் போக அதிகம் மீதம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதில் இருந்து பொதுமக்களுடைய தேவைக்கு அதிகம் கொடுத்துதவ உத்தேசம் உண்டா ?

14th March 1964]

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் எத்தனையோ விஷயங்களை ஊகித்துக்கொண்டு, பொதுமக்கள் கருதுவதாகச் சொல்கிறார்கள். இப்போது அவர் கேட்ட விஷயம் பற்றி என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : நெருக்கடி நிலை தணிந்து இருப்பதனால் அரசாங்கம் பொதுமக்களுடைய உபயோகத்துக்கு அதிகக் கோட்டா பெற முயற்சிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : மிகவும் கடுமையாக இருந்த போதும் கூட வற்புறுத்திக்கொண்டுதான் இருந்தோம். பரம்பிக்குளம் போன்ற முக்கியமான நம்முடைய நீர்ப்பாசன திட்டங்களுக்கு சிமிண்டு வேண்டும் என்று கோரிப் பெற்றிருக்கிறோம். எப்போதுமே நம்முடைய தேவைக்குப் ப்ரையாரிடி கொடுத்து வாங்கி வருகிறோம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது சர்க்கார் வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட சிமெண்ட் குறைக்கப்பட்டு தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது அதிகப்படுத்தப்படுமென்று சொன்னார்கள். அப்படி சர்க்கார் வேலைகள் நிறுத்தப்பட வேண்டிய அவசியம் என்ன ? அவை அவசியம் இல்லாத வேலைகள் என்று கருதி நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : இவைபற்றி எல்லாம் கடந்த ஒரு ஆண்டு காலமாக தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். நெருக்கடி நிலை காரணமாக சில கட்டடங்களை தாற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம். அதனால் பொது மக்களுக்கு சிமெண்ட் தாராளமாக கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : சாதாரணமாக பொதுமக்கள் தங்கள் தேவைக்கு இரண்டு மடங்கு அதிகமாக சர்க்காரிடம் கோரினால் தான் பாதியாவது கிடைக்கும் என்ற நோக்கத்தில் தங்கள் கோரிக்கையை விடுகிறார்கள். அதேபோல் நம் அரசாங்கமும் தங்கள் தேவையை இரு மடங்காக மத்திய சர்க்காரிடம் கோரி அதிகச் சலுகை பெறக்கூடாதா ?

கனம் திரு. வெ. ராமையா : நெருக்கடிக்குள்ள காரணம் பற்றி அவர்களே சொல்லி விட்டார்கள். பொதுமக்கள் தங்கள் தேவைக்கு தக்கபடி அரசாங்கத்தை அணுகினால் கஷ்டமிருக்காது. அதிக ஆசை கொண்டு 5, 10 மடங்கு கூட மிகைப்படுத்தி சிமெண்ட் கேட்கிறார்கள். அப்படியே மத்திய அரசாங்கத்திற்கு நம்மால் அனுப்பமுடியாது. அவர்கள் நம் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். ஆகவே பரிசீலனை செய்து நமக்கு தேவையானதைக் கேட்கிறோம். அதிகமாகத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விசேஷமாக

கஷ்டம் இருந்தால் அதற்குக்கூட விசேஷ கோட்டா வாங்குகிறோம். சமீபத்தில் தஞ்சை ஜில்லாவில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்காக விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று தொழில் துறை அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருக்கு எழுதி அதற்காக விசேஷமாக 5,000 டன் கூட வாங்கியிருக்கிறார்கள். இதுபோல் பல வேலைகளுக்கு அவசியம் ஏற்படும் பட்சத்தில் கோட்டாவிற்கு மேல் கூட வாங்க முயற்சிக்கிறோம்.

திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்: விவசாய காரியங்களுக்கு முதல் இடம் கொடுத்து சிமெண்ட் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமையா: கோட்டா எல்லாம் நிர்ணயம் செய்து கொடுக்கும் பொறுப்பை அதிகாரிகளுக்கு கொடுத்திருக்கிறோம். நாங்கள் போய் இந்த அரசாங்கத்திற்கு உத்தரவு போட முடியாது. அதிகாரிகள் கொடுக்கும்போது விவசாய காரியங்களுக்கு முதல் இடம், பம்ப் செட்ஸ் கட்டுவது போன்ற முக்கியமான வேலைகளுக்குத்தான் முதல் இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: சிமெண்ட் பற்றாக்குறையைப் போக்க இந்த மாநில அரசு என்னென்ன முயற்சிகளையும் திட்டங்களையும் மேற்கொண்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: மாநில அரசாங்கம் மட்டுமல்ல, மத்திய அரசாங்கமும் சிமெண்ட் பற்றாக்குறையைப் போக்க ஏராளமான தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு போதுமான லைசென்ஸ் எல்லாம் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன்: விவசாயத்திற்கு மின்சார மோட்டார் அமைக்க சிமெண்ட் நிச்சயமாக தேவையாக இருக்கிறது. ஆகவே மின்சாரத் துறையிலிருந்து மின்சார மோட்டார் அமைக்க உத்தரவு வந்தது என்பதைக் காட்டுகிறவர்களுக்கு கட்டாயம் இரண்டு மூட்டை சிமெண்டாவது தரவேண்டுமென்ற உத்தரவை தாலுகா தாசில்தார்களுக்கு அரசாங்கம் அனுப்பி வைக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: அதற்கு விசேஷமான இடம் கொடுக்கக்கூடிய முறையில் தாசில்தார் பரிசிலனை செய்து முடிவு எடுப்பார்கள். ஒரு குறிப்பிட்ட வேலையை மட்டும் செய்து கொடுக்கவேண்டுமென்று விதி போடும் பட்சத்தில் சிலயிடங்களில் அது போன்ற வேலைகள் நடக்காமல் இருக்கும். ஆகவே, விண்ணப்பங்கள் வருகின்றனவா என்று காத்திருந்து, அப்புறம் மூன்று மாதங்கள் கழித்து கொடுப்பதில் லாபம் இருக்காது. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு தேவை இருக்கிறது. அதை ஸ்தல அதிகாரிகள் பரிசீலனை செய்து விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். ரங்கசாமி: சில இலாகாக்களில் ரூபாயைச் செலவழிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு சிமெண்டை அனாவசியமாக வாங்கி ஸ்டாக் செய்து விடுகிறார்கள். அதனால் அது கெட்டுப்

போக வழி இருக்கிறது. அதனால் மக்களுக்கும் கிடைக்க கஷ்டமாக இருப்பதால் அப்போதைக்கப்போது தேவைக்கு தகுந்தவாறு வாங்கும்படி இலாகாவிற்கு உத்தரவிடுவார்களா?

கனம் திரு. வெ. ராமையா: ப்ளாக் நிர்வாகத்தை நடத்தும் பொறுப்புள்ள அதிகாரிகள் பணத்தை அனாவசியமாக செலவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு சிமெண்டை வாங்கி தேக்கி வைத்து கெட்டுப் போகச் செய்து மக்களுக்கு கஷ்டத்தைக் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் மிக சுறுசுறுப்பாக வேலைகள் நடைபெற வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். குறிப்பாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், எங்கேயாவது தவறு ஏற்பட்டால் அதை என் கவனத்திற்கு கொண்டு வந்தால் நிச்சயமாக நான் நடவடிக்கைகள் எடுக்க முடியும். ப்ளாக்கில் மட்டுமல்ல. சில அரசாங்க இலாகாக்களில் கூட சில நேரங்களில் கொஞ்சம் அதிகமாகவே தேவையைக் குறிப்பிட்டு சொல்லி வாங்கி குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்த முடியாமல் சிலயிடங்களில் தேக்கம் இருந்தது. அதைக் கூட சமீப காலத்தில் தொடர்ந்து பரிசீலனை செய்யும் முறையில் பல அதிகாரிகள் முயற்சி எடுத்து அவசியம் இல்லாத ஸ்டாக்குகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள இப்போது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. வி. எஸ். எஸ். மணி: சிமெண்ட் பெர்மிட் முறை இருக்கும் காரணத்தால் தேவை இல்லாதவர்கள் கூட சிமெண்டை வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். அதனால் விலை அதிகமாகிறது. சிமெண்ட் பெர்மிட் முறை வைக்கவேண்டுமென்பது மாநில அரசின் ஒரு விதியா? அல்லது மத்திய அரசாங்கம் பெர்மிட் முறையில் விநியோகம் செய்யவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்களா? தாற்காலிகமாக, ஒரு பரீட்சார்த்தமாக, இந்த சிமெண்ட் பர்மிட்டை, இந்த முறையை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. வெ. ராமையா: இப்போதுள்ள முறைப்படி சாதாரண சிறு விவசாயிகளுக்கு, கிராமவாசிகளுக்கு கொஞ்சமாவது சிமெண்ட் கிடைக்கும் அளவு நிலைமை இருக்கிறது. இது நீக்கப்படும் பட்சத்தில் சாமர்த்தியசாலிகள், பணம் படைத்தவர்கள் எல்லாம் சிமெண்டை சுரண்டி வைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு கிடைக்காமல் செய்து விடுவார்கள். பெர்மிட் இருக்கும் முறையிலேயே தேவை இல்லாமல் வாங்குகிறார்கள். பெர்மிட் இல்லாது போனால் தேவை இல்லாதவர்கள் தான் அதிகமாக வாங்குவார்கள். ஆகவே இப்போதுள்ள முறைதான் சாலச் சிறந்த முறை. அதை நீடிக்கவேண்டுமென்றுதான் நான் ஆசைப்படுகிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: மாநில அரசும், மத்திய அரசும் இந்த ஆண்டு எத்தனை சிமெண்ட் தொழிற்சாலைகள் ஏற்படுத்த இருக்கிறார்கள்? அவை எப்போது உற்பத்தியைத் துவங்கும்?

கனம் திரு. வெ. ராமையா: தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் கேள்வி கேட்டால் எல்லா விவரங்களையும் மொத்தமாக தொகுத்துத் தருவார்கள்.

[14th March 1964

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: விவசாயிகள் தங்கள் தேவைக்கு இவ்வளவு மூட்டை சிமெண்ட் தேவை என்று கேட்கும்போது எஸ்டிமேட் தாயார் செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லி சர்டிபிக்கேட் கேட்கிறார்கள். தேவைக்கு இரு மடங்கு கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது எஸ்டிமேட்டின் தவறா அல்லது கேட்கிறவர்கள் தவறா?

கனம் திரு. வெ. ராமைய்யா: பதில் சொல்லவேண்டிய பொறுப்பை திரு. அழகமுத்து அவர்களே தம் கேள்வியில் எடுத்துக் கொண்டார்கள். விவசாயிகள், எவ்வளவு தேவை என்று கணக்கு போட்டுக்கூட சொல்லமுடியாது. உத்தேசமாக 10, 20 மூட்டை என்று சொல்வார்கள். அவசியமில்லாத அளவிற்குக் கூட வாங்கி அதை முறையாக பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறது. ஆகவே பக்கத்திலுள்ள நிபுணரை அனுப்பி எஸ்டிமேட் போட்டு தேவைக்குத் தகுந்தாற்போல் எழுதிக் கொடுக்க வேண்டுமென்ற முறையில்தான் ஸ்தல அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்: கிராமவாசிகள் தங்கள் சொந்தத் தேவைக்கு தாலூகா ஆபீஸுக்கு பத்து தடவை போய், இல்லை என்ற பதிலை வாங்குவதற்குப் பதிலாக அந்தந்த ப்ளாக்குகளுக்கு அலாட்மெண்ட் செய்து கொடுத்தால், பீ.டி.ஓ. விடம் சென்று கேட்டு வாங்கிக் கொள்வது சௌகரியமாக இருக்கும் அல்லவா? ஆகவே ப்ளாக்கிற்கு அலாட்மெண்ட் கொடுக்க உத்தரவிடுவார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: தாலூகா ஆபீசிலேயே கொடுத்து விடுவார்கள். அங்கு போவதற்குப் பதிலாக ப்ளாக் ஆபீசுக்குப் போய் இல்லை என்று கேட்கும் நிலை ஏற்பட்டால் போதும் என்று கருதினால் அந்தக் கெட்ட பெயர் பஞ்சாயத்து யூனியனுக்கு வர வேண்டாம் என்றுதான் விரும்புகிறேன். ரெவின்யூ இலாகாவிலேயே வைத்துக் கொள்ள தயாராகயிருக்கிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: வருடா வருடம் சிமெண்ட் விலை உயர்ந்து கொண்டே போகிறது. சிமெண்ட் விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்குள்ளதா? நம் மாநில அரசாங்கத்திற்குள்ளதா? உயர்வை எந்த அடிப்படையில் செய்கிறார்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: தனிக் கேள்வி வேண்டும்.

Gramasevaks

*269 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state, how and on what qualifications Gramasevaks are appointed?

THE HON. SRI S. M. A. MAJEED: A statement[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on pages 672-676

14th March 1964]

திரு. ஆ. கு. சுப்பையா: கிராம சேவக்குகளுக்கு சர்விஸ் அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறதா? அப்படி கொடுக்கப்பட்டால் என்னென்ன பதவிகள் கொடுக்கப்படுகின்றன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கிராம சேவக்குகள் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது தான் கேள்வி. மற்றபடியுள்ள தகவல் என்னிடம் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: பஞ்சாயத்து யூனியன்களில் முக்கிய சேவகி ஒருவர் நியமிக்கப்படுகிறார். அவர் வேலை என்ன? அந்தப் பதவி அவசியம் தானா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: முக்கிய சேவகி பற்றி தகவல் இல்லை. சேவக்ஸ் பற்றி ஸ்டேட்மெண்டில் கூறப்பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சில சந்தேகங்களுக்கு விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தகுதி என்னும்போது, "எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடித்திருக்கவேண்டும் அல்லது கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்குத் தகுதி உடையவர்களென அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பள்ளி ஒன்றில் எட்டாம் வகுப்பு அல்லது மூன்றும் படிவம் தேர்ச்சி பெற்றவர்கள்" என்று சொல்லப்படுகிறது. மூன்றும் படிவம் தேர்ச்சி பெற்றவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. யில் தேர்ச்சி பெற்றவர்கள் என்று இரண்டு விதமாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதால், இதிலே எந்தத் தகுதியை அடிப்படையாக வைத்துத் தேர்ந்தெடுககப்படுகிறார்கள்? 9-00 a.m.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இராணுவத்தில் சேவை செய்தவர்களைப் பொறுத்துத்தான் மூன்றும் படிவம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் அந்தச் சலுகை இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, 'கிராம சேவக்' என்ற சொல் நல்ல தமிழாக அமையவில்லை. 'ஊர்த்தொண்டர்' அல்லது 'ஊர் ஊழியர்' என்று மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 'கிராம சேவக்' என்ற பெயர் வைத்திருப்பது எல்லோருக்கும் புரிகிறது. கிராம ஜனங்கள் கூட அதைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில் இருப்பதால், அதை மாற்ற வேண்டாம் என்று கருதுகிறோம்.

திரு. ம. கமலநாதன்: அமைச்சர் அவர்கள், 'இராணுவத்தில் சேவை செய்தவர்கள்' என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் அச்சிட்ட பதிலைப் படித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதில், "அங்கீகரிக்கப்பட்ட பள்ளி ஒன்றில் எட்டாம் வகுப்பு அல்லது மூன்றும் படிவம் தேர்ச்சி பெற்றவர்கள் அல்லது முன்னாள் ராணுவ சேவையில் இருந்தவர்கள் விஷயத்தில் இந்தியப்படை இரண்டாம் வகுப்புத் தேர்ச்சிபெற்றவர்கள்" என்று இருக்கிறது. மூன்றும் படிவம் தேர்ச்சி பெற்றவர்கள் என்ற

[14th March 1964

ஒரு நிலையும், எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்கள் என்கிற நிலையும் இருக்கிறது. இதிலே எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆங்கிலத்தில் " Persons who have passed the VIII standard or III Form of a recognized school or the Indian Army Class II standard in the case of ex-servicemen" என்று இருக்கிறது. தமிழில் மொழி பெயர்த்ததில் தவறோ என்னவோ.

கனம் சபாநாயகர் : தமிழ் மொழிபெயர்ப்பில் ஏதோ தவறு இருக்கிறாப்போல் இருக்கிறது. Perhaps the words " In the case of ex-servicemen " has been omitted in the translation.

புலவர் கா. கோவிந்தன் : " இராணுவ சேவையில் இருந்தவர்கள் " என்ற தொடரை வாக்கியத்தின் முன்னே போட்டுவிட்டால் சரியாகப் போய்விடும்.

திரு. து. ப. அழகமுத்து : (பி) பிரிவில் " குறைந்த பட்ச பொதுக் கல்விக் தகுதியுடையவர்கள் " என்று ஜெனரலாக இருக்கிறது. இதற்கு விளக்கம் தேவை.

MR. SPEAKER : I think no technical qualification is necessary.

SRI M. V. KARIVENGADAM : May I know the minimum qualification that is prescribed?

MR. SPEAKER : The " minimum qualification " is prescribed below. Of course I agree that it requires clarification.

THE HON. SRI R. VENKATARAMAN : May I explain the position, Sir? Ordinarily when we use the word " minimum general qualification " in regard to Government service, it means that the candidate should have passed the S.S.L.C. examination with 40 per cent marks in English and Tamil. That is the general standard which one should possess for entry into Government service. A person might have been declared eligible for college course. A man might have passed the matriculation examination of the Madras University and he would have been eligible for college course. He will come under category (c). Then the fourth category is post-basic lower certificate-holders. The last category is those who had passed the VIII Standard or III Form of a recognised school or the Indian Army Class II Standard in the case of ex-servicemen. I think, it is quite logical.

MR. SPEAKER : So " minimum general qualification " means he must have got 40 per cent in Tamil and English in the S.S.L.C. examination.

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, that is the qualification to be taken into account for Government service.

14th March 1964]

திரு. து. ப. அழகமுத்து : கனம் அமைச்சர் அவர்கள் கூறியதில் " persons declared eligible for college course " என்று இருக்கிறது.

THE HON. SRI S. M. A. MAJID : The following qualifications have been prescribed for the posts of gramasevaks, Grade II :—

The candidate should have completed his S.S.L.C. (i.e., must have appeared for the Public Examination in full) and should have obtained not less than 40 per cent of marks in Tamil or in his mother-tongue. Preference will be given to the following persons in the order in which they are specified :—

(a) Persons who have previous experience in social or rural development work and who have taken agriculture as a subject in High School course.

(b) Persons who possess the minimum general educational qualifications.

(c) Persons who are declared eligible for admission to the college course . . .

MR. SPEAKER : That means, a person might have appeared for the S.S.L.C. examination and might have got 40 per cent in English and Tamil. That is enough. He need not have passed the examination. It is enough if he had been admitted to the S.S.L.C. examination and got 40 per cent in English and Tamil.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : " கம்ப்ளீட் " செய்திருந்தால் போதும்.

SRI M. V. KARIVENGADAM : The minimum qualification must have been prescribed.

திரு. து. ப. அழகமுத்து : முதலில் கொடுத்திருக்கும் விளக்கமே போதுமானதாக இருக்கிறது. (பி) விளக்கம் தேவை இல்லை என்று கருதுகிறேன்.

திரு. ம. கமலநாதன் : அரசியல் தியாகிகளும் அவர்களது குடும்பத்தினரும் எந்த அடிப்படையில் கிராம சேவக்குகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : " பொலிடிகல் ஸஃபரர்ஸ் " என்ற முறையிலே அவர்களுக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : அரசியல் தியாகிகளும், அவர்களது குடும்பத்தினரும் கிராம சேவக்குகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதிலே படிப்பு முறையிலே விதி விலக்கு இருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : படிப்பு விஷயத்திலே விதி விலக்கு இல்லை. வயது விஷயத்திலே விதி விலக்கு இருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : கிராம சேவக் பதவியில் எடுத்துக் கொள்ளப்படும்போது, அரசியல் தியாகிகளுக்கென்றே சில சலுகைகள் அளித்து அவர்களையோ, அவர்களுடைய குடும்பத்தினரையோ அந்த பதவிகளில் எடுத்துக்கொள்வதால், கிராமக் காங்கிரஸ் கமிட்டி அமைக்கக்கூடிய அளவுக்கும் அவர்களுக்குத்

[14th March 1964

துணிவு வந்துவிட்டது. விவசாயத்தில் கவனம் செலுத்தும் வகையில் இத்தகைய அரசியல் தியாகிகளுக்கு கிராம சேவக் பயிற்சி கொடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இராணுவ வேலை செய்துவிட்டு ஓய்வு பெற்றவர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கும்போது, குறிப்பாக மூன்றும் படிவம் படித்திருந்தால் போதும் என்று வைத்திருக்கும்போது, அரசியல் தியாகிகளுக்குச் சில சலுகைகள் கொடுக்கக் கூடாதா ?

திரு. எம். வி. கரிவேங்கடம் : இந்தப் பதவிக்கு வருகிறவர்களுக்குப் பல தகுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பலர் விண்ணப்பம் செய்து கொள்கிறார்கள். அரசியல் தியாகிகள் குடும்பத்தினரும், இராணுவத்தில் பணிபுரிந்தவர்களும் விண்ணப்பம் போடும்போது, இதில் யாருக்கு முதல் சலுகை கொடுக்கப்படும் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எல்லா விவரங்களும் ஸ்டேட்மெண்டில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : கிராம சேவக்குகள் பதவிக்கு விண்ணப்பிக்கின்றவர்களுக்கு கல்வித் தரத்திலே பல கோளாறுகள் இருக்கின்றன. விளக்கமாகப் புரியவில்லை என்று இப்பொழுது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. அதே மாதிரி அவர்கள் வேலையிலும் சில கோளாறுகள் இருக்கின்றன. அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

(பதில் இல்லை.)

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in the paper placed on the Table of the House it has been stated that the candidates who have passed the two-year course in Agricultural Science at the Rural Institute, Gandhigram in Madurai district and in the School of Agriculture at the Ramakrishna Mission Vidyalaya, Perianaickenpalayam in Coimbatore who have passed the examination conducted by the National Council for Rural Higher Education and who are found suitable for appointment as gramasevaks after an interview will be entertained as gramasevaks. May I know whether these institutions are getting any assistance from the Govenoment or are they recognised by the Madras Government?

THE HON. SRI S. M. A. MAJID : At present, I do not have the information. I request the hon. Member to put a separate question.

திரு. வி. எஸ். எஸ். மணி: பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் கிராம சேவக்குகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதாகத் தெரிகிறது. கிராம சேவக்குகளுக்கு குவாலிபிகேஷன் குறைவாக இருப்பதால் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளாக அவர்களை நியமித்தால் அவர்கள் வேலையைச் சரிவரச் செய்வார்களா ?

14th March 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. பரிசீலனை செய்து அதிலே முடிவு எடுக்க வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அரசியல் தியாகிகளுக்குக் கிராம சேவக்குகள் உத்தியோகம் கொடுப்பது பற்றியோ, 'காஷ் கிராண்ட்' கொடுப்பதைப் பற்றியோ எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அரசாங்கப் பணத்தை வாங்கிக் கொண்டு ஒரு கட்சிக்கு ஆதரவாக பிரசாரம் செய்வது சரியா ? நியாயமா ?

(கனம் சபாநாயகர் மணி அடித்து திரு. ம. கமலநாதனை அழைத்தார்.)

SRI V. KRISHNAMOORTHY : I do not know what has happened to my supplementary question.

MR. SPEAKER : That question has been disallowed. The hon. Member should know that it has been disallowed even without his being informed about it. If the hon. Member wants, I can give my ruling that it has been disallowed.

SRI V. KRISHNAMOORTHY : I want to convince the Hon. Minister and I do not want to convince the Speaker . . .

MR. SPEAKER : The hon. Member need not convince me.

(திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி எழுந்தார். மணி அடிக்கப்பட்டது.)

திரு. ம. கமலநாதன் : ராணுவ சேவையில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குச் சலுகை கொடுக்கலாம் என்று இருக்கிறது. புதிதாக எக்ஸ்-சேர்விஸ்மென்னுக்கு சலுகை எடுக்கப்பட்டிருக்கிறது. கிராம சேவக்குகள் டிரெயினிங்குக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற நேரத்தில் எக்ஸ்-சேர்விஸ்மென்னுக்குச் சலுகைகள் அளிக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது சம்பந்தமாகத் தகவல் இல்லை. தனியாக எழுதி அனுப்பினால் கவனிக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : அரசியல் தியாகிகள் என்று மட்டும் பார்க்காமல், விநோபா அடிகளுடைய பூதான இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடம் தரப்படுமா ?

கனம் சபாநாயகர் : தியாகிகளுக்கு 'டெபனிஷன்' இருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அரசியல் தியாகிகள் என்றால் பொதுவாகச் சுதந்திரப் போராட்ட காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அவர்களுடைய குடும்பம் என்று அர்த்தம்.

MR. SPEAKER : " Thyagigal " has got a separate definition. If the hon. Member wants, he can put a separate question for that and get a clear definition.

[14th March 1964

திரு. டி. கார்ச்சா கவுடர்: மேஜையின் மேல் வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே கண்டுள்ள யோக்கியதாம்சங்கள் உள்ள கிராமாதி காரிகளை, கர்ணங்களை கிராம சேவக்குகளாக நியமித்துவிட்டால் நல்லது அல்லவா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இப்போதுள்ள விதிமுறைப்படி அம்மாதிரி செய்வதற்கில்லை.

Officials of Registration Department

*270 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) whether the Government have received any representation from Sri R. S. Veerappa Chettiar, M.L.A., regarding the revision of the scale of pay and promotion of Sub-Registrar of Assurances and Staff during September 1963; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) ஆம்.

(இ) அரசாங்கம் இந்த முறையீட்டைப் பரிசீலனை செய்தது. சம்பளக் கமிஷன் சிபாரிசுகளுக்கிணங்க இது விஷயமாய் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால், மேலும் எந்த விதமான நடவடிக்கையும் தேவையில்லையென்று அரசாங்கம் கருதியது. கனம் அங்கத்தினருக்குப் பதிலும் அனுப்பப்பட்டு விட்டது.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65—*cont.*

DEMAND NO. XXV—WELFARE OF SCHEDULED TRIBES, CASTES AND OTHER BACKWARD CLASSES.

THE HON. SRI P. KAKKAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,45,85,500 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward classes."

SRI P. MURUGAIYAN: Sir, I move—

"That the allotment of Rs. 4,45,85,500 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward classes be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demand and the cut motion are before the House for discussion.

14th March 1964]

***கனம் திரு. பூ. கக்கன்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, ஹரிஜன நலத் துறையின் வாயிலாக 1963-64-ல் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும், 1964-65-ம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களை விளக்கியும் புத்தக வடிவில் கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய மேலான ஆலோசனைகளைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகின்றேன். முன்னுரையாக, தங்களுடைய அனுமதியுடன் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சென்ற ஆண்டு ஹரிஜன நலத்துறை மானியத்தின் போது முன்னுரையாகச் சொன்ன அதே கருத்துக்களையே இந்த ஆண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

பின் தங்கிய ஹரிஜன சமுதாயத்தை அரசியல், பொருளாதார, கல்வி, சமூகத் துறைகளில் உயர்த்துவதே அரசினரின் லட்சியமாகும் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் நன்கு அறிவார்கள். அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்களின் மூலமாகவும், பொது மக்கள் கொடுத்த ஒத்துழைப்பினாலும், அதிகாரிகள் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகளாலும் தீண்டாமை என்னும் தீய பழக்கம் நகரங்களை விட்டு நீங்கி, ஒரு சில குக்கிராமங்களில் மட்டும் இன்னும் குடி கொண்டிருப்பதை நன்கு அறிவோம். மக்களுடைய மன மாற்றத்தாலும், சட்டங்களின் வாயிலாகவும், சமுதாயத்தில், குறிப்பாக, உயர்ந்த நிலையிலுள்ள மக்களாலும், இந்து மதத்தின் சின்னங்களாக விளங்குகிற மடங்கள், ஆலயங்கள் முதலியவைகளை நிர்வகித்து வரும் ஆன்றோர்களின் சீரிய பணிகளாலும் தீண்டாமையை நாம் அறவே ஒழிக்கமுடியும். அத்தகைய முறையில் அவர்கள் இந்தப் பணியில் ஒத்துழைக்கவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். எல்லோரும் ஒத்துழைத்து, ஒருமுகமாக இருந்து, இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்கின்ற ஒரு முடிவுக்கு வந்தால் தீண்டாமை என்னும் நோய் தமிழகத்தில் இல்லை என்று விரைவில் சொல்லுகின்ற ஒரு வாய்ப்பைப் பெறுவோம். அந்த நிலை நிச்சயமாக வந்தே தீரும் என்று நம்பலாம். தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் பாரத நாட்டிற்கு வழிகாட்டிய தமிழகம், மேன்மேலும் அதிகக் கவனம் செலுத்தி, தமிழகத்திற்கு எவ்வித இழுக்கும் வாராதபடி விரைவில் செய்ய முடியும் என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதில், அரசாங்கத்தின் சட்டங்கள் ஒருபுறம் இருந்தாலும், அந்தச் சட்டங்கள் வாயிலாக மட்டும் நாம் பரிபூரண வெற்றியைக் காண முடியாது. இதில் முக்கியமாக பொதுமக்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். அவர்களுடைய ஒத்துழைப்பு இருக்குமானால், இந்த தீண்டாமை ஒழிப்புப் பிரச்சினையை வெட்டித் தகர்த்தெறிய முடியும் என்பது என்னுடைய ஆழ்ந்த நம்பிக்கை. வரப்பு வெட்டி, வாய்க்கால் வெட்டி, கட்டு எடுத்து, கலம் கலமாகக் குவிப்பவர்களுக்கு, குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்காமல் இருப்பது தர்மத்திற்கு ஒவ்வாத ஒன்று. இதனை நினைத்துத்தான், அண்ணல் காந்தியடிகள் பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்க ஹரிஜனங்களை அனுமதிக்க வேண்டுமென வற்புறுத்திச் சொன்னார். பெரிய நகரங்களில் சரிநிகர் சமானமான

நிலைமை இருந்தாலும் கூட, கிராமப் புறங்களில் ஒரு சில குக்கிராமங்களில் ஹரிஜன மக்கள் ஹோட்டல்களில் சாப்பிடக்கூடாது; கிணறுகளில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று நிலைமைகள் இருக்கின்றன. அவர்களுடைய மனதையும் மாற்ற வேண்டும். ஆங்காங்கு குறிப்பாக சமூகப்பணியில் ஈடுபட்டிருக்கும் அன்பர்கள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லி அப்பேர்ப்பட்ட எண்ணங்கள் இருந்தால் அவற்றை மாற்றுவதற்கு முயலவேண்டும். குறிப்பாக கிராமங்களிலேயே பாகுபாடு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் போலீஸ் அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஜீ.ஓ. வாயிலாகக் கூறியிருக்கிறோம். அதே சமயத்தில் மக்கள் மனமாற்றம் அவசியம் என்பதை வலியுறுத்தி வருகிறோம். இந்த நிலைமையைப் போக்க கிராமங்களில் இருக்கும் பெரியவர்கள், அன்பர்கள் முன்வரவேண்டுமென்று சபையின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி சொல்லும்போது நிச்சயமாக மக்கள் மனம் மாறுவார்கள். நம்மூரில் உள்ள பெரியவர்களே இப்படி சொல்கிறார்கள், ஆகவே நாமும் அவர்களுக்கு மதிப்பு கொடுக்கின்ற வகையில், மற்றவர்களை தீண்டத்தகாதவர்கள், அவர்கள் நம்முடைய கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று சொல்வது மகா தப்பிதம். இது மனச்சாட்சிக்கு விரோதமான செயல், நம்முடைய கிராமங்களில் இப்படியெல்லாம் இருக்கக்கூடாது. நமக்குப் பெருமையும் புகழும் ஏற்படுத்த வேண்டும் என்று அங்குள்ள மக்களும் முன் வருவார்கள். குறிப்பாக இந்து மதத்தில் உள்ள இந்த தீண்டாமை என்னும் மாசை போக்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும், இது அனைவருடைய கடமை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் குறிப்பாக மற்ற மதங்களை எடுத்துக்கொண்டால்—கிருஸ்துவ மதத்தை எடுத்துக்கொண்டால், அதிலுள்ளவர்கள் மிகவும் நெருங்கிப் பழகுகிறார்கள். அதே நோத்தில் இந்து மதத்தில் உள்ளவர்கள் இந்த மதம் ஆதியும் அந்தமும் இல்லாத மதம் என்று எல்லாம் சொல்லிக்கொள்கிறோமே தவிர மற்றவர்களைப்போல் நடப்பதில்லை. வேறு மதங்களில் எல்லாம் மக்களுடன் நெருங்கி பல நல்ல பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதை நான் சொல்வதால் மதப்பித்துப் பிடித்தவன் என்று அர்த்தமல்ல. இந்து மதத்திலுள்ளவர்கள் மற்றவர்களுடன் நெருங்கி பணியாற்ற வேண்டியது நம்முடைய கடமை என்பதை எல்லோரும் உணரவேண்டும். இன்றைக்கு முஸ்லீம் மதத்தினரை எடுத்துக் கொண்டால், அவர்கள் பள்ளிவாசலுக்கு செல்கின்ற நோத்தில் எந்தவித வித்தியாசமும் இல்லாமல் போகிறார்கள். கிருஸ்தவர்களை எடுத்துக்கொண்டால் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் தேவாலயத்திற்குப் போகிறார்கள். ஆனால் இந்து மதத்திலுள்ள நிலைமையை எடுத்துக்கொண்டால் அரிஜனங்கள் உள்ளே போவதற்கு தடைபோடுகின்ற மனப்பான்மை தான் இருந்து கொண்டிருக்கிறது. இது மாற வேண்டும். அவ்விதம் செய்வது, எந்த தெய்வத்தை வணங்க வேண்டும் என்று போகின்றோமோ அந்த தெய்வத்திற்கு நிந்தனை செய்வது போல் தான் ஆகும்.

இன்று நாம் பஞ்சாயத்துக்களை எல்லாம் ஏற்படுத்தி மக்களுக்கு பலவிதமான வசதிகள் செய்து கொடுத்து வருகிறோம். அதே நோத்தில் தீண்டாமை முதலிய விஷயத்தில் பல நிபந்தனைகளை நாம் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தியிருக்கிறோம். இருந்தாலும் கூட மக்களாகவே முன் வந்து இத்தகைய தீய பழக்கத்தை போக்குவதற்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக சொல்லவிரும்புவது, தமிழ்மறை வகுத்த வள்ளுவர் சொல்லியிருப்பது போல் . . .

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்- சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான் . . . ."

என்பது போல் பிறப்பில் அனைவரும் ஒன்றே. ஆனால் செய்கின்ற தொழில்களில் வேண்டுமானால் வித்தியாசம் இருக்கலாம். அதோடு இப்போது நாம் ஜனநாயக சோஷியலிஸத்தை கைக்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்ற இந்த நோத்தில், நாம் எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்கின்ற மனப்பான்மையுடன் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாதவகையில் தமிழகத்திலுள்ள மக்கள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. நா. ராசாங்கம்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று அரிஜன நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மான்யத்தின் மீது எங்கள் கட்சியிலிருந்து கொடுக்கப் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப்பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். முதன்முதலில் இந்த அரிஜன நலத்துறை என்ற பெயர் மாற்றப்படவேண்டும் என்று போன ஆண்டிலேயே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். ஆனால் இன்னும் மாற்றாமல் அப்படியேதான் இப்போதும் அதே பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரிஜன நலத்துறை மீது செலவு செய்யப்படுகிற செலவினங்களைப் பார்த்தால் இதிலுள்ள அத்தனை பணமும் அரிஜனங்களுக்காகவே தான் செலவு செய்யப்படுகிறது என்ற பொறாமை உணர்ச்சி மற்ற ஜாதி இந்துக்களிடத்தில் ஏற்படுகிறது. இதை மாற்ற முயல வேண்டும். அது மட்டுமல்ல, அமைச்சர் அவர்கள்கூட வருத்தப் பட்டுக்கொண்டார்கள். இன்றைக்கு சமூகத்தில் இருக்கின்ற தீண்டாமையைப் போக்குவதற்கு எல்லா கட்சி தலைவர்களுக்கும் வாய்ப்பு இருக்கின்ற நோத்தில் எல்லாம், இதற்கான பிரச்சாரத்தில் ஈடுபட்டு, சமூகத்தில் ஏற்றத் தாழ்வு இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். மற்ற மதங்களை எடுத்துக் கொண்டால் மதம் என்று இருந்தாலும், ஜாதி என்பது கிடையாது. ஆனால் இந்து மதத்தை எடுத்துக் கொண்டால் ஜாதி என்பது உருவாகியுள்ளது. ஆகவே இதை மட்டும் எடுத்துக்காட்டுவதற்காக ஒரு இலாகாவின் பெயர் இருக்க வேண்டியது அவசியமில்லை. அந்தப் பெயரை பொருளாதார அடிப்படையில் மாற்றினால் எதிர்காலத்திற்கும் நல்லது, சமூகத்திற்கும் நல்லது என்கின்ற கருத்தை சென்ற ஆண்டில் குறிப்பிட்டேன்.

வந்தாலும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னதொழிய, ஹரிஜன மாணவர்களுக்கு எத்தனை, பாக்வேர்ட் க்ளாஸஸ் மாணவர்களுக்கு எத்தனை, மற்றவர்களுக்கு எத்தனை என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. ஹரிஜன மாணவர்கள் பூராவும் வருகிறவர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை.

திரு. நா. ராசாங்கம்: இடங்களில் விகிதாசாரம் இருக்கிறது. ஜனநாயக முறையில் ஜனத் தொகை அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையில் பிரத்தியேக சலுகை அவர்களுக்குச் செய்யவில்லை என்றாவது ஒத்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் நான் சொல்லுகிறேன். ஜனத்தொகைப்படி கொடுக்கவேண்டுமென்று சொல்லுவதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஹரிஜனங்களுக்காக எல்லாவற்றையும் செய்கிறோம் என்ற பேச்சு இருக்கக் கூடாது, சொல்வதும் சரியல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். மருத்துவக் கல்லூரி என்று உதாரணத்திற்காகச் சொன்னேன். மற்ற இடங்களிலும் இந்த மாதிரியான நிலைமை இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹரிஜன மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பரீட்சைக்கு செல்லும்போது அங்கே மற்றவர்களுக்கு இருக்கும் தகுதியே அவர்களுக்கும் எதிர்பார்க்கப்படுகிறது. ஹரிஜனங்கள் மற்றவர்களுடைய தகுதி அளவுக்கு வர முடியுமா? அவர்கள் அப்படிப்பட்ட சூழ்நிலையில் படித்தார்களா, வசித்தார்களா, பழகினார்களா? அதைக் கொஞ்சம் அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும். 5 அல்லது 7 ஆண்டு காலம், இன்னும் அதிகமாகப் போனால் 10 ஆண்டு காலம் பி.ஏ., எம்.ஏ. பட்டதாரிகள், ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள், சர்க்கார் சர்விஸில் சேர்ந்து பணியாற்றிய பிறகு, எந்த சர்விஸில் இருந்தாலும், 10 ஆண்டுகள் உத்தியோகத்தில் அனுபவப்பட்டிருக்கிறார்கள் என்று அந்த அனுபவத்தை வைத்து தேர்வுக்கு உரிய மற்ற விஷயங்களை கவனிக்காமல், யோக்யதை இருக்கிறது என்று, அதையே யோக்கியதாம்சமாகக் கருதி, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுக்கு அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று போன ஆண்டும் சொன்னேன், அதையும் இப்போது நினைவுபடுத்துகிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. ரா. சுப்பிரமணியன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த ஹரிஜன மான்யத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் நண்பர் ராஜாங்கம் அவர்கள் பேசினார்கள். ஏதோ பேசும்போது வீட்டிலே வயது ஆனவர்கள் 'அந்தக் காலத்திலே' என்று அந்தக் காலத்தில் நடந்ததைத்தான் சொல்லிக்கொண்டிருப்பார்களே தவிர இப்போது எவ்வளவு நல்லது நடந்தாலும் அதை மறந்தே போய் விடுவார்கள். அந்தக் காலத்தில் அப்படிச் செய்தோம், இப்படிச் செய்தோம் என்று பேசு

வார்கள். இப்போது எவ்வளவு நல்ல காரியங்கள் நடந்திருக்கின்றன? அதை விட்டு அந்தக் காலத்தில், பிரிட்டிஷ் காலத்தில் செய்ததுதான் ஞாபகத்திலே இருக்கிறதே தவிர இந்தக் காலத்தில் செய்வதையெல்லாம் விட்டு விட்டு, அந்தக் காலத்தில் செய்ததுதான் அவர்களுக்குப் பெரிதாகத் தெரிகிறது. இந்தக் காலத்தில் நல்லமுறையில் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். எத்தனையோ முறையில் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான முறையில் மேலும் யோசனைகள் சொல்லியிருக்கலாம். அந்த மாதிரிச் சொல்லியிருந்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

நாம் சுதந்திரம் அடைந்து 16 ஆண்டு முடிந்து 17-வது ஆண்டில் இருக்கிறோம். இந்த 16 ஆண்டில் ஹரிஜன சமூகம் ரொம்பவும் வேகமாக முன்னேறிக் கொண்டுதான் வருகிறது. 1949-லிருந்து தனி டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி, தனிச் சலுகை கொடுத்து எல்லா விதமான முன்னேற்றங்களையும் நாம் அவர்களுக்கு ஏற்படும்படி செய்து கொண்டு வருகிறோம். ஆனால் இதில் நான் என்ன சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் என்றால் நாம் செய்துவருவதிலே, அவர்களுக்குள்ள குறைகள் ரொம்ப அதிகம், நாம் அவர்களுக்காகச் செய்யக் கூடிய நன்மைகள் எல்லாம் எதிர் பார்த்த அளவுக்கு, போதிய அளவுக்கு, இல்லை. அதைத்தான் இப்போது சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்காக தனி டிபார்ட்மெண்ட் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஜில்லாவாரியாக ஆபிஸர்களை நியமித்து வருகிறோம். அது நல்ல முறையில் இயங்க வேண்டும். இதைத்தான் நான் அடிக்கடி வற்புறுத்தி வருகிறேன். இப்போதும் வற்புறுத்துகிறேன். நாம் ஏதோ இங்கு செய்வது போக ஜில்லா லெவலிலே பார்த்தால் கலெக்டர்தான் செய்கிறார். இன்றைக்கு இங்கே இருக்கிற டைரக்டருக்கு கலெக்டர் பேரில் எந்த வித அதிகாரமும் கிடையாது. போர்டு மெம்பர் ஒருவரை டைரக்டராக நியமித்தால் கலெக்டர் மீது அதிகாரம் செலுத்த முடியும். இந்த மாதிரியாக இப்போது இருக்கிற முறையில் எந்த வித அதிகாரமும் செலுத்த முடியவில்லை. போர்டு மெம்பர் ஒருவரை டைரக்டராகப் போட வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். இதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று ஒன்றும் புரியவில்லை. அப்படி ஏதாவது கஷ்டம் இருந்தால் அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஜில்லாவாரியாக எடுக்கும்போது வெல்ஃபேர் ஆஃபிஸர் இருந்து வேலை செய்துகொண்டு வருகிறார்கள். அவர்களை நல்லவர்களாகப் பார்த்துப் போட வேண்டுமென்பதோடுகூட, கீழே வேலை செய்யக் கூடிய தாசில்தார் லெவலிலே இருக்கிறவர்கள் அவர்கள் வேலை காரணமாக அடிக்கடி மாறுதல் ஏற்படுகிறது. அந்த அளவிலே வேலை செய்யக்கூடியவர்களையும் வேண்டாதவர்கள் இருந்தால் வெல்ஃபேர் டிபார்ட்மெண்டிலே தள்ளு என்ற மனோபாவம் இருந்து வருகிறது. அது குறையவேண்டும். அந்த இலாகாவிலே ப்ரொபேஷனர்களாக இருக்கிறவர்களைக் கொண்டு வந்து போட வேண்டும். அல்லது ப்ரொமோஷனுக்கு காத்துக்கொண்டு இருக்கிற தாசில்தார்களைப் போட்டால் அவர்கள் சுறுசுறுப்பாக

வேலை செய்வார்கள். வெல்ஃபேர் டிபார்ட்மெண்டில் வேலை செய்பவர்களுக்கு உத்தியோக உயர்வுக்கு தனிச் சலுகை கொடுக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைபிடித்தால் இன்னும் தீவிரமாக அங்கே வேலை நடக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடி பார்த்தால் நாம் அதிகப்படியாகவே பணம் ஒதுக்கிக் கொண்டு வருகிறோம். அப்படி ஒதுக்கினாலுங்கூட, அதைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர்கள் ஜனத்தொகை எண்ணிக்கைக்கு பணம் ஒதுக்குவது ரொம்ப குறைவாக இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம்? வெல்ஃபேர் என்று எடுக்கிறதிலே ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் இரண்டையும் மாத்திரம் எடுத்துக்கொண்டு சொல்லுகிறோம். ஹரிஜனங்களுக்காக 245 லட்சம் ரூபாயும், ட்ரைப்ஸுக்கு 41 லட்சம் ரூபாயும் சேர்த்து மொத்தம் 286 லட்சம் ரூபாய். இதைத்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு ஒதுக்கி வேலை செய்கிறோம். எத்தனை பர்ஸெண்ட் ஒதுக்கியிருக்கிறோம்? ஒதுக்கியிருக்கும் தொகையில் எத்தனை சதவிதம் வருகிறது என்று பார்த்தால் .94 வருகிறது. ஆனால் கொஞ்சமாக பணத்தை ஒதுக்கி விட்டு அதிகமாகச் செலவு செய்கிறோம். 1964-65-க்கு 99 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ட்ரைப்ஸ், ஹரிஜன்ஸ் இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் மொத்த ஜனத்தொகையில் 5-ல் ஒரு பங்கு இருக்கும் ஹரிஜனங்களுக்கு 1 சதவிதம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கி நாம் செலவு செய்தால் நல்ல முறையில் வேலை செய்ய முடியுமா? நிரம்பப் பணம் ஒதுக்க வேண்டும். நிரம்பப் பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லுகிறோமே தவிர, ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் இருக்கிற வித்தியாசம் இருக்கிறது. பணத்தை அதிகமாக ஒதுக்கி வேண்டிய சலுகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அவர்களுக்கு சமூகத்தில் இருக்கக்கூடிய தடையை நீக்கவேண்டும். அந்தத் தடையை நீக்க பலவித சட்டங்களை நாம் செய்திருக்கிறோம். இவைகளையெல்லாம் அமல் படுத்த வேண்டும். அவர்கள் சமூக முன்னேற்றம் ஏற்படவேண்டும். இது மிக முக்கியமான பிரச்னை. சமூக முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்றால்; அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி ஒன்று, சட்ட மூலமாகச் செய்யவேண்டும்; இன்னொன்று பிரசாரம் மூலமாகச் செய்யவேண்டும். இரண்டையும் பார்த்தால், சட்டத்தின் மூலமாகச் செய்வதும் 'நில்'; பிரசாரத்தின் மூலமாகச் செய்வதும் 'நில்'. ஏதோ நடந்திருக்கிறது என்று சொல்லலாம். முன்பு இருந்த அளவில் இல்லை. எதிர் பார்த்த அளவு முன்னேறவில்லை என்று சொல்லுகிறேன். சட்டத்தின் மூலமாகச் செய்கிறது என்றால், யாராவது கேஸ் போடுவதாக இருந்தால் போலீஸ் டிபார்ட்மெண்டில், 'யாரும் முன்னுக்கு வருவது கிடையாது. இன்றைக்கு அவரவர்களைக் கொண்டே கேஸ் போடவேண்டும், கேஸ் போட்டு விட்டால் சாட்சி இருக்காது, இதே தொந்தரவாகப் போய் விட்டது' என்று சொல்லுகிறார்கள்.

இந்த பிரசாரத்தை யாரை நம்பி நாம் செய்துகொண்டிருக்கிறோம், டெப்யூடி சேவக்கை நம்பி செய்துகொண்டிருக்கிறோம். டெப்யூடி சேவக்காக என்ன ஜாதியைச் சேர்ந்தவர்களைப் போடுகிறார்கள் என்றால், அநேகமாக 100-க்கு 75 ஹரிஜனங்களைத் தான் போடுகிறார்கள். எம்.எல்.ஏ.க்களுக்கே ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. டெப்யூடி சேவக் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணுகிற பையன் அங்கே போய் என்ன பிரசாரம் செய்துவிட முடியும், ஒன்றும் பிரசாரத்தின் மூலம் செய்துவிட முடியாது. நாம் வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாமே தவிர, எதிர்பார்த்த அளவுக்கு எந்த விதமான பலனும் ஏற்படாது. உண்மையிலேயே நமக்கு ஆர்வம் இருக்குமேயானால், இது ஒரு 'ஹ்யூமன் பிராப்லம்', நமக்கு எண்ணம் இருக்குமானால், சட்டத்தின் மூலமும் பிரசாரத்தின் மூலமும் நாம் எந்த அளவுக்கு அவைகளைத் தீவிரப்படுத்தி இந்த சமூகத் தடைகளை ஒழிக்க முடியுமோ அந்த அளவுக்கு ஒழித்தே ஆகவேண்டும். ஏனோ தானோ என்று இருந்தால், எந்த விதமான பிரயோசனமும் யாருக்கும் இல்லை என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டத்தைப் பொறுத்தவரையில், ஏன் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு இதற்கென்று தனியாக ஒரு ஹெட்கான்ஸ்டபிளை போடக்கூடாது? கள்ளர் ரெக்லமேஷன் என்பதற்காக தனியாக ஒரு ஹெட்கான்ஸ்டபிள் போட்டு புள்ளி விவரம் சேகரித்து, விசாரித்து, எங்கே கஷ்டங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் கேஸ்கள் போட்டார்கள். அம்மாதிரி இது விஷயமாக ஒன்றும் செய்யவில்லை. ஜில்லா லெவலில் ஒருவரும் கிடையாது. போலீஸ் ஸ்டேஷன் லெவலில் இல்லாவிட்டாலும், தாலுகா லெவலிலாவது இதற்காக ஒரு போலீஸ் ஆபிஸரைப் போடவேண்டும். இல்லாவிட்டால் வேலை ஒன்றும் நடக்காது. போலீஸ் ஸ்டேஷன் லெவலில் ஒருக்காலும் செய்யப்போவதில்லை. நான் என்ன சொல்லுகிறேன் என்றால், தாலுகா லெவலிலாவது பிரத்தியேகமாக ஒரு போலீஸ் அதிகாரியைப் போட்டு ஹரிஜனங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை, தடைகளை நீக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இம்மாதிரி விசாரித்து கேஸ் போடுவதற்காக யாராவது ஒரு போலீஸ் அதிகாரி, ஹெட்கான்ஸ்டபிள் லெவலில் தனியாக இருந்தால் ரொம்ப நல்லது என்று நினைக்கிறேன், உண்மையிலேயே இதை தீவிரமாக நடத்தவேண்டுமென்ற எண்ணம் இருந்தால்.

அடுத்தபடியாக, நாம் பிரசாரம் மூலமாகவும் இந்த சமூகத் தடைகளை நீக்கவேண்டும். நான் இது விஷயமாக என்ன சொல்லுகிறேன் என்றால், எத்தனையோ பேர்கள் சமூகத்தில் செல்வாக்குள்ளவர்கள் இருக்கிறார்கள். டெப்யூடி சேவக்குகளையெல்லாம் நீக்கிவிடலாம். அவர்களால் ஒன்றும் பிரயோசனம் கிடையாது. அந்த இடத்திலேயே செல்வாக்குள்ளவர்களை வைத்து, ஒரு கமிட்டி போட்டு 'ஆர்கனைஸ்' பண்ணி பிரசாரத்தை ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். டெப்யூடி சேவக்குகளுக்கு வருஷத்திற்கு எவ்வளவு ரூபாய் செலவழிக்கிறோம்? ரூ. 10,000, 15,000 ஒவ்வொரு ஜில்லாவிற்கும் செலவழிக்கிறோம். அதையே அவர்களுக்கு

'டி.ஏ.', மாதிரி கொடுத்து, ஒரு இன்ஸென்டிவ் கொடுத்து, அந்த இடத்திலேயே செல்வாக்குள்ளவர்களை ஒரு குழுவாகச் சேர்த்து, பிரசாரம் செய்தால் அனுகூலமாக இருக்கும். எங்கள் ஜில்லாவில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் மலையப்பன் அவர்கள், சடகோபாச்சாரியார் அவர்கள் ஆகியோர்கள் தங்கள் வாழ்க்கையையே ஹரிஜனங்களுக்காக அர்ப்பணம் செய்ய தயாராக இருக்கிறார்கள். அந்த மாதிரி இருக்கிறவர்களை ஒன்று சேர்த்து ஒரு குழு அமைத்து, அவர்கள் மூலமாக பிரசாரம் செய்ய வேண்டும். அம்மாதிரி சமூகத்தில் செல்வாக்குள்ளவர்கள் மூலமாக பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்தால், அதனால் பலன் ஏற்படுமே தவிர, இப்பொழுது இருக்கிற முறையில் நாம் ஏதாவது பிரயோசனமாக செய்ய முடியுமா என்றால், முடியாது என்று தான் நான் நினைக்கிறேன். அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் என்ன நினைக்கிறார்களோ தெரியாது.

நாம் இவ்வளவு தூரம் இப்பொழுது நல்லது செய்து கொண்டு வந்தாலும்கூட, முன்பிருந்ததைவிட ஹரிஜனங்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஏற்கனவே ஹரிஜனங்களுக்கு மிராசுதார்கள் ஏதோ 4 படி நெல் கொடுத்தால், அதை வாங்கி மனத் திருப்தியோடு சாப்பிட்டுவிட்டு, தீண்டாமையாவது, தீண்டாமை ஒழிப்பாவது, அதைப்பற்றி யாருக்கும் கவலை இல்லை என்ற நிலை இருந்தது. ஆனால், ஹரிஜனங்கள் மத்தியில் இப்பொழுது ஒரு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி விழிப்பு மற்ற சமூகத்தினருக்கு தடையாக இருக்கிறது. அந்த மாதிரி தடையாக இருக்கும்பொழுது, இரண்டு பேர்களுக்கும் ஒரு 'கிலாஷ்' ஏற்படுகிறது. அம்மாதிரி 'கிலாஷ்' ஏற்படும்பொழுது, சங்கடப்படுகிறவர்கள் ஹரிஜனங்கள்தான். இம்மாதிரி ஒரு விழிப்பு ஏற்பட்டிருப்பதினால், முன்பிருந்ததைவிட இப்பொழுது ஹரிஜனங்களுக்கு கஷ்டங்கள், சங்கடங்கள் அதிகமாக இருக்கின்றன. இதை நீக்குவதற்கு இம்மாதிரியான முறைகளை கையாண்டு, அவர்களுக்கு வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வியில் முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்பதற்காக, நாம் பல ஹாஸ்டல்களை ஏற்படுத்தியிருக்கிறோம். ஹாஸ்டலில் பிள்ளைகளுக்கு சாப்பாடு போடுவதாக இருக்கிறதே தவிர, கல்வித் தரத்தை நாம் கவனிப்பது கிடையாது. ஹாஸ்டலில் படிக்கிறவர்களில் 100-க்கு 25 பேர்கள் கூட எஸ்.எஸ்.எல்.ஸி-யில் பாஸ் செய்வதில்லை. பாஸ் செய்து வேலைக்குப் போய் அமர்கிறவர்கள் 10 சதவிகிதம் கூட இல்லை. எத்தனையோ பேர்கள் 'பைல்' ஆகிவிடுகிறார்கள். அவர்களுக்கு நல்ல முறையில் டியூடர் அல்லது வார்டனைப் போட்டு நாம் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு வழி செய்தால்தான், நல்ல பலன் அளிக்கும். மற்றவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி-யில் 'பைல்' ஆகிவிட்டால் மற்ற தனியார் ஸ்தாபனங்களில் வேலைக்குப் போய் அமர்ந்து விடுகிறார்கள். எத்தனை தான் நாம் சொன்னாலும்கூட, சொந்த ஜாதி என்று கருதி அந்தந்த ஜாதிக்காரர்களைத்தான் வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள். ஹரிஜனங்களைப் பொறுத்த வரையில், எஸ்.எஸ்.எல்.ஸி 'பைல்' ஆனவர்கள் எங்கே போவது? அவர்களுக்கு எந்தவிதமான ஸ்தாபனமும் இல்லை. ஏதோ ஒன்றிரண்டு ஹரிஜனங்கள் பஸ் ரூட்டு கேட்டால்கூட, அவர்களால் மற்றவர்களோடு 'கம்பீட்' பண்ண முடியவில்லை. அவர்களுக்கு 'மார்க்கு' இல்லை என்று தள்ளி விடுகிறார்கள். ஹரிஜனங்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்களுக்கென்று தனி ஸ்தாபனம் கிடையாது. கல்விக்காக நாம் அதிகமாக பணம் செலவழிக்கிறோம். கல்வித் தரம் உயர்ந்ததாக இருக்கும்படி நல்ல வார்டன்களைப் போட்டு, ஹரிஜனங்களுக்கு 'டூஷன்' கொடுத்து, நாம் செலவழிக்கக்கூடிய பணம் பலன் அளிக்கக்கூடிய முறையில், அவர்கள் பாஸ் செய்யும்படி நல்ல முறையில் அவர்களுக்கு கல்வி போதிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவிலே வீட்டு வசதி இல்லாதது. அந்தத் தொந்தரவு ஸ்டேட்டிலே மற்ற ஜில்லாக்களைவிட, தஞ்சை ஜில்லாவிலே அதிகமாக இருக்கிறது. எங்கள் ஜில்லாவில் குடியிருப்பதற்கு இடமே அவர்களுக்கு சொந்தமாக கிடையாது. இந்தப் பிரச்னை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். குடியிருப்பதற்கு ஏதாவது வசதி செய்யவேண்டும். இதற்காக இப்பொழுது ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியார் பல இடங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சீக்கிரம் ரிபோர்ட்டை சமர்ப்பிப்பார்கள் என்று நினைக்கிறேன். ஏதாவது ஒரு திட்டம் போட்டு, 5 வருஷம், 7 வருஷம் என்று நிர்ணயம் செய்து, அதற்குள் இந்த வீட்டு மனைப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும். அம்மாதிரி ஏதாவது ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டு, அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே ஏதாவது பணம் ஒதுக்கி, தீவிரமாக வேலை செய்தால்தான் இந்த வீட்டு மனைப் பிரச்னை தீரும். இல்லாவிட்டால் இது தீரவே தீராது. . . . .

(கனம் சபாநாயகர் இந்த சமயத்தில் மணி அடித்தார்).

திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய ஹரிஜன மான்யத்தின்மீது சில யோசனைகளைச் சொல்லுவதற்கு ஆசைப்படுகிறேன். ஹரிஜனங்கள் பொருளாதார துறையிலும், கல்வி கலாச்சாரத் துறையிலும் மிகவும் பின் தங்கியவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதற்காக, விசேஷமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, அதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, செலவு செய்துகொண்டு வருகிறார்கள். மேலும், ஹரிஜனங்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கு வேண்டி, அதற்காக தனியாக ஒரு இலாகாவும் இன்றைய தினம் செயல்பட்டு வருகிறது என்பதை நாம் அறிவோம். இந்த சந்தர்ப்பத்தில் ஹரிஜனங்களுடைய நலனை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு பார்ப்போமானால், ஹரிஜனங்களுக்காக செலவழிக்கக் கூடிய தொகை முழுவதும், அவர்களுடைய முன்னேற்றத்திற்காக செலவழிக்கப்படுகிறதா என்பதை அரசாங்கம் மிகவும் அக்கறையோடு பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக படிப்பு, இதர உதவிகள் செய்துகொண்டிருந்தாலும், இன்றையதினம் பிரதானமாக எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரே

[திரு. ஆ. கு. சுப்பையா] [14th March 1964

விஷயம், ஹரிஜனங்களுக்கு, சகல குடும்பங்களுக்கும், குடியிருப்பதற்கு சொந்தமாக மனை கொடுத்தாகவேண்டும். அம்மாதிரி வீட்டு மனைகள் கொடுக்கவேண்டும் என்ற ஒரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, ஏதோ வருஷத்திற்கு 1,000, 500 மனைகள் மட்டும் கொடுத்து கொண்டிருப்பது போதவே போதாது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். எத்தனை ஆண்டுகளுக்குள் இந்தப் பிரச்னையை, அதாவது ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் சொந்தமாகக் கொடுக்கக்கூடிய பிரச்னையை, தீர்க்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தை அரசாங்கம் தீட்ட வேண்டும். அப்படி திட்டத்தை தீட்டுகிறபொழுது, அதற்காக பணம் இல்லை, இருக்கக்கூடிய பணத்தை வைத்துத்தானே செலவு செய்ய வேண்டும் என்று அரசாங்கத் தரப்பிலே சொல்லப்படலாம். என்னுடைய யோசனை என்னவென்றால், விசேஷமாக மத்திய சர்க்காரிடமிருந்து அதிகமான தொகை மான்யமாக வாங்கவேண்டும். ஐந்து கோடி ரூபாய் அல்லது பத்து கோடி ரூபாய் அல்லது எவ்வளவு தேவைப்படுகிறதோ, தேவையான தொகையை இதற்காக செலவிட்டு ஹரிஜனங்களுக்கு உதவ வேண்டும். ஹரிஜனங்கள் சொந்த மனைகள் இல்லாமல் பிறருடைய மனைகளிலேயே வாழ்ந்து கொண்டிருப்பதால், அவர்களுடைய அடிமைத்தனம் இன்னும் நீங்காமல் இருந்து கொண்டிருக்கிறது. சுதந்திரமாக ஹரிஜனங்கள் நடமாட முடியாத நிலைமை இருக்கிறது என்ற முறையிலே மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகமான தொகையைப் பெற்று விசேஷமான திட்டங்களைப் போட்டு இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது எடுத்துக் கொண்டு இருக்கும் நடவடிக்கைகளைப் பார்த்தால் அவை ஆமை வேகத்தில்தான் இருக்கின்றன. இன்றையதினம் எங்களுடைய மாவட்டமாகிய தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் 18 லட்சம் குடும்பங்களுக்கு மனைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று கணக்குச் சொல்கிறார்கள். பதினெட்டு லட்சம் குடும்ப மக்களுக்கு மனைகள் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், ஆயிரக்கணக்கான மனுக்களை அவர்கள் எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவைகளில் ஒரு சிலதான் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு போதுமான நிர்வாக வசதி கிடையாது. மாவட்ட நல அதிகாரி ஒருவர் இருக்கிறார். ஆனால் அவர்களுடைய நேரமெல்லாம் ஹரிஜன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுப்பதிலும், ஆசிரியர்களுக்கு சம்பளம் பட்டுவாடா செய்வதிலும்தான் செலவிடப்படுகிறது. ஆகவே ஹரிஜன இலாகாவிலே இந்த ஹரிஜனங்களுடைய நலனைத் துரிதமாகக் கவனித்து ஆவன செய்வதற்கு ஒரு மாவட்ட உதவியாளரைப் போட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. மூன்று அல்லது நான்கு தாலூக்காக்களுக்கு ஒரு டிப்டி தாசில்தார் போட்டிருக்கிறார்கள். அவர் எப்படி இந்த மனுக்களையெல்லாம் பரிசீலனை செய்யமுடியுமென்பதை கனம் அமைச்சர் அவர்கள் கவனித்துப் பார்க்கவேண்டும். அவர் நான்கு தாலூக்காக்களுக்கு செல்லவேண்டுமென்று சொன்னால் அவருக்கு வாகன

14th March 1964] [திரு. ஆ. கு. சுப்பையா]

வசதி ஒன்றும் கிடையாது. பஸ்ஸிலோ அல்லது சைக்கிளிலோ தான் செல்லவேண்டும். ஆகவே, இம்மாதிரி கிராமப் புறங்களுக்கெல்லாம் சென்று இந்த மனுக்களை சீக்கிரம் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னால் அவருக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்கவேண்டும். ஏற்கனவே இந்த மன்றத்தில் பேசும்போது தாசில்தாருக்கு ஜீப் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது தாசில்தாருக்கு வேலை குறைந்துவிட்டது. எல்லா வேலைகளையும் பஞ்சாயத்து யூனியனிலே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாலு தாலூக்காக்களுக்கு ஒரு ஹரிஜன டிப்டி தாசில்தாரைப் போட்டு வேலை செய்யவேண்டுமென்று சொன்னால் ஏகப்பட்ட மனுக்கள் வந்து குவிகின்றன. ஆகவே, அந்த மனுக்களை பரிசீலனை செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ஜீப் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஒரு தாலூக்காவிற்கு அல்லது இரண்டு தாலூக்காக்களுக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போடுகிறார்கள். அவருக்கும் அதேமாதிரி நிலைமை தான் இருக்கிறது. அவருக்கு ஒரு பியூன் கூட கிடையாது. அவர் போய் மனுக்களை விசாரிக்க வேண்டுமென்று சொன்னால், அந்தக் கிராமத்திலுள்ள கர்ணீகர்களை கூப்பிட்டால் வருவது கிடையாது. ஏனென்றால், அவரிடம் அதிகாரம் கிடையாது. பெரிய ரெவின்யூ அதிகாரியாக இருந்தால், கூப்பிட்டவுடனே வந்து விவரங்களைக் கொடுப்பார். ஹரிஜன வெல்பர் இன்ஸ்பெக்டர் அழைத்தால் வருவதில்லை. இந்த மாதிரி நிர்வாகத்திலே ஒரு தடை செய்யும் நிலைமை இருக்கிறது. எப்படி ஹரிஜனங்களை மற்றவர்கள் ஒதுக்குகிறார்களோ அதுபோல்தான் இந்த ஹரிஜன இலாக்காவையும் ஒதுக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. இந்த நிலை மாறவேண்டும். ஹரிஜனங்களுக்கும் ஜாதி ஹிந்துக்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தவேண்டுமென்று நாம் முயற்சி செய்து கொண்டுவரும் நேரத்தில், இந்த இலாகா ஒரு தாழ்த்தப்பட்ட இலாகா மாதிரி ஒதுக்கப்பட்டிருக்கும் நிலைமை தான் இருந்து வருகிறது. இம்மாதிரி ஹரிஜனங்களுக்கு மனைகள் வழங்குவதற்காக வருஷத்திற்கு ரூ. 26 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இது போதாது என்பது என்னுடைய அபிப்பிராயம். யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டமாதிரிதான் இது இருக்கிறது. ஆகவே, அதிகமான தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகமான மான்யத் தொகையை பெறவேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீண்டாமையை எடுத்துக் கொண்டால் எனக்கு முன்பு பேசிய திட்டை திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறியதுபோல், டெபுடி சேவக் போடவேண்டியது அவசியமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்குப்பதிலாக, கிராம மட்டத்திலோ அல்லது பஞ்சாயத்து யூனியன் மட்டத்திலோ தீண்டாமை ஒழிப்பு கமிட்டிகள் அமைத்து எல்லா மக்களுடைய பிரதிநிதிகளையும் அதில்போட்டு, அதன் மூலமாக தீவிரமாக பிரச்சாரம் செய்து இந்த ஜாதி வித்தியாசங்கள், வேறுபாடுகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [14th March 1964

டெபுடி சேவக்குகள் என்று ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களைப் போட்டால் மேன்மேலும் அந்த ஜாதிகளை இரண்டு கூறுகளாகப் பிரித்து வேற்றுமை அதிகரிக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, இதைத் தடுக்கும் முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் தீண்டாமை தீவிரமாகத்தான் இருக்கிறது. இந்த ஆண்டு 48 கேஸ்கள் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அவ்வாறு கேஸ்கள் போடவேண்டுமென்று நினைத்தால், உண்மையிலேயே நூற்றுக்கணக்காக கேஸ்களைப் போடலாம். ஆனால் அவற்றை நடத்துவதற்கு ஹரிஜன இலாகாவிலிருந்து பணம் செலவழிக்க வேண்டுமென்பதற்காக அதிகமான கேஸ்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போடுவது கிடையாது. தீண்டாமை ஒழிப்பிற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே ஒரு சட்டசபை அங்கத்தினர் எடுத்துக் காட்டியது போல ஒரு டீக்கடைக்குப்போய் அவர்கள் டீ சாப்பிட்டால்கூட அந்த கிளாஸுக்காக 7 அணா கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று இங்கே சொன்னார்கள். அந்த அளவுக்குத் தீண்டாமை நமது நாட்டில் தீவிரமடைந்திருக்கிறது. இந்த மாதிரி நிலையை தடுக்கவேண்டும் என்று உங்கள் மூலமாக நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு இணைப்புப்பாதைகள் போடுவதற்கும், கிணறுகள் தோண்டி குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும் பஞ்சாயத்துக்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் பஞ்சாயத்துக்களிடம் நிதி வசதி கிடையாது என்று சொல்கிறார்கள். இருந்த பணத்தை செலவழிந்துவிட்டார்கள். இப்பொழுது கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு, இதரச் செலவுகள் செய்யவேண்டி இருக்கிறது. அரசாங்க கிராமப் பணித் திட்டத்தின் கீழ் 90 சதவிகிதம் சர்க்காரும், பாக்கி 10 சதவிகிதம் பஞ்சாயத்துக்களோ அல்லது மக்களிடமிருந்தோ தொகை வாங்கி செய்ய வேண்டுமென்று சமீபத்தில் ஒரு உத்தரவு வந்திருக்கிறது. பஞ்சாயத்துக்களிடம் நிதியில்லை என்று சொல்வதால் அவர்கள் ஹரிஜனங்களுக்கு நல்ல வேலைகள் செய்து கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் இல்லை என்றுதான் தெரிகிறது. அந்த ஹரிஜன மக்களிடமிருந்து வோட்டுக்களைப் பெறுவதற்கும் வேறு சில ஆதாயங்களைப் பெறுவதற்கும் தான் அவர்களை உபயோகப்படுத்துகிறார்களே தவிர, இந்த ராஜ்யத்திலுள்ள ஒரு பஞ்சாயத்திலாவது ஹரிஜனங்களுடைய அபிவிருத்தி வேலைகளை முதல் வேலையாகக் கருதி இணைப்பு சாலைகளை போட்டுக் கொடுக்கவேண்டும், குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று யாரும் நினைப்பது கிடையாது. ஆகவே இந்தக் காரியங்களை பஞ்சாயத்துக்கள் செய்யவேண்டுமென்று சொன்னால் ஹரிஜன தெருவிற்கு முதல் வேலையாக செய்து கொடுக்க வேண்டும். ஹரிஜன சேரிகளுக்கு வசதிகள் செய்து கொடுத்த பிறகுதான் மற்ற தெருக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். ஏனென்றால் மற்ற தெருக்களில் இருக்கக் கூடியவர்கள் ஹரிஜன மக்களைவிட நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அவ்வாறு செய்யமுடியவில்லை என்றால்,

14th March 1964] [திரு. ஆ. கு. சுப்பையா]

அரசாங்கம் கொடுக்கக்கூடிய 90 சதவிகிதம் மானியத்தையும் ஹரிஜன இலாகாவே எடுத்துக்கொண்டு, அதிகமான அதிகாரிகளை நியமித்து அந்த வேலைகளைச் செய்வதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது தேவையில்லை என்பது என்னுடைய அபிப்ராயம். அதன் மூலமாக அரசாங்கத்திற்கு ஏராளமான நஷ்டந்தான் ஏற்படுகிறது. இன்றைக்கு கண்ட்ராக்டர்கள் ரூ. 1,000-க்கு வீடுகள் கட்ட முடியாது என்று சொல்கிறார்கள். மதுரை மாவட்டத்திலே 40 வீடுகள் கட்டிய ஒரு வாரத்திற்குப் பிறகு இடிந்து விழுந்து விட்டனவென்று பத்திரிகையிலே நான் பார்த்தேன்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் மாவட்டத்தில் வீடுகள் விழவில்லையே ! (சிரிப்பு).

திரு. ஆ. கு. சுப்பையா : எங்கள் மாவட்டத்திலும் விழுந்திருக்கிறது. ஆனால் விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. வேதாரண்யம் பகுதியில் சில வீடுகள், சுவர் வெடித்து விழுந்திருக்கின்றன.

கனம் திரு. பூ. கக்கன் : அங்கே ஏற்பட்ட புயல் காரணமாக அவைகள் விழுந்திருக்கலாம். அவைகள் ஹரிஜன இலாக்கா மூலம் கட்டிய வீடுகள் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : ஹிந்து பத்திரிகையில்கூட செய்தி வந்திருக்கிறது.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் மாவட்டத்தில் வீடுகள் விழவில்லை. News paper reports may be exaggerated.

திரு. ஆ. கு. சுப்பையா : என் மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது. மற்ற மாவட்டங்களில் செய்யக்கூடிய வேலைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் சொல்லுகிறேன். ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் விரயமாகக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

கனம் சபாநாயகர் : நேரடியாகத் தெரிந்ததை கனம் அங்கத்தினர் சொல்ல வேண்டும். பத்திரிகையிலே வந்ததைச் சொல்லுவதால் என்ன பிரயோசனம் ?

திரு. ஆ. கு. சுப்பையா : அந்த மாதிரி வீடுகளைக் கட்ட வேண்டியதில்லை என்று கனம் அமைச்சர் அவர்களே தெரிவித்ததாகவும் செய்தி வந்திருக்கிறது.

கனம் திரு. பூ. கக்கன் : குறைகள் இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். வீடுகள் விழுந்திருந்தால் அதை திரும்ப கட்ட வேண்டும் என்று சொல்லுகிறேன். 10-00 a.m.

கனம் சபாநாயகர் : வீடு கீழே விழுந்ததை நானே பார்த்திருக்கிறேன். பத்திரிகை செய்திக்குப்போக வேண்டியதில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : நான் சொல்லுவது இந்த வீடு கட்டக் கொடுக்கும் ரூபாய் 1,000-த்தை செலவழிக்க வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக அவர்களுக்கு சொந்த மனை வாங்கிக் கொடுக்க அந்தத் தொகையை உபயோகிக்கலாம். அதற்கான நடவடிக்கை எடுக் கவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இந்த ஏற்பாட்டிற்கு ஒத்துக் கொள்ளாவிட்டால் கூட ஹரிஜன மக்களுக்கு மனைகள்தான் வாங்கிக் கொடுக்க வேண்டும், வீடு கட்டிக் கொடுப்பதை பிறகு பார்த்துக் கொள்ளலாம். இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : There are still 22 hon. Members who want to speak. So each hon. Member can take about 5 to 6 minutes and deal with salient points.

* **திரு. கே. பொன்னையன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம் மாநிலத்தில் அரிஜனங்கள் கணிசமான தொகையில் இருக்கிறார்கள். அதாவது மொத்த ஜனத் தொகையில் ஐந்தில் ஒரு பாங்காக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மானியம் குறைவு என்று தான் சொல்லுவேன். அரிஜன நலத்துறை மானியத்தின் கொள்கை விளக்கம் என்ற இந்த புத்தகத்தில் அரிஜனத் துறைக்கு எந்த எந்த வழிகளில் செலவழிக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடம் கட்டிக் கொடுக்கிறோம், மாடு வாங்கிக் கொடுக்கிறோம், கிணறு வெட்டிக் கொடுக்கிறோம். கைத்தொழிலுக்கு மெஷின்கள் வாங்கிக் கொடுக்கிறோம், காலனிகள் அமைத்துக் கொடுக்கிறோம், லோட்டுகள் போட்டுக் கொடுக்கிறோம். இவ்வளவு வசதிகள் செய்து கொடுத்தும் அரிஜனங்களுக்கு நம் டிபார்ட்மெண்டிடம் திருப்தி இல்லை. அதற்குக் காரணம் அந்தத் துறைக்கான பணம் சரியான முறையில் செலவழிக்காததால் தான் அதிருப்தி கொள்கிறார்கள். ஒரு கிராமத்தில் 100 வீடு இருந்தால் நாம் 10 வீடு கட்டிக் கொடுக்கிறோம். அதனால் மற்றவர்களுடைய அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்கிறோம்.

இன்றைக்கு ஹாஸ்டல் வைத்து நடத்துகிறோம். ஆண்களுக்கு ஹாஸ்டல் நடத்துகிறோம்; பெண்களுக்கு ஹாஸ்டல் நடத்துகிறோம். ஆண்களுடைய ஹாஸ்டலில் 20, 25 வயது வந்த பையனை வார்டனாகப் போடுகிறோம். அதே மாதிரி பெண்கள் ஹாஸ்டலில் 20, 22 வயதுள்ள பெண்ணை மேட்ரனாகப் போடுகிறோம். இது அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை. குறைந்தபட்சம் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களையும், பெண்களையும் வார்டனாகவும், மேட்ரனாகவும் போட்டால் நல்லது என்று தாழ்மையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆண்களும் பெண்களும் ஊறுப்படியாக உலகம்

தெரிந்த வார்டன், மேட்ரனோடு பழகி வாழ்வதற்கு அனுகூலமாக இருக்கும். இப்பொழுது பஞ்சாயத்து சட்டம் வந்தால் முக்கியமாக அரிஜனங்கள்தான் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் . . .

கனம் திரு. பூ. கக்கன் : 40 வயதுக்கு மேற்பட்டவர்களை வார்டனாக போடுவது என்றால் படித்த அரிஜன சகோதரர்களுக்கு வேலை இல்லாமல் போய் விடும்.

கனம் சபாநாயகர் : 20 வருஷம் கழித்து அதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. கே. பொன்னையன் : பஞ்சாயத்திலே அரிஜனங்களை பாதிக்காத வகையிலே காரியங்கள் செய்யப்பட வேண்டும். ஊருக்கு 2 மைல், 3 மைல் தூரத்திலே ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர்களை பல காலமாக உழுது கொண்டு இருக்கிறார்கள். புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. இந்த புறம்போக்கிலே பல புறம்போக்குகள் இருக்கின்றன. மந்தைப்புறம்போக்கு, ஓடைப்புறம்போக்கு, ஆற்றுப்புறம்போக்கு என்று இருக்கின்றன. கலம்குல்லாங்குத்து புறம்போக்கு என்று இருக்கிறது. அதிலே ஒரு ஏக்கர் அரை ஏக்கரை எவ்வளவோ காலமாக அரிஜனங்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களை வெளியே தள்ள ஏற்பாடுகள் நடப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அந்த பூமியை அவர்கள் 10, 15, 20 வருஷங்களாக உழுது கொண்டு இருக்கிறார்கள். 'பி' மெமோ கூட வைத்திருக்கிறார்கள். ஆகவே டிபார்ட்மெண்டார் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக ஹைஸ்கூல் வரை இப்பொழுது இலவசக்கல்வி கொடுக்க முன் வந்து விட்டோம். அரிஜனப் பெண்களுக்கு இப்பொழுது உடை கொடுக்கிறோம். பையன்களுக்கு உடை கொடுத்தால் மிக்க நலமாக இருக்கும். இது ஹைஸ்கூலுக்கு மட்டுமல்லாமல் அரிஜனத் துறையால் நடத்தப்படும் எலிமெண்டரி ஸ்கூல் முதலிய ஸ்கூல்களிலும் இந்த உடை ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது முனிசிபல், யூனியன் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மதிய உணவு கொடுப்பதில்லை. அதையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு விவசாயத் துறையிலே பாக்கேஜ் ஸ்கீம் என்று வைத்திருக்கிறோம். அதன்படி குறிப்பிட்ட ஜில்லாவிலே குறிப்பாக சில துறைக்கு கவனம் செலுத்தி அதை முன்னுக்குக் கொண்டு வர வழி செய்கிறோம். அந்த ஜில்லாவில் விளையும் நெல், அல்லது மற்ற தானியம் சம்பந்தமாக இந்தத் திட்டத்தை அமுல் நடத்துகிறோம். அதே முறையில் இந்த அரிஜன நலன் சம்பந்தமாகவும் ஒரு குறிப்பிட்ட ஜில்லாவை எடுத்துக் கொண்டு அங்கே வீட்டு மனைகள் கட்டுவது, ஸ்கூல்கள் ஏற்படுத்துவது, முதலிய காரியங்களில் விசேஷ கவனம் செலுத்தி ஒரு குறிப்பிட்ட பீரியட்டிலே இவ்வளவு செய்து முடிக்க வேண்டும் என்று ஸ்பெஷல் அட்டென்ஷன் செலுத்தி நடவடிக்கைகள் எடுத்தால் நலமாக இருக்கும்

என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இன்றைக்கு நாம் பல ஜில்லாக்களிலும் ஐந்து கோடி, பத்து கோடி என்று செலவழித்து திட்டங்களை நிறைவேற்றுகிறோம். தஞ்சாவூரில் கொஞ்சம், கோயமுத்தூரில் கொஞ்சம் என்று பரவலாக செய்கிறோம். அதனால் திட்டங்களின் அளவு தெரியாமல் போகிறது. ஆகவே குறிப்பிட்ட ஜில்லாவை எடுத்துக் கொண்டு அங்கே அரிஜனங்களுக்கு என்ன என்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு பாக்கேஜ் ஸ்கீம் மாதிரி செயல் பட்டால் திருப்தியாக இருக்கும்.

அடுத்தபடியாக கோயம்புத்தூர் ஜில்லா, சேலம் ஜில்லா, திருச்சி ஜில்லா, மதுரை ஜில்லா இவைகள் எல்லாம் பெரிய பெரிய ஜில்லாக்கள். இங்கேயும் ஒரு வெல்பேர் ஆபீசர் தான் போட்டிருக்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே கலெக்டரும், ரெவின்யூ ஆபீசரும் இருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் இப்பொழுது ஜாயிண்ட் கலெக்டர் கூட போட்டிருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு வெல்பேர் ஆபீசர் தான் இருக்கிறார். அந்த வெல்பேர் ஆபீசரை பார்ப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஜில்லா வெல்பேர் கமிட்டி கூட்டத்திற்குப் போகும் போது தான் அவரைப் பார்க்க முடிகிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்டில் 2 பேர் இருப்பது போல வெல்பேர் ஆபீசர்களையும் 2 பேர்களாக போடலாம் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் விண்ணப்பங்களும், அவ்வப்பொழுது, டிஸ்போஸ் ஆகிவிடும்.

லாண்ட் அக்விசிஷன் ஒரு பெரிய கண்ராவியாக இருக்கிறது. இந்த டிபார்ட்மெண்டுக்காரர்களே பக்கத்தில் ஒரு மைலில் உள்ள இடத்தில் ரிஜிஸ்டர் பண்ணிக் கொண்டு விட்டால் பிறகு ஆர்ஜிதம் செய்யும் பொழுது இந்த பூமிக்கு அதிக விலை கிடைக்கும் என்று சொல்லிக் கொடுத்து விடுகிறார்கள். இந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் இவர்கள் ரொம்ப தவறான முறையில் நடக்கிறார்கள். கூடுமான வரையில் இந்தக் காரியத்தில் ரெவின்யூ டிபார்ட்மெண்டார் தலையிடாமல் இருந்தால் நலமாக இருக்கும். வெல்பேர் ஆபீசரே பைசல் பண்ணக் கூடிய நிலைமையை உண்டாக்கினால் இந்த மாதிரி சின்னத்தனம் கீழ் லெவலில் நடக்காது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வால்பாறைத் தொகுதியில் ஒரு கேர்ல்ஸ் ஹாஸ்டல் கட்ட வேண்டும், கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேயிருக்கிறேன். டிபார்ட்மெண்டாரும் செய்கிறோம் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் முடிவு எடுக்கவில்லை. வெல்பேர் கமிட்டியில் சொல்லும்போதும், கலெக்டர் கவனிப்பதாகச் சொல்லுகிறார். ஆனால் காரியம் ஓடமாட்டேன் என்கிறது. ஹாஸ்டலுக்கு எஸ்டிமேட் போட்டாகிவிட்டது. ஆகவே தயவு செய்து அந்த ஹாஸ்டலை சீக்கிரம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அங்கங்கே ஹாஸ்டல்கள் கட்டியிருக்கிறோம். ஆனால் தண்ணீர் வசதி போதவில்லை. அதையும் செய்து கொடுக்க வேண்டும். மலைப் பிராந்தியங்களில் மேலே வாழும் அரிஜனங்களுக்கு, கீழே வாழும்

அரிஜனங்களுக்கு செய்வதைப் போல உதவிகள் செய்வது இல்லை. கீழே அரிஜனங்களுக்கு மாடு வாங்க உதவி செய்கிறோம். மேலே உள்ள அரிஜனங்கள் விவசாயம் செய்யா விட்டாலும் மாட்டுக் கன்று, எருமைக்கன்று வாங்கிக் கொடுத்தால் அதை மேய்ச்சல் செய்து பின்னால் பால் வழங்க உதவ முடியும். இப்பொழுது நாம் பால் வழங்கும் சொசைட்டிகள் ஆரம்பித்திருக்கிறோம். அவைகளுக்கு பால் சப்ளை செய்ய உதவியாக இருக்கும். (மணியடிக்கப் பட்டது.)

* திரு. எஸ். முத்துலிங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான அரிஜன நலத்துறை மானியத்தின் பேரில் எங்கள் கட்சி கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். புறம்போக்கு நிலங்களை உழுது வந்த அரிஜனங்களை வெளியேற்றுவது தடுக்கப்பட வேண்டும். பத்து ஆண்டுகள் பதினைந்து ஆண்டுகள் ஆக உழுது வந்து இருக்கிறார்கள் அதாவது சர்க்கார் புறம்போக்கு நிலங்களை பயிரிட்டு வரும் ஏழை அரிஜன மக்களை அந்த கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து பிரசிடெண்டுகள் வேண்டும் என்றே அப்புறப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு காரியங்களைச் செய்கிறார்கள். உடனடியாக அரிஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்ட நஷ்டங்களைத் தடுத்து அவர்களை வெளியேற்ற முற்படுகிற அம்மாதிரியான காரியங்கள் நடைபெறாமல் சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்து, அம்மாதிரி நீண்ட நாட்களாக அரிஜனங்களுடைய அனுபத்தில் இருந்து வரும் நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராம அரிசனக் காலனிகளில் ரேடியோக்கள் பொருத்தப்படுவதற்காக அவற்றைப் பஞ்சாயத்து யூனியனில் உள்ளவர்கள் பஞ்சாயத்து போர்டின் பிரசிடெண்டிடம் ஒப்படைக்கிறார்கள். அந்த ரேடியோக்களைப் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் வீட்டில் எடுத்துக்கொண்டு போய் அங்கே பாடவைக்கிறார்கள். அதனால், அந்தப் பகுதியிலுள்ள அரிசன மக்கள், நாட்டின் நடக்கும் செய்திகளை ரேடியோ மூலமாக அறிந்துகொள்ளும் வாய்ப்பை இழந்து விடுகிறார்கள். அம்மாதிரியான சூழ்நிலை ஏற்படாதபடி, ஒவ்வொரு அரிசனக் காலனிக்கும் தனித்தனியாக ரேடியோ கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வீட்டு மனை வாங்கிக் கொடுக்கும் விஷயத்தில் அதிகக் கால தாமதம் ஆகிறது. பத்து, 15 ஆண்டுகள் கூடத் தாமதம் ஆகிறது. காரணம், போதிய அதிகாரிகள் இல்லாதது தான். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வெல்பேர் ஆபீசர் இருக்கிறார். அந்த ஒரு வெல்பேர் ஆபீசர் அதையெல்லாம் செய்து முடித்துவிட முடியாது. அவருக்கு அடுத்தாற்போல், இரண்டு,

[திரு. எஸ். முத்துலிங்கம்] [14th March 1964

மூன்று தாலுக்காக்களுக்கு ஒரு வெல்பேர் தாசில்தார் இருக்கிறார். அவர்களும் அந்த வேலையை உடனுக்குடன் செய்து முடிக்க மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதுவும் தவிர, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெல்பேர் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் மாற்றப்படுகிறார்கள். அம்மாதிரி மாற்றப்படுவதனால், அங்குள்ள ஏழை அரிசன மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து, வீட்டு மனைகள் வாங்கித் தரக்கூடிய காரியம் அத்தனையும் தாமதமாகிறது. ஆகவே, அம்மாதிரி மாற்றங்கள் செய்யாமல் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினால் வேலைகள் உடனுக்குடன் முடிய வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அரிசனக் காலனிகளுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். பல கிராமங்களில் இன்னும் குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படவில்லை. குடி தண்ணீர் வசதி இல்லாததால் அந்தப் பகுதி மக்கள் நரம்பு சிலந்தி நோயினாலும், இதர நோய்களினாலும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அரிசன மக்கள் வசிக்கும் ஒவ்வொரு காலனியிலும் அவசியம் கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்பட வேண்டும். பஞ்சாயத்து போர்டாரோ அல்லது பஞ்சாயத்து யூனியனோ இதற்கான ஏற்பாட்டை உடனடியாகச் செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கிராமப் பகுதிகளில் அரிசனக் காலனிகளுக்கு மின்சாரம் கிடைக்காமல் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி பாதிக்கப்படும் அரிசனக் காலனிகளில் மின்சார வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் கடன் வசதிகள் சரியாகக் கிடைப்பதில்லை. பம்ப் செட்டு வாங்குவதற்கான கடன், மாடு வாங்கக் கடன் போன்றவை நல்ல முறையில் கிடைப்பதில்லை. எந்தப் பகுதியைப் பார்த்தாலும், அரிசன மக்களுக்கு இக் கடன்கள் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. அந்த வகையிலும் அரிசனங்களுக்குக் கடன்கள் கிடைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, ஸ்டேட் அரிசன வெல்பேர் கமிட்டியில் எங்களைப் போன்ற எம்.எல்.ஏ.-க்கள் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. அப்படிச் சேர்த்துக்கொள்ளாத காரணத்தால், அந்தந்த பகுதியிலுள்ள அரிசன மக்களுடைய குறைகளை அங்கே எடுத்துச்சொல்ல வழிவகை இல்லாமல் போய்விடுகிறது. ஆகையால், அந்தக் கமிட்டிகளில் உடனடியாக அந்தந்தப் பகுதிகளில் உள்ள எம்.எல்.ஏ.-க்களை மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ள வழிவகை செய்தால் நலமாக இருக்கும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

14th March 1964]

* திரு. பி. ஜயராஜ்: மன்றத் தலைவர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல முன்வருகின்றேன்.

நாட்டில் சுதந்திரம் ஏற்பட்ட பிறகு, இன்றைய அரசாங்கம் பல முன்னேற்றமான காரியங்களுக்காகத் தொகை ஒதுக்கி ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறார்கள். கல்வி, சிறு கைத்தொழில், தீண்டாமை ஒழிப்பு போன்ற துறைகளில் மிகவும் அக்கறையுடன் தீவிரமாக அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இருக்கும் அரிசன மக்களுடைய விகிதாசார அடிப்படையைப் பார்க்கும்போது அவர்களுக்காக ஒதுக்கப்படும் மானியத் தொகை போதுமா, போதாதா என்பது தான் இன்றைக்கிருக்கும் பிரச்னை. பல நூற்றாண்டுகளாக அரிசன சமுதாய மக்கள் மிகவும் பின்தங்கியிருந்திருக்கிறார்கள். பொருளாதாரத்திலும், கல்வியிலும், மற்றும் குடியிருப்பு மனைகட்டுகளைப் பெறும் விஷயத்திலும் அவர்கள் மிகவும் பின் தங்கியிருந்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் முன்னேற வேண்டுமானால், ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல, திட்டமிட்ட முறையில் அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். ஆண்டு தோறும் மூன்று கோடி, நான்கு கோடி என்று தொகை ஒதுக்கிக்கொண்டிருப்பதை விட, ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை ஒதுக்கி, ஒரு வருஷத்தில் ஒரு ஜில்லாவில் நில ஆர்ஜிதம் செய்து முடிக்கவேண்டும் என்று எடுத்துக்கொண்டார்களானால், வேலை தீவிரமாக நடைபெறும் என்று நான் நினைக்கிறேன்.

அரிசனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கும் விஷயமாகப் பார்த்தால், தஞ்சையில் 2,000 மனுக்கள் அங்கிருக்கும் அரிசன நல ஆபீசரிடம் இருக்கின்றன. ஒரு தாசில்தார் மாதத்திற்கு ஆறு முதல் பத்து மனுக்களைப் பைசல் செய்யக்கூடும் என்று சொல்லப்படுகிறது. மூன்று தாசில்தார்கள் இருக்கிறார்கள். அந்த மூவரும் ஒரு மாதத்தில் அதிகபட்சமாக 30 மனுக்களைப் பைசல் செய்ய முடியும். வருடத்திற்கு 360 மனுக்கள் பைசல் செய்யக்கூடிய நிலை தான் இருக்கிறது. இந்தக் கணக்கில் பார்த்தால், இந்த 2,000 மனுக்களையும் பைசல் செய்யக் குறைந்தது ஐந்து வருஷங்கள் ஆகும் என்று நான் நினைக்க வேண்டியிருக்கிறது. ஐந்து வருஷம் ஆனாலும் நில ஆர்ஜிதம் இந்த மனுக்களைப் பொறுத்த வரையில் முடியுமா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 2,000 மனுக்கள் வந்துகொண்டே இருக்குமானால், இந்த நில ஆர்ஜிதம் செய்து அரிசனங்களுக்கு வீட்டு மனைக்கட்டு வழங்கும் பிரச்னை 20 வருஷங்கள் ஆனாலும் தீராது என்றுதான் சொல்ல முடியும். வளர்ந்து வரும் சமுதாயத்தில் நாளுக்கு நாள் பிரச்னை வளர்ந்துகொண்டுதான் இருக்கும். அரிசன மக்களுக்காக அரசாங்கம் வாரி வழங்குகிறது. ஆனால், வளரும் சமுதாயத்தில் குறை இருந்துகொண்டு தான் இருக்கும். வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கும்போது தான் குறைகள் தென்பட முடியும். வளர்ச்சி இல்லாத போது குறை தெரியாமல் இருந்திருக்கலாம்.

[திரு. பி. ஜயராஜ்] [14th March 1964

இப்பொழுது ஆங்காங்குள்ள மக்களுக்கு நல்ல வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்து கொடுத்து, வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் மிகத் தீவிரமாக நிதி ஒதுக்கிக் காரியங்களைச் செய்தால், கூடிய சீக்கிரத்தில் அந்தப் பிரச்னையில் தீர்வு காண நல்ல வழி இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர், வீடு கட்டிக் கொடுப்பது பற்றிப் பேசினார்கள். கல் வீடு கட்டிக் கொடுப்பது சாலச் சிறந்ததாகும். நீண்ட காலமாக அரிசன மக்கள் ஓலைக் குடிசையிலும், மொட்டை வெளியிலும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஓரளவு ஓட்டு வீடு கட்டிக்கொடுப்பது நல்லது. ஆனால், ஆயிரம் ரூபாய் தொகை நிர்ணயித்திருப்பதை அதிகப் படுத்த வேண்டும். பெண் ஆசிரியைகளுக்கு வீடு அமைக்கும் போது 6,000 ரூபாய் ஒதுக்குகிறார்கள். ஆனால், அங்குள்ள மக்களுக்குக் குறைந்த தொகையில் வீடுகள் கட்டப்படுகின்றன. ஆயிரம் ரூபாயில் நல்ல ஸ்திரமான வீடு கட்ட முடியாது. அதனால் 2,000 ரூபாய் ஒதுக்கினால் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் மிக நல்ல திட்டமாக அமையும், அதன் மூலமாக நாட்டில் அரிசன மக்களும் ஓட்டு வீட்டிலே வாழ்கிறார்கள் என்ற சந்தோஷ மனப் பான்மை அவர்களுக்கு ஏற்பட வழிவகை உண்டாகும். இந்தத் தொகையை 2,000 ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அரிசன நல இலாகாவினரால நடத்தப்படும் பாடசாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அரிசன நல இலாகா கட்டும் பாடசாலை ஓலைக் கட்டடத்தில் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் பாடசாலை நல்ல ஸ்திரமான கட்டடமாக இருக்கிறது. அரிசன நல இலாகாவினால் கட்டப்படும் ஓலைக் கட்டடம், மோசமாகவும், மழை காலங்களில் தண்ணீர் உள்ளே வரக்கூடியதாகவும், வெயில் காலங்களில் வெயில் உள்ளே விழும்படியாகவும் காற்றினால் பாதிக்கப் படக்கூடியதாகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் நன்றாகத் தெரிகிறது. ஆகவே, நல்ல கட்டடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகையால் அந்தப் பாடசாலைகளை நல்லமுறையில் கட்ட வேண்டும். ஹரிஜன வெல்பேர் இலாகாவில் போதுமான பணம் இல்லாததால் அவர்களால் கட்ட முடியவில்லை. குறிப்பாக என்னுடைய பகுதியில் பள்ளிக்கட்டிடம் கொல்லாபுரம் என்ற இடத்தில் விழுந்து போய் இப்போது மதிய உணவு கொடுப்பவர் வீட்டில் நடைபெறுகிறது.

மேலும் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குவதில் சர்க்கார் போதிய கவனம் செலுத்த வேண்டும். மாயவரம் தாலுகாவில் ஒரு ஊரில் 1950-ஆம் வருடம் ஹரிஜனங்கள் வீடுகள் கட்டிக் கொள்ள நிலம் வழங்கப்பட்டது. ஆனால் சாதி இந்துக்கள் அதைத் தடுத்து வந்தார்கள். மேலே விண்ணப்பித்துக்கொண்ட போது அங்கு அரிசனங்கள் வீடுகள் கட்டிக் கொள்ளலாம் என்றார்கள். ஆறுமாதத்திற்கு முன்பு அது தெரிந்தவுடன் அவசரம் அவசரமாக உயர்ந்த சாதி இந்துக்கள் அங்கே 23 வீடுகள் கட்டிக்கொண்டு விட்டார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும்,

14th March 1964] [திரு. பி. ஜயராஜ்]

ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரையும் அழைத்துக்கொண்டுபோய்க் காட்டினேன். இப்படி பல்விதமான இடைஞ்சல்களையும் இடையூறுகளையும் ஹரிஜனங்களுக்கு சாதி இந்துக்கள் இன்னமும் செய்து வருகிறார்கள். ஹரிஜனங்களுக்குள்ள இடையூறுகளை நல்லபடியாக நீக்கி அவர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுவதற்கு அரசாங்கம் எல்லாவகையிலும் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லாவில் மனைக்கட்டு வழங்கும் திட்டத்திற்கு இரண்டரை லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இது போதவே போதாது. ஐந்து லட்சமாவது ஒதுக்கித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஒரு தாலுகாவுக்கு ஒரு தாசில்தார், இரண்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களாவது போட்டு செயல் படவேண்டும். இன்றைக்கு 12 தாலுகாவுக்கு 3 தாசில்தார் போட்டால் எப்படி அவர்களுடைய மனைக்கட்டுப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க முடியும்? இன்னும் ஜி.ஓ. 1000 என்று போட்டிருக்கிறார்களாம். அதிகாரியைப் போய்க் கேட்டால் ஜி.ஓ. 1000 படி ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஆகையினால் சர்க்கார் நன்றாய் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. வீ. ராமனுதன்:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஹரிஜன நலத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

'சாதிகள் இல்லையடி பாப்பா
உயர்ச்சி தாழ்ச்சி சொல்லல் பாபம்'

என்ற அமர கவியின் கூற்றை மெய்ப்பிக்க நமது பாரத நாடு விடுதலை பெற்ற பின்பு சாதிய சமயமற்ற க்ஷேம நல அரசாங்கத்தை அமைத்து நாம் பாடுபட்டு வருகிறோம். சாதி பேதமற்ற சமுதாயத்தை நிலை நிறுத்துவதற்காக எண்ணற்ற செயல்களை நம் அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது.

குறிப்பாக கல்வித் துறையிலும், வீட்டு வசதிகளை செய்து கொடுப்பதிலும், சுகாதாரத் துறையிலும், விவசாயத் துறையிலும் தாழ்த்தப்பட்ட அந்தச் சமூகத்துறைகளுக்கு நமது அரசாங்கம் பலவகையில் உதவி செய்து வருகின்றது.

ஆரம்பப் பள்ளிக்கூட நிலையில் உதவுகிறோம். தொழில் படிப்பு சம்பந்தப்பட்டவரை ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். இன்னும் ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்கிறோம். இன்னும் சட்டம், மருத்துவம், போன்றவற்றில் கல்வி பெறவும் பொருளாதார வளர்ச்சி பெறவும் உதவி பெறவும் வழி செய்கிறோம்.

குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் குளித்தலைத் தொகுதியிலே குளித்தலையில் பெண்களுக்காக நம்முடைய அரசாங்கம் ஒரு ஹாஸ்டலைத் திறந்து இருக்கிறது. அதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக்

[திரு. வீ. ராமனுதன்] [14th March 1964

கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அந்த ஹரிஜன ஹாஸ்டலுக்கு கூடிய விரைவில் ஒரு கட்டிடத்தை அமைத்துத் தருமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதோடு என்னுடைய ஊரில் ஹரிஜன மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டலை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளில் பயில்கின்ற மாணவர்களுக்கு நாம் உபகாரச் சம்பளம் கொடுக்கிறோம். இதை வழங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜன மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொண்டு வருகிறோம். எதிர்க்கட்சி உறுப்பினர் பேசுகின்றபோது ஹரிஜனங்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகள் கீழே விழுந்துவிடுகின்றன என்று குறை சொன்னார்கள். அது சரியல்ல. குமாரபாளையத்தில் அமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கும் ஹரிஜன காலனி வீடுகள் மிகவும் நன்றாக உறுதியாக நிற்கின்றன.

கனம் சபாநாயகர்: எல்லா வீடுகளும் விழுந்துவிடுகின்றன என்று அவர் கூறவில்லை.

திரு. வீ. ராமனுதன்: நான் ஏதாவது ஒரு இடத்தில் ஏற்பட்டதை வைத்துக் கொண்டு பொதுவாகக் குறை கூற வேண்டாம் என்பதற்காகச் சொன்னேன். எதிர்க்கட்சியில் இருந்து பேசியவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்கள் ஹரிஜனங்களுக்கு நல்ல முறையில் சேவை செய்ய முன்வருவதில்லை என்று கூறினார்கள். பொதுப்படையாக அப்படிக் குறை சொல்ல முடியாது. பல விடங்களில் ஹரிஜனங்களுக்கு பஞ்சாயத்துத் தலைவர்கள் நல்ல முறையில் சேவை செய்து வருகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜன மக்கள் சுகாதாரத் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பதற்காகப் பலவகையில் அரசாங்கம் செய்து வருகிற உதவிகளைப் பாராட்டுகிறேன். சுகாதாரத் துறையில் அவர்கள் மேல் நிலை எய்துவதற்கு இந்த உதவிகளை இன்னும் விரிவுபடுத்தவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்காக உதவி செய்வதையும், கிணறுகள் வெட்டிக்கொள்வதற்காக உதவுவதையும் பாராட்டுகிறேன். ஹரிஜனங்களுக்கு என்று இல்லாமல் மற்ற ஏழைகளும் பயன்படுகிற முறையில் ஏற்படுத்தியிருக்கிற சிறப்பினை வரவேற்கிறேன். மேலும் சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள் ஆகியவருக்கு கடன்கள் வழங்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இத்தகைய நல்ல பல காரியங்களைச் செய்து வருவது சோஷலிஸ ஜனநாயக சமுதாயம் நம் நாட்டில் உருவாவதற்குப் பலவகையில் உதவி செய்யும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

14th March 1964]

* **திரு. பி. முருகையன்:** மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, 10-30 a.m.
ஹரிஜன மானியத்தின் மீது கொண்டு வரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது உள்ள ஹரிஜன நலத் துறை உள்ளபடியே ஹரிஜனங்களுடைய நலனுக்காகவே இயங்கி வருகிறதா என்றால் இல்லை. என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையிலே அங்கு இருக்கிற கமிட்டிகளிலே ஹரிஜனங்களைப் போட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. அங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் ஆட்சி பீடத்தில் இருக்கிற அமைச்சர்களின் தயவின் காரணமாக கமிட்டியிலே இடம் பெற்று இடைத்தரகர்களாக இருந்து கொண்டு ஹரிஜனங்களுக்குக் கிடைத்து வருகிற நன்மைகளைத் தட்டிப் பறித்துக் கொண்டு வருகிறார்கள்.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர், காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்களை மட்டுந்தான் கமிட்டியில் போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்களா அல்லது ஹரிஜனங்களே கமிட்டியில் இல்லையென்று சொல்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: அட்வைசரி கமிட்டியில் ஹரிஜனங்களோடு கூட இதர ஜாதி இந்துக்களையும் போட்டிருக்கிறோம். ஹரிஜனங்கள்தான் பெருவாரியாகப் போடப்படுகிறார்கள்; ஜாதி இந்துக்கள் குறைவுதான்.

திரு. பி. முருகையன்: என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நடைபெறுகிறது. என்னுடைய பகுதியைப் பொறுத்த மட்டில் அதிலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதைப் பற்றி நான் மாவட்ட நல அதிகாரியைக் கேட்ட நேரத்தில் 'ஏதோ இதிலே தவறு நேர்ந்து விட்டது; அடுத்த தடவை உங்களை எல்லாம் நியமிக்கிறோம்' என்று பதில் சொன்னார்கள்.

ஹரிஜனங்களுக்காகக் கூட்டுறவுச் சங்கங்களைத் திறந்து இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய ஊரில் கரம்பக்குடியில் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் 1963-ல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு எண்ணெய் உற்பத்திச் சங்கம் அங்கே இருக்கிறதா என்பது எனக்கே தெரியவில்லை.

கனம் சபாநாயகர்: 'இல்லை' என்று நிச்சயமாகத் தெரிந்தால் சொல்லுங்கள். எனக்கே தெரியவில்லை என்று சந்தேகமாகச் சொல்லவேண்டாம்.

திரு. பி. முருகையன்: அங்கு அப்படி ஒரு சங்கம் இல்லை. அடுத்து, சுடுகாட்டுக்குப் போவதற்கு ரோடு போட்டுக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனைப் பார்க்கின்றபோது ஹரிஜனங்களுக்கு சுடுகாட்டிற்குப் போக ரோடும், சுடுகாட்டிற்கு இடமும் தரப்படுகின்ற நிலை ஹரிஜனங்களை சுடுகாட்டிற்கு அனுப்பிவிடுவார்களோ என்னவோ என்றுதான் எங்களைப் போன்றவர்களுக்கு சற்று அச்சம் உண்டாகிறது. சுடுகாட்டிற்கு

ரோடு போடுவது போல் காலனிகளுக்குச் செல்லவும் ரோடு போடவேண்டும். சுடுகாட்டுக்குப் போவதற்குத்தான் ரோடு அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஹரிஜன காலனிகளில் நல்ல ரோடு வசதி இல்லை. குளவாய்பட்டியிலே ஐந்து வீடுகள் ஹரிஜனங்களுக்காகக் கட்டி கொடுக்கப்பட்டு இன்று அவை எல்லாம் தரை மட்டமாக இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வருவார்களானால் அவற்றைக் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். அரசர்பட்டியிலே சென்ற ஆண்டு கட்டப்பட்ட ஏழெட்டு வீடுகள் இன்றோ நாளையோ விழுவதற்குக் காலம் பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஹரிஜன மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகள் இருக்கின்றன.

நெல்லை மாவட்டத்தில் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிற நேரத்தில் கபாலிப்பட்டியில் ஐந்து பழைய வீடுகளுக்கு இரவோடு இரவாக வெள்ளையடித்து புதிய வீடுகள் என்று சொல்லி அமைச்சர் அவர்களுக்குக் காட்டினார்கள். அமைச்சர் அவர்கள் உண்மையறிந்து கேட்ட நேரத்தில் அவர்கள், அமைச்சர் அவர்களிடத்திலே மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். இது போன்ற நிலைமை மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களிலும் இருக்கின்றது. மல்லங்கிணறு என்ற ஊரில் 40 வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடுகள் இடிந்து விழுந்துவிட்டன. அந்தப் புகைப்படம் கூடப் பத்திரிகையில் வந்திருக்கிறது. (கனம் அங்கத்தினர் பத்திரிகையிலிருந்து கத்தரிக்கப்பட்ட சில படங்களைக் கையில் வைத்துக் கொண்டு காட்டினர்.)

கனம் சபாநாயகர் : படம் எல்லோருக்கும் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் தொடர்ந்து பேசிக் கொண்டு போகலாம்.

திரு. பி. முருகையன் : அந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இடிந்து விழுந்துவிட்டன என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். என்னுடைய ஊரில் ரோடு போடவேண்டுமென்று இரண்டு ஆண்டு காலமாகக் கேட்டுக்கொண்டு வருகிறேன். ஆனால் இதுவரை போடப்படவில்லை. அவர்கள் ரோட்டைப் போடுகிறார்களா அல்லது ஹரிஜனங்களுக்கு நாமம் போடுகிறார்களா என்று தெரியவில்லை. (மணி அடிக்கப்பட்டது.)

***திரு. க. தா. பெருமாள் ராஜு :** கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜன நல மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலே ஹரிஜனங்கள் கல்வியிலேயும், கைத் தொழில்களிலேயும் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் தாலுகாவுக்கு ஒன்று வீதம் பஞ்சாயத்து யூனியன்களில் தலைவர்கள் ஹரிஜனங்களாக இருந்துத் தனித் தொகுதி ஏற்படுத்த வேண்டும்.

லோயர் பவானி ஏரியாக்களில் சீப்பேஜ் அதிகமாக ஏற்பட்ட பிரதேசங்கள் இருக்கின்றன. அங்கே சுகாதார வசதி இல்லாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு உடனடியாக வேறு இடம்

கொடுக்க வேண்டும். இதிலே துரிதமாகச் செயல்பட்டால்தான் ஹரிஜன மக்கள் நல்ல முறையில் வசிக்க முடியும். அவர்களை மேட்டுப்பாங்கான நிலங்களில் குடியேற்ற வேண்டும்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஹரிஜன ஹாஸ்டல்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் குக்கிராமங்களில் இருக்கும் ஹரிஜன மக்களுடைய ஏழைக் குழந்தைகள் நல்ல முறையில் படித்து முன்னேற்றம் அடைய முடியும். எனது தொகுதியாகிய தாளவாடி, பர்கூர் பிரதேசங்களில் அதிகாரிகள் சென்று நீதி வழங்க முடியாத நிலைமை இருக்கிறது. நல்ல முறையில் அதற்கான இடம் வாங்கிக் கொடுக்க முற்பட வேண்டும். கல்வி அறிவற்ற, உலகம் தெரியாத ஹரிஜன மக்கள் நல்ல முறையில் முன்னேறுவதற்கு மலைப் பிரதேசங்களுக்கு அதிக அளவுக்கு மான்யம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்கள் விவசாயம் செய்து கொண்டிருந்த நிலங்களையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக் கொண்டு தென்னங்கன்றுகளை நட்டுவைத்திருக்கிறார்கள். அதனால் ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தென்னங் கன்றுகள் நட்டுவிட்டிருந்தாலும் கூட அவற்றையெல்லாம் ஹரிஜனங்களுக்குக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்திருந்தாலும் கூட, 100-க்கு ஒருவர் இருவர்தான் விவசாய நிலங்களை வைத்திருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு கிணற்றுக்குப் பம்ப் செட் இலவசமாக வாங்கிக் கொடுத்தால் விவசாயத்தில் முன்னேற்றம் அடைய முடியும். குடிதண்ணீர்த் திட்டத்தை நல்ல முறையில் செய்து வந்தாலும் ஹரிஜனங்களைப் பொறுத்து சில கஷ்டங்கள் இருக்கின்றன. சில இடங்களில் அந்தத் திட்டம் இல்லை. அவர்கள் வாய்க்கால் தண்ணீரைக் குடிப்பதன் காரணமாக நோய்க்கு ஆளாகிறார்கள். ஆகவே, ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. இரா. நல்லமுத்து :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன நல மான்யக் கோரிக்கை மீது நான் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். ஹரிஜனங்களுக்கு அரசாங்கம் சில நன்மைகளைச் செய்திருந்தாலும் 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஹரிஜன மக்கள் எந்த வகையில் வாழ்ந்து வந்தார்களோ அதே வகையில்தான் இன்றும் கிராமப்புறங்களில் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். சேலம் மாவட்டம் அதிக ஹரிஜன மக்களைக் கொண்டதொரு மாவட்டம். அங்கு ஹரிஜனங்கள் தொழில்கள் இன்றி, மனைக்கட்டு நிலங்கள் இன்றி சொந்த நிலங்கள் இன்றி, தொழில் துறையில் முன்னேறுவதற்கு எந்த வசதியும் இன்றி அங்கு அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்த புறம்போக்கு நிலங்களை வைத்துக் கொண்டு விவசாயம் செய்து கொண்டிருக்

கிறார்கள். ஊராட்சிமன்றத் தலைவர்கள் இந்த புறம்போக்கு நிலங்களில் பழத்தோட்டங்கள் அல்லது செடிகள் வைக்க அங்கு குடியிருந்து விவசாயம் செய்து வரும் ஹரிஜனங்களை அப்புறப்படுத்தும் நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் உடனடி கவனம் செலுத்தி ஹரிஜனங்களை வெளியேற்றாது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன், மாடுகளுக்கும், விதைப் பொருள்களுக்கும் ஆக ஹரிஜன விவசாயிகளுக்கும் 400 ரூபாய் கொடுக்கிறார்கள். அதில் 350 ரூபாய்க்கு மாடுகளும், 50 ரூபாய்க்கு விதைகளும் வாங்கியாக வேண்டும். விவசாயத்திற்கு பயன்படுத்திக் கொள்கிற அளவிற்கு மாடுகள் வாங்க வேண்டுமென்றால் 700 ரூபாய்க்கு வாங்கினால்தான் அவற்றை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியும். ஆனால் அரசாங்கம் கொடுப்பதோ 350 ரூபாய். இந்த 350 ரூபாயில் மாடுகளை வாங்கி ஹரிஜன மக்கள் விவசாயத்திற்கு அவற்றைப் பயன்படுத்த முடியாது. ஆகவே அவர் வாங்குவதற்கு மான்யம் அளிக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் மாவட்டம் மிகவும் வரண்ட பிரதேசம். அங்கு கிணறு வெட்ட ஹரிஜனங்களுக்கு 1,500 ரூபாய் மான்யமாகக் கொடுக்கப்படுகிறது. அந்த ரூபாயைக் கொண்டு 15 அடிதான் அங்கு வெட்ட முடியும். நல்ல கிணறு வெட்ட வேண்டுமென்றால் 4,000, 5,000 ரூபாயாகும். ஆகவே பொருள் வசதி இல்லாத ஹரிஜன மக்கள் அந்த 1,500 ரூபாயை வைத்துக் கொண்டு கிணறு வெட்டி விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். 1,500 ரூபாயில் கிணறு வெட்டினால் அது ஒரு குழி போல்தான் காட்சியளிக்கும். ஒவ்வொரு மாவட்டத்திலும் சில ஹாஸ்டல்கள் இருக்கின்றன. அங்கு படிக்கிற ஹரிஜன மாணவர்களுக்கு அது போதுமானதாக இல்லை. ஆகவே ஒவ்வொரு வட்டத்திலும் அமைக்கவேண்டும். அப்போதுதான் ஹரிஜன மாணவர்களுக்கு படிப்பதற்கு வசதியாக இருக்கும். பெரிய ஹாஸ்டல்களை ஏற்படுத்தி அதைக் கண்காணிக்க ஒரு செகன்டரி கிரேட் ஆசிரியரை நியமித்திருக்கிறார்கள். இரவு காலங்களில் மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள ஒரு பி.டி. ஆசிரியரை வார்டனாக நியமித்தால் அந்த மாணவர்களுக்கு ஏற்படுகிற சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள ஏதுவாக இருக்கும். ஆரம்பப் பள்ளிகளில் அநேக ஹரிஜன மாணவர்கள் படித்து வருகிறார்கள். கல்வியின் தரத்தை, நிலையைத் தெரிந்து கொண்டு அவர்கள் படித்தாலும் ஒரு வேளை சாப்பாட்டிற்காகத்தான் அவர்கள் பள்ளிக்கு செல்கிறார்கள் என்ற குறை இருக்கிறது. அவர்கள் மதிய உணவிற்காகத்தான் பள்ளிக்கூடங்களுக்கு செல்கிறார்கள். ஆகவே ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி ஏற்படுத்திக் கொடுத்து அங்கிருந்து கொண்டு அவர்கள் படிக்க சில சலுகைகள் அளிக்கவேண்டும். பட்டப்படிப்பு மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிற ஸ்காலர்ஷிப் குறைவாக இருக்கிறது. புத்தகங்கள், சில மராமத்து பொருள்கள் வாங்குவதற்கு அது போதுமானதாக இல்லை. அதோடு உடனடியாக ஸ்காலர்ஷிப் கொடுப்பதில்லை. அதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக அவர்கள் தங்கள் ஏழைத் தாய் தகப்பன்களைத் தொல்லை

செய்யும் அளவில் நிலை இருக்கிறது. ஆகவே ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் உடனடியாக கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு கூட்டுறவு முறையில் சில வீடுகள் கட்ட சில திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்னையில் ஆழ்வார்பேட்டையில் கூட்டுறவு முறையில் மனை கட்டும் திட்டம் பற்றி சென்ற ஆண்டும் குறிப்பிடப்பட்டிருந்தது, இந்த ஆண்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையிலும் ஆழ்வார்பேட்டை ஹரிஜன மனைக்கட்டு சங்கம் எந்தவித நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த நிலச் சொந்தக்காரர்கள் வேறு விதமாக விற்க முயற்சி செய்வதாகக் கேள்விப் படுகிறோம். அதையும் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சீ. சிவசுப்பிரமணியன்:** கனம் சபாநாயகர் அவர்களே, நம் உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில விஷயங்கள் கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். இப்போது, நம் அரசாங்கம் ஹரிஜன முன்னேற்றத்திற்காக பல துறைகளில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது. அரசாங்கம் இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிற நேரத்தில் பலர் குறை கூறிக் கொண்டு வருகிறார்கள். இருந்தபோதிலும், நம் அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் நிதியானது போதாது என்று இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் அரசாங்கத்தினால்தான் ஹரிஜன முன்னேற்றத்தைக் கொண்டு வர முடியும். அரசாங்கத்தை ஹரிஜன மக்கள் அதிகமாக நம்பி விட்டார்கள். ஆகவே இன்னும் அதிகப்படியான தொகை ஒதுக்கி எல்லாவித நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு ஹரிஜன மக்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்னேற்றம் என்று சொல்லும்போது மனைக்கட்டு பிரச்னைதான் பெரிய பிரச்னையாக இப்போது ஹரிஜன மக்கள் இடையே இருக்கிறது. நாங்கள் செல்லும் நேரத்தில் மனைக்கட்டுப் பிரச்னை பற்றித்தான் பேசுகிறார்கள். நாங்களும் அவற்றிற்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. தாமதத்தைத் தவிர்ப்பதற்காக ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அது மாவட்டந்தோறும் சென்று கொண்டிருக்கிறது. அந்தக் கமிட்டி செல்லும் இடத்தில் மனைக்கட்டுகள் வழங்கும் போது ஹெல்த் ஆபீசர்கள் அதைத் தடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. ஆகவே வெல்பேர் ஆபீசர்கள் எந்த மனையைப் பார்த்துக் கொடுக்கிறார்களோ அதை அப்படியே அவர்களுக்கு கொடுக்கவேண்டும். ஹெல்த் டிப்பார்ட்மென்டுக்கு அதை அனுப்பக் கூடாது என்று இந்த நேரத்தில் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஹெல்த் ஆபீசர்கள் நினைத்தால் கொடுக்கிறார்கள். இல்லாவிடில் அந்த இடம் தேவையில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே இந்தப் பிரச்னையை ஹெல்த் டிப்பார்ட்மென்டுக்கு விடக் கூடாது. ஹரிஜனத் தெருவில் ஜாதி இந்துக்கள் சில இடங்களை வாங்கியிருக்கிறார்கள் என்ற குறைபாடு

இருந்து கொண்டிருக்கிறது. முப்பது, 40 ஆண்டுகளாக இருக்கிறார்கள். ஜாதி இந்துக்கள் அவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். அவர்கள் போகவில்லை என்றால் வீட்டை விட்டு வெளியே போ என்று சொல்கிறார்கள். எந்த மாதிரியான இடங்கள் எந்தெந்த ஹரிஜனத் தெருவில் இருக்கிறதோ அந்த இடங்களை முதற்கண்ணாக ஹரிஜன மக்களுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு பெரிய பிரச்னையாக சிதம்பரம் தாலூகாவில் இருக்கிறது. அதிக மனைக்கட்டுக்கள் இல்லாத தாலூகா அது. எங்கு பார்த்தாலும் வயல்காடுகள். புஞ்சை நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் கிடையாது. அங்கு ஹரிஜன மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ள உதவ வேண்டும். மனைக் கட்டு கொடுக்கும்போது ஒரு குறிப்பிட்ட தொகையை அரசாங்கம் கொடுத்து மண்ணை வெட்டித் திருத்திக் கொள் என்று கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து திட்டம் நல்ல திட்டமாகியிருந்தாலும் அவை எங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன. பஞ்சாயத்து போர்ட் பிரசிடென்ட்கள், எல்லா பிரசிடென்ட்களும் அல்ல, சில பிரசிடென்ட்கள் ஹரிஜன மக்களுக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பிரசிடென்டாக வந்துவுடன் ஹரிஜன மக்கள் எந்தப் புறம்போக்கு நிலங்களில் பயிரிடுகிறார்கள், எந்தப் புறம்போக்கில் கை வைத்திருக்கிறார்கள் என்று பார்த்து அவர்களை வெளியேற்ற முயல்கிறார்கள். ஜாதி இந்துக்கள் இருக்கும் இடத்தில் அவர்கள் கவனம் செல்வதில்லையென்ற குற்றச்சாட்டைச் சொல்கிறேன். பல பிடங்களில் நடக்கிறது. தீர்த்தாம்பாளயத்தில் ஹரிஜன மக்கள் ஒரு கோவிலுக்காக 40 சென்ட் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். 400, 500 ரூபாய் செலவு செய்து திருத்தியிருக்கிறார்கள். பஞ்சாயத்துக்கள் ஏற்பட்ட உடன் இம்மாதிரிப்பட்ட விஷயங்கள்தான் கண்ணில் படுகிறது. அதன் மீது நடவடிக்கையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் 30 ஏக்கர் 20 ஏக்கர், 10 ஏக்கர் என்று எடுத்து வைத்திருப்பது எல்லாம் அவர்கள் கண்ணில் படுவதில்லை, இம்மாதிரிப்பட்ட நிலைமையை நிவர்த்தி செய்வதற்காக அமைச்சர் அவர்கள் தலையிட்டு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஹரிஜன மக்களுக்கு மூன்று சென்ட் நிலம் கொடுக்கப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மூன்று சென்ட் அவர்களுக்குப் போதாது. நாங்கள் இடம் இல்லாதவர்கள், அரசாங்கத்தை நம்பித்தான் வாழ்கின்றோம். இந்த நிலையில் இருப்பவர்களுக்கு வெறும் மூன்று சென்டைக் கொடுத்தால், அதில் எங்கே ஆட்டைக் கட்டுவான், எங்கே மாட்டைக் கட்டுவான், எங்கே எருமையைக் கட்டுவான், எங்கே எருக்குழிகளை வெட்டுவான்? ஆகவே இந்த மூன்று சென்ட் இருப்பதை மாற்றி குறைந்தது ஐந்து சென்டாவது கொடுக்கவேண்டும் என்று சபாநாயகர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) வேண்டுமென்றால் ஐந்து சென்ட்க்கு மேல் எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக்கொள்வோம்.

மேலும், ஹரிஜனங்களுக்கு கொடுத்துவரும் சலுகைகளை எல்லாம் கன்வெர்டர்ட் கிருஸ்தவர்களுக்கும் அதாவது ஹரிஜன கிருஸ்தவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கு சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறது. அதாவது நான்கு வருடத்திற்கு முன்னால் சாப்பிட்ட பணம் எவ்வளவோ அதை கொடுத்தார்கள். ஆனால் அந்த பணத்தை இப்போது நிறுத்தி விட்டார்கள். இதன் காரணமாக அவர்களுடைய படிப்பு மிகவும் மோசமடைகின்ற சூழ்நிலையில் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு எவ்வளவு சாப்பாட்டுக்கு ஆகின்றதோ அதையே சிபாரிசு செய்து கொடுக்கவேண்டும் என்று சபாநாயகர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாணவர்கள் பரீட்சைக்கு படிக்கின்ற இந்த கடைசி காலத்தில் பணம் கட்டினால்தான் பரீட்சைக்கு எழுத முடியும் என்று சொல்லுகின்ற நிலைமை வரும்போது, அவர்கள் எங்கே போய் 200 ரூபாய் 300 ரூபாய் கடன் வாங்குவது? கடன், வாங்கி கட்ட முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இதை நம்முடைய அமைச்சர் அவர்கள் நன்றாக ஆலோசித்து பார்த்து, அவர்களுக்கு கொடுக்கவேண்டிய கட்டணத்தை அப்படியே கொடுப்பதறகு வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள மாணவர்கள நாம் கொடுக்கின்ற ஸ்காலர்ஷிப்பை நம்பித்தான் படிக்கின்றார்கள். இதை நம்பித்தான் அவர்கள் காலேஜுக்கு செல்கின்றார்கள். ஆகவே இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று சபாநாயகர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். மேலும் . . . (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. எஸ். மணி:** கனம் தலைவர் அவர்களே, இந்த அரிஜன நலத்துறை மான்யத்தின்மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் 10-40 a.m.
பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நான் இவ்வளவு சொல்வதற்குள்ளே இரண்டு நிமிடம் ஆகிவிடுகிறது. சிறிது நேரம் கூடுதலாக தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் . . . .

கனம் சபாநாயகர்: இரண்டு நிமிடம் ஆகிவிடுகிறது என்று சொல்வதற்கே ஒரு நிமிடம் ஆகிவிடும்.

திரு. எஸ். மணி: இன்றைய தினம் அரிஜன நலத்துறையை எடுத்துக்கொண்டால், அரசாங்கத்தின் ஒரு சில நன்மையும் அதே நேரத்தில் பஞ்சாயத்தில் ஒருசில தீமையும் ஏற்படுகிறது. கிராமத்தில் ஒரு நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. முக்கியமாக புறம்போக்கு நிலங்கள் ஒதுக்குகின்ற விஷயத்தில் ஒரு ஸ்பெஷல் டிபார்மென்ட் போட்டு தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். மணி] [14th March 1964

பள்ளிக்கூடம் விஷயமாக ஆங்காங்கே கட்டிடம் கட்டப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மான்யத்தைப் பார்த்தால் பல விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது, நேரமில்லாததால் சுருக்கமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக பள்ளிக்கூடங்கள் எங்கெங்கெல்லாம் இல்லையோ அங்கெல்லாம் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாதா மாதம் பில் வருவதில்லை. இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் கழித்துத் தான் பில் வருகிறது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அரிஜன் வெல்பேர் ஆபீஸர்தான் இருக்கிறார்கள். இது போதாது, இரண்டு பேர்களாவது இருக்கவேண்டும். அதே போல் ஓவர்சீர் ஒருவர்தான் இருக்கிறார், இதிலும் இரண்டு பேர்கள் இருந்தால் நல்லதாக இருக்கும். முக்கியமாக நில ஆர்ஜிதம் செய்யும்போது, எங்கு பார்த்தாலும் குறை இருந்து கொண்டிருக்கிறது. நாம் எதையெல்லாமோ வாங்கிக்கொடுக்கிறோம் என்று சொன்னாலும் கூட, நில ஆர்ஜித விஷயத்தில் தாமதம் ஏற்படுகிறது. பெரிய தகராறுகள் இருந்து கொண்டிருக்கின்றன. தகராறு என்ன வென்று பார்த்தால் அதிகாரிகளே விலையை ஏற்றிவிடுகிறார்கள். அதோடு இதில் மிக காலதாமதம் ஆகிறது. நாம் பட்ஜெட்டில் எவ்வளவோ ரூபாய்களை ஒதுக்குகின்றோம். பட்ஜெட்டைப் பார்த்தால் ஏராளமான வகையில் பணம் செலவு செய்யப் படுவதாகச் சொல்லப்படுகிறது. இதெல்லாம் எங்கே நடத்தப் படுகிறது என்று பார்த்தால் உண்மையில் எங்கள் பகுதியில் ஒன்றும் இல்லை. இந்தப் பணம் எல்லாம் எங்கே போகிறது, எப்படி செலவு செய்யப்படுகிறது என்று தெரிவதில்லை. மாவட்டத்தில் அரிஜன கமிட்டி என்று ஒன்றிருக்கிறது, இதில் என்னவெல்லாமோ தீர்மானங்களை போட்டு அனுப்புவதாக சொல்கிறார்கள், அதைப்பற்றி ஒன்றும் தெரிவதில்லை; யார் இந்தத் தீர்மானத்தைப் போடுகிறார்கள், எதற்காகப் போடு கிறார்கள், யார் யார் இந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள் என்று பார்த்தால் . . . .

கனம் சபாநாயகர் : கமிட்டியில் யார் யார் இருக்கிறார்கள் என்றாவது சொல்ல வேண்டும். கனம் அங்கத்தினர் தங்கள் கருத்தை தெளிவாகச் சொல்லவேண்டும்.

திரு. எஸ். மணி : யார் யார் இருக்கிறார்கள் என்றால் எலெக்ஷனில் தோற்றுப் போனவர்கள் எல்லாம் இந்த கமிட்டியில் இருக்கிறார்கள். முக்கியமாக அங்கே இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்களைப் போட வேண்டாமா என்று கேட்கிறேன். அதல்லாமல் எலெக்ஷனில் தோற்றுப்போனவர்களைப் போட்டு, ஏதோ இந்த முதியோர் தொகை கொடுப்பது போல் இவர்களுக்கும் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது. . . .

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்கள், முதியோர் உதவித்தொகை அளிக்கக்கூடாது என்று நினைக்கிறாரா?

திரு. எஸ். மணி : முதியோர் தொகை அளிக்கக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. இந்த மாதிரி எலக்ஷனில் விட்டுப்

14th March 1964] *[திரு. எஸ். மணி]*

போனவர்கள், தோற்றுப் போனவர்கள் இவர்களை எல்லாம் இந்த கமிட்டியில் போட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் சொன்னேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எத்தனையோ அரிஜனங்கள் எலக்ஷனில் எதிர்கட்சியிலும் சரி, ஆளும் கட்சியிலும் சரி போட்டியிட்டார்கள், பலர் தோற்றும் போயிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் அரிஜன நல முன்னேற்றத்திற்காக பாடுபட லாயக்கற்றவர்கள் என்று சொல்லிவிட முடியுமா?

திரு. எஸ். மணி : நான் லாயக்கற்றவர்கள் என்று சொல்லவில்லை, ஆனால் இவர்கள் அந்தக் கமிட்டியிலிருந்து கொண்டு என்ன செய் கின்றார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அந்தக் கமிட்டியில் இருக்கட்டும், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்கள் சும்மா அங்கேயிருந்து கொண்டிருக்கவில்லை, ஒவ்வொரு தடவையும் 30 ரூபாய், 40 ரூபாய் பணம் வாங்குகிறார்கள். அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் கேட்டாலும் இதைப்பற்றி கலெக்டர் சொல்வது என்னவென்றால், சரி; இப்போது போய் விட்டது; பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிடு கிறார். தினசரி பத்து பேர்களை அழைத்துக்கொண்டுபோய், எனக்கு வேண்டியவர்தான் மினிஸ்டர், நான் எதை வேண்டு மானாலும் செய்து தருகிறேன் என்று சொல்லிக்கொண்டு ஏதாவது நன்மைக்காக வரவேண்டிய காரியங்களையும் கெடுத்துவிடுகிறார் கள். இந்த நிலைமையை தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் அவர்களுக்கு கமிட்டியில் இடம் கொடுப்பதைப்பற்றி எனக்கு எந்தவிதமான கவலையும் இல்லை. ஆனால் மக்களுக்கு இதனால் நன்மை கிடைக்கவேண்டும்.

அடுத்து ஸ்காலர்ஷிப் காலா காலத்தில் கிடைப்பதில்லை என்று மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். கடைசியில் இந்தப் பணம் வருமோ வராதோ என்று மாணவர்கள் பயப்படுகிறார்கள். ஆகவே இதை துரிதமாக கொடுத்தால் நன்றாக இருக்கும். மேலும் பால் கூட்டுறவு சொஸைட்டி விஷயத்தில் வேண்டிய சலுகைகள் கொடுக்க வேண்டும். முக்கியமாக பெரம்பலூர் வட்டாரத்திலுள்ள சொஸைடிக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அப்படி இருந்தால் எங்கள் பகுதிகள் பயன் அடையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடு கட்டிக்கொடுக்கக்கூடிய விஷயத்தில், கூட்டுறவு முறையில் வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் புலாம்பாடி கிராமத்தில் ஒரு ஹாஸ்டல் கட்டிடம் கட்டி பணமும் வாங்கியாய்விட்டது. வேலை அப்படியே பாதியிலே கிடக்கிறது. பையன்கள் இன்னும் வர வில்லை. சபாநாயகர் அவர்கள்கூட அந்த இடத்திற்கு வந்திருக் கிறார்கள். இந்த ஹாஸ்டலை சீக்கிரமாக ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அப்படி இருந்தால் மாணவர்கள் நல்ல முறையில் பாடங்களை செய்துகொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

[திரு. எஸ். மணி] [14th March 1964

பல இடங்களில் நாம் சமுதாய மன்றங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். தமிழகத்தில் 25 சமுதாய மன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏதோ ஐந்து மைல்களுக்கு அப்பால் போய் பிரச்சாரம் செய்யவேண்டும் என்றெல்லாம் பலவித நோக்கங்கள் இருக்கின்றன. ஆனால் சேவைக்குரிய ஆட்கள் எங்கேயிருக்கிறார்கள் என்று பார்த்தால் ஆளே இருப்பதில்லை. வெல்பேர் ஆபீஸரும் நானும் ஒரு இடத்தில் போய் பார்த்தபோது செருவாச்சூர் கிராமத்தில் சமுதாய மன்றம் ஒன்று இருக்கிறது; அங்கு ஆளையே கண்டுபிடிக்க முடியவில்லை. நான் சொல்வது செய்கின்ற வேலையை கடமையுணர்ச்சியோடு செய்யவேண்டும்.

அடுத்து, மயானம், ரோடு வசதி, மின்சாரம் இவைகள் எல்லாம் எங்கள் பகுதிக்கு இன்னும் நல்ல முறையில் கிடைக்கவில்லை. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை மேலும் அதிகமாக செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் குன்னத்தில் அரசாங்க உணவு விடுதி ஒன்று நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்குள்ள மக்களுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது, கனம் அமைச்சர் அவர்களுக்கு இதைப்பற்றி நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: நான் அந்தத் தொகுதியிலிருந்தே மெம்பராக இருந்திருக்கிறேன்.

திரு. எஸ். மணி: இதற்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அந்த இடத்திலும் சீக்கிரமாக ஒரு அரசினர் உணவு விடுதி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

11-00 a.m. ***திரு. எஸ். சின்னய்யன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த ஹரிஜன நலத்துறை மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாகாணம் இந்த பாரத கண்டத்திலேயே தீண்டாமை விலக்கு விஷயத்தில் முன்னணியில் நிற்கிறது, மற்ற எல்லா மாகாணங்களைக் காட்டிலும் என்பது எல்லோரும் நன்றாக அறிவார்கள். இதற்கு முக்கிய காரணம் என்ன என்று சொன்னால் 25—30 ஆண்டுகளுக்கு முன்னால் ஹரிஜனங்களுக்கு இருக்கிற கொடுமைகளை நன்றாக உணர்ந்து கவனித்த மகான் காந்தி அவர்கள் எடுத்துக் கொண்ட சிரத்தை காரணமாக இந்த நாட்டிலே இருக்கிற ஹரிஜன மக்கள் நன்றாக வாழ்வதற்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அவரும் அவருடைய சிஷ்யர்களும் தகுந்த வேலை செய்து கொண்டு வந்தார்கள். அந்த மகானுடைய சிஷ்யர்கள் இன்றைக்கு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினால் தீண்டாமை விலக்கு விஷயத்திலே அதிக அக்கறையையும் கவனத்தையும் இந்த ஆட்சி செலுத்தி வருகிறது என்பதைப் பார்க்கும்போது இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

14th March 1964] [திரு. எஸ். சின்னய்யன்]

தீண்டாமை விலக்கு விஷயத்தில் இன்னும் அதிக சங்கடங்கள் கிராமப் புறங்களில் இருக்கத்தான் செய்கிறது. கனம் அங்கத்தினர் திட்டை சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல தீண்டாமை விலக்கு விஷயத்தில் டெபுடி சேவக்குகளை நம்பிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை, இந்த நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருக்கிற காந்திஜியின் சிஷ்யர்கள் அந்தத் தொழிலை ஏற்று நடத்த ஆவன செய்தால் தீண்டாமை விலக்கு விஷயம் நல்ல முறையில் செயல்படும், தீண்டாமை அடியோடு அழிந்து விடும் என்று நான் கருதுகிறேன். அதிகாரிகளைக் கொண்டு காரியங்களை நடத்தி விடலாம் என்று நினைத்தால் நிச்சயமாக முடியாது . . .

கனம் சபாநாயகர்: அவர்கள் எங்கு இருக்கிறார்கள்?

திரு. எஸ். சின்னய்யன்: இங்கேயே இருக்கிறார்கள். அவர்கள் தான் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். கனம் கக்கன் அவர்கள் அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். வெளியிலே இன்னும் சில தொண்டர்கள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களுக்கெல்லாம் இந்த அதிகாரத்தைக் கொடுத்து, அதிகாரிகள் மூலமாக இல்லாமல், காந்தியின் தத்துவத்தை மனதில் கொண்ட அந்த சிஷ்யர்களைக் கொண்டு . . .

கனம் சபாநாயகர்: நான்-அஃபிஷியல் பாடி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்களா?

திரு. எஸ். சின்னய்யன்: ஆம், நான்-அஃபிஷியல் பாடி இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். காந்தியின் சிஷ்யர்களைக் கொண்ட நான்-அஃபிஷியல் பாடி இருக்கவேண்டுமென்று கருதுகிறேன். ஹரிஜனங்களையே அதிகாரிகளாகப் போட்டு தீண்டாமை ஒழிப்பு பிரசாரம் செய் என்று சொன்னால் என்ன அர்த்தம்? இதிலே ஜாதி ஹிந்துக்கள் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு இதிலே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அந்த வகையில் அரசு தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டு தீண்டாமை விலக்கு பிரசாரம் செய்ய நடவடிக்கை எடுத்தால் தீண்டாமை அடியோடு அழிந்து விடும். நாமக்கல் கவிஞர் "தீண்டாமை என்கின்ற தீய வழக்கம்—ஹிந்து மதத்தை வெட்டுது வாளாய்—அவர்கள் சிந்தை மிகுந்து அழிந்திடும் முன்னே நீக்கிட யாரும் எழுந்திடும் இன்னே" என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன மாதிரி ஜாதி ஹிந்துக்கள் உணர்ந்து புரட்சிகரமான போராட்டம் வருவதற்கு முன்னால் இந்த மக்களுடைய முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டுமென்று ஜாதி ஹிந்துக்களுக்கு அந்த எண்ணமும் கருத்தும் ஏற்படும். தீண்டாமை ஒழிக்கும் விஷயத்தை ஜாதி ஹிந்துக்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த நல்ல சந்தர்ப்பத்தில் எதிர் கட்சியில் இருக்கிறவர்கள்கூட இந்த மான்யத்தைப் பற்றி எந்த வித குறையும் சொல்லாமல் . . . .

[14th March 1964

கனம் சபாநாயகர் : மான்யத்தை குறை சொல்லவில்லை. நடைமுறையில் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

திரு. எஸ். சின்னய்யன் : அதோடு கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன், மகிழ்ச்சி அடைகிறேன், பாராட்டுகிறேன். சாதாரணமாக செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு ஒரு கண்டம் ஏற்பட்டது, கருவிகள் வழங்கும் விஷயத்திலே. என்ன காரணத்தினாலோ தெரியவில்லை அந்த கண்டம் வந்தது. அதை நிவர்த்தி செய்து மாகாணத்தில் இருக்கும் அந்த தொழிலாளர்களுக்கு கருவிகள் வழங்கலாம் என்று உத்திரவு அனுப்பினார்கள், முறையிட்டுக் கொண்டதின்பேரால் ஆகையால் அந்தச் சமுதாயத்தின் சார்பாக நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கருவிகள் வழங்கும் விஷயத்திலேகூட இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். 350 ரூபாய்க்கு கருவிகள் கொடுக்கிறோம் என்று கிராமங்களுக்கு சர்க்குலர் அனுப்பப்படுகிறது. அது அங்கே தண்டோரா மூலம் பிரசித்தம் செய்யப்படுகிறது. 350 ரூபாய் என்று சொல்லி விட்டு 30 ரூபாய் கொடுத்தால் என்ன அர்த்தம் ? பிரசாரம் ஒரு விதமாகச் செய்துவிட்டு, அரசு திட்டத்திற்கும் கொள்கைக்கும் முரண்பட்ட முறையில் செயல் இருக்கிறது. இதனால் அரசைக் குறை கூறும் முறை ஏற்படுகிறது. 350 ரூபாய் வழங்குகிறோம் என்று சொன்னால் 350 ரூபாய் வழங்க வேண்டும். 30 ரூபாய் தான் வழங்குவது என்று சொன்னால் 30 ரூபாய் வழங்குவதாகச் சொல்லவேண்டும். அந்த முறையில் இல்லாமல் இருப்பதால் பரிகாசமாக பேசுகிறார்கள். . .

கனம் திரு. பூ. கக்கன் : எதற்கு 30 ரூபாய் கொடுக்கிறார்கள் 350 ரூபாய் என்று சொல்லி விட்டு? அதைப் பற்றி கொஞ்சம் விரிவாகச் சொல்லவேண்டும்.

திரு. எஸ். சின்னய்யன் : அதாவது ஷூ மேக்கிங்குக்கு கொடுக்கிறார்கள். இதற்கு என்ன என்றால் 30 ரூபாய் பெறுமான கருவிகள் தான் கொடுக்கிறார்கள். பிரசித்தப் படுத்துவது 350 ரூபாய் என்று. தண்டோரா போடுவது 350 ரூபாய் வழங்கப்படும் என்று. 350 ரூபாய்க்கு கருவிகள் கொடுக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் கொடுப்பது, ஒரு கத்தி 4 அணா, ஒரு கல்லு $1\frac{1}{2}$ ரூபாய், இன்னும் ஒரு சாதனம் 7 ரூபாய். இப்படி மொத்தம் எல்லாம் சேர்ந்து 30 ரூபாய் தான் வருகிறது. 30 ரூபாய் வழங்கப்படும் என்று தண்டோரா போடலாம் . . .

கனம் திரு. பூ. கக்கன் : தோல் தைக்கும் மெஷின் என்ன ஆயிற்று? தோல் தைக்கும் சகோதரர்களுக்கு மெஷின், கத்தி, இதர கருவிகள் எல்லாம் சேர்ந்து அந்த விலை ஆகிறது. இப்போது தான் மெஷின் எல்லோருக்கும் கிடைக்கிறது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் நன்றி பாராட்டினார்கள்.

14th March 1964]

திரு. எஸ். சின்னய்யன் : ஷூ மேக்கிங்குக்காக 30 ரூபாய் கொடுக்கப்படுகிறவர்களுக்கு மெஷின் கொடுப்பதில்லை. அப்படி இருந்தால் மெஷின் 250 ரூபாய்: இது 30 ரூபாய் எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 300 ரூபாய்க்கு வருமே. அந்த மாதிரி இல்லை ஆகையால் தண்டோரா செய்யும்போது 30 ரூபாய் என்று இருந்தால் 30 ரூபாய் என்று சொல்ல வேண்டும்; அல்லது 350 ரூபாய் கொடுப்பதாக இருந்தால் 350 ரூபாய் என்று சொல்லவேண்டும் . . .

கனம் சபாநாயகர் : கையில் வைத்துக்கொண்டிருப்பது என்ன?

திரு. எஸ். சின்னய்யன் : கலெக்டர் ஆபீஸிலிருந்து வருகிற சர்க்குலர்.

அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்பி 30 ரூபாய் கொடுப்பதாக இருந்தால் 30 ரூபாய் என்று சர்க்குலர் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தரிசு நிலங்களை வழங்குவதில் இருக்கும் சங்கடம் ரொம்ப ஜாஸ்தி தான். இந்தச் சங்கடத்தைப் போக்க கனம் அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். இங்கே பல நண்பர்கள் சொன்னார்கள். அந்த வகையிலே இதற்கு அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக வார்டர்கள், ஹாஸ்டல்களிலிருந்துதான் நல்ல மாணவர்கள் உற்பத்தியாக வேண்டும். அரசாங்க நிர்வாகம் வருவதற்கு முன்னால் ஊரெல்லாம் பிச்சையெடுத்து ஹாஸ்டல்கள் நடத்தினோம் அல்லவா? அப்போது எவ்வளவு பஜனை? பிள்ளைகளுக்கும் அன்பு ஆற்றல் எல்லாம் இருந்தது. நெற்றிக்கு இட்டுக்கொள்வார்கள். இப்போது அதிகாரிகள் போய் காரியங்களைச் செய்வதால் அதிகார தோரணை இருப்பதால் ஒரு காரியமும் உருப்படியாக நடப்பதாகத் தெரியவில்லை. தயவு செய்து ஹாஸ்டல்களுக்கு வார்டர்களை நியமிப்பதில் நல்ல வயது வந்த, தேசியப் பற்று, அபிமானம் நிறைந்த முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் படைத்தவர்களைப் போட்டால் உள்ளபடியே நல்ல முன்னேற்றம் ஏற்படும் . . . (மணி அடிக்கப்பட்டது)

*** திரு. தா. சின்னசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது தமிழக மாநிலத்தில் உள்ள எல்லா பொதுஜனங்கள், ஆட்சியாளர்களுடைய அமைப்பில், அண்ணல் காந்தியார் அவர்கள், ஜனநாயக சோஷலிசம் என்று அன்னியரிடத்திலிருந்து நாட்டைப் பிடுங்கிய போதே எல்லா ஆண் பெண்களுக்கும் சம உரிமை, ஏழை பணக்காரர்கள் என்று நமது நாட்டில் உலவக்

கூடாது என்று அவர்கள் ஒரு துணி இடையிலேயும், ஒரு துண்டு மேலேயும் போட்டு, பிரும்மசாரி போல இங்கே அமர்ந்திருப்பதை நாம் கண் குளிரப் பார்க்கிறோம். அதை முன்னிட்டு நமது ஜனநாயக அமைப்பின் பேரில் இந்தச் சட்ட மன்றத்தில் அங்கத்தினர்களாகவும், அமைச்சர்களாகவும் அமர்ந்திருக்கக்கூடிய இந்தச் சட்ட மன்றம் இந்த காந்தியடிகளைப் பின் பற்றித்தான் இருக்கிறது என்று இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் நம்முடைய மாநிலத்தில் அகில இந்திய காங்கிரஸ கமிட்டித் தலைவர் அவர்களும், கனம் உள்துறை அமைச்சர் அவர்களும், இவர்கள் இருவரும் ஜனநாயக அமைப்பைப் பார்க்க வேண்டும். சேலம் மாவட்டத்திலிருந்து வந்த ஒரு அங்கத்தினர் பேசும்பொழுது எனக்கு—அதே ஞாபகம்தான் இருக்கிறது—எதிர்க் கட்சியைத் தாக்கவேண்டுமென்ற அளவிலே அகங்காரத்துடனும் துவேஷத்துடனும் பேசுகிறார்களே தவிர, ஜனநாயக அமைப்பில் அவர்கள் பேசவில்லை. சேலம் மாவட்டத்தில் ராசிபுரம் தாலுகாவில் ஆயில்பாளையம், குருசாமிபாளையம் போன்ற வட்டாரங்களைப் பார்த்தால், சமீபத்தில் பேசிய ஒரு அங்கத்தினர் கூறிய மாதிரி ஹரிஜனங்களுக்கு உட்கார்ந்து இருக்கக்கூட இடம் கிடையாது. தண்ணீர் கிடையாது. தண்ணீர் குடிக்கவேண்டுமென்றால் ஆயில் என்ஜின் தண்ணீர் இறைக்கும் இடத்தில் ஆரம்பக் கட்டத்தில் கை வைக்கக்கூடாது, கை வைக்க விடமாட்டார்கள். ஒரு பர்லாங் தள்ளிப் போய்தான் ஹரிஜனங்கள் தண்ணீர் சாப்பிடவேண்டும். அவர்கள் உட்காருவதற்குக்கூட 5 சென்டு நிலம்கூட அவர்களுக்கு இல்லை. கல்லான்பாறையின் மேல்தான் அங்கு இருக்கிற ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். தயவு செய்து கனம் உள்துறை அமைச்சர் அவர்களும் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராசர் அவர்களும் சேர்ந்து அந்த மாவட்டத்திற்கு ஜனநாயக சோஷலிசத்தை அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வது காந்தியடிகள் மூலமாக தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

இப்பொழுது ஹரிஜனங்களுக்கு நன்மை செய்திருக்கிறோம் என்று ஒரு புஸ்தகமே போட்டுக் கொடுத்துவிட்டார்கள். ஆனால், ஹரிஜனங்களுக்குச் செய்ய வேண்டிய விஷயங்கள் ரொம்ப இருக்கின்றன. தென் ஆற்காடு ஜில்லா, கள்ளக்குறிச்சி தாலுகாவில் 360 கிராமங்கள் இருக்கின்றன. 112 வீடுகள் திட்டத்தில் 8 தாலுகாவில் ஒரு தாலுகாவுக்கு ஒரு வீடுதான் ஆகிறது. அதில் மான்யமாக கொடுத்தால் போதாது. வீடுகள் கட்டுவதற்காக ரூ. 750 மான்யமாக தொடர்ந்து ஒரு கிராமத்திற்கு ஒன்றிலும் கொடுக்க வேண்டும். ஆனால், ஹரிஜனங்களுக்காக கட்டப்படுகிற வீடுகளுடைய நிலைமையைக் கொஞ்சம் பார்க்க வேண்டும். மதராஸ் ரோடிலிருந்து கடலூர் திரும்புகிற வழியிலே பார்த்தோமானால், உளுந்தூரிலிருந்து திரும்பும் பாதையில் ஒரு ஹரிஜனக் காலனி இருக்கிறது. வீடுகளெல்லாம் இடிந்து, விழுந்து, வாரையெல்லாம் தொங்குகிறது. பாலைவனம் மாதிரி இருக்கிறது. ஒரு ஆள்கூட இல்லை. கேணி தான் இருக்கிறது.

லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கினால் பிரயோசனம் இல்லை. சில கோடி ரூபாயாவது ஒதுக்கவேண்டும். தைரியம் இருந்தால், ஹரிஜன முன்னேற்றம் வேண்டுமென்றால், அந்தத் திட்டத்தை நீங்கள் பலப்படுத்திக் கொடுத்து, ஹரிஜனங்களுக்கு நல்ல முறையில் வீடுகள் கட்டித்தர வேண்டும். ரூபாய் ஆயிரத்தில் என்ன வீடு கட்ட முடியும்? ஒரு ரேடியோ செட்டு அமைப்பதற்கு ரூ. 5,000 செலவழிக்கப்படுகிறது. ரூ. 750 கையிலே கொடுத்து, வீடு கட்டிக் கொள்ளுங்கள் என்றால் என்ன பொறி வாங்கி சாப்பிட்டுவிட்டுப் போவதா? (சிரிப்பு.

கனம் திரு. பூ. கக்கன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஆயிரம் ரூபாய்க்கும் பொறி வாங்கிச் சாப்பிட்டுவிடுவார்களா என்று கேட்கிறேன்.

திரு. தா. சின்னசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் காலத்தில் சாமான்களெல்லாம் என்ன விலை விற்கிறது? ரூ. 8½-க்கு கட்டு விற்றது இப்பொழுது ரூ. 85-க்கு விற்கிறது. நம்முடைய ஆட்சியிலே, ஒரு வண்டி கட்டு ரூ. 85 ஆக இருந்தது. இப்பொழுது ரூ. 750. கோடாலி வண்டியைப் பற்றித்தான் எனக்கு முக்கியமாகத் தெரியும். முன்காலத்தில் ரூ. 100-க்கு மாடு வாங்கினால் ஜனங்கள் வந்து வேடிக்கை பார்ப்பார்கள். இப்பொழுது ரூ. 1,200 போட்டால்தான் நல்ல உழவு மாடு வாங்க முடியும். ரூ. 750 கொடுத்துவிட்டு ஹரிஜன முன்னேற்றத்திற்காகக் கொடுத்திருக்கிறோம், ஹரிஜனங்கள் வெகுவாக முன்னேற முடியும் என்று சொன்னால், எப்படி முடியும்? ஆகவே, அந்த மாதிரி திட்டம் வேண்டாம். அப்படி ஹரிஜன முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்றால், தைரியமாக சில கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கி, மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் மான்யமாகக் கேட்டுப் பெற்று, ஏக இந்தியா என்று சொல்லக்கூடிய இந்தப் பொறுப்பிலே நீங்கள் ஆவன செய்யவேண்டும். எதிர்க்கட்சியைத் தாக்கக்கூடிய திறமை உங்களுக்கு இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஏக இந்தியா என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில் தீண்டாமையை ஒழிக்க சில கோடி ரூபாயை ஒதுக்கி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நாட்டிலே இவர்களில் பலர் மண் வெட்டுகிறார்கள். மூட்டை தூக்குகிறார்கள். வல்லமை சாலிகளாக இருக்கிறார்கள். அங்கே ஓடுகிறார்கள், இங்கே ஓடுகிறார்கள். ஒரு பணக்காரர் வீட்டில் யாராவது இறந்துவிட்டால் அங்கே ஓடு, இங்கே ஓடு, 15 மைல் தூரம் ஓடு என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அவர்கள் நடு வழியிலே விழுந்து சாகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட வல்லமைசாலிகளுக்கு இங்கு இருக்கிற எல்லா அங்கத்தினர்களும் சேர்ந்து ஏக மனதாக, ஏக இந்தியா என்று சொல்லக்கூடிய இந்த சந்தர்ப்பத்தில், மத்திய சர்க்காரிடமிருந்து மானியத் தொகை அதிகமாகக் கேட்டு வாங்கி அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்யவேண்டும். இந்த சமூகத்தினர் வல்லமை சாலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் சீர்கேடான நிலையில் இருக்கிறார்கள், அவர்களை

[திரு. தா. சின்னசாமி] [14th March 1964

முன்னேற்ற வேண்டுமானால் பல கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். தைரியமாகச் செய்வோம் என்று கோடிக்கணக்கில் ரூபாய் ஒதுக்கி அவர்களை முன்னேற்றவேண்டும். நான் ஏற்கனவே ஒரு தடவை சொல்லியிருக்கிறேன் . . .
(மணி அடிக்கப்பட்டது).

* **திரு. எல். ஆனந்தன்:** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, நமது உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச முன்வந்துள்ளேன். மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையை பிரேரேபித்துப் பேசும் பொழுது இங்கே ஒரு வார்த்தை சொன்னார்கள். ஹரிஜனங்களை முன்னேற்றுவதற்கு ஜாதி இந்துக்கள் முற்படவேண்டும், ஜாதி இந்துக்களால்தான் ஹரிஜனங்கள் முன்னேற முடியும் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது பார்க்கும்பொழுது இந்த ஹரிஜன மானியத்தின் மீது பேசிய அத்தனை பேர்களும் ஹரிஜனங்களாகத்தான் இருக்கிறார்கள். ஜாதி இந்துக்கள் யாரும் பேசவில்லை. (கனம் சபாநாயகர்: நீங்கள் நேரம் கொடுத்தால் அவர்கள் பேசுவார்கள்.) ஹரிஜன மானியத்தில் ஜாதி இந்துக்கள் பேசினால் தான் ஒரு உற்சாகம் ஏற்படும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் சுமார் 44 கிராமங்களுக்கு மேல் வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் தேதி கனம் அமைச்சர் அவர்களிடம் நேரில் ஓர் மகஜர் கொடுத்துள்ளேன். அதைப்பற்றி இதுவரையில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் மேற்படி வீட்டு வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒரு கிராமத்தில் அரசாங்கம் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். ஒரு வீடு ஒன்றுக்கு ரூ. 1,000 தான் கொடுக்கிறார்கள். அதை ரூ. 250-ஆகக் கொடுத்து, ஆங்காங்கு வீடுகள் கட்டிக்கொள்ளச் செய்தால் சுமார் 80 வீடுகள் கட்டிக் கொள்ள ஏதுவாக இருக்கும். இந்தத் திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் உதவி சபாநாயகர் அவர்களுடைய தொகுதியில் என்னுடைய ஊரைச் சேர்ந்த மலைப் பிரதேசத்தில் இருக்கும் மலை ஜாதியினர்களுக்கு நம் நாடு சுதந்திரம் அடைந்து 16 ஆண்டுகள் ஆகியும்கூட, இன்னும் சுதந்திரம் பிறக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நான் 1952-ல் இந்த சட்ட மன்றத்தில் பேசியிருக்கிறேன். 1962-லும் இந்த சட்ட மன்றத்தில் பேசியிருக்கிறேன். அவர்களுக்கு தான் பெற்ற பெண்ணைக் கட்டிக் கொடுக்கக்கூட உரிமை இல்லாமல் இருக்கிறது. அங்கு பெற்றோர்கள் சம்மதம் இல்லாமலேயே அந்த ஊரில் இருக்கும் கவுண்டன், கங்காணி மூப்பன்மார்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் ஏலம்

14th March 1964] [திரு. எல் ஆனந்தன்]

போட்டு கட்டிக்கொடுக்கிறார்கள். அந்தக் காலத்திலிருந்து அந்த பரம்பரை தொடர்ந்து இருந்து வருகிறது. சடையக் கவுண்டர் ஜாகீர், குரும்பக் கவுண்டர் ஜாகீர், அறியக் கவுண்டர் ஜாகீர் என்று 3 ஜாகீர்கள் இருக்கின்றன. அது சுமார் 15,000 ஜனத் தொகை உள்ள ஜாகீர். அந்த ஜாகீர்தார் சொல்லுகிறபடி யார் அதிகப் பணம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குத்தான் பெண்ணைக் கட்டிக்கொடுக்கவேண்டும். ஒருவர் ரூ. 300 பரிசம் கொடுக்கிறேன் என்று சொன்னால், இன்னொருவர் ரூ. 500 பரிசம் கொடுக்கிறேன் என்று சொன்னால், ஆள் கெட்டவனாக இருந்தாலும் சரி நல்லவனாக இருந்தாலும் சரி, யார் அதிகப் பணம் கொடுக்கிறானோ அந்த ஆடவனுக்குத்தான் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் வழக்கம் அங்கே இருக்கிறது. ஆகவே அதை உடனடியாக தடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அவர்களுக்கு ரோடு வசதி கிடையாது, பள்ளிக்கூட வசதி கிடையாது, மின்சார வசதி கிடையாது. அங்கே 15,000 ஜனத்தொகை இருக்கிறது. (குறுக்கீடு.) ப்ளாக் ஆபீசைக் கூட கள்ளக்குறிச்சியில் வைத்திருக்கிறார்கள். பிளாக் ஆபீசில் அங்கே எந்த வேலையும் செய்ய முடியவில்லை. காரணம் அந்த ஜாகீர்தார், 'என்னுடைய ஜாகீரில் ஒரு வேலையும் செய்யக்கூடாது' என்று சொல்லி உயர்நீதி மன்றத்தில் 'ரிட்' போட்டிருப்பதாகத் தெரிகிறது. அதை உடனடியாக சர்க்கார் எடுத்துக்கொண்டு, அங்குள்ள மக்களுக்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து என்னுடைய தொகுதியில் ரிஷிவந்தியம், அறியலூர், மணலூர்பேட்டை ஆகிய இடங்களில் ஹரிஜன மக்களுக்கு ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வி. ஆர். பெரியண்ணன்:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஹரிஜன நல மானியத்தின் மீது என் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜன நலத்துறை மூலம் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு, அதற்காக நாம் நல்ல முறையில் பணத்தை செலவு செய்தும், சினிமாப் படங்கள் மூலமாகவும், மற்றும் விளம்பரங்கள் மூலமாகவும் பிரசாரம் செய்வதாக அறிகிறேன். என்னுடைய வட்டத்திலே இது போன்ற தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் நடந்ததாக எனக்குத் தெரியவில்லை. கிராமப் புறங்களிலுள்ள மக்கள் இதை நன்கு புரியாமல் இருக்கிற காரணத்தால், தீண்டாமையை ஒழிப்பதற்கு நல்ல முறையில் பிரசாரம் செய்து பணி ஆற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதி இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் உள்ள வித்தியாசங்களைப் போக்க வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில், ஹரிஜனங்களுக்குள்ளேயே சில உட் பிரிவுகள் ஏற்பட்டு பல குழப்பங்

[திருமதி சி. குழந்தையம்மாள்] [14th March 1964

சொல்ல விரும்புகிறேன். பெரும்பாலும் ஹரிஜன நலத்துறையிலே செலவழிக்கப்படுகிற பணமும் அதேமாதிரி ஒவ்வொரு துறையிலும் செலவழிக்கப்படுகிற பணமும் என்னைப் பொறுத்த வரையில் நல்லமுறையில் பயன்பட்டு வருகிறது என்பதை நான் அனுபவ ரீதியாகச் சொல்லமுடியும். அதிலே எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதாது என்ற குறையைத் தான் ஆண்டு முதலிலேயே நாம் காணக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது பெண் குழந்தைளுக்கு உடைகள் வழங்குகிறார்கள். சாதாரணமாக ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளுக்கு உடைகளுக்காக அதிகமாகச் செலவாகும் என்பது நமக்குத் தெரியும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அதனால் மேலும் ஒரு ஜோடி உடை அதிகமாகக் கொடுப்பதற்கு அதிகப்படி தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களிலே அபிவிருத்தி வேலைகள் என்று சொல்லி, அதிலே பல்வேறு துறைகளில் வேலை செய்து நல்ல முறையில் பணத்தை செலவு செய்கின்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தைப்போல ஹரிஜனச் சேரிகளை எந்தப் பஞ்சாயத்து யூனியன் அதிகமான அளவு சுத்தத்துடனும், பொது சுகாதாரத்துடனும் பாதுகாக்கிறதோ அவைகளுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய முறையிலே ஒரு பரிசுத் திட்டத்தை ஹரிஜன நல இலாகா மூலம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டிலே திட்ட வேலைகளில் யார் அதிகமாகச் செலவு செய்கிறார்களோ அவர்களுக்கென்று பரிசு கொடுக்கப்பட்டது. இதைக் கிராமத்திலே இருக்கிற பெரிய மனிதர்களும், சேவையுள்ளம் படைத்தவர்களும் கொடுக்கிறார்கள். விவசாயத்திலே அதிக உற்பத்தி செய்தவர்களுக்கும், கதர் அதிகமாக விற்பனை செய்தவர்களுக்கும் எல்லாம் பரிசுகள் கொடுக்கிறார்கள். அந்த முறையிலே ஹரிஜனச் சேரிகளைச் சுத்தமாகவும், சுகாதாரத்தோடும் வைத்துக்கொண்டிருக்கும் பஞ்சாயத்துக்களுக்கு பரிசுகள் வழங்கும் ஒரு திட்டத்தை அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கக்கூடிய திட்டத்திலே ஒரு சேரி என்று சொன்னால் குறைந்தது 100 வீடுகள் அல்லது 50 வீடுகளுக்கு லே அவுட் போடுகிறார்கள். அதிலே ஜாதி ஹிந்துக்கள் ஒரு 5 சதவிகிதமாவது குடியிருப்பதற்கு அனுமதிக்கவேண்டும். அப்படி அனுமதித்தால் தான் தீண்டாமை ஒழிய வழியேற்படும். அவ்வாறு சிலபேர் தங்குகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் ஹரிஜன நல இலாகாவினர் அவர்களுக்கு சலுகை கிடையாது, அவர்கள் பணம் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். ஜாதி இந்துக்கள் ஹரிஜனங்களோடு வாழ்வதற்கு விரும்பினால், குறைந்த பட்சம் 5 சத

14th March 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

விகிதமாவது அவர்களும் சேர்ந்து வாழ்வதற்குரிய ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் தீண்டாமை ஒழியும். தனித்தனியாக அவர்களைப் பிரித்து வைத்து இது அவர்கள் காலனி. இது அவர்கள் கிணறு என்று ஒதுக்கிவைத்தால் அது அவ்வளவு நல்லதாக இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்தொகுதியைப் பொறுத்த வரையில் குடிதண்ணீர் கஷ்டம், பெரும் கஷ்டமாக இருக்கிறது. அங்கு சென்று பார்த்தால் குழந்தைகள் காலையிலே செம்பைத் தலையில் வைத்துக் 11-30 a.m.
கொண்டு தோட்டம் தோட்டமாக செல்வதையும், தலையில் செம்பு வைத்து சொட்டை விழுந்து போய் இருப்பதையும் காட்டுகிறார்கள். தண்ணியை சுமந்து சுமந்து அவர்களுடைய தலையிலே சொட்டை விழுந்திருக்கிறது. அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். குடிதண்ணீருக்காக, அரிஜனங்களுக்காக அமைத்திருக்கும் கிணறுகள் போதவில்லை. அதிகமாக வெட்டிக் கொடுக்க பணம் போதவில்லை. இப்பொழுது 37 ஆயிரம் ரூபாய்க்கு அனுமதி கேட்டிருப்பதாக தெரிகிறது. அனுமதி கிடைத்து வேலை ஆரம்பிப்பதற்குள் கிணற்றுக்கு வேண்டிய தொகை ஒரு லட்சம் ரூபாய் ஆகிவிடலாம். எப்படியாவது உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து குடி தண்ணீர் கஷ்டத்தைப் போக்க வேண்டும். பஞ்சாயத்து போர்ட் கிணறுக்கும் ஹரிஜன மக்கள் வீதிக்கும் ஒரே கனக்ஷனை கொடுத்தால் நலமாக இருக்கும். பஞ்சாயத்து போர்ட் கிணறு வறண்டு போனால் என்ன நடவடிக்கை எடுக்கிறார்களோ அதுவே இதற்கும் பொருந்தும்.

பூமிதானத்திலே அடைந்த நிலங்களை வினியோகிப்பதில் திரும்பவும் ஜாதி இந்துக்களுக்கு கொடுக்காமல் நிலம் இல்லாத அரிஜனங்களுக்கு 3 ஏக்கர், 4 ஏக்கர் என்று கொடுத்து, அவர்களையும் விவசாயத்தில் ஊக்குவிக்க வேண்டும். பூமிதான் நிலங்கள் எல்லாவற்றையும் அவர்களுக்கு கொடுக்காவிட்டாலும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தையாவது அவர்களுக்கு கொடுப்பது நலமாக இருக்கும். அப்படியில்லாவிட்டால் சொந்தக்காரர்களுக்குள்ளேயே அது திரும்பித்திரும்பி சுற்றிக் கொண்டு இருக்கும்.

சர்வீஸ் கமிஷனிலே இப்பொழுது ஒரு ஆள் இரண்டு ஆள் என்று எடுக்கிறார்கள். அது போதாது. கோயமுத்தூர் முதலிய இடங்களில் மில்லுக்கு லைசன்ஸ் கொடுக்கும்போது அந்த மில்லிலே 25 சதவிகிதம் அரிஜன மக்களை வேலைக்கு எடுக்க வேண்டும் என்று போட வேண்டும். பஸ் ரூட் கொடுப்பதாக இருந்தால் அதிலே டிரைவர் கண்டக்டர் வேலையாட்கள் முதலியவர்களில் ஒரு சதவிகிதம் அரிஜன்கள் இருக்க வேண்டும் என்று போட வேண்டும். ஒரு வொர்க் ஷாப்புக்கு அனுமதி கொடுத்தால் அதில் 20 சதவிகிதம் தொழிலாளிகள் அரிஜனங்களாக இருக்க வேண்டும் என்று போட வேண்டும். இன்றைக்கு இன்வெஸ்ட்மெண்ட கார்ப்பொரேஷனிலிருந்து தொழில் விருத்திக்காக பணம் கொடுக்கிறோம். அப்படி கொடுக்கும்போது ஒரு குறிப்பிட்ட் பர்ஸண்டேஜ் அரிஜன மக்களை வேலைக்கு எடுக்க வேண்டும் என்று செய்தால் பொருளாதாரத் துறையில் அவர்கள் வளர அனுகூலமாக இருக்கும், என்று

சொல்லிக் கொள்வதோடு கூட, 5 ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய சொந்த ஊரில் ரூபாய் 96 ஆயிரம் செலவில் அரிஜனங்களுக்கு 114 மனைக்கட்டுகள் கட்டி வழங்கினார்கள். இப்பொழுது அந்த வீடுகள் போதவில்லை. ஆகவே அரிஜன நல இலாகாவின் ஆதரவில் சேரிகளில் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை பரப்ப முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். நாங்கள் சொன்னால் அதை அவர்கள் கேட்பதில்லை. அதை பெரிய படித்தவர்களே புரிந்து கொள்ளுவது சுலபமாக இல்லை. ஐந்து வருஷத்துக்கு முன்னே கட்டிக் கொடுத்த 114 வீடுகள் இப்பொழுது போதவே போதவில்லை. சர்க்காரைக் கேட்டால் உங்கள் பிடிவாதத்தால் அவ்வளவு பணத்தைப் போட்டு, செய்தோம் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு அங்கே வீடு, இடம் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை அவர்கள் மத்தியில் பரப்பவும் அதில் யோசனைகள் சொல்லவும் அரிஜன நல இலாகா சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை முழு மனதோடு ஆதரிக்கிறேன். வணக்கம்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த அரிஜன நலத் துறை மானியத்தை ஆதரித்துப் பேசும்போது அதோடு பிணைக்கப்பட்டு உள்ள பிற்பட்ட இனத்தவர்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். பிற்பட்ட இனத்தவர் சம்பந்தப்பட்ட காரியங்களை அரிஜன நல இலாகாவோடு சேர்த்து இருப்பது அவ்வளவு உசிதம் இல்லை. இன்றைக்கு அரிஜனங்களுக்காக பல நல்ல காரியங்களை செய்கிறோம். பலமுன்னேற்றங்களை காணவேண்டும் என்று செயல்படுகிறோம். அதே மாதிரி பிற்பட்ட சமூகத்தினரின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பல நல்ல காரியங்களை செய்ய வேண்டியிருக்கிறது. இவற்றை எல்லாம் ஒரே அதிகாரி, ஒரே இலாகா செய்யவேண்டும் என்றால் காரியங்கள் துரிதமாக நடப்பது இல்லை சுணங்கிப்போகிறது. ஆகவே அரிஜனநலத்துறையையும், பிற்பட்ட இனத்தவரின் நலனுக்கான துறையையும் வெவ்வேறு துறைகளாக அமைத்து காரியங்களைச் செய்தால் நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக பிற்பட்ட இனத்தவருக்கு இப்பொழுது நாம் முக்கியமாக வழங்கும் உதவி அவர்களுக்கு கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப், சம்பளம் இல்லாத கல்விச்சலுகை. இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால் இன்னும் சில ஆண்டுகளில் இந்தச் சலுகை போய் விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்கார் இந்த மாதிரி உதவிகள் கொடுப்பது எகனமிக் பேக்வர்ட்னெஸ், பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலைமை, என்ற கொள்கையின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அது பிற்பட்ட இனத்தவருக்கு என்று தரப்படுவது இல்லை. உண்மையிலேயே பொருளாதாரத் துறையில் பிற்பட்டு இருப்பவர்களுக்கு உத்வி அளிப்பதில் எங்களுக்கு வருத்தம் கிடையாது. இன்றைக்கு பிற்பட்ட இனத்தவருக்கு கல்விச் சலுகை கொடுக்கிறோம் என்றாலும் அவர்களின் வருட வருமானம் ரூபாய்

1,500க்கு குறைவாக இருந்தால் தான் கிடைக்கும். ஆகவே அதில் பொருளாதாரத் துறையில் பிற்பட்ட இனத்தவருக்கு கல்விச் சலுகை என்பதும், சேர்ந்திருக்கிறது. அதாவது சோஷல் பேக்வேர்ட்னஸ் அண்ட் எகனமிக் பேக்வர்ட்னஸ். பொருளாதாரத் துறையிலும், ஜாதி அடிப்படையிலும் கல்விச்சலுகை கொடுக்கிறோம். பிற்பட்ட இனம் ஆனாலும் ரூபாய் 1500க்கு மேல் வருமானம் இருந்தால், அதாவது எகனமிக் பேக்வேர்ட்னெஸ் அண்ட் சோஷல் பேக்வேர்ட்னஸ் இரண்டையும் கருத்தில் வைத்து உதவி கொடுக்கப்படுகிறது. இதனால் 50 சதவிகிதத்தினருக்குக் கூட ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படுவது கிடையாது. இன்றைக்கு டெக்னிகல் கோர்ஸ்களிலே பிள்ளைகள் அதிகமாக வர வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். நமது வரவு-செலவுத் திட்டப்படி இந்த ஆண்டுக்கு கொடுத்திருப்பது ரூபாய் 16 லட்சம் தான். இது மிகக் குறைவாக இருக்கிறது. இதையும் பொருளாதாரத் துறையில் பிற்பட்டவர்களுக்கு தந்தால் பிற்பட்ட சமூகத்தினரை முற்போக்குக்கு கொண்டு வர முடியாது. பிற்பட்ட சமூகத்தினரில் 100-க்கு 100 கொடுத்தான பிறகு பொருளாதார அடிப்படையில் கொடுப்பது என்றால் ஆட்சேபனை இல்லை. அந்த நிலையில் ஜாதி மாத்திரம் அல்லாமல் வசதி குறைவாக இருப்பவர்களுக்கும் அரசாங்கம் பல சலுகைகள் கொடுப்பது என்றால் அதிலே நாங்களும் உங்கள் கூட ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். பிற்பட்ட சமூகத்தினர்களிலே 50 சதவிகிதத்தினர் வாடி வதங்கும்போது ஜாதி அடிப்படையில் கொடுக்கப்படும் சலுகைகளை எடுத்து விட்டால் பிற்போக்கா உள்ள சமுதாயங்களை என்றுமே உய்விக்க முடியாது. ஒரு சில வகுப்பினர் முன்னேறும்பொழுது பின்னே ஒரு வகுப்பு தங்கியிருந்தால் அவர்கள் பாராங்கல் மாதிரி பின்னே இருந்து இழுப்பார்கள். ஆகவே மத்திய சர்க்கார் பொருளாதார அடிப்படை என்ற தவறான முடிவுக்கு வந்தாலும் அவர்களுக்கு இடித்துக் கூறி, பொருளாதாரத்திலே பின்தங்கியிருப்பவர்களுக்கு உதவி கொடுப்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் பிற்பட்ட சமுதாயத்தினர் அவ்வளவு பேருக்கும் உதவி கொடுத்த பிறகே அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று தீவிரமாக வாதாடி எந்த மாறுதலும் வராமல் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு மத்திய சர்க்கார் கொடுக்கும் ஸ்காலர்ஷிப்பை பெறுவது மிகமிக நெருக்கடியாக இருக்கிறது. 75 சதவிகிதம் மார்க் வாங்கினால் தான் சென்ட்ரல் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும் என்கிறார்கள். பொருளாதாரத்திலும் ஜாதியின் அடிப்படையிலும் பின்தங்கியிருப்பவன் எப்படி 75 சதவிகிதம் மார்க்கு வாங்க முடியும் என்பதை ஆலோசித்துப் பார்க்கவேண்டும். அது மிக கஷ்டமானது, என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மத்திய சர்க்கார் சில புத்திசாலிகளுக்கு உதவி கொடுக்கவேண்டும் என்றால் கொடுத்து விட்டுப் போகட்டும். ஆனால் பொதுவாக 75 சதவிகிதம் என்பதை 60 சதவிகிதம் என்றாவது கொண்டு வந்து மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப்பை மற்றவர்களுக்கும் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். ஹௌஸிங் யூனிட் மூலமாகச் சேரிகளை ஒழித்து நல்ல வீடுகள் கட்டித் தருகிறோம். வீடு கட்டித் தரும்போது வெறும் ஹரிஜனங்களுக்கு மாத்திரம் தான் வீடுகள்

என்று சொல்லாமல், பிற்பட்ட ஏழை மக்களுக்கும் அங்கே வீடுகள் கொடுக்கவேண்டும். நூற்றுக்குப் பத்துப் பேர்களுக்காவது பிற்பட்ட ஏழை மக்களுக்கு அத்தகைய வீடுகள் ஒதுக்கப்பட்டால் தான், திருமதி குழந்தையம்மாள் அவர்கள் சொன்ன மாதிரி, ஜாதி அடிப்படையிலே ஒதுக்கப்பட்ட இடமாக இல்லாமல் இருக்கும் பொருளாதார அடிப்படையில் மிகவும் ஏழையாக இருக்கிறவர்கள்—அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—முன்வந்தால் அவர்களுக்கு இதில் பத்து சத விகித வீடுகளை ஒதுக்கித் தர வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜனங்களுக்காகக் கட்டப்படும் வீடுகளில் 10 சத விகிதம் வீடுகள், மற்ற ஜாதி இந்து சகோதரர்கள் அங்கு வசிக்க முன்வந்தால், அவர்களுக்கு ஒதுக்கப்படும் என்று ஏற்கனவே முடிவு எடுத்திருக்கிறோம். அறிக்கையைப் பார்த்தால் தெரியும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இருந்தாலும், அவ்வாறு செய்தால் நலம். அதை வரவேற்கிறோம்.

ஹௌஸிங் யூனிட்டில் . . . (மணி அடிக்கப்பட்டது).

MR. DEPUTY SPEAKER : After finishing her speech the hon. Member is again talking on the Demand. I now call upon the hon. Member Sri Manickam to speak.

***திரு. சி. மாணிக்கம் :** பேரன்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் அரிஜனக் காலனிகள் கட்டியிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தை நான் குறை சொல்லத் தயாராயில்லை. இந்த அரசாங்கம் செய்கிற நல்ல காரியத்தை நான் முழுமனதோடு, பெருமையோடு பாராட்டுகிறேன். எந்தக் காரணத்திற்காகப் பாராட்டுகிறேன்? இந்த அரசாங்கத்தில் உள்ள நீங்கள் ஜிலு ஜிலு மெத்தையில் குந்தி சில திட்டங்களை வகுத்து, சில நன்மைகளைச் செய்திருக்கிறீர்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். அரசாங்கத்தின் சம்பளத்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, காலனிக்காக அரசாங்கத்திலிருந்து பணம் எடுத்துக் கட்டிக் கொடுக்கிறீர்கள். அப்படியிருக்க, ஆளுங்கட்சிக் கொடியைத் தலைக்குமேல் 20 கஜம் உயரத்தில் பறக்கவிட்டு, "நான் காலனி கட்டித்தர தயாராக இருக்கிறேன்" என்று கண்டிராக்ட் எடுத்து வேலை செய்கிறார்களே அவர்களால்தான் இந்த அரசாங்கத்தில் உள்ள உங்களுக்கு மிக மிகத் தீங்கைக் கொண்டுவந்து வைக்கிறார்கள், என்று இந்த மன்றத்தில் நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், அந்தக் கொடியினாலே ஆட்சியைக் கொண்டு அந்தக் காலனியைக் கட்ட நீங்கள் வாய்ப்புக் கொடுக்கிறீர்கள். ஆனால், அந்தக் கண்டிராக்டர்கள் என்ன செய்கிறார்கள். உங்களைத் தட்டி, ஏமாற்றிவிட்டு, நல்ல முறையிலே அந்தக் காலனியைக் கட்டிக் கொடுப்பதே இல்லை.

1961-62-ல் தெங்கரைகோட்டையில் ஒரு காலனி கட்டப்பட்டது. அந்தக் காலனியை அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காருக்கு கூட பெட்ரோல் சார்ஜ் நான் கொடுக்கிறேன். எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அமைச்சர் வந்து நேராகப் பார்க்கலாம். அந்தக் காலனி கட்டி இரண்டு ஆண்டுக்குள்ளேயே, தூலம் இடிந்து விழும் போல இருக்கிறது. அங்கிருப்பவர்கள் எல்லோரும் மிகவும் வேதனையாக இருக்கிறார்கள். ரூபாய் 250 போட்டு தனிப்பட்ட முறையில் ஒரு மண் குடிசை கட்டியிருந்தால் கூட பல ஆண்டுகள் கவலை இல்லாமல் வாழ முடியும். இந்த அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு தான், அரிசனங்கள் நல்ல முறையில் வாழட்டும் என்று கல் வீடு கட்ட வழி செய்திருக்கிறது. ஆனால், உளுத்த மரம் போட்டு, தூலம் அமைத்திருக்கிறார்கள். இந்த குறை எப்படி ஏற்பட்டது? கவர்ன்மெண்டின் குறையா? அமைச்சர் குறையா? அதிகாரிகள் குறையா? அரிசனனுக்கு வீடு கட்டுவதென்றால் ஏன் இந்த அலட்சியம்? என்ன மரம் போட்டால் எத்தனை காலம் வரும் என்று உங்களுக்குத் தெரியாதா? உளுத்துப் போன மரம் போட்டால் எத்தனை நாள் வாழும், எத்தனை நாளில் ஒடியும் என்று உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எங்களுக்குத் தெரியும். ஏனென்றால் நாங்கள் பாடுபடும் பாட்டாளிகள். எங்களுடைய வியர்வையை சிந்தி நாங்கள் உழைக்கின்றோம். நாங்கள் உழைப்பதனால் தான் நீங்கள் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறீர்கள், என்று இந்த அரசாங்க அமைச்சர்களைப் பார்த்து நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கல்யாணத்திலும் அரிசனன்தான் பாடுபடவேண்டும். நல்ல விஷயத்திற்கும், வேறு விஷயத்திற்கும் அரிசனன்தான் பாடுபட முதலில் வருகிறான். இதையெல்லாம் விளக்கமாக இங்கே எடுத்துச் சொல்லலாம் என்றால் இப்பொழுது நேரம் இல்லை.

எங்களுக்குச் சில குறைகள் இருக்கின்றன. மேல் சாதிக்காரர் ஒருவர் நாளைக்குச் செத்தாலும் அரிசன மகன் தான் முதலில் வர வேண்டும். நல்ல காரியத்திற்கும் அவன் பாடுபட வருகிறான். வண்டி ஓட்டுகிறவனும் அவன் தான். வாழ வைக்கவும் அவன் தான். பாடுபட்டு விவசாயம் செய்கிறவனும் அவன் தான். இப்படிப் பல வகைகளில் மனித சமுதாயத்திற்கு உதவி செய்கின்ற அரிசன மக்களுக்கு இந்த அரசாங்கம் என்ன செய்கிறார்கள்? இந்த மன்றத்தில் ஒரு கோடியில் மாட்டப்பட்டிருக்கும் மகாத்மாவின் பெயரைச் சொல்லி இந்த அரசாங்கத்தில் உள்ளவர்கள் பிழைக்கிறார்களே, அவர்கள் அரிசன மக்கள் காலனி எப்படி இருக்கிறது என்று பார்க்கக் கூடாதா? அவர்களுக்காக நல்ல முறையில் பாடுபடக் கூடாதா? கண்டிராக்டர் அரிசன் காலனி கட்டி பெருத்த லாபம் அடைந்து விட்டார். மேல் பூச்சு வேலை செய்து ஜிகு ஜிகு என்று மூவர்ணத்தைப் போட்டு அடித்து விட்டார். அப்படிச் செய்த ஒரு காரியத்தை இந்த அரசாங்கத்தில் உள்ளவர்கள் பார்த்துப் பெருமைப்படுகிறார்கள். இதே போன்ற ஒரு காலனி துரிஞ்சிப்பட்டியிலும் கட்டப்பட்டது. அந்தக் காலனி கட்டி மூன்று ஆண்டு தான் ஆகிறது. அங்கும் மரம்

ஹரிஜனங்களுக்காக கூட்டுறவுத் துறையில் பால் பண்ணை வைத்தாலும், லாண்டு காலனைஸேஷன் ஸ்கீம் வைத்தாலும், இன்னும் இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களில் எல்லாம் ஜாதி இந்துக்கள் அமோகமாக ஆதரவு கொடுக்கிறார்கள். இருந்தாலும், லட்சத்தில் ஒருவர், 'பண்ணையாளாக இருந்தவன் பண்ணையாளாகத்தான் இருக்க வேண்டும், அவர்களுக்கு நிலம் கொடுக்கக் கூடாது, பொருளாதாரத்தில் முன்னுக்குக் கொண்டுவரக்கூடாது' என்று சொல்கிற நிலைமை இருக்கத்தான் செய்கிறது. இப்படிப்பட்ட துரோகிக் கூட்டம், யாரோ ஒரு பிலர், கெடுதல் பண்ணுகிறார்கள். அவர்கள் இங்கே வந்து மந்திரிகளைக் காக்காய் பிடித்துக்கொண்டு ஹரிஜனங்களுக்குத் தாங்கள்தான் நன்மை செய்வது போலப் பேசிப் போகிறார்கள். இவர்களைத் தன் பக்கத்தில் அமைச்சர்கள் வரவே விடக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஹரிஜனங்களுக்காக 122 பால் பண்ணை, சாங்ஷன் செய்து இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் ஜனத்தொகை அதிகமாக இருக்கும்போது அவர்களுக்காக 122 பால் பண்ணை ஏற்படுத்துவது என்பது கடலிலே கரைத்த பெருங்காயமாகத்தான் இருக்கும். இவ்வினத்தில் அவர்கள் அதிக வருவாய் பெற வசதி இருப்பதனால் இன்னும் அதிகம் பணம் ஒதுக்கினால் கூட நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நில விநியோகம், குடியிருப்பு மனை கட்டித்தருதல் ஆகியவற்றில் அரசாங்கம் பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது என்றாலும் இன்னும் அதிகமான ஸ்டாப்களையாவது போட்டு உடனடியாக அந்தப் பிரச்னையை துரிதமாகத் தீர்த்துவிடவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல இன்னும் சாதி இந்துக்கள் தெரு வழியாக அவர்கள் போக முடியாத சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. நடை பாதை வசதி இன்றி, இடுகாடு வசதியின்றி அவர்கள் படுகிற தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. அந்தப் பிரச்சினையை ஓராண்டு, இரண்டாண்டுக்குள் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சகோதரி குழந்தையம்மாள் சொன்னார்கள். நாங்களும் பல காலமாகக் கூறிக்கொண்டிருக்கிறோம். கனம் ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்கள் மற்ற அமைச்சர்களோடு சண்டைபோட்டாவது தனியார் துறையில் ஏற்படுகிற தொழிற் ஸ்தாபனங்களில் ஹரிஜனங்களுக்காக 25 சதவிகிதம் ஒதுக்க வேண்டும், இல்லையென்றால் லைசென்சு தரப்படமாட்டாது என்று செய்வதற்கு முன் வரவேண்டும்.

கனம் திரு. பூ. கக்கன் : இங்கே சண்டைபோட இடமே இல்லை. மத்திய சர்க்கார் லைசென்சு கொடுக்கிறார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மத்திய சர்க்காருக்காவது அப்படிச் சிபார்சு செய்வதற்கு நம் அரசாங்கம் முன் வர வேண்டும்.

மற்றொன்று, சென்னை மவுண்டு ரோடில் ஹரிஜன நல இலாகா இருந்தது அங்கே விளம்பர இலாகா மூலமாக ஒரு புத்தக நிலையம் வைப்பதற்காக, இந்த ஹரிஜன நல இலாகாவை ஆவடிக்கோ மற்றும் எங்கோ மாற்றுவதாகத் தெரிகிறது. புத்தக நிலையத்தை வேறு எங்கு வேண்டுமானாலும் வைக்கலாம். பலபேர்கள் வந்து அவ்வப்போது பார்க்க வேண்டிய அலுவல்கள் உள்ள இந்த இலாகாவை அந்த இடத்தில் இருந்து மாற்றுவது சரியல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் உத்தியோக உயர்வு ஹரிஜனங்களுக்கு 16 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நூற்றுக்கு 3 பேர் கணக்குக்குக்கூட இப்போது அந்த வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படவில்லை. அதையும் கவனித்து 16 சதவிகிதம் அளவுக்காவது அவர்களுக்கு உத்தியோக உயர்வு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹாஸ்டல்களில் பெண் குழந்தைகளுக்கு 2 முறை ஆண்டுகளுக்கு உடை வழங்கப்படுகிறது. ஆண் குழந்தைகளுக்குக் கொடுப்பதில்லை. அவர்களும் ஏழை குடும்பத்தில் இருந்தே வருவதால் பெண்களைப் போல 2 செட் ஆண்களுக்கும் வழங்குவதற்கு முன்வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை ஜில்லா ஹரிஜன சேவா சங்க ஹாஸ்டல்களில் படிக்கும் மாணவ மாணவிகள் மாதம் 4 சிட்டம் கட்டாயமாக நூல் நூற்றுத் தரவேண்டுமென்று நிபந்தனை வைத்துள்ளார்கள். ஆனால் சர்க்கார் ஹாஸ்டல்களிலும் இந்த முறை அமல் நடத்தப்படவேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் சோம்பேறிகளாக இல்லாமல் இருக்கமுடியும் எனக்கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். பின் தங்கிய வகுப்பினருக்கு பலவிதமான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மலைசாதி வகுப்பினருக்கு சீட் கொடுப்பது என்று ஏற்படுத்தியதில் இருந்து 1957 முதல் எனக்கு அந்த பிரதிநிதித்துவத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எங்களுடைய மலைசாதி மக்கள் இன்னும் இருக்கிற நிலையைச் சொன்னால் மிக்க வருத்தமாக இருக்கும். சேலம் ஜில்லாவில் இருக்கிற மலைசாதி மக்களுக்கு பெரிய கல்வராயன் மலையில் ஒரு ஹாஸ்டல், ஒரு பள்ளிக்கூடம் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அதைத் திறந்து வைக்க என்னை வரவேண்டும் என்று சொல்லி அதிகாரிகள் என்னை வந்து அழைத்துப் போனார்கள். அங்கே போகிறபோது வாழைப்பாடி, வேலூர், பாமனும்பட்டி வரைதான் பஸ்—அப்புறம் 18 மைல் நாங்கள் கால் வலிக்க ரத்தம் கட்டிக்கொள்ள நடந்தேதான் போனோம். ஹரிஜன வெல்பார் இலாகா தலைவர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், நான் எல்லாரும் நடந்தே போனோம். அங்கே ஒரு வெள்ளைக்கார அம்மையார்தான் இந்த ஹாஸ்டலுக்கும், பள்ளிக்கூடத்திற்கும் இடம் கொடுத்தார்கள். அவர்கள் வீட்டில் போய்த் தங்கினோம். அவர்கள் டிபன் கொடுத்தார்கள். அதைத் சாப்பிட்டு களைப்பு தீர்ந்து,

கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. பழனி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப் பட்டுள்ள இந்த ஹரிஜன மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். வெள்ளையரோடு வீரப் போர் புரிந்த அந்த நாளில் சமூக சேவை என்ற பெயரால் அண்ணல் காந்தி அடிகள் ஹரிஜனங்களுக்காக அரும் பாடுபட்டு உழைத்தார்கள் என்பது நமக்கு நன்கு தெரியும். என்னுடைய நாட்டில் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் அடக்கப் பட்டு, ஒடுக்கப்பட்டு உரிமை இழந்து வாழ்கிற நேரத்தில் ஆங்கிலேயரிடம் உரிமைக்காக போராட எனக்கு என்ன உரிமை இருக்கிறது என்று சிந்தித்துப் பார்த்து காந்தியடிகள் இந்த முடிவிற்கு வந்தார்கள். இது பற்றி எழுதுகிற மாமேதை பெர்னுட் ஷா அழகாகக் குறிப்பிடுகிருர். ஒரு மனிதன் நடந்து செல்லும்போது வலது காலும் இடது காலும் மாறி மாறி வருவது போல் உலக அரங்கில் விடுதலை கிளர்ச்சிக்கு சமூக சேவையை இணைத்து பிணைத்துக் கொண்டு சென்ற பெருமை உலக உத்தமர் காந்தியடிகள் ஒருவருக்குத்தான் உண்டு. நாடு விடுதலை அடைந்த பிறகு, காந்நீய வழி செல்கிற நம் அரசாங்கம் குறிப்பாக நம் சென்னை மாநிலம் மதிப்பிற்குரிய நம் அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் எந்தளவு ஹரிஜன முன்னேற்றத்திற்காக, தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபட்டு வருகிறது என்பதுபற்றி சென்ற முறை இந்த மன்றத்தில் வீற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மதிப்பிற்குரிய அண்ணுதுரை அவர்கள் ஹரிஜன நல இலாகா மான்யத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் குறிப்பிட்ட வாசகங்களை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

"இது வரையில் ஆட்சியாளர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற நல்ல முயற்சிக்கு இடையூறு, உற்சாகத்துக்குக் குறைவு ஏற்பட்டு விடக் கூடாதென்பதை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இரண்டாவதாக இந்த நல்ல ஹரிஜன முன்னேற் றத்தை நடத்துவதற்கு, இப்போதுள்ள அமைச்சரைவிட தகுதி யானவர்கள் அந்தக் கட்சியிலே வேறு ஒருவர் இருக்கிருர் என்ற நம்பிக்கையின் பேரிலோ, அல்லது எங்கள் கட்சியிலே உடனடியாக ஆட்சியை எடுத்து நடத்தக் கூடியவர் இருக்கிருர் என்ற நம்பிக்கை யின் பேரிலோ அதிலுள்ள குற்றங்களை எடுத்துச் சொல்ல நான் முன்வரவில்லை." இப்படிக் கூறியிருப்பதில் இருந்து நம் ஹரிஜனத் துறை அமைச்சர் அவர்கள் மீது எத்தகைய நம்பிக்கையை எதிர்கட்சித் தலைவர் அவர்கள் வைத்திருக்கிருர்கள் என்ற உண்மை புலனுகிறது. இந்தளவு நம் அமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் நல்ல முறையில் ஹரிஜன முன்னேற்றப் பணி நடைபெறுகின்ற நேரத்தில் ஒரு சில கருத்துக்களை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்பு கிறேன். ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு வசதிக்காக மனைக்

கட்டுகள் வழங்கப்படுகின்றன. என் தொகுதியில் கூட நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு பள்ளமான இடங்கள் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏராளமான தொகை அதைத் தூர்ப்பதற்கு தேவைப்படுவதால் அந்த நிலங்கள் அப்படியே இருக்கிறது. ஆகவே ஆர்ஜிதம் செய்து கொடுக்கும்போது மேட்டுப்பாங்கான நிலத்தைப் பார்த்து ஆர்ஜிதம் செய்து கொடுக்கக் கூடிய அளவிற்கு நம் அமைச்சர் அவர்கள் தாக்கீது அனுப்பவேண்டுமென்று எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். வீடு கட்டிக் கொடுப்பதற்கு, காலனித் திட்டம் இதுகாறும் வகுக்கப் பட்டு செயல்பட்டு வந்தது. அண்மையில் மனைக்கட்டுகள் மட்டும் வழங்கியிருக்கிருேம், ஆனல் காலனித் திட்டம் தேவையில்லை என்ற முடிவிற்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. காலனித் திட்டத்தை மேற்கொண்டு நடத்தாவிட்டாலும்கூட கணிசமான அளவிற்கு கடன் தொகை கொடுத்தால்தான் ஏழை எளிய இந்த மக்களால் விடுகள் கட்டிக் கொள்ள முடியும். ஆகவே இதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்த படியாக, ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உண்மையி லேயே சமுதாயத்தில் சம அந்தஸ்துபெறவேண்டுமென்றல் எக்கனமிக் இக்வாலிடி, பொருளாதார சமத்துவம் அவர்களுக்கு ஏற்படச் செய்ய வேண்டும். அதற்கு அரசாங்கத் தொழில்களில் குறிப்பாக அதிக லாபம் வருகிற பஸ் போன்ற தொழில்களில் ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு விசேஷ பெர்மிட் அளித்து அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு அரசாங் கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரி ஜன முன்னேற்ற வேலைகளைச் செய்ய மாவட்டத்திற்கு ஒரு அதிகாரி இருந்தால் போதாது. அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாகியிருக்கிறது. இதுபற்றி இந்த மாமன்றத்திலேயே பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே ஒரு மாவட்டத்திற்கு இரண்டு ஹரிஜன நல அதிகாரிகளைப் போடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரை, இந்து அரிஜன வகுப்பினர்களுக்கு அரசாங்கம் எல்லா சலுகைகளும் அளித்து வருகிறது. அதே நேரத்தில் கிருஸ்துவ வகுப்பைச் **சேர்ந்த** அரிஜனங்களுக்கு **சென்னை** அரசாங்கம் சலுகைகளை அளித்து வருகிறது என்று இருந்தாலும் கூட, மத்திய அரசாங்கம் கிருஸ்துவ வகுப்பிலுள்ள அரிஜனங்களுக்கு சலுகைகள் கிடைப் பதில் கஷ்டங்கள் இருக்கின்ற காரணத்தால், இதனுடைய அவ சியத்தை இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி கிருஸ்தவ அரிஜனங்களுக்கும் சலுகைகள் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் தன் னுடைய பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருக்கிருர்கள், அதாவது குடியிருப்பு இடத்திலிருந்து யாராவது அப்புறப்படுத்தப்பட்டால், அரிஜன மக்களுக்கு சட்டத்தின் மூலம் உதவியை இலவசமாக பெறுவதற்கு பொருளாதார உதவி செய்ய அரசாங்கம் ஆவன செய்யும் என்கின்ற உண்மையை எடுத்துக் குறிப்பிட்டிருக்கிருர்

கள். அதே போல் நியாயவாரச் சட்டம், பண்ணையாள் பாது காப்புச் சட்டம் இவைகள் வாயிலாக பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அரிஜன வகுப்பை சேர்ந்தவர்கள் தங்களுக்கு நீதியை நல்ல முறையில் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாத அளவுக்கு வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்ற காரணத்தால், நியாய வாரச் சட்டம், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் இவைகளை எல்லாம் நல்ல முறையில் விரிவு படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பின்தங்கிய மாணவர்களுடைய நிலைமையை பார்க்கின்ற நேரத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் சட்டக் கல்லூரியில் படிக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆண்டு ஒன்றுக்கு 14 மாணவர்களுக்குத்தான் சட்டக் கல்லூரியில் ஸ்காலர்ஷிப் கொடுத்து வருவதாக இருக்கிறது. இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நம் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த டிமான்டின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை புலப்படுத்திக்கொள்ள முன் வருகிறேன். அமைச்சர் கனம் கக்கன் அவர்கள், பேசுகின்ற பொழுது, பல உயர் ஜாதியினர் என்று கருதப்படுகிறவர்கள் தங்கள் பகுதிகளில் ஜாதி உயர்வு தாழ்வு என்ற எண்ணம் மறைவதற்கு செவ்விய நெறியில் உதவ வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். வெறும் சட்டத்தினால் மட்டும் எதையும் சாதித்துவிட முடியாது. மக்கள் உள்ளத்தில், எண்ணத்தில் சீர்திருத்தம் ஏற்படவேண்டும். "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் . . ." என்பன போன்ற கருத்துக்கள் . . . ஜாதிகளில் உயர்வு தாழ்வு இல்லை என்றெல்லாம் பல்வேறு இலக்கியங்களிலும், சமய நூல்களிலும், கூறப்பட்டிருந்தாலும், சட்டத்தினால் மட்டும் அதை நிறைவேற்றி விட முடியாது. அந்த நிலைகளை எல்லாம் எடுத்து விளக்கி நாட்டிலுள்ள மக்கள் ஒருவருக்கும் உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சி சிறிதும் இல்லாதபடி துடைப்பதற்கு தக்க முறையிலே பிரச்சாரங்கள்—வெறும் வாய்ப் பிரச்சாரம் மட்டும் அல்ல—ஈடுபட்ட நிலையில், ஒன்றிய நிலையில், கூட்டுறவு நிலையில் ஏற்படுவதற்கு வழிவகை அமைய வேண்டும். இதில் நான் கருதுவது என்னவென்றால், அரிஜன காலனிகள் என்று தனியாக அமைப்பது தவறு என்று நான் நம்புகிறேன். ஐயர் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு அரிஜன வீடு, செட்டியார் வீட்டுக்குப்பக்கத்தில் ஒரு அரிஜன வீடு, முதலியார் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு அரிஜன வீடு, இப்படி கலந்து, கூடி, கிடந்தால் தான், நல்ல மாதிரியான சூழ்நிலை எங்கெங்கு இருக்கிறதோ, அங்கெல்லாம் அமைத்தால், அங்கு என்னென்ன நன்மைகள் இருக்கின்றனவோ, என்னென்ன சிறப்புக்கள் இருக்கின்றனவோ, என்னென்ன அருமைகள் இருக்கின்றனவோ இவைகளை எல்லாம் ஒவ்வொருவரும் பெற்று, ஒருவருக்

கொருவர் கூடி வாழ வழி செய்யும். பழக்க வழக்கங்கள் என்பதும் ஒருவரோடு ஒருவர் சேரும் போது ஒட்டிக்கொள்வது தான், "கன்டேஜியஸ் டிஸீஸ்" மாதிரி, "எபிடமிக் டிஸீஸ்" மாதிரி. ஒவ்வொருவரிடத்திலும் இருக்கின்ற பழக்கம், நாகரிகம், ஒழுங்கு, திறமை இவைகள் எல்லாம் ஒன்றை ஒன்று பார்த்து ஒட்டி வருவது தான். பிரித்துப்பிரித்து, தொகுதி தொகுதியாக வைப்பதால் இந்த உயர்வு தாழ்வுகள் நீங்காது என நான் நம்புகிறேன். ஒருங்கே இணைந்து, நெருங்கி, தொடர்பு கொண்டு வாழ்வதற்கான வழிவகைகளை அரசு முதலில் செய்யவேண்டும். அது என்னுடைய முதலாவது ஆலோசனை. இனி பழைய நூல்களிலிருந்து எவ்வளவோ தெரிந்துகொள்ளலாம். அரிஜனங்கள் உயர்ந்தவர்கள் உயர் நிலையில் வாழ்ந்தவர்கள் என்பதும் புலப்படும். ஏன் இவர்களை அரிஜனங்கள் என்று அழைத்தனர்? இவர்கள் எப்படி இருந்தார்கள் என்பவற்றையெல்லாம் இன்று தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியவில்லை என்றாலும், முன்னால் அரிஜனங்களை எல்லாம் அரிஜனங்கள் என்று அழைக்காமல், பறையர், பள்ளர் என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கின்றனர். இந்தச் சொற்கள் எல்லாம் அருமையான தமிழ் சொற்கள், அற்புதமான சொற்கள். ஆனால் இதை சொல்லுகின்ற பொழுது, அந்த பகுதியினரது மனம், ஏதோ தம்மை இழிவுபடுத்தும் முறையில் அழைப்பதாக இருக்கிறது என்று புண்பட்டதின் காரணமாக எம்மான் காந்தி அடிகள், "ஹரிஜன்" அதாவது "ஆண்டவனின் புத்திரன்" என்ற பொருள் கொள்ளும் அளவில், ஆண்டவனால் உண்டாக்கப் பட்டவன் என்று சமஸ்கிருத மொழியில் சொல்லிவைத்தார். அதற்கு முன்பே, ராமானுஜர், அரிஜனங்களை "திருக்குலத்தார்" என்று சொல்லியிருக்கிறார். அதாவது சமுதாயத்தில் உயர்ந்த ஒரு வர்க்கத்தை சேர்ந்தவர்கள், மேலான வகுப்பினர், மங்கல வகுப்பினர் என்றெல்லாம் தான் 'திருக்குலத்தார்' என்பதற்குப் பொருள் சொல்லலாம். அதற்கும் மேலாக நாயன்மார்களை எல்லாம் ஒன்றாக கருதி, அவர்கள் எல்லாரையும் ஒரே வரிசையில் இருத்தி நிவேதனத்தை வைத்து வழிபாடு செய்வது உலகறிந்த உண்மை. அத்தோடு ஆழ்வார்களைப் பார்த்தாலும் பல குலத்தினராய் விளங்கினாலும் யாவருக்கும் திருக்கோயில்களில் சம அந்தஸ்தே தருவதையும் நாம் அறிவோம். அப்போதைய காலத்தில் இத்தகைய உயர்வு தாழ்வு உணர்ச்சி அரும்பவில்லை. பின்னால் பின்னால் அந்த துறையில், வளர்ச்சிப் பெறாதவர்கள், வளர்ச்சி பெற்றவர்கள், தளர்ச்சி பெற்றவர்கள், தளர்ச்சி பெறாதவர்கள் இப்படியாக உயர்வு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது. அப்படிப்பட்ட நிலைமையை போக்குகின்ற வழியில், மக்கள் எல்லோரும் கலந்து, நெருங்கி, கூடி வாழ்கின்ற வாய்ப்பை, வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வரவேண்டும் என்பதை நான் அழுத்தமாக சொல்லிக்கொள்கிறேன். இந்த ஜாதி என்பது இந்தியாவிலிருந்து ஒழிக்கப்படுவது வரை, நாம் பெற்ற சுதந்திரத்தின் பலனை அனுபவிப்பதாக இராது என்பது என்னுடைய அழுத்தமான கருத்து. அன்னியனை அப்புறப்படுத்திவிட்டாலும் கூட, அன்னிய அடிமையாயிருந்து விடுதலை பெற்று விட்டாலும் ஜாதி என்னும் கொடுமையின் அடிமைத்தனத்திலிருந்து நாம் இன்னும் பரிபூரண

விடுதலை பெறவில்லை என்பதை யாரும் மறந்து விடவோ, மறுத்து விடவோ முடியாது. இதை ஒழிக்கவேண்டுமானால், அஹிம்சை முறையிலே காந்தியின் நெறியிலே செய்யலாம். அந்த முறையில் சட்டமும் உதவி செய்ய வேண்டும். பழைய காலத்திலிருந்தே சகோத்திர மணம் செல்லாது என்ற நிலை இருந்து வருகிறது. மத்திய ஆட்சியில் இதற்கு விதிவிலக்குகள் கொடுத்திருந்தாலும், வாழ்க்கையில் அது நிலவி வருவதை நாம் அறிவோம். அதாவது தாயாதி முறையில் ஒருவருக்கொருவர்,—அதாவது பங்காளி மணம் என்று சொன்னால் புரியும் என்று நினைக்கிறேன்—செய்து கொண்ட மணம் செல்லாது என்று இன்றையதினம் சட்டம் இருக்கிறது. ஓரளவுக்கு இது நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த முறையில் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் இருதயபூர்வமாக நான் நம்புகிறேன். அதாவது சுயஜாதி மணம் சட்டப்படி செல்லாது என்கின்ற ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும். செட்டியார் செட்டியார் இனத்திலுள்ள ஒருவரை மணம் செய்துகொண்டால் செல்லாது. செட்டியார் அரிஜன வீட்டில் தான் மணம் செய்து கொள்ளவேண்டும். அதே போன்று ஒரு அரிஜன், ஐயங்கார் வீட்டில் மணம் செய்து கொள்ள வேண்டும், முதலியார், ஐயர் வீட்டில்தான் மணம் செய்து கொள்ள வேண்டும் என்கின்ற நிலை மீண்டும் வந்துவிடுமானால் சீக்கிரமாக ஜாதி என்பதே இருக்கமுடியாதபடி ஒழிந்துவிடும். கொஞ்ச நாட்களுக்கு வேண்டுமென்றால், கணேசன் என்றிருப்பதை கணேசன் பிள்ளை, கணேச முதலியார் என்று வைத்துக்கொள்ளலாம், இல்லை கணேச சாம்பான் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். அவ்விதமே கையெழுத்தும் போடுவார்கள். ஆனால் ஒரு அரிஜன், செட்டியார் வீட்டில் மணம் செய்து கொள்வதின் காரணமாக ஒரு பிள்ளை பிறக்கிறது என்று வைத்துக் கொண்டால், அந்த பிள்ளைக்கு முருகன் என்று பெயர் இருந்தால், வேண்டுமென்றால், முருகச் செட்டியார், சாம்பான் என்று வைத்துக் கொள்ளலாம். அதற்குப் பின்னால் இந்த நபரே ஒரு முதலியார் வீட்டில் மணம் செய்து பிள்ளை பிறந்தால் அந்தப் பிள்ளைக்கு, முருக செட்டியார், சாம்பான் முதலியார் என்று வைத்துக்கொள்ளலாம். அதற்குப் பிறகும் அய்யங்கார் வீட்டில் மணம் செய்து கொள்ளுகிறான் என்றால் அதில் பிறக்கின்ற பிள்ளைக்கு முருக செட்டியார், சாம்பான் முதலியார், அய்யங்கார் என்று நிச்சயமாக பெயரை ஜாதிப் பட்டங்களுடன் நீட்டிக்கொண்டே போக முடியாது. இப்படி மூன்று நான்கு தலைமுறைகளில் இது அறவே போய்விடும். ஆதலால், சுயஜாதி மணம் செல்லாது என்கின்ற ஒரு நிலை வருமானால், சட்ட ரீதியாக அது அமலுக்கு வருமானால், பொருளாதார ரீதியிலும், நீதி மன்ற ரீதியிலும் எல்லாம் சுலபமாகப் போய் விடும். அப்படி ஒழிகிறபோது நாலு ஐந்து தலைமுறைகளுக்கு
12-30 p.m. அப்புறம் ஒருவனைப் பார்த்து 'இவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவன்?' என்று கண்டுபிடிக்க முடியாது. கடைசியில் 'நீ யார்?' என்று கேட்டால் 'தமிழன்' என்று மொழியை வைத்துச் சொல்லக்கூடிய நிலைமை வரும். இந்த ஜாதி என்று இல்லாமல் தெலுங்கன், கன்னடன், குஜராத்தி, மராத்தி என்று மொழி அளவில் மட்டும் நிற்குமே அன்றி கீழ்ப்பட்ட துறையில் இருக்கிற

ஜாதி முறையிலே மனிதன் வாழ மாட்டான். அந்த நிலை நமக்கு ஏற்படுவதற்கு இது ஒரு அருமையான வழியாக இருக்கும். அஹிம்சா ரீதியில், யாரையும் துன்புறுத்தாத ரீதியில், காந்திய ரீதியில், செவ்விய ரீதியில், துளியும் பலாத்காரம் இல்லாமல், தொந்தரவு இல்லாமல், கஷ்டம் இல்லாமல் அருமையான திருத்தம், அருமையான நெறிமுறை வர இது வழியாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்திலே என்னுடைய கருத்தாகச் சமர்ப்பித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

இனி இந்த ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு நிலம் சில இடங்களில் கொடுக்கப்படுகிறது. இன்னும் சில இடங்களில் கொடுக்கப் பெற இல்லை. அதற்குக் காரணம் எல்லாம் நன்செய் அல்லாத, புன்செய் கூட அல்லாத, நத்தமாக கிடந்த நிலங்களையெல்லாம் இன்று "ரிஸர்வ் ஃபாரஸ்ட்" என்று வேலி அடைத்துவிட்ட காரணத்தினால், அங்கு வசதியோடு இருந்தவர்கள் அந்தப் பிராந்தியங்களை விட்டு வெளியேற வேண்டியிருக்கிறது. அதற்கு தக்க பாதுகாப்புகளைக் கொடுத்து அவர்கள் ஊரோடு ஒட்டி வாழக் கூடிய நிலையிலே, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது இருக்கட்டும், முதலிலே இருக்கிற குடிசைகள் பறிபோகாமல் இருக்க வழிவகை செய்யவேண்டும். ரிஸர்வ் ஃபாரஸ்ட் என்ற பெயரில் வந்து குடியிருப்புக்களையெல்லாம் காலி செய்யச் சொல்லுகிறார்கள். அந்த மாதிரி நிலைமை இருப்பதை புள்ளிவிவரங்களோடு, இடம், சர்வே நம்பர்களோடு என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் என்னால் கொடுக்க முடியும். மற்ற இடங்களிலும் இந்த மாதிரி நிலை இருக்கக்கூடும். என்னுடைய தொகுதியிலே குறிப்பாக சேதுரகுநாதபட்டினம் என்ற ஊர் இருக்கிறது. இந்த இடத்தில் ஹரிஜனங்களைவிட மிகவும் பிற்பட்டவர்கள், வலையர்கள் என்று சொல்லுவார்கள், அவர்கள் அங்கே இருக்கிறார்கள். வலையர்கள் என்றால் காடுகளில் வலையைக் கட்டி, முயல் முதலியவைகளை வேட்டையாடிப் பிடிப்பவர்கள் ஆகையால் வலையர்கள் என்று சொல்லப்படுவார்கள். வலையர் என்றுதான் அவர்களும் தங்களைக் கூறிக் கொள்கிறார்கள். அவர்கள் அங்கே இருந்து கொண்டிருக்கிற இடம் அந்த நத்தப் பகுதியே. அதன் பரப்பு ஏக்கரேஜ் 1,070 ஏக்கர்; அந்த நிலம் கண்மாய்ப் புறவாயாக அமைந்திருக்கிறது. அது முழுவதும் இப்போது ரிஸர்வ் ஃபாரஸ்ட் என்று ஆகி விட்டது. ஊரோடு ஒட்டியிருக்கக் கூடிய 15 ஏக்கர் நிலத்தையாவது விட்டு விடுங்கள், யாருக்கும் தொந்தரவு இல்லாமல், அரசாங்கத்தில் போய் சலுகை கேட்காமல் இருக்கிறோம் என்று கேட்கிறார்கள். இதை கவனிக்கவேண்டும். வலையர்கள் ஹரிஜனங்களை விட பிற்பட்டவர்கள், ஒரு செண்ட் நிலம் கூட வைத்துக்கொள்ள உரிமை இல்லாதவர்களாக ஆக்கி வைத்திருக்கிறார்கள் இத்தனை ஆயிரம் ஆண்டு காலமாக. அவர்கள் நிலம் வாங்கக் கூடாது. நிலத்தை சொந்தமாக வைத்துக்கொள்ளக் கூடாது. ஒரு செட்டியாருக்கோ அல்லது மற்றவருக்கோ சொந்தமான, நத்தம், புறவு, தோட்டக்காடு முதலிய இடத்திலே குடியிருந்து வந்தார்கள்? ஜமீன்தாரி அபாலிஷன் ஆகி, புது சர்வே ஆன பிறகு காடு என்று போட்டு, ஒன்றுக்கும் உதவாத, விளைச்சல்

ஏதும் இல்லாத, க்ராவல் அல்லது சரளை வெட்டலாம் என்ற முறையில் உள்ள பொட்டல் காடு என்பதை 'காடு' என்று போட்டார்கள். காடு என்றால் என்ன என்று டிக்ஷனரியைப் பார்த்தார்கள் அதிகாரிகள். காடு என்றால் ஃபாரஸ்ட் என்று போட்டிருந்தது. உடனே அதை ரிஸர்வ் ஃபாரஸ்ட் என்று சொல்லி விட்டார்கள். அங்கு என்ன கிடைக்கும்? வெட்டினால் செம்பராங்கல் அல்லது சரளை கிடைக்கும், அதாவது லாட்டரைட் கிடைக்கும், அல்லது க்ராவல் கிடைக்கும். இன்னும் கொஞ்சம் வெட்டினால் சுண்ணாம்புக் கல் அல்லது சுக்கான் கிடைக்கும். இந்த இடத்தை விட்டு அவர்களை விலகுங்கள், வெளியேறிச் செல்லுங்கள் என்று சொல்லுவது நியாயம் அல்ல, தர்மமும் அல்ல. உதாரணத்திற்கு என்று இதைச் சொன்னேன். என்னுடைய தொகுதிக்கு என்று மட்டும் சொல்லவில்லை. குறிப்பாக எங்கெங்கெல்லாம் ஜமீந்தாரி நிலங்கள் இருந்ததோ அங்கெல்லாம் இந்த இடையூறு, இந்த இக்கட்டு, இருந்து கொண்டிருக்கும். இவற்றையெல்லாம் பார்த்து, கணித்து, நிலைமைக்கு ஏற்ப, காடு என்று ஆகிறதா என்று பார்த்து நிலைமையைச் சீர்படுத்த வேண்டும். ஃபாரஸ்ட் என்ற உண்மையான வரையறைக்குள் வராத இடத்தை ஃபாரஸ்ட் ஆஃபீசரின் கீழ் கொண்டு வந்து, இப்படிக் காரியம் செய்வது புத்திசாலித்தனமா? 'காடு' என்பதற்கு வேறு அர்த்தமும், அதாவது 'ஒன்றும் விளையாத பகுதி' என்று இருக்கிறதல்லவா என்று அதையும் பார்க்க வேண்டும். காடு என்ற சொல்லுக்குச் சுடுகாடு, மயானம் என்ற பொருளும் உண்டு. 'சுடுகாடு' என்று சொன்னால், அதுவும் ஒரு ஃபாரஸ்டா? வேளாண்மைக்குப் பயன்படாத இடம் என்று தமிழில் குறிப்பிடுவதுதான் அது. இதற்குத் தக்க வழிவகை செய்யவேண்டுமென்று மிகவும் அழுத்தமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, மிக மிக அழுத்தமாகக் கேட்டுக்கொள்ளுவது, இந்த மாநிலத்திலாவது ஒரு ஜாதியைச் சேர்ந்தவர் வேறு ஜாதியைச் சேர்ந்தவரையே விவாகம் செய்துகொள்ளுமாறு சொல்லுகிற, வரையறை செய்கிற, கட்டாயப்படுத்துகிற சட்டத்தைக் கொண்டு வருகிற ஏற்பாட்டை அமைச்சர் அவை செய்ய வேண்டும், அப்படி ஒரு சட்டத்தை ஆட்சியாளர்கள் கொண்டு வந்தால் எதிர் கட்சியில் இருக்கிற நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்புக்குரிய மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்களால் இம்மன்றத்தினுடைய ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ள ஹரிஜன நலத் துறை மான்யக் கோரிக்கையின் மீது, எதிர் கட்சியினர் தந்துள்ள வெட்டுப் பிரேரணைகளையொட்டி சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மலை வாழ் மக்கள், ஆதிவாசி மக்கள், ஆகியவர்களுடைய நிலைமைகள் மிக மிகத் தாழ்ந்த அளவிலே அமைந்திருக்கின்றன என்பதை இந்த

மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களும் நாட்டில் இருக்கிற பலரும் மிக நன்றாக அறிவர்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யா'

என்று வள்ளுவர் சுட்டிக் காட்டிய சீரிய கருத்தினை கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தம்முடைய முன்னுரையிலே தெளிவுபட எடுத்துக் காட்டினார்கள். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற சீரிய கருத்தை வள்ளுவர் தீட்டினாலும் இடைக் காலத்தில் ஏற்பட்ட பல்வேறு சூழ்நிலைகள் காரணமாகவும், பல்வேறு விளைவுகள் காரணமாகவும் 'பிறப்பு ஒக்கும்' என்கின்ற நிலைமை இல்லாமல் 'பிறப்பு ஒவ்வா' என்கிற நிலைமை ஏற்பட்டு, அதன் காரணமாகப் பொருளாதாரத் துறையிலும் சரி, சமுதாயத்திலும் சரி, அரசியல் துறையிலும் சரி, தாழ்த்தப்பட்டவர்கள் என்றும், பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும் ஒதுக்கி வைக்கப்படுகிற சீர்கேடான நிலைமை இடைக்காலத்தில் ஏற்பட்டுள்ளன. இந்தக் காரணங்களின் அடிப்படையில், பிறப்பின் காரணங்களைச் சொல்லி ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும், பின்னிலைப் படுத்தப்பட்டவர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களை நிமிர்த்தினால்தான் சமமான நிலை நாட்டில் ஏற்பட வழி காணமுடியும். பல நூறாண்டு நூறாண்டுகளாக எந்தப் பிறப்பின் காரணமாக, எந்த அடிப்படையில் பிற்படுத்தப்பட்டார்களோ, எந்தப் அடிப்படையில் தாழ்த்தப்பட்டார்களோ, எந்த அடிப்படையில் பின்னிலைப் படுத்தப்பட்டார்களோ அந்த அடிப்படையிலேயே அந்த மக்கள் உயர்த்தப்பட வேண்டும். சம நீதி நிலைமையும், உயர்ந்த பொருளாதார நிலைமையும், அரசியல் துறையிலே சம அந்தஸ்து நிலைமையும் வளர்க்கப்பட்டால்தான் சரிநிகர் சமத்துவ நிலை பெற முடியும். இதற்கு தனியாக அவர்கள் வசதிகளைப் பெற வேண்டும் என்ற அடிப்படையில் அரசினர் திட்டங்கள் தீட்டி வருவது மிகவும் வரவேற்கத் தக்க ஒன்றாகும். ஆனால் தீட்டப்படுகிற திட்டங்கள் நாம் எதிர்பார்க்கிற அத்தனை விளைவினையும் சாதிக்கும் அளவில் அமைந்திருக்கின்றனவா? என்றால் அமையவில்லை என்று இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் தங்கள் உரைகளில் தெளிவுபட பேசினார்கள்.

செய்தாக வேண்டிய திட்டங்கள் பலப்பல இருக்கின்றன, ஆனாலும் இந்தத் திட்டங்களை மெல்ல மெல்ல எடுத்து வருகிறோம் என்பதற்கான காரண காரியங்களை எடுத்துத் தெரிவித்தார்கள். 1963-64-ம் ஆண்டில் இந்தத் துறையைப் பொறுத்த வரையிலும் 389 லட்சம் ரூபாய் இந்தத் துறையின் வளர்ச்சிக்கு என்று ஒதுக்கப்பட்டது என்றால், 1964-65-ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டின்படி 446 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது ஓரளவுக்கு கூடுதலாக இருக்கிறது என்றாலும்கூட, நோக்கத்தை நிறைவேற்றும் அளவுக்கு அமைந்ததாக இல்லை என்பதையும், நீக்கப்படவேண்டிய

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [14th March 1964

குறைபாடுகளுக்குத் தருந்த தொகை அல்ல என்பதையும் உணர வேண்டும். இந்த மாநில அரசின் மூலமாக இந்த நிதியைச் சரிக்கட்ட முடியாது என்கின்ற நிலைமை ஏற்பட்டாலும், மத்திய அரசினரிடமிருந்து மான்யமாகப் பெறவேண்டும். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆகியோர்களுடைய நிலைமையை வளப்படுத்த போடப்பட்ட திட்டங்கள் குறைவானவை என்றாலும், போடப்பட்ட திட்டங்கள் சரியானபடி நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று கவனத்தைச் செலுத்த வேண்டியவர்களாகயிருக்கிறோம். அந்த நோக்கத்தின் அடிப்படையில், திட்டத்தை நிறைவேற்றுவதில் இருக்கிற இடையூறுகள், தடைகள் எல்லாம் எண்ணிய லட்சியத்தை எப்படி அடைய முடியாமல் செய்கின்றன என்பதை பல்வேறு தொகுதிகளிலிருந்து வந்திருக்கிற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். திட்டங்கள் நிறைவேறாத அளவுக்கு குறைபாடுகள் இருக்கின்றன. பல குறைபாடுகள் காரணமாகவும், குற்றங்கள் காரணமாகவும் முயற்சிகள் சீர்கேடு உடையனவாக இருக்கின்றன. பல்வேறு தொகுதியினுடைய சூழ்நிலைமைகள் இங்குச் சுட்டிக்காட்டப்பட்டன. தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்ற கருத்தினில் இந்த மன்ற உறுப்பினர்கள் யாருக்கும் மாறுபாடு இருக்க நியாயம் இல்லை. நாட்டிலிருக்கிற மக்களுக்கும் தீண்டாமையை ஒழித்துவிட வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து இருக்க நியாயம் இல்லை. கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தது போல, நடைமுறையில் தீண்டாமை இன்னும் சிற்றூர் பகுதிகளிலும், ஊர்ப்புறங்களிலும் தலை நீட்டியவண்ணம் இருக்கின்றன. தீண்டாமையை ஒழிக்க வேண்டும், சம உரிமை வழங்கி, சமத்துவம் ஏற்படுத்தவேண்டும் என்று பல்வேறு சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை மட்டும் போதாது. மக்கள் மனோபாவம் மாறவேண்டும், மன உணர்வு மாறவேண்டும். அதற்கான முயற்சிகளை அரசினர் எடுப்பது மட்டுமல்லாமல், மக்கள் மன்றத்தினரும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்களையும் கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

தீண்டாமையை நிலைநாட்டுவதை மறுக்கின்ற வகையிலே சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டங்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கு புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. இந்த புள்ளிவிவரத்தை வைத்துக் கொண்டு நாட்டினுடைய நிலைமையை நாம் அளந்துவிடுவதற்கு இல்லை. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே, தீண்டாமையை ஒழிக்கிற வகையில், தீண்டாமை ஒழிப்புச் சட்டத்திற்கு மாறுபாடாக நடந்த நிகழ்ச்சிகளில் எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்று கொடுக்கப்பட்ட கணக்கில் கை வைத்துக்கொண்டு பார்த்தால், 1957-58-ல் 106 வழக்குகளும், 1958-59-ல் 81 வழக்குகளும், 1959-60-ல் 67 வழக்குகளும், 1960–61-ல் 60 வழக்குகளும், 1961–62-ல் 47 வழக்குகளும் 1962-63-ல் 48 வழக்குகளும், போடப்பட்டிருக்கின்றன என்று புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கின்றன. இந்தப் புள்ளிவிவரம்

14th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்ற அளவு கோலை வைத்துக் கொண்டே நாட்டிலே இந்த தீண்டாமைதன்மை நாளுக்கு நாள் குறைந்து கொண்டுவருகிறது என்று கணக்கிடுவதற்கில்லை. நடைபெற்று தொடரப்படாத வழக்குகள், கொண்டு வரப்படாத வழக்குகள், வழங்கப்படாத நீதிநிலைமைகள் பலப்பலவாகும். இந்த எண்ணிக்கைகள் எவ்வளவு என்று பொதுவாகப் பார்க்கிறபொழுது, இந்த நிலைமைகள் பலவாக இருந்து கொண்டுதான் வருகின்றன. அரசினரும், பொது மக்கள் மன்றத்தினரும் அந்த நிலைமையைப் போக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தப் புள்ளிவிவரத்தைக் கொண்டே, நாளுக்கு நாள் இந்த நிலைமைகள் குறைந்து வருகின்றன என்ற அளவிலே நாம் கொண்டு விட முடியாது. ஏற்ற அளவுகோலாகவும் இது அமையாது. நிலைமைகள் மெல்ல மெல்ல நகர்ப்புறத்தில் மாறிவருகின்றன என்றாலும் சிற்றூர், பேரூர்களில் நிலைமைகளை மாற்றுவதற்கு வழிவகைகள் தேட வேண்டும். அந்த முயற்சியில் அரசினர் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி செய்து தருகின்ற நோக்கத்தின் அடிப்படையில், அவர்களுக்கு ஆங்காங்கு காலனிகள் கட்டித் தருவதற்கும், வீடுகள் கட்டி வசதிகள் ஏற்படுத்துவதற்கும் வேண்டிய முயற்சிகளில் அரசினர் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தேவைகள் அத்தனையையும் நிறைவேற்றுகின்ற முறையில் இந்தத் திட்டத்தினுடைய அடிப்படை நோக்கம் அமையவில்லை. எனக்கு முன்பு பேசிய மன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது போல நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் குடியிருப்பு இடங்கள் புதிய சேரிகளை உருவாக்கியிருக்கின்றன. புதிய சேரிப் பள்ளிகளை உருவாக்கியிருக்கின்றன. புதிய இடங்களை உருவாக்கியிருக்கின்றன. ஆக, இருந்த பழைய சேரிக்குப் பதிலாகப் புதிய சேரி உருவாகி, ஏற்கனவே இருந்த மனப்பான்மையைப் பொறுத்தவரையிலும், அவர்கள் வாழ்வைப் பொறுத்தவரையிலும், இருந்த நிலைமைகள் அப்படியே நீடிக்கும் நிலைமைகள்தான் இருக்கின்றன என்பதை நாம் அறிகிறோம்.

பள்ளிகளைப் பொறுத்தவரையில் பார்க்கும்பொழுது, இந்த மாநிலத்தில் ஹரிஜன நலத் துறையினால் கண்காணிக்கப்படும் 1,171 பள்ளிகள் இருக்கின்றன என்றும், ஹரிஜன நலப் பள்ளிகள் 835 பள்ளிகள் இருக்கின்றன என்றும், மற்ற பிரிவினர்களுக்கும், மற்றவர்களுக்கும் பள்ளிகள் இருக்கின்றன என்றும் புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. இனிமேல் அரசாங்கம் பொதுவான முறையில் பள்ளிகளை அமைக்க வேண்டும், ஹரிஜன மாணவர்களுக்கு எனத் தனியாகப் பள்ளிகள் இருக்கக்கூடாது, ஆனால் அந்தப் பள்ளிகள் எல்லா வகுப்பு மாணவர்களும் சேர்ந்து பயிலுகின்ற அளவுக்கு அமையவேண்டும். இப்பொழுது ஏற்படுத்தப்பட்டு நிலவிவருகிற ஹரிஜனத் துறைத் தனிப்பள்ளிகள் இருக்குமானால், நாம் எண்ணுகிற ஜாதி ஒழிப்புக்கு அது உறுதுணை புரியும் தன்மையதாகாது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [14th March 1964

அதுபோல, காலனி கட்டுகிற வகையிலும், ஊருக்கு வெளிப் புறத்தில் சிறிது தொலைவு தள்ளி பழைய சேரிகள் அமைந்திருக்கின்றன. அதே போன்று ஊருக்கு வெளியே தள்ளி, தொலைவான இடங்களில் புதிய காலனிகள் கட்டப்படுகின்றன. ஆகவே, இவைகளுக்கு வேண்டுமானால் புதிய சேரிகள் என்று பெயர் வைக்கலாமே தவிர, ஏற்கனவே இருந்த தன்மைகளும், மனப் பான்மைகளும், அவர்கள் அனுபவித்த கொடுமைகளும், கொடூரங்களும், அவர்கள் பெற முடியாது இருந்த நீதித்தன்மைகளும், பெற்றுவந்த அநீதி முறைகளும் ஏறத்தாழ அப்படியேதான் பல்வேறு கிராமங்களிலும் இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த முறை மாறவேண்டுமென்றால், அந்தந்த ஊரின் நடுப்பகுதியிலேயே அவர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும். அதற்கான முயற்சியில் அரசினர் மிகத் தீவிரமாக திட்டங்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். அப்படி ஹரிஜன மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒருசேர வீடு கட்டுவதற்காக இடைவெளிப் பகுதி ஊர் நடுவிலே கிடைக்குமா என்று கேட்கலாம். ஆனால், அப்படிப்பட்ட வசதிகள் இருக்கின்ற இடங்களில் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டும். அப்படி வசதிகள் ஏற்படாத இடங்களில் ஒரு வீடு, இரண்டு வீடு கட்ட, எங்கெங்கு காலி இடங்கள் ஊர் நடுவில் ஏற்படுமோ, அங்கு வீடுகள் கட்டித்தர வேண்டும். கனம் உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் தெரிவித்தது போல, ஊருக்கு 20, 30 வீடுகள் கட்டுவது என்றால் முதலியார் தெருவில் 3 வீடுகள் கட்டலாம், செட்டியார் தெருவில் 4 வீடுகள் கட்டலாம், அக்ரஹாரத்தில் 5 வீடுகள் கட்டலாம். அதற்கான தனி இடங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. தனித்தனி வீடுகளையாவது அந்தந்தப் பகுதியில் கட்டுவதன் மூலம் சேர்ந்து வாழ்வதற்கான வாய்ப்புகள் ஆங்காங்கே ஏற்படுகிற சூழ்நிலையை இனிமேல் ஏற்படுகின்ற திட்டங்களில் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

வீடுகள் கட்டும் தன்மையில் ஆங்காங்கு ஏற்படுகின்ற கோளாறுகளைத் தெரிவித்தார்கள், பல்வேறு உறுப்பினர்கள். கட்டப்பட்ட வீடுகள் பல இடங்களில் இடிந்து விழுகின்ற அளவுக்கும், குடியேற முடியாத அளவுக்கும் அமைந்திருக்கின்றன. ரூ. 1,000 அளவில் திட்டம் போடப்பட்டிருக்கிறது என்றும், அரசினர் ரூ. 250 கடனாகவும் ரூ. 500 மான்யமாகவும் தருகிற அளவுக்கும், மற்றபடி அவர்களே போட்டுச் செய்கின்ற அளவுக்கும் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. வீடுகள் பெரும் அளவுக்கு இடிந்து போவதற்குக் காரணங்கள் என்ன என்பதை அரசினர் ஆராய்ந்தார்களா? இப்பொழுது வழங்கப்படுகிற தொகை போதுமானதாக அமையாத காரணத்தினால் இந்த வீடுகளெல்லாம் இடியுறும் அளவுக்கு நிலைமைகள் ஏற்படுகின்றன என்றால் அப்படி வழங்கப்படுகிற தொகையையாவது அதிகப்படுத்துவதற்கு அரசினர் முன்வருதல் வேண்டும். கட்டட சாமான்களின் விலை ஏறியிருக்கிற தன்மையை ஒட்டி போலி சாமான்கள் வாங்கித்தான் இந்த கட்டடங்களை

14th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

எழுப்புகிற அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் அதற்கு முக்கிய காரணமாக இருக்குமானால், அதைப் போக்குவதற்கு அரசினர் முன்வருதல் வேண்டும். கட்டடம் கட்டும்படியான தரகர்கள், கண்டிராக்டர்கள் அதிக லாபம் சம்பாதிக்கவேண்டும் என்ற நோக்கோடு போலிச் சாமான்களை வாங்கிக் கட்டுவதன் மூலம் புறக்கணிக்கப்பட்ட மக்களின் வீடுகளையும் புறக்கணிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது. மேற்பார்வையையும் புறக்கணிக்கக் கூடிய அளவுக்கு அரசாங்கம் இருக்கிறது. இந்தத் துறையிலே நீடிந்தகாலமாக இந்த வகையில் உள்ள குறைபாடுகளைப் போக்க அரசினர் முன்வருதல் வேண்டும். சிலபல இடங்களில், நலிப்பட்டவர்களே, பொறுப்பேற்றுக்கொண்டு கட்டுகின்ற கட்டிடங்கள் வலுவான முறையில் அமைந்திருக்கின்றன. அக்கறையோடு கட்டுவதற்குக் காரணம், அவர்களுக்கு தங்களுக்குரிய இடத்திலே தாங்களே கட்டுகிறோம் என்கின்ற உணர்வு ஏற்படுவதுதான். அந்த அடிப்படையில் சில இடங்களில் நல்ல வீடுகள் அமைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் மூலம் நல்ல நிலைமை ஏற்படுமானால், அந்தத் திட்டத்தை கொண்டுவருவதற்கு அரசினர் முன்வருதல் வேண்டும். ஆகவே, பொதுவாக கூறப்படுகிற குற்றச்சாட்டுகளில், சிலபல இடங்களில் வீடுகள் வாழ்கின்ற அளவுக்கு இருக்கின்றன; பல இடங்களில் வாழமுடியாத அளவுக்கு இடிந்து விழுகின்ற அளவுக்கு இருக்கின்றன என்று கூறப்படுகிறது. இதை அரசினர் ஆராய்ந்து தக்கதொரு முடிவு எடுத்தார்களா? என்பது தெரியவில்லை. இதுபோலவே கட்டப்பட்ட வீடுகள் எவ்வளவு? இதிலே வாழத்தக்க அளவுக்கு எவ்வளவு வீடுகள் அமைந்துள்ளன? எவ்வளவு வீடுகள் வாழ முடியாது போயின? எவ்வளவு வீடுகள் இனிமேல் கட்டமுடியாத அளவுக்கு இடிந்து போயின? என்ற புள்ளிவிவரம் அறிக்கையிலே தரப்பட்டிருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், புள்ளிவிவரம் தரப்படவில்லை. புள்ளிவிவரம் தரப்பட்டிருக்குமானால், இந்தப் பணியைப் பொருத்தவரையில், எந்த அளவுக்கு இந்த இலாகா இதனை நிறைவேற்ற முடிந்திருக்கிறது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். குறிப்பாக தணிக்கை அறிக்கையிலே மிகத் தெளிவுபட எடுத்துக் கூறப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகளுக்கான விளக்கங்களை கனம் அமைச்சர் அவர்களின் மூலம் நாம் பெறக் கடமைப்பட்டிருக்கிறோம். தணிக்கை அறிக்கையில் பல்வேறு நிகழ்ச்சிகளில், குறிப்பிடத்தக்க சில எடுத்துக் காட்டுகள் என்று கூறி, குறிப்பிட்டிருக்கிறார்கள். தணிக்கை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறபடி, கூட்டுறவுத் துறையின் மூலமாக கட்டப்பட்ட 41 வீடுகளில், 29 வீடுகள் இன்னும் குடியேற்றப்படாத நிலைமையில் வைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிய வருகிறது. இந்தக் குறைபாட்டைத் தணிக்கை அறிக்கையினர் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1957-ம் ஆண்டு கூட்டுறவுத் துறையினர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தும் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் வரையிலும் 29 வீடுகள் குடியேற்றப்படாத அளவுக்கு வைக்கப்படுவானேன்? அதற்கான காரணங்கள் என்ன என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும், 229 வீடுகள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [14th March 1964

மற்றைய ஏஜென்சி மூலமாக கட்டப்பட்டுள்ளவை இன்னும் குடியேற முடியாத அளவுக்கு அமைந்திருக்கின்றன என்ற குறைபாடும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

மேலும் 228 வீடுகள் கட்டப்பட்டு பிறகு அவை இடிந்து போயின, வாழமுடியாத அளவுக்கு ஆயின, அதில் 63 வீடுகளை ரூ. 9,096 செலவழித்து, அரசினர் பொறுப்பு ஏற்று, அவற்றைப் புதுப்பிக்கிற அளவுக்கு, சீர்ப்படுத்துகிற அளவுக்கு முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அவற்றில் எவ்வளவு வீடுகள் குடியேறத்தக்கதாக ஆகியிருக்கின்றன? எவ்வளவு வீடுகள் குடியேறத் தகாத நிலையில் இருக்கின்றன? என்பதை கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தெளிவு படுத்த வேண்டும்.

"Government intimated in September 1962 that separate action was being taken to fix the responsibility for the faulty construction" என்று கூறப்பட்டிருக்கிறது. இப்படிக் குறைபாடான முறையில் இந்த வீடுகளைக் கட்டுவதற்கு யார் காரணம்? என்பதை அறிந்து நடவடிக்கை எடுப்பதற்கான முடிவை அரசினர் எடுத்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இதைப் பொறுத்து என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? என்ன முடிவு ஏற்பட்டிருக்கிறது? என்பதையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் இந்தத் தணிக்கை அறிக்கையில் "Periodical reports or returns regarding execution of agreements, occupancy of the houses and the condition of the houses have not been prescribed." என்று கூறப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல்,

"A sum of Rs. 28.35 lakhs was disbursed as loans during the Second Plan period. Detailed year-wise particulars of demands raised, collections made and the balances due were not obtained and reviewed by the Director of Harijan Welfare, . Periodical reports were called for from May 1959 and a review was initiated in October 1960 but even now figures for all the districts are not available." என்று கூறப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், அந்தத் துறையிலே இருப்பானேன்? அதற்கான நடவடிக்கைகள் என்ன எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் கனம் உள்துறை அமைச்சர் விளக்க வேண்டும்.

'In the review covering seven districts it was noticed that a sum of Rs. 17,205 only was realised against a demand of Rs. 4.35 lakhs. என்றும் கூறப்பட்டிருக்கிறது. 1959 மே திங்கள் முதல் 1960 அக்டோபர் திங்கள் வரை கணக்குகள் எல்லாம் இன்னும் கொடுக்கப்பட முடியாத நிலை இருக்கிறது என்று தணிக்கை அறிக்கை கூறுவானேன்? இந்தக் குறைபாடுகளுக்கு என்ன காரணம்? அவற்றை நீக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன? விளக்கம் வேண்டும்.

14th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வீடுகள் கட்டுகின்ற திட்டத்தின் அடிப்படையில் அரிஜன மாணவர்களுக்கு என்று தனியாக இருக்கின்ற பள்ளிகளில் மற்றும் பொதுவானவர்கள் அத்தனை பேரும் சேர்க்கூடிய அளவுக்கு மாற்றுவதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுத்து, எந்தப் பள்ளியாக இருந்தாலும் குறிப்பிட்ட வகுப்பினருக்கு என்று இல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தரப்படுகிற வசதிகள் அத்தனையும் தந்து, பொதுவான முறையில் இயங்குகிற அளவுக்கு ஒரு வாய்ப்பை அளித்து, அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை எடுத்து, இப்பொழுது இருக்கிற அரிஜனப் பள்ளிகளை பொதுவான பள்ளிகளாக மாற்றி அதிலே போய்ச்சேர, சேரிப்பகுதியிலுள்ள மக்கள் ஊர்ப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு வந்து படிப்பதற்கு ஏற்பாடுகள் இல்லை என்றாலும், ஊர்ப்பகுதியில் இருப்பவர்கள் சேரிப்பகுதியில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று சேர்ந்து படிப்பதற்கான முயற்சிகளை ஏற்படுத்துவதன் மூலம் ஒரு நல்ல நிலையினை ஏற்படுத்த வேண்டும். பொதுவான பள்ளிகளாக மாற்றுவதற்கு உடனடியாக வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அரிஜனப் பள்ளிகளிலே அரிஜன மாணவர்கள் அத்தனை பேருக்கும் மதிய உணவு வழங்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்திற்கு எதாவது பாதகம் ஏற்படாமல் இருப்பதற்காக அவைகளை தனியாக வைத்திருக்கிறோம் என்று சொல்லப்படுமேயானால் அவர்களுக்கு அளிக்கின்ற சலுகைகள் எந்த அளவும் குறையாத அளவுக்கு அளிப்பதற்கு வழிவகைகள் கண்டு மற்றவர்களும் சேர்ந்து படிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

அரிஜன மாணவர்களுக்கு என்று தனி விடுதிகள் ஆங்காங்கே வைக்கப்படுகின்றன. விடுதிகளிலேதான் மாணவர்கள் ஒருவரோடொருவர் கலந்து பழகும் வாய்ப்பு ஏற்படுகிறது. அரிஜன மாணவர்களுக்கு என்று தனி விடுதிகள் வைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில் அவர்கள் மட்டுமே தனியாக வாழ்வதற்கு இடம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட பள்ளிகளில் அரிஜன மாணவர்களுக்கு முழு விடுதி வசதி பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி, மற்றைய விடுதிகளில் அதாவது கல்லூரி விடுதிகளில், பள்ளி விடுதிகளில் எப்படி மற்றவர்கள் பணம் செலுத்திப் படிக்கவும், பணம் செலுத்தி இருக்கவும் ஒரு சூழ்நிலை இருப்பது போல, மற்றைய வகுப்பினர் உணவுக்கான பணத்தையும், குடியிருப்புக்கான வாடகையையும் செலுத்தி இருக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். இருக்கின்ற வசதி முழுவதையும் அரிஜன மாணவர்களுக்கு கொடுக்க வேண்டும், இப்பொழுது 100 பேர், 200 பேர் கொண்ட அரிஜன மாணவர் விடுதியை 500 அல்லது 600 பேர் தங்கும் விடுதியாக மாற்றவும், அங்கு 200 அரிஜன மாணவர்கள் இருக்கவும், அவர்கள் பெருகின்ற முழு வசதியைப் பெறவும், மற்றவர்கள் கல்லூரி விடுதிகளில் எப்படி பணத்தைச் செலுத்தி, உணவுக்காக பணத்தைச் செலுத்தி, இடவசதிக்காக பணத்தைச் செலுத்தி வசதி பெறுகிற முறை இருக்கிறதோ அந்த முறையை அமுல் செய்வதன்மூலமாக இந்த வேறுபட்ட உணர்வை போக்க

முடியும். மாணவர் பருவ நிலையில் நல்லதொரு கூடிப்பழகும் பழக்கத்தை ஏற்படுத்துகிற சூழ்நிலை ஏற்பட்டால் தனி வாழ்வில் மன உணர்வு ஏற்படாமல் தடுக்க முடியும். அதைச் செய்வதற்கு அரசினர் தீவிரத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றைய வசதிகள் செய்து தருகின்ற நிலையிலே, குடிநீர் வசதி செய்து தருவதிலே நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதிலே பல கிராமங்களில் சண்டை சச்சரவுகள் வருவதும், புறக்கணிக்கப்படுகிற நிலைமைகள் ஏற்படுவதும், அரிஜன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலைக்கு ஆளாக்கப்படவுமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குடிநீர் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்து, அந்த வசதியை ஒவ்வொரு சேரி வாழ் மக்களும், ஊர் வாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் பெறுவதற்கு அதிக மானியத்தை மத்திய அரசினரிடம் இருந்து பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இப்பொழுது அரிஜன மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வசதிகள் செய்கின்ற தன்மையிலே உழவு மாடுகள் வாங்கவும், வேளாண்மைக்கருவிகள் வாங்கவும் உதவி செய்கின்ற வகையிலும், பாசனக்கிணறுகள் வெட்டுவதற்கு உதவி செய்கின்ற வகையிலும் அரசினர் முயற்சி எடுத்து ஆங்காங்கே நடத்தி வருகிறார்கள்.

அவர்களுக்கு பெரும்பாலும் மற்றைய வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்றாலும்கூட, மற்ற வகுப்பினருக்கு இருப்பது போல் நிலத்திற்கு சொந்தக்காரர் ஆகக் கூடிய நிலைமை பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் ஏற்படவில்லை. அந்த வசதியை இன்னும் பலர் பெற முடியவில்லை என்பதை நாம் அறிகிறோம். அவர்களுக்கு புறம்போக்கு நிலங்களை ஒதுக்கலாம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மிகமிக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் உதவி அளிக்கின்ற வகையில், புறம்போக்கு நிலங்களை ஒதுக்கித் தருகின்ற முயற்சிகளுக்கு முதலிடம் தந்து, கூடுமான வரையில் கூட்டுறவு முறையில் சாகுபடி மேற்கொள்ளுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். மதிப்பீட்டுக் குழுவினர் சிபாரிசு செய்திருக்கிற கருத்தின் அடிப்படையில் அரசாங்கம் பரீட்சார்த்தமாக மாவட்டம் தோறும் ஒன்றிரண்டு இடங்களில் புறம்போக்கு நிலங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளித்து, அவற்றைக் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்வதற்கான முயற்சிகளை எடுத்து, அதனுடைய பலாபலன்களைக் கண்டறிந்து, அந்த அடிப்படையிலே மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களுக்கு விரிவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பரீட்சார்த்தமாக இந்தத் திட்டங்களை ஏற்றுக்கொண்டு, சிலபல இடங்களில் இருக்கிற புறம்போக்கு நிலங்களை ஹரிஜன மக்களுக்குத் தந்து, கூட்டுறவு முறையில் சாகுபடி செய்து அவர்கள் அந்த வகையில் வெற்றி பெறலாம் என்ற அந்த விளைவைக் காண்பதற்கு அரசினர் முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களிலே, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கின்ற சலுகைகளை அளிக்க வேண்டுமென்ற தன்மையை மன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மேலும், மதம் மாறியதன் காரணமாக, இந்து மதமாக இருக்கும்பொழுது பெற்றுவந்த பல்வேறு சலுகைகளை மதம் மாறிய காரணத்தால் பெற முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டுகள் பலர் கிறித்துவர்களாக மாறிவிட்டார்கள் என்பதினாலே வருகின்றன. ஆகவே இம்மாதிரி மாறுபாட்டின் காரணமாக, அவர்களுடைய பொருளாதார நிலைமை, சமுதாயத்தின் நிலைமை ஆகியவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர்களுடைய நிலைமை மாறிவிட்டது என்று சொல்ல முடியாது. மதம் மாறியது அவர்களுடைய மன நோக்கம், மனத் தன்மை, அவர்கள் கொள்ளுகின்ற கொள்கை, கொள்ளுகின்ற தன்மை, இவைகளைப் பொருத்ததாகும். ஹரிஜனங்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலையைப் பொறுத்துக் கணிக்கப்பட்ட நிலைமை அவர்களுடைய வசதிகளை பொறுத்து கணிக்கப்பட்ட நிலைமை, மதம் மாறிய ஒரு காரணத்தினாலே மாறிவிட்டன என்று கூறுவதற்கில்லை. அந்தக் காரணத்தின் அடிப்படையில், அவர்கள் பெற்று வந்த உரிமைகளையும், சலுகைகளையும் பெறுகின்ற குறைபடாத அளவுக்குப் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன நலத்தைப் பொறுத்தவரையிலும், மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனைப் பொறுத்தும் என்ன நடவடிக்கை எடுக்கலாமென்ற முயற்சியில் 1948-வது ஆண்டிலே ஒரு குழு அமைத்து அந்தக் குழு நாடு எங்கும் சென்று நிலைமையைக் கண்டறிந்து சிலபல சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். அரசாங்கமும் அதை அறிக்கை வடிவில் வெளியிட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கூட உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். 1948-ம் ஆண்டிலே காணப்பட்ட அதே நிலைமை தான் இப்பொழுது இருக்கிறதா? அல்லது மாறியிருக்கிறதா? என்று காணவேண்டும். புதிதாக ஒரு குழு அமைத்து, இப்பொழுதிருக்கிற நிலைமைகளை ஆராய்வதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களைப் பார்க்கிறபொழுது, மன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது போல, அதிலே மூன்று தரப்பினர் இருக்கிறார்கள் என்றும், அந்த மூன்று தரப்பினரில் அருந்ததியர் என்று கூறப்படுகின்ற சக்கிலியர் வகுப்பினர் நிலைமை மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறது என்றும் கூறப்பட்டது. அப்படிப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இன்றும் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. 1948-ம் ஆண்டிலே வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையிலே அருந்ததியர், சக்கிலியர் வகுப்பினர் கிட்டத்தட்ட தமிழகத்தின் 80 சதவிகிதம் கிராமங்களில் பரவி இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தெலுங்கு மொழியைத் தாய் மொழியாக கொண்டவர்களாக இருந்தாலும் சுமார் 80 சதவிகிதம் கிராமங்களில் பரவி இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை மிக 1-00 p.m.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [14th March 1964

மிக மோசமாக இருக்கிறது. ஆகவே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படும் நிதியில் கூட அவர்களுக்கும் முதல் இடம் கொடுக்கப்படும் நிலைமை இருக்க வேண்டும் என்று அந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அவர்கள் அரிஜனங்களிலும் அரிஜனங்களாக இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தக் குறிப்பின் அடிப்படையில் சொல்லுகிறபோது,

They are all Telugu-speaking people and through they are comparatively few in Tamil country, they are spread over at least 80 per cent of the villages inhabited by Harijans. They form a very small minority and their condition is not pitiable no houses of their own nor any kind of property. They deserve the special attention of the Government and in any scheme of welfare work they should get precedence over every other sub-sect of the Harijan community. We would even go one step further and say that they are the Harijans amongst Harijans.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்ல, கனம் உறுப்பினர் சின்னையன் அருந்ததியருடைய நிலையைத் தெரிவிக்கும் போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு மின்சாரத்தைப் பயன் படுத்தி நீர்ப்பாய்ச்சும் நிலைமை ஏற்பட்டிருப்பதன் காரணமாகக் கவலை தைத்து அதன்மூலம் பெருகிற வருமானத்தை இழந்தவர்களாக இந்தச் சமூகத்தினர் இருக்கிறார்கள். எந்த ஒரு தொழிலை நம்பி வாழ்ந்தார்களோ, அந்தத் தொழில் பறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு மாற்றுத் தொழிலாக இருக்கக்கூடிய திட்டங்களைச் செயல் படுத்த அரசினர் முன் வர வேண்டும். தோல் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை உருவாக்குகின்ற தொழிற்சாலையை அமைக்கும் திட்டங்களை நிறுவி அவர்களை அவற்றில் ஈடுபடுத்துவதன் மூலமாக இந்தக் குறைபாடுகளைப் போக்கவும், அவர்கள் தரத்தை உயர்த்தவும் வழி காணுதல் வேண்டும். அத்தகைய முயற்சியில் அரசினர் ஈடுபடுதல் வேண்டும். அருந்ததியர் நிலையைச் சொல்லும்போது,

'In any housing scheme they should certainly have the first preference. The Chukkiliyan of the South is nowhere near education nor has he any place worth-mentioning in the body Politic.

என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே வீடு கட்டும் திட்டத்திலேயும் அவர்களுக்கு அதிகச் சலுகை கொடுத்து வாழ்க்கைக்கு வசதி செய்து தர அரசினர் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தக் குறைபாடுகளை போக்க அரசாங்கத்தினர் இந்தத் துறை மூலம் போடப்படுகிற திட்டம் உண்மையாக அவர்களுக்கு போய் சேராமல், அவர்கள் முழு பலனை அனுபவிக்க முடியாமல் இடையிலே இருக்கிற தரகர்கள் இடையிலே ஏற்படும் நிலைகளை பயன் படுத்திக் கொண்டு அந்த வசதிகளை பாழ் படுத்தாமல் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை அரசினர் மேற்கொள்ள வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

14th March 1964] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

தீண்டாமை ஒழிப்பது பற்றி கனம் முதலமைச்சர் தெரிவித்தார்கள் சட்டத்தின் மூலம் மாற்றுவது மட்டுமல்லாமல் மக்களுடைய மனப்பான்மையை மாற்றவும் ஈடுபடுகிறோம் என்று. அரிஜன நல வாரம் ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம் என்பதையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். உள்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல இந்த பிரச்னை கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்னை, தாழ்த்தப்பட்ட மக்கள் நிலை உயர்த்தப்பட வேண்டும், அவர்களுக்கு வசதிகள் பெருக வேண்டும் என்பதில் அரசியல் கட்சிகளுக்கிடையில் கருத்து வேறுபாட்டுக்கு நியாயம் இல்லை. அதில் அத்தனை பேருக்கும் அக்கறை இருக்கிறது. அத்தனை பேரும் சேர்ந்து பணியாற்றி தக்க சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். சச்சரவுகள், சண்டை, கட்சி மாச்சரியங்கள் இன்னும் பல நிலைமைகள் ஏற்படாத அளவுக்கு எடுக்கப்படும் பணிகள் கூட்டு உணர்ச்சியோடு செய்யப்படுகின்றன. அரிஜன நல வாரம் மூலமாக சமுகமான சூழ்நிலை ஏற்படுத்த, கூட்டு உணர்ச்சி, கூட்டுப் பொறுப்பு உள்ள மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும் என்ன காரணத்தினாலோ அரிஜன நல வாரம் கொண்டாடப்படும் ஊர்களிலும், சென்னை நகரிலும் எதிர் கட்சியாக விளங்குகின்ற திராவிட முன்னேற்றக் கட்சி புறக்கணிக்கப்பட்டு வருகிறது. பேசுவதற்கு எனக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவோ தனிப்பட்ட முறையில் ஏதோ வாதாடுகிறேன் என்றோ கனம் உள்துறை அமைச்சர் எடுத்துக் கொள்ளக் கூடாது. பேச வாய்ப்பு இல்லை. அந்த மேடைகள் பயன்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்ற நிலையில் நானும் நான் சார்ந்துள்ள கட்சியும், ஆண்டு தோறும் வார விழாக்களைக் கொண்டாடும்போது புறக்கணிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுவதன் காரணமாக வேறுபல மாச்சரியங்கள் ஏற்பட இடம் இருக்கிறது. பல்வேறு அரசியல் கட்சியினரும் அரிஜன நல வாரத்திலே கலந்து கொள்வதன் மூலம் கட்சி மாச்சரியங்கள் அகலவும், ஒரு கட்சிக்கும் மற்றொரு கட்சிக்கும் இடையே உறவு வளரவும், அத்தனைப் பேர்களும் கூடி பொதுவாக கருத்துக்களை ஒரே இடத்தில் வழங்கவும், கூட்டு உணர்ச்சி ஏற்படவும் வழிவகைகள் ஏற்படும். பல்வேறு அரசியல் கட்சியினர் கூடி இருக்கும் இடத்தில் பொதுவான கருத்துக்கள் பரிமாறப்பட்டுப் பொது நோக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் ஏற்படும். குறிப்பிட்ட ஒரு கட்சி மட்டும் இருக்கிற சூழ்நிலை

திருமதி டி. என். அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் எக்ஸ்ப்ளனேஷன், சார், உங்கள் கட்சி மட்டுமல்ல, எங்கள் கட்சிக் காரர்களும் கூட கூப்பிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

• **திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் துணைத்தலைவர் அவர்களே, வேண்டுமானால் ஆளும் கட்சியின் சார்பாகவும் சேர்ந்து வாதாடத் தயாராக இருக்கிறேன். ஆனால் நிலை அப்படியல்ல. யாரையும் புறக்கணிக்காத அளவுக்கு முயற்சிகளை அரசினர் மேற்கொள்ள வேண்டும் என்றுதான் கனம் உறுப்பினர் தோழியர் அனந்த

நாயகி மூலமாக உள்துறை அமைச்சருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். புறக்கணிக்கப்படாத, எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா? என்று ஒரு 5 அல்லது 6 ஆண்டுகால அறிக்கைகளை எடுத்து வைத்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆளுங்கட்சியினர் அழைக்கப்பட்டு, எதிர்க்கட்சியினர் புறக்கணிக்கப்பட்டிருப்பதை உணரலாம்.

> 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பதறிவு.'

> 'எப்பொருளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறி'.

என்ற அடிப்படையில் அவர்கள் நன்முக சிந்திக்க வேண்டும். மாற்றங்கள் செய்ய வேண்டும். சீர்திருத்தம் செய்ய வேண்டும். அத்தனை கட்சி உறுப்பினர்களும் கலந்து கொள்ளும் அளவில் மேற்கொள்ளப்பட்டால்தான் அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறும். கூட்டு உணர்ச்சி, கூட்டுப் பொறுப்பு இவை தொகுதிதோறும் ஏற்பட வழிவகை ஏற்படும். இந்தக் கருத்தின் அடிப்படையில் இவற்றை எடுத்து சொல்கிறேனே தவிர தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி பேசுகின்ற வாய்ப்பு எங்களுக்கு எங்கள் மேடையில் ஏற்படவில்லை என்று சொல்லவில்லை. கூட்டு உணர்ச்சி, கூட்டுப் பொறுப்பு ஏற்பட, நல்ல சூழ்நிலை ஏற்பட, பொதுவான கொள்கை அடிப்படையிலே அத்தனை பேரையும் ஈடுபடுத்த முயற்சி எடுக்க வேண்டும்.

சென்ற ஆண்டு, கைத்தறி ஆண்டு விழா நடைபெறும்போது, புறக்கணிக்கப்பட்ட நிலை இருந்தது. அதை சுட்டிக் காட்டியதன் விளைவாக இந்த ஆண்டு கைத்தறி விழாவுக்கு எல்லா அரசியல் கட்சி உறுப்பினர்களையும், அவர்கள் ஒவ்வொரு நாளும் கலந்து கொள்ளக் கூடிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், கைத்தறி போல அரிசன நலமும் பொது நோக்கம் கொண்டது. கூட்டு உணர்ச்சி, கூட்டுப் பொறுப்பு ஏற்படுவதற்கு இந்த முறை பயன்படும் என்பதனை வற்புறுத்துவதற்காகத்தான் மீண்டும் மீண்டும் சொல்லுகிறேன். நானும், மன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டிய குறைபாடுகளைப் போக்குவதற்கும், குறைபாடுகளைப் போக்கி கோரப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றி செம்மையான முறையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கும் அரசினர் பணியாற்ற வேண்டும் என்று வற்புறுத்திக் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். **வணக்கம்.**

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, கனம் தோழியர் அனந்தநாயகி, காங்கிரஸ் கட்சியிலிருந்து யாரும் அழைக்கப்படவில்லை என்றார்கள். எனக்கு கவனம் இருக்கிறது. கடந்த ஆண்டு அரிஜன நல விழா கொண்டாடியபோது தோழர் எழுமலை பங்கு கொண்டு இருக்கிறார்கள்.

***கனம் திரு. பூ. கக்கன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன நல இலாகா மானிய விவாதத்தில் பல கனம் அங்கத்தினர்கள் கலந்து கொண்டு நல்ல பல ஆலோசனைகளையும் அளித்ததற்காக என் நன்றியை முதலாவதாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதிலிருந்து இது எவ்வளவு முக்கியமான இலாகா என்பதை குறிப்பாக இந்த மன்றமும், பொதுவாக தமிழக மக்களும் அறிந்து கொள்வார்கள். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இலாகாவினை நல்ல முறையிலே நடத்த முன் வந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எல்லா சலுகைகளையும் செய்ய நிதி அதிகமாக வேண்டியிருக்கிறது. ஒரு இலாகாவிற்கு மட்டும் நிதியை அதிகமாகச் செலவழித்து விட முடியாது. பல மக்களுக்கும் ஒத்தாசை, உதவி செய்ய வேண்டியிருக்கிறது. மாநில அரசாங்கம் கல்வித் துறையிலே ஹரிஜன மாணவர்களுக்கும், பின்தங்கிய மாணவர்களுக்கும் ஒத்தாசை, உதவி செய்ய பல லட்ச ரூபாய்களை ஆண்டுக்கு ஆண்டு உயர்த்திக் கொண்டே வருகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. ராஜாங்கம் அவர்கள் முன்னுரையாகப் பேசும்பொழுது, "அன்றிருந்த ஆங்கில ஆட்சியில் கூட பல உதவிகள் செய்தார்கள், இவர்கள் என்ன பிரமாதமாகச் செய்து விட்டார்கள்" என்று சொல்வது போன்ற வகையில் பேசினார்கள். முன்னால், அப்பொழுது, மானம் இல்லாமல் வாழ்ந்தோம்; பொது இடங்களில், பொது ரஸ்தாக்களில், பொது பாடசாலைகளில், நமக்கு இடமில்லை. பொது இடங்களிலிருந்து ஹரிஜனங்கள் ஒதுக்கப்பட்டார்கள்; இன்றைக்கு மானத்தோடு, மரியாதையோடு வாழ்வதற்கு, இந்த அரசாங்கம், காங்கிரஸ் அரசாங்கம் வழி செய்திருக்கிறது. 100-க்கு 100 செய்து விட்டார்கள் ஆளும் கட்சி என்று சொல்லவில்லை. ஆனால், ஓரளவு செய்திருக்கிறார்கள். யார் செய்திருக்கிறார்கள்? இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. இந்த அரசாங்கம்தான் செய்திருக்கிறது. இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை, பாடசாலைகளிலே படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை, தொழில் துறைகளிலே அவர்களுக்குக் கொடுத்திருக்கும் உதவி, இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இந்த அரசாங்கம் எவ்வளவுதூரம் செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு, தன்னுடைய நிதி நிலைக்கு தக்கபடி செய்திருக்கிறது என்பதை மன்றத்தில் இருக்கும் மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். எல்லாமே செய்து விட்டோம் என்று நாங்கள் சொல்லிக்கொள்வதாகச் சிலர் திரித்துச் சொல்லலாம். ஆனால் நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. நூற்றுக்கு நூறு செய்து விட்டோம் என்று நாங்கள் யாரும் சொல்லிக்கொள்ளவில்லை. ஓரளவு செய்திருக்கிறோம். வேறு எந்த அரசாங்கமும் இந்த அளவுக்குச் செய்யவில்லை. (திரு. மு. கருணாநிதி: இந்த அரசாங்கம் தான் ஆட்சி நடத்துகிறார்கள். அவர்கள்தானே 'செய்ய வேண்டும்?) வெள்ளைக்காரன் காலத்தில் அவர்களுக்குப் பக்கத் துணையாக இருந்த ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் அன்று

அரசாங்கத்தை நடத்தினார்கள் அல்லவா? அந்தக் காலத்திலே இம்மாதிரி உதவிகள், இம்மாதிரி சட்டங்கள் செய்யவில்லை. சட்டங்கள் செய்து பட்டங்கள் பெற வாய்ப்பு அளித்ததும், குறிப்பாக கல்விக்காக அதிகமாக உதவி செய்து வருவதும் இந்த அரசாங்கம் தான்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் காலத்தில் இருந்த அரசாங்கம் என்றால், நீதிக் கட்சியினர் இருந்த காலத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று எந்த எந்த வசதிகளைச் செய்ய வேண்டுமோ அவற்றை, அன்றைக்கு இருந்த நிதி வசதி அடிப்படையில், செய்திருக்கிறார்கள். எதுவுமே அவர்கள் செய்யவில்லை என்று சொல்வதற்கில்லை. இப்பொழுதிருக்கும் நிதி வசதி அடிப்படையில் இந்த அரசாங்கம் எந்த அளவு செய்கிறதோ அந்த அளவுக்கு அந்த அரசாங்கம் செய்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர்—எதிர்க் கட்சித் தலைவர்—அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை மனதில் வைத்துக்கொண்டுதான் பேச முன்வந்திருக்கிறார்கள். அப்பொழுது அவர்கள், அன்றிருந்த அன்னிய அரசாங்கத்திற்குப் பக்கத் துணையாக இருந்தார்கள். ஆலயத்திற்குப் போக சட்டம் செய்தார்களா? பொது இடங்களுக்குப் போக உரிமை வழங்கச் சட்டம் செய்தார்களா? அன்னிய அரசாங்கத்திற்கு அவர்கள் அப்பொழுது ஆலோசனை சொல்லியிருக்கலாம். ஆனால், அவர்கள் செய்யவில்லை. காங்கிரஸ் கட்சிதான் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு, சுதந்திரத்தைப் பெற்று, ஆளும் கட்சியாக வந்திருக்கிறது. அதன் பிறகுதான் ஹரிஜனங்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அன்றைக்கு, செய்யக்கூடிய சில சட்டங்களையாவது அவர்கள் செய்ய ஆலோசனை சொல்லியிருக்கலாம். அதற்கு மனம் இல்லை. நம்முடைய நாட்டில் உள்ளவர்கள் உயர்ந்த நிலைமைக்கு வந்துவிட்டால், அன்றைக்கு 6,000 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்தவர்கள் நம் நாட்டில் தொடர்ந்து இருக்க முடியாதே என்ற எண்ணத்தோடு அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. நாடு சுதந்திரம் அடைந்த பிறகுதான் இத்தனை வாய்ப்பும் வசதியும் ஹரிஜனங்களுக்கு உண்டுபண்ணியிருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. ராஜாங்கம் அவர்கள், ஹரிஜன நலப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கெல்லாம் துணி வழங்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஆலோசனையை ஏற்கனவே அரசாங்கம் பரிசீலனை செய்தது. இப்பொழுது மாணவிகளுக்கு இரண்டு செட் ஆடை கொடுக்கிறோம். மதிப்பிற்குரிய திரு. பொன்னையன் அவர்கள் பேசும்போது, 'இன்னொரு செட் கொடுத்தால் நல்லது' என்று சொன்னார்கள். இன்னொரு செட் கொடுப்பதற்கு முன்பு, மாணவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே ஹரிஜன நல ஆலோசனைக் குழுவிலே நாங்கள்

பரிசீலனை செய்தோம். ஆனால், நம் நாட்டுக்கு ஏற்பட்ட சோதனை காரணமாக, அன்னிய நாட்டுச் சைனாக்காரன் படையெடுத்து, சொல்லொணாத துயரங்களை கொடுத்ததால் அந்த வேலை நடைபட்டது. ஆனால், மாணவிகளுக்கு எப்படி ஆடைகள் கொடுத்து உதவி செய்கிறோமோ அதே போல், வருங்காலத்தில் மாணவர்களுக்கும் உதவி செய்ய அரசாங்கம் முயற்சிக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளில் படிக்கும் ஹரிஜன மக்களுக்கு 15 ந.பை. விதம் உணவு கொடுக்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. ஹரிஜன நலப் பாடசாலைகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் 15 ந.பை. விதம் உதவி கொடுத்து வருகிறோம். ஹரிஜன மாணவனாக இருந்தாலும், ஜாதி ஹிந்து மாணவனாக இருந்தாலும், எல்லோருக்கும் 15 ந.பை. விதம் உதவி கொடுத்து, சாப்பாடு போடுகிறார்கள். தீண்டாமையை ஒழிப்பதற்காகவும், சமத்துவத்தை உண்டுபண்ணுவதற்காகவும் இந்த ஏற்பாடு இருந்து வருகிறது. அதே போல் பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளிலும் போடலாம். ஆனால் பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளுக்கு இந்த உதவி அளிக்க நம்முடைய நிதி நிலைமை போதாது. அங்கே கூட, சில பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு 6 ந.பை. கொடுக்கிறோம். இதர உதவிகளை மக்களே தேடிக் கொள்ள வேண்டும் என்பது உத்தேசம். அரசாங்கத்தின் மூலமாக 6 ந. பை. விதம் இத்தகைய உதவி கொடுத்தால் போதும் என்று எந்தப் பஞ்சாயத்து யூனியன் பாடசாலையில் உள்ளவர்கள் சொன்னாலும், அவர்களுக்கு நிதிநிலைமையை அனுசரித்து இத்தகைய உதவியைக் கொடுக்க அரசாங்கம் முன்வரலாம். எல்லாப் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் இதைக் கொடுக்க முடியாது. மதிப்பிற்குரிய ஒரு கனம் உறுப்பினர் பேசும்போது, "ஹரிஜனங்களுக்குத்தான் எல்லாம் பண்ணுகிறார்கள், ஜாதி இந்துக்களின் குழந்தைகளும் ஹரிஜனக் குழந்தைகளும் சேர்ந்து வித்தியாசம் இல்லாமல் சாப்பிடுகிறார்கள்" என்று சொன்னார்கள். தஞ்சையிலே நாங்கள் 15 ந.பை. ஹரிஜன மாணவர்களுக்காக கொடுத்தால், இதர மாணவர்களுடைய நிலைமை என்ன ஆவது? மற்ற ஜாதியினரிலும் ஏழைகள் இருக்கிறார்கள். நல்ல எண்ணத்தோடு அவர்களுக்கு ஒத்தாசை உதவி செய்ய வேண்டும் என்றுதான் 6 ந.பை. விதம் எல்லாப் பாடசாலைகளிலும் இல்லாவிட்டாலும், எந்த பாடசாலையினர் உதவி செய்கிறார்களோ அந்த இடத்திற்குக் கொடுத்து உதவி செய்ய முன்வந்திருக்கிறோம்.

கல்லூரியில் படித்த படிப்பைக் கொண்டே ஐ.ஏ.எஸ். பட்டம் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை மதிப்பிற்குரிய திரு. ராஜாங்கம் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் தெரியாத்தனமாக அவ்வாறு சொன்னார்கள் என்று நான் நினைக்கிறேன். ஐ.ஏ.எஸ். பட்டம் பெற வேண்டுமானால் அதற்கென்று சில முறைகள் இருக்கின்றன. எழுத்து மூலம் பரிட்சையில் தேறவேண்டும். அது தவிர நேரடி இன்டர்வியூவிலும் தேர்வு பெற வேண்டும். மத்திய சர்க்கார்

இப்பொழுது அலஹாபாத்திலும், பங்களூரிலும் வகுப்புகள் நடத்தி, ஹரிஜன மாணவர்கள் அங்கே வந்து படித்துப் பயிற்சி பெற்று, அதற்குப் பிறகு ஐ.ஏ.எஸ். பரீட்சைகளுக்கு 'அப்பியர்' ஆனால் தேர்வு பெறுவதற்குச் சௌகரியமாக இருக்கும் என்பதற்காக அத்தகைய ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். காலேஜ் படிப்பு முடித்தவுடனேயே ஐ.ஏ.எஸ். பட்டம் பெறுவது என்ற முறை இல்லை என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மதிப்பிற்குரிய திரு. தர்மலிங்கம் அவர்கள் பேசும்போது, நான் இந்த இலாக்காவுக்கு மந்திரியாக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். மதிப்பிற்குரிய திரு. பழனி அவர்கள் பேசும் போது, திரு. அண்ணாதுரை அவர்கள் இந்த மன்றத்திலே பேசிய வார்த்தைகளை இங்கே படித்துக் காண்பித்தார்கள். "கக்கன் அவர்கள் இந்த இலாகாவுக்கு மந்திரியாக இருக்கக்கூடாது" என்று ஏன் அவர்கள் சொல்கிறார்கள்? கக்கன் மந்திரியாய் இருந்தால் ஹரிஜனங்களிடத்தில் நெருங்கிப் பழகுகிறார். அதனால் ஹரிஜன மக்கள் இந்த அரசாங்கத்தின் பேரில் விஸ்வாசமாக இருக்கிறார்கள். கக்கன் இந்த இலாகா மந்திரியாக இல்லாவிட்டால் இன்னும் வேறு வழிகளிலே பிரசாரம் செய்து, ஹரிஜன மக்களை அரசாங்கத்தின் பக்கம் இல்லாமல் செய்து விடலாம். இப்படி சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பழமொழி உண்டு. ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம், அம்மா திரி "இந்தச் சமயத்திலே கக்கன் ஹரிஜன நல இலாகா மந்திரியாக இருக்க வேண்டாம்" என்று சொன்னார்கள். ஹரிஜன நல மந்திரியாக நான் இருக்கிறேன் என்றால் எதற்காக? மக்களுக்குத் தொண்டு செய்வதற்காகத்தான். குறிப்பாக, ஏழை மக்கள் பல்லாண்டுகளாக கஷ்டப்பட்டிருக்கும் மக்களுக்கு ஒத்தாசை உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் முதல் அமைச்சர் அவர்கள் பார்த்து, அந்தப் பொறுப்பை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களே பார்த்து வேறொருவருக்கு இந்தப் பொறுப்பை மாற்றினால் எனக்கு ஆட்சேபணை இல்லை. வரும் அன்பர்கள் அந்த நோக்கத்தோடு ஹரிஜன மக்களை நெருங்கி, அவர்களுக்கு நல்ல முறையில் ஒத்தாசை உதவி செய்து, அன்போடும் ஆதரவோடும் இருந்தால் நல்லது தான். "கக்கன் அவர்கள் இந்த இலாகாவுக்கு மந்திரியாக இருக்கக்கூடாது என்று மற்றவர்கள் பேசுகிறார்கள்", "யாரோ சொல்கிறார்கள்" என்று இவர்கள் சொல்வதெல்லாம் பாசாங்குதான். ஹரிஜனங்களிடத்திலே அவர்கள் அதிகப்படியாக நெருங்கலாம் என்ற நோக்கத்தோடுதான் அவர்கள் அவ்வாறு சொன்னார்கள் என்று நிச்சயமாக இந்த நேரத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

மனைக்கட்டு விஷயமாகப் பல அன்பர்கள் இங்கே பேசினார்கள். இதற்காக நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 60 லட்சம் ரூபாய் ஒதுக்கினோம். வருஷா வருஷம் 25 லட்ச ரூபாய்க்கு மேலே செலவழித்து மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறோம். நில ஆர்ஜிதக் கணக்கைப் பார்த்தால் தெரியும். 1955-56-ல் ரூ. 3,30,903 செலவு செய்து 4,482 வீட்டு மனைக்கட்டுகள் அளிக்கப்பட்டன. 1566-57-ல் ரூ. 5,05,324

செலவு செய்து 7,397 மனைக்கட்டுகள் வழங்கியிருக்கிறோம். 1957-58-ல் ரூ. 5,35,225 செலவு செய்து 7,567 மனைக்கட்டுகள் வழங்கியிருக்கிறோம். 1958-59-ல் ரூ. 6,51,813 செலவு செய்து 10,812 மனைக்கட்டுகள் வழங்கியிருக்கிறோம். 1959-60-ல் ரூ. 9,88,205 செலவு செய்து 10,034 மனைக்கட்டுகள் வழங்கியிருக்கிறோம். 1960-61-ல் ரூ. 16,92,754 செலவு செய்து 16,873 மனைக்கட்டுகள் வழங்கியிருக்கிறோம். 1961-62ல் ரூ. 21,22,476 செலவு செய்து 19,227 மனைக்கட்டுகள் வழங்கியிருக்கிறோம். 1962-63-ல் ரூ. 19,24,734 செலவு செய்து 21,031 மனைக்கட்டுகள் வழங்கியிருக்கிறோம். இந்தப் புள்ளி விவரத்தில் அரசினர் நிலங்களிலிருந்து ஒப்படைக்கப்பட்ட வீட்டு மனைக்கட்டுகளின் எண்ணிக்கையும், ஆர்ஜிதம் செய்து ஒப்படைக்கப்பட்ட வீட்டு மனைக்கட்டுகளின் எண்ணிக்கையும் அடங்கியிருக்கின்றன. அளிக்கப்பட்ட வீட்டு மனைக்கட்டுகளின் மொத்த எண்ணிக்கை மேலே கொடுக்கப்பட்டுள்ளன. வீட்டு மனைகள் முதலியவற்றை ஆர்ஜிதம் செய்வதற்காக 1963-64-ல் 23 லட்சம் 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மேலும் மனைக்கட்டுகள் வாங்க தொகை வேண்டுமானால், அதிகமாக அதற்கும் தொகை செலவழிக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மனைக்கட்டு வழங்குவதிலே சிறிது காலதாமதமாகிறது என்று சொன்னார்கள். மாதந்தோறும் அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் வருகிறது. அதிகாரிகளும் நல்லமுறையில் பரிசீலனை செய்துதான் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இதற்காகவே இப்போது நாம் ஒரு கமிட்டியைக்கூடப் போட்டிருக்கிறோம். மதிப்பிற்குரிய பரமேசுவரன் அவர்கள் மாஜி மந்திரி—அதற்குச் சார்மேனாக இருக்கிறார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள், திரு. நல்லமுத்து, திரு. ராமலிங்கம், திரு. ஆறுமுகம் போன்றவர்கள் அந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள். இதில் கம்யூனிஸ்டுக் கட்சி, தி.மு.க. ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் ரிப்போர்ட் இன்னும் வரவில்லை. பல மாதங்களாகப் பல மாவட்டங்களுக்குச் சென்று இருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை வந்த பிற்பாடு மேலும் என்ன என்ன வழிவகைகளை எடுத்துக்கொள்ளலாம் என்பது பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக திரு. முருகையன் பேசும்போது எல்லாரும் சுடுகாட்டிற்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். அவர் இளைஞர். நமது நாட்டில் நடந்து வருகிற வேலைகளை எல்லாம் பார்க்கக் கூடியவர். புதிய நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் பணி புரியவேண்டிய இளைஞர் எல்லோரும் சுடுகாட்டிற்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று வெறுப்படைவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒருகால் "அடைந்தால் திராவிட நாடு, இல்லாவிட்டால் சுடுகாடு" என்று சொல்லும் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவராதலால் இப்பொழுது அப்படிப் பேசினார்களோ என்று நினைக்கிறேன். (திரு. முருகையன் எழுந்திருந்தார்).

நான் குறுக்கிடுவதை விரும்பவில்லை. அவர்களுக்கு ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போதும்கூட அதிகாரிகளை விசாரித்தேன். காம்பகுடி கூட்டுறவு எண்ணெய் ஆலையை ஏற்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆறாயிரம் ரூபாய்க்கு 'கன்னி' பாக்ஸ்கூட வாங்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். இனிமேல்தான் அது செயல்படவேண்டும். எதையும் ஆரம்பித்த ஐந்தாறு மாதங்கள் கழித்துத்தான் செயல்படுத்த முடியும். அறந்தாங்கி ஆலங்குடியில் நாட்டு செக்குக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திட்டை சுப்பிரமணியம் பேசும்போது அடிக்கடி அதிகாரியை மாற்றி விடுவதாகச் சொன்னார்கள். அதைப் பரிசீலனை செய்து பார்த்தபோது அப்படியில்லை என்று தெரிய வருகிறது. நிர்வாக விஷயமாக ஒருவரை எத்தனை காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்கலாமோ அதற்கு மேல் இருக்க அனுமதிப்பதில்லை. அவ்வளவுதான். வேறு எந்த வகையிலும் அதுபற்றிப் புகார் இல்லை. உத்தியோக உயர்வு சம்பந்தமாகவும் சில சமயம் மாற்றல் செய்யப்படுவது உண்டு. இதுபற்றி எல்லாம் அரசாங்கம் நல்லமுறையில் பரிசீலித்து வருகிறது. இந்த இலாகாவில் வேலை செய்வது மிகவும் கஷ்டமான பணிதான். அதை அவர்கள் மிக்க ஆர்வத்தோடு சேவா உணர்ச்சியோடு செய்து வருகிறார்கள். இவ்விலாகாவில் இன்னும் அதிகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று சுப்பிரமணியம் சொன்னார்கள். பட்ஜெட்டைப் பார்த்தாலே அவர்களுக்குத் தெரியும். ஆண்டு தோறும் நாம் அதிகமாக ஒதுக்கிக்கொண்டுதான் வருகிறோம். மூன்றாவது திட்ட காலத்தில் மொத்தம் 20 கோடி ரூபாய் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டது என்றால் இந்த 20 கோடி ரூபாய் உதவியைத்தான் அவர்கள் பெறுகிறார்கள் என்பது இல்லை. அப்படி நினைப்பது தப்பிதம். இதர கல்விச் சலுகை, மற்ற சலுகைகளையும் மற்றவர்களைப் போலவே அவர்களும் பெறுகிறார்கள். அதே சமயம் இந்த உதவிகளையும் பெறுகிறார்கள்.

ஸ்காலர்ஷிப் என்று எடுத்துக்கொண்டால் 1960-61-ல் நம்முடைய சர்க்கார் 22.51 லட்சம் ஒதுக்கிற்று. மத்திய சர்க்கார் 12.18 லட்சம் ஒதுக்கிற்று.

	மாநில சர்க்கார் உதவி.	மத்திய சர்க்கார் உதவி.
1961-62	**25.61**	**13.10**
1962-63	**36.40**	**14.15**
1963-64	49.90	**15.57**

இப்படி ஆண்டுதோறும் நம்முடைய உதவித் தொகை உயர்ந்து கொண்டே போகிறது. இது ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை.

இன்னும் டி நோட்டிபை சமூகத்தார்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையைப் படிக்கிறேன்.

1959-60	2.33
1960-61	3.70
1961-62	5.01
1962-63	6.41
1963-64	7.56

இவர்களும் மிகவும் பின்தங்கிய மக்கள்தான். இவர்கள் குழந்தைகளுக்காக ஒதுக்கப்படுகிற தொகையும் உயர்ந்து வருகிறது. மேலும் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நம் சர்க்கார் ஒதுக்கிவருகிற தொகையைப் படிக்க விரும்புகிறேன்.

1959-60	28.47
1960-61	40.85
1961-62	48.09
1962-63	54.97
1963-64	63-43

இப்படி பலவகையிலும் ஆண்டுதோறும் நாம அதிகமான பணத்தை ஒதுக்கித்தான் உதவி செய்து வருகிறோம். முன்பெல்லாம் படிப்பவர்கள் குறைவு. இப்போது அதிகமான பேர்கள் படிக்கிறார்கள். படித்துள்ளவர்களின் குழந்தைகளும் படிக்க முன் வருகிறார்கள். அதற்குத் தகுந்த வகையில் நாமும் நிதி ஒதுக்கி செலவு செய்து வருகிறோம் என்பதை உங்கள் மத்தியில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தீண்டாமையை ஒழிக்க பிரசாரம் செய்வதற்காக ஹரிஜன 1-30 p.m.
முன்னேற்றப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்று கனம் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பிரசாரந்தான் ஜில்லா மாநில ஆலோசனைக் குழுக்களிலேயும், அவர்களையும் அங்கத்தினர்களாகப் போட்டிருக்கிறோம். உண்மையாகப் பணியாற்றக் கூடியவர்களைக் கமிட்டியில் போட்டுக்கொள்கிறோம்.

ஒவ்வொரு தாலுகா கச்சேரியிலும் ஒரு ஹெட் கான்ஸ்டபிள் வைத்தால் நல்லதென்று சொன்னார்கள். சப் இன்ஸ்பெக்டர் மற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார்கள். சிற்றுண்டிச் சாலைகளிலே ஹரிஜனங்களுக்கு எந்தவித இடையூறும் வந்துவிடக்கூடாது என்பதைக் கவனிப்பதிலே அதிக அக்கறை எடுத்துக்கொள்ளப்படும்.

கனம் உதவி சபாநாயகர் : கனம் அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

கனம் திரு. பூ. கக்கன் : அதிகமான அங்கத்தினர்கள் இதிலே பேசியிருக்கிறார்கள். அவ்வளவுக்கும் பதில் சொல்ல வேண்டுமானால் அரை மணி நேரமாவது வேண்டும்.

[14th March 1964

கனம் உதவி சபாநாயகர் : கனம் அமைச்சர் அவர்கள் பேச்சை முடித்து மானியம் வோட்டுக்கு விடப்படுகிறவரையில் இச்சபையின் நேரத்தை நீடிக்க அங்கத்தினர்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று கருதுகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: டெபூடி சேவக்குகளை நியமிப்பது பற்றிக் கனம் சுப்பையா அவர்களும், திட்டை சுப்பிரமணியம் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். டெபுடி சேவக்குகளை எடுத்துவிட்டு நல்லமுறையில் பிரசாரம் செய்வதற்காகப் புதிய முறையைக் கையாளலாம் என்ற ஒரு முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

மனைக்கட்டு அளிக்கும் விஷயத்தைப் பொறுத்து அதிக அக்கறை காட்ட வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்திக்கொண்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஹரிஜனங்களுக்காக மத்திய அசாங்கத்தில் இருந்து அதிக மானியம் பெற்றுக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் இப்போதே ஓரளவு அதிகமாகக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் நாடு உயர்ந்தால்தான் நாம் உயர்வோம் என்ற முறையிலே ஹரிஜனங்கள் எண்ணவேண்டும். நாடு உயர்வதற்காகப் பல திட்டங்களைப் போட்டு நல்ல காரியங்களைச் செய்து வருகிறோம். நாடு நன்றாக இருந்தால்தான் நாமும் நல்ல முறையில் முன்னேற்றம் அடைய முடியும். எடுத்ததற்கு எல்லாம் குற்றம் குறை சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. நம்முடைய வருவாய்க்குத்தக்கபடி ஹரிஜன மக்களுக்கு, ஏழை மக்களுக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அதை இந்த அரசாங்கம் செய்ய முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தாசில்தாருக்கு வாகன வசதி இல்லையென்று சொன்னார்கள். ஹரிஜன நல இலாகாவுக்கு அதிகப் பணம் இல்லை. ஹரிஜன நல அதிகாரிகள் செல்லும்போது அவர்களுடன் தாசில்தார்களும் போகலாம். முன்பெல்லாம் தாலுகாவுக்கு ஒரு தாசில்தார் என்ற வகையில் இருந்தது. ஆனால் இப்போது பல வகையிலே பல தாசில்தார்கள் இருக்கிறார்கள். அந்தந்த ஒவ்வொரு ஜில்லாவுக்கும் இப்போது போடப்பட்டிருக்கும் ஒரு டெபுடி பி.டி.ஓ. போதாது இன்னும் ஒருவரைப் போட வேண்டுமென்று கூறினார்கள்... பண வசதி இருந்தால் இன்னும் எத்தனை பேரை வேண்டுமென்றாலும் போடலாம்.

பஞ்சாயத்துத் தலைவர்கள் ஹரிஜனங்களுக்குச் சரியானபடி நன்மைகளைச் செய்வதில்லை என்று கூறினார்கள். சில இடங்களில் ஹரிஜனங்களே பஞ்சாயத்துத் தலைவர்களாய் இருக்கிறார்கள். மற்றபடி இருக்கக்கூடிய பஞ்சாயத்துத் தலைவர்களிலும் ஒருசிலர் எம்.எல்.ஏ. சொன்னபடி ஏதோ ஒருசிலர் வேண்டுமென்றால் ஹரிஜனங்களைக் கவனிக்காது இருந்திருக்கலாமே தவிர, எல்லோருமே அப்படித்தான் என்று சொல்லிவிட முடியாது.

14th March 1964] [திரு. பூ. கக்கன்]

மதிப்புக்குரிய பொன்னையன் அவர்கள் 40 வயதுக்கு மேற்பட்டவர்களைத்தான் வார்டன்களையும் மேட்ரன்களையும் நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இளம் வயதினரைப் போடுவதால் எல்லோருமே அப்படி நடந்து கொள்கிறார்கள் என்று சொல்ல முடியாது. நாற்பது வயது இல்லையென்ற காரணத்திற்காக வேறு யாரையும் போடாமல் இருக்க முடியாது. ஐம்பது மாணவர்கள் இருந்தால் செகண்ட் கிரேடு மேட்ரனைப் போடுகிறோம். ஐம்பது மாணவர்களுக்கு அதிகமாக இருந்தால் பி.டி. கிரேடில் போடுகிறோம். பி.டி. படித்தவர்கள் வராத காரணத்தால்தான் போடுவதில்லையே தவிர, அவர்கள் வந்தால் தாராளமாகப் போடத் தயாராக இருக்கிறோம்.

திரு. முத்துலிங்கம் அவர்கள் பேசும்போது பஞ்சாயத்தில் அக்கிரமம் நடக்கிறது என்று சொன்னார்கள். ரேடியோ ஊரின் மத்தியில் இருக்கிறதே தவிர, ஹரிஜன காலனிகளில் ரேடியோ வைப்பதில்லை என்று சொன்னார்கள். புலவர் கோவிந்தன் அவர்களும் சொன்னார்கள். ஒருவேளை திரு. முத்துலிங்கம் அவர்கள் கூட புலவர் கோவிந்தன் சொல்லிக் கொடுத்துத்தான் சொன்னாரோ என்னவோ தெரியவில்லை. ஊரில் ரேடியோ இருக்கிறது என்றால், ஹரிஜனங்களுக்கு அது ஊர் இல்லையா ?

புலவர் கா. கோவிந்தன் : பெரும்பாலும் ரேடியோ நிலையங்கள் பஞ்சாயத்துக் கட்டிடங்களில்தான் இருக்கிறது. ஊரை விடப் பெரியதாக இருக்கிற ஹரிஜன காலனிகளிலே ரேடியோ வைக்கப் படுவதில்லை. ஆகவே, பஞ்சாயத்துக்கு ஒரு ரேடியோ, காலனிக்கு ஒரு ரேடியோ என்று இரண்டு ரேடியோக்கள் வைக்க ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்திலே பணம் இருந்தால் இரண்டு என்ன, மூன்று ரேடியோக்கள்கூட வைக்கலாம். இதிலே சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

எந்தக் காலனி மிகச் சுத்தமாக இருக்கிறதோ அங்கு ரேடியோ கொடுத்து ஒத்தாசை செய்கிறோம். குடி தண்ணீர் பிரச்னைபற்றிச் சொன்னார்கள். குடி தண்ணீர் பிரச்னையைப் போக்க ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம் மூலம், ஹரிஜன நல இலாகா மூலம் பணம் செலவு செய்து வருகிறோம். குறிப்பாக ஏதாவது சொல்லவேண்டுமென்றால் கலெக்டருக்கோ அல்லது ஹரிஜன இலாகாத் தலைவரிடமோ சொன்னால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மின்சாரத்திற்கு 1½ லட்சம் செலவு செய்தோம், இந்த ஆண்டும் அப்படிக் கொடுத்திருக்கிறோம். மேலும் தேவையானால் நம் நிதி நிலைக்குத் தக்கபடி எவ்வளவு தூரம் செய்யமுடியுமோ அவ்வளவு தூரம் செய்யப்படும். ஜயராஜ் அவர்கள் 1,000-க்குப் பதில் 2,000 ரூபாய் கொடுத்து வீடு கட்டவேண்டும் என்று சொன்னார்கள். திரு. சுப்பையாவும், திட்டை சுப்பிரமணியம் அவர்களும் வீடு கட்டுவதை விட்டுவிடுங்கள் என்று சொன்னார்கள். வீடு கொடுப்பது சிரமம்தான்.' சில வீடுகள் இடிந்து விழுந்து விட்டன என்று

[திரு. பூ. கக்கன்] [14th March 1964

எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். குறிப்பிட்ட குற்றம் நடந்த இடத்தில் கேட்டிருக்கிறோம், விசாரணை நடந்து வருகிறது. பல விடங்களில் நன்றாகயிருக்கிறது, விடுகள். சில இடங்களில் பெரு மழை காரணமாகவோ அல்லது கன்ட்ராக்டர்கள் செய்த கெடுதியினால் கஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். மந்திரி கக்கனே போய் கொத்தனார் வேலை பார்க்கவில்லை. அதிகாரிகள் நல்லமுறையில் செய்வார்கள், ஹரிஜன நல அதிகாரிகள் நல்லமுறையில் செய்வார்கள் என்று நினைக்கிறோம். அக்கிரமங்கள் ஏதாவது நடந்தால் எங்களுக்கு எழுதினால் நிச்சயமாகக் கவனிக்கப்படும். வீடு கட்ட வேண்டாம் என்றால் கட்டவில்லை. மந்திரி வீடு கட்டிக் கொடுத்தார், இப்போது கட்டவில்லை, அந்த ஊரில் மட்டும்தான் கட்டிக் கொடுத்தார் என்று சொல்வார்கள். அதுதான் பயமாக இருக்கிறது. கட்ட வேண்டாம் என்று சொன்னால் அதுவும் பயமாக இருக்கிறது. ஆகவே இதை விட்டு விடுவதா, விடாமல் இருப்பதா என்பது ஒரு பிரச்னையாக இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : ஹரிஜனக் காலனிகள், விடுகள் கட்ட வேண்டாம் என்பது எங்கள் கொள்கை அல்ல. வீடுகள் சரியாகக் கட்டப்பட்டு விட்டால், நல்ல வீடுகள் பல கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை.

கனம் திரு. பூ. கக்கன் : ராமநாதன் அவர்கள் மின்சாரம்பற்றிச் சொன்னார்கள். அதற்கு முன்பே பதிலளித்திருக்கிறேன். வெள்ளியணையில் ஒரு ஹாஸ்டல் நிறுவவேண்டுமென்று சொன்னார்கள். வெள்ளியணையில் ஒரு ஹாஸ்டல் வர அரசாங்கம் பிரயத்தனம் செய்யும். திரு. பெருமாள் ராஜு அவர்கள் லோயர் பவானியில் சிப்பேஜ் வாட்டர் வந்து விடுகள் தண்ணீரில் ஊறுவதால் சிரமம் இருக்கிறது என்று சொன்னார்கள். மேட்டுப் பாங்கான இடங்கள் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். மேட்டுப் பாங்கான இடங்களைத்தான் கொடுக்கிறோம. தஞ்சை, தென் ஆற்காடு ஜில்லாக்களில் புஞ்சைக் காடுகள் அதிகம் இல்லாததால் நஞ்சை நிலத்தை அக்வயர் செய்கிறோம். எல்லா இடங்களிலும் கொடுக்க முடிவதில்லை. திரு. சிவசுப்பிரமணியன் அவர்களும் சொன்னார்கள். கூடுமானவரையில் பள்ளம் இல்லாத இடத்தைத்தான் பார்க்கச் சொல்லியிருக்கிறோம். அரசாங்கக் கொள்கை என்னவெனில், ஊருக்குள்ளே போதுமான இடம் இருந்தால் அக்வயர் செய்யலாம் என்பது. ஊரின் மத்தியில் இருந்தாலும் இடம் கொடுக்கவேண்டுமென்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு வீடுகளுக்கு மத்தியில் இடம் இருந்தாலும் அங்கு ஒரு வீடு கட்டலாம் என்று சொன்னார்கள். யோசனை சிறந்ததுதான். அதை நடைமுறையில் நடத்த சிரமம் இருக்கிறது. இப்போதே அரசாங்கத்தின் மீது புகார் சொல்கிறார்கள். அப்படிச் செய்தால் ஹரிஜனங்களைக் கொண்டு வந்து நடுமத்தியில் வைத்து விட்டார்களே என்று சொல்வார்கள். இப்போதே எதிர்ப்பு இருக்கும்போது அதில் எவ்வளவு சிரமம் இருக்கும்? ஒரு பக்கம் ஆலோசனை சொல்லிவிட்டு, பிள்ளையையும் அழவிட்டு . . . . . .

14th March 1964]

திரு. மு. கருணாநிதி : ஹரிஜனங்களை நடு ஊருக்குள்ளே வைத்து விட்டார்கள் என்று பிற ஜாதியினர் சொல்வார்கள் என்று பயப்படுவது தேர்தல் காரணத்தையொட்டியா ?

கனம் திரு. பூ. கக்கன் : தேர்தல் காரணத்தையொட்டி அல்ல. இருக்கிற கஷ்டத்தைச் சொல்கிறேன். சிலவிடங்களில் கல்லை ஊன்றிவிட்டு ரிட் போட்டு விடுகிறார்கள். இரண்டு வீடுகளுக்கு மத்தியில் இருக்கவேண்டுமென்றால் சிலர் தூண்டிவிட்டு சண்டை இருக்கும். சுதந்திரக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கலப்பு மணம் செய்தால் நன்றாகயிருக்கும் என்று சொன்னார்கள். சிறந்த ஆலோசனைதான். நடைமுறையில் நடக்க வேண்டும்.

" சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல் "

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். நல்ல யோசனைதான். அதை நான் வரவேற்கிறேன். நடைமுறையில் நடத்த சிரமம் இருக்கும். எல்லோரும் அதில் பங்கு கொள்ளவேண்டும்.

(திரு. சா. கணேசன் : நாங்கள் எல்லாம் தயார்.)

இப்போது ஹரிஜன சகோதரர்கள் மற்ற ஜாதியில் உள்ள பெண்களைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள்; மற்ற ஜாதியில் உள்ளவர்கள் ஒருசில ஹரிஜன சகோதரிகளையும் கலியாணம் செய்து கொள்கிறார்கள். சொல்லாமல்கூட கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். காலம் மாறும். அதுவரை பொறுத்திருந்து எவ்வளவு செய்யமுடியுமோ அதைச் செய்வோம். திரு. நல்லமுத்து அவர்கள், 30, 40 வருடங்களுக்கு முன்பு இருக்கும் நிலையை இப்போதும் இருப்பதாகச் சொன்னார்கள். அன்று எத்தனை ஹரிஜன மாணவர்கள் காலேஜ்களில் படித்தார்கள்? அன்று ஹரிஜன பாடசாலைகளில் எத்தனை மாணவர்கள் படித்தார்கள்? அன்று இருந்த நிலைக்கும் இன்றிருக்கக்கூடிய நிலைக்கும், மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. ஆகவே 40 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையே இப்போதிருக்கிறது என்று சொல்வதை என்னால் ஒத்துக்கொள்ளமுடியாது. அதை மந்திரம், தந்திரத்தால் போக்கமுடியாது. திட்டம் போட்டு செய்ய வேண்டும். மக்கள் ஒத்துழைப்போடுதான் அதில் வெற்றி காண முடியும். மாடுகள் வாங்க 400 ரூபாய் போதாது, 600 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். எற்கனவே 250 ரூபாய் கொடுத்தோம். இப்போது 400 ரூபாய் கொடுக்கப்படுகிறது, மாடுகளுக்கும், விதைக்கும் சேர்த்து, ஒரு ஜோடி மாடு வாங்கிக் கொடுப்பது என்றால் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு ஜோடி மாடு வாங்கி கொடுத்துவிடலாம். ஆனால் பலருக்கு கொடுக்கவேண்டியிருப்பதால் குறைவாகத்தான் வரும். திரு. சிவசுப்பிரமண்யம் அவர்கள் சீத்தாம்பாளையம் பற்றி குறிப்பிட்டார்கள். அதுபற்றி என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கவனிக்கப்படும். 5 சென்ட்கள் வேண்டுமென்றார்கள். இப்போது நஞ்சை என்றால் 3 சென்டும், புஞ்சை என்றால் 5 சென்ட் என்றும் கொடுத்து வருகிறோம். வருங்காலத்தில் பார்த்து பரிசீலனை செய்து செய்யலாம், மணி அவர்கள் ஸ்காலர்ஷிப் துரிதமாகக்

[திரு. பூ. கக்கன்] [14th March 1964

கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கூட்டுறவு சொஸைடி ஏற்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் காலதாமதம் இருந்தது. முன்பு இங்கிருந்து போய்க் கொண்டிருந்தது. குறிப்பிட்ட எஞ்சினியரிங், மெடிக்கல் காலேஜ் போன்றவற்றிற்கு ஹரிஜன நல இலாகா டயாக்டரே கொடுத்து வருகிறார்கள். மற்றவற்றை ஜில்லா அதிகாரிகள் கொடுக்கிறார்கள் நாங்கள் கொடுத்த பணத்தை செலவு செய்து விட்டு மறுபடியும் பணம் கேட்டார்கள். பணம் இல்லாததால் காலதாமதமாகிறது. முதல் அமைச்சர் அவர்களிடம் சொல்லி ரூ. 2 லட்சம் வாங்கி அனுப்பி வைத்திருக்கிறோம். கூடுமானவரை, அங்கத்தினர்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு எவ்வளவு தூரம் சிபார்சு செய்த மாணவர்களுக்கு உதவி செய்யமுடியுமோ அது செய்யப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர்கள் சிபார்சு செய்தவர்கள் எல்லோரும் 50 சதமானத்திற்குக் குறைவாக மார்க் எடுத்தவர்கள் தான். 50 சதமானம் மார்க் எடுத்தவர்களுக்கு, மோஸ்ட் பேக்வார்ட் கிளாஸ் வகுப்பிலுள்ளவர்கள் 40 சதமானம் மார்க் எடுத்தவர்களுக்கும் எந்தவிதமான சிபாரிசு இல்லாமலேயே கிடைத்து விடும். இருப்பினும் அங்கத்தினர்கள் சிபாரிசு செய்ததை எல்லாம் ஏற்றுக் கொண்டு அனுமதிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அதிகமாக பணம் பெற்று உதவி செய்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சின்னையன் அவர்கள், காந்தீய வழியில் வந்தவர்களை இந்த அரிஜன நலத்துறையில் நன்கு பயன்படுத்தவேண்டும் என்பதைத் தெரிவித்தார்கள். அம்மாதிரிப்பட்டவர்களைத்தான் அதிலும் முக்கியமாக ஜாதி இந்துக்களில் பலரையும் அரிஜன நலக் கமிட்டியில் போட்டிருக்கிறோம். ஜாதி இந்துக்கள் பலர் செய்த சேவையின் காரணமாக அரிஜனங்களிடத்தில் ஒரு புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. பறிதைக்கும் தொழிலாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். இந்தத் தொழிலில் முக்கியமானவர்கள் அருந்ததிய சகோதரர்கள்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை ஜாஸ்தியாக இருக்கிறது. இவர்களுக்குக் கிராமங்களில் என்னென்ன உதவிகள் செய்யவேண்டுமோ அந்த அளவு உதவி செய்யப்பட்டு வருகிறது. முக்கியமாக கூட்டுறவு முறையில் ஏதாவது தோல் பதனிடும் தொழில் நடத்துவதற்கு முன் வந்தால் அதற்கு அரசாங்கம் வேண்டிய உதவி செய்யத் தயாராக இருக்கிறது வீடுகள் கட்டிக் கொடுக்கும் விஷயத்தில் முக்கியமாக நகரசுத்தித் தொழிலாளர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கவேண்டும் என்பது மத்திய சர்க்காரின் கட்டளை. அந்த முறையில் பஞ்சாயத்து போர்டின் மூலமாகவும், நகரசபைகள் மூலமாகவும் வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற முறையில் மேஜர் பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிட்டி இவைகளுக்கு வேண்டிய நிதி உதவி செய்ய சர்க்கார் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய ஸ்ரீமான் சின்னசாமி அவர்கள் பேசும்போது, அடிக்கடி காந்திஜியினுடைய நாமத்தைச் சொன்னார்கள். மிகவும் சந்தோஷம். அந்த எண்ணம் எப்போதும் அவர்களுடைய

14th March 1964] [திரு. பூ. கக்கன்]

மனதில் குடிகொண்டிருக்கும் என்று நம்புகிறேன். அவர்கள் அரிஜனங்களுக்காக அதிகமான பணம், கோடானுகோடியாக வாங்க வேண்டும் என்று சொன்னார்கள். எல்லாம் நமது நிதி நிலைமைக்கு ஏற்பத்தான் வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். அந்த முறையில்தான் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஸ்ரீமான் ஆனந்தன் அவர்கள் ஜாகிர்தார்களைப்பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக மலைஜாதியினருக்கு உதவி செய்யவேண்டும் என்று சொன்னார்கள். இவ்விஷயத்தில் ஆதிவாசிகள் என்ற இடத்திலிருந்து கூட பணத்தை எடுத்துச் செலவு செய்து ஒத்தாசை புரிந்து வருகிறார்கள். முக்கியமாக இதில் மகாஜனங்களுடைய ஒத்துழைப்பும் தேவையாக இருக்கிறது. அதிகாரிகள் அடிக்கடி போகிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்களும் அதோடு ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெரியண்ணன் அவர்கள் சேந்தமங்கலத்தில் பெண்களுக்கு என்று தனியாக விடுதி அமைக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது பொதுவாக ஒரு விடுதி நடத்தப்பட்டு வருகிறது. மேலும் சில இடங்களில் தனியாக நடந்து கொண்டிருந்தாலும் கூட அதை சர்க்கார் எடுத்து நடத்துவதற்கு முன்வருகிறது. அந்த முறையில் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற விஷயத்தைப்பற்றியும் அரசாங்கம் கவனிக்கும், முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மில்க் கோவாபரேட்டீவ் சொசைட்டிகள் நடத்துகின்ற விஷயத்தில் இப்போது 130-க்கு மேற்பட்ட சொசைட்டிகள் ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகின்றன. அதோடு முக்கியமாக கேப்பிட்டலில் ரூபாய் கொடுப்பதற்காக 20 ரூபாய் என்ற முறையில் அரசாங்கம் உதவி செய்து வருகிறது. இவ்வாறு சொஸைட்டிகளின் எண்ணிக்கை வருடா வருடம் உயர்ந்து கொண்டேபோகும். இந்த சொஸைடிகள் மூலம் பாலை உற்பத்தி செய்து விற்பதின் மூலமாக ஓரளவுக்கு வாழ்க்கை வசதி பெருகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலும் எந்தெந்த இடங்களில் மில்க் சொஸைட்டிகள் ஏற்படுத்த வேண்டுமோ, அந்த இடங்களிலுள்ளவர்கள், அங்கேயுள்ள டெப்புடி ரெஜிஸ்டிரார் அவர்களிடத்திலோ அல்லது கலக்டர் அவர்களிடத்திலோ சொன்னால் அதைப்பற்றிக் கவனிப்பார்கள். அரசாங்கமும் இருக்கிற நிதிநிலைமைக்குத்தகுந்தபடி உதவி செய்ய முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி குழந்தை அம்மாள் அவர்கள் பேசும்போது, தொழிற்சாலைகளில் ஒரு பகுதி அதாவது 25 சதவிகிதம் வேலை அரிஜன மக்களுக்கே கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தினுடைய உதவியோடு ஏதாவது செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். திருமதி பொன்னம்மாள் அவர்களும் இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் என்று நம்புகிறேன். கான்ஸ்டிட்யுஷன் பிரகாரம் இதை நாம் கட்டாயப்படுத்த முடியாது. அந்த முறையில் தொழிற்சாலைகளில் வேலை கொடுக்கவேண்டும் என்று அதிகாரிகள் மூலமாகவே சொல்லி ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்யலாம். இதைச் சட்ட பூர்வமாகச் செய்ய முடியாவிட்டாலும்

[திரு. பூ. கக்கன்] [14th March 1964

கூட, ஒத்துழைப்பின் காரணமாக இதை நடத்தலாம் என்று கருதுகிறேன். மேலும் குடும்பக் கட்டுப்பாட்டை அரிஜனங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இது அரிஜனங்கள் மட்டும்தான் கடைபிடிக்கவேண்டும் என்பதில்லை, எல்லோரும் கடைப் பிடிக்கவேண்டியது தான். குறிப்பாக ஏழை எளியவர்களுக்குத்தான் குழந்தைகள் ஜாஸ்தியாக இருக்கின்றன. அதற்காக பிள்ளைகளை பெறக்கூடாது என்று அமைச்சர் சொல்லுகிறார்கள் என்று நினைத்துவிடக்கூடாது. சில பத்திரிகைகள் அவ்விதம் பிரச்சாரம் செய்து வருகின்றது. 'வயிறு அறுக்கிறார்கள்" என்று மக்கள் மத்தியில் பீதியை உண்டுபண்ணக்கூடிய வகையில் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். சாதாரணமாக இரண்டு, மூன்று பிள்ளைகளோடு சிக்கனமாக இருக்கவேண்டியது அவசியம், அதல்லாமல் 25, 30 பிள்ளைகளை வைத்துக்கொண்டு சாப்பாடு போடாமல் திண்டாடிக்கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது.

திருமதி அனந்தநாயகி அவர்கள் பின்தங்கிய வகுப்பினர்களுக்காக ஒரு இலாகாவைத் தனியாக ஏற்படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது பின்தங்கிய வகுப்பினர்களுக்கு கல்வியில்தான் அதிகமாக உதவி செய்து வருகிறோம். இதற்காக தனியாக ஒரு இலாகாவை ஏற்படுத்தினால் இதற்கென்று நியமிக்கக் கூடிய அதிகாரிகளுக்கே பெருமளவு செலவு செய்யவேண்டியிருக்கும். இரண்டும் ஒத்துழைப்போடு நடக்கவேண்டும் என்ற அளவில்தான் இப்போது ஒரே இலாகாவாக இருக்கிறது. இப்படி ஒரே இலாகாவாக இருப்பதுதான் நல்லது. ஒரே அதிகாரியாக இருந்து வந்தாலும், எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் பார்த்துக்கொள்வார்கள். மேலும் இப்போதுள்ள நிதிநிலைமையில் தனியாக ஒரு இலாகாவை ஏற்படுத்துவதற்கு முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்காலர்ஷிப் விஷயத்தில் மத்திய சர்க்காரிடத்தில் கிடைக்கின்ற உதவியை விட்டுவிடக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மாணிக்கம் அவர்கள் வீடு கட்டும்போது, தேசியக் கொடியை ஏற்றிவித்து அதை மிகைப்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். தேசியக்கொடியை ஏற்றிவைப்பதில் எந்த விதமான தவறும் இல்லை. அந்தக் கொடியின் கீழ்தான் நாம் சுதந்திரம் பெற்றோம், அதன் காரணமாகத்தான் இன்றைக்கு திரு. மாணிக்கம் போன்றவர்கள் இந்த மாதிரி சபையில் வந்து பேச முடிகிறது. ஆகவே இந்தக் கொடியைப்பற்றி அவ்வளவு கேவலமாக பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: வீடுகளில் தேசியக்கொடியைக் கட்டலாமா என்பதைப் பற்றித்தெரிவிக்க வேண்டுகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அசோகச் சின்னமுள்ள கொடியை யாரும் கட்டமாட்டார்கள், அவ்விதம் கட்டியிருந்தாலும், சாயந்திரத்தில் இறக்கிவிடுவார்கள். பொதுவாக கொடியைப்

14th March 1964] [திரு. பூ. கக்கன்]

பற்றிக் கேவலமாக பேசவேண்டாம் என்று திரு. மாணிக்கம் அவர்களை விநயமாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களைக் கூறினார்கள். அவற்றையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரம் அதிகமாக இல்லையாதலால் அதைப்பற்றி விரிவாகச் சொல்லவில்லை. இந்த மான்யத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை திரு. முருகையன் அவர்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாபஸ் வாங்கிக் கொள்ளாவிட்டால் வோட்டுக்கு விட்டுத்தான் முடிவு எடுக்கவேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 4,45,85,500 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward classes be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,45,85,500 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward classes."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 16th March 1964. 2-00 p.m.

The House then adjourned.

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

121. *Notification issued with G.O. Ms. No. 2420, Rural Development and Local Administration, dated 13th November 1963, amending the Rural Development and Local Administration Department Notification II-2 No. 380 of 1961, dated the 10th May 1961, relating to the officer to exercise or perform the powers or duties of the Inspector under section 82 (1) (c) of the Madras Panchayats Act, 1958.* [Laid on the table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958.)]

B. Reports, Notifications and other papers.

* 76. *Statement showing year-wise fleet strength, gross revenue, earnings per service (Nationalised transport).*

77. *Annexure to the Madras Legislative Assembly Rules as approved by the Legislative Assembly on the 25th January 1964.*

* Circulated to Members on 12th March 1964.

[14th March 1964

APPENDIX II.

[*Vide* answer to starred question No. 269 on page 572.]

A.—The following qualifications have been prescribed for the posts of Gramasevaks, Grade II :—

The candidate should have completed his S.S.L.C. (i.e., must have appeared for the Public Examination in full) and should have obtained not less than 40 per cent of marks in Tamil or in his mother tongue. Preference will be given to the following persons in the order in which they are specified.

(*a*) Persons who have previous experience in Social or Rural Development work and who have taken Agriculture as a subject in the High School course.

(*b*) Persons who possess the minimum general educational qualifications.

(*c*) Persons who are declared eligible for admission to the College course;

Or

(ii) Persons who have obtained a Post-Basic (Lower) Certificate awarded by the Director of Public Instruction :

Or

(iii) Persons who have passed the VIII Standard or III Form of a recognised school or the Indian Army Class II Standard in the case of Ex-Servicemen.

Age.—Candidates including those belonging to Backward classes should be above 19 years and below 25 years on the 1st July of the year in which the recruitment is made. Candidates belonging to Scheduled Castes and Scheduled Tribes should be above 19 years and below 30 years. Persons who have been demobilised from the Army, Navy or Air Force should not have completed 40 years. Political sufferers and members of their families are also eligible for appointment as Gramasevaks after they undergo training for two years. There is no age limit for them.

2. Every year an advertisement is issued in the leading dailies calling for applications for training for the post of Gramasevaks. The number of candidates to be selected for training each year will depend upon the number of seats to be filled up in that particular year. The qualified applicants will have to appear for a preliminary selection interview before the District Level Committee constituted in each district with the Collector as Chairman, the Assistant Development Commissioner (Training), and the Principal of the nearest Rural Extension Training Centre as members. Madras and Chingleput districts are clubbed as one District with the Collector of Chingleput as Chairman of the Committee. The District level Committee will test the mental

14th March 1964]

alertness, the general knowledge particularly knowledge in Agriculture and aptitude for rural development work of the candidates. On receipt of the list of candidates selected at preliminary selection, from the respective District Level Committee, candidates are called for an aptitude test by the Additional Development Commissioner in the nearest Rural Extension Training Centre. A Deputy Director of Agriculture or a Joint Director of Agriculture is also invited to assist in conducting the aptitude test for candidates in the Rural Extension Training Centres. The Principal and the other staff members of the Rural Extension Training Centres make necessary arrangements to conduct the tests for the candidates and marks are awarded on the following tests :—

Personality

Cross Country Walk

Test in rural bias/theory and practical.

Observation test

Histrionic talents/spinning and

Eloquence test

Other talents.

Based on their performance, those who obtained the highest number of marks in the above test are selected and deputed for training for two years in the Rural Extension Training Centres mentioned in paragraph 3 below according to the number of seats in each centre subject to the production of a physical fitness certificate.

3. The Gramasevaks will have to undergo two years' training in the Rural Extension Training Centres before their appointment. They will be paid a stipend of Rs. 40 per mensem. There are seven Rural Extension Training Centres in the State as indicated below :—

(1) Rural Extension Training Centre, Kovilpatti, Tirunelveli district.

(2) Rural Extension Training Centre, T. Kallupatti, Madurai district.

(3) Rural Extension Training Centre, Pattukottai, Thanjavur district.

(4) Rural Extension Training Centre, Aduthurai, Thanjavur district.

(5) Rural Extension Training Centre, S. V. Nagaram, North Arcot district.

(6) Rural Extension Training Centre, Bhavanisagar, Coimbatore district.

(7) Rural Extension Training Centre, Krishnagiri, Salem district.

[14th March 1964

4. Besides, the candidates who have passed the two year course in Agricultural Science at the Rural Institute, Gandhigram in Madurai district and in the school of Agriculture at the Ramakrishna Mission Vidyalaya, Perianaickenpalayam in Coimbatore district who have passed the examination conducted by the National Council for Rural Higher Education and who are found suitable for appointment as Gramasevaks after an interview are also appointed as Gramasevaks without undergoing the two year integrated course of training at the Rural Extension Training Centres.

பதில்.—இரண்டாம் கிரேடு கிராம சேவக்குகள் பதவிகளுக்கு அடியிற்கண்ட தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன :—

அபேட்சகர் எஸ். எஸ். எல். சி. தேர்வு முடித்திருக்கவேண்டும். (அதாவது எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் தேர்வு எழுதியிருக்கவேண்டும்) ; தமிழில் அல்லது அவரது தாய்மொழியில் 40 சதவீதத்திற்குக் குறையாமல் மார்க் வாங்கியிருக்க வேண்டும். கீழே குறிப்பிட்டுள்ள வரிசைக் கிரமத்தில் உள்ள நபர்களுக்கு சலுகை அளிக்கப்படும்

(a) சமூக சேவையில் அல்லது கிராம அபிவிருத்திப் பணியில் ஏற்கெனவே அனுபவம் பெற்றிருப்பவர்களும் உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் விவசாயத்தைப் பாடமாக எடுத்துப் படித்தவர்களும்.

(b) குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதியுடையவர்கள்.

(c) கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்குத் தகுதியுடையவர்களென அறிவிக்கப்பட்டுள்ளவர்கள்.

அல்லது

(ii) கல்வித் துறை டைரக்டர் அளித்த போஸ்ட் பேசிக் (லோயர்) சர்டிபிகேட் பெற்றுள்ள நபர்கள்.

அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பள்ளி ஒன்றில் எட்டாம் வகுப்பு அல்லது மூன்றும் படிவம் தேர்ச்சிபெற்றவர்கள் அல்லது முன்னாள் ராணுவ சேவையில் இருந்தவர்கள் விஷயத்தில் இந்தியப்படை இரண்டாம் வகுப்புத் தேர்ச்சிபெற்றவர்கள்.

வயது.—பின்தங்கிய வகுப்பினர் உட்பட அபேட்சகர்கள் வேலையில் நியமிக்கப்படும் ஆண்டின் ஜூலை முதல் தேதியன்று 19 வயசிற்கு மேலும் 25 வயதிற்குக் குறைந்தும் இருக்கவேண்டும். ஹரிஜனங்களும், ஆதிவாசிகளும் 19 வயதிற்கு மேற்பட்டும் 30 வயதிற்கு உட்பட்டும் இருக்கவேண்டும். ஆயுதப் படை, கடற் படை, விமானப் படை ஆகியவற்றில் பணியாற்றித் திரும்பியவர்கள் 40 வயதைக் கடந்திருக்கக்கூடாது. அரசியல் தியாகிகளும்

14th March 1964]

அவர்களது குடும்பத்தினரும், இரண்டாண்டுகள் பயிற்சி பெற்ற பிறகு கிராம சேவக்குகளாக நியமிக்கப்படுவதற்குத் தகுதி பெற்றவர். அவர்களுக்கு வரிது வரம்பு கிடையாது.

2. கிராம சேவக்குகள் பதவிகளுக்கான பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரி ஒவ்வொரு ஆண்டும் முக்கிய தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடப்படுகிறது. குறிப்பிட்ட ஓர் ஆண்டில் கிராம சேவக் பதவிகளில் ஏற்படும் காலி இடங்களுக்கு ஏற்ப, அநதந்த ஆண்டில் பயிற்சிக்காக அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். விண்ணப்பிக்க தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிலையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் முன்பு பூர்வாங்கத்தேர்வு செய்வதற்காக பேட்டிக்கு வரவேண்டும். இக் குழுவில் மாவட்ட கலெக்டர் தலைவராவார். உதவி அபிவிருத்தி கமிஷனர் (பயிற்சி), மிக அருகிலுள்ள கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தின் முதல்வர் அங்கத்தினர்களாவர். சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்கள் ஒரே மாவட்டமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவின் தலைவர் செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர். மாவட்ட நிலையிலுள்ள குழுவினர் அபேட்சகர்களின் மன உறுதியையும் பொது அறிவையும் குறிப்பாக விவசாயத்தில் அவர்களுக்குள்ள அறிவையும் கிராம அபிவிருத்தியில் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் பரிசோதிப்பர். இந்தப் பூர்வாங்கத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்களின் பட்டியல் அந்தந்த மாவட்ட நிலையிலுள்ள குழுவினரிடமிருந்து கிடைத்ததும், கிராம அபிவிருத்திக் கமிஷனர் மிக அருகிலுள்ள கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் அபேட்சகர்களுக்கு இவ்வேலையில் உள்ள ஆர்வத்தை அறிய ஒரு தேர்வு நடத்துகிறார். இத்தேர்வினை நடத்துவதில் உதவியளிக்க விவசாய டிப்டி டைரக்டர் அல்லது ஜாயின்ட் டைரக்டர் அழைக்கப்படுகிறார். கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தின் முதல்வரும் மற்ற ஆசிரியர்களும் இத்தேர்வினை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். தேர்வில் பின்வரும் அம்சங்களுக்கு மார்க்குகள் வழங்கப்படுகின்றன :—

அபேட்சகரின் தோற்றம் அல்லது சாயல் (Personality)

கிராமிய வாழ்வில் தெளிவு (Cross country walk)

கிராமிய வாழ்வில் கவர்ச்சி, பாட முறைத்தேர்வு, செய்முறை தேர்வு, கூர்ந்தறியும் தேர்வு (Observation test) அபூர்வ திறன்—நூற்றல், சொற்பொழிவாற்றல் போன்றவற்றில். மற்றத்திறன்கள்.

மேற்கண்ட தேர்வுகளில் அவர்களது சாதனையின் அடிப்படையில், அவற்றில் அதிக மார்க்குகள் வாங்கியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கீழே 3-வது பாராவில் கண்ட கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையங்களில் இரண்டாண்டுப் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்படுகிறார்கள். அவ்வாறு ஒவ்வொரு பயிற்சி நிலையத்திற்கும் அபேட்சகர்களை அனுப்புவது அந்த நிலையத்திலுள்ள இடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். நிலையத்தில் சேருபவர்கள் உடல் நலச் சான்றிதழ் காட்ட வேண்டும்.

[14th March 1964

3. கிராம சேவக்குகளாக நியமிக்கப்படுவதற்கு முன்பு அவர்கள் கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையங்களில் இரண்டாண்டுப் பயிற்சி பெறவேண்டும். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 உதவித் தொகை அளிக்கப்படும். கீழே குறிப்பிட்டவாறு இம்மாநிலத்தில் ஏழு கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையங்கள் உள்ளன :—

1	கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையம்.	கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.
2	,,	T. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.
3	,,	பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
4	,,	ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.
5	,,	S.V. நகரம், வடஆற்காடு மாவட்டம்.
6	,,	பவானி சாகர், கோயம்புத்தூர் மாவட்டம்.
7	,,	கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டம்.

4. தவிர, பின்வரும் அபேட்சகர்களும் கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையங்களில் இரண்டாண்டுப் பயிற்சி பெறாமலேயே கிராம சேவக்குகளாக நியமிக்கப்படுகிறார்கள் :—

மதுரை மாவட்டம், காந்தி கிராமத்திலுள்ள கிராமப் பயிற்சி நிலையத்திலும், கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாய்க்கன் பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயா விவசாயப் பள்ளியிலும் விவசாய விஞ்ஞானத்தில் இரண்டாண்டுப் பாட முறையைப் பயின்று, கிராம உயர்நிலைக் கல்விக்கான தேசியக் கவுன்சில் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களைப் பேட்டி கண்ட பிறகு அவர்கள் கிராம சேவக்குகளாக நியமிக்கப்படுகின்றனர்.

INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

FOURTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

9th to 14th March 1964

(Volume XIX Nos. 1 to 6)

PAGES

A

ACTS.—
Madras Inam Estates (Abolition and Conversionin to Ryotwari) Act, enforcement 364–365

AGRICULTURE.—
Crops, damages caused by heavy rains 119–122
Short term paddy seeds, supply 131–132

ALAGAMUTHU, SRI T. P.—
Bridges, (new) collection of toll 561–562
Budget, 1964-65, Voting—
Agriculture; Animal Husbandry; Capital Outlay on Agriculture; Capital Outlay on Schemes of Government Trading .. 375–380
Capital Outlay on Industrial Development; Industries .. 331
Elections; Head of State, Ministers and Headquarters staff .. 14–15
Miscellaneous 144
Motor Vehicles Acts Administration 470–518
Other Miscellaneous contributions and Assignments 144
Cement Quota, reduction 567–572
Inam and Zamin lands, Tiruchirappalli district 362–364
Maternity Centre, Pachamalai Hills 349–351

PAGES

A—*cont.*

ANANDAN, Sri L.—
Budget, 1964-65, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 618-619

ANANDANAYAKI, Srimathi T. N.—
Budget, 1964-65, voting—
Agriculture
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading } 450
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. 624-626
Elections
Head of State, Ministers and Headquarters staff
State Legislature } 77-81

ANTI-HINDI AGITATION—
Work assigned to prisoners in Central Jail, Madras 245-249

ARANGANNAL, Sri RAMA—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Road Transport Schemes
Road Transport Schemes } 540-543
Fishermen Co-operative Societies, supply of boats 462-463
Public places and streets, change of names 468
State Transport-buses increase in fares 243-245

ARTIFICIAL LIMBS.—
Artificial limbs manufacturing unit, starting 467-468

ARUMUGAM, Sri A.—
Budget, 1964-65, Voting—
Elections
Head of State, Ministers and Headquarters Staff
State Legislature } 27-31

ARUMUGAM, Sri R.S.—
Parakramapandy Kanmoi, reconstruction 459

ATOMIC POWER—
Plant at Kalpakkam 351-352

B

BACKWARD CLASSES.—
Reddi—Ganjam Community, Scholarships 352-354

BALAKRISHNAN, Sri A.G.—
Budget 1964-65, Voting—
Commuted Value of Pensions
District Administration and Miscellaneous
Loans and Advances by the State Government
Miscellaneous
Other Miscellaneous Contributions and Assignments
Pensions } 143, 170-172
Roads, grants to Panchayat Unions 459-460

PAGES

B—*cont.*

BHAKTAVATSALAM, Sri M.—
Budget, 1964-65, Voting—
Commuted Value of Pensions
District Administration and Miscellaneous
Loans and Advances by the State Government
Miscellaneous
Other Miscellneous Contributions and Assignments } 143, 144, 210-220
Pensions
Elections
Head of State, Ministers and Headquarters Staff
State Legislature } 14, 15, 16, 97-116

BILL(S)—
Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964—
Int. 469-470
Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram (Extension of Application) Bill, 1964—
Int. 142-143

BRIDGES (NEW)—
Collection of toll 561-562

C

CEMENT—
Reduction in quota 567-572

CHAIR—
Rulings and Observations—
Debate—
Members should be sure of the facts whenever they made a statement on the floor of the House 603
Decorum—
It was indecorous to say that the President of the Republic was sent out as he could not speak Hindi 77
Members should refrain from converting the Legislature into a public platform and indulging in retorts 28
Personal attacks and retorts should be avoided 17
Sleeping in the House —Deprecated 518
Division—
During division, Members should not instruct each other .. 518
Members' Seats—
Members should sit in the seats allotted to them 518, 562
Questions and Answers—
Supplementary Questions—Members should put questions only for eliciting and not for giving information 460
Supplementary Questions—Should arise from the main question 132
Supplementary Questions—Should be based on facts and not on newspaper reports 134
Supplementary Questions—Should relate to the main question .. 353
Supplementary Questions—The Chair had the right to disallow any supplementary question even without informing the member who had put it 577

C—*cont.*

PAGES

CHEEMAICHAMY, SRI K.—
- *Agricultural College, Establishment at Madurai* 132
- Crops. damages Caused by heavy rains 119–122
- Fishing industry, Ramanathapuram district 460–462
- Jamabandi, time for holding 351

CHINNASAMY, SRI T.—
- Budget, 1964-65 Voting—
  - Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. 615–618

CHINNAYAN, SRI S.—
- Budget, 1964-65, Voting—
  - Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 612–615

CHIRANJEEVULU NAIDU, SRI C.—
- Budget, 1964-65, Voting—
  - Agriculture
  - Animal Husbandry
  - Capital Outlay on Agriculture
  - Capital Outlay on Schemes of Government Trading } 410–411
  - Commuted Value of Pensions
  - District Administration and Miscellaneous
  - Loans and Advances by the State Government
  - Miscellaneous
  - Other Miscellaneous Contributions and Assignments } 156–158
  - Pensions
  - Elections
  - Head of State, Ministers and Headquarters staff
  - State Legislature } 31–33

COLLEGES—
- Agricultural College, Establishment at Madurai 132
- Madras Medical College, Artificial Limbs Manufacturing unit .. 467–468
- Professional, Selection of Candidates 563–564

COTTAGE INDUSTRIES—
- Appalam production units 354–355

D

DHARMALINGAM, SRI A.P.—
- Budget, 1964-65, Voting—
  - Agriculture
  - Animal Husbandry
  - Capital Outlay on Agriculture
  - Capital Outlay on Schemes of Government Trading } 418–422, 450
  - Elections
  - Head of State, Ministers and Headquarters Staff
  - State Legislature } 70–77
  - Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 632–636

DISTRICT ADMINISTRATION—
- Vaniambadi taluk, constitution 11

D—*cont.*

PAGE

DISTRICT GAZETTEER—
- Renewal 5

DURAIYARASAN, SRI A.—
- Bus-stand, Arantangi 463
- Pattukottai Panchayat, upgrading 1–5
- Vanaspathi Factory, South Arcot district 12–13

E

EX-SERVICEMEN—
- Distribution of lands 371

EYE-BANKS—
- Preservation of eyes in hospitals 9–10

F

FINANCIAL BUSINESS—
- Budget, 1964-65, Voting—
  - Agriculture
  - Animal Husbandry
  - Capital Outlay on Agriculture
  - Capital Outlay on Schemes Government Trading } 371–452
  - Capital Outlay on Industrial Development
  - Industries } 251–332
  - Capital Outlay on Road Transport Schemes
  - Road Transport Schemes } 519–557
  - Commuted Value of Pensions
  - District Administration and Miscellaneous
  - Loans and Advances by the State Government
  - Miscellaneous
  - Other Miscellaneous Contributions and Assignments
  - Pensions } 143–222
  - Elections
  - Head of State, Ministers and Headquarters Staff
  - State Legislature } 14–117
  - Motor Vehicles Acts—Administration 470–511
  - Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. 578–669

FIREWOOD—
- Fair price shops 122–124

FISHERIES—
- Fishermen Co-operative Societies, supply of boats 462–463
- Fishing industry, Ramanathapuram district 460–462
- Pablo boats, supply to fishermen 462

FOODGRAINS—
- Prevention of hoarding 141–142
- Rice and Paddy, procurement 124–128
- Rice, Fair Price Shops 133–136

PAGES

G

GANESAN, SRI SAW.—
Budget, 1964-65, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 638–642

GEOLOGICAL SURVEY—
Ramanathapuram district 13–14

GOLD CONTROL—
Modification 463

GOVINDAN, PULAVAR K.—
Budget, 1964-65, Voting—
Agriculture .. ..
Animal Husbandry .. ..
Capital Outlay on Agriculture .. ..
Capital Outlay on Schemes of Government Trading .. .. } 372, 405–407, 450

Capital Outlay on Road Transport Schemes .. ..
Road Transport Schemes .. .. } 520

Commuted Value of Pensions .. ..
District Administration and Miscellaneous .. ..
Loans and Advances by the State Government .. .. ..
Miscellaneous .. ..
Other Miscellaneous Contributions and Assignments .. ..
Pensions .. .. } 144, 183–187

Elections .. ..
Head of State, Ministers and Headquarters staff .. .. ..
State Legislature .. .. } 33–40

Motor Vehicles Acts—Administration 501–504
District Gazetteer, renewal 5

GRAMASEVAKS—
Appointment 572–578

H

HAJA SHERIFF, SRI K. S. G.—
Budget 1964-65, Voting—
Capital Outlay on Industrial Development .. ..
Industries .. .. } 304–305

HANDLOOMS—
District Handloom Board, functioning 231–233
Handloom Finance Corporation, functioning 233–234

HARIJANS—
Hostels, South Arcot district 356–360
Wells 366–369

HOSPITALS—
Eye-Banks, preservation of eyes 9–10

HOSTELS—
Harijan hostels, South Arcot district 356–360

PAGES

H—*cont.*

HOUSING—
Co-operative Building Societies, Loans to Members 130
Co-operative Housing Societies, Loans 128–129
Village Co-operative Housing Schemes, loans to agriculturists .. 129
Weavers' Housing Colony at Erode, unauthorised occupation .. 129
Weavers in Salem district, monthly instalment 131

I

INDUSTRIAL ESTATES—
Establishment 10–11,

INDUSTRIES.—
Insulator factory, establishment 355
Vanaspathi factory, South Arcot district 12–13
Vanaspathi factory, Villupuram 12–13

INSTITUTES—
Industrial Training Institute, Gingee, starting 10

IRON ORE—
Salem Iron Ore, testing 5–7

IRRIGATION.—
Anicut across Araniar 468
Parakramapandy Kanmoi, reconstruction 459
Parambikulam Aliyar Project, agreement with Kerala Government 250
Surplus waters in Kerala, utilization 250–251
Thenpasar village tank, repairs 468–469
Water-supply to ryots, Madurai district 463–666

J

JAMABANDI—
Time for holding 351

JAYARAJ, SRI P.—
Budget, 1964–65, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 599–601

K

KADAMBAVANASUNDARAM, SRI T.—
District Handloom Board, functioning 231–233

KAKKAN, SRI P.
Budget, 1964-65, Voting—
Agriculture .. ..
Animal Husbandry .. ..
Capital Outlay on Agriculture .. ..
Capital Outlay on Schemes of Government Trading .. .. } 371–375, 444–451
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. 578, 579–581, 655–669

PAGES.

KALIAPPA GOUNDER, SRI A. K.—
Budget 1964-65, Voting—
Commuted value of pensions .. ..
District Administration and Miscellaneous .. .. ..
Loans and Advances by the State Government .. ..
Miscellaneous .. ..
Other Miscellaneous Contributions and Assignments ..
Pensions .. .. } 187–189

KALYANASUNDARAM, SRI M.—
Agricultural University, starting 132
Atomic Power Plant, Kalpakkam 351–352
Fair price shops for rice 133–136
Firewood, fair price shops 122–124
Foodgrains, prevention of hoarding 141–142
Geological Survey, Ramanathapuram district 13–14
Gold Control, modification 463
Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari Act), enforcement 364–365
Salem Iron ore and Neyveli Lignite, testing 5–7
State Transport buses, Inter State routes 236–239
Surplus waters of Kerala, utilisation 250–251
Vegetables, increased cultivation 136–141

KAMALANATHAN, SRI M—
Budget, 1964-65, Voting—
Agriculture .. ..
Animal Husbandry .. ..
Capital Outlay on Agriculture .. ..
Capital Outlay on Schemes of Government trading .. } 451
Capital outlay on Industrial Development .. .. ..
Industries .. .. } 275–278
Capital Outlay on Road Transport Schemes .. .. ..
Road Transport Schemes .. .. } 520
Motor Vehicles—Administration 488–490, 520

KANCHI MANIMOZHIAR, SRI—
Budget, 1964-65, Voting—
Capital out lay on Industrial Development .. .. ..
Industries .. .. } 300–304

KARCHA GOWDER, SRI T—
Budget, 1964-65, Voting—
Agriculture .. ..
Animal Husbandry .. ..
Capital Outlay on Agriculture .. ..
Capital Outlay on Schemes of Government Trading .. } 430–431
Capital Outlay on Industrial Development 279–283
Elections .. ..
Head of State, Ministers and headquarters staff .. ..
State Legislature .. .. } 59–60
Motor Vehicles Acts—Administration 485–488
Rice and paddy, procurement 124–128

PAGES.

KARIVENGADAM, SRI M. V.—
Budget, 1964-65, voting.—
Capital Outlay on Industrial Development .. .. ..
Industries .. .. } 259–265
Commuted value of Pensions .. ..
District Administration and Miscellaneous .. .. ..
Loans and Advances by the State Government .. ..
Miscellaneous .. ..
Other Miscellaneous Contributions and Assignments ..
Pensions .. .. } 194–197
Handloom Finance Corporation, functions 233–234
Roads, grants to Panchayat Unions 459–460

KOLANDAI AMMAL, SRIMATHI C.—
Budget, 1964-55, Voting.—
Agriculture .. ..
Animal Husbandry .. ..
Capital Outlay on Agriculture .. ..
Capital Outlay on Schemes of Government Trading. .. } 401–404
Commuted Value of Pensions .. ..
District Administration and Miscellaneous .. .. ..
Loans and Advances by the State Government .. ..
Miscellaneous .. ..
Other Miscellaneous Contributions and Assignments ..
Pensions .. .. } 175–178
Elections .. ..
Head of State, Ministers and Headquarters staff .. ..
State Legislature .. .. } 40–44
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 621–624

KOTHANDARAMA BAGAVATHAR SRI C.—
Budget, 1964-65, Voting—
Motor Vehicles Acts—Administration 493–495

KRISHNAMOORTHY, SRI V.—
Anti Hindi agitation prisoners work assigned in Central Jail, Madras 245–249
Budget, 1964-65, Voting—
Agriculture .. ..
Animal Husbandry .. ..
Capital Outlay on Agriculture .. ..
Capital Outlay on Scheme of Government Trading .. .. } 451
Capital Outlay on Road Transport Scheme .. .. ..
Road Transport Schemes .. .. } 526–532
Elections .. ..
Head of State, Ministers and Headquarters staff .. ..
State Legislature .. .. } 22–27
Nellikuppam Panchayat, upgrading 1–5
Panruti Panchayat upgrading 1–5

KRISHNAMURTHY, SRI M. R.—
Budget, 1964-65, Voting—
Agriculture .. ..
Animal Husbandry 372
Capital Outlay on Agriculture .. ..
Capital Outlay on Schemes of Government Trading. .. } 414–416
Harijan hostels, South Arcot district 256–260

PAGES.

KULANDAISAMI GOUNDER, Sri M.—
Budget, 1964-65, Voting—
Agriculture .. Animal Husbandry .. Capital Outlay on Agriculture .. Capital Outlay on Schemes of Government Trading .. } 426-428
Welfare of Scheduled Tribes, Castes and other Backward classes .. 631-632
Motor Vehicles Acts—Administration .. 500-501

L

LAKSHMIKANTHAM, Srimathi P. K. R.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Industrial Development .. Industries .. } 268-270

LANDS—
Assignment orders, copies to Sub-Registrar offices .. 507
Inam and Zamin lands, Tiruchirappalli district .. 362-364

LIGNITE—
Neyveli lignite, testing .. 5-7

LIME TREES—
Plant disease .. 249

M

MADHAVAN, Sri S—
Budget, 1964-65, Voting—
District Administration and Miscellaneous, etc. .. 197-200
Capital Outlay on Road Transport Schemes .. Road Transport Schemes .. } 534-536
Elections .. Head of State, Ministers and Headquarters staff .. State Legislature .. } 15-22
Motor Vehicles Acts—Administration .. 474-479
Co-operative Housing Societies, loans .. 128-129
Lime trees, plant disease .. 249
Reddi-Ganjam Community, scholarships .. 352-354

MANI, Sri M. S.—
Budget, 1961-65, Voting—
Capital Outlay on Road Transport Schemes .. Road Transport Schemes .. } 547-553
Commuted value of pensions .. 144
Elections .. Head of State, Ministers and Headquarters staff .. State Legislature .. } 55-59
Motor Vehicles Acts—Administration .. 508-512
State Transport buses, accidents .. 239-242

PAGES.

MANI, Sri S.—
Budget 1964-65, Voting—
Commuted value of Pensions .. District Administration and Miscellaneous .. Loans and Advances by the State Government .. Miscellaneous .. Other Miscellaneous Contributions and Assignments .. Pensions .. } 174-175
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 609-612
Kerosene oil, occurrence near Adanur .. 7-9

MANI, Sri V. S. S.—
Budget, 1964-65, Voting—
Agriculture .. Animal Husbandry .. Capital Outlay on Agriculture .. Capital Outlay on Schemes of Government Trading .. } 394-395
Capital outlay on Industrial Development .. Industries .. } 283-285, 331
Elections .. Head of State, Ministers and Headquarters Staff .. State Legislature .. } 44-47
Motor Vehicles Acts—Administration .. 495-498

MANICKAM, Sri C.—
Budget 1964-65, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 626-629

MARAPPA GOUNDER, Sri K.—
Budget, 1964-65, Voting—
Agriculture .. Animal Husbandry .. Capital Outlay on Agriculture .. Capital Outlay on Schemes of Government Trading .. } 392-394

MARUTHANAYAKAM PILLAI, Sri M.—
Budget, 1964-65, Voting—
Agriculture .. Animal Husbandry .. Capital Outlay on Agriculture .. Capital Outlay on Schemes of Government Trading .. } 407-408

MATERNITY CENTRE—
Pachamalai Hills .. 349-351

MATHA GOWDER, Sri J.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Industrial Development .. Industries .. } 297-300, 330
Elections .. Head of State, Ministers and Headquarters Staff .. State Legislature .. } 63-66

MATHIALAGAN, Sri K. A.—
Cauvery Water supply Scheme for Madras City .. 463
Parambikulam-Aliyar Project, agreement with Kerala Government .. 250
State Transport buses, accidents .. 239-242
Weavers' Housing Colony at Erode, unauthorised occupation .. 129